
திருவருட்பா

மூலமும்-உரையும்



உரைவேந்தர்
ஒளவை சு. துரைசாமிப்பிள்ளை உரை

ப.சி
671

அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு

திருவருட்பா

மூலமும் உரையும்

எட்டாம் தொகுதி

ஐந்தாந்திருமுறைத் தொடர்ச்சி
ஆறும் திருமுறைத்
தொடக்கப் பகுதிகள் 3160 - 3779

உரையாசிரியர் :
உரைவேந்தர், சித்தாந்த கலாநிதி,
ஔவை சு. துரைசாமிப் பிள்ளை



வெளியீடு :
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

முதற் பதிப்பு : 1988

விலை : ரூபாய் நாற்பது.

அச்சிட்டோர் :
மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை - 600 014.

உ

சிவமயம்

முகவுரை

டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கள்
இணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

எத்தனை கோடி பணம் இருந்தாலும் வாழ்வில் நிம்மதி வேண்டும். அதனைப் பொருள் கொடுத்துப் பெற இயலாது. அருள் கொண்டு ஆன்மீக நெறிநின்று, தெய்வங்களை வழிபட்டே பெறல் வேண்டும்.

நிம்மதியற்ற வாழ்க்கை ஆதவன் இல்லாத ஆகாயம் போன்றது.

நிலைத்த நிம்மதியை இறைவன் ஒருவனே தரமுடியும். இதற்கு மன ஒருமைப்பாடே, ஏற்ற, இனிய, இன்பம் தரும் நல் நெறியாகும்.

மனம் விரும்பி ஏற்படுகின்ற ஒருமைப்பாட்டின் மூலம், உலகமக்க ளெல்லாம் வேற்றுமைகள் அனைத்தையும் மறந்து, ஒற்றுமையாகி ஒரு குடைக் கீழ் வாழ்கின்ற உன்னதமான நிலை ஏற்படமுடியும்.

இதனையே வள்ளல் பெருமான், ஆன்மநேய ஒருமைப்பாடு என்ற புதிய கொள்கையாகக் கண்டார்.

பக்தி என்பது, மனித குலத்திற்கு, அருள் வழிப்பட்ட புதிய சக்திகளை வழங்க வேண்டுமே தவிர, அதன் மூலம் மனித குலத்திற்குப் புறம்பான கொள்கைகளோ, மூடநம்பிக்கைகளோ, தோன்றக் கூடாது என்பதில் வள்ளல் பெருமான், மிகத் தீவிரமான நோக்குடையவராக இருந்தார்.

வள்ளல் பெருமானது திருவருட்பாப் பாடல்கள், இறைவனைப் போற்றுகின்ற வாழ்த்துப் பாக்களாக மட்டும் அமையாமல், அவன் நெறிச் செல்லப் புதிய வழிகளைக் காட்டும் ஒளிச்சுடர்களாக விளங்கு கின்றன. வாழ்க்கைத் தத்துவங்களாக மிளிர்கின்றன. தீமைத் திமிங் கிலங்களை அகற்றி, வாய்மை நாவாய்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கங்களாகக் காட்சி தருகின்றன. மாட்சி பெறுகின்றன.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன்

என்று வள்ளல் பெருமான் பாடும்போது, அஃறிணைப் பொருளான பயிர் வாடுவது கண்டுகூடத் தாங்காத தளிர் உள்ளம் அவர் உள்ளம் என்பது தெளிவாகின்றது.

அதனுடன் பயிர் வாடினால், பசியால் மக்கள் வாடுவார்களே என்ற எதிர்கால நோக்கும் அதில் அடங்கி இருக்கின்றது என்பதை எண்ணும் போது, வள்ளல் பெருமான், எல்லாப் பொருள்களையும் இனிய தாயுள்ளத் துடன் நோக்கினார்; அவற்றின் பிணி போக்கி ஊக்கினர் என்பது தெளிவாகின்றது.

வள்ளல் பெருமானின் உள்ளம், பத்தரை மாற்றுப் பசும்பொன்னினும் மேலானதாக விளங்கி இருக்கின்றது என்பதனைத் திருவருட்பாப் பாடல் கள் எங்கும் நாம் எளிதாகக் காண இயல்கிறது.

தாம், ஒருமையுடன் இறைவனைப் பணிவதோடல்லாமல், தம்மைச் சூழ்ந்தவர்களும் ஒருமையுள்ளம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்றே வள்ளல் பெருமான் விரும்பியுள்ளார்.

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்ஒன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறும் நினது புகழ் பேசவேண்டும் பொய்ம்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மத மானபேய்
பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டும் உனை
மறவாது இருக்க வேண்டும்
மதிவேண்டும் வன்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துவளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே!

இந்த ஒரு பாடல் மூலமே, மனிதன் முழு மனிதனாகும் பெற்றியினை அற்புதமாக அவர் கூறியுள்ளார்.

சிதம்பரத்திற்கு அருகில் அவதரித்துப் பரம் பொருளை, இளமை யிலேயே கண்டு, பாடும் திறம் பெற்ற அந்தப் பெருமானின் திருவருட்பாப் பாடல்களுக்குப் பேராசிரியர் ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்கள் எழுதிய வரலாற்று முறை உரை நூற்பதிப்பு, திருவருட்பா ஆடும் இறைவனின் எல்லையில் உள்ள, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மூலம் வெளியிடப்பெறுவது எண்ணி எண்ணி மகிழத்தக்கதாகும்.

திருவருட்பாவிற்கு உரை கண்டு, செயற்கரிய செயல் நிகழக் காரணமான அருட்செல்வர் பொள்ளாச்சி டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களுக்கு என் ஆழ்ந்த நன்றி உரியது.

அவர்கள் தட்டச்சுப் பகுதிகளைக் கொண்டுவந்து என் தந்தையார் செட்டி நாட்டரசர், டாக்டர் ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்களிடம் கொடுத்து மகிழ்ந்த காட்சியினைக் கண்டு மகிழ்ந்தவன் நான். என் தந்தையார் முன்னாள் இணைவேந்தர் டாக்டர் முத்தையவேள் அவர்கள் திருவருட்பாப் பகுதிகள் அச்சாகி வெளிவந்து மக்கள் பயன் பெற வேண்டும் என்பதில் பேரார்வம் கொண்டு, அவை வெளிவர வழி வகை செய்தார்கள்.

பொன்னான இந்நூல் தொகுதிகள் அச்சாகி வெளிவர, அறநிலையத் துறை மூலம் வட்டியில்லாக் கடனாக நிதி உதவி கிடைக்க வழி வகுத்த தமிழக அரசு அறநிலையத்துறைக்கு என் அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவருட்பா வரலாற்று முறைப் பகுதிகள் அச்சாகி வெளிவர வேண்டும் என்பதற்கு நம் பல்கலைக் கழக துணை வேந்தர் ராமசேது நாராயணன் அவர்கள் ஆக்கமும் ஊக்கமும் தந்துவருகிறார்கள்.

திருவருட்பாப் பதிப்புச் சிறப்பு அலுவலர் புலவர் நாகசண்முகம் அவர்களும் இந்நூல் தொகுதிகளை அச்சியற்றி வரும் மாருதி அச்சகம் திரு. வி. பார்த்திபன் அவர்களும் தம் பணிகளைச் செம்மையாய்ச் செய்து வருகிறார்கள்.

இதுவரை வெளிவந்துள்ள ஏழு பகுதிகளையும் விரும்பி வாங்கிப் பயன் பெறுதல் போல, வெளிவரும் மற்ற தொகுதிகளையும் பொதுமக்களும் மற்றும் பல்துறையினரும் வாங்கிப் பயன் பெற வேண்டும் என்று அன்புடன் வேண்டுகின்றேன்.

அருட் பெருஞ் ஜோதியாய் ஆண்டவனைக் கண்டு, புதியதோர் உலகுக்காக வழிகாட்டிய வள்ளல் பெருமானின் வழிச்சென்று நாம் வாழ்வாங்கு வாழ்வோமாக.

எம். ஏ. எம். இராமசாமி

அணிந்துரை

தமிழ் இசைக்காவலர், பத்மபூஷண், டாக்டர்

ராஜா சர். முத்தையா செட்டியார்

முன்னாள் இணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

ஈடு இணையற்ற உயர்தனிச் செம்மொழியான தமிழ்மொழியும் அதன் சொற்களும் அனைவருக்கும் பொதுவாயினும், கையாள்பவரைப் பொறுத்து மென்மையும், வன்மையும், எழிலும், ஏற்றமும், தெளிவும், திட்பமும் பெற்று விளங்கும் தன்மையைப் பெறுகின்றன. எனவேதான் வள்ளுவர் தமிழ், இளங்கோ தமிழ், கம்பர் தமிழ் என்று நூல்களை, ஆக்கியோர்மீது அதனை ஏற்றிச் சொல்லும் நிலைமையைக் காண்கிறோம்.

இது போலவே பக்திப் பேருலகில் நால்வர் தமிழ் என்று நானிலமே போற்றும் வண்ணம், அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய அருளரசர்கள் நால்வரும் இறைவனின் பெருமையைப் போற்றி எண்ணற்ற பாக்களை இயற்றித் தமிழகமெங்கும் பக்திமணத்தைப் பெருக்கினர்கள்.

அவர்கள் தமிழ் கேட்டு இறைவனே பலமுறை மகிழ்ச்சி அடைந்திருக்கிறார். சிலமுறை மயங்கிக்கூட இருக்கிறார். எனவேதான் தூய மறைகள் பாடும் வாயை உடைய எம்பெருமான் சுந்தரரைப் பார்த்துச் 'சொற்றமிழ் பாடுக' என்று அன்பால் ஆணை பிறப்பித்திருக்கின்றார்.

தண்ணீர் தமிழால் சைவநெறி போற்றுகின்ற அப் பெருமக்களுக்குப் பின்னர், அந்நெறி போற்ற, தத்துவமும் வித்தகமும் ஞானமும் சித்தியும் நிறைந்த, தேனினும் இனிய, தெளிந்த அமுதினும் உயர்ந்த, பாடல்களைத் தந்த பட்டினத்தடிகளும் வள்ளல் பெருமானும் தோன்றினர்கள். இந்த இருபெரும் ஞானச் சித்தர்களும் தோன்றிய இடங்கள் வேறுவேறு ஆயினும், பட்டினத்தடிகளால் திருவொற்றியூரும், வள்ளற்பெருமானால் வடலூரும் நிலைத்த பெருமைக்கு நிலைக்களன்களாக விளங்குகின்றன.

உலகத்தார் அனைவரும் ஒருமையுடன் இறைவன் திருவடிகளை வணங்குகின்ற உத்தமர்களாக வேண்டும். பிறிதொன்று எண்ணுத பேருள்ளம் கொண்டவர்களாக அவர்கள் திகழவேண்டும் என்னும் அருள் நோக்கோடு, அருட்பிரகாச வள்ளலார் அவர்கள், திருவாய் மலர்களாக மலர்ந்தவையே, அந்த அற்புத அருள் மலர்களின் தொகுதியே, செந்தமிழ் மொழியின் பக்திச் சுரங்கமே திருவருட்பாவாகும்.

திருவருட்பா ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவற்றில் இடம்பெற்ற பாடல்களின் எண்ணிக்கை 5818 ஆகும்.

பாடல் நூல்களுக்கு உரைகாண்பது என்பது அரிய, பெரிய, மிகவும் போற்றத்தக்க ஒப்பற்ற செயலாகும். பல சங்க நூல்களும் காவியங்களும் பக்திப் பெருநூல்களும் இலக்கண நூல்களும் அவற்றின் உரைநலத்தைக் கொண்டே அவற்றை எளிதில் படித்துப் பயன்பெறக் கூடியவையாக இருக்கின்றன என்பதனை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

நல்லார் ஒருவர் உளரேல் எல்லாருக்கும் மழை பெய்வதுபோல நல்லார் ஒருவர் உள்ளத்தில் திருவருட்பாவிற்கு உரை காணவேண்டும் என்ற எண்ணம் தோன்றியதால், அது செம்மையான முறையில் செயல் ஆயிற்று. இவ்வுலகிற்குப் பொருளும் அவ்வுலகிற்கு அருளும் இன்றியமையாதன என்று வள்ளுவப் பெருமான் வகுத்தார். ஆனால் இவ்வுலகிலேயே பொருளுடன் அருளையும் பெற்ற புண்ணியப் பெருமகனாக விளங்குகின்ற என் இனிய நண்பர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அவர்கள் பொன்மனத்திலேயே இந்தப் பொன்னான எண்ணம் தோன்றியது. பரம்பரையாகவே அருட்பிரகாச வள்ளல் பெருமானிடம் பேரன்பு கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த அவர்கள் உள்ளத்தில் இந்த எண்ணம் தோன்றியதற்குக் காரணம், அந்த வள்ளல் பெருமானின் திருவருள் என்றே எண்ணுகின்றேன்.

எண்ணியவற்றை எண்ணிய வண்ணமே செயலாக்கும் அன்பர் மகாலிங்கம் அவர்கள், சைவநெறியினை உள்ளவாறு உணர்ந்து தெளிந்த திறனுடன், தமிழ்மொழியின்கண் நுட்பமும் உரைகாண்பதில் திட்பமும் கொண்டு, பெரும்புகழ் பெற்று விளங்கிய சித்தாந்த கலாநிதி ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை அவர்களைக் கொண்டு அருட்பாவிற்கு உரை காணச் செய்தார்கள்.

அந்த உரை தட்டெழுத்துப் பிரதியில் எட்டாயிரம் பக்கங்களுக்கு மேல் உள்ளதாக உருவாயிற்று. அந்த உருவாக்கம் முழுமை பெற, பெருவிருப்பத்தோடு இரண்டு லட்சம் ரூபாய் வரை செலவு செய்து மகாலிங்கம் அவர்கள் அந்த முயற்சியில் முழுவெற்றி பெற்றார்கள்.

கூத்தப்பெருமான் குடிகொண்டு விளங்கும் சிதம்பரத்திற்கு அருகில் மருதூரில் பிறந்து, சற்றுத்தொலைவில் உள்ள வடலூரில் சத்திய ஞான சபையைக் கண்ட வள்ளல்பெருமானின் திருவருட்பாவிற்கு, உரிய உரை நூல், அந்தக் கூத்தப் பெருமானின் ஊர் எல்லையிலேயே விளங்கும் கல்விப் பேராலயமான, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின்மூலம் வெளிவரவேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். அவ்விருப்பத்தை அவர்கள் என்னிடம் வெளியிட்டபோது, போற்றத்தக்க பல அரியநூல்களை வெளியிட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மூலம் உரையுடன் கூடிய திருவருட்பா நூல் வெளிவருவது மிகவும் பொருத்தமுடையது என்று எண்ணி, மிகுந்த மகிழ்ச்சியோடு அதற்கு நான் ஒப்புக் கொண்டேன். விரைவிலேயே ஒருநாள் அவர்கள் தட்டெழுத்துப் பிரதியில் உள்ள திருவருட்பா உரை முப்பது பகுதிகளையும் எடுத்துக் கொண்டு அவர்களும், அவர்கள் திருக்குமாரரும் என் இல்லத்திற்கு வந்து

அவற்றை என்னிடம் தந்ததை, வாழ்நாளில் நான் பெற்ற பரிசுகளை யெல்லாம்விட மிகப்பெரிய பரிசாகக் கருதுகிறேன்.

பல்வேறு நூல்களைப் பதிப்பித்தும், உரை கண்டும், தமிழ் இலக்கிய உலகிற்கு ஓர் ஒளிவிளக்காக விளங்கியவர்கள் தமிழ்த் தாத்தா என்று உலகம் புகழும் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள். அந்தத் தமிழ்ப் பேரறிஞர் அவர்களை 1920 ஆம் ஆண்டு (தமிழ்க் கல்லூரிக்கு) முதல்வராக நியமித்து, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மகிழ்ந்தது. என்றுமே தமிழ் அறிஞர்களைத் தேடிப் போற்றிப் பல்கலைக்கழகத்திற்கு அவர்கள் பணிகளைப் பயன்படுத்திக் கொண்டது போலவே, பல ஒப்பற்ற நூல்களையும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மிகச் செம்மையான முறையில் தொடர்ந்து வெளியிட்டுக்கொண்டு வருகின்றது.

அனைத்துப் பாட வேறுபாடுகளோடும் விளக்க உரைகளோடும் ஈடு இணையற்ற பதிப்பாக பதினாறு பகுதிகளாக வெளிவந்த கம்பராமாயணத் தின் முதல்தொகுதி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா வில் வெளியிடப் பெற்றது.

அப் பதிப்புப் போலவே பத்துப்பகுதிகளாக மிகச் சிறந்த முறையில் வெளிவர இருக்கும் மூலமும் உரையும் கொண்ட திருஅருட்பாவின் முதல் தொகுதி (முதல் திருமுறை), இந்தியப் பெருநாட்டின் ஜனாதிபதி யாக இருந்த மேன்மைதங்கிய சஞ்சீவி ரெட்டி அவர்கள் தலைமை தாங்கப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி இருந்த பொன்விழாவில் வெளியிடப் பெற்றது. அப்பொழுது துணைவேந்தராக விளங்கிய டாக்டர் ஜஸ்டிஸ் பி.எஸ். சோமசுந்தரம் அவர்கள், திருவருட்பா நூல் வெளி வருவதில் பேரார்வம் காட்டியதுடன், முதல் தொகுதி பொன் விழாவில் வருவதற்கான தக்க ஏற்பாடுகளையும் செய்தார்கள். அவர் களுக்கு என் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிந்தனைத் திறத்தாலும், செயல்வன்மையாலும், தெளிந்த உயர்ந்த நிர்வாக ஆற்றலாலும், எந்தப் பொறுப்பை ஏற்றாலும் அந்தப் பொறுப்பிற் கும் அந்த அமைப்பிற்கும் நிலைத்த பெருமையினைச் சேர்க்கும் நம் மதிப் பிற்குரிய பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு அவர்கள், இப்பொழுது துணை வேந்தராக விளங்குகிறார்கள். அவர்கள் திருவருட்பாவின் பகுதிகள் தொடர்ந்து வெளிவரவேண்டும் என்பதில் காட்டிய ஆர்வமும் அக்கறையும் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் அளவிட முடியாதன. சென்ற ஆண்டு நிறுவியோர் நினைவு விழாவிற்கு அண்ணாமலைப் பல்கலை கழகத்திற்கு வருகைதந்த அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களிடம் திருவருட்பா வெளியீட்டு முயற்சிக்குத் தமிழக அரசு உதவவேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் வெளி யிட்டார்கள்.

அதனை அன்புடன் கேட்ட அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஒப்புதலோடு, திருவருட்பா வெளியீட்டிற்கு உதவி செய்வதாக அந்த விழாவிலேயே தெரிவித்தார் கள். அங்குத் தெரிவித்தவண்ணமே அறநிலையத்துறைமூலம் வட்டி

இல்லாக் கடனுக நான்கு லட்ச ரூபாய்கள் வழங்கித் திருவருட்பாப்பகுதி கள் சிறந்த முறையில் நூல்களாக வெளிவர உதவினர்கள். இந்த நற்பணிக்கு உதவிய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களுக்கும், நற்செயல்கள் அனைத்திற்கும் துணை நின்று நாளும் நல்லன புரியும் தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி ஆர். அவர் களுக்கும் என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு கொடுத்த உதவித் தொகையைக்கொண்டு, திருவருட்பா உரைப் பகுதிகள் மிக அழகாகவும் அருமையாகவும் பெருமை கொள்ளத் தக்க வகையிலும் தொடர்ந்து வெளிவரத் திட்டமிட்டுச் செயலாற்றிப் பெருவெற்றி கண்டுள்ள துணைவேந்தர் பேராசிரியர் சை.வே. சிட்டிபாபு அவர்களுக்கும் என் அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திருவருட்பா உரையுடன் கூடிய பகுதிகளை அனைத்துத் தமிழ் மக்களும் படித்து அருட்பெரும் சோதியான வள்ளல் பெருமானின் அருளைப் பெறவேண்டும் என்று மனப்பூர்வமாக விரும்புகிறேன்.

மு.அ. முத்தையா செட்டியார்

பேராசிரியர் ராம. சேதுநாராயணன்
துணைவேந்தர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

முன்னுரை

உலக உயிர்களுள் மானுடப்பிறவி மிகமிக அருமையுடையது. இதனை யுணர்ந்தே ஔவையாரும்,

'அரியது கேட்கின் வரிவடி வேலோய்
மக்கள் யாக்கையிற் பிறத்தலும் அரிதே
மக்கள் யாக்கையிற் பிறந்த காலையும்
மூங்கையும் செவிடும் கூனும் குருடும்
பேடும் நீங்கிப் பிறத்தலும் அரிதே...'

எனப் பாடிச் சென்றுள்ளார். மக்களாகப் பிறந்தவர்கள் பிறவி பயனடை யும் நெறியில் உணர்ந்து செல்லுதல் வேண்டும். ஞான பூமியாகிய பாரத நாட்டில் சித்தர்களும், யோகியர்களும், சமய ஞானியர்களும், தத்துவ வித்தகர்களும் பிற அருட்செல்வர்களும் தோன்றி, நாட்டின் பெருமையை உலக அரங்கத்தில் உயர்த்தியுள்ளனர். அத்தகைய நல்லோர் வரிசையில் இடங்கொண்டு, உலக ஒருமையுணர்வைப் போதிக்க முற்பட்டவரே வடலூர் இராமலிங்க அடிகள்.

இராமலிங்க அடிகளாரை, வள்ளலார் என்றும் வள்ளல்பெருமான் என்றும், திருவருட்பிரகாச வள்ளலார் என்றும் ஆர்வமுடன் அழைத்து மகிழ்கின்றனர். மக்கள் நன்னெறியிற் சென்று வாழ்வாங்கு வாழ்வதற் காக அவர் சத்திய சன்மார்க்க நெறியை வகுத்தார். 'அருட்பெருஞ் சோதியே தனிப்பெருங்கருணை' யென்று அருள்முழக்கமிட்டார். ஆன்மநேய ஒருமைப்பாட்டினையும் மரணமிலாப் பெருவாழ்வையும் பற்றிப் போதித்ததுடன் தாமும் அவற்றைத் தம் வாழ்வில் செயற்படுத்தினர்.

வள்ளற்பெருமான் உலகமக்களின் நலத்திற்காகவே தம் உள்ளுணர் வால் திருவருட்பாப் சுராங்களைப் பாடி வழங்கியவர். அந்தப் பாசுரங்கள் எல்லாம் தேனினும் இனியவை; தென்றலைப் போன்று மனத்துக்கு இதந்தருபவை; தெய்வநலம் வாய்ந்தவை.

வள்ளலாரின் இளமையில் அவர்தம் உள்ளங்கவர்ந்தவன் திருத் தணிகை முருகப் பெருமான். அந்த முருகனின் ஆறுமுகங்களைப் போலவே திருவருட்பாவும் ஆறுதிருமுறைகளாக விளங்குகின்றது.

அப்பெருமானின் தெய்வநலக் கண்ணெளிபோன்ற பிரகாசமான கருத்துக்கள் உலக அரங்கில் நிலைபெறுமேயானால் உலகெங்கும் அமைதியும் மகிழ்ச்சியும் நின்று நிலவும்; உலகமே கடைத்தேறும்.

நாளும் வள்ளற்பெருமானின் நற்கருத்துக்களைப் போற்றி அவரது செந்நெறியில் வாழும் அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள். திருவருட்பாவின் அருமையையும் பெருமையையும் நன்குணர்ந்த அவர்கள் அந்த அருள்நூல் பரவுவதற்குச் செயற்கரிய செயல் - திருத்தொண்டு - ஒன்றைச் செய்துள்ளார்கள்.

தமிழுலகம் போற்றும் உரைவேந்தரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய ஆராய்ச்சிப் பேரறிஞருமான ஔவை. சு. துரைசாமி பிள்ளையவர்களைக் கொண்டு, திருவருட்பா முழுவதற்கும் உரையெழுதச் செய்துள்ளார்கள். வள்ளற்பெருமானது வரலாற்றுமுறைப்படி அந்த உரை அமைந்துள்ளது.

தெளிவான உரையுடன் கூடிய திருவருட்பாவினைப் பகுதிப் பகுதிகளாகப் பிரித்து வெளியிடுவதற்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகமே ஏற்றது என்று கருதிய அருட்செல்வர் மகாலிங்கம் அவர்கள், உரைப் பகுதிகள் அனைத்தையும் பல்கலைக்கழக இணைவேந்தரும் பெருவள்ளலுமாக விளங்கிய செட்டி நாட்டரசர் முத்தையவேள் அவர்களிடம் ஒப்படைத்தார்கள். அரசர் பெருமானும் பெருவிருப்புடன் அந்த நற்பணிக்கு உதவ முற்பட்டமையால் தெளிவான உரையுடன் கூடிய திருவருட்பா - முதல் திருமுறை பல்கலைக்கழகப் பொன்விழாவில் வெளியிடப் பெற்றது. இந்நிலையில் அருட்செல்வர் மகாலிங்கம் அவர்களுக்கும் செட்டி நாட்டரசர் முத்தையவேள் அவர்களுக்கும் தமிழுலகம் என்றும் நன்றிக் கடப்பாடு உடையது.

சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில் மதிப்பிற்குரிய இராம. வீரப்பன் அவர்களால் 2,3,4,5- ஆம் தொகுதிகள் மிகச் சிறப்பாக வெளியிடப்பட்டன. அவற்றைத் தொடர்ந்து ஆறாந் தொகுதியும் ஏழாந்தொகுதியும் வெளிவந்துள்ளன; இப்பொழுது எட்டாந் தொகுதி வெளிவருகின்றது; ஏனைய தொகுதிகளும் உருவாகி வருகின்றன.

இத்தொகுதியில் ஐந்தாம் திருமுறையில் பிரசாத மாலை தொடங்கி ஆளுடைய அடிகள் அருண்மாலை நிறைவாகப் பத்துப் பகுதிகளும் ஆறும் திருமுறையில் பரசிவவணக்கம் தொடங்கி சிற்சபை விளக்கம் முதலிய இருபத்தொன்பது பகுதிகளும், இடம் பெற்றுள்ளன.

இப்பகுதிகள் அனைத்திலுமே தோன்றுத் துணையான இறைவன் வள்ளலாருக்குத் தோன்றுந் துணையாக நின்ற பெற்றியினையும் அம்மை கொண்ட அருட்பாங்கினையும் தெளிவாகக் காணலாம். பொதுவாகப் பாடல்களனைத்திலுமே தில்லைக்கூத்தன் பெரும்புகழ் இனிது பரவப்படுகிறது.

சிறுகுழந்தையும் செய்யமேனிச் சிவனிடம் அருள்வேண்டும் நிலையிலே வள்ளலார் மட்டும் அதனை வேண்டாதிருப்பாரா? இந்தக் குறிப்

பிஞ்ஞ வள்ளலார் மிகக் கனிவுடன் புலப்படுத்திக் காட்டுகிறார்; இறைவன் அஞ்ஞத்தும் ஆனவன் என்பதஞ்ஞ அடுக்கடுக்காய் அழகுற நவில்கின்றார்.

தாயும் தந்தையும் தெய்வமும் குருவும்
தயங்கு கின்றதோர் தலைவனும் பொருளும்
ஆயும் இன்பமும் அன்பும் மெய்அறிவும்
அஞ்ஞத்தும் நீஎன ஆதரித் திருந்தேன்
ஏயும் எள்ஞ வீரக்கம் ஒன்றிலையேல்
என்செய் வேன்இதை யார்க்கெடுத் துரைப்பேன்
சேயும் நின்னருள் நசையுறுங் கண்டாய்
தில்ஞ மன்றிடைத் திகழ்ஒளி விளக்கே.

பேரொளி விளக்காகப் பரமஞ்ஞக் கண்ட வள்ளல் பெருமான், அருட்பெருஞ் சோதி என்னும் தனிப்பெரும் சோதியை ஆர்வமுடன் ஏற்றி, அஞ்ஞவரின் அக இருஞ்ஞயும் நீக்கி நமக்கும் புதுவழிகாட்டிச் சென்றுள்ளார். அப்பெரு மானின் திருவருட்பாப் பாடல்களில் ஒளிரும் தெய்வீகக் கருத்துக்கள் உலகம் எங்கும் பரவவேண்டும் என்பதே பல்கலைக்கழக இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்களின் எண்ணமும் ஆர்வமும் ஆகும்; அவ்விருப்பமே என் விருப்பமும் ஆகும்.

திருவருட்பாத் தொகுதிகள் அஞ்ஞத்தையும் அஞ்ஞத்துத் துறையிலும் உள்ள தமிழ்ப் பெருமக்கள் வாங்கிப் பயன் பெற வேண்டும் என்று அன்புடன் விரும்புகின்றேன்.

(ஒப்பம்) ராம. சேதுராராயணன்

அருட்பிரகாச வள்ளலார்

இராமலிங்க சுவாமிகள்

வாழ்க்கை வரலாறு

தமிழ்நாடு செய்த பெரும் தவப்பயனால், பச்சைப் பயிரோடு பக்தி பயிரையும் வளர்க்கும் தென்னார்க்காடு மாவட்டத்தில், இறைவன் திருக் கூத்தாடும் தில்லையின் திருநகரை அடுத்து உள்ள மருதூரில், இராமையா பிள்ளைக்கும் சின்னம்மையாருக்கும் மகவாக இராமலிங்கர் தோன்றினர். அவர் பிறந்த நாள் 5-10-1823 ஆகும்.

இவருடன் பிறந்தோர் சபாபதிப்பிள்ளை, பரசுராமப்பிள்ளை என்போர் ஆவர். வாழையடி வாழையாக வந்த அருள் திருக்கூட்ட மரபில் உதித்த இராமலிங்கருக்குச் செந்தமிழ்க் கடவுளாகிய முருகப் பெருமானது திருக்காட்சி இளமையிலேயே கிடைத்தது. மக்கட் பிறவியினரையே குருவாகப் பெறும் மானிடர் உலகில், மறைமுதல்வனின் மகனை முருகப் பெருமானையே குருவாய் ஏற்றதால், இராமலிங்கர் செந்தமிழும் வடமொழியும் ஆகிய இரு பெரும் மொழிகளையும் ஓதி உணரும் பெருஞானம் கைவரப் பெற்றார்.

எனினும் உலகியல் முறைக்கேற்பக் காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரையும், சகோதரர் சபாபதிப் பிள்ளையையும் ஆசான் களாகப் பெற்றார். சபாபதிப் பிள்ளையின் அன்பிலும் அவர் மனைவியாரின் அரவணைப்பிலுமே வளர்ந்தார்.

கருவிலே திருவுடையவராக அவர் தோன்றியமையால், இளம்போதி லேயே கவி எழுதும் பேராற்றலைப் பெற்றார். இராமலிங்கர் பல்வேறு ஆற்றல்களின் உறைவிடமாக விளங்கினர்.

அவர் புலவராக, கவிஞராக, சொற்பொழிவாளராக, உரைநடை எழுத்தாளராக, நூலாசிரியராக, உரையாசிரியராக, ஞானசிரியராக, போதகாசிரியராக, மருத்துவராக, இவர்களுக்கெல்லாம் மேலாகத் துறவி யாக, ஞானியாக, சித்தராகக் காட்சி தந்தார்.

செயற்கரியவற்றையே செய்த இராமலிங்கர், உலகங்கள் எல்லா வற்றையும் இயக்கிவரும் முழுமுதற் பொருள்களான கடவுள், அனைவர் உள்ளங்களிலும் சோதி வடிவாகத் திகழ்கின்றார். அத்தகைய அருட்

பெருஞ்சோதி ஆண்டவரின் தனிப்பெருங் கருணையே உலக உயிர்களை யெல்லாம் வாழவைக்கிறதென்றும் கண்டார்.

இவ்வுண்மையினை மனத்திற் கொண்டு, சாதி மத வேறுபாடின்றி எல்லா உயிர்களிடத்திலும் இரக்கமுடையவராய் வாழும் ஆன்மநேய ஒருமைப்பாட்டினை நல்கும், சீவகாருண்ய ஒழுக்கமே உலகில் உயர்ந்தது என அறிந்து தெளிந்தார். இதனால் சமரச சன்மார்க்க நெறியைக் கைக்கொண்டார்.

தம் நெறிதழைக்க இறைவன் கருணைதனைப் பெற்றார். பயிர்கள் வாடுவதையே பார்க்கப் பொறுக்காத இராமலிங்கர், பசியால், வாடும் மக்களின் துயர் துடைக்க முன்வந்தார். வடலூரில் சன்மார்க்க சங்கம்—சத்திய தருமசாலை—சத்தியஞான சபை என்னும் மூன்று அருள் நெறி காக்கும் அமைப்புகளை நிறுவினர். அப் பெருமான் தனிக்கொள்கையை, தனிக் கொடியை, தனிச்சபையை தனி மார்க்கத்தை, தனி மந்திரத்தை, வழிபாட்டைக் கண்டார்.

பொருளை வாரி வழங்கியவர்கள் பொருள் வள்ளல்கள்; அருளை வாரி வழங்கியோர், அருள் வள்ளல்கள். அருள் வள்ளல்களில் ஒருவராகி, அதேபொழுது தம் தனிப்பண்பாலும் ஒருவராகி, வள்ளல் என்ற தனிப் பெயரையே பெற்றுத் திகழும் வெற்றி பெற்றவர் நம் இராமலிங்கர்.

மரணமில்லாப் பெருவாழ்வு எனச் சாகாக்கலையை உலகிற்கு உணர்த்தியவர் வள்ளலார்; அவர் பொன் செய்யும் ஆற்றலையும் பெற்றிருந்தார்.

வள்ளலார் தோன்றிய காலம்தொட்டே பல அதிசயங்களை நிகழ்த்தி உள்ளார்.

அப் பெருமகனார் ஓராண்டுப் பருவத்தினராக இருந்தபோதே திருவலியம்பலநாதர் சந்நிதித் திரைச்சீலை தானே தூக்கப்பெற்று தரிசித்தார். ஒருமுறை திண்ணையிலிருந்து கீழே விழுந்தபோது இறைவி வந்து காப்பாற்றினர். ஒரு நாள் பட்டினியோடு படுத்திருந்தபோது அவர் அண்ணியார் வடிவில் இறைவி காப்பாற்றினர். இளமையில் அண்ணன் சொற்பொழிவுகளுக்கு ஏடு படிக்கத் தொடங்கினர். ஒரு முறை அவர் நோய்வாய்ப் பட்டமையால் தாமே சொற்பொழிவு செய்யத் தொடங்கி நாடறிந்த பெருமகன் ஆனார்.

தண்ணீரில் விளக்கெரியச் செய்தார். ஒரே இரவில் 1596 வரிகளை உடைய அருட்பெருஞ்சோதி அகவலைப் பாடி முடித்தார்.

வள்ளலார் பக்தி நெறி நின்றாலும் உலகவாழ்வில் மக்கள் சிறந்து வாழும் பக்குவநெறியும் கண்டவர். ஏழை பணக்காரன், மேல்சாதி கீழ்சாதி முறைகளை வன்மையாகக் கண்டித்தவர்.

சாதி சமய வேறுபாடுகளைக் கடுமையாய் எதிர்த்தார். மக்கள் வாழப் பயன்படும் நெறியே நன்னெறி எனப் போற்றினர்.

இளமையில் முருகப்பெருமானைக் கடவுளாகவும், திருஞான சம்பந்தரைக் குருவாகவும், திருவாசகத்தை வழிபடும் நூலாகவும் கொண்டார். பின்னர் ஒற்றியூரில் வாழும் இறைவனின் இணையற்ற பக்தராகவும், பின் தில்லையம்பல நாதரின் பக்தராகவும் விளங்கினர். முடிவில் அருட்பெருஞ்சோதி அடியவராகத் திகழ்ந்தார்.

ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் ஆகிய அனைவரும் ஒருமை உள்ளவராகி உலகில் வாழவேண்டும் என்ற பெருநோக்கோடு வள்ளலார் திருவாய் மலர்ந்தருளிய செந்தமிழ்த் திருப்பாடல்களின் தொகுதியே திருவருட்பா என்னும் கருவூலமாகும்.

அருளாளர்கள் பாடிய பாடல்கள் அனைத்தும் அருட்பாக்களே, ஆனால் 'திரு' சேர்ந்து அப் பெயருடனேயே விளங்கும் அருட்பா! வள்ளல் பெருமான் பாடிய பாடல்களின் தொகுதியே யாகும்.

திருவருட்பா ஆறு திருமுறைப் பகுதிகள் கொண்டு விளங்குகின்றது. 399 பதிகங்களையும் 5818 பாடல்களையும் கொண்டது. எல்லாப் பாடல்களும் இறைவனை முன்னிறுத்திப் பாடப்பெற்றவையே. இது பக்திப்பா உலகில் ஒரு புதுமை: தமிழ்மொழிக்கு மற்றொரு பெருமை.

ஆண்டவனை அனைவரும் நாள்தோறும் வேண்டிப் போற்றும் நிலையில் உரைநடை வேண்டுகோளாக அமைந்தவை, சுத்த சன்மார்க்கச் சத்தியச் சிறு விண்ணப்பம், சுத்த சன்மார்க்கப் பெரு விண்ணப்பம், சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம், சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய ஞான விண்ணப்பம் என்பனவாகும்.

மனுமுறை கண்ட வாசகம், சீவகாருண்ய ஒழுக்கம் என்பன வள்ளல் பெருமான் இயற்றிய உரைநடை நூல்கள் ஆகும். அவர் உரையாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் திகழ்ந்தும் பல அரும்பணிகள் செய்தார்.

இறைநெறியை ஆன்மநேயப் பெருநெறி ஆக்கிய வள்ளல்பெருமான் தைப்பூச நன்னாளில் வடலூரில் உள்ள சித்திவளாகத்தில் ஓர் அறைக்குள் சென்று கதவினை மூடிக்கொண்டு அருட்பெருஞ்சோதி ஆண்டவரான இறைவனோடு இரண்டறக் கலந்து சோதி வடிவானார். அவர் சித்தி அடைந்த நாள் 30-1-1874 ஆகும்.

வள்ளல் பெருமானின் கொள்கைகள் இன்று உலகெங்கும் பரவி வருகின்றன.

ஆண்டுதோறும் வடலூரில் தைப்பூசத் திருவிழாவில் பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள்கூடிச் சோதி வழிபாட்டில் கலந்துகொண்டு வள்ளல் பெருமானின் அருளைப் பெறுகின்றனர்.

வள்ளல் பெருமானின் அருள்திறத்தை, ஆன்மநேய, ஒருமைப் பாட்டின் உயர்வை, அறிந்து தெளிந்து திருவருட்பாக்களை நாளும் ஓதி நல்வாழ்வு பெறுவோமாக.

உரைவேந்தர், சித்தாந்த கலாநிதி,

ஔவை சு. துரைசாமிப் பிள்ளை

வாழ்க்கை வரலாறு

தென்னார்க்காடு மாவட்டத்தில் ஔவையார் குப்பம் என்ற கிராமம். அதில் சுந்தரம்பிள்ளை என்ற திருமகனாரும் சந்திரமதி அம்மையார் என்ற திருமகளாரும் மனமொன்றிய தம்பதிகளாக வாழ்ந்து வந்தார்கள்.

சுந்தரம்பிள்ளை ஊர்க்கணக்கராகப் பணியாற்றிவந்தார் என்றாலும் கன்னித் தமிழ்மீது கட்டுக்கடங்கா அன்பு கொண்டவராக விளங்கினார். அன்பு மட்டுமல்லாமல், அம்மொழியில் மிக்க ஆற்றல் பெற்றவராகவும் திகழ்ந்தார். இப் பெருந்தகை மயிலம் முருகன்மீது பல செய்யுள் நூல்கள் இயற்றி உள்ளார்.

இந்த அன்புத் தம்பதிகளுக்கு ஐந்தாம் குழந்தையாக 1902ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5ஆம் நாள் ஆண்மகவு ஒன்று பிறந்தது. அதற்குத் துரைசாமி என்று பெற்றோர்கள் பெயரிட்டார்கள்.

அக் குழந்தை பிற்காலத்தில் தமிழகத்தில் உரை உலகில் ஒரு பொற் காலத்தை உருவாக்கப் பிறந்ததாலோ என்னவோ, இறைவன் ஔவை என்னும் சொல்லை முதலாக உடைய ஊரில் அந்தச் செந்தமிழ்ச் செல்வத்தைப் பிறக்க வைத்தார்.

துரைசாமிப்பிள்ளை, தொடக்கக் கல்வியை உள்ளூரில் கற்றார். பின் திண்டிவனம் அமெரிக்கன் ஆர்க்காடு நற்பணி உயிர்நிலைப் பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பு வரை கற்றார்.

அந்த இளமைக் காலத்திலேயே துரைசாமிப் பிள்ளைக்கு இருந்த தமிழ்ப்பற்றால் ஓலைச்சுவடிகளை ஆய்கின்ற பயிற்சியினை மேற்கொண்டார்.

வருவாய் தேடவேண்டிய நிலை வந்ததால், முதலில் துரைசாமிப் பிள்ளை உடல்நலத் தூய்மைக் கண்காணிப்பாளராகவே பொறுப்பேற்றார். என்றாலும், தமிழ்மொழிமேல் அவர் கொண்ட பெரும் பற்றால் இப் பொறுப்பினைச் சிறிது காலத்திலேயே விட்டுவிட்டார்.

தமிழை முறையாகக் கற்க முடிவு செய்தார். நாவலர் ந.மு. வேங்கட சாமியார் அவர்களிடமும், பாவரசு வேங்கடாசலனார் அவர்களிடமும் சங்க இலக்கியங்களையும் தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும் பழுதறக் கற்றார்.

சைவ சமயக் கல்வியை கந்தசாமி தேசிகர், தவத்திரு வாகீச யானந்த அடிகள் ஆகியோரிடம் கற்றுத் தெளிந்தார். 1930ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் பட்டமும் பெற்றார்.

வடார்க்காடு மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பினை ஔவை பெற்றார். அம் மாவட்டத்தில் பல பள்ளிகளில் அவர் பணியாற்றினார். அதுசமயம் அவர் நடத்திய திருக்குறள் வகுப்புகள் பேரறிஞர்களையும் கவரும் தன்மைபெற்று விளங்கின.

துரைசாமிப் பிள்ளைக்கு திருமதி உலோகாம்பாள் என்னும் அம்மையாரை மணம் முடித்தனர். துரைசாமிப்பிள்ளையின் இல்லறம் என்றும் நல்லறமாக அமைந்தது.

இப் பெருமக்களின் இல்லற வாழ்வின் பயனாக திருவாளர்கள் ஔவை நடராசன், ஔவை திருநாவுக்கரசு, ஔவை ஞானசம்பந்தன், மெய்கண்டான், நெடுமாறன்; திருமதிகள் பாலகுசம் அம்மையார், மணிமேகலை, திலகவதி அம்மையார், தமிழரசியார் ஆகியோர் அறிவறிந்த நன்மக்களாக வாய்த்தார்கள்.

துரைசாமிப்பிள்ளை தமிழ் கற்றுத் தேர்ந்ததோடு, பிறமொழித் தாக்குதல்களிலிருந்து தமிழைக் காக்கும் பெரும் பணியையும் தொடக்க முதலே மேற்கொண்டார்.

உயர்நிலைப்பள்ளிப் பணியிலிருந்து நீங்கித் திருவேங்கடவன் தமிழ்த் திசைக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியேற்றார். இதன் பின்னர் துரைசாமிப் பிள்ளையின் தமிழ்ப்பணி மிக ஆக்கபூர்வமாக அமைந்தது.

நாவலர் ந. மு. வேங்கடசாமியார் அவர்கள் மணிமேகலையில் அமைந்துள்ள சமயப் பகுதிகளுக்கும் தருக்கப் பகுதிகளுக்கும் சீரிய உரை காணுமாறு துரைசாமிப் பிள்ளையிடம் பணித்தார். அதற்கு உடன்பட்ட துரைசாமிப்பிள்ளை வடமொழி வல்லவர்கள் பலரின் பெருந்துணையுடன் வடமொழி நூல்களை மிகச் செம்மையாகக் கற்று, மணிமேகலைக்கு மிகச் சிறந்த உரை கண்டார்.

தொல்காப்பியம், திருக்குறள், சிந்தாமணி, இறையனார் களவியல் சிலப்பதிகாரம் முதலிய பெருநூல்களுக்குப் பல உரைகள் பல பெருமக்களால் வரையப்பட்டன. அக்கால எல்லைக்குப்பின் அத்தகைய பெரும் புலவர்கள் வரிசையில் வைத்து எண்ணத்தக்க வகையில் உரை எழுதும் வழியில் துரைசாமிப்பிள்ளை தன்னிகரற்றவரானார்; அதனால் அவரைத் தமிழ் உலகம் உரைவேந்தராகக் கண்டது. ஔவையாகக் கண்டது.

ஔவை துரைசாமிப்பிள்ளை உரை எழுதித் தமிழகத்திற்கு வழங்கியவைகள் பலவாகும்.

யசோதர காவியம் என்ற சமணசமய இலக்கிய நூலைச் சுவடியிலிருந்து ஆராய்ந்து உரைகண்டு பதிப்பித்தார்.

தமிழ்ப் பெரும் புலவர்களின் பேராலயமாக விளங்குகின்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகம் துரைசாமிபிள்ளையை, தமிழ்த்துறையில் சேர்த்துக் கொண்டது. அங்கிருந்தபோதுதான் ஔவை துரைசாமிப் பிள்ளை சைவசமய இலக்கிய வரலாறு என்ற அரிய வரலாற்று நூலை உருவாக்கினார். ஐங்குறுநூறுக்கு உரைகண்டார். இவற்றோடு சைவசமயப் பெருநூலான ஞானாமிர்த நூலை ஆராய்ந்து விளக்கம் எழுதினார். இந் நூல்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடுகளாக மலர்ந்தன.

அடுத்து, துரைசாமிப்பிள்ளை செய்த பெரும்பணி புறநானூறுக்கு உரை கண்டதாகும். நற்றிணைக்கும் உரை கண்டார். பெரிதும் முயன்று பதிற்றுப்பத்திற்கும் உரை கண்டார்.

தமிழ்ப்பணி என்ற பெரும்பயணத்தை மேற்கொண்ட துரைசாமிப் பிள்ளை, பின் மதுரை தியாகராசர் கல்லூரித் தமிழ் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். எண்ணற்ற மாணவர்கள் உரைவேந்தர்பால் தமிழ் கற்று அறிஞர்கள் ஆயினர்.

உரைவேந்தரின் உரைகாணும் பணிகளின் சிகரமாக அவர் திருவருட்பாவிற்கு உரைகண்ட பணி அமைந்தது. அருட்செல்வர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் நல் உதவியோடு திருவருட்பா பாடல்கள் அனைத்திற்கும் தெளிவும் திட்பமும் நுட்பமும் மிகுந்த உரைதனைக் கண்டார்.

மதுரைப் பல்கலைக் கழகம், இந்தியப் பல்கலைக் கழகங்களின் ஆய்வுக்கு உரைவேந்தரைப் பேராசிரியராக அமர்த்தியது. அப்போது தமிழ்நாட்டு ஊர்ப்பெயர் வரலாற்றாராய்ச்சி நூல் உரைவேந்தரால் உருவாக்கப்பட்டது.

உரைவேந்தர் நாவேந்தராகவும் விளங்கினர். இலக்கிய சமய மேடைகளில் அவர் சொற்கள் ஆலயமணிகளின் அற்புத ஓசைகளாகவே முழங்கின.

துரைசாமிப் பிள்ளைக்கு உரைவேந்தர் பட்டத்துடன், சித்தாந்த கலாநிதி, பேரவைச் செம்மல் என்ற சிறந்த பட்டங்களையும் உயர்ந்த அமைப்புகள் வழங்கிச் சிறப்பித்தன.

மகேந்திரவர்மப் பல்லவன் வடமொழியில் இயற்றிய நாடகமான மத்த விலாசத்தை உரைவேந்தர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் எனவும், சைவமும் தமிழும் தழைத் தினிதோங்குக எனவும் முழக்கமிட்டு வாழ்நாள் முழுவதும் திகழ்ந்த தமிழ்ப் பெருமானரான ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள், 1981ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3ஆம் நாள் இறைவன் திருவடி நீழலை அடைந் தார்.

உரைகாண்பதில் தனி உலகையே அமைத்து வேந்தரான துரை சாமிப்பிள்ளை அவர்களின் பொன்னை புகழ், உலகுள்ளளவும், உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் உள்ளளவும் நிலைத்து நிற்கும். அவர் அரும்பணி வருங்காலங்களுக்குப் பெரும் வழிகாட்டியாகும்.

இதனுள்...

ஐந்தாம் திருமுறைத் தொடர்ச்சி

3.	பிரசாத மாலை	3160-3169	1
4.	ஆனந்த மாலை	3170-3179	12
5.	பத்தி மாலை	3180-3189	23
6.	சௌந்தர மாலை	3190-3201	32
7.	அதிசய மாலை	3202-3215	44
8.	அபராத மன்னிப்பு மாலை	3216-3225	58
9.	ஆளுடைய பிள்ளையார் அருண்மாலை	3226-3236	69
10.	ஆளுடைய அரசுகள் அருள்மாலை	3237-3246	80
11.	ஆளுடைய நம்பிகள் அருள்மாலை	3247-3256	91
12.	ஆளுடைய அடிகள் அருண் மாலை	3257-3266	98

ஆறும் திருமுறை

1.	பரசிவ வணக்கம்	3267-3269	109
2.	திருச்சிற்றம்பலத் தெய்வமணி மாலை	3270-3282	113
3.	ஆற்றுமை	3283-3292	127
4.	பிறப்பவம் பொருது பேதுறல்	3293-3302	137
5.	மாயை வலிக்கு அழுங்கல்	3303-3312	149
6.	முறையீடு	3313-3322	160
7.	அடியார் பேறு	3323-3342	173
8.	ஆன்ம விசாரத் தழுங்கல்	3343-3352	191
9.	அவா வறுத்தல்	3353-3365	202
10.	தற் சுதந்தரம் இன்மை	3366-3375	214
11.	அத்துவிதானந்த அனுபவ இடையீடு	3376-3385	223
12.	பிள்ளைச் சிறு விண்ணப்பம்	3386-3409	236
13.	பிள்ளைப் பெரு விண்ணப்பம்	3410-3542	261
14.	மாயையின் விளக்கம்	3543-3552	365
15.	அபயத் திறன்	3553-3580	375
16.	ஆற்ற மாட்டாமை	3581-3590	398
17.	வாதனைக் கழிவு	3591-3610	406
18.	அபயம் இடுதல்	3611-3620	423
19.	பிரிவாற்றுமை	3621-3630	431
20.	இறை பொறுப்பியம்பல்	3631-3640	439
21.	கைம்மாறின்மை	3641-3650	449
22.	நடராசபதி மாலை	3651-3684	457
23.	சற்குருமணி மாலை	3685-3709	507
24.	தற்போத இழப்பு	3710-3719	534
25.	திருமுன் விண்ணப்பம்	3720-3729	545
26.	இனித்த வாழ்வருள் எனல்	3730-3739	553
27.	திருவருள் விழைதல்	3740-3759	564
28.	திருவருட் புகழ்ச்சி	3760-3769	584
29.	சிற்சபை விளக்கம்	3770-3779	595

அருட்பிரகாச வள்ளலார்

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் அருளிய

திருவருட்பா-வரலாற்றுமுறை

உரைவேந்தர் உரை

எட்டாம் தொகுதி

ஐந்தாந்திருமுறைத் தொடர்ச்சி

அஃதாவது, இறைவன் அருளிய திருவருட்பிரசாதத்தை நினைந்து பாடிய பாட்டுக்களாலாகிய சொல்மாலை. இதன்கண், இறைவன் மக்களினத்துச் சான்றோர் உருவில் வந்து திருநீறும் பூவும் அளித்தசெய்தி வியந்து பாராட்டப் படுகிறது. இதனைப் பெருந்திணை நங்கையின் கூற்றுக் கருதுவதும் உண்டு.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3160. திருஉருக்கொண் டெழுந்தருளிச் சிறியேன்முன் அடைந்து
திருநீற்றுப் பையவிழ்த்துச் செஞ்சுடர்பூ அளிக்கத்
தருவுருக்கொண் டெதிர்வணங்கி வாங்கியநான் மீட்டும்
தயாநிதியே திருநீறும் தருகஎனக் கேட்ப
மருவுருக்கொண் டன்றளித்தாம் திருநீறின் றுனக்கு
மகிழ்ந்தளித்தாம் இவைஎன்று வாய்மலர்ந்து நின்றருய்
குருஉருக்கொண் டம்பலத்தே அருள் நடனம் புரியும்
குருமணியே என்னைமுன்னாட் கொண்டகுணக் குன்றே.

உரை : குரு வடிவந் தாங்கித் தில்லையம்பலத்தின்கண் அருள் நடனம் புரிகின்ற செம்மணியே, முன்னை நாளையிலேயே என்னையாளாகக் கொண்டருளிய குணத்தின் குன்றமே, சிறியவனுகிய என் முன்பு திருவுருவந் தாங்கியெழுந்தருளி, திருநீற்றுப் பையை யவிழ்த்து, சிவந்த ஒளியுடைய பூ வொன்றைத் தந்தருளினையாக, அடியற்ற மரம்போல வீழ்ந்து, நின்னை வணங்கி வாங்கிய பின், அருள் நிதியே, திருநீறும் தந்தருள்க என மீண்டும் நான் கேட்க, இப்போது பொருந்திய உருவங்

கொண்டு அன்றே வந்து உனக்கு அருளினேம்; இன்று திருநீறும் அருளுகின்றேம் என்று திருவாய் மலர்ந்து நின்றருய்; பெருமானே, உன் அருட்டிறத்தை என்னென்பேன். எ.று.

மக்கள் உருவில் குருவாக எழுந்தருளி வந்து ஞான மருளுவது இறைவனுக்கு இயல்பாதலின், "குருவுருக்கொண்டு அம்பலத்தே அருள் நடனம் புரியும் குருமணியே" என்கின்றார். குருமணி - சிவந்த மாணிக்க மணி. உலகில் தோன்றும் ஞானசிரியர்கட்கெல்லாம், முடிமணியாக விளங்குபவனே என்றற்குக் "குருமணியே" என்றார் எனலுமாம். முற்படப் போந்து உயிர்கட்கு அருள் நெறியில் ஆளாகக் கொள்வது இறைவனுக்கு முறைமையாதலின், "முன் என்னையாட்கொண்ட குணக் குன்றே" என்று கூறுகின்றார். "என்னை முன் ஆள் ஊழுடையான்" (கோவை —7) என்று திருவாதவூரரும் உரைப்பது காண்க. வடலூர் வள்ளல் தம் வாழ்க்கையில் நிகழ்ந்த சிறப்புடை நிகழ்ச்சியாகக் குறிக் கின்றாராதலின், முன்பொரு நாள் சான்றோர் ஒருவர் உருவில் இறைவன் போந்து திருநீறு தந்தருளியதை, "மருவுருக் கொண்டன்றளித்தாய் திருநீறு" என்கின்றார். முன்பு வந்தபோது வணங்கிய வடலூர் வள்ளற்கு அவர் பூ வளித்ததும், அதனால், ஆராமையுற்ற வள்ளலார் திருநீறு கேட்டதும் விளங்க, "திருநீற்றுப் பையவிழ்த்துச் செஞ்சுடர்ப் பூ வளிக்கத் திருநீறும் தருக எனக் கேட்ப. மருவுருக் கொண்டன்றளித்தாம் திருநீறு" என்று விடையிறுக்கின்றார். இங்ஙனங் கூறினேனும், வந்து பெரியவர் பூவுடன் திருநீறும் தந்தமை புலப்பட, "இன்றுனக்கு மகிழ்ந்தளித்தாம் இவை" என்றியம்புகின்றார். "மருவுரு" என்றது முன்பு போந்த உருவிலேயே வந்தமை குறித்தது.

இதனால், பூவளித் தாட்கொண்ட கூத்தப் பெருமான் மீண்டும் போந்து பூவும் திருநீறும் கொடுத்த குறிப்புத் தெரிவித்தவாறும். (1)

3161. என்வடிவந் தழைப்பவொரு பொன்வடிவந் தரித்தே
என்முன்அடைந் தெனைநோக்கி இளநகைசெய் தருளித்
தன்வடிவத் திருநீற்றுத் தனிப்பைஅவிழ்த் தெனக்குத்
தகுசுடர்ப்பூ அளிக்கவும்நான் தான்வாங்கி களித்து
மின்வடிவப் பெருந்தகையே திருநீறும் தருதல்
வேண்டுமென முன்னரது விரும்பியளித் தனம்நாம்
உன்வடிவிற் காண்டியென உரைத்தருளி நின்றருய்
ஒளிநடஞ்செய் அம்பலத்தே வெளிநடஞ்செய் அரசே.

உரை : ஒளி திகழும் நடம் புரிகின் அம்பலத்தின்கண், பரவெளி நடனத்தைச் செய்கின்ற அருளரசே, எனது உருவத் திருமேனி வளம் பெறுவது கருதிப் பொன் மேனி கொண்டு என் முன்பு வந்து என்னைப் பார்த்துப் புன்னகை செய்து, தனது அழகிய திருநீறு நிறைந்த சிறந்த பையை அவிழ்த்து, எனக்கு ஒளியுடைய பூ வொன்றைக் கொடுக்கவும், நான் அதனை வாங்கி மேனியில் தரித்தும் ஆர்வம் தீராமையால் மின் போன்ற மேனிகொண்ட பெருந்தகையே, எனக்குத் திருநீறும் தரல்

வேண்டுமெனக் கேட்டேனுக, முன்பே அதனை விரும்பியுனக்குத் தந்திருக்கிறேம்; அதனை உன் மேனி மேலே காண்பாயாக எனச் சொல்லியருளினாய்; உன் திருவருளை என்னென்பேன். எ.று.

பொன்னிற மேனியுடைய சான்றோர் ஒருவர் உருவிற் போந்தமை தெரிவித்தற்கு, "பொன் வடிவம் தரித்தே என் முன் அடைந்து" என்றும், அவ்வடிவ முற்றது அதனைக் கண்டு களிக்கும் என் மேனியும் அதுபோல் திருவருள் வளம் பெறற் பொருட்டுப் போலும் என்பாராய், "என் வடிவம் தழைப்ப" என்றும் கூறுகின்றார். உள்ளத்தில் நிறையும் அன்பைப் புலப்படுத்துவது மலர்ந்த முகத்தில் தவழும் முறுவல் நகையாதலால், "இளநகை செய்தருளி" எனவும், தம்மிடத்திருந்த திருநீற்றுப் பையை யவிழ்த்து அதனுள் வைத்திருந்த புதுப் பூ வொன்றை எடுத்து அச்சான்றோர் கொடுத்ததை எடுத்து மொழிவாராய், "திருநீற்றுப் பையை அவிழ்த்து எனக்குச் சுடர்தரு பூ அளிக்கவும்" எனவும் உரைக்கின்றார். இளநகை - புன்சிரிப்பு. திருநீற்றுப் பையும் பொன்னிறம் கொண்டிருந்தமை தோன்றத் "தன் வடிவத் திருநீற்றுப் பை" எனக் கூறுகிறார். புதுப் பூ எனற்குச் "சுடர்தரு பூ" என்கிறார். புதிது மலர்ந்தொளிரும் பூவைச் சுடர்ப்பூ என்பர். சுடர்ப் பூந்தாமரை" என்றும், "சுடர்ப் பூங்கொன்றை" (அகம். 6, 115) என்றும் சான்றோர் உரைப்பர். அதனை ஏற்றுக் கண்களில் ஒற்றி முடிமேல் அணிந்து கொண்டதோடு, அமையாமல் திருநீறும் வேண்டினமை பற்றி, "பெருந்தகையே திருநீறும் தருதல் வேண்டும் என" இயம்புகிறார். யாம் அதனை மறக்கவில்லை; முன்னரே, அளித்துள்ளோம், உன் மேனியைப் பார்த்தறிக என்பாராய், "முன்னர் அது விரும்பி யளித்தனம் உன் வடிவிற் காண்டி" என்கின்றார். காண்டி - இகர வீற்று முன்னிலையேவல் வினை. அதனைக் கொண்டெடுத்து மொழிகின்றராகலின், "காண்டி என உரைத்தருளினாய்" என வுரைக்கின்றார். ஒளி மிக வுடைமை புலப்பட, "மின் வடிவப் பெருந்தகையே" என்கின்றார்.

இதனால், பூப் பெற்று மகிழ்ந்து திருநீறு கேட்டார்க்கு, அதனை முன்பே கொடுத்தமை கூறியவாறும். (2)

3162. அழகுநிறைந்திலகஒரு திருமேனி தரித்தே
அடியேன்முன் எழுந்தருளி அருள்நகைகொண் டடியார்
கழகடு எனை இருத்தி அவர்க்கெல்லாம் நீறு
களித்தருளி என்னளவிற் கருணைமுக மலர்ந்து
குழகியற்செஞ் சுடர்ப்பூவைப் பொக்கணத்தில் எடுத்துக்
கொடுத்தருளி நின்றனை நின் குறிப்பறியேன் குருவே
மழகளிற்றின் உரிவிளங்க மணிப்பொதுவிற் சோதி
மயவடிவோ டின்பநடம் வாய்ந்தியற்றும் பதியே.

உரை : இளங்களிற்றின் தோற் போர்வை ஒருபால் விளங்க, மணியிழைத்த அம்பலத்தின்கண் ஒளி மயமான மேனியுடன் இன்ப நடனம் பொருந்தப் புரிந்தருளும் தலைவனே, எனக்குக் குருவே, அழகு நிறைந் தொளிரும் திருமேனி கொண்டு அடியவனுகிய என் கண் முன்பு போந்து

அன்பு தோன்றும் புன்னகை தவழ அடியார் கூட்டத்தின் நடுவே என்னை இருக்கச் செய்து அவர்கட் கெல்லாம் திருநீற்றை உவந்தளித்த போது என்னைப் பார்த்து, அருள் கொண்ட முகம் மலர்ந்து, புதுமை மாறுத செஞ்சுடர் கொண்ட பூ வொன்றைப் பையினின் றெடுத்துக் கொடுத்து நின்றுயாக, அப்போது உன் மனக் கருத்தை அறியா தொழிந்தேன். எ.று.

மழ களிறு - இளங் களிறு. உரி - தோற் போர்வை. மணி பொது- பல்வகை மணிகள் பதித்த பொற் சபை. கூத்தப் பெருமானது திருமேனி ஒளிமயமாய் விளங்குவது பற்றி, "சோதி மய வடிவோடு" எனவும், கூத்தால் உயிர் கட்கு இன்பம் விளைதலின், "இன்ப நடம் வாய்ந்தியற்று பதியே" எனவும் இயம்புகிறார். ஞானம் நல்குதலாற் "குருவே" என்று புகழ்கின்றார். தம் முன் போந்த சான்றோர் அழகிய மேனியும் கண்டார் விரும்பும் பொலிவும் உடையராய்த் தோன்றினமையின், "அழகு நிறைந்திலக ஒரு திருமேனி தரித்து அடியேன் முன் எழுந்தருளி" என்றும், அங்குக் கூடியிருந்த அடியார் கூட்டத்திடையே தம்மைச் செலுத்தி இருக்க வைத்தமையின், "அடியார் கழக நடு எனை யிருத்தி" என்றும் கூறுகின்றார். தம்மைப் பிரித்துக் கூட்டத்திடையே இருக்கச் செய்த போது அவர் முகத்தில் நிறைந்த அன்பு தவழ்ந்தமை விளங்க "அருள் நகை கொண்டு" எனக் குறிக்கின்றார். பின்பு அடியார்கள் அனைவர்க்கும் திருநீறு கொடுக்கும் போது, தனக்கு மாத்திரம் வேறுகப் பையை அவிழ்த்து சிவந்த புதுப் பூவைத் தந்தமை கூறுவாராய், "அவர்க்கெல்லாம் திருநீறருளி என்னளவில் பொக்கணத்தில் எடுத்துச் செஞ்சுடர்ப் பூவைக் கொடுத்தருளி நின்றனை" என வுரைக்கின்றார். நீறும் பூவும் கொடுத்த போது அச்சான்றோர்பால் விளங்கிய அன்பு நிலையை, "களித்தருளி" என்றும், "கருணை முகம் மலர்ந்து" என்றும் எடுத்து மொழிகின்றார். அன்று மலர்ந்த பூவாதல் தோன்ற, "குழகியற் பூ" என்கின்றார். குழகு - இளமை; புதுமையுமாம். பொக்கணம் - திரு நீற்றுப் பை. இருந்தார் பலரினீன்றும் வேறு பிரித்தருளியதற்குக் கருத்தொன்று இருத்தல் வேண்டும்; அதனை நான் அறிந்திலேன் என்பாராய், "நின் குறிப்பறியேன்" எனக் கூறுகிறார்.

இதனால் அடியார் பலரிற் பிரித்துத் தனிச் சிறப்பளித்த திறம் தெரி வித்தவாறும். (3)

3163. விலைகடந்த மணிஎன ஓர் திருமேனி தரித்து
வினையேன்முன் எழுந்தருளி மெய்யடியர் விரும்பக்
கலைகடந்த பொருட்கெல்லாங் கரைகடந்து நாதக்
கதிகடந்த பெருங்கருணைக் கடைக்கண்மலர்ந் தருளி
அலைகடந்த கடல்மலர்ந்த மணச்செழும்பூ அடியேன்
அங்கைதனில் அளித்தனைநின் அருட்குறிப்பே தறியேன்
மலைகடந்த நெடுந்தோளில் இதழிஅசைந் தாட
மன்றில்நடம் புரிகின்ற வள்ளல்அருட் குருவே.

உரை : மலைகளின் மேம்பட்ட திருத்தோளில் கொன்றை மாலை கிடந்து அசைந்தாட, தில்லையம்பலத்தே திருக்கூத்து இயற்றுகின்ற வள்ளலாகிய அருட் குருவே, விலையில்லாத செம்மணி போன்று ஒப்பற்ற திருவுருத் தாங்கி வினைகளையுடைய என்முன் எழுந்தருளி, உண்மை யன்பர்கள் விரும்புமாறு, கலை முதலிய தத்துவங்கட்கு அப்பாற்பட்ட வைந்தவ காரியப் பொருளையும் கடந்து, நாத தத்துவத்துக்கும் அப்பாலான பெருகிய கருணை நிறைந்த கடைக்கண் பார்த்தருளி, அலையில்லாத கடலிடத்தே பூத்த மணமுடைய மலர் ஒன்றை அடிய வனுகிய என் கையிற் கொடுத்தருளினாய்; பெருமானே, நின் திருவருட் குறிப்பை என்னென்று அறிவேன்? எ.று.

மலைபோன்ற தோள்களை, "மலை கடந்த தோள்" என்கிறார். கடந்த உவமச் சொல்லுருபு. இதழி - கொன்றை. விலை கடந்த மணி - விலைமதிப் பிடலாகாத மாணிக்க மணி. தாம் பெற்றது பிறரும் பெறக் கண்டு மகிழ்வது உண்மையன்பர் இயல்பாதலின், "மெய்யடியர் விரும்ப" என்கின்றார். நிவிர்த்திமுதலிய கலைகளில் அடங்கிய புவனப் பொருள்களை "கலை கடந்த பொருள்" என்கிறார். அவை வைந்தவ மாயையின் காரியம் என உணர்க. நாதக் கதி, சுத்த மாயையின் மத்தகத்தில் உள்ள நாத தத்துதம். தத்துவா தீதத்தைக் குறிப்பதற்கு, "நாதக் கதி கடந்த" எனக் குறிக்கின்றார். அகமும் புறமும் துளும்பி வழிந்துயிர்க் கெல்லாம் கலைகண்ணுகும் (அருள். 2070) அருள் நலம் நினைந்து, "பெருங் கருணைக் கடைக்கண்" எனப் பேசுகின்றார். 'அலை கடந்த கடல்' அலையில்லாத கடல் என்றது ஞானச் செழுங்கடல். அதன்கண் நின்று மலர்ந்து மணங்கமழ்வது சிவஞானச் செம்மலர். "ஞான மாமலர் கொடு நணுகுதல் நன்மையே" (காணப்.7) என ஞானசம்பந்தரும் நவில்வர்.

இதனால், சிவஞானச் செம்மலர் அளித்தமை கூறியவாறும். (4)

3164. உலர்ந்தமரந் தழைக்கும்ஒரு திருஉருவந் தாங்கி
உணர்விலியேன் முன்னர்உவந் துறுகருணை துளும்ப
மலர்ந்தமுகம் காட்டிநின்று திருநீற்றுப் பையை
மலர்க்கரத்தால் அவிழ்த்தங்கு வதிந்தவர்கட் கெல்லாம்
அலர்ந்ததிரு நீறளித்துப் பின்னர்என்றன் கரத்தில்
அருள்மணப்பூ அளித்தனைநின் அருட்குறிப்பே தறியேன்
கலந்தவரைக் கலந்துமணிக் கனகமன்றில் நடஞ்செய்
கருணைநெடுங் கடலேஎன் கண்அமர்ந்த ஒளியே.

உரை : தன் திருவருளிற் கலப்பவரைத் தான் கலந்து மணியிழைத்த பொன்னம்பலத்தில் திருநடம் புரிகின்ற கருணையாகிய நெடிய கடலாகி யவனே, என் கண்கட்கு ஒளியாகியவனே, பட்டொழிந்த மரமும் கண்ட மாத்திரையே தழைத் தோங்குவிக்கும் அழகிய திருவுருக் கொண்டு நல்லுணர்வில்லாத என் முன்பு மனமுவந்து கருணை நிறைந்து வழியத் தனது மலர்ந்த முகத்தைக் காட்டி நின்று திருநீற்றுப் பையை மலர் போன்ற கையாலவிழ்த்து அங்கே சூழ இருந்தவர் அனைவருக்கும்

வெண்மையான திருநீற்றைக் கொடுத்துப் பின்பு என் கையில் சிவஞானம் மணக்கும் பூ வொன்றை அருளினாய்; நின் திருவுள்ளக் குறிப்பு யாதோ அறியேன். எ.று.

திருவருட் சிவஞானத்தில் தோய்ந்து கலந்தவரைச் சிவமாக்குபவனு தலால், "கலந்தவரைக் கலந்து" எனக் கூறுகின்றார். கனகமன்று - பொற்சபை. கண்ணுள் அமர்ந்த ஒளியே என்றாரேனும், கண்ணிலுள்ள மணியின் ஒளியாயிருப்பவன் என்பது கருத்தாகக் கொள்க. உலர்ந்த மரம் - பசையின்றிப் பட்ட மரம். "பட்ட மரம் தழைத்திட நகைக்கும் முறுவல்" (அரிச்சந்) எனப் பிறரும் கூறுவது காண்க. உணர்விலி, நல்லுணர்வு இல்லாதவன். மனம் உவகையுற்ற வழிக் கருணை சுரந்து நிறைந்து வழிவது புலப்பட, "உறுகருணை துளும்ப" என்கிறார். முகம் போலக் கையும் தாமரை மலர் போல் அமைந்து, விளங்குதல் பற்றி, "மலர்ந்த முகம் காட்டித் திருநீற்றுப் பையை மலர்க் கரத்தால் அவிழ்த்து எனவுரைக்கின்றார். வதிந்தவர் - கூடியிருந்த அன்பர்கள். வெள்ளைத் திருநீறு மலர்ந்த வெண்மலர் போலுதலால், "அலர்ந்த திருநீறு" எனக் கூறுகிறார். தனக்குக் கொடுத்த பூவைத் திருவருள் ஞானமாகக் கருது கின்றாராகலின், "அருள் மணப்பூ அளித்தனை" என வுரைக்கின்றார். தமது கருத்து இறைவன் திருவுள்ள மாகுமோ என ஐயுறுகின்றமை புலப் பட, "நின் அருட் குறிப்பேது அறியேன்" எனமொழிகின்றார்.

இதனால், குருபரன் அளித்த மலரைத் திருவருள் ஞானமாகக் கருதினமை வுரைத்தவாறும். (5)

3165. பிழைஅலதொன் றறியாத சிறியேன்முன் புரிந்த
பெருந்துவமோ திருவருளின் பெருமையிதோ அறியேன்
மழைஎனநின் றிலகுதிரு மணிமிடற்றில் படிக
வடந்திகழ நடந்துகுரு வடிவதுகொண் டடைந்து
விழைவினெடென் எதிர்நின்று திருநீற்றுக் கோயில்
விரித்தருளி அருண்மணப்பூ விளக்கம்ஒன்று கொடுத்தாய்
குழைஅசையச் சடைஅசையக் குலவுபொன்னம் பலத்தே
கூத்தியற்றி என்னைமுன்னுட் கொண்டசிவக் கொழுந்தே.

உரை: விளங்குகிற பொன்னம்பலத்தின்கண், காதிலணிந்த குழை யாட முடியிலுள்ள சடையாட, திருக்கூத்தாடி என்னை முன்பே ஆட் கொண்ட பெருமானுகிய சிவக் கொழுந்தே, குற்றங்களையன்றிப் பிற நலம் யாதும் செய்தறியாத சிறுவனுகியயான் முற்பிறவியிற் செய்த பெருந் தவமோ, நினது திருவருளின் பெருமைத் தன்மையோ, யாதோ அறியேன்; மழை மேகம் போல் கரிய நிறம் கொண்டு விளங்குகின்ற நின்னுடைய திருக்கழுத்தில் படிக மாலை அணிந்து கொண்டு, என்பால் குருமூர்த்தமாய் அன்புடன் வந்து எதிரே நின்று, திருநீற்றுப் பையைத் திறந்து அருண் மணம் கமழும் பூ வொன்றை விளக்கமுறக் கொடுத் தருளினாய்; நின் பேரருளை என்னென்பேன். எ.று.

ஒரு காதில் தோடும் ஒரு காதிற் குழையு மணிந்தாடுவது இயல்பா தலின் "குழையை" விதந்து, "குழையசைய" எனக் கூறுகின்றார்

"தோடொரு காது ஒரு காது குழை சேர்ந்த குழையான்" (நாரையூ) எனத் திருஞானசம்பந்தர் உரைப்பது காண்க. இடக்காதில் தோடு செறிப்புண்டும் வலக்காதிற் குழை தாழ்ந்து தொங்கிக் கொண்டுமிருத்தலால் கூத்தாடுங்கால் குழை யசைந்தாடும் என அறிக. சடைகளும் முடியில் விரிந்து தாழ நீண்டிருப்பதால் "சடையசைய" எனவுரைக்கின்றார். முன்பு அத்திருக்கூத்தைக் கண்டு ஆட்பட்டமை புலப்பட, "என்னை முன் ஆட்கொண்ட சிவக்கொழுந்தே" என இயம்புகிறார். சிறுமையுடைய வனுதலால் குற்றமே செய்தேன் என்பாராய், "பிழையற தொன்றறியாத சிறியேன்" என்றும், எனக்கு இத் திருவருள் எய்துவதற்குக் காரணம் ஒன்று என்னுடைய முற்பிறவிகளிற் செய்த நற்றவமாதல் வேண்டும்; அல்லது, நின்னுடைய திருவருளின் பெருந்தன்மையாதல் வேண்டும்; யாதாயினுமாதல் வேண்டும் என்றற்குச் "சிறியேன் முன் புரிந்த பெருந்தவமோ, திருவருளின் பெருமையோ, இது அறியேன்" எனக் கூறுகின்றார் அழகிய திருக்கழுத்து, மழைமேகம் போல்கின்ற தென்பாராய், "மழை யென நின்று இலகுதிருமணி மிடறு" எனப் புகழ்கின்றார். மணி - ஈண்டு அழகு குறித்தது. படிக வடம், படிகமணிமாலை. கரிய கழுத்தில் வெண்ணிற வொளியுடைய படிகமாலை கிடத்து ஒளிர்ந்து அழகு செய்தலின், அதனை எடுத்தோதுகின்றார். குருவடிவம் - கண்டார் வணங்கத் தக்க ஞானசிரியவுருவம். திருநீறு உள்ள சிறு பையைத் திருநீற்றுக் கோயில் என்பது சைவ மரபு. பூவின் நறுமணத்தைச் சிறப்பிக்க "அருள் மணப் பூ" என ஓதுகின்றார்.

இதனைப் பூவளித் தருளியதற் கேது நினைந்து பரவியவாரும். (6)

3166. முத்தேவர் அழுக்காற்றின் மூழ்கியிடத் தனித்த
முழுமணிபோன் றிருவடிவென் முன்கொடுவந் தருளி
எத்தேவர் தமக்குமிக அரியஎனும் மணப்பூ
என்கரத்தே கொடுத்தனைநின் எண்ணம்இதென் றறியேன்
சித்தேஎன் பவரும்ஒரு சத்தேஎன் பவரும்
தேறியபின் ஒன்றுகத் தெரிந்துகொள்ளும் பொதுவில்
அத்தேவர் வழுத்தஇன்ப உருவாகி நடஞ்செய்
ஆரமுதே என்னுயிருக் கானபெருந் துணையே.

உரை : பரம்பொருள் என்பது ஒரு சித்துப் பொருள் என்பவரும் சத்துப் பொருள் என்பவருமாகிய இருதிறத்தாரும் தெளிவுற்ற போது இரண்டுமொன்றே எனத் தெரிந்து கொள்ள விளங்கும் தில்லையம்பலத்தின் கண் அந்தத் தேவர் பலரும் துதிக்க இன்ப வுருக்கொண்டு கூத்தாடுகின்ற அரிய அமுதம் போல்பவனே, எனது உயிருக்கு அருமை வாய்ந்த பெரிய துணைவனே; பிரமன் முதலிய தேவர் மூவரும் அழுக்காறு கொள்ள தனித் தகுதியுடைய முழுத்த மாணிக்கமணி போன்று ஒரு வடிவெடுத்து என் முன் போந்து எத்தகைய தேவர்கட்கும் எய்த முடியாதது என்னும் மணமிக்க பூ வொன்றை என் கையிற் கொடுத்தருளினாய்; நின் திருவுள்ளம் இத்தன்மையது என அறியா தொழிந்தேன்; எனது அறியாமையை என்னென்பது. எ.று.

பரம்பொருளின் தன்மை நினைந்து கூறும் தலைவர்களில் சிலர் சத்து என்பதும் சிலர் சித்து என்பதுமா யுள்ளனர்; அவர்கள் தில்லையம்பலத்தில் நின் திருக்கூத்தைக் காணில், சிவ பரம்பொருள் சத்தாயும் சித்தாயும் இன்பமாயும் உள்ள தெனத் தெளிகின்றனர் என்பார், "சித்தே என்ப வரும் ஒருசத்தே என்பவரும் தேறிய பின் ஒன்றுகத் தெரிந்து கொள்ளும் பொதுவில் இன்ப வுருவாகி நடஞ்செய் ஆரமுதே" என்று கூறுகின்றார். சித்து - அறிவுருவாயது; சத்து - மெய்ம்மை யுருவாயது. தேறுதல் - பிணக்கு நீங்குதல். சச்சிதானந்த வுருவாகிய கூத்தப் பெருமானைக் கண்டதும் இதுவே பரம்பொருள் எனத் தெளிந்து வழிபடுகின்றனர் என்றற்கு "அத்தேவர் வழுத்த" எனக் கூறுகின்றார். அகரச் சுட்டு அங்ஙனம் ஒரு மருங்கு கண்டு பிணங்கிய தேவர்களைக் குறிக்கிறது. உயிர்க்குயிராய் நின்று துணை செய்தல் பற்றி, "என் உயிருக்கான பெருந் துணையே" எனப் பேசுகின்றார். பிரமன் முதலிய தேவர்கள் பிறர் ஆக்கம் காணப் பொருத குற்றமுடையவ ரல்லராகலின், "அழுக்காற்றில் மூழ்கியிட" என்றதற்கு மிக்க வியப்படைய எனப் பொருள் செய்தல் வேண்டும். ஒருவகைக் குற்றமில்லாத மாணிக்க மணி யென்றற்குத் "தனித்த முழு மணி" எனச் சாற்றுகின்றார். செம்மேனி யம்மானுதலின் இவ்வாறு கூறு கின்றார். எத்தேவர், எப்பெற்றியராகிய தேவரும். ஞான தேசிகன் தந்த சிவஞானப் பூவின் சிறப்புணர்த்தற்கு, "எத்தேவர் தமக்கு மிக அரிய வெனும் மனப் பூ" எனவுரைக்கின்றார். திருநீறளிக்காமல் மலர் கொடுத்த குறிப்பு ஞானக் கொடை கருதிற்று என அறிந்தேன் என்பாராய், "நின் வண்ணம் இதுவென அறியேன்" என்று மொழிகின்றார்.

இதனால், மலர்க் கொடை சிவஞானக் கொடை யென வுணர்ந்தமை கூறியவாறும். (7)

3167. தெள்ளமுதம் அனையஒரு திருஉருவந் தாங்கிச்
சிறியேன்முன் எழுந்தருளிச் செழுமணப்பூ அளித்தாய்
உள்ளமுதம் ஆகியநின் திருக்குறிப்பே துணரேன்
உடையவளே உடையவனே உலகுணரா ஒளியே
கள்ளமிலா அறிவாகி அவ்வடுவுக் கறிவாய்க்
கலந்துநின்ற பெருங்கருணைக் கடலேஎன் கண்ணே
கொள்ளுதொறும் கரணமெலாங் கரைந்துகனிந் தினிக்கும்
கொழுங்கனியே கோற்றேனே பொதுவிளங்குங் குருவே.

உரை : உலகனைத்தும் உடையவளாகிய உமாதேவியை ஒரு கூறுக வுடையவனே, குற்றமில்லா அறிவாயும், அந்த அறிவுக் கறிவாகி யும் உயிரறிவோடு கலந்து நிற்கின்ற கருணைப் பெருங் கடலே, எனக்குக் கண்ணிருப்பவனே, அறிவிற் கொள்ளும் போதெல்லாம் மன முதலிய கரணங்கள் யாவும் கரைந்து இனிமை நல்கும் கொழுவிய கனி போன்றவனே, கொம்புத் தேனையவனே, அம்பலத்தின்கண் கூத்தப் பெருமானுய் விளங்கும் குருபரனே, தெளிந்த அமுதம் போன்ற ஒரு திரு மேனி கொண்டு சிறியவனுகிய என் முன்பே போந்து செழித்த மணம் கமழும் பூ வொன்றைக் கொடுத்தருளினாய்; என் உள்ளத்துக்கு அமுதம் போன்ற நினது திருவுளக் குறிப்பு இன்னதெனத் தெளிகிலேன். எ.று.

உலகனைத்தையும் உடையதாகிய மாயையைத் தான் உடையவளாகலின், உமையம்மையை "உடையவள்" எனவும், அவனைத் தன் திருமேனியில் ஒரு கூருகவுடையனுதலின், சிவனை, "உடையவனை யுடையவனே" எனவும் உரைக்கின்றார். மறைக்கப்படுவது குற்றமாகலின், அதனைக் "கள்ளம்" என்றும், அஃதில்லாத தூய அறிவைக் "கள்ளமிலா அறிவு' என்றும் கூறுகிறார். தூய அறிவுருவாகியும், அவ்வறிவுக் கறிவாகியும் விளங்குதலால், "அவ்வறிவுக்கு அறிவாகி" என்றும், உயிரறிவிற் கலந்து நிற்றலால் "கலந்து நின்ற கருணைக் கடலே" என்றும் இயம்புகின்றார். அறிவுக் கறிவு அருள் மயமாதல் புலப்படப் "பெருங் கருணைக் கடலே" என்கிறார். சிறந்த கருவியாதலின் "என் கண்ணே" எனக் கூறுகிறார். உள்ளுகின்ற உள்ளத்தில் தோய்ந்து நினைக்கின்ற மனமுதலிய கரணங்கள் நீராய் உருகி இனிமைச் சுவை நல்குதலால், "கொள்ளுதொறும் கரணமெலாம் கரைந்து கனிந்து இனிக்கும் கொழுங் கனியே" என்று உரைக்கின்றார். கோற்றேன் - மரக் கிளைகளிற் கட்டுகிறது; இது ஏனைத் தேன்களிற் சுவை மிக வுடைய தென்பர். பொது - தில்லையம்பலம். திருமேனி காணும் கண்ணுக்கு இனிதாதல் தோன்ற, "தெள்ளமுதம் அனைய ஒரு திருவுருவம் தாங்கி" எனவும், திருநீற்றுப் பைக்குள் அடைத்திருந்த போதும் மணம் குறையாது மிக்கிருந்தமையால் "செழுமணப் பூ" எனவும் இயம்புகின்றார். மானதக் காட்சிக்கண் அமுதமாய் இருந்தமையின், "உள்ளமுதமாகிய நின்" என்றும், நின் கருத்தை அறியேனுயினேன் என்பார், "திருக்குறிப்பு ஏது உணரேன்" என்றும் இசைக்கின்றார். சிறப்பும்மை தொக்கது.

இதனுல், திருக்குறிப் பறியாமை எடுத்தோதியவாறும். (8)

3168. கண்விருப்பங் கொளக்கரணங் கனிந்துகனிந் தூருகக்
கருணைவடி வெடுத்தருளிக் கடையேன்முன் கலந்து
மண்விருப்பங் கொளுமணப்பூ மகிழ்ந்தெனக்குக் கொடுத்து
வாழ்கஎன நின்றனைநின் மனக்குறிப்பே தறியேன்
பெண்விருப்பந் தவிர்க்கும்ஒரு சிவகாம வல்லிப்
பெண்விருப்பம் பெறஇருவர் பெரியர் உளங் களிப்பப்
பண்விருப்பந் தருமறைகள் பலபலநின் றேத்தப்
பரமசிதம் பரநடனம் பயின்றபசு பதியே.

உரை : ஒருகால் கண்டார்க்குப் பெண்ணைசையே மனத்தின்கண் எழாமற் போக்கும் சிவகாம வல்லியாகிய தாயின் திருவருள் பெறற் பொருட்டுப் பெரியவர் இருவருடைய மனம் விரும்பவும், பண்ணிசை யமைந்த பலவாகிய வேதங்கள் ஒருபால் நின்று முறையாக ஓத பரம சிதம்பர நடனத்தைப் புரிகின்ற பசுபதியே, காணும் கண்கள் மேலும் காண்டலே விரும்ப, ஏனைக் கருவி கரணங்கள் கரைந்து மிகக் கனிந்து உருக, கருணையே திருமேனியாகக் கொண்டு கடையவனுகிய என் முன்பு போந்து மண்ணக மக்கள் விரும்புகின்ற ஞான மணங் கமழும் மலரைக் கொடுத்து, நீடு வாழ்க என்று உரைத்தருளிய நின் திருவுள்ளம் யாதோ, அறியேன். எ.று.

பெண் விருப்பம் - பெண்களின் மேல் உளதாகும் காம விச்சை சிவகாமி யென்னும் உமாதேவியைக் காண்பார்க்குப் பெண்ணைசை, மண்ணைசை, பொன்னைசையாகிய மூவாசைகளும் கெட்டொழிதலால், "பெண் விருப்பம் தவிர்க்கும் ஒரு சிவகாமல்லி" என்று கூறுகின்றார். உலகீனத்தையும் பெற்ற தாயாகலின், உமாதேவியைச் "சிவகாமவல்லிப் பெண்" என்றும், அவளது பேரருள் பெறற் குரியதாகலினாலும், அவளருளால் முனிவரும் சிவயோகிகளும் தத்தம் தவமும் யோகமும் கைவரப் பெறுகின்றனராதலாலும், "வல்லிப் பெண் விருப்பம் பெற" என்றும் பேசுகின்றார். இருவர் பெரியர், பதஞ்சலி, வியாக்கிரபாதர். இவருள் பதஞ்சலி பாம்பின் காலும் மற்றவர் புலிக் காலும் உடையர். வேதங்கள் கீத விசை கொண்டு ஓதப்படுவது பற்றி, "பண் விருப்பம் தருமறைகள்" எனச் சிறப்பிக்கின்றார். சிதம்பர நடனம் - ஞான வாகாயத்தில் நிகழும் திருக்கூத்து. எதிரே வந்து நின்ற சான்றோர் திருமேனி காண்பார் கண்களாகிய கருவி தன்னையே கண்டு மகிழும்படி காட்சி யாசையில் தோய்வித்தல் விளங்க, "கண் விருப்பம் கொள" என்றும், மன முதலிய கரணங்கள் இன்ப அன்பாற் கனிந்து கரைந்து உருகச் செய்தமையின் "கரணம் கனிந்து கனிந்து உருக" என்றும் இசைக்கின்றார். மண், ஆகு பெயராய் மக்கட் காயிற்று. மணப் பூ - நறிய ஞான மணம் கமழும் பூ. கையால் மலரை எடுத்துக் கொடுத்தவர், உலகை மிக்கு இதனைப் பெறும் நீ நீடு வாழ்க என வாழ்த்தின ரென்பார், "வாழ்க என நின்றனை" எனக் கூறுகின்றார். வாழ்த்தியதன் கருத்து விளங்காமையால், "நின் மனக்குறிப்பு ஏதும் அறியேன்" என மொழிகின்றார்.

இதனால், திருமேனியால் மனம் கவர்ந்து பூக் கொடுத்து வாழ்த்தினமை கூறியவாறும். (9)

3169. உன்னுதற்கும் உணர்வதற்கும் உவட்டாத வடிவம்
ஒன்றெடுத்து மெய்யன்பர் உவக்கஎழுந் தருளி
முன்னுதற்கோர் அணுத்துணையுந் தரமில்லாச் சிறியேன்
முகநோக்கிச் செழுமணப்பூ முகமலர்ந்து கொடுத்தாய்
துன்னுதற்கிங் கரிதாம்நின் திருஉள்ளக் குறிப்பைத்
துணிந்தறியேன் என்னினும்ஓர் துணிவின்உவக் கின்றேன்
பொன்னுதற்குத் திலகமெனுஞ் சிவகாம வல்லிப்
பூவைஒரு புறங்களிப்பப் பொதுநடஞ்செய் பொருளே.

உரை : அழகிய நெற்றிக்குத் திலக மிட்டது போல், பெண் குலத்துக்குத் திலகமாய்த் திகழும் உமாதேவியாகிய சிவகாமவல்லி யெனப் பெயர் கூறப்படும் பூவையாகிய எங்கள் தாய், ஒருபால் நின்று பார்த்து மகிழத் தில்லையம்பலத்தின்கண் திருக்கூத்தியற்றும் சிவ பரம் பொருளே, நினைப்பதற்கும் மனத்தின்கண் உணர்தற்கும் தெவிட்டாத இனிய திருமேனி கொண்டு மெய்யன்பர்கள் கண்டு மகிழப் போந்தருளி முற்பட எண்ணற் கேற்ற தகுதியில்லாத சிறுமையுடையனாகிய என்னுடைய முகத்தைப் பார்த்து மிக்க மணம் கமழும் பூ வொன்றை

முகமலர்ச்சியுடன் எனக்குக் கொடுத்தாய்; நெருங்குதற் கரியவனுகிய நின்னுடைய திருவுள்ளக் கருத்தைத் தெரிந்து கொள்ளேனுயினும் ஒருவகைத் துணிவுடன் மனமகிழ்கின்றேன். எ.று.

பொன் நுதல் - அழகிய நெற்றி. பூவை - பெண். பூவணிந்து பொலிவது பற்றி மங்கையரைப் பூவை என்பது வழக்கு. உமாதேவி காயாம் பூவின் வண்ண முடையவளாதலின், "பூவை" என்றுர் என்றலும் ஒன்று. அம்மை காண அம்பலத் தாடல் பற்றி, "பூவை ஒருபுறம் களிப்பப் பொது நடஞ்செய் பொருளே" என்று கூறுகின்றுர். "கூடிய இலயம் சதி பிழையாமைக் கொடியிடை யுமையவள் காண ஆடிய குழகா" (வடமுல்லை) என்று சுந்தரர் பாடுவது காண்க. பொருள் - சிவபரம்பொருள். உன்னுதல், நெஞ்சால் நினைத்தல். உணர்தல் - உள்ளத் தால் உணர்தல். "என்னெஞ்சில் ஈசனைக் கண்ட தென் உள்ளமே" (உள்ளக்) என நாவரசர் உரைப்பது காண்க. உவட்டல், தெவிட்டல். முன்னுதல், முற்பட நினைதல். தரமாவது, முன்னுற வுணரும் அறிவுத் திறம். துன்னுதல், நெருங்குதல். துணிதல், ஆராய்ந்தறிதல். துணிவு, மனக்கோள்.

இதனுல், மணமலரை ஏற்றது ஒரு மனத் துணிவாலென உரைத்த வாரும். (10)

திருச்சிற்றம்பலம்

4. ஆனந்த மாலை

அஃதாவது, பாடுதற் கமைந்த மனப் பக்குவத்தால் திருவருள் இன்பத்தைப் பெறும் மகிழ்ச்சி மேலீட்டால் பாடுவது. இதன்கண் வரும் பத்துப் பாட்டிலும் உமையம்மை காண இறைவன் திருநடனம் புரியும் திருவருட் செயல் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3170. திருவருடுந் திருவடிப்பொற் சிலம்பசைய நடந்தென்
சிந்தையிலே புகுந்துநின்பாற் சேர்ந்துகலந் திருந்தாள்
தெருமரலற் றுயர்ந்தமறைச் சிரத்தமர்ந்த புனிதை
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்பப்
பொருவருமெய் யன்புடையார் இருவருங்கண் டுவந்து
போற்றமணிப் பொதுவில்நடம் புரிகின்ற துரையே
பருவரல்அற் றடிச் சிறியேன் பெருவரம்பெற் றுனையே
பாடுகின்றேன் பெரியஅருட் பருவமடைந் தனனே.

உரை : திருமகள் தன் கைகளால் மெல்லப் பிடிக்கும் அழகிய திருவடிச் சிலம்பொலிக்க நடந்து, என் சிந்தையிற் புகுந்து, பின் நின்பால் சேர்ந்து கலந்திருப்பவளும், கலக்கமின்றி யுயர்ந்த வேதங்களின் உச்சியில் வீற்றிருக்கும் தூயவளாகிய சிவகாமவல்லி யெனப்படும் உமாதேவியாரின் மனம் மகிழும் படியும், ஒப்பற்ற உண்மை யன்பராகிய பதஞ்சலி, வியாக்கிரபாதர் என்ற இருவரும் நேர் நின்று நோக்கி மகிழ்ந்து போற்றவும், அழகிய அம்பலத்தின்கண் திருநடம் செய்கின்ற பெருமானே, துன்ப மகன்று அடிமைகளிற் சிறியவனான யான் நினது பெரிய வரத்தைப் பெற்று, மனப் பக்குவத்தை யெய்தினேனாகலின், உன்னையே பாடி இன்புறுகின்றேன். எ.று.

பொன், திருமகள். திருமகள், கமலமகள் முதலிய சத்திகள், திருமால். பிரமன் முதலிய மூர்த்தங்கட்கு அமைந்த சத்திகளாதலால், பராசத்தியாகிய உமை யம்மைக்குப் பணி செய்பவர்களாக அமைத்துப் "பொன் வருடும் திருவடி" என்று கூறுகின்றார். உள்ளே பரல் பெய்த சிலம்புகளைச் செல்வ மகளிர் காலில் அணிபவராதலால், "சிலம்பசைய நடந்து" என்றும், தம்பால் நீங்கக்படுதல் விளங்க, "என் சிந்தையிலே புகுந்து" என்றும், இறைவனைப் பிரியாது உறைபவளாதலின், "நின்பாற் கலந்திருந்தாள்" என்றும் சிறப்பித் தோதுகின்றார். மறைநூல்களில் முடிந்த பொருளாக உரைக்கப்படுவது பற்றி, "உயர்ந்த மறை தெருமரலற்றுச் சிரத்தமர்ந்த புனிதை" என்கின்றார். புனிதனுக்குப் பெண்பால் புனிதை- புனிதன், தூயவன். தில்லைக் கூத்தப் பெருமா

னுக்குத் தேவியாமிடத்துச் "சிவகாமவல்லி" என்பது மரபு. சிவகாமியெனப் பெயர் பெறினும், பெரிய பெருமானுகிய சிவபரம்பொருட்குப் பராசத்தி என வற்புறுத்தற்குப் "பெருந்தேவி" என வுரைக்கின்றார். வேதங்கள் அவளுடைய பெருமையைக் கலக்கமின்றித் தெளிந்தமை தோன்றத் "தெருமரலற்று உயர்ந்த மறை" என்று கூறுகின்றார். தெளிவின்றிக் கலங்குதல் வேதங்கட்கு இயல்பு. தெருமரல், கலக்கம். "வேதங்கள் ஐயா வென வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" (சிவபு) என மணிவாசகர் ஓதுவது காண்க. மெய்யன்பர் பல்லாயிரவருள் பதஞ்சலியும் வியாக் கிரபாதர் இருவரும் ஒப்பற வுயர்ந்தவர் என்றற்குப் "பொருவரும் மெய்யன் புடையார் இருவர்" என்றும், அவ்விருவர் பொருட்டே தில்லையம்பலத்தில் திருநடம் நிகழ்கிற தெனப் புராணம் கூறுதலால், "இருவரும் கண்டுவந்து போற்ற மணிப் பொதுவில் நடம் புரிகின்ற துரையே" என்றும் இயம்பு கின்றார். பருவரல், இன்பம். மன வெழுச்சிக்குக் காரணமாதலின், பருவரல் அறுதியும், இனிய பாட்டுக்களைப் பாடுதலின், பெருவரப் பேறும் எடுத்தோதுவாராய், "பருவரலற்று அடிச் சிறியேன் பெருவரம் பெற்று உனையே பாடுகின்றேன்" என்றும், எனவே, எனக்கும் சிவஞானப் பேற்றுக்குப் பரிபாகம் எய்தி விட்டதன்றே? என எடுத்துரைப்பாராய் "பெரிய வருட் பருவ மடைந்தனனே" எனக் கூறுகின்றார்.

இதனால், திருவருட் பேற்றுக்குப் பரிபாகம் எய்தினமை தெரிவித்த வாறும். (1)

3171. சண்பைமறைக் கொழுந்துமகிழ் தர அமுதங் கொடுத்தாள்
தயவுடையாள் எனையுடையாள் சர்வசத்தி யுடையாள்
செண்பகப்பொன் மேனியினுள் செய்யமலர்ப் பதத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்பப்
பண்பகர்பொன் அம்பலத்தே ஆனந்த நடஞ்செய்
பரம்பரனின் திருவருளைப் பாடுகின்றேன் மகிழ்ந்து
எண்பகர்குற் றங்களெலாங் குணமாகக் கொள்ளும்
எந்துரைஎன் றெண்ணுகின்ற எண்ணமத னுலே.

உரை : பரம்பரனே, சீர்காழிக்குரிய வேதியர் குலத்துச் சிறிய பெருந் தகையாகிய ஞானசம்பந்தர் மனம் மகிழுமாறு ஞான வமுதம் தந்தவளும், தயை பெரிதும் உடையவளும், என்னைத் தனக்கு ஆளாக வுடையவளும், எல்லாவகைச் சத்திகளையு முடையவளும், சண்பகப் பூவின் நிற மமைந்த அழகிய மேனியை யுடையவளும், சிவந்த தாமரை போன்ற திருவடியை யுடையவளுமாகிய சிவகாமவல்லிப் பெருந்தேவியார் கண்டு மனம் மகிழ, வேத கீதங்கள் முழங்குகின்ற தில்லையம்பலத்தே இன்பத் திருக்கூத்தாடு கின்ற பரம்பரனுகிய நின் திருவருளைக் களிப்புடன் பாடுகின்றேன்; காரணம், எண்ணிச் சொல்லப்படுகின்ற குற்ற மனைத்தையும் குணமாகக் கொண்டருளும் எங்கள் தலைவன் எனக் கருதுகின்ற கருத்தேயாம். எ.று

எம் துரை யென்று எண்ணுகின்ற எண்ணமதனுல் நின் திருவருளைப் பாடுகின்றேன் என இயையும். சண்பை, சீர்காழிக்குரிய பெயர் பன்னிரண்டனுள் ஒன்று. சீர்காழியில் பிள்ளைப் பருவத்தில் ஞானசம்பற்தரு க்குச் சிவபிரான் அருட் குறிப்பின்படி உமாதேவியார் பொற் கிண்ணத்தில்

ஞானப் பால் கொடுத்தருளிய நிகழ்ச்சியை எடுத்தோதுகின்ரு ராதலால், "சண்பை மறைக்கொழுந்து மகிழ் தர அமுதம் கொடுத்தாள்" என்று கூறுகின்ரூர். தயவு, அருள். பராசக்தியாதலின் "சர்வ சத்தி உடையாள்" என்று கூறுகின்ரூர். சண்பக மலரின் நிறம் உமாதேவியின் நிறம் என்றற்குச் "செண்பகப் பொன் மேனியினுள்" என்று கூறுகின்ரூர். செய்ய மலர், சிவந்த தாமரை, சிவகாமவல்லியாகிய பெருந்தேவி என இயைக்க. பண், இசை மேற்ருகி வேதியர் பாடும் வேத கீதத்தை உணர்த்துகிறது. பரம்பரன், மேலாய பரம்பொருள். திருவருளை மனமகிழப் பாடுகின்றவர் அதற்குரிய காரணத்தையும் உடன் கூறுகின்ரூர். செய்யப்படும் குற்றங்களைக் கண்டு காட்டுகின்ற உள்ளத்தால் விளங்குதலின், "எண் பகர் குற்றங்கள்" என இசைக்கின்ரூர். ஒருவருடைய குற்றத்தை நோக்கும் போது அஃது அவரது இயல்பு என அறியப்படுமிடத்து இரக்கம் உண்டாதலின், அதனை அறிந்தருளுகின்ற இறைவனைக் "குற்றங்கள் எல்லாம் குணமாகக் கொள்ளும் எம் துரை" என்று கூறுகின்ரூர்.

இதனுல், குற்றத்தைக் குணமாகக் கொள்ளும் நலமறிந்து பாடுகின்றேனெனத் தெரிவித்தவாரும். (2)

3172. அருளுடைய நாயகிஎன் அம்மைஅடி யார்மேல்
அன்புடையாள் அமுதனையாள் அற்புதப்பெண் ணரசி
தெருளுடைய சிந்தையிலே தித்திக்கும் பதத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்ப
மருளுடைய மாயையெலாந் தேயமணி மன்றின்
மாநடஞ்செய் துரையேநின் மன்னருளின் திறத்தை
இருளுடைய மனச்சிறியேன் பாடுகின்றேன் பருவம்
எய்தினன்என் றறிஞரெலாம் எண்ணிமதித் திடவே.

உரை : அருள் மிக்க நாயகியும் எனக்கு அம்மையும், அடியவரிடத்தில் அன்பு கொண்டவளும், அமுதம் போல்பவளும், அற்புதமான பெண்ணரசியும், தெளிவு நிறைந்த மனத்தின்கண் தேனூறியினிக்கும் திருவடியை யுடையவளுமான சிவகாமவல்லி யென்னும் பெயரை யுடைய, பெரிய உமாதேவியார் கண்டு மனம் மகிழுமாறு அழகிய அம்பலத்தின்கண் திருக்கூத்து ஆடுகின்ற பெருமானே, அறியாமை யிருள் நிறைந்த மனமுடைமையால் சிறுமை யுற்றவனுகிய யான் மன்னவனுகிய நினது திருவருள் நலங்களைப் பாடுகின்றேன்; என்னைப் பார்க்கும் அறிஞர்கள் யாவரும் திருவருட் பேற்றுக்குரிய பக்குவத்தை எய்தி விட்டேன், என்று நினைந்து என்னை நன்கு மதிக்கின்ரூர்கள். எ.று.

தன்னுடைய அடியாரிடத்தில் அன்பும், ஏனை யுயிர்களிடத்தில் "அருளுடைமையும் பற்றி, "அடியார் மேல் அன்புடையாள்" என்றும், அருளுடைய நாயகி" என்றும், அருட் குணத்தாலும் அருஞ் செயல் காளலும் பெண்ணினத்துக்குத் தலைவியாய் இலங்குதலால் "அற்புதப் பெண்ணரசி"யென்றும், சிந்திக்குந் தோறும் திருவருளின்பம் சுரத்தலால்

தெருளுடைய சிந்தையிலே தித்திக்கும் பதத்தாள்" என்றும் புகழ்கின்றார். ஞானம் மிக்க சிந்தையிலன்றித் தேனூறுதல் புலப்படாமை பற்றித் "தெருளுடைய சிந்தை" யெனத் தெரிவிக்கின்றார். தெளிந்த வுள்ளத்தையும் மாயா காரியமான உலகியலும் உடம்பும் மயக்குதலால், அந்த மையல் ஒழிதலே வேண்டி இறைவன் அம்பலத்தில் ஆடுகின்ற திருக்குறிப்பை, "மருளுடைய மாயையெலாம் தேய மணி மன்றில் மாநடம் செய்துரையே" எனப் போற்றுகின்றார். மையல் மானிட வியல்பாலும் அனுதி மலப் பிணிப்பாலும் இருண்ட மனமுடையனாகிச் சிறுமையுறுபவன் நான் என்பாராய், "இருளுடைய மனச்சிறியேன்" எனவும், என் சிறுமைக் கெட்டாத பெருமை மிக்கதாயினும் நின் திருவருள் நலத்தை இங்கே பாடுகின்றேன் என்பார், "மன்னருளின் திறத்தைப் பாடுகின்றேன்" என்று கூறுகிறார். என் அறிவு செயல்களாக் காண்கின்ற அறிஞர்கள் திருவருள் ஞானப் பேற்றுக்குரிய பக்குவம் எய்தியுள்ளேன் என்று எண்ணிச் சொல்லுகிறார்களாதலால், எனக்குத் திருவருள் பாலிக்க வேண்டும் என்று இயம்புவாராய், "பருவம் எய்தினனென்று அறிஞரெலாம் எண்ணிமதித்திடப் பாடுகின்றேன்" எனவுரைக்கின்றார்.

இதனுல் பக்குவ மெய்தினமை கூறியவாரும். (3)

3173. மாசுடையேன் பிழைஅனைத்தும் பொறுத்துவர மளித்தாள்
மங்கையர்கள் நாயகிநான் மறைஅணிந்த பதத்தாள்
தேசுடையாள் ஆனந்தத் தெள்ளமுத வடிவாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்பக்
காசுடைய பவக்கோடைக் கொருநிழலாம் பொதுவில்
கனநடஞ்செய் துரையேகின் கருணையையே கருதி
ஆசுடையேன் பாடுகின்றேன் துயரமெலாந் தவிர்ந்தேன்
அன்பர்பெறும் இன்பநிலை அனுபவிக்கின்றேனே.

உரை : குற்றமுடையவனாகிய என் பிழைகள் அத்தனையும் பொறுத்து வரம் அளித்தவளும், பெண்ணினத்துக்கு அரசியாக விளங்குபவளும், நான்காகிய மறைகளை வழங்கிய திருவடியையுடையவளும், ஒளியும் தெள்ளிய அமுதமான திருமேனியுமுடையவளுமான சிவகாம வல்லி யென்னும் பெரிய உமாதேவியார் மனம் மகிழ்வுறுமாறு, குற்றமிக்க பிறவி வெப்பத்துக்கு ஒப்பற்ற தொரு நிழல் செய்யும், தில்லையம்பலத்தின் கண், பெருமை தங்கிய திருக்கூத்தை இயற்றுகின்ற பெருமானே, நினது திருவருள் ஒன்றையே பொருளாக எண்ணிக் கொண்டு, பாடுகின்றேனாகலின், துயர முற்றும் நீங்கி மெய்யன்பர்கள் பெறுகின்ற நிலையையுற்று இன்பம் அனுபவிக்கிறேன். எ.று.

மாசு, காசு, ஆசு ஆகிய சொற்கள் குற்றமென்னும் ஒருபொருள் குறிப்பவை. படர்கின்ற நிலையிற் குற்றத்தை மாசு என்றும், படிந்திருப்பதைக் காசு என்றும், பெரிது படிந்த நிலையில் ஆசு என்றும் வேறுபாடு காணலாம். குற்றம் படர்தற் கேதுவாக அறிவு திரிந்து பிழை செய்தல் உண்மை பற்றி, "மாசுடையேன்" எனப் பகர்கின்றார். பிறவி குற்றக் கொள்கலன் எனப் பெரியோர்களால் பழிக்கப்படுவது பற்றி, "காசுடைய பவம்" எனவுரைக்கின்றார், ஆசா கெந்தை" என்பது போலத்

திருவருளையே பற்றுகக் கொண்டு பாடுகின்றேன் என்பாராய், "ஆசை யேன் பாடுகின்றேன்" எனக் கூறுகின்றார் எனினும் பொருந்தும். இன்ப நினைவும் செயலும் உண்டாகிற போது துயரம் கெடுதலின், "துயர மெலாம் தவிர்ந்தேன்" எனச் சொல்லுகின்றார். உண்மையன்பு நிலைத்த இன்பம் தருதலின், "அன்பர் பெறும் இன்பநிலை" என்று அறிவிக்கின்றார்.

இதனால், பாடற் பரிசும் இன்பம் பெறுதலும் கூறி மகிழ்ந்தவாறும். (4)

3174. பொய்யாத வரம்எனக்குப் புரிந்தபரம் பரைவான்
பூதமுதற் கருவியெலாம் பூட்டுவிக்குந் திறத்தாள்
செய்யாளுங் கலையவளும் உருத்திரையும் வணங்கும்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்பக்
கையாத இன்பநடங் கனகமணிப் பொதுவில்
களித்தியற்றுந் துரையேநின் கருணையைநான் கருதி
நையாத வண்ணமெலாம் பாடுகின்றேன் பருவம்
நண்ணியபுண் ணியரெல்லாம் நயந்துமகிழ்ந் திடவே.

உரை: பொய்யாமையாகிய சிறந்த வரத்தை எனக்கு அருளிய மேலான பராசத்தியும், ஆகாயம் முதல் நிலம், நீராக வுள்ள பூதங்களை அடியாகக் கொண்ட கருவிகளாகிய தத்துவங்கள் எல்லாவற்றையும் இயைந்து உருவாக்கும் கூறுபாட்டை யுடையவளும், திருமகள் கலைமகள் உருத்திரை ஆகிய மூவரும் வணங்கிப் போற்றும் சிவகாமவல்லி என்னும் பெரிய தேவியாகிய உமையம்மை கண்டு, மனம் உவக்கும்படி தெவிட்டாத இன்பத்தைக் கொடுக்கின்ற, திருக்கூத்தை அழகிய பொன்னம்பலத்தில் மகிழ்வோடு ஆடுகின்ற தலைவனே! உன்னுடைய திருவருளை யெண்ணி மனம் வருந்தாத படி ஞானப் பேற்றுக்குரிய பக்குவம் எய்திய புண்ணியர் கள் யாவரும் விரும்பி உவகையுற நான் பாடுகின்றேன்; என்னை ஏற்றருள்க. எ.று.

உலகியலில் பொய்யாமை தலையாய அறம் எனச் சான்றோர் கூறி யிருப்பினும், பொய் யுரைத்தற் கேற்ற சூழ்நிலைகள் தோன்றிப்பொய் யுரைக்கும் குற்றத்தை செய்யப் பண்ணுதலால், பொய் உரைத்தல் என்னைப் பற்றிக் கொண்ட விடத்தும் பொய்யாமையை விடாப் பிடியாகக் கைக்கொள்ளற்கு வேண்டிய திட்பத்தைத் தனக்கு நல்கியது திருவருள் எனத் தெளிகின்றாராதலின், "பொய்யாத வரம் எனக்குப் புரிந்த பரம்பரை" என்று புகழ்கின்றார். பரம்பரை - மேலான பராசக்தி. பரை, பரனுக்குப் பெண்பாற் பெயர். ஆகாயம், காற்று, தீ, நீர் என்பனவும் அவற்றின் அடியாகத் தோன்றும் கருவிகளின் தத்துவங்கள் முப்பத் தாறும் உருவாகி உயிர்கள் செயற் படுதற்குப் படைக்கப் பட்டனவாதல் பற்றி, "வான் பூத முதல் கருவியெலாம் பூட்டுவிக்கும் திறத்தால்" என்று தெரிவிக்கின்றார். இவற்றைப் படைத்தல் முதலிய செயல்களை அளித்துச் செய்யும் திறத்தையும் நல்குவது திருவருட் சத்தியாதலின், அவ்வுண்மை புலப்படக் "கருவியெலாம் பூட்டுவிக்கும் திறத்தாள்" என்று கூறுகின்றார். செய்யாள், திருமகள். உருத்திரை, ஒடுக்கும் செயலைப் புரியும் உருத்திர

மூர்த்திக்குரிய சத்தி. பராசத்தியாகிய பரைக்கு இச்சத்திகள் கீழ்ப்பட்ட வையாதலின் வணங்கும் என்று குறிக்கின்றார். பராசத்திக்குத் தில்லையில் சிவகாமவல்லி என்ற பெயராதலின், "சிவகாமவல்லிப் பெருந்தேவி" என்றும், அவள் கண்டு இன்புறத்தில்லையம்பலத்தில் சிவபெருமான் திருக்கூத்தாடுவது பற்றி, "தேவி உளங் களிப்ப இன்ப நடம்கனக மணிப் பொதுவில் இயற்றும் துரையே" என்றும் கூறுகிறார். சிவசத்தியாகிய தனது தொழில் இனிது இயலுதற்கு இத்திருக்கூத்துத்துணை செய்தலின் தேவி மகிழ்கின்றாள் என்பார், "உளங் களிப்ப" என்றும், திருக்கூத்தில் வினையும் பேரின்பம் விலக்குதற்காகாதத் தெவிட்டாத சிறப்பமைந்தது பற்றி, அதனைக் "கையாத இன்ப நடம்" என்றும், முகத்தில் புன்னகை தவழத் திருவுள்ளம் கனிந்தாடுதலால், "களித்தியற்றும் துரையே" என்றும் சிறப்பிக்கின்றார். திருவருட் பேறு வேண்டுவோர் பெறலருமை கண்டு மனம் வருத்தமுற்ற வழித் தொடர்ந்து முயலுதற்கு ஊக்கம் குன்று மாதலின், "கருணையை நான் கருதி நையாத வண்ணமெலாம் பாடு கின்றேன்" என்றும், தமது பாட்டுக்களைக் கண்ட சிவஞானச் செல்வர்கள் பாராட்டுகின்றனர் என்பாராய், "பருவம் நண்ணிய புண்ணியரெல்லாம் நயந்து மகிழ்ந்திடவே" என்றும் உரைக்கின்றார்.

இதனால், திருவருட் பேறு நிறைந்து மனம் வருந்தாதவாறு நான் பாடினேனாக, பாட்டுக்களைக் கண்டு ஞானவான்கள் உவக்கின்றனர் என உரைத்தவாறும். (5)

3175. அறங்கனிந்த அருட்கொடிஎன் அம்மைஅமு தளித்தாள்
அகிலாண்ட வல்லிசிவா னந்திசௌந் தரிசீர்த்
திறங்கலந்த நாதமணிச் சிலம்பணிந்த பதத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்ப
மறங்கனிந்தார் மயக்கமெலாந் தெளியமணிப் பொதுவில்
மாநடஞ்செய் துரையேநின் வண்மைதனை அடியேன்
புறங்கவியப் பாடுகின்றேன் அகங்கவியப் பாடும்
புண்ணியரெல் லாம்இவன்ஓர் புதியன்எனக் கொளவே.

உரை : அறமாகிய கனியைப் பழுத்தளிக்கும் திருவருளாகிய கொடி போன்ற என் அம்மையும், ஞானமாகிய அமுதத்தை ஞானசம்பந்தர்க் களித்தவளும், அண்டங்கள் அனைத்தையும் பெற்றவளும், சிவானந்தத்தை யுடையவளும், அழகை யுடையவளும், சிறப்பு வகை பலவும் தன்பாற் கொண்ட ஓசையைச் செய்யும் சிலம்பணிந்த திருவடியை யுடையவளுமாகிய சிவகாமவல்லி யெனப்படும், பெரிய உமாதேவியின் உள்ளம் மகிழும்படி அறத்துக்கு மாறான மற வுணர்வுகள் உண்டு பண்ணும் மயக்க வகை யனைத்தும் கெட்டுத் தெளிவு நிலை யுண்டாக, அழகிய அம்பலத்தின்கண் பெருமையுற்ற நடனத்தைச் செய் கின்ற, நினது அருள் வளத்தை அடியவனாகிய யான் புறத்தார் நாணித் தலை குனியவும் அகவினத்தாராகிய அன்பர்கள் மனம் மலரவும் என்னைக் காணும் சிவ புண்ணியச் சீலர்கள் இவனொரு புத்தடியான் என்று புகலவும் பாடுகின்றேன், என்னை ஏற்றருள்க. எ.று.

அறம் வளர்த்த நாயகியாகலின், அம்பிகையை "அறம் கனிந்த அருட்கொடி" எனப் புகழ்கின்றார். "மனையறம் பெருக்கும் கருணையினுல் நண்ணும் மன்னுயிர் யாவையும் பல்க நாடு காதலின் நீடிய வாழ்க்கைப் புண்ணிய திருக்காமக் கோட்டத்துப் பொலிய முப்பத்திரண்டறம் புரக்கும்" (குறிப்புத்) எனச் சேக்கிழார் தெரிவிப்பது காண்க. சீர்காழியில் சம்பந்தப் பெருமானுக்கு ஞானப் பால் தந்த வரலாறு "என்னம்மை அமுதளித்தாள்" என்பதில் குறிக்கப்படுகிறது. சகல புவனங்களையும் படைத்தவ ளென்பதனல், "அகிலாண்ட வல்லி" என்று கூறுகிறார். வல்லி, கொடி போன்றவள். ஆனந்தி, ஆனந்தத்தை யுடையவள். சௌந்தரி, சுந்தரி; அழகுடையவள் என்பது பொருள். நாதம், ஓசை. தீது புரியும் பண்பு மறமாதலின், அஃது அறத்திற்கு மாறுய பண்பென் றுரைக்கப்படுகிறது. மயக்கக் குண மிகுதியால் உளதாகலின், "மறங் கனிந்தார் மயக்கமெலாம் தெளிய" எனக் கூறுகிறார். அம்பலத் திருக்கூத்து மயக்க மறுக்கும் மாண்புடைய தென அறிக. வண்மை, அருள் புரியும் வளமை மேற்று. அருள் நெறி நில்லாதாரைப் புறத்தார் என்றலின், அவர்கள் அருணலம் விளக்கும் பாடல்களைக் கண்டும் கேட்டும் நாணித் தலை கவிழுமாறு தோன்றப் "புறம் கவியப் பாடு கின்றேன்" எனவும், அருணெறி விழைந்து போற்றுவோர் அகவினத் தாராய், இப்பாடற் பொருளைக் கண்டும் கேட்டும் மனமகிழ்ந்து முகமலர்ந்து வழிபாடாற்றுதல் தோன்ற, "அகம் கவிய" எனவும், அவர்களைப்"பாடும் புண்ணிய" ரெனவும் புகழ்கின்றார். கவிதல், கவிழ்தல்; அமைதி குறிப்பதுமாம். பாடல் வல்ல அருளாளர் பலர் தோன்றி மக்களை வாழ்வித் திருத்தலால், வள்ளலாரின் பாடல் நலம் வியந்து "இவனேர் புதியன் எனக் கொள" என வுரைக்கின்றார். அடியேன் புறங்கவிய, அகம் கவிய, புதியனெனக் கொள்ளப் பாடுகின்றேன் என இயையும்.

இதனுல், சான்றோர் இவனேர் புதியனென எனக் கொள்ளுமாறு பாடுவது தெரிவித்தவாறும். (6)

3176. உள்ளமுதம் ஊற்றுவிக்கும் உத்தமிஎன் அம்மை
ஓங்கார பீடமிசைப் பாங்காக இருந்தாள்
தெள்ளமுத வடிவுடையாள் செல்வநல்கும் பதத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்பக்
கள்ளமறுத் தருள்விளக்கும் வள்ளன்மணிப் பொதுவில்
கால்நிறுத்திக் கால்எடுத்துக் களித்தாடுந் துரையே
எள்ளலறப் பாடுகின்றேன் நின்னருளே அருளால்
இப்பாட்டிற் பிழைகுறித்தல் எங்ஙனம்இங் ஙனமே.

உரை : சிந்தைக்கண் தேனூறுவிக்கும் உத்தமியும், எனக்கு அன்னையும், பிரணவத்தை இருக்கையாகக் கொண்டு அழகுற வீற்றிருப் பவளும், தெளிந்த அமுதத்தின் வடிவுடையவளும், அன்பர்களுக்குச் செல்வம் தரும் திருவடி கொண்டவளும், சிவகாமவல்லி யெனப்படுபவளு மாகிய உமாதேவி கண்டு மனம் மகிழ, ஆன்மாக்களின் உயிர்க்கண் படிந் திருக்கும் மலவிருளை நீக்கி ஞானம் ஒளிர்விக்கும் வள்ளலாய், மணி யிழைத்த அம்பலத்தின்கண் ஒரு காலை ஊன்றி, ஒரு காலை மேலேதூக்கி

மகிழ்வுடன் ஆடல் புரியும் தலைவனுகிய பெருமானே, நினது திருவருளைப் பொருளாக வைத்துக் குற்றமில்லாமற் பாடுகின்றேன்; யான் பாடும் இப் பாட்டில் இவ்விடத்தில் பிழை காண்டல் எவ்வாறும்? எ.று.

சிந்திப்பார் சிந்தனையில் தேன் பெருக்கி மகிழ்விக்கும் பெருமாட்டி யாதலை வற்புறுத்தற்கு, "உள்ளமுதம் ஊற்றுவிக்கும் உத்தமி" எனக் கூறு கின்றார். "கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தாற் போலச் சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று, பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்" (சிவபுரா) என மணிவாசகர் ஓதுவது காண்க. அம்மை, தாய். ஓங்காரம், பிரணவம்; பிரணவத்தின் பொருளாய் அதன் இடமாகக் கொண்டிருப்பது பற்றி, "ஓங்கார பீடமிசைப் பாங்காக இருந்தாள்" எனவும், துணிவு தோன்ற இருந்தாள் என இறந்த காலத்தா லும் உரைக்கின்றார். "ஓங்காரத் துட்பொருளை உலகமெல்லாம் பெற்றனை" (ஆனைக்கா) எனத் திருநாவுக்கரசரும், "உய்யவென் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா" (சிவபுரா) என மணிவாசகரும் ஓதுவது காண்க. அன்பர் சிந்தையில் தோனூறிச் சிவஞானம் திகழ வீற்றிருத்தலால், "பாங்காக இருந்தாள்" என்று கூறுகிறார். வடிவு, தோற்றம் செல்வம். திருவருளாகிய செல்வம் தனது இருப்புத் தன்னை யுடைய ஆன்மாவுக்கும் தெரியாதபடி மறைந்திருப்பதால் மலவிருள், கள்ளம் என்று குறிக்கின்றார். "பலரைப் புணர்ந்தும் இருட் பாவைக்கு உண்டென்றும் கணவற்குத் தோன்றுத கற்பு" (திருவருட்)என உமாபதி சிவனார் உரைப்பர். திருவருள் ஞான வொளியாலன்றி இருள் வடிவாய மலம் கெடுதலின்மையின், "கள்ள மறுத்து அருள் விளக்கும் வள்ளல்" என இயம்புகின்றார். திருநடனத்தில் வலக்காலை யூன்றி இடக்காலைத் தூக்கி நின்று ஆடுதலால், "கால் நிறுத்திக் காலெடுத்துக் களித்தாடும் துரையே" என்று சொல்லுகின்றார். எள்ளல், குற்றம்; குற்றம் தோன்றின் பலரும் இகழ்வராதலின், "எள்ளல்" எனப்பட்டது. பாடற் கமைந்த பொருள் இறையருள் என்றற்கு "நின்னருளை" என்றும், அது தானும் அப் பெருமான் அருளாலே அமைவதாதலால், "அருளால்" என்று இசைக் கின்றார். "அருளால் நின்னருளைப் பாடுகின்றே" னென இயையும். இங்ஙனம், இவ்விடம். குற்றமே யில்லாத தூய பரம்பொருளாதலால், அதன் துணையாற் பாடும் பாட்டுப் பிழை படற் கிடமில்லை எனத் தெளிவுறுத்தல் வேண்டி, "இப்பாட்டிற் பிழை குறித்தல் எங்ஙனம்" என வுரைக்கின்றார்.

இதனால், அருளாற் பிறந்த பாட்டாதலால் பிழையிலாச் சிறப்புடைய தெனத் தெரிவித்தவாறும். (7)

3177. பார்பூத்த பசுங்கொடிபொற் பாவையர்கள் அரசி
பரம்பரைசிற் பரைபரா பரைநிமலை யாதி
சீர்பூத்த தெய்வமறைச் சிலம்பணிந்த பதத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்ப
ஏர்பூத்த மணிமன்றில் இன்பநடம் புரியும்
என்னருமைத்துரையேநின் இன்னருளை நினைந்து
கார்பூத்த கனமழைபோல் கண்களின் நீர் சொரிந்து
கனிந்துமிகப் பாடுகின்ற களிப்பைஅடைந் தனனே.

உரை : உலகங்களைப் பெற்ற பசுங்கொடி போன்றவளும், அழகிய மங்கையர்க்கெல்லாம் அரசியாக விளங்குபவளும் மிகவும் மேலான ஞான பரதேவதையும்,பராபரையும் நிமலையாய் ஆதியாகியவளும், சிறப்புடைய தெய்வத்தன்மை பொருந்திய வேதமாகிய சிலம்பை யணிந்த திருவடியை யுடையவளுமாகிய சிவகாமவல்லி யென்னும் உமாதேவி கண்டு மனம் மகிழ, அழகு மிக்க அம்பலத்தின்கண் இன்பத் திருக்கூத்தை இயற்றும் எனக்கு அரிய துரையே, நினது திருவருளை நினைந்து, கார் மேகம் பொழியும் ஒலிக்கின்ற மழை போற் கண்களினின்றும் நீரைச் சொரிந்து மனம் கனிந்து மிகுதியும் பாடுதலாற் பிறக்கும் மகிழ்ச்சியை அடைகின்றேன் எ.று.

பார், நில முதலாகிய பல கோடி யுலகங்கள். உலகம் அனைத்தையும் பெற்றளிக்கும் தாய் என்பது பற்றி, "பார் பூத்த பசுங்கொடி" என்று பகர்கின்றார். பசிய கொடி போல்வது பற்றி, "பசுங்கொடி" என்றது ஆகுபெயர். பாவை போல்வதால் மகளிரைப் "பாவையர்" என்பது வழக்கு. மங்கையர்க் கரசி என்ற தொடர்க்கு, "மங்கையர்க்குத் தனியரசி" என விளக்கம் செய்வர் சேக்கிழார் பெருமான். பரம்பரம், மிக மேலாயது. சிற்பரை, ஞானத்தால் மேம்பட்டவள். பராபரை, பர அபரை எனப் பிரிந்து மேலும் கீழும் எல்லா மாகிய சிவசக்தி எனப் பொருள்படும். நிமலை, மலமில்லாதவள். நிர்மலா என்பது நிமிலை யென மருவிற்று. ஆதி ஆதி சத்தி. தெய்வமாகப் பேணப்படுதலின், "தெய்வ மறை" எனவும், அவ் வேத வொலியைச் செய்தலால், தேவியின் காற் சிலம்பை, "மறைச் சிலம்பு" எனவும் இயம்புகின்றார். ஏர், அழகு; எழுச்சியுமாம். உயிர் வகை யனைத்துக்கும் இன்பம் விளைவிப்பதாகலின், "இன்ப நடம்" என்று சிறப்பிக்கின்றார். கார், கரிய மழை மேகம். ஓசையுடைமை பற்றிக் "கன மழை" என்கின்றார். கனைத்தல், ஒலித்தல். திருவருளையே நினைந்து பாடப் பாடப் பெருகும் மகிழ்ச்சியால் பாடுகின்ற குறிப்பு விளங்கப் "பாடு கின்ற களிப்பை யடைந்தனனே" எனக் கூறுகின்றார். "துருத்தியால் திருந்தடியுளங் குளிர்ந்த போதெலாம் உகந்துகந் துரைப்பனே"(துருத்தி) என ஞானசம்பந்தர் நவில்வது காண்க.

இதனால்,திருவருளை நினைந்து பாடப் பிறக்கும் களிப்பைத் தெரிவித்த வாறும். (8)

3178. பூரணிசிற் போதைசிவ போகிசிவ யோகி
பூவையர்கள் நாயகிஞ் பூதமுந்தா னுளுள்
தேரணியும் நெடுவிதித் தில்லைநக ருடையாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்ப
ஏரணியும் மணிமன்றில் இன்பவடி வாகி
இன்பநடம் புரிகின்ற எம்முடைய துரையே
தாரணியில் உனைப்பாடுந் தரத்தைஅடைந் தனன்என்
தன்மையெலாம் நன்மைஎனச் சம்மதித்த வாறே.

உரை : குணஞ் செயல்களால் நிறைந்தவளும், ஞானமுரைப்பவளும், சிவபோகத்தையும் சிவயோகத்தையும் உடையவளும், மங்கையர்கட்குத் தலைவியும், ஐம்பெரும் பூதங்களும் தானாகியவளும், தேர்கள் அணியணியாக இயங்கும் நெடிய வீதிகளையுடைய தில்லை நகரையுடையவளுமாகிய சிவகாமவல்லி யெனப்படும் உமாதேவியார் கண்டு மனம் மகிழ அழகு பொருந்திய மணியிழைத்த அம்பலத்தின்கண் இன்ப வடிவுற்று இனிய நடம் புரிகின்ற எங்கள் துரையே, இந்நில வுலகில் உன்னைப் பாடுகின்ற தகுதியைப் பெற்று விட்டேனாதலால் என்னுடைய தன்மைகள் யாவும் நல்லவை யென்று நீ திருவுள்ளம் கொண்டமை எனக்கு விளங்கியவாருயிற்று. எ.று.

பூரணம் - நிறைவு. நற்குண நற்செய்கைகளால் குறைவின்றி நிறைந்தவளென்றற்குப் "பூரணி" என்றும், சிவஞானத்தை நல்கியருளுமாறு புலப்படச் "சிற்போதை" என்றும் இயம்புகின்றார். போதிப்பவனைப் போதன் என்றலின், போதிப்பவளைப் "போதை" எனப் புகல்கின்றார். சிவபோகத்தையும் சிவயோகத்தையும் உடையவளாதலால், சிவபோகியெனவும் சிவயோகிய யெனவும் தெரிவிக்கின்றார். பெண்மை பற்றிப் "பூவையர்கள் நாயகி" எனப்படுகின்றாள். பூவை - பெண். வானாகி வளியாகித் தீயாகி நீராகி நிலமாகி நிற்பது விளங்க, "ஐம்பூதமும் தானானாள்" என்று சாற்றுகின்றார். தேர் - நான்கு சக்கரம் கொண்ட ஊர்தி. போக்குவரவு இனிதின் இயங்க அணியமைந்து செல்வது புலப்பட, "தேரணியும் நெடுவீதித் தில்லை" எனச் சிறப்பிக்கின்றார். ஏர் - அழகு. கூத்தப் பெருமான் திருவுருவம், இன்ப மயமானது பற்றி, "இன்பவடிவாகி" என்றும், எல்லாவுயிரும் இன்பம் எய்தும் பொருட்டுத் திருக்கூத்து நிகழ்தலால் "இன்ப நடம் புரிகின்ற எம்முடைய துரையே" என்றும் இசைக்கின்றார். தாரணி - நிலவுலகம்; இது தரணியென்றும் வழங்கும். தரம் - தகுதி. தன்மை முற்றும் நல்லனவாயினல்லது உயர்ந்த பாடல்களைப் பாடும் பான்மை யுளதாகாதாதலாலும், அது தானும் இறைவன் திருவுள்ளக் கிடக்கையாதலாலும், "பாடும் தரத்தை யடைந்தனன் என் தன்மையெலாம் நன்மையெனச் சம்மதித்தவாரும்" எனக் கூறுகின்றார்.

இதனால், இறைவனைப் பாடும் தரம் உளதாவது திருவருளா லெனத் தெரிவித்தவாரும். (9)

3179. தன்னொளியில் உலகமெலாந் தாங்குகின்ற விமலை
தற்பரை அம் பரைமாசி தம்பரைசிற் சத்தி
சின்னவய தினில்என்னை ஆளநினைக் கிசைத்தாள்
சிவகாம வல்லிபெருந் தேவிஉளங் களிப்ப
மன்னியபொன் மணிப்பொதுவில் இன்பநடம் புரிந்து
வயங்குகின்ற துரையேநின் மாகருணைத் திறத்தை
உன்னிஉவந் துணர்ந்துருகிப் பாடுகின்றேன் எங்கள்
உடையானே நின்னருளின் அடையாளம் இதுவே.

உரை : சிவசத்தியாகிய தனது ஒளியின்கண் உலகனைத்தையும் தாங்குகின்ற விமலையும், தற்பரையானவளும், அழகிய பராசத்தியான

வளும், பெரிய ஞானுகாயத்தையுடையவளும், ஞானசத்தியும், இளமை வயதிலே என்னே யாட்கொள்ள வெண்ணிய நினக்கு உடனிசைந்த வளும், சிவகாமவல்லி எனப்படுபவளுமாகிய பெரிய உமாதேவி கண் களாற் கண்டு மகிழ்வு கொள்ள, நிலேபெற்ற பொன்னுலும் மணிகளாலு மாகிய அம்பலத்தின்கண் இன்ப நடனம் செய்து விளங்குகின்ற, பெருமானே, நின்னுடைய பெரிய திருவருளேயே நினேந்து மகிழ்ந்து உள்ளத்தில் நன்குணர்ந்து மனமுருகிப் பாடுகின்றேன்; எங்களே ஆளாக வுடைய நினது திருவருள் என்பால் உளது என்றற்கு இதுவே பேரடை யாள மன்ருே? எ.று.

சத்தியென்பது ஒளிமயமானதாகலின், சிவசத்தியின் பேரொளியில் மூழ்கி உலகங்கள் அனேத்தும் தங்குகின்றமை புலப்படுத்தற்கு "உலக மெலாம் தன்னெளியில் தாங்குகின்ற விமலே" எனக் கூறுகிருர். விமலே - மலவிருளில்லாதவள். தான் ஒளியாயிருத்தலால் உலகனேத்தையும் தாங்கும் திறம் அவட்கு இயல்பாயிற்று. ஒளி மயமான பரிக்கிரக சத்தியாகிய மாயை சிவசத்தியின் கண்ணும், சிவசத்தி பரஞ்சோதி யாகிய சிவத்தின்கண்ணும் உள்ளன எனச் சிவாகம சித்தாந்தங்கள் தெரிவிக்கின்றன. தற்பரை - தானே தனக்கு மேலானவள். அருட் சத்தியாகிய சிவசத்தியினும் பெரியதும் பரமாயதுமான சத்தி வேறில்லே யாதலால், தற்பரையெனவும் பரம்பரை யெனவும் பகர்கின்ருர். சிதம்பரத்தை யுடையவனேச் சிதம்பரை என்கின்ருர். சிதம்பரம் - ஞானுகாசம்; சித்ஞானத்தையும், அம்பரம் ஆகாசத்தையும் குறிப்பன. உமாதேவியின் தற்சொரூபம் சிவசத்தி என்பதை முடிபாகக் காட்டற்குச் "சிற்சத்தி" என வுரைக்கின்ருர். சின்ன வயது - இளமைப் பருவம். வளமிக்கதாகலின், இளமையிலே ஆட்கொள்ளத் திருவுள்ளம் கொள் கின்ருர். எம்பெருமான்; சிவசத்தியின் இசை விருந்தாலன்றி எண்ணம் செயல் படாதாகலின், சத்தியாகிய தேவியின் இசைவு இன்றியமை யாதாதலே விளக்குதற்கு, "என்னே யாள நினக்கு இசைந்தாள்" என விளம்புகின்ருர். என்றும் உள்ளதாகலின், தில்லேப் பொன்னம்பலத்தை "மன்னிய பொன் மணிப் பொது" எனச் சிறப்பிக்கின்ருர். சிவத்தின் திருவருள் நலங்களே மனமார எண்ணுமிடத்து உணர்வு கூரிதாகி உள்ளம் நீராய் உருகுதலின், "நின் மாகருணேத் திறத்தை உன்னி யுவந்து உணர்ந்துருகிப் பாடுகின்றேன்" என வுரைக்கின்ருர். பாடும் பணி இனிது அழகுறக் கைகூடுவதனுல், திருவருளின் உதவி அகத்தேயிருத் தல் நன்கு தெரிதலால், "நின் அருள் அடையாளம் இதுவே" என இயம்புகின்ருர்.

இதனுல், திருவருளின் உதவி யுண்மை தெளிந்தமை தெரிவித்த வாரும். (10)

திருச்சிற்றம்பலம்

5. பத்தி மாலை

அஃதாவது, இறைவனது திருவருட் சத்தியிடத்துத் தமக்குளதாகிய பத்தியைப் பாட்டுக்களால் மாலையாகத் தொடுத்துப் பாடுவது. இதன் கண் உள்ள பத்துப் பாட்டும் "இனித்த நடம் புரிந்து மன்றில் தனித்த சிவக்கொழுந்தே" என்பதை மகுடமாகக் கொண்டு உள்ளன. பெருந் துணை நங்கையொருத்தி முதற்கண் மறுத்த திருவருளைப் பின்னர் வந்து நலங் கூறி வற்புறுத்தித் தந்து நீங்கி வருந்திக் கூறும் நிலையில் இப் பத்தி மாலை அமைந்துள்ளது.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3180. அருளுடையாய் அடியேன்நான் அருளருமை அறியேன்
அறியாதே மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து
மருளுடையேன் தனைஅழைத்துத் திரும்பவும்என் கரத்தே
மகிழ்ந்தளித்த பெருங்கருணை வண்ணம்என்றன் மனமும்
தெருளுடைய கண்களும்விட் டகலாதே இன்னும்
தெரிகின்ற தாயினும்என் சிந்தைஉரு கிலதே
இருளுடைய சிலையும்இதற் குருகல்அரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே.

உரை : இனிய திருக்கூத் தியற்றி, அம்பலத்தின்கண் தனித்து விளங்கும் சிவக் கொழுந்தாகிய பெருமானே, நீ பேரருளுடையவன்; அடியவனாகிய யான் நின்னுடைய அருளின் அருமையைத் தெரியாதவன் அதனால் திருவருள் செய்த போது அறியாமையால் யான் மறுத்த குற்றங் களை யெல்லாம் பொறுத்தருளி, மருட்சி மிக்க என்னை அழைத்து மீளவும் என் கையில் அன்புகூர்ந்து அதனை வழங்கிய உனது பெரிய கருணைத் திறம் என்னுடைய மனத்தையும் தெளிவுடைய, கண்களையும் விட்டு நீங்காமல் இப்பொழுதும் தெரியவுளது; அற்றாகவும், என் உள்ளம் அதன் பொருட்டு உருகுகிற தில்லை; இருட் பண்புடைய கல்லும் உருகா தொழியாது காண். எ.று.

அருளையே திருமேனியாக வுடையனாதலால் சிவனை "அருளுடை யாய்" என்று கூறுகின்றார். அடியேன், கீழ்ப்பட்டவன். அருளின் நற்பெருமையைச் சிறிதும் அறியாதவன் என்றற்கு "அருளருமை யறியேன்" என்று உரைக்கின்றார். முன்பு ஒருகால் நீயே என் முன்னே போந்து நினது அருளை வழங்கினை; உண்மை யறியும் திறமில்லாமையால் அதனை மறுத்துக் குற்றப் பட்டேனாக, நீயோ அக்குற்றத்தைப் பொறுத் தருளினாய் எனப் புகல்கின்றவர், "அறியாது மறுத்த பிழை அத்தனையும் பொறுத்து" என மொழிகின்றார். மலமாயைகளால் தமது அறிவு மருண்டமை விளங்க, "மருளுடையேன்" என இசைக்கின்றார். மருட்சியால்

மறுத்தொழிந்த என்னை விடாது மீட்டும் போந்து என் கையைப்பற்றி, முகமலர்ந்து உவந்து செய்தருளிய அருட் பண்பை மறவேன்; என் கண் முன்னே அது காட்சி தந்தவண்ணம் இருக்கிற தென்பாராய், "என்னை யழைத்துத் திரும்பவும் என் கரத்தே மகிழ்ந்தளித்த பெருங் கருணை வண்ணம் என்றன் மனமும் கண்களும் விட்டு அகலாதே இன்னும் தெரிகின்றது" எனக் கூறுகின்றார். மருளுடைமையால் மனம் மறுத்துக் குற்றப்பட்டதாயினும், கண்கள் தெளிவுக் காட்சி யுற்று இன்னும் கண்டு கொண்டுள்ளது என்றற்குத் "தெருளுடைய கண்கள்" என்று சிறப்பிக் கின்றார். இதனைச் சிந்தித்து உருக வேண்டிய சித்த மென்னும் கரணம் அதனைச் செய்கிற தில்லை யென வருந்துகின்றமையின், "என் சிந்தை யுருகிலது" எனவும், இவ்வருட் செயற்குக் கருங்கல்லும் உருகும் என்பாராய், "சிலையும் இதற்கு உருகல் அரிதலவே" எனவும் இயம்பு கின்றார். "ஆயினும்" என்றது, கருணைத் திறத்தின் பெருமையையும், கருணை நீங்காமல் மனத்தைப் பிணிக்கவும், மனத்தின் கூருகிய சித்த முருகுகின்றதில்லை என்ற வருத்தத்தையும் வற்புறுத்துகிறது. அறிவில்லாத தாகலின், கல்லை, "இருளுடைய சிலை" என்று கூறுகிறார். உயிர் வகை யாவற்றிற்கும் இன்பம் விளைவிப்பதாகலின், இறைவன் திருக்கூத்தை "இனித்த நடம்" எனவும், அது நிகழ்த்தும் திருவுடைய அம்பலத்தின் கண் கூத்தப் பெருமானுடைய திருவுருவம் சிவம் பொலிந்து மேம்படுவது தோன்ற, "மன்றில் தனித்த சிவக்கொழுந்தே" எனப் போற்றுகின்றார். சிவத் திருமேனியிற் பிரிந்து சிவகாமவல்லியாய்க் கண்டு போற்றி மகிழ்தலால், உமையின் கூறின்றித் தனித்துக் காண நிற்பது பற்றித் "தனித்த சிவக் கொழுந்து" எனக் குறிக்கின்றார். ஏனை யிடங்களிலும் இதனையே கூறிக் கொள்க.

இதனால், கருணைத் திறம் நினைந்து, சிந்தை யுருகாமைக்குவருந்திய வாறும். வரும் பாட்டுக்கட்கும் இதுவே கருத் தென்க. (1)

3 181. அன்புடையாய் அடியேன்நான் அருளருமை அறியேன்
அறியாதே மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து
வன்புடையேன் தனைஅழைத்துத் திரும்பவும்என் கரத்தே
வலிந்தளித்த பெருங்கருணை வண்ணஎன்றன் மனமும்
இன்புடைய கண்களும்விட் டகலாதே இன்னும்
விளங்குகின்ற தாயினும்என் வெய்யமனம் உருகா
என்புடைய உடலும்இதற் குருகல்அரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே.

உரை : உயிர்களுக் கெல்லாம் இன்பம் விளைவிக்கின்ற திருநடனம் புரிந்தருளும் தனிப்பெருந் தெய்வமான சிவபெருமானே, அன்புருவான வனே, அடியவனாகிய நான் உன்னுடைய திருவருளின் அருமை பெருமைகளை நன்றாக அறிந்திலேன்; அறியாமையால் உனது திருவருளை மறுத்து, யான் செய்த பிழைகள் அத்தனையும் பொறுத்து, வன்புடைய வனாகிய என்னைத் தன் முன் வருவித்து என் கையில் திருவருளை வலியத் தந்தளித்த உனது பெரிய கருணைத் திறம் என் மனத்தையும் இன்புறுவிக் கும். என் கண்களையும் விட்டு நீங்காமல், இப்பொழுதும் விளங்கித்

தோன்றுகிறதாயினும் எனது வெவ்விய மனம் உருகாமல் என்பு தோல் போர்த்த உடம்பும் உருகுகிறதில்லை. எ.று.

தான் அன்புருவாவதன்றி உயிர்த் தொகைகளின் அன்பனைத்தும் தனக்கு உடைமையாகக் கொண்டவனதலின், "அன்புடையாய்" என்று கூறுகிறார். மக்களிற் கடையனதலின் நான் உனது திருவருளின் அருமையை யுணரேன் என்பார், "அருளருமை யறியேன்" என வுரைக்கின்றார். "அருளே யுலகெல்லாம் ஆள்விப்பது ஈசன், அருளே பிறப் பறுப்ப தானல் - அருளாலே, மெய்ப்பொருளைக் காணும் விதியுடையனு தலினால், எப்பொருளும் ஆவதெனக்கு" (திருவா) எனக் காரைக்காலம் மையார் கூறுவதறிக. பிழை பொறுக்கப் படாவிடில் மீளவும் அருள் வழங்கல் நிகழாமை பற்றி, "அறியாதே மறுத்த பிழை யத்தனையும் பொறுத்துத் திரும்பவும் என் கரத்தே அளித்த பெருங்கருணை" என இசைக்கின்றார். மறுத்தமைக்கு மனத்தின்கண் உற்ற வன்கண்மையை எடுத்துரைக்கலுற்று, "வன்புடையேன்" எனத் தம்மைக் கூறுகிறார். வன்பு- வன்கண்மை. "வலிந்தளித்த பெருங்கருணை" என்பதால், திரும்பவும் போந்து அருள் வழங்கிய காலையும் வன்பு நீங்காமை பெறப் படுகிறது. கருணையின் பெருமை மனத்தினும், அருளிய திருவுருக் கண் களிலும் நிலைபேறு கொண்டமை விளங்க, "என்றன் மனமும் கண்களும் விட்டகலாதே இன்னும் விளங்குகின்றது" என வுரைக்கின்றார். அருள் வழங்க வந்த திருமேனி இன்பம் சிறக்கப் பொலிந்தமை பற்றி, "இன்புடைய கண்கள்" எனப் புகழ்கின்றார். கருணைத் திறம் கருத்திலும் கண்ணிலும் நிலைபெற்ற பின்னரும் நீங்காது உருகாமைக்கு வருந்து கின்றாராகலின், "என் வெய்ய மனம் உருகாது; என்புடைய உடலும் உருகல் அரிதலவே" என மொழிகின்றார். உருகாமைக்கு வெகுள் கின்றமை புலப்பட, "வெய்ய மனம்" என்றும், "என்புடைய உடல்" என்றும் விதந்து கூறுகின்றார். (2)

3182. ஆளுடையாய் சிறியேன்நான் அருளருமை அறியேன்
அறியாதே மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து
வாளுடையேன் தனை அழைத்துத் திரும்பவும்என் கரத்தே
வலிந்தளித்த பெருங்கருணை வண்ணம்என்றன் மனமும்
நீளுடைய கண்களும்விட் டகலாதே இன்னும்
நிகழ்கின்ற தாயினும்என் நெஞ்சம்உரு கிலதே
ஏளுடைய மலையும்இதற் குருகல்அரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே.

உரை : இன்பம் விளைவிக்கும் திருநடனத்தைச் செய்தருளும் தனிப் பெரும் சிவக்கொழுந்தாகிய பெருமானே, உயிர் வகைகள் ஆண்டருளும் உரிமை யுடையவனே, அறிவிற் சிறுமை யுற்றவனதலால் நினது திருவருளின் பெறலருமையை அறியா தொழிந்தேன்; அதனால் அருளப் பெற மறுத்தொழுகிய குற்ற மனைத்தையும் பொறுத்தருளிக் கூரியவாள் போன்ற என்னை அருகிலழைத்து மீட்டும் என் கையில் வற்புறுத்தித் தந்த கருணைப் பெருநிலை என்னுடைய மனத்தினும் நீண்ட கண்ணினும் நீங்காமல் இப்பொழுதும் நிலவுகின்றதாகலின், உருகுதற்குரிய என்

நெஞ்சம் உருகுகிறதில்லை; ஏழாகிய மலைகளும் இதற்கு உருகா தொழியா; என் செய்வேன். எ.று.

ஆளுடையாய் - ஆளும் உரிமை யுடையவனே. "ஆள வுடையார்" (சண்டே) என்று சேக்கிழார் சிவபெருமானைக் குறிப்பது நோக்குக. சிறியேன் என்பதிற் சிறுமை அறிவின் மேற்று. சிறுமை, திருவருளின் அருமை யறியாமைக்கு ஏதுவாயிற்றென அறிக, மருது ஏற்றுக் கோடற் குரியதனை மறுத்தல் குற்றமாகலின், "மறுத்த பிழை" என்கின்றார். நெருங்குதற்காகாத கொடுமையுடைமை புலப்படத் தம்மை, "வாளுடை யேன்" என வடலூர் வள்ளல் உரைக்கின்றார். வலித்தளித்தல் - மருதபடி வற்புறுத்தி ஏற்பித்தல். நீண்ட பார்வை யுடையவையாகலின், கண்களை "நீளுடைய கண்கள்" என விளம்புகின்றார். பெருங்கருணை நிலைபேறு கொண்ட தென்பார், "இன்னும் நிகழ்கின்றது" எனக் கூறுகின்றார். ஆயினும் என்பது ஆகவும் - என்பதன் திரிபு. ஏழ் - ஏள் என வந்தது. ழகர ளகரப் போலி. (3)

3183. ஆரமுதே அடியேன்நான் அருளருமை அறியேன்
அறியாதே மறுத்தபிழை ஆயிரமும் பொறுத்து
வாரமுற எனையழைத்துத் திரும்பவும்என் கரத்தே
மகிழ்ந்தளித்த பெருங்கருணை வண்ணம்என்றன் மனமும்
சீருடைய கண்களும் விட் டகலாதே இன்னும்
தெரிகின்ற தாயினும்என் சிந்தைஉரு கிலதே
ஈரமிலா மரமும்இதற் குருகல்அரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே.

உரை: இன்பம் விளைவிக்கும் திருக்கூத்தை யாடித் தில்லையம் பலத்தின்கண் தனித்து விளங்கும் சிவக்கொழுந்தாகிய பெருமானே, அடியவனாகிய யான் உனது திருவருட் பெருமையைத் தெரியேன்; அறியாமையால் நீ செய்த அருளை முன்பு மறுத்துப் பிழை பல புரிந்தேனாக அவ்வளவையும் பொறுத்து அன்பு பெருக என்னை அருகழைத்து மறுபடியும் அதே திருவருளை மனமகிழ்ந்து செய்த பெருங்கருணைத் திறம் என் மனத்திலும் சிறப்புடைய கண்களிலும் நீங்காமல் நின்று திகழ்கின்றதாகவும், என் சிந்தை நினைந்து உருகுகிறதில்லை; பசுமை குன்றிப் பட்ட மரமும் இது குறித்து உருகுமென்பது நடவாததன்று. எ.று.

மலையைக் கொண்டு கடலைக் கடைந்து தேவர்கள் அரிதிற் பெற்ற அமுதினும் பெறற் கரியவனாதலால், சிவபெருமானை "ஆரமுதே" என்றும் அறிவிலார் யாவாரினும் கடையாயவன் எனத் தம்மைக் குறித்தற்கு "அடியேன்" என்றும் கூறுகிறார். அடியவன், கீழ்மையிருப்பவன். வாரம் - அன்பு. எனக்கு - அவர்பால் அன்பு மிகுமாறு அருகில் அழைத்தார் என்பார், "வாரமுற எனை யழைத்து" எனவும், முன்பு யான் மறுத்த திருவருளையே மீளவும் வலியுறுத்தித் தந்தமை புலப்படத் "திரும்பவும் என் கரத்தே மகிழ்ந்தளித்த" எனவும் இயம்புகின்றார். நன்கு காணும் மக்கண்களைச் "சீருடைய கண்கள்" என்று சிறப்பிக்கின்றார். கண்ணினு

மனத்தினும் நின்ற பொருள் நினைந்த வழி நெஞ்சினை யுருக்குமாதலின், "சிந்தை யுருகிலதே" என வருந்துகிறார். ஈரமிலா மரம் - பட்டுலர்ந்த மரம்; பசையறக் கெட்ட மரமும் இந்நிலையில் உருகும் என்பது குறிப்பு. (4)

3184. அற்புதனின் அருளருமை அறியேன்நான் சிறிதும்
அறியாதே மறுத்தபிழை ஆயிரமும் பொறுத்து
வற்புறுவேன் தனைஅழைத்துத் திரும்பவும்என் கரத்தே
வலிந்தளித்த பெருங்கருணை வண்ணம்என்றன் மனமும்
கற்புடைய கண்களும்விட் டகலாதே இன்னும்
காண்கின்ற தென்னினும்என் கன்மனமோ உருகா
இற்புடைய இரும்பும்இதற் குருகல் அரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே.

உரை : இன்பம் விளைவிக்கும் திருநடனத்தைச் செய்து தில்லையம் பலத்தின்கண் தனித்து விளங்கும் சிவக் கொழுந்தே, அற்புதனே, நின்னுடைய அருளலத்தை யான் சிறிதளவும் அறியேன்; அறியாமை யால் யான் மறுத்துச் செய்த பிழைகள் பலவற்றையும் பொறுத்தருளி வன்கண்ணனாகிய என்னை யருகழைத்து மறுபடியும் என் கையில் வற்புறுத்தி யருளிய உனது பெரிய கருணைத் திறம் என் மனத்தையும் கற்புள்ள கண்களையும் விட்டு நீங்காமல் இப்பொழுதும் காண நிற்கின்ற தென்றாலும், கல்லொத்த என் மனம் தானும் உருகுகின்றதில்லை; மனை யின்கண் இருக்கும் இரும்பும் இதனை யுணரின் நீராய் உருகும். எ.று.

தோற்றக் கேடுகள் காண்டலருமை பற்றி, இறைவனை "அற்புதன்" என்று கூறுகிறார். திருவருளின் அருமை பெருமைகள் பேரறிஞ ரெவரா லும் அறிதற் கரியவாகலின், "சிறிதும் நான் அறியேன்" என வுரைக் கின்றார். பிழைகள் மிகப்பல வென்றற்குப் "பிழையாயிரம்" என்பது புலமை மரபு. வற்பு, வன்பு - வன்கண்மையென்பது பொருள். கருணை வண்ணம் கருணைத் திறம். காணுதற்றெழிலில் திண்ணிதாய் நின்று இயலுவது பற்றிக் "கற்புடைய கண்கள்" என்று கூறுகின்றார். கண்ணும் மனமும் இப்பொழுதும் நேரில் நிகழ்வது போல நோக்குதல் விளங்கக் "காண் கின்றது" என வுரைக்கின்றார். காண்கின்றது காண நிற்கிறது. கற்போல் உருகாமை பற்றிக் "கன்மனம்" என்கின்றார். இற்புடைய இரும்பு-இல்லின் பக்கத்தேயுள்ள இரும்பு. நெடிது வெந்துருகும் இரும்பினும் வலிது என்பது குறிப்பு. (5)

3185. ஆண்டவனின் அருளருமை அறியாதே திரிந்தேன்
அன்றிரவின் மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து
வேண்டிஎனை அருகழைக்குத் திரும்பவும்என் கரத்தே
மிகஅளித்த அருள்வண்ணம் வினையுடையேன் மனமும்
காண்தகைய கண்களும்விட் டகலாதே இன்னும்
காண்கின்ற தாயினும்என் கருத்துருகக் காணேன்
ஈண்டுருகாக் கரடும்இதற் குருகல்அரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே.

உரை : அம்பலத்தின் இன்பம் விளைவிக்கும் திருக்கூத்தியற்றித் தனிப் பரம்பொருளாய் விளங்கும் சிவக்கொழுந்தே, ஆண்டவனே, நின்னுடைய திருவருளின் அருமையை அறியாமலே புலன் வழித் திரிந்தேனுக, அன்றொருநாள் இரவு நான் நினதருளே மறுத்துரைத்த பிழைக ஐ அத்தனையும் பொறுத் தருளி என்னை விரும்பி அருகில் அழைத்து மீளவும் அவ்வருளை என் கையில் மிகுதியாகத் தந்து பேணிய கருணைத்திறம், வினை மிக வுடையனுகிய என்னுடைய மனமும் காணும் தகுதியை என் கண்களும் நிலைபெறக் கொண்டனவாகலின் இப்பொழுதும் கண்ட வண்ணமிருப்பினும் என் மனம் உருகுவதாகத் தெரியவில்லை; இவ்வுலகில் இனிதின் உருகாத கற்பாறையும் உருகுதல் எளிதாம்; என்னே யான் இருந்தவாறு. எ.று.

மண்ணகத்து வாழ்வளித் தருள்பவனுகலின், சிவபிரானை "ஆண்டவ" எனச் சிறப்பிக்கின்றார். திருவருளின் நலமறியாமைக்கு வருந்துகின்றுராதலின், "அருளுருமையறியேன்" என்றும், அறியாமை காரணமாக முதற்கண் மறுத்த குற்றத்தை, "மறுத்த பிழை" என்றும் அழுங்குகின்றார். அறியாமையாற் செய்தது தெரிவிப்பாராய், புலன் வழிச் சென்று உழன்றதனை, "திரிந்தேன்" எனக் கூறுகின்றார். முதற் கண் போந்த நாள் இரவுப் பொழுதை "அன்றிரவு" எனவும், மக்களுருவில் இரவிற் போந்து செய்த அருளிப் பாட்டை மறுத்த செய்தியைப் பின்பு நினைத்தலின், "மறுத்த பிழையத்தனையும்" எனவும் இயம்புகின்றார். முன்னர் மறுக்கப்பட்ட திருவருளையே பின்னர் வலியுறுத்தித் தந்தமையை வியந்து பேசுதலின், "திரும்பவும் என் கரத்தே மிக வளித்த அருள் வண்ணம்" என்று உரைக்கின்றார். மறுத்தற் கேதுவாயிருந்த அறியாமை முன்னை வினையின் விளைவாதலைத் தெளிந்தமை தோன்ற "வினை யுடையேன்" என விளம்புகின்றார். காணும் நலம் படைத்த கண்களைக் "காண்டகைய கண்கள்" என்று கூறுகிறார். அன்று போல இன்றும் காட்சி தருதலின், "இன்னும் காண்கின்றது" என்றும், கண் காண்டல் போல மனம் நினைக்கின்றதேயன்றி உருகுகின்ற தில்லை என வருந்துவாராய், "ஆயினும் என் கருத்துருகக் காணேன்" என்றும் கலுழ்கின்றார். கரடு - கற்பாறை; இதனைப் பொற்றையெனவும் புகல்வர். அரிதல என்பது எளிதென்னும் பொருளது. கல் எளிதில் உருகுவதாக மனம் உருகா திருப்பது வியப்பாகவுளது என்பதாம். (6)

3186. அரசேநின் திருவருளின் அருமைஒன்றும் அறியேன்
அறியாதே மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து
விரவும்அன்பில் எனைஅழைத்து வலியவும்என் கரத்தே
வியந்தளிந்த பெருங்கருணை விளக்கம்என்றன் மனமும்
உரவுமலர்க் கண்களும்விட் டகலாதே இன்னும்
ஒளிர்கின்ற தாயினும்என் உள்ளம்உரு கிலதே
இரவுநிறத் தவரும்இதற் குருகல்அரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே.

உரை : இன்பம் விளைவிக்கும் திருக்கூத்தை அம்பலத்தின்கண் ஆடி ஒப்பின்றி யுயர்ந்த சிவக் கொழுந்தே, அருளரசே, நின் திருவருளின்

அருமை ஒரு சிறிதும் அறியகில்லேன்; அறியாமல் மறுத்து விலக்கிய என் பிழைகளெல்லாவற்றையும் பொறுத்தருளி, மனம் கலந்த அன்புடன் என்னைத் திருமுன்பழைத்து வலிதாக என் கையில் வியந்தளித்த நின் கருணைச் சிறப்பு, என் மனத்தினும், விரிந்த மலரொத்த கண்களிலும் நீங்காமல் இப்பொழுதும் விளங்குகின்றதாக, என்னுடைய உள்ளம் அது நினைந்து உருகுகின்றதில்லை; இருள் நிற அரக்கரும் இது குறித்து இரங்குவது அரிதன் றென்றல் வேறே கூறுவது என்னை? எ.று.

ஒன்றும், சிறிதும் என்னும் பொருளது பிழைகள் பல என்றற்குப் "பிழை அத்தனையும்" என்கின்றார். உள்ளத் தெழும் அன்பும் எல்லா வுயிர்பாலும் சென்று பரவித் தோயும் இயல்பிற்றுகலின், "விரவும் அன்பு" என விளக்குகின்றார். வேண்டா வழியும் வற்புறுத்தியது புலப்பட "வலியவும் என் கரத்தே அளித்த" எனவும், உயர் மொழி புகன்று நல்குதல் விளங்க, "வியந்து" எனவும் விளம்புகின்றார். கருணைச் செயலின் சிறப்புத் தோன்ற "விளக்கம்" எனக் கூறுகிறார். உரவு மலர், இதழ் விரிந்த மலர். விரிந்த கடலை "உரவு நீர்" (குறுந். 397) என்பது போல. விரிந்த மலர் உரவு மலர் எனப்படுகிறது. இரவு நிறம், இருள் நிறம், இராவணன் என அரக்கர் பெயர் பெறுதல் காண்க. அரக்கர், கரிய மேனியும் இரக்க மில்லாத மனமுமுடையவர் என்பராதலின், "இரவு நிறத்தவர்" எனக் கூறுகின்றார். (7)

3187. ஐயாநின் அருட்பெருமை அருமைஒன்றும் அறியேன்
அறியாதே மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து
மெய்யாஅன் றெனைஅழைத்து வலியவுமென் கரத்தே
வியந்தளித்த பெருங்கருணை விளக்கம்என்றன் மனமும்
கையாது கண்களும்விட் டகலாதே இன்னும்
காண்கின்ற தாயினும்என் கருத்துருகக் காணேன்
எய்யாவன் பரலும்இதற் குருகல்அரி தலவே
இனித்தடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே.

உரை : இன்பம் விளைவிக்கும் திருக்கூத்தாடும் திருவம்பலத்தின் கண் தனி நின்றருளும் சிவக் கொழுந்தாகிய ஐயனே, நினது திருவருளின் பெருமையையும் அருமையையும் யான் சிறிதும் அறியேன்; அறியாமையால் திருவருள் மறுத்த பிழைகள் யாவையும் பொறுத்தருளி அன்று மெய் பெறத் தோன்றி என்னைத் தம் பக்கல் அழைத்து ஏற்குமாறு வற்புறுத்திப் பேசித் தந்த நின் கருணைத் திறம், என்னுடைய மனத்தினும் கண்களினும் வெறுப்புற்று நீங்கி மறையாமல் இன்னமும் காண நிற்கிற தாகவும், என் மனம் அதனை நினைந்து உருகுகிற தில்லை; தளராத வலிய பரற் கல்லும் இதன் பொருட்டு உருகுதல் அரிதன்று; யான் என்செய்வேன். எ.று.

கொடைப் பொருளைத் தீது கண்டு மறுத்தலைச் செய்யாமல், ஒன்றும் நோக்காமல் மறுத்தது குற்றமாகலின், "அறியாதே மறுத்த பிழை" எனவும், அவை தாமும் பலவாதலின், "அத்தனையும்" எனவும் கூறுகின்றார். மெய்யுருவில் தோன்றினமை பற்றி, "மெய்யா" என்கிறார்.

தானே யுவந்து வலியப் போந்து கையைப் பற்றிக் கொடுத்தமையால், "வலியவும் என் கரத்தே இனிதளித்த கருணை விளக்கம்" எனப் பாராட்டு கின்றார். இச்செயல் வகையால் கருணைத் திறம் விளங்கித் தோன்றுவது கொண்டு "விளக்கம்" என்று உரைக்கின்றார். கைத்தல், ஈண்டு வெறுத்தல் மேற்று. காட்சி கண்கட்கே யன்றி மனத்துக்கும் உரிய தாகலின், "காண்கின்றது" எனக் குறிக்கின்றார். கருத்து, மனம். சிறிதும் உருகாமை பற்றி, "உருகக் காணேன்" என்று சொல்லுகின்றார். எய்த்தல்-தளர்தல். எத்துணைக் காலம் வெயிலிலும் பனியிலும் கிடப்பினும் பரற்கல் உருகுவ தின்மையால் "எய்யா வன்பரல்" என இயம்பு கின்றார். (8)

3183. அப்பாநின் திருவருட்பேர் அமுதருமை அறியேன்
அன்றிரவின் மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து
இப்பாரில் எனை அழைத்து வலியவும்என் கரத்தே
இனிதளித்த பெருங்கருணை இன்பமென்றன் மனமும்
துப்பாய கண்களும்விட் டகலாதே இன்னும்
தோன்றுகின்ற தாயினும்இத் துட்டநெஞ்சம் உருகா
எப்பாவி நெஞ்சுமிதற் குருகல்அரி தலவே
இனித்தநடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே.

உரை : உயிர்களுக்கு இன்பம் விளைவிக்கும் திருக்கூத்தை அம்பலத் தின்கண் ஏற்றித் தனித்து நின்று ஓங்குகின்ற ஒப்பற்ற சிவக் கொழுந் தாகிய அப்பனே, உனது திருவருளாகிய பெரிய அமுதத்தின் அருமை பெருமைகளை அறியேனாதலால், அன்றொருநாள் இரவு எழுந்தருளிய போது மறுத்து ஒதுக்கிய என் பிழைகள் அத்தனையும் திருவுள்ளத்தில் கொள்ளாது பொறுத்தருளி இவ்விடத்தில் என்னை யழைத்து நலம் அறிவுறுத்தி என் கையில் விருப்புடன் அளித்தருளிய பெருங் கருணையால் பிறந்த இன்பம், என் மனத்திலும் நுகர் கருவிகளான கண்களிலும் விட்டு நீங்காமல் இப்பொழுதும் தோன்றுகின்றதாகவும் துட்டத் தன்மையை யுடைய என்னுடைய இந்த மனம் உருகுகிறதில்லை; என்னின் வேறுய் உள்ள எந்தப் பாவி நெஞ்சமும் இதற்கு எளிதில் உருகும் இயல்பினதாம். எ.று.

அமுதம் போல் அழியா நலம் செய்யும் தன்மை யுடையதாகலின் "திருவருட் பேரமுது" என்று சொல்லுகின்றார். அருமை, பிறர்க் கருந் தன்மை. முன்பு ஒருநாள் இரவு போந்து அருள் செய்த குறிப்பு அருள் பிரகாச மாலிபில் கூறுகின்றாராதலால், அதனை "அன்றிரவு" என்று சுட்டுகின்றார். பார் -ஈண்டு இடமென்னும் பொருள் குறித்து நின்றது. இன்முகமும் இன்சொல்லும் கொண்டு வழங்கினமைத் தோன்ற, "இனிதளித்த பெருங்கருணை" என இயம்புகிறார். கொடைப் பொருளின் விளைவு இன்பமாதல் பற்றி, "கருணை இன்பம்" என்று கூறு கின்றார். துப்பு-நுகர்தல். காட்சி இன்பம் நுகர்தற்குரிய கருவியாதலால் "துப்பாய கண்கள்" என்று சொல்லுகின்றார். நற்பண்பு இல்லாமை தோன்ற, "துட்ட நெஞ்சம்" என்று வைகின்றார். பாவத்தைச் செய்கின்ற நெஞ்சினைப் பாவி நெஞ்சம் என்கிறார். பாவத்தை யுடையது பாவி.

எத்தகைய பாவிகளின் நெஞ்சமும் நின் திருவருட்கு எளிதில் உருகும் என வற்புறுத்தற்கு "எப்பாவி நெஞ்சமும்" என்கின்றார். உம்மை தொக்கது. (9)

3189. அம்மான்நின் அருட்சத்தி அருமைஒன்றும் அறியேன்
அன்றிரவின் மறுத்தபிழை அத்தனையும் பொறுத்து
வெம்மாயை அகற்றிஎனை அருகழைத்தென் கரத்தே
மிகஅளித்த பெருங்கருணை விளக்கம்என்றன் மனமும்
மைம்மாழை விழிகளும்விட் டகலாதே இன்னும்
வதிகின்ற தாயினும்என் வஞ்சநெஞ்சம் உருகா
எம்மாய நெஞ்சும் இதற் குருகல்அரி தலவே
இனித்தாடம் புரிந்துமன்றில் தனித்தசிவக் கொழுந்தே.

உரை : உலகுயிர்கட்கு நலம் புரியும் திருக்கூத்தை அம்பலத்தின் கண் ஆடித் தனித்து நின்ற ஒங்குகின்ற சிவக் கொழுந்தாகிய பெருமானே, நின்னுடைய அருட் சக்தியின் அருமை சிறிதும் அறியேனு வேன்; ஆதலால், அன்றொருநாள் இரவில் என்பால் எழுந்தருளிய போது உனது அருளை ஏற்க மறுத்ததனால் உண்டாகிய பிழைகள் அத்தனையும் பொறுத்தருளி, என்னிற் படிந்திருந்த வெவ்விய மயக்கத்தைப் போக்கி என்னை அருகில் அழைத்து என் கையில் விருப்பத்துடன் அளித்த அன்பு செய்த உன்னுடைய பெரிய கருணையின் சிறப்பு என் மனத்தின் கண்ணும் மை தீட்டப் பெற்று நிறம் கரியவாகியமாவடு போன்ற கண்களி டத்தும் நீங்காமல் இப்பொழுதும் நிலவுகின்றதாகவும், வஞ்சம்பொருந்திய எனது நெஞ்சம் உருகுகிறதில்லை; எத்தகைய மாய நெஞ்சமும் இது குறித்து இரங்காது ஒழியாது. எ.று.

மான், பெரியவன். சிவசத்தி அருள் எனவும், அருட் சத்தி எனவும் வழங்குவது பற்றி "அருட் சத்தி" என்கின்றார். திருவருள் யாவராலும் எளிதில் பெறற்பால தன்மையின், "அருமையொன்றும் அறியேன்" என அறிவிக்கின்றார். மண்ணில் பிறந்தார்க்கு விலக்கரும் ஊரய் நிற்றலின் "வெம்மாயை" என்று விளம்புகின்றார். மிக்க அன்புடன் அருள் புரிந்த திறத்தை "மிக அளித்த" என அளித்த" என மொழிகின்றார். இது பெருந் தினை நங்கை ஒருத்தியின் கூற்றுதல் விளங்க "மைம்மாழை விழிகள்" என்று குறிக்கின்றார். வதிதல், தங்குதல். எல்லா நெஞ்சங்களும் என்பார், "எம்மாய நெஞ்சமும்" என்கிறார், மாயம் தோயாத நெஞ்சம் உலகில் இல்லை என்பதற்கு. (10)

திருச்சிற்றம்பலம்

6. சௌந்தர மாலை

அஃதாவது, தில்லையம்பலத்தில் காட்சி தந்து அருளும் சிவபெருமானுடைய திருவடி அழகு, அனுபவத்தைப் பொருளாகக் கொண்டு பாடித் தொடுத்த சொல்மாலை என்பதாம். இதன்கண், சிவத்தின் பேரழகை அனுபவித்த சிவத்தொண்டர், சிவயோகியர், பக்தர்கள், புண்ணியர், மெய்யன்பர், பழவடியார், மெய்ஞானிகள், ஏமசித்தர் ஆகியோர் பெற்ற சிவானுபவங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. அழகு என்னும் சொல் வடமொழியில் சுந்தரம் எனவும், சௌந்தரம் எனவும் வழங்கும் என அறிக.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3190. சேலோடும் இணைந்தவிழிச் செல்விபெருந் தேவி
சிவகாம வல்லியொடு சிவபோக வடிவாய்
மேலோடு கீழ்நடுவுங் கடந்தோங்கு வெளியில்
விளங்கியநின் திருஉருவை உளங்கொள்ளும்போ
தெல்லாம்
பாலோடு பழம்பிழிந்து தேன்கலந்து பாகும்
பசுநெய்யுங் கூட்டிஉண்ட படிஇருப்ப தென்ருல்
மாலோடு காண்கின்ற கண்களுக்கங் கிருந்த
வண்ணம்இந்த வண்ணம்என எண்ணவும் ஒண் ணுதே.

உரை : சேல்மீன் போன்ற கண்களையுடைய அருட் செல்வப் பெருந் தேவியாகிய சிவகாமவல்லியை ஒருகூருகக் கொண்ட சிவபோகத் திருமேனியாகிய மேல், கீழ் நடு என்ற பாகுபாடு இல்லாது ஓங்கும் பர வழியில் விளங்குகின்ற நின்னுடைய திருவுருவை மனக் கண்ணில் காணும்போதெல்லாம் பாலில் பழம் பிழிந்து தேனைக் கலந்து பாகும் பசு நெய்யும் கூட்டி உண்டது போல இன்பம் தருகிறது என்ருல், மாயா காரிய உலகியல் நல்கும் மயக்கத்தோடு காண்கின்ற கண்களுக்கு மனக் காட்சியிற் அழகின் இயல் இத்தகையது என எண்ண முடியாததாகும். எ.று.

சேல், மீன் வகையில் ஒன்று. மகளிர் கண்களுக்கு அதனை உவமம் செய்வது மரபாதலால், "சேலோடும் இணைந்த விழி" எனச் சிறப்பிக் கின்ருர். திருவருளே பொருளாக உடையவளாதலின், உமாதேவியைச் "செல்வி" என்கிருர். பெருந்தேவி, மனைவி. உமையோடு கூடிய திருவுருவம் சிவத்திற்குப் போக வடிவமானது ஆகையால், "சிவபோக வடிவாய்" எனத் தெரிவிக்கின்ருர். சிவஞானப் பர வழிக்கு மேல், கீழ், நடு என்கின்ற பாகுபாடில்லாமையால் அதனை "மேலோடும் கீழ் நடுவும் கடந்தோங்கு வெளி" என்று விளக்குகிருர். சிவனது போகத்திருவுருவை

மனத்தில் நினைக்கும் பொழுது எழுந்தருளுகின்ற திருவுருவம் காண்கின்ற சிந்தைக்குப் பேரின்பத்தை வழங்குதலால், அதனை உலகியல் பொருள் கொண்டு விளக்கம் செய்யலுற்ற வடலூர் வள்ளல் "பாலோடு பழம் பிழிந்து தேன் கலந்து பாகும் பசுநெய்யும் கூட்டி உண்டபடி இருப்பது" என வுரைக்கின்றார். தெளிந்த சிந்தையுடைய மேலோர்களின் மனக் கண் களுக்கு இத்தகைய காட்சியும் இன்பமும் அமைகிற தென்றால் உலகியல் மயக்கத்தின்கண் கொண்டு காணலுற்றால் காட்சி எல்லையைக் கடந்து போதலால் அவர்கட்கு அதனை உணர்ந்து கொள்ள இயலாது என்பாராய், "இருந்த வண்ணம் இந்த வண்ணம் என எண்ணவும் ஒண்ணாது" என்று கூறுகின்றார். எண்ணவும் என்பதனால் சொல்ல முடியாது என்பது தானே பெறப்படும். உலகம் மாயா காரியமாதலின் அதன்கண் வாழும் மக்களுயிர்க்கு மயக்கம் இயல்பாதலின், எதனையும் உலகப் பொருளோடு வைத்து நோக்குவது வாய்ப்பாதல் பற்றி, "மாலோடு காண்கின்ற கண்களுக்கு' என விதந்துரைக்கின்றார். "ஆணும் பெண்ணுமாய் அடியார்க்கு அருள் நல்கிச் சேணின்றவர்க் கெல்லாம் சிந்தை செயவல்லான்" என ஞானசம்பந்தர் கூறுவதும் இக் கருத்தே பற்றியதாகும்.

இதனால், சிவபெருமானுடைய சிவபோக உருவ நலம் உலகியல் கண் கொண்டு காண்பார்க்கு நினைக்க முடியாததன்று என்று தெரிவித்த வாரும். (1)

3191. இன்பருளும் பெருந்தாய்என் இதயத்தே இருந்தாள்
இறைவியொடும் அம்பலத்தே இலங்கியநின் வடிவை
வன்புறுகன் மனக்கொடியேன் நினைக்கும்இடத் தெல்லாம்
மனங்கரைந்து சுகமயமாய் வயங்கும்எனில் அந்தோ
அன்புடையார் நின்றுநின்று கண்டுகொண்ட காலம்
ஆங்கவர்கட் கிருந்தவண்ணம் ஈங்கெவர்கள் புகல்வார்
துன்புறுதல் இல்லாத சுத்தநிலை உடையார்
தொழுகின்ற தோறுமகிழ்ந் தெழுகின்ற துரையே.

உரை : துன்பத் தொடர்பற்ற, சுத்த நிலை பெற்ற பெரியோர்கள் தொழுது பரவுந்தோறும் உவகை மிகும் பெருமானே, இன்பமளிக்கும் பெருமை சான்ற தாயாகியவளும் என் மனத்தின் கண் எழுந்தருளுபவளு மாகிய இவ்விறைவியோடு அம்பலத்தின்கண் காட்சி தரும் நின்னுடைய அருள் வடிவத்தை வன்மை மிக்க கற்போன்ற மனத்தையுடைய கொடிய வனுகிய யான் நினைக்கும் போதெல்லாம் என் மனம் நீராய்க் கரைந்து இன்ப மயமாகி விளங்குகிற தென்றால், மெய்யன்புடைய திருத் தொண்டர்கள் நின் திருமுன் பன்முறையும் நின்று தம் கண்களாரக் கண்டு அருள் பெற்ற காலத்தில் அவர்கட்கு அருள் புரிய நீ வீற்றிருந்த திறத்தை இங்கே இப்போது எவர் தாம் எடுத்துரைக்க வல்லார். எ.று.

சுத்த மாயை, சுத்த தத்துவ மென்றாற் போலத் துன்பச் சூழலே யில்லாத தூய இன்ப நிலையைத் "துன்புறுதல் இல்லாத சுத்தநிலை" என்றும், கேவல சகலங்களின் நீங்கிய சிவானுபூதிச் செல்வர்களைச்

"சுத்தநிலை யுடையார்" என்றும் இயம்புகின்றார். அப்பெருமக்கள் தொழுது வணங்கிப் போற்றுவது சிவபெருமானுக்கும் பெருமகிழ்ச்சியாய் இருத்தலின், தொழுகின்ற தோறும் மகிழ்ந்தெழுகின்ற துரை" எனத் துதிக்கின்றார். உயிர்கள் விழையும் இன்ப நுகர்வுகளைத் தாயாய்த் தலை யளிக்கும் பெருமகளாதலின், திருவருட் சத்தியாகிய உமாதேவியை, "இன்பருளும் பெருந்தாய்" எனவும், அத்தாய் என் மனத்தின்கண் எழுந்தருளித் திருவருளின்பத்தை யான் நுகரத் தருகின்றாள் என்பாராய் "என் இதயத்தே யிருந்தாள்" எனவும் இயம்புகின்றார். இருக்கின்றவளை இருந்தாளென இறந்த காலத்தாற் கூறியது துணிவு பற்றியென அறிக. திருச்சிற்றம்பலத்தின்கண் உமையம்மை காணத் தனி நின்று ஆடுகின்ற சிவவுருவத்தை, "இறைவியொடும் அம்பலத்தே இலங்குகின்ற வடிவு" எனச் சிறப்பித்துரைக்கின்றார். வன்புறு கல், வன்மை மிக்கக் கருங்கல். கன்மனமுடைமையால் தம்மை, "கன்மனக் கொடியேன்" எனக் கூறு கின்றார். ஞானமேயாய சிவவடிவத்தை நினைக்கும்போது நெஞ்சம் கல்லாம் தன்மை கெட்டு நெக்குருகி ஆங்குச் சுரக்கும் சிவானந்தத்தில் தினைத்து இன்பமயமாதல் தோன்ற, "நினைக்குமிடத்தெல்லாம் மனம் கரைந்து சுகமாய் வயங்கும்" எனவுரைக்கின்றார். அன்புடையார் என்றது திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் என்ற நால்வரும் அவர்கட்கு முன்னும் பின்னும் நிலவிய பெரு மக்களை எனவுணர்க. கண்டு கொண்ட காலம், சிவத்தைக் கண்களாரக் கண்டு சிவபோகம் பெற்ற காலமாகும். அவர்களின் திருக்கண்கட்குக் காட்சி தந்து இன்புறுத்திய திருவுருவ நலம் இத்தகைய தென இப் போது இவ்விடத்து எவராலும் உரைத்தலரிது என்பாராய், "ஆங்கவர் கட்கு இருந்தவண்ணம் ஈங்கு எவர்கள் புகல்வார்" என விளம்புகின்றார்.

இதனால், அன்று அடியார்கள் கண்டு இன்புற்ற சிவக் கோலம் இன்று எவராலும் காணும் தரமுடைய தன்றெனத் தெரிவித்தவாறும். (2)

3192. சிவயோக சந்திதரும் தேவிஉல குடையாள்
சிவகாம வல்லியொடுஞ் செம்பொன்மணிப் பொதுவில்
நவயோக உருமுடிக்கண் விளங்கியநின் வடிவை
நாய்க்கடையேன் நான்நினைத்த நாள்எனக்கே மனமும்
பவயோக இந்தியமும் இன்பமய மான
படிஎன்றுல் மெய்யறிவிற் பழுத்தபெருங் குணத்துத்
தவயோகர் கண்டவிடத் தவர்க்கிருந்த வண்ணம்
தன்னைஇந்த வண்ணம்என என்னை உரைப்பதுவே.

உரை: சிவயோகங்களை முயல்பவர்க்கு அவ்யோகப் பயனைக் கட்டு விக்கும் தேவியும், உலகுகளை யுடைமையாக வுடையவளுமாகிய சிவகாம வல்லி யென்னும் உமாதேவியுடன் செம்பொன்னுல் வேயப்பட்ட மணி யொளிரும் அம்பலத்தின்கண் யோக வகையில் எய்தும் காட்சி முடிவில் விளங்குவதாகிய தின்னுடைய திருவுருவை நாயினும் கீழ்ப்பட்டயான்

நினைக்கிற போது எனக்கே மனமும் கண் முதலிய இந்திரியங்களும் இன்பமாகின்றன என்ருல், உண்மை ஞானமும் பெரிய நற்குணமும் கொண்ட தவயோகியர் காட்சிக்குத் தோன்றிய ஞானத் திருவுரு நலத்தை வாயால் உரைப்பது எவ்வாருகும். எ. று.

யோக முயற்சியையும் அதன் விளைவாகிய போகத்தையும் கூட்டு விக்கும் திருவருட் சத்தியாகலின், "சிவயோக சந்தி தரும் தேவி" என்று கூறுகின்ருர். போக நுகர்வு சந்தி எனப்படுகிறது. கூடுதலும் கூட்டு வித்தலும் சந்தியாகும். உலகனைத்தையும் பெற்றுடையவளாதல் பற்றி "உலகுடையாள்" என இயம்புகிருர். "கருதரிய கடலாடை யுலகு பல அண்டம் கருப்பமாய்ப் பெற்ற கன்னி" (தனிப்) எனத் துறைமங்கலம் சிவப்பிரகாசர் கூறுவது காண்க. சிவகாமவல்லி- தில்லைப் பதியில் உமா தேவிக்குப் பெயர். தில்லையம்பலம் பொற் சபையாதலால், "செம்பொன் மணிப் பொது" என்று செப்புகின்ருர். தவ வுருவினின்று செய்யும் யோகத்தின் முடிவில் காட்சிப்படும் சிவ சொரூபம், "தவயோக உருமுடிக் கண் விளங்கிய வடி" வெனப் பேசுகின்ருர். "பொறிப் புலன்களின் போக்கறுத் துள்ளத்தை நெறிப்படுத்தி நினைப்பவர் நெஞ்சுளே, அறிப்புறும் அமுதாயவன்" (ஏகம்) என நாவுக்கரசர் நவில்வது காண்க. தவயோகங்கள் விரதங்களால் உருப்படுதலின் "உரு முடிவில்" எனக் குறித்துரைக்கின்ருர். தவயோகியரின் பெருமையை நினைக்கத் தமது சிறுமை புலப்படக் காண்டலின், "நாய்க் கடையேன்" என இழிக்கின்ருர் நாயினும் கடையாயவன் என்றற்கு "நாய்க் கடையேன்" எனச் சொல்லு கிருர். பிறவிப் பிணிக்கு ஏதுவும் வாயிலுமாதலின் கண் முதலிய பொறி வாயில்களைப் "பவயோக இந்தியம்" என்கிருர். இந்திரியம், இந்திய மென வந்தது. "இந்தியப் போகில்" (ஞானு. 23) எனப் பெரியோர் வழங்குவர். படி-தன்மை. சிவஞான யோகிகட்கு உண்மை யுணர்வும் உயர் குணங்களும் இன்றியமையாவாகலின், "மெய்யறிவில் பழுத்த பெருங்குணத்துத் தவயோகர்" என்று உரைக்கின்ருர்.

இதனுல், சிவயோகியருடைய சிவானுபவம் தெரிவித்தவாரும். (3)

3193. சித்தியெலாம் அளித்தசிவ சத்திஎனையுடையாள்
சிவகாம வல்லியொடு சிவஞானப் பொதுவில்
முத்தியெலாந் தரவிளங்கும் முன்னவனின் வடிவை
மூடமனச் சிறியேன்நான் நாடவரும் பொழுது
புத்தியெலாம் ஒன்ருகிப் புத்தமுதம் உண்டாற்
போலும்இருப் பதுஅதற்கு மேலும்இருப் பதுவேல்
பத்திஎலாம் உடையவர்கள் காணுமிடத் திருக்கும்
படிதான்எப் படியோஇப் படிஎன்ப தரிதே.

உரை : எண் வகைச் சித்திகளையும் வல்லவர்களுக்கு அளித் தருளிய சிவசக்தியும், என்னை அடிமையாக வுடையவளுமாகிய சிவகாம வல்லி என்னும் பெயர் கொண்ட உமாதேவியோடு சிவஞானம் திகழ் கின்ற தில்லையம்பலத்தின்கண் முத்தி வகைகளை ஆன்மாக்களுக்குத் தருதல் பொருட்டுத் திருக்கூத்தாடி விளங்கும் முன்னவனே, நினது திரு

வுருவை, அறியாமை படிந்த மனத்தையுடைய சிறியவனுகிய நான் நினைக்க முற்படும் போது என்னுடைய மனம் புத்தி முதலிய காரணங்கள் எல்லாம் ஒன்றுய் புதியதொரு அமுதம் உண்டது போல் இருப்பதும் அதற்கு மேலும் களிப்பு மிக்கிருப்பதும் ஆகுமெனில் பத்திச் செல்வ மெல்லாம் உடைய பெருமக்கள் காணுமிடத்து இருக்கும் நிலைமைதான் எப்படி உளதாகுமோ? இப்படித்தான் என்று வரையறுத்துச் சொல்வது ஆகாததாம். எ. று.

அணிமா, மகிமா முதலிய சித்திகள் எட்டினையும் படைத்தளித்தது சிவசக்தி யாதலால், "சித்தியெலாம் அளித்த சிவசக்தி" என்று உரைக் கின்றர். உயிர்களுக்கு வேண்டுகின்ற உலகு, உடல், கருவி முதலிய வற்றை அளித்து அடிமை கொண்டவளாதலால், உமாதேவியை "எனை யுடையாள்" என்று புகழ்கின்றர் திலையம்பலம் ஞானுகாச மெனப் படுவ துண்மையின், "சிவஞானப் பொது" என்று புகல்கின்றர். பரம், அபரம் எனவும், பரம் பதம் எனவும் முத்தி வகைகள் பல வுண்மை பற்றி "முத்தி யெலாம்" என மொழிகின்றர். மூட மனம்- அறியாமை நிறைந்த மனம். நாட வரும் பொழுது- எண்ணும் போது, புத்தமுதம்- புதுமையான அமுதம். அமுதம் உண்ட வழிப் பிறக்கும் இன்பத்திலும் மிக மேலான இன்பம் உளதாகலின், அமுதம் உண்டாற் போலும் இருப்ப தென்பவர் அதற்கு மேலும் இருப்ப தென இசைகின்றர். பத்தி உடையவருக்கு இருக்கின்ற நலம் அத்தனையும் ஒருங்கே பெற்று விளங்கிய மாணிக்க வாசகர் போன்ற பெருமக்களை மனதிற் கொண்டு "பத்தியெலாம் உடையவர்கள்" என்று கூறுகின்றர். பத்திச் செல்வர்கள் கண்டு பெறும் இன்பத்தை மாணிக்கவாசகர், "வற்றுதலும் உற்றுதலும் இல்லாத ஆனந்த வெள்ளம்" என்பது ஈண்டு நினைவு கூறத்தக்கது. புத்தி யெலாம் ஒன்றுதலாவது, கரணங்கள் நான்கும் சிந்தையேயாதல்,

இதனுல், பத்திமான்கள் பெறும் இன்ப வனுபவம் தெரிவித்தவாரும். (4)

3194. தெய்வமெலாம் வணங்குகின்ற தேவிஎனை அளித்தாள்
சிவகாம வல்லியொடு திருமலிஅம் பலத்தே
சைவமெலாந் தழைவளங்கு நின்வடிவைக் கொடியேன்
தான்நினைத்த போதெனையே நான்நினைத்த தில்லையேல்
ஐவகைஇந் தியங்கடந்தார் கண்டவிடத் திருந்த
அனுபவத்தின் வண்ணமதை யார்புகல வல்லார்
உய்வகைஅந்நாள்உரைத்த தன்றியும்இந் நாளில்
உந்திரவில் வந்துணர்வு தந்தசிவ குருவே.

உரை : யான் உய்யும் பொருட்டு முன்பொருநாள் வாயால் அறிவுறுத்தியதேயன்றி இந்நாள் முற்படத் தோன்றிய இரவில் என் முன் போந்து, மெய்யுணர்வு தந்த சிவ குருபரனே, தெய்வங்க ளெல்லாம் வாழ்த்தி வணங்குகின்ற தேவியும் என்னை உலகில் பிறப்பித்தவளுமாகிய சிவகாமவல்லி யென்ற உமாதேவியோடு செல்வ வளம் மிக்க தில்லை யம்பலத்தின்கண் சைவ சமய வகைகள் தழைக்க விளங்குகின்ற நின் திருவுருவைக் கொடுமை யுடையவனுகிய என்னுடைய மனத்தில்

நினைந்து நோக்கிய பொழுது என்னையே மறந்து ஒழிந்தேனுதலால், பொறி ஐந்தையு மறுத்த பெரியோர் கண்டவிடத்து உண்டாகிய இன்பானுபூதியின் இயல்பை யாவர் எடுத்துச் சொல்ல வல்லவராவர். எ. று.

முன்பொருநாள் மக்களினத்துச் சான்றோர் ஒருவர் திருமேனி கொண்டு வந்து சைவ உண்மைகளை உரைத்ததோடு பின்பொருநாள் இரவுப் போதில் எழுந்தருளிச் சிவஞானத்தைச் சிவபெருமான் உரைத் தருளிய வரலாறு நினைப்பிக்கின்றாராதலால், உய்வகை அந்நாள்உரைத்த தன்றியும், இந்நாளில் உந்திரவில் வந்து உணர்வு தந்த சிவகுருவே" என்று தெரிவிக்கின்றார். உய்வகை என்பதனால் முன்னுள் உரைத்தது சைவ நீதி பற்றிய தென்றும், இந்நாளில் உணர்வு தந்த என்பதனால் இந் நாள் உரைத்தது சைவ ஞானம் என்றும் பெறப்படுகின்றது. பகற்கு முந்துதலால், இரவு "உந்திரவு" எனப்படுகிறது. வேத முதலாக வந்த இதிகாச புராணங்கள் எண்ணிறந்த தெய்வங்களை எடுத்தோதுவதால், "தெய்வமெலாம்" எனக் கூறுகின்றார். அறிவு செயலாற்றலைத் தந்தமை பற்றி, உமாதேவியை "எனை அளித்தாள்" என்கிறார். அருட் செல்வமும் பொருட் செல்வமும் மிக்குள்ளமையால் "திருமலி யம்பலம்" என்று சிறப்பிக்கின்றார். பாசுபதம், மாவிரதம், காபாலம் முதலாகவும், பாடாண வாத சைவம், சிவ சமவாத சைவம் முதலாக வுள்ள சமயம், அகம் புறம் என இரண்டாய்ப் பிரிந்து பன்னிரண்டாய் விரிதலின் "சைவ மெலாம்" எனக் குறிக்கின்றார். மெய், வாய் முதலிய பொறிகளைந்தினையும் "ஐவகை இந்தியம்" எனக் குறிக்கின்றார். கடத்தல் என்பது ஈண்டு ஐம்பொறி களையும் வென்று உயர்தல்.

இதனால், பொறி வாயில் ஐந்தவித்த புண்ணியர்களின் சிவானுபூதியைத் தெரிவித்தவாறும். (5)

3195. தேன்மொழிப்பெண் ணரசிஅருட் செல்வம்எனக் களித்தாள்
சிவகாம வல்லியொடு செம்பொன்மணிப் பொதுவில்
வான்மொழிய நின்றிலங்கு நின்வடிவைச் சிறியேன்
மனங்கொண்ட காலத்தே வாய்த்தஅனு பவத்தை
நான்மொழிய முடியாதேல் அன்பர்கண்ட காலம்
நண்ணியமெய் வண்ணமதை எண்ணிஎவர் புகல்வார்
நூன்மொழிக்கும் பொருட்கும்மிக நுண்ணியதாய் ஞான
நோக்குடையார் நோக்கினிலே நோக்கியமெய்ப் பொருளே

உரை : நூல்களில் வழங்கும் சொல்லுக்கும் பொருளுக்கும் அகப்படாத நுண்ணிதாய் ஞான நாட்ட முடைய பெருமக்களின் நோக்கின்கண் காணப்படுவதாய் உள்ள மெய்ப்பொருளாகிய சிவபரம்பொருளே, தேன் இனினிமையுடைய சொற்களைப் பேசும் பெண்ணினத்திற்குத் தனியரசியா கியவளும் திருவருளாகிய செல்வத்தை எனக்கு அளித்தவளுமாகிய சிவகாமவல்லி யோடு செம்பொன் வேய்ந்த அழகிய அம்பலத்தின்கண் வானோர் புகழ நின்று விளங்குகின்ற நின்னுடைய திருவடிவை அறிவால்

சிறியவனுகியயான் மனத்தின்கண் எண்ணிய காலத்து எனக்குளதாகிய அனுபவத்தை நான் எடுத்தோத முடியாததாயினும் மெய்யன்பர்கள் கண்ட காலத்தில் எய்திய உண்மை அனுபூதியை நீனைந்து எவர்தான் எடுத்துரைப்பார். எ.று.

உலக வழக்கினும் நூல் வழக்கில் நிலவும் சொற்களும் பொருட்களும் நுண்ணியவாதலின், நன்மொழிக்கும் பொருட்கும் மிக நுண்ணியதாய் எனவும், ஞான நாட்டமுடைய பெரியோர்களின் ஞானக் கண்ணுக்குப் புலனுகி இன்பமளித்த பரசிவமாதலின், "ஞான நோக்குடையார் நோக்கினிலே நோக்கிய மெய்ப் பொருளே" எனவும் இயம்புகின்ருர். செவிக்கு இன்பம் நல்கும் மொழியைத் தேன்மொழி என்னும் வழக்குப் பற்றிச் சொல்லே எடுத்துரைக்கும் மங்கையர் அரசியாகிய உமாதேவியைத் "தேன் மொழிப் பெண்ணரசி" என்றும், தன் திருவருளாகிய செல்வத்தைத் தன்னே வணங்கிப் பரவுவார்க்குப் பெருக நல்கும் பெருமாட்டி யென்றற்கு "அருட் செல்வம் எனக்களித்தாள்" என்றும் உரைக்கின்ருர். செம்பொன் வேய்ந்து பல்வகை மணிகளால் அழகு செய்யப் பெற்ற அம்பலமாதலின் "செம்பொன்மணிப் பொது" என்று சிறப்பிக்கின்ருர். வான் - வானுலகத்துத் தேவர்கள். தில்லேயம்பலத்தில் நின்ருடும் சிவத்தின் திருவுருவை மண்ணுலக மக்களோடு வானுலகத் தேவர்களும் உடனிருந்து வழிபடுவது விளங்க, "வான்மொழிய நின்றிலங்கு நின் வடிவை" எனவும், அறிவால் சிறியவனுகிய நான், என் சிறுமைக் கொத்த அளவில் மனக் கண்ணில் கண்டு பெற்ற சிவானுபவம் என் சொல்லளவிற் றன்று என்பாராய், "சிறியேன் மனங்கொண்ட காலத்தே வாய்த்த அனுபவத்தை நான் மொழிய முடியாது" எனவும், முன்னேராகிய மெய்யன்புடைய தொண்டர்கள் கண்டு அனுபவித்தது மெய்ம்மை எனினும் அதனே இப்பொழுது நீனைந்து சொல்லும் திறமுடையார் உலகில் எவருமில்லே என்பாராய், "அன்பர் கண்ட காலம் நண்ணிய மெய்வண்ணமதை எண்ணி எவர் புகல்வார்" எனவும் எடுத்துரைக்கின்ருர்.

இதனுல், மெய்யன்பர்கள் கண்ட சிவானுபவம் எடுத்தோதியவாரும். (6)

3196. சிற்றிடைஎம் பெருமாட்டி தேவர்தொழும் பதத்தாள்
சிவகாம வல்லியொடு சிறந்தமணிப் பொதுவில்
உற்றிடைநின் றிலங்குகின்ற நின்வடிவைக் கொடியேன்
உன்னுதொறும் உளம்இளகித் தளதளஎன் றுருகி
மற்றிடையில் வலியாமல் ஆடுகின்ற தென்ருல்
வழியடியர் விழிகளினுல் மகிழ்ந்துகண்ட காலம்
பற்றிடையா தாங்கவர்கட் கிருந்தவண்ணந் தனேயார்
பகர்வாரே பகர்வாரேல் பகவன்நிகர் வாரே.

உரை : சிறிதாகிய இடையையுடைய பெருமாட்டியும், தேவர்கள் போற்றித் தொழும் திருவடிகளே யுடையவளுமாகிய சிவகாமவல்லியுடன்

சிறந்த மணியிழைத்த பொன்னம்பலத்தின்கண் மேவி நின்று விளங்குகின்ற திருவுருவத்தைக் கொடியவனுகிய யான் நிணைக்குந்தோறும் நெஞ்சம் நெகிழ்ந்து தளதள வென்று உருகி, இடையில் உறைதலின்றி அசைகின்றதாக, வழி வழியாக வந்த மெய்யடியவர் தம் கண்களாற் கண்டு பரவிய காலத்தில் அன்பு குறையாமல் அவர்கள் கண்டு இன்புற்ற அழகு நலத்தை யாவர் அறிந்து புகல்வார்கள்; சொல்லுவார் உளராயின் தேவ தேவணையொப்பர். எ.று.

உயர்நிலே இளமகளிர்க்கு இடை சிறுத்திருப்பது பேரழகு தருதலால், "சிற்றிடை எம்பெருமாட்டி" எனப் போற்றுகின்ருர். தேவர் கோ அறியாத தேவதேவனுக்கு மணவியாய் அவனது பராசத்தியாகலின், "தேவர் தொழும் பதத்தாள்" என்று துதிக்கின்ருர். தில்லேயம்பலத்தைச் சிறப்பித்து அதன்கண் நின்று வழங்கும் இனிய காட்சியைப் புகல்கின்ருராதலால், "மணிப் பொதுவில் உற்று இடை நின்று இலங்குகின்ற திருவடிவு" எனக் கூறுகின்ருர். நேரியமுறையிலன்றித் தேவருலகிலும் மண்ணுலகிலும் இரண்டிலும் நிலவும் நலம் தீங்குகளிலும் தடுமாறும் நிணவுகளே நிணந் தொழுகுதலால், தம்மைக் "கொடியேன்" என்று குறிக்கின்ருர். கொடியவனுகிய எனக்கு நினது திருவடிவ இன்ப நிணவால் நெஞ்சம் குழைந்து நீராய் உருகித் தளதள வென்றமைகிறது என்பாராய், "உன்னுதொறும் உளம் இளகித் தளதள வென்றுருகி மற்றிடையில் வலியாமல் ஆடுகின்றது" என உரைக்கின்ருர். உன்னுதல் - நிணத்தல். இவ்வுலகத்து இளகியுருகும் நெய் முதலியன பின்னர் உறைந்து இறுகுவது போலின்றி உருகிய வண்ணமே நிலேபெறுகிற தென்றற்கு "இடையில் வலியாமல் ஆடுகின்றது" எனக் கூறுகின்ருர். வழியடியார் - வழி வழியாக ஆட்பட்டொழுகும் தொண்டர்கள். கொடியனுகிய எனக்கே மனமுருகிக் குழைகிற தெனின், மெய்யன்பராகிய வழியடியார்க்கு இன்னதாம் என்று சொல்லற் கரிதாம் என்பாராய், "பற்று இடையாது ஆங்கவர்கட் கிருந்தவண்ணம் தணயார் யார் பகர்வார்" எனக் கூறுகின்ருர். இடைதல் - குறைதல். பழமை வலிமையைக் குறைக்குமென்பவாகலின், "பற்று இடையாது" எனப் பகர்கின்ருர். தேவதேவனெருவர்க்கே அதணையுரைத்தல் கூடும் என்றற்கும் "பகர்வாரேல் பகவன் நிகர்வார்" என மொழிகின்ருர். பகவன் - தேவாதி தேவன்.

இதனுல், பழவடியார்களின் சிவானுபவம் தெரிவித்தவாரும். (7)

3197. ஆரமுதம் அணையவள்என் அம்மைஅபி ராமி
ஆனந்த வல்லியொடும் அம்பலத்தே விளங்கும்
பேரமுத மயமாம்உன் திருவடிவைக் குறித்துப்
பேசுகின்ற போதுமணம் வீசுகின்ற தொன்ரே
சீரமுத மாகிஎல்லாந் தித்திப்ப தன்போர்
சிறிதுமிலாக் கடைப்புலேயேன் திறத்துக்கிங் கென்ரூல்
ஊரமுதப் பேரன்பர் பேசுமிடத் துவர்பால்
உற்றவண்ணம் இற்றிதென்ன உன்னமுடி யாதே.

உரை : பெறற்கரிய அமுதம் போன்றவளும், எனக்கு அன்னையும் அபிராமியுமாகிய ஆனந்தவல்லி என்னும் உமாதேவியுடன் தில்லையம் பலத்தின்கண் விளங்கும் பெரிய அமுதமயமான உனது திருவுருவைக் குறித்துப் பேசுகின்ற போது அன்பு சிறிதும் இன்றிக் கடைப்பட்ட கீழ் மகனுகிய எனக்கு, சிவமணம் கமழ்வதே யன்றிச் சிறந்த தேவாமுதமாய் யாவும் இனிக்கின்றன வென்றுல், ஊரின்கண் வாழும் பெரிய அமுது போன்ற மெய்யன்பர்கட்கு உளதாகிய இன்பம் இத்தன்மையது என்று நினைக்க முடியாதன்றே? எ.று.

கடைந்த வழிப் பெறற்குரிய கடலமுதம் போலாத அருமை தோன்ற, "ஆரமுதம் அனையாள்" என வுரைக்கின்றுர். அபிராமி- அழகி. இன்பக் கொடி போல்பவளை "ஆனந்தவல்லி" என்பர். மணம் என்றது ஈண்டு சிவமணம் குறித்தது. கருவி கரணங்கள் யாவும் என்றற்கு "யாவும்" என்று கூறுகிறுர். கடையவனுகிய புலையன்; கடைப் புலையன் என வந்தது. செவிக்குச் சுவை நல்கும் இனிய பெயர்களைப் பூண்டு எங்கும் பரந்து வாழும் மெய்யன்பர் கூட்டத்தை "ஊரமுதப் பேரன்பர்" என்று இசைக்கின்றுர். இற்று, இத்தன்மைத்து.

இதனுல், ஊர்தொறும் வாழும் மெய்யன்பர் பெற்ற சிவானுபவம் கூறியவாறும். (8)

3198. பொற்பதத்தாள் என்னளவிற் பொன்னுசை தவிர்த்தாள்
பூரணிஆ னந்தசிவ போகவல்லி யோடு
சொற்பதமுங் கடந்தமன்றில் விளங்கியநின் வடிவைத்
தூய்மையிலேன் நான்எண்ணிந் தோறும்மனம் இளகிச்
சிற்பதத்திற் பரஞான மயமாகும் என்றுல்
தெளிவுடையார் காண்கின்ற திறத்தில்அவர்க் கிருக்கும்
நற்பதம்எத் தன்மையைதோ உரைப்பரிது மிகவும்
நாதமுடி தனிற்புரியும் ஞானநடத் தரசே.

உரை : நாத தத்துவத்தின் உச்சியில் நின்று செய்கின்ற ஞானத் திருக்கூத்தையுடைய அருளரசே, அழகிய திருவடியை யுடையவளும், என் அளவில் பொன்னுசையைப் போக்கினவளும், குறைவிலா நிறை வானவளும் ஆகிய ஆனந்தம் நல்கும் சிவபோக வல்லியாகிய உமாதேவி யோடு சொல்லுதற் கரிய எல்லையைக் கடந்த தில்லையம்பலத்தின்கண் விளங்குகின்ற நின் திருவுருவைத் தூய்மை யில்லாத யான் நினைக்கும் தோறும் என் நெஞ்சமே யுருகி உலகியல் ஞான வகை பலவற்றிற்கும் மேலாய பரஞான மயமாகிற தென்றுல், தெளிந்த சிந்தையுடன் காண்கின்ற சிவஞானிகளிடத்தில் அவர்க்குண்டாகும் இன்ப நன்னிலை எத்தகைய தாகுமோ; எம்மனேரால் மிகவும் உரைக்க முடியாதது. எ.று.

பொற்பதம் என்றவிடத்துப் பொன் அழகின் மேற்று. மண் பெண் என்ற ஆசை யிரண்டினும் பொன்னுசை மிக்கதாகலின், அதனை விதந்து ஓதுகிறுர். சிவபோக வல்லி, சிவத்துக்குப் போகம் நல்குபவள். இது

சிவயோகத்தால் பெறலாவது. சொற் பதம் - சொல்லெல்லை. சிற்பதம் - ஞான நிலை; உலகியல் அறிவு நிலையுமாம். சிவ பரம்பொருளே அல்லது பிறவற்றை நினையாத தன்மையதாவது சிவஞான மயம் என்று சொல்கிறார். தெளிவுடையார் - தெளிந்த மெய்ஞ்ஞானிகள். சிவ சொரூப தரிசனத்தின்கண் மெய்ஞ்ஞானிகளின் உள்ளத்தில் நிறையும் இன்ப நிலை நற்பதம் எனப்படுகிறது.

இதனால், மெய்ஞ்ஞானிகள் பெறும் சிவானுபவம் தெரிவித்தவாறும். (9)

3199. என்பிழையா வையும்பொறுத்தாள் என்னை முன்னே அளித்தாள்
இறைவிசிவ காமவல்லி என்னம்மை யுடனே
இன்பவடி வாய்ப்பொதுவில் இலங்கியநின் வண்ணம்
இற்றெனநான் நினைத்திடுங்கால் எற்றெனவும்
மொழிவேன்
அன்புருவாய் அதுஅதுவாய் அளிந்தபழம் ஆகி
அப்பழச்சா ருகிஅதன் அருஞ்சுவையும் ஆகி
என்புருக மனஞான மயமாகும் என்றால்
எற்றேமெய் அன்புடையார் இயைந்துகண்ட இடத்தே.

உரை : என்னுடைய பிழைகள் யாவையும் பொறுத் தருளிய வளும், என்னை முன்னே ஆதரித் தருளியவளுமான இறைவியாகிய சிவகாமவல்லி யெனப்படும் என் தாயுடன் இன்ப வடிவாய் தில்லையம் பலத்தின்கண் விளங்குகின்ற திருக்காட்சி இத்தன்மையது என யான் நினைக்கும்போது எத்தன்மையது எனச் சொல்லுவேன்; அன்புருவாய், அதுவதுவாய், அளிந்த பழமாய், அப்பழத்தின் சாருய், அதன் அரிய சுவையாய், என்பெலாம் உருக நிலவும் மனம் ஞான மயமாகிற தென்றால், மெய்யன்புடைய சான்றோர் உள்ளம் கலந்து காணுமிடத்து எத்தன்மைய தாம். எ.று.

பிழை பொறுத்தலும் அன்பால் ஆதரித்தலும் தாய்மையின் செயலா தலின், உமாதேவியை "என் பிழை யாவும் பொறுத்தாள், என்னை முன்னே ஆதரித்தாள்" என மொழிகின்றார். கேவலத்திற் கிடந்த போது அருள் கூர்ந்து உடல், கருவி முதலியவற்றை அளித்து உலகில் பிறப்பித்தமை புலப்பட, "முன்னே அளித்தாள்" என வுரைக்கின்றார் என்பதும் ஒன்று. தில்லையம்பலத்தில் காட்சி தந்த சிவக்கோலம் இன்ப வடிவினது என்றற்கு "இன்ப வடிவாய்ப் பொதுவில் இலங்கிய நின் வண்ணம்" என்று கூறுகின்றார். அளிந்த பழம் - முற்றக் கனிந்த பழம். புறத்தே எலும்பும் அகத்தே மனமும் இருப்பது பற்றி, "மனம் என்புருக" என்று உரைக்கின்றார். நினைக்கின்ற என் மனமே நின் திருவருட் காட்சியால் ஞான மயமாகுமெனின் மெய்யன்புடைய ஞானிகளின் மனம் என்னுகு மென்று வியப்பது தோன்ற, "மெய்யன்புடையார் இயைந்து கண்ட இடத்தே எற்றே" என இயம்புகின்றார்.

இதனால், மெய்யன்புடையார் பெற்ற சிவானுபவம் விளம்பியவாறும். (10)

3200. கரும்பனையாள் என்னிரண்டு கண்களிலே இருந்தாள்
கற்பகப்பொன் வல்லிசிவ காமவல்லி யுடனே
விரும்புமணிப் பொதுவினிலே விளங்கியநின் வடிவை
வினையுடையேன் நினைக்கின்ற வேளையில்என் புகல்வேன்
இரும்பனைய மனம்நெகிழ்ந்து நெகிழ்ந்துருகி ஒருபேர்
இன்பமய மாகும்எனில் அன்பர்கண்ட காலம்
அரும்பிமலர்ந் திட்டசிவா னந்தஅனு பவத்தை
யாரறிவார் நீஅறிவாய் அம்பலத்தெம் அரசே.

உரை : அம்பலத்தின்கண் ஆடுகின்ற அருளரசே, கரும்பு போன்ற இனிய பண்பை யுடையவளும், எனது இரண்டு கண்களிலே இருப்பவளும், கற்பக நாட்டுப் பொற்கொடி போன்ற சிவகாமவல்லி யாகிய உமாதேவியுடன் கண்டார் விரும்புகின்ற மணிகள் இழைத்த பொன்னம்பலத்திலே விளங்கித் தோன்றுகின்ற நின்னுடைய திருவடியை வினைப்பிணிப்பையுடைய யான் நினைக்கின்ற போது என்ன சொல்வேன்? இரும்பு போன்ற என் மனம் மிகவும் நெகிழ்ந்து நீராய் உருகி ஒப்பற்ற பெரிய இன்ப மயமாய் ஆகிறதென்றாலும், மாணிக்கவாசகர் முதலிய அன்பர்கள் கண்ட காலத்தில் அவர்களிடத்துத் தோன்றி விரிந்த சிவானந்த அனுபூதியை யாவரால் அறிய முடியும்; நீதான் நன்கு அறிவாய். எ.று.

அம்பலத்தில் ஆடுபவனையினும் உயிர்த் தொகைகட்கு அருளரசு புரிபவனுதலால் சிவபெருமானை, "அம்பலத்து எம்மரசே" எனப் போற்று கின்றார். கரும்பு போன்று இனிய அருட் பண்பு உடையவளாதலின், "கரும்பனையாள்" என்றும், கண்ணிடமாக இருந்து நிலம் கண்டு மகிழச் செய்கின்றாளாதலின், "என்னிரண்டு கண்களிலே இருந்தாள்" என்றும் உரைக்கின்றார். பொன்வல்லி - பொற் கொடி. கற்பக நாட்டுக் கற்பக மரத்தில் பின்னிக் கிடக்கும் பொற் கொடி போல்பவள் என்ற கருத்துத் தோன்ற, "கற்பகப் பொன்வல்லி" என்று இயம்புகின்றார். தில்லையம்பலத் தின் பொற்பு எத்திறத்தவரும் விரும்பத்தக்க நிலையில் இருப்பதால் "விரும்பு மணிப் பொது" என்று வியந்து கூறுகின்றார். மனதால் நினைத் தலும், வாயால் சொல்லுதலும், மெய்யால் செய்தலும் ஆகிய எல்லாவற்றா லும் வினைகளையே செய்து அவற்றால் பிணிப்புண்டு இருத்தலால் "வினை யுடையேன்" என்று வடலூர் வள்ளல் தம்மையே குறித்துப் பேசுகிறார். தில்லைக் கூத்தப் பெருமானைக் கண்டபோது இரும்பு போல் வலிதாய் இருந்த நெஞ்சம் அன்பால் நெகிழ்ந்து நெகிழ்ந்துருகி இன்பமுற்று இன்ப மயமே ஆயிற்று என்பாராய், "இரும்பனைய மனம் நெகிழ்ந்து நெகிழ்ந் துருகி ஓர் பேரின்ப மயமாகும்" என இசைக்கின்றார். உருகாமல் வலிதாக இருந்த நெஞ்சம் மென்மையுற்று உருகினமை காணப் பிறந்த வியப்பைப் புலப்படுத்தற்கு "என் புகல்வேன்" என இயம்புகிறார். அன்பர் என்றது மாணிக்கவாசகர் முதலிய முன்னோர்களை. மணிவாசகர் முதலிய பெருமக்கள் கண்டு களித்தபோது அவர்கள் உள்ளத்தில் எழுந்து மலர்ந்த சிவானந்தத்தை, சிவனையன்றிப் பிறரறிய மாட்டாமை யுணர்த்து தற்கு "அரும்பி மலர்ந்திட்ட சிவானந்த அனுபவத்தை யாரறிவார்; நீ அறிவாய்" என வுரைக்கின்றார்.

இதனால், சிவானந்தம் அன்பர் உள்ளத்தில் அரும்பிப் பெருகும் திறம் கூறியவாறும்.

3201. காமசத்தி யுடன்களிக்குங் காலியிலே அடியேன்
கனஞான சத்தியையுங் கலந்துகொளப் புரிந்தாள்
வாமசத்தி சிவகாம வல்லியொடும் பொதுவில்
வயங்கியநின் திருவடியை மனங்கொளும்போ தெல்லாம்
ஆமசத்தன் எனும்எனக்கே ஆனந்த வெள்ளம்
அதுததும்பிப் பொங்கிவழிந் தாடும்எனில் அந்தோ
ஏமசத்தர் எனும்அறிஞர் கண்டவிடத் திருந்த
இன்பஅனு பவப்பெருமை யாவர்புகல் வாரே.

உரை : இச்சா சத்தி மேலிட்டு இருக்குங் காலத்திலும் அடியேனுடைய பெருமைக்குரிய ஞான சத்தியையும் எழுப்பிக் கலந்து நிலவ அருளுபவளும், சிவத்தின் இடப்பாக சத்தியுமாகிய சிவகாமவல்லி யென்னும் உமாதேவியுடன் தில்லையம்பலத்தில் விளங்குகின்ற உன்னுடைய திருவடியை மனத்தில் நினைக்கும் போதெல்லாம் போதிய வன்மை யில்லாதவனுகிய எனக்கு இன்பம், வெள்ளம் போல் பெருகித் ததும்பி என்னுள் பொங்கி வழிந்தோடும் என்றும், ஏமசத்தர் என்னும் பேரறிஞர் கண்டு களித்திருந்த போது அவர் பெற்ற இன்ப வனுபவத்தின் பெருமையை யாரே எடுத்துரைப்பார். எ.று.

சத்தாகிய உயிர்க்கும், இச்சை அறிவு தொழில் என மூவகை சத்திகள் உண்டெனினும் அவை மூன்றும் முக்குணங்கள் போல இடம் காலங் கட்கு ஏற்ப மிக்கும் குறைந்தும் இயங்குவனவாம். இச்சையாகிய சக்தி மேல் எழும்போது அறிவுச் சத்தியும் உடன் கலந்த வழி, நல்லவற்றின் நலங்கண்டு பேணும் நயப்பாடு திருவருளால் உயிர்கட்கு உண்டாகும். அத்திருவருள் வடிவாய்ச் சிவசத்தி இயக்குகிறது என்னும் சைவநூல் கொள்கை விளங்க "காமசத்தியுடன் களிக்குங் காலியிலே அடியேன் கனஞான சத்தியையும் கலந்து கொளப் புரிந்தாள்" என உரைக்கின்றார். இச்சையை விட ஞானம் சிறப்புடையதாதலின், "கன ஞானசத்தி" எனச் சிறப்பிக்கின்றார். சிவன் திருமேனியின் இடப்பாகத்து ஒருகூறாய் ஒன்றியிருத்தலின், உமாதேவியை "வாம சத்தி" என்று கூறுகின்றார். சிவகாமவல்லி என்று உமாதேவிக்கு ஒரு பெயர் தில்லைப் பெருமானுடைய திருவுருவை மனத்தில் நினைக்கும்போது உள்ளத்தில் எழும் சிவானுபவத்தை மனம் கொள்ளும் போதெல்லாம் எனக்கே ஆனந்த வெள்ளமுது ததும்பிப் பொங்கி வழிந்தோடும் என்று கூறுகின்றார். "ஆமசத்தன்" என்பதை அசத்தனும் என மாறுக. போதிய மனவன்மை யில்லாதவன் அசத்தன் எனப்படுவான். தமக்கேயன்றிப் பிறர்க்கும், பிற உயிர்கட்கும் உரிய உதவிக் காப்பளிப்பவர்களை "ஏமசத்தர்" என்பர். ஏமமாகும் சத்தியையுடையவர் ஏமசத்தர். ஏமம் - பாதுகாப்பு. உண்மை யறிவு ஆற்றல் உடைய நன்மக்கள் இத்தகைய ஏமசத்தராக விளங்குதலால், அவர்களை "ஏமசத்தர் எனும் அறிஞர்" என வுரைக்கின்றார். அவர்கள் பலரையும் திருத்தொண்டர் தொகை விரியுள் பரக்கக் காணலாம். அப்பெரு மக்கள் கண்ட சிவானுபவத்தை விளக்கலுற்ற வள்ளற் பெருமான் "ஏமசத்தர் எனும் அறிஞர் கண்டவிடத் திருந்த இன்ப வனுபவப் பெருமை யாவர் புகல்வாரே" என்று கூறுகின்றார்.

இதனுல், ஏமசத்தராகிய சைவ மெய்த்தொண்டர் பெற்ற சிவானுபவத்தைச் சிறப்பித்து உரைத்தவாறும். (12)

திருச்சிற்றம்பலம்

7. அதிசய மாலை

அஃதாவது, திருவருள் ஞானம் எய்தியது பற்றி இறைவனே வியந்து பாராட்டுகின்ற சொல் மாலை என்பதாம். இதன்கண், சிவபெருமான் திருவருள் ஞானம் வழங்கியதை நினைந்து இன்புற்று வியப்பு மேலிட்டு, பெருமானுடைய திருவருள் தமக்கு எய்தியது மிக்க அதிசயத்தைத் தருகிறது எனப் பாட்டுத் தோறும் எடுத்துரைக்கின்றார். திருவருளை, சோதி வண்ணப் பொருள் என்றும், சித்தி என்றும் பாராட்டுகின்றார். இத் திருவருளை வேண்டி மெய்யுணர்ந்தோர், ஐந்தவித்தோர், தாபதர், மெய்யன்பர். யோகியர், தவ யோகியர், சமாதி யோகியர், பாடும் தொண்டர் ஆகியோருடைய திருவருள் முயற்சிகளும், திருவருள் நலங்களும் இடையிடையே குறிக்கப் படுகின்றன. (1)

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3202. அக்கோஈ ததிசயம்ஈ தசிசயம்என் புகல்வேன்
அயன்முதலோர் நெடுங்காலம் மயன்முதல்நீத் திருந்து
மிக்கோல மிடவும் அவர்க் கருளாமல் இருளால்
மிகமருண்டு மதியிலியாய் வினைவிரிய விரித்து
இக்கோலத் துடனிருந்தேன் அன்பறியேன் சிறியேன்
எனைக்கருதி என்னிடத்தே எழுந்தருளி எனையும்
தக்கோன்என் றுலகிசைப்பத் தன்வணம்ஒன் றளித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே.

உரை : தனிச் சிறப்புடைய சிவகாமவல்லியாகிய உமாதேவி இன்புறும் திருக்கூத்தையாடும் சிவபெருமான், பிரமன் முதலிய தேவதேவர்கள் மயக்கம் முதலிய குற்றங்களைப் போக்கி நெடுங்காலம் தவமிருந்து ஒலமிட்டழைப்பவும், அவர்கட்கு விரைந்து அருள் புரியாமல் அறியாமையால் மனமருண்டு இயற்கையறிவுமின்றி வினைகளை மிகுவித்துப் பெருக்கி இப்போதுள்ள நிலையிலே இருந்தேனை, அன்பின் நயமறியாமல் சிறுமையுற்ற என்னையொரு பொருளாகக் கொண்டு என்பால் வந்து, இவ்வுலகத் தவர் மதிக்கத் தக்கவன் என்று பாராட்டத் தனக்குரிய நலமொன்றை அருளினான்; இஃதோர் பேரதிசயம் காண். எ. று.

அக்கோ, வியப்பு மிகுதி குறிக்கும் இடைச் சொற் குறிப்பு. என் புகல் வேன் - இதுவும் அதிசயம் புலப்படுத்தும் பொருளது. அயன் முதலோர் - பிரமன் திருமால் உருத்திரனுகிய தேவ தேவர்கள். காம வெகுளிகளின் அடியாகப் பிறக்கும் குற்றங்களின்பால் வினையும் மயக்கம். இது செயற்கையாதலின், "நீத்திருந்து" என்று கூறுகிறார். அருளிப் பாடும் செயப்படுவார் சால்பு நோக்கியதாகலின், "ஓலமிடவும் அருளாமல்" என

வுரைக்கின்றார். இருள் என்றது மலவிருளை; மனத் தொடர்பைச் சகச மலம் என்பர். "சகசமலத் துணராது" (சிவ. ஞா. போ.) என மெய்கண்டார் விளம்புவது காண்க. மலவிருளால் மறைப்புண்டலின், "மிக மருண்டு" என்றும், அதனால் அறிவொளி மழுங்குதல் பற்றி, "மிக மருண்டு மதியிலியாய்" என்றும், அதுவே வாயிலாக வினைகள் பெருகுவது கண்டு, "வினை விரிய விரித்து" என்றும் இயம்புகின்றார். அறிவு, மனம், மொழி, மெய் என்ற நான்காலும் வினைகள் தோன்றுதலால், "வினை விரிய விரித்து" எனக் கூறுகின்றார். கோலம் - படிவம். வினை செய்தற் கேற்ப அமையும் தோற்றம் என்றுமாம். இந்நிலையில் தம்முடைய உண்மைத் தன்மையை நோக்கி நிரம்பிய அன்பும் அறிவும் இல்லாமை யோர்ந்து "அன்பறியேன் சிறியேன்" என மொழிகின்றார். எனது இந்த எளிமை கண்டு இரக்கமுற்று என்பால் மக்களுருவில் தோன்றினன் என்பாராய், "என்னிடத்தே எழுந்தருளி" என்றும், எனக்குத் தன் நலமொன்றை நல்கி உலகத்தவர் திருவருள் நெறிக்குத் தக்கவன் எனப் பாராட்டுமாறு உயர்த்தியுள்ளான் என்பாராய், "எனையும் தக்கோனென்று உலகுரைப்பத் தன்வணம் ஒன்றளித்தான்" என்றும் தெரிவிக்கின்றார். நலம் - சிவக் கோலங்களி லொன்று.

இதனால், தமக்குச் சிவஞான மருளிச் சிவக்கோலம் ஒன்றை நல்கியது உரைத்தவாறும். (2)

3203. அச்சோ ஈ ததிசயம் ஈ ததிசயம்என் புகல்வேன்
அரிமுதலோர் நெடுங்காலம் புரிமுதல்நீத் திருந்து
நச்சோல மிடவும் அவர்க் கருளாமல் மருளால்
நாள்கழித்துக் கோள்கொழிக்கும் நடை நாயிற் கடையேன்
எச்சோடும் இழிவினுக்கொன் றில்லேன்நான் பொல்லேன்
எனைக்கருதி யானிருக்கும் இடத்திலெழுந் தருளித்
தச்சோதி வணப்பொருள்ஒன் றெனக்களித்துக் களித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே.

உரை : ஒப்பற்ற சிவகாமவல்லியாகிய உமாதேவியார் கண்டு மகிழும்படி நடம் புரிகின்ற பெருமான், திருமால் முதலிய தேவ தேவர்கள் ஆசை முதலியன நீக்கி நெடுங்காலம் பன்முறை ஓலமிடவும் அவர்களுக்கு உடன் அருளாமல், மனமருச்சியால் வீணுள் போக்கி வினைத் திரளை மிகுவித்து நடந்துழலும் நாயினும் கடைப்பட்டவனாகிய யான், கண்டார் இரங்கத்தக்க இழிவுற்றதன் பொருட்டுக் காப்பொன்று மில்லாத பொல்லாதவனாவேன் என நினைந்து, யான் இருக்குமிடத்திற்கு வந்தருளித் தனது ஒளி மயமான பொருளொன்றை எனக்கு நல்கி மகிழ்வித்தான்; இந்த மிக்க அதிசயத்தை யான் என்ன சொல்வேன். எ. று.

அச்சோ என்பது அதிசயக் குறிப்பு மொழி. புரிமுதல் - விரும்புதற்கு ஏதுவாகிய ஆசை. பன்னிப் பன்னி ஓலமிடுவதை "நச்சோலம்" என்கின்றார். மலமாயைகளால் மருட்சி உளதாகலின், "மருளால்" என மொழிகின்றார். கோள் - வினைப் பயன். "கொழிக்கும்" என்பதனால் மிகைபட ஏற்றுதல் பெற்றும். நடை நாய் - ஓடி அலைகின்ற நாய்களை வேறுபடுத்த

''நடை நாயிற் கடையேன்'' எனத் தம்மைத் தாமே பழிக்கின்றார். எச்சு - இகழ்தல்; இழிக்கத் தக்க செயல் கண்டவிடத்துக் காண்பார்க்கு உளதாகும் அருவருப்பு. உண்டாகும் இழிவைக் காத்துக் கொள்ளும் பாதுகாப்பு ஒன்றும் இல்லாமை புலப்படுத்தற்கு ''இழிவினுக் கொன்றில்லேன்'' எனவும், இல்லாமைக்குக் காரணம் தன்பாலுள்ள பொல்லாங்கு என்றற்கு ''நான் பொல்லேன்'' எனக் கூறுகின்றார். சிவபெருமான் தானே மக்களுருவில் வந்தருளினார் என்பாராய், ''யானிருக்கும் இடத்தில் எழுந்தருளி'' என்றும், ஒளியுடைய பொருளொன்றைத் தந்தமை பற்றித் ''தச்சோதி வணப்பொருள் ஒன்றெனக் களித்துக் களித்தான்'' என்றும் உரைக்கின்றார். தம் சோதி - தச் சோதி என எதுகை நோக்கி வந்தது. வணப் பொருள் ஒன்று எனக்கு ஈந்ததோடு அமையாது உவகையும் எய்தினன் என்பார், ''களித்தான்'' என எடுத்தோதுகின்றார்.

இதனால், தனது சோதி வண்ணப் பொருள் ஒன்றைக் கொடுத்து, மகிழ்ந்தது தெரிவித்தவாறும். (3)

3204. அத்தோ ததிசயம் ததிசயம்என் புகல்வேன்
அந்தணரெல் லாரும்மறை மந்தணமே புகன்று
ஒத்தோல மிடவும் அவர்க் கொருசிறிதும் அருளான்
ஓதியேனே விதியறியேன் ஒருங்கேன்வன் குரங்கேன்
இத்தோட மிகவுடையேன் கடைநாய்க்குங் கடையேன்
எனைக்கருதி யானிருக்கும் இடந்தேடி நடந்து
சத்தோட முறஎனக்கும் சித்தியொன்று கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே.

உரை : ஒப்பற்ற சிவகாமவல்லி கண்டு மகிழ்ச்சி கொள்ள இனிய நடம் புரியும் பெருமான், அந்தணர்கள் எல்லாரும் வேதங்கள் உரைக்கும் மந்திரங்களை விரும்பி யோதி ஒருசேரக் கூடி ஓலமிட்டலறவும், அவர்களுக்கு ஒருசிறிது மருள் செய்யாமல் ஓதி மரம் போன்றவனும், விதி முறைகளை அறியாதவனும், மனம் ஒடுங்காதவனும், வலிய குரங்கு போன்றவனும், இன்னோரன்ன குற்றங்களை மிகவுடையவனும், கடைப் பட்ட நாயினும் கீழானவனும் ஆவேன் என நினைந்து யான் ஒடுங்கியிருக்க, யான் இருக்குமிடத்தைத் தேடி என்பால் நடந்து வந்து, மகிழ்ச்சி யுண்டாகுமாறு எனக்கும் சித்தியொன்று கொடுத் தருளினான்; இந்த அதிசயத்தை என்னவென்று சொல்வேன். எ.று.

அந்தோ என்பது அத்தோ என வந்தது. இரக்கக் குறிப்பினதாகிய இது வியப்பின்கண் வந்தது. மந்தணம் மந்திரம் - வேதங்களில் பாட்டுருவில் இருப்பவை மந்திரம் எனப்படுதலின், இங்கே அவை மந்தணம் என்று கூறப்படுகின்றன. தனித் தனியாக வின்றி ஓதுவோர் பலரும் ஒருங்கு நின்று ஓலமிடுதலால், ''ஒத்தோல மிட'' என வுரைக்கின்றார் ஓதி - அகத்தே காழ்ப்பில்லாத (வலி) ஒருவகை மரம். அறநூல் கூறும் ஒழுக்க விதிகளை யறியாதவன் என்பார், ''விதியறியேன்'' என்றும், மனத்தை ஒருநெறிப்படுத்தும் மதுகையில்லாதவன் என்பதுதோன்ற, ''ஒருங்கேன்'' என்றும், மனத்தைப் பொறி வழிச் சென்றலைய விடுபவன் என்பது புலப்

பட, "வன்குரங்கேன்" என்றும் கூறுகின்றார். வன்குரங்கன் - வலிய குரங்கு போல்பவன். இக் கூறிய குற்றங்கள் தம்பால் மிக்கு இருப்பது பற்றி மனம் வருந்தி "இத்தோட மிகவுடையேன், கடை நாய்க்கும் கடையேன்" எனத் தம்மைத் தாமே இழித்துரைக்கின்றார். தோஷம் - தோடம் என வந்தது. நாய்வகைகளில் கடைப்பட்ட நாயினும், கடையவன் என்பதைக் "கடைநாய்க்கும் கடையேன்" என்று கூறுகின்றார். குற்றம் மிகவுடைமை காணுமிடத்துக் குற்றமுடையார்க்கு நடுக்கும் தானே உளதாகலின் அது விளங்கிப் புலப்பட, "எனைக் கருதியானிருக்கும் இடம்" என்று இசைக்கின்றார். சந்தோடம் - சத்தோடம் என வந்தது. நினைத்தது கைவரப் பெற உதவுவது சித்தி யெனப்படும்.

இதனால், மறை யோதும் வேதியர்க் கெய்தாத - சித்தி தனக்கு எய்தியது தெரிவித்தவாறும். (4)

3205 அந்தோ ஈ ததிசயம் ஈ ததிசயம்என் புகல்வேன்
அறிவுடையார் ஐம்புலனும் செறிவுடையார் ஆகி
வந்தோல மிடவும் அவர்க் கருளாமல் மருளால்
மனஞ்சென்ற வழியெல்லாந் தினஞ்சென்ற மதியேன்
எந்தோஎன் றுலகியம்ப விழிவழியே உழல்வேன்
எனைக்கருதி எளியேன்நான் இருக்குமிடத் தடைந்து
சந்தோட முறஎனக்கும் தன்வணம்ஒன் றளித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே.

உரை : ஒப்பற்ற சிவகாமவல்லியாகிய உமாதேவியின் மனம், இனிக்கும்படி அம்பலத்தின்கண் ஆடுகின்ற பெருமான், மெய்யறிவுடையவர்களும் புலனைந்தும் அடங்கிய மேலோர்களும் தன் திருமுன் வந்து ஓலமிட்டு நிற்க அவர்க்கருளாமல் மலப்பிணிப்பால் மருட்சி கொண்டு மனம் போன வழியே நாளும் சென்று திரிகின்ற மதியில்லாதவனுகிய என்னை, "இவன் யாவனே" என்று உலகம் இகழ்ந்து பேசப் பார்த்த இடமெல்லாம் அஃறிணையனுகிய என்னைப் பொருளாகக் கருதி, எளியவனுகிய யான் இருக்கு மிடத்திற்கு வந்தருளி, யான் உவக்குமாறு எனக்கும் அருளொளி ஒன்று கொடுத்தருளினன்; இந்த அதிசயத்தை என்னென்று சொல்வேன். எ.று.

மெய்யுணர்வுடைய பெருமக்களைச் சிறப்புக் குறித்து, "அறிவுடையார்" என்றும், ஐந்தவித்தடங்கிய பெருமக்களை "ஐம்புலனும் செறிவுடையார்" என்றும் புகழ்கின்றார். அவர்கள் வந்த மாத்திரையே தங்குதடையின்றி அருளுபவனுகிய பெருமான், உடன் அருளாமல் தாழ்த்தது பற்றி, "வந்து ஓலமிடவும் அவர்க்கு அருளாமல்" என வியந்து கூறுகின்றார். மல மாயைகளால் உயிர்த்தொகைகள் மருட்சி மலிதல் பற்றி, "மருளால்" என்று குறிக்கின்றார். நல்லறிவுடையவர் மனம் போகின்ற வழியில் போக விடாது நிறுத்தும் சான்றோராதலின், அவர்க்கு மாறுகிய தன்மை தன்பால் உளது என்றற்கு "மனம் சென்ற வழியெல்லாம் தினம் சென்ற மதியேன்" என வுரைக்கின்றார். எந்து - யாவது. "அது எந்துவே என்றருளாயே" (அருட்) என மணிவாசகர் வழங்குவது காண்க. எது

வென்பது எந்து என வந்தது எனினும் அமையும். கண்டவிடத்தெல்லாம் காணப்படுமாறு அகலயும் செயலே "விழி வழியே உழல்வேன்" என வுரைக்கின்றார். தன்வணம் - தனது அருட்பண்பு.

இதனால், மெய்யுணர்வு உடையார்க்கும், ஐந்தவித்தார்க்கும் எய்தாத திருவருள் தமக்கெய்தியது தெரிவித்தவாரும். (5)

3206. அப்பாஈ தநிசயம்ஈ தநிசயம்என் புகல்வேன்
அருந்தவர்கள் விரும்பிமிக வருந்திஉளம் முயன்று
இப்பாரில் இருந்திடவும் அவர்க்கருளான் மருளால்
இவ்வுலக நடைவிழைந்து வெவ்வினையே புரிந்து
எப்பாலும் இழிந்துமனத் திச்சைபுரி கின்றேன்
எனைக்கருதி யானிருக்கும் இடந்தேடி அடைந்து
தப்பாத ஒளிவண்ணந் தந்தென்னை அளித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே.

உரை : ஒப்பற்ற சிவகாம வல்லியாகிய உமாதேவி கண்டு மனம் மகிழுமாறு காட்சிக் கினிய திருநடம் புரிதலையுடைய சிவபெருமான், அரிய தவத்தை யுடையவர்கள் ஆர்வமுற்று, மிகவும் வருந்தி உள்ளத்தால் எண்ணி முயன்று அருள் பெறுது இந்நிலவுலகில் ஒடுங்கியிருக்க அவர்கட்கு அருளுதலை விடுத்து, மருட்சியால் இவ்வுலகியல் இன்பத்தை நயந்து கொடிய வினைகளைச் செய்து எவ்விடத்தும் இழிவான மனம் கொண்டு அசைவுற்று அலைகின்ற என்னை ஒருபொருளாகக் கருதி யானிருக்கு மிடத்திற்குத் தேடி வந்து, தவறு படாத ஒளிமயமான அருட் பொருளொன்று தந்து என்னை ஆதரித்தான்; இந்த அதிசயத்தை என்னென்பேன். எ.று.

அப்பா - வியப்பிடைச் சொல் அருந்தவர்கள் - அரிய தவத்தைச் செய்த பெரியவர்கள். திருவருட்பேறு குறித்து அரிய பெரிய தவத்தைச் செய்தவர்கள் அதனை விரைந்து பெறக்கடவராகவும், அவர்க்குடன் அருளாமைபற்றி, "அருந்தவர்கள் விரும்பி மிக வருந்தி உளம் முயன்று இப்பாரில் இருந்திடவும் அவர்க் கருளான்" என வுரைக்கின்றார். விரும்பியது பெருமையால் மிக்கவருத்தம் எய்தினமை பற்றி, "மிகவருந்தி" எனவும், வருத்தமும் தவநினைவும் உள்ளத்தின்கண் நிகழ்தலின், "உளம் முயன்று" எனவும் சிறப்பிக்கின்றார். மலமாயையின் பிணிப்பால் ஆன்ம வுணர்வு மருளுறுவது இயல்பாதலின், "மருளால்" என்று சொல்லுகின்றார். அதன்காரணமாக உலகியல் வேட்கை உளதாகலின், உலக நடை விழைந்து" என்றும், அவ்விழைவு காரணமாக வினை பலவும் செய்யப் படுதலின், "வெவ்வினையே புரிந்து" என்றும், வினைப்பயனை நுகர்தற் பொருட்டு வருந்தினமை தோன்ற "எப்பாலும் இழிந்து மனத்து இச்சை புரிகின்றேன்" என்றும் கூறுகின்றார். இறைவன் அருளிய சிவஞானத்தை "தப்பாத ஒளி வண்ணம்" எனச் சாற்றுகின்றார். அதனால் தாம் உய்தி பெற்றதற்கு வியந்து, "என்னை அளித்தான்" என இசைக்கின்றார்.

இதனால், அருந்தவர்கள் பெறக் கடவ நல்லருளைத் தாம் பெற்றமை உரைத்து மகிழ்ந்தவாரும். (6)

3207. அம்மாஈ ததிசயம்ஈ ததிசயம்என் புகல்வேன்
அன்பரெலாம் முயன்றுமுயன் றின்படைவான் வருந்தி
எம்மானென் றேத்திடவும் அவர்க்கருளான் மருளால்
இதுஈன்மை இதுதீமை என்றுநினை யாமே
மைம்மாலிற் களிசிறந்து வல்வினையே புரியும்
வஞ்சகனேன் தனைக்கருதி வந்துமகிழ்ந் தெனக்கும்
தம்மான முறவியந்து சம்மான மளித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே.

உரை : ஒப்பற்ற சிவகாமவல்லியாகிய உமாதேவி மனம் மகிழுமாறு நடம் செய்யும் பெருமான், அன்பராயினர் எல்லாரும் பேரின்பம் அடையும் பொருட்டு மிகப் பெரிதும் முயன்று மனம் வருந்தி எங்கள் பெருமானே என்று போற்றி நிற்கவும், அவர்க்கு உடனருளாமல் மல மருட்சியால் இது நல்லது, இது தீயது என்று நினைத்தலின்றி உலகியல் மயக்கத்தில் மிகவும் களிப்புற்று வலிய வினைகளையே செய்யும் வஞ்சகனுகிய என்னை ஒரு பொருளாகக் கருதி என்பால் மகிழ்வோடு வந்து எனக்கும் தன்மானம் மிகுமாறு பாராட்டித் திருவருள் ஞானமாகிய சன்மானத்தை வழங்கி அருளினர்; இந்த மிக்க அதிசயத்தை என்ன வென்று சொல்வேன். எ.று.

அம்மா - வியப்பிடைச் சொல். சிவத்தின் பெருநலங்களை அறிந்து அன்பு செய்கின்றவர்களை "அன்பர்" என்பர். அன்பு நெறியால் பெறுவது பேரின்பம் என்பதை உணர்ந்து அதனைப் பெறும் பொருட்டுப் பலகாலும் முயலுகின்ற பெருமக்கள், பெறச் சமைந்திருக்கின்ற அவர்கள் நின்று ஏத்துகின்றனர் என்பார், "அன்பரெலாம் முயன்று முயன்று இன்படை வான் வருந்தி எம்மான் என்று ஏத்திடவும்" என உரைக்கின்றார். இன்பு பேரின்பம். மருள் - மலமாகிய பிணிப்பால் உண்டாகும் மருட்சி. பொருளல்லவற்றைப் பொருளாகக் காணச் செய்வது அதன் இயல் பாதலின், "மருளால் இது நன்மை யிது தீமை என்று நினையாமே" என்று கூறுகின்றார். மைம்மால் - உலகியல் மயக்கம். எளிதில் நீங்காமை பற்றி அதனை மைம்மால் என்று சொல்லுகிறார். அந்த உலகியல் மயக்கத்தால் விடாது பற்றும் வன்மைத்தாகிய வினையையே செய்வது பற்றி, "வல்வினையே புரியும் வஞ்சகனேன்" என உரைக்கின்றார். தன்மானம் தம்மானம் என்றும், சன்மானம் சம்மானம் என்றும் திரிந்தன.

இதனால், அன்பராயினர் பெருத திருவருளைத் தாம் பெற்றது வியந்து உரைத்தவாரும். (7)

3208. ஆவாஈ ததிசயம்ஈ ததிசயம்என் புகல்வேன்
அடியரெலாம் நினைந்துநினைந் தவிழ்ந்தகநெக் குருகி
ஓவாமல் அரற்றிடவும் அவர்க்கருளான் மாயை
உலகவிட யானந்தம் உவந்துவந்து முயன்று

தீவாய நரகினிடை விழக்கடவேன் எனைத்தான்
சிவாயநம எனப்புகலும் தெளிவுடையன் ஆக்கிச்
சாவாத வரங்கொடுத்துத் தனக்கடிமை பணித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே.

உரை : ஒப்பற்ற சிவகாமவல்லி யென்னும் உமாதேவி கண்டு மனம் இனிக்கும்படி அம்பலத்தில் ஆடல் புரிகின்ற பெருமான், அடியனுயினுர் எல்லாரும் திருவடியை நினைந்து நினைந்து அறிவு மலர்ந்து மனம் குழைந்து உருகி, இடையருமல் போற்றித் துதிக்கவும், அவர்க்கு உடன் அருளாமல் மாயா காரியமாகிய உலகப் பொருள்கள் தரும் இன்பத்தை மிகவும் விரும்பி அவற்றையே பெற முயன்று அதன் வாயிலாகத் தீயெரியும் நரகத்தில் விழச் சமைந்தவனுகிய என்னை, சிவாயநம என்று சொல்லும் தெளிந்த அறிவுடையவனுக்கிச் சாவா வரம் கொடுத்துத் தனக்கே என்னை அடிமை யாகுமாறு செய்தான்; ஆகா! இந்த அதிசயத்தை என்னென்று சொல்வேன். எ.று.

இறைவன் திருவடியின் பெருமையை யுணர்ந்து அதனை அடைதற்கு விரும்பி முயல்கின்ற பெருமக்களை "அடியர்" என்று புகழ்கின்ருர். அவர்கள் திருவடிப் பேறு குறித்துச் செய்கின்ற முயற்சியும் துதிக்கின்ற திறத்தையும் எடுத்துரைப்பாராய், "நினைந்து நினைந்து அவிழ்ந்தக நெக்குருகி ஓவாமல் அரற்றிடவும்" என்று மொழிகின்ருர். உலகியல் இன்பத்தை வெறுத்தபோது கூம்பிய உள்ளம் திருவடிப்பேற்றின்கண் செல்லும்போது முறுக்கவிழும் மலர் போல நெகிழ்ந்து விரிதலின், "அகம் அவிழ்ந்து நெக்குருகி" என விளம்புகிருர். இடையருது துதிப்பது தோன்ற "ஓவாமல் அரற்றிட" என வுரைக்கின்ருர். மாயையாகிய முதற் காரணத்திலிருந்து தோன்றியதாகலின், உலக போகத்தை "மாயை உலகவிட யானந்தம்" என்று கூறுகின்ருர். உலகவிடயம் நல்கும் இன்பம் முடிவில் எரிவாய் நரகத்திற்கு ஆளாக்குதலின், "உவந்து வந்து முயன்று தீவாய நரகினிடை விழக் கடவேன்" என்று தெரிவிக்கின்ருர். தனது திருவருள் ஞானத்தைப் பெறுதற் குரியனுக்கிய திறத்தை "சிவாயநம எனப் புகலும் தெளிவுடையன் ஆக்கி" எனக் கூறுகின்ருர். சிவாயநம என்பது சிவநெறி கூறும் திருவைந் தெழுத்தாகும். அதனைப் புகலும் நெறி, ஓதும் முறை—நிற்கும் முறை என இருவகைத்தாதலால், ஓதும் முறையறிந்து ஓதுதற்குத் தெளிந்த அறிவு வேண்டுதலின், "தெளிவுடையன் ஆக்கி" எனச் செப்புகின்ருர். உலகில் பிறந்திறந் துழலும் நிலையைப் போக்கி இனிப் பிறவா நிலையை அருளினன் என்பாராய், "சாவாத வரம் கொடுத்து" என்றும், சாவா நிலை எய்தினேர் சிவபிரான் திருவடிக் கீழ் எப்பொழுதும் இருப்பரென்றற்கு, "தனக்கு அடிமை பணித்தான்" என்றும் சாற்றுகின்ருர்.

இதனுல், சாவா வரம் கொடுத்து அடிமைப் படுத்திய திறம் தெரிவித்தவாரும். (8)

3209. அண்ணுஈ ததிசயம்ஈ தசிசயம்என் புகல்வேன்
அறங்கரைந்த நாவினர்கள் அகங்கரைத்து கரைந்து
கண்ணுர நீர்பெருக்கி வருந்தவும்அங் கருளான்
கடைநாயிற் கடையேன்மெய்க் கதியைஒரு சிறிதும்

எண்ணுதை கொடும்பாவிப் புலைமனத்துச் சிறியேன்
எனைக்கருதி வலியவும்நான் இருக்குமிடத் தடைந்து
தண்ணுர்வெண் மதியமுதம் உணவொன்று கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே.

உரை : ஒப்பற்ற சிவகாம வல்லியாகிய உமாதேவி கண்டு உள்ளம் இனிக்கும்படிக் கூத்தாடுதலையுடைய சிவபெருமான் செய்த இந்தப் பேரதிசயத்தை என்னென்று சொல்வேன்; அறநூல்களை ஓதிய பெரு மக்களின் மனம் மிகவும் நீராய்க் கரைந்து கண்களில் நீர்ப் பெருகச் சொரிந்து புலம்பி நிற்கவும், உடன் அருளாமல், நாயினும் கடைப்பட்ட வனும் மெய்ம்மையான சிவகதியைச் சிறிது போதும் நினைக்காத கொடும் பாவியும், புலை நினைவுகள் நிறைந்த மனத்தையுடைய சிறியவனுமாகிய என்னையும் பொருளாகக் கருதி நான் இருக்குமிடத்திற்குத் தானே வலிய வந்து, மதியமுதமாகிய உணவொன்றைக் கொடுத்தான். எ.று.

அண்ணு, அம்மா போன்று வியப்புப் பொருளில் வந்தது. அறநூல்களை ஓதியுணர்ந்த பெருமக்களை "அறங் கரைந்த நாவினர்கள்" என்பதுமரபு. "அறங்கரை நாவின் ஆன்ருர்" (24) என ஞானசம்பந்தம் கூறுவது காண்க. அறநூல் உணர்ந்தோர் சிவனது திருவருளை வேண்டிக் குறையிரக்கும் திறத்தை விளக்கலுற்று "அகங் கரைந்து கரைந்து கண்ணுல் நீர் பெருக்கி வருந்தவும்" என வுரைக்கின்ருர். நிலை பேறுடையதாகலின், சிவகதியை "மெய்க்கதி" என்று விளம்புகின்ருர். புலை, கொலை, பொய் முதலியன பற்றிய நினைவே நிறைந்த மனத்தை, "புலை மனம்" என்று புகல்கின்ருர். "தண்ணுர் வெண்மதி" என்பது சமாதி யோகத்தின் துவாத சாந்தத்தில் தோன்றும் அமுத சந்திரன். அதனின்றும் ஒழுகும் அமுதத்தை உண்டு களிப்பது அவ்வோகியர் இயல்பு. அதனைத் தான் பெற்றமை கூறுவார், "தண்ணுர் வெண்மதி அமுதம் உணவொன்று கொடுத்தான்" என உரைக்கின்ருர்.

இதனுல், யோக முயற்சியுடைய யோகியர் உண்கின்ற மதியமுதம் பெற்றமை கூறியவாரும். (9)

3210. ஐயாஈ ததிசயம்ஈ ததிசயம்என் புகல்வேன்
அருமைஅறிந் தருள்விரும்பி உரிமைபல இயற்றிப்
பொய்யாத நிலைநின்ற புண்ணியர்கள் இருக்கப்
புலைமனத்துச் சிறியேன்ஓர் புல்லுணர்கர் இல்லேன்
செய்யாத சிறுதொழிலே செய்துழலுங் கடையேன்
செருக்குடையேன் எனைத்தனது திருவுளத்தில் அடைத்தே
சையாதி அந்தநடுக் காட்டிஒன்று கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே.

உரை : ஒப்பற்ற சிவகாமவல்லியாகிய உமாதேவி கண்டு உள்ளம் இனிக்கும்படிக் கூத்தாடுதலையுடைய சிவபெருமான் புரிந்த இந்த அதிசயத்தை என்னவென்று சொல்லுவேன்; உன் திருவருளின் அருமை யறிந்து பெற விரும்பி அதற்குரிய செயல்கள் பலவும் செய்து மெய்ந்நிலைக்

கண் நின்ற புண்ணியர்கள் ஒருபால் இருக்க, புலை நினைவு பொருந்திய மனத்தினால் சிறுமையுற்ற யான் ஒரு புல்லுக்கும் நிகரில்லாதவனாய்ச் செய்தற்காகாத சிறு செயல்களைச் செய்து திரியும் கடையனாய்ச் செருக்கு மிகுந்த என்னைத் தனது திருவுள்ளத்திற் கொண்டு ஒன்றின் ஒன்று தொடரும் ஆதியும் அந்தமும் நடுவும் எடுத்துக் காட்டித் திருவருளொன்று கொடுத்தருளினான். எ.று.

ஐயா, வியப்புப் பொருளில் வந்தது. உலகோரை முன்னிலையாக்கியதுமாம். சிவபுண்ணியச்செல்வர்கள் அப் புண்ணிய பயனாக சிவத்தின் திருவருளை உணர்ந்து அதனைப் பெற விரும்பி முயலுகின்ற திறத்தை "அருமை அறிந்தருள் விரும்பி உரிமை பல இயற்றிப் பொய்யாத நிலை நின்ற புண்ணியர்கள்" என்று புகழ்கின்றார். வேறு வகையால் பெறலாகாதது திருவருள் என்பதை உணர்ந்து அதன் பேற்றுக்குரிய அறச் செயல்களைச் செய்தமை புலப்பட, "உரிமை பல இயற்றி" என்று இயம்புகின்றார். மெய்ம்மை நிலையைப் "பொய்யாத நிலை" என்று புகலுகின்றார். ஓரறிவு உயிராகிய புல்லுக்கும் ஒப்பாக மாட்டேன் என்றற்கு "ஒரு புல்லும் நிகரில்லேன்" என்று கூறுகின்றார். உயர்ந்தோர் விரும்பும் ஒள்ளிய செயல்களைச் செய்வதில்லை என்பதற்கு, "செய்யாத சிறு தொழிலே செய்துழலும் கடையேன்" என்று செப்புகின்றார். குற்ற வகைகளில் ஒன்றாகிய செருக்கும் தன்பால் உடைமை புலப்பட, "செருக்குடையேன்" என்று தெரிவிக்கின்றார். முதல், நடு என்பன ஒன்றி னொன்று தொடர்ந்து இருப்பனவாதலின், "சையாதி அந்த நடு" என்றும், அவற்றின் ஒருமைத் தன்மையைக் காட்டினமை தெரிவித் தற்கு, "காட்டி ஒன்று கொடுத்தான்" என்றும் இசைக்கின்றார். சையம் - தொடர்ச்சி.

இதனால், ஆதி யந்த நடுக்களின் ஒருமைத் தன்மை காட்டியது உரைத்தவாறும். (10)

3211. அன்னேஈ ததிசயம்ஈ ததிசயம்என் புகல்வேன்
அருளருமை அறிந்தவர்கள் அருளமுதம் விரும்பி
என்னேஇங் கருளாமை என்றுகவன் றிருப்ப
யாதுமொரு நன்றியிலேன் தீதுநெறி நடப்பேன்
முன்னேபின் னும்அறியா மூடமனப் புலையேன்
முழுக்கொடியேன் எனைக்கருதி முன்னர்எழுந் தருளித்
தன்னேடும் இணைந்தவண்ணம் ஒன்றெனைக்குக் கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே.

உரை : ஒப்பற்ற சிவகாமவல்லியாகிய உமாதேவி கண்டு மனம் இனித்த நடம் புரிதலையுடைய சிவபெருமான், திருவருளின் பெரு நலத்தை யறிந்த பெரியோர்கள், அந்த அருளமுதம் வேண்டி ஏனை இன்னும் எமக்கு அருளா திருக்கின்றாய் என்று மனம் வருந்தி யிருக்க, யாதொரு நற்பண்பும் இல்லாமல் தீநெறியிலே செல்பவனும், செய்யும் செயல்கட்கு அமைந்த காரண காரியங்களை எண்ணுதல் இல்லாத மூடத்

தன்மை நிறைந்த மனத்தாற் புலைத்தன்மை பொருந்தியவனும், கொடுமை முற்றவும் உடையவனுமாகிய என்னை ஒரு பொருளாக மதித்து என் போந்தருளித் தன் தகுதிக்கு ஒத்ததாய திருவருளொன்றினைத் தந்தான்; ஐயோ, இந்த மிக்க அதிசயத்தை என்ன வென்று உரைப்பேன். எ. று.

அன்னை - வியப்பை யுணர்த்தும் குறிப்பு மொழி. திருவருளின் அருமைகளையும் பெருமைகளையும் நன்குணர்ந்த பெரியோர்கள் அதனைப் பெறுதற் பொருட்டு வருந்தி முயல்கின்றார்கள் என்பது தெரிவிப்பாராய், "அருளருமை அறிந்தவர்கள் அருளமுதம் விரும்பி" என்றும், அவ் வருளாகிய அமுதம் தமக்கு எய்தாமைக்கு வருந்தி, "எமக்குத் திருவருள் எய்தாமைக்குக் காரணம் என்னையோ" என ஏங்கித் தவிக்கின்றார்கள் என்பாராய், "என்னை இங்கருளாமை என்று கவன்றிரு'ப்ப" என்றும் எடுத்துரைக்கின்றார். அந்த நன்மக்களை நினைந்து கண்ட வடலூர் வள்ளல் தம்மை நோக்கித் தம்பாலுள்ள குற்றங்களையும் குறைகளையும் விரிய விளங்குவது கண்டு மனம் வெதும்பி, "ஏதும் ஒரு நன்றியிலேன் தீது நெறி நடப்பேன்" எனவும், நன்றே தீதோ யாது செய்யினும் அதற்கு முன்னிற்கும் காரணத்தையாதல் பின் விளையும் காரியத்தையாதல் கண்டுணரும் அறிவில்லாதவன் என்றற்கு "முன்னை பின்னை அறியா மூட மனப் புலையேன்" எனவும், கொடுமைச் செயற் பண்பே தம்பால் நிறைந்து விளங்கினமையின் தம்மை "முழுக் கொடியேன்" எனவும் பாரித் துரைக்கின்றார். நன்றி - நன்னெறி; நன்மையுமாம். நற்செயல் நன்றெனப் பாராட்டுதலின், "நன்றி" எனப்படுகிறது. முன்பின் னைக்காது எதனையும் செய்தலாகாதாகலின், அதனை விதந்து "முன்னை பின்னும் அறியேன்" என மொழிகின்றார். இந்த அறியாமைக்குக் காரணம் மனத்தின் மூடத் தன்மையும் பொய் முதலிய தீய நினைவுகளுமாதல் விளங்க, "மூட மனப் புலையேன்" எனக் கூறுகின்றார். அறிவில்லாதவனை முழுமகன் என்னும் வழக்குப்போல நன்றென்பது சிறிதுமின்றித் தீமையே யுருவாகியவன் என்றற்கு முழுக் கொடியேன்" என்கின்றார். அப்பெருமான் செய்த திருவருள் அவன் பெருமைக்கும் தகுதிக்கும் ஒத்த இயல்பினதென வுரைப்பாராய், "தன்னோடு இணைந்த வண்ணம் ஒன்று" என்று கூறுகின்றார்.

இதனால், தான் செய்யும் திருவருளைத் தன் தகுதிக்கு ஒத்த தன்மையிற் செய்தமை தெரிவித்தவாறும். (11)

3212. ஐயோ ஈ தகிசயம் ஈ தகிசயம்என் புகல்வேன்
அருவினைகள் அணுகாமல் அறநெறியே நடந்து
மெய்யோதும் அறிஞரெலாம் விரும்பியிருந் திடவும்
வெய்யவினைக் கடல்குளித்து விழற்கிறைத்துக் களித்துப்
பொய்ஒதிப் புலைபெருக்கி நிலைசுருக்கி உழலும்
புரைமனத்தேன் எனைக்கருதிப் புகுந்தருளிக் கருணைச்
சையோக முறஎனக்கும் வலிந்தொன்று கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே.

உரை : ஒப்பற்ற சிவகாமவல்லியாகிய உமாதேவி கண்டு திரு வுள்ளம் இனிக்கக் கூத்தாடுதலே யுடைய சிவபெருமான், இந்த மீக்க அதிசயத்தை ஐயோ என்னென்று சொல்வேன்; விலக்குதற்கரிய தீவினைகள் தொடராதவாறு அறநெறிக் கண்ணே சென்று மெய்ம்மையே பேசி யொழுகும் அறிவுடையோர் யாவரும் பெற விரும்பி யேங்கி நிற்க, கொடிய வினைகளாகிய கடற்குள்ளே விழுந்து வீணுக் குழைத்துக் களிப்புற்றுப் பொய்களையே யுரைத்துப் புலைச் செயல்களே மிகவும் செய்து நிலைமையைச் சிறிதாக்கி வருந்தும் குற்றம் பொருந்திய மனத்தையுடைய வனுகிய என்னை ஒரு பொருளாகக் கருதி என்பாற் போந்து தன் திருவருளில் கலந்து கொள்ளத் தானே வலிய ஒன்று கொடுத்தருளினன். எ. று.

விலக்குதற் காகாமை பற்றி, தீவினை "அருவினை" எனப்படுகிறது. அறநெறியில் நின்று நல்வினைகளைச் செய்வதை, "அறநெறியே நடந்து" என்று கூறுகிறார். மெய் யோதுதல் - வாய்மையே மொழியும் நல்லறம். தம்மைச் செய்தாரை விடாமல் காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரை யின்றிப் பெருகுதலால் "வெய்ய வினைக் கடல் குளித்து" எனவும், வினை செய்தலால் சிவப் பேற்றுக்குரிய காலம் வீணுதலை, "விழற் கிறைத்து" எனவும் இயம்புகின்றார். வீண்செயலை விழற் கிறைத்தல் என்பது வழக்கு. விழற் கிறைத்தவர் வருந்த வேண்டியவராக யான் மடமையால் மகிழ்ச்சி கொண்டேன் என்பார், "களித்து" எனவும், பொய் யுரைத்தும் களவு கொலை முதலியன பேசியும் எனது தகுதியைக் கெடுத்துக் கொண்டேன் என்றற்குப் "பொய் யோதிப் புலை பெருக்கி நிலை சுருக்கி யுழலும் புரை மனத்தேன்" எனவும் இயம்புகின்றார். இக் குற்றங்களால் உள்ளீடற்ற மனத்தை, "புரை மனம்" என்று புகல்கின்றார். பொருள்கள் ஒன்றே டொன்று கலத்தல் "பிரிக்கக் கூடிய கலப்பு" எனவும், "கூடாக் கலப்பு" எனவும் இரண்டாகி, பிரிக்கக் கூடாததைச் "சமவாயக் கலப்பு" என்றும் பிரிக்க கூடியதைச் "சையோகக் கலப்பு" என்றும் பெரியோர் கூறுதலின், திருவருளோடு தாம் பெற்ற கருணைக் கலப்பைக் "கருணைச் சையோகமுற எனக்கும் வலிந்தொன்று கொடுத்தான்" என்று உரைக்கின்றார்.

இதனால், தாம் திருவருளில் பெற்ற சையோகக் கலப்பைத் தெரிவித்தவாறும். (12)

3213. எற்றேஈ ததிசயம்ஈ ததிசயம்என் இசைப்பேன்
இச்சையெலாம் விடுத்துவனத் திடத்தும்மலை யிடத்தும்
உற்றேமெய்த் தவம்புரிவார் உன்னிவிழித் திருப்ப
உலகவிட யங்களையே விலகிவிட மாட்டேன்
கற்றேதும் அறியகிலேன் கடையரினுங் கடையேன்
கருணையிலாக் கல்மனத்துக் கள்வன் எனைக் கருதிச்
சற்றேயும் அன்றுமிகப் பெரிதெனக்கிங் களித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே.

உரை : ஒப்பற்ற சிவகாமவல்லியாகியஉமாதேவி கண்டு திருவுள்ளம் களிக்கக் கூத்தாடுதலே யுடைய சிவபெருமான் புரிந்த இந்த மிகப் பெரிய அதிசயத்தை என்னென்று சொல்லுவேன்; ஆசை யெல்லாம் விடுத்துக் காடுகளையும் மலைகளையும் அடைந்து மெய்யான தவம் புரியும் தவ முதல்வர்கள் திருவருள் பெற நினைந்து கண்ணுங் கருத்துமாய் இருந்தாராக, பொறி புலன்களால் நுகரப்படும் விடயங்களைச் சிறிதும் கைவிட மாட்டாதவனுகிய யான், கல்வியறிவு சிறிதுமின்றிக் கீழ் மக்களினும் கீழ் மகனுய் இரக்கமில்லாத கல் போன்ற மனத்தை யுடைய கள்வனுவேன்; இத்தகைய என்னையும் ஒரு பொருளாகக் கருதிச் சிறிது என்று சொல்ல முடியாத பெரிய திருவருளை எனக்கு இறைவன் அளித் துள்ளான். எ. று.

மண் பெண் பொன் என்ற பொருள்களின் மேல் கண் காது முதலிய கருவிகளின் வாயிலாக படர்ந்தெழும் ஆசைகள் தவம் புரிபவருக்கு இடையூறு செய்வனவாதலால், "இச்சை யெலாம் விடுத்து" என்று சொல்கின்றார். மேலும் தவயோகத்திற்கு மக்கள் சூழலும் ஊறு செய்வது கண்டு காடுகட்கும் மலைகட்கும் சென்று தனித்திருந்து அதனைச் செய்து திருவருள் நெறியில் ஒன்றியிருந்து அத்திருவருட் காட்சியை ஆர்வத் தோடு எதிர்பார்த்திருப்பது விளங்க, "வனத்திடத்தும் மலையிடத்தும் உற்று மெய்த்தவம் புரிவார் உன்னி விழித்திருப்ப" என்று உரைக்கின்றார். "அகனமர்ந்த அன்பினராய் அறுபகை செற்று ஐம்புலனும் அடக்கி ஞானம் புகலுடையோர்" (வீழி) என்று இவர்களை ஞானசம்பந்தர் குறிக் கின்றார். இவர்களின் வேருகிய யான் ஐம்புலன்களால் நுகரப்படும் உலகியல் இன்பங்களைப் பற்றிவிடாது நுகர்ந் தொழுகுகின்றேன் என்பார், "உலக விடயங்களையே விலக விட மாட்டேன்" என வுரைக்கின்றார். அதற்குக் காரணம் கண்ட வடலூர் வள்ளல், தமக்கு நல்ல கல்வி யறிவு இல்லாமை என உணர்ந்தமை தெரிவிப்பாராய், "கற் றே தும் அறியகிலேன்" என இயம்புகின்றார். கற்பன கற்றும் மெய்யுணர்வு பெருமை தோன்ற "கற்று ஏதும் அறியகிலேன்" எனக் கூறப்படுகிறது. அதனுல் தாம் எய்திய சிறுமையை விளக்குதற்குக் "கடையரினும் கடையேன்" எனவும், இரக்கமில்லாத தன்மை உளதாயது பற்றிக் "கருணையிலாக் கல் மனத்துக் கள்வன்" எனவும் இசைக்கின்றார். கருணை- இரக்கம். இறைவன்பால் தான் பெற்ற திருவருள் மிகப் பெரியது என்பதை வலியுறுத்தற்கு, "சற்றேயும் அன்று மிகப் பெரிது" எனத் தெரிவிக்கின்றார்.

இதனுல், தவயோகியருக்கும் எய்தாத பேரருள் தமக்கு எய்தியது எண்ணி வியந்துரைத்தவாரும். (13)

3214. என்னேஈ ததிசயம்ஈ ததிசயம்என் இசைப்பேன்
இரவுபகல் அறியாமல் இருந்தஇடத் திருந்து
முன்னேமெய்த் தவம்புரிந்தார் இன்னேயும் இருப்ப
மூடர்களில் தலைநின்ற வேடமனக் கொடியேன்
பொன்னேயம் மிகப்புரிந்த புலைக்கடையேன் இழிந்த
புழுவினும்இங் கிழிந்திழிந்து புகுந்தஎனைக் கருதித்
தன்னேய முறஎனக்கும் ஒன்றளித்துக் களித்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே.

உரை : ஒப்பற்ற சிவகாமவல்லியாகிய உமாதேவி கண்டு திருவுள்ளம் களிக்க இனிக்கக் கூத்தாடுதலே யுடைய சிவபெருமான் புரிந்த இந்த மிகப் பெரிய அதிசயத்தை என்னென்று சொல்லுவேன்; இரவு என்றும் பகலென்றும் அறியாமல் இருந்த இடத்தே அசைவின்றி யிருந்து திருவருட் பேறு குறித்து முற்காலத்தே உண்மைத் தவம் புரிந்த மேலோர் இப்பொழுதும் அதுவே செய்து கொண்டிருக்க மூடர்களில் முன்னவனுயிருக்கின்ற பொய் மனமுடைய கொடியவனுகிய யான், பொன்னுசை மிகக் கொண்ட புலைத் தன்மையால் கீழ்ப்பட்ட யான் இழிக்கத் தக்க புழுவினும் மிக மிக இழிந்தவனுய் இருக்கின்ற என்னையும் ஒரு பொருளாகக் கருதித் தம்பால் பேரன்புண்டாக எனக்குத் தன் திருவருளைத் தந்து மகிழ்ந்தான். எ.று.

தனித்திருந்து இருந்த யிடத்தே யிருந்து செய்யும் சமாதி யோகிகள் சிவத்தின் பேரருள் பெற விரும்பி அஃது எய்தாமையால் இன்னும் யோக சமாதியே புரிகின்றனர் என்றற்கு "இரவு பகல் அறியாமல் இருந்த இடத் திருந்து முன்னே மெய்த்தவம் புரிந்தார் இன்னேயும் இருப்ப" என வுரைக் கின்ருர். இன்னே - இப்பொழுதே. தலைநிற்றல் - முற்படுதல். வேட மனம் - பொய் மனம். பொன்னுசையால் கீழ்மைப் பட்டது புலப்படப் "பொன்னேயம் மிகப் புரிந்த புலைக் கடையேன்" என்று புகல்கின்ருர். என்பின்மையின் இழிந்த புண் எனப்படுகிறது. தம்பால் நிறைந்த அன்பின்மை தோன்றப் "புழுவினும் இழிந்தேன்" என்று நொந்து கொள்கிருர். நேயம் - உண்மை யன்பு.

இதனுல், தனித்திருந்து யோக சமாதி இருப்பார்க்கும் எய்தாத திருவருள் தமக்குக் கிடைத்தமை நினைந்து வியந்து பேசியவாரும். (14)

3215. ஓகோ ஈ தசியம்ஈ தசியம்என் னுரைப்பேன்
உள்ளபடி உள்ளஒன்றை உள்ளமுற விரும்பிப்
பாகோமுப் பழரசமோ எனருசிக்கப் பாடிப்
பத்திசெய்வார் இருக்கவும்ஓர் பத்தியும்இல் லாதே
கோகோஎன் றுலகுரைப்பத் திரிகின்ற கொடியேன்
குற்றமன்றிக் குணமறியாப் பெத்தன்எனைக் கருதித்
தாகோத ரங்குளிர்ந்த தன்மைஒன்று கொடுத்தான்
தனித்தசிவ காமவல்லிக் கினித்தநடத் தவனே.

உரை : ஒப்பற்ற சிவகாமவல்லியாகிய உமாதேவி கண்டு திருவுள்ளம் களிக்க நடம் புரியும் சிவபெருமான் புரிந்த இந்தப் பேரதிச யத்தை என்னென்று கூறுவேன்; உள்ளபடி உள்ளதாகிய பரம்பொருளை மனத்தால் விரும்பிப் பாகோ, மா முதலிய பழரசமோ என்று இனிக்கப் பாடி யன்பு செய்யும் பெருமக்கள் பலரும் இருக்க, சிறு பத்தியும் இல்லாமல் உலகவர் போக்கோ என்று இகழத் திரிகின்ற கொடியவனும், குற்ற மல்லது குணமே கண்டறியாத பெத்தனுமாகிய என்னையும் ஒரு பொருளாக எண்ணி வேட்கையால் வெதும்பிய வயிறு குளிரும் தன்மையுடைய திருவருளை எனக்குத் தந்தருளினன். எ.று.

"பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்" என்று சான்றோர் இறைவனை ஓதுவதால், வடலூர் வள்ளல் "உள்ளபடி உள்ள வொன்று" என வுரைக்கின்றார். உள்ள மொன்றி நினையாவிடின் இறையின்பம் எய்தாதாகலின், "உள்ளமுற விரும்பி" எனக் கூறுகின்றார். "உள்ள மொன்றி உள்குவார் உளத்துளான்" (ஆரூர்) என ஞானசம்பந்தர் நவில்வது காண்க. முப்பழரசம், மா பலா வாழை ஆகிய மூன்று பழங்களின் சாறு. பத்தி - மிக்க அன்பு. கோகோ எனத் திரிதல் - ஆரவார மாக இயலுதல். பெத்தன் - பாச பந்தங்களால் பிணிக்கப்பட்டவன். தாகம் - வேட்கையால் உளதாகும் வெப்பம். உதரம் - வயிறு. தாக உதரம் - உதர தாகம் என மாறி நின்றது. தாக உதரம், தாகோதரம் என வந்தது வடநூல் புணர்ப்பு.

இதனால், பாடிப் பரவும் பக்தருக்கு எய்தாத திருவருள் தமக்கு எய்தினமை நினைந்து வியந்தவாரும். (15)

திருச்சிற்றம்பலம்

8. அபராத மன்னிப்பு மாலை

அஃதாவது, செய்துள்ள பிழைகளை மன்னித்தருள வேண்டிப் பாடும் பாமாலை. பிழைகளை அபராதம் என்பது வடமொழி மரபு. அதனால், இஃது அபராத மன்னிப்பு மாலை எனப்படுகிறது. இதன்கண் வடலூர் வள்ளல் பொய் கூறல், நன்னெறி யொழுகாமை, புலைத்தன்மை, தேர்ந் துணர்ந்து செய்யாமை முதலிய பிழைகள் தம்பால் நிகழ்ந்தமை கூறி அவற்றைப் பொறுத்தருள வேண்டுகின்றார். செய்த குற்றத்தை வாய்விட் டுரைத்தால் மீளவும் செய்யாமைக்கு அது துணையும் அரணுமாம் என்பர் ஒழுக்க நூல் அறிஞர். சமய நூல்கள் இதற்கு முதலிடம் தருதல் காணலாம். பிழை நிகழ்தற்குக் காரணம் அருள் ஞானமின்மை என்றும், இறைவன் திருவடி தீண்டப் பெருமை என்றும் வள்ளலார் கூறுகின்றார்.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3216. செய்வகைகள் கறியாதே திருவருளோ டிசைச்
சிலபுகன்றேன் அறிவறியாச் சிறியரினுஞ் சிறியேன்
பொய்வகையேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
புண்ணியனே மதியணிந்த புரிசடையாய் விடையாய்
மெய்வகையோர் விழித்திருப்ப விரும்பிஎனை அன்றே
மிகவலிந்தாட் கொண்டருளி வினைதவிர்த்த விமலா
ஐவகைய கடவுளரும் அந்தணரும் பரவ
ஆனந்தத் திருநடஞ்செய் அம்பலத்தெம் அரசே.

உரை : ஐவகைத் தேவர்களும் அந்தணரும் வாழ்த்தி வணங்க ஆனந்தத் திருக்கூத்தை யம்பலத்தில் ஆடுகின்ற பெருமானே! புண்ணியனே; திங்கள் தங்கிய முறுக்கிய சடையினையும் உறுதியான எருதையும் உடைய பெருமானே; மெய்ம்மையாளர் பலர் பார்த்திருக்க, என்னை விரும்பி அந்நாளே வலிய வந்து ஆட்கொண்டு என் வினைகளை நீக்கிய விமலனே; அறிய வேண்டியவற்றை அறிந்து கொள்ளாத சிறுவரினும் சிறுமையுடையேனதலால் செயல் வகைகளை அறியாமல் திருவருளோடு பிணங்கி வேண்டாத சிலவற்றைச் சொல்லி யுள்ளேன்; பொய் வகைகள் பலவுமுடைய யான், சொன்ன குற்றத்தைப் பொறுத் தருள வேண்டுகிறேன். எ.று.

புண்ணியம் வினையாதலால், புண்ணியப் பொருளாகிய பெருமானைப் புண்ணியனே என்று புகல்கின்றார். புரிசடை - முறுக்கிய சடை. மெய் வகையோர் - மெய்ஞ்ஞானிகள். மெய்ப்பொருள் வகையில் தலைசிறந்தது பரம்பொருளாதலின், அதனைக் கண்டு கொண்டிருக்கும் மெய்ஞ்ஞானி

கள "மெய் வகையோர்" என விளம்புகின்றார். விழித்திருத்தல் - பார்த்திருத்தல். அன்றென்றது, இளமைக் காலத்தில் ஒருநாள். இளமை உண்மை காணாது மறுப்பவும், வலிந்து ஆட்கொண்டமை பற்றி, "மிக வலிந்து ஆட்கொண்டருளி" என்று குறிக்கின்றார். அஞ்ஞானமாகிய அசத்து நீங்கினமை தெளிவாதலின், "வினை தவிர்த்த விமலா" எனக் கூறுகின்றார். ஐவகைக் கடவுளர், பிரமன், திருமால், உருத்திரன், கணபதி, முருகன் ஆகியோர்; அந்தணர் - முனிவர்கள்; வேதியருமாம். தில்லையம்பலத்தின்கண் ஆனந்த நடனம் புரிவது விளங்க, "ஆனந்தத் திருநடஞ்செய் அம்பலத்து எம்மரசே" என்று போற்றுகின்றார். செய்வினையைத் திருந்தச் செய்வது செய்வகையாகும். அதனை நன்கு அறியாமை புலப்பட, "நன்கு அறியாதே" என்றும், அறிவு அறியாமை காரணமாக ஊடலும் பிணக்கும் தோன்றுவனவாதலின், "திருவருளோடு ஊடி" என்றும், முறை தவறிச் சில கூறினேன் என்பாராய், "சில புகன்றேன்" என்றும் இயம்புகின்றார். தமது அறியாமையை விளக்குதற்கு அறிவ தறியாத சிறுமை "அறிவ தறியாச் சிறுவரினும் சிறியேன்" எனத் தெரிவிக்கின்றார். நினைவு சொல் செயல் என்ற மூவகையினும் பொய்ம்மை யுடையவன் எனத் தம்மை எடுத்தோதித் தமது பிழைகளைப் பொறுத்தருள வேண்டும் என்பார், "பொய் வகையேன் புகன்ற பிழை பொறுத்தருளல் வேண்டும்" என்று வேண்டுகின்றார்.

இதனால், பொய் புகன்ற பிழையைப் பொறுத்தருள்க என வேண்டியவாறும். (1)

3217. நிலைநாடி அறியாதே நின்னருளோ டிடி
நீர்மையல புகன்றேன்நன் னெறிஒழுகாக் கடையேன்
புலைநாயேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
பூதகணஞ் சூழநடம் புரிகின்ற புனிதா
கலைநாடு மதியணிந்தகனபவளச் சடையாய்
கருத்தறியாக் காலையிலே கருணைஅளித் தவனே
தலைஞான முனிவர்கள்தந் தலைமீது விளங்கும்
தாளுடையாய் ஆளுடைய சற்குருஎன் அரசே.

உரை : பூத கணங்கள் பக்கத்தே சூழ்ந்து நிற்க அம்பலத்தின்கண் ஆடல் புரிகின்ற புனிதனே, கலைகளை விரும்பும் பிறைத் திங்களைக் கொண்ட பெருமை சான்ற பவளம் போன்ற சடையை யுடையவனே, நற்கருத்துக்களைத் தேர்ந்துணரும் பக்குவ மில்லாத இளமைக் காலத்தில் எனக்கு அருளறிவு தந்த பெருமானே, தலைசிறந்த ஞானத்தை யுடைய முனிவர்கள் தமது தலையால் வணங்கும் திருவடியை யுடையவனே, என்னை ஆட்கொண்டருளும் சற்குரு பரனே, ஞான நிலையை ஆய்ந்தறியாமல் நின்னுடைய திருவருளோடு பிணங்கி என் தன்மைக் கொவ்வாதவற்றை, நன்னெறிக்கண் நில்லாத கீழ்மை யுடையனாதலாலும், புலைத் தன்மையை யுடைய நாய் போன்றவனாதலாலும் வாயாற் சொல்லிப் பிழை செய்தேனாக, என்னைப் பொறுத்தருளல் வேண்டும். எ.று.

சிவபெருமான் திருக்கூத்தாடுமிடத்துப் பூதகணங்கள் சூழ்ந்து நின்று இசைபாடும் எனச் சான்றோர் கூறுதலின், "பூதகணம் சூழ நடம் புரிகின்ற புனிதா" எனப் புகழ்கின்றார். "பூதவினப் படை நின்றிசை பாடவும் ஆடுவர்" (தரும) என ஞானசம்பந்தர் கூறுவர். புனிதன் - தூயவன். கலை நாடும் - கலை வளர்ச்சியை விரும்பும் பிறைச் சந்திரன், கன பவளம் - உயர்ந்த பவளம், செந்நிற முடைமை பற்றி, செஞ்சடையைக் "கனபவளச் சடையாய்" எனக் கட்டுரைக்கின்றார். "கனபவளம் சிந்தும் கழிப்பாலை" (கழிப்பா) என நாவுக்கரசர் உரைப்பர். கருத்தறியாக் காலை, சொல்வோர் சொல்லும் கருத்துணரும் திறம் இளமைப் பருவம். அக்காலத்தேயே தமக்குத் திருவருளுணர்வு உண்டாயினமையைப் பிரண்டும் "ஆடையிலே என்ன மணந்த மணவாளா" (4091) எனக் கூறுதலால், "கருத்தறியாக் காலத்தே கருணை யளித்தவனே" என வுரைக்கின்றார். திருவடி தம் முடியிற் படும்படி வணங்கிப் பரவுகின்றார் களாதலால், "தலைஞான முனிவர்கள் தம் தலைமீது விளங்கும் தாளுடையாய்" என்று கூறுகின்றார். தலைஞானம் - ஞான வகை யெல்லாவற்றினும் தலையாயதாகிய திருவருள் ஞானம். சற்குரு வரசு, மெய்ஞ்ஞான குரவர்க் கெல்லாம் அரசாகத் திகழ்கின்ற சிவ குருபரன். நிலை - சிவஞானச் செம்மை நிலை. இதனைத் "திருநின்ற செம்மை" எனத் திருநாவுக்கரசர் கூறுவர். திருவருள் துணை கொண்டு நாடி யறிதல் கடனாகவும் அதனைச் செய்யாத குற்றத்தை "நிலை நாடி யறியாதே நின்னருளோடு ஊடி" எனவும், தகவில்லாத சொற்களை வழங்கினேன் என்பார், "நீர்மையல புகன்றேன்" எனவும், செய்கைகளிலும் நன்னெறியைக் கடைப் பிடிக்க வில்லை என்றற்கு "நன்னெறி யொழுகாக் கடையேன்" எனவும், நெஞ்சால் ஞான நிலை நாடாமையும், வாயால் நீரல மொழிதலும், மெய்யால் நன்னெறி யொழுகாமையும் புலைத்தன்மை யுண்டு பண்ணுதலால், "புலை நாயேன்" எனவும் தம்மையே இழித் துரைத்துப் பிழை பொறுத்தருளல் வேண்டும் என்று உரைக்கின்றார்.

இதனால், நன்னெறி யொழுகாப் பிழை பொறுக்க வேண்டுமென வேண்டிக் கொண்டவாறும். (2)

3218. கலைக்கடைஞன் கறியாதே கனஅருளோ டிடிக்
கரிசுபுகன் றேன்கவலைக் கடற்புணைஎன் றுணரேன்
புலைக்கடையேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
போற்றிசிவ போற்றிசிவ போற்றிசிவ போற்றி
தலைக்கடைவாய் அன்றிரவில் தாள்மலரொன் றமர்த்தித்
தனிப்பொருள்என் கையிலளித்த தயவுடைய பெருமான்
கொலைக்கடையார்க் கெய்தரிய குணமலையே பொதுவில்
கூத்தாடிக் கொண்டுலகைக் காத்தாளுங் குருவே.

உரை : சிவ சிவ போற்றி, அன்று ஒருநாள் இரவு மனையின் தலைவாயிலில் ஒருகாலை வைத்துத் தனிச் சிறப்புடைய பொருளொன்றை என் கையிற் கொடுத்துதவிய அருளுடைய பெருமானே, கொலை முதலிய செயல்களால் கீழ்மக்களாயினர்க்குக் கிடைத்தற் கில்லாத குணமலையே, தில்லையம்பலத்திற் கூத்தாடிக் கொண்டே, உலகனைத்தும் காத்தருளும்

குருபரனே, கலைகள் பலவும் துறைபோகப் பயிலாமல் நினது பெரிய திருவருளோடு மாறுபட்டுக் குற்றம் பல பேசி, கவலையாகிய கடலுக்குத் தெப்பமாவது நீயே என உணரா தொழிந்தேன்; புலைச் செய்கைகளால் கடையனுகிய யான் உரையால் நிகழ்த்திய குற்றங்களைப் பொறுத்தருள வேண்டுகிறேன். எ.று.

கலைக்கடை நன்கறியாமை, கலைத் துறைகளை முற்றவும் கல்லாமை. துறைபோக அறியாமையைக் கண்ட வறியாமை என்று கூறுகிறார். கடை போகக் கற்றவிடத்துத் திருவருள் ஞானத்தோடு ஊடி மாறுபடும் குற்ற முண்டாகா தென அறிக. கரிசு - குற்றம். கடல் போற் பெருகித் தோன்று தலால், "தனக்குவமை யில்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால் மனக் கவலை மாற்றல் அரிது" (குறள்) எனச் சான்றோர் கூறுதலால், திருவருள் கவலைக் கடற்குப் புணையாதல் பெறப்படும்; அதனோடு பிணங்கினமையின் "கவலைக் கடற் புணை என்றுணரேன்" என வுரைக்கின்றார். புலைச் செயல் - இழி செயல்கள். இழி செயல் புரிபவன் கடையனுதலின், "புலைக் கடையேன்" எனத் தம்மைக் குறைத்துக் கூறுகின்றார். தலைக்கடை - தலைவாயில்; முதல் வாசல் எனவும் வழங்கும். தலைவாயிற் படி கடந்து வருவதை, "தாளொன் றமர்த்தி" எனக் குறிக்கின்றார். இறைவன் கொடுத்ததைத் திருவருள் எனவே மொழிகுவராதலின், "தனிப் பொருள்" என்று உரைக்கின்றார். கொலைத் தொழிலாற் கடைப்பட்டார் என்பார், "கொலைக் கடையார்" எனக் கூறுகின்றார். சலியாமை பற்றிக் "குணமலை" என்கின்றார். இறைவனது திருக்கூத்து படைத்தல் முதலிய ஐந்தொழில் கட்கு ஏதுவாகலின், "கூத்தாடிக் காத்தாளும் குருவே" எனப் புகல் கின்றார்.

இதனால், புலைத் தன்மையாற் போந்த பிழை பொறுக்க வேண்டுமென இறைஞ்சியவாறும். (3)

3219. நின்புகழ்நன் கறியாதே நின்னருளோ டூடி
நெறியலவே புகன்றேன்நன் னிலைவிரும்பி நில்லேன்
புன்புலையேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
பூரணசிற் சிவனேமெய்ப் பொருள் அருளும் புனிதா
என்புடைஅந் நாளிரவில் எழுந்தருளி அளித்த
என்குருவே என்னிருகண் இலங்கியநன் மணியே
அன்புடையார் இன்படையும் அழகியஅம் பலத்தே
ஆத்தாளும் அப்பனுமாய்க் கூத்தாடும் பதியே.

உரை : மெய்யன்புடையவர் கண்டு மகிழும் அழகிய பொன்னம் பலத்தின்கண் அம்மையும் அப்பனுமாய் நின்று கூத்தாடுகின்ற தலைவனே; நிறைவாகிய ஞான சிவமூர்த்தியே, மெய்ப்பொருளாகிய சிவபோகத்தை அருளும் புனிதனே, அந்நாள் இரவில் என்பாற் போந்து திருவருள் நல்கிய குருபரனே, என் கண்களிரண்டிலும் விளங்கும் மணியாகியவனே, உன்னுடைய திருப்புகழ்களை யறியாமையால், நினது திருவருளோடு பிணங்கி, நல்ல ஞான நிலையை விரும்பாமல் புல்லிய புலைத் தன்மையால் பேசிய என் குற்றங்களைப் பொறுத்தருள வேண்டுகிறேன். எ.று.

சிவன்பால் உண்மை யன்புடையார்க்கு அவன் எழுந்தருளும் இடம் இன்பம் தருவதாகலின், "அன்புடையார் இன்படையும் அழகிய அம்பலம்" என்றும், அங்கே அம்மையாய் ஒருபால் நின்றும், அப்பனுய் நின்றும் கூத்தாடுவது பற்றி, "ஆத்தாளும் அப்பனுமாய்க் கூத்தாடும் பதியே" என்றும் கூறுகின்றார். குறைவிலா நிறைவும் ஞான மூர்த்தமு முடைய மெய்ப்பொருளாதலின், சிவபிராணை, "பூரண சிற்சிவனே மெய்ப் பொருள் அருளும் புனிதனே" என்று புகல்கின்றார். மெய்ப் பொருள் - சிவஞானம்; சிவப் பேறுமாம். முன்பொருநாள் இரவில் எழுந்தருளி ஞானம் அருளிய வரலாற்றுக் குறிப்பை, "அந்நாள் இரவில் என்புடை எழுந்தருளி யளித்த என் குருவே" என இயம்புகின்றார். கண்கள் காண ஒளி செய்யும் மணி போல உண்ணின்று காட்டும் உரவோனுதலின், "என்னிரு கண் இலங்கிய நன்மணியே" என்று கூறுகின்றார். நின்னுடைய பேரின்பம் பெருநெறிக்கண் நிற்றலே விரும்பாமையால் நினது திருப்புகழை அறியா தொழிந்தேன்; அதனுல் சிவன் திருவருளோடு பிணங்கிப் பேதுற்று சிவநெறிக் காகாதனவே கூறினேன் என்பாராய், "நன்னிலை விரும்பி நில்லேன் நின் புகழ் நன்கறியாதே நின்னருளோடு ஊடி நெறியல புகன்றேன்" என்று உரைக்கின்றார். இவ்வாற்றுல் புலைத் தன்மை யுற்றேன் என்பாராய், "புன் புலையேன்" எனவும், பிழை பொறுத்தருள்க என வேண்டுவார், "பிழை பொறுத்தருளல் வேண்டும்" எனவும் முறையிடுகின்றார்.

இதனுல், புலைத்தன்மை நோக்கிப் பிழை பொறுத் தருள்க என்று முறையிட்டவாரும். (4)

3220. துலைக்கொடிநன் கறியாதே துணை அருளோ டீடித்
துரிசுபுகன் றேன்கருணைப் பரிசுபுகன் றறியேன்
புலைக்கொடியேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
பொங்குதிரைக் கங்கைமதி தங்கியசெஞ் சடையாய்
மலைக்கொடிஎன் அம்மைஅருள் மாதுசிவ காம
வல்லிமறை வல்லிதுதி சொல்லிநின்று காணக்
கலைக்கொடிநன் குணர்முனிவர் கண்டுபுகழ்ந் தேத்தக்
கனகசபை தனில்நடிக்குங் காரணசற் குருவே.

உரை : எழுகின்ற அலைகளையுடைய கங்கையாறும் பிறைத்திங்களும் பொருந்திய சிவந்த சடையை யுடையவனே, மலைமகளாகிய என் தாயும் திருவருட் செல்வியும் சிவகாமவல்லியும் வேதவல்லியுமாகிய உமாதேவி நேர் நின்று கண்டு மகிழக் கலைஞானத்தின் ஒழுங்கை நன்கறிந்த முனிவர்கள் கண்டு புகழ்ந்து துதிக்கப் பொற் சபையில் கூத்தாடுகின்ற காரண சற்குருவானவனே, நேர்மை யொழுங்கை யறியாமல் நின்று திருவருளோடு பிணங்கிக் குற்றமானவற்றை யுரைத்தேனே யன்றி நின்னுடைய அருட் பண்புகளை ஓதி யறியேன்; அதனுல் புலைத்தன்மை யுற்றுக் கொடியவனுகிய யான் உரைத்த குற்றங்களைப் பொறுத்தருள வேண்டுகிறேன். எ.று.

துலைக் கொடி - நேர்மை யொழுங்கு. "செம்மையேயாய சிவ" மாதலின் "துலைக் கொடி" என்று சொல்லுகின்றார். உயிர்கட்கும் பல்லாற்றானும் துணையே செய்வதாகலின், திருவருளைத் "துணையருள்" எனக் குறிக்கின்றார். துரிசு - குற்றம். திருவருட் டிறம் - கருணைப் பரிசு எனப்படுகிறது. புலைக்கொடியேன் - புலைத் தன்மையாற் கொடியவன். மலைக் கொடி - மலையரையன் மகளாய்க் கொடி போன்ற இடையை யுடையவள். கலைக் கொடி - பல்வகைக் கலைகளின் ஒழுங்கு; கலைகள் பலவற்றையும் நேர்மைப் படுத்தி மக்களுயிர்க்கு நன்மை புரிவிக்கும் பெரியோராதலின், "கலைக் கொடி நன்குணர் முனிவர்" என மொழிகின்றார். இச் சிறப்பு உணர்த்தவே, "உவமையிலாக் கலைஞானம்" (திருஞான) எனச் சேக்கிழார் தெரிவிக்கின்றார். கனக சபை - பொன் வேய்ந்த சபை; பொன்னம்பலம், சிவஞான முரைக்கும் ஆசிரியன்மார்களுக் கெல்லாம் முதலாசிரியன் என்றற்குக் "காரண சற்குரு" எனக் குறிக்கின்றார்.

இதனால், கருணைப் பரிசறியாது துரிசு கூறிய பிழை பொறுத் தருள்க என முறையிட்டவாறும். (5)

3221. பழுத்தலைநன் குணராதே பதியருளோ டிடிப்
பழுதுபுகன் றேன்கருணைப் பாங்கறியாப் படிறேன்
புழுத்தலையேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
புண்ணியர்தம் உள்ளகத்தே நண்ணியமெய்ப் பொருளே
கழுத்தலைநஞ் சணிந்தருளுங் கருணைநெடுங் கடலே
கால்மலர்என் தலைமீது தான்மலர அளித்தாய்
விழுத்தலைவர் போற்றமணி மன்றில்நடம் புரியும்
மெய்ம்மைஅறி வின்புருவாய் விளங்கியசற் குருவே.

உரை: சிவ புண்ணியச் செல்வர்களின் மனத்தின்கண் எழுந்தருளும் மெய்ப்பொருளாகியவனே, கழுத்தின்கண் விடக்கறை பொருந்திய கருணை நிறைந்த பெருங் கடல் போன்றவனே, திருவடித் தாமரையை என் தலைமேல் வைத்தருளும் பெருமானே, உயர்ந்த தலைவர்களாகிய, முனிவர்கள் கண்டு துதிக்க, அழகிய பொற் சபையின் கண் கூத்தாடி யருளும் சச்சிதானந்தமாகிய சற்குரு மூர்த்தியே, அருட் பேற்றுக்குரிய பக்குவம் முற்றியிருப்பதை யுணராமல் அதனோடு பிணங்கிக் குற்றமானவற்றை எடுத்துரைத்த தவறுகளை யுடையேன்; திருவருட் பாங்கறியாமல் வஞ்ச மனத்தனாய்ப் புழுத்தலையை யுடைய கீழ் மகனாகிய என் பிழைகளைப் பொறுத்தருள வேண்டுகிறேன். எ. று.

பழுத்தல் - நுகர்தற் கேற்ற பக்குவம் உறுதல். தலைமைப் பதியாகிய சிவத்தின் திருவருள், "பதியிருள்" எனப்படுகிறது. பழுது - குற்றம். படிறு - வஞ்சகம். புழுத் தலையேன் - தூய்மையின்றிப் பேணும் ஈரும் நிறைந்த தலையையுடைய கீழ்மகன். சிவஞானத்தால் சிவ புண்ணியம் செய்யும் சான்றோர்களின் மனத்தின்கண் எழுந்தருளுதல் சிவ பரம்பொருளின் சிறப்பியல்பாதலின், "புண்ணியர் தம் உள்ளத்தே நண்ணிய மெய்ப் பொருளே" எனப் போற்றுகின்றார். கழுத்தின்றலை என்பது கழுத்தலையென வந்தது; தலை, ஏழாவதன் பொருட்டு. கடல் வகையனைத்தினும் பெரிதாதல் தோன்ற, "நெடுங் கடல்" எனச் சிறப்பிக்கின்றார்.

திருவடியைத் தமது முடிமேல் வைத்தருளிய குறிப்புப் புலப்பட, வடலூர் வள்ளல், "கால் மலர் என் தலை மீது தான் மலர அளித்தாய்" என வுரைக் கின்றார். விழுத் தலைவர் - உயர்ந்த தலைவர். ஈண்டு வியாக்கிரபாதர், பதஞ்சலி என்ற இருவரையும் குறிக்கிறது. சச்சிதானந்தம் என்ற தொடர், சத்து சித்து ஆனந்தமெனப் பிரிந்து "மெய்யறிவு இன்ப வுரு" என நின்றது. ஞானசிரியன் என்பது பற்றிச் சிவனைச் "சற்குரு" எனக் கூறு கின்றார்.

இதனால், இறைவன் திருவடியைத் தமது தலைமேல் வைத்த குறிப்புத் தெரிவித்தவாரும். (6)

3222. கையடைநன் கறியாதே கனஅருளோ டூடிக்
காசுபுகன் றேன்கருணைத் தேசறியாக் கடையேன்
பொய்யடியேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
புத்தமுதே சுத்தசுக பூரணசிற் சிவமே
ஐயடிகள் காடவர்கோன் அகமகிழ்ந்து போற்றும்
அம்பலத்தே அருள்நடஞ்செய் செம்பவள மலையே
மெய்யடியர் உள்ளகத்தில் விளங்குகின்ற விளக்கே
வேதமுடி மீதிருந்த மேதகுசற் குருவே.

உரை : புதுமையான அமுதம் போன்றவனே, சுத்த சுகவடிவான ஞானப் பொருளாகிய சிவமே, பல்லவ வேந்தனை ஐயடிகள் காடவர் கோன் மனம் களிப்போடு துதிக்கின்ற பொன்னம்பலத்தின்கண் அருட் கூத்தாடும் சிவந்த பவளமலை போன்ற பெருமானே, மெய்யுணர்ந்த சான்றோராகிய அடியார்களின் மனத்தினுள்ளே ஒளிர்கின்ற விளக்காகியவனே, வேதத்தின் உச்சியில் மேவுகின்ற மேதக்க மெய்ம்மை சான்ற குருபரனே, உனது திருவருளின் ஒளியை கடையனாகிய யான், நான் சிவத்துக்கு அடைக்கலப் பொருள் என்று அறியாமல் பெருமை மிக்க, அதன் திருவருளோடு பிணங்கிக் குற்றங்கள் பல வுரைத்துள்ளேன்; பொய்க்கு அடிமையாகிய யான் உரைத்துள்ள பிழைகளைப் பொறுத்தருள வேண்டுகின்றேன். எ. று.

கணந்தோறும் புதுமையுறும் பரம் பொருளாதலால், "புத்தமுதே" என்றும், துன்பக் கலப்பில்லாத பூரண வின்ப நிறைவாதல் பற்றி, "சுத்த சுக பூரண சிற் சிவமே" என்றும் போற்றுகின்றார். ஐயடிகள் காடவர் கோனைப் பரமேசுவரப் பல்லவன் என ஆராய்ச்சியாளர் கூறுவர். இவர் க்ஷேத்திர வெண்பா என்ற நூலைப் பாடிச் சிவனைத் துதித்திருக்கின்றார். அது சைவத் திருமுறைகளில் பதினோராம் திருமுறையிற் கோக்கப் பட்டுள்ளது அம்பலம் - தில்லைச் சிற்றம்பலம். செம்மேனி யம்மானதலின் "செம்பவள மலையே" என்று கூறுகின்றார். மெய்யடியர் நினைவுக் கண்ணை திரே நின்றவண்ணமிருத்தலால் 'மெய்யடியர் உள்ளகத்தில் விளங்குகின்ற விளக்கே" என விளம்புகின்றார். "பொய்யா நாவதனைப் புகழ்வார்கள் மனத்தினுள்ளே, மெய்யே நின்றெரியும் விளக்கே யொத்த தேவர் பிரான்" (கழிப்பா) என நம்பியாரூரர் நவில்வது காண்க. வேத முடி - வேதாந்தம். உண்மை ஞான ஆசிரியன் சிவன் என்பது விளங்க "மேதகு சற்குரு" என விளம்புகின்றார். கையடை - அடைக்கலம். அவனியின்றித் தமக்கு

அசைவில்லை யென்பது உணரப்படின் தாம் அவன் கையகப் பட்டமை விளங்குமாதலால், "கையடை நன்கு அறியாது" என்று கூறுகிறார். அருளொடு பிணங்குதலாவது அருள் வழிச் செல்லாமல் அறிவு வழியிற் செல்லுதலாம். அதனாற் குற்றம் பல வுண்டாதல் கண்டு, "காசு புகன்றேன்" என வுரைக்கின்றார். கருணைத் தேசு - அருளொளி. பொய்ந் நினைவும் சொல்லும் செயலும் உடையனுதல் கண்டு கூறுதலால், "பொய் யடியேன்" எனத் தம்மை இழிக்கின்றார்.

இதனாற் பொய் யடிமைக்கு வருந்தி அது காரணமாக விளைந்த குற்றம் பொறுத்தருள் என வேண்டியவாறும். (7)

3223. திறப்படநன் குணராதே திருவருளோ டீடித்
தீமைபுகன் றேன்கருணைத் திறஞ்சிறிதுந் தெளியேன்
புறப்படிறேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
பூதமுதல் நாதவரைப் புணருவித்த புனிதா
உறப்படுமெய் உணர்வுடையார் உள்ளகத்தே விளங்கும்
உண்மையறி வானந்த உருவுடைய குருவே
சிறப்படைமா தவர்போற்றச் செம்பொன்மணிப் பொதுவில்
திருத்தொழில்ஐந் தியற்றுவிக்குந் திருநடநா யகனே.

உரை : நிலம் முதல் சிவம் ஈறுக வுள்ள தத்துவம் முப்பாரெடும் ஆன்மாவாகிய உயிரைக் கூட்டி வைத்த புனிதனே, பொருந்தத் தக்க மெய்யுணர்ந்த ஞானவான்களின், மனத்தின்கண் எழுந்தருளும் சச்சி தானந்த உருவைக் கொண்ட குருபரனே, சிறந்த மாதவர்கள் நின்று போற்ற, செவ்விய பொன்னும் மணியும் வேய்ந்த அம்பலத்தின்கண் படைத்தல் முதலிய ஐந்து தொழில்களை நிகழ்விக்கும் திருக்கூத்தையாடு கின்ற சிவ முதல்வனே, நின் திருவருட் சிறப்பை நன்கு உணராமையால் அதனோடு பிணங்கி, நின் கருணைத் திறங்களைச் சிறிதும் தெளியாமல் தீயவை சொல்லிக் குற்றப்பட்டுள்ளேன்; நின் அருளறத்துக்குப் புறமாகிய வஞ்சகனை என்னுடைய குற்றங்களைப் பொறுத்தருள வேண்டுகிறேன். எ.று.

பூத முதல் நாதவரை யென்றது நில முதற் பூதம் ஐந்து, கண் முதல் அறிகருவி ஐந்து, வாய் முதலிய செயற்கருவி யைந்து, மன முதலிய கரணம் நான்கு, கலை முதலிய வித்தியா தத்துவம் ஏழு, சிவ முதலிய சுத்த தத்துவ மைந்துமாகும். சிவ தத்துவம் நாதம் என வழங்கும். பூத மெனப் பொதுப்படக் கூறினமையின் தன் மாத்திரைகளும் அடங்கும். இவை மூப்பத்தாறனுள் உயிர்ப் பொருட்டாகிய உலகம் அடங்குதலின், இவற்றோடு பிரிப்பறக் கலந்து நின்று உயிர்கள் வாழ்க்கை நிகழ்த்துவது பற்றி, "பூத முதல் நாதவரைப் புணருவித்த புனிதா" என்று புகல்கின்றார். சிவ பரம்பொருளின் உண்மைத் தன்மையை உணர்ந்த ஞானவான் களின் சிந்தையே கோயிலாகக் கொண்டவனுதலால், "மெய்யுணர்வுடை யோர் உள்ளகத்தே விளங்கும் குருவே" என்று கூறுகின்றார். மெய்ம்மை யும் அறிவும் இன்பமும் ஆகிய மூன்றும் கலந்த பரம்பொருளாதல் விளங்க, "உண்மை யறிவானந்த உருவுடைய குருவே" என்று இயம்பு

கிறார். எவ்வாற்றானும் எய்தப் படாத தன்றென்றற்கு "உறப்படும் மெய்யுணர்வு" எனத் தெரிவிக்கின்றார். மேலே தூய பொன் வேயப்பட்டு மணி பிழைத்த மேடையை யுடையதாதல் பற்றி, "செம்பொன் மணிப் பொதுவில்" என்று புகழ்கின்றார். தொழில் ஐந்தாவன, படைத்தல், காத்தல், ஒடுக்குதல், அருளல், மறைத்தல் என்பனவாம். இவற்றுள் அருளலும் மறைத்தலும் உயிர்கட் கெனவும் ஏனை மூன்றும் உலகுக் கெனவும் பெரியோர் உரைப்பர். இவையைந்தும் சிவன் திருக்கூத்தில் விளங்குதலால், "திருத்தொழில் ஐந்து இயற்றுவிக்கும் திருநட நாயகனே" எனக் கூறுகின்றார். "தோற்றம் துடியதனில் தோயும் திதி யமைப்பில், சாற்றிடும் அங்கியிலே சங்காரம் ஊற்றமாம், ஊன்று மலர்ப் பதத்தில் உற்ற திரோத முத்தி, நான்ற மலர்ப்பதத்தே நாடு" (உண். விளக்) எனப் பெரியோர் உரைப்பது காண்க. உணரப்படும் பொருளைப் பல திறமாக வகுத்துணரும் முறை பற்றி, திருவருட் செல்வத்தைப் பல திறமாகக் கண்டறிந்தேனில்லையென்பார், "திருவருளைத் திறம்பட நன்கு உணராதே ஊடி" எனவும், அக்குறைபாட்டால் அத்திருவருள் ஞானம் சிறிது மில்லேனுயினேன் என்றற்குக் "கருணைத் திறம் சிறிதும் தெளியே" னெனவும், எங்கும் தீமையே கண்டு அதனையே சொல்லித் திரிந்தேன் என்பாராய், "தீமை புகன்றேன்" எனவும் இயம்புகின்றார். பிழை பொறுக்குமாறு பெரியோர்களை வேண்டுவது முறையாதலின், "பிழை பொறுத்தருளல் வேண்டும்" என முறையிடுகின்றார்.

இதனால், அருள் ஞான மின்மை கூறிப் பிழை பொறுக்க வேண்டிய வாரும். (8)

3224. தேர்ந்துணர்ந்து தெளியாதே திருவருளோ டீடிச்
சிலபுகன்றேன் திருக்கருணைத் திறஞ்சிறிதுந் தெரியேன்
போந்தகனேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
போதாந்த மிசைவிளங்கு நாதாந்த விளக்கே
ஊர்ந்தபணக் கங்கணமே முதற்பணிகள் ஒளிர
உயர்பொதுவில் நடிக்கின்ற செயலுடைய பெருமான்
சார்ந்தவரை எவ்வகையுந் தாங்கிஅளிக் கின்ற
தயவுடைய பெருந்தலைமைத் தனிமுதல்எந் தாயே.

உரை: தத்துவ ஞான நெறியின் முடியின் கண்ணதாகிய நாத தத்துவத்தின் விளக்கமாக வுள்ள பரசிவனே, ஊர்ந்து போகும் படத்தை யுடைய பாம்பாலாகிய கங்கண முதல் பலவேறு அணிகள் மேனியிற் கிடந்து அழகு செய்ய, உயர்ந்த அம்பலத்தின்கண் கூத்தாடும் தொழிலை யுடைய பெருமானே, சார்ந்தவர் யாவரையும் எவ்வாற்றாலும், தாங்கி யாதரிக்கின்ற பெரிய தலைவனுகிய ஒப்பற்ற முதல்வனே, எமக்குத் தந்தையாகியவனே, நினது திருவருள் ஞானத்தைப் பலவகையால் தேர்ந்து உணர்வதும் தெளிவதுமின்றிச் சில பிழைகளை நின் கருணைக் கூறுகளைச் சிறிதளவும் காணுமல் சொல்லிக் குற்றப் படுகின்றேன்; பனை மரம் போன்ற யான் பேசிய குற்றங்களைப் பொறுத்தருள வேண்டு கிறேன். எ.று.

ஞான நூல் பயில்வார்க்குத் தொடக்கத்திற் போதிப்பது தத்துவ ஞானமாதலால், அதனைப் போதமென்றும், அதன் முடிவில் இருப்பது நாத தத்துவமாதல் பற்றி, "போதாந்த மிசை விளங்கும் நாதம்" என்றும் அதன் முடிவின்கண் திகழ்வது பரசிவமாதலால், "நாதாந்த விளக்கே" என்றும் நவில்கின்றார். பணக் கங்கணம் - படத்தையுடைய பாம்பாலாகிய கங்கணம்; கங்கணம் - முன்கைவளை. பணிகள் அணி வகைகள். தோள் வளையம், மார்பிலாரம், அரையிற் கச்சு முதலிய பணிவகையாவும் சிவனுக்குப் பாம்பென்றறிக. பொது - அம்பலம். தன்னையே பற்றுக்கொண்ட பேரன்பர்களை இடுக்கண் உறும் போதெல்லாம் அருள் செய்து ஆதரிப்பவனுதலால், "சார்ந்தவரை யெவ்வகையும் தாங்கி அளிக்கின்ற தயவுடைய பெருந் தலைமைத் தன்முதல்" என்று புகழ்கின்றார். "சார்ந்தவர்க் கின்பங்கள் தழைக்கும்வண்ணம் நேர்ந்தவன்" (வல்லம்) என ஞானசம்பந்தர் உரைப்பது காண்க. அளித்தற்கேது தயவுடைமையாதலால், "தயவுடைய தனிமுதல்" எனவும், "தன்னையடைந்தார் வினை தீர்ப்பதன்றே தலையாயவர் தம் கடனாவது" (அதிகை) எனத் திருநாவுக்கரசர் கூறுவது காணின் தலைவர் தலைமைச் செயல் தேற்றமாதலால், "பெருந் தலைமைத் தனிமுதல்" எனவும் கூறுவது பொருத்தமாதலைக் காணலாம். அன்பர்கட்குத் தனி முதலாயினும் எங்கட்குள்ள தொடர்பு இது வென்றற்கு "எந்தாய்" என மொழிகின்றார். தேர்தல் - ஆராய்தல். உணரப்படும் பொருள்களை முதற்கண் ஆராய்தலும் பின்பு தெளிதலும் உண்மை நெறியாதலால், அது செய்யாது குற்றப் பட்டமை கூறுவார், "தேர்ந்துணர்ந்து தெளியாதே" எனவும், அதற்கு ஏதுதிருவருளோடு உளதாய பிணக்கம் என்றற்குத் "திருவருளோடு ஊடி" எனவும் இயம்புகின்றார். ஊடினுர்க்கும் உறுதி நல்குவது அருளாளர் செயல்வகை; அது நின் சிறப்பியல் என்பது எனக்குத் தெரியாது என்பர், "திருக்கருணைத் திறம் சிறிதும் தெரியேன்" எனக் கூறுகின்றார். ஊடினும் உறுதியாவன செய்தலால் திருக்கருணை" யென்று சிறப்பிக்கின்றார். போந்தகன் - பணமரம் ஒப்பவன்; போந்து என்னும் சொல்லடியாக உயர்திணைப் பெயர். பணைப் பொருட்டாய போந்து, போந்தை என அஃறிணைப் பெயராவது போலப் போந்தகன் எனக் ககர விடை நிலை பெற்றது. "ஊடுவதும் உன்னோடுவப்பதும் உணர்த்துவதும் எனக்கு உறுதி" (வாழாப்) என மணிவாசகர் உரைப்பது காண்க.

இதனால், தேர்ந்துணர்ந்து தெளியாத குற்றம் பொறுத்தல் வேண்டுமென முறையிட்டவாறும். (9)

3225. ஒல்லும்வகை அறியாதே உன்னருளோ டூடி
ஊறுபுகன் றேன்துயரம் ஆறும்வகை உணரேன்
புல்லியனேன் புகன்றபிழை பொறுத்தருளல் வேண்டும்
பூதியணிந் தொளிர்கின்ற பொன்மேனிப் பெருமான்
சொல்லியலும் பொருளியலும் கடந்தபர நாதத்
துரியவெளிப் பொருளான பெரியநிலைப் பதியே
மெல்லியல்நற் சிவகாம வல்லிகண்டு மகிழ
விரியுமறை ஏத்தநடம் புரியும்அருள் இறையே.

உரை : வெண்ணீறணிந்து விளங்குகிற பொன்னிற மேனியை யுடைய சிவபெருமானே, சொல்லினெல்லையையும் பொருளின் எல்லையை யும் கடந்த பரநாதமாகிய துரிய வெளியின்கண், நிலவும் பெரிய நிலைக்குரிய மெய்ப்பொருளாகிய தலைவனே, பெண்மைப் பண்புருவாய சிவகாமவல்லி யெனப்படும் உமாதேவி கண்ணுரக் கண்டு மகிழ, பலவாய் விரிந்த வேதங்கள் பராவத் திருநடம் புரியும், அருளுருவாகிய இறைவனே துன்பம் போக்கும் வழி யுணராதவனுகிய யான், உனது திருவருள் ஞான நலத்தை இயன்ற அளவு தானும் அறியாமல் அதனேடு மாறுபட்டுப் பிணங்கி ஊருவனவற்றையே எடுத்துரைத்தேனுகலின், அற்பனுகிய என்னுடைய பிழைகளைப் பொறுத்தருள வேண்டுகிறேன். எ.று.

"வெண்ணீறு பூசி உய்வராய் உள்குவார்கட்கு உவகைகள் பலவும்" (மழபா.) செய்வர் என நாவுக்கரசர் உரைப்பதை யுணர்ந்த அடியார் கண்டு மகிழத் தாமும் அதனை மேனி யெங்கும் அணிந்து விளங்குதலால், "பூதி யணிந்து ஒளிர்கின்ற பொன் மேனிப் பெருமான்" எனப் புகல் கின்ருர். "பூதியணி பொன்னிறத்தர் பூண நூலர்" (வீழி) எனச் சுந்தரரும் புகழ்கின்ருர். பூதி- விபூதி என வழங்கும் திருநீறு. பரநாதம்-நாத தத்துவத்துக்கு மேலுள்ள நிலை; அதனை யுணருமிடம் உந்தித் தான மாகிய துரியப் பகுதிக்கு அதீதமான மூலாதாரம். அங்கு உணர்வு வடிவாய் உயிர் மாத்திரம் கருவி கரணங்களின் தொடர்பின்றி நோக்க ஆண்டுத் தோன்றுதலின், "பரநாதத் துரிய வெளிப் பொருளான பதியே" என்றும், அதனினும் பெரிய நிலை வேறின்மை பற்றிப் "பெரிய நிலைப் பதியே" என்றும் இயம்புகின்ருர். கருவி கரணத் தொடர்பின்மையால் "சொல்லியலும் பொருளியலும் கடந்த" என விதந்து மொழிகின்ருர். பெண்மை வடிவினளாதல் பற்றி, சிவகாமவல்லியை "மெல்லியல்" எனச் சிறப்பிக்கின்ருர். வேத பாராயணம் செய்வோரை வேதம் என்பது பற்றி, "மறை யேத்த" என்று கூறுகிருர். துன்ப நீக்கமும் இன்ப வாக்கமும் ஆகிய இரண்டுமே உயிர்களின் நாட்டமாகும்; இரண்டன் முயற்சிகளில் துன்ப நீக்கம் முற்பட நிற்றலின், "துயரம் ஆறும் வகை யுணரேன்" எனச் சொல்லுகின்ருர். அதற்குத் துணையாவது திருவருள் ஞான மென்பதை இயன்ற அளவு உணர்ந்து பெற முயலா தொழிந்தமை புலப்பட, "ஒல்லும் வகை யறியாதே" என்றுரைக்கின்ருர். அறியாது ஒழிந்ததே திருவருளோடு பிணங்கி மாறுபட்டு என் முயற்சிக்குத் தீங்கு செய்வன வற்றைச் சொல்லிக் குற்றப்பட்டேன் என்பாராய், "உன்னருளோடு ஊடி ஊறு புகன்றேன்" என மொழிகின்ருர். இவ்வாற்ருல் அற்பனையினமை காட்டித் தமது பிழை பொறுத்தருள வேண்டலுற்று, "புல்லியனேன்" புகன்ற பிழை பொறுத்தருள வேண்டும்" என முறையிடுகின்ருர்.

இதனுல், புன்மையாற் செய்த பிழையைப் பொறுக்க வேண்டிய வாரும்.

9. ஆளுடைய பிள்ளையார் அருண்மாலை

அஃதாவது, இறைவன் திருவருளே ஆளும் நலமுடைய திருஞான சம்பந்தரை, நினைந்து அவரது அருள் பெற விழைந்து பாடும் பாமாலை. பிள்ளைப் பருவத்தே சிவனது திருவருள் ஞானப் பால் பெற்றுண்டு, பாடல் வல்ல புலமை சிறந்தவராதலால் பிள்ளை எனப்படுகின்றார். தாம் பெற்ற திருவருளைத் தமது வாழ்வில் பல நல்ல அற்புதங்களால் எடுத் தாண்டமை ஆளுடைய பிள்ளை எனச் சான்றோர் புகழும் தகைமை கொண்டார். இக் கருத்தையே ஏனைத் திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் மூவர்க்கும் கூறிக் கொள்க. இதன்கண், உயிரனுபவம், அருளனுபவம், சிவானுபவம் என்ற மூவகை யனுபவங்கள் தொகுத்தும் வகுத்தும் கூறப்படுகின்றன. ஞானசம்பந்தரைப் பரவும் இப்பாமாலையில் பிள்ளையாரின் திருவருள் நலமும், அவர் அருளிய திருநெறித் தமிழின் நலமும் எடுத்தோதி, தமக்கு இளமைப் பருவத்தேயே ஈடுபாடு உண்டாக்கிய வரலாற்றுக் குறிப்பை வடலூர் வள்ளல் உரைக்கின்றார்.

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3226. உலகியல் உணர்வோர் அணுத்துணை யேனும்
உற்றிலாச் சிறியஓர் பருவத்
திலகிய எனக்குள் இருந்தருள் நெறியில்
ஏற்றவுந் தரமிலா மையினுன்
விலகுறுங் காலத் தடிக்கடி ஏற
விடுத்துப்பின் விலகுரு தளித்தாய்
திலகநற் காழி ஞானசம் பந்தத்
தெள்ளமு தாஞ்சிவ குருவே.

உரை : மேன்மையை யுடைய நல்வளம் படைத்த சீர்காழிப் பதிக் குரிய திருஞான சம்பந்த ரென்னும் தெளிந்த அமுதமாகிய சிவ குருபரனே, உலகிய லறிவு அணுவளவும் பெருத சிறு பருவத்தில் இருந்த எனக்கு, உள்ளிருந் தருளித் திருவருணெறியில் யான் முற்பட் டொழுகவும், போதிய தகுதி யின்மையால் அந்நெறியினின்றும் பிறழும் போது அடிக்கடி என்னை அந்நெறிக்கண் நிறுத்தியும் பின்னர் யான் பிறழா வண்ணம் நிலைபெறுவித்தும் அருளினாய்; நின் பேரருளை என்னென்பேன். எ.று.

திலகம், மகளிர் நுதற் கழகு செய்யும் பொருட் குரியதாயினும் மேன்மை யென்னும் பொருளினும் நூல்களில் வழங்குவது. "திலக முக்குடைச் செல்வன் திருநகர்" (சீவக. 3001) என வருதல் காண்க. சீர்காழிக்கு நன்மை வளமுடைமை ஞானசம்பந்தராலாகிய சிறப்புப் பற்றி

அவரைத் "தெள்ளமு" தென்றும், அவர் உரைத்தருளிய ஞான நலத்தை வியந்து "சிவகுரு" என்றும் சிறப்பிக்கின்றார். எண்ணுவன செயற் படுத்தும் திறம் எய்துங்காலம் உலகிய லுணர்வு எய்துங் காலமாதலால், அதனை "ஓர் அணுத்துணையும் உலகிய லுணர்வு உற்றிலாச் சிறுபருவம்" என விளக்குகின்றார். இளமைக் காலத்திலேயே அருணெறியில் தமக்குப் பற்றும் ஈடுபாடும் உண்டானதற்குக் காரணம் திருவருள் என்பாராய் "எனக்குள் இருந்து அருள் நெறியில் ஏற்றவும்" எனவும், ஒரொருகால் தாம் அந்நெறியில் தவறினமை புலப்பட, "தரமிலாமை யினல் விலகுறுங் காலத்து" எனவும், அக்காலத்தே தம்மைக் கைவிடாமல் நெறிக்கண் நிறுத்தித் திருவருள் துணை செய்தமையை நினைந்து "விலகுறுங் காலத்து அடிக்கடி ஏற விடுத்" தெனவும் விளம்புகின்றார். தவறும் போதெல்லாம் "இடரினும் தளரினும் என துறுநோய் தொடரினும் உன் கழல் தொழு தெழுவேன்" (ஆவடு) என வரும் திருப்பதியம் நெஞ்சின்கண் நின்று ஊக்கினமை இனிது புலப்பட, "பின் விலகுரு தளித்தாய்" எனவும் எடுத்தோதுகின்றார். "அடிக்கடி ஏற விடுத்து" என்றது, அருணெறியிற் பன்முறை தவறினமையும், பின்பு அதனைப் பற்றினமையும் உணர்த்துகின்றது.

இதனல், ஞானசம்பந்தரின் அருட் பாட்டுணர அருணெறிக்கண் தம்மை இளமைப் பருவத்தேயே இருத்தி யாண்டமை தெரிவித்தவாரும். (1)

3227. உயிர்அனு பவம்உற்றிடில் அதனிடத்தே
ஓங்கருள் அனுபவம்உறும்அச்
செயிரில்நல் அனுப வத்திலே சுத்த
சிவஅனு பவம்உறும் என்ருய்
பயிலுமூ வாண்டில் சிவைதரு ஞானப்
பால்மகிழ்ந் துண்டுமெய்ந் நெறியாம்
பயிர்தழைந் துறவைத் தருளிய ஞான
பந்தன்என் ருேங்குசற் குருவே.

உரை : நன்மொழி பயிலும் மூன்ருமாண்டில் உமையம்மை தந்த ஞானப் பாலை இன்பமாக வுண்டு, சைவ மெய்ம்மை நெறியாகிய பயிர் வளம் பெறத் திருவுளம் வைத்தருளிய ஞானசம்பந்தன் என்று புகழ் பெருகிய உண்மைக் குருபரனே, உயிரனுபவம் உண்டாயின் அவ்வுணர் வின்கண் உயர்ந்த அருளனுபவம் உண்டாகும்; குற்றமில்லாத அந்த நல்லனுபவத்தால் சுத்த சிவானுபவம் உண்டாகும் என உரைத் தருளினாய். எ.று.

நடை பயின்று தூய மொழி பயிலும் பருவமாதல் விளங்கப் "பயிலும் மூவாண்டு" என உரைக்கின்றார். சிவை - உமாதேவி. சிவனுக்குப் பெண்பாற் பெயர் சிவை என்பது. உமை தந்தது ஞானம் குழைத்த பால் எனச் சேக்கிழார் முதலியோர் கூறுதலால், "சிவை தரு ஞானப்பால்" என்றும், கொடுத்த பாலை மருது உண்டமையின், "மகிழ்ந் துண்டு" என்றும் எடுத்துக் கூறுகின்றார். "இலகு மெந்நெறி சிவநெறி'

(ஞான. பு.) எனச் சேக்கிழார் பெருமான் செப்புதலின், "மெய்ந்நெறி" எனவும், சைவ நெறி ஞானசம்பந்தரால் வேற்றுச் சமயமாகிய கூை நீக்கப் பட்டமை புலப்பட, "மெய்ந் நெறியாம் பயிர் தழைத்துற" எனவும் இயம்புகிறார். சமய ஞானக் குரவராதலால், "ஞானபந்த னென்றேங்கு சற்குருவே" என்று சாற்றுகின்றார். ஞானசம்பந்தன் என்பது ஞானபந்தன் என வந்துளது. பந்த னென்றே தம்மை ஞானசம்பந்தர் கூறுவ துண்மையின், வடலூர் வள்ளல் "ஞானபந்தன்" என நவில் கின்றார். உயிர்கள் படும் துன்பங்கூைக் கண்டறிதல் உயிரனுபவம்; அதனைப் பிற மக்களுயிர்களிடத்துக் கண்டு மன மிரங்குதல், அருளனு பவமாதலின் "அதனிடத்தே ஓங்கு அருளனுபவம்" எனவும், உயிரனு பவத்தினடியாக மிக்குறுதலால் "ஓங்கருள் அனுபவம்" எனவும் இசைக் கின்றார். அருளனுபவம் அருள் ஞானமாய்க் குற்றமில்லாத செம்மை நெறிக்கண் உயிரறிவைச் செலுத்துதலின், "செயிரில் நல்லனுபவம்" என்று சிறப்பிக்கின்றார். இந்த அனுபவம் உலகுயிர்கள் அனைத்தின் பாலும் பரந்து படர்ந்து மேம்படுதலால், "நல்லனுபவத்திலே சுத்த சீவானுபவம் உறும்" என்று கூறுகின்றார்.

இதனால், உயிரனுபவம், அருளனுபவம், சிவானுபவம் மூன்றும் தொகுத்துக் கூறியவாறும். (2)

3228. தத்துவநிலைகள் தனித்தனி ஏறித்
தனிப்பர நாதமாந் தலத்தே
ஒத்ததன் மயமாம் நின்னைநீ இன்றி
உற்றிடல் உயிரனு பவம்என்
றித்துணை வெளியின் என்னைஎன் னிடத்தே
இருந்தவா றளித்தனை அன்றே
சித்தநற் காழி ஞானசம் பந்தச்
செல்வமே எனதுசற் குருவே.

உரை : சித்தர்கள் வாழும் நல்ல சீர்காழிப் பதிக்குரிய ஞான சம்பந்தர் எனப்படும் அருட் செல்வமாகிய என்னுடைய சற்குருவே, ஆன்ம தத்துவ முதலாகவுள்ள தத்துவ நிலை ஒவ்வொன்றையும் தனிக் தனி கண்டு, கடந்து சென்று மேலே யுள்ள ஒப்பற்ற பரநாதமாகிய இடத்தே தனக்கொத்த தன்மயமாய் நின்ற நின்னையின்றி, உயிரளவாய் நின்று திகழ்தல் உயிரனுபவமாகும்; இத்தனைத் தத்துவ வெளியில் என் தன்மை மாறுமல் என்னிலையில் என்னை இருக்கச் செய்தருளினாய். எ.று.

மேற்கூறிய மூவகை யனுபவங்கூையும் விளக்கலுற்ற வடலூர் வள்ளலார் உயிரனுபவம் பெறுமிடத்து அதன் உண்மை நிலையில் நிலமுதல் சிவ மீருகவுள்ள தத்துவங்களினூடு மேற் சென்றும் கீழிறங்கியும் இயங் கும் திறத்தை எடுத்துரைப்பாராய், "தத்துவ நிலைகள் தனித்தனி ஏறித் தனிப்பரநாதமாம் தலத்தே ஒத்த தன்மயமாம் நின்னை நீயின்றி உற்றிடல் உயிரனுபவம்" என உரைக்கின்றார். "ஒத்த தன்மய மாம் நின்னை" எனச் சிவத்தைக் கூறியது, தத்துவந் தோறும் அதுவது வாய்ச் சார்ந்த தன்மயமாகும் ஆன்ம வியல்பு உணர்த்துதற்கு. இத்

தத்துவங்களிற் கலந்து இயலுமிடத்து உயிர் தன் தன்மை இழவாமை புலப்படுத்தற்கு "என்னீன என்னிடத்தே இருந்தவாறளித்தனீன" என மொழிகின்றார். தத்துவம் பலவும் தனித்தனி வெளியாமாதலின், "இத்துணீ வெளி" என இயம்புகின்றார்.

இதனுல் உயிரனுபவம் விளக்கியவாறும். (3)

3229. தனிப்பர நாத வெளியின்மேல் நினது
தன்மயந் தன்மயம் ஆக்கிப்
பனிப்பிலா தென்றும் உள்ளதாய் விளங்கிப்
பரம்பரத் துட்புற மாகி
இனிப்புற ஒன்றும் இயம்புரு இயல்பாய்
இருந்ததே அருள னுபவம்என்
றெனக்கருள் புரிந்தாய் ஞானசம் பந்தன்
என்னும்என் சற்குரு மணியே.

உரை : திருஞானசம்பந்த ரெனப்படும் என் சத்தாகிய குருமணியே ஒப்பற்ற பரநாதமாகிய பரவெளியில் நின்மயம் நின்மயமேயாகி நிலவ அசைவின்றி என்றும் உள்ளதாய் விளங்கி, மேல் கீழ் என்ற பொருள் வகையில் உள்ளும் புறமும் கலந்து, கேட்போர் மகிழ ஒன்றும் உரைத்தற் கரிதாகும் இயல்புடையது அருளனுபவமாகும் என எனக்கு உரைத் தருளினாய். எ.று.

பரநாதத்துக்கு வேருய் ஒன்றும் இன்மையால், "தனிப் பரநாதம்" எனவுரைக்கின்றார். உயிர் போலத் தத்துவங்களோடு கலக்குந்தோறும் தன்மை மாறுவ தின்மை விளங்க, "தன்மயம் தன்மாயமாகி" எனவுரை கின்றார். திருவருள் பரம்பொருளின் சமவேத சத்தியாதலின், "என்றும் உள்ளதாய்" என்றும், எல்லாப் பொருளிலும் கலந்தியங்கும் திறம் பற்றி, "பரம்பரத்துட் புறமாகி" என்றும், இத்தன்மைத் தென இயம்புதற் கில்லாமை நோக்கி, "ஒன்றும் இயம்புரு இயல்பாய் இருந்தது" என்றும் இசைக்கின்றார்.

இதனுல், அருளனுபவத்தை விளக்கியவாறும். (4)

3230. உள்ளத்தாய் விளங்கும் ஒருபெரு வெளிமேல்
உள்ளதாய் முற்றும்உள் ளதுவாய்
ணள்ளதாய் எனதாய் நானதாய்த் தன்தாய்
ணவிற்றருந் தானதாய் இன்ன
விள்ளொ ணு அப்பால் அப்படிக் கப்பால்
வெறுவெளி சிவ அனுபவம் என்
றுள்ளுற அளித்த ஞானசம் பந்த
உத்தம சுத்தசற் குருவே.

உரை : ஞானசம்பந்தரென்ற உத்தம சற்குருபரனே, உன் பொருளாய், விளக்கமுறும் ஒப்பற்ற பெருவெளிக்கு மேலிருப்பதாய், வெளி முற்றும் நிறைந்திருப்பதாய். அப்பெருவெளியின் நடுவிலும் இருப்பதாய்,

எனதாகவும் நானுகவும் தனதாகவும் சொல்லாற் சொல்ல வொண்ணுத தாய் வாயால் உரைப்பரிதாகிய அப்பாலாய், அப்பாலுக்கு அப்பாலாகிய வெறுவெளி சிவானுபவமாகும் என உரைத்தருளினுய். எ.று.

இல்பொருள் நிணைக்கவும் பேசவும் படாமைபற்றி, "உள்ளதாய்" என்றும், உணர்வார் உணர்வின்கண் உளதாதல் ஒளிர்தலால், "விளங்கும் ஒருபெருவெளிமேல் உள்ளதாய்" என்றும் உரைக்கின்ருர். உள்ளதற்கு உளதாகும் இடம் குறித்தல் வேண்டுதலின் "ஒருபெரு வெளி மேல் உள்ளதாய்" என்று கூறுகின்ருர். "மேல்" என்பதால் பெருவெளிக்கண் இலதோ என ஐயுருமைப் பொருட்டு, "முற்றும் உள்ளதுவாய் நள்ளதாய்" என இயம்புகின்ருர். பெருவெளிக்குள் உறையும் உயிரில் பொருளும் உயிர்ப்பொருளுமாதல் தோன்ற, "எனதாய் நானதாய்" எனவும், தான் உண்மை காட்டற்குத் "தானதாய்" எனவும் சாற்றுகின்ருர். நவிற்றல் சொற்களாற் சொல்லுதல். சொற் பொருள் வாயிலாகச் சொல் சொல்ல வொண்ணுமையுரைத்தற்கு "நவிற்றருந் தானதாய்" என்றும், சொல்ல வொண்ணுததை வாய் வழி ஒலிக் குறிப் பாலும் முகக் குறியாலும் தெரிவித்தலுண்மையின், "விள்ளொணு அப்பால்" என்றும், "அப்பாலுக் கப்பால்" என வழங்குவது பற்றி "அப் படிக்கப்பால் வெறுவொளி" என்றும் இனிதியம்புகின்ருர். "அப்பாலுக் கப்பாலுக் கப்பாலானே" (ஆரூர்) எனவும், "அப்பாலுக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானுய்" (அம்மானே) எனவும் பெரியோர் குறிப்ப தறிக. சிவம் தவிர "அப்பாலில் வேறு யாதும் இன்மைபந்றி "வெறு வெளி" எனப்படுகிறது.

இதனுல் சிவானுபவம் தெரிவித்தவாரும். (5)

3231. பொத்திய மூல மலப்பிணி தவிர்க்கும்
பொருள் அரு ளனுபவம் அதற்குப்
பத்தியம் உயிரின் அனுபவம் இதனைப்
பற்றறப் பற்றுதி இதுவே
சத்தியம் எனஎன் தனக்கருள் புரிந்த
தனிப்பெருங் கருணைஎன் புகல்வேன்
முத்தியற் சிவிகை இவர்ந்தருள் நெறியின்
முதலர சியற்றிய துரையே.

உரை : முத்துக்களாலான சிவிகை மேல் ஏறித் திருவருட் சிவ நெறிக் கரசராகிய ஞானசம்பந்தப் பெருமானே, உயிர்த் தொகையை அனுதியாகப் பிணித்திருக்கும் மூல மலத்தின் பிணிப்பைப் போக்குவது அருளனுபவமாகும்; அதற்குரிய பத்தியமாவது உயிரனுபவம்; வேறு பொருண் மேற் பற்றெல்லாம் நீங்க நீக்கிக் கைப்பற்றுக; இது உண்மை என எனக் கறிவுறுத்தருளிய நினது ஒப்பற்ற பெரிய கருணை நலத்தை என்னென்று சொல்லுவேன். எ.று.

திருஞானசம்பந்தர் திருவரத்துறைக்கண் முத்துச் சிவிகைபெற்றதும் அப்போது அரத்துறை மேவிய சிவனருள் விதந்தோதியதும் பின்னர்த்

தமிழ்நாட்டின் கண் சிவஞானப் பணி புரிந்ததும் நிலைக்கப்படுதலால் "முத்தியற்சிவகை இவர்ந்து அருணெறியின் முதலரசியற்றிய துரையே" எனப் புகல்கின்றார். உயிர்களை அனுதியாகப் பிணித்துக் கொண்டிருப்பது பற்றி ஆணவமாகிய மூலமலத்தைப் "பொத்திய மூலமலப் பிணி" என்று மொழிகின்றார். பொத்துதல் - பொருந்துதல். ஏனைமாயை - கன்மங்களான மலங்கள் உயிரைப் பற்றுதற்கு ஏதுவாகலின், "மூல மலம்" எனக் கூறுகின்றார். பிணி - பிணிப்பு; கட்டு என்றும் வழங்கும். மலப்பிணிப் பால் உளதாகும் இருள் திருவருளொளியால் நீங்குதல் பற்றி, "மலப்பிணி தவிர்க்கும் பொருள் அருள்" எனப் போதிக்கின்றார். அனுபவம் - காட்சி. பத்தியம் - உணவு ஒழுக்கமுறை. நோய்க்கு மருந்துண்பார் மேற் கொள்ளும் உணவு முறையும் ஒழுக்க நெறியும் பத்தியம் எனப்படும். அருளனுபவம் உயிர் மருந்தாதல் புலப்பட "அதற்குப் பத்தியம் உயிரின் அனுபவம்" என அறிவிக்கின்றார். "சத்தியம் தவறினும் பத்தியம் தவருதே" என வரும் உலகியற் பழமொழி பற்றி, "இதனைப் பற்றறப் பற்றுதி, இதுவே சத்தியம்" என்று உரைக்கின்றார். பிற பொருள் மேல் உளதாகும் பற்றுக்களை விலக்குதலே பத்திய வகையாதலால், "பற்றறப் பற்றுதி" என்று பகர்கின்றார். பேரருளுடையார்க் கல்லது இவ் வுண்மையை யுரைக்கும் உள்ள முண்டாகாதாகலின், "தனிப் பெருங் கருணை என் புகல்வேன்" எனப் பராவுகின்றார்.

இதனால் உயிரனுபவம் விளக்கியவாறும். (6)

3232. அடியெனல் எதுவோ முடியெனல் எதுவோ
அருட்சிவ மதற்கெனப் பலகால்
படியுற வருந்தி இருந்தஎன் வருத்தம்
பார்த்தரு ளால்எழுந் தருளி
மிடியற எனைத்தான் கடைக்கணித் துனக்குள்
விளங்குவ அடிமுடி என்றுய்
வடிவிலாக் கருணை வாரியே மூன்று
வயதினில் அருள்பெற்ற மணியே.

உரை : குறைவில்லாத கருணைக் கடலே, மூன்று வயதில் சிவனருளைப் பெற்ற ஞானமணியே, அருட்டிருமேனியை யுடைய சிவ பரம்பொருட்குத் திருவடியும் திருமுடியும் யாவையோ என்று இந்நில வுலகத்தில் பலகால் எண்ணி வருந்திக் கிடந்த என் வருத்தமெல்லாம் கண்டு, அருள் கொண்டு, எதிரே வந்தருளி என் குறை முற்றும் நீங்கத் தன் கடைக்கண்ணாற் பார்த்தருளி, அந்த அடியும் முடியும் உனக்குள்ளே விளங்கித் தோன்றும் என அறிவித்தாய். எ.று.

மழை முகில் கொண்ட விடத்தும் குறை படாத இயல்பினது கடலா தலின், "வடிவிலாக் கருணை வாரியே" என வுரைக்கின்றார். "கொளக் குறை படாமையின் முந்நீரனைய" (பதிற். 90) எனச் சான்றோர் கூறுவ தறிக. வாரி - கடல். வடிதல் - குறைதல். ஞானவொளியுடைமையால் "மணியே" எனப் புகழ்கின்றார். படி - பூமி. சிவத்துக்கு அடியும் முடியும் யாவை, எவ்விடத்தன என எண்ணியேங்கினமை விளங்கப் "பலகாற்

படியுற வருந்தியிருந்த என் வருத்தம்" எனக் கூறுகின்றார். திருப்பதியந் தோறும் திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிய குறிப்பு ஞானசம்பந்தரால் ஓதப்படுதலின், இவ்வாறு ஐயுறுதற் கிடமுண்டாயிற்றென்க. மிடி-குறைவு; உணர்வின் இன்மையென்றுமாம். கடைக் கணித்தல் - ஈண்டு அருளுதல் குறித்ததாம். அவற்றை உன்னின் வேருக நினைத்தல் வேண்டா; உனது உணர்வினுள் காணப்படும் என்பாராய், உனக்குள் விளங்குவ அடி முடி என்றுரைத்" என இயம்புகின்றார்.

இதனால் சிவத்தின் அடிமுடி பற்றிய ஐயம் தீர்ந்தவாறும். (7)

3233. செவ்வகை ஒருகால் படுமதி அளவே
செறிபொறி மனம்அதன் முடிவில்
எவ்வகை நிலையும் தோற்றும்நீ நினக்குள்
எண்ணிய படிஎலாம் எய்தும்
இவ்வகை ஒன்றே வருத்தமில் வகைஎன்
றெனக்கருள் புரிந்தசற் குருவே
தெவ்வகை அமண இருளற எழுந்த
தீபமே சம்பந்தத் தேவே.

உரை : பகைமை பூண்ட அமண இருள் நீக்க, எழுந்த ஞானதீபமே திருஞானசம்பந்தராகிய தெய்வமே, சற்குருவே, ஒரொருகால் செம்மை நெறிக்கண் செல்லும் இயற்கையறிவளவு, செறிகின்ற ஐம்பொறியளவாம்; அதன் முடிவில் மனம் நின்று எவ்வகை நிலைகளையும் தோற்றுவிக்கும்; நினக்குள் நீ நினைக்கின்றவை யெல்லாம் தெளிவுறும்; இந்த நெறி யொன்னும் வருத்தம் பயவாத நெறியாம் என எனக்கு அறிவுறுத் தருளினாய். எ.று.

அறிவின்கண் தோன்றும் கருத்துக்கள் அனைத்தும், பொய் படாது ஒரொரு சமயத்தில் செம்மையாகவும் தெளிவாகவும் உண்மையாகவும் அமைவதுண்டாதலின், "செவ்வகை யொருகாற் படும் மதி" எனக் கூறுகின்றார். மதி - இயற்கையறிவு. இயற்கை யறிவு பொறி புலன் களால் எய்தும் உணர்வு வளத்தைச் சார்ந்தவையாதலால், "மதியளவு செறி பொறி" எனச் சொல்லுகின்றார். பொறி - கண் முதலிய ஐந்து; பொறியைந்தாலும் உளதாகும் இயற்கையறிவு மதியெனப்படுகிறது. "மதி நுட்பம் நூலோடுடையார்" (குறள்) என்பது காண்க. அறிவு வளர்ச்சிக்கு, பொறியுணர்வு அடிப்படையாதலால் அதனை முன்னேர் வாயிற் காட்சி யெனவும் வழங்குவர். ஐம்பெரும் பூதங்களாலாகிய உலகனைத்தையும் தம்முட் செறியக் கொள்ளுதலால், கண் முதலிய பொறிகளைச் "செறி பொறி" எனச் சிறப்பிக்கின்றார். பொறிகள் கொண்டுய்க்கும் உணர்வுகளைத் தொகுத்தும் வகுத்தும் தன்னுட் கொள் வது மனமாதல் தோன்ற "மனம் அதன் முடிவில் எவ்வகை நிலையும் தோற்றும்" எனவுரைக்கின்றார். பொறியுணர்வின் முடிவில் மனம் நின்று காண்பது மானதக் காட்சி என வழங்குகிறது. மனக்கண்ணில் உருவும் அருவுமாகிய யாவும் காட்சிப் படுதலால் "நினக்குள் நீ எண்ணிய படி யெலாம் எய்தும்" என்று இயம்புகின்றார். வாயிற் காட்சி மானதக்

காட்சி என இயலும் இவ்வகையால் அறிவுக்காட்சியாகிய நன்ஞானம் உருவாதலால், "இவ்வகை யொன்றே வருத்தமில் வகை" என மொழி கின்றார். வருத்த முடைய வகையு முண்டாதல் பற்றி "வருத்தமில் வகை" என விதந்துரைக்கின்றார். வருத்தமுடையன யோகக் காட்சியும் தன் வேதனைக் காட்சியும் பிறவுமாம் என அறிக. அளித்த குருவே யெனப் பெயரெச்சத் தொடராற் கூறினராயினும் பொருள் விளக்கம் பற்றி "அளித்தாய் குருவே" என முற்றுத் தொடராக்கப்பட்டது. தெவ் - பகை.

இதனால், அறிவுக் காட்சியான ஞானக் காட்சி விளக்கியவாறும். (8)

3234. முன்புறு நிலையும் பின்புறு நிலையும்
முன்னிநின் றுளமயக் குறுங்கால்
அன்புறு நிலையால் திருநெறித் தமிழ்கொண்
டையநீத் தருளிய அரசே
என்புபெண் ணுருவோ டின்னுயி ரதுகொண்
டெழுந்திடப் புரிந்துல கெல்லாம்
இன்புறப் புரிந்த மறைத்தனிக் கொழுந்தே
என்னுயிர்க் குயிர்எனுங் குருவே.

உரை : திருமயிலையில் குடத்திற் பெய்திருந்த என்பைப் பெண் ணுருவும் இன்னுயிரும் கொண்டு எழச் செய்து அதனைக் கண்டும் கேட்டும் உலகவர் இன்பமடையச் செய்த வேதியர் குலக் கொழுந்தாய் என் உயிர்க் குயிருமாகிய குருமுதல்வனே, முன்னைக் கால நிலையையும் பின்பு நிகழ விருக்கும் நிலையையும் மனத்தில் எண்ணியாய்ந்து, ஐயம் தோன்றி அலைக்கின்ற போது, அன்பு நெறியில் நின்று திருநெறித் தமிழ் கொண்டு ஐயத்தைப் போக்கியருளினாய். எ.று.

என்பு - திருமயிலைப் பூம்பாவையின் என்பு; இஃது எலும்பெனவும் வழங்கும். என்புக்கூடு கண்டு "மண்ணினிற் பிறத்தார் பெறும் பயன்மதி சூடும் அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல், கண்ணினாலவர் திருவிழாப் பொலிவு கண்டார்தல், உண்மையா மெனில் உலகர் முன் வரு கென" (திருஞான. பு) ஞானசம்பந்தர் உரைப்பவும், "குடம் உடைந் தெழுவாள் போற்று தாமரைப் போதவிழ்ந் தெழுந்தனள் போன்றாள்" எனச் சேக்கிழார் எடுத்துரைக்கின்றார். உலகு, உலகு மக்கள். வேதியர் குலத்துச் சிறுவராதல் பற்றி, ஞானசம்பந்தரை "மறைத் தனிக் கொழுந்து" என வுரைக்கின்றார். அந்த ஞானசம்பந்தர்பால் தமக்குள்ள உண்மையன்பு விளங்க "என்னுயிர்க் குயிரெனும் குருவே" என்று வடலூர் வள்ளல் இயம்புகின்றார். முன்னை நாட்களிலிருந்த சமய சமுதாய நிலைமையையும் எதிர்காலத்தில் எய்தவிருக்கும் நிலைமையை யும் இன்றுள்ள சூழ்நிலையையும் எண்ணியே, செயல்படவேண்டுதலின், "முன்புறு நிலையும் பின்புறு நிலையும் முன்னி நின்று" என மொழிகின்றார். நிகழும் சூழ்நிலை தெளிவின்றி ஐயத்தைப் பயப்பது ஒருதலையன்மையின் "உளம் மயக்குறுங்கால்" என்று இசைக்கின்றார். காய்தல் உவத்தலின்

ஆய்தல் வேண்டுமாகலின் "அன்புறு நிலையால்" எனவும், ஆய்தற்கு நேரிய கருவியும் துணையுமாவது திருநெறித் தமிழ் என்பாராய், "திருநெறித் தமிழ் கொண்டு ஐயம் நீத்தருளிய அரசே" எனவும் இயம்புகின்றார். அனல் வாதப் புனல் வாதங்களில் முடிவு கண்டதும், ஆண்பனை பெண்பனை யாகியதும், என்பு பெண்ணுருவாயதும் பிறவும் தாம் பாடிய திருநெறித் தமிழாலேயோதல் காண்க. திருநெறி, சிவத்தை மேற்கொண்டொழுகும் சிவநெறியாதலால் அது பொருளாகப் பாடிய தமிழ்த் திருப்பதியங்களைத் "திருநெறித் தமிழ்" என்று கூறுகின்றார். தமது திருப்பதியத்தைத் திருஞானசம்பந்தர் "திருநெறிய தமிழ்" (பிரம) என வுரைப்பது காண்க.

இதனால் திருநெறித் தமிழின் சிறப்புரைத்துப் பாராட்டியவாறும். (9)

3235. வருபகற் கற்பம் பலமுயன் றாலும்
வரலரும் திறனெலாம் எனக்கே
ஒருபகற்பொழுதில் உறஅளித் தனைநின்
உறுபெருங் கருணைஎன் உரைப்பேன்
பெருமண நல்லூர்த் திருமணங் காணப்
பெற்றவர் தமையெலாம் ஞான
உருவடைந் தோங்கக் கருணைசெய் தளித்த
உயர்தனிக் கவுணிய மணியே.

உரை : நல்லூர்ப் பெருமணம் என்னுமிடத்தே நடந்த தமது திருமணம் காணவந்திருந்த நன்மக்கள் அனைவரும் சிவானந்த ஞானத் திருவுருப் பெற்றுச் சிவன் திருவடி நீழலையடைந்திடத் திருவருள் புரிந்த உயர்வுடைய ஒப்பற்ற கவுணியர் குலத்திற்குச் சிகாமணியாகிய திருஞானசம்பந்தப் பெருமானே, மேன்மேல் வருகின்ற ஆண்டுகள் பல முயன்றாலும் எய்துதற் கரிய நலமனைத்தும் ஒருநாளைப் பொழுதில் எனக்கு எய்த அருளினையாதலின், அதற் கேதுவாகிய நின்னுடைய கருணையை என்னென்று புகழ்வேன். எ.று.

பெருமண நல்லூர், நல்லூர்த் திருமணம் என அந்நாளில் வழங்கிற்று; இந்நாளில் அது சோழ நாட்டுக் கொள்ளிடத் தென்கரை மேல் சீர்காழி வட்டத்து ஆச்சாள்புரம் என வழங்குகிறது. திருமணம் காண வந்தோர் அனைவர்க்கும் வீடுபேறெய்திய திறத்தை, "ஆறுவகைச் சமயத்திலருந்த வரும் அடியவரும் கூறுமறை முனிவர்களும் கும்பிட வந்தணைந்தாரும் வேறு திருவருளினால் வீடு பெற வந்தாரும், ஈறில் பெருஞ் சோதியினுள் எல்லாரும்" (ஞான. பு) புக்கனர் என்று சேக்கிழார் பெருமான் பாடுவது காண்க. சிவன் திருவடி நீழல் எய்துவோர் பூத வுடலின் நீங்கிச் சிவஞானத் திருவுருப் பெற்று அடைவர் எனப் பெரியோர் உரைத்தலால், "ஞான வுருவடைந் தோங்க" என நவில்கின்றார். கற்பம் - ஆண்டு பல கொண்ட காலவளவு. மிகப் பல ஆண்டுகள் முயன்று பெறும் நலத்தை ஒரு சிறு பொழுதில் தாம் பெற்றமை கூறுவாராய், வடலூர் வள்ளல், "வருபகற் கற்பம் பல முயன்றாலும் வரலரும் திறனெலாம் எனக்கே

ஒருபகற் பொழுதில் உறவளித்தனே" என்று உரைக்கின்றார். அஃது இன்னதெனத் தெரியவில்லை.

இதனால், திருஞானசம்பந்தரின் திருவருட் சிறப்பை எடுத்தோதிய வாறும். (10)

பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3236. சீரார் சண்பைக் கவுணியர்தம் தெய்வ மரபில் திகழ்விளக்கே
தெவிட்டா துளத்சில் தித்திக்கும் தேனே அழியாச்
செல்வமே
காரார் மிடற்றுப் பவளமலைக் கண்ணின் முளைத்த கற்பகமே
கரும்பே கனியே என்இரண்டு கண்ணே கண்ணிற்
கருமணியே
ஏரார் பருவம் மூன்றில்உமை இனிய முலைப்பால் எடுத்தூட்டும்
இன்பக் குதலைமொழிக்குருந்தே என்ஆ யிருக் கொரு
துணையே
பேரார் ஞான சம்பந்தப் பெருமானேநின் திருப்புகழைப்
பேசு கின்றேர் மேன்மேலும் பெருஞ்செல் வத்தில்
பிறங்குவரே.

உரை : சிறப்புப் பொருந்திய சீர்காழி வேதிய ரினத்துக் கவுணியர் குலத்தில் தோன்றிய ஞான விளக்கமே, நினைப்பவர் மனத்தின்கண் தெவிட்டாமல் இனிக்கின்ற தேன் போன்றவனே, தேய்வில்லாத செல்வ மாகியவனே, கரிய கழுத்தையுடைய பவளமலை போன்ற சிவன்பால் தோன்றி வளர்கின்ற கற்பகமே, கரும்பே, கனி போல்பவனே, என்னுடைய கண்ணையும், கண்களில் ஒளிரும் கருமணியையும் ஒப்பவனே, அழகிய மூன்றுமாண்டில், உமாதேவி யெடுத்து, இனிய முலைப்பாலை யுண்பிக்கும் இன்பந் தரும் குதலைச் சொற்களைப் பேசும் இளங் குருத்துப் போல்பவனே, எனது அரிய உயிர்க்குத் துணையாகியவனே. பெயராற் சிறந்த ஞானசம்பந்தப் பெருமானே, நின்னுடைய திருமிக்க புகழை நாளும் ஓதுபவர் பெருஞ் செல்வ மெய்தி மேன்மை யுறுவர், எ.று.

சண்பை-சீர்காழிக்குரிய பெயர் பன்னிரண்டனுள் ஒன்று; "பிரமனூர் வேணுபுரம் புகலி வெங்கு பெருநீர்த் தோணி, புரமன்னு பூந்தராய் பொன்னஞ் சிரபுரம் புறவம் சண்பை, அரன் மன்னு தண்காழி கொச்சை வய முள்ளிட்டங்காதியாய, பரமனூர் பன்னிரண்டாய் நின்ற திருக்கழுமல நாம் பரவு மூரே" எனத் திருஞானசம்பந்தர் கூறுவது காண்க. பூசுரர் குடியாதலால் "தெய்வ மரபு" எனச் சிறப்பிக்கின்றார். உலகில் வழங்கும் தேனை விலக்குதற்குத் "தெவிட்டாது உள்ளத்தில் தித்திக்கும் தேன்" என்கிறார். கரிய கழுத்தும் பவள நிறமும் உடையராதலின் பரமசிவனை, "காரார் மிடற்றுப் பவளமலை" எனவும், சிவன்பால் தோன்றிய முருகனுடைய அமிசமாக ஞானசம்பந்தர் கருதப்படும் குறிப்புப் புலப்பட, "பவள மலைக்கண் முளைத்த கற்பகமே" எனவும் இயம்புகிறார். இன்

சாரியைத் தோற்றம் வேண்டாத் தொகுதிக்கண் வந்தது. கற்பகம்- தேவருலகத்துத் தாவரம். ஏர்- அழகு. வளர் பருவமாதலால், "ஏரார் பருவம்" என வுரைக்கின்ருர். "முகிழ்ப்பால்" என்பதனுல் எடுத் தூட்டல் கூறுகின்ருர். மூன்ரும் வயதில் பேசும் மொழி நிரம்பாமை பற்றி, "குதலை மொழிக் குருந்தே" எனக் குறிக்கின்ருர். முதிர்ந்தோர்பால் தோன்றின் இகழ்ச்சி பயப்பதாயினும், இளையோர்பால் இன்பம் பயக்கும் நிலைமைத் தாதலால், "இன்பக் குதலை மொழி" என இயம்புகிருர். குருத்து - குருந்து என வந்தது. ஞானசம்பந்தப் பேர் புதுமையும் பொருணிறைவும் உடையதாதல் கண்டு, "பேரார் ஞானசம்பந்தப் பெருமானே" என்று உரைக்கின்ருர். ஞானசம்பந்தம் திருவருள் தொடர்பு காட்டி அருட் செல்வத்தால் உயர்விப்பது புலப்பட, "பெருஞ் செல்வத்திற் பிறங்குவர்" என விளம்புகின்ருர்.

இதனுல் ஆராக் காதலன்புற்று, ஞானசம்பந்தப் பெருமானைப் பராவியவாரும். (11)

10. ஆளுடைய அரசுகள் அருள்மாலை

அஃதாவது, திருவருள் ஆட்சி பெற்ற திருநாவுக்கரசரின் திருவடி பராவி அருளறிவு பெற விழைந்து பாடிய சொன்மாலை என்பதாம். நாவுக் கரசர் என்பது சொல்லுக்கரசர் எனப் பொருள் படுவது பற்றிச் சான்றோர் கள் அவரைச் சொல்வேந்தர், சொல்லரசர், நாவின்மன்னர் என்றெல்லாம் பாராட்டுவர். இச்சொல்மாலை நாளும் பாராயணத்துக் குரியது என்பது குறிப்பாதலால் அந்தாதித் தொடையில் அமைந்துளது. இதன்கண், நாவரசரின் நாநலம் பாராட்டித் தமக்கு அவரது திருவடி பரவும் நல்லொழுக்க முண்டாக அருள வேண்டும் என்றும், அவரது திருவடியை வழிபடும் அன்பரிடத்து அன்பு செய்யும் தன்மையை அருள வேண்டும் என்றும் வடலூர் வள்ளல் வேண்டுகின்றார். ஞான வாழ்வு அருளுமாறு வேண்டித் தமது தகுதியின்மையை எடுத்தோதி வணங்குகின்றார். திருப்புகலூர்த் திருத்தாண்டக நலத்தையும் அப்பூதி யடிகளின் சிறப்பை யும் இங்கே காணலாம்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3237. திருத்தகுசீர் அதிகைஅருள் தலத்தின் ஓங்கும்
சிவக்கொழுந்தின் அருட்பெருமைத் திறத்தால் வாய்மை
உருத்தகுமெய் உணர்ச்சிவடி வாகிச் சைவ
ஒளிவிளக்க நாவரசென் றிருபேர் பெற்றுப்
பொருத்தமுற உழவாரப் படைகைக் கொண்ட
புண்ணியனே நண்ணியசீர்ப் புனித னேஎன்
கருத்தமர்ந்த கலைமதியே கருணை ஞானக்
கடலேநின் கழல்கருதக் கருது வாயே.

உரை : மேன்மை தங்கியிருக்கின்ற திருவதிகையாகிய அருள் நிறைந்த திருப்பதியின்கண் உயர்ந்து விளங்கும் சிவ பரம்பொருளின் திருவருட் பெருமையால் வாய்மை யுருவாகிய மெய்ம்மை யுணர்வின் வடிவாய், சைவ நெறியின் ஒளி திகழ, நாவுக்கரசர் என ஒரு பெயர் தாங்கி, மேற் கொண்ட ஒழுக்கத்திற்குப் பொருத்தமாக உழவாரப் படையைக் கையிற் கொண்ட புண்ணியனே, சிறப்புப் பொருந்திய தூயனே, என் உள்ளத்தில் எழுந்தருளும் கலை நிறைந்த முழுமதி போன்றவனே, நின் திருவடியை நினைந்து பரவுதற்கு எனக்கு அருளுக எ.று.

ஆழ்ந்த நீர் பெருகும் ஆற்றங்கரையில் குளிர் மரச்சோலையிடை யமைந்து அழகு மிக்கிருக்கும் பதியாகலின், ''திருத்தகு சீர் அதிகை'' என்று சிறப்பிக்கின்றார். வழிபடுவோர் நல்லருள் பெறும் தலமாதல் பற்றி,

''அருட்டலம்'' எனப் புகழ்கின்றார். திருநாவுக்கரசரின் பிறப்பே திருவருளால் தோன்றிய தென்றற்கு ''அருட் பெருமைத் திறத்தால்'' எனவும், வாய்மை, யொழுக்கமும், மெய்யுணர்வும் உருக் கொண்டாற் போல்வது நாவரசின் மெய்த் தோற்றம் என்றற்கு ''வாய்மை யுருத்தகு மெய்யுணர்ச்சி வடிவாகி'' எனவும், அவரது தோற்றத்தால் தமிழ்நாட்டில் சைவ நெறி வளம் பெற்ற திறம் வியந்து, ''சைவ வொளி விளங்க'' எனவும் விளம்புகின்றார். உணர்வொழுக்கங்கட்கு ஒப்ப உழவாரப் படையைக் கைக்கொண்டமையின் ''பொருத்தமுற உழவாரப் படை கைக் கொண்ட புண்ணியனே'' எனப் புகல்கின்றார். உழவாரத் தொண்டு சிவ புண்ணியமாதலால், ''புண்ணியனே'' என்று கூறுகின்றார். திருக் கோயில் வலம் வருவார்க்குக் கல்லும் புல்லும் மிக்கு ஊறு செய்யாதபடி அவற்றைக் களைந்து தூய்மை செய்வது உழவாரத் தொண்டு. கோயிற் சுவர்களில் முளைத்துக் கட்டிடத்துக்குக் கேடு விளைவிக்கும் செடி கொடி களைப் போக்குவதும் உழவாரப் பணியாதலால், ''சீர் நண்ணிய புனிதனே'' எனப் போற்றுகின்றார். கலைமதி- கலை முற்றவும் நிறைந்த முழுச் சந்திரன்; கலைவகை பலவும் கற்றவராதலால், ''கருத்தமர்ந்த கலை மதியே'' எனக் கூறுகின்றார். ''தயாமூலதன்மம்'' என்ற கருணை யறமும் அதற்கு வேண்டும் ஞானமும் நிறைந்தவராதலின், ''கருணை ஞானக் கடலே'' என்று புகழ்கின்றார். அவரது திருவடியை நினைந்து பரவுதற்கும் திருவருள் இன்றியமை யாமை பற்றி, ''கழல் கருதக் கருதுவாயே'' என வேண்டுகின்றார். கருதுவாய் என ஈண்டுக் கூறியது, என்னுள்ளத்தில் அருளால் வீற்றிருந்து யான் மனத்தில் நினைத்தற்கு அருட்டுணை புரிக என்பதாம்.

இதனால், திருநாவுக்கரசரின் திருவடி பரவுதற்குத் திருவருட்டுணை வேண்டிக் கொண்டவாறும். (1)

3238. வாய்மையிலாச் சமணுதர் பலகாற் செய்த
வஞ்சமெலாம் திருவருட்பேர் வலத்தால் நீந்தித்
தூய்மைபெறும் சிவநெறியே விளங்க ஓங்கும்
சோதிமணி விளக்கேஎன் துணையே எம்மைச்
சேய்மைவிடா தணிமையிடத் தாள வந்த
செல்வமே எல்லையிலாச் சிறப்பு வாய்ந்துள்
ஆய்மையுறு பெருந்தகையே அமுதே சைவ
அணியேசொல் லரசெனும்பேர் அமைந்த தேவே.

உரை : வாய்மை யொழுக்கமில்லாத சமணர்களாகிய ஏழை மக்கள் செய்த வஞ்சச் செயல்களாகிய கடலைத் திருவருள் என்னும் பெரிய புணையின் வலிமையால் கடந்து, தூய்மை நல்கும் சிவநெறியே நாட்டில் விளங்க உயர்ந்த ஒளியையுடைய மணி போல்பவரே, எனக்குத் துணையாகியவரே, எங்களைத் தூரத்தே விலகிச் செல்ல விடாமல் அருகில் வைத்து அருள் புரிய வந்த செல்வமாகியவரே, எல்லையில்லாத சிறப்புற்று உள்ளத்தின்கண் மெய்ம்மை ஆராய்ச்சியைச் செய்தொழுகும் பெருந்தகைமையுடையவரே, ஞான அமுதமானவரே, சைவத்துக்கு அணியானவரே, நாவுக்கரசர் என்னும் திருப்பெயர் கொண்ட தேவரே, எளியேன் வணங்குகின்றேன். எ.று.

நாவரசர் முதலிய பெருமக்கள் காலத்தில், சமண சமயம் அரசாதரவு பெற்றுப் பொய்யும் வழுவும் புகுந்து மெலிந்தமையின், மெலிவுக் கிடந்தந்தவர்களை, "வாய்மையிலாச் சமணர்" என்று கூறுகின்றார். நாவுக்கரசரால் தங்கள் சமயம் சிறப்பிழக்கு மென்றஞ்சி நீற்றறையிற் றள்ளியும், நஞ்சமு தருத்தியும், கடலிற்றள்ளியும் துன்புறுத்தினமையின். "வஞ்சமெலாம் திருவருட்பேர் வலத்தால் நீந்தி" என மொழிகின்றார். நீந்தி என்றதனால் வஞ்சமாகிய கடல் எனப் பெய்துரைக்கப் பட்டது, நஞ்சு கொடுத்ததை வஞ்சனைப்பாற் சோருக்கி, "வழக்கிலா அமணர் தந்த நஞ்சமுதாக்குவித்தார் நனிபள்ளியடிகளாரே" என்றும், கல்லிற் பிணித்துக் கடலிற்றள்ளியதைக் "கல்லினேடெனைப் பூட்டிய மண்கையர், ஒல்லை நீர் புக நூக்க என் வாக்கினில், நெல்லு நீள்வயல் நீலக் குடியரன், நல்ல நாமம் நவிற்றியுப்ந்தேனே" (நீலக்) என்றும் நாவுக்கரசரே கூறுகின்றார். திருவருட் பேர் வலம் எனக் கொண்டு திருவருளின் பெயராகிய "சிவ" என்பதன் வலிமையால் பொருள் கூறலும் உண்டு. மக்களுயிரோடே நிற்கும் சமயங்களின் வேறுபட்டு உயிர் வகையனைத்தையும் தழுவி நிற்கும் தூய்மையும் பெருமையும் உடையதாதலால், "தூய்மை பெறும் சிவநெறி" எனச்சொல்லுகின்றார். நாவரசரின் அருளிச் செயல்களால் சிவநெறிக்கு ஏற்ற முண்டானமை தோன்றற்குச் "சிவநெறி விளங்க வோங்கும் சோதி மணி விளக்கே" எனச் சிறப்பிக்கின்றார். விளங்கா மொழியாலும் இனிது தெளியப் படாத உரைகளாலும் மக்களை நெடிது நீங்க விடாமல், தமிழ் நாட்டவர் தெரிந்த மொழியாலும், எளிய இனிய உரைகளாலும் மக்களைத் தழுவிக் கொண்டமை பற்றி, "சேய்மை விடாது அணிமையிடத்து ஆள வந்த செல்வமே" எனவுரைக்கின்றார் ஆய்தல் - ஆய்மை என வந்தது. பொருள்களைக் காரண காரிய முறையில் ஆய்ந்து வகுத்து முறையாக இனிய இசை நலம் பொருந்தப் பாடியுள்ள தாண்டகங்கள் நாவரசரின் ஆய்வுப் பண்பை எடுத்துக் காட்டுதலின், ஆய்மையுறு பெருந்தகையே" எனக் கூறுகின்றார்.

இதனால், நாவுக்கரசரின் நாநலம் பாராட்டியவாறும். (2)

3239. தேவரெலாம் தொழுந்தலைமைத் தேவர் பாதத்
திருமலரை முடிக்கணிந்து திகழ்ந்து நின்ற
நாவரசே நான்முகனும் விரும்பும் ஞான
நாயகனே நல்லவர்க்கு நண்ப னேஎம்
பாவமெலாம் அகற்றிஅருட் பான்மை நல்கும்
பண்புடைய பெருமானே பணிந்து நின்பால்
மேவவிருப் புறும்அடியார்க் கன்பு செய்ய
வேண்டினேன் அவ்வகைநீ விதித்தி டாயே.

உரை : தேவர்கள் அனைவரும் தொழுது துதிக்கும் தேவதேவனான சிவபெருமானுடைய, திருவடியாகிய தாமரை மலரைத் தலைமேற் கொண்டு விளக்கம் பெறுகின்ற நாவுக்கரசரே, பிரமதேவனும் விழைகின்ற ஞான நாயகரே, நல்லவர்களாகிய பெருமக்கட்கு நண்பராகியவரே, யாங்கள் செய்துள்ள பாவமெல்லாம் போக்கி, அருள் ஞானம் பெறும் தன்மையைத் தருகின்ற பண்பையுடைய பெருமானரே, நின்னைப்

பணிந்து, நின்னை அடைய வேண்டுகின்றேனுகலின், யான் அதற்குரிய திறம் பெற அருள வேண்டும். எ.று.

தேவதேவனுதலால், "தேவரெலாம் தொழும் தலைமைத் தேவர்" எனச்சொல்லுகின்றார். "தொழப்படுந் தேவர் தொழப்படுவான்" (தனி) எனத் திருநாவுக்கரசர் தெரிவிக்கின்றமை காண்க. சிவன் திருவடி தமது சென்னியிலிருப்பதாக எண்ணி மகிழ்பவராதலால், "தேவர் பாதத் திருமலரை முடிக்கணிந்து திகழ்ந்து நின்ற நாவரசே" என்று நவில் கின்றார். வேத வைதிக ஞான மூர்த்தியாதலால் சிறப்பும்மை பெய்து "நான்முகனும் விரும்பும் ஞான நாயகனே" எனப் புகழ்கின்றார். மன மொழி மெய்களால் தூயவர் நல்லவராவர்; அவரெல்லாம் பாராட்டும் நலமுடைமை கண்டு "நல்லவர்க்கு நண்பனே" என்று போற்றுகின்றார். உயர்ந்தோர் தம்மையடைந்த தாழ்ந்தோருடைய பாவங்களை மன்னித்துப் போக்கி நல்லவராக்குதல் விளங்க, "எம் பாவமெலாம் அகற்றி அருட்பான்மை நல்கும் பண்புடைய பெருமானே" என்று பகர் கின்றார். "வெறுப்பனவே செய்யும் என் சிறுமையை நின் பெருமை யினுற் பொறுப்பவனே" (அடைக்) எனத் திருவாசகம் ஓதுவதறிக. நின் பால் அன்பு செய்வார்பால் தமக்கு அன்புண்டாக வேண்டும் என வேண்டுகின்றாராதலின், "நின்பால் மேவ விருப்புறும் அடியர்க் கன்பு செய்ய வேண்டினேன் அவ்வகை நீ விதித்திடாய்" எனப் பணிந்து பரவுகின்றார். பிறர்பால் அன்பு செய்வாரிடத்து நமக்கு அன்புண்டாதல் அரிதாகலின், இவ் வேண்டுகோட்கு வடலூர் வள்ளல் உள்ளத்து இட முண்டாயிற்றென அறிக. விதித்தல், செய்கை மேற்று.

இதனுல், நின்பால் அன்புடையார்க்கண் எனக்கு அன்புண்டாக அருளுக என வேண்டியவாறும். (3)

3240. விதிவிலக்கீ தென்றறியும் விளைவொன் றில்லா
விளையினேன் எனினும்என்னை விரும்பி என்னுள்
மதிவிளக்கை ஏற்றிஅருள் மனையின் ஞான
வாழ்வடையச் செயல்வேண்டும் வள்ள லேநற்
பதிமலர்த்தாள் நிழலடைந்த தவத்தோர்க் கெல்லாம்
பதியேசொல் லரசெனும்பேர் படைத்த தேவே
கதிதருகற் பகமேமுக் கனியே ஞானக்
கடலேஎன் கருத்தேஎன் கண்ணு ளானே.

உரை : வள்ளலே, நல்ல தலைவனுகிய சிவபெருமான் திருவடி நீழலைப் பெற்ற தவப் பெருமக்களனைவர்க்கும் தலைவனே, நாவுக்கரசர் என்ற பெயரைப் பெற்ற தெய்வமே, உயர் கதியை நல்கும் கற்பகமே, முக்கனியே, ஞானமாகிய கடலே, என் மனத்திலும் கண்ணிலும் இருப் பவனே, விதியிது வென்றும் விலக்கு இது வென்றும் பகுத்தறியும் நல்லறிவு சிறிதும் இல்லாத தீவினையுடையவனெனினும் என்னை விரும்பி எனக்குள் நல்லறிவாகிய விளக்கை யேற்றித் திருவருளாகிய வீட்டின் கண் இருந்து செய்யும் சிவஞான வாழ்வை நான் செலுத்த எனக்கு அருளவேண்டுகிறேன். எ.று.

இது செய்க என்பது விதி; செய்யற்க என்பது விலக்கு. விலக்கிய வற்றை விலக்கி விதித்தன செய்தலால் வினையும் நற்யபனையடைதல் நல்லறிவு; அவ்வறிவு தமக்கு இல்லையென்பாராய், "விதி விலக்கீதென்றறி யும் வினைவொன்றில்லா வினையினேன்" என விளம்புகின்றார். பயனறிந் துணரும் நல்லறிவு "வினைவு" எனப்படுகிறது. காரணம் காரியமாக உபசரிக்கப்படுகிறது. வினை வறியாமைக்கு ஏது வினையுடைமையாதல் பற்றி "வினையினேன்" எனக் கூறுகிறார். "வினையால் அசத்து வினையும்" என்பது சிவஞான போதம். வினையால் அறிவு மாசூர்ந்து மழுங்கிக் கிடக்கிற தென்பாராய், "என்னை விரும்பி என்னுள் மதி விளக்கேற்றி" என்றும், திருவருள் எனப்படும் வீட்டின்கண்ணிருந்து சிவஞான வாழ்வு நடத்துமாறு எனக்கு உதவுக என வேண்டலுற்று, "அருள் மனையில் ஞான வாழ்வடையச் செயல் வேண்டும்" என்றும் விண்ணப்பிக்கின்றார். "ஞானத்தை விளக்கையேற்றி நாடியுள் விரவ வல்லார் ஊனத்தை யொழிப்பர்போலும் ஒற்றியூருடைய கோவே" (ஒற்றி) என நாவுக்கரசர் கூறுவது காண்க. வேண்டும் வாழ்வருளும் வண்மையை ரென்றற்கு "வள்ளலே" என வுரைக்கின்றார். நற்பதி - நல்ல தலைவராகிய சிவபெரு மான். தவமுடையார்க் கல்லது சிவப் பேறு எய்தாமை தோன்றத் "தவத்தோர்" எனச்சாற்றுகின்றார். "திருத்தொண்டின் உறைப்பாலே" வெற்றி பெற்றவராதலின், "தவத்தோர்க் கெல்லாம் பதியே" எனப் பாராட்டுகின்றார். கதி- உயர் பிறப்பு. ஞான மூர்த்தி என்பது பற்றி "ஞானக் கடலே" என்று நவில்கின்றார். கருத்து, ஈண்டு மனத்தின் மேனின்றது.

இதனால் ஞான வாழ்வு பெற விரும்பினமை தெரிவித்தவாரும். (4)

3241. கண்ணுளே விளங்குகின்ற மணியே சைவக்
கனியேநா வரசேசெங் கரும்பே வேதப்
பண்ணுளே விளைந்தஅருட் பயனே உண்மைப்
பதியோங்கு நிதியேநின் பாதம் அன்றி
விண்ணுளே அடைகின்ற போகம் ஒன்றும்
விரும்பேன்என் றனையாள வேண்டுங் கண்டாய்
ஒண்ணுளே ஒன்பதுவாய் வைத்தாய் என்ற
உத்தமனே சித்தமகிழ்ந் துதவுவோனே.

உரை : ஒன்றுகிய உடம்பின்கண் ஒன்பது வாயில்களை வைத்த வனே என்று சிவபெருமானைப் பராவிய உத்தமனே, மனமகிழ்ச்சியுடன் உதவி புரியும் செல்வனே, கண்ணின்கண் விளக்கம் நல்கும் கருமணி போல்பவனே, சைவம் பழுத்த கனி போன்றவனே, சொல்வேந்தனே, செங்கரும்பை ஒப்பவனே, வேதமாகிய கீதத்தின்கண் தோன்றும் திருவருட் பயனே, உண்மைத் தலைவனே, உயர்தோங்கும் நிதியே, நின்னுடைய திருவடியன்றி இந்திரவுலகத்துப் பெறலாகும் இன்பத்தை யும் நான் விரும்பாமல் திருவருளால் நீ என்னை ஆண்டருளுவ தொன்றையே விரும்பி வேண்டுகிறேன். எ.று.

திருநாவுக்கரசர் இறுதி நாளில் திருப்புகலூரிலிருந்து பாடிய திருத் தாண்டகத்தில் உடம்பையும் அதனால் அமைந்த ஒன்பது வாயில்களையும்

சுட்டி, 'ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய் ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்" என்று பாடி யருளியதை நினைந்து வியந்து ஓதுவதால் "ஒண்ணுளே ஒன்பது வாய் வைத்தாய் என்ற உத்தமனே" எனப் பாடு கின்றார். கண்ணுக்கு ஒளி நல்கும் பொருளாதலால் "கண்ணுளே விளங்குகின்ற மணியே" எனவும், சைவத் தவக்கோலத்துடன் விளங்குவது பற்றி, "சைவக் கனியே" எனவும், சிவந்த மேனியராதல் தோன்ற, "செங்கரும்பே" எனவும் இயம்புகின்றார். வேத கீதத்தின் இசைக்கும் பொருளாயினமை புலப்பட, "வேதப் பண்ணுளே விளைந்த அருட் பயனே" எனக் கூறுகின்றார். மெய்ம்மை யுறத்திற்குத் தலைமைப் பொருளாய் விளங்குவது குறித்து "உண்மைப் பதி" என்றும், அதனிற் சிறந்த செல்வம் வேறின்மையால் 'ஓங்கு நிதியே' யென்றும் புகழ்கின்றார். முன்னை நாட்களில் பல கோடி யாகங்களைச் செய்து செல்வர்கள் யாகப் பயனுகிய விண்ணுலக இந்திர போகத்தை வேண்டி யொழுகினர்; வேதியர்கள் அதனை யூக்கி வந்தனராதலால் "விண்ணுளே யடைகின்ற போக மொன்றும் விரும்பேன்" என்றும், விரும்புவது நின் திருவடி ஞானப் பேறே என வற்புறுத்தற்கு, "நின் பாதமன்றி விரும்பேன்" என்றும், "என்றனை யாள வேண்டும்" என்றும் விண்ணப்பிக்கின்றார்.

இதனுல், திருப்புகலூர்த் திருத்தாண்டகத்தைச் சிந்தித்து வியந்த வாரும். (5)

3242. ஓங்காரத் தனிமொழியின் பயனைச் சற்றும்
ஓர்கிலேன் சிறியேன்இவ வுலக வாழ்வில்
ஆங்காரப் பெருமதமால் யானை போல
அகம்பாவ மயனுகி அலைகின் றேன்உன்
பாங்காய மெய்யடியர் தம்மைச் சற்றும்
பரிந்திலேன் அருளடையும் பரிசொன் றுண்டோ
தீங்காய செயலனைத்தும் உடையேன் என்ன
செய்வேன்சொல் லரசேஎன் செய்கு வேனே.

உரை : திருநாவுக்கரசராகிய பெருமானே, ஓம் என்ற தனிச் சொல்லின் பொருட் பயனை என் அறிவின் சிறுமையால் யான் சிறிதும் அறியேன்; இந்த உலகியல் வாழ்வில் அகங்கார மென்ற பெரிய மதங் கொண்டு பெரிய யானை போல் மமதை மயமாகி உலகில் அலைகின்றேன்; உன் திருவருட் பாங்கராகிய மெய்யடியார்களைப் போல் நின்பாற் சிறிதும் அன்பு கொண்டிலேன்; ஆனுல், தீயவை யனைத்தும் உடையவனுதலால், யான் யாது செய்வேன்; என்ன செய்வேன். எ.று.

ஓம் என்னும் தமிழ்ச் சொல்லை ஓங்கார மென்பர்; வடமொழியிற் பிரணவம் என்பர். இறைவனை ஓங்காரமாய் நின்றவன் எனவும், ஓங்கார வுருவின னென்றும், ஓங்காரத் துட்பொருள் என்றும், திருநாவுக்கரசரை யுள்ளிட்ட சான்றோர் பலரும் பல விடங்களிற் கூறுதலால், "ஓங்காரத் தனி மொழியின் பயனைச் சற்றும் ஓர்கிலேன்" என்று கூறுகின்றார். பயன்-பொருள். அகங்காரம் என்பது ஆங்காரம் என வழங்கும். இதனை வட மொழியில் மமதை என்பர். யான் செய்தேன், எனது இது என வெழும்

செருக்கு எனவும், மதம் எனவும் கூறுவர். அகம்பாவம் என்று உலகோர் குறிப்பர். செருக்கே யுருக் கொண்டாற் போலும் தோற்ற முடையவனே "அகம்பாவி" என்பர். செருக்கு வழிப் பிறக்கும் சொற் செயல்களே யுடைவனே "அகம்பாவ முடையவன்" என்பது முண்டு. மால் யானை- மதம் பொழியும் பெரிய யானை. அகம்பாவிக்கு ஆங்கார மல்லது பற்றுக் கோடு இன்மையின், அலைவதே செய்வது பற்றி, "அலை கின்றேன்" என வுரைக்கின்றார். பாங்காய மெய்யடியர், துணைவர் போலச் சூழ்ந்திருத்தல் பற்றி, அடியார்களைப் "பாங்காயவர்" எனக் குறிக்கின்றார். மெய்யடியாரிடத்து அன்பு செய்யின், அவர்களையுடைய ஆண்டவனுக்கு அன்பு செய்யு மவர்பால் அருளுண்டாம் என்பது உலகிய லுண்மை; யான் அதுதானும் செய்திலேன் என்பாராய், "மெய்யடியர் தம்மைச் சற்றும் பரிந்திலேன்" என்றும், அதனால் இறையருள் பெறும் தகுதியிலேனையினேன் என்பார், "அருளடையும் பரிசு ஒன்றுண்டே" என்றும், அருட் பேற்றுக்குரிய தகுதியில்லேனையினும், அதற்கு மாறுய தீயவை யனைத்தும் என்பால் உள்ளன என்பாராய், "தீங்காய செயலனைத் தும் உடையேன்" என்றும், எனவே, யான் செயலற்று வருந்துகின்றேன் என்பார், "என்செய்வேன் என் செய்குவேனே" என்றும் முறையிடு கின்றார்.

இதனால் தகவின்மை கூறி வருந்தியவாறும். (6)

3243. செய்வகையொன் றறியாத சிறியேன் இந்தச்
சிற்றுலக வாழ்க்கையிடைச் சிக்கி அந்தோ
பொய்வகையே புரிகின்றேன் புண்ணி யாநின்
பொன்னடியைப் போற்றிலேன் புனித னேநான்
உய்வகைஎவ் வகையாது செய்வேன் நீயே
உறுதுணைஎன் றிருக்கின்றேன் உணர்வி லேனை
மெய்வகையிற் செலுத்தநினைத் திடுதி யோசொல்
வேந்தேஎன் உயிர்த்துணையாய் விளங்குங் கோவே.

உரை : சொல்லரசாகிய திருநாவுக்கரசரே, செய்தற் குரியவற்றைச் செய்யும் திறம் அறியாத சிறுமை யுடையவனுகிய யான், இந்தச் சிறுமை மிக்க உலக வாழ்விற் சிக்கிப் பொய்யான செயல்களைப் புரிகின்றேனே யன்றிப் புண்ணியப் பெருமானுகிய உனது அழகிய திருவடிகளைப் பரவுவ தில்லை; தூயவனே, இத்தகைய எனக்கு உய்தி யாதாம்? அதன் பொருட்டு யான் யாது செய்தல் வேண்டும்? நீ யல்லது துணை வேறு இல்லை யென்ற கருத்தோடிருக்கின்றேன்; நல்லுணர்வு இல்லாதவனுகிய என்னை, யுண்மை நெறியிற் செலுத்தி உய்விக்க எண்ணுகின்றாயோ? உயிர்க்குத் துணையாக விளங்கும் பெருந்தகையாதலின், எனக்கு உரைத் தருள்க. எ.று.

அற முதலிய பேருலக உறுதிப் பொருட்கு ஆவனவற்றைச் செய்து கோடற்குரிய எனக்குச் செய்யும் திறம் தெரியாமையால் சிறுமை யுற்றே னென்பாராய், "செய்வகை யொன்றறியாத சிறியேன்" என்று இயம்பு கின்றார். அறியாமைக்குக் காரணம் கூறுவாராய், அழியாப் பேரின்ப

மேலுலகினை நினையாமல் அழியும் சிற்றின்ப மண்ணுலக வாழ்வுக்குரிய வற்றையே நினைந்து அல்லற் படுவது விளங்க "இந்தச் சிற்றுலக வாழ்க்கையிடைச் சிக்கி" என வுரைக்கின்றார். செய்வகை யாவும் பொய்ப் பயன் நல்கிக் கெடுப்பது விளங்க, "அந்தோ பொய் வகையே புரிகின்றேன்" எனவும், உனது பொன்னார் திருவடியைப் புகழ்ந்து போற்றுகின்றேனில்லை என்பாராய், "புண்ணியா நின் பொன்னடியைப் போற்றிலேன்" எனவும் எடுத்துரைக்கின்றார். இச்சிக்கலினின்றும் உய்ந்து போதற்கு ஏற்ற நெறி யறியாமல் வருந்துதல் தோன்ற, "உய்வகை எவ்வகை" எனக் கேட்கின்றார். செயலறியாமையும் சிந்தனையின்மையும் தம்பால் உளவாதலை யுணர்ந்து "யாது செய்வேன் நீயே உறுதுணை யென்றிருக்கின்றேன்" என வுரைக்கின்றார். உண்மை யுணரும் திறமின்மை எடுத்தோதித் தம்மைச் செம்மை நெறியிற் செலுத்துதல் வேண்டுமென இறைஞ்சுகின்றாராகலின், "உணர்விலேனை மெய்வகையிற் செலுத்த நினைத்திடுதியோ" எனவும், என் உயிர்க்குத் துணை யாவது நினதருளல்லது வேறில்லை யென முறையிடுவாராய், "உயிர்த்துணையாய் விளங்கும் தேவே" எனவும் கூறுகின்றார்.

இதனால், மெய்வகையில் தம்மைச் செலுத்துக என வேண்டிய வாறும். (7)

3244. விளங்குமணி விளக்கெனநால் வேதத் துச்சி
மேவியமெய்ப் பொருளைஉள்ளே விரும்பி வைத்துக்
களங்கறுமெய் யன்பரெல்லாங் களிப்ப அன்றூர்
கற்றுணையாற் கடல்கடந்து கரையிற் போந்து
துளங்குபெருஞ் சிவநெறியைச் சார்ந்த ஞானத்
துணையேநந் துரையேநற் சுகமே என்றும்
வளங்கெழும்ஆ கமநெறியை வளர்க்க வந்த
வள்ளலே நின்னருளை வழங்கு வாயே.

உரை : சிவாகம நெறி என்றும் தமிழுலகில் வளர்தற்கென எழுந் தருளிய வள்ளலாகிய திருநாவுக்கரசப் பெருமானே, ஒளி செய்யும் மணி விளக்குப் போல நான்காகிய வேதங்களின் முடிபொருளாகப் பொருந்திய மெய்ம்மை சான்ற பரம்பொருளை, யுள்ளத்திற் கொண்டு குற்றமில்லாத மெய்யுணர்வுடைய மேலோரனைவரும் மனம் மகிழ அந்தநாளில் கல்லைத் தெப்பத் துணையாகப் பெற்றுக் கடலில் மிதந்து கரையடைந்து நாடெங் கும் திரிந்து அசைவுற்றிருந்த சிவநெறியைப் பேணி யுயர்த்த ஞான நெறித் துணைவரே, எமக்குத் தலைவரே, எங்கட்குச் சிவானந்த சுகப் பொருளே, நினது திருவருளை எமக்கு நல்குக. எ.று.

ஆகம நெறி, சித்தாந்த நெறி யெனப்படுதலால், சித்தாந்த சைவம் ஆகம நெறி யென வுரைக்கின்றார். வேதங்களாகிய திருக்கோயிலின் முடிமணியாகத் திகழ்வது சிவ பரம்பொருளாதல் பற்றி, "விளங்கு மணி விளக்கென நால்வேதத் துச்சி மேவிய மெய்ப்பொருள்" என விளம்பு கின்றார். களங்கம் - குற்றம்; ஈற்று அம்முச் சாரியை கெட்டுக் களங்கு என வந்ததாம். உண்மை யன்புருவாகிய சான்றோர்களை மெய்யன்பர்

எனக் கூறுகின்றார். நாவுக்கரசர் பால் பேரன்பு கொண்ட அப்பூதியடிகள் முதலியோர் ஈண்டு நினைக்கப்படுகின்றனர், கல்லிற் பிணித்துக் கடலில் தள்ளப் பட்ட போது ஆழ்ந் தொழியாது மிதந்து கரை யேறிய செய்தியை, "கற்றுணையாற் கடல் கடந்து கரையிற் போந்தே" என்று கூறுகின்றார். நாவுக்கரசர் காலத்தில் சமண் சமயம் செல்வாக்கு மிக்கிருந்தமையால் சைவநெறி மக்களிடையே சோர்ந்திருந்தமையால், "துளங்கு பெருஞ் சிவநெறி" எனக் குறித்துரைக்கின்றார். ஞானத் துணை- ஞானப் பேற்றுக்கு வாய்ந்த துணை.

இதனுல் திருவருள் வழங்குக என வேண்டியவாரும். (8)

3245. அருள்வழங்குந் திலகவதி அம்மை யார்பின்
அவதரித்த மணியேசொல் லரசே ஞானத்
தெருள்வழங்கும் சிவநெறியை விளக்க வந்த
செழுஞ்சுடர்மா மணிவிளக்கே சிறிய னேனை
இருள்வழங்கும் உலகியல்நின் றெடுத்து ஞான
இன்னருள்தந் தாண்டருள்வாய் இன்றேல் அந்தோ
மருள்வழங்கும் பவநெறியிற் சுழல்வேன் உய்யும்
வகைஅறியேன் நின்னருட்கு மரபன் றீதே.

உரை : திருவருட் செல்வியாகிய திலகவதி யம்மையார்க்குப் பின்னே தம்பியாகப் பிறந்த மாணிக்க மணி போன்றவரே, திருநாவுக் கரசரே, ஞானத் தெளிவு நெறியாகத் திகழும் சிவநெறி நுட்பத்தை உலகவர் விளக்கமாக அறியச் செய்த வளவிய ஒளி செய்யும் மணி விளக்கமே, அறிவாற் சிறியவனுகிய என்னை இருள் செய்யும் உலகியற் போக்கினின்றும் மாற்றிச் சிவஞானமாகிய இனிய திருவருள் தந்து உய்வித்தருளுதல் வேண்டும்; இல்லையாயின், ஐயோ, மருட்சியால் உளதாகும் பவநெறியிற் சென்று அலமந்து கெடுவதோடு உய்யும் நெறி யறியாமல் வருந்துவேன்; அது நின் திருவருள் நெறிக்கு முறையாகாது, காண். எ.று.

திலகவதியார் பிறந்த சில ஆண்டுகட்குப் பின் அவருடைய தாய் வயிற்றில் தோன்றினமை பற்றி, "திகலவதி யம்மையார் பின் அவதரித்த மணியே" எனவும், "தம்பியார் உளராக வேண்டுமென" (திருநா. புரா)த் திலகவதியார் மனத்திற் கொண்ட தயவு) சிவநெறி மாண்புறுவித்த குறிப்புப் பற்றி, "அருள் வழங்கும் திலகவதி யம்மையார்" எனவும் சிறப் பிக்கின்றார். சொல்லரசு- நாவுக்கரசு. பலவகையான சமய ஞானங்களில் தெளிவு மிக்கிருத்தல் பற்றி, "ஞானத் தெருள் வழங்கு சிவநெறி" என்று தேற்றமாக வுரைக்கின்றார். திருநாவுக்கரசரின் திருமுறைப் பாட்டுக் கள் சிவநெறி யுண்மைகளை யாவரும் இனிது உணர விளக்குவது கொண்டு, "சிவநெறியை விளக்கச் செழுஞ்சுடர் மாமணி விளக்கே" என ஓதுகின்றார். நிகழ்ந்ததை மறதியாலும், எதிர்வில் நிகழ விருப்பதை மலமறைப்பாலும் இருள் செய்தலால், "இருள் வழங்கும் உலகியல்" என்று கூறுகின்றார். அருள்- தெளிந்த அருள் ஞானம்; அஃது அழிவில்

பேரின்பம் நல்குவதால், "இன்னருள்" எனப்படுகிறது. அந்த ஞானம் இல்லா தொழியின் எய்தும் தீதுகளைத் தெரிவிக்கலுற்றவர், "மருள் வழங்கும் பவநெறியிற் சுழல்வேன்" எனவும், "உய்வகையும் அறியேன்" எனவும் இயம்புகின்றார். மருள் - பயனில்லதைப் பயனுடையதாக மாறி யுணரும் அறியாமை. பவநெறி - பிறந்திறந்துழலும் துன்ப நெறி. அருணெறிக்கு மாறுதலால், "ஈது நின்னருட்கு மரபன்று" என மொழி கின்றார்.

இதனால், சிவஞான இன்னருள் தருக என வேண்டிக் கொண்ட வாறும். (9)

3246. தேர்ந்தஉளத் திடைமிகவும் தித்தித் தூறும்
செழுந்தேனே சொல்லரசாம் தேவே மெய்ம்மை
சார்ந்துதிகழ் அப்பூதி அடிகட் கின்பம்
தந்தபெருந் தகையேஎம் தந்தை யேஉள்
கூர்ந்தமதி நிறைவேஎன் குருவே எங்கள்
குலதெய்வ மேசைவக் கொழுந்தே துன்பம்
தீர்ந்தபெரு நெறித்துணையே ஒப்பி லாத
செல்வமே அப்பனெனத் திகழ்கின் றோனே.

உரை : தேர்ந்து தெளிந்த சான்றோர் மனத்தின்கண் சுரந்து தித்திக்கும் செழுமையான தேன் போன்றவனே, நாவுக்கரசு என்னும் தெய்வமே, உண்மைத் தன்மை பொருந்திய அப்பூதி யடிகட்கு மெய்ம் மைத் திருவருளின்பத்தை நல்கிய பெருந்தகையே, எங்கட்குத் தந்தை யாகியவனே, உள்ளம் நிறைந்த பேரறிவானவனே, எனக்குக் குரு முதல்வனே, எங்கள் குலத்துக்கு ஒத்த தெய்வமே, சைவக் கொழுந்தே, துன்பமில்லாத பெருநெறிக்குத் துணையாயவனே, ஒப்புயர் வில்லாத செல்வமே, "அப்பர்" என்ற சிறப்புப் பெயருடன் விளங்குகின்றவனே, உன் திருவடிகட்கு என் வணக்கம். எ.று.

கற்பன கற்றுத் தெளிந்தோர் திருவுள்ளத்தைத் "தேர்ந்த வுளம்" எனவும், தெளிவு இன்பம் பயத்தலின், "தித்தித் தூறும் செழுந்தேன்" எனவும் இனிதுரைக்கின்றார். சொல்லரசு- திருநாவுக்கரசு. தெய்வத் திருவருள் கைவரப் பெற்ற சான்றோராதலால் "தேவே" என்கின்றார். உண்மையே யுருவாக அமைந்தவராதலால் திங்களூர் அப்பூதியடிகளை "மெய்ம்மை சார்ந்து திகழ் அப்பூதி யடிகள்" என்றும், அரவு கடித்திறந்த அவர் மகனை உயிர்ப்பித்து அவர் மனையின்கண் விருந்துண்டு மகிழ்வித் தமைக்கு வியந்து, "அடிகட்கு இன்பம் தந்த பெருந்தகையே" என்றும் இயம்புகின்றார். திருநாவுக்கரசர் கல்வி கேள்வி ஞானங்களாற் பெரியவர் என்பது உலகறிந்த செய்தியாதலின், "உள் கூர்ந்த மதி நிறைவே" என்று கூறுகின்றார். வேளாளர்களின் சைவக் குலத்துக்குத் தெய்வ மாய்த் திகழ்தல் விளங்க, "எங்கள் குலதெய்வமே" எனப் போற்று கின்றார். தமக்கும் பிறர்க்கும் துன்பம் நல்காத "தயாமூலதன்மம்"

என்னும் பெருநெறி காட்டித் துணை புரிந்தமையின், ''துன்பம் தீர்ந்த பெருநெறித் துணையே'' என்றும், நாவுக்கரசரைப் பலரும் "அப்பர்" எனச் சிறப்பித்துப் போற்றுதல் பற்றி, ''அப்பனெனத் திகழ்கின்றேனே'' என்றும் பரவுகின்றார். "தயாமூலதன்ம மென்னும் தத்துவத்தின் வழி நின்று தாழ்ந்தோர்க் கெல்லாம் நலம் கொடுக்கும் நம்பி'' (நள்ளா) என நாவுக்கரசர் உரைப்பது காண்க.

இதனால், அப்பூதியடிகள் பெற்ற இன்பத்தைச் சிறப்பித்து அப்பர் என்ற பெயர் மாண்பை ஓதியவாறும். (10)

11. ஆளுடைய நம்பிகள் அருள் மாலை

அஃதாவது, சுந்தரமூர்த்திகளைப் போற்றி வழிபடும் சொன்மாலை என்பதாம். சுந்தரர்க்கு நம்பியாரூரர் என்பது இயற்பெயராதலின் ஆளுடைய நம்பிகள் என நவில்கின்றார். இதன்கண் நம்பியாரூரர் வாழ்க்கையில் அவர் இறைவன் திருவடி தீண்டப் பெற்றது, அவிநாசியில் முதலை யுண்ட பாலனை வருவித்தது, ஆற்றிலிட்ட பொன்னைத் திருவாரூர்க் குளத்தில் எடுத்தது, பரவையார் மனைக்கு இறைவனைத் தூது விடுத்தது, கயிலை சென்றது முதலிய அற்புத நிகழ்ச்சிகள் வியக்கப்படுகின்றன; வேதாகம நெறிகள் திருந்த வுரைப்பதும், ஏழிசையாய் என்ற திருப் பாட்டை யெண்ணி உளம் உருகுவதும், பாட்டனுபவம் பகர்தலும் பிறவும் ஓதப்படுகின்றன.

கொச்சகக் கலிப்பா

3247. மதியணிசெஞ் சடைக்கனியை மன்றுள்நடம் புரிமருந்தைத்
துதியணிசெஞ் சுவைப் பொருளில் சொன்மாலை தொடுத்தருளி
விதியணிமா மறைநெறியும் மெய்ந்நிலைஆ கமநெறியும்
வதியணிந்து விளங்கவைத்த வன்தொண்டப் பெருந்தகையே.

உரை : வன்றொண்டர் எனப்படும் பெருமானே, பிறைத் திங்களைச் சூடிய சிவந்த சடையையுடைய கனி போன்றவனும், அம்பலத்தின்கண் திருக்கூத்தாடுகின்ற அமுது போன்றவனுமாகிய சிவபெருமானைத் துதிப்பது பொருளாகச் செஞ்சொற் சுவை மிக்க பொருள் நிறைந்த சொன்மாலைகளைப் பாடி, விதிகள் பொருந்திய மறைகள் உரைக்கின்ற வைதிக நெறியும் மெய்ம்மை சான்ற ஆகம நெறியும் நிலைபெறுவித்து உலகில் விளங்க வைத்தருளினாய்; உன்னை வணங்குகிறேன். எ.று.

''தன்மையினால் அடியேனைத் தாம் ஆட்கொண்ட நாள் சபை முன், வன்மைகள் பேசிட வன்றொண்டன் என்பதோர் வாழ்வு தந்தார்'' என்று ஆளுடைய நம்பிகளே சொல்லுதலால், ''வன்றொண்டப் பெருந்தகையே'' என வுரைக்கின்றார். மதி - பிறைத் திங்கள். செஞ்சடையில் வெண்பிறை யிருந்து அழகு செய்தலின், ''மதியணி செஞ்சடை'' எனவும், பலாக் கனி முதலியவற்றிற் சடை யுண்மையின், அந்த நயம் தோன்றச் ''சடைக் கனி'' எனக் கூறுகின்றார். சிவனைப் போலக் கனியும் பொன்னிற முடைய தென அறிக. அம்பலத்துத் திருக்கூத்துக் காண்பார்க்குப் பிறவி நோய் தீர்க்கும் மருந்தாதலால், ''நடம்புரி மருந்து'' எனப் புகழ்கின்றார். சொற் சுவை பொருட் சுவைகள் நிறைந்தவையாதலால், ''செஞ்சுவைப் பொருளின் சொன்மாலை'' எனப் பாராட்டுகின்றார். நால் வேதப்

பிராமணங்கள் விதி வாய்பாட்டில் அமைந்திருத்தலால் ''விதியணி மாமறை நெறி'' எனவும், சரியை முதல் ஞானம் ஈருக நாற் பாதங்களாகப் பிரிந்து பொருள்களின் மெய்ம்மையை வலியுறுத்துதலின், ''மெய்ந்நிலை ஆகம நெறி'' எனவும் இயம்புகின்றார். வதிதல் - தங்குதல்.

இதனால், வேதாகம நன்னெறிகளை நிலைபெறுவித்தமை கூறியவாறும். (1)

3248. நீற்றிலிட்ட நிலையாப்புன் னெறியுடையார் தமைக்கூடிச்
சேற்றிலிட்ட கம்பமெனத் தியங்குற்றேன் தனையாளாய்
ஏற்றிலிட்ட திருவடியை எண்ணிஅரும் பொன்னையெலாம்
ஆற்றில்இட்டுக் குளத்தெடுத்த அருட்டலைமைப் பெருந்தகையே

உரை : எருதாகிய ஊர்தி மேல் வைத்தருளிய சிவபெருமான் திருவடியை மனத்திற் கொண்டு மணி முத்தாற்றிற் பெய்த பொன்னைத் திருவாரூர்க் குளத்தில் எடுத்த, திருவருளால் தலைமை சான்ற வன்றொண்டப், பெருமானே, சுண்ணும்பு நீற்றில் வெந்தழிந்து கெடும் பொருள் போன்று நிலையாத தீநெறியைக் கடைப் பிடிப்பவர்களோடு கூடிச் சேற்றில் நிறுவிய கம்பம் போல நில்லாது சாய்ந்து விழும் என்னை ஆண்டருள்வாயாக. எ.று.

நீறு - சுண்ணும்பு நீறு; சுண்ணும்பை வேக வைக்கும் நீற்றறை என்றும் கூறுவர். நீற்றிலிட்டது நிலையாது கெடுதல் போலத் தீநெறிகளை யுடையவர் கெடுவது பற்றி, "நிலையாப் புன்னெறி யுடையார் தமைக் கூடி" என்றும், சேற்றில் நட்ட கம்பம் நில்லாது சாய்தல் போல நிலை பேறின்றிக் கீழ் விழுமாறு புலப்பட, "சேற்றிலிட்ட கம்பம் எனத் தியங் குற்றேன்" என்றும் தெரிவிக்கின்றார். எருதேறும் பெருமானைது பற்றிச் சிவபெருமான் திருவடியை "ஏற்றிலிட்ட திருவடி" என்கிறார். "வன்றொண்டர் மச்சம் வெட்டிக் கைக்கொண்டு மணி முத்தாற்றில், பொற்றிரளெடுத்து நீருள் புகவிட்டுப் போதுகின்றார்" (ஏயர்) எனச் சேக்கிழார் உரைப்பர். திருவாரூர்க் குளத்தில் பரவையார் கண்டு நிற்க இறங்கி, "ஓட்டறு செம்பொன்னெக்க ஒருமாவும் குறையாமல் காட்டு தலும் மகிழ்ந்தெடுத்துக் கொண்டு கரையேறினார்" (ஏயர். 137) எனச் சேக்கிழார் உரைத்தருளுவ தறிக.

இதனால், ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்திற் பெற்ற அற்புதத்தை வியந்தவாறும். (2)

3249. இலைக்குளநீ ரழைத்ததனில் இடங்கர்உற அழைத்ததன்வாய்த்
தலைக்குதலை மதலைஉயிர் தழைப்பஅழைத் தருளியநின்
கலைக்கும்வட கலையின்முதற் கலைக்கும்உறு கணக்குயர் பொன்
மலைக்கும்அணு நிலைக்கும்உரு வன்தொண்டப் பெருந்தகையே.

உரை : வன்றொண்டர் என்னும் பெருந்தகையாகிய பெருமானே, இலைகளும் கொடிகளும் விரவிய குளத்தில் நீர் நிறைவித்து அதன்கண் முன்னிருந்த முதலையை வருவித்து அதன் வாயினின்று குதலைமொழி

பேசும் சிறுவன் உயிருடன் வருவித்தருளிய நின்னுடைய தமிழ் அருட் கலைக்கும் வடமொழியில் உள்ள வைதிகக் கலைக்கும் ஒப்பு நோக்கின் பொன்னிற இமயமலைக்கும் அணுவுக்கும் போல ஒப்பாகாது. எ.று.

நீர்க்கொடிகளான தாமரை, அல்லி முதலியன வுள்ள குளமென்றற்கு "இலைக்குள நீர் தழைத்து" எனவும், அதன்கண் வாழ்ந்த முதலையை வருவித்தமை விளங்க, "அதனில் இடங்கர் உற அழைத்து" எனவும் இயம்புகின்றார். பிறந்து வளர்ந்து மொழி பயிலும் சிறுவர்கள் முதன் முதலிற் பேசுவது நிரம்பாமொழியாகிய குதலை மொழியாதலின், "தலைக்கு தலை மதலை" எனக் கூறுகின்றார். முதலையால் விழுங்கப்பட்டு இறந்த சிறுவனை உயிரும் உடல் வளர்ச்சியும் ஒருங்கே யுற வருவித்த குறிப்புப் புலப்பட, "மதலையுயிர் தழைப்ப அழைத் தருளிய" எனப் புகழ்கின்றார். இது திருவருளால் நிகழ்ந்த பேரற்புதமாகலின், அதனை "அருட் கலை" எனவும், வடமொழி வைதிகக் கலை மிக்க தெனப் பேசப் பட்டமையின் அதனை "வடகலையின் முதற்கலை" எனவும் கூறுகின்றார். தமிழ் அருட் கலையின் உயர்வு காட்டற்குப் பொன் மலையை எடுத்துரைக்கின்றார். பொன்னிற முடிகளையுடைமையால் இமயத்தைப் பொன்மலை யெனப் புகல்கின்றார். சான்றோர் அதனைப் "பொற் கோட்டு இமயம்" எனப் புகல்வர். கணக்கு - ஈண்டு ஒப்புப் பொருட்டு.

இதனால், திருப்புக் கொளியூர் அவிநாசியில் நடந்த அற்புதத்தை நினைந்து வியந்தவாறும். (3)

3250. வேதமுதற் கலைகளெலாம் விரைந்துவிரைந் தனந்தமுறை
ஓதஅவைக் கணுத்துணையும் உணர்வரிதாம் எம்பெருமான்
பாதமலர் நினதுதிருப் பணிமுடிமேற் படப்புரிந்த
மாதவம்யா துரைத்தருளாய் வன்தொண்டப் பெருந்தகையே.

உரை : வன்றொண்டப் பெருமானே, வேதம் முதலாகவுள்ள கலை நிரம்பிய நூல்கள் மிகவும் விரைவுடன் எண்ணிறந்த முறையில் ஓதியும் அணுவளவும் உணரமுடியா தொழிந்த எம்பெருமானாகிய சிவனது திருவடித் தாமரை நினது திருமுடியில் தாமே பொருந்துமாறு நீ செய்த தவம் யாதோ? எமக்குத் தெரிவித் தருளுக. எ.று.

வேத முதலிய கலைகள் என்றது வேத முதலாகிய கலைநூற் பலவும் கற்றுணர்ந்த பெருமக்களை, அனந்த முறை - எண்ணிறந்த முறை. "வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" (சிவபு) என்பர் மணிவாசகப் பெருமான். கூறுதலால், இறைவன் திருவடி காண்பதன் அருமை காணலாம். ஆர்வ மிகுதி தோன்ற, "விரைந்து விரைந்து" என அடுக்குகின்றார். பணி வொழுக்கம் விளங்கப் "பணி முடி" எனப்படுகிறது. வேதங்களால் எய்த முடியாத திருவடி, திருவதிகைச் சித்த வடமடத்தில் தாமாகவே வந்து பொருந்தின வென்பது வரலாறுதலின், "நினது திருமுடி மேற்படப் புரிந்த மாதவம் யாது? உரைத்தருள்க" என வேண்டுகிறார்.

இதனால், திருவடி தீண்டப் பெற்ற பெருநலம் வியந்து மொழிந்த வாறும். (4)

3251. ஏழிசையாய் இசைப்பயனுய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் என்றுமுன்நீ சொன்னபெருஞ் சொற்பொருளே
ஆழநினைத் திடில்அடியேன் அருங்கரணம் கரைந்துகரைந்
தூழியல்இன் புறுவதுகாண் உயர்கருணைப் பெருந்தகையே.

உரை : "ஏழிசையாய் இசைப்பயனுய் இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய்" என்று முன்னுள் பாடிச் சொன்ன பெருமை மிக்க சொற்களின் பொருளே அடியேன் ஆழ்ந்து சிந்திக்கில் என்னுடைய அருமையான மன முதலாய கரணங்கள் நீராய்க் கரைந்து முறையே இயன்று வரும் இன்பத்தில் தோய்கின்றன, காண். எ.று

இசையின்பத்தை அமுதம் என வழங்கும் முறைமை பற்றி, இசையாய் இசைப்பயனுய் என்றவர், "இன்னமுதாய்" எனவும், உள்ளிருந்து உணரத் தகுவன உணர்த்தும் இறைவனது அருட் செயலே நிலைந்த வண்ணமிருத்தலின், "என்னுடைய தோழனுமாய்" என ஆளுடைய நம்பிகள் அருளுகின்ருர். அவரது அருளுரையின் பொருள் நலத்தை நெடிது நினைந்து நெஞ்சம் உருகுவது பற்றி, "சொற் பொருளே ஆழ நினைந்திடில் அருங்கரணம் கரைந்து கரைந்து" என வுரைக்கின்ருர். கரணம் - மனம் சித்தம் புத்தி முதலியன. மனமுருகி நினைவின்கண் ஆழ்ந்து செல்லுகையில் படிபடியாக இன்பம் சுரப்பது இயல்பாதலால், "ஊழியில் இன்புறுவது காண்" என்று உரைக்கின்ருர்.

இதனுல், "ஏழிசையாய்" என்ற திருப்பாட்டின் பொருணலம் தேர்ந்து இன்புற்றமை தெரிவித்தவாரும். (5)

3252. வான்காண இந்திரனும் மாலயனும் மாதவரும்
தான்காண இறைஅருளால் தனித்தவள யானையின்மேல்
கோன்காண எழுந்தருளிக் குலவியநின் கோலமதை
நான்காணப் பெற்றிலனே நாவலூர்ப் பெருந்தகையே.

உரை : திருநாவலூர்ப் பெருந்தகையே, வானுலகத்து மக்களும் இந்திரனும் திருமாலும் பிரமனும் முனிவர்களும் கண்டு வியக்கச் - சிவபெருமான் திருவருளால் ஒப்பற்ற வெள்ளே யானையின் மேல் சேரமானுகிய, கழறிற்றறிவார் கண்டு பரவக் கயிலேக்கு நீ எழுந்தருளிய போது விளங்கிய கோலத்தை, நான் காணப்பெரு தொழிந்தமை நினைந்து மெலிகின்றேன். எ.று.

வான் - வானுலகத்தில் வாழும் மக்களாகிய தேவர்கள். மாதவர் - பெரிய தவச் செல்வத்தையுடைய முனிவர்கள், தவள யானை, வெண்ணிறத்தையுடைய யானை. "வானெனை வந்தெதிர் கொள்ள மத்த யானை யருள் புரிந்து, ஊனுயிர் வேறு செய்தான்" எனவும், "விண்ணுலகத்தவர்கள் விரும்ப வெள்ளே யானையின் மேல் என்னுடல் காட்டுவித்தான்" எனவும், இந்திரன் மால் பிரமன் எழிலார் மிகு தேவ ரெல்லாம், வந்தெதிர் கொள்ள வெள்ளமத்த யானையருள் புரிந்து" (நொடித்) எனவும் நம்பியாரூரரே எடுத்து மொழிகின்ருர். நெஞ்சிற் காண விளங்கும் கோலத்தைப் புறக் கண்களாற் காண மாட்டாமைக்கு வருந்துவது குறிப்பு.

இதனுல், கயிலே சென்ற கோலம் காண மாட்டாமை நினைந்து பரிந்தவாரும். (6)

3253. தேன்படிக்கும் அமுதாம்உன் திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னே நானறியேன் நாஒன்றே
ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான்படிக்கும் அனுபவங்காண் தனிக்கருணைப் பெருந்தகையே.

உரை : ஒப்பற்ற கருணை யுருவாகிய பெருந்தகைப் பெருமானே தேன் பெய்து வடித்த அமுது போலும் உன்னுடைய திருப்பாட்டை நாடோறும் நான் படிக்கும் போது என்னையே நான் அறிவதில்லே; ஏனெனில், படிக்கின்ற போது என்னுடைய நா மாத்திர மன்று; எனது உடம்பிலுள்ள ஊனும் படிக்கும்; உள்ளமும் படிக்கும்; உள்ளே யுலவும் உயிரும் படிக்கின்றது; உயிர்க்குயிரும் படிக்கின்றது; இஃது அனுபவ மாகும். எ.று.

ஆளுடைய நம்பிகட்கு நிகர் அவரேயாதலின், "தனிப் பெருந்தகை" யென்றும், அருளே திருமேனியாகக் கொண்டமை கண்டு, "கருணைப் பெருந்தகையே" என்றும் இயம்புகின்ருர். இனிய ஓசையும் செஞ் சொல்லும் நன்பொருளும் கொண்டு அமைந்தவையாதலின், "திருப் பாட்டு" எனச் சிறப்பித்து அதனை நாளும் தொடர்ந்து படிக்கும் செயலே விதந்து, "தினந்தோறும் நான் படிக்கும் போது" எனக் கூறுகின்ருர். இசை கூட்டிப் பாடும் கருவியாதலின், "நா ஒன்றே" என எடுத்தோதி, அப்பாட்டின் பொருணலங்களே யுணர்ந்து இன்புறும் கருவிகளே ஒவ்வொன்றுக வகுத்து, "ஊன் படிக்கும் உளம் படிக்கும்" எனவும், அவற்றிற்கு உள்ளுறும் உயிரை எடுத்து "உயிர் படிக்கும் உயிர்க்குயிரும் படிக்கும்" எனவும் இசைக்கின்ருர். உயிர்க் குயிராகிய இறைவனும் என்னுள் இருந்து படிக்கின்ருன் எனக் காட்டுதற்கு "உயிர்க் குயிரும் தான் படிக்கும்" என வுரைக்கின்ருர். ஊன் முதலாகிய இவற்றின் வேருக நான் இல்லேயாதலின், என்னை நான் அறிகிலேன் என்பாராய், "என்னை நான் அறியேன்" என்று கூறுகின்ருர்.

இதனுல் திருப்பாட் டனுபவம் கூறியவாரும். (7)

3254. இன்பாட்டுத் தொழிற்பொதுவில் இயற்றுகின்ற எம்பெருமான்
உன்பாட்டுக் குவப்புறல்போல் ஊர்பாட்டுக் குவந்திலர்என்
றென்பாட்டுக் கிசைப்பினும்என் இடும்பாட்டுக் கரணமெலாம்
அன்பாட்டுக் கிசைவதுகாண் அருட்பாட்டுப் பெருந்தகையே.

உரை : திருவருட் பாட்டுக்களேப் பாடும் பெருந்தகையை யுடைய பெருமானே, உயிர்கட்கு இன்ப முண்டாகும் பொருட்டு ஐந்தொழில் புரிபவனுகிய கூத்தப் பெருமான், உன்னுடைய திருப்பாட்டுக்கு உவகை யுறுவது போல் ஊரவர் பாடும் பாட்டுக்களே யுவத்தல் இலர் என்று யான் என் பொருட்டுச் சொன்னலும் என்னுடைய துன்பக் கருவி கரணங்கள் யாவும் சிவன்பால் அன்பு செய்வனவாயின, காண். எ.று.

திருவருளாற் பாடுவார்க்கு அவ்வருள் ஞானமும் செல்வமும் நல்கும் பாட்டாதல் பற்றி, ஆளுடைய நம்பிகளின் பாட்டை "அருட் பாட்டு" என்றும், அதனுல் உளதாகிய தகைமையை வியந்து 'பெருந்தகையே' என்றும் பரவுகின்ருர். உயிர்கள் யாவும் பிறவாப் பேரின்பம் பெறல் வேண்டும் என்பது கருதிப் படைத்தல் முதலிய ஐந்து தொழில்களையும் தான் செய்தொழுகும் திறத்தை அவன் ஆடும் திருக்கூத்துப் புலப்படுவது விளங்க, "இன்பாட்டுத் தொழில் பொதுவில் இயற்றுகின்ற எம்பெருமான்" என்று கூறுகின்ருர். இன்பு ஆட்டுத் தொழில் - இன்பம் நல்கும் திருக்கூத் தாடுவதாகிய தொழிலைச் செய்யும் (எம்பெருமான்) என இயையும். உவப்புறல்- மகிழ்தல். ஊர்களில் வாழும் பிற புலவர்கள் பாடுவனவற்றை "ஊர் பாட்டு" என்று உரைக்கின்ருர். ஊர் அயன்மை தோன்ற நின்றது. "ஏதிலர் என்னும் இவ்வூர்" (குறள். 1130) என்ருற் போல. தன் தனிமை விளங்க, "யான் என்பாட்டுக் கிருந்தேன்; நீ உன்பாட்டுக் கிரு" என வரும் உலக வழக்கு; காரண காரிய நினைவின்றி இருத்தலுமாம். துன்பத்துக் கேதுவாகிய வினைவகை யனைத்துக்கும்மன முதலிய கரணங் கள் காரணமாதலால், "இடும் பாட்டுக் கரணம்" என இசைக்கின்ருர். அன்பு ஆட்டுதல்- அன்பு செய்தல்.

இதனுல், காரண காரிய நினைவின்றிப் படிக்கினும் மன முருக்கி இன்புறுத்துவது சுந்தரர் திருப்பாட்டு என்றவாரும். (8)

3255. பரம்பரமாம் துரியமெனும் பதத்திருந்த பரம்பொருளை
உரம்பெறத்தோ ழமைகொண்ட உன்பெருமை தனைமதித்து
வரம்பெறநற் றெய்வமெலாம் வந்திக்கும் என்ருல்என்
தரம்பெறஎன் புகல்வேன்நான் தனித்தலைமைப் பெருந்தகையே

உரை : ஒப்பற்ற கருணை யுருவாகிய பெருந்தகைப் பெருமானே, மேலும் கீழுமாகிய துரிய பதத்தின்கண் எழுந்தருளும் பரமசிவமாகிய மெய்ப்பொருளை வன்மையுற்ற தோழனுகக் கொண்ட உமது பெருநிலையை எண்ணி நல்வரம் பெறுதற் பொருட்டு? தெய்வமாயின உயிர்வகை யாவும் வழிபடும் எனச் சான்ருேர் உரைக்கின்றன ரெனில், யான் திருவருட் பேற்றுக்குரிய தகுதி பெற யான் யாது சொல்வேன். எ.று.

பரம் - மேல். பரம்பரம் என்ற அடுக்கு மேன்மை மிகுதி குறித்த தாம். கீழாலவத்தைக்கண் அதீதத்திலிருந்துகொண்டு மேனேக்கு வார்க்குத் துரியத்தின்கண் காணப்படுவது பற்றி, "துரிய பதத்திருந்த பரம்பொருள்" என்று சொல்லுகின்ருர். சாக்கிரத்திலிருந்து கீழ் நோக்கிச் செல்வது கீழாலவத்தை; அதீதத்திலிருந்து மேனேக்குவது மேலால வத்தை என அறிக. அதீதத்திலிருந்து காணுங்கால் துரியத்தில் அகளமாய் விளங்கும் பரசிவத்தைச் சகள வடிவில் தோழனுகக் கொண்ட அருமையை வியந்து "தோழமை கொண்ட உன் பெருமை" எனக் கூறு. கிருர். மதித்தல்- உயர்வாக எண்ணுதல். தெய்வங்களும் செத்துப் பிறப்பனவாதலின், உரம் பெறு தோழராதலை வியந்து சுந்தரப் பெருமானைத் துதிக்கின்றனர் என்பாராய், "வரம் பெற நற்றெய்வமெலாம் வந்திக்கும் என்ருல்" என இசைக்கின்ருர். யான் வரம் விழையேனுயி னும் திருவருள் ஞானப் பேற்றுக்குரிய தகுதி பெற விரும்புகின்றேன் என்பார், "என் தரம் பெற என் புகல்வேன்" என்று மொழிகின்ருர்.

இதனுல், சுந்தரரை வழிபட்டு ஞானத் தரம் பெற விரும்புகின்றமை புலப்படுத்தவாரும். (9)

3256. பேரூரும் பரவைமனப் பிணக்கறஎம் பெருமானே
ஊரூரும் பலபுகல ஓரிரவில் தூதன்எனத்
தேரூரும் திருவாரூர்த் தெருவுதொறும் நடப்பித்தாய்
ஆரூர நின்பெருமை அயன்மாலும் அளப்பரிதே.

உரை : நற்புகழை யுடைய பரவையார் மனத்தில் உண்டான ஊடலைத் தீர்க்கும் பொருட்டுச் சிவபெருமானே ஊரவர் பலரும் பலவாறு பேசுமாறு ஒருநாள் இரவில் பரவையார் மனைக்குத் தேர்கள் இயங்கும் திருவாரூர்த் தெருவின்கண் தூதனுக நடந்து செல்வித்தாய்; அதனுல் உனக்குளதாகிய பெருமை பிரமன், திருமாலாகிய இருவராலும் அளத்தற் கரியதாகும். எ.று.

காதலனும் காதலியுமாகிய இருவரிடையே காதலன்பால் ஊடலும் கூடலும் நிகழ்வ தியல்பாகலின், ஒருகால் பரவையார் மனத்தின்கண் ஊடலுணர்வு எழுதலும், அதனுல் அவருடைய பிணக்கறுத்தல் வேண்டிய சூழ்நிலை யுருவாய திறத்தை, "பேரூரும் பரவை மனப்பிணக் கற" என்றும், இருவர்க்கும் இடையே நின்று பிணக்கைத் தீர்த்தற் பொருட்டுச் சுந்தரர் சிவனே வேண்டினமையின், "பெருமானே" என்றும், பிணக் குண்டாகும் கூடற் குரிய இரவுப் பொழுதாதல் பற்றி, "ஓரிரவில்" என்றும், சிவனைப் பரவை மனைக்கு நடந்து செல்ல விடுத்தமை விளங்க, "திருவாரூர்த் தெருவு தொறும் நடப்பித்தாய்" என்றும் கூறுகின்றார். பலர் வழங்காத் தெருவன் றென்றற்குத் "தேரூரும் திருவாரூர்" எனவும், மிகப் பலர் காணச் சென்றமையின், "ஊரூரும் பல புகல" எனவும் உரைக் கின்றார். பெண் கூட்டம் வேண்டித் தூது போதல் சிறப்பன்மையின், "தூதன்" என எனக் குறிக்கின்றார். என, என்று கண்டோர் சொல்ல.

இதனுல், சிவனைப் பரவை மனைக்குத் தூது விடுத்தமை வியந்த வாரும். (10)

திருச்சிற்றம்பலம்

12. ஆளுடைய அடிகள் அருண்மாலை

அஃதாவது, மாணிக்கவாசக அடிகளின் மாண்பு நிஜனந்து, பரவும் பாமாலே என்பதாம். மாணிக்க வாசகரை மாணிக்கவாசக சுவாமிகள், மணிவாசகப் பெருமான், திருவாதவூரடிகள் என்றெல்லாம் சான்ரோர் புகழ்வர். அவரை அறிவாற் சிவனே எனக் கருதினமையின், அடிகள் எனச் சிறப்பித்து ஆளுடையடிகள் எனக் குறிக்கின்ரார். இதன்கண், மணிவாசகர் பொருட்டு இறைவன் குதிரைச் சேவகனுய் வந்ததும், மண் சுமந்து மாறன் பிரம்படி பட்டதும், தில்லேச் சிதாகாசத்தில் கலந்ததும் குறிக்கப்படுகின்றன. திருவாசகத்தைப் படித்தெய்தும் அனுபவ நலமும், திருவண்டப் பகுதியில் "இருப்பதாக்கினன்" என்ற தொடர் பற்றிய சிந்தனேயும் அதன் ஞான மாட்சியும் பிறவும் விதந்து ஓதுவதையும் காணலாம்.

கொச்சகக் கலிப்பா

3257. தேசகத்தில் இனிக்கின்ற தெள்ளமுதே மாணிக்க
வாசகனே ஆனந்த வடிவான மாதவனே
மாசகன்ற நீதிருவாய் மலர்ந்ததமிழ் மாமறையின்
ஆசகன்ற அனுபவம்நான் அனுபவிக்க அருளுதியே.

உரை : அருளொளி பரந்த மனத்தில் இனிக்கின்ற தொள்ளமுத மான மாணிக்கவாசகப் பெருமானே, ஆனந்த வுருவுடைய பெரிய தவச் செல்வனே, குற்றமில்லாத நீ யுரைத்தருளிய தமிழ் மறையாகிய திருவாசகத்தின் மறுவற்ற சிவானுபவத்தை எளியவனுகிய யானும் அனுபவிக்க அருள் செய்க. எ.று.

அருள் ஞான வொளி திகழும் உள்ளம், உண்மை யன்பு மயமாய் விளங்குவதாகலின், "தேசகத்தில் இனிக்கின்ற தெள்ளமுதே" எனக் கூறுகின்ரார். ஞானம், ஈசன்பால் அன்பு என்பர் சான்ரோர். ஞானமும் அன்பும் இன்ப மயமாதலால் "இனிக்கின்ற தெள்ளமுதே" என இயம்பு கிரார். அன்புருவாய மாணிக்கவாசகர் ஞானனனந்த வடிவின ரென்றற்கு "ஆனந்த வடிவான மாதவனே" எனவும், அஃது அவர்க்கு முன்னேத் தவத்தால் உளதாய தென்பது புலப்பட, "மாதவனே" எனவும் சொல்லுகிரார். "நானேயோ தவம் செய்தேன்" (ஏசறவு) என மணிவாசகரே யுரைப்பது காண்க. மாணிக்க வாசகரென்பது சிறப்புப் பெயர்; வாதவூரர் என்பது இயற்பெயர். மாசு - மலத்தால் உளதாகும் குற்றம். தமிழ் மாமறை - திருவாசகம். வடநூல் மறைகளிற் காண்டற் கரிய நுண்மாண் பொருள்களேத் தன்னகத்தே கொண்டிருத்தலின்

திருவாசகத்தை "மாமறை" எனவும், தூய செந்தமிழில் ஆகியிருத்தலால் "தமிழ் மாமறை" எனவும் சிறப்பிக்கின்றார். திருவாசகத்திற் பெறலாகும் அனுபவம் சிவஞானானுபவமாதல் பற்றித் "தமிழ் மாமறையின் அனுபவம் நான் அனுபவிக்க அருளுதி" என வேண்டுகின்றார்.

இதனால், திருவாசக அனுபவம் சிவஞானானுபவம் எனக் குறித்த வாறும். (1)

3258. கருவெளிக்குட் புறனுகிக் கரணமெலாங் கடந்துநின்ற
பெருவெளிக்கு நெடுங்காலம் பித்தாகித் திரிகின்றீர்
குருவெளிக்கே நின்றுழலக் கோதறநீ கலந்ததனி
உருவெளிக்கே மறைபுகழும் உயர்வாத வூர்மணியே.

உரை : வளத்தாற் உயர்ந்த திருவாதவூர் மணியே, பிண்ட வானத்தின் அகமாகியும் புறமாகியும் கருவி கரணங்களாக் கலந்து அப்பால் நின்ற பெருவெளியாகிய மேலுலகின்கண் வாழ்தற்கு ஆசை மிகுந்து நெடிது காலம் வீணில் அலைகின்றார்கள்; நிறமுடைய வானம் சூழ்ந்த உலகின்கண் அவர்கள் இருந்து வருந்தக் குற்றமின்றாக, நீ கலந்தருளிய ஒப்பற்ற ஞானகாயத்தை வேதங்கள் புகழ்கின்றன காண். எ.று.

கருவெளி - அண்டத்தின்கண் விண், காற்று, தீ, நீர், நிலமாகிய பூதங்கட்குக் காரணமானதன் மாத்திரைகள் தங்குகின்ற அண்ட வானவெளி. இதனைப் பரிபாடல் "கருவளர் வானம்" (பரி. 2) எனக் கூறுகிறது. ஈண்டுக் கருவெளி யெனப் பொதுப்படக் கூறுதலின், அண்ட வானமும், பிண்டமாகிய உடற்குள் அமைந்த கருவறை (கருப்பை)க்கண் உள்ள வானமும் கொள்ளப்படுமாயினும், உடற்கண் உள்ள கருவி கரணங்களாக் கூறுதலால், உடல் தோன்றுதற்கு முதலாகிய கருவெளியே கொள்ளப்படுகிறது. உடம்பும் ஏனைக் கருவி கரணங்களும் உள்ளும் புறமும் கலந்து கடந்திருப்பது பூதாகாயம்; அது நிலவும் பெருவெளி மண்ணும் விண்ணுமாகிய உலகுகளைக் கொண்டதாம். இப் பெருவெளியிற் கலந்திருந்து மகிழ்தற்கே உலகவர் வருந்தி முயல்கின்றார்களாதலால், "பெருவெளிக்கு நெடுங்காலம் பித்தாகித் திரிகின்றீர்" என்று பேசுகின்றார். பித்து - பேராசை. வானம் முதல் நிலம் ஈறாகக் கூறப்படும் பூதங்கட்கு நிறம் கூறுபவாதலின், அவற்றைத் தன்கண் கொண்ட அண்ட வெளியைக் "குருவெளி" என உரைக்கின்றார். குரு - நிறம். "பொன்பார் புனல் வெண்மை பொங்கு மனல் வெப்பு, வன்கால் கருமைவளர் வான் தூமம் என்பார்" (உண். விளக். 5) எனச் சான்றோர் உரைப்ப தறிக. மணிவாசகர் முடிவிற் கலந்து கொண்ட சிவஞான வின்ப வெளியை, "நீ கலந்த உருவெளி" எனவும், அதனை வேதம் சிதாகாசம் எனப் புகழ்தல் பற்றி, "மறை புகழும்" எனவும் இயம்புகின்றார். உருவெளிக்கு என்பதிற் குவ்வுருபு ஐயுருபின் பொருளில் வந்து மயங்கிற்று.

இதனால், உலகவர் பெருவெளி வாழ்வு குறித்து நெடிது திரிந்து அலைகின்றவர்களாக, மணிவாசகர் கலந்து கொண்ட சிதாகாச வெளியை வேதங்கள் புகழ்கின்றன வென்று போற்றியவாறும். (2)

3259. மன்புருவ நடுமுதலா மனம்புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வார் எல்லாரும் ஏமாக்க
அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்துபின்னர்
இன்புருவம் ஆயினீநீ எழில்வாத வூர்இறையே.

உரை : அழகிய வாதவூர்த் தலைவராகிய மணிவாசகப் பெருமானே, பெரிய புருவ நடுவிடமான இலாடத்தானத்தை முதலாகக் கொண்ட, யோகாவத்தைக்கண் மனதை நிறுத்தி நெடுநாள் இருந்து, எலும்புரு வாகித் தவம் புரிபவர் அனைவரும் ஏமாந் தொழிய நீ அன்புருவம் பெற்று, பின்பு அருளுருவம் பெற்று, பின்னர் இன்ப வுருவமாகிய சிவமாயினாய்; இதனை என்னென்பது. எ.று.

சாக்கிராவத்தைக்கும் யோகக் காட்சிக்கும் புருவ நடு தலைமையிட மாதலின், "மன்புருவ நடு" எனச் சிறப்பிக்கின்றார். யோக முயற்சிக் கண் மனம் செயலற்று இலாடத்தே யொன்றி விடுதல் தோன்ற, "மனம் புதைத்து" என்றும், உண்டி உறக்கம் பசி முதலிய உணர்வின்றி நெடுநாள் யோகிருத்தலால் பூத வுடம்பு கரைந்து எலும்புருவாதலால், "என்புருவாய்த் தவஞ் செய்வார்" என இயம்புகின்றார். தவயோகத்தால் பயன் பெருமை புலப்பட, "ஏமாக்க" என வுரைக்கின்றார். உலகியலில் அன்பராய், அருணெறியில் அருளாளராய்ப் பிறங்கினமை பற்றி, "அன்புருவம் பெற்றதன் பின் அருளுவம் அடைந்து" எனவும், முடிவில் சிவானந்த ஞான வுருவுற்றுச் சிவமாயினமை விளங்க, "இன்புருவ மாயினை" எனவும் எடுத்தோதுகின்றார்.

இதனால் திருவாதவூரர் சிவமாயின தன்மை தெரிவித்தவாறும். (3)

3260. உருஅண்டப் பெருமறைஎன் றுலகமெலாம் புகழ்கின்ற
திருஅண்டப் பகுதிஎனும் திருஅகவல் வாய்மலர்ந்த
குருஎன்றெப் பெருந்தவரும் கூறுகின்ற கோவேநீ
இருஎன்ற தனிஅகவல் எண்ணம்எனக் கியம்புதியே.

உரை : உருக் கொண்டு விளங்குகின்ற உலகப் பெருமறை யென்று கற்றவர் திரளெல்லாம் புகழ்ந்து பேசும், திருவண்டப் பகுதி யென்று சொல்லி யருளியுள்ள ஞானசிரியர் என்று, எத்தகைய தவப் பெருமக்களும் உரைத்துப் போற்றுகின்ற தலைவனே, "என்னையும் இருப்பதாக்கினன்" என்ற ஒப்பற்ற அவ்வகவலடிக்குக் கருத்து இஃது என்று தெரிவித் தருள்க. எ.று.

உலகினரான நாம் கண்டறிய விளங்குகின்ற உலகை "உருவண்டம்" என வுரைக்கின்றார். திருவண்டப் பகுதி திருவாசகத்துள் காணப்படும் அகவற்பாக்களில் ஒன்று. இதன்கண் "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்" தொடக்கத்தில் குறிக்கப்படுவது பற்றி, இது திருவண்டப் பகுதி எனப்படுகிறது. குரு - ஆசிரியர்; இதனுள் சிவஞானச் செம்பொருள் கூறுவது கொண்டு, ஈண்டு ஞானசிரியர் என உரை கூறுகிறது. இரு வென்ற தனியகவல், "இருப்ப தாக்கினன்" என்ற அகவலடி. அகவலின்

கண், "ஒள்ளிய கன்னற் கனிதேர் களிரெனக் கடை முறை என்னையும் இருப்பதாக்கினன்" என வருவது, "ஒள்ளிய கரும்பையும் இனிய கனியையும் தெரிந்துண்ணும் களிறு போல, இறுதிக்கண் என்னையும் இருப்பதொன்றாக்கினன்" என்று பொருள் தரக் கண்ட வடலூர் வள்ளல், கன்னலும் கனியும் தேர்ந்துண்ணும் களிறு போலச் சிவம் தேரும் ஒன்றாக்கினன் என்னுமல் "இருப்பதாக்கினன்" என்பதற்கு மணிவாசகர் கருத்து யாதாகலாம் எனச் சிந்திக்கின்றமை விளங்க, "எண்ணம் எனக்கு இயம்புதியே" என வேண்டுகிறார். வடலூர் வள்ளல் நிலைவு வழிச் சென்று நோக்குங்கால், "ஒள்ளிய கன்னற் கனி தேர் களிறெனக் கடை முறை என்னையும் இருப்பதாக்கினன்" என்பதில், ஒள்ளிய கன்னல் பாச நீக்கத்தையும், கனி சிவப் பேற்றையும் விளக்குவதாகக் கொண்டு களிறு போலப் பாச நீக்கமும் சிவப் பேறும் எய்திச் சிவபோகத் திருத்துவதாகக் கருதத் தூண்டுகிறது. ஒன்று, முத்தான்மா. வழக்கு நூலறிஞர் இவ்வாறு பொருள் காணும் திறத்தைச் சென்டன்ஷியாலேஜிஸ் (Sententialagis) என்று கூறுவர்.

இதனால், திருவண்டப் பகுதி யகவலடி ஒன்றின் பொருள் நலம் சிந்தித்தவாறும். (4)

3261. தேடுகின்ற ஆனந்தச் சிற்சபையில் சின்மயமாய்
ஆடுகின்ற சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுதே
நாடுகின்ற வாதவூர் நாயகனே நாயடியேன்
வாடுகின்ற வாட்டமெலாம் வந்தொருக்கால் மாற்றுதியே.

உரை : விரும்பப்படுகின்ற இன்பத்துக் குறுபொருளாகிய ஞான சபையில், ஞான மயமாய் ஆடல் புரிகின்ற திருவடிக் கீழ் மகிழ்கின்ற அரிய அமுதம் போன்றவரே, யாவரும் நயக்கின்ற திருவாதவூர்த் தலைவரே, நாயனைய அடியவனாகிய யான் எய்திய வருத்தங்களைப் போக்கியருள்க. எ.று.

சிவநெறிச் செல்வர் எல்லாராலும் தேடி யறியப்படுவதாகலின் "தேடுகின்ற ஆனந்தச் சிற்சபை" என்றும், ஞானமும் ஆனந்தமும் நிலவுதல் தோன்ற "ஆனந்தச் சிற்சபை" என்றும் கூறுகின்றார். சின்மயம் - ஞானமயம். ஞானத் திருவுருவாய் நின்று சிவபிரான் ஆடல் புரிதலின், "சின்மயமாய் ஆடுகின்ற சேவடி" எனச் சிறப்பிக்கின்றார். ஞானத் திருவடிக் கீழ் நின்று ஆடலின்கண் விளைகின்ற ஞான வின்பத்தை நுகர்ந்து இன்ப வுருவாய் இலங்குதல் பற்றி, மணிவாசகரை "ஆடுகின்ற ஆரமுதே" என வுரைக்கின்றார். ஆடுதல்- அனுபவித்தல். செல்வ வளமும் வான வளமும் உடைமை பற்றி, யாவராலும் விரும்பப் படுவ தென்றற்கு "நாடுகின்ற வாதவூர்" எனவும், அவ்வூரவராதலின், "வாதவூர் நாயகனே" எனவும் இசைக்கின்றார். உலகியல் துன்பங்களின் நீங்கிச் சிவானந்த வாழ்வு கருதி முயல்கின்றமையின், "வாடுகின்ற வாட்டம்" என்றும், சிவானந்தத்திலேயே தன்னை இருத்துக என்பாராய், "ஒருகால் மாற்றுதி" என்றும் வேண்டுகிறார்.

இதனால், வேறு செயலின்றிச் சிவானந்தத்திலே இருத்துக என இறைஞ்சியவாரும். (5)

3262. சேமமிகும் திருவாத வூர்த்தேவென் றுலகுபுகழ்
மாமணியே நீஉரைத்த வாசகத்தை எண்ணுதொறும்
காமமிகு காதலன்றன் கலவிதனைக் கருதுகின்ற
ஏமமுறு கற்புடையாள் இன்பினும்இன் பெய்துவதே.

உரை : நலமிக்க திருவாதவூர்த் தேவரே என்று அறிஞர் கூட்டம் புகழ்கின்ற அழகிய மணி போல்கின்ற பெருமானே, நீ பாடி யருளிய திருவாசகத்தை நான் நினைவிற் கொண்டு சிந்திக்கும் போதெல்லாம் காம வேட்கை மிக்க காதலனுகிய கணவனது காமக் கூட்டத்தை விழைகின்ற தற்காப்பாகிய கற்புடைய நங்கையின் இன்பத்தினும் மிக்க இன்ப முண்டாகிறது, காண். எ.று.

சேமம் - க்ஷேமம். உலகினர்க்குச் செல்வ நலமும், ஞானிகட்கு ஞான நலமும் சேமமாதலால், "சேமமிகு திருவாதவூர்" எனவும், சிறந்த குடித் தோன்றலாவது விளங்கத் "தேவே" எனவும், ஊரவரும் நாட்ட வரும் புகழ்வது பற்றி, "உலகு புகழ் மாமணி" எனவும் ஏத்துகின்றார். ஞான நெறியிற் பண்பட்டமை புலப்பட "மாமணி" என்று கூறுகின்றார். வாசகம் - திருவாசகம். எண்ணுதல் - சொற் பொருள் நலங்களைச் சிந்தையிற் கொண்டு உன்னுதல். காதலனுயினும் காம வேட்கை மிகா விடத்துக் கலவி கைகூடாமையின், "காமமிகு காதலன்றன் கலவி" எனவும், அதுதானும், பருப் பொருளாகாது உள்ளத்தால் உள்ளி நுகரப் படும் நுண்பொருளாதலின், "கருதுகின்ற" எனவும் இயம்புகின்றார். ஏமம் - காப்பு. மகளிருக்குக் கற்பு திண்ணிய காப்பாதலால் "ஏமமுறு கற்புடையாள்" என்றும், அவளெய்தும் இன்பம் தூய இன்ப மென்பது விளங்க "இன்பு" என்றும், அவளெய்தும் இன்பத்தினும், திருவாசகச் சொற் பொருளை எண்ணும் போது உளதாகும் இன்பம் மறுவற்ற தூய்மை யுறுவ தென்றற்கு "இன்பினும் இன்பு" என்றும் இசைக்கின்றார். இன்பம் - ஈறு குறைந்து இன்பு என வந்தது.

இதனால், திருவாசகச் சிந்தனை நல்கும் இன்பம் சிறப்பித் துரைத்த வாரும். (6)

3263. வான்கலந்த மாணிக்க வாசகனின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

உரை : பெருமை பெற்ற மாணிக்கவாசகப் பெருமானே, நின்னுடைய திரு வாசகத்தை உணர்வு ஒன்றிப் பாடும் போது, நல்ல கருப்பஞ் சாற்றினில் தேனும் பாலும் நன்கு பழுத்த தூய கனியின் சாறும்

கலந்தது போல என் உடலிலும் உயிரிலும் கலந்து உமட்டி யுமிழாவாறு இனிப்பு மிகுகிறது. எ.று.

உலகிய லறிவொழுக்கத்தாலும் சிவஞானச் செம்பொருணிறைவாலும் உளதாகிய பெருமை, "வான்" எனப்படுகிறது. நான் - உணர்வு வடிவாகிய உயிர். படித்துணரும் உயிரும் படிக்கப்படும் திருவாசகப் பொருளும் வேறு வேறுகாமல் ஒன்றுய் இயைந்து பாடுவது "நான் கலந்து பாடுவது" என்று கூறப்படுகிறது. நற்கருப்பஞ் சாறு - நன்கு முற்றிய கரும்பின் இனிது வடிகட்டிய சாறு. செழுங் கனி - இனிய சாறு நிறைந்த கனி. சுவைக்கு இடமாதலின், சாறு, சுவை யெனப்பட்டது. ஊன் - உடம்பு. இனிப்புச் சுவை மிக்க வழித் தெவிட்டி யுமட்டுமாதலின், "உவட்டாமல்" என்கின்றார். உவட்டல் - உமட்டல் என வழங்கும். உமட்டுவது, சுவை வேறுபடுமாதலால் "உவட்டாமல் இனிப்பது" என உரைக்கின்றார். உவட்டாமை கூறியது, எத்தனை முறை படிக்கினும் திருவாசகம் இனிமை குறைவதின்மை வற்புறுத்தற்கு.

இதனால், திருவாசகத்தின் சொற் பொருட் சுவையைப் பருப்பொருட் சுவை காட்டித் தெவித்தவாரும். (7)

3264. வருமொழிசெய் மாணிக்க வாசகனின் வாசகத்தில்
ஒருமொழியே என்னையும்என் உடையனையும் ஒன்றுவித்துத்
தருமொழியாம் என்னில்இனிச் சாதகமேன் சஞ்சலமேன்
குருமொழியை விரும்பிஅயல் கூடுவதேன் கூறுதியே.

உரை : மெய்ம்மையே விளைகின்ற சொற்களைப் பேசும் மாணிக்க வாசகப் பெருமானே, உன்னுடைய திருவாசகத்தில் ஒருவாசகமே என்னையும் என்னை ஆளாக வுடைய சிவனையும் ஒன்றுவித் தருளும் உபதேச மொழியாகு மென்றால், சிவப் பேறு குறித்து வேறே சாதனங்களை நாட வேண்டா; அவை குறித்து வருந்த வேண்டா; ஞானசிரியர் ஒருவரின் அருள் மொழியை விரும்பி வேறிடம் மக்கள் செல்வது ஏனோ? சொல்லுக. எ.று.

சொல் நிகழ்ச்சிக்குப் பொருள் இடமாகலின், சொல் முன்னே வரப் பொருள் பின்னே வருதல் போல மெய்ம்மைப் பயன் பின் வர முன்னே வாசகம் வந்து நிற்கும் திறம் பற்றி "வருமொழிசெய் மாணிக்கவாசக" என ஓதுகின்றார். திருவாசகச் செஞ்சொற்களின்கண் ஒவ்வொன்றும் சிவயோகத்திற் கூட்டிச் சிவபோகம் நுகர்விக்கும் மாண்புடைய தென்பார், "ஒரு மொழியே என்னையும் என் உடையனையும் ஒன்று வித்துத் தரும் மொழியாம்" என வுரைக்கின்றார். ஒன்றுவித்தல் - சிவயோகம். யோகத்திற் பெறுவது சிவபோகம் என அறிக. "புகழ்ச்சி யைக் கடந்த போகமே யோகத்தின் பொலிவே" (பிடித்த) எனத் திருவாசகம் தெரிவிப்பது காண்க. உடையன் - ஆளாக வுடைய தலைவன். சாதகம் - சிவயோக போகங்களைப் பெறற்கு வேண்டும் துணைக் காரணங்கள். சாதகங்கள், சாதனங்கள் மேற்று. சாதனம் - கருவி;

கருவி கொண்டு சாதிப்பது சாதகம். ஈண்டுச் சாதனத்தைச் சாதக மென்றது உபசார வழக்கு. சாதனங்களின் பெறலருமை புலப்படுத் தற்குச் "சஞ்சலம் ஏன்?" என வினவுகின்றார். ஞானசிரியரின் ஞான மொழி சாதனங்களிற் சிறப்புடைய தென்பது பற்றி, "குரு மொழியை விரும்பி அயல் கூடுவது ஏன்" என்றும், அது கரும்பிருக்க இரும்பு கடிக் கும் பயனில் செயலாம் என்பார், "ஏன் கூறுதி" என்றும் உரைக்கின்றார்.

இதனுல் திருவாசகத்தின் ஞான மாட்சியை இயம்பியவாரும். (8)

3265. பெண்சுமந்த பாகப் பெருமான் ஒருமாமேல்
எண்சுமந்த சேவகன்போல் எய்தியதும் வைகைநதி
மண்சுமந்து நின்றதும்ஓர் மாறன் பிரம்படியால்
புண்சுமந்து கொண்டதும்நின் பொருட்டன்ரே புண்ணியனே.

உரை: உமாதேவியாகிய பெண்ணே ஒருபாகத்தே கொண்ட பெருமானுகிய சிவபிரான் ஒரு குதிரை மேல் கண்டார் கருதத்தக்க சேவகன் போல் உருக்கொண்டு எழுந்தருளியதும், வையை யாற்றுக் கரை யுடைப்பிற்காகத் தலையில் மண் சுமந்ததும், பாண்டி வேந்தன் ஒருவனுல் மேனி யடிபட்டுப் புண்ணுனதும், சிவபுண்ணியச் செல்வ ராகிய நின் பொருட்டாம் அன்ரே. எ.று.

பெண்ணினத்து ஒப்பற்ற தலையாதலால் உமாதேவியைப் "பெண்" ணெனச் சிறப்பிக்கின்றார். பெண்ணமர்ந்த மேனியனுயினும், பெருமை மிக்கவன் என்றற்குப் "பெருமான்" என்று புகழ்கின்றார். பெண்மைக் கூற்றைத் தன்னுள் மறைத்துக் கொண்டு குதிரை சேவகனுய்ப் போந்தமை கண்டவர் யாவன், எத்திறத்தன் என எண்ணத் தோன்றினமை பற்றி, "ஒரு மாமேல் எண் சுமந்த சேவகன் போல் எய்தியதும்" என இயம்பு கின்றார். வையை என்ற பழம் பெயர் வைகை என இடைக்காலத்தில் மருவிற்று. பெருவெள்ளத்தால் வையைக் கரை யுடைந்தமையின், உடைப் படைத்தற்கு மண் பெய்து அடைக்குமாறு மதுரையார் ஒவ் வொருவர்க்கும் அரசு ஆணை யிட்டமையால் சிவன் கூலி யாளாய்ப் போந்து மண் கொட்டிய குறிப்பு விளங்க, "வைகை நதி மண் சுமந்து நின்றதும்" என இசைக்கின்றார். ஒருகால் மண் கொட்டாது நின்றமை கண்டு சினமுற்று வேந்தன் கைப்பிரம்பு கொண்டு மேனி புண்படச் சிவனை யடித்த குறிப்புப் பற்றி, "ஓர் மாறன் பிரம்படியால் புண் சுமந்து கொண்டதும்" என்று புகல்கின்றார். மாறன் - பாண்டியற்குரிய சிறப்புப் பெயர்களில் ஒன்று. வையை யாற்றுப் நீர்ப் பெருக்கு மாணிக்கவாசகர் பொருட்டு வந்ததெனப் புராணம் கூறுதலால் "நின் பொருட் டன்ரே" எனக் கேட்கின்றார். அன்ரே - ஆம் எனப் பொருள்படும் இரட்டை யெதிர் மறை. புண்ணியன், சிவ புண்ணியச் செல்வன். இப்பாட்டு, "பெண் சுமந்த பாகத்தின் பெம்மான் பெருந்துறை யான், விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத் தீசன், கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை, மண் சுமந்து கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு புண் சுமந்த பொன் மேனி பாடுதுங் காண் அம்மானுய்" என்ற திருவாசகத்தையும், "மதுரை

பெருநன் மாநகரிருந்து, குதிரைச் சேவகனுகிய கொள்கையும், ஆங்கது தன்னில் அடியவர்காகப் பாங்காய் மண் சுமந்தருளிய பரிசும்'' (கீர்த்தி) என்ற அகவல் அடிகளையும் நினைப்பிக்கின்றது.

இதனுல், மதுரையிற் சிவன் செய்த திருவிளையாட்டைக் குறிக்கு மாற்ருல் மாணிக்கவாசகரது மாண்பு தெரிவித்தவாரும். (9)

3266. வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறு மென்னிலிங்கு நான்அடதல் வியப்பன்றே.

உரை : திருவருள் நலம் குறையாத மாணிக்கவாசகப் பெருமானே, நின்னுடைய திருவாசகத்தை ஓதக் கேட்ட பொழுது அவ்விடத்திருந்த கீழான பறவை யினங்களும், வேட்டையாடிக் கொல்லத் தக்க பொல்லாத மிருகங்களும் மெய்மைச் சிவஞான நாட்டம் கொள்ளும் என்ருல், அவற்றின் வேருகிய யான் அந்த நாட்டமுடையனுவது வியப்புத் தருவ தாகாது, காண். எ.று.

திருவருள் ஞானமாகிய செல்வக் குறைவில்லாதவர் என்பது பற்றி, ''வாட்டமிலா மாணிக்கவாசகர்'' எனப் பரவுகின்ருர். வாசகம் - திருவாசகம். கீழ்ப் பறவையாயினும் செவி யுணர் வுடையவையாதலால், திருவாசகத்தை யோதுவோர் ஓதக் கேட்பது தோன்ற, ''கேட்ட பொழுது'' எனவும், ஓதுமிடத்திருந்த புள்ளினத்துள் கீழ் என விலக்கப் பட்ட புழு பூச்சிகளை மேய்ந்துண்ணும் பறவைகளைக் ''கீழ்ப் பறவைச் சாதிகள்'' எனவும் கூறுகின்ருர். கொடுமைப் பண்பால் பிற வுயிரினங் கட்குத் தீங்கு செய்யும் புலி, சிங்கம் முதலிய விலங்கினத்தை, ''வேட்ட முறும் பொல்லா விலங்குகள்'' என வுரைக்கின்ருர். கேள்வி ஞான மில்லாமையைப் புலப்படுத்த உம்மையாற் சிறப்பிக்கின்ருர். பறவைகள் கீழ்மைத் தன்மையும், விலங்குகள் பொல்லாத் தன்மையும் நீங்கி யுய்தி நாடுகின்றன என்றற்கு ''மெய்ஞ் ஞான நாட்டமுறும்'' என நவில் கின்ருர். மெஞ்ஞான நாட்டம், உண்மை யுணர்வு. பறவை யினத்தினும் விலங்கினத்தினும் உயர்ந்து மன வுணர்வால் மேம்பட்டவன் என்பது விளங்க, ''நான்'' என்ற சொல் இசைக்கின்றது. அன்றீற்று ஏகாரம் அசை நிலை.

இதனுல், திருவாசகம் பறவைகளையும், விலங்குகளையும் நல்வழிச் செலுத்தும் நயமுடைய தென நவின்றவாரும்.

திருவருட்பா — வரலாற்று முறை — ஐந்தாம் திருமுறை

உரைவேந்தர் உரை நிறைவெய்தியது (10)

அருட்பிரகாச வள்ளலார்

திருவருட்பா-வரலாற்றுமுறை

உரைவேந்தர் உரை

ஆறும் திருமுறை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

அருட்பிரகாச வள்ளலார்

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் அருளிய

திருவருட்பா-வரலாற்றுமுறை

ஆரும் திருமுறை

உரைவேந்தர் உரை

---

1. பரசிவ வணக்கம்

குறள் வெண்பா

3267. எல்லாம் செயல்கூடும் என்ஞாண யம்பலத்தே
எல்லாம்வல் லான்ற னையே ஏத்து.

உரை : தில்லையம்பலத்தில் எழுந்தருளும் எல்லாம் வல்லவனுகிய சிவபெருமானையே பரவி வழிபடுக; வழிபட்டால் எத்தகைய அரிய செயல்களும் நிறைவுறும்; இஃது என் மேல் ஆணை. எ.று.

ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற செயல் வகை அனைத்தையும் எளிதில் இனிது செய்யும் வல்லாளன் என்பது உணர்த்தற்குச் சிவனை "எல்லாம் வல்லான்" என்றும், அவன் தில்லையம் பலத்தில் கண்டு வணங்கப்படுதல் விளங்க, "அம்பலத்தே" என்றும் இயம்புகின்ருர். எல்லாம் வல்ல அகளப் பரசிவம், தில்லையம்பலத்தில் கூத்தாடும் சிவனுய்ச் சகளத் திருமேனி கொண்டு காட்சி தரும் நலம் கூறி, அவனது திருவருள் பெற்ற வழி நாம் செயற்கு அரியது ஒன்றும் இல்லை என்பாராய், "எல்லாம் செயல் கூடும்" எனவும், இக்கூற்றை வலியுறுத்தற்கு "என் ஆணை" எனவும் இயம்புகின்ருர். "வினை கெடுதல் ஆணை நமதே" (நனி பள்ளி) எனவும், "வானிடை வாழ்வர் மண் மிசைப் பிறவார் மற்றிதற் காணையும் நமதே" (கழுமலம்) எனவும் ஞானசம்பந்தர் ஆணை கூறுவது காண்க.

இதனுல், எல்லாம் வல்லவனுகலின் இறைவனை ஏத்தினுல் யாதனையும் செய்யும் வன்மை யுளதாம் என்றதாம்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3268. திருவிளங்கச் சிவயோகச் சித்தியெலாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச் சிவானுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்கவொளி சிறந்ததிரு விளக்கே
உருவிளங்க உயிர்விளங்க உணர்ச்சியிது விளங்க
உலகமெலாம் விளங்கவருள் உதவுபெருந் தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க
வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்தசிவக் கொழுந்தே.

உரை : நலம் பொருந்திய சிவயோகத்தால் விளையும் சித்தி யெலாம் மேன்மைபெறவும், சிவஞானத்தால் உளதாகும் பெருநிலையிற் பெறப்படும் சிவானுபவம் எய்தவும் அகன்ற வீதிகளையுடைய தில்லை நகரின்கண் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திருக்கூத்தாடி யருளும் சிறந்த ஞான வொளி திகழும் திருவிளக்காகும் சிவமே, மக்கட்கு உடலும் உயிரும் உணர்வும் நலம் பெருக, உலகுயிர்கள் யாவும் விளக்கமுறத் தனது திருவருளே உதவுகின்ற பெரிய தாயாகும் ஞான மணம் கமழும் கூந்தலை யுடைய சிவகாமவல்லி, திருமேனியில் ஒருகூறுக மகிழ்வுடன் அமர்ந்தருள ஒளிரும், மணி யிழைத்த அம்பலத்தின்கண் காட்சி தந்தருளும் சிவக் கொழுந்தாகிய பெருமானே, மன மொழி மெய்களால் வணங்குகிறேன். எ.று.

திரு - நலம் எனப் பொருள்படும். மங்கல மொழி. சிவ பரம் பொருளை நினைந்து செய்யும் யோக முயற்சியால் பெறப்படும் சித்திகள் பலவும் அடங்கச் "சிவயோகச் சித்தி யெலாம் விளங்க" எனக் கூறு கின்றார். சித்திகளை அணிமா, மகிமா, லகிமா, பிராத்தி, பிராகாமித்துவம், ஈசத்துவம், வசித்துவம், காம ரூபம் என எட்டாக வகுத்துரைப்பர். இவற்றின் விரிவைப் பெருந்திரட்டு முதலிய நூல்களிற் காண்க. திருமூலர் முதலிய முன்னைச் சான்றோர் பெற்றிருந்தனரெனப் புராணம் கூறுகிறது. இவ்யோக நெறியை விடுத்துப் பத்தி ஞான நெறி மேற்கொண்டு சிவம் பெற முயலும் நிலை "சிவஞான நிலை" எனவும், அதனாற் பெறலாவது சிவஞானானந்தம் என்றற்குச் "சிவானுபவம்" எனவும் தெரிவிக்கின்றார். அகன்ற மாட வீதிகளை யுடையதாதலால், "தெருவிளங்கு திருத்தில்லை" என்றும், அந்நகர்க்குத் திருவாம் சிறப்பு நல்குவது அம்பலமாகலின், "திருச்சிற்றம்பலம்" என்றும், அதன்கண் நின்று சிவன் திருக்கூத்தாடுத லால், "திருக்கூத்து" என்றும் கூறுகின்றார். அகளமாய்ப் பரவெளியில் ஞான நடம் புரியும் பரசிவத்துக்குச் சிவனைச் சகளமாய் நின்றருளும் அம்பலம் சிறிதாதலின், "சிற்றம்பலம்" எனவும், சிறிதாயினும் மக்களுல குக்குப் பெரிதாய்க் கண்டு பணிபவர்க்கும் சிந்தித்தொழுகுபவர்க்கும் வேண்டப்படும் நலம் யாவும் எஞ்சாது அளிக்கும் ஏற்றமுடைய தென்பாராய், "திருச்சிற்றம்பலம்" எனவும் இனிதுரைக்கின்றார். ஞான நாடகம், ஊன நாடகம் என்ற இருவகைக் கூத்தும் விளங்கத் "திருக் கூத்து விளங்க" எனவும், சிவவொளி திகழ்ந்து காண்பார் கண்ணும் மனமும் அறிவும் ஞான விளக்கம் பெறுவிக்கின்றமை தோன்ற, "சிறந்த

திருவிளக்கே" எனத் தெரிவிக்கின்றார். உரு - ஈண்டு உடல் மேற்று. உயிர்க்கு இடம் உருவும், உணர்வுக்கு இடம் உயிருமாதலின், "உரு விளங்க உயிர் விளங்க உணர்ச்சியது விளங்க" என முறை செய்து மொழிகின்றார். உயிர்த் தொகைகள் உய்தி பெற வாழுமிடமாதலால், "உலக மெலாம் விளங்க" எனவும், உயிர்கட்கு உலகுடல் நுகர்ச்சிகளை நல்குவது திருவருளாதலால், "அருளுதவு பெருந்தாயாம் சிவகாமவல்லி" எனவும் இசைக்கின்றார். பராசத்தி யாதலால் "பெருந்தாய்" என்று போற்றுகின்றார். ஞானப் பூங்கோதை எனச் சான்றோர் புகழ்தல் பற்றி ஞான மணம் கொள்ளப்பட்டது. வல்லி - சிவகாமவல்லி; தில்லையில் அம்பிகைக்குப் பெயர். இருவரும் தில்லையம்பலத்தின்கண் காட்சி தருதலால், "வல்லி ஒருபால் விளங்கப் பொது விளங்க வளர்ந்த சிவக் கொழுந்தே" என வுரைக்கின்றார்.

இதனால், தில்லையம்பலத் திருக்கூத்து யோக நெறிப் பயனும் ஞான நெறிப் பயனும் உயிர்கள் இனிதெய்த நிகழ்கிற தெனத் தெரிவித்த வாறும். (2)

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3269. அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிரொளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே
அன்புரு வாம்பர சிவமே.

உரை : அன்பெனப்படும் கைப்பிடியின் அகத்துள் அடங்கும் மலையும், அன்பெனப்படும் குடிசைக்குள் புகுந்துறையும் அரசரும், அன்பு எனப்படும் வலையிற் சிக்கும் மேலான பரம்பொருளும், அன்பு எனப்படும் கைக் கிண்ணத்தில் அடங்கும் அமுதமும், அன்பு எனப்படும் குடத்துக்குள் ஒடுங்கும் கடலும், அன்பாகிய உயிரின்கண் விளங்குகிற உணர்வொளியும், அன்பாகிய அணுவுக்குள் ஒடுங்கும் பேரொளியும், அன்பே யுருவாகிய பரசிவமாகும். எ.று.

"அன்பே சிவம்" என்று சான்றோர் கூறுதலால் "அன்புருவாம் பரசிவம்" என மொழிகின்றார். தத்துவ வுலகில் வழங்கும் சிவமூர்த்தங்கள் பலவற்றினும் மேலாய சிவத்தைப் பரசிவம் என்கின்றனர். திண்மையும் சலியாமையுமுற்று மலை போல் ஓங்கி யுயர்ந்ததாயினும், அன்புக்கு எளிதாய் ஒரு கைப்பிடிக்குள் அடங்குமளவிற் சுருங்கி இன்புறுத்துவ தாம் என்பார், "அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே" என்று கூறுகிறார். அரசர்க்கெல்லாம் ஒப்பற்ற தனி பேரரசாய்ப் பெருமனைக்குட் புகுந்துலவும் பெரியவனாயினும், அன்பர் அன்பாகிய எளிய சிறிய

குடிசையுள்ளும் புகுந்து மகிழும் எளிமை யியல்பினன் என்றற்கு, ''அன்பெனும் குடில் புகும் அரசே'' என்று உரைக்கின்றார். எத்தகைய வலிக்கும் அகப்படாத பெரும் பரம்பொருளாக இருப்பினும் அன்பென்னும் மெல்லிய வலிக்குள் எளிதிலகப்படுவன் என்றற்கு ''அன்பெனும் வலிக் குட்படு பரம்பொருள்'' என மொழிகின்றார். யாதொன்றினுள்ளும் அடங்குதலில்லாத பேரமுதமாய் இலங்குவனையினும் அன்பர் அன்புக் கையில் இனிதினமர்வன் என்றும், பரமாந் தன்மையால் அளப்பருங் கடலாக விளங்கினும், அன்பாகிய சிறு குடத்துள் அடங்கி இன்புறுத்துவ னென்றும் இயம்புகின்றார். அன்பு செய்யும் உயிர்க்கு உணர்வொளியாக வும், சிறுமையால் அணுத் தன்மையுறும் ஆன்மாவுக்குள் ஆன்ம சிற்சத்தியாய் அமைந்து ஞான வொளி நல்குவதாகவும் விளங்கும் இயல்பை, ''அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே'' எனவும், ''அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே'' எனவும் இசைக்கின்றார்.

இதனால், பரசிவத்தின் அன்புக்கு எளிதாம் தன்மை விளக்கப்பட்ட வாரும். (3)

2. திருச்சிற்றம்பலத் தெய்வமணி மாலை

அஃதாவது, தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் கூத்தப் பிரானுக எழுந் தருளும் சிவமூர்த்தம் பரசிவம் என்பதை விளக்கம் செய்யும் தூய சொற் பொருள்களாலான மாலை. கடைந்து தூய்மை செய்யப்பட்ட மணிமாலை போல வழுக் கனைந்து தூயதாக்கிய சொல்மாலை என்றற்கு 'மணிமாலை' எனப்படுகிறது. இதன்கண் பரம்பொருளின் பொதுவும் சிறப்புமாகிய இயல்புகள் ஞான நூல் கூறும் நெறி பிறழாமல் எடுத்தோதுகின்றார்.

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3270. அகரநிலை விளங்குசத்தர் அனைவருக்கும் அவர்பால்
அமர்ந்தசத்தி மாரவர்கள் அனைவருக்கும் அவரால்
பகரவரும் அண்டவகை யனைத்தினுக்கும் பிண்டப்
பகுதிகளங் கனைத்தினுக்கும் பதங்களனைத் தினுக்கும்
இகரமுறு முயிர்எவைக்கும் கருவிகளங் கெவைக்கும்
எப்பொருட்கும் அனுபவங்கள் எவைக்கும்முத்தி
யெவைக்கும்
சிகரமுதற் சித்திவகை யெவைக்கும்ஒளி வழங்கும்
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வமொன்றே கண்டீர்.

உரை : உயர்நிலையில் திகழ்கின்ற சத்திமான்கள் எல்லார்க்கும், அவர்களிடமிருக்கும் சத்திகள் எல்லார்க்கும், அச்சத்திகளால் தோற்று விக்க வுண்டாகிய அண்டப் பகுதி யனைத்துக்கும், அவற்றுள் அடங்கிய பிண்டப் பகுதிகள் அனைத்துக்கும், இந்திரன் முதலிய தேவர்களுறையும் பதங்கள் எல்லாவற்றிற்கும் இம்மண்ணுலகத்து உயிர் வகை யனைத்துக் கும் அவ்வவற்றிற் கமைந்த உடல் கருவி கரணங்கள் அனைத்துக்கும், பொருள் வகை யனைத்துக்கும் அவற்றுல் நுகரப்படும் நுகர்ச்சி வகை யாவற்றிற்கும், முடிவிற் பெறலாகும் முத்தி வகை பலவற்றிற்கும் மேன்மை யுற்ற சித்தி வகைகள் யாவற்றிற்கும் ஒளியும் பயனும் நல்குவது தில்லைச் சிற்றம்பலத்திற் காட்சி தந்தருளும் தெய்வம் ஒன்றே என அறிவீர்களாக. எ.று.

அகரம் - உயர்ந்த விடம். சத்தர் - சத்திகளோடு கூடி யிருப்பவர்; இவர்களைச் சத்திமான்கள் என்பதும் உண்டு. பிரமன், திருமால், உருத்திரன் முதலிய சத்திமான்களுக்குச் சரசுவதி, இலக்குமி, உருத்திரை முதலியோர் சத்திகளாவர். இச்சத்தி வகைகளின் விரிவைச் சிவஞான பாடியத்து இரண்டாம் சூத்திரத்து நான்கா மதிகரண வுரையிற் காண்க. இச்சத்திகளால் உள்ள அண்டங்கள் எண்ணிறந்தன; "அண்டப் பகுதி

யின் உண்டைப் பிறக்கம், அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி, ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின், நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" (அண்ட) எனத் திருவாசகம் ஓதுவ தறிக. இவ்வண்டங்கள் தோறும் உருவுடையவும் இல்லனவும் எனவும், இயங்கு திணையும் நிலைத் திணையும் எனப் பகுக்கப்படும் பொருள்கள் யாவும் பிண்டமாதலின், "பிண்டப் பகுதிகள் அனைத்தினுக்கும்" எனக் கூறுகின்றார். அண்டம் பெரியது; பிண்டம் அதனுள் அடங்கும் சிறியது. பதங்கள், இந்திர பதம், பிரம பதம், வைகுந்த பதம், கயிலாய பதம் எனப் பலவாம். இகரம் - கீழிடம்; மண்ணுலக முதலாக வுள்ள உலகங்களில் உள்ள உயிர் வகைகளை "இகர முறும் உயிர்" என்று குறிக்கின்றார். உயிர் வாழ்தற்கு உலகும் உடலும் உடலின் உள்ளுறு மன முதலிய கருவிகளும் கருவிகளாம். கருவி கரணங்களால் நுகர்வது அனுபவம்.

இதனால், அண்ட பிண்ட வகை அனைத்தினுக்கும், பத வகை யாவற்றிற்கும் உயிர்த் தொகை யெல்லாம் பெறும் அனுபவங்கட்கும் முதல் தெய்வம் திருச்சிற்றம்பலத்துக் கூத்தப் பெருமான் எனக் காட்டிய வாரும். (1)

3271. வண்ணமிகு பூதவெளி பகுதிவெளி முதலா
வகுக்குமடி வெளிகளெலாம் வயங்குவெளி யாகி
எண்ணமுறு மாமவுன வெளியாகி அதன்மேல்
இசைந்தபர வெளியாகி இயலுபய வெளியாய்
அண்ணுறுசிற் பரவெளியாய்த் தற்பரமாம் வெளியாய்
அமர்ந்தபெரு வெளியாகி அருளின்ப வெளியாய்த்
திண்ணமுறும் தனியியற்கை யுண்மைவெளி யான
திருச்சிற்றம் பலம்தனிலே தெய்வமொன்றே கண்டீர்.

உரை : பல்வேறு வண்ணங்களை யுடைய ஐம்பெரும் பூதங்கள் தங்கும் வெளி, அப் பூதங்களாலான பவுதிகங்கள் தங்கும் வெளி யென வகுத்துக் காணப்படும் மூலவெளிகட்கெல்லாம் இடமாய் விளங்கும் வெளி யாகவும், சொல் லெல்லை கடந்து மன வெல்லைக்கண் நிற்கவுருவாகிய மவுன வெளியாகவும், அதற்கு மேல் பொருந்திய பரவெளியாகவும், இரண்டுங் கலந்த பராபர வெளியாகவும், ஒன்றற் கொன்று இடைவெளி யின்றிச் செறிந்திருக்கும் சிற்பர வெளியாகவும், தற்பர வெளியாகவும் அமைந்த பெருவெளியாய், அருளின்ப வெளியாய், திண்மை சான்ற தனித்த இயற்கையான உண்மை வெளியாகும் திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளும் சிவமாகிய தெய்வம் ஒன்றே; பலவல்ல. எ.று.

நில முதல் பூதங்கள் தனித்தனியே தங்குவது பூதவெளி; பூதங் களால் இயன்று அவற்றின் கூருகும் பௌதிகப் பொருள்கட்கு இடம் பௌதிக வெளி; அதனைப் பகுதி வெளி என்று கூறுகின்றார். இவ்வெளி கள் ஆகாசம் எனப்படுவதுண்டு. அதனால் இவை பூதாகாசம், பௌதி காகாசம், மூலாகாசம் எனப்படும். இவ்வாகாசங்கள் சொல்லும் எல்லைக்குள் அடங்குவன. இவற்றின் நுண்ணியவாய் மன வுணர்க்கே புலனுவது மௌனாகாசம். அதனின் மேலாவது பராகாசம்; அதற்குக் கீழ்

வயங்குவன அபராகாசம். இரண்டையும் கூட்டி "உபய வெளி" என வுரைக்கின்றார். பராகாசம் உணர்வுருவாதலின், சிற்பர வெளி யெனவும் குறிக்கப்படுகிறது. இப் பரவெளியின்கண் ஞானமேயான சிவாகாசம் பெருவெளி எனக் காட்டப்படுகிறது. பூதாகாச முதலிய அபராகாசங்களில் உள்ளன போலச் சிவாகாசத்தில் திருவருள் ஞானமும் இன்பமும் உள்ளன வென்றற்கு "அருளின்ப வெளி" என இயம்புகிறார். ஒன்றி னொன்று அடங்குதலும் அடக்குதலுமாகிய செயல்களால் தன் தன்மை கெடாமை தோன்ற, விகாரி யாகாமை புலப்பட, "தனி யியற்கை யுண்மை வெளி" எனவும், அது சிதம்பரம் என்றற்குத் "திருச்சிற்றம்பலம்" எனவும், அங்கு எழுந்தருளும் பரம்பொருள் ஒன்றே; பலவல்ல எனற்கு, "தெய்வம் ஒன்றே கண்டீர்" எனவும் இசைக்கின்றார்.

இதனால், பூதாகாச முதல் சிவாகாசமாகிய சிதாகாசம் ஈறாய் நுண்ணி தாய சிற்றம்பலத்தில் தெய்வம் ஒன்றே யுளதென வற்புறுத்தியவாறும்.
(2)

3272. சார்பூத விளக்கமொடு பகுதிகளின் விளக்கம்
தத்துவங்கள் விளக்கமெலாம் தருவிளக்க மாகி
நேராதி விளக்கமதாய்ப் பரைவிளக்க மாகி
நிலைத்தபரா பரைவிளக்கம்ஆகியகம்புறமும்
பேராசை விளக்கமதாய்ச் சுத்தவிளக் கமதாய்ப்
பெருவிளக்க மாகியெலாம் பெற்றவிளக் கமதாய்ச்
சீராட விளங்குகின்ற இயற்கைவிளக் கமதாம்
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வமொன்றே கண்டீர்.

உரை : நில முதலாக ஒன்றினொன்றைச் சார்ந்திருக்கும் பூதங் களின் விளக்கமும், அவற்றுலாகிய பௌதிகங்களின் விளக்கமும், கண் முதலாய தத்துவங்களின் விளக்கமும் ஆகிய இவற்றிற்கும் விளக்கம் தரும் மூல விளக்கமாகியும், அதற்கு நேர்பட்ட விளக்கம் தருவதாகிய சத்தி விளக்கமாகியும், அதன் நிலைபெற்ற பராபரை விளக்கமாகியும், அகமும் புறமுமாய் நிலவும் உலகியலாசை விளக்கமும், நிராசையாகிய சுத்த விளக்கமுமாகி பெருவிளக்கமாகியும், எல்லா விளக்கங்களைத் தன்னகத்தே கொண்ட சிறப்புப் பொருந்தத் தன்னியல்பாகும் சகச வொளியாவது திருச்சிற்றம்பலத்திலே எழுந்தருளும் சிவபிரானுகிய தெய்வ மொன்றே என அறிமின். எ.று.

நிலத்தைச் சார்ந்து நீரும், அதனைச் சார்ந்து நெருப்பும், அதனைச் சார்ந்து காற்றும், அதனைச் சார்ந்து விண்ணும் நிற்றல் பற்றிச் சார்பூத விளக்கம் என்று கூறுகின்றார். பூதப் பகுதிகள் என்றது, பூதங்களின் அடியாகத் தோன்றிய பௌதிகப் பொருள்களை என அறிக. கண் முதலாக வுள்ள ஆன்ம தத்துவமும், வித்தியா தத்துவமும், சிவ தத்துவ மும் அடங்கத் "தத்துவங்கள் விளக்க மெலாம்" என வுரைக்கின்றார். ஆதி விளக்கமாவது, சிவ சத்தியின் விளக்கம் அது பரமனுக்குப் பராசத்தி யாகித் தத்துவ தாத்துவிகங்களை விளக்குவது பற்றி, "பரை விளக்கமாகி" எனப் பகர்கின்றார். மேனின்ற தத்துவங்களையும் கீழ் நிற்கும் தாத்து

விகங்களையும் விளக்குதலால், "பராபரை விளக்கமாகி" என இயம்புகின்றார். பரை விளக்கத்தின் நிலைத்த தன்மையை யுணர்த்த "நிலைத்த பராபரை" எனக் கூறுகிறார். ஆசை - பக்கம்; திசையுமாம். அகம் புறம் என்பன ஆசைக் கூறுகளாதலால், "அகம் புறமும் பேராசை விளக்கமதாய்" என்கின்றார். ஆசை - விருப்பப் பொருளதாய்த் துன்பத்துக் கேதுவாவது. நிராசை இன்ப வேதுவாதல் பற்றி, அதன் விளக்கத்தைச் "சுத்த விளக்கம்" என்கின்றார். அதனிற் பெரிய விளக்கம் வேறின்மை பற்றி, "பெரு விளக்கமாகி" எனவும், பெருமை புலப்பட "எல்லாம் பெற்ற விளக்கமதாய்" எனவும் எடுத்துரைக்கின்றார். மேற் கூறிய விளக்கம் பலவும் சிவம் நல்க விளங்குவனவாதலால், சிவ விளக்கத்தை "இயற்கை விளக்கம்" என இசைக்கின்றார். விளக்கமெலாம் தரும் விளக்கமாகியும் பரை விளக்கமாகியும், பராபரை விளக்கமாகியும், பெருவிளக்கமாகியும், இயற்கை விளக்கமாவது சிவ விளக்கமாம் தெய்வமொன்றே என இயையும்.

இதனால், சிவத்தின் தனி விளக்கம் காட்டியவாறும். (3)

3273. இடம்பெறுமிந் திரியஇன்பம் கரணஇன்பம் உலக
இன்பமுயிர் இன்பமுதல் எய்துமின்ப மாகித்
தடம்பெறுமோ ரான்மவின்பம் தனித்த வறிவின்பம்
சத்தியப்பே ரின்பமுத்தி யின்பமுமாய் அதன்மேல்
நடம்பெறுமெய்ப் பொருளின்பம் நிரதிசய இன்பம்
ஞானசித்திப் பெரும்போக நாட்டரசின் பமுமாய்த்
திடம்பெறவோங் கியவியற்கைத் தனியின்ப மயமாம்
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வமொன்றே கண்டீர்.

உரை : உடம்பிடமாகப் பெறப்படும் இந்திரிய வின்பம், கரண வின்பம், உலகிய லின்பம், உயிருணர் வின்பம் முதலாகப் பெறப்படும் தூல வின்பமாகியும், இவற்றினும் பெருமை பெறும் ஆன்ம வின்பம், தனி ஞான வின்பம், சத்திய வின்பம், முத்தியின்பம் என ஆகியும், அதனின் மேலதாகிய கூத்தப் பிரானுடைய கூத்தின்பம், மெய்ப்பொருள் இன்பம், நிரதிசய வின்பம் எனவும், மெய்ம்மை ஞானம் கைவருதலால் உளதாகும் பெரிய சிவபோக நாட்டில் நுகரும் அரசின்பம் எனவும், திடம் பெற்ற உயர்ந்த இயற்கைத் தனி யின்ப மயமாய் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளும் தெய்வம் ஒன்றே, பல வல்ல, காண்பீர்களாக. எ.று.

கண் காது முதலிய இந்திரியக் காட்சிகளால் எய்தப் படுவது இந்திரிய வின்பம். மனம் சித்தம் முதலிய அந்தக் கரணங்களால் புத்திக்கண் நுகரலாகும் மானதக் காட்சி யின்பம், கரண வின்பமாகும். உலகிய வின்பமாவது, நில முதலிய பூதங்களும் அவற்றின் பௌதிகங்களும் தரும் வாழ்க்கை யின்பமாகும். கருவி கரணங்களாலும் உலகியற் போகப் பொருள்களாலும் பெறப்படும் தன் வேதனைக் காட்சியின்பம் உயிர் இன்பம் எனப்படுகிறது. இவை தூல வுடல் வாயிலாக நுகரப்படுவது பற்றித் தூல வின்பம் எனப்படுகிறது. பெருமைப் பொருள் தரும் தடவென்னும் சொல் தடம் என ஈற்றில் மகரவொற்றுப் பெற்றது. தூலம் பொருளொடு கலவாமல்

உள்ளம் இடமாக நின்று உணர்வு வாயிலாக உயிர் பெறும் இன்பம் ஆன்ம வின்பம் எனப்படுகிறது. உணர்வுருவாகிய உயிரை ஆன்மா என்பது உபநிடத வழக்கு. தனித்த சிந்தனைக்கண் உயிர் பெறும் இன்பம் "தனித்த அறிவின்பமாகும்" உள்ளதன் உண்மை காணும் காட்சியில் நுகரப்படும் உண்மை யின்பம், "சத்தியப் பேரின்பம்" எனப்படுகிறது. பொய்யாக் கழியும் இன்பங்களின் வேருய், உண்மை நிலைக் களமாக எய்துதலால், "சத்தியப் பேரின்பம்" என வுரைக்கின்றார். கருவி கரணம் கடந்து, ஆன்மபோதம் கடந்து, திருவருளின்ப நிலையிற் பெறுவது முத்தி யின்பமாகும். இவ்வின்பமே மெய்ம்மை ஞான வின்பம் என்றும், ஒப்புயர் வற்றது என்றற்கு "நிரதிசய இன்ப" மென்றும் வழங்கும். இதுவே பத்தி ஞான நெறிக்கண் நிற்பவர் அதன் பயனாக எய்தும் சிவபதப் பேரின்பத்தை "ஞான சித்திப் பெரும் போக நாட்டு அரசின்பம்" என்று புகழ்கின்றார். இதனைத் திருநின்ற செம்மைப் போகம் எனவும், சிவபதப் போகானுபவம் எனவும் சான்றோர் பலவேறு வாய்பாடுகளாற் கூறுவர்.

இதனால், கருவி கரணங்களோடு கலந்து பெறும் இன்ப வகையும், கலவாது உள்ளம் துணையாகப் பெறும் இன்ப வகையும் முத்தி யின்ப வகையும் யாவும் சிற்றம்பலக் கூத்தாடும் தெய்வத்தின் பரியாய மெனத் தெரிவித்தவாறும். (4)

3274. எல்லாந்தா னுடையதுவாய் எல்லாம்வல் லதுவாய்
எல்லாம்தா னெனதுவாய் எல்லாம்தா னலதாய்
சொல்லாலும் பொருளாலும் தோன்றுமறி வாலும்
துணிந்தளக்க முடியாதாய் துரியவெளி கடந்த
வல்லாளர் அனுபவத்தே யதுவதுவாய் அவரும்
மதித்திடுங்கால் அரியதுவாய் பெரியதுவாய் அணுவும்
செல்லாத நிலைகளிலும் செல்லுவதாய் விளங்கும்
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வ மொன்றே கண்டீர்.

உரை : உலகுகளும் அவற்றின் உள்ளுறு பொருள்களுமாகிய எல்லாவற்றையும் தனதாக வுடையதும், எல்லாச் செயல்களையும் புரிய வல்லதும், எல்லாப் பொருளும் தானுவதும் அல்லதாவதுமான பரம் பொருள், சொல்லளவைகளாலும் பொருளளவைகளாலும், அவற்றைக் கொண்டறியும் அறிவாலும் இத்தன்மைத் தென்று அளந்து துணியக் கூடாததாய், துரியத்தானத்துக் கப்பாலதாகிய துரியா தீதக் காட்சி வல்ல பெருமக்களின் அதுவதுவாய் அனுபவிக்கப் படுவதாய், அவருடைய மதிப்பீட்டுக்கும் அடங்காத பெருமை யுடையதாய், அணுப் புதைக்கவும் மாட்டாத இடங்களிலும் சென்றியைவதாய் விளங்குகிறது; அதுவே தான் திருசிற்றம்பலத்தே சகளீகரித்தருளும் தெய்வமாகும்; அஃது ஒன்றே, பல வல்ல எனத் தெளிமின். எ.று.

உலகங்களையும் அவற்றின் உள்ளுறு பொருள்களையும் யாவையும் படைத் தளிக்கும் முதல்வனதலால், "எல்லாம் தான் உடையது" என்றும் முதல்வனுகிய பரம் பொருள் வரம்பில்லாத ஆற்றலுடையதாகலின், "எல்லாம் வல்லது" என்றும், தான் படைத்தவை அனைத்தையும் தன்னின் வேருகாது தானேயாகக் கலந்து நிற்பது புலப்பட, "எல்லாம்

தான் ஆனதுவாய்" என்றும், கலவாது வேருய் நின்று தற்பரமாய் நிற் பதுண்மை விளக்குதற்கு, "எல்லாம் தானலதாய்" என்றும் எடுத்துரைக் கின்ருர். இது "ஒன்ருய் வேருய உடனுனன்" என்ற மெய்ம் மொழிக்கு விளக்கம் தருவது காண்க. சொல்லால் அளத்தலாவது சாத்திர தோத்திர நூலுரைகளால் உண்மை காண்பது; காட்சி யனுமானங்களால் உண்மை துணிவது பொருளால் அளத்தலாகும். ஏது எடுத்துக்களால் எண்ணித் துணிவது. "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் சோதிக்க வேண்டா" எனத் திருஞான சம்பந்தர் உரைப்பது காண்க. அளவைகளால் துணியும் அறிவு செயற்கையாதலால், தன்னியல்பில் விளங்கும் இயற்கையறிவைத் "தோன்றும்அறிவு" எனச் சொல்லுகின்ருர். "துணிந்தளக்க முடியாதாய்" என்பது, "அளவியை யார்க்கும் அறிவரியோன்" (திருக்கோ) என்பதற்கு விளக்கமாகும். துரிய வெளி கடந்தது, துரியாதீதம். சாக்கிரத்தே அதீதத்தைப் புரியும் சான்ருேர்களைத் "துரிய வெளி கடந்த வள்ளலாளர்" என்று சிறப்பிக்கின்ருர். "பொற்புறு கருவி யாவும் புணராமே யறிவிலாமல், சொற் பெறும் அதீதம் வந்து தோன்ருமே தோன்றி நின்ற, சிற்பரமதனுல் உள்ளச் "செயலறுத்திட விதிக்கும், தற்பரமாகி நிற்றல் சாக்கிரா தீதம்" எனச் சிவப்பிரகாசம் சொல்லுவதறிக. அவ் வல்லாளர்க்குக் காணப்படுவன யாவும் சிவமாய் விளங்குதலால், "அதுவதுவாய்" என்று கூறுகின்ருர். சிவமாகிய தன்மையால் அறிவிற் பெரியாராயினும் அவரது அறி வெல்லையைக் கடந்து போவதுணர்த்த "அவரும் மதித்திடுங்கால் அரியதுவாய்ப் பெரியதுவாய்" எனவும், எங்கும் எவற்றினும் நீக்கமற நிறைந்திருக்கும் நீர்மை காட்டற்கு, "அணுவும் செல்லாத நிலைகளினும் செல்லுவதாய்" எனவும் இசைக்கின்ருர்.

இதனுற் பரம்பொருளின் பரமாம் தன்மை விளக்கியவாரும். (5)

3275. அயர்வறு பேரறிவாகி அவ்வறிவுக் கறிவாய்
அறிவறிவுள் ளறிவாய்ஆங் கதனுள் ஓரறிவாய்
மயர்வறுமோ ரியற்கையுண்மைத் தனியறிவாய்ச் செயற்கை
மன்னுமறி வனைத்தினுக்கும் வயங்கியதா ரகமாய்
துயரறுதா ரகமுதலாய் அம்முதற்கோர் முதலாய்
துரியநிலை கடந்ததன்மேல் சுத்தசிவ நிலையாய்
உயர்வுறுசிற் றம்பலத்தே எல்லாம்தா மாகி
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவர்உண்டே கண்டீர்.

உரை : சோர்வில்லாத பேரறிவாய், அவ்வறிவுக்கும் நுண்ணிய அறிவாய், அந்த நுண்ணறிவுக்குள் அறிவதறியும் அறிவாய், அவ்வறி வினுள்ளே நின்று காணும் மெய்ம்மை யறிவாய், மயக்க மில்லாத ஒப்பற்ற இயற்கைத் தனி யுண்மை யறிவாயும், உடல் கருவி கரணங்களாற் பெற லாகும் செயற்கை யறிவு வகை யாவற்றிற்கும் தாரகமாயும், துன்பமற்ற அத் தாரகத்துக்கு மூல முதலாயும், அம் முதலுக்கு முதலாயும், துரிய நிலைக்கு அப்பால் விளங்கும் சுத்த சிவநிலையாயும் எழுந்தருளும் உயர் வுடைய திருச்சிற்றம்பலத்தின்கண் எல்லாம் தானுக ஓங்கி யுயரும் தனிக் கடவுளாகிய ஒரு பெரும் பொருள் உண்டெனத் தெளிமின். எ.று.

அறிதற்கண் அயர்ச்சி யுறுவது பேரறிவாகாதலின், "அயர்வறு பேரறிவாகி" எனக் கூறுகிறார். பேரறிவைப் பெருகுவிக்கும் அறிவு, "அவ்வறிவுக்கறிவு" எனப்படுகிறது. அதன் உள்ளீடாகி அறிவறியுமது "அறிவறி யுள்ளறிவாம்"; அதன்கண் உறுவதோர் அறிவுண்டென்பதற்கு "ஆங்கதனுள் ளோர் அறிவு" என அறிவிக்கின்றார். அறிவு நுண்ணிய தாகிய போது மயக்கம் கெட்டழிதலின், "மயர்வறும் இயற்கை யறிவு" என்கின்றார். இயற்கை யறிவை நுண்ணிய மதி எனச் சான்றோர் குறிப்பர். "மதி நுட்பம் நூலோடுடையார்" (குறள்) என்பது காண்க. இயற்கை யறிவை இயல்விக்கும் திருவருளுண்மை யறிவை, "இயற்கை யுண்மைத் தனியறிவு" என வுரைக்கின்றார். நூல்களாலும் பயில்வாலும் உளதாகும் செயற்கை யறிவு இயற்கை யறிவின் திட்ப நுட்பங்களை அடிப் படையாகக் கொண்டு விளக்க முறுதலால், "செயற்கை மண்ணும் அறிவனைத்தினுக்கும் வயங்கிய தாரகமாய்" எனச் சான்றோர் மொழிகின்றார் வயங்குதல் - விளங்குதல். தாரகம் - ஆதாரம். தாரகமாகிய இயற்கை யறிவுக்கு முதல் திருவருளும் அதற்கு முதல் ஞானமகிய சிவமுமாதல் தோன்ற, "துயரறு தாரக முதலாய்" அம் முதற்கோர் முதலாய்" என வுரைக்கின்றார். அஃதாவது இன்னதென விளக்குதற் பொருட்டு, "துரிய நிலை கடந்ததன் மேற் சுத்த சிவ நிலை" என்று சொல்லுகின்றார். திருவருள் ஞானம் இருளகற்றி இன்பம் தருவதாதலால் "துயரறு தாரகம்" என்று சிறப்பிக்கின்றார்.

இதனால் திருவருள் ஞானதாரம் சிவ பரம் பொருளாகிச் சிற்றம்பலத் தெழுந்தருளும் கடவுள் எனக் காட்டிய வாறும். (6)

3276. அண்டமெலாம் பிண்டமெலாம் உயிர்களெலாம் பொருள்கள்
ஆனவெலாம் இடங்களெலாம் நீக்கமற நிறைந்தே
கொண்டவெலாம் கொண்டவெலாம் கொண்டுகொண்டு மேலும்
கொள்வதற்கே இடம்கொடுத்துக் கொண்டுசலிப் பின்றிக்
கண்டமெலாம் கடந்துநின்றே அகண்டமதா யதுவும்
கடந்தவெளி யாயதுவும் கடந்ததனி வெளியாம்
ஒண்தகுசிற் றம்பலத்தே எல்லாம்வல் லவராய்
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவருண்டே கண்டீர்.

உரை : அண்டங்களினும் பிண்டங்களினும் அவற்றுள் வாழும் உயிர்களினும் இடங்களினும் ஆக எல்லாவற்றினும் நீக்கமற நிறைந்து, அந்நிறைவுக்குள் கொண்டன எல்லாம் எஞ்சாமற் கொண்டு மேலும் உளவாயின் அவற்றையும் தன்னுள் அடக்கிக் கொண்டு மேன் மேலும் எய்துவ யாவற்றிற்கும் இடம் கொடுத்துக் கொண்டு திரிபு சிறிதுமின்றிக் கண்டம் பலவும் கடந்து அகண்டமாய், அதுவும் கடந்த வெளியாய், அதற்கப்பாலதான தனிப் பரவெளியாய், ஒள்ளிய திருச்சிற்றம்பலத்தின் கண்ணேஎல்லாம் வல்ல பெருமானாய் ஓங்கி யுயர்கின்ற தனிக் கடவுள் அசிவம் ஒன்றேறன்றென அறிமின். எ.று.

மிகப் பெரியதை அண்ட மெனவும், சிறியதைப் பிண்ட மெனவும் கூறுவது மரபு. பிண்டங்கள் எண்ணிறந்தன கொண்டது அண்டம். ஆயிரத் தெட்டு அண்டங்களெனப் புராணிகர் கூறுவர். இந்தப் பிண்டங் களிலும் அண்டங்களிலும் எண்ணிறந்த உயிர்கள் வாழ்தலால் அண்ட பிண்டங்களைக் கூறினவர், "உயிர்களெலாம்" என்றும், அவ்வுயிர்கட்குப் போக போக்கியங்களாவதால் "பொருள்களான வெலாம்" என்றும் புகல் கின்றார். நீக்கமற நிறைதலைக் குறைவிலா நிறைவு என்பர். நிறைவு ஓர் அளவில் நில்லாது தன்கண் நிறைவன அனைத்தையும் நிறைவித்து மேன் மேலும் வருவனவற்றையும் விகாரமின்றி நிறைத்துக் கொள்வது புலப்பட, "கொண்ட வெலாம் கொண்ட வெலாம் கொண்டு கொண்டு மேலும் கொள்வதற்கே இடம் கொடுத்துக் கொண்டு சலிப்பின்றி" என வுரைக்கின்றார். மிகை படுவதால் வீங்கிப் பிதிர்வ தன்றென்றற்குச் "சலிப்பின்றி" எனச் சிறப்பிக்கின்றார். சலிப்பு - விகாரம் எனவும், திரிபு எனவும் கூறப்படும். கண்டம் - ஓர் அளவுக்கு அகப்படுவது; அகப் படாமல் விரிவது அகண்டம். அவ்விரிவுக்கு அப்பாலது "அதுவும் கடந்த வெளி"யாம். அதனைக் கடந்தது பரசிவ வெளியாமாதலின், அதனை "அதுவும் கடந்த தனி வெளி" எனக் கூறுகின்றார். தனி வெளியான பரசிவ வெளி சிதாகாசமாதல் பற்றித் "தனி வெளியாம் ஒண்டரு சிற்றம் பலம்" என வுரைக்கின்றார். அதன்கட் கூத்தப் பெருமானைய் எழுந்தருள் பவர், எல்லாம் வல்ல சிவபெருமானதல் பற்றி "சிற்றம்பலத்தே எல்லாம் வல்லவராய் ஓங்குகின்ற தனிக் கடவுள்" என ஓதி உவகை யுறுகின்றார்.

இதனால், சிவ பரம்பொருளின் வியாபகத்துவம் விளக்கப்படுமாறும், (7)

3277. பாரொடுநீர் கனல்காற்று காயமெனும் பூதப்
பகுதிமுதல் பகர்நாதப் பகுதிவரை யான
ஏர்பெறுதத் துவவுருவாய்த் தத்துவகா ரணமாய்
இயம்பியகா ரணமுதலாய்க் காரணத்தின் முடிவாய்
நேருறுமம் முடிவனைத்தும் நிகழ்ந்திடுபூ ரணமாய்
நித்தியமாய்ச் சத்தியமாய் நிர்க்குணசிற் குணமாய்
ஓர்தருசன் மாத்திரமாம் திருச்சிற்றம் பலத்தே
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவருண்டே கண்டீர்.

உரை : நிலம் முதல் நாத மீருக எழில் பெற வமைந்த தத்துவங் களின் உருவாய், அவற்றிற்குக் காரணமான தன்மாத்திரையாய், அதற் கெல்லாம் மூல காரணமான மாயையின் வைப்பாகிய அருட் சத்தியாய், நேர்படப் பொருந்தும் அவை யாவும் ஒடுங்கும் பூரணமாய், நித்தப் பொருளாய், நிர்க்குணமாய், சிற்குணமாய் உணரப்படும் தற்பரமாகும் திருச்சிற்றம்பலத்தின்கண் உயர்ந்தோங்கும் ஒப்பற்ற சிவமாகிய கடவுள் ஒன்றே, பல வல்ல எனத் தெளிமின். எ.று.

பார் - நிலம். கனல் - நெருப்பு. நில முதலிய ஆன்ம தத்துவப் பகுதி. கலை முதல் வித்தியா தத்துவப் பகுதி, சுத்த வித்தை முதல் நாதமீருக வுள்ள சிவ தத்துவப் பகுதி இத்தத்துவப் பகுதிகளும் சிவத்தின் திருவருட் செயலாதல் பற்றி, "பாரொடு நீர் கனல் காற்று ஆகாயப் பூதப் பகுதி

முதல் பகர் நாதப் பகுதி வரையான ஏர் பெறு தத்துவ வுருவாய்" என்று விரித்துரைக்கின்றார். நில முதலாக நிற்கும் தத்துவங்கள் ஒன்றினென்று உயர்வனவாதலின், "ஏர் பெறு தத்துவ வுருவாய்" என மொழிகின்றார். ஏர் - எழுதற் பொருளில் வழங்கும் எழில். "வலனேர்பு திரிதரு பலர் புகழ் ஞாயிறு" (முருகு) என வருதல் காண்க. இத் தத்துவங்கட்குக் காரணம், சுத்தம் அசுத்தம் எனப்படும் மாயை; அக்காரணத்தில் முதல் மூலமாயை; காரணத்தின் முடிவு திருவருட் சத்தியாதலின், "தத்துவ காரணமாய் இயம்பிய காரண முதலாய்க் காரணத்தின் முடிவாய் நேருறும் அம்முடிவனைத்தும் நிகழ்ந்திடு பூரணமாய்" என ஓதுகின்றார். பரிக்கிரக சத்தியாகிய மாயையைத் தன்னுட் கொண்டிருக்கும் சத்தியைத் தன்னுட் கொண்டிருப்பது பற்றிச் சிவம், "பூரணமாய்" எனப்படுகிறது. அனுதி நித்திய அந்தமில் இன்பப் பொருளாதல் விளங்க "நித்தியமாய்" என்றும், மெய்ம்மை யுருவாதலால் "சத்தியமாய்" என்றும், ஞான குணமே திருமேனியாதல் கொண்டு "சிற்குணமாய்" என்றும் சிறப்பிக் கின்றார். அசத்தெனப்பட்ட மூவகைப் பிரபஞ்சத்துள் அசுத்தப் பிரபஞ்ச மெல்லாம் முக்குண மயமாகலின் சத்துவ குண விருத்தியாகிய பிரகாச ரூபம் சாந்த ரூபம் சுக ரூபமாகத்தான், இராசத குண விருத்தி யாகிய பிரவிருத்தி ரூபம் கோர ரூபம் துக்க ரூபமாகத்தான், தமோ குண விருத்தியாகிய நியமன ரூபம் மூட ரூபம் மோக ரூபமாகத்தான் அளவிட் டறியப்படும்; முதல்வன் அம்முக்குணங்களும் கடந்தவனாகலான் இவற்றுள் ஒன்றாக அறியப்பட்டான் என்பார், "நிர்க்குணனாய்" (சிவஞா. பாடி : 9 : 2) என மாதவச் சிவஞான முனிவர் விளக்கம் உரைப்பது காண்க. சன்மாத்திரம் - சத்தாதல் மாத்திரம். சத் மாத்திரம் - சன்மார்க் கம் போலச் சன்மாத்திரம் என வருகிறது.

இதனால், தத்துவம் கடந்த சிவம் சன்மாத்திரமாய் நிற்கும் திறம் கூறியவாறும். (8)

3278. இரவிமதி உடுக்கள்முதல் கலைகள்எலாம் தம்மோர்
இலேசமதாய் என்கடந்தே இலங்கியபிண் டாண்டம்
பரவுமற்றைப் பொருள்கள்உயிர்த் திரள்கள்முதல் எல்லாம்
பகர்அகத்தும் புறத்தும்அகப் புறத்துடன்அப் புறத்தும்
விரவிஎங்கும் நீக்கமற விளங்கிஅந்த மாதி
விளம்பரிய பேரொளியாய் அவ்வொளிப்பேர் ஒளியாய்
உரவுறுசின் மாத்திரமாம் திருச்சிற்றம் பலத்தே
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவர்உண்டே கண்டீர்.

உரை : சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கோள்கள் முதலாகிய ஒளிப் பொருள்களெல்லாம் ஓர் அணுத் துளியா மென எண்ணுமளவுடைய பிண்டங்களும், அவ்வகை யளவு கடந்த அண்டங்களும் அவற்றுள் அடங்கிய பொருள்களும், அவ்வவற்றுள் வாழும் உயிர்த் தொகைகளு மாகப் பொருந்திய எல்லாவற்றின் அகத்தும் புறத்தும், அகப்புறத்தும் புறப்புறத்தும் கலந்து எப்பொருளிடத்தும் நீக்கமற விளக்கமுற்று ஆதி யந்தம் காண்பதற்கரிய பெரிய ஒளிப் பொருளாய், அப்பேரொளிக்குப்

பேரொளியாய் விரிந்துறும் ஞான மயமாய்த் திருச்சிற்றம்பலத்தின் கண் உயர்ந்தோங்கும் பரம்பொருளாம் சிவம் ஒன்றே, பலவல்ல எனத் தெளிமின். எ.று.

சூரியன், சந்திரன், நட்சத்திர முதலிய அண்டத்தும் ஒளிப் பொருள் களாதலின், அவற்றைக் "கலைகள்" என்று குறிக்கின்றார். ஒளிர்தலெனைப் பொருள்படும் கலி யென்னும் சொல்லடியாகத் தோன்றுவது கலை என வுணர்க. இலேசம் - அணுத் துளி. நாம் காண வானத்து விளங்கும் சூரியன் முதலியன அணுத் துளியாம் என எண்ணற் கமைந்த பேரண்டங் கள் உள்ளன எனவும், அணுவுக் கணுவாகும் பிண்டப் பொருளும் உள்ளன எனவும் காட்டற்கு, "இலங்கிய பிண்டாண்டம்" என்றும் அவை எண்ணரியன என்றற்கு "எண் கடந்த" என்றும் இயம்புகின்றார். அவை யண்டத்தினும் உயிர்ப் பொருளும் உயிரில் பொருள்களும் உள்ளன என்பாராய், "மற்றைப் பொருள்கள் உயிர்த் திரள்கள் முதல் எல்லாம்" எனவும், அவற்றின் அகத்தும், புறத்தும், அகப்புறத்தும், புறப்புறத்து மாகிய எவ்விடத்தும் நீக்கமற நிறைந்த பேரொளியாய் விளங்குவது பற்றி, "அகத்தும் புறத்தும் அகப்புறத்துடன் அப்புறத்தும் விரவி எங்கும் நீக்கமற விளங்கும் பேரொளி" எனவும் இசைக்கின்றார். அப்பேரொளிக்கு ஆதியு மில்லை அந்தமுமில்லை என்பார், "அந்த மாதி விளம்பரிய பேரொளியாய்" என வுரைக்கின்றார். அண்டங்கள் பிண்டங்கள் அனைத்தினும் விரவிய பேரொளியைத் தூலமாக வுணர்த்தி, அதனின் நுண் ணொளிகளின் உண்மை தோன்ற, "பேரொளியாய் அவ்வொளிப் பேரொளியாய்" என் கின்றார். பேரொளிப் பொருளாகும் பரம்பொருள் அசேதன மன்று சுத்த சைதன்னியம் என்றற்குச் "சின்மயமாம்" எனத் தெரிவிக்கின்றார்.

இதனுல் ஒன்றுகிய பரம்பொருள் ஆதியு மந்தமும் இல்லாத அரும் பெரும் ஞான சோதி எனத் தெரிவிக்கின்றவாரும். (9)

3279. ஆற்றுவிட யானந்தம் தத்துவஆ னந்தம்
அணியோகா னந்தம்மதிப் பருஞாஞ னந்தம்
பேற்றுறும்ஆன் மானந்தம் பரமானந் தஞ்சேர்
பிரமானந் தம்சாந்தப் பேரானந் தத்தோ
டேற்றிடும்ஏ கானந்தம் அத்துவிதா னந்தம்
இயன்றசச்சி தானந்தம் சுத்தசிவா னந்த
ஊற்றமதாம் சமரசஆ னந்தசபை தனிலே
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவர்உண்டே கண்டீர்.

உரை : வாயில்களாகிய விடய வின்பம், தத்துவ வின்பம், அழகிய யோகானந்தம், மதிக்க வொண்ணுத ஞான வின்பம், பெறற் கமைந்த ஆன்ம வின்பம், பரமானந்தம், அதனைச், சேர்ந்த பிரமானந்தம், சாந்த நிலை நல்கும் பேரானந்தம், இவ்வின்பத்தை நுகரும் ஏகானந்தம், அத்து விதானந்தம், தன்னின் இயன்ற சச்சிதானந்தம், சுத்த சிவானந்தப் பேற்றில் நிறுத்துவதாகிய சமரசானந்தமாகிய சிற் சபையில் உயர்ந் தோங்கும் சிவ பரம்பொருள் ஒன்றே எனத் தெளிமின். எ.று.

விடயானந்தம் - கண் காது முதலியவற்றுல் கண்டும் கேட்டும்பெறும் இன்பம். அவற்றி னடியாக நிலவும் ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவ தத்துவமாகியவற்றுற் பெறலாகும் இன்பம் தத்துவானந்தம். யோகக் காட்சியில் தோன்றும் இன்பம் யோகானந்தம், யோக முயற்சியில் முடிவில் எய்துவது ஞானானந்தம். இவற்றை நுகர்தற்கண் ஆன்மா பெறுவது ஆன்மானந்தம். இவற்றிற் கெல்லாம் மேலாவது பரமானந்தம். நுகரப்படும் இன்பங்களிற் பெரியது பிரமானந்தம். விருப்பு வெறுப்பற்ற சாந்த நிலையிற் பெறுவது சாந்தப் பேரானந்தம். தனித்திருந்து ஒன்றிய சிந்தனைக்கண் ஊறுவது ஏகானந்தம். பரம் பொருளுணர்வில் ஒன்றி யுடனுய் நின்று பெறுவது அத்துவிதானந்தம். உண்மையறிவு இன்பம் என்ற மூன்றுலும் இயல்வது சச்சிதானந்தம். கலப்பற்ற தூய சிவமேயாகும் இன்பம் சுத்த சிவானந்தம். அதனைப் பெறற்கு உதவுவது சமரச வுணர்வொழுக்க வின்ப மாதலின், "ஊற்றமுறும் சமரசானந்தம்" என வுரைக்கின்றுர்

இதனுற் பல்வகை ஆனந்த வகைகள் தெரிவிக்கப் பட்டவாறும்.
(10)

3280. வகுத்தஉயிர் முதற்பலவாம் பொருள்களுக்கும் வடிவம்
வண்ணநல முதற்பலவாங் குணங்களுக்கும் புகுதல்
புகுத்தலுறல் முதற்பலவாம் செயல்களுக்கும் தாமே
புகல்கரணம் உபகரணம் கருவிஉப கருவி
மிகுத்தஉறுப் பதிசாணம் காரணம்பல் காலம்
விதித்திடுமற் றவைமுழுதும் ஆகிஅல்லார் ஆகி
உகப்புறும்ஓர் சுத்தசிவா னந்தசபை தனிலே
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவர்உண்டே கண்டீர்.

உரை: உயிர்ப் பொருள் உயிரில் பொருள் முதலியவாக வகுத்துரைக்கப்படும் பொருள் பலவற்றிற்கும், வடிவம் நிறம் முதலாக வுள்ள குணங்களுக்கும், தோன்றல் தோற்றுவித்தல் முதலிய செயல் வகைகட்கும், தாமே கரணமும் உபகரணமும், கருவியும் உபகருவியுமாகி, மேலும் உரைக்கப்படும் அதிகரணம், காலம், காரணம் எனப் பலவாகக் காணப்படும் தொழில் முதனிலையாகியும், ஆகாமையும் உடையவராகி யுயரும் சுத்தசிவானந்த சிற்றம்பலத்திலே உயர்ந் தோங்குகின்றவருமான ஒப்பற்ற கடவுளாகிய சிவம் ஒன்றே எனத் தெளிமின். எ.று.

பொருளுண்மை யறிவுக்கு, பொருள், இடம், காலம், கருவி, குணம், செயல் முதலிய பல கூறுகளையும் பகுத்தறிவது முறையாகலின், உலகியற் பொருள்களை "வகுத்த வுயிர் முதற் பலவாம் பொருள்கள்" என வுரைக் கின்றுர். உயிர்ப் பொருள், உயிரில் பொருள், நிலத்திணைப் பொருள், இயங்குதிணைப்பொருள், பருப்பொருள், நுண்பொருள்; உயர்திணைப் பொருள் அஃறிணைப் பொருள்; திரளுருப்பொருள், நீரியற் பொருள், காலியற் பொருள் என எடுத்த ஆராய்ச்சிக் கேற்பப் பொருட் பாகுபாடு செய்யப்படுதல் பற்றி, "முதற்பலவாம் பொருள்கள்" என்று மொழிகின்றுர். பொருள்கட் கெல்லாம் வடிவம், நிறம், சுவை, குணம், தொழில் முதலிய இயல்புகள் கண்டு தனித் தனியாகப் பகுத்து ஆராய்தல் உண்மை பற்றி, "வடிவம் வண்ணம் முதற் பலவாம் குணங்கள்" எனக் கூறுகின்றுர். பொருள்

களனைத்துக்கும் தோன்றுதல், இனத்தைத் தோற்றுவித்தல், திரிதல் கெடுதல் முதலாக மிகப் பல செயற்கூறுகளுண்டாதலால், "புகுதல் புகுத்துறல் முதற் பலவாம் செயல்கள்" எனத் தெரிவிக்கின்றார். ஒவ்வொன்றிற்கும் உரிய செயல்களுக்கு ஒத்த கருவிகளுண்டு; அவை அகம் புறம் எனப் பிரியும். அகக் கருவியைக் கரண மெனவும், புறக் கருவிகளைக் கருவி, துணைக் கருவி எனப் பலவாகவும் காண்பர். அகக் கருவியைக் கரணம் என்றும், துணைக் கருவியை "உபகருவி" என்றும் வழங்குவர். தொழில் நிகழ்ச்சிக்கு இடமும் காலமும் நோக்கமும் பயனும் காரணங்களாம். இடத்தை அதிகரணம் எனவும் பிறவற்றை ஏது எனவும் கூறுவர். அதனுற், "கரணம், உபகரணம், கருவி உபகருவி" என்றும், "அதிகரணம் காரணம்" என்றும், காலக் கூறு பலவாதல் விளங்க, "பல்காலம்" என்றும் இயம்புகின்றார். இக் கூறுகள் பலவற்றையும் தொகுத்து, "வினையே செய்வது செயப்படு பொருளே, நிலனே காலம் கருவி யென்ரு, இன்னதற் கிது பயனுக என்னும், அன்ன மரபின் இரண்டொடும் தொகை இ, ஆ யெட்டென்ப தொழில் முதனிலையே" எனத் தொல்காப்பியம் கூறுவது காண்க. துணையாகும் கருவி கரணங்கள் உபகருவி, உபகரணம் எனக் குறிக்கப்படுகின்றன. பகுக்கப்படும் பொருளாதலும், எண் வகைத் தொழிலின் முதனிலைகளாதலும் யாவும் சிவமே என்பது பற்றி, "விதித்திடு மற்றவை முழுதுமாகி" எனவும், சிவம் வேறு, அறிவாற் பகுத்தறியப்படும் பொருள் வேறு என்பார் உளராகலின், "அல்லாராகி" எனவும் இயம்புகின்றார். உகப்பு - உயர்தல். ஒப்புயர் வற்றது என்றற்குச் "சுத்த சிவானந்த சபை" என்று சிறப்பிக்கின்றார்.

இதனுல், பகுத்தறிதற்குப் பொருளாகாத சிவத்தின் தனி யொருமை மாண்பு தெரிவித்தவாரும். (11)

3281. இயற்கையிலே பாசங்கள் ஒன்றும்இலார் குணங்கள்
ஏதுமிலார் தத்துவங்கள் ஏதுமிலார் மற்றோர்
செயற்கைஇல்லார் பிறப்பில்லார் இறப்பில்லார் யாதும்
திரிபில்லார் களங்கம்இல்லார் தீமைஒன்றும் இல்லார்
வியப்புறவேண் டுதல்இல்லார் வேண்டாமை இல்லார்
மெய்யேமெய் ஆகிஎங்கும் விளங்கிஇன்ப மயமாய்
உயத்தரும்ஓர் சுத்தசிவா னந்தசபை தனிலே
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவர்உண்டே கண்டீர்.

உரை : தன்னியல்பில் ஒருவகைத் தொடர்பு மில்லாதவரும், குண வகை யாதும் இல்லாதவரும், தத்துவக் கூறுகளில் ஒன்றுமில்லாதவரும், வேறுய செயல் யாதும் இல்லாதவரும், பிறப்பிறப்புக்கள் அறவே யில்லாதவரும், ஒரு சிறிதும் தம்மியல்பில் விகாரப் படாதவரும், களங்க மில்லாதவரும், குற்றமே யில்லாதவரும், காண்போர் வியக்கத் தக்க வேண்டுதலோ வேண்டாமையோ இல்லாதவரும், மெய்ம்மையே உருவாகிய வருமாய் எங்கும் விளங்கி இன்ப மயமாய் உயிர்கள் மகிழும் சிவானந்த சிற்சபையின்கண் உயர்ந் தோங்குகின்ற ஒப்பற்ற கடவுளாகிய பரசிவம் ஒன்றே உளது எனத் தெளிமின். எ.று.

ஆன்மாக்களை இயற்கையும் செயற்கையுமாய்ச் சூழ்ந்திருக்கும் பாசங்கள் சிவ பரம் பொருட்கு இல்லை யென்பாராய், "இயற்கையிலே பாசங்கள் ஒன்று மில்லார்" என வுரைக்கின்றார். பாசங்கள் மல மாயை கன்மம் என்ற மூன்றுமாம்; அவற்றுள் மல பாசம் இயற்கை; மாயை கன்மம் என்ற இரண்டும் மலமேதுவாக எய்துதலின் செயற்கை. குணங்கள் மூலப் பகுதியாகிய மாயா காரியமாகலின், அவற்றிற் கெல்லாம் வேருகிய சிவத்துக்கு இல்லாமை பற்றி, "குணங்கள் ஏதுமில்லார்" என கூறுகின்றார். ஆன்ம தத்துவமும் வித்தியாதத்துவமும் சிவ தத்துவமுமாகிய தத்துவக் கூறுகள் உணர்த்த வுணரும் சிறுமையை யுடைய உயிர்கட்கே வேண்டப் படுதலின், "தத்துவங்கள் ஏது மில்லார்" என மொழிகின்றார். ஆன்மாக்களைப் போலக் குண வேறுபாடுகட் கேற்பச் செயல் வேறுபடும் இயல்பில் லாதவர் சிவபெருமான் என்றற்கு "மற்றோர் செயற்கை யில்லார்" என்று கூறுகின்றார். மலம் நீங்கித் தூய்மையுற்றுச் சிவம் பெறல் வேண்டி ஆன்மாக்கட் குளவாகும் பிறப் பிறப்புக்கள் பரசிவத்துக்கு வேண்டப் படாமையின், "பிறப்பில்லார் இறப்பில்லார்" எனவும், காலம் இடம் செயல்கட் கேற்பக் குணஞ் செயல் வேறுபடும் திரிபு உயிர்கட் கன்றிச் சிவத்துக்கு வேண்டாமையால் "திரிபில்லார்" எனவும், திரிபு காரணமாகக் குற்றங்களும் தீமைகளும் உண்டாதலின், "களங்க மில்லார் தீமை யில்லார்" எனவும் இயம்புகின்றார். விருப்பாலும் வெறுப்பாலும் மக்களின் சொற் செயல்கள் வியப்பை விளைவித்தலால் "வியப்புற" என்று சிறப்பிக்கின்றார். மெய்ம்மையே சிவத்தின் திருவுரு என்றற்கு "மெய்யே மெய்யாகி" என விளம்புகிறார். இன்ப மயம் சுத்த சிவம் என்றற்கு ஏது வாதலால், "சுத்த சிவானந்த சபை" என வுரைக்கின்றார்.

இதனால் சிவத்தின் பொது வியல்பை விளக்கியவாறும். (12)

3282. ஒன்றும்அலார் இரண்டும்அலார் ஒன்றிரண்டும் ஆனார்
உருவும்அலார் அருவும்அலார் உருஅருவும் ஆனார்
அன்றும்உளார் இன்றும்உளார் என்றும்உளார் தமக்கோர்
ஆதியிலார் அந்தமிலார் அரும்பெருஞ்சோ தியினார்
என்றுகனல் மதிஅகத்தும் புறத்தும்விளங் கிடுவார்
யாவும்இலார் யாவும்உளார் யாவும்அலார் யாவும்
ஒன்றுறுதாம் ஆகிநின்றார் திருச்சிற்றம் பலத்தே
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவர்உண்டே கண்டீர்.

உரை : ஒன்றென்றற்கும் இரண்டென்றற்கும் இன்றி ஒன்றுகிய இரண்டுருவமாகியவரும், உருவுடைய ரல்லர்; அருவுருவினரு மல்லர்; உருவருவர் எனப்படுபவருமாகியவர்; அன்றும் இன்றும் என்றும் உள்ளவர்; தமக்கெனத் தோற்றமும் முடிவும் இல்லாதவர்; அரும் பெருஞ் சோதியாயவர்; சூரியன், நெருப்பு, சந்திரன் ஆகியவற்றின் அகத்தும் புறத்தும் கலந்து விளக்கம் செய்பவர்; யாவும் இல்லாதவரும், யாவற்றையும் உடையவரும், யாவும் அல்லாதவரும், யாவற்றினும் வேறறக் கலந்து ஒன்றி எல்லாம் தாமாக நிற்பவராய்த் திருச்சிற்றம்பலத்தில் உயர்ந்தோங்கும் சிவ பரம்பொருள் ஒன்றே எனத் தெளிமின். எ.று.

ஞானமேயான போதும் சத்தியேயான போதும் ஒன்றும், ஞானமும் சத்தியும் ஒன்றிய போது இரண்டாயும் கோடலாகாமை பற்றி "ஒன்று மலார் இரண்டுமலார்" எனவும், சதாசிவ மூர்த்தியாகிற போது இரண்டும் ஒன்றுதலின் "ஒன்றிரண்டுமானார்" எனவும் கூறுகின்றார். அன்மை மறுத்தற் பொருளாதலால், சிவ மொன்றே என்பாரையும் சிவசத்தி யொன்றே என்பாரையும், சத்தியொடு கூடி யிருத்தலின், சிவமும் சத்தியு மென இரண்டென்பாரையும் மறுத்தற்கு "ஒன்றுமலார் இரண்டுமலார்" என்றும், உமையொரு பாகனும் உருவியல் பற்றி, "ஒன்றிரண்டு மானார்" என்றும் உரைக்கின்ரு ரென்றுமாம். உமையொரு பாகனதலின் உருவும் ஞானமும் சத்தியு மாமிடத்து அருவமும், சதாசிவமாகும் போது உருவரு வமும் கோடலால் "உருவுமலார் அருவும் அலார்" என மறுத்து, "உருவரு வமானார்" என வற்புறுத்துகின்றார். உருவம் நான்கும் அருவம் நான்கும் அருவுருவம் என்று ஒன்பது உருவ பேதம் கூறலின் இவ்வாறு கூறுகின்றார் என அறிக. "அண்டங் கடந்த ஆனந்த வெள்ளப் பொருள் பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்" (திருப்பல்) எனப் பல்லாண்டு கூறுவது பற்றி, "அன்றும் உளார் இன்றும் உளார் என்றும் உளார்" என வுரைக் கின்றார். "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி" (திருவெம்) எனப் பெரியோர் மொழிதலின், "தமக்கு ஓர் ஆதியிலார் அந்தமிலார் அரும்பெருஞ் சோதியானார்" என மொழிகின்றார். என்று : சூரியன், கனல், நெருப்பு. சூரியன் முதலிய மூன்றும் ஒளி யுடையவை யாதற்குக் காரணம் அவற்றின் அகத்தும் புறத்தும் சிவசோதி நிலாவுதலால் "என்று கனல் மதி யகத்தும் புறத்தும் விளங்கிடுவார்" என வுரைக்கின்றார். "அருக்கனிற் சோதி யமைத்தோன்" (அண்டப்) எனச் சான்றோர் சாற்றுவ தறிக. தமக்கென ஒன்றும் இல்லாதவராதலின் "யாவும் இலார்" எனவும், உலகு பொருள் கருவி முதலிய அனேத்தையும் படைத்துடையவ ராதலே நோக்கி, "யாவும் உளார்" எனவும் இயம்புகிறார். எல்லாவற்றினும் உறைதல் புலப்பட இவ்வாறு கூறுகிறார் என்றுமாம். எல்லாவற்றினும் கலந்து ஒன்றியிருப்பினும் செம்பொருட் டன்மையால் வேறுதல் கண்டு "யாவும் அலார்" என இசைக்கின்றார். எல்லாப் பொருளினும் கலந்து நிற்குமிடத்து எல்லாம் தாமாக விளங்கச் செய்யும் சிறப்புத் தோன்ற, "யாவும் ஒன்று தாம் ஆகி நின்றார்" என இயம்புகின்றார். "தன்னைக் கண்ட என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணமாகிய ஈசன்" (பொன்வண்) என்று சேரமான் கூறுவது காண்க.

இதனால், சிவ பரம்பொருள் பரமாந் தன்மையை உண்மையும் இன்மையுமாகிய இயல்பு கூறுமாற்றால் விளக்கம் செய்தவாறும். (13)

3. ஆற்ருமை

அஃதாவது, இறைவன் திருவருட் குறிப்பின் பெருமையையும் அதனைப் பெற விழையும் தமது சிறுமையையும் நோக்கி மனம் பொறுக்க மாட்டாமல் வருந்துதல். இதன்கண், தன்னைத் தனித்து நோக்கும் வடலூர் வள்ளற் பெருமான் தன்னைத்த மக்களுயிர் அனைத்தையும் ஒப்ப நோக்கித் தாமாக எண்ணிச் சிறுமையை மிகுவிக்கும் குற்றங்களைத் தொகுத்துக் காட்டுகின்ருர். தன் குற்றம் கண்டு கலைந்தாலன்றித் தான் தூயனுதல் கூடாதாகலின் பாட்டுத் தோறும் தமது குற்றங்களையே எடுத்து மொழிகின்ருர்.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3283. எழுவினும் வலிய மனத்தினேன் மலஞ்சார்
ஈயினும் நாயினும் இழிந்தேன்
புழுவினும் சிறியேன் பொய்விழைந் துழல்வேன்
புன்மையேன் புலைத்தொழிற் கடையேன்
வழுவினும் பெரியேன் மடத்தினும் பெரியேன்
மாண்பிலா வஞ்சக நெஞ்சக்
குழுவினும் பெரியேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

உரை : தூணினும் வன்மை மிக்க மனமுடையேனுய் மலக் குப்பையை நாடும் ஈயைப் போலவும் நாயைப் போலவும் இழிவடைந்து புழுவினும் சிறுமை கொண்டு பொய் யொழுக்கத்தை விரும்பிப் புல்லிய தன்மை பெற்றதனல் புலைத்தொழிலுற்றுக் கடையவனுயினேன்; என்னளவில் குற்றங்களைப் பெருக்குவதில் மிகப் பெரியவனுய் அறியாமை மாண்பு பயவாத வஞ்ச நினைவுகளைக் கொண்ட கூட்டத்தாரில் யான் மிக்கவனுவேன்; இன்ன தன்மைகளை யுடைய யான் தில்லையம்பலக் கூத்தப் பெருமானது திருவருட் சிறப்புப் பெறுதற்கு யாது செய்வேன். எ.று.

எழு - தூண்; கம்பமுமாம். மேற் கட்டிடத்தின் சுமையைத் தாங்கி தளராது நிற்கும் சிறப்புத் தூணுக்குண்டு; அது போல் எத்துணைக் கொடுமை நினைவுச் சுமையைத் தாங்கித் தளராமை என் மனத்துக்கு உண்டென்பார், "எழுவினும் வலிய மனத்தினேன்" என்று கூறுகின்ருர். மலத்தை நாடிக் கூட்டமாய்க் கூடி யிருந்துண்பது ஈயின் செயல்; தன் இனத்தை வெருட்டி நீக்கித் தனித்திருந் துண்பது நாயின் இயல்பு

இரண்டியல்பும் கொண்டு இழிந்தவற்றை யெண்ணிக் கீழ்மை யுற்றேன் எனக் கூறலுற்று, "ஈயினும் நாயினும் இழிந்தேன்" என்று உரைக்கின்றார். சிறுமைக்கு எல்லை யாவது தோன்றப் "புழுவினும் சிறியேன்" எனப் புகல்கின்றார். பொய் முதலிய புலை நினைவுகளை மனம் விரும்புவதால் செயல்கள் புலைத்தன்மை யெய்துவது கொண்டு, "புலைத் தொழிற் கடையேன்" என்று கூறுகின்றார். உழலுதல் - பயனின்றி யலைதல். கடையனையினும், குற்றமாவன செய்தலிலும், அறியாமையிலும், வஞ்ச நினைவு செயல்களிலும் மிக்குள்ளேன் என்பாராய், "வழுவினும் பெரியேன் மடத்தினும் பெரியேன், மாண்பிலா வஞ்சக நெஞ்சக் குழுவினும் பெரியேன்" என வுரைக்கின்றார். தனித்தும் கூடியும் செய்வன செய்தல் மக்களியல் பாதலால், வஞ்சச் செயல்களை ஒத்தாரொடு கூடிப் பெருமிதத்துடன் செய்தே னென்பார், "வஞ்ச நெஞ்சக் குழுவினும் பெரியேன்" எனப் பேசுகின்றார். பெருமை - ஈண்டு மிகுதி குறித்தது. கூத்தன் குறிப்பு, திருவருள் நோக்கம். இக் கூறிய குற்றங்களே நிறைந்த யான் கூத்தப் பிரான் திருவருளறிவும் இன்பமும் பெறுதற் கேற்பனவற்றை எங்ஙனம் செய்வே னென வருந்துகின்றமை புலப்பட, "என் கடவேன்" என உரைக்கின்றார்.

இதனால், குற்றம் களையும் முயற்சியால் அவற்றை எடுத்தோதிய வாறும். (1)

3284. கற்றமே லவர்தம் உறவினைக் கருதேன்
கலகர்தம் உறவினிற் களித்தேன்
உற்றமே தகவோர் உவட்டுற இருந்தேன்
உலகியற் போகமே உவந்தேன்
செற்றமே விழையும் சிறுநெறி பிடித்தேன்
தெய்வம்ஒன் றெனும்அறி வறியேன்
குற்றமே உடையேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

உரை : நல்லன கற்றுயர்ந்த மேலோர் நட்புறவை நாடாமல் கலகம் புரிபவர் கூட்டம் பெற்று மகிழ்கின்றேன்; குணம் மிக்க மேதகவை யுடையவர் கண்டு வெறுத்து நீக்கும் நெறி மேற் கொண்டு உலகியற் சிற்றின்பத்தையே பெற்று மகிழ்ந்தேன்; செற்றத்தை விரும்பும் கீழ்மை நெறியைக் கைக்கொண்டு தெய்வம் ஒன்றே என்பதைத் தெளியாமல் குற்றமே செய்கின்றேன்; இன்னேரன்ன இயல்புடைய யான் அம்பலக் கூத்தன் திருவருளைப் பெற யாது செய்ய வல்லேன். எ.று.

கற்பன கற்றுயர்ந்த மேன்மக்களின் நல்லுறவும் மேன்மை சான்ற குணஞ் செயல்களையுடைய தக்கோர் நட்புறவும் தெய்வம் ஒன்றென்னும் மெய்யுணர்வும் திருவருட் பேற்றுக்கு வாயிலாகும்; அதனை விட்டுத் தீது செய்வோர் உறவு மேற்கொண்டேன் என்பாராய், "கலகர்தம் உறவினிற் களித்தேன்" என வுரைக்கின்றார். மேதகவு - நற்குண நற்செயல்களால் உளதாகும் மேன்மை நிலை. கலகர் - கலகத்தை விளைவிப்பவர்; அவர்களுடைய கலகவுரை சேர்ந்தார் அறிவை மயக்குவதாகலின், "உறவினிற்

களித்தேன்''எனக் கூறுகின்றார். உவட்டல்-வேண்டாது உமிழ்தல்; ஈண்டு விலக்குதற் பொருளில் வந்தது. உலகியற் போகம், சிற்றளவினதாயினும் பெரிதாய்த் தோன்றி அறிவை மயக்கித் தன்னையே காதலித் தொழுகும் நிலையினைப் பயப்பதாகலின், அதுவும் திருவருட் பேற்றுக்கு ஆகாமை காட்டற்கு "உலகியற் போகமே யுவந்தேன்'' என்று உரைக்கின்றார்' செற்றம் - சினம் காரணமாக வெறுப்பும் பகைமையுமுற்றுத் தீது செய்விக்கும் தன்மை. சிறு குற்றத்தையும் பொருது ஒறுக்கும் சிறுமைச் செய்கை செற்ற முடையாரிடத்து அமைதலின், ''சிறு நெறி'' என இகழ்கின்றார். தெய்வம் பல என்னும் கொள்கை சமயப் பூசலை விளைவித்துச் சமுதாயத்தில் ஒருமை மாண்பைச் சீர்குலைத்தலால் ''தெய்வம் ஒன்றெனும் அறிவறியேன்'' என்கின்றார். தெய்வம் ஒன்றெனக் கோடல் உண்மை யறிவு என்றற்கு, ''ஒன்று என்னும் அறிவு அறியேன்'' என மொழிகின்றார். (2)

3285. கடுமையேன் வஞ்சக் கருத்தினேன் பொல்லாக்
கன்மனக் குரங்கனேன் கடையேன்
நெடுமைஆண் பனைபோல் நின்றவெற் றுடம்பேன்
நீசனேன் பாசமே உடையேன்
நடுமைஒன் றறியேன் கெடுமையிற் கிளைத்த
நச்சுமா மரம்எனக் கிளைத்தேன்
கொடுமையே குறித்தேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

உரை : கடினப் பண்பும், வஞ்சம் நிறைந்த கருத்தும், பொய் யொழுக்கமும், இரக்கமற்ற மனமும், பொல்லாத குரங்கு போல் நிலையின்றி யோடும் உள்ளமும் உடைமையாற் கீழ்ப்பட்ட யான், நெடிது நீண்ட ஆண்பனை போல் வளர்ந்த ஈரமில்லாத உடம்பும், இழி தன்மையும் ஆசாபாசமும் நிறைந்தவன்; நீதியுணர்வு சிறிதுமில்லாதவன்; தீங்காகிய நிலத்தில் முளைத்த நஞ்சு மரமாக வளர்ந்து பரந்துள்ளேன்; கொடுமையே செய்து திரிவேன்; இத்தகைய யான் தில்லையம்பலக் கூத்தப் பெருமான் திருவருட் பேறு குறித்து யாது செய்வேன் எ.று.

தில்லையம்பலவாணராகிய சிவபெருமான் திருவருளைப் பெற விழைவார்க்கிருத்தற் காகாத குற்றங்கள் தம்மிடத்துள வென நினைந்து தம்மையும் தம்மைச் சூழவுள்ள சமுதாயத்தையும் காண்கின்ற வடலூர் வள்ளல், எடுத்த எடுப்பிற் கடுத்த பார்வையைக் கண்ணிலும் கடுகடுத்த சொற்களை வாயிலும் கடினமனத்தைச் செயலிலும் கண்டு வருந்துகின்ற மையின், ''கடுமையேன்'' என்றும், மக்களோடு பழகும் நிலையில் வஞ்சனை மிக்கிருப்பது அறிந்து, ''வஞ்சக் கருத்தினேன்'' என்றும், ஒன்றினும் நிலையுறுது பலதலையாக ஆசை விரிந்து அலைந்து கீழ்மை யுற்றுத் தாழ்வுறுவது உணர்ந்து, ''பொல்லாக் கன்மனக் குரங்கனேன், கடையேன்'' என்றும் இயம்புகின்றார். பிறர் பொருள் மேல் ஆசை யுற்றுத் தீது புரிந்து இரக்கமின்றிக் கவர்வது புலப்பட, ''பொல்லாக் குரங்கனேன்'' எனவும், அதனால் உள்ளத்தில் வெறுப்பு மேலிடுதலின்

"கடையேன்" எனவும் கூறுகின்றார். காய்த்துப் பயன்படாது நெடிது வளர்ந்து உள்வலி யின்றி உயர்ந்து நிற்கும் பனைமரம் போல வளர்ந்து தம் மினத்துக்கும் பிறர்க்கும் பயன்படும் நற்பண்பில்லாத மக்களினத்து ஒருவராகத் தம்மைக் காண்கின்றாராகலின், "நெடுமை ஆண்பனை போல் நின்ற வெற்றுடம்பேன்" என்றும், அக்காட்சி இகழ்ச்சியைப் பயத்தலின், "நீசனேன்" என்றும், அதற்கு ஏது மனத்தின்கண் நிறையும் தன்னலப் பேராசையாதல் அறிந்து "பாசமே யுடையேன்" என்றும் உரைக் கின்றார். தனக் கொத்தது பிறர்க்குமாம் என எண்ணும் நடுநிலைப் பண்பு மனத்தில் இல்லாமையும் அதனால் நீதியின்றித் தீயவற்றையே செய்தொழுகும் திறமே மிக்கிருப்பது தேர்ந்து, "நடுமை யொன்றறியேன் கெடுமையிற் கிளைத்த நச்சு மாமரம் எனக் கிளைத்தேன்" எனவும், கொடுந் தொழிலேயுருவாக அமைந்தேன் என்பாராய், "கொடுமையேன்" எனவும் இயம்புகின்றார். நடுவு நிலைமை - நடுமையென வந்தது. கேடு செய்யும் தன்மையைக் "கெடுமை" என்றும், கொடிய பண்பைக் "கொடுமை" என்றும் குறிக்கின்றார். உண்டாரைக் கொல்லும் நஞ்சின் தன்மையையுடைய காய்களைக் காய்க்கும் பெரிதாய்த் தழைத்து நிற்கும் மரத்தை, "நச்சு மாமரமெனக் கிளைத்தேன்" என நவில்கின்றார். மாமரத்தை மாவினத்து மரமெனினும் பொருந்தும். "தாம் வளர்த்தது, ஓர் நச்சு மாமரமாயினும் கொலார்" (சதக) எனச் சான்றோர் வழங்குவது காண்க. (3)

3286. நிலத்திலும் பணத்தும் நீள்விழி மடவார்
நெருக்கிலும் பெருக்கிய நினைப்பேன்
புலத்திலும் புரைசேர் பொறியிலும் மனத்தைப்
போக்கிவீண் போதுபோக் குறுவேன்
நலத்தில்ஓர் அணுவும் நண்ணிலேன் கடைய
நாயினுங் கடையனேன் நவையேன்
குலத்திலும் கொடியேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

உரை : வளமிக்க நிலத்தின் மேலும் பணத்தின் மேலும் நெடிய கண்களையுடைய இளமகளிர் கூட்டத்தின் மேலும் ஆசை மேன்மேலும் பெருகவே நினைப்பவனாகிய நான், கண் காது முதலிய பொறி வாயிலிலும், ஒளி ஓசை முதலிய புலன்களிலும் மனத்தைச் செலுத்தி வாழ்நாளைக் கழிப்பேன்; நல்லனவற்றைச் சிறிதளவும் சேர்தலின்றிக் கீழ்மையாற் கடைப்பட்ட நாயினும் குற்றம் மிக வுடையனாய் ஒழுக்கத்தால் கொடியவனாவேன்; இத்தகைய யான் தில்லையம்பலத்துக் கூத்தப் பெருமான் திருவருளைப் பெறுதற்கு யாது செய்ய வல்லேன். எ.று.

உலகியல் வாழ்வில் துன்பம் விளைப்பன மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய மூன்று என அறிந்தோர் உரைத்தலின், அவற்றை, "நிலத்திலும் பணத்தும் நீள்விழி மடவார் நெருக்கிலும் பெருக்கிய நினைப் பேன்" என உரைக்கின்றார். பெருகிய விளைவால் பொன்னும் புகழும் தோன்றி உடையவற்கு இன்பம் தருதல் பற்றி மக்கட்கு வளவிய நிலங்

களின் மேல் ஆசையுண்டாதலின், அதனை முற்பட நிறுத்தி "நிலத்திலும்" என வுரைக்கின்றார். பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்படும் நாணயங்களைப் பணம் என்பது வழக்கு. பணத்தால் வாழ்க்கையில் வேண்டுவன பலவும் பெறப்படுதலின், நிலத்தாசையை யடுத்துப் பணத் தாசையை நிறுத்தி, "பணத்தும்" எனக் கூறுகிறார். "பொருள் துன்னுங் காலத் துன்னுதன இல்லையே" (சீவக) எனச் சான்றோர் கூறுகின்றனர். நீண்ட கண்கள் இளமை கனிந்த மகளிர்க்கு அழகு மிகுத்தலின், "நீள் விழி மடவார்" எனவும், அவர்களது புணர்ச்சி வேட்கையை "நெருக்கு" எனவும் குறித்துக்காட்டி, இம் மூன்றன் மேலும் உளதாகும் ஆசை வாழ் வார்க்கு எல்லையின்றிப் பெருகியவண்ணம் இருத்தலின், "பெருக்கிய நினைப்பேன்" என்று உரைக்கின்றார். பெருக்குதற்கே என் நினைவுகள் அனைத்தையும் செலுத்துதலுடையேன் என்பாராய், "பெருக்கிய நினைப் பேன்" என்கின்றார். முதுமை மிகுங்கால் பெண்ணாசை குன்றுதலின் அதனை இறுதிக்கண் நிறுத்துகின்றார். ஏனையிரண்டும் இறக்கும் போதும் விடுவதில்லை யென வுணர்க. ஆசைப் பெருக்குடைய மனம், பொறி புலன் களின் வழிச் சென்று அலைந்து அவா வுருவுற்று வருத்துதலால், "புலத் தினும் புரைசேர் பொறியிலும் மனத்தைப் போக்கி வீண்போது போக்க லுறு வேன்" எனக் கூறுகின்றார். கண், காது முதலிய கருவிகளைப் பொறி யெனவும், அவற்றையிடமாகக் கொண்டு ஆசை தோற்றுவிக்கும் சுவை, யொளி முதலிய ஐந்தனையும் புலன் என்றும் அறிஞர் எடுத்துரைப்பர். "பொறி வாயில் ஐந்தவித்தான்" (குறள்) என்பது காண்க. பொறி புலன் களிற் சென்று ஆசை மிக்கு அலைவதால் துன்பமே மிகுதியாவது பற்றி, "வீண்போது போக்கலுறுவேன்" எனப் புகல்கின்றார். போக்குதல் - கழித்தல். உயிர்க்கு இன்பமும் உறுதியும் பயப்பவை நலம் எனப்படும்; நல்லவற்றை எளிதிற் பெறலரிதாகலின், "நலத்திலோர் அணுவும் நண்ணிலேன்" எனவும், அச்செயலின் கீழ்மையை யெண்ணிக் "கடைய நாயினும் கடையனேன்" எனவும், அதனால் விளையும் தீமையை விதந்து "நவையேன்" எனவும் நவில்கின்றார். நவை - குற்றம். ஆசைப் பெருக்கும் பொறிவழிச் செல்லுதலும் நல்லொழுக்கத் தைக் கெடுத்தலால், "குலத்திலும் கொடியேன்" எனக் கூறுகிறார். குலம் - ஈண்டு நல்லொழுக்கத்தின் மேற்று. இவை திருவருள் இன்பப் பேற்றுக்குத் தடையாதலால், "அம்பலக் கூத்தன் குறிப்பினுக்கு என் கடவேன்" என வருந்துகின்றார். (4)

3287. செடிமுடிந் தலையும் மனத்தினேன் துன்பச்
செல்வினுல் அரிப்புண்ட சிறியேன்
அடிமுடி அறியும் ஆசைசற் றறியேன்
அறிந்தவர் தங்களை அடையேன்
படிமுடி வழித்துக் கடிகொளும் கடையர்
பணத்திலும் கொடியனேன் வஞ்சக்
கொடிமுடிந் திடுவேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

உரை: துயர் விளைவித்து வருந்தும் மனத்தையுடையனாய், துன்ப மாகிய கறையானால் அரித் துண்ணப்பட்டுச் சிறுமையுடையவனாகிய

யான் செய்பொருளின் காரண காரிய மறிதலில் விருப்பம் சிறிது மின்றியும் அவற்றையறிந்த நன்மக்களை யடைதலின்றியும் உழல்கின்றேன்; உலக வாழ்க்கைப் பயனையிழந்து சிறைப்படும் கீழ் மக்களின் செல்வத்தினும் கொடுமை மிகவுடையேன்; வஞ்சச் செயல் கொடி கட்டி நிற்கும் யான் தில்லையம்பலக் கூத்தப் பெருமான் திருவருள் நாட்டம் பெறுதற்கு யாது செய்ய வல்லேன். எ.று.

செடி - துயர்; துன்பமுமாம். குற்றமாவனவற்றையே நினைந்து துன்பத்துக்குள்ளாகும் மனப்பண்பை விதந்து, ''செடி முடிந்தகலையும் மனத்தினேன்''எனக் கூறுகின்றார். முடிதல் - நீங்கிந்து கெடுதல். செல் - வெள்ளெறும்பு; இது கறையான் எனவும் வழங்கும். நூல் ஏடுகளையும் மரங்களையும் அரித்துண்டு கெடுத்தல் இதன் இயல்பு; வலிய மரக் கட்டைகளை அரித்து மெலியவாக்கும் செல்போலத் துன்பத்தால் வருத்த முற்றுச் சிறுமை யுற்றேன் என்பார்,''செல்லினல் அரிப்புண்ட சிறியேன்'' எனச் செப்புகின்றார். அடிமுடி யறியும் ஆசை, காரண காரியப் பயன் தேர்ந்தறியும் நல்லார்வம்; நல்வாழ்க்கைக்கு இன்றியமையாததாகலின், ''அடிமுடி யறியும் ஆசை சற்றறியேன்'' எனவும், அந்த நல்லறிவு படைத்த நன்மக்களைச் சார்ந்தேனும் அந்த ஆர்வத்தைப் பெரு தொழிந்தேன் என வருந்துமாறு புலப்பட, ''அறிந்தவர் தங்களை யடையேன்'' எனவும்இயம்புகின்றார். படி - நிலவுலகு. படிமுடிவு - மண்ணகவாழ்க்கையின் நற்பயன். வாழ்க்கைப் பயனுகிய புகழும் புண்ணியமும் பெருது குற்றமே செய்து சிறை புகுந்து துன்புறும் பேதைகளை, ''படி முடிவு அழித்துக் கடிகொளும் கடையார்'' என்று இகழ்கின்றார் - கடி கொளல். சிறைக் காவற் படுதல். ''பொய்படு மொன்றே புனை பூணும், கையறியாப் பேதை வினை மேற்கொளின்''(குறள்) எனப் பெரியோர் கூறுவது காண்க. கீழ் மக்களிடத்து எய்தும் செல்வத்தினும் உடையார்க்குப் பெருந் துன்பம் செய்யும் கொடியது வேறின்மையின், ''கடையர் பணத்திலும் கொடியேன்'' என்று பகர்கின்றார். ''அறிவிலார்தாம், தம்மைப் பீழிக்கும் பீழை, செறுவார்க்கும் செய்தலரிது'' (குறள்) எனத் திருவள்ளுவர் அறிவிக்கின்றார். கொடி முடிதல் - நெடிய கொம்பின் நுனியிற் கட்டிப் பலர் காணத்துகிற் கொடியை யுயர்த்தல். ''வஞ்சம் புரிதற்கு முற்பட்டுள்ளேன் என்பார்,''வஞ்சக் கொடி முடிந்திடுவேன்''என மொழிகின்றார். கூத்தப் பெருமானது திருவருள் ஞான நாட்டப் பேறு குறிப்பெனப்படுகிறது. (5)

3288. அரங்கினிற் படைகொண் டுயிர்க்கொலை புரியும்
அறக்கடை யவரினுங் கடையேன்
இரங்கில்ஓர் சிறிதும் இரக்கம்உற் றறியேன்
இயலுறு நாசியுட் கிளைத்த
சிரங்கினிற் கொடியேன் சிவநெறி பிடியேன்
சிறுநெறிச் சழக்கையே சிலுகுக்
குரங்கெனப் பிடித்தேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

உரை : பலர் கூடிய அவையின்கண் ஓர் உயிரைக் கொல்லும் முழுத்த கீழ்மகனினும் கீழவனுகிய யான் இரங்கத்தக்க இடத்தில் ஒரு சிறிதும் இரக்கம் கொள்ளாதவனுய் உயிர்த்தற் கமைந்த மூக்கினுள்

புடைத்த புண் போலக் கொடியவனுய்ச் சிவநெறியைக் கடைப்பிடியாமல் கீழ்மை நெறிக் குற்றத்தையே சேட்டை மிக்க குரங்குப் பிடிகொண்டு ஒழுகுவதால் தில்லையம்பலக் கூத்தப்பிரான் திருவருளைப் பெறுதற்கு யாது செய்ய வல்லேன். எ.று.

கொலைத் தொழிலே செய்பவனுயினும், பலர் கூடிய அவையின்கண் அதனைச் செய்தற்கு நாணியஞ்சுவானுக, யான் அவனினும் கொடியவன் என்பாராய், "அரங்கினிற் படை கொண்டு உயிர்கொலை புரியும் அறக் கடையவரினும் கடையேன்" என இயம்புகின்ருர். அறக்கடையவர் - முழுத்த கீழ்மக்கள்; அறன் கடையாவது பாவமெனக் கொண்டு பாவிகள் எனப் பொருள் கோடலும் ஒன்று. "அறன்கடை நின்ருருள் எல்லாம்" (குறள்) எனச் சான்ருேர் வழங்குவதறிக. இரங்கில் - இரங்கத் தக்க இடம்; கண்டார் இரங்குகின்ற சூழ்நிலைக் காட்சியுமாம். மூக்கினுள் தோன்றி வருத்தும் புண்ணினும் துன்ப மிக்கது பிறிதில்லையாதலின், அதனை விதந்து, "நாசியுள் கிளைத்த சிரங்கு" என வோதுகின்ருர். புண்ணின் கொடுமையினும் எனது கொடுமை பெரிதென்பது கருத்து. பிடித்தல் - கடைப் பிடித்தல். சிறு நெறியால் விளைவது குற்றமாதல் தோன்ற - "சிறுநெறிச் சழக்கு" எனக் கூறுகின்ருர். சிறு நெறி - சிறுமை பயக்கும் தீயநெறி. சழக்கு குற்றம்; பிடிவாதமுமாம். சிலுகு - சேட்டை; சேட்டை - குறும்பு செய்யும் குற்றப் பண்பு. குரங்கிற் கது இயல்பாதலால், "சிலுகுக் குரங்கனேன்" என வுரைக்கின்ருர். இங்ஙனம் குற்றங்கட்குக் கொள்கலமாகியதனுல் கூத்தப்பிரான் திருவருட் குறிப்புப் பெறும் தகுதியுடைய னல்லனுயினேன் என்பார், "குறிப்பினுக்கு என் கடவேன்" என்று கூறுகின்ருர். (6)

3289. வாட்டமே உடையார் தங்களைக் காணின்
மனஞ்சிறி திரக்கமுற் றறியேன்
கோட்டமே உடையேன் கொலையனேன் புலையேன்
கூற்றினும் கொடியனேன் மாயை
ஆட்டமே புரிந்தேன் அறத்தொழில் புரியேன்
அச்சமும் அவலமும் இயற்றும்
கூட்டமே விழைந்தேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

உரை : துன்பத்தால் வாடி யிருப்பவர்களைக் கண்டால் மனதில் சிறிதும்இரக்கவுணர்ச்சி கொள்வ தில்லாத யான் நேர்மையில்லாதவனுய், கொலையும் புலையும் உடையவனுய், இயமனைக் காட்டிலும் கொடியவனுயுள்ளேன்; உலகியல் மாயையிற் சிக்கியாடுகின்றேன்; அறத்தை நினையாமல் பிறர்க்கு அச்சத்தையும் வருத்தத்தையும் செய்பவர்கூட்டத்தையே விரும்பி யொழுகுகின்றேனுகலின், தில்லையம்பலக் கூத்தப் பிரானுருடைய திருவருள் நாட்டம் எனக்கு எய்துதற்கு யாது செய்வேன். எ.று.

வறுமை பிணி முதலியவற்ருல் மனமும் மேனியும் வாடி வருந்து வோரைக் காணின் இரக்கமுறுவது மனிதப் பண்பாகவும், யான் மெய்யால் ஒன்றும் செய்யாவிடினும் மனம் தானும் சிறிதும் இரங்குகின்றேனில்லை என்றற்கு "வாட்டமே யுடையார் தங்களைக் காணின் மனம்

சிறிது இரக்கமுற்றறியேன்" என மொழிகின்றார். கோட்டம் - வஞ்சவு; நேர்மையில்லாமை. இரக்கவுணர்வு இல்லாத நெஞ்சில் நேர்மையிடம் பெறுவதரிதாகலின், "கோட்டமே யுடையேன்" என்றும், நேர்மையில்லார் கொலைக்கு அஞ்சுவதும் புலைத் தொழிற்கு நாணுவதும் இல்லையாகலின், "கொலையனேன் புலையனேன்" என்றும், இரக்கமின்றி உயிர் கவர்வது இயமன் செயலாதலால், "கூற்றினும் கொடியனேன்" என்றும் இயம்புகின்றார். மாயா காரியமாகிய உலகியல் தன்கண் வாழ்வாரை மயக்குவது இயல்பாதலால், "மாயை ஆட்டமே புரிந்தேன்" எனக் கூறுகின்றார். உலகியல் மாயைக்கஞ்சி, நம்பியாரூரர், "மையல் மானுட மாய் மயங்கும் வழி, ஐயனே தடுத்தாண்டருள் செய்யெனே" (தடுத்தாட்) எனச் சிவன்பால் முறையிடுவது காண்க. மாயை மயக்கினின்றும் தெளிவு தரும் மருந்து அறமாயினும் யான் அதனைக் கொண்டிலேன் என்பார், "அறத் தொழில் புரியேன்" என்றும், இவ்வாறு இயலும் மனமும் சூழவிருக்கும் இனத்தால் நன்னெறி படருமாக யான், தீயர் இனத்தையே விரும்பி அதனிடையே கிடக்கின்றேன் என்பாராய், "அச்சமும் அவலமும் இயற்றும் கூட்டமே விழைந்தேன்" என்றும் இயம்புகின்றார். இவ்வாற்றால் திருவருட் பேற்றுக்குப் புறம்பாயினேன் என வருந்துகின்றாராகலின், "அம்பலக் கூத்தன் குறிப்பினுக்கு என்கடவேன்" என இசைக்கின்றார். (7)

3290. கலைத்தொழில் அறியேன் கள்உணுங் கொடியேன்
கறிக்குழல் நாயினும் கடையேன்
விலைத்தொழில் உடையேன் மெய்எலாம் வாயாய்
விளம்புறும் வீணனேன் அசுத்தப்
புலைத்தொழில் புரிவேன் பொய்யனேன் சீற்றம்
பொங்கிய மனத்தினேன் பொல்லாக்
கொலைத்தொழில் புரிவேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

உரை : கற்கும் கலைத் தொழிலை மேற் கொள்ளாமல் கள் முதலிய மயக்கப் பொருள்களை யுண்ணும் கொடியவனாகிய யான், பிணங்களின் ஊன் கறியை விரும்பியுண்ணும் நாயினும் கடைப்பட்டவனாவேன்; புலால் விற்கும் இழிசெயலுடையவன்; உடம்பெல்லாம் வாயாகக் கொண்டு வீணுவனவற்றையே பேசுபவன்; இழிந்த புலாலை யுண்பவன்; பொய்யே உடைமையாகப் பெற்றவன்; சினமே குடிகொண்ட மனமுடையவனாய்ப் பொல்லாத கொலைச் செயல்களையே செய்தொழுகும் யான் தில்லையம்பலக் கூத்தப் பெருமான் திருவருள் நாட்டம் பெறுதற்கு யாது செய்ய வல்லேன். எ.று.

கலைத் தொழில் - நூல்களைக் கற்பதும் கற்பிப்பதுமாகிய தொழில்; கற்குமிடத்தினும் கற்பிக்குங்கால் கலையறிவு நுண்ணிதாய் வளம் பெறும் என அறிக. கள்ளை எடுத்தோதுவதால் பிற அறிவை மயக்கும் பொருள்களும் கொள்ளப்படும். கொடுமைப் பண்பை வளர்ப்பனவாதலால், "கள்ளுணும் கொடியேன்" என்று கூறுகின்றார். கறிக் குழல் நாய் என்றலின், பிணங்களின் ஊன் கறி கொள்ளப்பட்டது. பிணங்களின்

ஊனுண்ணும் நாய் பிற நாய்களிற் கடையாயதாகலின், "கறிக் குழல் நாயினும் கடையேன்" என வுரைக்கின்றார். விலைத் தொழில் - விற்கும் செயல்; ஈண்டுப் புலால் விற்பனை கருதிற்று. எப்போதும் யாவரிடத்தும் வீண் மொழிகளே பேசுவது தோன்ற, "மெய்யெலாம் வாயாய் விளம்புறும் வீணனேன்" எனக் கூறுகிறார். உடம்பாற் செய்வன யாவும் வீண் செயலே என்றற்கு இவ்வாறு கூறுகின்றார் என்றுமாம். அசுத்தப் புலைத் தொழில் - இழிந்த புலாலையுண்டல்; மேலே விலைத் தொழிலைக் கூறினமையின், இஃது உண்ணும் புலைத்தொழிற் காயிற்று. சீற்றம், மிகுசினம். சிறுமை பெருமை கருதாமல் எதற்கும் சீறிச் சினக்கும் மனம் என்றற்கு, "சீற்றம் பொங்கிய மனம்" என விளம்புகின்றார். யாவரும் அஞ்சியும், வெறுத்தும் கையொழியத்தக்க செயலாதல் பற்றி, "பொல்லாக் கொலைத் தொழில்" என்று புகல்கின்றார். கலைத்தொழிலின்றிப் பொல்லாப் புலைத் தொழிலே புரிந்துறையும் எனக்கு இறைவன் திருவருட் பேறு எய்துமோ என ஏங்குமாறு புலப்பட, "கூத்தன் குறிப்பினுக்கு என் கடவேனே" என்று கூறுகின்றார். (8)

3291. பணமிலார்க் கிடுக்கண் புரிந்துணுஞ் சோற்றுப்
பணம்பறித் துழல்கின்ற படிறேன்
எணமிலா தடுத்தார்க் குறுபெருந் தீமை
இயற்றுவேன் எட்டியே அனையேன்
மணமிலா மலரிற் பூத்தனன் இருகால்
மாடெனத் திரிந்துழல் கின்றேன்
குணமிலாக் கொடியேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

உரை : கையிற் பணம் இல்லாத ஏழை மக்கட்கு இடையூறு செய்தும், சோறு வாங்கியுண்பதற்கு வைத்திருக்கும் ஏழையின் கைப் பணத்தைக் கவர்ந்தும் தீமை புரிந்து திரியும் கொடியவனாகிய யான், அன்புடன் அடுத்தவர்க்கு எய்தக் கடவ துன்பத்தை நினையாமல் மிக்க பெருந்தீது செய்பவனாய் எட்டி மரம் போன்றவனாய், நன்மண மில்லாத பூவைப் போலவும், இருகால்களையுடைய எருது போலவும் நாட்டில் திரிகின்றேன்; இவ்வாறு நற்பண்பில்லாத நான் தில்லையம்பலக் கூத்தப் பெருமானது திருவருள் நாட்டம் பெறுதற்கு யாது செய்யவல்லேன் எ.று.

பொன்னாலும் வெள்ளியாலும் செம்பாலும் காகிதத்தாலும் செய்யப் பட்டு வழங்கும் நாணயங்களைப் பணம் என வழங்குகின்றனர். பணத்தாற் பலவும் பெறலாம் என்பது பற்றி அதனைப் பெற முயல்வார்க்குக் கைகூடாதபடி தீங்கு செய்வதும், போதிய பணமின்றி உண்ணும் உணவை வாங்கி யுண்ணுமளவுக்கு வைத்திருக்கும் பணத்தை வலிதிற் கவர்ந்துகொண்டு துன்புறுத்துவதுமாகிய கொடுமை பெரிதாகலின், அதனை எடுத்து மொழியலுற்றுப் "பணமிலார்க் கிடுக்கண் புரிந்து உண்ணும் சோற்றுப் பணம் பறித்துழல்கின்ற படிறேன்" என்று கூறுகின்றார். இடுக்கண் - இடையூறு; தீங்குமாம். பறித்தல் - வலிதிற் கவர்தல். படிறு - குற்றம்; படிறுடையவனைப் படிறன் என்பர். ஒருவரை

யொருவர் அடுத்து வாழ்வது மக்களுயிர்க்குப் பொதுவாய் அமைந்த அன்புப் பண்பாதலால், "அடுத்தார்" என்று ஓதி, அப்பண்பை மனத்தின்கண் கொள்ளாமல் அவர்கட்கு மிக்க பெருந் தீங்கினைச் செய்வது தீவினையாதலால், அதனை "எணம் இலாது அடுத்தார்க்கு உறுபெருந் தீமை இயற்றுவேன்" எனவும், இவ்வியல் புடையார்களை எட்டி மரத்துக்கும், மணமிலா மலர்க்கும் உணர்விலாத எருதுக்கும் ஒப்புக் கூறலுற்று, "எட்டியே யனையேன் மணமிலா மலரிற் பூத்தனன் இருகால் மாடு எனத் திரிந்துழல்கின்றேன்" என வுரைக்கின்றார். நினைப்பினும் காணினும் காண்பார் உள்ளத்தில் வெறுப்புத் தோன்றுதலால் எட்டி யுவமமாயிற்று. உயிர்ப் பண்பாகிய ஈரமில்லாமை பற்றி, "மணமிலா மலரிற் பூத்தனன்" என்கின்றார். மனவுணர்வு இல்லாமை பற்றி "இருகால் மாடு" என இகழ்கின்றார். நற்பண்பில்லாத கீழ்மக்களைச் சான்றோர் "இருகால் எருது" என்பது வழக்கம். எடுத்தோதிய தீய வியல்புகள் குணமில்லாத கொடிய வர்பால் விளங்கித் தோன்றுதலால் "குணமிலாக் கொடியேன்" என்று கூறுகின்றார். திருவருட் பேற்றுக்கு இவ்வியல்புகள் ஆகா வென்பது கருத்து. (9)

3292. கடியரில் கடியேன் கடையரில் கடையேன்
கள்வரில் கள்வனேன் காமப்
பொடியரில் பொடியேன் புலையரில் புலையேன்
பொய்யரில் பொய்யனேன் பொல்லாச்
செடியரில் செடியேன் சினத்தரில் சினத்தேன்
தீயரில் தீயனேன் பாபக்
கொடியரில் கொடியேன் அம்பலக் கூத்தன்
குறிப்பினுக் கென்கட வேனே.

உரை : விலக்கத் தக்கவருள்ளும் கடைப்பட்டவருள்ளும் கடியவனும் கடையவனுமாகிய யான், கள்வ ரெல்லாரினும் தலையாய கள்வன்; காம விச்சையாற் சிறுமையுற்றோர் பலரினும் சிறியவன்; கீழான புலையியல்பினை யுடையவன்; என்னினும் கடையான பொய்யர் இல்லாதவன்; பொல்லாத தீயவர்கள் அனைவரினும் மிகுத்த தீயவன்; முன்கோபியர் பலரினும் முற்பட நிற்கும் முன்கோபி; பல வேறு தீய பண்புகளால் கொடுமை மிக்கவரில் மிக்ககொடியவனுயினேன்; ஆகவே அம்பலக் கூத்தனது அருள் நாட்டம் பெறுவது எனக்கு எவ்வாறும். எ று.

கடியர் - விலக்கத்தக்க குற்றமுடையவர். கடையர் - கீழ்மக்கள்; இவர்களைக் கயவர் என்றலு முண்டு. கள்வன் - திருடன். பொடியர் - சிறுமைப்பண்பாலும் செயலாலும் சிறுமையானவர். சினத்தர் - முன்கோபிகள். செடியர் - தீங்கு செய்தலையியல்பாகவுடையவர். தீயர் - தீமையே யுருவாயவர். கொடியவர் - கொடுமையே நினைந்தும் பேசியும் செய்தும் ஒழுகுபவர்.

4. பிறப்பவம் பொருது பேதுறல்

(அந்தாதி)

அஃதாவது, பிறந்த பிறப்பிடை யுண்டாகும் துன்பங்களே யெண்ணி வருந்துவதாம். ஒவ்வொருவரும் எண்ணியறிய வேண்டிய ஏற்ற முடைமை பற்றி, இதனை அந்தாதித் தொடையில் அமைத்துள்ளார்.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3293. குலத்திடையும் கொடியன்ஒரு குடித்தனத்தும் கொடியேன்
குறிகளிலும் கொடியன்அன்றிக் குணங்களிலும் கொடியேன்
மலத்திடையே புழுத்தசிறு புழுக்களிலும் கடையேன்
வன்மனத்துப் பெரும்பாவி வஞ்சநெஞ்சப் புலையேன்
நலத்திடைஓர் அணுஅளவும் நண்ணுகிலேன் பொல்லா
நாய்க்குநகை தோன்றநின்றேன் பேய்க்கும்மிக இழிந்தேன்
நிலத்திடைநான் ஏன்பிறந்தேன் நின்கருத்தை அறியேன்
நிர்க்குணனே நடராஜ நிபுணமணி விளக்கே.

உரை : குலம் குடித்தனங்களிலும் குறி குணங்களிலும் நேர்மை யில்லாதவனுகிய யான் மலத்திற் புழுக்கும் சிறு புழுக்களினும் கடையவன்; வன்மையுற்ற மனத்தையுடைய பெரும்பாவி; வஞ்சம் நிறைந்த நெஞ்சினையுடைய புலைத்தன்மை கொண்டவன்; நலமாகிய வற்றைச் சிறிதும் நெருங்குதல் இல்லாதவன்; பொல்லாத நாயும் கண்டு நகைக்கத்தக்க கீழ்மை யுற்றுள்ளேன்; பேயினும் இழிக்கத் தக்க யான் இந்நிலவுலகத்தில் பிறந்த காரணம் தெரியேன்; பிறப்பித்த நின் திருவுள்ளம் யாதென்று அறியேன்; நிர்க்குண நடராசப் பெருமானுகிய நிபுண மணியே எனக்கு உரைத்தருள்க. எ.று.

குலம் - நற்குண நற்செயல்களால் உயர்ந்தோர் குடிக் குளதாகும் சிறப்பு. குடித்தனம் - குடிமை. குறி - இயற்பெயரும் சிறப்புப் பெயரு மாம. குணம் - நற்பண்பு நற்செயல்களால் உளதாகும்நலம். மண்ணிற் பிறந்த மக்கட்குக் குறியும் குணமும் முதலாகக் கூறிய நான்கும் இயல்பாக வுரியன. இவை நன்கு அமையாமை கண்டு வருந்துமாறு தோன்றக் "குலத்திடையும் கொடியன் ஒரு குடித்தனத்தும் கொடியன் குறிகளிலும் கொடியன் அன்றிக் குணங்களிலும் கொடியன்" என்று கூறுகின்ருர். பிறந்தானுக்கு உரியன குறி குணங்கள்; அவன் பிறந்த குடிக் குரியன குலமும் குடிமையும் என அறிக. இக்கூறுகளில் செம்மையின்மை கண்டு தம்மைக் "கொடியன்" என்று பழித்துரைக்கின்ருர். மலத்திலே தோன்றி வளர்ந்து மலத்திலே மடியும் புழுப் போல மண்ணிலே பிறந்து வளர்ந்து மண்ணிலே கிடந்து மடியும் தன்மை பற்றி, "மலத்திடையே புழுத்த சிறு

புழுக்களிலும் கடையேன்'' என வருந்துகின்றார். அறிவில்லாத புழுவின் வேறுபட்டு அறிவுடையனாய்த் தோன்றி வளர்ந்து மடிக்கின்றமை பற்றி, ''கடையேன்'' எனக் குறிக்கின்றார். மனத்தின்கண் அன்பும் அருளும் நிலவாமைகண்டு ''வன் மனத்து'' என்றும், அதனால் நினைவும் செயலும் பாவமே விளைப்ப துணர்ந்து ''பெரும்பாவி'' என்றும் இயம்புகின்றார். நெஞ் மாகியகருவி வஞ்ச நினைவுகளைக் கொண்டு கீழ்மைச் செயற்கே விளைத லாதலால் ''வஞ்ச நெஞ்சப் புலையேன்'' எனப் புகல்கின்றார். குலமும் குடிமையும், கொண்டுயர்ந்தோர் நலத்தின்கண் பேரன்பு கொண்டு பிறங் குவர்; குலத்தினும் குடித்தனத்தும் கொடியவனு தலால்நலமுறுவன வற்றை நயவாதொழிந்தேன் என்பாராய், ''நலத்திடை யோர் அணுவள வும் நண்ணுகிலேன்'' என வுரைக்கின்றார். ''நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைத் குலத்தின்கண் ஐயப்படும்'' (குறள்) என்று சான்றோர் கூறுவதறிக. சிறிதும் என்னும் பொருளில் ''அணுவளவும்'' என மொழிகின்றார். அவா வடிவாய்த் தீரும் வாயிலின்றி வருந்துவது பேய்; தீரும் வாயிலுடையனாகியும் தீராமல் கெட்டலுதலால் ''பேய்க்கு மிக இழிந் தேன்'' என்கின்றார். இழிவைமிகுத் துக்காட்டற்கு ''நாய்க்கு நகை தோன்ற நின்றேன்'' என நொந்து ஏசுகின்றார். குண தத்துவத்துக்கு அதீதமாய் அப்பாலாய் உள்ளமையால் சிவனை ''நிர்க்குணனே'' எனவும், ஆடற் கலைக்கு அரசனென்பது பற்றி ''நடராச'' னெனவும், சிறப்பு மிக்க மாணிக்க மணி போலும் திருமேனியுடையனுதலால் ''நிபுண மணியே'' என்று பரவு கின்றார். இவ்வருட் பாட்டுத் திருநாவுக்கரசரது 'குலம் பொல்லேன் குணம் பொல்லேன் குறியும் பொல்லேன் குற்றமே பெரிதுடையேன் கோல மாய நலம் பொல்லேன்'' என வரும் திருத்தாண்டகத்தை நினைப்பிப்பது காண்க.

இதனால், பிறப்புக் கமைந்த குணம் குறி குலம் குடிமை ஆகியவற்றின் பொல்லாங் குரைத்து வருந்தியவாறும். (1)

3294. விளக்கறியா இருட்டறையில் கவிழ்ந்துகிடந் தழுது
விம்முகின்ற குழவியினும் மிகப்பெரிதும் சிறியேன்
அளக்கறியாத் துயர்க்கடலில் விழுந்துநெடுங் காலம்
அலைந்தலைந்து மெலிந்ததுரும் பதனின்மிகத் துரும்பேன்
கிளக்கறியாக் கொடுமைஎலாம் கிளைத்தபழு மரத்தேன்
கெடுமதியேன் கடுமையினேன் கிறிபேசும் வெறியேன்
களக்கறியாப் புவியிடைநான் ஏன்பிறந்தேன் அந்தோ
கருணைதடத் தரசேநின் கருத்தைஅறி யேனே.

உரை : விளக்கொளியில்லாமல் இருள் படிந்துள்ள ஓர் அறையிற் கவிழ்ந்து கிடந்து அழுதழுது மயங்குகின்ற குழவியினும் அறிவால் மிக்க சிறுமையை யுடைய யான் அளந்து காண முடியாத துன்பமாகிய கடலில் விழுந்து பன்னெடுங் காலமாக அலைப்புண்டு மென்மை யுற்ற துரும்பினும் மிக மெலிந்த துரும்பு போன்று, வாயாற் சொல்ல முடியாத கொடுமை வகை யத்தனையும் தோற்றுவித்த பழுத்த மரம் போன்றும், கெடுமதியும் கடுஞ் செயலும் உடையனாய், கேலி பேசித் திரியும் வீணனையினேனு தலால், குற்ற மறியாத இவ்வுலகின்கண் ஏன் பிறந்தேனோ? அருள் நடனத்தைச் செய்யும் ஆடலரசே, நினது திருவுள்ளத்தை அறிகிலேன். எ.று.

பிறந்து சின்னாள் கழிந்ததும் தாய் முகம் பார்த்து மகிழும் சிறு குழவி சில இரண்டொரு திங்கள் வளர்ச்சியிற் குப்புறக் கவிழ்ந்து ஒளி கண்டு மகிழ்தலும் இருள் கண்டு அஞ்சி யழுவதும் செய்தல் இயல்பாதலின், "விளக்கறியா இருட்டறையில் கவிழ்ந்து கிடந்து அழுது விம்முகின்ற குழவி" எனக் கூறுகின்றார். கேவலத்தில் ஆணவ மலவிருளிற் கிடந்த ஆன்மா சகலத்தில் உடம்பொடு கூடி உலகியலறி வொளி பெற்று அதனையே நோக்குவதும், பின்னர்த் திருவருள் ஞானம் பெற்று முத்தி பெறுவதும் இதன் உள்ளுறு பொருள், சகல நிலையில் மண்ணில் உடலொடு கூடிக்குழவிப் பருவத்தில் பொறி யறிவு வளரப் பெறுதலின், இருட்டறையில் கவிழ்ந்து கிடந்து ஒளியின்மைக் கஞ்சிப் பன்முறையும் அழுது மயங்கி உறங்கி விடும் இயல்பு இதனால் எடுத்தோதுகின்றார். போதிய பொறி யறிவு இன்மையாற் சிறுமையுறும் குழவி போல, உண்மை யறிவின்றிச் சிறுமை யுற்றமை தோன்றக் "குழவியினும் மிகப் பெரிதும் சிறியேன்" என உரைக்கின்றார். உலகியல் துன்பங்கள் கடலலை போற் பெருகி வருதலால், "அளக்கறியாத் துயர்க் கடலில் விழுந்து" என்றும், நெடுங் காலமாக நீரிற் கிடந்து அலைப்புண்ட துரும்பு மென்மை மீதூர்ந்து கெடுவது போலத் துயர்க் கடலின் இடைவிடாத் தாக்குதலால் உடலுணர்வும் உயிருணர்வும் மெலிவுறுதல் விளங்க, "மெலிந்த துரும்பதனின் மிகத் துரும்பேன்" என்று சொல்லுகின்றார். துரும்பு போன்றே னென்றற்குத் துரும்பேன் என்கின்றார். உணர்வு வகையில் துரும்பு போன்றேனையினும் இலைதோறும் பழுத்து நிற்கும் வளைய மரம் போல நினைவு சொல் செயலனைத்தும் கொடுமைகளையே கொண்டுள்ளேன் என்பாராய், "கொடுமை யெலாம் கிளைத்த பழமரத்தேன்" என வுரைக்கின்றார். கிளத்தல் - சொல்லுதல். ஆக்கத்துக் குரிய நினைவும் செயலும் இல்லாதவன் என்றற்குக் "கெடுமதியேன்" என்றும், அருட்குரிய, மென்மைப் பண்பு இல்லாதவன் என்றற்குக் "கடுமையினேன்" என்றும், கண்டாரை யிகழ்ந்து பேசும் இயல்புடையேன் என்றற்குக் "கிறி பேசும் வெறியேன்" என்றும் இயம்புகின்றார். நன்மை சிறிதும் இல்லாமை வெறுமை. குற்றப் பொருளதாய களங்கம் என்பது களக்கு என வந்தது. தன்கண் வாழ்வாங்கு வாழ்வாரைத் தெய்வப் பேரின்பம் எய்துவிக்கும் பெருமையுடையதாகலின், "களக்கறியாப் புவி" எனவும், மேற்கூறிய குற்ற வகை யுடைமையால் கீழ்மை எய்தற் பாலனாகிய எனக்கு இப் புவி வாழ்வு பொருந்தாதாகலின், "புவியினிடை நான் ஏன் பிறந்தேன்" எனவும் இயம்புகின்றார். உலகுயிர்கட்கு அருள் வழங்குவது நடராசப் பெருமானது திருக்கூத்தாகலின், "கருணை நடத்தரசே" என்றும், இறைவன் திருக்குறிப்பை அறிவதன் அருமை நினைந்து "அந்தோ நின் கருத்தையறியேனே" என்றும் இசைக்கின்றார்.

இதனால், தன் பிறப்பின் நோக்கம் அறிய மாட்டாமைக்கு வருந்திய வாறும். (2)

3295. அறியாத பொறியவர்க்கும் இழிந்ததொழி லவர்க்கும்
அதிகரித்துத் துன்மார்க்கத் தரசுசெயுங் கொடியேன்
குறியாத கொடும்பாவச் சுமைசுமக்கும் திறத்தேன்
கொல்லாமை என்பதைஓர் குறிப்பாலும் குறியேன்

செறியாத மனக்கடையேன் தீமையெலாம் உடையேன்
சினத்தாலும் மதத்தாலும் செறிந்தபுதல் அனையேன்
எறியாத புவியிடைநான் ஏன்பிறந்தேன் உன்றன்
தயமறி யேன்மன்றில் இனித்தாடத் திறையே.

உரை : அறிவறியாத பொறிகளை யுடைய மூடர்களுக்கும் இழி தொழில் செய்பவர்க்கும் மிகுதியான துன்மார்க்கத்தை மேற் கொண்டு திரியும் கொடுமைப் பண்புடைய யான், நூல்கள் குறிக்காத கொடிய பாவங்களைச் செய்து அவற்றின் சுமையைத் தாங்கும் இயல்புடையனாகின்றேன்; கொல்லாமை யென்னும் நல்லறத்தைக் குறிப்பாகவும் எண்ணுவ தில்லேன்; அடங்காத மனத்தாற் கீழ் மகனாகிய நான் தீமை யெனப்படுபவை அனைத்தையும் கொண்டுள்ளேன்; சினமும் செருக்கு மாகிய குற்றங்கள் தங்குகின்ற புதர் போன்று இருக்கின்றேன்; தில்லை யம்பலத்தில் இனிய நடம் புரிகின்ற இறைவனே, புறத்தே தள்ளுதல் இல்லாத பூமியின்கண் நான் ஏன் பிறந்தேனோ? உனது திருவுள்ளத்தை அறிகிலேன். எ.று.

அறியாத பொறியவர், கண் காது முதலிய பொறிகளைப் பெற்றிருந்தும் காண்பது கேட்பது முதலிய செயல்களால் அறிவதறியாதவர். திருவள்ளுவர் கூறுவது போலக் "கொளில் பொறிகளை" யுடைய குண மில்லாதவர் என அறிக. இழிந்த தொழிலவர் - கண்டார் இகழும் தொழில் செய்பவர். அதிகரித்தல் - மிகுதல். துன்மார்க்கத்து அரசு செய்தல் - தீய நெறியில் தலைவராதல். பாவச் செய்கை யென நூலோர் வகுத்தோதிய வற்றுள் அடங்காத மிக்க பாவம் என்றற்குக் "குறியாத கொடும்பாவம்" என்றும், செய்த பாவ வினைப் பயனை நுகர்ந்து கழிக்குமளவும் தீராது சூழ்தலின், "பாவச் சுமை சுமக்கும் திறத்தேன்" என்றும் கூறுகின்றார். கொல்லாமையாவது நல்லறம் என்று குறிக் கொள்ளத் தக்கது என்று எண்ணுதல் இல்லாதவன் என்று தெரிவிப்பாராய், "குறிப்பாலும் குறியேன்" என வுரைக்கின்றார். செறிவு - அடக்கம். நெறிப் படுத்தும் அறிவுக்கு அடங்காதோடும் மனம் குற்றமே செய்து கீழ்மைப் படுத்துதலால் "செறியாத மனக்கடையேன்" என்று செப்புகின்றார். குற்றமே யுருவாயவன் என முடிந்தது முடிப்பாராய்த் "தீமை யெலாம் உடையேன்" என்று தெரிவிக்கின்றார். கொடு விலங்கு ஒடுங்கும் பெரும் புதல் போலச் சினமும் செருக்கும் தனக்குள் இருக்குமாறு விளங்க, "சினத்தாலும் மதத்தாலும் செறிந்த புதல் அனையேன்" என வுரைக்கின்றார். வல்லோன் ஒருவன் கை வலித் தெறியினும் வானத் தெறிந்த கல் வேறெங்கும் செல்லாமல் தன்கண்ணே வந்தடையுமாறு ஈர்த்துக் கோடல் நிலத்தியல்பாகலின், "எறியாத புவி", என்கின்றார். தன்கண் பிறந்து வாழ்வாரை மயக்கித் தன்னையே காதலிக்கச் செய்யும் இயல்பினதாதலால் மண்ணக வாழ்வை "எறியாத புவி" எனக் கூறுகின்றார் எனினும் அமையும். குற்ற வகை அனைத்தையும் கொண்டு பிரியர் பிரியவிடாத இவ்வாழ்க்கையிற் பிறப்பித்த நினது திருவுள்ளக் குறிப்பு எனக்குத் தெரிகின்ற தில்லை என்பாராய், "நான் ஏன் பிறந்தேன் உன்றன் இதய மறியேன்" என இசைக்கின்றார்.

இதனாலும் பிறவி நோக்கம் அறியாமை தெரிவித்தவாறும். (3)

3296. இனித்தபழச் சாறுவிடுத் திழித்தமலங் கொளும்ஓர்
இழிவிலங்கில் இழிந்துநின்றேன் இரக்கம்ஒன்றும்
இல்லேன்
அனித்தநெறி யிடைத்தொடர்ந்து மனித்தஉடம் பெடுத்த
அறக்கடையர் தமக்கெல்லாம் அறக்கடையன் ஆனேன்
பனித்தமனக் குரங்காட்டிப் பலிக்குழலும் கொடியேன்
பாதகமும் சூதகமும் பயின்றபெரும் படிறேன்
தனித்தகடுங் குணத்தேன்நான் ஏன்பிறந்தேன் நினது
தனிக்கருத்தை அறிந்திலேன் சபைக்கேற்றும் ஒளியே.

உரை : ஞான சபையில் ஒளிரும் ஞான விளக்கமே, இனிக்கின்ற பழத்தின் சாறு இருப்ப அதனை விட்டு இழிந்த மலத்தை விரும்பி யுண்ணும் இழிவான விலங்கினும் இழிந்த செயலை யுடையவனுய் இரக்க வுணர்வு சிறிது மில்லாதவனுகிய யான், நிலையில்லாத நெறி பற்றி அதனையே தொடர்ந்து மனித வுடம்பெடுத்து உழலுகின்ற பாவிகள் எல்லாரினும் கடைப்பட்ட பாவியாயினேன்; குரங்காட்டி உண்பலி இரக்குவனைப் போலத் துடிக்கின்ற மனத்தை யாட்டி உலகியற் போகத்தை நுகர் கின்றேன்; பாதகச் செயல்களையும் சூதகச் செயல்களையும் புரிந்த பெருங் குற்றத்தை யுடையேன்; பிறர் எவர்க்குமில்லாத தனிக் கடுங்குண முடையனுய் யான் ஏன் பிறந்தேனே? நின் தனித் திருவுள்ள மறியேன் எ.று.

இழிந்த மலங் கொளும் விலங்கு பன்றி, நாய் முதலியனவாம். இரக்கம். உயிர் இரக்கப் பண்பு. நிலைத்த பயன் விளைவிக்க ஒழுக்கமும் தொழிலும் மேற்கொண்டலையும் நெறி, அநித்த நெறியாகும். அறன் கடையர் - அறத்துக்கு மாருயவற்றைச் செய்யும் பாவிகள்; அறங்கடை யென்பது அறக்கடை என வந்தது. பின்னது மூழுத்த கீழ் மகன் என்னும் பொருளது. ஒரு பொருளினும் ஒன்றி நில்லாமல் பல பொருள்களின் மேற் சென்று அலைந்தவண்ணமிருப்பது பற்றி, "பனித்த குரங்கு" என வுரைக் கின்ருர். பனித்தல் - நடுங்குதல். குரங்காட்டிகள் வீடு தோறும் சென்று குரங்கை ஆட்டிக் காட்டி உண்பலி இரப்பவராதலின், மனம் போன வழிச் சென்று பெறுவன பெற்று நாளாக கழிக்கும் தமது செயலுக்கு உவமம் செய்கின்ருர். பாதகம் - பெருங் குற்றம். சூதகம் - உள்ளே சூது நிறைந்த செயல்; பழவினை இறப்புப் பிறப்புக்களால் மனையவர் கொண்டாடும் தீட்டு. பெரும் படிறு - பெருங் குற்றம். பலரோடும் கலந்து உறவாடி இன்புறும் பண்பின்மை விளங்கத் "தனித்த கடுங் குணத்தேன்" என வுரைக் கின்ருர். பெருமையால் தனிச் சிறப்புறுவது கண்டு, "தனிக் கருத்தை அறிந்திலேன்" என வருந்துகின்ருர்.

இதனுல், தம்பால் உள்ள குற்றங்களை எடுத்தோதி முறையிட்ட வாரும். (4)

3297. ஏறுகின்றேம் எனமதித்தே இறங்குகின்ற கடையேன்
ஏதமெலாம் நிறைமனத்தேன் இரக்கமிலாப் புலையேன்
சீறுகின்ற புலியனையேன் சிறுதொழிலே புரிவேன்
செய்வகைஒன் றறியாத சிறியரினும் சிறியேன்
மாறுகின்ற குணப்பேதை மதியதனுல் இழிந்தேன்
வஞ்சம்எலாம் குடிகொண்ட வாழ்க்கைமிக உடையேன்
வீறுகின்ற உலகிடைநான் ஏன்பிறந்தேன் நினது
மெய்க்கருத்தை அறிந்திலேன் விளங்குநடத் தரசே.

உரை : ஞான விளக்கம் புரியும் திருநடனத்தை யுடைய ஆடலரசே, உயர்கின்றேம் என எண்ணிக் கீழ் நோக்கி விழுகின்ற அறிவால் கடையனுகிய யான், குற்ற மெலாம் நிறைந்து இரக்கப் பண்பு இல்லாத புலைத்தன்மையை யுடைய யான் சீறுகின்ற புலி போன்றவன்; சிறு செயல்களையே செய்பவன்; செயற் குரியவற்றைச் செய்யும் வகையினை அறியாத சிறியவர்களின் சிறியவன்; கணந்தோறும் மாறுகின்ற குணக் கேடன்; அதற்கேற்ற அறிவால் கீழ்மை யுற்றேன்; வஞ்சினை வகை யாவும் பொருந்திய வாழ்க்கையைக் கொண்டவன்; மேம்படுகின்ற இவ்வுலகின்கண் ஏனே பிறந்தேன்; நின்னுடைய உண்மைக் கருத்தை அறிகிலேன். எ.று.

உயர்வதை ஏறுதலென்றும், இழிவதை இறங்குத லென்றும் வழங்குதல் பற்றி, "ஏறுகின்றேம் என மதித்தே இறங்குகின்ற கடையேன் என்று கூறுகின்ருர். மதித்தல் - கருதுதல். ஏதம் - குற்றம். மனம் மொழி மெய் என்ற முக் கரணங்களாலும் செய்யப்படும் குற்ற வகை யெல்லாம் அடங்க, "ஏத மெலாம் நிறை மனத்தேன்" எனவும், உயிர்க்குரிய நற் பண்புகளில் தலையாயது இரக்க மாகலின், அதனை விதந்து "இரக்கமிலாப் புலையேன்" என்றும் இயம்புகின்ருர். புலையேன் - புலைத்தன்மை பொருந்தியவன். தன் சொற் செயல்களால் பிறரை யச்சுறுத்தும் இயல்பு பற்றிச் "சீறுகின்ற புலி யனையேன்" என்றும், சீறி யச்சுறுத்துவதே சிறு தொழிலாதலால், "சிறு தொழிலே புரிவேன்" என்றும், சிறு தொழிலும் சிறுமைப் பண்பும் சிறு மதியும் மிக்கிருப்பது விளங்க, "செய்வகை யொன் றறியாத சிறியரினும் சிறியேன்" என்றும் தெரிவிக்கின்ருர். கணந்தோறும் மாறி யியங்குவது குணங்கட் கியல்பாதலால் "மாறுகின்ற குணப் பேதை" எனவும், ஏதம் கொண்டு ஊதிய மிழக்கும் செயலுடைமை தோன்ற, "பேதை மதி" எனவும், அதனுற் கீழ்மை யுறுவதால் "இழிந்தேன்" எனவும், இசைக்கின்ருர். இக் குறைபாடுகளோடு வஞ்ச நினைவுகளும் செயல்களும் வாழ்வு முழுதும் நிறைந்துள்ளன வென்பாராய், "வஞ்ச மெலாம் குடி கொண்ட வாழ்க்கை மிக வுடையேன்" என்றும், பிறந்தாரை வாழ்வாங்கு வாழ்ந்து வானப் பெரு வாழ்வு நல்கும் சிறப்புடைய உலக வாழ்வில் மாறுபட்ட இயல்புடன் நான் தோன்றி யிருப்பது ஒரு புதிராக இருத்தலால், "நான் ஏன் பிறந்தேன் என்றும், நினது திருவுள்ளக் கருத்தை என்னுல் அறிய முடியவில்லை என்றற்கு, "நினது மெய்க் கருத்தை அறிந்திலேன்" என்றும் உரைக்கின்ருர். வீறுதல் - மேன்மை யுறுதல்.

இதனுல், வீறுகின்ற உலகில் மாருன இயல்பு அமைந்தமைக்கு காரணம் சிந்தித்தவாரும். (5)

3298. அரசர்எலாம் மதித்திடப்பேர் ஆசையிலே அரசோ
டால்எனவே மிகக்கீழ்த்தேன் அருளறியாக் கடையேன்
புரசமரம் போற்பருத்தேன் எட்டிஎனத் தழைத்தேன்
புங்கெனவும் புளிஎனவும் மங்கிஉதிர் கின்றேன்
பரசும்வகை தெரிந்துகொளேன் தெரிந்தாரைப் பணியேன்.
பசை அறியாக் கருங்கல்மனப் பாவிகளிற் சிறந்தேன்.
விரசுநிலத் தேன்பிறந்தேன் நின்கருத்தை அறியேன்.
வியக்குமணி மன்றுளங்கி விளங்குபரம் பொருளே.

உரை : கண்டோர் வியக்கும் மணிகள் பதித்த ஞான சபையில் உயர்ந்து விளங்கும் பரம் பொருளாகிய நடராசப் பெருமானே, அரசர் மதிக்க வாழ வேண்டுமென்ற ஆசையுற்ற யான், அரச மரத்தோடு ஒட்டி வளரும் ஆல மரம் போலக் கீழ்ஞர் மிக வுடையவனாயினேன்; ஆசைக் கொத்த அருட் பண்பில்லாமல் கீழ்ப்பட் டொழிந்தேன்; புரச மரம் போல அடியும் வேரும் பருத்து எட்டி மரம் போலத் தழைத்துள்ளேன்; எனினும் புங்கு போலவும் புளி மரம் போலவும் காய்ந்து உதிர்கின்றேன்; உன்னை வழிபடும் முறையை யறியேன்; அறிந்தவரைப் பணிந்தேனும் அறிந்து கொள்கின்றேனில்லை; ஈரமே காணுத கருங்கற் போன்ற மனமுடைய பாவி மக்களில் மிக்கோனாக வுள்ளேன்; நலம் பெறற்குப் பொருந்திய இந் நிலவுலகத்தில் நான் ஏன் பிறந்தேன்; நின் திருவுள்ளத்தை அறியேன் எ.று.

உயர்ந்த பல நன்மணிகள் இழைத்த அம்பலமாதலால், தில்லையம் பலத்தை "வியக்கு மணிமன்று" எனச் சிறப்பிக்கின்றார். நடராசப் பெருமான் பரம்பொருளின் சகளத் திருவுருவாதலால் "பரம்பொருளே" எனப் பரவுகின்றார். அரசர் மதிக்க வாழ்வது மண்ணக வாழ்வுக்கு மாண்பாதலால், "அரசரெலாம் மதித்திடப் பேராசையிலே கீழ்த்தேன்" எனவும், அந்நிலையில் தனி மரமாதலின்றி அரசொடு கூடித் தழைத்துக் கீழ்த்திருக்கும் ஆல மரத்தைக் காட்டிக் கீழ்ஞர் நடுவே யிருக்கும் திறத்தைப் புலப்படுத்துவாராய், "அரசோடு ஆல் எனவே மிகக் கீழ்த் தேன்" எனவும் இயம்புகின்றார். இப்பெரு வாழ்வுக்கு மாண்பு தரும் அருட் பண்பு என்பால் இல்லை யென வருந்துவாராய், "அருளறியாக் கடையேன்" என்கின்றார். புரச மரம் நூல்களில் புரோசு எனவும், வழக்கிற் பூவரசு எனவும் வரும். வேரும் அடியும் பருத்திருப்பினும் காழ் குறைந்ததாகலின் பயன் பெரிதுடைய தன்று; எட்டி தழைக்கினும் கசப்பு மிகுதியால் பயன்படுவதில்லை; இது பற்றியே, "புரச மரம் போற் பருத்தேன் எட்டி யெனத் தழைத்தேன்" எனக் கூறுகிறார். புன்க மரம் - புங்கு, புங்கம் என வழங்கும். இலையுதிர் காலத்தில் முற்றவும் உதிரு மியல்பினவாகலின், "புங்கெனவும் புளியெனவும் மங்கி யுதிர்கின்றேன்" என விளக்குகின்றார். இதனால் மெலிந்தமை யுணர்த்தியவாறு. பரசுதல்- இறைவனை வழிபடுதல். வழிபாட்டு முறை தெரியாவிடினும் தெரிந் தாரை யடைந்து கற்றுக் கொளலாமாயினும் யான் அது செய்திலேன் என்பாராய், "தெரிந்தாரைப் பணியேன்" எனத் தெரிவிக்கின்றார். பசை- ஈரம். பன்னூருண்டு நீருட் கிடப்பினும் கருங்கல் ஈரம் பற்றுதாகலின், "பசை யறியாக் கருங்கல்" எனப் பகர்கின்றார். பாவிகளில் தலையாய

கொடும்பாவி என்றற்குப் "பாவிகளிற் சிறந்தேன்" என்று இயம்புகின்ருர். விரசுதல் - பொருந்துதல்.

இதனுல், நலம் விரவிய நிலத்தில் மாருகப் பிறந்துளேன் என்று வருந்தியவாரும். (6)

3299. பொருளறியேன் பொருளறிந்தார் போன்றுநடித் திங்கே
பொங்கிவழிந் துடைகின்றேன் பொய்யகத்தேன் புலையேன்
மருளறியாத் திருவாளர் உளங்கயக்கத் திரிவேன்
வையுண்டும் உழவுதவா மாடெனவே தடித்தேன்
வெருளறியாக் கொடுமனத்தேன் விழற்கிறைத்துக் களிப்பேன்
வீணர்களில் தலைநின்றேன் விலக்கனைத்தும் புரிவேன்
தெருளறியேன் உலகிடைநான் ஏன் பிறந்தேன் நினது
திருவுளத்தை அறிந்திலேன் தெய்வநடத் தவனே.

உரை : தில்லையம்பலத்தின்கண் தெய்வத் திருநடம் புரியும் பெருமானே, உறுதிப் பொருளாகிய மெய்ம்மை யுணராதவனுகிய யான், உணர்ந்தவரைப் போல இவ்வுலகில் நடித்துப் பெருமிதமுற்றுக் கெடுவதுடன் பொய் நிறைந்த நெஞ்சத்தாற் புலைத்தொழிலனுகின்றேன்; மயக்கமில்லாத ஞானச் செல்வர் கண்டு மனம் வெறுக்குமாறு நாட்டில் உலாவி, வேண்டுமளவு வைக்கோலை யுண்டும் உழவுக்குப் பயன்படாத எருது போல உடல் பருத்துள்ளேன்; அச்சமில்லாத கொடிய மனத்தை யுடையனுய்ப் பயனில்லாதவற்றைச் செய்து களிக்கின்றேன்; வீண் செயல் புரிபவர்களில் முன்னணியில் நின்று நூலோர் கூடாதென விலக்கியதைச் செய்து கெடுகின்றேன்; இவ்வாற்றல் தெளிவில்லாத யான் இவ்வுலகில் ஏன் பிறந்தேனே? பிறப்பித்த நினது திருவுள்ளக் குறிப்பை அறியேன். எ.று.

பொருள் - உயிர்க் குறுதி பயக்கும் மெய்ப்பொருள். மக்களாய்ப் பிறந்தார் உறுதிப் பொருளை யறிந்து ஞான விளக்கம் பெற்று வீடு பெறுவது கடனதலின், "பொருளறியேன்" எனப் புகல்கின்ருர். அறிந்தாரைப போலக் கண்டோர் வியந்து பரவ ஒழுகுவது புலப்பட, "பொருளறிந்தார் போன்று நடித்து" என்றும், பிறர் தன் பொய்ம்மை யறியாது போற்றுவதால் மகிழ்ச்சி மிக்குக் கெடுமாறு தோன்ற, "பொங்கி வழிந்து உடைகின்றேன்" என்றும், உடைகிற போது பூதமைந்தும் உள்ளுக்குள் கண்டு எள்ளி நகுவது பற்றிப் "பொய்யகத்தேன் புலையேன்" எனத் தம் செயலை வெறுத்தும் பேசுகின்ருர். பொய் யொழுக்கமும் புலைத் தொழிலாதலால் "புலையேன்" என்று குறிக்கின்ருர். "வஞ்ச மனத்தான் படிற்ருெழுக்கம் பூதங்கள் அஞ்சும் அகத்தே நகும்" (குறள்) என்று சான்ருேர் கூறுவது காண்க. மனத்தின்கண் மருட்சியின்றி உள்ளதுணரும் ஞானச் செல்வர்களை, "மருளறியாத் திருவாளர்" எனப் புகழ்கின்ருர். தனது பொய்ம்மையைக் கண்டு தமது மனத்தின்கண் கசப்புற்று வெறுப்பது பற்றி, "உளம் கயக்க" எனவும், அதனை யுணர்ந்தும் நாணமின்றி உலவுமாறு விளங்கத் "திரிவேன்" எனவும் இயம்புகின்ருர். உண்பன வுண்டும் உரியன செய்யாமல் உடல் பருத்து உயிர் வாழ்வது

பற்றிய அருவருப்பை, "வை யுண்டும் உழவுதவா மாடெனவே தடித் தேன்" எனச் சாற்றுகின்றார். கசத்தல் - கயத்தல் என வந்தது. மாடு- எருது. தடித்தல் - உடல் தசை மிக்குப் பருத்தல். தடி - தசை. வெருள்- அச்சம்; அஃதாவது பழி பாவங்கட்கு அஞ்சுதல். அச்சமும் நாணமும் நல்வாழ்வுக்கு இன்றியமையாதனவாக, அவை யின்மை கொடுமை யாதலின், "வெருளறியாக் கொடுமனத்தேன்" என விளம்புகின்றார். பயனில்லன செய்தல், விழற் கிறைத்தல் எனப்படுகிறது. ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம் பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே" (தோணோக்) என மணிவாசகர் உரைப்பது காண்க. களித்தல், மயங்குதல். தகுநிற்றல் - முற்படுதல். விலக்கு, ஆகா வென விலக்கப்பட்ட குற்றங்கள். தெருள் - அறிவுத் தெளிவு. செய்வனவும் தவிர்வனவும் தேர்ந்து வாழ்வாங்கு வாழ்தற் கமைந்த உலகின்கண் மாறுபட்ட குணம் செயல்களுடன் தான் பிறந்தமைக்கும் காரணம் காண்கின்றமை தோன்ற, "உலகிடை நான் ஏன் பிறந்தேன் நினது திருவுளத்தை அறிந்திலேன்" என முறையிடுகின்றார்.

இதனால், விலக்கியன செய்து கெடும் தமது பிறப்புக்குக் காரணம் எண்ணியவாறும். (7)

3300. தவம்புரியேன் தவம்புரிந்தார் தமைப்போல நடித்துத்
தருக்குகின்றேன் உணர்ச்சியிலாச் சடம்போல இருந்தேன்
பவம்புரிவேன் கமரினிடைப் பால்கவிழ்க்கும் கடையேன்
பயனறியா வஞ்சமனப் பாறைசுமந் துழல்வேன்
அவம்புரிவேன் அறிவறியேன் அன்பறியேன் அன்பால்
ஐயாநின் அடியடைந்தார்க் கணுத்துணையும் உதவேன்
நவம்புரியும் உலகிடைநான் ஏன்பிறந்தேன் நினது
நல்லதிரு உளம் அறியேன் ஞானநடத் திறையே.

உரை: தவம் செய்வதில்லாத யான், தவம் செய்யும் தக்கோர் போல நடித்துத் தருக்குகின்றேன்; உணர்வில்லாத சடப் பொருள் போல இதுகாறும் இருந்தொழிந்தேன்; மேலும் பிறப்புக்கு ஏதுவாவனவற்றையே செய்து நன்கலத்திற் பெய்தற்குரிய பாலை நிலக் கமரின்கண் சொரியும் கடையவனுயினேன்; பயன் படாத வஞ்சம் உறைந்த மனமாகிய கற்பாறையைச் சுமந்து திரிகின்றேன்; இவ்வாறு அவமாவனவற்றைச் செய்யும் யான் அறியத் தகுவ தறிதல் இல்லேன்; ஞானம் பயக்கும் அன்பு நலம் அறியேன்; மெய்யன்பு கொண்டு, ஞான நடம் புரியும் இறை வனுகிய நின் திருவடித் தொண்டர்க்கு அணுவளவும் உதவாதவன்; இத்தகைய யான் நாளும் புதுவது காணும் உலகின்கண் நான் பிறந்த காரணம் அறிகிலேன்; பிறப்பித்த நினது நலமே யுருவாகிய திருவுள்ளக் குறிப்பு யாதோ, தெரியேன். எ.று

தவமாவது, உற்ற துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதும், தீங்கு செய்வன செய்யாதன என்ற வேற்றுமையின்றி ஏனை யுயிர்கட்குத் தீமை செய்யாமையுமாகும். இந்த உயரிய தவத்தைச் செய்யாத யான் தவம் செய்பவர் போல நடித்துப் பெருமிதம் கொண்டு உணர்வில்லாத சடப் பொருள் போலக் கிடந் தொழிந்தேன் என்பார், "தவம் புரிந்தார்தமைப்

போல நடிந்துத் தருக்குகின்றேன் உணர்ச்சியிலாச் சடம் போல இருந் தேன்'' என மொழிகின்ருர். தருக்குதல் - பெருமிதம் கொள்ளுதல். சடம்- அறிவில்லாத பொருள்; தன்மை குறித்தற் கென்றே ''உணர்ச்சி யில்லாச் சடம்'' என வுரைக்கின்ருர். பவம் - பிறப்பு. பல்வகைப் பிறப்புக்கட் கேதுவாகிய வினைகளைச் செய்வேன் என்பார், ''பவம் புரிவேன்'' என்கின்ருர். நன்கலத்திற் பெய்தற்குரிய பாலை நிலத்தில் வெம்மை மிகுதியால் உண்டாகும் வெடிப்பால் ஊற்றுவோர் முழு மூடராவர்; அவரை யொப்ப நல்லறிவில்லாத கீழ்மகன் என்றற்குக் ''கமரினிடைப் பால் கவிழ்க்கும் கடையேன்'' என்று கூறுகின்ருர். நன்பொருளைத் தக்கார்க்கு உதவாத தீயவன் என்பது கருத்து. வஞ்ச நினைவுகளால் உண்டாகும் தீமைகளை நினையாமல் மனத்தின்கண் இடையருமல் கொண்டிருப்பவன் என்பாராய், ''பயனறியா வஞ்ச மனப்பாறை சுமந் துழல்வேன்'' என்று சொல்லுகின்ருர். மனத்தைப் பாறை என்பதால் அதனைத் தாங்கும் தம்மை, ''சுமந்து உழல்வேன்'' என்று கூறுகின்ருர். வஞ்ச நினைவால் உறைப்புண்டு இரக்கப் பசையின்றி யிருப்பது பற்றி, ''மனப் பாறை'' எனல் வேண்டிற்று. அவம் - வீண். அவம் புரிதலாவது பயனில்லாத செயல்களைச் செய்தல். பயனுடைய செயல்களாவன அறிவறிதல், அன்பு செய்தல், அன்பால் அடியார்கட்கு ஆவன வுதவுத லாகும். இவற்றைச் செய்யாமை அவமாதலால், ''அறிவறியேன் அன்பறியேன் அன்பால் ஐயா நின் அடி யடைந்தார்க்கு அணுத் துணை யும் உதவேன்'' என இயம்புகின்ருர். அடி சேர்ந்தார், இறைவன் திருவடியை நினைவிற் கொண்டு நினைந்தொழுகும் சான்ருர். அவர்கட்கு அணுவளவு உதவின் அது மலை யளவாய்ப் பெருகும் எனப் பெரியோர் கூறுவதால் ''அணுத் துணையும் உதவேன்'' என்கின்ருர். ''சிவஞானச் செயலுடையோர் கையில் தானம் திலமளவே செய்திடினும் நில மலை போல் திகழ்ந்து, பவமாயக் கடலின் அழுந்தாத வகை யெடுத்துப் பரபோகம்'' (சிவசித்தி) துய்ப்பிக்கும் எனப் பெரியோர் கூறுவது காண்க. உலகில் வாழ்கின்ற மெய்ஞ்ஞானிகளும் விஞ்ஞானிகளும் அருணெறி யினும் பொருணெறியினும் புதுப் புது உண்மைகளைக் கண்டும் காட்டியும் வருதலின், ''நவம் புரியும் உலகு'' என நவில்கின்ருர். பழைமைச் சேற்றில் அழுந்தி உலகின் நவ நவ வுண்மைகளை எண்ணுமற் கெடுகின்ற யான் பிறந்த காரணம் அறியேன் என்றற்கு, ''நான் ஏன் பிறந்தேன் நினது நல்ல திருவுளம் அறியேன்'' எனப் பரி புலம்புகின்ருர்.

இதனுல் நலம் புரியும் உலகிற் பவம் புரிந்ததேன் என எண்ணிய வாரும். (8)

3301. இறைஅளவும் அறிவொழுக்கத் திச்சையிலேன் நரகில்
இருந்துழன்று வாடுகின்ருர் எல்லார்க்கும் இழிந்தேன்
பொறைஅளவோ நன்மைஎலாம் போக்கில்விட்டுத் தீமை
புரிகின்றேன் எரிகின்ற புதுநெருப்பிற் கொடியேன்
நிறைஅளவோ முறைஅளவோ நிலைஅளவுந் தவிர்ந்த
நெடுஞ்சால நெஞ்சகத்தேன் நீலவிடம் போல்வேன்
சறையளவா உலகிடைநான் ஏன்பிறந்தேன் நினது
கருத்தறியேன் கருணைநடங் காட்டுகின்ற குருவே.

உரை : அருள் நடனம் காட்டி ஞான மருளும் குருபரனுகிய சிவனே, நல்லறிவு நல்லொழுக்கங்களில் சிறிதளவும் விருப்பமில்லாத யான் நரகத்திற் கிடந்து வருந்தும் கீழ்மக்க ளெல்லாரினும் இழிந்தவனுய் பொறுமையை யுள்ளிட்ட நற்பண்புகளனைத்தையும் கைவிட்டகலப் போக்கித் தீமையே புரிகின்றவனுய், ஓங்கி எரிகின்ற புது நெருப்பினும் கொடுமை மிக்கவனுயினேன்; நிறையும் முறையும் நடுநிலையும் இல்லாத மிக்க நெடிய நெஞ்சினைக் கொண்டு கரிய விடம் போல இருக்கின்றேன்; பிறப்பெல்லை காணலாகாத உலகின்கண் நான் பிறந்த காரணம் அறியேன்; பிறப்பித்த திருவுள்ளக் குறிப்பும் தெரிகிலேன். எ.று.

உறுவது கொண்டு இத்தன்மையது இவ்வுலகியல் என அளந்து காண மாட்டாத மாண்புடைய தென்பாராய், "உறை யளவா வுலகு" என உரைக்கின்றார். உறுவது - உறை யென வந்தது. இங்கே பிறந்து வாழ்வோர் அறிவு ஒழுக்கங்கள் நிறைந்தவராயின் நற்பேறு பெறுவர்; யான் அவற்றிற் சிறிதளவும் விருப்பமில்லாதவன் என்பார், "இறை யளவும் அறிவொழுக்கத்து இச்சையிலேன்" எனக் கூறுகின்றார். இவ் வுலகில் வாழ்வாங்கு வாழாதவர் நரக வகைகளில் கீழாம் நரகில் கீழ்மக்களாய்க் கிடந்து வருந்துவர்; யான் அவரினும் கீழ்ப்படுபவன் என்பாராய், "நரகில் இருந்துழன்று வாடுகின்றேர் எல்லார்க்கும் இழிந்தேன்" என இயம்புகின்றார். ஏழ் வகை நரகினும் இருந்து வருந்துவோரை "எல்லார்க்கும்" என்று குறிக்கின்றார். ஒருவர்பாலுள்ள நலம் பலவும் பொறுமை முதலிய பண்புகளை அளவையாகக் கொண்டு அறிஞர் அளந்துரைப்பது பற்றி, "பொறை யளவாம் நல்லன வெலாம்" என்றும், நில்லாத் தன்மையுற்ற உலகியலில் நற்பண்பும் காவாவிடின் போய் விடுதலால் "போக்கில் விட்டு" என்றும், எவ்வுயிரும் நன்றே தீதோ யாதானு மொன்றைச் செய்வதின்றி இருத்தல் உலகியற் பண்பன்மை யால் நல்லவற்றைப் போக்கில் விட்டமையால் "தீமை புரிகின்றேன்" என்றும் உரைக்கின்றார். புது விறகு பெய்து புதிது மூட்டப் பெறும் நெருப்புப் "புது நெருப்பு" எனப்படுகிறது. அது பெரிதுயர்ந்து எரியுமாதலின் வெம்மை மிக்குறுவது விளங்க, "புது நெருப்பிற் கொடியேன்" என்று புகல்கின்றார். நெடிதுயர்ந்த அகலமான நெஞ்சினை, "நெடுஞ்சால நெஞ்சு" எனக் கூறுகின்றார். சாலம் என்று கொண்டு நெடிய மாயம் நிறைந்த நெஞ்சு என்று கூறலுமாம். கரை, எதுகை பற்றிக் கறை யென வந்தது. உலகின்கண் எய்தும் பிறப்புக்கட்கு எல்லையின்மைபற்றிக் "கறை யளவா வுலகு" எனக் கூறுகின்றார்.

இதனுல் உலகிற் பிறப்பெல்லை காணுமை குறித்தவாரும். (9)

3302- காட்டுகின்ற வுவர்க்கடல்போல் கலிகளிலும்செல்வக்
களிப்பினிலும் சிறந்துமிகக் களித்துநிறை கின்றேன்
நீட்டுகின்ற ஆபத்தில் ஒருசிறிதும் உதவேன்
நெடுந்தூரம் ஆழ்ந்துதவாப் படுங்கிணறு போல்வேன்
ஆட்டுகின்ற அருட்பெருமை ஒருசிறிதும் தெரியேன்
அச்சமிலேன் நாணமிலேன் அடக்கம்ஒன்றும் இல்லேன்
கூட்டுகின்ற உலகிடைநான் ஏன்பிறந்தேன் நினது
குறிப்பறியேன் மன்றில்நடங் குலவுகுல மணியே.

உரை : தில்லையம்பலத்தில் ஆடல் புரிகின்ற உயர்ந்த மணி போல் திகழும் சிவபெருமானே, பெருகித் தோன்றுகின்ற உப்பு நீர்க் கடல் போலக் கலைத் துறைகளிலும் செல்வச் சிறப்பிலும் மகிழ்ச்சி நிறைந்துள்ள யான், மிக்குத் தோன்றுகின்ற துன்பத்தில் வருந்து வோர்க்கு ஒருசிறிதும் உதவாமல் மிக நெடிது ஆழ்ந்து நீருதவாத பாழ்ங் கிணறு போன்றவனுய், உயிர்த்தொகைகளே வாழ்விற் செலுத்தி உய்விக்கின்ற திருவருளின் பெருமையைச் சிறிதும் அறியா திருக் கின்றேன்; அறியாமைக்கு அஞ்சுவதோ நாணுவதோ இல்லேன்; அடக்கம் சிறிதும் உடையேனல்லேன்; இவ்வாறு தவருய நெறியிற் சேர்க்கின்ற உலகியலில் நான் பிறந்தது ஏனே? நின்னுடைய திருவுளக் கருத்தை அறிகிலேன். எ.று.

மன்று எனப் பொதுப்பட மொழிதலின், தில்லையம்பலத்துக்காயிற்று. மணி - மாணிக்க மணி. உலகவர் இனிது காண விளங்குவது நிலவுல கைச் சூழ்ந்த உப்பு நீர்க் கடலாதலின், "காட்டுகின்ற உவர்க்கடல்" என்றும், கலைப் பயிற்சியின் மிகுதி புலப்படுத்தற்குக் "கடல் போல்" என வுவமம் செய்தும் உரைக்கின்ருர். கலைப் புலமை விளைவிக்கும் செருக்கி லும், அறிவை மயக்கும் இயல்பு பற்றிச் செல்வ செருக்கிலும் தினைப்பது விளங்க, "கலைகளிலும் செல்வக் களிப்பிலும் சிறந்து மிகக் களித்து நிறை கின்றேன்" எனக் கூறுகின்ருர். களித்தல் - கள்ளுண்டாற் போல் அறிவு மயங்குதல். களித்து நிறைதல் - தெளிவுருத மயக்க முறுதல். சிறிதாகாது பெருகி நிற்கும் இடையூறு, நீட்டுகின்ற ஆபத்து எனப்படுகிறது. ஆபத்தில் உதவுதல் உயிர்க் கடனுதலால், அது செய்யாமையை "ஆபத் தில் ஒரு சிறிதும் உதவேன்" என எடுத்தோதுகின்ருர். படுங்கிணறு - கேடு செய்யும் பாழ்க் கிணறு. உலகிற் பிறந்தாரை வாழ்விப்பது திருவருளின் பெருஞ் செயல் என்பதனுல், "ஆட்டுகின்ற அருட் பெருமை" என்றும், அதனே எண்ணி வாழ்த்துவது அறமாகவும், அதனேச் செய்யாத குற்றத்தை "அருட் பெருமை ஒருசிறிதும் தெரியேன்" எனச் செப்புகின்ருர். திருவருள் நலமறியாமை குற்றமாதலின், "அச்சமிலேன் நாணமிலேன்" எனவும், அடக்க மின்மை இருள் நிறைந்த நரகிற் புகுத்து மென்பது பற்றி, "அடக்க மொன்று மில்லேன்" எனவும் இயம்புகின்ருர். அறிவறியாதவரைத் தவருய நெறியிற் செலுத்தித் துன்பத்தி லாழ்த்துவது உலக நடையின் செயலாதலால், "கூட்டுகின்ற உலகு" என்று கூறு கின்ருர்.

இதனுல் உலகியலின் தீமையை உரைத்தவாரும். (10)

திருச்சிற்றம்பலம்

5. மாயை வலிக்கு அழுங்கல்

அஃதாவது, மாயா காரியமாகிய உலகியல் நல்கும் மயக்கத்தில் அழுந்தி நீங்க மாட்டாதவாறு பிணிக்கும் அதன் வன்மை நீங்கி வருந்தித் திருவருள் துணையை நாடுவது. "செலவிடை யழுங்கல் செல்லாமையன்" (தொல். பொ) ருவது போல மாயை வலிக்கு அழுங்கல் வலிக் கஞ்சி அடங்காமல் திருவருளால் வென்று மேம்படலாகும். இதன்கண், மாய வுலகின் வலிமையும் ஆகம ஞானம் பெற மாட்டாமை யும் எடுத்தோதி அருள் ஞானப் பேற்றுக்கு வாயிலாகும் நற்பண்பும், உருகும் நெஞ்சும், மெய்ப்பொருள் நாட்டமும் பிறவும் தந்தருள்க என முறையிடுகின்றார்.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3303. தாவு மான்எனக் குதித்துக்கொண் டோடித்
தைய லார்முலைத் தடம்படுங் கடையேன்
கூவு காக்கைக்குச் சோற்றில்ஓர் பொருக்கும்
கொடுக்க நேர்ந்திடாக் கொடியரில் கொடியேன்
ஓவு றுதுழல் ஈனப் பலகால்
ஓடி ஓடியே தேடுறும் தொழிலேன்
சாவு றுவகைக் கென்செயக் கடவேன்
தந்தை யேஎனைத் தாங்கிக்கொண் டருளே.

உரை : அருளுருக் கொண்ட தந்தையாகிய சிவபெருமானே, தாவி யோடும் இயல்பினையுடைய மான் போலத் துள்ளிச் சென்று மகளிர் பெரிய முலை மார்பிற் கிடந்து மகிழும் கடையவனாகிய யான், கரைகின்ற காக்கைக்கு ஒரு சோறும் போட விரும்பாத கொடுமையாளரினும் மிக்க கொடியனாவேன்; இடைவிடாது பறந்து திரியும் ஈக்களைப் போலப் பல காலும் பலவிடத்தும் பொருள் நாடி யலையும் தொழிலையே யுடையனாகின் றேன்; இதனையே செய்து சாகின்ற எனக்கு அதனினின்று உய்தற் பொருட்டு யாது செய்ய வல்லேன்; என்னைத் தாங்கி யருள்க. எ.று.

பிறந்து வளர்ந்து பிள்ளைப் பருவம் கடந்த வுடன் உலகியலுண வுண்டு வளர்ந்த வுடம்பு வேறு உடம்பு படைக்கும் காம விச்சைக்கு இரையாகிக் கருவி கரணங்கள் யாவும் அதுவே யுருவாகி முடுகுதலின், "தாவும் மான் எனக் குதித்துக் கொண்டு ஓடித் தையலார் முலைத்தடம் படும் கடையேன்" எனக் கூறுகின்றார். காம வேகத்தால் துள்ளி யோடும் இளமை மனத்தைக் கருத்திற் கொண்டு, "தாவும் மான் என"க் குறிக் கின்றார். எப்போதும் மேனி யொப்பனையிற் கண்ணும் கருத்துமா யிருத்தல் பற்றி, இளமகளிரைத் "தையலார்" என்பர். காமக் கிளர்ச்சிக்கு ஏது வாதல் பற்றி, மகளிர் மார்பை, "முலைத் தடம்" என மொழிகின்றார்.

அதுவே பொருளாகக் கருதி அறிவிழந்து அலமருவோர் கீழ்மை யெய்து தலால் "கடையேன்" எனக் கூறுகின்றார். கூவும் காக்கை என மொழி யினும் கரையும் காக்கை என்பது கருத்தாகக் கொள்க. ''காக்கை கரவா கரைந்துண்ணும்'' (குறள்) எனச் சான்றோர் வழங்குத லறிக. பொருக்கி எடுக்கப் படுவதால் ஒரு சோறு பொருக்கு எனப்பட்டது. ஒரு தனிச் சோற்றைப் பருக்கை என்பதும் வழக்கு. தன்னல மிகுதிக் கடும்பற் றுள்ளம் கொண்டு இறுகிய மனத்தராய் யாவையும் எத் துணையும் ஈயும் மனமில்லாக் கொடுமையை விளக்குதற்கு ''ஒரு பொருக்கும் கொடுக்க நேர்ந்திடாக் கொடியர்'' என்று கூறுகின்றார். நேர்தல் - இசைதல். படிமையின்றித் தனக்குரிய இரை வேண்டி எப் போதும் எவ்விடத்தும் பறந்து அலைவது ஈக் கியல்பு. இழிந்த பொருளையே நாடும் குறிப்புத் தோன்ற ''ஈ யென'' என்கின்றார். உயர் பொருளை நாடாமல் கீழ்மை யுறுவிகளும் பொருள் தேடி இடையறாது உழைக்கும் பான்மை விளங்க, ''பலகால் ஓடி யோடியே தேடறும் தொழிலேன்'' என்று சொல்லுகின்றார். இத் தொழில் உலகிற் செத்துச் செத்துப் பிறப் பதற்கே ஏதுவாவது புலப்பட, ''சாவுறு வகைக்கு என்செயக் கடவேன்'' என வுரைக்கின்றார். பிறப்பது பிறவாப் பெருநிலை எய்துதற் பொருட் டன்றி மீள மீளப் பிறப்பதற் கன்று என்பது குறிப்பு.

இதனால், மகளிர் முலைத் தடம் படிந்தும் பொருள் தேடியும் வீணே சாகப் பண்ணுகிறது உலகிய லென உணர்த்தியவாறும். (1)

3304. போக மாதியை விழைந்தனன் வீணில்
பொழுது போக்கிடும் இழுதையேன் அழியாத்
தேக மாதியைப் பெறமுயன் றறியேன்
சிரங்கு நெஞ்சகக் குரங்கொடும் உழல்வேன்
காக மாதிகள் அருந்தஓர் பொருக்கும்
காட்ட நேர்ந்திடாக் கடையரில் கடையேன்
ஆக மாதிசொல் அறிவறி வேனே
அப்ப னேஎனை ஆண்டுகொண் டருளே.

உரை : மண் பெண் முதலிய போகப் பொருள்களை விரும்பி வீணே காலம் கழிக்கும் கீழ்மகனுகிய யான், அழியா வுடம்பாற் பெறும் ஞான வின்பங்களைப் பெறற்கு முயன்றேனில்லை; புண்பட்ட நெஞ்சமாகிய குரங் கொடு திரிந்துகெடுகிறேன்; காக்கை முதலிய பறவை யினம் உண்டொழி தற்கு ஒரு பருக்கைச் சோறும் ஈயக் கருதாத கீழ் மக்களிற் கீழாயினேன்; இத்தகைய யான் சிவாகமங்கள் எடுத்தோதும் மெய்யறிவை அறிவேனே? எனக்கு அப்பனுகிய சிவபெருமானே, அறிந்து உய்யுமாறு என்னை ஆண்டு அருள் ஞானம் வழங்குக. எ.று.

உலகியல் நல்கும் மயக்கமுற்று மண்ணாலும் பெண்ணாலும் பொரு ளாலும் நுகரப்படும் போகங்களை விரும்பி ஆராமை கொண்டு வீண் காலம் போக்கும் கீழ் மகன் எனத் தம் மியல்பு கூறுவாராய், ''போக மாதியை விழைந்தனன் வீணில் பொழுது போக்கிடும் இழுதையேன்'' எனப் புகல் கின்றார். போகமும் அதனை நுகர்தற்கேற்ற உடம்பும், நுகர்ச்சிக்குரிய நினைவு செயல்களை நல்கும் கருவி கரணங்களும் அடங்க, ''போக மாதி''

என்று கூறுகின்றார். ஆதி, முதலியன என்னும் பொருள்பட வரும் வட சொல். விழைந்தனன் - முற்றெச்சம். உலகிற் போகங்கள் உலகின்பால் பெரு மோகத்தை நல்குதலின், ''வீணிற் பொழுது போக்கிடும் இழுதை யேன்'' என்கின்றார். இழுதை - சிறிதிற்குக் குழைந்து வலி யிழக்கும் தன்மை; சிறு வெம்மைக் குருகும் வெண்ணெயும் மெழுகும் போல. மனத் திண்மையும் அதனல் விளைத்திண்மையும் இல்லாத கீழ் மக்களை இழுதை மாக்கள் என்பது நூல் மரபு. அதனல் ''இழுதையேன்'' என்கிறார். ''உழுத சால் வழியே யுழுவான் பொருட்டு, இழுதை நெஞ்சமி தென்படு கின்றதே'' (தனிக்) எனத் திருநாவுக்கரசர் வழங்குவது காண்க. ஞான வான்கள்பெறும் பிறவா யாக்கையை ''அழியாத் தேகம்'' எனச் சிறப்பிக் கின்றார். அத்தேகத்தோடு கூடிப் பெறும் நலங்களை ''ஆதி'' என்பதனாற் பெறுவிக்கின்றார். அழியும் வாழ்வு பெற்றது அழியா வாழ்வு பெறற் கென வுணர்ந்து அதற்காக முயலாமை பற்றி, ''முயன்றறியேன்'' என மொழி கின்றார். சிரங்கு - புண். நெஞ்சமாகிய புண்ணுற்ற குரங்கு அமைதியின்றி அலமந்து உழல்வது போல மனநோயுற்றுப் பேதுறுகின்றேன் என்பாராய், ''சிரங்கு நெஞ்சகக் குரங்கொடும் உழல்வேன்'' என வுரைக்கின்றார். காக்கைக்கு ஒரு சோறும் உதிர்க்க விரும்பாத மனப்பான்மை கயவர்க் குண்மையின், ''காக மாதிகள் அருந்த வோர் பொருக்கும் காட்ட நேர்ந் திடாக் கடையிரிற் கடையேன்'' எனக் கூறுகின்றார். ''ஈர்ங்கை விதிரார் கயவர்'' (குறள்) எனச் சான்றோர் உரைப்ப தறிக. ஆகம மாதி என்பது ஆகமாதி என வந்தது. சிவ ஞானமும் அதனைப் பெறும் திறமும் பயனும் அறிவுறுத்துதலின், ''ஆகமாதி சொல் அறிவு'' என இயம்புகின்றார்.

இதனல், ஆகம ஞானப் பேற்றுக்கு முயல மாட்டாமை தெரிவித்த வாரும். (2)

3305. விழியைத் தூர்க்கின்ற வஞ்சரை விழைந்தேன்
விருந்தி லேஉண வருந்திஓர் வயிற்றுக்
குழியைத் தூர்க்கின்ற கொடியரில் கொடியேன்
கோப வெய்யனேன் பாபமே பயின்றேன்
வழியைத் தூர்ப்பவர்க் குளவுரைத் திடுவேன்
மாய மேபுரி பேயரில் பெரியேன்
பழியைத் தூர்ப்பதற் கென்செயக் கடவேன்
பரம னேஎனைப் பரிந்துகொண் டருளே.

உரை : நல்லது காணும் அறிவுக் கண்ணை மறைக்கும் வஞ்சகர் கூட்டத்தை விரும்பியும், விருந்துணவை நிரம்ப வுண்டு, புல்லிய வயிறுகிய குழியை யடைக்கின்ற கொடியவருள் மிகவும் கொடியவனு யினேன்; கோபத்தையே விருப்புடன் கொண்டு பாவச் செயல்களையே செய் தொழிந்தேன்; நல்லிவயை மாற்றிக் கெடுப்பவர்க்கு உளவு சொல்லித் தந்தேன்; மாயச் செயல்களைப் புரியும் பேயர் கூட்டத்திற்குப் பெரியவனுய்ப் பிறங்கினேன்; இவ்வாற்றுல் பெரிய பழிக்கு ஆளாகிய யான் அதனைப் போக்குதற்கு யாது செய்வேன்; மேலோனுகிய சிவ பெருமானே, என்னை அன்பால் ஏற்று உய்தி தந்தருள்க. எ.று.

விழி - கண்; ஈண்டு அறிவுக் கண்ணைக் குறிக்கின்றது. நல்லறிவை மறைத்தாலன்றி வஞ்ச மறியாமல் வஞ்சகரோடு இணங்குதல் கூடாதாகலின், ''விழியைத் தூர்க்கின்ற வஞ்சரை விழைந்தேன்'' எனக் கூறுகின்றார். விருந்துணவு புதிய புதிய சுவைப் பொருள்களையுடைய தாகலின், மிக்க விருப்புடன் வயிறு நிறைய மிகைபட வுண்டமை புலப் பட, ''விருந்திகே யுணவருந்தி ஓர் வயிற்றுக் குழியைத் தூர்க்கின்ற கொடியர்'' என்று இயம்புகின்றார். விருந்து - புதுமை. புதியருடன் புதிய புதிய சுவைப் பொருள்களை யுண்பது விருந்தென வழங்கும். ஓர் என்றது, வயிற்றது புன்மை சுட்டி நின்றது. தூர்த்தல் - பள்ளத்தை மண் கொட்டி யடைப்பது. பள்ளத்தைத் தூர்ப்பது போல வயிற்றை யுண்பொருளைப் பெய்து அடைத்தேன் என்றற்கு ''வயிற்றுக் குழியைத் தூர்க்கின்ற கொடியரிற் கொடியேன்'' என உரைக்கின்றார். மீதூண் கொள்ளுதல் உணவு நெறிக்கு மாறுதலால், பெரிதுண்பவரைக் ''கொடியர்'' எனக் குறிக்கின்றார். நெறி கோடுபவர் - கொடியர். வெய்யன் - விரும்புவன்; வேண்டற் பொருளதாகிய வெம்மை யடியாக வருவது வெய்யன் என்னும் சொல். ''வெய்யை போல முயங்குதி'' (நம். 260) எனச் சான்றோர் வழங்குதல் காண்க. பாபம் - தீவினை. பலரும் இனிது செல்லும் கமைந்த நல்ல வழியைக் கெடுத்தலும் அடைத்தலும் தீதாக, அதனைச் செய் வோர்க்கு உளவு சொல்லி யூக்குதல் கொடும் பாவமாதல் விளங்க, 'வழியைத் தூர்பவர்க்கு உளவு உரைத்திடுவேன்'' என்று கூறுகின்றார். உளவு - உபாயம். பொய்யும் வழுவும் வஞ்சனையும் மாயச் செய்கைகளா தலால் ''மாயமே புரி பேயரிற் பெரியேன்'' என்கின்றார். பேயர் - பேய்த் தன்மை யுடையவர். இத் தீக்குணங்களால் பழியே விளைதல் கண்டு அஞ்சுகின்றமை புலப்பட, ''பழியைத் தூர்ப்பதற்கு என் செயக் கடவேன்' என்று வருந்தி, என் பிழை பொறுத்து அன்பால் ஆண்டருளுக என வேண்டுகின்றாராகலின், ''எனைப் பரிந்து கொண்டருள்'' என முறையிடு கின்றார்.

இதனால், உற்ற பழி போக்கி அன்பு செய்தருள்க என வேண்டிய வாறும்.

3306. மதத்தி லேஅபி மானங்கொண் டுழல்வேன்
வாட்ட மேசெயும் கூட்டத்தில் பயில்வேன்
இதத்தி லேஒரு வார்த்தையும் புகலேன்
ஈயும் மொய்த்திடற் கிசைவுரு துண்பேன்
குதத்தி லேஇழி மலத்தினுங் கடையேன்
கோடை வெய்யலின் கொடுமையிற் கொடியேன்
சிதத்தி லேஉறற் கென்செயக் கடவேன்
தெய்வ மேஎனைச் சேர்த்துக்கொண் டருளே.

உரை : தெய்வமாகிய சிவபெருமானே, சமயக் கொள்கையிலே பெரும் பற்றுவைத்து அலைகின்ற யான், பிறர்க்கு வருத்தம் செய்யும் கூட்டத்திற் சேர்ந்துறைகின்றேன்; நயம்பட ஒரு சொல்லும் கூறுவதில் லேன்; உண்ணும் உணவில் ஒரு சிறிது ஈயிருந்துண்டற்கும் பொறுக்க மாட்டேன்; மலவாய் வழியொழுகும் மலத்தினும் கடைப்பட்டவன்;

கோடைக் காலத்து வெயிலினும் கொடுமை மிகவும் உடையவன்; இத்தகைய யான் நினது சித்தத்தில் இடம் பெறுதற்கு யாது செய்வேன்; என்னை நினது அருட் பெருக்கிற் சேர்த்தருள்க. எ-று.

மதம் - ஈண்டுச் சமயத்தின் மேனின்றது. சமயவுணர்வு ஒழுக்கங் களிற் பற்றுடையவராவது சமுதாயத்துக்கு நலம் புரிவது என்றும், பற்று வெறியாக மாறி மக்களை இரக்கமில்லாத அரக்கராக்குவ துண்டு. உலக நாடுகளின் பழமையான வரலாறுகள் பலவும் மத வெறி தோன்றி போரும் பூசலும் எழுப்பி உயிர்ச் சூறையாடிய செய்திகளை எடுத்துரைப் பது காணலாம். நம் நாட்டு வரலாறும் அதற்கு விலக்கல்ல. நல்லறிஞர் மதவெறியின் தீமை கண்டு அதனைக் கடிந்துரைத்தனர்; உரைக் கின்றனர். விலக்குண்ட மதவெறியை நான் மேற்கொண்டொழுகினே னென்பார், "மதத்திலே அபிமானம் கொண்டு உழல்வேன்" என்று கூறுகின்றார். மதாபிமானம் ஈண்டு மதவெறி குறித்ததென வறிக. அபிமானம் - கடும் பற்றுமாம். தம்முடைய சொல்லாலும் செயலாலும் பிறர்க்குத் துன்பம் செய்வோர் கூட்டமும் ஆங்காங் கிருந்து ஆட்களைச் சேர்த்துக்கொண்டு அலைப்ப துண்டாதலால், "வாட்டமே செயும் கூட்டத் திற் பயில்வேன்" என வுரைக்கின்றார். வாட்டம் விளைவிக்கும் துன்பத்தை வாட்டம் எனக் குறிக்கின்றார். இன்மொழியும் இன்செயலும் இதமெனவும், அல்லன அகிதமெனவும் வழங்குதலின், அகிதம் புரிந் தொழுகும் செயலுடைமை காட்டற்கு "இதத்திலே ஒரு வார்த்தையும் புகலேன்" என்கின்றார். நோய் விளைவிக்கும் ஈக்கள் மொய்க்காவண்ணம் காத்துண்பது நன்றென்னும் கருத்தின்றி, ஈ மொய்த் துன்பதால் தாமுண்ணும் உணவளவு குறைகிறதென எண்ணும் கருத்துடையேன், எனத் தமது கடும் பற்றுள்ளம் விளங்க, "ஈயும் மொய்த்திடற்கு இசை வுருது உண்பேன்" என்று உரைக்கின்றார். குதம் - மலவாய்; எருவாய் என்றலு முண்டு. மலம் விலக்குண்ட இழிபொருளாதலின், "மலத்தினும் கடையேன்" எனக் கூறுகின்றார். கோடை வெய்யல் - முதுவேனிற் காலத்துக் கடும் வெயில். தன்கண் போந்த உயிர்களைத் தன் வெம்மை யாற் பொசுக்கி வருத்தலும், உயிரில் பொருள்களைக் காய்ந்து பொடி யாக்குதலும் செய்தலால், "கோடை வெய்யலின் கொடுமையிற் கொடி யேன்" எனக் கூறுகின்றார். இவ்வாறு ஆகாப் பண்புடைய யான், அருளின்பக் கடலாகிய உன் திருவுள்ளத்தில் இடம் பெற்று உய்தி சேர்தற்கு ஏது இல்லாமையால் நீயே அருள்கூர்ந்து என்னைத் சேர்த்தருள வேண்டும் என்பாராய், "தெய்வமே எனைச் சேர்த்துக் கொண்டருளே" என இயம்புகின்றார். சித்தம் - சிதம் எனவந்தது.

இதனால், நலவினையாற் சேரமாட்டாத தம்மை அருள் கொண்டு சேர்த்தருள விண்ணப்பித்தவாறும். (4)

3307. கொடிய வெம்புலிக் குணத்தினேன் உதவாக்
கூவம் நேர்ந்துளேன் பாவமே பயின்றேன்
கடிய நெஞ்சினேன் குங்குமம் சுமந்த
கழுதை யேன்அவப் பொழுதையே கழிப்பேன்

விடியு முன்னரே எழுந்திடா துறங்கும்
வேட னேன்முழு மூடரில் பெரியேன்
அடிய னுவதற் கென்செயக் கடவேன்
அப்ப னேஎனை ஆண்டுகொண் டருளே.

உரை : கொடுமைப் பண்பையுடைய வெவ்விய புலியின் குணங்களையுடைய யான், பயனில்லாத கிணற்றைப் போன்று பாவ வினையே செய்துள்ளேன்; கடுமைமிக்க நெஞ்சம் கொண்டு குங்குமம் சுமந்த கழுதையாய் வீண் பொழுது கழிக்கின்றேன்; விடியு முன் எழுந் திராது உறங்கும் செயலுடையேன்; முழுத்த மூடர்களில் பெரிய மூடனுயினேன்; அப்பனே, நினக்கு அடிய னுவதற்கு விழைகின்றேனு தலால் என்னை ஆண்டருள்க. எ.று.

பசிவெம்மை பொருது கண்டவுயிரைக் கொல்லும் நன்றியுணர் வின்மையும் புலியின் குணங்களாதலின், "கொடிய வெம்புலிக் குணத் தினேன்" எனவுரைக்கின்றார். உதவாக் கூவம் - நீரின்மையாற் பயன் படாத கிணற்றை "உதவாக் கூவம்" என்று குறிக்கின்றார். பாவம் - பாவச் செய்கைகள். கடிய நெஞ்சம் - இரக்கமில்லாத கடுமை மிகுந்த நெஞ்சம். குங்குமப் பொதி சுமக்கும் கழுதை அக்குங்குமத்தால் நிறம் வேறுபடுவதன்றி உருவும் செய்கையும் மாறுமை போலச் சிவக்கோலம் பூண்டு அதற்குரிய சீலமும் செறிவும் அறிவுமின்றி நாளை வீண்போக்கு கின்றேன் என்பாராய், "குங்குமம் சுமந்த கழுதையேன் அவப் பொழுதையே கழிப்பேன்" என வுரைக்கின்றார். "கழுதை குங்குமம் தான் சுமந்தெய்த்தாற் கைப்பர் பாழ்புக மற்றது போலப் பழுது நான் உழன்றுள் தடுமாறிப் படுசுழித் தலைப்பட்டனன் எந்தாய்" (இடைமருது) என நம்பியாரூரர் பாடுவது காண்க. கழுதை போன்று தளர்ந்தேன் எனற்பாலது "கழுதையேன்" என வந்து, எச்சக் குறிப்பு வினையாய்க் கழிப்பே வென்ற வினையொடு முடிந்தது. அவப் பொழுது - வீண் பொழுது. பொழுது விடியுமுன் னெழுங்கால் சிந்தையில் தெளிவும், அறிவிற் கூர்மையும், உடலில் செயலாற்றும் வன்மையும் சிறத்தலின், விடிகாலையெழுவதை வற்புறுத்துவர் சான்றோர். இருளிரவில் வேட்டம் புரிவோன் விடியலில் எழானுகலின், "விடியுமுன்னரே எழுந்திடா துறங்கும் வேடனேன்" என விளம்புகிறார். விடியலில் ஏழாமை மனத்தில் மயக்கமும் மெய்யிற் சோம்பலுமுற்று செய்வது விளங்காத மூடத்தன்மை படிதலால் "முழு மூடரிற் பெரியேன்" என்று மொழிகின்றார். அடியராயினர் சீலமும் செறிவு முதலாய குணஞ் செயலுடையராதலால் அவையில்லாத யான் என்செய்வேன் என வருந்துதல் விளங்க, "அடியனுவதற் கென்செயக் கடவேன்" என முறையிடுகின்றார். "நித்தலும் எம்பிரானுடைய கோயிற்புக்குப் புலர்வதன் முன்னலகிட்டு மெழுக்குமிட்டு பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித் தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி" (ஆரூர்) வழிபடுவது அடியாரது அழகிய பணி யென்று ஆன்றோர் அறிவிப்பது காண்க.

இதனுல் அடியனும் விருப்புப் புலப்படுத்தவாறும். (5)

3303. தூங்கு கின்றதே சுகம்என அறிந்தேன்
சோற தேபெறும் பேறதென் றுணர்ந்தேன்
ஏங்கு கின்றதே தொழிலெனப் பிடித்தேன்
இரக்கின் றோர்களே என்னினும் அவர்பால்
வாங்கு கின்றதே பொருள்என வலித்தேன்
வஞ்ச நெஞ்சிலுல் பஞ்செனப் பறந்தேன்
ஓங்கு கின்றதற் கென்செயக் கடவேன்
உடைய வாஎனை உவந்துகொண் டருளே.

உரை : எல்லாம் உடைய பெருமானே, படுத்து உறங்குவதுதான் சுகவாழ்வு என்றும், உண்ணும் சோற்றினும் வாழ்விற் பெறலாகும் பெரியபேறு வேறில்லையென்றும் எண்ணினேன்; வேண்டுவன நினைந்து ஏங்குவதுதான் மாந்தர் தொழில் என்ப துணர்ந்தேன்; வீடு தோறும் சென்று இரப்பவரிடத்தும் ஒன்று வாங்குவது பொருளீட்டும் செயல் என்று மனத்தில் வன்மையாகக் கொண்டேன்; மனத்தால் வஞ்ச, நினைவுற்றுப் பஞ்சு போற் பறக்கலுற்றேன்; இப்பண்புடைய யான் திருவருளால் ஓங்குதற்கு யாதுசெய்ய வல்லேன்; என்னை உவப்புடன் ஆண்டருள்க. எ.று.

உழைக்கும் உடற்கும் உள்ளத்துக்கும் உறக்கம் உறுதியும் இன்பமும் தரும் இயல்பினதாகலின், சுகம் நுகர்ந்த நயப்பால் "தூங்குகின்றதே சுகம் என அறிந்தேன்" என்றும், மனமொழி மெய்களால் செய்யப்படும் தொழிலும் உழைப்பும் முடிவில் உண்ணும் சோற்றிலே சென்றடங்குவது தெரிதல் பற்றி, "சோறதே பெரும் பேற தென்றுணர்ந்தேன்" என்று இயம்புகின்றார். மக்கள் நினைவெல்லாம் வேண்டுவன பற்றி நிற்பினும், நினையுமிடத்து வேண்டுமளவு எய்தாமையும் இடையில் உளவாகும் இடையூறுகளையும் எண்ணியெண்ணிப் புண்ணுறுவது தொழிலதிபர் தொழிலாளர் முதலியோர் செயலாக இருத்தலால், "ஏங்குகின்றதே தொழில் எனப் பிடித்தேன்" எனக் கூறுகின்றார். பிடித்தல் - உறுதியாக வுணர்தல்; "கண்டுபிடித்தேன்" என்பது போல. வேறுவழியால் மாட்டாமைபற்றி இரத்தற்றொழிலை மேற் கொண்டவர் இரக்கின்றோராவர் இரத்தல் பொருள் நோக்கியதாகவும், இச்சகம் பேசியும் அச்சுறுத்தியும் பெறுவது பொருளாகக் காணப்படுதலால் "இரக்கின்றோர்களே என்னினும் அவர்பால் வாங்குகின்றதே பொருளென வலித்தேன்" என வுரைக்கின்றார். பொருளீட்டும் நெறியில் கடையாயது இரத்தலாதலின், "இரக்கின்றோர்களே என்னினும்" எனவும், அவர்கட் கீதல் அறமாகவும், அவர்பால் ஒன்று வாங்குவது தீது என்பது புலப்பட, "வாங்குகின்றதே பொருள் என வலித்தேன்" எனவும் இயம்புகின்றார். வலித்தல் - நாணம் தடுப்பினும் பொருள் வேட்கை மேனின்று வற்புறுத்தல். வேட்கை மிக்க நெஞ்சம் யாவரையும் வஞ்சித் தொழுகுவதிலே செலுத்தி அலைப்பது கொண்டு "வஞ்ச நெஞ்சிலுல் பஞ்செனப் பறந்தேன்" என்று கூறுகின்றார். இத்தகைய கீழ்மையுணர்வுகளாலும் செயலாலும் கீழ்ப் படும் யான் திருவருளால் உய்ந்து உயர்வு பெறும் திறமில்லேன் என்பாராய், "ஓங்குகின்றதற்கு என்செயக் கடவேன்" என்று மொழி கின்றார்.

இதனால், அருள் ஞானத்தால் ஓங்குதற்கு என்னை யுவந்தருள்க என வேண்டியவாறும்.

3309. வருத்த நேர்பெரும் பாரமே சுமந்து
வாடும் ஓர்பொதி மாடென உழன்றேன்
பருத்த ஊனுடை மலம்உணத் திரியும்
பன்றி போன்றுளேன் நன்றியொன் றறியேன்
கருத்தி லாதயல் குரைத்தலுப் படைந்த
கடைய நாயினிற் கடையனேன் அருட்குப்
பொருத்தன் ஆவதற் கென்செயக் கடவேன்
புண்ணி யாஎனைப் புரிந்துகொண் டருளே.

உரை : புண்ணியப் பொருளாகிய சிவபெருமானே, வருத்துதற் கமைந்தது போன்ற பெரிய பாரத்தைச் சுமந்து தளரும் பொதி மாடு போல அலைந்தயர்ந்தேன்; பருத்த வுடம்புடன் மலத்தை நாடி யலையும் பன்றி போல இழிவு நாடி மெலிகின்றேனே யன்றி நலம் தருவ தொன்றையும் எண்ணுகின்றேனில்லை; காரணமின்றியே அயல் நாயைக் கண்டு வெறிதே குரைத்து மெலியும் கடையான நாயினும் கடையவனாகிய நான் நினது திருவருட் பேற்றுக்கு உரியவனாதற்கு யாது செய்வேன்; என்பால் அன்பு கொண்டு ஆண்டருள்க. எ.று.

வருத்த வேண்டுமென்று எண்ணியே ஏற்றப் பட்டது போன்ற பெரும் பாரம் என்றற்கு "வருத்த நேர் பெரும் பாரம்" என்றும், ஏற்றியதைச் சுமந்து செல்வதையன்றி வேறு செய்ய மாட்டாத பொதி மாடு போன்று உடல், வாழ்க்கையாகிய பெரும் பாரத்தைச் சுமந்து மாற்ற மாட்டாமையால் வருந்துகின்றேன் என்ற கருத்துப்பட, "பெரும் பாரம் சுமந்து வாடும் ஓர் பொதி மாடு என உழன்றேன்" எனப் புகல்கின்றார். பெரும் பாரம் - தாங்குதற் கரிய சுமை. பொதி மாடு - கனத்த மூட்டைகளைச் சுமக்கும் எருதுகள். செவ்விய சாலைகளில்லாத பண்டை நாளில் வணிகர்கள் விலைப் பொருள்களைப் பைகளிற் பொதிந்து கட்டி எருதுகளின் மேல் ஏற்றிச் சென்றமையின், அவற்றைப் பொதி மாடு எனப் பெயர் குறித்தனர். பண்டம் பொதிந்த மூடை - பொதியாம். ஊனுற் பருத்த உடம்பு கொண்டு மக்கள் கழித்த மல முண்பது பன்றியாகலின், "பருத்த வூனுடை மலமுணத் திரியும் பன்றி" எனக் கூறுகின்றார். இழி செயல் புரிந்து உடலோம்பும் திறமுடையனா யுள்ளேன் எனத் தம்மைப் பழித்தற்கு இப் பன்றியை உவமம் செய்கின்றார். வேறொரு நாயைக் காணின் தன்னினம் எனக் கருதிப் பேணுதலின்றிக் கண்ட வுடனே காய்ந்து நெடிது குரைத்துச் சோர்வது விளங்க, "கருத்து அயல் குரைத்து அலுப்படைந்த கடைய நாய்" என வுரைக்கின்றார். அலுப்பு - சோர்வு. கடைய நாய் - கீழான பண்பை யுடைய நாய். இவ்வுவமம் அழுக்காறும் பொறுமையும் உற்று வாழ்வைப் பாழ்படுத்தும் தீப்பண்புகளைக் குறித்து வந்தது.

இதனால், அருட் பேற்றுக்கு மாறுய பண்பும் செயலும் போக்கி நற் பண்பு நிலவ அருள் செய்க என வேண்டியவாறும். (7)

3310. துருக்க லோகொடுங் கருங்கலோ வயிரச்
சூழ்க லோஎனக் காழ்கொளும் மனத்தேன்
தருக்கல் ஆணவக் கருக்கலோ டுழல்வேன்
சந்தை நாயெனப் பந்தமுற் றலைவேன்
திருக்கெ லாம்பெறு வெருக்கெனப் புகுவேன்
தீய னேன்பெரும் பேயனேன் உளந்தான்
உருக்கல் ஆகுதற் கென்செயக் கடவேன்
உடைய வாஎனை உவந்துகொண் டருளே.

உரை : எல்லாம் உடைய பெருமானே, துருக்கல்லோ, திண்மை யாற் கொடிய கருங்கல்லோ, வன்மை மிக்க வயிரக் கல்லோ என்று சொல்லும்படியாகக் காழ்ப்பு மிக்க மனத்தை யுடையவனுகிய யான், செருக்கை நல்கும் ஆணவமாகிய இருட்டில் உலவுகின்றேன்; சந்தைக் கடைத் தெருவில் திரியும் நாய் போலப் பாசத்தால் ஈர்ப்புண்டு அலை கிறேன்; நெருக்கடியான முடுக்குகளில் நுழைந்தோடும் பூனை போல் உழலுகின்ற என் மனம் உருகும் தன்மை யுடையதாதற்கு யான் யாது செய்வேன்; என்னை விரும்பி யாண்டு அருளுக. எ.று.

துருக்கல்- கல் வகையுள் ஒன்றாகிய செம்புறைக்கல்; செம்மை நிறமும் வன்மையுமுடையது. கருங்கல் - கருநீல நிறமும் திண்மைச் செறிவும் உடைத்தற் கருமையும் உடைய கல் வகை. திட்பமும் கனமும் கொண்ட தாகலின், "கொடுங் கருங்கல்" எனப்படுகிறது. காழ்ப்பு மிக்க கருங்கல்லை "வயிரக் கல்" என்று கூறுகின்றார். வயிரம் - வன்மை குறித்தது. மனத் தின் வன்மையும் திண்மையும் கொடுமையும் விளக்குதற்கு இக்கல் வகை களை உவமம் செய்கின்றார். மனத்தைச் சுருக்கி அறியாமை யிருளிற் செலுத்தித் தீமைக் குள்ளாக்குதலால் செருக்கினைத் "தருக்க லாணவக் கருக்கல்" என வுரைக்கின்றார். தருக்கல் - தருக்கு எனவும் வழங்கும்; தருக்கல்-செருக்கு, பெருமிதமுமாம். உயிரறிவை விரிவு படுத்தாமற் சுருக்கி அணுத் தன்மைப் படுத்துவதால் மல விருளை "ஆணவக் கருக்கல்" எனக் குறிக்கின்றார். கருக்கல் - மிக்க இருள் செறிந்த இரவுப் போது. கருக்கலில் இயங்குவோர் மேடு பள்ள மறியாமல் இடர்ப்பட்டுத் துன்புறு வது போல வாழ்வில் நலம் தீது காண மாட்டாமல் தகாதன செய்து துன்புறுகின்றமை புலப்படுத்த "ஆணவக் கருக்கலோடு உழல்வேன்" என மொழிகின்றார். பொருள் விற்பனை செய்வோரும் வாங்குவோருமாய்ப் பலர் கூடுமிடம் சந்தை; ஆரவாரம் மிக்கிருத்தலால் இவ்வாணிகச் சூழல் சந்தை யென வழங்குகிறது. பொருளாசையாற் பிணிப்புண்டு வெருட்டப் படுதலால் துன்பமுறும் நாய் சந்தை நாயாகும். உலகியல் ஆசை மிகுதி யால் எய்தும் இடுக்கண்களை விளக்குதற்குச் சந்தை நாயை எடுத்துக் காட்டுகின்றார். பந்தம் - ஆசைப் பிணிப்பு. திருக்கு - வளைந்து நெளியு மிடம். மூலை முடுக்குகளில் ஒடுங்கி வாழும் எலிகளைப் பற்றும் களவுப் பூனையை, "திருக்கெலாம் புகும் வெருக்கு" எனக் கூறுகின்றார். வெருகு, எதுகை நயம் பற்றி "வெருக்கு" என வந்தது. ஆசையுற்று அலையும் தன்மையாற் "பேயனேன்" என்கின்றார். பிறர் துன்பம் கண்டவிடத்து எளிதில் உருகும் பண்பு மனவுருக்கம் அறம் செயும் கொள்கைக்கு

அரணும் ஆக்கமுமாதலால் "உளந்தான் உருக்கலாவதற் கென்செயக் கடவேன்" என வுரைக்கின்றார். உருகல் - உருக்கலென வந்தது.

இதனால், உருகும் நெஞ்சுடையனாதற்கு உபாயம் அருளுக என வேண்டியவாறும். (8)

3311. கான மேஉழல் விலங்கினிற் கடையேன்
காம மாதிகள் கூகணிற் பிடித்தேன்
மான மேலிடச் சாதியே மதமே
வாழ்க்கை யேஎன வாரிக்கொண் டூலைந்தேன்
ஈன மேபொருள் எனக்களித் திருந்தேன்
இரக்கம் என்பதோர் எட்டுணை அறியேன்
ஞான மேவுதற் கென்செயக் கடவேன்
நாய காஎனை நயந்துகொண் டருளே.

உரை : தலைவனுகிய சிவபெருமானே, காட்டில் வாழ்கின்ற விலங்குகளிற் கடைப்பட்டவனுகிய யான் காம முதலிய குற்றங்களில் ஈடு பட்டிருந்ததோடு, பொய்யான மான வுணர்ச்சியால் சாதிச் செருக்கும் மத வெறியும் வாழ்க்கை யாசையும் மேற் கொண்டொழுகினேன்; இவ்வுலக வாழ்வு பொருள் மேலதென்று எண்ணி மகிழ்ந்திருந்தேனே யன்றி எள்ளத்தனையும் இரக்க மெனப்படும் நற்பண்பு கொண்டறியேன்; இத் தகைய யான் இனி நின் திருவருள் ஞானம் பெறுதற்கு யாது செய்ய வல்லவனுவேன்; என்னை விரும்பி ஏற்றருள்க. எ.று.

கொடுமை மிக்க விலங்குகளே காடுகளில் வாழ்வனவாதலால், அவற்றின் கீழ்மை கருதி, "கானமே யுழல் விலங்கினிற் கடையேன்" எனக் கூறுகின்றார். காமம், குரோதம், உலோபம், மோகம் முதலியன இன்ப வாழ்வுக்குத் தடையாய்த் தீங்கு விளைவிப்பனவாதலால், "காம மாதிகள் கூகளிற் பிடித்தேன்" என வுரைக்கின்றார். கூகைகைக் கைப் பிடித் தொழுகினேன் என்பார், "கூகளிற் பிடித்தேன்" என்கின்றார். பணி வேண்டியவர்க்குப் பணிந்து, விலக்க வேண்டியதை விலக்கியும் வாழ்வது மெய்யான மானமாகும்; மாருக வொழுகுவது குற்றமான மானம். குற்ற மானத்தை மேற் கொண்டு சாதிச் செருக்கும் மத வெறியும் இழிவாகியவற்றைத் செய்தேனும் உயிர் வாழ்வது வாழ்க்கையாம் என்னும் கொள்கையும் கைக்கொண்டு நல்லன நோக்காமல் மகிழ்ந்திருந் தேன் என விளம்புவாராய், "மான மேலிடச் சாதியே மதமே வாழ்க்கையே என வாரிக் கொண்டூலைந்தேன்" என இயம்புகின்றார். வாரிக் கொள்ளு தல் - பகுத்துணர்தலின்றி அகப்பட்டவை யெல்லாம் மேற் கொள்ளுதல், ஈனம் - இவ்வுலகம். இரக்கப் பண்பு மக்கட் பிறப்பை மாண்புறுத்துவ தென்பதை நினையாமல் ஒழுகிய குற்றத்தை "இரக்க மென்பதோர் எட்டுணை யறியேன்" என இசைக்கின்றார். இவற்றால் மேன் மேலும் பிறப் பிறப்புக்கள் உண்டாகுமே யன்றி ஞானம் உண்டாகாது; ஞானத்தா லன்றிப் பிறவாப் பேரின்ப முண்டாகா தென வுணர்ந்தமை தோன்ற. "ஞான மேவுதற் கென்செயக் கடவேன்" என வருந்துகின்றார்.

இதனால் நன்ஞானம் எய்துதற்கு வழி யருள்க என வேண்டிய வாரும். (9)

3312. இருளே யேஎளி எனமதித் திருந்தேன்
இச்சை யேபெரு விச்சைஎன் றலந்தேன்
மருளே யேதரு மனக்குரங் கோடும்
வனமெ லாஞ்சுழன் றினம்எனத் திரிந்தேன்
பொருளே நாடுநற் புந்திசெய் தறியேன்
பொதுவி லேநடம் புரிகின்றேய் உன்றன்
அருளே மேவுதற் கென்செயக் கடவேன்
அப்ப னேஎனை ஆண்டுகொண் டருளே.

உரை : அம்பலத்தில் திருக் கூத்தாடும் பெருமானே, இருளுடைய வற்றையே ஒளி யுடையவை என மாறி யெண்ணி மாண்பிழந்தேன்; பொறி வாயிலாக இச்சை விளைவித்த பொருள்களையே பெரிதும் விரும்பத் தக்க வையாகக் கருதி வருந்தினேன்; மயக்க வுணர்வை நல்கும் மன மாகிய குரங்கொடு கூடி நாடெல்லாம் சுற்றி மனம் போன வழித் திரிபவர் களையே இனமாகக் கொண்டு அலைந்தேன்; சிவஞானமாகிய மெய்ப் பொருளை நாடுகின்ற நல்லுணர்வு பெரு தொழிந்தேன்; அதற்குரிய நின் திருவருளைப் பெறுதற்கு யான் யாது செய்வேன்; அப்பனுகிய நீ என்னை ஆட்கொண்டருளுக. எ.று.

குற்றமாய்த் துன்பமும் அறியாமையும் செய்வனவற்றை "இருள்" எனச் சுட்டுகின்றார். மதித்தல் - நினைத்தல். பொருளாகாதவற்றைப் பொருள் எனக் காட்டுவது மருளுணர்வு. மனதைக் குரங்கென்பதனால், மனம் காணும் நாட்டை "வனம்" என்று சொல்லுகின்றார். நல்லினமாகாதவர் வாழ்வது நாடாயினும் துன்பம் தருவதால் காடு எனப்படுதலின், "வனமெலாம் சுழன்று இனமெனத் திரிந்தேன்" என்று தெரிவிக்கின்றார். பொறிபுல ஆசையும் மருளுணர்வும் தீயினைச் சேர்க்கையு முற்றதனால் மெய்யாகிய உறுதிப் பொருளை எண்ணி தொழிந்தேன் என வருந்து கின்றமை தோன்ற, "பொருளை நாடும் நற்புந்தி செய்தறியே" னெனக் கூறுகின்றார்.

இதனால், மெய்ப் பொருள் நாட்டம் பெறுதற்கு அருள் புரிக என வேண்டிக் கொண்டவாரும். (10)

திருச்சிற்றம்பலம்

6. முறையீடு

அஃதாவது, அருளின்பப் பேற்றுக்கு வேண்டிய அறிவுக் கூறுகள் தம்பால் இல்லாமை எடுத்தோதி முறையிடுவதாகும். இதன்கண், ஓரிடத்திருந்து தியானித்தல், அறிந்தோரை ஏத்துதல், கானமுறும் தாபதர் போறல், திருவடியைச் சென்னியிற் சேர்த்தல், ஏகானுபவம், நாதாந்தத் திருவீதி நடத்தல், கரண மடக்கும் கதியறிதல், சாகாக் கல்வி, வேகாத கால், போகாத தண்ணீர் முதலியன அறிதல், அத்த சத்த நிலைகள் முதலியன அறியாமை கூறப்படுகிறது. அறிதல் செயற் படுதற் பொருட்டாதலால் முறையிடுகின்றார்.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3313. மருந்தறியேன் மணிஅறியேன் மந்திரம்ஒன் றறியேன்
மதிஅறியேன் விதிஅறியேன் வாழ்க்கைநிலை அறியேன்
திருந்தறியேன் திருவருளின் செயலறியேன் அறந்தான்
செய்தறியேன் மனமடங்கும் திறத்தினில்ஓர் இடத்தே
இருந்தறியேன் அறிந்தோரை ஏத்திடவும் அறியேன்
எந்தைபிரான் மணிமன்றம் எய்தஅறி வேனே
இருந்ததிசை சொலஅறியேன் எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே.

உரை : மருத்துவ நெறி யுரைக்கும் மருந்தும் மணியும் மந்திரமும் அறியேன்; இயற்கையும் செயற்கையுமாகிய அறிவில்லேன்; வாழ்க்கை இயல்பும் அதற்கமைய என்னைத் திருத்திக்கொள்ளும் திறமும் அறியேன்; திருவருள் செய்யும் நற்செயலை அறியேன்; அருட் செயல் ஞானப் பேற்றுக்குத் துணை செய்யும் அறம் செய்யும் வகையும் மன மடங்கும் திற மாகிய ஓரிடத்தேயிருந்து ஒன்றியிருத்தலும், அதன் பயனறிந்த பெரி யோர்களை வழிபடலும் அறியேன்; இவை யாவும் அறிந்தோர் எய்தும் நின்னுடைய மணியிழைத்த சிற்றம்பலத்தைச் சேரும் திறம் அறியேன்; அஃது இருந்த திசைதானும் அறியேன்; இந் நிலையில் நான் நின்னுடைய ஞானகாயத்திற் புகுவேன்; எனது இயலாமையை யாரிடம் உரைப்பேன்; எதனைச் செய்வேன்; ஒன்றும் தெரியேன். எ.று.

மருந்து - நோயும் நோய் முதலும் நாடி அது தீரும் வாயிலாக உலகியற் பொருள்களைக் கொண்டு செய்யப் படுவது. நோய் நீக்கத்துக் காகக் காப்புச் செய்வது மணி; அது மணி மாலையும் அக்குமணி மாலையு மாம். நோய் பெருகாமற் சுருக்குதற்கு மனத்தால் எண்ணப்படும் திருவைந்தெழுத்து முதலியன மந்திரமாகும். தன்னுல் வருவனவும் பிற வுயிர்களால் உண்டாவனவும் தெய்வத்தால் தோன்றுவனவுமாகிய

நோய், மணி மந்திர மருந்துகளால் தீரும் என்பர். இம் மூன்றும் ஆதி பௌதிகம் ஆதியான்மிகம், ஆதி தெய்வீகம் என வழங்கும். மதி - இயற்கையறிவு; இது செய்யத் தக்க தென அனுபவத்தாற் பெறும் அறிவு. விதி - சான்றோர் நூல்கள் வாயிலாக இவை செய்தற் குரியன விதிக்கும் செயற்கையறிவு. வாழ்க்கை நிலை - காலந்தோறும் இடந்தோறும் மாறியியங்குவது உலக வாழ்வின் இயல்பு. முக்குண மயக்கத்தால் தவறு செய்தல் இயல்பாதலால், தவறுகளை அறிவால் எண்ணி யறிந்து திருந்தியியல்வது நன்முறையாதலால், "திருந்தறியேன்" என்றும், முக்குணவியக்கமும் உடற்கூறுகளின் இயக்கமும் உணர்வியக்கமும் உலகியற் பொருளியக்கமும் யாவும் திருவருள் இயக்கமாதலால் அதன் செயல் வகைகளை அறியேன் என்பாராய், "திருவருளின் செயலறியேன்" என்றும் இயம்புகின்றார். திருந்து - திருந்துதல்; நெறிப் படுதல். முதனிலைத் தொழிற் பெயர். திருவருளாவது, சிவபரம் பொருளின் அருட் சக்தியாகும். உலகை இனிது இயக்கி உயிர் வகைகள் வாழ்வு நடத்தி இறவாப் பிறவா இன்ப நிலை எய்துதற்கு உதவுதல் பற்றி, "அருட் சத்தி" எனப்படுகிறது. இதனைப் பொதுவாகத் திருவருள் என்பதும், இதன் உணர்ந்தொழுகும் அறிவைத் திருவருள் ஞானம் என்பதும் சான்றோர் மரபு. அறம், செய்தற்குரிய தென அறுதி யிடப்பட்ட நற்செயல்; இதனைக் கடன் என்றும் கூறுவர். நல்லவையெல்லாம் கடன்" (குறள்) எனப் பெரியோர் உரைப்பது காண்க. அறவகையை அறிந்து செய்யவில்லை என்றற்கு "அறம்தான் செய்தறியேன்" என்று கூறுகின்றார். அறத்தைச் செய்தற்கும் செய்யாதொழிதற்கும் மனம் காரணமாய் ஐவகைப்பட்ட பொறிகளின் வாயிலாக ஓடுக்கமின்றி அலையும் இயல்பினதாகலின், "மனமடங்கும் திறத்தினில் ஓரிடத்தே இருந்தறியேன்" என இசைக்கின்றார். எங்கும் திரிதலின்றி ஓரிடத்தே இருந்த வழி மனத்தின் இயக்க வெல்லை சுருங்கி ஒன்றின்கண் ஒன்றி நிற்றலின், "ஓரிடத்தே" என விதந்து மொழிகின்றார். ஓரிடத்தேயிருந்து ஒன்றிய மனமுடைய நன்மக்களை யோகியர் என்பர். அப்பெருமக்களைக் கண்டு வழிபடுவது மன வடக்கத்துக்கு உபாயமாதலால், "அறிந்தோரை ஏத்திடவும் அறியேன்" என வுரைக்கின்றார். அறஞ்செய்து மனவடக்கமுற்று அடையத் தக்கது தில்லைச் சிற்றம்பலம் என்பாராய், "எந்தை பிரான் மணிமன்றம் எய்த அறிவேனே" என்றும், மாட்டாமை தெரிவித்தற்கு "இருந்த திசை சொலவறியேன் எங்ஙனம் நான் புகுவேன் யார்க்குரைப்பேன் என்ன செய்வேன் ஏது மறிந்திலனே" என்றும் இயம்புகின்றார்.

இதனால், அறிவறியாமையும், அம்பலம் சென்று சேர மாட்டாமையும் விரியக் கூறியவாறும். இக்கருத் தொன்றே இனி வரும் பாட்டுக்களிலும் வருகிறது. (1)

3314. அகங்காரக் கொடுங்கிழங்கை அகழ்ந்தெறிய அறியேன்
அறிவறிந்த அந்தணர்பால் செறியும்நெறி அறியேன்
நகங்கானம் உறுதவர்போல் நலம்புரிந்தும் அறியேன்
நச்சுமரக் கனிபோல இச்சைகனிந் துழல்வேன்

மகங்காணும் புலவரெலாம் வந்துதொழ நடிக்கும்
மணிமன்றந் தனேஅடையும் வழியும்அறி வேனே
இகங்காணத் திரிகின்றேன் எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே

உரை : அகந்தையாகிய குற்றத்தை அதன் கொடி வேரோடும் பெயர்த்தெடுத்து எறியும் திறத்தை அறியேன்; மெய்யுணர்வுடைய அறவோர்களே யடைந்து ஞானம் பெறும் நெறியையும் அறியேன்; மலைகளிலும் காடுகளிலும் பயின்றுறையும் தாபதர்களைப் போல நலம் நயந்தறியேன்; நச்சுக் கனிகளையுடைய மரம் போல் பல்வேறு இச்சை களே யுற்று வருந்துகிறேன்; வேள்விகளைச் செய்துயரும் தேவர்கள் யாவரும் வந்து வணங்க நின்று, திருக்கூத்தாடும் திருச்சிற்றம்பலத்தைக் கண்டு பரவும் திறத்தையுடையனவனே? இவ்வுலக இன்பங்களின் பொருட்டே அலைகின்ற நான் எவ்வாறு அம்பலத் தெல்லைக்குட் புகு வேன்; என் விருப்பத்தை எவர்க்கு எடுத்துச் சொல்லுவேன்; என்ன செய்வேன்? ஒன்றும் அறியாதவனுயினேன். எ.று.

அகங்காரம் - நான் என்னும் தன்முனைப்பாகிய குற்றம்; இது தற் போதம் எனவும் நூல்களில் வழங்கும். குற்றமாகிய செருக்கைத் தோற்றுவித்து அறிவை மயக்கிப் பலவகைக் குற்றங்களைச் செய்து துன்புறுவிப்பதாகலின், "அகங்காரக் கொடுங் கிழங்கை அகழ்ந்தெறிய அறியேன்" என வுரைக்கின்றார். உடற்குள் உயிர்ச் சூழல்காறும் வேர் விட்டு ஆழ்ந்திருப்பது பற்றி, "அகங்காரக் கொடுங் கிழங்கு" எனக் கூறு கின்றார். அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர்" (மீனா. பிள்ளை) எனக் குமரகுருபரரும் கூறுவது காண்க. அறிவு - மெய்ப்பொருள் அறிவு. அறிவுடையோர் அறிய வேண்டுவ தொன்றுகலின், அதனை "அறி வறிதல்" என்பர். அந்தணர் - அறவோர். செந்தண்மை பூண்ட பெரி யோர்களாதலால் அவர்களை முறைப்படி கண்டு பயில வேண்டுவது பற்றி "அந்தணர்பாற் செறியும் நெறியறியேன்" எனவுரைக்கின்றார். நகம்-மலை. கானம் - காடு. மலைகளிலும் காடுகளிலும் தனித்திருந்து தவம் புரியும் இயல் பினராதலால், "நகம் கானமுறுதவர்" எனக் குறிக்கின்றார். உற்ற துன்பத்தைத் தாங்கி எவ்வுயிர்க்கும் நலம் செய்வதன்றித் தீங்கு செய்யா ராகலின், "தவர் போல் நலம் புரிந்து மறியேன்" என இயம்புகின்றார், உள்ளத் தெழும் இச்சைகள் யாவும் துன்பமே பயத்தலின், அவற்றை "நச்சு மரக் கனிகள்" எனக் குறிக்கின்றார். தன் மனக் கொடுமை காட் டற்கு நச்சுக் கனி என்னுமல் "நச்சு மரக் கனிகள்" என நவில் கின்றார். இச்சை கனிதல் - இச்சை கொண்டுழலுதல். மகம் - வேள்வி. வேள்வி செய்வோர் மறுமையில் தேவராவர் என்பது பற்றி, "மகம் காணும் புலவர்" எனச் சொல்லுகின்றார். புலவர் - தேவர். புலன் வழிப் போகங்களை நுகர்தலால் தேவர் புலவரெனப்படுகின்றனர். தேவர் கள் வணங்கும் தில்லையம்பலமாதலால், "புலவரெலாம் வந்து தொழ நடிக்கும் மணிமன்றம்" எனச் சிறப்பிக்கின்றார். சிவபெருமான் நடிக்கும் இடமாகிய மன்றம், "நடிக்கும் மன்றம்" என இயைகின்றது. "மணி மன்றம் ஞானசபையாதலால், அதனையடையும் ஞான நெறி தமக்குத் தெரியா தென்பாராய், "வழியும் அறிவேனே" எனவுரைக்கின்றார். உலகியலின்ப நாட்டம் ஞானப்பேற்றுக்குத் தடையாதல் தோன்ற

"இகங்காணத் திரிகின்றேன் எங்ஙனம் நான் புகுவேன்" என்று இசைக் கின்ருர். மாட்டாமை பற்றி, "யார்க்குரைப்பேன் என்ன செய்வேன் ஏதும் அறிந்திலனே" என்று கூறுகின்ருர். (2)

3315. கற்குமுறை கற்றறியேன் கற்பனகற் றறிந்த
கருத்தர்திருக் கூட்டத்தில் களித்திருக்க அறியேன்
நிற்குநிலை நின்றறியேன் நின்ருரின் நடித்தேன்
நெடுங்காமப் பெருங்கடலை நீந்தும்வகை அறியேன்
சிற்குணமா மணிமன்றில் திருநடனம் புரியும்
திருவடிஎன் சென்னிமிசைச் சேர்க்கஅறி வேனே
இற்குணஞ்செய் துழல்கின்றேன் எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே.

உரை : கற்பவை முறையறிந்து கல்லா தொழிந்த யான், முறைப் படி கற்பனவற்றைக் கற்ற ஞானிகளின் திருக்கூட்டத்தில் கூடி மகிழ்ந் திருக்கும் திறத்தையறியேன்; கற்றவாறு நின்ருெழுகும் இயல்பு தானும் யான் அறிந்தேனில்லை; கல்வி வழி நிற்பாரைப் போல நடிக்கின்றேன்; நெடிது பெருகும் காம விச்சையாகிய கடலில் அழுந்திக் கரையேறும் திறமறியாது அதனுள் ஆழ்ந்து கெடுகின்றேன்; ஞான மாண்புடைய திருச்சிற்றம்பலத்தில் திருக்கூத்தாடி யருளும் திருவடி என் தலைமேற் பொருந்த வணங்கி வழிபட அறியேன்; ஆனல், வாழ்வார்க்கு ஆகாத தீக்குணம் கொண்டு திரிகின்றேனுதலால் நான் எவ்வாறு அந்த ஞான வம்பலத்துட் புகுவேன்; இதனை யாவர்க்குரைப்பேன்; யாது செய்ய வல்லேன்; ஒன்றும் தெரிகிலேன். எ.று.

கற்றற் குரியதாயினும் முறைப்படி கற்ருலன்றிக் கல்வி அறிவுப் பயன் நல்காமை பற்றி, "கற்கு முறை கற்றறியேன்" என்று கூறுகின்ருர். முறையாவது கசடறக் கற்றல். "கற்க கசடறக் கற்பவை" (குறள்) எனப் பெரியோர் உரைப்பது காண்க. முறையாகக் கற்க வேண்டியவற்றைக் "கற்பன" என்றும், முறைப்படி கற்று அறிவு பெற்றுயர்ந்தவர்களைக் "கற்றறிந்த கருத்தர்" என்றும், அவர்கள் என்றும் எங்கும் அன்பாற்கூடி யிருப்பது பற்றி, "கருத்தர் திருக் கூட்டம்" என்றும் புகழ்கின்ருர். கற்ருர் கூட்டம் கல்வி யறிவு நல்கும் பேரின்பத்தில் திளைப்பது விளங்க, "களித் திருக்க அறியேன்" என இசைக்கின்ருர். முறைப்படி மேன் மேற்கல்லா தொழிந்தேனுயினும், கற்ற வளவிற் கற்ருங்கு நிற்கும் திறம் என்பால் இல்லை யென்பார், "நிற்கு நிலை நின்றறியேன்" என்றும், எனினும் கற்ற வழி நிற்பவர் போல யான் நடிப்பதுண்டு என்பாராய், "நின்ருரின் நடித் தேன்" என்றும் இயம்புகிருர். நடித்ததும் என்னுள் எழும் காம வேட் கைகளை மிகவும் நுகர்தற் பொருட் டென்றற்கு "நெடுங்காமப் பெருங் கடலை நீந்தும் வகை" எனவும், அது தானும் நிறைவுருமையால் காமப் பெருக்கில் ஆழ்ந்து கெடுகின்றேன் என்பாராய், "நீந்தும் வகை அறியேன்" எனவும் இசைக்கின்ருர். சிற்குணம் - ஞான மாண்பு; அது பற்றியே தில்லையம்பலம் "ஞான சபை" எனப்படுகிறது. திருவடி தலை மேற் பொருந்த வணங்குதல் திருவருள் ஞானம் பெறுதற்கு ஏதுவாதலால் "திருநடனம் புரியும் திருவடி என் சென்னிமிசைச் சேர்க்க அறிவேனே"

என மொழிகின்றார். கற்பன கற்று, கற்றுங்கு நின்று காமாதியிச்சைகளை போக்கினர்க் கல்லது ஞானசபை புகுந்து திருவடி ஞானம் பெற முயலாது பொருந்தாத குணம் செயல்களால் வருந்துகின்றமை புலப்பட, "இற்குணம் செய்துழல்கின்றேன்" என இசைக்கின்றார். இல்குணம் - பொருத்தமற்ற தீக்குணம்; எதுகை நோக்கி, இற்குணமென வந்தது. நற்குண நற்செய்கையில்லாதார் ஞான சபைக்குட் புகும் நலமுடைய ரல்லாராகலின், "எங்ஙனம் நான் புகுவேன்" என்றும், இது குறித்துப் பரிந்துரைப்பார் உலகில் இல்லாமை கண்டு, "யார்க்குரைப்பேன்" என்றும், இதனைற் செயலறுதி யுண்டாதலின், "என்ன செய்வேன்" என்றும், அதன் பயனுக அறிவு மயங்குதலால், "ஏதும் அறிந்திலனே" என்றும் துயர்ப்படுகின்றார். (3)

3316. தேகமுறு பூதநிலைத் திறம்சிறிதும் அறியேன்
சித்தாந்த நிலைஅறியேன் சித்திநிலை அறியேன்
யோகமுறு நிலைசிறிதும் உணர்ந்தறியேன் சிறியேன்
உலகநடை யிடைக்கிடந்தே உழைப்பாரில் கடையேன்
ஆகமுறு திருநீற்றின் ஒளிவிளங்க அசைந்தே
அம்பலத்தில் ஆடுகின்ற அடியைஅறி வேலே
ஏகஅனு பவம்அறியேன் எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே.

உரை : உடம்பின் காரணப் பொருளாக வுள்ள பூதங்கள் ஐந்தும் நிற்கும் நிலையை அறியாத யான் சிவாகாமங்களின் நிலையையோ, எண் வகைச் சித்திகளின் இயல்பையோ, யோக நெறி காட்டும் நிலைமையை யோ அறிந்திலேன்; உலகியல் வாழ்க்கையிடை யிருந்து உழைப்பவருட் கடையனுகிய யான், மேனியிற் பூசப்பட்டிருக்கும் திருநீற்றின் ஒளி திகழப் பக்கத்தே சாய்ந்தசைத்து அம்பலத்தில் ஆடல் புரிகின்ற திருவடி நலத்தை அறிய வல்லவனுவேனே? அடி கூடிப் பெறும் ஏகானுபவத்தை அறிவேனு? இத்தகைய யான் எவ்வண்ணம் திருவம்பலத்துட் புக வல்லவனுவேன்? என்னுடைய இக்குறையை யார்க்கு எடுத்துக் கூறு வேன்; யாது செய்வேன்? ஒன்றும் அறியேன். எ.று.

நில முதலாகிய ஐம் பெரும் பூதங்களின் பரிணமமே எனது தேகம்; இதன்கண் தோய்ந்திருக்கும் பூதக் கூறுகளின் நிலையை யான் அறிந் திலேன் என்பாராய், "தேகமுறு பூதநிலைத் திறம் சிறிதும் அறியேன்" என மொழிகின்றார். பூதங்கள் பரிணமித்திருக்கும் நிலையைத் தேகத்தின் பலவேறு கூறுகளில் காணும் செயலை, "நிலைத் திறம்" என்று குறிக்கின்றார். சித்தாம் என்பது சிவாகமம் உரைக்கும் திருநெறி, சிவாகமங்களைச் சித்தாந்தம் என்பது பற்றிச் "சித்தாந்த நிலை" எனத் தெரிவிக்கின்றார். தவயோகப் பயிற்சியாற் பெறுவது எண்வகைச் சித்திகள். அவை அணிமா, லகிமா, மகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் காம ரூபம் என எட்டென்பர். இவற்றைக் கைவரப் பெறும் நெறியும் பயனும் "நிலை" என்ற சொல்லால் தொகுத்துரைக்கப் படுகின்றன. சித்தி நிலை என்றதைச் சிவகாம சாரமாகத் திகழும் சிவஞான சித்தியார் என்ற நூலின் நுண் பொருள் என உரைப்பவருமுண்டு. யோகமுறு நிலையாவது

இயமம், நியமம் முதலாக எண் வகைப்படும். அவை இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என வரும். இவற்றின் விரிந்த இயல்புகள் பெருந்திரட்டு என்ற நூலின் யோகப் பகுதியில் கூறப்படுகின்றன. இவ்வியல்பு களையறிந்து பயின்று பயன்காண்பது உணர்தலாதலால் "உணர்ந்திலேன்" என வுரைக்கின்றார். இங்கே சொன்ன நால்வகை அறியாமை கட்கும் எனது அறிவின் சிறுமை காரணம் என்பார், "சிறியேன்" என்று தெரிவிக் கின்றார். உலக நடை- உலக வாழ்க்கை. அஃது உழைப்பின் உருவாத லால், "உலக நடை யிடைக் கிடந்து உழைப்பார்" என வாழ்வாரைக் குறிக்கின்றார். அவருள் தமது கீழ்மையைக் காட்டற்கு "உழைப்பாரிற் கடையேன்" என உரைக்கின்றார். மன, மொழி, மெய் யென்ற மூன்றுலும் இயலுவது உழைப்பென அறிக. சிவனது சகளத் திருமேனியை, ஈண்டு ஆகம் என்கின்றார். மெய்ம் முழுதும் வெண்ணீற்றின் வெண்மை யொளி விளங்கச் சிவபிரான் திருநடம் புரிவது தோன்ற, "திருநீற்றின் ஒளி விளங்க அசைந்தே அம்பலத்தில் ஆடுகின்ற அடி" என்றும், சிவயோக சிவஞானங்களாலன்றிச் சிவத்தின் திருவடிப் பேறு இல்லாமையால், "அடியை அறிவேனே" என்றும் அறிவிக்கின்றார். திருவடி ஞானத்தால் ஏகனாகி இறை பணி யென நிற்றல் ஏகானுபவமாதலால் நில்லாமை புலப்பட, "ஏக வனுபவம் அறியேன்" என்று இயம்புகின்றார். அனுபவம் இல்வழிச் சிவபோகம் பெறலாகாமை தோன்ற, "எங்ஙனம் நான் புகுவேன்" என்றும், மாட்டாமை விளங்க "யார்க்குரைப்பேன் என்ன செய்வேன் ஏது மறிந்திலனே" என எடுத்து மொழிகின்றார். (4)

3317. வேதாந்த நிலைநாடி விரைந்துமுயன் றறியேன்
மெய்வகையும் கைவகையும் செய்வகையும் அறியேன்
நாதாந்தத் திருவீதி நடந்திடுதற் கறியேன்
நான் ஆர்என் றறியேன்எங் கோன்ஆர்என் றறியேன்
போதாந்தத் திருநாடு புகஅறியேன் ஞான
பூரண காயம்எனும் பொதுவைஅறி வேனே
ஏதாந்தீ யேன்சரிதம் எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே.

உரை : வேத ஞானத்தின் அந்தமான உபநிடதங்கள் உரைக்கும் ஞானப்பொருளை அறிந்து அதனைப் பெறற்கு விரைவுடன் முயலுதல் இல்லாத யான் அதற்குரிய உண்மை ஒழுக்கம் செயல் வகைகளை யறியேன்; நாத தத்துவத்துக்கு மேலதாகிய சிவாகாய வீதியிற் சென்று காண வியலாதவனாகவுள்ளேன்; நான் யார் என்பதும் எனக்குத் தலைவன் யார் என்பதும் அறியேன்; ஞான முடிவு நிலையாகிய திருநாட்டினுட் புகும் திறம் அறியேன்; நிறைந்த ஞானகாய மெனப்படும் அம்பலத்தை யடையும் திறம் அறிய வல்லனுவனே? தீதுடையனாகிய என் வரலாறு எத்தகையதாம்? நான் எவ்வாறு ஞான சபைக்குட் புகுவேன்; என் மாட்டாமையை யார்க்கு எடுத்துச் சொல்லுவேன், ஒன்றும் தெரிய வில்லையே. எ.று.

வேத நூற் கல்வி பெற்ருர் அதற்கு மேலே கற்றறிதற் குரியன எனப் படும் உபநிடதங்களே வேதாந்தம் என்பர்; வேதாந்தம் விளங்கும் ஞானப்பேறு வேதாந்த நிலே எனவும், அதனே ஆராய்ந்தறிந்து கொள்ள விழைந்து விரைந்தோடும் காலநிலே கண்டு விரைந்து கைவர முயல் கின்றேனில்லே என்பார். "நாடி விரைந்து முயன்றறியேன்" என்று இயம்பு கின்ருர். மெய்வகை, வேதாந்தப் பொருள்வகை. கை, அதற்குரிய ஒழுக்கம். ஞானப்பேறு குறித்து மேற் கோடற்குரிய செய்கைகளேச் செய்வகை எனத் தெரிவிக்கின்ருர். சுத்த தத்துவத்தின் மத்தகத்தின் மேலது நாதாந்தம். அது தத்துவாதீதப் பெருவெளியாய் ஆன்ம சிற்சத்தி புகலாகாததாகலின், "நாதாந்தத் திருவீதி நடந்திடுதற்கு அறியேன்" என நவில்கின்ருர். இவ் வேதாந்த நாதாந்த நிலேகளே அறிந்து பெற முயலும் ஆன்மாவாகிய நான் யார் அதையுணர்த்தும் தலேவன் யார் என்று ஆராய்ந்ததில்லே என்றற்கு, "நானுர் என்றறியேன் எம்கோனுர் என்றறியேன்" என மொழிகின்ருர். "நானுர் என் உள்ளமார் ஞானங் களார் என்னே யார் அறிவார், வானேர் பிரான் என்னே யாண்டிலனேல்" (கோத்து) என மணிவாசகர் உரைப்பது காண்க. போதம்-கருவி கரணங் களேக் கொண்டு இயற்கையும் செயற்கையுமாகப் பெற வரும் உண்மை ஞானம். அந்த ஞானம் காட்டும் சிவஞானம் திகழும் இடம் "போதாந்தத் திருநாடு"; திருவருளாலன்றி அதனே எய்துதல் கூடாமை பற்றித் "திருநாடு புக வறியேன்" என்று புகல்கின்ருர். தில்லேயம்பலம், சிதாகாசம் என்றும், சிதம்பரம் என்றும் புகழப்படுதலின், "ஞான பூரண காயமெனும் பொது" என்று புகல்கின்ருர். வேதாந்த நிலே முதலாக வுரைத்த பலவும் அறியாமையால் தம்மைத் தீயேன் என்றும், தமது ஞானப் பேற்று முயற்சி யின் சிறுமையை விளக்குதற்குத் "தீயேன் சரிதம் ஏதாம்" என்றும் உரைக் கின்ருர். தமது நிலேமை பிறர்க்கு உரைப்பதற்கோ வேறு பிறவற்றைச் செய்தற்கோ அமையாமை யுணர்ந்து வருந்துகின்ருராதலால், "யார்க்கு உரைப்பேன் என்ன செய்வேன் ஏதும் அறிந்திலனே" எனக் கூறுகின்ருர்.

இதனுல் வேதாந்த நாதாந்த போதாந்த நிலேகளே அறிந்து எய்த மாட்டாத சிறுமை நீங்ந்து வருந்துமாறு காணலாம். (5)

3318. கலேமுடிவு கண்டறியேன் கரணமெலாம் அடக்கும்
கதிஅறியேன் கதிஅறிந்த கருத்தர்களே அறியேன்
கொலேபுலேகள் விடுத்தறியேன் கோபமறுத் தறியேன்
கொடுங்காமக் கடல்கடக்கும் குறிப்பறியேன் குணமாம்
மலேமிசைநின் றிடஅறியேன் ஞானநடம் புரியும்
மணிமன்றத் தனேஅடையும் வழியும்அறி வேனே
இலேஎனும்பொய் உலகினிடை எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே.

உரை : பலவாகிய கலேகளே யுரைக்கும் சாத்திரங்களில் முடிவு இது வெனக் கண்டதில்லே; மன முதலிய கரணங்களே யடக்கி யாளும் வழி யறி யேன்; வழி யறிந்த தலேவர்களேயும் பார்த்தறியேன்; கொலே முதலிய புலேச் செயல்களே யுடையேன்; கோபம் முதலிய குற்றங்களேப் போக்கினே னில்லே; கொடிய காம வேட்கையாகிய கடலே நீந்திக் கடந்தேனில்லே.

நற்குண மெனப்படும் மலை மேல் ஏறி யறியேன்; இப்பெற்றியை யுடையனு தலால் நான் ஞானத் திருக் கூத்து நிகழும் பொன்னம்பலத்தைச் சென்று சேரும் வழியை அறிய வல்லேனே? இல்லை யென்று சொல்லத்தக்க பொய் யான உலகியலின் இடையில் அழுந்திக் கிடக்கின்ற யான் எவ்வாறு அம் பலத்துட் புகுவேன். எனது இயலாமையை யார்க்குக் கூறுவேன். யாது செய்வேன். ஒன்றும் தெரியாமல் வருந்துகிறேன். எ.று.

கலை - கற்றுப் பயிலுதற்குரிய கல்வி வகை பலவும் கலை எனப்படும். அவை அனைத்தையும் துறை போகக் கற்று முடிவு காண்பது அரிதாக லின், "கலை முடிவு கண்டறியேன்" என்று கூறுகின்றார். மன, மொழி, மெய்யென்னும் மூன்றும் அகக் கரணம் எனவும், கண் காது முதலிய கருவிகளைப் புறக் கரண மெனவும் கூறப்படுதலின், இரண்டு மடங்கக் "கரண மெலாம்" என்றும், இவ்விருவகைக் கரணங்களையும் அடக்கி நெறிப்படுத்தினுலன்றி வாழ்க்கைத் துன்பம் போக்குதற்கு வழி யில்லை யெனச் சான்றோர் உரைப்பதால் அவற்றின் வழி நிற்பதன்றி அவற்றை யடக்கி என் வயமாக்கும் உபாயத்தை அறியேன் என்பார், "கரணமெ லாம் கதியறியேன்" என்றும் உரைக்கின்றார். கதி - ஈண்டு உபாயம் குறிக் கின்றது. கதி யறியாவிடின், அறிந்த ஞானிகளை யறிந்தடைந்து பெறலா மெனின், அவர்களைத் தெரிந்தடையும் திறமும் என்னிடமில்லை என்பார், "கதி யறிந்த கருத்தர்களை யறியேன்" எனப் பகர்கின்றார். கருத்தர் - தலைவர். கரணங்களை யடக்குதல் தலைமைப் பண்பும் செயலும் தாமே வந்து அமைவது பற்றிக் "கருத்தர்" என்று குறிக்கின்றார். புலால் உணவுக்கு உயிர்க் கொலை ஏதுவாதலால் "கொலை புலைகள்" எனச் சேரக் காட்டுகின்றார். கோபம் - சினம். குற்றங்கள் பலவற்றிற்கும் காரணமாய், கடல் போல் பெருகிய நிலைமையை யுடையதாகலின், "கொடுங் காமக் கடல் கடக்கும் குறிப்பறியேன்" என்று கூறுகின்றார். சலியாமை பற்றிக் குணத்துக்கு மலையை உவமம் செய்கின்றார். நற்குண நற் செயல்களால் உயர்ந்தோரைக் குணமாகிய குன்றேறினர் என்பர். புலை, கொலை, காமம் முதலிய குற்ற மகன்றுலன்றி ஞான சபைக்குச் சேர்தல் ஆகாமை பற்றி, "ஞான நடம் புரியும் மணிமன்றம் தனை யடையும் வழியும் அறிவேனே" என முறையிடுகின்றார். ஞான வாழ்வுக்கு உலகியல் வாழ்க்கை தடையாய் நின்று பேதுறவு செய்தல் பற்றி, "இலை யெனும் பொய் யுலகினிடை எங்ஙனம் நான் புகுவேன்" என வுரைக்கின்றார். உலகியலின் நிலை யாமைத் தன்மையால், "இலை யெனும் பொய் யுலகு" என இயம்புகின் றார்.

இதனுற் குணச் சிறப்பில்லாமையும் உலகியலின் பொய்ம்மையும் ஞான வாழ்க்கைக்கு இடையூருவது காணலாம். (6)

3319. சாதிமதம் சமயம்எனும் சங்கடம்விட் டறியேன்
சாத்திரச்சே றுகின்ற சஞ்சலம்விட் டறியேன்
ஆதிஅந்த நிலையறியேன் அலைஅறியாக் கடல்போல்
ஆனந்தப் பெரும்போகத் தமர்ந்திடவும் அறியேன்

நீதிநெறி நடந்தறியேன் சோதிமணிப் பொதுவில்
நிருத்தமிடும் ஒருத்தர்திருக் கருத்தைஅறி வேனே
ஏதிலர்சார் உலகினிடை எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே.

உரை : சாதி யென்றும் மத மென்றும் சமய மென்றும் பிரிந்தொழுகும் அவலப் பிரிவுகளினின்றும் நீங்க மாட்டாமலும், சாத்திரங்களின் கலக்கத்தால் உண்டாகும் துன்பங்களினிற் சிக்கியும் வருந்துகின்ற யான், பொருள்களின் தோற்றக் கேடுகளை எண்ணுமல், அலையில்லாத கடல் போல அசைவின்றி யிருந்து நுகரும் ஞான வின்பமாகிய பெரும் போகத்தில் இருக்கும் திறமும் அறியேன்; நீதி வழியில் நடந்ததும் இல்லை; இவ்வியல்புடைய யான், ஒளி திகழும் மணியம்பலத்தில் நின்று திருக்கூத்தாடும் ஒருவராகிய சிவபிரானது திருவுருட் குறிப்பை எவ்வாறு அறிவேன்? ஞான நெறிக்கு அயலவர் பொருந்திய உலகியல் வாழ்வில் கிடந்துழலும் யான் ஞான சபைக்குள் எவ்வண்ணம் புகுவேன்? எனது குறையைக் கேட்பவர் யாவர்? என்ன செய்வேன்; ஒன்றும் தெரியவில்லையே. எ.று.

சாதி, மக்களினத்திடையே யுளதாகிய பிரிவு தொடக்கத்தில் பொருளுடைமை, செய்தொழில் முதலிய காரணங்களால் தோன்றிப் பின்னர் உண்டல் உறவு கொளல் முதலிய கூறுகளிலும் ஒன்று படாத பிளவினைச் செய்து சமுதாய ஒருமையைச் சிதைத்து நிற்கும் தீமையாய் நிலவுவது. மத மென்பது கொள்கை யென்னும் பொருளில் தோன்றிப் பின்னர்ச் சிவன், திருமால், புத்தன் முதலிய தெய்வ வழிபாட்டுக் குரிமையுற்றுச் சாதி பற்றித் தோன்றிய சீர்கேட்டைச் சமுதாய வொருமையைச் சிதைத்தற்குத் துணை செய்யும் கருவியாய் நிலவுகிறது. இது குறுகிய நிலையில் மதமாகவும், விரிந்த நிலையில் சமயமாகவும் வழங்குகிறது. மக்களது உலகியல் வாழ்க்கை நலம் கருதித் தோன்றிய சாதி மதம் சமய மெனும் இவைகள் இடைக்காலத்தே பல்வகைப் பூசல்கட்கும் காரணமாய் மாறி இந்நாளில் சமுதாயத்தில் ஆழ்ந்த பிளவுகளை யுண்டுபண்ணி வொருமை வாழ்வுக்கு ஊறு செய்வதை நினைந்து, "சாதி மதம் சமய மெனும் சங்கடம்" என்று கூறுகின்றார் இச்சங்கடம், திருநாவுக்கரசர் முதலிய பெருமக்கள் காலத்தே ஓரளவு உருப் பெற்று நின்று, விசய நகர வேந்தர் ஆட்சியிற் பல்லாயிரக் கணக்கிற் பிரிவு பட்டு, பின் தொடர்ந்த ஆட்சிகளில் மேலும் பல்கி உரம் பெற்று விட்டது. வடலூர் வள்ளல் காலத்தில் இது தலைதூக்கி நின்றமையின், "சங்கடம் விட்டறியேன்" என எடுத்து மொழிகின்றார். பலவேறு காலங்களில் பலராற் பல்வகை நெறியில் எழுதப் பட்டு ஒன்றினொன்று வேறுபட்டும் மாறுபட்டும் கிடத்தலால், படிப்பவர் தெளிவு பெறுது தடுமாற்றம் உறுவது பற்றி, "சாத்திரச் சேறுடுகின்ற சஞ்சலம் விட்டறியேன்" எனக் கூறுகின்றார். "ஓது சமயங்கள் பொருள் உணரும் நூல்கள் ஒன்றொடொன் றொவ்வாமல் உள பலவும் இவற்றுள் யாது சமயம் பொருள் நூல் யாதிங் கென்னில் இதுவாகும் அதுவல்லது எனும் பிணக்கு" (சிவ. சித்தி) என அருணந்தி சிவனார் கூறுவது காண்க. சாத்திரப் பிணக்குகள் கற்றோர் மன அமைதியைக் கெடுப்பதனால், "சஞ்சலம் விட்டறியேன்" என வுரைக்கின்றார். நாடோறும் எய்தும் துன்ப வின்பங்களின் காரண காரியங்களை யறிந்தால் மனநோய்

இல்லா தொழிதலின் அவ்வாராய்ச்சியைச் செய்யாமை காட்டற்கு "ஆதி யந்த நிலையறியேன்" எனவும், அமைதி நிறைந்த மனநிலையை "அலை யறியாக் கடல் போல்" எனவும், அந்நிலையிற் பெறப்படும் இன்பத்தை "ஆனந்தப் பெரும் போகம்" எனவும் இயம்புகின்றார். நீதியே இறைவன் திருவுருவாதலின். நீதி நெறி நின்றுலன்றி அவனை யடைதல் இயலா தென்பதனால், "நீதி நெறி நடந்தறியேன்" என வுரைக்கின்றார். "நீதி பலவும் தன்ன வுருவா மென மிகுத்த தவன்" (வைகா) என ஞானசம்பந்தர் உரைப்பது காண்க. மணிப்பொது - தில்லைத் திருச்சிற்றம் பலம். ஆணும் பெண்ணுமாய் அடியார்க்கு அருளும் முதல்வனுதல் கண்டு, "நீல மேனி வாலிழை பாகத்து ஒருவன்" என்று சான்றோர் உரைத்தலின், "ஒருத்தர்" என்றும், அம்பலத்தில் ஆனந்தத் திருக் கூத்தாடும் சிறப்புப் பற்றி, "நிருத்தமிடும் ஒருத்தர்" என்றும் இசைக் கின்றார். மாறுபடும் கருத்துடையார் நிறைந்தது உலகியலாதலால் "ஏதிலர் சார் உலகு" என்றும், ஒத்த கருத்துடன் ஊக்குவார் இல்லாமை விளங்க, "எங்ஙனம் நான் புகுவேன்" என்றும், "யார்க்குரைப்பேன்" என்றும் வருந்துகின்றார்.

நீதி நெறியன்றி ஞான சபையை யடைதற்கு நெறியில்லாமை காட்டியவாரும். (7)

3320. சாகாத கலைஅறியேன் வேகாத காலின்
தரம்அறியேன் போகாத தண்ணீரை அறியேன்
ஆகாய நிலைஅறியேன் மாகாய நிலையும்
அறியேன்மெய்ந் நெறிதனைஓர் அணுஅளவும் அறியேன்
மாகாத லுடையபெருந் திருவாளர் வழுத்தும்
மணிமன்றத் தனைஅடையும் வழியும்அறி வேனை
ஏகாய உலகினிடை எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும் அறிந் திலனே.

உரை : சாகாக் கலை, வேகாத கால், போகப் புனல் எனப்படுவன வற்றின் இயல்புகளை யறியேன்; பூதாகாச நிலையையும், மாகாய நிலையை யும் அறியேன்; மெய்ம்மை நெறி எனப்படுவதை ஓர் அணுத் துணையும் அறிகிலேன்; சிவன்பால் பேரன்புடைய அருட் செல்வர்கள் போற்றி வழி படுகின்ற மணிமன்றத்தைச் சென்றடையும் வழியையும் அறியேன்; ஒன்றுகிய உலகின்கண் வாழும் நான் அம்பலத்துள் எவ்வாறு புகுவேன்; எனது மாட்டாமையை யார்க்கு உரைப்பேன்; யாது செய்வேன்; ஒன்றும் தெரிகிலேன். எ.று.

சாகாவுடம்பு பெறும் திறம் "சாகாக் கலை" எனப்படுகிறது. வேகாத கால், தீய்த்துக் கெடுக்காத பிராணனுகிய காற்று. பிராண வாயு நெருப்பின் தன்மையுடையதாயினும் உடற்குள் நின்று நிலவுவதாகலின், "வேகாத கால்" எனப்படுகிறது. அதனை யடக்கி உடல் முதிர்ந்து வாடிக் கெடாதபடி நிறுத்தும் திறம் "வேகாக் கால்" எனப்படுகிறது. போகாப் புனல் என்பது போகாத தண்ணீர் என்று குறிக்கப்படுகிறது. இது, வேறு உடம்பு படைத்தற்குரிய வித்துக்களைச் சுமந்து நிற்கும் வெண்ணிற

நீராதல் பற்றிப் "போகாத தண்ணீர்" எனப் புகன்று உரைக்கப்படுகிறது. இஃது உடம்பினுள் ஊறுவது. வேகாக் காலும் போகாப் புனலும் சாகாக் கலிபெறுதற்கு ஏதுவா மென்பதனால், மூன்றையும் சேரக் கூறுகின்றார். இவற்றின் இயல்புகள் பின்னர் விளக்கப்படும். நில நீர் என வரும் பூதமைந்தனுள் ஒன்றாய்க் கூறப்படுவது ஆகாயம்; இதனைப் பூதாகாயம் என்பது முண்டு. இப்பூதங்களையும் இவற்றினடியாகத் தோன்றும் தத்துவங்களைத் தன்னுள் அகப்படுத்தித் தத்துவாதீதமாய் நிலவும் பரவொளி, மாகாயம் எனப்படும். உலகியற் பொருள் நெறியும், தத்துவக் கூறுகளை யெண்ணியறியும் அறிவு நெறியும் கடந்து விளங்கும், திருவருள் நெறி மெய்ந்நெறி எனப்படும். அதனைச் சிறிதும் அறியாமை புலப்பட, "ஓர் அணுவளவும் அறியேன்" என வுரைக்கின்றார். மாகாதல் - பேரன்பு. சிவத்தின்பால் மெய்யன்பு மிகவுடைய பெரியோர்களை, "மாகாதலுடைய பெருந் திருவாளர்" எனக் குறிக்கின்றார். சிவஞானச் செல்வர்கள் நாளும் வாழ்த்தி வணங்குவது காண்டலின், "பெருந் திருவாளர் வழுத்தும் மணிமன்றம்" என்று புகழ்கின்றார். மணிமன்றம் - தில்லைச் திருச்சிற்றம்பலம். உயிர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து உய்தி பெறுதற் கென்று ஒன்றாய் அமைந்த உலகமாதலால், "ஏகாயவுலகு" எனவுரைக்கின்றார். ஏகம் என்பது ஈறு குன்றி ஏகு என வந்தது. "ஒன்றுவுலகம்" என்றாற் போல.

ஒன்றுகவுயர்ந்த உலகியற் பிணிப்பினின்றும் நீங்கி மணிமன்றம் புகுவேன் என்பது கருத்து. (8)

3321. தத்துவம்என் வசமாகத் தான்செலுத்த அறியேன்
சாகாத கல்விகற்கும் தரஞ்சிறிதும் அறியேன்
அத்தநிலை சத்தநிலை அறியேன்மெய் அறிவை
அறியேன்மெய் அறிந்தடங்கும் அறிஞரையும் அறியேன்
சுத்தசிவ சன்மார்க்கத் திருப்பொதுவி னிடத்தே
தூயநடம் புரிகின்ற ஞாயமறி வேலே
எத்துணையும் குணமறியேன் எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே.

உரை : தத்துவங்கள் யாவும் என் கருத்தின் வழி இயங்கச் செலுத்தும் திறத்தையும், சாகும் திறத்தின் நீங்கிச் சாகாமை நல்கும் கல்வியின் வகையையும் சிறிதும் அறியேன்; அத்த வுலகு சத்த வுலகு எனப்படும். உலகியற் பொருணிலையும் இவற்றின் மெய்ம்மை நிலையையும் அறியேன்; மெய்யுணர்வு பெற்று அடங்கி யொழுகும் ஞானியர்களையும் கண்டறியேன்; இத்தன்மையனாகிய யான், சுத்த சன்மார்க்கத்துக் கிடமாகிய தில்லைத் திருச்சிற்றம்பலத்தின்கண் சிவபிரான் நடிக்கும் திருக்கூத்தின் முறைமையை அறிகிலேன்; குணமானவற்றைத் தேர்ந்தறியும் சிறப்பில்லாத யான் எவ்வாறு அவ்வம்பலத்துட் புகுவேன்; யாவர்க் குரைத்துத் தெளிவு பெறுவேன்; யாது செய்வேன்; ஒன்றும் தெரியேன். எ.று.

தத்துவங்கள் நில முதல் சிவ மீறாக முப்பத்தாறாய், இறைவன் திருவருள் வழி நின்று உயிர்கள் வாழ்வாங்கு வாழ்தற்கென அமைந்த

வையாதலால், "தத்துவமென் வசமாகத் தான் செலுத்த வறியேன்" என்றும், தத்துவ வியக்கம் உயிர்கள் பெற்றவுடம்போடே நிலைபெற்று நில்லாமற் சாதலிலே முடிதலின், அதனை மாற்றிச் சாகாவுடம்புடன் உறுதிப் பொருளைப் பெறுவது சாகாத கல்வியாதலால், அதனைக் கற்க மாட்டாமை தோன்ற, "சாகாத கல்வி கற்கும் தரம் சிறிதும் அறியேன்" என்றும் சாற்றுகின்றார். அத்தநிலை பொருட் பிரபஞ்சம் எனவும், சத்த நிலை சொற் பிரபஞ்ச மெனவும் வழங்கும்; அவற்றுள் அத்த நிலைக்கண் கலை, தத்துவம், புவனம் என்ற மூவகை யத்துவாக்களும் சத்தநிலைக்கண் வன்னம், பதம், மந்திரம் என்ற மூவகை யத்துவாக்களும் பொருந்தி உயிர்கள் வினை செய்தற்கு வாயிலாதலால், "அத்தநிலை சத்தநிலை யறியேன்" எனவுரைக்கின்றார். மெய்யறிவு - உண்மை ஞானம். உண்மை ஞானிகள் நினைவும் சொல்லும் செயலும் செய்வினையாய்ப் பிறவிக் கேதுவாதலை யுணர்ந்து திருவருளில் ஒன்றி நிற்பர்; அவரையறிந் தொழுகுவது நலம் பயக்குமாயினும் அப் பெருமக்களைக் காணேன் என்பார், "மெய்யறிந் தடங்கும் அறிஞரையும் அறியேன்" என விளம்பு கின்றார். சன்மார்க்கம் - மெய்ம்மை நெறி. தத்துவாதீத பரசிவத்தை யடையும் நெறி சுத்த சிவ சன்மார்க்கம்; அதனை நினைப்பிக்கும் கருத்தில் அமைந்தது தில்லைத் திருச்சிற்றம்பலம்.. மன்றம் பரவெளியையும், ஆடும் சிவபிரான் பரசிவத்தையும், திருக்கூத்து, உலகைப் படைத்தல் முதலிய மூவகைத் தொழிலையும், உயிர்கட் கருளல் மறைத்தல் என்ற இருவகைத் தொழிலையும் அறிவிக்கும் முறைமை பற்றி, "சுத்த சிவசன்மார்க்கத் திருப்பொதுவினிடத்தே தூய நடம் புரிகின்ற ஞாய மறிவேனே" என்று கூறுகின்றார். ஞாயம் - முறைமை. இக்கூறிய அறிவு நலமுற்றும் குணமே காணும் இயல்புடையவர்க்கே அமைவனவாதலால், "எத்துணை யும் குணமறியேன்" என்றும், தானறியாவிடினும் அறிந்தாரைக் கேட்டுத் தெளிவு பெற ஒருவரையும் காண்கிலேன் என்பாராய், "யார்க்குரைப் பேன்" என்றும், இந்நிலையிற் சோர்வு மிகுதலால், "என்ன செய்வேன்" என்றும், ஒன்றும் விளங்காமையால் "ஏதும் அறிந்திலனே" என்றும் இயம்புகின்றார்.

இதன்கண் அத்துவா மார்க்கத் தடை கூறுவது காணலாம். (9)

3322. வரைஅபர மார்க்கமொடு பரமார்க்கம் அறியேன்
மரணபயம் தவிர்த்திடுஞ்சன் மார்க்கமதை அறியேன்
திரையறுதண் கடலறியேன் அக்கடலைக் கடைந்தே
தெள்ளமுதம் உணவறியேன் சினமடக்க அறியேன்
உரைஉணர்வு கடந்ததிரு மணிமன்றந் தனிலே
ஒருமைநடம் புரிகின்றார் பெருமைஅறி வேனே
இரையுறுபொய் உலகினிடை எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்னசெய்வேன் ஏதும்அறிந் திலனே.

உரை : பரம் அபரம் என இரண்டாக வுரைக்கப்படும் மார்க்கம் இரண்டினையுமே அறியாத யான், மரண அச்சத்தைப் போக்குவதாகிய சன்மார்க்கத்தின் இயல்பை அறிந்திலேன்; திரையற்ற கடலையொக்கும் தியானயோக நிலையையும், அதனை யறிவாற் கடைய எய்தும் ஆனந்த

மாகிய தெளிந்த அமுதம் போன்ற சிவபோகத்தை நுகரும் திறத்தை யறியேன்; சிவமாகிய குற்றத்தைப் போக்கி யறியேன்; இத்தகைய யான் மனமும் மொழியுமாகிய இரண்டிற்கும் அகப்படாத அழகிய தில்லையம் பலத்திலே ஒருமை நடம் புரிகின்ற சிவனது பெருமையை அறிய வல்லனவனே? உணவு தேடுவதே நோக்கமாகவுடைய வுலகின்கண் சிக்குண்டிருக்கும் யான் எவ்வாறு ஞான வம்பலத்தினுட் புகுவேன்; எனது அவல நிலையை யாவர்க் குரைப்பேன்; யாது செய்வேன்? ஒன்றும் தெரிகிலேன். எ.று.

சிவஞானம் பெற முயல்வார்க் கென வகுத் தோதப்படும் நெறி, பரம் அபரம் என்ற இருவகையதாகி, பரம் சன்மார்க்க மெனவும், சரியை கிரியையோக மென்ற மூன்றும் அபரம் எனவும் விரிதலால், "வரை யபர மார்க்கமொடு பரமார்க்கம்" என்று பகர்கின்றார். சன்மார்க்க ஞானிகள் சிவ சொரூபானந்தத்தில் தோய்ந்து ஒருவகை யச்சமும் அசை வுமின்றி இன்புறுவராதலின், "மரண பயம் தவிர்த்திடும் சன்மார்க்க மறை யறி யேன்" என வுரைக்கின்றார். திருமூலரும், "ஒசியாத வுண்மைச் சொரூ போ தயத்துற்று அசைவான தில்லாமையான சன்மார்க்கமே" (திருமந். 1486) என்பது காண்க. உள்ளம் ஒன்றிய தியான யோக நிலைக்கு அலை யில்லாத கடலை உவமம் கூறுபவாதலின், "திரையறு தண்கடலறியேன்" எனக் குறிக்கின்றார். "சொறியினும் தாக்கினும் துண்ணென்றுணராக் குறியறிவாளர்க்குக் கூடலுமாமே" (திருமந்) எனத் திருமூலர் கூறுகின்றார். யோகானந்தம் பெறும் அருட்செல்வரை, "வரை யளந்தறியாத் திதை யரும் திருத்தப் பேரானந்தப் புணரி ஓராங்குப் படிதல் உடையோர் (ஞானா. 48) என்பர். தியான யோக இன்பத்தைத் தாம் பெருமையை" குறித்தற்கு "அக்கடலைக் கடைந்து தெள்ளமுதம் உணவறியேன்" என்று கூறுகிறார். காம மயக்கம் போல அறக்கெடுதல் இல்லாதாகலின், வெகுளியை, "சின மடக்க அறியேன்" என்று செப்புகின்றார். தில்லையம் பலத்துச் சிதாகாச ஞான நடன வின்பம் தத்துவாதீதப் பரவெளியில் நிகழ்வதாகலின், "உரை யுணர்வு கடந்த திருமணி மன்றம்" எனவும், நடனத்தைப் புரியும் பரசிவத்தின் ஒருமைத் தன்மையை நடனத்தின் மேலேற்றி, "ஒருமை நடம்" எனவும் உரைக்கின்றார். ஞான போகம் நுகரப்படும் சிதாகாயக் காட்சியை நிலைநந்து இன்புறுவார்க்கு உலகியலில் ஊனுடம்பு வளர்க்கும் உணவு உயர்வாகத் தோன்றுதாகலின் "இரையுறு பொய் யுலகு" என இகழ்கின்றார். (10)

திருச்சிற்றம்பலம்

7. அடியார் பேறு

அஃதாவது, சிவனுக்கு அடியராயினர்க்கு அவர் செய்த நலங்களை எடுத்துக் காட்டித் தமக்கும் அது போல் அருள வேண்டுமென இறைஞ்சுதலாம். இதன்கண், மாபாதகம் புரிந்த வேதியன் தெளிவு பெற்றதும், மதுரைக்கு எல்லை காட்டிய பாம்பு வரம் பெற்றதும் சிறப்பாகக் கூறப்படுகின்றன. பேறு பெரு தொழிதற்குள்ள குற்றங்களில் கரணங்களின் தூய்மையின்மையும், விதி வழி யொழுக மாட்டாமையும், உடம்பின் அருமை தேர்ந்து பயன் கொள மாட்டாமையும், உலகியல் நெறியில் தோய்ந்து அறிவு தேய்வுறுவதும், உலகில் வாழ்வார்க்குத் திருவருட் குறிப்பின் இன்றியமையாமையும், அருள் ஞானப் பேறும் பிறவும் கூறப்படுகின்றன. எல்லாம் சிவன் செயல், எங்கும் சிவமயம் என நிலவும் பொருளுரைகளின் பொருண்மை நயம் இறுதிப்பாட்டில் காட்டப்படுகிறது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3323. அடியார் வருத்தம் தனைக்கண்டு தரியார்
இன்பம் அளித்திடுவார்
வடியாக் கருணைப் பெருங்கடலார் என்ற
பெரியர் வார்த்தைஎலாம்
நெடியார்க் கரியாய் கொடியேன்என் ஒருவன்
தனையும் நீக்கியதோ
கடியாக் கொடுமா பாதகன்முன் கண்ட
பரிசுங் கண்டிலனே.

உரை : திருமாலும் அறிதற்கரிய பெருமானே, தனக்கு அடியவராயினர்க்கு எய்திய துன்பங்களைக் கண்டு பொறுக்காமல் உடனே போக்கி இன்பங்களை நல்குபவர் குறையாத அருட்குக் கடல் போன்றவராகிய சிவபெருமான் என்று பெரியோர்கள் கூறுகின்ற புகழ்களெல்லாம் கொடிய வனுகிய என்னொருவனை மாத்திரம் விலக்கி நிற்பனவோ? கொடும் பாவத்தை நீக்காமற் செய்த மாபாதகனுகிய வேதியற் கருளிய நலம் தானும் பெற்றிலேன். எ.று.

அடியார் - சிவனடியே சிந்திக்கும் செம்மை மனமும், சிவத்தொண்டு புரியும் செயலும் உடையவர். தன் திருவடியை அன்பால் நினைந்துருகும் பெருமக்களிடத்து மிக்க பேரன்பு செய்பவராதலின், "அடியார் வருத்தம் தனைக் கண்டு தரியார்" என்றும், வருத்தம் கண்டு வருந்துவதோடு நில்லாமல், வருத்தத்தைப் போக்கி இன்பமாவனவற்றை நல்குவார் என்றற்குச் சிவபெருமானை, "இன்பம் அளித்திடுவார்" என்றும் இயம்புகின்றார். வடியாக் கருணைக் கடல் - குறையாத கருணையாகிய கடல்.

கடல் போன்றவ ரென்பார், "கடலார்" என்கின்றார். வார்த்தை - சொல்; ஈண்டுப் புகழ் மேல் நின்றது. நெடியார் - திருமால். நெடிதுயர்ந்து மூலவுகும் அளந்த மெய்ம்புடைமை பற்றித் திருமாலே, நெடியோன் எனவும், நீண்டவன் எனவும், நெடுமால் எனவும் அறிந்தோர் புகழ்வர். ஒருவன் வாளா ஒருமை குறித்து நிற்பது. கடியாக் கொடு மாபாதகன், அறவே விலக்குதற் குரிய பாதகங்களே விலக்காது செய்தமை பற்றி, "கடியாக் கொடு மாபாதகன்" என்றும், அவனையும் வெறுத் தொழிக்காமல் சிவபெருமான் அவற்கு அறிவின்கண் தெளிவுண்டாகச் செய்தானெனப் புராணம் (திருவிளையாடல்) கூறுதலால், "மாபாதகன் முன் கண்ட பரிசு" என்றும் கூறுகின்றார்.

இதனால், மாபாதகன் பெற்ற அறிவுத் தெளிவு தமக்கு முண்டாக வேண்டுமென விண்ணப்பித்தவாறும். (1)

3324. பையார் பாம்பு கொடியதெனப் பகர்வார்
அதற்கும் பரிந்துமுன்னுள்
ஐயாகருணை அளித்தனைஎன் அளவில்
இன்னும் அளித்திலையே
மையார் மிடற்றரேய் ஆனந்த மன்றில்
நடிப்போய் வல்வினையேன்
நையா நின்றேன் ஐயோநான் பாம்பிற்
கொடியன் ஆனேனே.

உரை : விடக்கறை படிந்த கழுத்தையுடைய பெருமானே, இன்பத் தில்லையம்பலத்தில் நடிப்பவனே, படமுடைய பாம்பு கொடுமை யுடைய தென்று யாரும் சொல்லுவராயினும், அதற்கும், ஐயனே, அன்புற்று மதுரை நகர்க்கு எல்லை வகுத்த அந்த நாளில் அருள் புரிந்தாய்; அத் தகைய நீ இன்னும் எனக்கு அருள் செய்கின்றாயில்லை; வலிய வினை சூழ்ந்த யான் வருந்தி மெலிகின்றேன்; ஐயோ, நான் பாம்பினும் கொடிய வனாய் விட்டேன்; என்செய்வேன் எ.று.

பை - பாம்பின் படம். பாம்பு கடிக்கப் பட்டவர் உடனே இறப்பது பற்றி, உலகவர் பாம்பு கொடிய தென வுரைத்தலால், "பாம்பு கொடிய தெனப் பகர்வர்" என்று கூறுகின்றார். கையிற் கங்கணமாக இருந்த பாம்பை மதுரைக்கு எல்லை வகுக்க எனச் சிவபிரான் விடுத்த போது தனது பெயர் நிலைபெற அருளுக என வேண்டிற்றாக, மதுரைக்கு ஆலவாய் எனப் பெயருண்டாயிற் றெனப் புராணம் கூறுதலால், "பரிந்து முன்னுள் கருணையளித்தனை" என இயம்புகின்றார். பாம்பின்பாற் கொண்டது போல் தனக்கும் அருளல் வேண்டுமென விண்ணப்பிப்பது கருத்தாதலின், "என்னளவில் இன்னும் அளித்திலை" என வுரைக்கின்றார். மை - கடல் விட முண்டதனால் உளதாகிய கறை. தில்லையம்பலத்தில் ஆனந்தத் தாண்டவம் புரிவது பற்றி, "ஆனந்த மன்றில் நடிப்போய்" என்று போற்றுகின்றார். திருவருள் பெருமைக்கு தமது வினை காரண மென நினைந்து வருந்துவது புலப்பட, "வல்வினையேன் நையா நின்றேன்" எனவும், பாம்பினும் தனது கொடுமை மிக்க தென்றற்குப் "பாம்பிற் கொடியனானேனே" எனவும் வருந்துகின்றார்.

இதனுல், தமது வினைக் கொடுமை பாம்பினும் மிக்கதென விளம்பிய வாரும். (2)

3325. பீழை புரிவான் வருந்துகின்ற பேய்க்கும்
கருணை பெரிதளிப்பான்
ஊழைஅகற்றும் பெருங்கருணை உடையான்
என்பார் உனைஐயோ
மோழை மனத்தால் குரங்கெறிந்த விளங்கா
யாகி மொத்துண்ணும்
ஏழை அடியேன் வருத்தங்கண் டிருத்தல்
அழகோ எங்கோவே.

உரை : துன்பம் செய்தற்கு முயன்று வருந்தும் பேய்கட்கும் அருள் மிகச் செய்பவனும், ஊழ்வினையைத் தொடர் பறுக்கும் பெரிய கருணை யுடையவனுமாவன் சிவபிரான் எனப் பெரியோர் உன்னைப் புகழ்ந் துரைப்பர்; குழையும் தன்மை யமைந்த மனமுடைமையால் காய் வேண்டிக் குரங்குகளால் கல்லெறிந்து தாக்கப்பட்ட விளாமரம் போல் அடிபட்டு வருந்தும் ஏழை அடியவனுகிய என்னுடைய வருத்தங் கண்டு வாளா இருத்தல் உனக்கு அழகாகாது. எ.று.

பீழை - துன்பம். "அறிவிலார் தாம் தம்மைப் பிழிக்கும் பீழை" (குறள்) எனப் பெரியோர் வழங்குவ தறிக. பேய்க் கோட்பட்டவர் நன்னினைவும் நற்செயலுமின்றித் துன்புறுதலால், "பீழை புரிவான் வருந்துகின்ற பேய்" எனக் கூறுகின்ருர். செய்வினை யூழ்த்த பயனைச் செய்தவனே நுகர்விக்கும் பிராணுதலின், ஊட்டாது விலக்கும் பெருமை யுடைமை பற்றி, "ஊழையகற்றும் பெருங்கருணை யுடையான்" எனப் புகல்கின்ருர். "இருள்சேர் இருவினையும் சேரா" (குறள்) என்பதனுல் இவ்வுண்மை தெளியப்படும். மோழை - அறிவாற் கூர்மை யுருது குழைந்து வீழும் தன்மை; இது மோழைமை எனவும் வழங்கும். "முன்பு சொன்ன மோழைமையால் முட்டை மனத்தீர்" (எதிர் கொள்) என நம்பியாரூரர் உரைப்பது காண்க. காய் வேண்டிப் பிறர் கல்லெறியக் கண்டு கிடக்கும் கற்களை யெடுத்து கண்டபடி எறிந்து விளாமரத்தைத் தாக்கி வருத்துவது குரங்கின் இயல்பாதலால், "குரங்கு எறிந்த விளங்கா யாகி" எனக் கூறுகின்ருர். குரங்கெறிந்த கல் காய் மேலும் கிளைகள் தழைகள் முதலியவற்றின் மேலும் தாக்கி மரத்தைப் புண்படுத்துவது போல மோழை மனத்தால் புண்ணுற்றேன் என்பார், "மோழை மனத் தால் மொத்துண்ணும் ஏழையடியேன்" என இயம்புகின்ருர். மொத் துண்டல்- அடிபட்டுப் புண்படுதல். "அக்கோவால் மொத்துண்டு புண் சுமந்த மேனி பாடுதுங்காண் அம்மானுய்" (அம்மானை) என மணிவாசகர் உரைப்ப தறிக.

இதனுல், தெளிவில்லாத மனநினைவுகளால் எய்தும் துன்ப மிகுதி விளம்பியவாரும். (3)

3326. மருளு டுலகில் கொலைபுரிவார் மனமே
கரையாக் கல்என்று
பொருளு டியநின் திருவாக்கே புகல
அறிந்தேன் என்னளவில்
கருணை நிதிநின் திருவுளமுன் கல்என்
றுரைக்க அறிந்திலனே
இருளு டியஇச் சிறியேனுக் கின்னும்
இரங்கா திருந்தாயே.

உரை : மருட்சி கொண்ட மண்ணுலகில் உயிர்க் கொலை செய்பவர் மனம் தான் கரையாத கல்லாகு மென உறுதிப் பொருள்களை யாய்ந்துரைக் கும் நின் திருமொழியாகிய வேதம் உரைப்பது கண்டுளேன்; கருணைப் பெருஞ் செல்வனுகிய நினது திருவுள்ளம் என்னைப் பொறுத்த அளவிற் கல்லா மென்று சொல்லுவதாக யான் கேட்டதில்லை; இருள் படிந்து சிறியனுகிய எனக்கு இரக்கமின்றியிருக்கின்றாய்; இஃது என்னே. எ.று.

மெய் பொய்களையும் நன்று தீதுகளையும் பிறழக் காணும் உலகம் "மருள் நாடுலகு" எனப்படுகிறது. இவ்வுலகவர்க்குத் தெளிவு உண்டாகும் பொருட்டு இறைவன் பண்டேயுரைத்த அறிவுரைகள் வேத வாக்கு என்று பெரியோரால் குறிக்கப்படுகின்றன; அவற்றுள் உயிர்களைக் கொன்று திரியும் கொடுமையாளர் மனம் அன்பாற் குழைந்து உருகாத கல்லொத்த மனம் என்பது ஒன்று என்று அறிந்துள்ளேன் என்பாராய், "கொலை புரிவார் மனமே கரையாக் கல்லென்று நின் திருவாக்கே புகல அறிந்தேன்" என வுரைக்கின்றார். அனுதி மலப்பிணிப்பால் ஐயமும் திரிபும் நிறையக் கொண்ட மக்களுயிர்க்கு உறுதியாவன என ஆராய்ந்து எடுத்துரைக்கப்படும் அறிவுரைகளை வேதம் என்றும், வேத வாக்கு என்றும் ஓதுவது பற்றி, "பொருள் நாடிய நின் திருவாக்கே புகல" என்றும், பிறர் சொல்லக் கேட்டதுடன் யானே கற்றறிந்துளேன் என்பார், "அறிந்தேன்" என்றும் இயம்புகின்றார். பிறவுயிர்களும் உலகிற் பிறந்து வாழ்ந்து உய்தி யடைதற் குரியன என எண்ணி இரக்கம் கொள்ளாமை கண்டு, "கொலை புரிவார் மனமே கரையாக் கல்" என வேதம் கூறுகிறது என்பது கருத்து. உருகாத் தன்மையுடைய கல் - உருகாக்கல். இவ்வாறு பொருளுரை புகன்ற அருளாளனுகிய நினது திருமனம், என்னைக் கண்டு இரக்கம் கொண்டு அருள் செய்யாமையால் "என்னளவில் கருணைநிதி நின் திருவுளமும் கல்லென்றுரைக்க அறிந் திலன்" என்று உரைக்கின்றார். தெளிவும் ஒளியுமின்றி அறியாமை இருள் படிந்து நிற்கும் சொற் செயல்களிற் குற்றமுற்றுச் சிறுமையெய்தி யுள்ளமை யுணர்த்தற்கு "இருள் நாடிய இச்சிறியேன்" எனத் தம்மைக் குறித்து மொழிகின்றார்.

இதனால் இறைவன் தன்பால் இரக்கம் கொண்டிலன் என முறை யிட்டவாரும். (4)

3327. முன்னுங் கொடுமை பலபுரிந்து முடுகிப்
பின்னுங் கொடுமைசெய
உன்னுங் கொடியர் தமக்கும்அருள் உதவுங்
கருணை உடையானே
மன்னும் பதமே துணைஎன்று மதித்து
வருந்தும் சிறியேனுக்
கின்னுங் கருணை புரிந்திலைநான் என்ன
கொடுமை செய்தேனே.

உரை : முன்பு பல தீமைகளைச் செய்து செய்வாரையும் ஊக்கிப் பின்பும் அவற்றையே நினைந்து செய்யும் கொடுமையாளர்க்கு அருட்டுணை புரியும் கருணைக் கடவுளே, அறவோர் திருவுள்ளத்தில் நிலைபெறும் திருவடியே துணை என்று எண்ணி வருத்தமுற்றுச் சிறியனுகிய எனக்கு இப்பொழுதும் அருள் செய்யாதிருக்கின்றாய்; இதற்குக் காரணமாக யான் யாது கொடுமை செய்தேனே, அறியேன். எ.று.

முன்பு பல கொடுமை செய்துள்ளோமே, அவை யமையும் என நினையாமல் பிறர்க்குத் தீமை செய்பவரையும் மேன்மேலும் செய்தும் செய்வித்தும் ஒழுகும் கொடியவர்களை, "முன்னும் கொடுமை பல புரிந்து முடுகிப் பின்னும் கொடுமை செய வுன்னும் கொடியர்" என வுரைக்கின்றார். முடுகுதல் - ஊக்குதல். உன்னுதல் - எண்ணுதல். நல்லன செய்யும் நல்லோர்க்கே யன்றித் தீமையே செய்யும் தீயவர்க்கும் ஒப்ப அருள் புரிவது விளங்க, "கொடியர் தமக்கும் அருள் உதவும் கருணை யுடையானே" என மொழிகின்றார். இஃது இறைவனது கொடைமடம் கூறியது. மன்னுதல் - நிலைபெறுதல். அறமே நினைந்து செய்தொழுகும் தூயவ ருள்ளத்தில் என்றும் நின்று திகழ்வதுபற்றி, இறைவன் திருவடியை "மன்னும் பதம்" எனச் சிறப்பிக்கின்றார். மதித்தல் - எண்ணுதல். துன்பத்தால் வருந்துவோர் அறிவாற்றல் சுருங்கிச் சிறுமை யுறுவது தோன்ற, "வருந்தும் சிறியேன்" என்றும், துன்பம் தொடர்ந்து வருத்துவதால், "சிறியேனுக் கின்னும் கருணை புரிந்திலை" என்றும், அருள் எய்தாமைக்குத் தடையாவது தாம் செய்துள்ள கொடுமை யென எண்ணுதல் விளங்க, "என்ன கொடுமை செய்தேனே" என்றும் இயம்புகின்றார்.

இதனால், துன்பம் நீங்காமைக் கேது தாம் செய்த கொடுமையென நினைந்து முறையிட்டவாறும். (5)

3328. அங்கே அடியர் தமக்கெல்லாம் அருளார்
அமுதம் அளித்தையோ
இங்கே சிறியேன் ஒருவனுக்கும் இடர்தான்
அளிக்க இசைந்தாயேல்
செங்கேழ் இதழிச் சடைக்கனியே சிவமே
அடிமைச் சிறுநாயேன்
எங்கே புகுவேன் என்செய்வேன் எவர்என்
முகம்பார்த் திடுவாரே.

உரை : செவ்விய பொன்னிறம் கொண்ட கொன்றை மலரை யணிந்த சடையையுடைய கனி போன்ற சிவபெருமானே, ஆங்காங் குள்ள அடியார்களெல்லார்க்கும் நின் திருவருளாகிய அமுதத்தை யுதவி, இவ்விடத்தே இருந்து வேண்டும் சிறியவனுகிய என்னெருவனுக்கு இடரே செய்தற்கு உடன்படுவாயாயின், அடிமையாய்ச் சிறுநாய் போன்ற யான் எவ்விடம் செல்வேன்; யாது செய்வேன்; என் முகத்தைப் பார்த்து அருள் செய்பவர் யாவர்? எ.று.

செம்பொன்னின் நிறமுடையதாகலின் கொன்றை மலரை, ''சேங் கேழ் இதழி'' எனச் சிறப்பிக்கின்ருர். ''பொன் திகழ் கொன்றை மாலை பொருந்திய நெடுந் தண்மார்பர்'' (ஏகம்) என நாவரசர் நவில்வது காண்க. கனிபோல்வது பற்றிக் கனியே என்கின்ருர். ஆங்காங்குச் சிவநேயமும் சிவத்தொண்டும் புரிந்தொழுகும் சிவனடியார்களை ''அங்கே யடியர் தமக்கெல்லாம்'' எனக் கூறுகின்ருர். திருவருள் ஞான வின்பம் தருவதா கலின், அதனைச் சான்ருேர் அமுதம் என்று புகழ்வது மரபு. ''உன் அருளாரமுதத்தை வாரிக் கொண்டு விழுங்குகின்றேன்'' (அடைக்) என்பது திருவாசகம். துன்பத்தாற் சுருங்கிய கண் கொண்டு நோக்கலின், ''இங்கே சிறியேன் ஒருவனுக்கும் இடர்தான் அளிக்க இசைந்தாயேல்'' என இசைக்கின்ருர். பலர் இன்பமுற ஒருவர் துயருறச் சான்ருேர் பொருர் என்பது பற்றி, ''இடர்தான் அளிக்க இசைந் தாயேல்'' என் கின்ருர். இடருற்று வருந்துகின்றமை தோன்ற ''இசைந்தாய்'' என வுரைக்கின்ருர். கேழ் - நிறப் பொருட்டு. அடிமைச் சிறியேன், அடிமைப் பணியும் துன்பத்தால் எய்திய சிறுமையும் உடைமை விளங்க, ''அடிமைச் சிறு நாயேன்'' எனத் தம்மைக் குறிக்கின்ருர். சிவமல்லாற் புகலிடம் வேறின்மையால் ''எங்கே புகுவேன்'' எனவும், ஒன்று செய்து பெறற் பாலதன்மையின், ''என் செய்வேன்'' எனவும் இயம்புகின்ருர். கண்ணேட்ட முடையார்பால் முகம் பார்த்து நிற்றலே யமையுமா கலின், ''எவர் என் முகம் பார்த்து இடுவார்'' என வருந்துகின்ருர். துன்பத்தால் ஒளி யிழந்த முகத்தை அருளாளரல்லது பிறர் யாரும் காணவிழையார் என்பது பற்றி இவ்வாறு கூறுகின்ருர் என்றுமாம்.

இதனால், நீ கண்டருளாயாயின் என் முகம் பார்த்து அருள்செய்வார் பிறர் இல்லையென முறையிட்டவாரும். (6)

3329. அளியே அன்பர் அன்பேநல் அமுதே
சுத்த அறிவான
வெளியே வெளியில் இன்பநடம் புரியும்
அரசே விதிஒன்றும்
தெளியேன் தீங்கு பிறர்செயினும் தீங்கு
நினையாத் திருஉளந்தான்
எளியேன் அளவில் நினைக்கஒருப் படுமோ
கருணை எந்தாயே.

உரை : ஆதரவானவனே, மெய்யன்பர் மனத்தின்கண் அன்புரு வானவனே, அமுதம் ஒப்பவனே, தூய அறிவெனப்படும் ஆகாசமே,

அந்த ஆகாசத்தில் திருக்கூத்தாடும் அருளரசே, எந்தையே, விதி முறை யொன்றும் தெரியாதவனுதலால் எனக்குத் தீங்கு செய்தாலும் பிறர்க்குத் தீது நினைக்காத திருவுள்ளம் எளியவனுகிய யான் நினைந்தொழுக நினது திருவருள் எனக்கு இசைந்தருளுமோ. எ.று.

அளித்தல்-ஆதரவு செய்தல். ஆதரிக்கும் பண்பும் செயலும் உடைமை பற்றி, இறைவனை "அளியே" எனக் கூறுகின்றார். மெய்யன்பர் மனக் கோயிற்கண் அன்புருவாய் எழுந்தருளுதலால் "அன்பர் அன்பே" என வுரைக்கின்றார். மெய்யன்பில் விளையும் இன்பமும் அப்பெருமான் அருளா தல் பற்றிச் சிவனை "அமுதே" என்கின்றார். இன்ப அனுபவத்தை யுணரும் அறிவின்கண் தோன்றும் ஞான நிலையை, "சுத்த அறிவான வெளியே" என்று இயம்புகின்றார். இதனை ஞானிகள் சிதாகாசம் என்பர்; இது சிதம்பரம் எனவும் வழங்கும். இச் சிதாகாசச் சிதம்பரத்தில் திருக் கூத்து இயற்றுதலால், "வெளியில் இன்ப நடம் புரியும் அரசே" என்று விளம்புகின்றார். நல்வாழ்வுக் கமைந்த விதி விலக்குகளைத் தாம் அறி யாமையைக் கூறுவார், "விதி யொன்றும் தெளியேன்" எனத் தெரிவிக் கின்றார். விதித்தன செய்தலும் விலக்கியன தவிர்தலும் வாழ்க்கை யற மாகும்; தீங்கு செய்தார்க்கும் நீ யாதும் தீங்கு நினையாதே என்பது விதி. அதனை நினைவிற் கொண்டொழுகும் உள்ளத்தின் உயர்வு விளங்கத் "திருவுளம்" எனச் சிறப்பிக்கின்றார். இத் திருவுள்ளம் தமக்கு அமைதல் வேண்டி இறைவன் திருவருளை இறைஞ்சுகின்றாராகலின், "திருவுளந் தான் எளியேன் அளவில் நினைக்க ஒருப்படுமோ கருணை" என முறையிடு கின்றார். நினைத்தற்கு இசைந்து துணை புரிதல் வேண்டும் என்பார், "நினைக்க ஒருப்படுமோ கருணை" என வுரைக்கின்றார். ஒருப்படுதல் - இசைதல். "விளம்புமா விளம்பே", "நினையுமா நினையே" எனப் பிறரும் திருவருளை ஒருப்பட வேண்டுதல் காண்க.

இதனால், விதி வழி யொழுகத் திருவருள் இசைக என முறையிட்ட வாறும். (7)

3330. தீது நினைக்கும் பாவிகட்கும் செய்தாய்
கருணை எனத்தெளிந்து
வாது நினைக்கும் மனக்கடையேன் மகிழ்வுற்
றிருந்தேன் என்னளவில்
சூது நினைப்பாய் எனில்யார்க்குச் சொல்வேன்
யாரைத் துணைகொள்வேன்
ஏது நினைப்பேன் ஐயாநான் பாவி
உடம்பேன் எடுத்தேனே.

உரை : தீங்கு நினைத்த பாதக வேதியன் போன்ற தீவினையாளர்க் கும் அருள் செய்தவன் நீ என்று அறிவால் தெளிய வுணர்ந்து வாது செய் யும் நினைவுகளைக் கொண்டு கீழ்மை யுற்றவனுகிய யான் மகிழ்ந்திருந் தேன்; இனி என் மகிழ்ச்சிக்கு மாறுக எனக்கு அருளாயாயின் என் குறை யை யாரிடம் சொல்வேன்; யாவரைத் துணையாகக் கொள்வேன்; எதனை நினைப்பேன்; ஐயோ, பாவியாகிய நான் ஏன்தான் பிறந்தேனே. எ.று.

தீது நினைக்கும் பாவிகள், அவந்தி வேதியன் மகனுய்த் தாயைக் கற்பழித் தொழுகிய மாபாதகன் போன்றவர். "அன்னையைப் புணர்ந்து தாதை குரவனு மந்தணனன், தன்னையும் கொன்ற பாவம் தனித்து வீடளித்தது" (மாபாதகம் தீர்த்தது) எனத் திருவிளையாடற் புராணம் கூறுவது காண்க. தீய பாவிகட் கெல்லாம் திருவருள்புரிந்த பேரருளாளனு தலால், மாறுபட நினைத்துக் கீழ்மையுறும் தனக்கும் அருள் செய்வான் என்ற எண்ணத்தால் மைந்து மலிந்திருந்தமை புலப்படுத்தற்கு "வாது நினைக்கும் மனக்கடையேன் மகிழ்வுற்றிருந்தேன்" என்று இயம்புகின்றார். வாது - மாறுபட்டுரைத்தலும் செய்தலுமாம்; வாது புரிபவனைப் பிணங்கு வோன் என்றலு முண்டு. மனக் கடையேன் - மனமுடைமையாற் கடைப் பட்டவன். துணையாகாது மாறு செய்தல் சூது செய்தல் எனப்படும். சிவனை யல்லது துணையாவார் வேறு எவரும் இல்லாமையால், "யார்க்குச் சொல்வேன் யாரைத் துணைக் கொள்வேன்" என்றும், துணையாகும் பொருள் யாதும் இல்லையென்றற்கு, "ஏது நினைப்பேன்" என்றும், ஒரு பற்றுக் கோடு மில்லாத பிறப்புப் பாழாதலால், "ஐயோ நான் பாவி உடம்பெனெடுத்தேன்" என்றும் சொல்லி வருந்துகின்றார். பிறந் தேன் எனற்பாலது, "உடம் பெடுத்தேன்" என வந்தது.

இதனுல், அரிய மக்களுடம்பெடுத்துப் பயன் பெருது கழிவது நினைந்து வருந்தியவாரும். (8)

3331. பொதுவென் றறிந்தும் இரங்காத சிலர்க்கும்
கருணை புரிவதன்றிக்
கதுவென் றழுங்க நினையாநின் கருணை
உளந்தான் அறிவென்ப
திதுவென் றறியா எனைவருத்த எந்த
வகையால் துணிந்ததுவோ
எதுவென் றறிவேன் என்புரிவேன் ஐயோ
புழுவில் இழிந்தேனே.

உரை : தில்லையம்பலம் யாவர்க்கும் பொது வென்றறிந்தும் நாளைப் போவார்க்கு இரக்கம் கொள்ளாத அந்தணர்க்கும் திருவருள் புரிந்ததோடு மனம் அஞ்சி வருந்த நினையாத நின் திருவுள்ளம், அறியத் தக்கது இது வென்று அறியாத என்னை வருத்துவதற்கு எவ்வாறு துணிந்ததோ? காரணம் இன்னதென அறிய மாட்டாத புழுவினும் இழிந்த யான் யாது செய்வேன். எ.று.

தில்லையம்பலத்துக்குரிய பெயர்களில் பொது என்பது யாவரும் புகுந்துபோந்து திருக்கூத்துக் காண அமைந்தது என்ற கருந்துடைய தாகவும் நாளைப் போவாரது குலம் நினைந்து மறுத்தவர்களை "இரங்காத சில" ரென்றும், அவர்கட்கும் அருள் செய்து நாளைப் போவாரைத் தீக்குளித்து முனிவராய் வரச் செய்தருளிய நலத்தை, "கருணை புரிவ தன்றிக் கதுவென்றழுங்க நினையா நின் கருணையுளம்" என்றும் ஓது கின்றார். மறுத்த சிலர் கதுமென அஞ்சி என்ன காரியம் செய்தோம் என

வருந்தாவண்ணம் அருளியதை, "கதுவென் றழுங்க நினையா" என்று இயம்புகின்றார். பெறப்படும் அறிவு வகை பலவற்றுள் பரம்பொருளின் மெய்ம்மை யறியும் அறிவே அறிவாம் என்பதறியாதவன் எனத் தம்மைக் குறிக்கும் வடலூர் வள்ளல், "அறிவென்பது இதுவென் றறியா எனை' என்று கூறுகின்றார். இரக்கமிலார்க் கருளிய பெருமானுகிய நீ அறிவறி யாத என்னைத் துன்பமுறுவிக்க மனம் கொண்டாய் என இறைஞ்சு வாராய், "நின் கருணையுளந்தான் எந்த வகையால் துணிந்தது" என வேண்டுகின்றார். காரணம் நினைந்து காண மாட்டாமையால் "எதுவென் றறிவேன்" எனவும், "என்புரிவேன்" எனவும், தமது புன்மைகாட்டற்குப் "புழுவில் இழிந்தேன்" எனவும் புகல்கின்றார்.

இதனால் அறிவறியும் திறமில்லாத என்னை வருத்துதல் கூடாதென முறையிட்டவாரும். (9)

3332. வெடிக்கப் பார்த்து நிற்கின்ற வெய்யர்
தமையும் வினைத்துயர்கள்
பிடிக்கப் பார்க்கத் துணியாத பெருமான்
நினது திருஉளந்தான்
நடிக்கப் பார்க்கும் உலகத்தே சிறியேன்
மனது நவையாலே
துடிக்கப் பார்த்திங் கிருந்ததுகாண் ஐயோ
இதற்குந் துணிந்ததுவோ.

உரை : சிதறுண்டு வருந்துகின்றவர்களைக் கண்ணறக் கண்டிருக் கும் கொடியவரையும் வினைத் துன்பம் பற்றி வருத்துவதைப் பார்க்க விரும்பாத பெருமானுகிய நினது திருவுள்ளம் நடிப்பவர் நடிப்பைப் பார்த்து மகிழும் இவ்வுலகின்கண் சிறுமை யுடையவனுகிய என்னுடைய மனம் குற்றங்களால் துயர் பொருமல் துடிப்பதைப் பார்த்து வாளா இருக் கின்றது; ஐயோ, இச்செயற்கு எப்படித்தான் துணிவு கொண்டதோ, எனக்கு வியப்பாகவுளது. எ.று.

வெடித்தல் - சிதறுண்டல். "கடிகாவில் காற்றுற் றெறிய வெடி பட்டு வீற்று வீற்றேடும் இமையில் போல்" (களவழி) என்று பொய்கை யார் உரைப்பது காண்க. கண்ணெதிரே உடைமையும் உடம்பும் வெடித்துச் சிதறுண்டு வருந்துவோரைக் கண்டு இரக்கமின்றி யாரும் இரார்; இருப்பாரினும் கொடியவர் வேறில்லை என்றற்கு "வெடிக்கப் பார்த்து நிற்கின்ற வெய்யர்" என விளம்புகின்றார். செய்தார் செய்த செய் வினைப்பயனுக வரும் துன்பங்கள் அவர்களைப் பற்றி வருத்துவதைக் காண வல்லானல்லனுகலின், அருளுருவாகிய இறைவன் அத்துன்பங்களால் வருந்துவோர் பெரிய கொடியவராயினும் காணத் தரியாதவன் என்பார், "வெய்யர் தமையும் வினைத் துன்பம் பிடிக்க பார்க்கத் துணியாத பெருமான்" எனப் புகழ்கின்றார். தாம் செய்யும் குற்றங்களைப் பொய்யால் மறைத்து மெய்யர் போல் நடிப்பவர் பலரை யுடையது உலகமாதல் விளங்க, "நடிக்கப் பார்க்கும் உலகத்தே" என வுரைக்கின்றார். தமது அறிவாற்றலின் சிறுமை யுரைத்தற்குச் "சிறியேன்" என்றும், செய்த

குற்றங்கள் காரணமாகத் துன்பம் போந்து தாக்கி வருத்துதலால், "நினது திருவுளம்தான் சிறியேன் மனது நவையாலே துடிக்கப் பார்த்து இங்கு இருந்தது காண்" என்றும் இயம்புகின்றார். ஆற்றுமையும் வியப்பும் மேலிடுதல் பற்றி, "ஐயோ இதற்குத் துணிந்ததுவோ" என வுரைக் கின்றார்.

இதனால், இறைவன் பேரருளின் பெருமை நினைந்து வியந்தவாரும். (10)

3333. கல்லுங் கனியத் திருநோக்கம் புரியும்
கருணைக் கடலோனான்
அல்லும் பகலுந் திருக்குறிப்பை எதிர்பார்த்
திங்கே அயர்கின்றேன்
கொல்லுங் கொடியார்க் குதவுகின்ற குறும்புத்
தேவர் மனம்போலச்
சொல்லும் இரங்கா வன்மைகற்க எங்கே
ஐயோ துணிந்தாயோ.

உரை : கல்லும் குழைந்துருகுமாறு அருட் பார்வை செலுத்தும் பேரருட் கடலாகிய பெருமானே, இரவும் பகலும் நான் உனது திருவருட் குறிப்பை எதிர்நோக்கிய வண்ணமிருந்து பெருமையால் வருந்தித் தளர் கின்றேன்; ஆனால், உயிர்களை இரக்கமின்றிக் கொல்லும் செயலைப் புரியும் கொடுமையை யுடையவர்க்கு உதவி செய்யும் சிறு தெய்வங்களின் மனம் போல இரக்கம் காட்டும் ஒரு சொல்லும் வழங்காத வன்கண்மை நினக்கு எவ்வாறு உண்டாயிற்றோ? ஐயோ. எ.று.

கனிதல் - குழைதல். அருட் பார்வையின் கனிவைப் புலப்படுத்தற்குக் "கல்லும் கனியத் திருநோக்கம் புரியும் கருணைக் கடலே" என்று கூறு கின்றார். வழங்கக் குறை படாதது அருட் செல்வம் என்றற்குக் "கருணைக் கடலே" எனச் சிறப்பிக்கின்றார். அல் - இராக் காலம். திருக்குறிப்பு - திரு வருள். எப்பொழுதும் எதிர்பார்த்த வண்ணமிருந்து பெருமையால் மனம் சோர்வுறும் நிலைமை யுரைத்தற்கு "அல்லும் பகலும் திருக்குறிப்பை எதிர் பார்த்திங்கே யயர்கின்றேன்" என்று கூறுகின்றார். உயிர்க் கொலை புரிந் தொழுகும் கான வேட்டுவரும் குன்றக் குறவரும் சிறு தெய்வங்களைப் பரவி வாழும் திறங்களை நூல்கள் கூறுவதும், நாட்டில் மக்கள் பலர் செய் வதும் கண்டு, "கொல்லும் கொடியார்க் குதவுகின்ற குறும்புத் தேவர்" எனக் குறிக்கின்றார். வேட்டுவர் வாழிடம் குறும் பெனப்படுதலின், அவர் வழிபடும் தெய்வமும் குறும்புத் தேவர் எனப்படுகின்றனர். கொலை வினையை யூக்குதல் பற்றி, குறும்புத் தேவர் மனம் வன்கண்மை யுடைய தென விளங்குதலால், "குறும்புத் தேவர் மனம்போலச் சொல்லும் இரங்கா வன்மை" எனச் சொல்லுகின்றார். இரக்கம் காட்டும் சொல்லும் வழங் காமை தோன்ற, "சொல்லும் இரங்கா வன்மை" என மொழிகின்றார். வன்மை - வன்கண்மை. மென்கட் செல்வமாகிய அருளே யுருவாகிய சிவபெருமான்பால் தாம் காணும் வன்கண்மை இயல்பன் றென எண்ணு கின்றாராதலால், "வன்மை கற்க எங்கே துணிந்தாயோ" என்று வருந்து கின்றார். வன்கண்மை ஆகாத தொன்றுதலின், "ஐயோ" என அவலிக் கின்றார்.

இதனால், சிவன்பால் வன்கண்மை கண்டு வருந்தியவாரும். (11)

3334. படிமேல் ஆசை பலவைத்துப் பணியும்
அவர்க்கும் பரிந்துசுகக்
கொடிமேல் உறச்செய் தருள்கின்றாய் என்பால்
இரக்கங் கொண்டிலையே
பொடிமேல் அணிகின் அருட்கிதுதான் அழகோ
பொதுவில் நடிக்கும்உன்றன்
அடிமேல் ஆசை அல்லால்வே றாசை
ஐயோ அறியேனே.

உரை : மண்ணுலகிற் பல பொருள்களின் மேல் ஆசையுற்றுப் பணிந்து போற்றுவோர் பலருக்கும் அன்புகூர்ந்து செல்வ நிலை யுண்டாகத் திருவருள் செய்கின்றாய்; அதே நிலையில் எனது ஆசைக் கிரங்கி அருள் செய்கின்றா யில்லை; திருநீற்றுப் பொடியைத் திருமேனி மேல் அணியும் பெருமானுகிய நினது திருவருட்கு இஃது அழகாகாது; மேலும் தில்லையம்பலத்தில் திருக்கூத்தாடும் உன்னுடைய திருவடி மேலன்றி வேறு எதன் மேலும் எனக்கு ஆசை கிடையாது. எ.று.

படி - மண்ணுலகம். ஆசைப்படும் பொருள் பலவாதலின், ஆசையும் பலவாம். ஒரு பொருள் மேல் ஓர் ஆசை வைத்துப் பரவுவோர்க்கு உதவுதல் ஒக்கும்; பல பொருள் மேல் பல ஆசை வைத்துப் பணிபவர்க்கும் அருள் வழங்குகின்றாய் என்பாராய், "ஆசை பல வைத்துப் பணியுமவர்க்கும் பரிந்து சுகக்கொடி மேலுறச் செய்தருள்கின்றாய்" என வுரைக்கின்றார். சுகக் கொடி - இன்ப வொழுங்கு. இது சுகவெளி யென்றும் சுகப்பிரபை யென்றும் வழங்கும். ஆசை பலவாயின் மன வொருமை கெடுதலின் அது தீது என்பர் அறிஞர். அத்தகைய குற்ற முடையவர்க்கும் அருள் புரிகின்ற பெருமானுகிய நீ ஓராசை கொண்டு உழல்கின்ற எனக்கு அருள்கின்றிலை என்பாராய், "என்பால் இரக்கம் கொண்டிலையே" என்று கூறுகின்றார். பொடி - வெண்மையான திருநீறு. "பொடியார் மேனியனே" (கடவூர்) என நம்பியாரூரர் புகழ்வது காண்க. முறை மாறி யருளுவ தழகன்று என்றற்கு "நின் அருட்கு இதுதான் அழகோ" என முறையிடுகின்றார். பொது - தில்லையம்பலம். கூத்தாட எடுத்த திருவடி உயிர்கட்கு அருள் புரிவதே கருத்தாகக் கொண்ட தெனப் பெரியோர் கூறுதலால், "பொதுவில் நடிக்கும் அடிமேல் ஆசையல்லால் வேறு ஆசை ஐயோ அறியேனே" என இசைக்கின்றார். "தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம் ஆட எடுத்திட்ட பாதமன்றே நம்மை ஆட்கொண்டதே" (கோயில்) எனத் திருநாவுக்கரசர் எடுத்தோதுவது காண்க.

இதனுற் படிமேல் ஆசை பல கொண்டார்க்கு அருள்கின்ற நீ திருவடி மேல் ஓராசையொன்றே கொண்ட எனக்கு அருளாமை நன்றன்றென முறையிட்டவாரும். (12)

3335. நாயேன் உலகில் அறிவுவந்த நான்தொட்
டிந்த நாள்வரையும்
ஏயேன் பிறிதி லுன்குறிப்பே எதிர்பார்த்
திருந்தேன் என்னுடைய

தாயே பொதுவில் நடம்புரிஎந் தாயே
தயவு தாராயேல்
மாயேன் ஐயோ எதுகொண்டு வாழ்ந்திங்
கிருக்கத் துணிவேனே.

உரை : எனக்குத் தாயாகும் பெருமானே, தில்லையம்பலத்தில் திரு நடனம் செய்கின்ற எந்தையே, நாய் போற் கடைப்பட்ட யான் இவ் வுலகில் எனக்குரிய உண்மையறிவு தோன்றிய நாள் தொடங்கி இந்நாள் வரையில் பிறவற்றில் பொருந்தாமல் உன்னுடைய அருட் குறிப்பையே எதிர்பார்த்திருக்கின்றேன்; திருவருளே நீ நல்காயாயின் இறந் தொழிவ தன்றி, ஐயோ, எதனைப் பற்றுகக் கொண்டு இவ்வுலகில் வாழ்ந்திருக்க நினைப்பேன். எ.று.

உலகுயிர்கட்கு உருவும் பொருளும் படைத்தளித்தல் பற்றி, "என்னு டைய தாயே" என்றும், அறிவொளி நல்குதலால் "எந்தாய்" என்றும் இசைக்கின்றார். தில்லையம்பலத்துக்குப் பொது என்பது ஒரு பெயர். தாழ்வுடைமை புலப்படுத்தற்கு "நாயேன்" என வுரைக்கின்றார். தாழ்வுடைமை சைவ நெறிக்கு இன்றியமையா தென்பர். "தாழ்வெனும் தன்மையோடு சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறல் அரிது" (சிவ. சித்தி) என அருணந்தி சிவனார் கூறுவர். மக்களினத்துக்குப் பிறந்த பின் பொறியறிவு ஓரளவு தோன்றி வளர்ந்த பின்பே ஓர்ந்துணரும் உண்மை யறிவு ஒளிர்தலால், "உலகில் அறிவு வந்த நாள் தொட்" டென வுரைக் கின்றார். இதற்கிது வெனப் பேசும் திறம் உண்மையுணர்வின் பயனுத லால் காரைக்காலம்மையார், "பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்" (திருவந்) எனத் தெரிவிக் கின்றார். திருவருட்கு வேறுய பொருளறிவைப் "பிறிது" என்றும், அதனைத் தாம் நயவாமை புலப்பட "ஏயேன்" என்றும் இயம்புகின்றார். குறிப்பு - திருவருள். ஞானம் - அவ்வப்போது தோன்றி மயக்கம் போக்கினமையின், "குறிப்பே எதிர்பார்த்திருந்தேன்" என்று கூறு கின்றார். திருவருளறிவு துணையாக எய்தாதாயின் தமக்கு உலகில் வாழ் வில்லை என்று வற்புறுத்துவாராய், "தயவு தாராயேல் மாயேன் எது கொண்டு வாழ்ந்து இங்கிருக்கத் துணிவேன்" எனச் சொல்லுகின்றார். மாய்தல் - இறைத்தல். அருட் குறிப்பில் வழி எய்தும் ஏதம் நினைந்து அஞ்சுதல் விளங்க, "ஐயோ" என்கின்றார்.

இதனால், வாழ்க்கைக்குத் திருவருட் குறிப்பு இன்றியமையா தென தெரிவித்தவாறும். (13)

3336. நயத்தால் உனது திருவருளே நண்ணுக்
கொடியேன் நாய்உடம்பை
உயத்தான் வையேன் மடித்திடுவேன் மடித்தாற்
பின்னர் உலகத்தே
வயத்தால் எந்த உடம்புறுமோ என்ன
வருமோ என்கின்ற
பயத்தால் ஐயோ இவ்வுடம்பைச் சுமக்கின்
றேன்எம் பரஞ்சுடரே.

உரை ; மேலாய ஞான விளக்கமாகிய பெருமானே, அன்பால் உன்னுடைய திருவரு ணெறியைப் பொருந்தாமையாற் கொடியனகிய யான் நாய்த் தன்மை பொருந்திய எனது இவ்வுடம்பை உய்ந்து நிற்க விடாமல் அழித்து மாய்த்து விடுவேன்; அவ்வாறு செய்தால் பின்னரும் இவ்வுலகத்தில் வினை வயத்தால் எந்தவுடம்பு வந்தடையுமோ? யாது வருமோ என்ற அச்சத்தால் இவ்வுடம்பைச் சுமந்து திரிகின்றேன். எ.று.

ஒளி தரும் பொருள்கள் எல்லாவற்றிற்கும் மேலாய் ஞான அருளொளி பரப்பும் பரம்பொருளாதலின், சிவனைப் "பரஞ்சுடரே" எனவும், அதற்குத் தமது உரிமை புலப்படுத்த "எம் பரஞ்சுடரே" எனவும் எடுத்துரைக்கின்றார். ஞானப் பேற்றுக்கு ஒத்தது தூய அன்பாதலால் "நயத்தால்" என்றும், திருவருள் காட்டும் ஞான நெறியன்றிப் பிற வெல்லாம் கோடிய நெறியின வாதலுணர்த்தத் "திருவருளே நண்ணுக் கொடியேன்" என்றும் இயம்புகின்றார். இழிவு குறித்தற்குத் தமது தேகத்தை "நாயுடம்பு" என நவில்கின்றார். உயவைத்தலாவது உணவும் உடையும் மருந்தும் தந்து பேணுதல். செய்வது திண்ணிதின் விளங்க, "மடித் தொழிவேன்" என வெறுத்துரைக்கின்றார். செய்யாமைக்குக் காரணம் கூறுவாராய், "மடித்தாற் பின்னர் உலகத்தே எந்த உடம்புறுமோ என்ன வருமோ என்கின்ற" பயம் தடுக்கின்றது எனவும், உடம்பு வினை வழி வருவதென அறிந்தோர் கூறுதலால், "வயத்தால் எந்த உடம்புறுமோ" எனவும், மக்களுடம்பன்றி வேறு உயிரினத்து உடம்பு எய்தலாமாகலின், "என்ன வருமோ" எனவும் இயம்புகின்றார். "இப்பிறவி தப்பினுல் எப்பிறப் பெய்துமோ, யாது வருமோ" எனப் பிற பெரியோரும் கூறுவது காண்க. உடம்பு மாறும் என்ற அச்சம் காரணமாக இவ்வுடம்பை மாய்க்காமல் ஓம்புகின்றேன் என்பாராய், "பயத்தால் இவ்வுடம்பைச் சுமக்கின்றேன்" எனத் தெரி யவுரைக்கின்றார்.

இதனுல், திருவருள் நாட்டம் பெருதவுடம்பை மாய்க்க எண்ணி மாட்டாமை விளக்கியவாறும். (14)

3337. இன்ப மடுத்துன் அடியர்எலாம் இழியா
தேறி யிருக்கின்றார்
வன்ப ரிடத்தே பலகாற்சென் றவரோ
டுறவு வழங்கிஉன்றன்
அன்பர் உறவை விடுத்துலகில் ஆடிப்
பாடி அடுத்தவினைத்
துன்ப முடுகிச் சுடச்சுடவுஞ் சோறுண்
டிருக்கத் துணிந்தேனே.

உரை : பெருமானே, உன்னுடைய அடியவ ரெல்லாரும் இன்ப மார்ந்து தாழ்வின்றி யுயர்ந்து விளங்குகின்றார்களாக, அன்பில்லாத வன்பர் குழலிற் பல முறையும் சென்று கூடி அவருடைய தொடர்பு கொண்டு உனக்கு அன்பராகிய நன்மக்கள் கூட்டத்தின் நீங்கி உலகிய

லின்பத்தை ஆடியும் பாடியும் நுகர்ந்தும், என்னைச் சூழ்ந்த வினைக்கேற்பத் துன்பம் தோன்றி மிக்குறத் தாக்கிய போதும் சோறுண்டு உடல் வளர்ப் பதையே குறிக் கொண்டிருந் தொழிந்தேன். எ.று.

சிவனடியார் சிவனையே நினைந்து திருவருளின்பத்தை நுகர்ந்து ஞான வாழ்வில் முறையே உயர்ந்தோங்கினமை காண்கின்றுராகலின், "இன்பம் மடுத்து உன் அடியரெலாம் இழியா தேறியிருக்கின்றார்." என வுரைக்கின்றார். குற்றம் செய்து தாழ்வுபடாது ஞான வொழுக்கத்தால் மெய்யின்ப மெய்தி இருப்பது பற்றி, "இன்பம் மடுத்" தென்றும், "இழியா தேறி யிருக்கின்று" ரென்றும் இயம்புகின்றார். வன்பர் - சிவன்பால் அன்பு கொள்ளாத வன்மனமுடையவர். அவருடைய உறவாலும் நட்பாலும் ஞான வின்பம் பெரு தொழிந்தமையை, "வன்பரிடத்தே பல காற் சென்று அவரோடு உறவு வழங்கி" என்றும், "உன்றன் அன்பர் உறவை விடுத்து" என்றும் இசைக்கின்றார். பல்காற் சென்று பயின்ற தனால் உறவு தோன்றியதும், வன்பர் உறவால் நல்லன்பர் உறவு நீங்கிய தும் புலப்பட, "பல்காற் சென்று" எனவும், "அன்பர் உறவை விடுத்" தெனவும் வருந்தியுரைக்கின்றார். சிவஞான வாழ்விற் கருத்துச் செல் லாமல் உலகியற் போகங்களில் சென்று தோய்ந்தமை காட்ட, "உலகில் ஆடிப் பாடி" என்றும், அதனால் துன்பமே பெற்றமையுணர்த்தற்கு "அடுத்த வினைத் துன்பம் முடுகிச் சுடச் சுடவும்" என்றும், உலகியற் போகத்தை வெறுது தொடர்ந்து நுகர்வதற்கே நினைவு செல்வது கூறுவா ராய், "சோறுண்டிருக்கத் துணிந்தேன்" என்றும் சொல்லுகின்றார். "மெய்யர் வெறியார் மலர்ப்பாதம் மேவக் கண்டும் கேட்டிருந்தும், பொய்யனேன் நான் உண்டுடுத் திங்கிருப்ப தானேன்" (சதகம்) என மணிவாசகப் பெருமான் உரைப்பது காண்க.

இதனால், திருவருணெறி நோக்காது உலகியல் நெறியில் தோய்ந்து துன்புறுகின்றமை சொல்லியவாறும். (15)

3338. எந்நாள் கருணைத் தனிமுதல்நீ என்பால்
இரங்கி அருளுதலோ
அந்நாள் இந்நாள் இந்நாள்என் றெண்ணி
எண்ணி அலமந்தேன்
சென்னுள் களில்ஓர் நன்னுளுந் திருநா
ளான திலைஐயோ
முன்னுள் என்னை ஆட்கொண்டாய் என்ன
நாணம் முடுகுவதே.

உரை : திருவருட்குத் தனிமுதலாகிய பெருமானே, எளியவனுகிய என்னிடத்து இரக்கமுற்றுத் திருவருள் ஞானம் நல்கும் நாள் எந்த நாளோ, அறியேன்; அந்த நாள் இந்த நாள் என்று ஒவ்வொரு நாளையும் நினைந்து ஏமாந்து வருந்துகிறேன்; கழிந்த நாட்களில் ஒருநாளும் திருவருள் பெற்ற நன்னாளாக அமைந்ததில்லை; முன்னொருநாள் என்னை ஆட்கொண்டாய் என்று எண்ணுதற்கும் நாணம் மிக்குத் தடுக்கின்றது, காண். எ.று.

திருவருள் ஞான வின்பமே யுருவாகக் கொண்ட பெருமானுதலால் சிவனைக் "கருணைத் தனிமுதல்" எனச் சாற்றுகின்றார். அவன் நல்குவது அத்திருவருள் ஞானானந்தமாதலால் அந்த நாளே வாழ்நாட்களில் சிறந்த நன்னாளாகும்; அஃது எப்போது எய்துமோ என வேண்டுகின்றமையின், "என்பால் இரங்கி யருளுதல் எந்நாள்" என விண்ணப்பிக்கின்றார். அருள் புரியும் நாள் முன்னுறத் தெரியாமையால், "அந்நாள் இந்நாள் இந்நாள் என்று எண்ணியலமந்தே" னென்கின்றார். அலமரல் - ஏமாற்றத்தாற் கலங்குதல். அடுக்கு ஆர்வ மிகுதி குறித்தது. கழிந்த நாட்கள் ஒவ்வொன்றையும் திருவருட் பேற்றுக் கமைந்த நன்னாளாக எண்ணி எதிர்நோக்கியும் அஃது எய்தா தொழிந்தமையின் வருத்த முற்றது கூறுவாராய், "சென்னாட்களில் ஓர் நன்னாளும் திருநாளான திலே" எனவும், அதனை நினைக்கும் போது துக்கம் மிக்கமை புலப்பட, "ஐயோ" எனவும் இயம்புகின்றார். உலகியற் சூழலிற் புகுந்து கிடந்த போது முன்பொருநாள் திருவருள் ஞான முண்மையும் அது நல்கும் இன்பமும் காட்டிய நலத்தை "முன்னுள் என்னை யாட்கொண்டாய்" என்றும், வழி நாள் ஒன்றிலும் அது மீள எய்தாமையின் அதனை நினைத்தற்கு நெஞ்சம் வெள்குகின்றது என்பாராய், "ஆட் கொண்டாய் என்ன நாணம் முடுகுவதே" என்றும் மொழிகின்றார். முடுகுதல்- ஈண்டு பெருக்கித் தடை செய்தல்.

இதனால், வழி நாள் ஒன்றிலேனும் நல்கி வற்புறுத்தாமையின் முன்னுள் அருள் செய்து ஆட்கொண்டாய் என்று நினைத்தற்கும் நெஞ்சம் நாணமுறுகிற தென வுரைத்தவாறும். (16)

3339. எந்த வகைசெய் திடிற்கருணை எந்தாய்
நீதான் இரங்குவையோ
அந்த வகையை நான்அறியேன் அறிவிப்
பாரும் எனக்கில்லை
இந்த வகைஇங் கையோநான் இருந்தால்
பின்னர் என்செய்வேன்
பந்த வகைஅற் றவர்உளத்தே நடிக்கும்
உண்மைப் பரம்பொருளே.

உரை : பற்று வகைகளைத் துறந்த பெரியோர் திருவுள்ளத்தில் எழுந்தருளும் உண்மைப் பரம்பொருளாகிய சிவனே, யாது செய்தால் எந்தையாகிய நீ சிந்தையில் அருள்கூர்ந்து என்பால் இரக்கம் கொள்வாயோ, அதனை நான் அறியேன்; அதனை எனக்கு அறிவிக்கத்தக்க பெரியவர்களும் இல்லை; இங்கே இவ்வாறு நான் இப்போது கிடந்து தொழி வேனையின், பின்பு நான் யாது செய்ய வல்லவனுவேன். எ.று.

பந்தம் - பற்று. யான் எனதென்னும் இருவகைப் பற்றும் இல்லாத தூயவர் உள்ளமே ஞானத் திருவம்பலம் என்று பெரியோர் உரைத்தலால், "பந்த வகை யற்றவர் உளத்தே நடிக்கும் உண்மைப் பரம் பொருளே" என்று புகல்கின்றார். உடல் பொருள் உயிர் எனவும், உற்றார் உறவினர் நண்பர் எனவும் நிற்கும் தொடர்புகளைப் பாசம் என்றலு முண்டு. அனுதி

முத்த சித்துப் பொருளாதல் விளங்க "உண்மைப் பரம் பொருள்" என்று இயம்புகின்றார். திருவருள் ஞானப் பேற்றுக் கெனச் சரியை முதலாகப் பல கூறுபவாதலின், "எந்த வகை செய்திடிற் கருணை எந்தாய் நீதான் இரங்குவையோ? எனக் கேட்கின்றார். இந்தச் செயல்தான் திருவருட் பேற்றுக் குரியதெனத் திட்டவட்டமாகத் தெரியேன் என்பாராய், "அந்த வகையை நான் அறியேன்" என்றும், அறிந்தவருள் யாரும் எனக்கு உரைக்கச் சமைந்தவர் இங்கே யில்லை என்றற்கு "அறிவிப்பாரும் எனக் கில்லை" என்றும் எடுத்துரைக்கின்றார். அறிவதுமின்றி அறிவிக்கப்படுவது மின்றி அறியாமை யிருளிற் கிடந்து உழல்வேனையின் என் பிறப்பு பயனின்றிக் கெடுவதாம் என்பாராய், "இந்த வகை இங்கு ஐயோ நான் இருந்தால் பின்னர் என் செய்வேன்" என முறையிடுகின்றார்.

இதனால், திருவருள் ஞானப் பேற்றுக்குரிய நெறி முறைகளை அறியாமையும் அறிவிப்பார் இல்லாமையும் எடுத்தோதி அருள் நெறி வழங்குக என வேண்டியவாறும். (17)

3340. அடுக்குந் தொண்டர் தமக்கெல்லாம் அருளீந்
திங்கே என்னளவில்
கொடுக்குந் தன்மை தனையளித்தால் ஒளிக்கப்
படுமோ குணக்குன்றே
தடுக்குந் தடையும் வேறில்லை தமியேன்
தனை இத் தாழ்வகற்றி
எடுக்குந் துணையும் பிறிதில்லை ஐயோ
இன்னும் இரங்கிலையே.

உரை : உயர்குண நிறைவாற் குன்று போன்ற பெருமானே, அன்பால் வந்தணையும் திருத்தொண்டர்கள் எல்லார்க்கும் இவ்வுலகில் திருவருள் நல்கிய நீ என்னைப் பொறுத்த அளவில் நல்கும் நற்பண்பை மறைப்பாயாயின், அது ஒடுங்கி மறையுமோ? எனக்கு நல்குதல் ஆகாதென நின்னைத் தடுக்க வல்லதொன்றும் இல்லை; உலகியல் தொடர்பு நீங்கித் தனித்திருக்கும் எனக்கு இந்தத் திருவருள் ஞானத் தாழ்வு போக்கி உய்தி பெறுவிக்கும் துணையும் எனக்கு வேறில்லை, காண். எ.று.

சலித்த லில்லாத உயர் குணங்களே திரண்டுயர்ந்த மலை போல்பவன் சிவபிரான் என்பதனால், "குணக் குன்றே" என்று கூறுகின்றார். சிவப் பேறு பெற்ற திருத்தொண்டர் அனைவரும் அன்பு நெறி யொன்றையே பற்றி உயர்ந்தன ரென வரலாறு கூறுதலால், "அடுக்கும் தொண்டர் தமக் கெல்லாம் அருளீந்து" என வுரைக்கின்றார். அருள்கிலன் எனக் கொடுமை கூறுகின்றாராயினும், அது தம் மொருவர்பால் நிகழ்வதன்றி ஏனை எல்லார் பாலும் நிகழாது பெருக அருளும் பெரும் பண்பாதலை எடுத்தோதி இன்புறுவாராய், "என்னளவிற் கொடுக்கும் தன்மைதனை யொளித்தால் ஒளிக்கப் படுமோ" என ஓதுகின்றார். பேரருளும் பேராற்றலு முடைய பெருமானதலால் சிவனது அருட் செயலைத் தடுத்து விலக்குவாரில்லை; தான் எல்லாம் வல்லவன் என்ற உண்மை விளங்க, "தடுக்கும் தடையும்

வேறில்லை'' என்றும், அருள் பெருமையால் தாழ்வுற்று வீழ்ந்து படும் தமக்கு அப்பெருமான் திருவருளல்லது துணையாவது வேறு யாதும் இல்லை என்பார், ''தமியேன் தனை இத்தாழ்வகற்றி எடுக்கும் துணையும் பிறிது இல்லை'' என்றும், திருவுள்ளம் இரங்கி யருளாமை நன்றன்று என்றற்கு ''ஐயோ இன்னும் இரங்கிலையே'' என்றும் இயம்புகின்றார்.

இதனால் அருட்பேற்றின் இன்றியமையாமையை வற்புறுத்தியவாறும். (18)

3341. எல்லாம் உடையாய் நின்செயலே எல்லாம்
என்றால் என்செயல்கள்
எல்லாம் நினது செயல்அன்றே என்னை
என்னைப் புறந்தள்ளல்
வல்லாய் என்னைப் புறம்விடுத்தால் புறத்தும்
உன்றன் மயம்அன்றே
நல்லார் எங்கும் சிவமயம்என் றுரைப்பார்
எங்கள் நாயகனே.

உரை : எங்கட்கு நாயகனே, எல்லாமுடைய பெருமானே, உலகிற் செய்யப்படும் செயல்களனைத்தும் நின் செயலே எனப்படுகின்றன எனப் பெரியோர் கூறுவ துண்மையாயின் யான் செய்யும் செயல்கள் யாவும் நின்னுடைய செயல்களாகு மன்றே? அற்றாக, என்னை யேலாது புறம் தள்ளுவது எங்ஙனம் அமையும்? எல்லாம் வல்லவனே, என்னைப் புறம் போக விடுவாயாயின், புறம் என்பதும் நீ நிறைந்த விடமன்றே? இதனை நன்கறிந்த நல்லறிஞர் அனைவரும் எங்கும் எல்லாம் சிவமயம் என்று நவில்கின்றார்கள், காண். எ.று.

உலகும் பொருளும் பொருளின் புடை பெயர்ச்சியாகிய செயலும் யாவும் சிவன் செயல் என்பது ஆன்றோர் கருத்தாதலின், ''எல்லாமுடையாய் நின் செயலே எல்லாம் என்றால்'' எனக் கூறுகின்றார். எல்லாம் நின் செயலாயின், யான் செய்யும் செயல் யாவும் நின் செயலேயாம் என்பார், ''என் செயல்கள் எல்லாம் நினது செயலன்றே'' என வுரைக்கின்றார். அங்ஙனமாயின் என்பால் நிகழும் செயல்களை நோக்கி என்னை அருளாமல் புறத்தே விலக்குவது என்ன முறையா மென்பார், ''என்னை என்னைப் புறம் தள்ளல்'' என வினவுகின்றார். நின்னுடைய நிறைந்த நிறைவுக்கு-வியாபகத்துக்கு அகம் புறம் என வேறுபாடு இல்லையாதலால், புறம் என்பதும் நினது நிறைவுள் அடங்கியதாகலின் புறம் போக்குதல் இல்லை காண் என்பார், ''புறத்தும் உன்றன் மயமன்றே'' என வுரைக்கின்றார். அன்றே என்பது ஆம் என்னும் பொருளது. இவ்வுண்மைக்குச் சான்று வேண்டுமெனில், ''நல்லார் எங்கும் சிவ மயம் என்று உரைப்பார் காண்'' என்று நவில்கின்றார்.

இதனால் எல்லாம் சிவன் செயல், எங்கும் சிவ மயம் என்ற அருளுரைகளின் நயம் கண்டவாறும். (19)

3342. கூடுங் கருணைத் திருக்குறிப்பை இற்றைப்
பொழுதே குறிப்பித்து
வாடுஞ் சிறியேன் வாட்டம்எலாந் தீர்த்து
வாழ்வித் திடல்வேண்டும்
பாடும் புகழோய் நினைஅல்லால் துணைவே
றில்லைப் பரவெளியில்
ஆடுஞ் செல்வத் திருவடிமேல் ஆணை
முக்கால் ஆணையதே.

உரை : சான்றோர் பாடும் புகழை யுடைய சிவபெருமானே, இப் பொழுதே நின் திருவருளைக் கூடுதற்குரிய அருட் குறிப்பைத் தெரிவித்து, அது பெருமல் வாடி வருந்தும் சிறுமை யுடையவனுகிய எனது வருத்த மனைத்தையும் போக்கி நினது அருளில் வாழச் செய்தல் வேண்டும்; நின்னை யொழிய எனக்குத் துணையாவார் வேறு யாவருமில்லை; மாயா மண்டலத்துக்கு மேலுள்ள ஞான வெளியில் ஆனந்தக் கூத்தாடும் திருவடி மேல் முக்காலும் ஆணையாகச் சொல்லுகின்றேன். எ.று.

எல்லாம் வல்ல சிவ பரம்பொருளின் திருவருட் குறிப்பின்றி ஓரணுவும் அசையாதாகலின், உயிர்கள் திருவருளைக் கூடுதற்கு அப்பெருமானது அருள் வேண்டப் படுதலால் கூடும் கருணைத் திருக்குறிப்பை "இற்றைப் பொழுதே குறிப்பித்" தருளல் வேண்டும் என்று கூறுகின்றார். உலகியல் வாழ்வில் உளதாகும் வருத்த மிகுதி கூறி இப்பொழுதே திருவருளிற் கூடும் குறிப்பை யருளுக என முறையிடுகின்றமை புலப்பட, "இற்றைப் பொழுதே குறிப்பித்து" எனக் கூறுகின்றார். வாடும் வாட்டம் என்பது உலகின்கண் உளவாகும் பிறவித் துன்பங்களால் எய்தும் வருத்தம். இத் துன்பங்கள் அறிவைச் சுருக்கிச் சிறுமை யுறுவிக்கின்றன வாகலின், சிறுமை யுறுத திருவருள் வாழ்வில் உய்த்தல் வேண்டு மென்றற்குச் "சிறியேன் வாட்டமெலாம் தீர்த்து வாழ்வித்திடல் வேண்டும்" என விண்ணப்பிக்கின்றார். திருஞானசம்பந்தர் முதலிய பெருமக்கள் பாடிய பாடுபுகழ் பெற்ற பரமனுதலால், "பாடும் புகழோய்" எனப் பரவுகின்றார். தமக்கு வேண்டிய அருளின்ப வாழ்வு நல்குதற்குச் சிவபிரானை யல்லது வேறு பிறர் இல்லை யென்பார், "நினையல்லால் துணை வேறில்லை" என்றும், இது முக்காலும் உண்மை யென வற்புறுத்து வாராய், "பரவெளியில் ஆடுஞ் செல்வத் திருவடி மேல் ஆணை முக்கால் ஆணையதே" என்றும் இயம்புகின்றார். சுத்தம் அசுத்தம் எனப்படும் இரு வகையும் தன்னுட் கொண்ட மாயா மண்டலத்துக்கு மேலது பரவெளி யென அறிக. இதனைச் சிதாகாசப் பெருவெளி என்பதுமுண்டு. இப் பெருவெளியில் இறைவன் ஞானத் திருக்கூத்து இயற்றுகின்றனனாதலின், "பரவெளியில் ஆடும் செல்வத் திருவடி" என மொழிகின்றார்.

இதனால் திருவருளின்ப வாழ்வு அருளுக என முறையிட்டவாறும்.

திருச்சிற்றம்பலம்

8. ஆன்ம விசாரத் தழுங்கல்

அஃதாவது, ஆன்மாவாகிய தான் செய்த செயல்களை நினைந்து அவற்றின் கொடுமைகளை ஓர்ந்து வருந்துமாற்றால் தன்னைத் தூய்மை செய்து கொள்வதாம். அழுங்குதல் - வருந்துதல். தூய்மை பெற விரும்புவோர் தம்முடைய குற்றங்களைத் தாமே யுணர்ந்து வருந்தி அவை பின்னரும் உண்டாகாவாறு காத்துக் கொள்ளுவது ஆன்ம விசாரத்தின் பயன். இதன்கண், ஆன்ம நாட்டம் மேலிட்டு உயிர்களிற் சிறந்த மக்களுயிர் செய்கின்ற குற்ற வகைகளை யெண்ணுகின்றார். ஆன்மாக்கள் அனைத்தையும் ஒப்ப நோக்கி அவை செய்யும் குற்றமனைத்தும் தம் மேலிட்டு, ஆன்ம கோடிகட்கு உய்தி யருள்க என்று இறைவனை வேண்டலுற்று, பெரியோர் பொறுத்தற் கரியனவும், வெகுள்வனவும், தன்னலம் பேணலும், செருக்கு மிகுதியும், வட்டிக் கொடுமையும், ஈகை இரக்க முதலியன இன்மையுமாகிய குற்றங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3343. போகமே விழைந்தேன் புலைமனச் சிறியேன்
பூப்பினும் புணர்ந்தவெம் பொறியேன்
ஏகமே பொருள்என் றறிந்திலேன் பொருளின்
இச்சையால் எருதுநோ வறியாக்
காகமே எனப்போய்ப் பிறர்தமை வருத்திக்
களித்தபா தகத்தொழிற் கடையேன்
மோகமே உடையேன் என்னினும் எந்தாய்
முனிந்திடேல் காத்தருள் எனையே.

உரை : புலைத்தன்மை யுற்ற நினைவுகளாற் சிறியனாகிய யான் மகளிரின்பத்தையே விரும்பி யொழுகலுற்று பூப்புக் காலத்திலும் அவர்களைக் கூடும் கொடிய அறிவுடையனாவேன்; பரம்பொருள் ஒன்றே யென்பதறியேன்; உலகியற் பொருள்கள் மேல் உள்ள ஆசையால் எருதின் நோயை எண்ணுதகாக்கையைப் போல் பிறர்பாற் சென்று அவரைத் துன்புறுத்தி மகிழ்ந்த பாதகச் செயலால் கீழ்மையுற்ற யான் மோகமாகிய குற்றம் மிக வுடையேனாயினும் என்னை வெறுத்தொழிக் காமல் காத்தருள்க எ.று.

கொலை புலை முதலிய குற்ற நினைவுகளாற் கீழ்மையுற்ற மனத்தினேன் என்றற்குப் "புலை மனச் சிறியேன்" எனக் கூறுகின்றார். காம வேட்கை மீதூர்தலால் நல்லறி விழைந்து காம நுகர்ச்சியிலே மனமும் செயலும் தோய்ந்திருந்தமை விளங்க, "போகமே விழைந்தேன்" என்றும், பூப் பெய்திய காலத்தில் மகளிரைக் கூடுதல் ஆகா தெனப் பெரியோர்

விலக்கினராயினும் அதனை மதியா தொழுகிய குற்றத்தைப் "பூப்பினும் புணர்ந்த வெம்பொறியேன்" என்றும் புகல்கின்றார். வெம்பொறி - கொடிய செயலை யூக்கும் பொல்லாத அறிவு. பல தெய்வக் கொள்கை யுற்றல மரும் திறத்தை, "ஏகமே பொருள் என்று அறிந்திலேன்" என மொழி கின்றார். "பல்லோரும் பரம்பொருள் ஒன்று உண்டு. அதற்பாற் பரிவு கொண்டு பரசி வாழ்தல் எல்லோரும் செய்கடனும்" எனப் பிற்காலத் தான்றோர் கூறுவர். ஒன்றென்னும் அறிவு சமரச மனவுணர்வுக்கு ஆக்கமாய் எல்லோர்பாலும் அன்பு செய்து இன்புற வுதவுதலின், பொருள் ஏகம் என்ப தறியாமை குற்றமாயிற்று. ஏகம் - ஒன்றென்று பொருள்படும் வடசொல். "ஏகமே வாத்துதீயம் பிரமம்" என்பது சாந்தோக்கியம். பொருள் இச்சை - பொருளைப் பெருக ஈட்டுதல் வேண்டு மென்ற பேராசை. ஆசை மேலீட்டால் பிறர்பாற் பரவி யிருக்கும் பொருளைக் கவர்ந்து தன்பால் தொகுத்துக் கொள்ள விரும்பித் தீ நெறியிற் கவர்தலும் கொலை புலை முதலிய தீச் செயல்களால் பெறுவதுமாகிய குற்றத்தைப் "பிறர் தமை வருத்திக் களித்த பாதகத் தொழிற் கடையேன்" எனப் பகர்கின்றார். பிறருடைய பொருளைக் கவர்ந்து கொள்ளும் செயலை விளக்குதற்கு "எருது நோய் அறியாக் காகமே" எனக் காட்டு கின்றார். எருதின் மேற் தோலில் மயிர்க் கால்களிற் கடித்துக் கொண் டிருக்கும் உண்ணிகளை மேயும் காக்கை, தன் வாயலகாற் கொத்தி எடுக்குங்கால் எருதிற்குப் புண்ணும் நோயும் உண்டாதலை எண்ணுவ தில்லையாதலால் இவ்வாறு கூறுகின்றார். பொருள் கவரப்படுவோர் படும் துன்பத்தை யுணர்த்தற்குப் "பிறர் தமை வருத்தி" எனவும், கவர்ந்து கொள்வோர் மனநோயை எண்ணைக் கொடுமையைக் "களித்த பாதகத் தொழிற் கடையேன்" எனவும் இயம்புகின்றார். உள்ளதன் உண்மை கண்டறியும் ஒட்பம் இல்லாத குறையை "மோகமே யுடையேன்" என் கின்றார். இத்தனைக் குற்றங்களை யுடையவனுதலின் என்னைக் காண்பதே நின் திருவுள்ளத்தில் வெறுப்பை யுண்டு பண்ணுமாயினும் வெருமல் அருளுதல் வேண்டும் என்பாராய், "முனிந்திடேல் காத்தருள் எனையே" என்று மொழிகின்றார்.

இதனைப் பொறுத்தற் கரிய குற்றமுண்மை எடுத்தோதிப் பொறுத்து அருள் புரிக என முறையிட்டவாறும். (1)

3344. பூப்பினும் பலகால் மடந்தையர் தமைப்போய்ப்
புணர்ந்தவெம் புலையனேன் விடஞ்சார்
பாப்பினுங் கொடியர் உறவையே விழைந்த
பள்ளனேன் கள்ளனேன் நெருக்கும்
ஆப்பினும் வலியேன் அறத்தொழில் புரியேன்
அன்பினுல் அடுத்தவர் கரங்கள்
கூப்பினுங் கூப்பாக் கொடுங்கையேன் எனினும்
கோபியேல் காத்தருள் எனையே

உரை : மகளிர்பாற் சென்று பூப்புக் காலத்தும் பன்முறையும் கலவிபிற் கூடிய வெவ்விய புலைத்தன்மை யுடைய யான், விடமுடைய பாம்பினும் கொடுமை யுடையவர் தொடர்பையே விரும்பி நின்ற பள்ளனும்

கள்ளனு மாவேன்; கதவிற் பலகைகளை நெருங்க இணைக்கும் ஆப்புப் போலும் வன்மை யுடையவன்; அறச் செயல்களைச் செய்யாதவன்; உண்மை யன்பர்கள் அணுக வந்து கைகுவித்து நிற்பினும் குவிக்காத கொடிய கையை யுடையவன்; ஆயினும் என் குற்றங்களைக் கண்டு சினம் கொள்ளாமல் என்னைக் காத்தருளல் வேண்டும். எ.று.

விலக்காய நாட்களிலும் மகளிரைப் பலகாற் கூடுதல் பெருங் குற்றம் என்பது பற்றிப் "பூப்பினும் பலகால் மடந்தையர் தமைப் போய்ப் புணர்ந்த வெம்புலையனேன்" என்று கூறுகின்றார். விலக்கு நாட்களில் ஒருபுறத்தே ஒதுங்கியிருப்பாராதலின், அவர் இருக்குமிடம் சென்று கூடினமை தோன்ற "போய்" எனப் புகல்கின்றார். கழிகாமத்தனுயினமை பற்றி "வெம்புலையனேன்" என்று கூறுகின்றார். விடமுடைய பாம்பு போல நெஞ்சில் வஞ்ச முடையவர் தொடர்பு விலக்கத் தக்கதாகவும், தாம் அவரை விடாது கூடி யிருந்த குற்றத்தைக் காட்டற்கு "விடஞ்சார் பாப் பினும் கொடியர் உறவையே விழைந்த பள்ளனேன்" என வுரைக்கின்றார். பாம்பு - பாப்பென வலித்தது. பள்ளன் - புலையருட் கீழ்மகன். புலைச் சாதியுட் கீழ்ச் சாதியைச் சேர்ந்தவன் என்பர். கள்ளன் - திருடன். ஆப்பு - மரப் பலகைகளை இறுக இணைப்பவர் கையாளும் மரத் துண்டு. இணைப்பு வாய் தோன்றுவாறு புணர்த்தும் திறம் பற்றி "ஆப்பினும் வலி யேன்" என்கிறார். செய்தற் குரியதைச் செய்யா தொழிந்த குற்ற முடைமை புலப்பட, "அறத் தொழில் புரியே" னென அவலிக்கின்றார். தம்பால் அன்புடன் வந்தவர் கை கூப்பித் தொழுத காலைத் தானும் கை குவித்துத் தொழுதல் முறையாகவும் அதனைச் செய்யா தொழிந்த குற்றத்தை, "அன்பினுல் அடுத்தவர் கரங்கள் கூப்பினும் கூப்பாக் கொடுங் கையேன்," என உரைக்கின்றார். கொடுங்கை - தீங்கு செய்ய வளைந்த கை; முறை தவறிய கொடுமை மிக்க கை யென்றுமாம்.

இதனுல், மிக்க சினமுற்றுப் புறக்கணிக்கத் தக்க குற்றங்களை யெடுத் தோதிச் சினந்திடல் வேண்டா என இறைவனை வேண்டியவாறும். (2)

3345. விழுத்தலை நெறியை விரும்பிலேன் கரும்பின்
மிகஇனிக் கின்றநின் புகழ்கள்
வழுத்தலை அறியேன் மக்களே மனையே
வாழ்க்கையே துணைஎன மதித்துக்
கொழுத்தலை மனத்துப் புழுத்தலைப் புலையேன்
கொக்கனேன் செக்கினைப் பலகால்
இழுத்தலை எருதேன் உழத்தலை உடையேன்
என்னினும் காத்தருள் எனையே.

உரை : விழுமிதாய் உயர்ந்த நன்னெறியை விரும்பாத யான், கரும்பின் சாற்றினும் மிகவும் இனியவாகின்ற நின்னுடைய புகழ்களை எடுத்தோதுவதை நினையாமல் மக்கள் மனைவியாகிய இவர்களோடு கூடி வாழும் வாழ்க்கையே உயிர் துணையாம் எனக் கருதிக் கொழுத்து அலை கின்ற மனத்தையுடைய புழு மிக்க தலையையுடைய புலைய னெப்பவனும் கொக்குப் போல்பவனும் செக்கினைப் பன்முறையும் சுற்றிச் சுற்றி இழுக்கும் தொழிலை யுடைய எருது போல்பவனுய்த் துன்ப முறுதலையே யுடையவ

னும் ஆயினேனுயினும் என்னை வெறுக்காமல் காத்தருளல் வேண்டும். எ.று.

விழுத்தலை நெறி-உயர்ந்த தலையாய நன்மை விளைவிக்கும் அறநெறி. விழுப்பம் - உயர்வு; விழுப்பத்தை நல்கும் தலையாய அறநெறி எனினும் பொருந்தும். அம்மைக்குரிய விழுத்தலை நெறியை விரும்பேனுயினும் மறுமை அம்மை நலங்களைப் பயக்கும் நின் பொருள் சேர் புகழ்களை எடுத்தோதுவதையும் செய்யேன் என்பார், "கரும்பின் மிக இனிக்கின்ற புகழ்கள் வழுத்தலை யறியேன்" என வுரைக்கின்றார். இறைவன் புகழ்களை மனத்தால் நினைக்கும் போதும் நாவால் ஓதும் போதும் கரும்பின் சாற்றினும் இனிய தேன் ஊறி மகிழ்விப்பது பற்றி, "கரும்பின் மிக இனிக்கின்ற நின் புகழ்கள்" எனக் கூறுகிறார். கரும்பு - கரும்பின் சாறு. புகழ்களை யோத வூறும் தேன் - கருப்பஞ் சாற்றினும் மிக்க இனிமை யுடைய தென்பது கருத்து. இதனைச் "செந்தேன்" எனத் திருநாவுக்கரசரும், "ஊறுத அமிழ்" தென வில்லிபுத்தூரரும் எடுத்துரைக்கின்றனர். வழுத்தல்- ஓதுதல்; சொல்லுதலுமாம். மனைவி மக்களுடன் கூடிய வாழ்க்கையிற் பிறக்கும் இன்பத்தால் உடல் பூரிப்பும் ஊன் தடிப்பும் உண்டாதலின், "மக்களே மனையே வாழ்க்கையே துணையென மதித்துக் கொழுத்தலை மனத்தேன்" என உரைக்கின்றார். தீய எண்ணங்கள் பல மனச் செருக்கால் தோன்றிக் கெடுத்தலால், "புழுத்தலைப் புலையேன்" எனப் புகல்கின்றார். புழுத்தலை - ஈரும் பேனும் நிறைந்த தலை. தலையைத் தூய்மையுறப் பேணுதற்கு நேரமின்றிக் கீழ்மைப் பணியில் ஈடுபடுவது விளங்க, "புழுத்தலைப் புலையேன்" என்கின்றார். புலையேன் - புலையனை யொப்பேன். புலைத் தொழிலை யுடையேன் என்றுமாம். உறுபொருள் எய்துங் காறும் சோம்பி யிருக்குமாறு தோன்றக் "கொக்கனேன்" என்று கூறுகின்றார். "ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி யிருக்குமாம் கொக்கு" என்பர் பெரியோர். செக்கு - எள்ளினைப் பெய்து எண்ணெயாட்டும் பொறி. செக்கிழுக்கும் எருது சுழன்று சுழன்று வருதல் போல உயிர் வாழ்க்கை யொன்றே குறிக் கொண்டு அதனையே நினைந்து வருந்துதலை யுடையேன் என்பாராய், "செக்கினைப் பலகால் இழுத்தலை எருதேன் உழத்தலை யுடையேன்" என்று இயம்புகின்றார். எருதேன் என்பதைக் குறிப்பு முற்றெச்சமாய் உழத்தலை யுடையேன் என்பதனோடு இயைத்துக் கொள்க.

இதனால், மனை வாழ்க்கை யொன்றையே குறிக் கொண்டு செக்கிழுக்கும் மாடு போல் வருந்தும் குற்றத்தை எடுத்தோதியவாறும். (3)

3346. புலைவிலைக் கடையில் தலைகுனித் தலைந்து
பொறுக்கிய சுணங்கனேன் புரத்தில்
தலைவிலை பிடித்துக் கடைவிலை படித்த
தயவிலாச் சழக்கனேன் சழக்கர்
உலைவிலை எனவே வியக்கவெந் தொழிலில்
உழன்றுழன் றழன்றதோர் உளத்தேன்
இலைவிலை எனக்கென் றகங்கரித் திருந்தேன்
என்னினும் காத்தருள் 'எனையே.

உரை : புலால் விற்கும் கடைப்புறங்களில் தலையைத் தாழ்த்திக் கொண்டு அலைந்து சிறு துண்டங்களைப் பொறுக்கி யுண்ணும் நாய் போல்பவனுகிய யான், ஊரெல்லையில் விளை பொருளின் விலையைக் குறிக் கொண்டு அங்காடிக் கடை விலையைக் குறைத் தலைத்த இரக்கமில் லாத தீயவனுய், கேடில்லை செய்க எனத் தீயவர் உடனிருந் தியக்கக் கொடிய செயல்களை மேற் கொண்டு பலகாலும் முயன்ற மனத்தவனுய், எனக்கு ஒப்பாரில்லை யென்று அகம்பாவம் கொண்டிருந்த குற்ற முடையேனுயினும் என்னைக் காத்தருள்க. எ.று.

தலையைத் தாழ்த்தினலன்றித் தரையிற் கிடக்கும் இறைச்சித் துண்டங்களை எடுத்துண்ண மாட்டாமை கண்டு, "புலைவிலைக் கடையில் தலை குனிந்து அலைந்து பொறுக்கிய சுணங்கன்" என்று கூறுகின்ருர். சுணங்கன் - நாய். சிதறுண்டொழியும் இழிபொருள்களையும் அலைந்து பெறும் கீழ்மக்கள் இயல்பை இதனுற் குறித்துரைக்கின்ருர். புரம், ஈண்டு ஊர் எல்லைக்கண் உள்ள விளை புலங்கள் மேற்று. ஆங்கே விளைவுக்காகும் செலவைக் குறிக் கொண்டு அளவிடும் விலையே பொருளின் விலையாக்கி, பொருளை வாங்கி ஊர்க்குட் கொணர்ந்து விற்போருடைய உழைப்பை யும் வாழ்வையும் எண்ணியிடும் விலையை மதியாது இரக்கமின்றிக் குறைத்து விலை பேசுவது அங்காடிச் செய்கையை அலைக்கும் தீவினை யாதலால், "புரத்துத் தலைவிலை பிடித்துக் கடைவிலை படித்த தயவிலாச் சழக்கனேன்" என வுரைக்கின்ருர். தலைவிலை - பொருள் விளையுமிடத்து அமையும் விலை. கடைவிலை - விற்பனையாகு மிடத்து விலை. இடையிற் கொணர்வோர் உழைப்பும் முயற்சியும் எண்ணி விலை காண்டல் இரக்கப் பண்பு. இரக்கமின்றி அலக்கழித்தல் கூடாது என்பது அறநூற் கருத்து. "அங்காடிக் காரரை அலக்கழிக்காதே" என்பது பழமொழி. இது பற்றியே அங்காடி விலையை அலக்கழிப்பவரைத் "தயவிலாச் சழக்கர்" என்று கூறுகின்ருர். படித்தல் - ஈண்டுக் குறைத்தற் பொருளில் வந்தது; வடிக்கு மிடத்துப் பொருள் அளவு குறைவது காண்க. அங்காடிக்காரர் களை யலைக்கும் தீயவர் சொற் கொண்டு, அங்காடி விலையை அழித் துழன்ற தமது தீச் செயலிற் கன்றிய மனத்தைச் "சழக்கர் உலைவிலை எனவே இயக்க வெந்தொழிலில் உழன்று உழன்று உழன்றதோர் உளத் தேன்" என வுரைக்கின்ருர். உலைவு - கேடு. இலை விலை எனக்கு என்னு மிடத்து விலை, ஒப்புப் பொருட்டு. பொருட்கு ஒப்ப அமைவது விலையாதல் காண்க. அகங்கரித்தல் - அகம்பாவம் கொள்ளுதல். விளைபுலத்துப் பொருள் விலையே கடைவிலை யாகா தென்பது நல்லறம் என்பது காண்க.

இதனுல், அங்காடியை அலைக்கழிக்கும் குற்ற மெடுத்துக் காட்டிய வாறு.

3347. கொட்டிலை அடையாப் பட்டிமா டனையேன்
கொட்டைகள் பரப்பிமேல் வனைந்த
கட்டிலை விரும்பி அடிக்கடி படுத்த
கடையனேன் கங்குலும் பகலும்

அட்டிலே அடுத்த பூளையேன் உணவை
அறவுண்டு குப்பைமேற் போட்ட
நெட்டிலை அனையேன் என்னினும் வேறு
நினைத்திடேல் காத்தருள் எனையே.

உரை : மாலைப் போதில் கொட்டிலுள் வந்து சேராது திரியும் பட்டி மாடு போன்ற யான் கொட்டைக் கரையையுடைய மெத்தையை விரித்து மேலே விதானமிட்ட படுக்கையில் கிடத்தலே விரும்பி அடிக்கடி சென்று படுத்துக் கொள்ளும் கீழ்மகனுய், இரவிலும் பகலிலும் சமையலறையைச் சூழ்ந்து அலையும் பூனை போல்பவனுய், பற்றற வுண்டு குப்பை மேலெறியப் பட்ட நீண்ட வாழையின் எச்சிலே போன்றவனுமாகியவனுயினும் என்னை வேருகக் கருதிப் புறக்கணிக்காமல் காத்தருள வேண்டுகிறேன். எ.று.

பகற் போதில் புன்செய்க் காடுகளை யடைந்து மேய்ந்து அந்தி மாலைக் கண் ஊரடைந்து தத்தம் மாட்டுக் கொட்டிலைச் சேர்வது முறையாயினும் அதனை விடுத்து எங்கும் ஓடித் திரியும் மாடு பட்டி மாடு எனப்படும்; அதுபோல் மனையவர்க் கடங்காது ஒழுக்கமின்றித் திரிபவன் என்று தம்மை இழித்தற் பொருட்டு, "கொட்டிலையடையாப் பட்டி மாடு அனையே" னென வுரைக்கின்றார். கொட்டில் - ஆனிரைகளை மடக்கிக் காக்கும் காவலிடம். மனைப் புறத்தே வளைத்தமைத்த இடம் கொட்டில். கோட்டில் எனற்பாலது கொட்டில், கொட்டகை, கொட்டம் என வழங்கும். அடங்குதலின்றிக் கட்டகன்று ஓடும் மாடுகளைத் தொகுத்து அடைக்குமிடம் மாட்டுப் பட்டி; அதனால் அடங்கா தோடும் மாட்டைப் பட்டிமாடு என்கின்றனர். பட்டி - அடங்காததை ஒழுங்கிற்கு உட்படுத்தும் காவலிடம். மாட்டுப் பட்டிகள் பலவுடைய முல்லை நிலத்து ஊர்கள் பட்டி என்ற ஈறு பெற்ற பெயர்களையுடையவாம். ஆதலாற்றான், குறிஞ்சியும் முல்லையுமாகிய நாடுகளில் இவ்வூர்கள் மிக்கிருக்கின்றன. அடங்கா வொழுக்கத் தாடவனை "அகப்பட்டி" என்றும், பெண்மகளை "வாய்ப் பட்டி" என்றும் இகழ்கின்றனர். கொட்டை - ஓரத்தில் அழகுறக் கோக்கப்படும் சுங்குகள். "கொட்டைக் கரைய பட்டுடை" எனச் சான்றோர் கூறுதல் காண்க. கொட்டை யணிந்த படுக்கை "கொட்டை" எனப்படுகிறது. மேலே விதானமிட்ட கட்டிலை "மேல் வளைத்த கட்டில்" எனக் கூறுகின்றார். பட்டினால் இயன்று உள்ளே இலவம் பஞ்சிட்ட மெத்தை பரப்பிய கட்டிலில் கிடந்து உறங்குதற்கு இன்பம் பயத்தலின், "கட்டிலை விரும்பி யடிக்கடி படுத்த கடையனேன்" எனவுரைக்கின்றார். உறங்கும் போதன்றி அடிக்கடிப் படுத்த விடத்துச் சோம்பலை விளைவித்து வினைக் கேடு பயத்தல் பற்றிக் "கடையேன்" என இழிக்கின்றார். கங்குல் - அட்டில்; உணவு சமைக்கும் மனைப்பகுதி. அடுதல் - சமைத்தல். அட்டிலாரது அற்றம் பார்த்துப் பால் கவர்ந்துண்பது பூனைகட்கு இயல்பாதலின், "அட்டிலை யடுத்த பூளையே" னென்று கூறுகின்றார். உணவு பெய்தற்கு இடும்போது இருந்தவண்ணமே உண்டு கழியும் போதும் இருத்தல் நன்று என்பது சிலரது ஆசாரமாதலால், "அறவுண்டு" என்கிறார். உண்டது சிறிது எஞ்ச விடுவது நன்று என்பதும் ஒரு சிலர் கொள்கை. நெட்டிலை - ஈண்டு நீண்ட வாழையிலை மேற்று. உணவுப் பொருள் சிதறித் தரையில் வீழ்ந்து மாசுறுமை கருதி நெட்டிலை வேண்டப்

படுகிறது. உண்டு கழிந்த இலை வேறு எதற்கும் பயன்படாதாதலால் குப்பையில் எறிவர்; குப்பையில் எறிந்த எச்சிலை போல் பயன்படாமையால் கழிக்கப் பட்டேன் என்றற்குக் "குப்பையிற் போட்ட நெட்டிலையனையேன்" என வுரைக்கின்றார்.

இதனால், குப்பையி லெறிந்த எச்சிலை போலப் பயன்படாக் கடையேன் எனத் தம்மைப் பழித்துரைத்தவாரும். (5)

3348. நேரிழை யவர்தம் புணர்முலை நெருக்கில்
நெருக்கிய மனத்தினேன் வீணில்
போரிழை வெறியர் புகழ்பெறு வெறியேன்
புனைகலை இலர்க்கொரு கலையில்
ஓரிழை எனினும் கொடுத்திலேன் நீள
உடுத்துடுத் தூர்தொறுந் திரிந்தேன்
ஏரிழை விழைந்து பூண்டுளங் களித்தேன்
என்னினும் காத்தருள் எனையே.

உரை : நேர்த்தியான நகைகளையணிந்த மங்கையரின் நெருங்கிய கொங்கைகளின் மேல் மிக்க ஆர்வமுறும் மனத்தினையுடைய யான், வீணே போர் தொடுக்கும் வெறுமை மக்களிடையே புகழ் பெற்ற பயனிலாளனுவேன்; உடுக்கும் உடையில்லாதவர்க்கு என்னுடைய உடையில் ஓர் நூலிழை வேண்டினும் கொடாதவன்; நீளமாகப் பல வுடுத்து ஊர் தோறும் திரிந்தேன்; அழகிய அணி வகைகளை விருப்புடன் பூண்டு மனம் மகிழ்ந்த வீணனுயினும் என்னைக் காத்தருள வேண்டும். எ.று.

மகளிர் மார்பிற் கொங்கைகள் பருத்து இடைவெளியின்றி நெருங்கப் பணைத் திருத்தலைச் சிறப்பெனக் கருதுவர். "ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்" (போற்றி) எனத் திருவாசகம் ஓதுவது காண்க; அவர்களைக் காணும் ஆடவருள்ளமும் பார்வையும் அம்மகளிர் மார்பின்கட் சேர்தலின் "புணர்முலை நெருக்கில் நெருக்கிய மனத்தினேன்" என இசைக்கின்றார். நெருக்கம் - நெருக்கு என வந்தது. வீண்போர் - பயனின்றிச் செய்யும் வல்வழக்கு. வெறியர் - பயனில்லாதவர். வெறியரது பாராட்டை விரும்புதலால் யானும் பயனில்லாதவன் என்றற்கு "வெறியர் புகழ்பெறு வெறியேன்" என்று கூறுகின்றார். ஆடையில்லாத ஏழை மக்களை, "புனை கலையில்லார்" என்றும், கிழிந்த தமது ஆடையைத் தைத்தற்கு உடையில் ஒரு நூலிழை வேண்டினும் தர விரும்பாத தன்மையை உணர்த்தற்குக் "கலையில் ஓர் இழையேனும் கொடுத்திலேன்" என வுரைக்கின்றார். ஓர் இழை கொடுப்பதால் கேடு ஒன்றும் உண்டாகா தென்றற்குக் "கலை" எனக் குறிக்கின்றார். வேண்டும் அளவினும் மிக்க வுடை என்று புலப்பட, "நீளவுடுத்து" எனவும், ஊர்களில் வாழும் ஏழை மக்கள் காணத் திரிந்தமை தோன்ற, "உடுத்துடுத்து ஊர்தொறும் திரிந்தேன்" எனவும் இசைக்கின்றார். அடுக்கு - அடிக்கடி மாறி மாறி வேறு வேறுடுத்தமை காட்டுகிறது. ஏரிழை - விலையுயர்ந்த அணிகலன். அணிகலன் பூண்டு ஒளிர்ந்த பெருமித முற்றேன் என்பாராய், "உளம் களித்தேன்" என வுரைக்கின்றார்.

இதனால், உயர்ந்த ஆடையும் அணியும் பூண்டு செருக்கிய குற்றம் தெரிவித்தவாறு. (6)

3349. அளத்திலே படிந்த துரும்பினும் கடையேன்
அசடனேன் அறிவிலேன் உலகில்
குளத்திலே குளிப்பார் குளிக்கவெஞ் சிறுநீர்க்
குழியிலே குளித்தவெங் கொடியேன்
வளத்திலே பொசித்துத் தளத்திலே படுக்க
மனங்கொண்ட சிறியனேன் மாயைக்
களத்திலே பயின்ற உளத்திலே பெரியன்
என்னினும் காத்தருள் எனையே.

உரை: உப்பளத்தில் கிடந்து உப்புப் பற்றிய சிறு துரும்பினும் பயனற்ற கடையவனுகிய யான், அசட்டுத் தன்மையும் அறிவின்மையும் உடையவன்; உலகில் குளிப்பவர் நன்னீர்க் குளத்திலே குளிக்க, வெவ்விய சிறுநீர் நின்ற குழியில் இறங்கிக் குளித்த கொடுஞ் செயல் உடையனுவேன்; வளமான பொருள்களை நுகர்ந்து மலரிதழ் பரப்பிய படுக்கையிற் கிடக்க ஆசை கொண்ட வறியவனுவேன்; உலகியல் மாயை மயக்கத்தில் ஆழ்ந்து பயின்ற வகையில் மிக்கவ னெனினும் என்னைக் காத்தருளல் வேண்டும். எ.று.

அளம் - உப்பு விளைவிக்கும் நிலம். அந்நிலத்திற் கிடக்கும் துரும்பு உப்புப் பற்றி உப்பாகிய வழியும் உப்புக் கரைந்து தன் வடிவு பெற்ற வழியும் எதற்கும் பயன்படாது கெடுவது போல யானும் பண்பின்மையாற் கெட்டுக் கடைப் பட்டேன் என்பார், "அளத்திலே படிந்த துரும்பினும் கடையேன்" என்று கூறுகின்றார். "உப்பு விளை பழனத்து உற்ற பொற் கோட்டு உலவை" (ஞானு. 74) எனப் பிறரும் காட்டுப. அசடன் - குற்றத் தன்மை யுடையவன். அசடு - மந்த புத்தியாற் குற்றம் செய் பவன். அறிவிலேன் - நல்லதன் நல மறியும் அறிவில்லாதவன். குளம் - நன்னீர் நிறைந்த நீர் நிலை. வெஞ்சிறுநீர்க் குழி - முடை நாறும் சிறுநீர் தேங்கும் குழி. சிறுநீர்க் கு ழி யில் யாரும் இறங்கிக் குளியாராக, அந்த இழி செயலையும் நாணுது செய்யும் கொடுமை விளக்குதற்குச் "சிறுநீர்க் குழியிலே குளித்த வெங்கொடியேன்" என வுரைக்கின்றார். வளம் - செல்வ நிலை. பொசித்தல் - போகம் நுகர்தல்; இது புசித்தல் எனவும் வழங்கும். தளம் - மெல்லிய மலர்களின் இதழ் பரப்பிய படுக்கை. பேராசை நிறைவுகளால் சிறுமை யுற்றவன் என்றற்கு "வளத் திலே பொசித்துத் தளத்திலே படுக்க மனங் கொண்ட சிறியேன்" எனக் கூறுகின்றார். மாயைக் களம் - உலகியல் மாயை நிலவும் வாழ்க்கை உலகியல் வாழ்க்கையின் பலதிறப்பட்ட நெறிகளில் ஒழுகியும் காண்பன கண்டும் முதிர்ந்தமை புலப்பட "மாயைக் களத்திலே பயின்ற உளத்திலே பெரியேன்" எனப் பேசுகின்றார். இதனையும் குற்ற வகைகளோடு சேர்த்துக் கூறுதலால், மாயா வுலக வாழ்க்கையில் நிலவும் குற்ற வகை களிற் பயின்று அவற்றில் மிக்கோனுயினமை விளங்க இவ்வாறு கூறு கின்றாராயிற்று.

இதனுல், இழி தக்க சிறு செயல் புரிந்து பேராசையுற்றுக் குற்றப் பட்டமை தெரிவித்தவாரும். (7)

3350. தொழுதெலாம் வல்ல கடவுளே நின்னைத்
துதித்திலேன் தூய்மைஒன் றறியேன்
கழுதெலாம் அனையேன் இழுதெலாம் உணவில்
கலந்துணக் கருதிய கருத்தேன்
பழுதெலாம் புரிந்து பொழுதெலாம் கழித்த
பாவியேன் தீமைகள் சிறிதும்
எழுதலாம் படித்தன் றெனமிக உடையேன்
என்னினும் காத்தருள் எனையே.

உரை : எல்லாம் வல்ல சிவ பரம்பொருளே, உன்னைக் கண்டு தொழுது யான் துதித்ததில்லை; தூயனும் தன்மைகளில் ஒன்றும் உடையவனல்லன்; பேய்கள் யாவும் திரண்டாற் போல்பவன்; உணவு கொள்ளுமிடத்து எய்தும் நெய்யத்தனையும் உணவிற் கலந்துண்ணும் கருத்துடையவன்; குற்ற வகை யாவையும் செய்து வீண் பொழுது கழித்த பாவியாவேன்; யான் செய்த தீமைகள் எழுதும் அளவினவல்ல என எழுதுவோர் கூறுமாறு மிக்க குற்றங்களை யுடையேன்; இத்தகையனாயினும் என்னைக் காத்தருள்க. எ.று.

வரம்பில் ஆற்ற லுடையவன் இறைவன் என ஆன்றோர் கூறுதலால், "எல்லாம் வல்ல கடவுளே" எனக் கூறுகின்றார். அகளமாகிய பரம்பொருளே சகள வுருவில் காட்சி தருதலால் அதனைக் கண்ட வழிக்கையாற் றொழுதலும், காண விடத்து மனத்தில் நினைத்துத் தித்தலும் வேண்டுதலால், அது செய்யாத குற்றத்தை "நின்னைத் தொழுது துதித்திலேன்" என்று சொல்லுகின்றார். கழுது - பேய். பேய்த் தன்மைகள் பலவும் உடையவன் என்பாராய், "கழு தெலாம் அனையேன்" என்றும், உணவின்கண் பேராசை யுறுவது குற்றமாதலால், "உணவில் இழுதெலாம் கலந்துணக் கருதிய கருத்தேன்" என்றும் இயம்புகின்றார். இழுது - உறைந்த நெய். பழுது - குற்றம். பெறலரியவற்றுள் காலம் தலைசிறந்ததாகலின், அதனை வீண் படக் கழித்த குற்றத்தை, "பொழுதெலாம் கழித்த பாவியேன்" எனவும், தீமைகளின் மிகுதி யுணர்த்தற்குத் "தீமைகள் சிறிதும் எழுதலாம் படித்தன்று என மிக வுடையேன்" எனவும் இசைக்கின்றார். என, எழுதுவோர் எழுதலாம் படித்தன்று என உரைக்க என விரித்துக் கொள்க.

இதனால், செய்த தீமைகள் எழுது மளவின அல்ல வெனத் தெரிவித்தவாறும். (8)

3351. வட்டியே பெருக்கிக் கொட்டியே ஏழை
மனைகவர் கருத்தினேன் ஓட்டைச்
சட்டியே எனினும் பிறர்கொளத் தரியேன்
தயவிலேன் சூதெலாம் அடைத்த

பெட்டியே நிகர்த்த மனத்தினேன் உலகில்
பெரியவர் மனம்வெறுக் கச்செய்
எட்டியே மண்ணுங் கட்டியே அனையேன்
என்னினும் காத்தருள் எனையே.

உரை : வாங்கிய கடனுக்காக வட்டியைப் பெருக்கித் தொகுத்து ஏழை மக்களின் வீடு வாயில்களைக் கவர்ந்து கொள்ளக் கருதும் மனத்த வனுகிய யான், இருப்பது துவாரப்பட்ட மண் சட்டியே என்றாலும், அதனைப் பிறர் பெறக் காண மனம் பொருதவனும், இரக்கமில்லாதவனும், சூதும் வஞ்சனையும் நிறைந்த பெட்டி போன்ற மன முடையவனும், உலகின்கண் உள்ள பெரியவர்களின் மனம் நொந்து வெறுக்கச் செய்கின்ற எட்டி மரத்தையும் மண்ணுங் கட்டியையும் ஒத்தவனு மாவேன்; ஆயினும் என்னைக் காத்தருள வேண்டும். எ.று.

வட்டி, கடன் வாங்கினோர் அதனைக் கொடுத்து உதவியவர்க்குத் தரும் பலிசை. ஆறு மரக்கால் நெற் கடன் பெற்றார் ஆண்டிறுதியில் கொடுத் தார்க்கு ஒரு மரக்கால் மிகுதியாகத் தரும் பலிசை; நெற் பலிசையை வட்டியில் அளந்து தருவது பண்டையோர் வழக்கம். ஒரு வட்டி ஒரு மரக்கால் அளவினதாகும். வட்டி பாண்டி நாட்டிற் பெட்டி யென வழங்குகிறது. இஃது ஓலையாலும் பனையகணிகளாலும் பின்னப்படுவது. சோழ நாட்டில் வட்டியைக் கூடை யென்பர். "வித்தொடு சென்ற வட்டி பற்பல மீளெடு பெயரும் யாணரூர" (நற். 210) எனச் சான்றோர் குறிப்பது காண்க. பலிசை யளந்த வட்டியே நாளடைவில் பலிசைக்குப் பெயராயிற்று; பின்பு பலிசை மறையவே வட்டியே எங்கும் நெற் பலிசை, பொருட் பலிசை, பொற் பலிசை முதலிய எல்லாவற்றிற்கும் பெயராய் நிலவுகிறது. வட்டிக் கணக்கைப் பெருக்கி முதலொடு கூட்டி வரும் தொகையைக் கடன் பட்டார் திரும்பத் தரும் வன்மை யிழந்து தாம் உடைய வீடு நிலங்களைக் கடன் கொடுத்தார்க்கோ பிறர்க்கோ விற்று நாடோடிகளாவது மரபு. கடன் தந்து வட்டி வாங்கும் முறைமை யால் கெட்ட குடிகள் எண்ணிறந்தனவாதலால், அக் கொடுமைக் குற்றத்தை எடுத்துக் காட்டற்கு "வட்டியே பெருக்கிக் கொட்டியே ஏழை மனை கவர் கருத்தினேன்" என்று கூறுகின்றார். பிறர் ஆக்கம் கண்டு மகிழ்தலின்றி மனம் பொருது தீது செய்வது குற்றமாகும்; அதுவும் மக்களிடையே பெருகி யிருப்பது காண்டலின், "ஓட்டைச் சட்டியே யெனினும் பிறர் கொளத் தரியேன்" என வுரைக்கின்றார். ஓட்டை - துவாரம். கையாளும் பாத்திரங்களில் ஓட்டை யுண்டாயின், ஓட்டைப் பாத்திரம் என்பர். பிறர் காணு வகை நெஞ்சின்கண் நிறைத்திருப்பது பற்றி, "பெட்டியே நிகர்த்த மனத்தினேன்" என்கின்றார். கயப்புச் சுவைக்குத் தலையாய பொருளாதலின், எட்டி மரத்தைக் குறித்து "எட்டி" என்றும், சுவை யில்லாத மண் திரளை "மண்ணுங் கட்டி" என்றும் ஏசு கின்றார்.

இதனால் வட்டிக் கடன் பட்டோரை வருத்தும் குற்றம் விளக்கிய வாறும்.

3352. உடுத்திலேம் சிறிதும் உண்டிலேம் எனவந்
தோதிய வறிஞருக் கேதும்
கொடுத்திலேன் கொடுக்கும் குறிப்பிலேன் உலகில்
குணம்பெரி துடையநல் லோரை
அடுத்திலேன் அடுத்தற் காசையும் இல்லேன்
அவனிமேல் நல்லவன் எனப்பேர்
எடுத்திலேன் எனினும் தெய்வமே துணைஎன்
றிருக்கின்றேன் காத்தருள் எனையே.

உரை : உடையில்லை, சிறிதும் உணவில்லை என வந்து இரந்த வறியவர்க்கு யாதும் கொடுத்தறியேன்; கொடுத்து உதவ வேண்டும் என்ற எண்ணமும் இல்லாதவன்; நற்குணம் படைத்த நன்மக்களைச் சேர்ந்ததில்லை; சேர்தற்கு ஆசையும் கொண்டதில்லை; உலகில் நல்லவன் என்ற பெயரை நான் எய்தியதில்லை; இத்தன்மையனெனினும் தெய்வம் தான் துணையாவது என்று கருதி யிருப்பவனதலால் என்னைக் காத்தருள்கள். எ.று.

வறுமையால் உடுக்க வுடையும் உண்ண உணவுமின்றி வருந்தி வருபவரை, "உடுத்திலேம் சிறிதும் உண்டிலேம் என வந்து ஓதிய வறிஞர்" என்றும், "வறியார்க் கொன்று ஈவதே ஈகை" (குறள்) எனப் பெரியோர் உரைப்பது பற்றி, என்பால் வந்த வறியவர்க்கு யாதொன்றும் கொடுத்ததில்லை என்பாராய், "ஏதும் கொடுத்திலேன்" என்றும், கொடா விடினும் கொடுத் துதவக் கருத்தில் இரக்கமுற்று எண்ணியதும் இல்லை என விளக்குவாராய், "கொடுக்கும் குறிப்பிலேன்" என்றும் விரித்துரைக் கின்றார். ஈகைச் செய்கையும் இரக்க நெஞ்சமும் உண்டாதற்கு நற்பண்புடைய நன்மக்களோடு தொடர்பும் உறவும் பெற வேண்டும் என அறவோர் கூறினும் யான் அது செய்ததுமில்லை; செய்ய விரும்பியது மில்லை என்பாராய், "உலகிற் குணம் பெரிதுடைய நல்லோரை அடுத் திலேன் அடுத்தற் காசையும் இல்லேன்" எனக் கூறுகின்றார். நல்லினச் சேர்க்கையும் ஈகை முதலாய பண்பும் உடையவர் நில வுலகில் நல்ல பெயரும் புகழும் கொண்டு மக்களது பாராட்டைப் பெறுவது போல் யான் பெய ரெய்தியதில்லை என்பாராய், "அவனி மேல் நல்லவன் எனப் பேர் எடுத்திலேன்" என மொழிகின்றார். பெயரெடுத்தல், புகழப் படுதல். இந்தச் சிறப்புத்தரும் குணமும் செய்கையும் உடையனல்லனெனினும் தெய்வ மொன்றுதான் நமக்குத் துணையாவது என்ற துணி வுடையவன்; அதனை யேதுவாகக் கொண்டு என்னை ஆண்டருள்க என உரைப் பாராய், "தெய்வமே துணை யென்று இருக்கின்றேன். காத்தருள் எனையே" என்று வேண்டுதல் செய்கின்றார்.

இதனால், ஈகையும் இரக்கமும் நல்லினச் சார்பும் இல்லாத குற்றத்தை எடுத்துரைத்தவாறும். (10)

திருச்சிற்றம்பலம்

9. அவா வறுத்தல்

அஃதாவது, வாழ்க்கையில் இடையறவின்றித் தோன்றியலைக்கும் ஆசை வகைகளை எடுத்தோதி அவற்றின் தொடர்பு ஒழித்தலாம். ஆசைகள் மனப் பொறுமையைக் கெடுத்து துன்பத்துக் குள்ளாக்குவனவாம் என்பது கருத்து.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3353. தாலவாழ்க் கையிலே சார்ந்தவர் எல்லாம்
தக்கமுப் போதினும் தனித்தே
சீலமார் பூசைக் கடன்முடிக் கின்றார்
சிறியனேன் தவஞ்செய்வான் போலே
ஞாலமே லவர்க்குக் காட்டிநான் தனித்தே
நவிலும்இந் நாய்வயிற் றினுக்கே
காலையா தியமுப் போதினும் சோற்றுக்
கடன்முடித் திருந்தனன் எந்தாய்

உரை : எந்தை பெருமானே, மண்ணக வாழ்வு மேற் கொண்டவர் பலரும் தக்க முறையில் மூன்று காலத்தும் தனித்திருந்து ஒழுக்கமுடன் பூசைக் கடன்களைச் செய்து முடிக்கின்றார்கள்; சிறுமைச் செயற் பண்புடைய யானே தவம் செய்பவன் போல, உலகவர் காணத் தனிமையுற்று இழிவாகப் பேசப்படும் வயிறு நிறைத்தற் பொருட்டுக் காலை நண்பகல் மாலையாகிய மூன்று பொழுதும் சோறுண்ணும் கடன்களையே செய்தேன், காண். எ.று.

தாலம் - ஞாலம் என்பன நிலவுலகைக் குறிப்பன. உலக வாழ்க்கையில் வேண்டுவன ஓரளவு பெற்றவர், இறைவன் திருவருளை நினைந்து நாடோறும் வழிபடுவது கடனும் என அறிந்தோர் கூறுதலால், இறை வழிபாடு பூசைக் கடன் எனப்படுகிறது. இறை வழிபாட்டில் மனம் உலகியல் நினைவுகளின் நீங்கித் தனித்துத் திருவருளில் ஒன்றுவது பற்றி, "தனித்து" எனவும், காலை நண்பகல் மாலையாகிய முப்போதும் மனவொருமைக்கு ஏற்புடைய காலமாதலால், "தக்க முப்போதினும்" எனவும், நீராடி நீறணிதல், பூ வெடுத்துத் தொடுத் தணிதல் முதலாகக் கூறப்படும் செயல் முறைகள் பலவும் அடங்கச் "சீலமார் பூசைக் கடன்" எனவும் சிறப்பிக்கின்றார். சிறுமை யுறுவதற்குரிய குணமும் செயலும் பொருந்தி யுள்ளமை பற்றி, "சிறியனேன்" என்றும், உலகவர் கண்டு மருளத் தவம் புரிவார் போல நடிக்கின்றமை விளக்குதற்குத் "தவம் செய்வான் போலே ஞால மேலவர்க்குக் காட்டி" என்றும் கூறுகின்றார். ஞால மேலவர், நிலவுலக வாழ்க்கையிற் கருத்துடையவர். தனித்தெனப் பின்னும் கூறியது, நண்பர்

உறவினர் முதலாயினோரோடு உடனிருந்து உண்ணுமை தெரிவித்தற்கு பொழுது தோறும் தவருது உண்ணினும் உண்பொருளை நாடிய வண்ண மிருத்தலின், வயிற்றின் இழிவு புலப்பட, "நாய் வயிறு" எனக் குறிக்கின் ருர். உய்தி நாடி உயிர் நிற்றற்குரிய உடம்பைப் பேணுவது கடனுதலால், உணவுண்டலைச் "சோற்றுக் கடன்" என்று சொல்லுகின்ருர்.

இதனுல், உயர்ந்தோர் உய்தி வேண்டிப் பூசைக் கடனைச் செய்ய, யான் ஆசை மிக்குச் சோற்றுக் கடன் முடிக்கின்றேன் என வுரைத்த வாரும். (1)

3354. சோற்றிலே விருப்பஞ் சூழ்ந்திடில் ஒருவன்
துன்னுநல் தவம்எலாஞ் சுருங்கி
ஆற்றிலே கரைத்த புளிஎனப் போம்என்
றறிஞர்கள் உரைத்திடல் சிறிதும்
போற்றிலேன் உன்னைப் போற்றிலேன் சுவையில்
பொருந்திய காரசா ரஞ்சேர்
சாற்றிலே கலந்த சோற்றிலே ஆசை
தங்கினேன் என்செய்வேன் எந்தாய்.

உரை : எந்தை பெருமானே, ஒருவனுக்கு உண்ணும் உணவிலே மிக ஆசை யுண்டாயின் அவன் மேற் கொள்ளும் நல்ல தவங்கள் யாவும் நீர் பெருகி யோடும் ஆற்றில் கரைத்த புளியைப் போல நில்லாது கெட் டொழியும் என்று நல்லறிஞர் உரைத்த அறிவுரையைச் சிறிதும் கருத்திற் கொள்ளேனுய், பெருமானுகிய உன்னையும் வழிபடாமல் சுவை யமைந்த காரமும் சாரமும் உடைய சாறு பெய்த சோற்றில் ஆசை மிக்கழுந்தி னேன்; இனி என்ன செய்வேன். எ.று.

பல்வகைச் சுவை கலந்த உணவின் மேல் ஆசை கொண்டலைபவற்கு உழைப்பின்கண் விருப்பும் ஊற்றமும் உண்டாகா தென அறிஞர் உரைப் பதைக் கொண்டெடுத்துக் கூறுகின்ருராதலின், "சோற்றிலே விருப்பம் சூழ்ந்திடில் ஒருவன் துன்னும் நல்தவம் எலாம் சுருங்கி ஆற்றிலே கரைத்த புளி யெனப போம் என்று அறிஞர்கள் உரைத்திடல் சிறிதும் போற்றிலேன்" என்று புகல்கின்ருர். சோறு எனப் பொதுப்பட மொழி யினும் பல்வகைச் சுவை விரவிய உண்பொருளைக் குறிப்ப தெனக் கொள்க. நல்தவம் - நற் பயன் விளைவிக்கும் இனிய அரிய முயற்சி. சோற்ருசை காமமும் நோயும் தோற்றுவித்து அறிவைச் சிதைத் தொழிக் கும் என்று பெரியோர் கூறுப. "தீயளவின்றித் தெரியான் பெரிதுண்ணின் நோய் அளவின்றிப் படும்" (குறள்) எனத் திருவள்ளுவர் உரைப்பது காண்க. இம்மை மறுமையாகிய வாழ்வுகட் குரிய நற்பயனை நல்கும் இனிய உயரிய முயற்சிப் பயன்களைச் செய்தற்கு வேண்டும் ஆர்வம் ஊக்கம் ஆகியவை சிந்தைக்கண் உண்டாகாமற் கெடுக்கும் என்பது உணர்த்துதற்குத் "துன்னும் நல்தவ மெலாம் சுருக்கும்" எனவும், ஒருகால் தவ முயற்சி உண்டாயினும், உணவு ஆசையால் அது நில்லாது கெட்டும் போம் என்பதை விளக்க, "ஆற்றிலே கரைத்த புளி யெனப் போம்" எனவும், இதனை ஆன்றவிந்தடங்கிய சான்ருேர் விலக்குதற் கரிய

நல்லறமாக அறிவுறுத்துகின்றனர் என்பாராய், "என்று அறிஞர்கள் உரைத்திடல்" எனவும், இதனைக் கைக்கொண்டு ஒழுகாமை குற்றமாம் என்றற்குச் "சிறிதும் போற்றிலேன்" எனவும் எடுத்தோதுகின்றார். ஆற்றிலுள்ள நீர் நில்லாது ஓடுவதால் அந்நீரிற் கரைக்கும் புளிக் குழம்பும் நில்லாது நீங்கும் என்பது நாடறிந்த வுண்மை. செய்தற் கெளியதும் உயரிய பயன் தருவதுமாகிய நற்செயல் இறை வழிபாடாகவும் அதனைத் தானும் செய்யாத குற்ற முடையவன் என்பார், "உன்னைப் போற்றிலேன்" என வுரைக்கின்றார். இக் குற்றங்களைப் புரிந்தமைக் குற்ற காரணம் இது வென்பாராய், "சுவையிற் பொருந்திய காரசாரம் சேர் சாற்றிலே கலந்த சோற்றிலே ஆசை தங்கினேன்" என்று கூறுகின்றார். தனி நிலையிற் சுவை யில்லாத சோற்றுக்குச் சுவை கூட்டிப் பயன் விளைக்கச் செய்வது கார்ப்பு, புளிப்பு, கரிப்பு முதலிய சுவை கலந்த சாறு ஆதலால், "காரசாரம் சேர் சாற்றிலே ஆசை தங்கினேன்" என மொழிகின்றார். சாறு - குழம்பு. காரம் - மிளகு விளைவிக்கும் சுவை. சாரம் - உடற்கு ஆக்கமாகும் பயன். செரிப்பின்கண் காரப் பொருள் கழிவதும், சாரப் பொருள் உடற்கண் தங்குவதும் கண்டு, "காரசாரம் சேர் சாறு" என்கின்றார். நீங்காமை வெளிப்படுத்தற்குத் "தங்கினேன்" என்று சாற்றுகின்றார்.

இதனால், உணவின் மேல் உளதாகிய பேராசைக் குற்றத்தை எடுத்துரைத்தவாறும். (2)

3355. விருப்பிலேன் போலக் காட்டினேன் அன்றி
விளைவிலா தூண்எலாம் மறுத்த
கருப்பிலே எனினும் கஞ்சியா திகளைக்
கருத்துவந் துண்ணுதற் கமையேன்
நெருப்பிலே உருக்கு நெய்யிலே சிறிதும்
நீரிடாத் தயிரிலே நெகிழ்ந்த
பருப்பிலே சோற்றுப் பொருப்பிலே ஆசை
பற்றினேன் என்செய்வேன் எந்தாய்.

உரை : எந்தையாகிய சிவ பெருமானே, உணவுப் பொருள்களின் விளைவில்லாத வற்கடக் காலத்தில் உயரிய உணவின்கண் விருப்பம் இல்லாதவன் போல நடித்தேனே யன்றி, எளிதாகக் கிடைக்கும் கஞ்சி முதலியவைகளை மனமுவந்து உண்ண விழையாத யான், நெருப்பின்கண் பையக் காய்ச்சப்படும் நெய்யிலும், சிறிதும் நீரின்றி உறைந்திறுகிய தயிரிலும், வெந்து குழைந்த பருப்பிலும், நெற்சோற்றுத் திரளையிலும் ஆசை மிக்குற்றேன் காண். எ.று.

கருப்பு - பஞ்சம். வற்கடம், வறட்சி என வழங்கும் துன்பக் காலம்; இதனைச் சங்கச் சான்றோர், அல்லற் காலம் என்பர். போதிய மழையின்மையால் நிலபுலம் விளைவின்றிக் கெடுதல் தோன்ற, "விளைவிலாது ஊன் மறுத்த கருப்பு" என உரைக்கின்றார். மறுத்தல் - இல்லையாதல். கருப்புக் காலத்தில் மக்கள் பலரும் கிடைப்பது சிறிதாயினும் அதனை யுண்டு அமைவதியல்பாதலின், யானும் உயர்வகைச் சுவை கலந்த உணவில் ஆசையில்லாதவன் போலக் காட்டிக் கொண்டேன் என்பாராய்,

"விருப்பிலேன் போலக் காட்டினேன்" என விளம்புகின்றார். போதிய வீலைவில்லாமையால் மக்கள் பசி மிக்கு இறவாமை கருதி நெய்யும் குறுணையும் கேழ்வரகும் பிறவும் கொண்டு கஞ்சி காய்ச்சி யுண்பராதலின், அக்கஞ்சி யுணவை நான் வேண்டாது ஒழுகினேன் என்பாராய், "கஞ்சி யாதிகளைக் கருத்து வந்து உண்ணுதற் கமையேன்" எனக் கூறுகின்றார். அக்காலத்தே தாம் உண்ண விசைந்தது இது வென்பார், "நெய்யும், இறுக வுறைந்த கட்டித் தயிரும், வெந்து குழைந்த பருப்பும், செந்நெற் சோற்றுத் திரளையுமாம்" என்று இயம்புகின்றார். விரும்பும் நெய்யின் நிலைமையை, "நெருப்பிலே யுருக்கும் நெய்" எனவும், உறைந்த தயிரின் கண் நீர் கலந்திருப்பினும் உண்ணும் காலத்து அது வடிக்கப் படல் வேண்டும் என்ற குறிப்புத் தோன்றச் "சிறிதும் நீர் இடாத் தயிர்" எனவும், மாசு மறுவின்றிய துவரையம் பருப்பின் நன்கு வெந்த குழைவைச் சிறப்பித்தற்கு "நெகிழ்ந்த பருப்பு" எனவும், நெற் சோற்றின் அளவு காட்டற்குச் "சோற்றுப் பொருப்பு" எனவும் சொல்லுகின்றார்.

இதனால், கஞ்சி யுண்டு மெலிவுற்று வருந்துவோர்க் கிடையே நெய்யும் தயிரும் விரவிய நெற் சோறுமுண்ட இரக்கமில் குற்றம் எடுத்துரைத்த வாரும். (3)

3356. உறியிலே தயிரைத் திருடிஉண் டனன்என்
ரொருவனே உரைப்பதோர் வியப்போ
குறியிலே அமைத்த உணவெலாம் திருடிக்
கொண்டுபோய் உண்டனன் பருப்புக்
கறியிலே பொரித்த கறியிலே கூட்டுக்
கறியிலே கலந்தபே ராசை
வெறியிலே உனையும் மறந்தனன் வயிறு
வீங்கிட உண்டனன் எந்தாய்.

உரை : சிவ பெருமானுகிய எந்தையே, ஆயர் மகளிர் உறியிலே வைத்த தயிர் வெண்ணெய்களைக் கண்ணன் திருடி யுண்டவன் என்று பாகவத நூலோர் வியந்து கூறுவர்; அதில் வியப் பொன்றுமில்லை; மறைவான குறி யிடத்தே வைத்த உண்பொருள்களை யான் திருடிக் கொண்டு போய் உண்டொழித்த யான், பருப்புக் கறியிலும் பொரிக் கறியிலும் கூட்டுக் கறியிலும் உண்டான ஆசை வெறி கொண்டு வயிறு புடைக்க உண்டேனே யன்றி உன்னை நினைத்தேன் அல்லன் காண். எ.று.

உறி - பனை நார் கொண்டு திரித்துச் சிறுவர்கட்கு எட்டாத உயரத்தில் கட்டிக் கலயங்களை வைத்துத் தொங்க விடுவது. இதன்கண் பால் தயிர் வெண்ணெய் நிறைத்த கலயங்கள் வைக்கப்படும். கண்ணபிரான் சிறுவனுயிருந்த காலத்தில் இந்த உறி வெண்ணெய் தயிர்களைக் களவில் உண்டு மகிழ்ந்தான் எனப் பாகவத புராணம் கூறுகிறது. "சீரார் தயிர் கடைந்து வெண்ணெய் திரண்டதனை, வேரார் நுதல் மடவாள் வேரோர் கலத்திட்டு, நாரா ருறியேற்றி நன்கமைய வைத்ததனைப், போரார் வேற்கண் மடவாள் போந்தனையும் பொய் யுறக்கம், ஓராதவன் போல் உறங்கி யறிவுற்றுத், தாரார் தடந்தோள்கள் உள்ளளவும் கைந் நீட்டி, ஆராத வெண்ணெய்

விழுங்கி அருகிருந்த, மோரார் குடமுருட்டி முன்கிடந்த தானத்தே ஓரா தவன் போற் கிடந்தான்'' (சிறி. மடல்) என்று திருமங்கை மன்னன் உரைப்பது காண்க. இது பற்றியே நம் வடலூர் வள்ளலார், ''உறியிலே தயிரைத் திருடி யுண்டன னென்று ஒருவனை யுரைப்பதோர் வியப்போ'' எனக் கூறுகின்றார். குறி - பிறர் அறியா வகை யமைந்த மறைவிடம். அருமை குறித்து மறைத்து வைக்கப்பட்ட உண்பொருளை ''குறியிலே யமைத்த உணவு'' என இசைக்கின்றார். பருப்புக் கறி - கடைந்த பருப்பே மிகப் பெய்து சமைத்த கறி. இதனை வியஞ்சனம் என்பது முண்டு. நெய்யிலே பொரிக்கும் வியஞ்சனம் பொரித்த கறியாகும்; இதனைப் பொரிக் கறி என்பர். கடலைப் பருப்பும் பிறவும் கலந்து பொரிக்கும் கறி - கூட்டுக் கறியாம். இவற்றின் மணத்திலும் சுவையிலும் தோய்ந்து அறிவு திரியுமிடத்து உண்டாகும் ஆசை மயக்கம் ''பேராசை வெறி'' எனக் குறிக்கப்படுகிறது. இவ் வெறி யுற்றார் அகப்பட்ட தத்தனையும் எஞ்சாது உண்டு தேக் கெறிவது தோன்ற, ''வயிறு வீங்கிட வுண்டனன்'' என விளம்புகின்றார்.

இதனுற் கறி வகையாசை வெறியால் கடவுளை மறந்த குற்றம் தெரி வித்தவாறும். (4)

3357. கீரையே விரும்பேன் பருப்பொடு கலந்த
கீரையே விரும்பினேன் வெறுந்தண்
நீரையே விரும்பேன் தெங்கிளங் காயின்
நீரையே விரும்பினேன் உணவில்
ஆரையே எனக்கு நிகர்எனப் புகல்வேன்
அய்யகோ அடிச்சிறு நாயேன்
பேரையே உரைக்கில் தவம்எலாம் ஓட்டம்
பிடிக்குமே என்செய்வேன் எந்தாய்.

உரை : சிவபிரானுகிய எந்தையே, கீரைக் கறியை விரும்பாதயான், பருப்புக் கலந்த கீரைக் கறியை விரும்பி யுண்பேன்; வெறுந் தண்ணீரைக் குடிக்க மாட்டேனுயினும், தேங்காயின் உள்ளுறும் இள நீரைப் பெரிதும் விரும்பி யருந்துவேன்; உணவுகளைச் சுவை யறிந்து உண்பதில் எனக்கு ஒப்பாவார் யாவர் என்று வீறு பேசுவேன்; கீழான நாய் போன்ற எனது பெயரைச் சொன்னால், ஐயோ, நல்ல தவமனைத்தும் கெட் டொழியும் காண்; இதற்கு நான் யாது செய்வேன். எ.று.

கீரை - மனைகளில் நோன்பிருப்போரும் காடுகளில் தவம் புரிவோரும் வரைந்துண்ணும் இளந்தளிரும் - இலையுமாகிய உணவு; இதனை இலைக்கறி பைங்கறி என்றும் வழங்குவர்; இலைக்கறி பைக்கறி என்று மருவி வழங்குவது முண்டு. பருப்புப் பெய்திட்ட இலைக்கறி சுவை மிக வுடையதாதலால் ''பருப் பொடு கலந்த கீரையே விரும்பினேன்'' என வுரைக்கின்றார். யாதொரு கலப்பு மில்லாத தண்ணீர், ''வெறுந் தண்ணீர்'' எனப்படுகிறது. தெங்கின் இளநீர் இனிய சுவை யுடையதாகலின் அதனை மிக வுண்பேன் என்பாராய், ''தெங்கிளங் காயின் நீரையே விரும்பினேன்'' என்று மொழி கின்றார். வீறு பேசுதல் - உயர்த்திப் பேசுவது. கீழ்மை மிகுதிபுலப்படுத்

தற்கு "அடிச் சிறு நாயேன்" என வுரைக்கின்றார். என் பெயர் என்னுருவைக் காட்டி எனது உணவுப் பண்பை நிகழ்பித்துத் தவ வுணர்வைச் சிதைக்கும் என்பார், "நாயேன் பேரையே யுரைக்கில் தவ மெலாம் ஓட்டம் பிடிக்கும்" எனக் கூறுகின்றார்.

இதனால் குற்றப் பண்பின் மிகுதி காட்டியவாரும். (5)

3358. பாலிலே கலந்த சோறெனில் விரைந்தே
பத்தியால் ஒருபெரு வயிற்றுச்
சாலிலே அடைக்கத் தடைபடேன் வாழை
தகுபலா மாமுதற் பழத்தின்
தோலிலே எனினும் கிள்ளிஓர் சிறிதும்
சூழ்ந்தவர்க் கீந்திடத் துணியேன்
வாலிலேன் இருக்கில் வனத்திலே இருக்க
வாய்ப்புளேன் என்செய்வேன் எந்தாய்.

உரை : எந்தையாகிய பெருமானே, பாலிலே பெய்து பிசைந்த சோறு என்று சொன்னால் விரைந்து சென்று ஆர்வமுடன் பெரிய தொரு சால் போன்ற வயிற்றில் திணிப்பதற்குத் தடுத்தலில்லாத யான் தக்க வாழை, பலா, மா முதலிய பழத்தை யுண்ணுமிடத்து அவற்றின் தோ லென்றாலும் சிறிதளவேனும் கிள்ளிச் சூழ வுள்ளவர்க்குத் தர நினைக்க மாட்டேன்; எனக்கு வால் இல்லையே யொழிய இருந்தால் வனங்களில் வாழும் தகுதி யுடையேனுதலால் யான் யாது செய்வேன். எ.று.

சோற்றிற் பாலைப் பெய்துண்பது மரபாயினும், பாலின் மிகுதி விரும்பியது தோன்றப் "பாலிலே கலந்த சோறெனில்" எனவும், சோறளிப்பவர் பாலிற் பெய்த சோறு என்பாரேல் என்றற்கு "எனில்" எனவும் இயம்புகின்றார். பக்தி - அன்பு; ஈண்டு ஆர்வத்தின் மேல் நின்றது. சால் - அடி பருத்து வாயகன்ற மண்கலம். அதனை நிகர்ப்பது வயிறு என்றற்கு "வயிற்றுச் சால்" எனக் குறிக்கின்றார். இச் சாலை வண்ணர் பெரிதும் கையாளுபவாதலின், வண்ணன் சால்" என்று சிறப் பித் துரைப்பர். வயிறு நிரம்பினும் விடாது ஆசையாற் பெருக வுண்பது காட்ட "வயிற்றுச் சாலிலே அடைக்கத் தடைபடேன்" என வுரைக்கின் றார். இனியவும் உணவுக்கு ஏற்றவுமாதலின், வாழை, பலா, மா ஆகிய மூவகைக் கனிகளை எடுத்துரைக்கின்றார். பழத்தின் மேலுள்ள மிகுதியால் தோலைக் கொடுத்தற்கும் மனம் இசையாமை தோன்றப் "பழத்தின் தோலிலே யெனினும் கிள்ளி ஓர் சிறிதும் சூழ்ந்தவர்க் கீந்திடத் துணியேன்" என்று சொல்லுகின்றார். பழத்தையே பார்த் துண்டற்குரியவர் என்றற்குச் "சூழ்ந்தவர்" எனக் கூறுகின்றார். ஆசை யெழுந்து ஈதலை மறுக்கின்றமையின், "துணியேன்" என்கின்றார். மனித வுடம்புடன் நின்றேனுயினும், காடுறையும் குரங்கின் குணமும் செயலும் உடையவன் என்பாராய், "வாலிலேன் இருக்கில் வனத்திலே யிருக்க வாய்ப்புளேன்" எனவும், வேறுபட்ட பண்புடையனுதலால் செய்வ தறிகிலேன் என்பாராய், "என் செய்வேன்" எனவும் இயம்புகின்றார்.

இதனால், சோற் றுசையும் செய்வ தறியாமையுமாகிய குற்ற முடைமை தெரிவித்தவாரும். (6)

3359. உடம்பொரு வயிருய்ச் சருக்கரை கலந்த
உண்டியே உண்டனன் பலகால்
கடம்பெறு புளிச்சோ றுண்டுளே களித்தேன்
கட்டிநல் தயிரிலே கலந்த
தடம்பெறு சோற்றில் தருக்கினேன் எலுமிச்
சம்பழச் சோற்றிலே தடித்தேன்
திடம்பெறும் மற்றைச் சித்திரச் சோற்றில்
செருக்கினேன் என்செய்வேன் எந்தாய்.

உரை : எந்தையாகிய சிவ பெருமானே, உடம்பெல்லாம் ஒரே வயிறுகச் சர்க்கரை கலந்த சோற்றையே விரும்பிப் பன்முறையும் உண் பவனுகிய யான், பாணியில் வைத்த புளிச்சோற்றை யுண்டு மகிழ்ந்தேன்; நல்ல தயிரைக் கட்டியாகப் பெய்தமைத்த பெரிதாகிய சோற்றை யுண்டு செருக்கினேன்; எலுமிச்சம் பழச் சாறு கொண்டமைத்த சோற்றை யுண்டு உடல் பருத்தேன்; சிறப்புப் பெற்ற வேறு சித்திரான்னங்களை யுண்டு பெருமித முற்றேன்; இப் பெற்றியனைய யான் யாது செய்வேன். எ.று.

உணவுண்டு நிறைந்த வயிறு கழுத்தளவும் வீங்கித் தோன்றுதல் பற்றி, "உடம்பொரு வயிருய்" என்றும், நிறைத்த உண்பொருள் சர்க்கரைப் பொங்கல் என்றற்கு, "சர்க்கரை கலந்த உண்டி" என்றும், உடம்பெலாம் வயிருய்த் தோன்றுதற்குப் பலகால் உண்டமை என்பார், "உண்டனன் பலகால்" என்றும் கூறுகின்றார். புளிச்சோற்றைப் பாணியிற் பெய்து வைத்துப் பின்னர் உண்டமை புலப்பட, "கடம் பெறு புளிச் சோறு" எனவும், புளிச்சோறு மயக்கம் தருவதாகலின், "உண்டுளே களித்தேன்" எனவும் உரைக்கின்றார். சிவக்கக் காய்ந்து பாலால் அமைந்து கண்டங் கண்டமாய்த் தோய்ந்த தயிர் கலந்த சோறென்றற் குக் "கட்டி நல்தயிரிலே கலந்த தடம் பெறு சோறு" எனச் சிறப்பிக்கின் றார். பெருமை யுணர்த்தும் தட வென்னும் சொல் தடம் என வந்தது. தயிர்ச் சோறு உண்டார்க்குப் பெருமித வுணர்வைத் தருதலால், "தருக்கினேன்" எனவும், எலுமிச்சச் சாறு கலந்தமைத்த நெற் சோறு உடம்பு தடிக்கச் செய்யும் என்று உண்டு பயின்றோர் உரைத்தலால் "தடித்தே" னெனவும் இயம்புகின்றார். சித்திரான்னம், முந்திரிகைப் பருப்பு, பாதாம் பரும்பு, சாரப் பருப்பு, திராட்சை, கற்கண்டு முதலியன கலந்திட்ட பாற் பொங்கல்.

இதனுல் சோற்று வகையில் ஆசை கொண் டுண்டுழந்த குற்றம் தெரி வித்தவாரும். (7)

3360. மிளகுமேன் மேலும் சேர்த்தபல் உணவில்
விருப்பெலாம் வைத்தனன் உதவாச்
சுளகினும் கடையேன் பருப்பிலே அமைத்த
துவையலே சுவர்க்கம்என் றுண்டேன்
இளகிலா மனத்தேன் இனியபச் சடிசில்
எவற்றிலும் இச்சைவைத் திசைத்தேன்
குளகுணும் விலங்கின் இலக்கறிக் காசை
கொண்டனன் என்செய்வேன் எந்தாய்.

உரை : சிவ பெருமானுகிய எந்தையே, மேலும் மேலும் மிளகு கலந்து சமைத்த பல்வேறு வகையான உணவை விரும்பி யுண்பவனுகிய யான் சிதைந் தொழிந்த சுளகினும் கீழ்ப்பட்டவனுயினேன்; பருப்பினுல் செய்த துவையற் சுவையே துறக்க வுலக போக மெனக் கருதி யுண்பவன்; இரக்கமில்லாத மனத்தையுடையவனுகிய யான் இனிய சுவையுற்ற பச்சடிசில் எவ்வகையதாயினும் விரும்பி யுண்பேன்; பசுந் தழைகளையே மேய்ந்துண்ணும் விலங்குகளைப் போல இலைக் கறிகளையே யுண்டுறைகின்றவனுதலால் ஆசை யறுத்தற்கு யாது செய்வேன். எ.று.

பச்சை மிளகும் உலர்ந்த மிளகுமாய மிளகு வகைகளைக் கொண்ட காரமுடைய உண்டி வகையை, "மிளகு மேன் மேலும் சேர்த்த பல்லுணவு" எனப் பகர்கின்ருர். உதவாச் சுளகு-தேய்ந்து பயன்படாதொழிந்த சுளகு. சுளகு - அடியகன்று நீண்டு தலையகலம் சுருங்கிய முறவகை. யானைக் காது போல்வது முறம். எதற்கும் பயன்படாத சுளகு குப்பையில் எறியப்படுவது போல யானும் கழிக்கப் பட்டேன் என்பாராய், "உதவாச் சுளகினும் கடையேன்" எனக் கூறுகின்ருர். பொன் போல வறுத்து அரைக்கப்பட்ட பருப்புத் துவையல் இனிய சுவை யுடையதாகலின், "பருப்பிலே யமைத்த துவையலே சுவர்க்கம் என்று உண்டேன்" என வுரைக்கின்ருர். இளகுதல் - இரக்கத்தாற் குழைதல். பச்சடிசில் -வேக வையாது பசுமையான மல்லி, மிளகு, சீந்தில், மாங்காய் முதலியவற்றைக் கொண்டு தனித்தனியாகச் சுவையுற அமைப்பது. இஃது இந்நாளில் பச்சடி என்ற பெயரால் எங்கும் வழங்குகிறது. மிளகு பச்சடி கேரள நாட்டில் மிக்குளது; சீந்திற் பச்சடி காடு படர்ந்த மலைப் பகுதிகளில் காணப்படும். அளவிற் சுருங்கிச் சுவையில் மிக்குறுதலின், "இனிய பச்சடிசில்" என இசைக்கின்ருர். குளகு - பச்சிலை.

இதனுல், துவையலும் பச்சடிசிலுமாகிய உண்டி வகைகளில் ஆசை யுற்ற குற்றம் விதந்துரைக்கப்பட்டவாரும். (8)

3361. தண்டுகாய் கிழங்கு பூமுதல் ஒன்றும்
தவறவிட் டிடுவதற் கமையேன்
கொண்டுபோய் வயிற்றுக் குழிஎலாம் நிரம்பக்
கொட்டினேன் குணமிலாக் கொடியேன்
வண்டுபோல் விரைந்து வயல்எலாம் நிரம்ப
மலங்கொட்ட ஓடிய புலையேன்
பண்டுபோல் பசித்தூண் வருவழி பார்த்த
பாவியேன் என்செய்வேன் எந்தாய்.

உரை : எந்தையாகிய சிவபிரானே, கிழங்கு, தண்டு, காய், பூ முதலிய வகைகளில் யாதும் மறந்தும் விட்டொழித்தற்கு உடன்படாத வனுகிய யான், சமைத்தவற்றை வாயிற் பெய்து குழி போன்ற வயிற்றிற் கொட்டி நிறைத்தேன்; நற்குண மில்லாத கொடியவனுகலின் வண்டு களைப் போல விரைந்து சென்று வயற்புறங்களில் உண்டு கழித்த மலத்தைக் கழித் தொழித்தற்கு ஓடிய புலைத்தன்மை யுடையவனுவேன்; அதனை டமையாது, முன்பு போல் பசி வேட்கை மிக்கு உணவும் வரும்

திறத்தை எதிர்பார்ப்பேன்; இத்தகைய பாவியாகிய நான் வேறே யாது செய்வேன். எ.று.

தண்டு - வாழைத் தண்டு, கீரைத் தண்டு போல்வன. கிழங்கு, வள்ளி முள்ளங்கி போல்வன. காய் - வாழை, பாகல் போல்வன; பூ - வாழை, கத்தரி போல்வன. தவற விடல்-வேண்டா வென விலக்குதல். வயிறுர வுண்டேன் என்பார், "கொண்டு போய் வயிற்றுக் குழி யெலாம் நிரம்பக் கொட்டினேன்" என இழித்தல் வாய்பாட்டில் இயம்புகின்றார். நிரம்புதல் - நிறைதல். நிரம்ப - ரொம்ப எனப் பேச்சு வழக்கில் வரும். வண்டு - பூவிற் றேனுண்பனவும், சாணம் மலம் ஆகியவற்றை மொய்த் துண்பனவுமாம். காலை மாலைகளில் வயற் புறம் சென்று மலம் கழிக்கும் இயல்பு பற்றி, "மலம் கொட்ட ஓடிய புலையேன்" எனப் புகல்கின்றார். மலத்தின் எருவாம் தன்மை யுணரப்பட்ட பின் திறந்த வெளியில் மலம் கழித்தல் தீது என்று அறிஞர் அறிவுறுத்துகின்றனர். காலந் தோறும் பசித் தீ எழுந்து வெதுப் புதல் பற்றி, "பண்டு போற் பசித்தூண் வருவழி பார்த்த பாவியேன்" எனப் பகர்கின்றார். ஊணென்றே எதிர்பார்த்திருக்கும் செயலால், "பாவி யேன்" என வுரைக்கின்றார்.

இதனால், உண்டலும் மலம் கழித்தலுமே செயலாவது நினைந்து கூறியவாறும். (9)

3362. வறுத்தலே பொடித்து மலர்த்தலே புரட்டி
வைத்தலே துவட்டலில் சுவைகள்
உறுத்தலே முதலா உற்றபல் உணவை
ஒருமல வயிற்றுப்பை உள்ளே
துறுத்தலே எனக்குத் தொழில்எனத் துணிந்தேன்
துணிந்தரைக் கணத்தும்வன் பசியைப்
பொறுத்தலே அறியேன் மலப்புலைக் கூட்டைப்
பொறுத்தனன் என்செய்வேன் எந்தாய்.

உரை: எந்தையாகிய சிவனே, வறுத்தலும் பொடி செய்தலும் மலர்த்தலும் புரட்டுதலும் துவட்டலும் வேறு கலவைகளாற் சுவை மிகுவித்தலாகிய சமையற் செய்கைகளால் உளவாகிய உணவுகளே மல நிறைந்த ஒரு வயிற்றுப் பைக்குள் நிறைப்பதே என்னுடைய தொழிலாம் எனத் தெளிந் துள்ளேனுதலால், அத் தெளிவால் அரைக் கணமும் கொடிய பசி நோயைப் பொறுக்க மாட்டாதவனுய் புலால் நாறும் மலக் கூடாகிய உடம்பைச் சுமப்ப தொழிய வேறு என்ன செய்வேன். எ.று.

கிழங்கு காய்களாகிய சிலவற்றை வறுத்துப் பொடி செய்தல் சமையற் செய்கைகளில் ஒன்றுதலின், "வறுத்தலே பொடித்து மலர்த்தலே" எனக் கூறுகின்றார். பொடித்து மலர்த்தல் என்பதைப் பொடித்தல் மலர்த்தல் என விரித்துக் கொள்க. வற்றலாய்ச் சுருண்டுள்ளவை, வேக வைக்கு மிடத்து, விரிந்து மலர்தலின், அதனை மலர்த்தல் என்று கூறுகின்றார். சிறு வெப்பத்தில் சமைக்கப்படுபவை, "புரட்டல்" எனப்படும். இன்னேரன்ன

செய்கைகள் சமைக்கப்படும் காய்கறிகட்குச் சுவை மிகுவித்தலால், "சுவைகள் உறுத்தல் முதலா வுற்ற பல்லுணவு" என வுரைக்கின்றார். வேண்டாவிடினும் மென்று வயிற்றுக்குட் செலுத்துவது பற்றி, "வயிற்றுப் பை யுள்ளே துறுத்த" லென்கின்றார். உண்பதே உயிர் வாழ்வார் நாளும் வேளை தோறும் செய்தொழிலாதலால், "வயிற்றுப் பை யுள்ளே துறுத்தலே எனக்குத் தொழிலெனத் துணிந்தேன்" என்று சொல்லுகிறார். செரிப்புற்றுக் கழிந்த பொருள் வயிற்றினுள் மலமாய் ஒடுங்குதல் நோக்கி, வயிற்றை "மல வயிற்றுப் பை" எனப் பழிக்கின்றார். துணிதல் - தெளிதல். தெளிந்த நீரைத் துணி நீர் என்பது சான்றோர் மரபு. பசி நோய், பொறுத்தற் கரிய வலிமை படைத்த தென்பதால், "வன் பசி" என்று குறிக்கின்றார். உள்ளே மலமும் ஊனுகிய புலாலும் நிறைந்துள்ளமையால் உடம்பை, "மலப் புலைக் கூடு" என மொழிகின்றார். "புழுமலி நோய்ப் புன்குரம்பை" எனச் சான்றோர் கூறுவதுண்டு.

இதனுற் பலவகைச் சுவை யுணவை யுண்டு உடம்பைப் பேணும் திறம் உரைத்தவாரும். (10)

3363. பருப்பிடி யரிவா லிடிகளா திகளால்
பண்ணிய பண்ணிகா ரங்கள்
உருப்பிடி நிரம்ப வரவர எல்லாம்
ஒருபெரு வயிற்றிலே அடைத்தேன்
கருப்பிடி உலகின் எருப்பிடி அனைய
கடையரில் கடையனேன் உதவாத்
துருப்பிடி இருப்புத் துண்டுபோல் கிடந்து
தூங்கினேன் என்செய்வேன் எந்தாய்.

உரை : எந்தையாகிய சிவனே, பருப்புமாவும் அரிசியின் வெண்மையான மாவும் பிற மாவுகளும் கொண்டு செய்த பண்ணியங்கள் ஒவ்வோர் உருப்பிடியாக வந்து கொண்டிருக்க அவை யெல்லாவற்றை யும் எனது ஒரு பெரிய வயிறு அடைய உண்டொழித்த யான், பிறப்புக் கேதுவாகிய இவ்வுலகின்கண் பிடியளவாய சாம்பராகும் கீழ் மக்களிற் கீழானவன்; பயனில்லாத துருப் பிடித்த இருப்புத் துண்டு போற் கிடந்து உறங்கிக் கெட்டேனுகலின், யான் யாது செய்வேன். எ.று.

இடி, இடித்த மா, உழுந்து, துவரை, கடலை யாகியவற்றின் மா, "பருப்பிடி" எனவும், நெல் லரிசியை இடித்துப் பெற்ற மா "அரிவால் இடி" எனவும் கூறப்படுகின்றன. புத்தரிசி, புத்தரி என வழங்குத லுண்மையின் அரிசி மா, "அரி யிடி" என்றும், அது மிகவும் வெண்மையா யிருப்பதால், "அரிவால் இடி" என்றும் வந்தன. இந்த மா வகைகளைக் கொண்டு பண்ணிய வகை பலவும் செய்யப்படுவதால், "பருப்பிடி அரிவால் இடிகளாதியாற் பண்ணிய பண்ணிகாரங்கள்" எனக் கூறுகின்றார். பண்ணிகாரம் நூல்களிற் பண்ணியம் என வழங்கும்; இந்நாளில் பலகாரம் எனச் சொல்லுகின்றனர். "பண்ணிய மேந்தும் கரம் தனக்காக்கி" (தனிபு) எனக் கச்சியப்ப முனிவர் குறிப்பது காண்க. "சிறந் ததோரத்துப் பண்ணியம் பகர்நர்" (மதுரைக்) என்றனர் சங்கச்

சான்றோர். பண்ணிய வகை ஒவ்வொன்றும் உருப்பிடியாகும். இஃது உருப்படி என மருவியுளது. கரு - பிறப்பு. பிறப்புக் கேதுவாய வினை நிகழ்ச்சிக் கிடமாகலின், மண்ணுலக வாழ்வைக் "கருப்பிடி யுலகு" என மொழிகின்றார். எரு - சாம்பர். பிடி யளவாகும் சாம்பலை, "எருப்பிடி" என்று கூறுகிறார். இழிக்கப்படுவது பற்றி, "எருப்பிடி யனைய கடையரில் கடையேன்" என வுரைக்கின்றார். துருப் பிடித்த இரும்புத் துண்டு வலி யிழந்து பயன்படா தொழிவதால் "துருப்பிடி யிருப்புத் துண்டு போற் கிடந்து தூங்கினேன்" எனச் சொல்லுகின்றார்.

இதனாற் பண்ணிய ஆசை மேலிட்ட குற்றத்தாற் கெட்டமை கூறிய வாறும். (11)

3364. அடிக்கடி நுண்மை விழைந்துபோய் அவைகள்
அடுக்கிய இடந்தொறும் அலைந்தே
தடிக்கடி நாய்போல் நுகர்ந்துவாய் சுவைத்துத்
தவம்புரிந் தான்என நடித்தேன்
பொடிக்கடி நாசித் துளையிலே புகுத்திப்
பொங்கினேன் அய்யகோ எனது
முடிக்கடி புனைய முயன்றிலேன் அறிவில்
மூடனேன் என்செய்வேன் எந்தாய்.

உரை : எந்தையாகிய சிவனே, நுண்ணிய வுருவுடைய சிற்றுண்டி வகைகளை ஆசைப்பட்டு அவைகள் அடுக்கி யிருக்கும் கடை தோறும் அடிக்கடி சென்றலைந்த யான், ஊன் துண்டைக் கடித்துச் சுவைக்கும் நாய் போல் உண்டு நாவால் வாய் சுவைத்துத் தவம் புரிபவனைப் போல வாயை மென்று நடித்தேன்; அவற்றின் பொடியிற் படிந்த மணத்தை மூக்குத் துளைகளால் மோந்து உவகை யுற்றேனே யன்றி, ஐயோ, எனது தலையில் நினது திருவடியைப் புனைந்து கோடற்கு நல்லறி வில்லாத மூடனதலால் முயன்றேனில்லை; ஆகவே யான் யாது செய்வேன். எ.று.

நுண்மை - நுண்ணிய வுருவமைந்த சிற்றுண்டி வகைகள். அவை சிற்றுண்டிக் கடைகளில் தனித் தனியாகத் தட்டுக்களில் வரிசையாகப் பலரும் கண்டு வாங்கி யுண்ண வைக்கப்பட்டிருப்பது மரபாதலின், "அடிக்கடி நுண்மை விழைந்து போய் அவைகள் அடுக்கிய இடந்தொறும் அலைந்து" என்கின்றார். தடி - ஊன் துண்டு; ஊன் ஒட்டி யிருக்கும் எலும்புத் துண்டுமாம். நாவால் வாயிதழ்களை நக்கிக் கொள்ளும் செயலை, "நுகர்ந்து வாய் சுவைத்து" என்றும், தவம் புரிவோன் மந்திர மனைத்தால் வாயிதழ் புலர்தலின் நாவால் துடைத்துக் கொள்வது போல் வாய் சுவைத்தமை விளக்குதற்குத் "தவம் புரிந்தானென நடித்தேன்" என வுரைக்கின்றார். பொடி - சிற்றுண்டியிற் சிதறும் துகள். கடி - நல்ல மனம். சிற்றுண்டித் துகளின் மணத்தை மோந்து இன்புற்றமை தோன்ற, "நாசித் துளையிலே புகுத்திப் பொங்கினேன்" என்று கூறுகின்றார். இறைவன் திருவடி தமது முடி மேல் பொருந்த விழைவது சிவநெறிச் சான்றோர் இயல்பாக, யான் அது செய்திலேன் என வருந்துகின்றமை யின், "எனது முடிக்கடி புனைய முயன்றிலேன்" எனக் கவல்கின்றார்.

இதனால், சிற்றுண்டி விழைவுற் றலைந்தமை தெரிவித்தவாறும். (12)

3365. உண்டியே விழைந்தேன் எனினும்என் தன்னை
உடையவா அடியனேன் உனையே
அண்டியே இருந்தேன் இருக்கின்றேன் இருப்பேன்
அப்பநின் ஆணைநின் தனக்கே
தொண்டுரு தவர்கைச் சோற்றினை விரும்பேன்
தூயனே துணைநினை அல்லால்
கண்டிலேன் என்னைக் காப்பதுன் கடன்காண்
கைவிடேல் கைவிடேல் எந்தாய்.

உரை : எந்தையாகிய சிவபெருமானே, உண்பொருளையே பெரிதும் அவாவினே னென்றுலும் என்னை யுடைய முதல்வனுகிய உன்னையே அணுகி யிருந்தேன்; இன்றும் இருக்கின்றேன்; இனியும் இருப்பேன்; இது அப்பனுகிய நின் மேல் ஆணை; நின்னுடைய திருவடிகட்குத் தொண்டு புரியாதவர்கள் கை நீட்டித் தரும் சோற்றினை யான் விரும்புவதில்லை; தூயவனே, எனக்குத் துணை யாவார் நின்னைத் தவிர வேறே காணேனு தலால் என்னைக் காப்பது உனக்குக் கடன்; என்னைக் கைவிடாதே. எ.று.

உண்டி - உணவு; உண்பொருளுமாம். உண்பொருள் மேலும் உண்டலின் மேலும் உள்ள ஆசை மிகுதியைப் பல படியாக எடுத் தோதினமையால், "உண்டியே விழைந்தே னெனினும்" என்றும், என்று லும் எனது உள்ளம் உனது திருவடியையே நினைந்து தோய்ந்திருந்தது என்பாராய், "அடியனேன் உனையே அண்டியே யிருந்தேன்" என்றும், இருந்தமைக்குக் காரணம் நீயே என் உடல் பொருள், உயிர் அனைத்துக் கும் முதல்வன் எனக் குறித்தற்கு "என்றன்னை யுடையவா" என்றும் இயம்புகின்றார். சோற்றுசை மிக்கவனுயினும், மெய்த் தொண்டரிடத் தல்லது பிறர்பாற் சென்று உண்ணுவதில்லை. என்ற கருத்தை யாப்புறுத் தற்கு, "நினக்குத் தொண்டுருதவர் கைச் சோற்றினை விரும்பேன்" எனக் கட்டுரைக்கின்றார். அண்டுதல் - அணுகுதல்; அணைதல் - நெருங்குதல். அண்ணுதல் அண்முதல் என வரும் வாய்பாடுகளில் ஒன்று. முக்காலத் தும் தமது கொள்கை யிதுவென வற்புறுத்தற்கு "இருந்தேன் இருக்கின் றேன் இருப்பேன் அப்ப நின் ஆணை" என வுரைக்கின்றார். முதல்வனுகிய உன்னை யொழிய வேறு துணை யிலேனுதலால் என்னைக் காப்பது உனக்குக் கடன் எனப் புகலடைகின்றாராகலின், "காப்பது உன் கடன்" என முறையிடுகின்றார்.

இதனுல், உண்டியாசை மிக்கோனுயினும் திருவருளாசை யில்லாதவ னல்லன் எனத் தெரிவித்தவாரும். (13)

10. தற் சுதந்தரம் இன்மை

அஃதாவது, உலகில் ஓரணுவும் திருவருளாலன்றி இயங்குவதில்லை என்பது உணரப்படின், இயங்கும் உயிர்க்குத் தன்னியக்க மெனத் தனியே ஒன்றுமில்லை என உன்னி யுணர்ந் துரைத்தலாம். "பரதந்திரியம் கரை கழி பந்தம்" (ஞானா. 19) என வாகீச முனிவர் கூறுவது காண்க. தற்சுதந்தர மின்மை மிருகேந்திரம் முதலிய சிவாகமங்களிற் காணப் படுவது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3366. இப்பாரில் உடல்ஆவி பொருளும்உன்பாற்
கொடுத்தேன்மற் றெனக்கென் றிங்கே
எப்பாலும் சுதந்தரம்ஓர் இறையும்இலை
அருட்சோதி இயற்கை என்னும்
துப்பாய உடலாதி தருவாயோ
இன்னும்எனைச் சோதிப் பாயோ
அப்பாநின் திருவுளத்தை அறியேன்இவ்
வடியேனுல் ஆவ தென்னே.

உரை : அப்பனே, இவ்வுலகில் உடலென்றும் பொருளென்றும் உயிரென்றும் பருத்துக் காணப்படும் மூன்றையும் உனக்குரியவை யென வுணர்ந்து கொண்டேனுகலின், எனக்குரிய தெனக் கருதுதற்கு எவ் விடத்தும் உரிமை சிறிதும் இல்லை; எல்லாம் நினது அருட் சோதியின் இயற்கை யுரிமை என்று சிவாகமங்கள் கூறுகின்றன; இனி எனக்குப் போக நுகர்ச்சிக் குரிய உடல் முதலியவற்றைத் தருவாயோ? தாராது மேலும் துன்பத்தைத் தருவன தந்து சோதனை செய்வாயோ? நினது திருவுளக் குறிப்பை அறிய வல்லனே? அறியேனுதலால் ஏழை யடியவனுகிய என்னுல் ஆவது ஒன்றும் இல்லை, காண். எ.று.

அறிவுடைய ஒவ்வொருவனும் வாழ்க்கையை எண்ணுவனுயின், வாழும் தனது உயிரும், கருவியாகிய உடம்பும், வாழ்க்கைப் பொருளும் என்ற மூன்று மல்லது வேருென்று மில்லை எனவும், அவை தாமும் உயிர்ப் பொருட்டு இறைவன் படைத்தளிக்க வந்தவை யெனவும், அவற்றின் மேல் தனக்கு உரிமையில்லை எனவும் உணர்ந்தொழுகுதல் உடல் முதலிய மூன்றையும் இறைவற்குக் கொடுத்தல் எனப்படுதலால் "இப்பாரில் உடலாவி பொருளும் உன்பாற் கொடுத்தேன்" என்றும், "எனக்கென்று இங்கே எப்பாலும் சுதந்தரம் ஓர் இறையும் இலை" என்றும் கூறுகின்ருர். இறைவன் திருவருள் ஞான வொளியாதல் பற்றி, "அருட் சோதி" என்றும், அத்திருவருள் இயற்றுவிக்க ஒவ்வொரு சிற்றணுவும் இயலுவ தால், "அருட் சோதி இயற்கை" யென்றும் இயம்புகின்ருர். என்னும் -

என்று சொல்லுகின்றனர்; இதற்குரிய எருவாய் வருவிக்கப்பட்டுளது. துப்பாய வுடல் - சிவ போகத்தை நுகர்தற்குரிய ஞான உடம்பு. உடலாதி - உடல் பொருள் முதலியன. ஞான வுடம்பும் ஞானப் பொருளும் கொண்டன்றி ஞான போகம் நுகரப்படாமை விளங்க, "துப்பாய வுடலாதி தருவாயோ" என்று கேட்கின்றார். உலகியற்றுன்ப நுகர்வுக்குரிய ஊனுடம்பும் பொருளும் பிறவும் தருவாயோ மேலும் பிறப்பிறப்புக் குள்ளாக்குவயோ நின் திருக்குறிப்பு யாதோ அறிகியேன் என்பாராய், "இன்னும் எனைச் சோதிப்பாயோ நின் திருவுளத்தையறி யேன்" என இசைக்கின்றார். சோதித்தலாவது - துக்க வுடம்பும் வாழ்வும் தந்து சுதந்தர மின்மை யுணரப்படுகிறதா எனக் காண்பது. சுதந்தர மின்மை யுணர்ந்தொழுகும் திறத்தைச் சிவஞான போதம் "இறை பணி நிற்றல்" என்று கூறுகிறது. உணர்ந்தமை விளங்க, "அடியேனுல் ஆவ தென்னே" என்று கூறுகின்றார்.

இதனுல் ஆன்மாவுக்குச் சுதந்தரமின்மை விளக்கியவாறும். (1)

3367. என்னேஎம் பெருமான்இங் கின்னும்அஃனந்
திலன்என்றே ஏங்கி ஏங்கி
மன்னேஎன் மணியேகண் மணியேஎன்
வாழ்வேநல் வரத்தாற் பெற்ற
பொன்னேஅற் புதமேசெம் பொருளேஎன்
புகலேமெய்ப் போத மேஎன்
அன்னேஎன் அப்பாஎன் றழைத்தலன்றி
அடியேனுல் ஆவ தென்னே.

உரை : எங்கள் பெருமானுகிய சிவபிரான் என்னை இன்னமும் தன்பால் அழைத்துச் சேர்த்துக் கொள்ளா திருக்கின்றனன்; இதனை என்னென்பது எனப் பன்முறையும் ஏங்கி யொழிவ தன்றி, மன்னனே, மணியே, கண்மணியே, என் வாழ்வே, நல்ல வரப் பொருளாகப் பெற்ற பொன் போன்றவனே, அற்புதமே, செம்பொருளே, எனக்குப் புகலாய வனே, மெய்யுணர்வே, எனக்கு அன்னை யொப்பவனே, அப்பனே என்று கூவி யழைப்ப தொழிய அடியவனுகிய என்னற் செய்யலாவது யாதாம்? எ.று.

இவ்வுலகில் இத்துணைக் காலம் துன்பத்தில் வருந்தி யுற்றேனுகவும் என்றற்கு "இன்னும்" என்றும், துன்ப நெருப்பாற் சுடப்பட்டுத் தூயனுகிய தறிந்தும் தன் திருவருள் நீழலிற் சேர்க்க வில்லை என்ற எண்ணத்தால் சாம்பினமை விளங்க, "எம் பெருமான் இங்கு இன்னும் அஃனத்திலன் என்று ஏங்கி" என்றும், "என்னே" என்றும் உரைக்கின்றார். மன் - முறை வழங்கும் மன்னவன். மணி - மாணிக்க மணி. மாணிக்க மணியின் நிற முடைமையின், "மணியே" எனவும், ஞான வொளி செய்தலால் "கண் மணியே" எனவும் கூறுகின்றார். இன்ப வாழ்வுக் குரிய அறிவும் செயலும் அருளுதலால், "என் வாழ்வே" என வுரைக்கின்றார். நற்றவம் செய்து எய்திய வரத்தால் பெறப்பட்ட அரிய பொன் போன்றவ னென்றற்கு "நல் வரத்தாற் பெற்ற பொன்னே" எனப் புகல்கின்றார். அருமை விளங்க "அற்புதமே" என்றும், தோற்றக் கேடின்மையும், தூய்மையும், எல்லா

வற்றினும் கலந்தும் விகார மில்லாமையும் உடைமை பற்றிச் "செம் பொருள்" என்றும் இயம்புகின்றார். புகல் - அடைக்கலம் புகுமிடம். மெய்ப் போதம் - மெய்ஞ்ஞானம். சிவபோகம் வேறொரு வகையாற் பெறலாவ தன்மையின் கூவி யழைத்து இரப்பதன்றிச் செயல் வேறு இல்லாமை புலப்பட, "அழைத்த லன்றி அடியேனுல் ஆவ தென்னே" என்று அவலிக்கின்றார். பன்முறையும் அழைப்ப நல்குவது உடையார்க்குச் சிறப் பாகாது என்பது கருத்து, "அழையாமே அருள் நல்குமே" (ஒத்தூர்) என ஞானசம்பந்தர் கூறுவது காண்க.

இதனுல், திருவருட் பேற்றுக்கு ஏங்கிப் பன்முறையும் அழைப்ப தன்றிச் செயல் வேறில்லை எனத் தெரிவித்தவாறும். (2)

3368. பொடிஎடுக்கப் போய்அதனே மறந்துமடி
எடுத்தரையில் புனேவேன் சில்லோர்
தடிஎடுக்கக் காணில்அதற் குளங்கலங்கி
ஓடுவனித் தரத்தேன் இங்கே
முடிஎடுக்க வல்லேனே இறைவாநின்
அருள்இலதேல் முன்னே வைத்த
அடிஎடுக்க முடியாதே அந்தோஇச்
சிறியேனுல் ஆவ தென்னே.

உரை : திருநீற்றுப் பொடியை எடுத்தணியச் சென்று இடையில் அதனே மறந்து பின் வெறும் மடியைத் தட்டிப் பார்த்து இல்லாமைக் கிரங்கி அரையிற் கட்டிக் கொள்ளும் கடையனுகிய யான், யாதானும் காரணம் பற்றிச் சிலர் கையில் தடி யெடுத்து ஏத்துவராயிற் கண்டு அதற்கு அச்சத்தால் மனம் கலங்கி வேறிடம் நாடி விரைந்தோடுவோன்; இத்தகைய கீழ்த் தரமுடைய யான் இவ்வுலகில் நினது திருவருட் டுணை யில்லையாயின் தலை நிமிர வல்லவனுவேனே? முன் வைத்த காலைத் தான் எடுக்க வல்லவனுவேனே? ஐயோ, சிறியவனுகிய என்னுல் யாது செய்ய முடியும்? எ.று.

கொண்ட குறிப்பைச் சாதித்துக் கொள்ளும் மன வன்மையும் வினை யாண்மையும் உடையவனல்ல னெனத் தமது மென்மை யியல்பை யுணர்த்தற்குப் "பொடி எடுக்கப் போய் அதனே மறந்து மடி எடுத்து அரையிற் புனேவேன்" என்று புகல்கின்றார். பொடி - திருநீற்று வெண் பொடி. மடி - அரையில் உடுத்த ஆடையின் மடித்த கூறு. தம் பாட்டுக்குச் செல்லும் சிலர் கையில் தடி யேந்துவது கண்டால் தம்மை யடிப்ப ரென அஞ்சி ஒதுக்கிடம் நாடி யோடும் கீழ்மைப் பண்புடையவன் என்றற்கு "உளம் கலங்கி யோடுவேன்" என வுரைக்கின்றார். தரம் - குணம் செயல் களால் தலை இடை கடை எனக் காணப்படும் தகுதி. இத் தரத்தேன் - இத்தகைய கடையாகிய கீழ்மைத் தகுதி படைத்த நான். நினது திருவருட் டுணை யில்லையாயின் ஒன்றும் செய்ய வல்லவனுகேன் என்பா ராய், "இங்கே முடி யெடுக்க வல்லேனே" என்று கூறுகிறார். முடி யெடுத்தல் - குனிந்த தலையை நிமிர்த்தல். "நின் அருள் இலதேல்" என்பது முன்னும் கூட்டுக. அது போல் முன்னே எடுத்து வைத்த காலை நின் திருவரு ளில்லையாயின் மேலும் எடுத்து வையேன் என்பாராய்,

"இறைவா நின் அருளிலதேல் முன்னே வைத்த அடி யெடுக்க முடியாதே" என்று மொழிகின்றார். சிறியேன் - குணம் அறிவு செயல்களிற் சிறுமையுடையவன்.

இதனால் திருவருளின்றி ஒரு செயலும் செய்ய மாட்டாமை தெரிவித்த வாரும். (3)

3369. பாட்டுவித்தால் பாடுகின்றேன் பணிவித்தால்
பணிகின்றேன் பதியே நின்னைக்
கூட்டுவித்தால் கூடுகின்றேன் குழைவித்தால்
குழைகின்றேன் குறித்த ஊணை
ஊட்டுவித்தால் உண்கின்றேன் உறக்குவித்தால்
உறங்குகின்றேன் உறங்கா தென்றும்
ஆட்டுவித்தால் ஆடுகின்றேன் அந்தோ இச்
சிறியேனுல் ஆவ தென்னே.

உரை : சிவ பரம்பொருளே, நினது திருவருள் என்னைப் பாடச் செய்தலாற் பாடுகின்றேன்; பணியச் செய்தலாற் பணிகின்றேன்; நின் திருவடி நினைவிற் சேர்த்தலால் யான் அதனைக் கூடுகின்றேன்; மனம் உருகச் செய்தலால் உருகுகின்றேன்; குறித்த உணவை உண்பித்தால் உண்கின்றேன்; உறங்கச் செய்தலால் உறங்குகின்றேன்; உறங்காமல் உலக வாழ்வில் ஆடச் செய்தலால் ஆடுகின்றேன்; ஐயோ, சிறியவனு கிய என்னுல் தனிநிலையில் ஆவக் கூடியது ஒன்றுமில்லை; எ.று.

சிவ சத்தியாகிய திருவருளால் உலகப் பொருள் யாவையும் என்னுடைய உடல் கருவி கரணங்கள் அனைத்தும் இயங்குகின்றன என் பாராய், "பாட்டுவித்தலாற் பாடுகின்றேன், பணிகின்றேன், நின்னைக் கூடுகின்றேன்; நினைந்து குழைகின்றேன்; உண்கின்றேன்; உறங்குகின் றேன்; உறங்காது ஆடுகின்றேன்; சிறியவனுகிய என்னுல் ஆவது பிறி தில்லை" என அறிவிக்கின்றார். பாடுவித்தல் - பாட்டுவித்தல் என வந்தது. பதி - சிவ பரம் பொருள். உயிர்களையும் உலகியலையும் கூட்டி வாழ்விக்கும் தலைவனுதல் தோன்ற, "பதியே" எனப் பராவுகின்றார். கூடுதல் - ஈண்டுத் திருவருளைச் சிந்தித்தல். குழைதல் - அன்பால் உருகுதல். நுகர்தற் கெனத் திருவருள் காட்டும் உணவு, "குறித்த வூண்" எனப்படுகிறது. உறக்குதல் - ஓய்வு பெறுவித்தல். ஆடுதல் - ஈண்டு வாழ்தல் மேற்று. இவ் வாறே திருவருள் ஞானம் கைவரப் பெற்றதனுல் திருநாவுக்கரசர், "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே, அடக்குவித்தா லாரொருவர் அடங்காதாரே, ஓட்டுவித்தா லாரொருவ ரோடாதாரே, உருகுவித்தா லாரொருவர் உருகாதாரே, பாட்டுவித்தா லாரொருவர் பாடாதாரே, பணி வித்தா லாரொருவர் பணியாதாரே, காட்டுவித்தா லாரொருவர் காணுதாரே, காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே" (தனித்) எனத் தெரிவித் தருளுவது காண்க.

இதனுல், திருவருளின்றித் தன்னுல் ஒன்றும் செய்ய மாட்டாத சிறுமை புலப்படுத்தவாரும். (4)

3370. உடுப்பவனும் உண்பவனும் நானேஎன்
னவும்நாணம் உறுவ தெந்தாய்
தடுப்பவனும் தடைதீர்த்துக் கொடுப்பவனும்
பிறப்பிறப்புத் தன்னை நீக்கி
எடுப்பவனும் காப்பவனும் இன்பஅனு
பவஉருவாய் என்னுள் ஒங்கி
அடுப்பவனும் நீ என்னுல் அந்தோஇச்
சிறியேனுல் ஆவ தென்னே.

உரை : எந்தையாகிய சிவபெருமானே, உடுப்பவை யுடுப்பவனும் உண்பதை யுண்பவனும், நானே என்று நினைத்தற்கு வெட்கம் நிறைந்து நெஞ்சைத் தடுக்கின்றது; செய்வன செய்யுங்கால் அவற்றைத் தடுப்பவனும், தடை யெய்திய போது அதனை நீக்கி யுதவுபவனும், பிறப் பிறப்புக் களாகிய துன்பத்தைப் போக்கி எடுத் தருள்பவனும் காத்தருள்பவனும், இன்ப அனுபவ வுருவாய் என் மனத்தின்கண் தோன்றி யூக்குபவனும் நீயே என்று மெய்யுணர்ந்தோர் கூறுகின்றன ரென்றுல் சிறியவனுகிய என்னுல் ஆவது ஒன்றுமில்லை. எ.று.

உடுக்கும் உடைக்கும் உண்ணும் உணவுக்கும் நானே முதல் என நினைக்கும் போது உண்மை ஞானம் தோன்றி அவற்றின் ஒவ்வொரு சிறு கூறும் திருவருளின் விளைவு எனத் தெரிவிக்கிறபோது நாணம் மிக்கு வருத்துதலால் "உடுப்பவனும் உண்பவனும் நானே என்னவும் நாணம் உறுவது" என வுரைக்கின்றுர். தடுத்தல், திருவருளை நினைப்பித்தற்கும், தடை நீக்கி யுதவுவது திருவருளின் விளக்கம் நினைவில் நின்று நிலவுவதற்குமாதலால், "தடுப்பவனும் தடை தீர்த்துக் கொடுப்பவனும் நீ" எனக் கூறுகின்றுர். உண்மை யுணராது பிறவிக் கேதுவாகிய அறிவு செயல்களில் தோயும் போது மெய்யுணர்வு தந்து மாற்றுவதும், மாறிய நன்னெறிக்கண் பிறழாவாறு காப்பதும் திருவருளாதலை யுணர்த்த, "பிறப் பிறப்புத் தன்னை நீக்கி எடுப்பவனும் காப்பவனும் நீ" என்றும், திருவருள் ஞானம் கைவருமிடத்து இன்ப வனுபவமாய் உள்ளத்தில் உயர்ந்து தோன்றி மகிழ்விப்பது பற்றி, "இன்ப வனுபவ வுருவாய் என்னுள் ஒங்கி அடுப்பவனும் நீ" என்றும், இதனைச் சிவ ஞானிகள் தெளிய வுரைக்கின் றனர் என்றற்கு "என்னுல்" என்றும், இவற்றை எண்ணுமிடத்துச் சிற்றறிவும் சிறு செயலுமுடைய என்னுல் ஆவது ஒன்றுமில்லை யென்பது இனிது தெரிகின்றது என்பாராய், "அந்தோ இச் சிறியேனுல் ஆவ தென்னே" என்றும் இயம்புகின்றுர்.

இதனுல், ஆன்மாவின் சிறுமை திருவருள் ஞானத்தால் தெளிவாதல் புலப்படுத்தியவாறும். (5)

3371. சாவதென்றும் பிறப்பதென்றும் சாற்றுகின்ற
பெரும்பாவம் தன்னை எண்ணி
நோவதின்று புதிதன்றே என்றும்உள
தால்இந்த நோவை நீக்கி

ஈவதுமன் றிடைநடிப்போய் நின்னுலே
ஆகும்மற்றை இறைவ ராலே
ஆவதொன்றும் இல்லைஎன்றுல் அந்தோஇச்
சிறியேனுல் ஆவ தென்னே.

உரை : அம்பலத்தின்கண் அருள் நடனம் பண்ணுகின்ற பெருமானே, இறப்புப் பிறப்பு எனப்படும் பெரிய பாவச் செய்கைகளை நினைந்து மனம் நோவது இப்போது உலகிற் புதுமையன்று; எப்போதும் இருந்து வருவது; இந்தத் துன்பத்தைப் போக்கி அருளின்பம் நல்குவது நின்னுலன்றியில்லை; ஏனைப் படைத்தல் காத்தல் முதலியவற்றைத் தனித் தனியே செய்யும் தேவர்களால் ஒருசிறிதும் ஆவதில்லை என்று அறிந்தோர் கூறுவதால், ஐயோ, சிறியவனுகிய என்னுல் ஆவது யாது? ஒன்றும் இல்லை. எ-று.

சிதாகாசமாகிய ஞான சபையின்கண் ஞான நடம் புரிவது பற்றி, "மன்றிடை நடிப்போய்" எனவுரைக்கின்றுர். உயிர்கள் பிறப்பதும் இறப்பதும் தொன்று தொட்டு வரும் பழம் பெரும் பொது நிகழ்ச்சியாதலால், "சாவதென்றும் பிறப்ப தென்றும் சாற்றுகின்ற பெரும் பாவம் தன்னை எண்ணி நோவது இன்று புதிதன்று என்றும் உளதால்" என எடுத்துரைக்கின்றுர். "சாதலும் புதுவதன்றே வாழ்தல் இனிதென மகிழ்ந்தன்று மிலமே" (புறம். 192) எனச் சான்றோர் உரைப்பது காண்க. சாகும்போதும் பிறக்கும் போதும் துன்பமே மிகுதலால் இரண்டையும் "இந்த நோவை" எனச் சுட்டிக் கூறுகின்றுர். "பெரும் பாவம்" என்றதும் இது பற்றியே யாகும். நீக்குவது துன்பமாகவே ஈவது திருவருள் இன்பமாதல் பற்றி, "ஈவது" எனச் சிறப்பிக்கின்றுர். இடர் நீக்க வல்ல நீயே இன்பம் நல்குபவன் என்பாராய், "ஈவது நின்னுலே யாகும்" என எடுத்துரைக்கின்றுர். ஏனைப் பிரமன், திருமால் முதலிய தேவர்கள் ஒன்றொன்றையே செய்பவராய் நினது ஆணை வழி நிற்போர் என்பாராய், "மற்றை இறைவராலே ஆவதொன்றும் இல்லை" எனக் கூறுகின்றுர்.

இதனுல், பிறவித் துன்பத்தை போக்குவது தேவர்கட்கும் ஆகாத தொன்று எனத் தெரிவித்தவாரும். (6)

3372. இசைத்திடவும் நினைத்திடவும் பெரிதரிதாம்
தனித்தலைமை இறைவா உன்றன்
நசைத்திடுபேர் அருட்செயலால் அசைவதன்றி
ஐந்தொழில்செய் நாத ராலும்
தசைத்திடுபுன் துரும்பினையும் ஆகங்கரித்துத்
தங்கள்சுதந் தரத்தால் இங்கே
அசைத்திடற்கு முடியாதேல் அந்தோஇச்
சிறியேனுல் ஆவ தென்னே.

உரை : சொல்லுதற்கும் நினைத்தற்கும் மிகவும் அருமை வாய்ந்த ஒப்பற்ற தலைமையிறைவனே, உனது விரும்பத்தக்க பெரிய அருட் செயலால் யாவதும் அசைவதன்றிப் படைத்தல் முதலிய தொழில் ஐந்திற்கும் தனித்தனித் தலைவராகும் தேவர்களாலும் ஒட்டிக் கொள்ளும்

சிறு துரும்பையும் நான் என்ற வீறு கொண்டு தமது இச்சை போல அசைக்க முடியாது என்று பெரியோர் கூறுதலால், ஐயோ, சிறியவனுகிய என்னுல் யாது செய்ய முடியும். எ.று.

"உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்" எனச் சேக்கிழார் முதலிய சான்ருேர் பலரும் எடுத்துரைப்பது பற்றி, "இசைத்திடவும் நினைத்திடவும் பெரிதரிதாம் தனித்தலைமை இறைவா" என்று உரைக்கின்ருர். மக்கள் தேவர் அனைவர்க்கும் மேம்பட்ட தலைவனுதலின், "தனித் தலைமை இறைவா" எனச் சாற்றுகின்ருர். நசைத்தல் - விருப்பப் படுதல். படைத்தல் முதலிய தொழில் ஒவ்வொன்றிற்கும் பிரமன் முதலிய தேவர் ஐவராதல் பற்றி, "ஐந்தொழில் செய்நாதர்" எனக் குறிக்கின்ருர். தசைத்தல் - ஒட்டுதல். அகங்கரித்தல், நான் செய்வேன் என்ற உணர்வுற் றெழுதல். சுதந்தரம் - விரும்பம் போற் செய்யும் உரிமை. இறைவன் திருவருளாலன்றி ஒரு துரும்பும் அசையா தென்பது பற்றி, "துரும்பினையும் அகங்கரித்துத் தங்கள் சுதந்தரத்தால் அசைத்திடற்கு முடியாதேல்" என இயம்புகின்ருர்.

இதனுல், அவனன்றி ஓரணுவும் அசையா தென்ற பழம் பொருளுரையை விளக்கிக் கூறியவாரும். (7)

3373. கல்லாய மனத்தையும்ஓர் கணத்தினிலே
கனிவித்துக் கருணை யாலே
பல்லாரும் அதிசயிக்கப் பக்குவந்தந்
தருட்பதமும் பாலிக் கின்ருேய்
எல்லாஞ்செய் வல்லோய்சிற் றம்பலத்தே
ஆடல்இடு கின்ருேய் நின்னுல்
அல்லால்ஒன் ருகாதேல் அந்தோஇச்
சிறியேனுல் ஆவ தென்னே.

உரை : எல்லாம் செய்ய வல்ல பொருமனே, திருச்சிற்றம்பலத்தின்கண் கூத்தாடுகின்ற சிவனே, கல்லினும் வலிதாகிய மனத்தையும் ஓர் கணப்பொழுதில் கனிந்த பழம் போல் மென்மை யுறுவித்துப் பலரும் கண்டு வியக்குமாறு கருணை கூர்ந்து ஞானப் பேற்றுக் கமைந்த பக்குவத்தை எய்துவித்துத் திருவருளின்பத்தையும் தந்தருள்கின்ருயாதலால், நின்னுலன்றி ஒன்றும் நடவாதென அறிஞர் அறிவித்தலால் சிறியவனுகிய யான் செய்யக் கூடியது யாது? எ.று.

"கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை, பிச்சேற்றிக் கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை வெள்ளத் தழுத்தி வினை கடிந்த வேதியன்" (அம்) என மணிவாசகர் உரைத்தலால், "கல்லாய மனத்தையும் ஓர் கணத்திலே கனிவித்துக் கருணையாலே, பல்லாரும் அதிசயிக்கப் பக்குவம் தந்து அருட் பதமும் பாலிக்கின்ருேம்" என்று கூறுகின்ருர். கற் போன்ற மனத்தை மிக விரைந்து உருகும் இயல்பினதாக்குவது பற்றி, "ஓர் கணத்தினிலே கனிவித்து" எனவும், திருவருள் ஞானத்தை உள்ளத்தே ஏற்றற்குரிய பக்குவம் செய்தே அதனை நல்கியருள வேண்டுதலால், "கருணையாலே பக்குவம் தந்து அருட் பதம்

பாலிக்கின்ரேய்'' எனவும், கல்லாய மனத்தைக் கண்டறிந்தோர் பலர் என்றற்குப் ''பல்லாரும் அதிசயிக்க'' எனவும் இயம்புகின்ரூர். பாலித்தல், செய்து பேணுதல். ''எல்லாம் செய்ய வல்லவன்'' என்று எடுத்து மொழிந் தமையின், ''நின்னலல்லால் ஒன்று ஆகாது'' என வலியுறுத்துகின்ரூர். எத்தகைய அரியவற்றையும் எளிதில் செய்து முடிப்பவனென்றற்கு ''அம்பலத்தே ஆடல் இடுகின்ரேய்'' என்று இயம்புகின்ரூர். சிறியவன் - அறிவு செயல்களிற் சிறுமை யுடையவன்.

இதனுற் கல்லிக் கனியாக்கும் திறம் காட்டியவாரும். (8)

3374. கரைசேரப் புரிந்தாலும் கடையேன்செய்
குற்றமெலாம் கருதி மாயைத்
திரைசேரப் புரிந்தாலும் திருஉளமே
துணைஎனநான் சிந்தித் திங்கே
உரைசேர இருத்தல்அன்றி உடையாய்என்
உறவேஎன் உயிரே என்றன்
அரைசேஎன் அம்மேஎன் அப்பாஇச்
சிறியேனுல் ஆவ தென்னே.

உரை : எல்லாம் உடைய பெருமானே, எனக்கு உறவே, எனது உயிரே, என்னுடைய அருளரசே, எனக்கு அன்னையும் அப்பனுமான ஐயனே, பிறவிக் கடலினின்றும் யான் கரை சேர அருளினுலும், கடைய வனுகிய யான் செய்த குற்ற மெல்லாம் எண்ணி மாயையாகிய திரை மூடிய உலகியலிற் புதையுண்டொழியச் செய்தாலும் யாவும் நின் திருவுள்ளத் தடைவே என எண்ணிக் கொண்டு பேச்சொடுங்கி இருப்ப தல்லது சிறியவனுகிய என்னுல் யாது செய்ய இயலும்? எ.று.

உலகும் உலகியற் பொருளும் யாவும் படைத்தளித்துத் தனக்கே யுடைமையாகக் கொண்டவனுதலால் இறைவனை உடையான் என்று சான்ரோர் புகல்வது மரபாதலின், ''உடையாய்'' என வுரைக்கின்ரூர். அறிவில் அருளால் மன்னியுதவுதலால் ''உறவு'' என்றும், உண்மை காட்டி யூக்குதலின் ''உயிர்'' என்றும், அருணெறிக்கண் செலுத்தியுய்வித் தலின் ''அரசே'' என்றும், இனிது வாழ்வித்தலால் ''அம்மே அப்பா'' என்றும் ஏத்துகின்ரூர். தனக்கென விருப்பின்றி எல்லாம் இறையருள் எனத் தான் அமைந்திருக்குமாறு புலப்பட, ''கரை சேரப் புரிந்தாலும்'' எனவும், செய்த குற்றங்களைத் தாமே யெண்ணித் தம்மை நொந்து கொள்ளுமாறு விளங்கக் ''கடையேன் செய்குற்றமெலாம் கருதி மாயைத் திரை சேரப் புரிந்தாலும்'' எனவும் உரைக்கின்ரூர். கரை - இறைவன் திருவடி நீழல். கரை என்ற குறிப்புருவகம், பிறவிக் கடலை எய்துவிக் கின்றது. திருவருள் ஞானம் வழங்கித் திருவடி நீழற் பேரின்பம் பெற உதவுதல் இறையருளாதல் பற்றிக் ''கரை சேரப் புரிதலை'' விதந்து விளம் புகின்றது. குற்றங்களைக் காண்டலால் தம்மைக் ''கடையேன்'' என்கின்ரூர். உலகியல் மயக்கம், ''மாயைத் திரை'' என்றும், அதற் கமைந்த அறிவு செயல்களில் ஆழ்ந்து படுவதை, ''மாயைத் திரை சேரப் புரிதல்'' என்றும் இயம்புகின்ரூர். செய்யப்படும் குற்றங்கள் பிறவிக் கேதுவாகலின், ''குற்றமெலாம் கருதி மாயைத் திரை சேரப் புரிந்தாலும்'' என ஓதுகின்ரூர். பிறவிக்குள் ஆழ்த்தலும் பிறவாப் பெரு

நிலைக்கண் இருத்தலும் திருவருட் செயலாதலால், ''திருவுளமே துணை யென நான் சிந்தித்து இருத்தலன்றிச் சிறியேனுல் ஆவதென்'' என இசைக்கின்றார். இதனைத் தன்பணி நீத்தல் எனச் சாத்திரங்கள் குறிக்கின்றன.

இதனுல், தன் பணி நீத்து இறையருள் என இருத்தலைத் தெரிவித்தவாரும். (9)

3375. இன்பேநன் றருளிஅருள் இயற்கையிலே
வைத்தாலும் இங்கே என்னைத்
துன்பேசெய் வித்தாலும் என்செய்வேன்
நின்னருளே துணைஎன் றந்தோ
என்பேதை மனமடங்கி இருப்பதன்றி
எல்லாங்கண் டிருக்கும் என்றன்
அன்பேஎன் அம்மேஎன் அப்பாஇச்
சிறியேனுல் ஆவ தென்னே.

உரை : உலகியல் எல்லாவற்றையும் கண்டு கொண்டிருக்கின்ற என் அன்புருவே, எனக்கு அம்மையும் அப்பனுமாகிய பெருமானே, இன்பமே பெரிதும் நுகரும் திருவருள் வாழ்வில் என்னை இருந்தருளப் பண்ணினுலும், இவ்வுலகின்கண் துன்பச் சூழலிலே கிடந்து வருந்தச் செய்தாலும் யான் மறுத் தொதுக்க வல்லவனல்ல; நின் திருவருளொன்று தான் எனக்குத் துணையாவது என நினைந்தே என் ஏழை நெஞ்சம் எய்திய நிலைக்குள் ஒடுங்கி யிருப்பதன்றி வேறே என்னைற் செய்யலாவது யாதும் இல்லை, காண். எ.று.

பல்வகைப் பொருளும், பல்வகைச் செயலும், பல்வேறு நிலைகளிலிருந்து பலவேறு நெறிகளில் இயலுகின்றனவாயினும் எல்லாவற்றையும் எஞ்சாமற் கண்டு கொண்டிருப்பது பரம்பொருளின் பண்பாதல் பற்றி, ''எல்லாம் கண்டிருக்கும் என் அன்பே'' என இயம்புகின்றார். நிகழ்ச்சிகளில் இன்பம் கண்டு மகிழ்தலும் துன்பம் கண்டு வெறுத்தலு மின்றி ஒப்ப நின்று காண்பது புலப்பட, ''என்றன் அன்பே'' என்று உரைக்கின்றார். திருவருள் இயற்கையாவது, ஒவ்வொருவரும் எண்ணுவன பேசுவன செய்வன யாவும் திருவருள் இயக்க மெனக் கண்டுணர்ந்து அவ்வுணர்வு நல்கும் இன்பத்தில் தோய்ந்திருத்தலாகும். அந்நிலைதானும் திருவருளால் அமைவது தோன்ற, ''இன்பே நன்று அருளி அருள் இயற்கையிலே வைத்தாலும்'' எனக் கூறுகின்றார். நன்று - மிகுதி. துன்பு செய்வித்தல், துன்பத்திலே கிடந்து வருந்தச் செய்தல். இன்பம் துன்பம் என உலகியல் விகாவு இரண்டேயாதலின், இன்ப வருள் இயற்கைக்கு மாருயதைத் ''துன்பு'' எனச் சுட்டி மொழிகின்றார். துன்பம், துன்பு என வந்தது. எல்லாம் திருவருளின் இயக்கம் எனக் கொள்ளுமிடத்து மனத்தின் செயல் முனைப்பற்று அடங்கி யொடுங்குதலால் ''என் பேதை மனம் அடங்கியிருப்பதன்றி ஆவது என்னே'' என அறிவிக்கின்றார் திருவருளையின்றித் தனக்கென ஒரு தனியுரிமையும் தனிச் செயலும் இல்லாமை பற்றித் தன்னைச் ''சிறியேன்'' என்று குறிக்கின்றார்.

இதனுல், தற்சுதந்தரம் இன்றிய உண்மை ஞானநிலை விளக்கியவாரும். (10)

11. அத்துவிதானந்த அனுபவ இடையீடு

அஃதாவது, ஆன்மா சிவத்தோடு கூடிப் பெறும் அத்துவிதச் சம்பந்தத்தால் எய்தும் இன்பத்திற்கு இடையீடாக வந்து தடை செய்வன வற்றை விளக்குவதாம்.

சிவத்தோடு ஆன்மா பெறும் சம்பந்தத்தை அத்துவிதச் சம்பந்தம் என்பர். ஆன்மா தூய்மையால் சிவத்தோடு ஒருதன்மைத்தாகிப் பொருட் டன்மையால் அதனின் வேறுபட்டு இரண்டாய்க் கூடி யிருப்பது சைவ நெறியில் "சுத்தாத்விதம்" என்று சொல்லப்படும். இதனைத் தமிழ் நூல்கள் "ஒன்றி யுடனுதல்" என்று கூறுகின்றன. தூய சிவமாந் தன்மை யெய்திய ஆன்மா, சிவப் பேரொளியில் சிவத்தோடு உடனிருந்து நுகரும் சிவ போகம், அத்துவிதானந்தம் என்பதாம். எல்லா ஆன்மாக்களும் இந்த அத்துவிதானந்தமான சிவபோகத்தை நுகர்தற் குரியனவாம். ஆயினும், மல சம்பந்தத்தால் மாயை கன்மம் என்ற இருவகைத் தொடக்குகளால் பல்வகை இடையூறுகளுக்கு ஆளாகி இடையீடு படுகின்றன. இந்த இடையீட்டினை விளக்குதல் இத் தலைப்பின் பொருளாகும்.

இதன்கண், சிவானந்தத்தின் விளைவு அறியாமையும், திருவருள் வெளியனுபவமும், தத்துவம் கடந்து பெறும் சிவபோக நிலையும், சிவ போக சித்தி பெறும் திறமும், சிவபோகத்தைப் பெற்று நுகரும் திறமும், சிவபோக நுகர்ச்சி முயற்சிக்கு இடையீடாகும் பொருள்களும் பிறவும் கூறப்படுகின்றன.

எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

3376. திருத்தகுபொன் அம்பலத்தே திருநடஞ்செய் தருளும்
திருவடிகள் அடிச்சிறியேன் சென்னிமிசை வருமோ
உருத்தகுநா னிலத்திடைநீள் மலத்திடைபோய் ஞான
உருப்படிவம் அடைவேனே ஒன்றிரண்டென் னுத
பொருத்தமுறு சுத்தசிவா னந்தவெள்ளம் ததும்பிப்
பொங்கிஅகம் புறங்காணு தெங்குநிறைந் திடுமோ
அருத்தகும்அவ் வெள்ளத்தே நான்மூழ்கி நான்போய்
அதுவாகப் பெறுவேனே அறிந்திலன்மேல் விளைவே.

உரை : அருட் டிருவிளங்குகின்ற தில்லைப் பொன்னம்பலத்தின்கண் திருக்கூத்தாடி யருளுகின்ற சிவபிரான் திருவடிகள் சிறுமையாற் கீழவனு கிய என் தலை மேல் வந்து பொருந்துமோ? குறிஞ்சி முல்லை முதலாக வுருக் கொண்ட நால்வகைக் கூறு நிலத்தின்கண் நெடிது படரும் மாயா மல முத லாய தொடர்பு நீங்கச் சிவஞானத் திருமேனியைப் பெறுவேனே? சிவமும் சீவனும் ஒன்று எனவும் இரண்டென்றும் கூறவொண்ணுதவாறு

பொருந்துகின்ற சுத்த சிவானந்தமாகிய வெள்ளம் மிக்குப் பொங்கி அகம் புறம் என்பதின்றி எங்கும் நிறையுமோ? நுகரத் தக்க அவ் வெள்ளத் தின்கண் மூழ்கி நான் என்பது கெட்டு அதுவதுவாய் இயைவேனே? மேல் விளைவது இன்ன தென அறிகிலேன். எ.று.

பொன்னம்பலம் திருவருட் செல்வத்தால் உயர்ந்தோங்கும் பேரிடமா தலால், "திருத்தகு பொன்னம்பலம்" என்றும், அதன்கண் சிவனது ஞானத் திருக்கூத்து நிகழ்வது பற்றி, "திருநடம்செய் திருவடிகள்" என்றும் கூறுகின்றார். சிவனது உயர்வு நோக்குமிடத்துச் சிற்றறிவும் சிறு தொழிலு முடைய ஆன்மாவாகிய தமது சிறுமை இறப்பவும் சிறுகிக் காணப்படுவது புலப்பட, "அடிச் சிறியேன்" என்று சொல்லி, இறைவனது பெறலரும் பெருமை சான்ற திருவடி தனது தலை மேற் பொருந்தித் தீண்டுமோ என ஏங்குவது விளங்க, "திருவடிகள் அடிச் சிறியேன் சென்னிமிசை வருமோ?" என்று எண்ணுகின்றார். திருவடிப் பேறு சிவ ஞான விளக்கம் பெறுதற்கு வாயிலாதலின், அதனை முதற்கண் நினைக் கின்றார். தமிழகத்திற் பாலை நிலம் கற்பனை யுலகிலன்றி உண்மை யுலகில் இல்லாமையால், "உருத்தகு நானிலம்" என்று சான்றோர் கண்டனர். நானிலம், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பனவாம். "நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப், படுதிரை வையம் பாத்திய பண்பே" என்பது தொல்காப்பியம். இனி யுருத்தகு நானிலம் என்றற்கு மக்களுருக் கொண்டு வாழ்ந்துலவும் நிலவுலகு என்றலுமுண்டு. மலத்தடை - மலம் கன்மம் மாயை என்ற மூவகைத் தடை; அத்தடை நீக்கத்துக் கென்றே உலகில் உருவுடை யுடம்பு கொண்டிருக்கின்றோம் என அறிக. சிவஞானத் தால் மண்ணக வினைப் போக மக்களுடம்பு நீங்கிச் சிவபோகத்துக்குரிய ஞானத் திருவுடம்பு எய்த விழைவது புலப்பட, "மலத்தடை போய் ஞான வுருப்படிவம் அடைவேனே" என வுரைக்கின்றார். ஆன்மாவும் சிவமும் சித்துப் பொருளாதலின் ஒன்றென்பதும், சிறுமையும் பெருமையுமாகிய பண்பு வேறுபாடுடையவாதலால், ஒன்றல்ல விரண்டு என்பதும் உண்மை யின் "ஒன்றிரண்டு என்னுதே" என்றும், ஞான வுருக் கொண்டு சிவமாய்ப் பொருந்தி ஆங்கே பெறலாகும் சிவபோகத்தில் மூழ்கி வற்றாப் பேரின்பம் நுகரும் திறத்தை, "பொருத்தமுறு சிவானந்த வெள்ளம் ததும்பிப் பொங்கி அகம் புறம் காணுது எங்கும் நிறைந்திடுமோ" என்றும் இயம்பு கின்றார். மூழ்கி அருந்தத் தகும் வெள்ளம், அருத்தகும் வெள்ளம் என வந்தது; அரும் தகும் வெள்ளம், அருத்தகும் வெள்ளம் என்று ஆயிற் றென்பதும் உண்டு. பெறற் கருமையும் உண்டற்குத் தக்கமையும் உடைய தென்பது கருத்து. ஞானத் திருமேனி முற்றும் அணுப் புதைக்கவும் இட மின்றி நிறைதல் விளங்க, "அகம் புறம் காணுது எங்கும்" என வுரைக் கின்றார். சிவபோகத்தில் மூழ்கி நுகர்வோர், சீவனுகிய நான் என்பது கெட்டுச் சிவமாந் தன்மை பெறுதலின், "நான் போய் அதுவாகப் பெறுவேனே" என மொழிகின்றார். சிவபோகத்தைக் கண்டார் விண்டதும், விண்டார் கண்டதும் இல்லையாதலால், "அறிந்திலன் மேல் விளைவு" என விளம்புகின்றார்.

இதனால், சிவானந்தத்தில் மேல் விளைவு அறியேன் எனத் தெரிவித்த வாறும். (11)

3377. கரணமெலாம் கரைந்ததனிக் கரைகாண்ப துளதோ
கரைகண்ட பொழுதெனையுங் கண்டுதெளி வேனே
அரணமெலாம் கடந்ததிரு அருள்வெளிநேர் படுமோ
அவ்வெளிக்குள் ஆனந்த அனுபவந்தான் உறுமோ
மரணமெலாம் தவிர்ந்துசிவ மயமாகி நிறைதல்
வாய்த்திடுமோ மூலமல வாதனையும் போமோ
சரணமெலாம் தரமன்றில் திருநடஞ்செய் பெருமான்
தனதுதிரு உளம்எதுவோ சற்றுமறிந் திலனே.

உரை : அகமும் புறமுமாகிய கரணங்கள் பலவும் கரைந் தொழியு மாயின் எஞ்சி நிற்கும் ஆன்மாவின் தனி யுருவைக் காண்பது உளதாகு மோ? அங்ஙனம் ஆன்ம வுருவைக் காணுமிடத்து, தனி ஆன்மப் பொரு ளாகிய என்னைத் தெளியக் காண்டல் கூடுமோ? மலத்தடை முதலிய காவ லெல்லாம் அகன்ற நிலையில் விளங்கும் திருவருட் பெருவெளி காணப்படுமோ? அந்த அருள் வெளியில் நுகர்தற் கமைந்த இன்பானு பவம் எய்துமோ? உடல்களின் இறப்புக்களை நீங்கிச் சிவமாய் நிறைவது எனக்குக் கைகூடுமா? ஆங்கும் அணுதி மல வாதனை தாக்குமோ? திரு வடி யிரண்டையும் காட்டித் தரும் பொருட்டு ஞான சபையில் திருக் கூத்தியற்றும் சிவபெருமானுடைய திருவுளக் குறிப்பு யாதோ? எனக்கு ஒன்றும் தெரியவில்லை, காண். எ.று.

கண் காது மூக்கு முதலிய கருவிகளைப் புறக்கரண மென்றும், மனம் சித்தம் முதலாய நான்கையும் அகக்கரண மென்றும் கூறுபவாகலின், "கரண மெலாம்" எனக் கூறுகின்றார். கரண வகை பொருந்திய தூல சூக்கும தேகங்கட்கு அப்பாலதாகிய புரியட்டகமாகிய காரண வுடம்பு காணப்படுவ தன்மையின், "கரணமெலாம் கரைந்த தனிக்கரை காண்ப துளதோ" என வினவுகின்றார். காரண வுடம்பின் உள்ளே ஆன்மா வுள தாகலின், அவ்வுடம்பை ஆன்ம நிலைக்குக் "கரை" எனக் கருதி கூறுகின் றார். அவ்வுடம்பைக் காணுங்கால் அதனுள் இலங்கும் ஆன்மா காணப் படலாம் என்பதை யுன்னி, "கரை கண்ட பொழுது எனையும் கண்டு தெளிவேனே" எனக் கேட்கின்றார். உலகுடம்புகளாகிய மாயா கன்மப் படலங்களும் அதன் கண்ணதாகிய மூல மலப் படலமும் திருவருள் விளக்க வெளியை மறைத்துக் கொண்டிருத்தலால் அவற்றை அருள் வெளிக்கு அரணமாக வுருவகித்து "அரணமெலாம் கடந்த திருவருள் வெளி நேர்படுமோ" என மொழிகின்றார். நேர்படுதல் - காட்சிப் படுதல். அருள்வெளி இன்ப வுருவாகிய சிவத்தைக் கூடுமிடமாதல் பற்றி, "அவ் வெளிக்குள் ஆனந்த அனுபவம்தான் உறுமோ" என வுரைக்கின்றார். தூல சூக்கும காரண தேக மரணங்கள் என மரணம் பலவாதலின், "மரண மெலாம் தவிர்த்து" எனவும், இறுதியிற் கெடுவதாகிய புரியட்டகத்துக்குப் பின் ஆத்மா தனிமைக்கண் சிவஞான வின்ப வுருவாதலால் அதனை நினைந்து, "சிவமயமாகி நிறைதல் வாய்ந்திடுமோ" என இசைக்கின்றார். மூலமலம் ஆன்மாவுடன் அணுதி சம்பந்த முடையதாகலின், முத்தி நிலை யிலும் அதன் இருப்பை யெண்ணி, "மூலமல வாதனையும் போமோ" என்று புகல்கின்றார். மலவாதனை - மலத்தால் விளையும் அறிவு மறைப்பு. சரணம் - திருவடிகள். மன்று - சிற்றம்பலம். சிவஞான மல்லது

இவ்வையங்களோத் தீர்ப்பது வேறின்மை விளங்க, "பெருமான் தனது திருவுள்ளம் எதுவோ" என்றும், "சற்றும் அறிந்திலன்" என்றும் இயம்புகின்றார்.

இதனால் திருவருள் வெளியனுபவம் தெரிவித்தவாறும். (2)

3378. நாதாந்தத் திருவீதி நடந்துகடப் பேனே
ஞானவெளி நடுஇன்ப நடந்தரிசிப் பேனே
போதாந்தத் திருவடிஎன் சென்னிபொருந் திடுமோ
புதுமையறச் சிவபோகம் பொங்கிநிறைந் திடுமோ
வேதாந்த சித்தாந்த சமரசமும் வருமோ
வெறுவெளியில் சுத்தசிவ வெளிமயந்தான் உறுமோ
பாதாந்த வரைநீறு மணக்கமன்றில் ஆடும்
பரமர்திரு உளம்எதுவோ பரமம்அறிந் திலனே.

உரை : நாத தத்துவத்தின் உச்சியிலுள்ள மாயா மண்டலத்தின் உயர்ந்த நெறியைப் பையச் சென்று கடப்பேனே; அதற்கு அப்பாலுள்ள ஞான வெளியின் நடுவிடத்தே தோன்றும் சிவத்தின் திருக்கூத்தைக் காண்பேனே; சிவஞான முடிவிடமான திருவடியை என் தலைமேற் கொள்வேனே; அதனால் எனக்குப் பழையதாய் வருகின்ற சிவபோகம் என்னுட் பொங்கி எங்கும் நிறையுமோ; வேதாந்த சித்தாந்தமென்ற இரண்டிற்கு மிடையே சமரச முண்டாகுமோ; வெறிதாகிய மாயை வெளி சுத்த சிவவெளியாய்த் திகழுமோ; திருவடி முற்றத் திருநீறு மணம் கமழ ஞான சபையில் ஆடல் புரிகின்ற பரமசிவத்தின் திருக்குறிப்பு யாதோ; முடிவொன்றும் தெரிகிலேன். எ.று.

சுத்த தத்துவத்தின் மேற் கண்ணது சிவ தத்துவ மெனப்படும் நாதம்; அதற்கு அந்தமாவது சுத்த மாயா மண்டல எல்லை யிடம்; அதனை விரைந்து கடத்தல் அரிதென்பது பற்றி, "நாதாந்தத் திருவீதி நடந்து கடப்பேனே" என வுரைக்கின்றார். நாத நாதாந்தங்கள் ஞான மயமாதலின், அதற்கு மேலாயது பரஞான வெளியாம்; அதனைச் சிதாகாசம் என்றலுமுண்டு. அதன் நடுவே பரசிவத்தின் பரானந்த நடனம் நிகழ்கிறதெனப் பெரியோர் கூறுதலால், ஞானவெளி நடு இன்ப நடம் தரிசிப்பேனே" என்று சொல்லுகின்றார். சிவஞானப் பேற்றின் முடிவு சிவானந்தமாதலால், "போதாந்தத் திருவடி என் சென்னி பொருந்திடுமோ சிவபோகம் பொங்கி நிறைந்திடுமோ" என்று விழைகின்றார். போதாந்தம் - ஞானத்தின் எல்லை. சிவஞானிக்கு முடிவு சிவன் திருவடியென்றலின், போதாந்தத்தைத் திருவடி யென்றும், அதனை எய்திப் பிறும் சிவஞானப் பேரின்பத்தைச் சிவபோகம் என்றும், சிவயோக சிவஞானப் பெருநெறியில் சிவபோகமாகிய செந்தேன் ஊறிய வண்ணமிருத்தலின், "புதுமையறப் பொங்கி நிறைந்திடுமோ" என்றும் புகல்கின்றார். "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்" என உமாபதி சிவனாரும், "ஓரும் வேதாந்த மென்றுச்சியிற் பழுத்த, சாரம் கொண்ட சைவ சித்தாந்தம்" எனக் குமர குருபரரும் வேதாந்த சித்தாந்தங்களின் அடிப்படையொருமைத் தன்மையை யுணர்த்துவதால், "வேதாந்த சித்தாந்த

சமரசமும் வருமோ'' என எண்ணுகின்ருர். வெறுவெளி, மாயா மண்டலத் தின் உள் வெளி; திருவருட் சத்தியாற் கலக்குற்றுப் பாகம்படும் இயல்பின தாதல் பற்றி, ''வெறுவெளியில் சுத்த சிவவெளி மயந்தான் உறுமோ'' என்பது, வெறு வெளியில் சுத்த மயமாம் சிவவெளி யுறுமோ என இயை யும். சிவவெளி - சிதாகாசப் பெருவெளி. அதன்கண் மாயை வெறுவெளி யடங்குமே யன்றி மாயை வெறு வெளிக்குச் சுத்த சிவவெளி வியாப்பிய மாகா தென அறிக. அதனுற் ருன் ''உறுமோ'' என வினவுகின்ருர். பாதாந்த வரை - திருவடி முடிவு காறும். தலை முதல் திருவடி காறும் வெண்ணீறு கிடந்து சிவமணம் கமழ்வதை இங்கே குறிக்கின்ருர். பரமம் - மேலாய் உறுவது.

இதனல் தத்துவம் கடந்து பெறும் சிவபோக நிலை தெரிவித்த வாரும். (3)

3379. சிதம்பரத்தே ஆனந்த சித்தர்திரு நடந்தான்
சிறிதறிந்த படிஇன்னும் முழுதும்அறி வேனே
பதம்பெறத்தேம் பழம்பிழிந்து பாலும்நறும் பாகும்
பசுநெய்யும் கலந்ததெனப் பாடிமகிழ் வேனே
நிதம்பரவி ஆனந்த நித்திரைநீங் காத
நித்தர்பணி புரிந்தின்ப சித்திபெறு வேனே
மதம்பரவு மலைச்செருக்கில் சிறந்தசிறி யேன்நான்
வள்ளல்குரு நாதர்திரு உள்ளம்அறி யேனே.

உரை : தில்லையம்பலத்தின் ஆனந்த சிந்தையில் எழுந்தருளும் சிவபெருமானுடைய திருக்கூத்தைப் பெரியோர் சொல்லச் சிறிது அறிந்த அளவன்றி மேலும் கண்டு முழுமையும் அறிந்தவனுவேனே; உண்ணும் பதம் பெற்ற இனிய பழத்தைப் பிழிந்து பாலும் தூய பாகும் பசுமையான நெய்யும் கலந்த இன்பொருள் போலப் பெருமான் புகழைப் பாடி மகிழ் வேனே; நாடோறும் பரவி இன்ப யோகத்தில் நீக்கமின்றிக் கலந்திருக்கும் நித்தர்களாகிய பெருமக்களுக்கு ஏற்ற தொண்டுகளைச் செய்து பெறலரும் மெய்யின்பத்தைப் பெறுவேனே; சமய வுணர்வு தருகின்ற மலை போன்று செருக்கு மிக்குறும் சிறியவனுகிய யான் அருள் வள்ளலும் குருநாதனு மாகிய சிவபிரான் திருக்குறிப்பை அறியேன். எ.று.

சமய வொழுக்கங்களைக் கண்டும் சமயக் கருத்துக்களைக் கேட்டும் ஒருவர்க் குளதாகும் பற்று முதிர்ந்து சமய வெறியாதலின், அதனை ''மதம் பரவு மலைச் செருக்கு'' எனக் குறிக்கின்ருர். செருக்கின் மிகுதி விளங்க ''மலைச் செருக்கு'' என்று கூறுகின்ருர். இச்சமயச் செருக்கு பரந்தியலும் பண்பினதாகிய அறிவைச் சுருக்கிச் சிறுமைப் படுத்தலால் ''செருக்கிற் சிறந்த சிறியேன் நான்'' எனத் தெரிவிக்கின்ருர். சிதம்பரம் - தில்லைச் சிற்றம்பலம்; சிற்றம்பலம் சிதம்பரம் என மருவிற்று. இம் மரூஉ மொழியை இயல் மொழியாகக் கொண்டு சித் அம்பரம் எனப் பிரித்து அறிவாகாயம் எனப் பொருள் கூறுதல் உண்டு. ஆனந்தமே யுருவாகிய சிந்தையினரா தலால் சிவபெருமானை, ''ஆனந்த சித்தர்'' என்றும், அம்பலத்தின்கண் சகளத் திருமேனி கொண்டு உலகவர்கண்டு மகிழும் திருக்கூத்தைத் தமது சிற்றறிவால் சிறிதே யறிந்தமை புலப்பட, ''திருநடந்தான் சிறிதறிந்த

படி" என்றும், அகளமாய் ஆனந்தமாய் அறிவு வெளியாகிய அம்பலத்து நிகழும் அருட் கூத்தை முற்றும் கண்டறியேனுதலால், காணும் திறம் எய்துமோ என எண்ணுதலால், "இன்னும் முழுதும் அறிவேனே" என்றும் இயம்புகின்றார். பழம் பழுத்து இனிதுண்ண அமையும் செவ்வி "பதம்" என வுரைக்கின்றார். பழம் எனப் பொதுப்படக் கூறினராயினும் மாவும் பலாவும் வாழையும் எனக் கொள்க. இப் பழங்களின் சாறு கொண்டு என்பார், "பழம் பிழிந்து" என வுரைக்கின்றார். நறும் பாகு - இனிய சருக்கரைப் பாகு; பதமாக அமைந்த பாகின்கண் இனிய மணம் எழுதல் பற்றி, "நறும் பாகு" என்கின்றார். பசுவின் பாலின்கண் பெற்ற நெய் "பசு நெய்" எனப்படுகிறது. பழச்சாறும் பிறவும் கலந்த கலவை போலச் சொல்லும் பொருளும் அணியும் இசையும் கலந்த பாட்டை அமைத்துப் பாடி மகிழ வேண்டும்; அஃது சிறியேனுதலின் எனக்கு அமையுமோ என்பாராய், "பாடி மகிழ்வேனே" என மொழிகின்றார். நாளும் சிவனைப் பராவும் போது உள்ளத்தே ஊறும் சிவானந்தச் செந்தேனைப் பருகி அதன்கண் ஒன்றிச் செயலறும் திருவருட் செல்வர்களை, "ஆனந்த நித்திரை நீங்காத நித்தர்" என்று கூறுகின்றார். அவரது யோகநிலை கண்டு உரிய பணிகளைச் செய்தவிடத்து மெய்யான இன்பநிலை கைவர மேவுதலை எண்ணி, "நித்தர் பணி புரிந்து இன்ப சித்தி பெறுவேனே" என இயம்புகின்றார்.

இதனால் இன்ப சித்தி பெறும் திறம் தெரிவித்தவாறும். (4)

3380. களக்கம்அறப் பொதுநடம்நான் கண்டுகொண்ட தருணம்
கடைச்சிறியேன் உளம்பூத்துக் காய்த்ததொரு காய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ வெம்பிஉதிர்ந் திடுமோ
வெம்பாது பழுக்கினும்என் கரத்தில்அகப் படுமோ
கொளக்கருது மலமாயைக் குரங்குகவர்ந் திடுமோ
குரங்குகவ ராதெனது குறிப்பில்அகப் படினும்
துளக்கம்அற உண்ணுவனே தொண்டைவிக்கிக் கொளுமோ
ஜோதிதிரு உள்ளதுவோ ஏதும்அறிந் திலனே.

உரை : தில்லையம்பலத்தில் இறைவன் திருக்கூத்தைத் தெளிவுண்டாக நான் கண்டு வழிபட்ட போது, கடைப்பட்ட சிறுமையுடைய என்னுடைய மனத்தின்கண் அருட் காய் ஒன்று காய்த்தது; அது தானும் ஞான வொளி திகழப் பழுத்திடுமோ, பழுக்காமல் வெம்பி வீழ்ந் தொழியுமோ, அன்றி நன்கு சிவஞானக் கனியாய்ப் பழுக்குமாயின் அது தானும் என் கைவசம் எய்துமோ, கவர்த் தொழிக்கக் கருதுகின்ற மல மாயை என்னும் குரங்குகள் கவர்ந்து கொள்ளுமோ, அவற்றுல் கவரப் படாதாயின் என் கைக்கண் ஐயமற எய்தப் பெற்று உண்பேனே, உண்ணுமிடத்து வாய்த் தொண்டையில் இனிது விழுங்கப் படுமோ, தொண்டை விக்கித் தடைபடுமோ அருட் சோதி யுருவாகிய சிவ பெருமானுடைய திருவுளக் குறிப்புச் சிறிதும் அறியேன். எ.று.

"மனிதர்காள் இங்கே வம்மொன்று சொல்லுகேன், கனி தந்தால் கனி யுண்ணவும் வல்லிரே, புனிதன் பொற்கழல் ஈசன் எனும் கனி, இனிது சாலவும் ஏசற்றவர்கட்கே" (தனிக்) என்ற திருநாவுக்கரசரின் திருவாக்கு

வடலூர் வள்ளலின் சிந்தனையை இப்பாட்டாற் பணி கொண்டுளது. இதன் கண் முதற் பொருளாவது "ஈசன் என்னும் கனி". இக்கனி தில்லை யம்பலத்தின்கட் கண்டு பணிபவர் மனக்கண்ணில் அருளுருவாய்த் தோன்றுகிறது. அதனை, "பொதுநடம் நான் கண்டு கொண்ட தருணம் கடைச் சிறியேன் உளம் பூத்துக் காய்த்ததொரு காய்தான்" எனப் புகல் கின்றார். ஞான சபையின்கண் காணப் பெற்றமை பற்றி, "களக்க மறக் கண்டு கொண்ட தருணம்" என வுரைக்கின்றார். களங்கம் என்பது களக்க மென வந்தது; காண்பார் காட்சிக்குக் களங்கம் செய்வன ஐயம் திரிபுகளாதலால் அவை களங்கமாயின; ஞானவொளி திகழும் சபையின் கண் களங்கத்துக்கு இடமின்மையின், "களக்கமற" என எடுத்துரைக் கின்றார். சிவஞானச் செய்திகள் இல்லாமை யுரைத்தற்குக் காண்கின்ற தம்மைக் "கடைச் சிறியேன்" எனக் கூறுகின்றார். திருவுள்ளத்தில் தோன்றிய உண்மை யன்பாகிய ஞானத்தை மலர் என்பாராய், "உளம் பூத்து" எனவும், அது திருவருளாய் உருக் கொண்டமை விளங்கக் "காய்த்த தொரு காய்தான்" எனவும் இயம்புகின்றார். "ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர் ஞான முண்டார்" (ஞான புரா) எனச் சேக்கிழார் கூறுதல் காண்க. காய் இனிய கனியாய்ப் பழுத்தாலன்றிச் சிறப்பு எய்தாதவாறு போலத் திருவருளுணர்வு சிவஞானத்தின் கனியா தல் வேண்டுதலின், "விளக்கமுறப் பழுத்திடுமோ" என்றும், உலகியற் பாச வுணர்வுகளால், அருளுணர்வு ஞானமாய் விளக்கமுறுது மாறுமோ எனப் பேதுற்று, "வெம்பி யுதிர்ந்திடுமோ" என்றும் எண்ணி யுழல்கின் றார். தூய சிவஞானத்துக்கு ஊறு செய்வன இல்லாமை நினைந்து, "வெம்பாது பழுக்கினும்" எனவும், அந்த ஞானமாகிய இனிய கனி தமக்கு எய்தா தொழியுமோ என்ற தடுமாற்றம் "மையல் மானுட வியல்பால்" உளதாதலால் "என் கரத்தில் அகப்படுமோ" எனவும் இயம்புகிறார். ஆன்ம சிற்சத்தி கரம் எனப்படுகிறது. மலமாயை கன்மங்கள் சூழ இருத்தல் பற்றிக் "கொளக் கருதும் மலமாயைக் குரங்கு கவர்ந் திடுமோ" எனக் கவல்கின்றார். நன்கிருந்து இனிது உண்ணத் தகைப்பட் டுண்ணுங்கால் இடையில் விக்குள் தோன்றி உண்டலைத் தடுத்தல் பற்றி, "தொண்டை விக்கிக் கொளுமோ" எனத் துவள்கின்றார். மலமாயை களின் தடை யில்வழி அவற்றின் பண்டை வாசனை தோன்றிச் சிவபோக நுகர்ச்சிக்குத் தடை செய்தலுண்மை நினைந்து இது கூறப்படுகிறது. "கனி தந்தால் கனி யுண்ணவும் வல்லீரே" என்பது, தரப்படுவது கனியாயினும் உண்ணத் தக்கதா என்ற ஐய விபரீத வுணர்வுகள் எழுந்து தடுத்தலு முண்மையின், அக்கருத்து விளங்கவே, "மலமாயைக் குரங்கு கவர்ந் திடுமோ" எனவும், "தொண்டை விக்கிக் கொளுமோ" எனவும் இயம்பு கின்றார். "எல்லார்க்கும் தான் ஈசன்" (சாழல்) என மணிவாசகர் முதலிய சான்றோர் விளம்புதலால், "ஈசன் எனும் கனி" எனப் பொதுத் தன்மை உணர்த்தினமை எண்ணிச் "சிறியேன் உளம் பூத்துக் காய்த்ததொரு காய்தான்" என்று கூறுகின்றார். உலகியற் காய்க்கு வரும் இடையூறு நினைவில் எழுந்து, திருவருளுணர்வுக்குப் பசுபாச வுணர்வுகள் மாறுய் வெதும்பி ஊறு செய்யுமோ என்று அச்சுறுத்தலின், "வெம்பி யுதிர்ந் திடுமோ" என்று இசைக்கின்றார்.

இதனால், சிவபோகத் திறமும் அதனைப் பெற்றுண்ணும் திறமும் உலகியல் வாய்பாட்டில் வைத்து விளக்கியவாறும். (5)

3381. திருப்பொதுவில் திருநடம்நான் சென்றுகண்ட தருணம்
சித்திஎனும் பெண்ணரசி எத்திஎன்கை பிடித்தாள்
கருப்பறியா தெனீஅதன்முன் கலந்தபுத்தி எனும்ஓர்
காரிகைதான் கண்டளவில் களிந்துமகிழ்ந் திடுமோ
விருப்பமுரு தெனீமுனிந்து விடுத்திடுமோ நேயம்
விளைந்திடுமோ இவர்க்குஹிதம் சண்டைவிளைந் திடுமோ
தருப்பொதுவில் இருவர்க்கும் சந்ததிஉண் டாமோ
தடைபடுமோ திருஉளந்தான் சற்றும்அறிந் திலனே.

உரை ; தில்லை சிற்றம்பலத்துக்குச் சென்று ஆங்கு நிகழும் திருக் கூத்தைக் கண்டு பராவிய போது சித்தி யென்னும் நங்கை எதிருற்று என்னுடைய கையைப் பற்றினள்; இருளறியாத என்னை அதற்கு முன்னே கலந்திருந்த புத்தி யென்னும் மங்கை அச்சித்தியைக் கண்ட அளவில் மனம் அன்பு கொண்டு மகிழ்வாளோ; அன்றி விருப்ப மடையாமல் என்னை வெறுத்து நீங்குவாளோ; அன்றி என்பால் நட்புறுவாளோ; இவர்கட் கிடையே நாளும் பூசல் உண்டாகுமோ; அமைகின்ற பொது நிலையில் இருவருக்கும் சந்ததி யுண்டாகுமோ உண்டாகாது தடைப்படுமோ; இறைவனே, நினது திருக்குறிப்பை அறிகிலேன். எ.று.

பொது - பொது விடம்; பொது நிலையுமாம். "திருப்பொது" என்று சிறப்பிக்கப்படுவதால் திருச்சிற்றம்பலமும், "தருப் பொது" என்பது இடையில் உளதாகும் நிலைமையையும் குறிக்கின்றன சிவ பெருமானது திருவருட்கூத்தைக் கண்ட போது திருவருட் சிவஞானம் கைவரப் பெற்ற திறத்தை, "திருநடம் நான் சென்று கண்ட தருணம் சித்தி யெனும் பெண்ணரசி எத்தி என் கை பிடித்தாள்" என இயம்புகின்றார். ஞானப் பேற்றுக்குரிய ஆன்ம சிற்சத்தி முற்பட்டுக் கூடிய நலத்தைச் "சித்தி யென்னும் பெண்ணரசி" என உருவகம் செய்து "எத்தி என் கைபிடித்தாள்" என வுரைக்கின்றார். சித்தி - சிந்தித்த பொருளைக் கைவரப் பெறும் ஆன்ம சிற்சத்தி. புத்தி - உணரப்படும் பொரு ளின் உண்மை துணியும் தத்துவக் கூறு. கருப்பு - அறியாமை யிருள். புத்தி நன்கு விளங்கித் தோன்றுங்கால் அவ்விருள் நில்லாமையால், "கருப்பு அறியாது எனீ அதன்முன் கலந்த புத்தி எனும் ஓர் காரிகை" எனச் சிறப்பிக்கின்றார். காரிகை - பெண். ஆன்மாவின் அகக்கரணக் கூறுகிய புத்தி, தெளிந்த ஞானப் பொருள் சித்தியாகுமிடத்து விகாரப் படுதலு முண்டாகையால், "புத்தி யெனும் ஓர் காரிகை தான் கண்டள விற் களித்து மகிழ்ந்திடுமோ" என எண்ணுகின்றார். அகக் கரணமாய் இயைந்திருப்பது பற்றி, "எனீ யதன் முன் கலந்த புத்தி" எனக் குறிக் கின்றார். புத்தி முன்னது; பின்னர் வந்து கூடுவது சித்தி யென அறிக. தான் சிந்தித்து முன்பே துணிந்த பொருள் உருவாய்க் கைவருங்கால் மகிழ்ச்சி மிகுமாதலால், "கண்டளவில் களித்து மகிழ்ந்திடுமோ". எனக் கருதுகின்றார். சித்தியாகிய பொருள் தான் துணிந்ததற்கு வேறுய இயல் பினதாயின், அதற்கு முதலாகிய ஆன்மாவை வினை பற்றி நொந்து வெறுப்பதற் கிட முண்மை கண்டு, "விருப்ப முறுது எனீ முனிந்து விடுத் திடுமோ" எனவும், ஆன்ம சக்தி வினை வகைக்கு அடங்கியதாதல் கண்டு இரங்கித் தான் கொண்ட அன்புறவை நீடிக்குமோ என்று எண்ணி, "நேயம் விளைத்திடுமோ" எனவும், சித்தியாய ஞானப்

பொருளின் நல மிகுதி வினை கடியும் செயல் பற்றி, சித்திக்கு மாருய் நின்று பூசல் விளைவிக்குமோ என்பாராய், "இவர்க்கு நிதம் சண்டை விளைத் திடுமோ" எனவும் இசைக்கின்றார். சண்டை - பூசல். சித்தியாகிய சிவ ஞானம் வினையால் விளையும் அசத்தைக் காட்டி வினை வழி நிற்கும் புத்தியைத் தெருட்டிச் சிவபோகத்தை நுகர்விப்பது இயல்பாகலின், "இருவர்க்கும் பொதுவில் சந்ததி யுண்டாமோ என்றும், புத்தியின் விகற் பத்தால் சிவபோக மாயை சந்ததி என ஏங்கி, "தடைபடுமோ, திருவுளம் தான் சற்றும் அறிந்திலனே" என்றும் வருந்துகின்றார்.

இதனால், சித்தியாகிய சிவஞானப் பேரின்பத்தைப் புத்தி தத்துவம் தடுத் தொழியுமோ என ஏங்கியவாறும். (6)

3382. ஆனத்த நடம்பொதுவில் கண்டதரு ணத்தே
அருமருந்தொன் றென்கருத்தில் அடைந்தமர்ந் ததுதான்
கானந்த மதத்தாலே காரமறை படுமோ
கடுங்கார மாகிஎன்றன் கருத்தில்உறைந் திடுமோ
ஊனந்த மறக்கொளும்போ தினிக்கரசம் தருமோ
உணக்கசந்து குமட்டிஎதிர் எடுத்திடநேர்ந் திடுமோ
நானந்த உளவறிந்து பிறர்க்கீய வருமோ
நல்லதிரு உளம்எதுவோ வல்லதறிந் திலனே.

உரை : தில்லையம்பலத்தின்கண் ஆனந்தத் திருக்கூத்தை நான் கண்ட சமயத்தில் பெறற் கரிய மருந்தொன்று என் மனத்தின்கண் வந்து பொருந்திற்று; மணம் கமழும் மதநீர்க் கலப்பால் தனக்குரிய காரத்தை இழந்து போகுமோ; மிக்க காரமுடையதாகி என் கருத்தின்கண்ணேயே உறைந்து போகுமோ; உடம்பு முற்றும் பரவ வுட்கொள்ளும் போது, எங்கும் இனிக்க இரசமாக இருக்குமோ; வாயுட் பெய்த வழிக் கசப்பு மிகுந்து குமட்டி வாந்தி யெடுக்க நேருமோ; வாய் குமட்டாத பக்குவ மறிந்து பிறர்க்குத் தர முடியுமோ; பெருமானே, நின்னுடைய நல்ல திருக் குறிப்பு யாதோ? செய்ய வல்லது இதுவென்று அறிகிலேன். எ.று.

பொது, தில்லைத் திருச்சிற்றம்பலத்துக் குள்ள பெயர்களில் ஒன்று. அவ்வம்பலத்தின்கண் சிவபெருமான் நிகழ்த்தும் திருக்கூத்து, ஆனந்தத் தாண்டவமாகும்; அதனைக் கண்ட போது பிறவி நோயாற் பேதுறும் எனக்குப் பெறுதற்கரிய மருந்தொன்று என் மனத்தின்கண் தோன்றி யுருவாகியது என்பாராய், "பொதுவில் ஆனந்த நடம் கண்ட தருணத்தே அருமருந் தொன்று என் கருத்தில் அடைந்து அமர்ந்தது" என எடுத் தோதுகின்றார். மருந்தெனவே, உலகியலில் உடம்புறு நோய்க் குண்ணும் மருந்துகளின் நினைவு எழுதலும், அம்மருந்துகளில் காடுகளிற் பெறலாகும் ஏழிலைப்பாலை முதலியவற்றுல் காரம் இழந்து கெடும் மருந்து போலும் என்ற ஐய மகற்றுதற்குக் "கானந்த மதத்தாலே காரம் மறைபடுமோ" என்று கூறுகின்றார். காட்டில் யானையின் மதநீரின் மணம் கமழும் ஏழிலைப் பாலை என்ற பச்சிலை, "கானந்த மதம்" எனப்படும். பாலைச் சாற்றுல் பூரம் முதலிய மருந்துப பொருள்களின் காரம் கெடும் எனச் சித்த வைத்தியர் செப்புகின்றனர். சில மருந்துகள் காரம் மிக்குற்று உண்டார் நெஞ்சில் நெடிது நின்று எரிச்சலைப் பயத்தலால், "கடுங் காரமாகி என்றன் கருத்தில்

உறைந்திடுமோ" என வினவுகின்றார். ஊன் - உடம்பு. அந்தமற - முற்றும். வாயிலுண்டது உடல் முழுதும் பரவி இனிப்புச் சுவை தருவது சில மருந்தின் இயல்பாதல் விளங்க, "ஊன் அந்தமறக் கொளும் போது இனிக்க ரசம் தருமோ" என்கின்றார். ஊன் அந்தமற என்பதற்கு உடம்பு நோயால் எய்தும் கேடு அறப் போவதற்கு என வுரைப்பினும் அமையும். ரசம் என்றது - இனிப்புச் சுவை. எதிர் எடுத்திடல் - உண்டதை வாந்தி பண்ணுதல்; காலுதலுமாம். "காலுமோதன மென்னக் கசந்ததால்" எனத் தலபுராண முடையார் கூறுவது காண்க. குமட்டாது உடற்குள் தங்கி நோய் நீக்கும் திறமறிந்து பிறர்க்குக் கொடுக்கும் திறம் எனக்கு உண்டாகுமோ என வேண்டுவாராய், "நான் அந்த உளவறிந்து பிறர்க்கு ஈய வருமோ" என உரைக்கின்றார். இனி, மருந் தென்றதைச் சிவஞான மாகக் கொண்டு மதம் மாற்சரிய முதலிய குற்ற நிகினவுகளால் மறைந் தொழியுமோ, மிக்க வொளி யுடையதாய் என் நெஞ்சின் கண் உறைந்து நின்று உய்தி பெறுவிக்குமோ, உண்ணின்று சிவானந்தம் பெறுவிக்குமோ மனத்தின் பொல்லாங்கு ஏதுவாக உண்ணில்லாது நீங்கி விடுமோ, நான் அதன் இயல்பு கண்டு பிறர்க்கு நல்கித் திருவருள் நலம் பெறுவித்த லாகுமோ எனக் குறித்துரைப்பதாகக் கோடலும் ஒன்றும்.

இதனால், சிவஞானத்தை மருந்துருவில் வைத்து விளக்கிய வாறும். (7)

3383. தாய்கொண்ட திருப்பொதுவில் எங்கள்குரு நாதன்
சந்நிதிபோய் வரவிடுத்த தனிக்கரணப் பூவை
காய்கொண்டு வந்திடுமோ பழங்கொண்டு வருமோ
கனிந்தபழங் கொண்டுவருங் காலதனே மதமாம்
பேய்கொண்டு போய்விடுமோ பிலத்திடைவீழ்ந் திடுமோ
பின்படுமோ முன்படுமோ பிணங்கிஒளித் திடுமோ
வாய்கொண்டு வென்றிடுமோ தோற்றிடுமோ என்னை
மறந்திடுமோ திருஉளத்தின் வண்ணம்அறிந் திலனே.

உரை: பரந்துள்ள தில்லையம்பலத்தின்கண் கூத்தாடி யருளும் எங்கள் குருநாதனை சிவபிரான் திருமுன்பு சென்று வருமாறு யான் விடுத்த மனமாகிய பூவைப் புள் காயைக் கொண்டு வருமோ, பழம் கொண்டு வருமோ, பழுத்துக் கனிந்த பழத்தைக் கொண்டு வரும் போது அதனை மதம் எனப்படும் பேய் குறுக்கிட்டுக் கவர்ந்து கொண்டு போய் விடுமோ, அக்கனி தானும் பெரும் பள்ளத்தில் வீழ்ந் தொழியுமோ, அப் பேய்க்கு முன்னே வருமோ, பின்வருமோ, போரிட்டு எங்கேனும் மறைந்து கொள்ளுமோ, வாயலகைப் படையாகக் கொண்டு தாக்கி வெற்றி பெறுமோ, தோல்வி யுறுமோ, போர்க் கலக்கத்தால் என்னை மறந்து விடுமோ; இறைவனே, நினது திருவுள்ளக் குறிப்பை அறிகிலேன். எ.று.

திருப்பொது - தில்லையம்பலம். தா - தாய் என வந்தது. தாவியது தாயது என வருதல் காண்க. தாவுதல் - பரத்தல். அருள் மிகுதி பற்றி, "தாய் கொண்ட திருப்பொது" என்கின்றார் எனினும் பொருந்தும், பக்குவ

மெய்திய ஆன்மாக்களுக்கு ஞான மருளும் சிவத்தின் சிறப்பியல்பு நோக்கி, "குருநாதன்" என்று கூறுகின்றார். சன்னிதி - திருமுன்பு; சமூகம் என்பது முண்டு. கண் காது முதலியவற்றைக் கருவி யென்பது போல மன முதலியவற்றைக் கரணம் என்பது வழக்கு. மனத்தைப் பூவைப் பறவையாக உருவகம் செய்தலால், "கரணப் பூவை" என்கின்றார். பூவை - நாகணவாய் என நூலோர் வழங்கும் மைனாப் பறவை; இதுவும் கிளி போல் பழகற் கினியது என்பர். திருவருள் ஞானமாகிய கனி பெற்று வரல் வேண்டித் தில்லைப் பெருமான் திருமுன்பு செலுத்திய தாகக் குறிப்பு. போன விடத்து நின்றெழியாது எவ்வாற்றாலும் திரும்பி வரப் பணிக்கப் பெற்றமை விளங்க, "வர விடுத்த பூவை" என விதந் துரைக்கின்றார். மனத்தைத் தனிப்பட விடுத்தமையின் "தனிக் கரணப் பூவை" என்கிறார். துணை சேர்த்து விடுப்பின் காலக் கழிவுண்டாம் என்பது கருத்து. கிளி போலப் பேசுவ தன்றுகலின் உண்ணும் காய் கனிகளே அதனைற் கொணரப் படுவன எனக் கொண்டு, காயையோ கனியையோ யாதனைக் கொணரும் என நினைந்து, "காய் கொண்டு வந்திடுமோ பழம் கொண்டு வருமோ" என்று கூறுகிறார். சென்ற காரியம் கைக்கூடாதாயின் காய் என்பதும், கூடியதாயின் பழம் என்பதும் மரபாதலின் அக் கருத்தும் தோன்ற இக்கூற்று நிற்பதறிக. பூவைப் புள் காய் கனிகளையே கொணருவதாயினும், இடையில் உளவாகும் ஊறு நினைந்து என்னுகுமோ என எண்ணி அஞ்சுகின்றமை புலப்பட, "கனித்த பழம் கொண்டு வருங்கால் அதனை மதமாம் பேய் கொண்டு போய் விடுமோ" என நினைக்கின்றார். மதம் எனும் குற்றத்தைப் பேய் என்னும் வழக்குப் பற்றி மதமாம் பேய் என்று குறிக்கின்றார். மதம் தோன்றிய வழி உடற் கண்ணும் உள்ளத்தின் கண்ணும் துடிப் பேற்படுவ தால் கைகூடிய நலம் சிதறிக் கெடும் என்பது பற்றி, "மதமாம் பேய் கொண்டு போய் விடுமோ" என்று பேதுறுகின்றார். ஏற்படும் துடிப்பால் வாயலகின் துடிப்பால் ஏந்திய பழம் நிலத்திற் பள்ளத்தில் வீழ்ந்து மறைவது போல இறைவன்பாற் பெற்ற அருளாகிய கனி தவறி விடலாம் என்ற அச்சத்தால் "பிலத்திடை வீழ்ந்திடுமோ" என்று பேசுகின்றார். வரும் போது கனி கவர்வான் வந்து தாக்கும் பேய்ப் பகையையும் தனது மனமாகிய பூவையையும் என்னும் இரண்டிற்கு இடை நிகழும் பூசலை எண்ணிப் "பின்படுமோ முன் படுமோ பிணங்கி ஒளித்திடுமோ" எனக் கருதுகின்றார். பிணங்குதல் - மாறிடுதல். ஒளித்தல் - மறைதல். போராடுமிடத்துப் பூவைக்குக் கை போல் உதவுவது அதன் வாயலகாதலால், "வாய் கொண்டு வென்றிடுமோ தோற்றிடுமோ" என்றும், இப் போர்க் கலக்கத்தில், வேண்டி விடுத்த ஆன்மாவாகிய தன்னை மறந்து போகலாம் என நினைந்து, "என்னை மறந்திடுமோ" என எண்ணி வருந்துகின்றார்.

இதனால், மனம் விழைந்த அருட் கனி விழைந்தாங்கு எய்துமோ என எண்ணி வெய்துயிர்த்தவாரும். (8)

3384. தீட்டுமணிப் பொதுநடஞ்செய் திருவடிகண் டேத்தச்
செல்கின்றேன் சிறியேன்முன் சென்றவழி அறியேன்
காட்டுவழி கிடைத்திடுமோ நாட்டுவழி தருமோ
கால்இளைப்புக் கண்டிடுமோ காணுதோ களிப்பாம்

மேட்டினிடை விடுத்திடுமோ பள்ளத்தே விடுமோ
விவேகம்எனும் துணையுறுமோ வேடர்பயம் உறுமோ
ஈட்டுதிரு அடிச்சமுகம் காணவும்நோந் திடுமோ
எப்படியோ திருவுளந்தான் ஏதும்அறிந் திலனே.

உரை : தீட்டப் பெற்ற மணிகள் இழைத்த அம்பலத்தின்கண் திருக் கூத்தாடும் திருவடிகளைக் கண்களாற் கண்டு பரவப் புறப்படுகின்ற சிறுமை யுடையவனுகிய நான் முன்பு சென்ற வழியை மறந் தொழிந் தேன்; இனி யெனக்குக் காட்டு வழி கிடைக்குமோ, நாட்டு வழி புலப் படுமோ, அறியேன்; வழி கண்டு நடக்கலுற்ருல் கால்கள் இளைப்புற்று மெலியுமோ, அவ்வாறு மெலிவுருமல் மகிழ்ச்சி தோன்றி மேட்டு வழியிற் செலுத்துமோ, பள்ளத்திற் புகுத்துமோ தெரிந்திலது; விவேகம் என்னும் நல்லறிவு போந்து எனக்குத் துணை புரியுமோ, ஐம்புலன்களாகிய வேடரது அச்சம் உண்டாகுமோ, திருவருள் நலத்தைப் பெருக நல்கும் திருவடிக் காட்சி எனக்குக் கிடைக்குமோ, நினது திருவுளக் குறிப்பைச் சிறிதும் அறிகிலேன். எ.று.

மணி மன்று எனச் சான்ருேர் கண்டு புகழ்த்தலால், தில்லையம்பலத் தைத் "தீட்டுமணிப் பொது" என்று சிறப்பிக்கின்ருர். திருவருட் சிவ ஞானத் திருக்கூத்தை யாடுதலின், "நடஞ்செய் திருவடி கண்டு ஏத்தச் செல்கின்றேன்" என்றும், முன்பு இளமைக் காலத்தில் நிலவிய பாச பசு வறிவுகள் திருவருள் வேட்கை தோன்றிய நிலையில் தேய்ந் தொழிதலால் "முன்பு சென்ற வழியறியேன்" என்றும் இயம்புகின்ருர். கல்லும் முள்ளும் நிறைந்த காட்டு வழி, அவையன்றி நாட்டு மக்கள் பன்முறையும் சென்று பயின்ற நாட்டு வழி என இருவகைப் படுதலின், "காட்டு வழி கிடைத் திடுமோ, நாட்டு வழி கிடைத்திடுமோ" என்று வினவுகின்ருர். காட்டு வழியை உலகியற் பொறி வழி எனவும், மற்றையதைச் சான்ருேர் பயின்ற அருள் வழி யெனவும் கொள்க. செல்லும் செலவின்கண் தம்மைக் கொண் டேகும் கால்கள் தளர்தல் இயல்பாகலின், "கால் இளைப்புக் கண்டிடுமோ காணுதோ" என எண்ணுகின்ருர். கால்கள் என்றது ஞான நன் னடையைக் குறிக்கிறது. தீநெறிக் குரிய உணர்வும் செயலும் புகுந்து மெலி விப்பது தோன்ற, "இளைப்புக் காணுமோ" என அஞ்சுகிறது. ஆசாபாசக் சூழல்கள் பள்ள வழிகள் போல் துன்பம் செய்தலின், ஞான நெறியாகிய மேட்டு வழியில் என்னை நின் திருவருள் செலுத்துமோ என, வேண்டுவா ராய், "மேட்டிடை விடுத்துமோ" என விளம்புகின்ருர். விவேகம் - நல் லறிவு; உண்மை யுணர்வுவாகும். வேடர் - ஐம்புலன்கள் மேற் செல்லும் ஆசை. துன்பம் தந்து மன நிறையை அலைத்தல் பற்றி, "வேடர்" எனக் கூறுகின்ருர். திருவடி, ஞானச் செல்வ நிலையமாதலால், "ஈட்டுத் திருவடி சமூகம்" என்று தெரிவிக்கின்ருர். இந்த நலமெல்லாம் திருவருளாவல்லது பெறப்படுவ தன்மையால், "திருவுளந்தான் ஏதும் அறிந்திலனே" எனத் தெரிவிக்கின்ருர்.

இதனுல், தில்லையம்பலத் திருவடிக் காட்சி பெறற்கு வேண்டும் ஞான நெறி அருள வேண்டியவாரும்.

3385. ஞானமணிப் பொதுநடஞ்செய் திருவடிகண் டிடவே
நடக்கின்றேன் அந்தோமுன் நடந்தவழி அறியேன்
ஊனமிகும் ஆணவமாம் பாவிஎதிர்ப் படுமோ
உடைமைஎலாம் பறித்திடுமோ நடைமெலிந்து போமோ
ஈனமுறும் அகங்காரப் புலிகுறுக்கே வருமோ
இச்சைஎனும் இராக்கதப்பேய் எனைப்பிடித்துக் கொளுமோ
ஆனமலத் தடைநீக்க அருட்டுணைதான் உறுமோ
ஐயர்திரு உளம்எதுவோ யாதுமறிந் திலனே.

உரை: மணிகள் இழைத்த அம்பலத்தின்கண் ஞான நடம் புரிகின்ற திருவடிகளைக் கண்டு பராவுதற்கு நடந்து போகின்றேன்; ஆனால் நான் முன்பு நடந்து சென்ற நன்னெறியை மறந்து விட்டேன்; இப்போது நான் போகிற வழியில் ஆணவம் எனப்படும் பாவி என்னுடைய எதிரே வருமோ, எதிர்ப்பட்டு எனது நற்பண்புகளைக் கவர்ந்து கொள்ளுமோ, என்னுடைய நடையும் சோர்ந்து போகுமோ; கீழ்மைப் படுத்தி வீழ்த்தும் அகங்காரம் எனப்படும் புலி குறுக்கே பாய்ந்து கெடுக்குமோ; இச்சை யென்கிற இராக்கதப் பேய் போந்து என்னைப் பற்றிக் கொள்ளுமோ; இவ் வாறு உண்டாகிய மலத்தடைகளைப் போக்கிக் கொள்ளுதற்கு நின்னுடைய திருவருள் துணை புரியுமோ? தலைவராகிய உம்முடைய திருவுள்ளக் குறிப்பு இன்னதென அறியேன். எ.று.

மணிப் பொதுவில் ஞான நடம்செய் திருவடிகள் என இயையும். உலகியல் இச்சைகள் நீங்கற் பொருட்டு ஆடுவது ஞான நாடகம் (சதகம்) என்பர் மணிவாசகர். இச்சை வகைகளை அறியாத இளமைக்கண் நின் திருவடிகளைக் கண்டேனெயினும், அன்று காணப் போந்த நன்னெறியை இப்போது உலகியற்றேய்வால் மறந்து போனேன் என்பாராய், "அந்தோ முன் நடந்த வழி யறியேன்" என மொழிகின்றார். இதற்கு முன்னேர் சென்ற வழி யறியேன் எனப் பொருள் கொள்வதுமுண்டு. ஆணவம், மூலமலம், ஆன்ம வறிவைச் சுருக்கி அணுத் தன்மை யுறுவிப்பது பற்றி மலம், ஆணவம் எனப்படுகிறது. அறிவை மறைப்பதால் ஆன்மா தனது அறிவொளி மழுங்கிக் குற்றம் பொருந்துவது பற்றி, "ஊன மிகும் ஆண வமாம் பாவி எதிர்ப்படுமோ" எனவும், ஆணவ மறைப்பால் ஆன்மாவின் இயற்கை யுடைமையாகிய சிற்சொரூபம் கெடுவது தோன்ற, "உடைமை யெலாம் பறித்திடுமோ" எனவும் வருந்துகின்றார். அறிவு, இச்சை, செயல் என்ற மூன்றும் அடங்க, "உடைமை யெலாம்" என வுரைக்கின்றார். நடை - நல்லொழுக்கம். அகங்காரம் - நான் என நிற்கும் பசு போதம்; இதனைத் தற்போதம் என்றும், நானென முந்துறும் தன் முனைப்பு என்றும் கூறுவர். இதனால் அறிவு செயல்கள் தாழ்வடைதலால், "ஈன முறும் அகங்காரம்" என இயம்புகின்றார். கீழ் வீழ்த்தும் செயல் பற்றி, புலி யுவமமாயிற்று. நிரம்பாத தன்மைத்தாதலால் இச்சையை, "இராக்கதப் பேய்' என்று பழிக்கின்றார். மலமாயையாகிய மலங்களால் திருவருட் பேற்றுக்கு உண்டாகும் தடைகள் திருவருள் ஞானமல்லது துணை வேறே இல்லாமையால், "மலத்தடை நீக்க அருட்டுணைதான் உறுமோ" எனவும், இறைவனது திருக்குறிப்பு ஆன்ம சிற்சத்திக்கு அப்பாற் பட்டதாகலின், "ஐயா திருவுளம் எதுவோ யாதும் அறிந் திலனே" எனவும் இயம்புகின்றார்.

இதனால் மலத்தடைகளின் இயல்பு கூறியவாறும். (10)

12. பிள்ளைச் சிறு விண்ணப்பம்

அஃதாவது, பிள்ளைப் பருவத்துத் துள்ளும் உள்ளத்தில் எழும் விழைவு விருப்புக்கள் சிலவற்றை எடுத்தோதி இறைவன்பால் விண்ணப்பம் செய்வது. சிறு விண்ணப்பம் என்பது சிலவாகிய விண்ணப்பங்களின் மேல் நிற்கிறது. கிறித்துவ சமயத்து அன்பர்கள் தமது விழைவு விருப்பங்களை இறைவனிடத்தில் முறையிடுவது போல இது வடலூர் வள்ளலார் திருவுள்ளத்தில் புதிது தோன்றிய முறையீடாகும்.

ஆங்கில நாட்டு ஞானப் பெருந்தகையான வில்லியம் லா என்பவர் எழுதிய "ஏ சீரியஸ் கால்" (A Serious Call) என்ற நூற் பொருளை ஒப்பு நோக்குவது இவ் விண்ணப்பத்தின் நுண்மாண்பை உணர்தற்கு துணை செய்யும்.

இதன்கண், செய்த குற்றங்களால் எய்தும் துன்பத்திற்கு ஆற்றாது அருளாதரவு செய்க என இறைவனிடம் விண்ணப்பித்தலும், தம்மை வெறுத்தலாகாதென வேண்டுதலும், செம்மறிக் கருணைத் திருநெறியை விளக்குவதும், பொய்ம்மை வேண்டாமையும், கருவி கரணங்களின் இயக்கம் உணர்தலும், போக நுகர்ச்சியும் திருவருட் புணர்ப்பு என்பதும், மகளிர் கூட்டத்தை மதியாமை கூறலும், ஆன்ம சுதந்திரமின்மை விளக்கவும், காசாசை யின்மை தெரிவிப்பதும், உயிர்கட்கு இன்பம் செய்ய எழும் இச்சையும், மாந்தரனைவரும் அன்பால் போற்றி வாழ்த்தி இன்புற்றலை விழைவதும், சிதம்பரம் புதுக்கித் திருமேனி கண்டு திருவிழா எடுக்கும் ஆர்வத்தை விண்ணப்பிப்பதும், சமரச ஞான சுத்த சன்மார்க்க நெறியை விளக்குவதும், புலை கொலை தவிர்க்கும் அருள் அற வேட்கையும் பிறவித் துன்பமற வரம் பெற விழைவதும், பிறவும் கூறி, விரிந்தது தொகுத்து ஓதப்படுகின்றன. இவ் விண்ணப்ப முறை நம்பியாரூரர் "விருந்தாய சொன்மாலை" என்று சிறப்பிக்கும் மாலை வகையில் அடங்கும்.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3386. தடித்தஓர் மகனைத் தந்தைஈண் டடித்தால்
தாயுடன் அணைப்பள்தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன்இங் கெனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனி அம்பலத் தாடும்
புனிதநீ ஆதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
அம்மைஅப் பாஇனி ஆற்றேன்.

உரை : அம்மையும் அப்பனுமாகிய பெருமானே, வளர்ச்சியால் உடல் தடித்த மகன் செய்த தவறு கண்டு தந்தை யவனை யடிப்பானையின், உடனே தாய் அவ்விடம் போந்து தடுத்துத் தன் மகனை அணைத்துக் கொள்வாள்; தாய் அடிப்பாளாயின், தன் கையிற் பற்றிப் பிடித்துக் கொண்டு தந்தை தன்னோடு அணைத்துக் கொள்வான்; திருநீறணிந்த திருமேனியை யுடையனுய்த் தில்லையம்பலத்தில் திருக்கூத்தாடும் தூய வனே, இவ்வுலகில் எனக்கு நூல்கள் உரைத்த தந்தையும் தாயும் நீயா தலால் இதுவரை உலகியல் துன்பங்களால் என்னை வருத்தியது போதும்; இனி உனதருளால் என்னை ஆதரிக்க வேண்டும்; இனிமேல் இத்துன்பத் தைப் பொறுக்க மாட்டேன். எ.று.

"அம்மையோ டப்பனுகிச் செறிவொழியாது நின்ற சிவன்" (சிவ. சித்தி) எனச் சான்றோர் உரைத்தலின், அம்மையப்பன் என்பது சிவன் திருப்பெயருள் ஒன்றுதல் பொருந்துகிறது. பண்டைச் சான்றோர், "அம்மையப்பரே யுலகுக் கம்மையப்பர் என்றறிக" என்பது ஈண்டு நினைத்தற் குரியது. இன்னோரன்ன வழக்குகளை நினைந்தே வள்ளற் பெரு பெருமானும், "அம்மையப்பா" எனப் பரவுகின்றார். என்பும் தசையும் வளமையுற வளர்ந்த மகனைத் "தடித்த மகன்" என்பர். தடி - ஊன் தசை. உடலூன் வளர்ச்சி மிகுந்து உணர்வு குன்றியவனைத் "தடித்தவன் எனவும், தடியன் எனவும் நாட்டவர் ஏசுப. அத்தகைய மகன் என்பது விளங்க, "தடித்த ஓர் மகன்" எனக் கூறுகின்றார். தடித்த மகன் தந்தை வெகுண்டு அடித்தற் குரிய தவறு செய்வனுதலின் காரணம் காட்டாமலே, "மகனைத் தந்தை ஈண்டு அடித்தால்" என்றும், உயிர்க்குரிய உணர்வு நோக்கும் தந்தையினும் உடல் நலம் பேணும் தாயுள்ளம் சிறந்தமை பற்றி, "தாய் உடன் அணைப்பள்" என முற்பட வுரைக்கின்றார். தடித்த மகன், தடிப்பு மிகுதியால் தாயுள்ளம் நொந்து சிவக்கும் அளவில் தவறு செய்வதுண்மையாலும், அது பொருது தாய் அடித்தல் இயல்பாகலானும் "தாய் அடித்தால்" என்று இயம்புகின்றார். மகன் தவறு செய்யின், தாய் அணைக்கத் தந்தையும், தந்தை யணைக்கத் தாயும் அடிப்பது அரிதாதல் பற்றி, "அடித்தால்" என்று இயம்புகின்றார். இருவரும் மகன்பால் ஒத்த அன்புடையராதல் பற்றி, "அணைப்பன், அணைப்பள்" என ஒருவினையே தந்து காட்டுகின்றார். உலகியல் வாழ்வுக் கமைந்த தாய் தந்தையர் இயல்பு இதுவாயின், பிறவாப் பேரருள் வாழ்வுக்குரிய தாயும் தந்தையும் ஆயவன் சிவபெருமான் என்றும், அதனால் "அவன் உலகுக்கு அம்மை யப்பன்" என்றும் சான்றோர் எடுத்துப் பேசி இன்புறுதலும் இன்புறுத்தலும் செய்கின்றனர் என்பது இனிது புலப்பட, "பேசிய தந்தையும் தாயும் நீ ஆதலால்" என இசைக்கின்றார். அடித்தல் நோய் செய்தல் மேலும், அணைத்தல் இன்பம் செய்தல் மேலும் நிற்றலின், உலக வாழ்வில் உற்ற துன்பங்களை "அடித்த" தென்றும், இன்பங்களை "அணைத்த" தென்றும், இவ்விரண்டும் இறைவனது அருட் செயல் என்று கருதுவது தோன்ற, "அடித்தது போதும்" என்றும், "அணைத்திடல் வேண்டும்" என்றும் முறையிடுகின்றார். "பொடித் திருமேனிப் புனிதன்", வெண்மையான திருநீறணிந்த திருமேனி கொண்ட புனிதனை சிவபிரான்.

இதனால், பிறவிக் கேதுவாகிய குற்றங்களைச் செய்தமையால் எய்திய துன்பத்தை எடுத்தோதி ஆற்றுமை கண்டு அருளாதரவு செய்க என விண்ணப்பித்தவாறும். (1)

3387 பெற்றதம் பிள்ளைக் குணங்களை எல்லாம்
பெற்றவர் அறிவரே அல்லால்
மற்றவர் அறியார் என்றனை ஈன்ற
வள்ளலே மன்றிலே நடிக்கும்
கொற்றவ ஓர்எண் குணத்தவ நீதான்
குறிக்கொண்ட கொடியனேன் குணங்கள்
முற்றும்நன் கறிவாய் அறிந்தும்என் றனைநீ
முனிவதென் முனிவுதீர்ந் தருளே.

உரை : அம்பலத்திலே திருக்கூத் தியற்றும் அருளரசே, என் குணங்களை யுடைய இறைவனே, என்னைப் பெற்ற அருள் வள்ளலே, தாம் பெற்ற பிள்ளைகளின் குணங்களை யெல்லாம் பெற்றவராகிய தாய் தந்தையர் அறிவார்களே யன்றி மற்றவர்கள் அறிய மாட்டார்கள்; நான் மேற்கொண்டுள்ள குணங்களாற் கொடியவனையினேன்; என்னுடைய குணங்கள் அனைத்தையும் நீ முற்றவும் நன்கறிவாய்; அறித்திருந்தும் வெறுப்பது ஏன்? வெறுப்பகன்று ஆண்டருள்க. எ.று.

அருளரசனுதல் பற்றிச் சிவனைக் "கொற்றவ" என்று கூறுகின்றார். நாளினும் பொழுதினும் நயந்து நோக்கி வளர்த்தலின், பெற்ற பிள்ளைகளின் குணஞ் செயல்களைப் பெற்றவர் கண்டு கொண்டிருக்குமாறு பற்றிப் "பெற்ற தம் பிள்ளைக் குணங்களை யெல்லாம் பெற்றவர் அறிவர்" என்றும், அதனை வற்புறுத்தற்கு "மற்றவர் அறியார்" என்றும் எடுத்துரைக்கின்றார். உலகின்கண் நிலவும் உயிர்களைத் தோற்றுவித்து வளர்த்தருளுதலால் இறைவனை, "என்றனை யீன்ற வள்ளலே" என வுரைக்கின்றார்; இதனைக் கூறுவது எனக்குத் தாயும் தந்தையுமாம் உரிமை யுனக்குண்டு என்பது விளங்கற்கு, "தாயானே தந்தையுமாகிய தன்னமகள் ஆயானே" (காருயில்) எனப் பெரியோர் கூறுதல் காண்க. உலகியல் தாய் தந்தையர் போல நீயும் என் குணஞ் செயலனைத்தும் நன்கறிவாய் என்பாராய், "கொடியனேன் குணங்கள் முற்றும் நன்கறிவாய்" என்றும், பிள்ளைகளின் குணஞ் செயல்களை நேரிற் கண்டும் உலகத்துப் பெற்றோர் வெறுப்புறுதது போல நீ என்னை வெறுத்து நீக்குதல் ஆகாது என்பாராய், "என்றனை நீ முனிவது ஏன்? முனிவு தீர்ந்து அருள்" என்றும் முறையிடுகின்றார். முனிதல் - வெறுத்தல். தம்பால் உள்ள குணங்கள் கொடுமையானவை என்றற்குக் "கொடியனேன்" என்று கூறுகின்றார். தன்வயத்தனுதல், தூய வுடம்பினனுதல், இயற்கை யுணர்வினனுதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பி லின்ப முடைமை என்ற எட்டும் சைவாகமம் கண்டு கூறுவன என்பர் பரிமேலழகர்.

இதனால், பெற்றோராகும் உரிமை காட்டித் தன்னை வெறுத்தலாகாதெனச் சிவன்பால் முறையிட்டவாறும். (2)

3388. வெம்மதிக் கொடிய மகன்கொடுஞ் செய்கை
விரும்பினும் அங்ஙனம் புரியச்
சம்மதிக் கின்றார் அவன்றனைப் பெற்ற
தந்தைதாய் மகன்விருப் பாலே

இம்மதிச் சிறியேன் விழைந்ததொன் றிலேன்
என்றனை விழைவிக்க விழைந்தேன்
செம்மதிக் கருணைத் திருநெறி இதுநின்
திருவுளம் அறியுமே எந்தாய்.

உரை : வெவ்விய அறிவும் கொடுமைப் பண்புமுடைய மகன் கொடிய செயலொன்றைச் செய்ய விரும்புவானுயின், மகன்பால் உள்ள ஆசையால் அவனைப் பெற்ற தாயும் தந்தையும் அவன் புரியும் கொடுஞ் செயலுக்கு உடன்படுகின்றனர்; இந்த மதியுடைய சிறியவனுகிய யான் குற்ற மொன்றும் செய்ததில்லை; என் மனத்தில் உன்பால் அன்புண்டாகச் செய்தமையால் நான் உன்பால் அன்பு கொண்டேன்; செவ்விய அறிஞர் மதிக்கும் அருளமைந்த திருநெறியும் இதுவாகும்; இவை யனைத்தும் சிவ பெருமானுகிய எந்தையே, உனது திருவுள்ளம் அறிந்த செய்தி யன்றே. எ.று.

வெம்மதி - தீமையும் கொடுமையும் செய்விக்கும் அறிவு. கொடிய மகன் - கொடுமையே செய்யும் இயல்புடைய மகன். அவன் கொடியனவே செய்ய விரும்புவானுயின், அவனுடைய பெற்றோர் ஒருகாலும் விரும்ப மாட்டாராகலின், "மகன் கொடுஞ் செய்கை விரும்பினும்" என்றும், அவனே தன் கொடுமைப் பண்பால் தாய் தந்தையரை மறுத்துக் கொடுமை புரியக் கருதுவனுயின், மகன்பாற் கொண்ட அன்பால் அவர்கள் அவன் செய்கைக்கு இசைவது உலகத் துண்மையின், "அங்ஙனம் புரியச் சம்மதிக்கின்றார். அவனைப் பெற்ற தாய் மகன் விருப்பாலே" என்றும் இயம்புகின்றார். மகன்பால் பெற்றோர்க் குளதாகும் அன்பு, அவன் பொருட்டுப் பெருங்குற்றத்தைச் செய்தற்கும் தூண்டித் துணை புரியும் என்பது கருத்து. எனக்குத் தாயும் தந்தையுமாகிய நின்பால் இத்தகைய செயலொன்றும் செய்ய வேண்டி முறையிடுகின்றேனில்லை என்பாராய், "இம்மதிச் சிறியேன் இழைத்த தொன்று இலை" என மொழிகின்றார். என் விருப்பு வெறுப்புகள் யாவும் நீ தோற்றுவிக்க என்னுள் தோன்றுவன என்றற்கு "நீ என்றனை விழைவிக்க விழைந்தேன்" என எடுத்துரைக்கின்றார். செம்மதி - செவ்விய அறிவுடைய சான்றோர் மேற்று; செம் பொருள் துணிந்த மதியுடையவராதல் பற்றி, அவர்களைச் "செம்மதி" என்று சிறப்பிக்கின்றார். அந்தச் செம்மதி செல்வர் கண்ட திருவருள் நெறியையே யான் விழைந்து மேற் கொண்டு ஒழுகுகிறேன்; இது நின் திருவுளம் நன்கறிந்த உண்மையன்றே என்பாராய், கருணைத் திருநெறி இது நின் திருவுளம் அறியுமே எந்தாய்" எனப் போற்றுகின்றார்.

இதனுல் செம்மதிக் கருணைத் திருநெறியை விளக்கி விண்ணப்பித்த வாறும். (3)

3389. பொய்பிழை அனந்தம் புகல்கின்றேன் அதில்ஓர்
புல்முனை ஆயினும் பிறர்க்கு
நைபிழை உளதேல் நவின்றிடேன் பிறர்பால்
நண்ணிய கருணையால் பலவே

கைபிழை யாமை கருதுகின் றேன்நின்
கழற்பதம் விழைகின்றேன் அல்லால்
செய்பிழை வேரொன் றறிகிலேன் அந்தோ
திருவுளம் அறியுமே எந்தாய்.

உரை : எந்தையாகிய சிவபெருமானே, பொய் கூறுதல் முதலிய குற்றங்கள் எண்ணிறந்தன செய்வேனுயினும், அவற்றுள் புல்லின் நுனி யளவும் பிறர்க்கு வருத்தம் உண்டு பண்ணும் பிழை சிறிது உளதாயினும் வாயாற் சொல்ல மாட்டேன்; பிறர்பால் உண்டாகிய அருளுணர்வால் சிறு பிழைகள் பலவும் செய்ய நினைப்பதில்லேன்; நின்னுடைய திருவடிப் பேற்றின்கண் ஆர்வம் உடையனுவதன்றிச் செய்தற்குரிய பிழை வேறே ஒன்றும் அறியேன்; ஐயோ, எனது இந்நிலைமை தேவரீர் அறிந்ததன்றே எ.று.

பொய் கூறல், புற முரைத்தல், இன்னு மொழிதல் முதலாய குற்றங்கள் பலவற்றை யுடையவனுயினும் புல்லின் நுனி யளவேனும் பிறர்க்கு வருத்தம் தருவதாயின் அதனை வாயாற் சொல்லுவதில்லேன் எனத் தமது சொல் தூய்மையை எடுத்துரைக்கின்றுராகலின், "பொய் பிழை யனந்தம் புகல்கின்றேன்" என்றும், "அதில் ஓர் புல் முனை யாயினும் பிறர்க்கு நை பிழை யுளதேல் நவின்றிடேன்" என்றும் இயம்புகின்றுர். பொய் பிழை - பொய் கூறல் முதலிய குற்றங்கள். அனந்தம் - எண்ணில்லாதன. காரண மின்றியே வாய்ச் சொல்லில் விளைவனவாதலால், "அனந்தம் புகல்கின் றேன்" எனக் கூறுகின்றுர். அந்தம் - அளவு. குற்றம் ஒவ்வொன்றையும் குறித்தற்கு "அதில்" என ஒருமையால் உரைக்கின்றுர். சிறுமை யளவு காட்டற்குப் "புன் முனை" கூறப்படுகிறது. நைபிழை - நோய் விளைவிக் கும் குற்றம். என் சொற்களால் பிறர்க்குச் சிறு வருத்தம் தருவதாயினும் அதனைச் சொல்லா தொழிவது எனது இயல்பு என வற்புறுத்தற்கு "நைபிழை யுளதேல் நவின்றிடேன்" என உரைக்கின்றுர். பிறர் துன்பம் காணின் என் மனத்தில் மிக்க அன்பு முதிர்ந்து அவர்பால் அருள் பெருகிப் பாய்தலால் செய்வன சிறு பிழையும் உருதபடி செய்ய நினைக்கின்றேன் என்பாராய், "பிறர்பால் நண்ணிய கருணையால் பலவே கைபிழையாமை கருதுகின்றேன்" எனவும், மெய்யுற மேலும் பெற நினைப்பது இறைவன் திருவடி யின்பம் என்றற்கு "நின் கழற் பதம் விழைகின்றேன்" எனவும், வேறே குற்றமாவன பாதனைச் செய்கின்றேன் என என்னையே ஆராயு மிடத்து ஒன்றும் காணப்படவில்லை என்பாராய், "செய்பிழை வேரொன் றறிகிலேன்" எனவும் இயம்புகின்றுர். எங்கும் யாவருள்ளத்தும் இருந்து நினைப்பவை யனைத்தையும் நேர்படக் காண்கின்ற பெருமானுதலால், "திருவுளம் அறியுமே எந்தாய்" என எடுத்தோதுகின்றுர்.

இதனுல் பொய் முதலாய பிழை சொல்லாமையும் நினையாமையும் எடுத்தோதியவாறும். (4)

3390. அப்பணி முடி என் அப்பனே மன்றில்
ஆனந்த நடம்புரி அரசே
இப்புவி தனிலே அறிவுவந் ததுதொட்
டிந்தநாள் வரையும்என் தனக்கே

எப்பணி இட்டாய் அப்பணி அலதென்
இச்சையால் புரிந்ததொன் றிலேயே
செப்புவ தென்னான் செய்தவை எல்லாம்
திருவுளம் அறியுமே எந்தாய்.

உரை : கங்கையாறு தங்கிய திருமுடியையுடைய தந்தையே, இன்பத் திருக்கூத்தாடும் அருளரசே, எந்தையே, இவ்வுலகில் எனக்கு நல்லறிவு தோன்றிய நாள் தொடங்கி இந்நாள் வரையும் எனக்கென எத்தகைய பணி செய்தல் வேண்டுமென ஏற்பாடு செய்ததனையோ அதனைச் செய்வதன்றி வேறே என் செயலாக யாதும் யான் செய்ததில்லை; இது தவிர யான் சொல்லுதற்கு வேறில்லை; நான் செய்துள்ளவை யனைத்தும் நினது திருவுள்ளம் நன்கு அறியும், காண். எ.று.

அம்பு - அப்பென வலித்தது; கங்கையாற்று நீர் அம்பு எனப்படுகிறது. சிவனது முடிச் சடையில் கங்கையாறு தங்குவது பற்றி. "அப்பணி முடியென் அப்பனே" எனப் போற்றுகின்றார். அப்பன் - தந்தை. உலகுயிர் கட்கு இன்ப முண்டாதல் வேண்டி அம்பலத்தில் இறைவன் திருக்கூத்து ஆடுகின்ற னென்பது பற்றி, "ஆனந்த நடம்புரி யரசே" எனப் புகல்கின்றார். பெருமான் ஆனந்த வடிவினனுதலின், அவனது திருக்கூத்து உயிர்கள் ஆனந்தம் பெறுவது பற்றிய தென வுணர்க. புவி - நிலவுலகம். உயிர்வகை யனைத்துக்கும் வாழிடமாதலால், நிலவுலகு இப்புவி எனச் சுட்டப்படுகிறது. பிறந்து வளரும் குழந்தைகட்குக் கண் முதலிய அறிகருவி யறிவும், கை, வாய் முதலிய செயற்கருவி யறிவும், ஓரளவு வளர்ந்த பின்பு கரண வறிவும், நன்கு வளர்ச்சி யுற்ற பின்பே அறிவறிவும் தோன்றுதலாலும், அவ்வறிவுக்கு ஆக்கமாவது இந்நிலவுலகமாதலாலும், "இப்புவி தனிலே அறிவு வந்தது தொட்டு" எனக் கூறுகின்றார். கருவி கரணங்களின் இயக்கம் திருவருளியக்க மென வுணர்வார்க்கு அவற்றுள் உளவாகும் அறிவு செயல்கள் திருவருள் வண்ணமாதல் விளங்குதலின், "என்றனக்கே எப்பணி யிட்டாய் அப்பணி யலது" என்றும், கருவி கரணங்களின் வேருக உயிர்க்குத் தனியே அறிவு செயலின்மையால், "என் இச்சையாற் புரிந்த தொன்றில்லை" என்றும் இசைகின்றார். உடல் கருவி கரணங்களின் இயக்க மனைத்தும் இறைவன் திருவருட் செயலாதலால், "செப்புவ தென்னுன் செய்தவை யெல்லாம் திருவுளம் அறியுமே" என்று முறையிடுகின்றார்.

இதனுல், உடல் கருவி கரணங்களின் இயக்கத்தின் உண்மை விளக்கியவாறும். (5)

3391. முன்னெடு பின்னும் நீதரு மடவார்
முயக்கினில் பொருந்தினேன் அதுவும்
பொன்னெடு விளங்கும் சபைநடத் தரசுன்
புணர்ப்பலால் என்புணர்ப் பலவே
என்னெடும் இருந்திங் கறிகின்ற நினக்கே
எந்தைவே றியம்புவ தென்னே
சொன்னெடு வானத் தரம்பையர் எனினும்
துரும்பெனக் காண்கின்றேன் தனித்தே.

உரை : பொன் வேய்ந்து திகழும் அம்பலத்தின்கண் எழுந்தருளும் அருளரசே, முன்பும் பின்புமாக நீ தர வருகின்ற மகளிர் கூட்டத்தைப் பெற்றேன்; அவர்தம் கூட்டமும் நின்னுடைய திருவருட் புணர்பாலா வதே யன்றி எனது சூழ்ச்சியாலன்று; என் உயிருணர்வோடுடனிருந்து ஒருங்கே யறிகின்ற உனக்கு நான் வேறுக நிறுத்தி உரைப்பது என்ன பயனுடையதாம்; நூலோர் சொல்லுகின்ற நெடிய துறக்க வுலகத்து அரம்பை மகளிராயினும் தனி நிலையில், எந்தையே, எனக்குத் துரும் பெனவே கருதிப் போக்குவேன். எ.று.

"செம்பொன்னினுல் எழுதி வேய்ந்த சிற்றம்பலம்" (கோயில் குறுந்) எனப் பெரியோர் புகழ்தலால் "பொன்னெடு விளங்கும் சடை" என்று புகல்கின்றார். பொன்னம்பலக் கூத்தன் எனப்படுவதால் "சபை நடத் தரசே" என வுரைக்கின்றார். நடத்தரசு என்ற பெயர் நடராசன் எனப் பிற் காலத்தே வழங்குவதாயிற்று. வட சொற்களால் மக்கட் பெயர் பெருக வழங்கலுற்ற போது, "நடராசன், நடேசன்" முதலிய பெயர்கள் பெருகி நிலவுகின்றன. தனித் தமிழ் வழக்கை மாற்றி வடமொழியும் பிற மொழி களும் கலந்த கலவை மொழியை நாட்டில் உருவாக்கி யாதரிக்கும் முயற்சி செல்வாக்குடைய இனத்தவரிடையே வேரூன்றியதன் விளை வாகத் தமிழர் பலரும் தம்மைத் தனித் தமிழ ரென்றற்கு நாணும் நிலை தமிழர் சமுதாயத்தில் நல்ல இடம் பெற்று விட்டதென வுணர்க. முற் பொழுதினும் பிற்பொழுதினும் பொழுது வாய்க்கு மிடத்தில் எல்லாம் மகளிரின் கூட்டம் எய்தினமை கூறுவார், "முன்னெடு பின்னும் நீ தரும் மடவார் முயக்கினிற் பொருந்தினேன்" என வுரைக்கின்றவர், அம்மகளிர் தாமும் இளநலம் கனிந்தவர் என்பது புலப்பட, "மடவார்" என வுரைக் கின்றார். முன்னெடு பின்னும் என்றதற்கு முன்பொருகாலே யன்றிப் பின்னரும் பன்முறையும் கூட்டம் பெற்றேன் என்ற பொருள்பட நிற்ப தறிக. மகளிர் கூட்டத்தை நயவாத தமக்கு அவரது கூட்டம் உளதாயின மைக்கு ஏது திருவருட் புணர்ப்பு என்பாராய், "அதுவும் உன் புணர்ப் பலால் என் புணர்ப்பலவே" என இயம்புகின்றார். புணர்ப்பு - கூட்டுதல்; சூழ்ச்சியுமாம். உயிர்க்கு பிராய் உணர்வினுள் உடனிருந்தறிதல் இறைவன் செயலாதலால், "என்னெடு மிருந்திங் கறிகின்ற நினக்கு" என்றும், நின்னின் வேறே யிருந்து உரையாடல் எனக்கு இயலாதா தலால், "எந்தை வேறு இயம்புவ தென்னே" என்றும் இயம்புகின்றார். நினது திருவருட் புணர்ப்பு இல்லையாயின் துறக்க நாட்டுத் தேவ வரம்பை மகளிரும் எனக்குத் துரும்பாய்த் தோன்றிப் புறக்கணித் தொதுக்கப்படும் பொருளாவர் என்பார், "சொன்னெடு வானத்து அரம்பைய ரெனினும் துரும்பெனக் காண்கின்றேன் தனித்தே" என்று சொல்லுகின்றார். நூல்களாலன்றிக் கண்ணுற் காணப்படுவ தன்மையின், வானுலகத்தைச் "சொன்னெடு வானம்" எனவும், போக நுகர்ச்சிக் கென்றே யமைந்த பெண்களாதலால் தேவ மகளிரை, "வானத்து அரம்பையர் என்றும், அம்மகளிரின் போக வேட்கையைத் தூண்டி நுகர்விப்பது நின் திருவருள்; அதன் செயற் பாட்டிற் பொருந்தாமல் யான் அதனின் தனிப்பேனையின், அந்த அரம்பை மகளிர், ஏனை மகளிரினும் கடைப்படுவ ரெனின் போக நினைவுக்கு இடமாதலை எண்ணிப் போக நினைவுக்கே இடம் தராத பொருளாகிய துரும்பை எடுத்துத் "துரும் பெனக் காண்கின்றேன்" என வுரைக்கின்றார்.

இதனுல் போக நுகர்ச்சியும் திருவருட் புணர்ப் பெனப் புகன்ற வாரும். (6)

3392. இன்னுமிங் கெனீநீ மடந்தையர் முயக்கில்
எய்துவித் திடுதியேல் அதுவுன்
தன்னுளப் புணர்ப்பிங் கெனக்கொரு சிறிதும்
சம்மதம் அன்றுநான் இதனீப்
பன்னுவ தென்னே இதில்அரு வருப்புப்
பால்உணும் காலையே உளதால்
மன்னும்அம் பலத்தே நடம்புரி வோய்என்
மதிப்பெலாம் திருவடி மலர்க்கே.

உரை : நிலை பெற்ற அம்பலத்தின்கண் திருக்கூத்தாடும் பெரு மானே, இவ்வுலகில் இனிமேலும் என்னை மடந்தையர் புணர்ச்சியில் ஈடு படுத்துவையாயின் அதுதானும் தான் நுகர்தல் வேண்டி நீ என்னைப் புணர்ப்பதாகும்; எனக்கு அதன்கண் சிறிதளவும் இசைவில்லை; நான் இதனைச் சொல்ல வேண்டா; இதன்கண் எய்தும் அருவருப்பு அவரது பக்கத்திலிருந்து நுகரும் போதும் உளதாகிறது; எனது நன்மதிப் பனைத்தும் நினது திருவடித் தாமரைக்கே யாம். எ.று.

மகளிர் கூட்டத்தை நயவாத தம்பால் அது வருவது திருவருட் குறிப் பென நினைக்கின்றுராகலின், அத்திருவருள் மேலும் தம்மை அதன்கண் ஈடுபடுத்தல் கூடாதென முறையிடுகின்றுராகலின், "இன்னும் இங்கு என்னை நீ மடந்தையர் முயக்கில் எய்துவித்திடுதியேல்" என உரைக்கின்றுர். பின்னும் அஃது எய்துமாயின், அது திருவருள் புணர்ப்பாமே யன்றி எனது கருத்திசைந்து ஏற்றதாகாது என்பார், "அது வுன்றன் உணப் புணர்ப்பு" என்றும், "எனக்கு ஒரு சிறிதும் சம்மதம் அன்று" என்றும் இசைக்கின்றுர். என து உண்ணின்றருளி ஆங்கு நிகழும் எண்ணங்கள் அனைத்தும் அறிந்துளாயாதலால், யான் எடுத் துரைப்பது பயனில் உரையாகும் என்பாராய், "நான் இதனைப் பன்னுவ தென்னே" என மொழிகின்றுர். பால் - பக்கல். இவ்வாறு புணர்க்கும் செயலினும் நின் திருவடிச் சிறப்பே எனக்கு வேண்டுவதாம் என வற்புறுத்தற்கு "மதிப்பெலாம் திருவடி மலர்க்கே" எனத் தெரிவிக்கின் றுர்.

இதனுல், மகளிர் புணர்ப்புத் திருவருளால் எய்தினும் மதியேன் என வற்புறுத்தவாரும். (7)

3393. அறிவிலாச் சிறிய பருவத்திற் றுனே
அருந்தலில் எனக்குள வெறுப்பைப்
பிறிவிலா தென்னுட் கலந்தநீ அறிதி
இன்றுநான் பேசுவ தென்னே
செறிவிலாக் கடையேன் என்னினும் அடியேன்
திருவருள் அமுதமே விழைந்தேன்
எறிவிலாச் சுவைவே றெவற்றினும் விழைவோர்
எட்டுணை யேனும்இன் றெந்தாய்.

உரை : எந்தை பெருமானே, அறிவறியாச் சிறு பருவத்திலேயே உணவுண்பதில் விருப்பில்லா திருந்த எனது இயல்பை என்னுடன் பிரிவில்லாமல் கலந்திருந்த நீ அந்நாளில் நன்கு அறிவாய்; இந்நாளில் நான் அதனை எடுத்துரைப்பதால் பயன் யாது? அடக்கப் பண்பின்றிக் கீழ்மையுற்றேனெயினும், நின் திருவடியல்ல தில்லாதவனுகிய யான் நின் திருவருளாகிய அமுதத்தையே விழைந் துறைகின்றேன்; வெறுத்தற் கில்லாத சுவைகள் வேறு எவற்றினும் ஓர் எள்ளத்தனையும் விருப்பம் எனக்கு இல்லை. எ.று.

கருவி கரண வறிவு நிரம்பாத சிறு பருவத்தை, "அறிவிலாச் சிறிய பருவம்" என்று குறிக்கின்றார். போதிய சுவை யுணர்வில்லாமையால் சிறுவர் சிலர் உணவு கொள்ள வெறுத்து மறுத்தல் இயல்பாதலால், "அருந்தலில் எனக்குள வெறுப்பை" என்றும், உயிர்க்குயிராய் உடனிருந் தறியும் இறைவற்கு இஃது அறிந்த உண்மையாதலால், "பிறிவிலாது என்னுட் கலந்த நீ அறிதி" என்றும், எல்லா மறிந்த பெருமானுகிய உனக்கு மீள வுரைப்பது பயன் தருவதாகா தென்பார், "இன்று நான் பேசுவ தென்னே" என்றும் இயம்புகின்றார். அடங்காத் தன்மை அறியாமை யிருளிற் கிடத்திக் கீழ்மையுட் படுத்துமாதலால், "செறிவிலாக் கடையேன்" எனவும், ஆயினும் திருவருள் ஞான மொன்றையே பெரிதும் விழைந்து நின்றமை புலப்பட, "திருவரு ளமுதமே விழைந்தேன்" எனவும், இக்கருத்தை வற்புறுத்துவாராய், "சுவை வேறு எவற்றினும் விழைவு ஓர் எட்டுணை யேனும் இன்று" எனவும் இயம்புகின்றார். வெறுத்து நீக்கலாகாத சுவையை "எறிவிலாச் சுவை" என வுரைக்கின்றார்.

இதனுல், திருவருளமுதத்தின் விழைவு மிகுதி புலப்படுத்த வாரும். (8)

3394. இன்சுவை உணவு பலபல எனக்கிங்
கெந்தைநீ கொடுப்பிக்கச் சிறியேன்
நின்சுவை உணவென் றுண்கின்றேன் இன்னும்
நீதரு வித்திடில் அதுநின்
தன்சுதந் தரம்இங் கெனக்கதில் இறையும்
சம்மதம் இல்லைநான் தானே
என்சுதந் தரத்தில் தேடுவேன் அல்லேன்
தேடிய தும்இலை ஈண்டே.

உரை : எந்தை பெருமானுகிய சிவனே, நீ இனிய சுவையுடைய உண்பொருள்கள் பல வேருயவற்றை எனக்குப் பிறரை யளிக்கச் செய்கின்றுயாகலின், சிறியவனுகிய யான் அவற்றை நீ தந்த நின்னுடைய சுவைப் பண்டமென்று கருதியே யுண்கின்றேன்; மேலும் நீ தருவித்தளித்தாலும் அது நின்னுடைய உரிமை; அதன்கண் இடை புக எனக்குச் சிறிதும் விருப்பமில்லை; நான் தானும் எனது உரிமையெனக் கருதி ஒன்றையும் தேட மாட்டேன்; இப்பொழுதும் நான் தேடிய தில்லை. எ.று.

இன்சுவை யுணவு - பலவேறு இனிய சுவை யூட்டப் பெற்ற தின்பண்டங்கள். சுவையினும் யுருவினும் வேருயவை என்றற்குப் "பல பல" என்று குறிக்கின்ருர். கொடுப்பானும் அடுப்பானும் உண்பானும் உண்பிப்பானும் எல்லாம் திருவருள் இயக்கம் என்னும் உணர்வு மீதூர்ந் தமை விளங்க, "இன் சுவை யுணவு பலபல எனக்கு இங்கு நீ கொடுப் பிக்கச் சிறியேன் நின் சுவை யுணவென் றுண்கின்றேன்" என இசைக் கின்ருர். மேலும் பல தருதலும் விரித்தலும் பிறவும் எல்லாம் திருவருளின் தனி யுரிமையாம் என்பதை "அது நின்றன் சுதந்தரம்" என்றும், திருவருளின் வரம்பகன்ற சுதந்தரத்தின் ஆன்மாக்கள் இடை புகல் இன்மையும் அருமையும் விளங்க, "எனக்கதில் இறையும் சம்மதம் இல்லே" என்றும், திருவருள் நலங்களே நாடித் தேடுவது என்னுடைய சுதந்தர மாகாமையின், "தேடுவேனல்லேன் தேடியதும் இல்லே" என்றும் எடுத் துரைக்கின்ருர்.

இதனுல் ஆன்மாவின் சுதந்தரமின்மை விளக்கியவாரும். (9)

3395. செறிவதில் மனத்தேன் காசிலே ஆசை
செய்திலேன் இந்தநாள் அன்றி
அறிவதில் லாத சிறுபரு வத்தும்
அடுத்தவர் கொடுத்தகா சவர்மேல்
எறிவதும் மேட்டில் எறிந்ததும் எனக்குள்
இருக்கின்ற நீஅறிந் ததுவே
பிறிவதில் லாநின் அருட்பெரும் பொருளைப்
பெற்றனன் பேசுவ தென்னே.

உரை : அடக்க மில்லாத மனமுடையேனுயினும் காசு பணத்திலே இந்நாளில் ஆசை கொள்வதில்லே; இந்த நாளிலே யன்றி தெளிவறிவில்லா சிறு பிள்ளேப் பருவத்திலும் என்னே யன்பால் அடுத்தவர் கொடுத்த காசு களே அவர் மேலே எறிவதும், அன்றிப் பலர் காண மேட்டின் மேல் எறி வதும் யான் செய்ததை எனக்குள் ஒருவனுய் உறைந்த நீ நன்கு அறிவாய்; என்னினின்றும் நீங்குதலில்லாத நினது திருவருளாகிய செல்வத்தைப் பெற்றுளேனுதலால் இனி யான் பெறலாவது யாதாம். எ.று.

செறிவது - அடக்கம். ஆசை வழி யோடும் இயல்புடைய மனத்தை அவ்வாறு ஓடாதபடி அடக்குவது மாண்பு தரும் மன வடக்கமாகும்; அஃது இல்லாமை புலப்பட, "செறிவதில் மனத்தேன்" என்று தெரிவிக் கின்ருர். எனினும் மனத்தெழும் காசாசையைப் போக்கிய திறத்தைக் கூறலுற்ற வள்ளற் பெருமான், இக்காலத்தே காசின்கண் ஆசையை நீக்கி விட்டேன் என்பாராய், "காசிலே ஆசை செய்திலேன் இந்த நாள்" என எடுத்தோதுகின்ருர். முன்னுள் இருந்ததுண்டு போலும் என ஐயம் எழாமற் பொருட்டு, "இந்த நாளன்றி அறிவதில்லாத சிறு பருவத்தும் காசாசை கொண்டிலேன்" எனக் கூறுகின்ருர். முன்னேயது காசு ஈட்டும் பருவமன் றென்பார், "அறிவ தில்லாத சிறு பருவம்" எனத் தெரிவிக்கின் ருர். நலம் தீங்கு தேர்ந்துணரும் அறிவு "அறிவது" எனக் குறிக்கப்படு

கிறது. அக்காலத்தே உறவினராயும் அன்பராயும் நண்பராயும் அடுப்பவர் உளராதலின், அவர்கள் காசு தருவது மரபாதலின், "அடுத்தவர் கொடுத்த காசு" என்றும், அக்காசின் மேல் ஆசை யில்லாமையால் தருவதை விலக்குவதும், விலகாது கொடுத்ததை அவர் மேலே எறிந்ததும் கூறுவார், "அடுத்தவர் கொடுத்த காசு அவர் மேல் எறிவதும்" என்றும், அவர் சென்று மறைந்த போது பிறர் எவரேனும் எடுத்துக் கொள்க என இனிது காண மேட்டில் எறிந்தமை விளங்க, "மேட்டில் எறிந்ததும்" என்றும், இச்செயல் வகைகளின் மெய்ம்மை விளக்குதற்கு, "எனக்குள் இருக்கின்ற நீ யறிந்ததுவே" என்றும் இயம்புகின்றார். இங்ஙனம் மனத்தின்கட் பொருளாசை இடம் பெருமைக்குக் காரணம் கூறுபவர், "பிறிவ தில்லா நின் அருட் பெரும் பொருளைப் பெற்றனன் பேசுவதென்னே" என வுரைக்கின்றார்.

இதனால், திருவருட் பேற்றுல் காசாசை இல்லா தொழிந்தமை தெரிவித்தவாறும். (10)

3396. பணத்திலே சிறிதும் ஆசைஒன் றிலைநான்
படைத்தஅப் பணங்களைப் பலகால்
கிணற்றிலே எறிந்தேன் குளத்திலும் எறிந்தேன்
கேணியில் எறிந்தனன் எந்தாய்
குணத்திலே நீதான் கொடுக்கின்ற பொருளை
எறிகலேன் கொடுக்கின்றேன் பிறர்க்கே
கணத்திலே எல்லாம் காட்டும்நின் அருளைக்
கண்டனன் இனிச்சொல்வ தென்னே.

உரை : எந்தையாகிய பெருமானே, பணத்தின் மேல் எனக்குச் சிறிதும் ஆசை தோன்றுவதில்லை; பெற்ற பணத்தையும் என்பால் வைத்துக் கொள்ளாமல் பலமுறைக் கிணற்றிலும் குளத்திலும் கேணியிலும் வீசி எறிந்ததுண்டு; அருட் குண மாண்பாக நீ அருளுகின்ற பொருள் களைக் கைசேரப் பெற்றுப் பிறர்க்கும் உதவுகின்றேன்; கணப் பொழுதில் எல்லா நலங்களையும் அறிவுறுத்தும் ஞானத்தை நல்கும் நின் திருவருளைக் கண்டு கொண்டேனுதலால் இனிமேல் யான் சொல்வதற்கு யாது உளதாம். எ.று.

பணம் - பொன்னாலும் வெள்ளியாலும் செம்பு முதலிய பிற உலோகங் களின் கலப்பாலும் வாணிகப் பண்டமாற்றுக்கு அரசு வகுத்தளிக்கும் நாணயம்; இந்நாளில் இவை வெறுங் காகிதத்தாற் பெரிதும் இயங்கு கிறது. பணத்தாற் பலவகைப் பொருள்களும் நலங்களும் பெறப்படு கின்றமையின், யாவரும் பணத்தின் மேல் ஆசை யுறுவர். மண்ணில் வாழ விரும்புவோர்க்கு இன்றியமையாத இப்பணத்தின்பால் தமக்கு ஆசை யில்லாமை கூறும் வள்ளற் பெருமான், "பணத்திலே சிறிதும் ஆசை ஒன்றிலை" எனவும், தாம் கைவரப் பெற்ற பணங்களை விருப் பின்றிக் கிணற்றிலும் குளத்திலும் கேணிகளிலும் எறிந்தேன் என்பாராய், "படைத்த அப்பணங்களை யெல்லாம் கிணற்றிலே எறிந்தேன் குளத்திலே எறிந்தேன்; கேணியில் எறிந்தனன்" என வும்

இயம்புகின்ருர். கிணறு - கரையுற அமைந்த நீர்நிலை; கேணி - கரையமையாது இயல்பாக அமைந்தது. இந்நாளில் வேறுபாடு நோக்காது நாட்டின் சூழ்நிலைக் கொப்பக் கிணறு என்றும் கேணி என்றும் வழங்குகின்றனர். கையில் இருப்பது காணின், விருப் புடையார் கவர்தற்குச்சூழ்ந்து துன்பம் செய்தற்கு ஏதுவாதலை யெண்ணி, கிணறு குளம் கேணி முதலியவற்றில் எறிந்தாராகலின், "கேணியில் எறிந்தனன்" எனக் கிளந்து மொழிகின்ருர். கொடுக்கின்ற தமக்கும் பெறு கின்ற பிறர்க்கும் நலமுண்டாக உதவும் பொருள் நலம் சிறக்க, "குணத்திலே நீ தான் கொடுக்கின்ற பொருள்" என்று கூறுகின்ருர். நலம் விளைவிக்கும் நன்பொருள் இகழ்ந் தெரியப்படா தென்பது பற்றி, "நீ தான் கொடுக்கின்ற பொருளை எறிகலேன்" என்றும், பயன்படுத்தும் சிறப்பை, "பிறர்க்கே கொடுக்கின்றேன்" என்றும் பேசுகின்ருர். பணத்தையும் பணத்தாற் பெறலாகும் நலத்தையும், அதனுற் பெறலாகாத ஞான வின்பத்தையும் பிற வின்பங்களையும் தரவல்ல பெருமை மிக்க தென்றற்கு "கணத்திலே எல்லாம் காட்டும் நின் திருவருள்" எனப் புகழ்கின்ருர்.

இதனுல் பணத்தாசை யில்லாமை விளக்கியவாரும். (11)

3397. கிளைத்தஇவ் வுடம்பில் ஆசைஎள் அளவும்
கிளைத்திலேன் பசிஅற உணவு
திளைத்திடுந் தோறும் வெறுப்பொடும் உண்டேன்
இன்றுமே வெறுப்பில்உண் கின்றேன்
தளைத்திடு முடைஊன் உடம்பொருசிறிதும்
தடித்திட நினைத்திலேன் இன்றும்
இளைத்திட விழைகின் றேன்இது நான்தான்
இயம்பல்என் நீஅறிந் ததுவே.

உரை : எந்தை சிவபிரானே, தழைத் திருக்கின்ற இந்த உடம்பின் மேல் எள்ளத்தனையும் ஆசை கொண்டிலேன்; பசி நீங்கும்படி உணவு அருந்தும் போதும் வெறுப்போடே உண்டேன்; இப்பொழுதும் வெறுப் புடனே உண்கின்றேன்; கட்டுப்படுத்தி முடை நாற்றம் செய்யும் தசை யுற்ற இவ்வுடம்பு ஒரு சிறிதளவும் தசை பெருக நான் விரும்பவில்லை; இனிமேலும் என் உடம்பு மெலிய வேண்டுமெனவே விழைகின்றேன்; இதனை நான் சொல்வதாற் பயனில்லை; என்னுள் இருக்கும் நீ அறிந்த தாகலான். எ.று.

கை கால் விரல் முதலிய வுறுப்புத் தோறும் உரிய அளவு தசை பொருந்த உணர்ச்சியுற்ற உடம்பைக் "கிளைத்த வுடம்பு" எனக் கூறுகின் ருர். உலகில் வாழ்வாங்கு வாழ்தற்கு என இறைவன் படைத்தளித்த அருள் பொருளாதலின் உடம்பின் மேல் உயிருக்கு ஆசை யுளதாவது முறை யாயினும் மிக்க வழி நோயும் துன்பமும் உண்டாவது கொண்டு, "கிளைத்த இவ்வுடம்பில் ஆசை எள்ளளவும் கிளைத்திலேன்" என இயம்புகின்ருர். கிளைத்தல் - பெருகுதல். பசியளவுக்கு மிகினும் குறைந்த வழியும் துன்பமும் வருத்தமும் தோன்றுதலால், "பசியற வுணவு திளைத்திடும் தோறும் வெறுப்பொடும் உண்டேன்" என்றும், அவ்வெறுப்பு முப்போதும்

நீடிக்கின்றது என்றற்கு "இன்றுமே வெறுப்பில் உண்கின்றேன்" என்றும் கூறுகின்றார். தகாத்தல் - கட்டுதல்; உடம்பின்கண் எழும் நாற்றம் மனம் பொருந்தாத நிலையினதாதலால், "தகாத்திடு முடை யூன் உடம்பு" என இழிக்கின்றார். ஞானத்தால் நறுமணப் பேற்றுக்குரிய உடம்பு ஊன் பெருகி முடை நாறுவது வேண்டத் தக்க தன்மை பற்றி, "முடை யூன் உடம்பொரு சிறிதும் தடித்திட நினைத்திலேன்" எனவும், ஊன் தடியின் சேட்டை குறையின் நோயகன்று இன்பநிலையமையும் என்பது பற்றி, "இன்னும் இகாத்திட விழைகின்றேன்" எனவும் கூறுகின்றார். உள்ளத்தில் உள்ளிருந்து உள்குவார் உள்குவது முற்றும் உடனிருந்தறிபவன் இறைவனதலால், "இது நான் தான் இயம்பல் என் நீ அறிந்ததுவே" என வுரைக்கின்றார்.

இதனால் உடம்பின் மேல் ஆசை யின்மை விளம்பியவாறும். (12)

3398. இவ்வுல கதிலே இறைஅர சாட்சி
இன்பத்தும் மற்றைஇன் பத்தும்
எவ்வள வெனினும் இச்சைஒன் றறியேன்
எண்ணுதோ றருவருக் கின்றேன்
அவ்வுல கதிலே இந்திரர் பிரமர்
அரிமுத லோர்அடை கின்ற
கவ்வைஇன் பத்தும் ஆசைசற் றறியேன்
எந்தைஎன் கருத்தறிந் ததுவே.

உரை : எந்தையாகிய சிவனே, இந்த நிலவுலகத்தில் அரசனுயிருந்து பெறும் அரசு செலுத்த எய்தும் இன்பத்திலும், மற்றைய செல்வ வாழ்வு நல்கும் இன்பத்திலும் எத்துணையும் விருப்பமுற் றறியேன்; அவ்வின்பங்களை நினைக்கும் போதும் அருவருப்பையே அடைகின்றேன்; இனி மேலுலகடைந்து ஆங்குப் பெறலாகும் இந்திர போகம் திருமால் பிரமன் முதலிய தேவருலக போகமாகிய பெயர் பெற்ற போகங்களிலும் ஆசை கொண்டதில்லேன்; எனது இக்கருத்து நீ அறிந்ததன்றே. எ.று.

உடம்பெடுத்து வாழ்கின்ற மண்ணக வாழ்வை "இவ்வுலகு" எனக் குறித்து, இவ்வுலகில் நுகரப்படும் இன்ப வாழ்வுகளில் அரசியற் போகம் உயர்வுடைய தென்பது பற்றி, "இறையரசாட்சி இன்பம்" எனப் புகல்கின்றார். அரசர் மதிக்க உயரும் தொழில், வாணிகம், பொருள் அறிவுகளால் உண்டாகும் இன்ப வாழ்வை, "மற்றை யின்பம்" எனக் கூறுகின்றார். இவ்வின்பங்கள் நெடிது நுகருமளவு பெருமை யுடையவாயினும் என்னுல் விரும்பப்படுவன வல்ல என்பாராய், "எவ்வள வெனினும் இச்சையொன் றறியேன்" என்றும், இடையிடையே அவற்றை ஈட்டல் காத்தல் முதலிய செயல்களால் விளையும் துன்பங்களால் மனம் வெறுப்புறுவது கருதி, "எண்ணுதோறு அருவருக்கின்றேன்" என்றும் இயம்புகின்றார். தேவருலகம் - உழைப்பின்றி நெடிதிருந்து போக மொன்றே நுகரும் தேவருலகம். அவ்வாழ்வும் அடிக்கடி அசுரர்களால் தாக்கப்பட்டுச் சிறை படல், கொலை யுண்டல் முதலிய துன்பங்கட்கு இடமாதலைப் புராணங்கள் எடுத்துரைத்தலால், "இந்திரர் பிரமர் அரி முதலோர் அடைகின்ற

கவ்வை யின்பத்தும் ஆசை சற்று அறியேன்'' என உரைக்கின்றார். கவ்வை - பலர் பேசுதலால் உண்டாகும் ஆரவாரம். யாவர் உள்ளத்தும் உண்ணின்று அறியும் பரம்பொருளாதலின், "எந்தை என் கருத் தறிந் ததுவே'' என்று எடுத்தோதுகின்றார்.

இதனால், இம்மை யரச போகமும் மறுமைத் தேவ போகமும் விரும்பாமை விளக்கியவாறும். (18)

3399. சரியையூர் நான்கும் கிரியையூர் நான்கும்
சாற்றிடும் யோகமோர் நான்கும்
புரியவும் பதங்கள் பொருந்தவும் எனது
புந்தியில் ஆசைசற் றறியேன்
பெரியதோர் ஞானம் நான்கினும் ஆசை
பெற்றிலேன் முத்திபெற் றிடவும்
உரியதோர் இச்சை எனக்கிலை என்றன்
உள்ளம்நீ அறிந்ததே எந்தாய்.

உரை : சரியையிற் சரியை முதலாகவும், கிரியையிற் சரியை முதலாகவும், மேலும் ஓதப்படும் யோகத்திற் சரியை முதலாகவும் நந் நான்காக உரைக்கப்படும் தவவொழுக்கங்களைச் செய்யவும் அவற்றின் பயனாகிய பதமுத்திகளை அடையவும் என் மனத்தின்கண் ஆசை கொண்ட தில்லேன்; பெரியவாகிய ஞானத்திற் சரியை முதலாக வரும் நான்கும் பெறற்கு விரும்புகின்றேனில்லை; இதன் முடிவாகிய பரமுத்தியை எய்தவும் அமைவதாகிய ஆசை எனக்கு உண்டாகவில்லை; என் மன நினைவு முற்றும், எந்தாய், நீ அறிந்த தன்றே? எ.று.

சரியை கிரியை யோகம் ஞானம் எனச் சிவநெறி கூறும் தவம் பொது வகையில் நான்காயினும், ஒவ்வொன்றும் சரியையிற் சரியை சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம், என நான்காக விரியும். அவற்றுள், "திருக்கோயில் அலகிடல், மெழுகல் முதலியன சரியையிற் சரியை; ஐயைந்து மூர்த்திகளில் விநாயகக் கடவுள் முதலிய ஆவரண மூர்த்திகள் ஒரு மூர்த்தியைப் பூசித்தல் சரியையிற் கிரியை; நெஞ்சின் கண் உருத்திரக் கடவுளைத் தியானம் செய்தல் சரியையில் யோகம்; அத்தியான பாவனையின் உறைப்பால் ஓர் அனுபவ வுணர்வு நிகழ்தல் சரியையில் ஞானம்''; இவ்வாறே கிரியை யோக ஞானங்கள் முறையே நந்நான்காய் விரிகின்றன. இவற்றின் விரிவை மாதவச் சிவஞான முனிவர் அருளிய சிவஞான மாபாடியத்து எட்டாம் சூத்திர வுரையிற் காணலாம். சரியை முதலியவற்றை மேற்கொண்டோர் எய்தும் பயன்களில் முதல் மூவர் எய்துவன பதமுத்தி யென்றும், ஞானத்தார் எய்துவது பரமுத்தி யென்றும் பெரியோர் கூறுதலின், "சரியை முதல் நான்கும் புரியவும் பதங்கள் பொருந்தவும் எனது புந்தியில் ஆசை சற்றறியேன்'' என வுரைக்கின்றார். உபாய ஞானத்தின் வேருய்க் கூறப்படும் உண்மை ஞானத்தை பெரியோர் ஞான நான்கென்பவர் அதனால் விளையும் பயனையும் வேண்டேன் என்பார், "பெரியதோர் ஞானம் நான்கினும் ஆசை பெற்றிலேன்'' என்றும், ஞானப் பெரும்பயனாகிய முத்தியின்கண் இச்சை யிலை என்ற கருத்தை, "முத்தி பெற்றிடவும் உரியதோர் இச்சை எனக்கிலை'' என்றும் இயம்புகின்றார்.

"வீடும் வேண்டா விறலின் விளங்கினர்" (பெரியபு) என்ற சேக்கிழார் திருவாக்கு இதனை வலியுறுத்துகிறது. தாம் கூறும் இவ்வுரையது உண்மை விளக்குதற்கு "என்றன் உள்ளம் நீ அறிந்ததே" என்று உரைக்கின்றார்.

இதனால், உபாயம், உண்மை என்ற இருவகைச் சரியை யாதி தவப் பயன்களில் இச்சை யின்மை தெரிவித்தவாறும். (14)

3400. இறக்கவும் ஆசை இல்லைஇப் படிநான்
இருக்கவும் ஆசைஇன் றினிநான்
பிறக்கவும் ஆசை இலைஉல கெல்லாம்
பெரியவர் பெரியவர் எனவே
சிறக்கவும் ஆசை இலைவிசித் திரங்கள்
செய்யவும் ஆசைஒன் றில்லை
துறக்கவும் ஆசை இலைதுயர் அடைந்து
தூங்கவும் ஆசைஒன் றிலையே.

உரை : எந்தையாகிய சிவபிரானே, இவ்வுலகில் இறந்து படுதற்கும் எனக்கு விருப்ப முண்டாகவில்லை; இப்படியே பயனற்றிருந் தொழிவதற்கும் விருப்பமில்லை; இறந்த பின் வேறு பிறப்பெடுக்கவும் ஆசை யுண்டாகிற தில்லை; இனி, இவ்வுலகில் இவர் பெரியவர் பெரியவர் எனக் கண்டோர் சிறப்பிக்கின்ற நிலையைப் பெற ஆசை கொள்ளவில்லை; மந்திர தந்திர சாலங்கள் செய்யவும் ஆசையில்லை; உலகியற் பற்றற்ற துறவி யாதற்கும் எனக்கு விருப்பமில்லை; இன்பம் சிறிதுமின்றி, துன்ப நிலை யிலேயே இருக்கவும் விருப்புண்டாக வில்லை, காண். எ.று.

கருதிய பயன் எய்தாவிடத்து வாழ்வு பயனில்லாதாவது எண்ணி உயிர் வாழ்வில் வெறுப்படைந்து சாவை விரும்புவோர் பலராதலின், "இறக்கவும் ஆசை யில்லை" எனவும், தான் இருப்பதால் தனக்கோ பிறர்க்கோ பயன் உண்டாகாமை கண்டு, "இப்படி நான் இருக்கவும் ஆசை யின்று" எனவும், வேறு பிறப் புண்டாயின் நற்பயன் விளையுமென நினைவு தோன்றுதல் பற்றி, "இனி நான் பிறக்கவும் ஆசையில்லை" எனவும் மனம் சலிக்கின்றார். வாழ்விற் பெறலாகும் நலங்களை எண்ணு மிடத்துப் பலரும் கண்டு இவர் ஒரு பெரியவர் எனச் சொல்லிப் போற்றப் பெறுவது சிறப்பாதல் காணப்படுதலால், "உலகெல்லாம் பெரியவர் பெரியவர் எனவே சிறக்கவும் ஆசையில்லை" எனவும், பலருடைய வியப்பை யும் பாராட்டுதலையும் பெறுவோர் அரிய அறிவு செயல்களை யுடையராதல் வேண்டும்; போலிப் புகழாவன சின்னூட்களில் மாய்ந்து மறைந்து துன்பம் செய்தலால் அவற்றையும் வேண்டே னென்பாராய், "விசித்திரங்கள் செய்யவும் ஆசை ஒன்றில்லை" எனவும் விளம்புகின்றார். விசித்திரம் - மந்திர தந்திர சால வித்தைகள். கல்வி யறிவில்லாத மக்களிடையே வஞ்சமும் கரவு முடையவர் புகுந்து, அவரது அறிவு மயங்கத் தகுவன காட்டி ஏமாற்றும் செயல் வகை விசித்திரம். "யாதனின் யாதனின் நீங்கி யான் நோதல், அதனின் அதனின் இலன்" (குறள்) எனப் பெரியோர் உரைப்பது துறவு இன்பத்துக்கு ஏதுவாம் என்பது கண்டு இன்பம் காணுமையால் வருந்துகின்றமை தோன்ற, "துறக்கவும் ஆசை இலை"

எனவும், துன்ப மிகுதி அறிவையும் மனப்பண்பையும் செம்மை யுறுத்துவன என அறிஞர் அறிவுறுப்பது பற்றி, "துயரடைந்து தூங்கவும் ஆசை ஒன்றிலே" எனவும் இயம்புகின்றார்.

இதனால், பிறப் பிறப்புக்களிலும் துறவு துறவாமைகளிலும் உற்ற கருத்துக்களை எடுத்தோதி ஆறுதல் பெற்றவாரும். (15)

3401. சற்சபைக் குரியார் தம்மொடும் கூடித்
தனித்தபேர் அன்புமெய் அறிவும்
நற்சபைக் குரிய ஒழுக்கமும் அழியா
நல்லமெய் வாழ்க்கையும் பெற்றே
சிற்சபை நடமும் பொற்சபை நடமும்
தினந்தொறும் பாடிநின் றாடித்
தெற்சபை உலகத் துயிர்க்கெலாம் இன்பம்
செய்வதென் இச்சையாம் எந்தாய்.

உரை : மெய்ம்மை நெறிக்குரிய சபையினரோடு கூடித் தனிச் சிறப் பமைந்த பேரன்பும் உண்மை ஞானமும் நல்லவர்க்குரிய ஒழுக்கமும், பொய்ம்மை யுருத நல்ல சத்திய வாழ்க்கையும் உடையனாய், ஞான சபை, பொன்னம்பலம் ஆகிய இரண்டின்கண் நாடோறும் நிகழும் நடனம் கண்டு பாடி மகிழ்வுட னாடி அழகிய தொகுதி கொண்ட உலகத்து உயிர் வகைகட் கெல்லாம் இன்பம் தரும் செயல்களையே செய்தல் வேண்டும் என்பது எனது விருப்பம், காண். எ.று.

நிலை யில்லாத கொள்கைகளை விடுத்து யாவர்க்கும் என்றும் நலம் தரும் கொள்கைகளை மேற்கொண்டு நல்லோர் தம்மிற் கூடியிருந்து தொண்டு புரியும் நற்சபை, "சற்சபை" யாகும்; அப்பெருமை மிக்க சபை யினரோடு கூடித் தூய அன்பும் அறிவும் ஒழுக்கமும் மெய்ம்மை யுலகியல் வாழ்வும் உடையராய், தாம் வாழ்வதோடு பிறரையும் வாழச் செய்வது சற்சபையாளர்க்குச் சால்பாகும்; அது பற்றி, "தனித்த பேரன்பும் மெய் யறிவும் நற்சபைக்குரிய ஒழுக்கமும் அழியா நல்ல மெய்வாழ்க்கையும் பெற்று" என வுரைக்கின்றார். சிற்சபை நடனம் - ஞான நடனம்; பொற் சபை நடனம் உடம்பொடு கூடிய உயிர் உலகில் வாழ்க்கை நடத்துதற் கேதுவாகும் ஊன நடனம். ஞான நடனம் அறிவுக்கும், ஊன நடனம் செயற்கும் உரியவை. அறிவும் செயலும் மிக்கும் குறைந்தும் ஒத்தும் இயலும் உயிர் வாழ்வுக் கமைந்த சுத்த மாயா காரியமாதலின், இரண்டையும் பாராட்டிப் போற்றல் இன்றியமையாமை குறித்து, "சிற் சபை நடமும் பொற்சபை நடமும் தினந்தொறும் பாடி நின்றாடி" என்று கூறுகின்றார். தென்சபை, எதுகை பற்றித் "தெற் சபை" என வந்தது. தென் சபை - அழகிய தொகுதி. உயிர்த் தொகை, "நற் சபை" எனவும், அவ்வுயிர்த் தொகை சிவனுறையும் இயற் கோயிலாதலால் அவற்றிற்கு இன்பம் செய்வது இறைவற்குப் புரியும் சிவப் பணியாதலால், "உலகத்து உயிர்க்கெலாம் இன்பம் செய்வது என் இச்சை" என இயம்புகின்றார்.

இதனால், உயிர்த்தொகைகட்கு இன்பம் செய்யும் இச்சையை எடுத்தோதியவாறும். (16)

3402. உருமலி உலகில் உன்னோநான் கலந்தே
ஊழிதோ றூழியும் பிரியா
தொருமையுற் றழியாப் பெருமைபெற் றடியேன்
உன்னையே பாடி நின்றுடி
இருநிலத் தோங்கிக் களிக்கவும் பிறருக்
கிடுக்கணுற் றுல்அவை தவிர்த்தே
திருமணிப் பொதுவில் அன்புடை யவராச்
செய்யவும் இச்சைகாண் எந்தாய்.

உரை : உருவும் அருவுமாகிய பொருள்கள் நிறைந்த வுலகில் சிவபரம்பொருளாகிய உன்னோடு கூடிக் கலந்து ஊழூழிக் காலம் மாறினும் உன்னிற் பிரியாமல் ஒருமை நிலையுற்று என்றும் கெடாத பெருமையுற்று உன்னையே பாடியும் பரவச முற்றுத் திருமன்பு நின்று ஆடியும் பெரிய இந்த நிலவுலகத்தில் உயர்வு பெற்று மகிழவும், பிறர்க்குத் துன்ப முண்டாயின் அதனைப் போக்கி அவர்களோத் திருவுடைய மணி யிழைத்த பொன்னம்பலத்தின்பால் அன்புடையவராகச் செய்யவும் என் மனம் ஆசை கொள்கின்றது. எ.று.

நிலமும் நீரும் தீயும் காற்றும் போன்ற உருவப் பொருள்களும் வானம் போன்ற அருவப் பொருள்களும் நிறைந்தது உலகமாகலின், "உருமலியுலகு" என எடுத்து மொழிகின்றார். நமது உடம்பு உருவப் பொருளாகவும் உயிர் அருவப் பொருளாகவும் இருப்பதொன்றே இதற்குப் போதிய சான்றாகும். உருவில் அருவம் கலந்து ஒன்றி யிருப்பது போல உன்னுருவில் நான் கலந்து கொள்ள வேண்டு மென்பாராய், "உன்னை நான் கலந்து" எனவும், உருவுடைய வுடம்பினின்றும் அருவமாகிய உயிர் பிரிவது போலின்றி உன்னிற் பிரியா திருக்க வேண்டும் என்பது தோன்ற, "ஊழி தோறூழியும் பிரியாது ஒருமையுற்று" எனவும், உடலுயிர்க் கலப்பின்கண் சிறுமை பெருமைகள் உளவாதல் போலின்றி, என்றும் பொன்றுத பெருமையே உண்டாதல் வேண்டும் எனற்கு, "அழியாப் பெருமை பெற்று" என்றும் இயம்புகின்றார். பெருமைக்கு இன்றியமையாத செயல் ஒன்று வேண்டுமாகையால் அச் செயல் இதுவெனக் கூறுபவர், "அடியேன் உன்னையே பாடி நின்றுடி இருநிலத் தோங்கிக் களிக்கவும்" என வுரைக்கின்றார். புணர்தலும் பிரிதலும் உலகிற் பொருளியலாதலால், "ஊழி தோறூழியும் பிரியாது" என்றும், பண்பும் செயலும் பொருந்தா விடத்துப் பொருளின் ஒருமைத் தன்மை கெடுமாகலின், அக்குறைபாடு உண்டாகாமை வேண்டி, "ஒருமையுற்று" என்றும், பண்பினும் செயலிடத்துத் தோன்றும் சீரழிவு கலந்த கலப்பின் பெருமையைச் சிதைப்பது இயல்பாதல் கண்டு, "அழியாப் பெருமை பெற்" றென்றும் பேசுகின்றார். மூவகைப் பிறவித் துன்பத்தையும் நல்கி வாழ்வாரை வீழ்த்துவது பற்றி, "இரு நிலத்து ஓங்கிக் களிக்கவும்" என இசைக்கின்றார். உலகில் தன்னெப்பப் பிறந்து வாழ்பவர் இனிது வாழ்ந்தாலன்றித் தனக்கு வாழ்வில்லை என்று உணர்ந்தாலன்றி ஒருவர்க்கு

உலக வாழ்வு உயர்வும் உறுதியும் பயவாதாகலின், "பிறருக்கு இடுக்கண் உற்றுல் அவை தவிர்த்து" எனவும், திருச்சிற்றம்பலத்தின்பால் அன்புண் டாயின் இந்நலங்கள் கைவரும் என்பது பற்றி, "திருமணிப் பொதுவில் அன்புடையவராகச் செய்யவும் இச்சை காண்" எனவும் விண்ணப்பிக் கின்றார்.

இதனால் ஒருமை வாழ்வு வேண்டினமை தெரிவித்தவாறும். (17)

3403. எவ்வுயிர்த் திரளும் என்னுயிர் எனவே
எண்ணிநல் இன்புறச் செயவும்
அவ்வுயிர் களுக்கு வரும்இடை யூற்றை
அகற்றியே அச்சநீக் கிடவும்
செவ்வையுற் றுனது திருப்பதம் பாடிச்
சிவசிவ என்றுகூத் தாடி
ஒவ்வுறு களிப்பால் அழிவுரு திங்கே
ஓங்கவும் இச்சைகாண் எந்தாய்.

உரை : எந்தையாகிய சிவனே, உயிர் வகைகள் யாவையும் எனது உயிர் போலக் கருதி, அவை யனைத்தும் நல்ல இன்பம் பெறச் செய்யவும், அவற்றிற்கு வருகின்ற துன்பங்கள் யாவற்றையும் நீக்கி அவற்றை யச்சக் கும் அச்சத்தைப் போக்கவும், மனத்தின்கண் செம்மை யறம் பூண்டு உன்னுடைய திருவடிகளே வாயாரப் பாடிச் சிவசிவ என ஓதி இன்பக் கூத்தாடி, உள்ளத்திற் பொருந்துகிற மகிழ்ச்சியினால் அறிவு கெடாமல் இவ்வுலகில் உயர்வு பெறவும் விரும்புகின்றேன், காண். எ.று.

ஊர்வன பறப்பன முதலாக வுள்ள உயிர் வகைகள், எழுவகை யுற்று எண்ணிறந்தனவாய் விரிந்துளவாகலின், "எவ்வுயிர்த் திரளும்" எனத் தொகுத்துரைக்கின்றார். உயிர் என்னும் பொருட் டன்மையால் தானும் அவற்றுள் ஒன்றுதல் பற்றி, "என்னுயிர் எனவே எண்ணி" எனவும், இன்ப மொன்றே உயிர்களால் வேண்டப் படுவதாகலின், "நல்லின்புறச் செயவும்" எனவும் இயம்புகின்றார். நெடிது நுகரு மளவிற்றாயது "நல்லின்ப" மெனப்படுகிறது. "எல்லா வுயிர்க்கும் இன்ப மென்பது தான் அமர்ந்து வரூஉ மேவற்றாகும்" என்பது தொல்காப்பியம். வேண்டப்படும் இன்பம் தன்னால் இயல்வதும் பிற வுயிர்களால் இயல்வதுமென இரு வகைத்தாயினும், பிறவற்றால் உளதாவது பெரிதாதல் நோக்கி, "இன்புறச் செயவும்" என்றும், தன்னுயிர் ஒப்ப வெண்ணினாலன்றி இன் புறுவித்தல் இயலாமை பற்றி, "என்னுயி ரெனவே எண்ணி" எனவும், இன்பத்தை யாக்குவதும், அதற்குத் தடையாயதை நீக்குவதும் இன்பமா தலால், "அவ்வுயிர்களுக்கு வரும் இடையூற்றை அகற்றியே அச்சம் நீக்கிட" எனவும் உரைக்கின்றார். இடையூற்றை நீக்குவதுடன், அது மேலும் வருமோ என நிகழும் அச்சமும் இன்பத்துக்குத் தடையாதலால், "அச்சம் நீக்கிட" என மிகைபட விளம்புகின்றார். மனம் செவ்வை யுடை யார்க்கன்றி இறைவன் திருவடி ஞானம் உண்டாகாதாகலின். "செவ்வை யுற்றுனது திருப்பதம் பாடி" என்றும், சிவ சிவ எனச் சிந்தித்து வாயால் ஓதலுறும் உள்ளத்தில் பிறக்கும் இன்ப வொளி யசைவு ஞானத் திருக் கூத்தாதலால் "சிவசிவ என்று கூத்தாடி" என்றும், திருக்கூத்திடைப்

பிறக்கும் செந்தேன் மயக்கின் கண் நான் நுகர்கின்றேனெனத் தன் முனைப்புத் தோன்றிக் கெடாமை வேண்டுகின்றாராகலின், "ஒவ்வுறு களிப்பால் அழிவுறாது இங்கே ஒங்கவும் இச்சை காண்" என்றும் எடுத்து மொழிகின்றார். ஓதும் உள்ளத்துள் ஒங்கும் இன்ப வொளியைப் பெரியோர் "கனி பவளத்தினன் காரிருள் நீங்கி, ஒளி பவளத் தென்னே டீசன் நின்றானே" (திருமந். 2695) என வுரைப்பது காண்க.

இதனால் உயிர்கட்கு இன்பம் செய்யும் விழைவு விளம்பியவாறும். (18)

3404. உலகறி வெனக்கிங் குற்றநாள் தொடங்கி
உன்அறி வடையும்நாள் வரையில்
இலகிஎன் னோடு பழகியும் எனைத்தான்
எண்ணியும் நண்ணியும் பின்னர்
விலகிய மாந்தர் அனைவரும் இங்கே
மெய்யுறக் கூடிநின் றுனையே
அலகில்பேர் அன்பில் போற்றிவாழ்ந் திடவும்
அடியனேற் கிச்சைகாண் எந்தாய்.

உரை : எந்தையாகிய சிவனே, உடல் கருவி கரணம் உலகுகளால் பெறும் அறிவு எனக்கு உண்டான நாள் முதல் உனது திருவருளுண்மையுணர்வு எய்தும் நாள் வரையில் என்னொடு கூடிப் பயின்றும் என்னை நினைந்தும் என்னை அடைந்தும் பின்பு என்னினின்று பிரிந்தும் நிலவும் மாந்தர் அனைவரும் இவ்வுலகில் மெய்யாற் கூடி நின்று உன்னை அளவின்றிப் பெருகும் அன்புடன் போற்றி வாழ்த்தியின்புற வேண்டுமென்பது அடியனுகிய என்னுடைய விருப்பம், காண். எ.று.

உலகறிவு, உடலிடத்துக் கண் முதலிய கருவிகளாலும், மன முதலிய கரணங்களாலும், உலகியற் காட்சிகளாலும் உளதாகும் அறிவு. பிறந்து மொழி பயிலும் காலத்தே இவ்வறிவு எய்தத் தொடங்குதலின், "உலகறிவு எனக்கு இங்கு உற்ற நாள் தொடங்கி" என வுரைக்கின்றார். "தொடங்கி" என்பதனால் அறிவுக்கு வளர்ச்சியுண்மை காட்டியவாறும். கணந்தோறும் மாறி மாறி இயலுவது உலகியலாதலால் அம்மாற்றத்துக் கொப்ப மாறியியலுவது அறிவு வளர்ச்சியென அறிக. இறைவன், உயிர், உலகு என்ற மூன்றன் உண்மையுணர்தலும், இவை தம்முட் கொண்டிருக்கும் தொடர்பையும், அத்தொடர்பால் உளவாகும் காரண காரியங்களை யுணர்தலும், அந்நெறியிற் செய்வன தவிர்வன தெளிதலும் ஆகிய இவற்றின் திரண்ட அறிவை, இறையறிவு என்பாராய், "உன்னறிவு" எனவும், உலகியலறிவு பழுத்த பொழுது அஃது உண்டாவது உணர்த்த "உன்னறிவு அடையு நாள் வரை" எனவும் இயம்புகின்றார். தன்னொடு தோன்றி வளர்ந்தமை விளங்க, "இலகி" என்றும், சேர்ந்தும் நட்புற்றும் பிரிந்தும் மாறுபட்டும் மக்கள் இருப்பதனால், "என்னொடு பழகியும் எனைத்தான் எண்ணியும் நண்ணியும் பின்னர் விலகிய மாந்தர் அனைவரும்" என்று கூறுகின்றார். "பின்னர் விலகிய" என்றது முன்னர்ச் சேர்ந்தும் கூடியும் இருந்தமை நினைவு படுத்தற்கு. மெய்யுறக் கூடலாவது உடம்

பாலும் உள்ளத்தாலும் ஒன்றுதல். அஃது உண்மையாற் பெருமையுறும் அன்பால் எய்துதலால், "அலகில் பேரன்பிற் போற்றி வாழ்த்திட" என வற்புறுத்துகின்றார்.

இதனால், மாந்தர் அனைவரும் அன்பாற் போற்றி வாழ்த்தி யின்புறல் விழைந்தவாறும். (19)

3405. திருவளர் திருச்சிற் றம்பலம் ஓங்கும்
சிதம்பரம் எனும்பெருங் கோயில்
உருவளர் மறையும் ஆகமக் கலையும்
உரைத்தவா றியல்பெறப் புதுக்கி
மருவளர் மலரின் விளக்கிகின் மேனி
வண்ணங்கண் டுளங்களித் திடவும்
கருவளர் உலகில் திருவிழாக் காட்சி
காணவும் இச்சைகாண் எந்தாய்.

உரை : எந்தையே, சிவஞானம் நிலவுகின்ற திருச்சிற்றம்பலத்தின் கண் சிறப்புறும் சிதம்பரம் எனப்படும் பெரிய திருக்கோயில் இருக்குக் களால் மிகுகின்ற வேதமும் ஆகமக் கலை நலமும் உரைக்கும் நெறியில் திருத்தமுறப் புதுக்கி, மணமிக்க தாமரை மலர் போல அமைத்து அதன் கண் சிவபிரானுடைய திருமேனியை எழுந்தருள்வித்து அழகமையப் பூஜைந்து கண்டு மகிழவும், இயற்கைப் பொருள் நிறைந்த இவ்வுல கின்கண் திருவிழா வெடுத்துக் கண்டு இன்புறவும் என் உள்ளம் விரும்பு கின்றது, காண். எ.று.

திருச்சிற்றம்பலத்துக்குத் திருவாவது சிவஞானமாதலின், "திருவளர் திருச்சிற்றம்பலம்" எனக் கூறுகின்றார். "செல்வம் உயர்கின்ற செல்வர் வாழ் தில்லைச் சிற்றம்பலம்" (ஞானசம்) என்று பராவுவது பற்றி இவ்வாறு கூறப்படுகிறது எனினும் அமையும். திருச்சிற்றம்பலத்தை ஊர்ப் பெயராக வும், சிதம்பரத்தைத் திருக்கோயிலின் பெயராகவும் வள்ளலார் கருதுகின் றாகலின், "திருச்சிற்றம்பலம் ஓங்கும் சிதம்பரம் எனும் பெருங் கோயில்" எனத் தெரிவிக்கின்றார். வேத மந்திரங்கட்கு உருக் கொடுப்பவை இருக்குக்களாதலின், "உருவளர் மறை" என வுரைக்கின்றார். தமிழ்நாட்டில் திருக்கோயில்களின் அமைப்பையும் அவற்றுள் நடை பெறற்குரிய செயல் முறைகளையும் உரைப்பன ஆகமங்கள்; அவற்றுள் சிவாகமம் காமி முதல் வாதுளமீறாக இருபத்தெட்டென்பர்; அவைகளில் ஒன்றான மகுடாகம நெறியில் இயன்றது தில்லைப் பெருங் கோயில். கல்வி கேள்வி யோடமையாது செயற்பாட்டினைப் பெரிதும் வற்புறுத்துவதால் "ஆகமக் கலை" எனக் குறிக்கின்றார். ஆகமக் கலை யுரைத்த நெறியிற் பிறழ்ந்து பொய்யும் வழுவும் புகுந்து பழுதுற்றமை காண்கின்றமையின், "உரைத்தவாறு இயல் பெறப் புதுக்கி" எனவும், எட்டிதழ்த் தாமரை மலர் வடிவில் திருக்கோயில் அமைதலை விழைகின்றாராகலின், "மருவளர் மலரின் விளக்கி" எனவும் விளம்புகின்றார். கூத்தப் பிரானது சகளத் திருமேனியை நினைப்பது பற்றி, "நின் மேனி வண்ணங் கண்டு களித்திட"

என்றும், பலரும் தத்தம் இல்லிருந்து திருவீதி விழாக் காட்சி பெற்று இன்புறும் திறம் விளங்கத் "திருவிழாக் காட்சி காணவும் இச்சை காண்" என்றும் உரைக்கின்றார். பல்வகை யுருவும் நிறமும் பான்மையு முடைய இயற்பொருள் பல்கியது உலகமாகலின், "கருவளர் உலகு" எனப் புகழ் கின்றார். கருவளர் உலகு என்பதற்குப் பல்வகைப் பிறவிகட் கிடமாகி வுலகென வுரைத்து, அப் பிறவிப் பேறுகளைத் தவிர்க்கும் சால்புடையது திருவிழா என்ற கருத்துப் புலப்பட, இவ்வாறு கூறுகின்றார் என்றலு மொன்று.

இதனால், சிதம்பரம் புதுக்கித் திருமேனி கண்டு திருவிழா வெடுக்கும் ஆர்வம் தெரிவித்தவாரும். (20)

3406. தங்கமே அனையார் கூடிய ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும் சங்கம்
சார்திருக் கோயில்கண் டிடவும்
துங்கமே பெறுஞ்சற் சங்கம்நீ டூழி
துலங்கவும் சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி
ஆடவும் இச்சைகாண் எந்தாய்.

உரை : புடமிட்ட தங்கத்தை யொத்த சான்றோர் கூடுகின்ற சமரச ஞான சுத்த சன்மார்க்கச் சங்கம் நிறுவி மகிழ்தற்கும் அச்சம் இருந்து செயல் புரிதற்கெனக் கோயில் அமைக்கவும், உயர்வு பெறும் அச் சற்சங்கம் நீடுழி காலம் பணி புரிந்து விளக்குதற்கும், அதன்கண் அடியவனுகிய யான் உடம்பகம் குளிர நின் திருமுன் நின்று இன்பக் கூத்தாடற்கும் விரும்புகின்றேன், காண். எ.று.

உலகியல் துன்பத் தீயால் சுடப்பட்டு அறிவும் மனமும் ஒழுக்கமும் தூயராகிய சான்றோர்களை ஈண்டுத் "தங்கமே யனையார்" எனச் சிறப்பிக் கின்றார். அப்பெருமக்கள் கூடும் சங்கம், அறிஞர் இகழ்தற்குரிய பேதம் காணுத ஞான நிலையமாதலால், "சமரச ஞான சங்கம்" என்றும், அச் சங்கம் காட்டும் நெறிகளும் முறைகளும் தூய மெய்ம்மை யமைந்தவையா தலால், "சுத்த சன்மார்க்கச் சங்கம் கண்டு களிக்கவும்" என்றும் இயம்பு கின்றார். சித் முத்திரை, சின் முத்திரை யென வருதல் போலச் சத்மார்க்கம், சன்மார்க்கம் என வந்தது. சத்து - மெய்ம்மை; மார்க்கம் - நெறி. ஆகவே, மெய்ந் நெறி சன்மார்க்கம் எனப்படுவது காண்க; சேக்கிழார் பெருமான், "இலகு மெய்ந்நெறி சிவ நெறியது" (ஞானசம்) என்பது காணலாம். சன்மார்க்க ஞான நெறிக்குத் தூய்மை பேத நினைவு இல்லாமை. "தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார், எம்மை யுடைமை எமை இகழார் — தம்மை, உணரார் உடற்கியைந்து தம்மிற் புணரார்" என மெய்கண்ட தேவர் விளங்க வுரைப்பது காண்க. இக் கருத்தையே பிறிதோரிடத்தே வள்ளற் பெருமான், "எத்துணையும் பேதமுரு தெவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி யுள்ளே, எத்துரிமை யுடையவராய் உவக்கின்றார் யாவர் அவருளந்தான் சுத்த சித்துருவாய்

எம்பெருமான் நடம் புரியும் இடமென நான் தெரிந்தேன் அந்த வித்தகர் தம் அடிக்கேவல் புரிந்திட வென் சித்தமிக விழைந்தாலோ" (5297) என அறிவுறுத்துகின்றார். சுத்த சமரச சன்மார்க்க ஞானிகளாலும் அவரது கூட்டம் காண்டலும் அரிய தொன்றுகலின், "சமரச சுத்த சன்மார்க்க சங்கம் கண்டு களிக்க" என விழைகின்றார். சங்கம் - கூட்டம். அச்சங்கம் உயிரினங்களின் இன்ப வாழ்வுக்கு உறுதி நல்கும் உயர்வுடையாதல் கண்டு, அது நிகழும் இடம் தலையாய நிலையமாதலின், அதனை யமைத்தலை, "சங்கம்சார் திருக் கோயில் கண்டிட" விரும்புகின்றார். கோயில் - தலையாய இடம். மன்னுயிர்கட்கு நன்மை பயக்குமாற்றல் உயர்வு மிகும் அச்சங்கம் பொருள் வளம் பெற்று நெடுங்காலம நின்று நிலவுவது உள்ளூர்ப் பழமரம் தண்ணிய நிழலும் நறுமண மலரும் இன் சுவைக் கனியும் தாங்கி நிற்றல் போல்வது பற்றி, "துங்கமே பெறும் சற் சங்கம் நீடூழி துலங்க" வேண்டுகின்றார். அப்பெருமக்கட் கடியனுய்ச் சமரச ஞான சுத்த சன்மார்க்கத் தொண்டனுதல் வேண்டு மென்னும் விருப்புப் புலப்படத் தம்மை "அடியேன்" என்றும், அவ்விடத்துச் சுரக்கும் இன்பத்தில் மூழ்கிப் பாடி யாடிப் பரவசமாகும் விழைவை நயந்து, "அங்கமே குளிர நின்றனைப் பாடி யாடவும் இச்சை காண்" என்றும் எடுத்துரைக்கின்றார். சற்சங்கத்தில் பாடி மகிழ்தற்குறும் பொருள் இது வென்றற்கு "நின்றனை" எனக் குறிக்கின்றார்.

இதனுல், சமரச ஞான சுத்த சன்மார்க்கத்தின் இன்றியமையாமையும் செய்யத்தக்க பணியும் இவை யென விளங்கக் கூறியவாறும். (21)

3407. கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த
கடுந்துயர் அச்சமா திகளைத்
தருணநின் அருளால் தவிர்த்தவர்க் கின்பம்
தரவும்வன் புலைகொலை இரண்டும்
ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க
உளற்றவும் அம்பலந் தனிலே
மருவிய புகழை வழுத்தவும் நின்னை
வாழ்த்தவும் இச்சைகாண் எந்தாய்.

உரை : சிவபெருமானுகிய எந்தையே, அருளே யுருவாய்ப் பிறர்க்கு எய்திய மிக்க துன்பங்கள் அச்சங்கள் முதலியவற்றைத் தக்க போதுதவும் நின்னுடைய திருவருளைத் துணைக் கொண்டு நீக்கி அவர் கட்கு இன்பம் செய்யவும், பொல்லாத புலாலுண்டல் உயிர்களைக் கொல்லுதல் ஆகிய இரண்டையும் போக்கிய நன்னெறியும் உலகனைத்தும் ஒழுகப் பண்ணவும், பொன்னம்பலத்திற் பொருந்திய நினது திருப்புகழை எடுத்தோதவும் எனக்கு விழைவு மிக்குளது, காண். எ.று.

தாம் அருளுள்ள முடையராஞலன்றிப் பிறர்பால் அருள் கூரவும் அவர்க் குற்ற இடுக்கண்களைப் போக்கவும் உள்ளம் எழாதாகலின், "கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த கடுந்துய ரச்சமாதிகளைத் தவிர்த்து" என்றும், "அவர்க்கு இன்பம் தர" என்றும் உரைக்கின்றார். "துன்பமும் துயரும் அடுத்து வந்து தாக்கும் இயல்பினவாதலின்,

"அடுத்த கருந்துயர் அச்சமாதிகள்" எனக் கூறுகின்றார். கடுமை - மிகுதிப் பொருட்டு. ஆதிகள் - முதலியவைகள். வேண்டுவார் வேண்டும் போது வேண்டியாங் குதவுவது திருவருளின் சிறப்பாதலின், "தருண நின்னருளால்" என விதந்து மொழிகின்றார். துன்பம் அச்ச முதலியவற்றின் காரணங்களைத் தடுத்துப் போக்குவதொருபாலாக இன்பம் செய்வது வேறுதலால், "தவிர்த்து அவர்க்கு இன்பம் தரவும்" என மொழிகின்றார். புலை - ஈண்டுப் புலாலுணவின் மேற்று. வன்மைப் பண்பை மிகுவிக்கும் இயல்புடைமையால் "வன்புலை" எனக் கூறுகின்றார். உணற் பொருட்டு நிகழும் கொலையாதல் விளங்கப் "புலை கொலை இரண்டும்" என இணைத்து மொழிகின்றார். ஒருவுதல் - நீக்குதல். ஊனுண்ணு வியல்பு உலக மக்கள் எல்லார்பாலும் காணப்படுவ தின்மையால், "உலகெலாம் நடக்க" என்றும், அந்த அருளறம் பரவி நிலை பெறற்கு நன்மக்களின் முயற்சி இறப்பவும் பெரிதாதல் வேண்டுமாறு புலப்பட, "உளற்றவும்" என்றும் இசைக்கின்றார். பிறர் துன்பம் துடைத்தலும், புலை கொலை தவிர்த் தலும் மெய்ப் பணியாக, மனத்தாலும் வாயாலும் செயற்குரிய பணியாதல் விளங்க, "அம்பலம் தனிலே மருவிய புகழை வழுத்தவும், நின்னை வாழ்த்தவும் இச்சை காண்" என விண்ணப்பிக்கின்றார்.

இதனுற் புலை கொலை தவிர்க்கும் அருளற வேட்கை தெரிவித்த வாறும். (22)

3408. மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும்நான் சகித்திட மாட்டேன்
எண்ணுறும் எனக்கே நின்னருள் வலத்தால்
இசைத்தபோ திசைத்தபோ தெல்லாம்
நண்ணும்அவ் வருத்தம் தவிர்க்கும்நல் வரந்தான்
நல்குதல் எனக்கிச்சை எந்தாய்.

உரை : சிவபெருமானுகிய எந்தையே, இம்மண்ணுலகில் உயிர் வகைகள் படுகின்ற துன்பங்களைச் சிறிதளவேனும் கண்ணுற் காதிற் பிறர் சொல்லக் கேட்பினும் கணப் பொழுதும் நான் பொறுக்க மாட்டாதவனு வேன்; இதனை நினைந்து உழலுகின்ற எனக்கு நினது திருவருள் வலிமை யால், யாரும் சொன்ன, சொன்ன போதெல்லாம் சொல்வோர் வருத்தங் களை யுடனே நீக்கத்தக்க வரம் ஒன்றை நின்பாற் பெறல் வேண்டும் என்பது எனக்கு விருப்பமாகும். எ.று.

மண்ணுலக்கள் நிறைந்தமை பற்றி நிலவுலகை "மண்ணுலகம்" எனக் கூறுகின்றார். நிலத்தில் மண்ணுடைப் பகுதியே மக்களினம் தொடக்கத்தில் தோன்றி நல்வாழ்க்கையில் தோன்றிய பகுதி யெனத் தொன்மை யாராய்ச்சியாளர் சொல்லுதலால், "மண்ணுலகதிலே" என எடுத்து மொழிகின்றார். மண்ணக வாழ்வு இன்பமும் விரவிய தெனினும் துன்பம் பெரிதாதல் பற்றி, "உயிர்கள் வருந்தும் வருத்தம்" என்று எடுத்தோதி, இன்பமும் இடும்பையும் தம்முள் பெருத்தும் சிறுத்தும் தோன்றுவவாயினும், சிறு துன்பம் சிறு தீப் போலச் சுட்டு வருத்துதலிற்

சிறுமை யுறுதலின்மையின், "ஒருசிறிது எனினும்" எனவும், உயிர்கள் எய்தும் இன்ப துன்பக் காட்சிகள் கண்ணினும் செவியினும் நுண்ணிதின் உணரப்படும் தன்மையவாதலால், "கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும் கணமும் நான் சகித்திட மாட்டேன்" எனவும் இயம்புகின்றார். காண்பதிலும் கேட்பதில் கற்பனை புகுந்து விடுதலால் கேட்டலைப் பிற் கூறுகின்றார். துன்பங்களைக் காண்டலும் கேட்டலும் யாவர்க்கும் வருத்தம் தருவது பொதுவியல்பாயினும் எனக்குச் சிறப்பாக மிக்க மன நெகிழ்ச்சி தந்து என்னை மெலிவிக்கும் என்பாராய், "கணமும் நான் சகித்திட மாட்டேன்" என வுரைக்கின்றார். சிறு துன்பம் காணினும் பெரிதாகக் கருதியவலமுறும் இயல்பினன் என்று தெரிவிப்பாராய், "எண்ணுறும் எனக்கு" என இயம்புகின்றார். ஆகவே, பிறர் எய்தும துன்பத்தைக் கேட்ட மாத்திரையே நீக்கக் கூடிய அருள் வலிமையை அருளுக என வேண்டுவாராய், "நின்னருள் வலத்தால் இசைத்தபோது இசைத்தபோதெல்லாம் நண்ணும் அவ்வருத்தம் தவிர்க்கும் நல்வரம் தான் நல்குதல் எனக்கு இச்சை காண்" என மொழிகின்றார்.

இதனால், பிறர் துன்பத்தைக் கேட்ட மாத்திரையே போக்க வல்ல வரம் பெற விழைந்தவாறும். (23)

3409. இவையலால் பிறிதோர் விடயத்தில் இச்சை
எனக்கிலை இவைஎலாம் என்னுள்
சிவையொடும் அமர்ந்த பெருந்தயா நிதிநின்
திருவுளத் தறிந்தது தானே
தவம்இலேன் எனினும் இச்சையின் படிநீ
தருதலே வேண்டும்இவ் விச்சை
நவைஇலா இச்சை எனஅறி விக்க
அறிந்தனன் நவின்றனன் எந்தாய்.

உரை : சிவபிரானுகிய எந்தையே, இதுகாறும் கூறிய இவ்விடயங்களிலன்றி வேறு விடயங்களில் எனக்கு விருப்பமில்லை; என் மனத்தின் கண் உமாதேவியொடும் கூடியிருந்தருளும் அருட் பெருஞ் செல்வனுகிய நின்னுடைய திருவுள்ளம் இவை யனைத்தையும் இனிதறிந்ததாகும்; எண்ணியபடி எய்தும் தவமுடையேன் அல்லனுயினும் என் எண்ணப்படி அருள் செய்ய வேண்டுகிறேன்; யான் கொண்ட இவ்விழைவுகள் யாவும் குற்றமில்லாதவை என்று திருவருள் அறிவிக்க அறிந்துள்ளேன்; அதனல் அவற்றை எடுத்து மொழிந்தேன்; ஏற்றருள்க. எ.று.

விரிந்தது தொகுத்தல் என்ற முறை பற்றி "இவை" எனத் தொகுத்துச் சுட்டுகின்றார். இவற்றின் இனமாய் வேறுபட்டவற்றுள் எந்த வகை விழைவும் கொண்டிலேன் என்பாராய், "பிறிதோர் விடயத்தில் இச்சை எனக்கு இலை" எனக் கூறுகிறார். "ஓர் விடயத்திலும்" எனற்குரிய சிறப்பும்மை தொக்கது. இச்சை - விழைவு. சிவை - உமாதேவி; சிவன் என்னும் ஆண்பாற் பெயர்க்குரிய பெண்பால் சிவை என்பதென வுணர்க. அருட் சத்தியிற் பிரிவின்றி இயைந்திருப்பது சிவமாதலின், "சிவையொடும் அமர்ந்த பெருந் தயாநிதி" எனப் பராவிக் கூறுகின்றார். தயாநிதி - அருட்செல்வன்; அருளே திருவுருவாய் அமர்ந்த

பெருமானுதலால் "பெருந் தயாநிதி" எனக் குறிக்கின்றார். தமது "அறிவினுள் அருளால்" மன்னுதலே யுணர்ந்திருப்பது விளங்க, "என்னுள் அமர்ந்த பெருந் தயாநிதி" எனவும், அருளால் எழுந்தருளுதல் புலப்பட, "அமர்ந்த" எனவும் இயம்புகின்றார். அத்துச் சாரியை வேண்டாவிடத்து வந்ததாம். இறைவன் கரண வறிவின னல்லனுதலால், எண்ணிய எண்ணியாங்கு எய்துதல் தவமுடையார்க்கே அமைவதாகலின், "தவமிலேன் எனினும்" எனவும், எனது இச்சை தானும், நீ விழைவிக்க வுளதாகலின், அருளுதல் கடன் என்பாராய், "இச்சையின்படி நீ தருதலே வேண்டும்" எனவும், என்னுடைய விழைவுகள் வரன் முறையில் பிழையில்லன என்றற்கு, "இவ்விச்சை நவையிலா இச்சை" எனவும், நவை யின்மையும் திருவருள் ஞானத்தால் அறிந்துரைக்கின்றேன் என்பார், "அறிவிக்க அறிந்தனன் நவின்றனன் எந்தாய்" எனவும் இயம்புகின்றார்.

இதனுல் விரிந்தது தொகுத்து நலம் உரைத்தவாரும். (24)

13. பிள்ளைப் பெரு விண்ணப்பம்

அஃதாவது, வடலூர் வள்ளற் பெருமானுடைய பிள்ளைமை யுள்ளத்துக் கள்ளமில்லாத எண்ணங்களையும் இன்ப துன்ப வுணர்வுகளையும் அச்ச அவல நினைவுகளையும் பிற தொடர்புடைய வுணர்ச்சிகளையும் பெருகிய அளவில் எடுத்தோதி மனம் தூயராக விண்ணப்பிப்பதாகும். மடிக்கனம் எறிந்து வழிக்கனம் குறைப்பாரைப் போல மனத் துணர்ச்சி களையுமிழ்ந்து ஞான வாழ்வை எளிதாக்குவது பயன் என உணர்க.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3410. தனிப்பெருஞ் சோதித் தலைவனே எனது
தந்தையே திருச்சிற்றம் பலத்தே
கனிப்பெருங் கருணைக் கடவுளே அடியேன்
கருதிநின் றுரைக்கும்விண் ணப்பம்
இனிப்புறும் நினது திருவுளத் தடைத்தே
எனக்கருள் புரிகநீ விரைந்தே
இனிச்சிறு பொழுதும் தரித்திடேன் உன்றன்
இணைமலர்ப் பொன்னடி ஆணை.

உரை : ஒப்பற்ற பெரிய சோதியாகிய தலைவனே, எனக்குத் தந்தையே, திருச்சிற்றம்பலத்தே எழுந்தருளுகின்ற கனிவுடைய பெரிய கருணை யுருவாகிய கடவுளே, அடியவனுகிய யான் எண்ணி யுரைக்கும் விண்ணப்பத்தை இனிமை மிகும் நின்னுடைய திருவுளத்தின்கண் ஏற்றுக் கொண்டு எனக்குத் திருவருள் விரைந்து செய்தல் வேண்டும்; இனி யான் சிறிது போதும் துயர் பொறுக்க மாட்டேன்; இது நின்னுடைய இரண்டாகிய மலர் போன்ற பொன்னுர் திருவடி ஆணை. எ.று.

தோற்றமும் கேடும் இல்லாமை அருட் சோதி யாண்டவற்கு இயல்பாதலால், "தனிப் பெருஞ் சோதித் தலைவனே" எனக் கூறுகின்றார். "துஞ்சு நாள் துறந்து தோற்றமு மில்லாச் சுடர்விடு சோதியெம் பெருமான்" (பாம்பு) என ஞானசம்பந்தர் நவில்வது காண்க. தனிமை, தோற்றக் கேடின்மையால், ஒப்பற்ற தனித்தன்மை. சோதி யென்பதே அவர்க்குப் பெயராதலால், "சோதி" யென்றும், சுடர் விடுதலும் எங்கும் எப்பொருளிலும் குறைவற நிறைந்து உளனுதலும் அவற்குப் பெருமை யாதல் விளங்க, "பெருஞ் சோதி" என்றும் இயம்புகின்றார். "சுடர் விட்டுளன் எங்கள் சோதி" என்பது திருப்பாசுரம். அறிவின் கண்ணும் செயலின் கண்ணும் தலைமையுற்று இயங்கும் தலைவர்கட்கு மேலாய்த் தலைமையுற்று அவர்களை இயக்கும் தலைவனுதல் பற்றித் "தலைவனே" எனக் கூறுகின்றார். சோதியாகிய தலைவனைத் "சோதித் தலைவனே" என் கின்றார் சோதியையுடைய தலைவனே என்பதும் ஒன்று. அகள நிலையில் ஞான வின்பவொளியாய் இலகும் பரசிவம், சகள நிலையில் அருளே

திருமேனியாகக் கொண்டு கண்ணுதற் கடவுளாய்த் திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளும் திறம் பற்றி, "திருச்சிற்றம்பலத்தே கனிப் பெருங் கருணைக் கடவுளே" என்று கூறுகின்றார். அளி பெருகி விளங்குதல் தோன்ற, "கனிப் பெருங் கருணை" என்கின்றார். கனிதல் - அளி மிகுதல். கனிந்த பழம் - அளிந்த பழம் எனப்படுவது வழக்கு. கூத்தப் பிரானாய்ச் சகள வுருக் கொண் டானாயினும் உண்மையகள நிலையில் அளப்பரும் தன்மையன் என்றற்குக் "கடவுள்" எனவும், சகளவுருவு திருவருள் தர வந்த தென்றற்குப் "பெருங் கருணைக் கடவுள்" எனவும் குறித் தருளுகின்றார். பெருங் கருணை - சிவ சத்தியாகிய திருவருள். திருவடியை மனத்திற் கொண்டுடையவன் யான் என்பாராய், "அடியனேன்" என அறிவிக்கின்றார். அம்மனத்தின்கண் எண்ணி யுரைக்கும் விண்ணப்பம் என்றற்கு, "கருதி நின்று உரைக்கும் விண்ணப்பம்" என மொழிகின்றார். இனிமைப் பண்பே யுருவாய திருவுள்ளமாதலின், இறைவன் திருவுளத்தை "இனிப்புறும் நினது திருவுளம்" எனவும், உயர் சொல் மரபு பற்றி, "திருவுளத் தடைத்" தெனவும் வேண்டுவது ஏற்றுச் செய்தருள்க என்பாராய், "எனக்கு விரைந்து அருள் புரிக" எனவும் இசைக்கின்றார். தாமதித்தல் கூடாது, துயர் பொறேன்; இஃது உண்மை என்பது புலப்பட, "இனிச் சிறு பொழுதும் தரித்திடேன் உன்றன் இணைமலர்ப் பொன்னடி ஆணை" எனக் கூறுகின்றார்.

இதனுல் விண்ணப்பம் கேட்டருள்க என வேண்டியவாறும். (1)

3411. திரிபிலாப் பொருளே திருச்சிற்றம் பலத்தே
திகழ்கின்ற தெய்வமே அன்பர்
பரிவுறுந் தோறும் விரைந்துவந் தருளும்
பண்பனே பரையிடப் பாகா
பெரியபொற் சபையில் நடம்புரி கின்ற
பேரருட் சோதியே எனக்கே
உரியநல் தந்தை வள்ளலே அடியேன்
உரைக்கின்றேன் கேட்டருள் இதுவே.

உரை : விகாரமில்லாத பரம்பொருளே, தில்லைச் சிற்றம்பலத் தின்கண் எழுந்தருளி விளங்குகின்ற கூத்தனுகிய தெய்வமே, அன்பரா யினர் வருத்தமுறுந் தோறும் விரைந்து போந்தருளி நலம் செய்யும் பண்புடையவனே, உமாதேவியை இடப்பாகத்தே யுடையவனே, பெருமையையுடைய பொன்னம்பலத்தின்கண் ஞான நடனம் செய்கின்ற பெரிய அருட் சோதி யாண்டவனே, என்னுடைய உரிமைத் தந்தையே, வள்ளன்மையுடையவனே, உன் திருவடியை நெஞ்சில் உடைய யான் எண்ணுவதை யுரைக்கப் புகுகின்றேன்; இதனைக் கேட்டருள்க எ.று.

திரிபு - விகாரம். பரம்பொருள் நிருவிகாரம் என ஆகமங்கள் ஓதுதலின், "திரிபிலாப் பொருளே" எனக் கூறுகின்றார். சகள வுரு தெய்வ வடிவமாதலின் திருச்சிற்றம்பலத்திற் காட்சி தந்தருளும் கூத்தப் பெருமானை, "திருச்சிற்றம்பலத்தே திகழ்கின்ற தெய்வமே" என்று போற்றுகின்றார். தன்பால் அன்பு கொண்டவரது அன்பே வேண்டிய

வேண்டியாங் கெய்துவித்து வளர்த்தல் சிவபிரானுக்கு இயல்பாதலால், "அன்பர் பரிவுறுந் தோறும் விரைந்து வந்தருளும் பண்பனே" எனப் புகல்கின்றார். பரிவு - வருத்தம். அருளுதல் - வருத்தத்தைப் போக்குதல். பண்பு - பொருள் தோன்றுங்கால் உடன் தோன்றி அஃது அழியுங்காறும் உடன் நிற்பது என்பது தருக்க நூன் முடிபு; அன்பர்க் கருள்வது பண்பாதலால் "விரைந்து வந்தருளும் பண்பனே" என விளம்புகின்றார். பரன் என்ற ஆண்பாற்குப் பெண்பாற் சொல் பரை என்பது. மேன்மை பொருந்திய உமாதேவியைப் "பரை" எனப் பகர்கின்றார். சிவ மூர்த்தம் உமையம்மையை இடப்பாகத்தே யுடையதாதலால், "பரையிடப் பாகா" என்று கூறுகின்றார். பொற் சபை - பொன்னம்பலம். அதனிற் பெரிய சபை உலகில் வேறின்மையின், பெரிய சபை - பெருமையை யுடைய சபை எனப் பொருள் படுவதாயிற்று. திருவருட் சிவஞானத்தை ஒள்ளிய பேரொளியாய் வழங்குவது பற்றி, "நடம் புரிகின்ற பேரருட் சோதியே" என்று பேசுகின்றார். அருளொளி பரப்பும் சோதி, "அருட் சோதி" எனப்படுவதாயிற்று. ஞான நிலையில் அருட் சோதியாகும் பரசிவம் கிரியை நிலையில் பெருங்கருணை யுருக் கோடலால், "அருட்பெருஞ் சோதி தனிப் பெருங் கருணை" என்பது நாளும் ஓதத் தகும் நன்மந்திரமாகிறது. ஞான மருளும் உரிமை தந்தைக்காதல் பற்றி, "எனக்கே யுரிய தந்தையே" என வுரைக்கின்றார். பின்னர் உரைக்கலுறும் விண்ணப்பத்துக்குத் தோற்றுவாய் செய்வது விளங்க, "உரைக்கின்றேன்" கேட்டருள் இதுவே" என மொழிகின்றார்.

இதனால், தாம் செய்து கொள்ளும் விண்ணப்பத்துக்குத் தோற்றுவாய் செய்தவாறும். (2)

3412. தானலா திறையும் உயிர்க்கசை வில்லாத்
தலைவனே திருச்சிற்றம் பலத்தே
வானலால் வேரொன் றிலைஎன உரைப்ப
வயங்கிய மெய்யின்ப வாழ்வே
ஊனலால் உயிரும் உளமும்உள் உணர்வும்
உவப்புற இனிக்குந்தெள் ளமுதே
ஞானநா டகஞ்செய் தந்தையே அடியேன்
நவில்கின்றேன் கேட்டருள் இதுவே.

உரை : தன்னையல்லது வேறு எதனாலும் உயிர்கட்கு அசைவு உளதாக்காத தலைவனே, திருச்சிற்றம்பலத்தின்கண் சிதாகாசமன்றி வேறே யாதும் இல்லை என அறிந்தோர் எடுத்துரைக்க விளங்குகின்ற மெய்ம்மை யின்பமே நுகர்தற்கு அமைந்த வாழ்வானவனே, உடம்பேயன்றி உயிரும், உள்ளமும், உள்ளத்துள்ளுறும் உணர்வும் மகிழ்வுற இன்புறுத்தும் தெளிந்த அமுதாகியவனே, ஞான நாடகத்தைப் புரிந்தருளும் தந்தையே, அடியனாகிய யான் சொல்கின்ற இதனைக் கேட்டருள்க. எ.று.

"தானலாது உலகமில்லை" (ஐயா) எனச் சான்றோர் உரைத்த அருள் மொழியை விளக்கும் கருத்தினால், "தானலாது இறையும் உயிர்க்கு அசைவில்லாத் தலைவனே" என வுரைக்கின்றார். "அவனன்றி ஓர்

அணுவும் அசையாது" என்ற தொன்மொழியில் அணுவென்றது உயிர் எனப் புலப்படுத்துகின்றுராகலின், "உயிர்க்கு அசைவிலாத் தலைவனே" என வுரைக்கின்றுர். இறையும் - சிறிதும். உயிர்களின் அசைவு அசை வின்மைகட்குத் தலைமையியக்குநன் என்பார், "அசைவில்லாத் தலைவனே" எனத் தெரிவிக்கின்றுர். உலகமில்லை யென்ற மெய்ம் மொழிக்கும் கருத்து இதுவே என்பதாம். சிவ ஞானிகள் தில்லைச் சிற்றம்பலத்தின்கண் கண்டின்புறுவது சிவானந்தப் பெருவெளியாகிய சிவம் நிலவும் ஞானவாகாசம் எனப் பெரியோர் கூறுவது பற்றி, "திருச் சிற்றம்பலத்தே வானலால் வேருென்றில்லை என உரைப்ப வழங்கிய வாழ்வே" என இயம்புகின்றுர். தில்லையம்பலம் பரசிவத்தின் அகளத் திருமேனி என்ற மகுடாகமக் கருத்தைக் கொண்டு வான் என்றது சிதாகாச மாயிற்று. "சிதாகாசம் சிற்சபாப்ரபாவம்" என மகுடாகமம் கூறுகிற தென்பர். தில்லைக் கூத்தப் பிரானது அகளத்து ஆனந்தத் திருமேனி சகளத்தில் உமை கண்டு இன்புற விளங்கும் ஞானப் பேரின்ப நிலையமாதல் தோன்ற, ''வயங்கிய மெய்யின்ப வாழ்வே" என விளம்பு கின்றுர். "அகளத்தில் ஆனந்தத் தானந்தியாயே, சகளத்தில் தையலுடன் தோன்றி - நிகளத்தைப் போக்குவதும் செய்தான்" (திருக்களிற்) எனத் திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனுர் உரைப்பது காண்க. இன்பமில்லது வாழ்வாகாதலால், ஞானானந்த வாழ்வு மெய்யின்ப வாழ்வு எனக் காட்டப்படுகிறது. வாழ்வு தருவது வாழ் வெனப்படுகிறது. ஊனுடம்பின் உள்ளே யுயிரும், உயிர்க்கும் உள்ளமும் உள்ளத்தின் னுள்ளீடு உணர்வாகவும் நினைக்கப்படுதலின், "ஊனலால் உயிரும் உளமும் உள்ளுணர்வும்" எனக் காட்டி அதனுட் சிவ சிந்தனை நல்கும் சிவஞானத் தேனை, ''உவப்புற இனிக்கும் தெள்ளமுதே" என வுரைக்கின் றுர். உயிர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வ வாழ்வு பெற வுதவுவது ஞான நாடகமும், நன்ஞானப் பேறின்றிப் பேதை வாழ்வு வாழ்ந்து மேன் மேலும் பிறப் பிறப்புக்களைப் பெற்றுழலச் செய்வது ஊன நாடகமு மாதலால், ''ஞான நாடகம் செய் தந்தையே" என்றும், தமது விண்ணப்பத்துக்கு முன்னுரையாக, ''அடியேன் நவில்கின்றேன் கேட்டருள் இதுவே" என்றும் இயம்புகின்றுர்.

இதுவும் முன்னுரை கூறிற்றும். (3)

3413. என்னுயிர்க் குயிராம் தெய்வமே என்னை
எழுமையும் காத்தருள் இறைவா
என்னுளத் தினிக்கும் தீஞ்சுவைக் கனியே
எனக்கறி வுணர்த்திய குருவே
என்னுடை அன்பே திருச்சிற்றம் பலத்தே
எனக்கருள் புரிந்தமெய் இன்பே
என்னை ஈன் றெடுத்த தந்தையே அடியேன்
இசைக்கின்றேன் கேட்கஇம் மொழியே.

உரை : எனக்கு உயிர்க் குயிராகிய தெய்வமானவனே, எழு பிறப்பும் என்னை ஆண்டருள்கின்ற இறைவனே, என் மனத்துக்கு இன்பம் தருவதாகிய இனிய சுவையுடைய கனி போல்பவனே, எனக்கு

நல்லுணர்வை அறிவுறுத்தும் ஆசிரியனே, என் அன்புக்குப் பொருளான வனே, திருச்சிற்றம்பலத்தின்கண் எழுந்தருளி எனக்கு மெய்யின்பம் அருள் புரிந்த பெருமானே, என்னைப் பெற்றெடுத்த தந்தை போல்பவனே, அடியவனுகிய யான் எடுத்துரைக்கும் இவ்விண்ணப்பத்தைக் கேட்டருள்க. எ.று.

உயிர்க்குயிராகும் தன்மை யுடைமை பற்றிச் சிவனை "உயிர்க்குயிராம் தெய்வமே" எனச் சிறப்பிக்கின்றார். பிறப்பு வகை ஏழாதலால் "எழுமை" என்றும், பிறப்பு வகை யனைத்தையும் தோற்றுவித்தாளும் இறைவனு தலால், "எழுமையும் காத்தருள் இறைவா" என்றும் இயம்புகின்றார். எண்ணுவார் எண்ணுந் தோறும் இனிமைச் சுவை நல்குதலின், "என்னுளத் தினிக்கும் தீஞ்சுவைக் கனியே" எனவும், ஆன்ம வறிவினுள் அருளுடன் எழுந்தருளி அறிவு தந்து ஊக்குதலால் "எனக்கறிவு உணர்த்திய குருவே" எனவும், ஞான வொளி தருதலின், "என்னுடை அன்பே" எனவும் கூறுகின்றார். தில்லைச் சிற்றம்பலத்தின்கண் சிவ தரிசனம் தந்து சிந்தைக்குத் தெளிவு நல்குதலால், "திருச்சிற்றம்பலத்தே எனக்கருள் புரிந்த மெய்யின்பே" என்றும், தாம் மண்ணிற் பிறத்தற்குக் காரணமாயினமை விளங்க, "என்னை யீன்றெடுத்த தந்தையே" என்றும் உரைக்கின்றார்.

இதுவும் செய்யும் விண்ணப்பத்துக்கு முகமன் மொழிந்தவாறு. (4)

3414. கருணையார் அமுதே என்னுயிர்க் குயிரே
கனிந்தசிற் றம்பலக் கனியே
வருணமா மறையின் மெய்ப்பொருள் ஆகி
வயங்கிய வள்ளலே அன்பர்
தெருள்நிறை உளத்தே திகழ்தனித் தலைமைத்
தெய்வமே திருவருட் சிவமே
தருணம்என் ஒருமைத் தந்தையே தாயே
தரித்தருள் திருச்செவிக் கிதுவே.

உரை : திருவருளுருவாகிய அருமையான அமுதாகிய பெருமானே, எனது உயிர்க்கு உயிராய் இலங்குபவனே, முதிர்ந்த திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளும் செங்கனி போல்பவனே, நால்வகைப்பட்ட வேதங்களின் மெய்ம்மைப் பொருளாய் விளங்குகின்ற அருள் வள்ளலே, அன்பர்களின் தெளிவார்ந்த வுள்ளத்தில் தோன்றியருளும் ஒப்பற்ற தலைமைத் தெய்வமே, திருவருளோடு கூடிய சிவ பரம்பொருளே, காலமறிந் துதவும் ஒருமைத் தந்தையே, நின் செவியின்கண் எனது இவ் விண்ணப்பத்தை ஏற்றருள்க. எ.று.

கருணை யுருவாயினும் அருமை புலப்பட, "ஆரமுதே" எனக் கூறு கின்றார். அவர்க்கஃது இயல்பாதலால் "உயிர்க்குயி" ரென்கின்றார். சிற்றம்பலத்தின்கண் செம்மை நிறத் திருமேனியுடன் காண்பார்க்கு இன்பம் தருதலால், "கனிந்த சிற்றம்பலக் கனியே" என இயம்புகின்றார். வருணம் - வகை; இருக்கு முதலாக நால்வகைப்படுதலின், "வருண

மாமறை" என்கின்ருர். மெய்ப் பொருள் - உண்மைப் பொருள். திருவருட் செல்வனுதல் பற்றி, "வள்ளல்" என ஓதுகின்ருர். தெருள் - ஞானத் தெளிவு. தெளிந்த ஞானிகளின் திருவுள்ளம் தெய்வக் கோயிலெனப்படு தலால், "தெருணிறை யுளத்தே திகழ்தனித் தலைமைத் தெய்வமே" என்றும், அத்தெய்வம் இஃதெனக் காட்டற்குத் "திருவருட் சிவமே" என்றும் இசைக்கின்ருர். தருணம் - ஈண்டுக் காலத்தின் மேற்று. ஒருமைத் தந்தை - ஒரு தந்தை; இரண்டாகிய வினையை இருமை வினை என்பது போல.

இதுவும் முகமன் கூறியதாம். (5)

3415. என்னை ஆண் டருளி என்பிழை பொறுத்த
இறைவனே திருச்சிற்றம் பலத்தே
என்னை ஆண் டஞ்சேல் உனக்குநல் அருளிங்
கீகுதும் என்றஎன் குருவே
என்னைவே றெண்ணு துள்ளதே உணர்த்தி
எனக்குளே விளங்குபேர் ஒளியே
என்னைஈன் றளித்த தந்தையே விரைந்திங்
கேற்றருள் திருச்செவிக் கிதுவே.

உரை : என்னுடைய குற்றங்களைப் பொறுத்து என்னையும் ஆட்கொண்ட இறைவனே, தில்லைச் சிற்றம்பலத்தின்கண் எனக்கு அறிவு தந்து அஞ்சுதல் ஒழிக; உனக்கு வேண்டிய அருள் ஞானத்தை இங்கே நல்குவேம் என அறிவுறுத்தருளிய எனது ஞான குருவே; என்னை வேருக நினையாமல் உண்மையை யுணர்த்தி என்னுடைய உள்ளத்தில் நின்று திகழும் அறவொளி யானவனே; என்னைப் பெற்றளித்த ஞானத் தந்தையே; இப்பொழுது என்னுடைய இவ்விண்ணப்பத்தை ஏற்றருள்க. எ.று.

இளமைப் பருவத்துப் பொறி வழிச் சென்று பயின்றது பற்றி, "பிழை பொறுத்து" எனவும், பின்பு அறிவது அறியத் தொடங்கிய செயலை, "ஆண்டருளி" எனவும் இயம்புகின்ருர். இருபோதினும் உடனிருந்தமை புலப்பட, "இறைவனே" என இயம்புகின்ருர். தில்லையம்பலத் திருக்கூத் தின்கண் ஒரு கை அச்சம் தவிர்க்க என்றும், ஒரு கை திருவடியைக் காட்டித் திருவடி ஞானம் பெறுக என்றும் குறிப்பது கொண்டு, "என்னை ஆண்டு அஞ்சேல் உனக்கு நல்லருள் இங்கு ஈகுதும் என்ற என் குருவே" என இசைக்கின்ருர். ஞானப் பேற்றுக்கு ஆகாதவ னெனக் கருதாமல் மனத்தின்கண் சிவஞானம் விளங்கச் செய்தமைக்கு வியந்து, "என்னை வேறு எண்ணுது உள்ளத்தே யுணர்த்தி எனக்குள் விளங்கு பேரொளியே" எனவும், சகத்திற் பிறப்பித்து அறிவின்பம் பெறுவிப்பது பற்றி, "என்னை யீன்றளித்த தந்தையே" எனவும் தெரிவிக்கின்ருர்.

இதனலும் விண்ணப்பத்துக்கு முகமன் மொழிந்தவாரும். (6)

3416. இரும்புநேர் மனத்தேன் பிழையெலாம் பொறுத்தென்
இதயத்தில் எழுந்திருந் தருளி
விரும்புமெய்ப் பொருளாம் தன்னியல் எனக்கு
விளங்கிட விளக்கியுட் கலந்தே
கரும்புமுக் கனிபால் அமுதொடு செழுந்தேன்
கலந்தென இனிக்கின்றேர்ய் பொதுவில்
அரும்பெருஞ் சோதி அப்பனே உளத்தே
அடைத்தருள் என்மொழி இதுவே.

உரை : இரும்பு போன்ற மனமுடையேனுகவும் என் குற்றங்களைப் பொறுத்தருளி என் மனத்தின்கண் எழுந்தருளி யிருந்து அறிவு விரும்பும் மெய்ம்மைப் பொருளாகிய சிவ பரத்துவத்தை நன்கு விளங்குமாறு என்னுட் கலந்து காட்டிக் கரும்பின் சாறும், முக்கனிப் பிழிவும் ஆன் பாலாகிய அமுதொடு தேன் பெய்து கலந்தாற் போல இனிக்கின்ற பெருமானே, அம்பலத்தில் ஆடுகின்ற அரிய பெரிய சோதி யுருவாகிய அப்பனே, என் விண்ணப்பத்தைத் திருவுளத்தில் ஏற்றருள்க. எ.று.

எளிதில் உருகாமை பற்றி, "இரும்புநேர் மனத்தேன்" என்றும், அதனல் உளதாய பிழை பொறுத்தமை யுணர்ந்து "பிழை யெலாம் பொறுத்து" என்றும், மன வுணர்வில் விளங்குதலால் "இதயத்தில் எழுந் திருந்தருளி" என்றும், இருந்த பரம்பொருள் செய்தது கூறுவாராய், "விரும்பு மெய்ப்பொருளாம் தன்னியல் எனக்கு விளங்கிட விளக்கி" என்றும் இயம்புகின்ருர். சிவ பரத்துவத்தை விரும்புவது உண்மை யறிவாதலால் "விரும்பு மெய்ப்பொருள்" என விசேடிக்கின்ருர். தன்னியல் - பரமாம் தன்மை. பரத்துவத்தை விளக்கிய பெருமான் பரத்துவ ஞானனுபவத்தை உணர்விற் கலந்திருந்து நுகர்வித்தமையை, "கரும்பு முக்கனி பால் அமுதொடு செழுந்தேன் கலந்தென இனிக் கின்றேர்ய்" என இசைக்கின்ருர். பொது - திருச்சிற்றம்பலம். அரும் பெருஞ் சோதிக்கண் அருமை, எய்துதற் கருமை; பெருமை - அளப்பருந் தன்மை.

இதனலும் விண்ணப்பத்துக்கு முகமன் மொழிந்தவாரும். (7)

3417. மலத்திலே கிடந்தேன் தனேயெடுத் தருளி
மன்னிய வடிவளித் தறிஞர்
குலத்திலே பயிலுந் தரமுமிங் கெனக்குக்
கொடுத்துளே விளக்குசற் குருவே
பலத்திலே சிற்றம் பலத்திலே பொன்னம்
பலத்திலே அன்பர்தம் அறிவாம்
தலத்திலே ஓங்கும் தலேவனே எனது
தந்தையே கேட்கஎன் மொழியே.

உரை : கேவலத்தில் மலத்திற் கிடந்த என்னே எடுத்து சகலத்தில் மக்களினத்திற் புகுத்தி அறிவுடையோர் கூட்டத்தில் பயிலுகின்ற தகுதி யும் அளித்து என் சிந்தைக்குள்ளே இருந்தருளும் சற்குருவே, ஞான

வன்மையில் தங்கி, சிற்றம்பலத்திலும் பொன்னம்பலத்திலும் மெய்யன்பரது அறிவாகிய கோயிலிலும் வீற்றிருந்தருளும் தலைவனே, எனக்குத் தந்தையாகிய பெருமானே, என் விண்ணப்பத்தைக் கேட்டருள்க. எ.று.

தொடக்கத்தில் ஆன்மாக்கள் அனாதி சம்பந்தமான ஆணவ மலவிருளில் அழுந்திக் கிடப்பது பற்றி, "மலத்திலே கிடந்தேன்" என வுரைக்கின்றார். இதனைச் சிவாகம சித்தாந்தம், "கேவல நிலை" என வுரைக்கின்றன. இந் நிலையில் பக்குவமுற்ற ஆன்மாக்களை இறைவன் உலகில் உடல் கொடுத்துப் பிறப்பிப்பன்; அந்த நிலை சகச நிலை யெனப் படும். இதனுட் புல் பூடு முதல் தேவர் ஈறாக வுள்ள அனைத்தும் அடங்கும்; இதனை "மன்னிய வடிவளித்து" எனக் கூறுகின்றார். வடிவுகள் எண்ணிறந்தனவாகலின், "மன்னிய வடிவு" என்கின்றார். மன் - பெருமை. அறிஞர் குலம் - மக்களினத்து நன்மக்கள் கூட்டம். நற்சார்பில் தோன்றுதல் தவத்தால் விளைவதாகலின், "அறிஞர் குலத்திலே பயிலும் தரம் கொடுத்து" என்று கூறுகின்றார். அறிஞர் குலம் திருவருள் ஞான முற்றுச் சிவ சிந்தனையில் தோய்ந்திருக்கும் சிறப்புடையதாகலின், "உளே விளங்கு சற்குருவே" என வுரைக்கின்றார். பலம் - ஞான வன்மை. சிற்றம்பலம் - "சிதம்பரம்" என்று வழங்குகிறது. சிதம்பரம் சித்து அம்பரம் எனப் பிரிந்து, ஞாகாசம், ஞான சபை என்றெல்லாம் பொருள் கொள்ளப்படுகிறது. பொன் வேய்ந்த சபை - பொன்னம்பலம். அன்பர் அறிவாம் தலம் என்பது ஞான சபையுமாகும்.

இதுவும் விண்ணப்பத்துக்கு முகமனுரையாகும். (8)

3418. விண்டபோ தகரும் அறிவரும் பொருளே
மெய்யனே ஐயனே உலகில்
தொண்டனேன் தன்னை அடுத்தவர் நேயர்
சூழ்ந்தவர் உறவினர் தாயர்
கொண்டுடன் பிறந்தோர் அயலவர் எனும்இக்
குறிப்பினர் முகங்களில் இளைப்பைக்
கண்டபோ தெல்லாம் மயங்கிஎன் னுள்ளம்
கலங்கிய கலக்கம்நீ அறிவாய்.

உரை : நுண்பொருள்களை விளக்க வல்ல ஆசிரியர்களாலும் அறிந்துரைக்க அரிதாகிய நுண்பொருளாகியவனே, மெய்ம்மையும் தலைமையும் உடையவனே, இவ்வுலகில் நினக்குத் தொண்டனாகிய என்னைச் சார்ந்தவர்களும், நண்பர்களும், சூழ்ந்திருப்பவரும், உறவினரும், தாயரும், உடன் பிறந்தோரும், அயலிருப்பவரும் என இங்கே தொடர்புக் குறிப்புடையவர் முகங்களில் சோர்வுக் குறிகளைக் காணும் போதெல்லாம் அறிவு மயங்கி நான் மனம் கலங்கிய கலக்கத்தை நீ அறிவா யன்றே. எ.று.

விள்ளல் - உரைத்தல்; பலரும் இனிதின் உணர்ந்துரைக்க மாட்டாத நுண்மைப் பொருள்களைத் திண்ணிதின் உணர்ந்து தெளிவுற எடுத்துரைக்கும் ஞானவான்களை "விண்ட போதகர்" என வுரைக்கின்றார். யாவரும்

பயில நிலவும் பசுபாச அறிவுகட்கு எட்டாமை பற்றி, "அறிவரும் பொருளே" எனவும், கருவி கரணக் காட்சிகட்கு எய்தாவிடினும் உண்மை யுணர்வுக்குக் காட்சிப் படுதல் விளங்க, "மெய்யனே" எனவும், எல்லாப் பொருள்கட்கும் தலைமை நலம் உடைமையின், "ஐயனே" எனவும் புகழ்கின்றார். தொண்டன் - சரியை முதலிய தொண்டுகளைச் செய்பவன். அடுத்தவர் - யாதானுமொரு காரணம் பற்றிச் சார்பவர். சூழ்ந்தவர் - சூழ விருப்பவர். ஈன்ற தாய் முதல் தாயர் பலராதலின், தாயர் எனப் பன்மையிற் கூறுகின்றார். உடன் பிறந்தோரை வடமொழியிற் "சகோதரர்" என்பர். அயலவர் - அயல் வீடுகளில் உறைபவர். உடலுறு நோயும் மனநோயும் முகத்திற் சோர்வைப் புலப்படுத்துவன வாதலால், "முகங்களில் இளைப்பைக் கண்டபோது" என இயம்புகின்றார். எளிதில் உருகும் மனத்தினராதல் விளங்க, "கலங்கிய கலக்கம் நீ யறிவாய்" எனத் தெரிவிக்கின்றார். மனம் கலங்கும்போது உள்ளுறும் அறிவும் ஒளி குன்றி மயங்குதல் பற்றி, "மயங்கி யுள்ளம் கலங்கிய கலக்கம்" எனக் குறிக்கின்றார். நெஞ்சின் கண்ணது உள்ளம் என்றும், உள்ளத்தில் உள்ளது ஆன்ம அறிவு என்றும் தமிழ்ச் சான்றோர் கூறுவர். அவர் நெறியில் வந்தவர் நம் வடலூர் வள்ளல் என்பது உணர்க.

இதனால், அடுத்தவர் நேயர் முதலியோர்க் குளதாகும் இளைப்புக் கண்ட போதெய்திய கலக்கத்தைத் தெரிவித்தவாறும். (9)

3419. சீர்த்தசிற் சபைஎன் அப்பனே எனது
தெய்வமே என்பெருஞ் சிறப்பே
ஆர்த்தஇவ் வுலகில் அம்மையர் தூணவர்
அடுத்தவர் உறவினர் நேயர்
வேர்த்தமற் றயலார் பசியிஞல் பிணியால்
மெய்யுளம் வெதும்பிய வெதுப்பைப்
பார்த்தபோ தெல்லாம் பயந்தென துள்ளம்
பதைத்ததுன் உளம்அறி யாதோ.

உரை : சிறப்பு மிக்க ஞான சபையில் எழுந்தருளும் என் தந்தையே, எனக்குத் தெய்வமே, யான் பெற விரும்பும் சிறப்புக்குப் பொருளாகியவனே, பாசத்தாற் பிணிக்கப்பட்ட இவ்வுலகில் தாயரும், தூணவரும், என்னை யடைந்தவரும், உறவினரும், வணங்கும் தெய்வங்களும், வெறுத்து நோக்கும் அயலவரும் பசி நோயாலும் வேறு பிணிகளாலும் மேனியும் மனமும் வெய்துற்று வருந்திய வருத்தத்தைக் கண்ட போதெல்லாம் என் நெஞ்சம் அஞ்சிப் பதைத்த திறத்தை உன் திருவுள்ளம் நன்கு அறியுமே. எ.று.

உலகியல் மக்கள் கூடும் சபை, வேந்தர் கூடும் சபை ஆகிய சபைகள் பலவற்றினும் சிவஞானத்தாற் சிறந்தமை பற்றி, சிவபிரானது திருவருள் ஞான சபைக்குத் தலைவனுதலின், "சீர்த்த சிற்சபை யென் அப்பனே" என்கின்றார். சபைத் தலைவற்கும் தமக்குமுள்ள தொடர்புணர்த்தற்கு, "என் அப்பனே" எனக் குறிக்கின்றார். தாம் வழிபடும் தெய்வமும் அத்தலைவனே என்பார், "எனது தெய்வமே" என்றும், தாம் பிறந்து வளர்ந்து

அறிவறிந்து பெறும் சிறப்புக்கள் பலவற்றிற்கும் பொருளாவது அப் பெருமானது திருவருளாதலால், "என் பெருஞ் சிறப்பே" என்றும் இயம்பு கின்றார். துன்பங்கள் பல தொடர்ந்து தாக்கினும் நீங்காதவாறு உயிர்களைப் பிணிக்கும் பெருமை யுடைமை பற்றி, "ஆர்த்த இவ்வுலகு" எனக் கூறுகின்றார். இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின் வருபவக் கடல்" (நாவுக்) எனச் சேக்கிழாரடிகள் தெரிவிப்பது காண்க. ஆர்க்கும் திறம் இவை யெனக் காட்டற்கு "அம்மையர் துணைவர் என்பன முதல் நேயர்"களையும் சிலர் வெகுண்டு நோக்கி•வேறு படுத்தற்கும் பாசமே யடிப்படையாதலின், அவரையும் உளப்படுத்தி, "வேர்த்து மற்றயலார்" என விளம்புகின்றார். அயலார் என்பத னீற்றில் ஆக்க வினையை விரித்து அயலாராயினரென நிறுத்தி வேர்த்தென்னும் வினையெச்சத்தை முடிக்க. பசி நோயும் பிற நோய்களும் தோன்றிய போது உயிர்ப் பாசம் மீதூர்ந்து பிறவற்றை மாற்றி விடுதல் பற்றி, "பசியினல் பிணியால் மெய்யுளம் வெதும்பிய வெதுப்பை" என எடுத்து மொழிகின்றார். பசியால் மெய்யும், பிணியால் உளமும் நோயுற்று வருந்துமென அறிக. அவ்வருத்தத்தைக் கண்டு தமது மனம் பொருது வருந்திய இயல்பை, என்னுள் இருந்து நோக்கும் நீ நன்கு அறிவாய் எனத் தெரிவிக்கின்றாராகலின், "எனதுள்ளம் பதைத்தது உன்னுளம் அறியாதோ" என உரைக்கின்றார். தன்னெத்த உயிர் வருந்தக் கண்டதும் தான் வருந்துவது உயிர்க் கமையும் திருந்திய பண்பாயினும் அதன் நிகழ்ச்சி நீ யறிந்த தன்றே என்பாராய், "என் உள்ளம் பயந்து பதைத்தது உன்னுளம் அறியாதோ" என மொழிகின்றார்.

இதனல், பிறர் உறும் பசிப் பிணியாகிய வருத்தம் கண்டு அஞ்சிப் பதைத்தமை விண்ணப்பித்தவாறும். (10)

3420. பரைத்தனி வெளியில் நடம்புரிந் தருளும்
பரமனே அரும்பெரும் பொருளே
தரைத்தலத் தியன்ற வாழ்க்கையில் வறுமைச்
சங்கடப் பாவியால் வருந்தி
நரைத்தவர் இளைஞர் முதலினோர் எனையோர்
நண்பன்என் றவரவர் குறைகள்
உரைத்தபோ தெல்லாம் நடுங்கிஎன் னுள்ளம்
உடைந்ததுன் உளம்அறி யாதோ.

உரை : திருவருள் வெளியில் திருக்கூத்தாடும் பரம்பொருளே• எய்துதற்கரிய பெரிய பொருளே, நிலவுலகில் நடைபெறுகின்ற மக்கள் வாழ்வில் வறுமையாகிய தீங்கு புரியும் பாவியினல் துன்புற்று முதியவரும் இளையவருமாகிய பிறரும் என்னை நண்பனென்று கருதித் தத்தமக்குள்ள குறைகளை எடுத்துச் சொல்லக் கேட்டபோதெல்லாம் என் மனநிலை கலங்கி யுருகியது தேவரீர் அறிந்த தன்றே. எ.று.

சுத்த மாயா மண்டலத்துப் பரமாகிய சிவவெளிக்குக் கீழாய் கிரியா வடிவில் நிலவும் சத்தி வெளி. பரையாகிய திருவருள் வெளியாகும், உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத தொழிற் சத்தியைத் தூண்டி

வாழ்விப்பது பற்றி, "பரைத் தனிவெளியில் நடம் புரிந்தருளும் பரமனே" என்று போற்றுகின்றார். பரை - சிவசத்தி; இதனைத் திருவருட் சத்தி என்பது வழக்கம். ஞானம் இச்சை என்பவற்றின் கலப்பின்றித் தூய கிரியை வடிவாய் நிலவுதல் பற்றி, அருள் வெளி, "பரைத் தனிவெளி" எனப்படுகிறது. பரை வெளியில் திருக்கூத் தியற்றினும் அதன் மேலதாகிய சிவவெளியில் ஞானமே வடிவாய் விளங்குதலால், "பரமனே" எனப் பரவுகின்றார். சுத்த மாயையின் மத்தகத்து விளங்குதலின், "அரும் பெரும் பொருளே" என வுரைக்கின்றார். தரைத் தலம் - நில வுலகம்; மக்கள் பிறந்து வாழ்ந்து பயன் நுகர்ந்து ஒடுங்கும் இடமாதலால் "தரைத் தலம்" எனக் குறிக்கின்றார். வறுமை - இன்மை. "இன்மை யென வொருபாவி" (குறள்) எனச் சான்றோர் வழங்குதலால் "வறுமைச் சங்கடப் பாவி" என மொழிகின்றார். சங்கடப் பாவி - இடுக்கண் செய்யும் பாவி. பாவத்தைச் செய்வதும் செய்விப்பதும் பற்றி, இன்மையைப் பாவி எனக் கூறுகின்றார். வறுமை மிகுதி அவலக் கவலைகளை யுறுவித்து இளமை நிரம்பு முன்பே நரை திரைகளை எய்துவித்தலின், "நரைத்தவர்" என்றும், வறுமைச் சங்கடத்துக்கு இரையாகி மெலியும் இளம் பருவத்தினரை "இளைஞர் முதலினோர்" என்றும் இயம்புகின்றார். நண்பன் - அருகடைந்து சொல்வார் சொல்வது கேட்கும் பண்புடையவன். குறை - இன்றியமையாதவை. குறை யளவு மிக்க விடத்தே நண்பர்களிடத்தே யுரைக்கப்படும்; உரைப்பது குறை நீங்குதற்கும் வருத்தம் ஆறுதற்கும் ஏதுவாதலால், "அவரவர் குறையை யுரைத்த போது" எனக் கூறுகின்றார். குறைகள் கேட்போர் உள்ளத்தின் திண்மையைக் கரைத்து உருக்குதல் விளங்க, "உரைத்த போதெல்லாம் நடுங்கி என்னுள்ளம் உடைந்தது" எனவும், உள்ளத்தின்கண் உடனிருந்தறிகின்றனைகளின், "உன் உள்ளம் அறிந்ததுவே" எனவும் எடுத்தோதுகின்றார்.

இதனால், உரைப்பார் உரைக்கும் குறை கேட்டு உள்ளம் உடைந்தது தெரிவித்தவாறும். (11)

3421. அன்னையே அப்பா திருச்சிற்றம் பலத்தென்
ஐயனே இவ்வுல கதிலே
பொன்னையே உடையார் வறியவர் மடவார்
புகலும்ஆ டவர்இவர் களுக்குள்
தன்னையே அறியாப் பிணியினல் ஆவி
தளர்கின்றார் தருணம்ஈ தெனவே
சொன்னபோ தெல்லாம் பயந்துநான் அடைந்த
சோபத்தை நீஅறி யாயோ.

உரை : உயிர்த் தொகைகட்கு அம்மையும் அப்பனுமாகிய பெருமானே, திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளும் தலைவனே, இவ்வுலகத்திற் பொன்னையே மிகுதியாக வுடையவரும், இல்லாத வறியவரும், இள மகளிர் விரும்பும் ஆடவரும் ஆகிய இவர்கள் ஒவ்வொருவரும் தன்னை யறியாமல் பிணி வாய்ப்பட்டுத் தளர்ச்சி யுறுகின்றார்கள்; அவர்கள் தமது நோயை எடுத்துச் சொல்லிய போதுகளில் அஞ்சி நான் அடைந்த மெலிவை நீ நன்கு அறிவாய். எ று.

அன்னை போல் உடல் தந்து ஓம்பியும் அப்பனைப் போல் அறிவு தந்து ஆதரித்தும் அளிப்பதனால், இறைவனை "அன்னையே" என்றும், "அப்பா" என்றும் போற்றுகின்றார். திருச்சிற்றம்பலத்தில் ஆடலரசாய் விளங்குதலால், "திருச்சிற்றம்பலத்து என் ஐயனே" எனப் பராவுகின்றார். தேவருலகும் பிறவும் கண்டறியாமையால் வாழ்வுற்றறியும் மண்ணுலகை, "இவ்வுலகதிலே" எனச் சுட்டியுரைக்கின்றார். உலக வாழ்வுக்கு உறுதி நல்குவது பொன்னகிய பொருளே எனக் கருதி ஈட்டிக் காத்தோம்புவது விளங்க, செல்வர்களைப் "பொன்னையே யுடையார்" எனப் புகல்கின்றார். அது செய்ய மாட்டாமையால் வறியராயினரை "வறியவர்" என்கின்றார். மடவார் - இளமகளிர்; காம வேட்கையே முந்துற்று நிற்கும் உள்ளமுடைய இளமை மகளிரை, "மடவார்" எனவும், அவர் விரும்புவது கண்ணும் கருத்தும் கவர்க்கும் கட்டாண்மையுடைய ஆண்மக்களை யாதலால், "மடவார் புகலும் ஆடவர்" எனவும் எடுத்தோதுகின்றார். செல்வரும் ஆடவரும் நோயின்றி இன்பமே நுகர்தற் குரியராயினும், வந்த வாயிலறியாமையால் பிணியுற்று வருந்துகின்றமை புலப்பட, "இவர்களுக்குள் தன்னையே அறியாப் பிணியினால் ஆவி தளர்கின்றார்" என இயம்புகின்றார். உடற் புறத்தே கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் வாழும் உயிருடையவும் இல்லனவுமாகிய உயிர்களாலும், உடற்குள் தெரியாமல் உளவாகும் ஊறுகளாலும், உயிர்களாலும் பிணி வகைகள் தோன்றுதல் பற்றி, "அறியாப் பிணியினால்" எனவும், ஊக்கமின்றிச் சோர்வது இறப்பினும் துன்பம் மிக வுடையதாகலின், "ஆவி தளர்கின்றார்" எனவும் உரைக்கின்றார். பிணி செய்யும் கேட்டினை அவர்கள் எடுத்துரைக்கக் கேட்குங்கால், நமக்கும் இதுதானே நிகழ என்ற உணர்வு தோன்றி உள்ளத்தில் அச்சம் எழுந்து அலைத்தலால், "தருணம் ஈதெனவே சொன்ன போதெல்லாம் பயந்து நான் அடைந்த சோபத்தை நீ அறிவாயே" என்று இசைக்கின்றார். தருணம் - நோய் வருத்தும் சமயம். சோபம் - மனத் தளர்ச்சியினால் மேனியில் விளங்கித் தோன்றும் பொற்பின்மை.

இதனால் காணுது வருத்தும் நோய்த் திறம் எடுத்தோதியவாறும். (12)

3422. உண்டதோ றெல்லாம் அமுதென இனிக்கும்
ஒருவனே சிற்சபை உடையாய்
விண்டபேர் உலகில் அம்மஇவ் வீதி
மேவும்ஓர் அகத்திலே ஒருவர்
ஒண்டுயிர் மடிந்தார் அலறுகின் றார்என்
றொருவரோ டொருவர்தாம் பேசிக்
கொண்டபோ தெல்லாம் கேட்டென துள்ளம்
குலைநடுங் கியதறிந் திலையோ.

உரை : உண்ணுந் தோறும் இனிக்கும் அமுது போல இனிமை விளைவிக்கும் ஒப்பற்ற பெருமானே, ஞான சபையை யுடையவனே, பெருமையாகப் பேசப்படும் உலகில், இத்தெருவில் உள்ள ஒரு வீட்டில் ஒருவர் உடலோடு ஒன்றிய உயிர் துறந்தார் என்று அலறியழுகின்றார்கள் எனச் சிலர் ஒருவரோ டொருவர் பேசிக்கொள்வது கேட்டு எனது உள்ளமும் உடம்பும் நடுங்கியதை நீ அறிந்துள்ளாய் அல்லவா? எ.று.

உண்டற் கினிதாகலின் அமுதம் உண்ணுந் தோறும் இனிமை தரும் இயல்புடைமை பற்றி, "உண்ட தோறெல்லாம் அமுதென இனிக்கும்" எனவும், அவ்வமுதமே போல நீணெக்குந் தோறும் இனிமை சுரப்பது பற்றி, "அமுதென இனிக்கும் ஒருவனே" எனவும், அப்பெருமான் ஞான சபைத் தலைவனுதல் பற்றி, "சிற்சபை யுடையாய்" எனவும் இயம்பு கின்றார். "நினைத்தொறும் காண்தொறும் பேசுந் தொறும் எப்போதும் அனைத்தெலும் புண்ணெக ஆனந்தத் தேன் சொரியும் குனிப் புடையான்" (கோத்தும்பி) என மணிவாசகப் பெருமான் உரைப்பது காண்க. நுகர்ந்த பின்னன்றி இனிமைச் சுவை யுணரப் படாமை பற்றி, "உண்ட தோறு" என இறந்த காலத்தால் இயம்புகின்றார். ஒருவன் என்பதும் சிவனுக்குப் பெயராதலின், "ஒருவனே" என்று கூறுகின்றார். "ஒருவன் என்னும் ஒருவன் காண்க" (அண்டப்) என்பது திருவாசகம். சிற்சபை - ஞானசபை. உலகம் பெரிதெனச் சான்றோர் கூறுதலின், "விண்ட பேருலகில்" என விளம்புகின்றார். "பெரிதே யுலகம் பேணுநர் பலரே" (புறம்) எனச் சங்கச் சான்றோர் உரைப்ப தறிக. வேறு வேறுகப் பிரித்துக் காணுதபடி ஒன்றி யிருத்தலால், "ஒன்றுயிர்" எனக் கூறுகிறார். ஒன்றுயிர், ஒண்டுயிர் என மருவிற்று. இறந்தார் செய்தியைப் பிறர் தம்மிற் பேசிக் கொண்டது தம் காதில் வீழ்ந்து வருத்திய திறத்தைக் "கேட்டு எனது உள்ளம் குலை நடுங்கியது" எனவும், அது என்னுள் இருக் கும் நீ அறிந்த தன்றே என்றற்கு "அறிந்திலையோ" எனவும் எடுத்துரைக் கின்றார். குலை, ஆகு பெயராய் உடல் மேல் நிற்கிறது.

இதனுல் நேரிற் காணு தொழியினும் இறப்புத் தமக்கு அச்சம் விளை வித்தலை யுரைத்தவாரும். (13)

3423. காவிநேர் கண்ணுள் பங்கனே தலைமைக்
கடவுளே சிற்சபை தனிலே
மேவிய ஒளியே இவ்வுல கதில்ஊர்
வீதிஆ திகளிலே மனிதர்
ஆவிபோ னதுகொண் டுறவினர் அழுத
அழுகுரல் கேட்டபோ தெல்லாம்
பாவியேன் உள்ளம் பகீர்என நடுங்கிப்
பதைத்ததுன் உளம்அறி யாதோ.

உரை : காவி மலர் போன்ற கண்களை யுடைய உமாதேவியை ஒரு கூறாக வுடையவனே, தலைமை சான்ற கடவுளே, ஞான சபையின்கண் எழுந்தருளும் ஒளியாகியவனே, இந்த நாட்டில் தெரு முதலியவற்றில் மனிதர் இறந்தது காரணமாக உறவினர் கூவியழுத அழுகுரல் கேட்ட போதெல்லாம் பாவியாகிய என் மனம் பகீரென அதிர்ந்து நடுங்கித் துடித்தது நினது திருவுள்ளம் தெரிந்த தன்றே. எ.று.

காவி - நீலோற்பலம் என்னும் பூ. மகளிர் கண்கட்கு இந் நீல மலரை உவமம் கூறுவது மரபாகலின், உமாதேவியைக் "காவி நேர் கண்ணுள்" என்று குறிக்கின்றார். தேவர்கட் கெல்லாம் மாதேவன் எனச் சிவபெரு மானைப் பெரியோர் கூறுதலால், "தலைமைக் கடவுளே" என்று போற்று

கின்ருர். "யாதோர் தேவர் எனப்படுவார்க் கெலாம் மாதேவனல்லால் தேவர் மற்றில்லையே" (ஆதிபுரா) எனத் திருநாவுக்கரசர் தெரிவிப்பது காண்க. ஒளி யுருவின னென்பது பற்றிச் சிவனைச் "சிற்சபை தனிலே மேவிய ஒளியே" எனப் புகழ்கின்ருர். "சுடர் விட்டுளன் எங்கள் சோதி" (பாசுரம்) என ஞானசம்பந்தர் கூறுவது காண்க. காடு மலை முதலிய நாடுகளையும் உலகம் என்னும் வழக்குப் பற்றி, "இவ்வுலகு" எனக் குறிக் கின்ருர். ஊர் வீதிகளிலே யன்றி வீடுகளிலும் மனிதர் இறத்தல் உண்டாதலால், "வீதி யாதிகளில்" என விளம்புகின்ருர். ஆவி - உயிர். ஒருவர் இறந்தவிடத்து உறவினர் அழுது புலம்புவது இயல்பாதல் பற்றி, "உறவினர் அழுத அழுகுரல் கேட்டு" எனவும், அது கேட்டுத் தாம் எய்திய துன்பத்தைப் "பாவியேன் உள்ளம் பகீரென நடுங்கிப் பதைத்தது" எனவும் விளம்புகின்ருர்.

இதனலும் இறப்புச் செய்தியால் உள்ளம் எய்திய துன்பநிலை கூறிய வாரும். (14)

3424. நாதனே என்னை நம்பிய மாந்தர்
ஞாலத்தில் பிணிபல அடைந்தே
ஏதநேர்ந் திடக்கண் டையகோ அடியேன்
எய்திய சோபமும் இளைப்பும்
ஓதநேர் உள்ள நடுக்கமும் திகைப்பும்
உற்றபேர் ஏக்கமா திகளும்
தீதனேன் இன்று நினைத்திட உள்ளம்
திடுக்கிடல் நீஅறிந் திலையோ.

உரை : தலைவனுகிய சிவபிரானே, இவ்வுலகில் என்னை விரும்பிய மக்கள் நோய்கள் பலவுற்றுத் துன்ப மடைவது கண்டு நினக்கு அடியவ னுகிய யான் அடைந்த வருத்தத்தையும் மேனி யிளைப்பையும் கடலலை போல் பொருந்திய மனநடுக்கத்தையும் திகைப்பையும் மிக்க பெரிய ஏக்கம் முதலியவற்றையும் கடையவனுகிய நான் இப்பொழுது நினைக்கி னும் திடுக்கிட்டு வருந்தும் திறத்தை நீ அறிவாயன்ருே. எ.று.

உலகுயிரனைத்திற்கும் தலைவனுதலால், சிவனை "நாதனே" என்று கூறுகின்ருர். நம்புதல் - விரும்புதல். விரும்புகின்றவர் இளைஞரும் முதியரு மாகப் பலராதல் தோன்ற, "மாந்தர்" எனப் பொதுப்பட மொழிகின்ருர். ஏதம் - துன்பம். அன்பு செய்து தொடர்பு கொண்டவராதலின், அவர்கட் குற்ற துன்பம் தம்மைச் சுடுவது பற்றி வருத்தமும் மெலிவும் எய்திய நிகழ்ச்சியை, "நம்பிய மாந்தர் ஏதம் நேர்ந்திடக் கண்டு அடியேன் எய்திய சோபமும் இளைப்பும்" என எடுத்துரைக்கின்ருர். ஓதம் - கடலலை. இன்பமும் துன்பமுமாகிய நினைவுகளால் எப்போதும் அலைக்கப்படுவது பற்றி, "ஓத நேர் உள்ளம்" என்று கூறுகின்ருர். சோபம் - வருத்தம். அன்பர்கள் உற்ற துன்பம் எளிதிற் போக்கக் கூடியதாயின் மனத்தின் கண் குளிர்ச்சியும், போக்க மாட்டாத வலி மிக்கதாயின் தளர்ச்சியும் தருதலின், "உள்ள நடுக்கமும் திகைப்பும் உற்ற பேர் ஏக்க மாதிகளும்" தோன்றுதல் பற்றி அவற்றை நினைந்து "இன்று நினைத்திட" எனவும்,

நினைக்கும் நெஞ்சு திடுக்கிட்டுப் பதைப்பது குறித்து, "உள்ளம் திடுக்கிடல் நீ யறிந்திலையே" எனவும் இறைவன்பால் முறையிடுகின்றார்.

இதனால், தம்மை நயந்து சூழ்ந்தவர்க் குற்ற துன்பம் பற்றித் தமது நெஞ்சு திடுக்கிட்டு வருந்திய திறத்தை விளம்பியவாறும். (15)

3425. கற்றவர் உளத்தே கரும்பினில் இனிக்கும்
கண்ணுதற் கடவுளே என்னைப்
பெற்றதாய் நேயர் உறவினர் துணைவர்
பெருகிய பழக்கமிக் குடையோர்
மற்றவர் இங்கே தனித்தனி பிரிந்து
மறைந்திட்ட தோறும்அப் பிரிவை
உற்றுநான் நினைக்குந் தோறும்உள் நடுங்கி
உடைந்தனன் உடைகின்றேன் எந்தாய்.

உரை : கற்றுணர்ந்தவர் மனத்தின்கண் கரும்பு போல் இனிமை நல்கும் சிவபெருமானே, என்னைப் பெற்றெடுத்து வளர்த்த தாயும், நண்பரும், உறவினரும், துணைவரும், மிகவும் பழகியவரும் பிறரும் இவ் வுலகில் தனித் தனியே பிரிந்து இறந்த போதெல்லாம் அவரது இறப்பை நான் உற்று நினைக்குந் தோறும் மனத் திண்மை கலங்கினேன்; இப் போதும் கலங்குகின்றேன்; இதனை நீ அறிவாயன்றே. எ.று.

"கற்றவர் உண்ணும் கனி" என்று சான்றோர் கூறுவதைத் தாமும் உணர்ந்து இன்புறுகின்றாராதலின், "கற்றவர் உளத்தே கரும்பினில் இனிக்கும் கடவுளே" எனப் பராவுகின்றார். நெற்றியிற் கண்ணுடைய பெருமானதல் பற்றிச் சிவனைக் "கண்ணுதற் கடவுள்" என்று சிறப்பிக் கின்றார். துணைவர் - ஈண்டு உடன் பிறந்தார் மேற்று. பலகாலும் கண்டு பயின்றவர்களைப் "பெருகிய பழக்க மிக்குடையோர்" என்று குறிக்கின்றார். இறப்பவர் தனித்தே உயிர் பிரிதலால் "தனித்தனிப் பிரிந்து மறைந்திட்ட தோறும்" எனக் கூறுகின்றார். இறந்தவரை எண்ணும் போது அவர் உயிரோடு இருந்தபோது செய்த நற்செயல்கள் நெஞ்சின்கண் தோன்றி இன்பம் செய்து அவர் பிரிவால் அவற்றைத் தொடர்ந்து பெற மாட்டாமைக்கு மனம் வலியிழந்து சோர்வுறுதலால் "அப் பிரிவை உற்று நான் நினைக்குந் தோறும் உள்நடுங்கி யுடைந்தனன் உடைகின்றேன்" என வுரைக்கின்றார். இந்நினைவுகளை வாய்விட் டுரைத்த போது, மனம் பற்றெழிந்து இறைவன் திருவருளில் இனிது தோய்தலின், இந்நினைவு களை எடுத்துரைக்கின்றார்.

இதனால், இறந்தாரை நினைந்து வருந்தும் மனத்தைத் தூய்மை செய்து கொள்ளுமாறு காணலாம். (16)

3426. என்றும்நா டுறுவோர்க் கின்பமே புரியும்
எந்தையே என்றனைச் சூழ்ந்தே
நன்றுநா டியநல் லோர் உயிர்ப் பிரிவை
நாயினேன் கண்டுகேட் டுற்ற

அன்றுநான் அடைந்த நடுக்கமுந் துயரும்
அளவிலை அளவிலை அறிவாய்
இன்றவர் பிரிவை நினைத்திடுந் தோறும்
எய்திடும் துயரும்நீ அறிவாய்.

உரை : எப்பொழுதும் திருவருள் ஞானத்தை நயந்து உறைபவர் அனைவர்க்கும் ஞான வின்பத்தையே நல்கும் எந்தையாகிய சிவனே, என்னையே நினைந்து எனக்கு நலத்தையே எண்ணி யுரைத்த நல்லவர் இறந்தாராக, அவரது இறப்பை நாய் போன்ற யான் கண்ணிற் கண்டும் பிறர் சொல்லக் கேட்டும் துயர் மிகுந்து அப்பொழுது நான் அடைந்த மன நடுக்கமும் துன்பமும் எண்ணினுல் அதற்கு ஓர் அளவேயில்லை; என்னுள் இருக்கும் நீ இதனை நன்கறிவாய்; இப்பொழுதும் அவர்களின் இறப்பை நினைக்கும் போதெல்லாம் என் நெஞ்சம் எய்துகின்ற துயரத்தை நீ அறிவாயன்றே. எ.று.

எப்போதும் இறைவன் திருவருள் நலத்தையே எண்ணுவோர்க்கு இன்பம் பெருகுவ தியல்பாதல் விளங்க, "என்றும் நாடுவோர்க்கு இன்பமே பூரியும் எந்தையே" என்று எடுத்து மொழிகின்றார். எனது நன்மையையே நினைந்து எனக்கு நல்லனவே செய்த பெரியோர் பலருண்டு; அவரை யிழப்பதினும் என் வாழ்வுக்குக் கேடு செய்வது வேறு யாதுமில்லை; அப் பெருமக்கள் இறந்தனர்; அவர் இறப்பு என்னைப் பெரிதும் வருத்திய தென்பாராய், "நல்லோர் உயிர்ப் பிரிவை நாயினேன் கண்டு கேட்டு அன்று நான் அடைந்த நடுக்கமும் துயரும் அளவிலை அளவிலை" எனவும், எனக்குள் இருக்கும் நீ அதனை நன்கறிவாய் என்பாராய், "அறிவாய்" எனவும் இயம்புகின்றார். கண்டும் கேட்டும் அன்று எய்திய துன்பம், இன்றும் என்னின் நீங்காமல் நின்று வருத்துகிறது என்பாராய், "இன்று அவர் பிரிவை நினைந்திடுந் தோறும் எய்திடும் துயரும் நீ யறிவாய்" என்று உரைக்கின்றார். தமது மனத்தின் மறவா வியல்பைக் காட்டற்கு "நாயினேன்" எனக் கூறுகின்றார்.

இதனுல் துன்பத்துப் புலம்பலும் தமது உயிரியல்பு உணர்த்திய வாரும். (17)

3427. நிலைபுரிந் தருளும் நித்தனே உலகில்
நெறியலா நெறிகளில் சென்றே
கொலைபுரிந் திட்ட கொடியவர் இவர்என்
றயலவர் குறித்தபோ தெல்லாம்
உலைபுரிந் திடுவெந் தீவயிற் றுள்ளே
உற்றென நடுநடுக் குற்றே
துலைபுரிந் தோடிக் கண்களை மூடித்
துயர்ந்ததும் நீஅறிந் ததுவே.

உரை : என்றும் நிலையாக இருந்தருளும் நித்தப் பொருளாகிய சிவ பெருமானே, இவ்வுலக வாழ்வில் தீய வழிகளில் சென்று உயிர்க் கொலை புரிந்த கொடியவர் இவர் என்று சிலரைச் சுட்டி அயலார் உரைத்த

போதெல்லாம் உலக்களத்து வெவ்விய தீயை வயிற்றுள்ளே வைத்துள்ளது போல மிகவும் நடுக்கமுற்றுத் தூரத்தே யகன்று என்னுடைய இரு கண்களையும் மூடிக்கொண்டு வருந்தியது தேவரீர் அறிந்ததன்றே. எ.று.

"பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்" என்று சான்றோர் பாராட்டி உரைத்தலால், சிவனை "நிலை புரிந்தருளும் நித்தனே" என்று, புகழ்கின்றார். தீவினை செய்வது நன்னெறி யல்லாத தீயநெறியாதலால் அந்நெறியில் சென்று கொலை முதலிய தீய செயல்களைச் செய்பவர்களை, "நெறியலா நெறிகளிற் சென்று கொலை புரிந்திட்ட கொடியவர்" என்று கூறுகின்றார். உயிர்க் கொலை புரிந்த ஒருவரைக் காட்டி "இவர் கொலை புரிந்திட்ட கொடியவர்" என்று அயலவர் காட்டக் கண்டு வடலூர் வள்ளல் வருந்திய திறத்தைக் "குறித்த போதெல்லாம் கேட்டு நடுக்க முற்று நெடிதகன்று துயர்ந்தது" என்று கூறுகின்றார். கொலை புரியும் தீயவரைக் காண்டலும் தீதாதலின் அவர்களைக் கண்டதும் "உலை புரிந்திடு வெந்தீ வயிற்றுள்ளே உற்றென நடுநடுக் குற்றேன்" என்றும் "அச்சத்தால் நெடுந் தொலைவில் அகன்று கண்களை மூடிக் கொண்டேன்" என்றும் உரைக்கின்றார். உலை புரிந்திடு வெந்தீ, கொல்லன் உலைக்களத்து எழுகின்ற மிக்க தீ. வலிய இரும்பையும் நீராய் உருக்கும் வெம்மை யுடையதாகலின், 'வெந்தீ' எனச் சிறப்பிக்கின்றார். நடுக்க மிகுதி உணர்த்துவதற்கு நடுநடுக் குற்று என்று அடுக்குகின்றார். நடுநடு - இரட்டைக் கிளவி. துலை புரிதல் - நெடுந் தூரத்தே அகன்று ஒழிதல். துயர்தல் - துயரப்படுதல்.

இதனால், கொலை புரியும் தீயவரைக் கண்டு வள்ளற் பெருமான் அஞ்சி நடுங்கிய திறம் உரைத்தவாறும். (18)

3428. ஓர்ந்தஉள் அகத்தே நிறைந்தொளிர் கின்ற
ஒருவனே உலகியல் அதிலே
மாந்தர்கள் இறப்பைக் குறித்திடும் பறையின்
வல்லொலி கேட்டபோ தெல்லாம்
காந்திஎன் உள்ளம் கலங்கிய கலக்கம்
கடவுள்நீ யேஅறிந் திடுவாய்
ஏந்தும்இவ் வுலகில் இறப்பெனில் எந்தாய்
என்னுளம் நடுங்குவ தியல்பே.

உரை : மெய்ம்மை பொய்ம்மைகள் பகுத்துணர்ந்த பெருமக்கள் உள்ளத்தே ஒளி நிறைந்து விளங்குகின்ற ஒருவனுகிய பெருமானே! உலக வாழ்வில் மக்களின் சாவைக் குறிக்கும் பறை மேளத்தின் வன்மை யான ஓசையைக் கேட்ட போதெல்லாம் என் மனம் வெதும்பிக் கலங்கிய கலக்கத்தைக் கடவுளாகிய நீ நன்கு அறிவாய்; உயர்ந்த இவ்வுலகில் சாக்காடு என்றால் என் உள்ளம் நடுங்குவது இயற்கையாம். எ.று.

மெய்ப் பொருள் உணர்ந்த மேன்மக்கள் உள்ளம் மெய்ம்மை யுணர்வால் ஞானவொளிப் பெற்று விளங்குவதாகலின், அங்கே

எழுந்தருளும் சிவபரம்பொருளே, "ஓர்ந்த உள்ளகத்தே நிறைந்தொளிர் கின்ற ஒருவனே" என உரைக்கின்றார். "ஓர்த்து உள்ளம் உள்ளதுணரின் பேர்த்துள்ள வேண்டா பிறப்பு" என்று சான்றோர் உரைப்பது காண்க. ஊர்களில் இறந்தார் இறப்பைத் தெரிவிப்பதற்குப் பறை கொட்டுவது இயல்பாதலின் உலகியல் அதிலே மாந்தர்கள் இறப்பை குறித்திடும் பறையின் வல்லொலி கேட்ட போதெல்லாம் பறை யோசை இறப்பை குறிக்கும் அமங்கல ஓசையாதல் பற்றி, "பறையின் வல்லொலி" எனக் குறிக்கின்றார். காந்துதல் - வெம்மையுற்று வெதும்புதல். உடல் வெதும்பு வதால் உள்ளம் திண்மை குலைந்து கலங்குதலின், "காந்தி என்னுள்ளம் கலங்கிய கலக்கம்" என்று இசைக்கின்றார். இறந்தார் இறப்பை பறை யொலி செய்து பலரும் அறியப் பண்ணுவது ஊர்களில் ஓங்கிய செயலாவது பற்றி "ஏந்தும் இவ்வுலகு" என இயம்புகின்றார். வாழ்வார்க்கு வாழ்க்கையில் உள்ள மகிழ்ச்சி இறப்பால் சீர்குலைதலின், "இறப்பெனில் எந்தாய் என்னுளம் நடுங்குவ தியல்பே" என வுரைக்கின்றார். பிறப்பை விரும்புவது போல இறப்பை விரும்பாமல் அஞ்சுவது உலகவற்கு இயல்பா தலால் "என்னுளம் நடுங்குவது இயல்பு" என எடுத்துரைக்கின்றார்.

இதனால், இறப்புப் பற்றிய அச்சத்தால் பறையொலி கேட்டு வடலூர் வள்ளல் நடுங்கிய திறம் உரைத்தவாறும். (19)

3429. மறைமுடி வயங்கும் ஒருதனித் தலைமை
வள்ளலே உலகர சாள்வோர்
உறைமுடி வாள்கொண் டொருவரை ஒருவர்
உயிரறச் செய்தனர் எனவே
தறையுறச் சிறியேன் கேட்டபோ தெல்லாம்
தளர்ந்துள நடுங்கிநின் றயர்ந்தேன்
இறையும்இவ் வுலகில் கொலைஎனில் எந்தாய்
என்னுளம் நடுங்குவ தியல்பே.

உரை : வேத முடிவில் விளங்குகின்ற ஒப்பற்ற தலைமை நலம் பொருந்திய வள்ளலாகிய சிவனே! உலகில் அரசராயினோர் உறையில் பொருந்திய வாளைக் கொண்டு ஒருவரை யொருவர் தாக்கி உயிர் கெடச் செய்கின்றார்கள் என்று நிலவுலகில் பிறர் சொல்லக் கேட்ட போதெல்லாம் சிறியவனாகிய யான் சோர்வுற்று மனம் நடுங்கி அயர்ச்சி யுற்றேன்; இவ் வுலகில் கொலை என்று சொன்னால் சிறிதும் பொறாது என் உள்ளம் அச்சத் தால் நடுங்குவது இயற்கை; என்னுள் இருக்கும் இறைவனாகிய நீ இதனை நன்கறிவாய். எ.று.

வேத ஞானத்தின் முடிபொருளாய் ஒப்புயர்வற்று விளங்கும் பரம் பொருளாதலின், "மறைமுடி வயங்கும் ஒரு தனித் தலைமை வள்ளலே" எனச் சிவபெருமானைப் புகழ்கின்றார். உலகாளும் அரசர்கள் வரலாற் றைக் கூறுவோர் அவர்கள் தம்மில் போர் செய்து வாளால் தாக்குண்டு இறந்ததை உரைப்பது பற்றி, "உலகரசாள்வோர் உறைமுடி வாள் கொண்டு ஒருவரை ஒருவர் உயிரறச் செய்தனர் எனவே தறையுறச்

சிறியேன் கேட்ட போதெல்லாம்'' என வுரைக்கின்றார். வாட் படையைத் தோலால் செய்த உறையில் வைப்பது மரபாதலின், "உறைமுடி வாள்'' என உரைக்கின்றார். உயிரறச் செய்தலாவது கொல்லுதல். தரை யென்பது எதுகை நோக்கித் தறை யென வந்தது. வரலாறு கூறுவோர் அரசர்கள் வாட் போர் செய்து மாண்டதை உரைப்பக் கேட்டுப் பொறுக்க மாட்டாத சிறுமை யுடைமை விளங்கச் "சிறியேன்'' எனத் தம்மைக் குறிக்கின்றார். இறை - சிறிது.

இதனுல் வடலூர் வள்ளல் கொலைக் கஞ்சிய திறம் கூறியவாறும்.

(20)

3430. தாய்மொழி குறித்தே கணக்கிலே மற்றோர்
தாய்க்குநால் என்பதை இரண்டாய்
வாய்மொழி வஞ்சம் புகன்றனன் வரைந்தேன்
நடுங்கினேன் நினைத்ததை மனத்தே
தூய்மொழி நேயர் நம்பினோர் இல்லில்
சூழ்ந்தனன் நினைத்தது துயர்ந்தேன்
காய்மொழி புகன்றேன் பொய்மொழி புகன்றேன்
கலங்கினேன் அதுநினைத் தெந்தாய்.

உரை: பெற்ற தாய் உரைத்த உரையிலே மற்றொரு தாயின் சொல்லே நான்கு மடங்கு மேன்மை யுடையதாகக் கொளல் வேண்டும் என்பது கைவிட்டு இரண்டு பட்டதாகக் கருதி வாய்மொழியால் வஞ்சனை யாக உரைத்தேன்; எழுத்திலும் எழுதினேன்; பின்னர் அதனை மனத் தின்கண் நினைத்து வருந்தினேன்; தூய சொற்களைப் பேசும் நண்பர் களும் நம்புகின்றவர்களும் ஆகியோர் மனையின்கண் தவறு நினைந்தேன்; பின்னர் அது நினைந்து வருந்தினேன்; அவர்பால் சினந்து பேசினேன்; பொய் யுரைத்தேன்; பின்னர் அதனை நினைந்து மனம் கலங்கினேன். எ.று.

பெற்ற தாய் உரைத்ததை ஒன்றுக மனத்திற் கொள்வது போல பிற தாய்மார்கள் உரைப்பதை நான்கு மடங்கு சிறந்ததாகக் கொள்ளல் வேண்டும் என்ற கருத்துரையை உள்ளொன்றும் புறமொன்றுமாகிய இரண்டகமாகக் கொண்டு மெய்ம்மொழியையும் வஞ்சகமாக உரைப்பதும் எழுதுவதும் செய்தேன் என்பார், "தாய் மொழி குறித்தே கணக்கிலே மற்றோர் தாய்க்கு நால் என்பதை இரண்டாய் வாய்மொழி வஞ்சம் புகன்றனன் வரைந்தேன்'' என வுரைக்கின்றார். வரைந்தேன் என்ப தற்குப் பொருளாகக் கொள்ளாமல் விலக்கினேன் என்று உரை கூறுவதும் உண்டு. பின்னர் அத் தவற்றை நினைந்து வருந்திய திறத்தை "நடுங் கினேன் நினைத்ததை மனத்தே'' என்று உரைக்கின்றார். உண்மையே பேசும் நண்பர்களைக் "காய்மொழி நேயர்'' என உரைக்கின்றார். தமது உரையிலும் செயலிலும் நம்பிக்கை உள்ள நன்மக்களை "நம்பினோர்'' எனக் குறிக்கின்றார். இருதிறத்தாருடைய மனைக்குச் சென்றபோது மனத்தின்கண் தவறு நினைத்ததை எண்ணி வருந்தும் வள்ளற் பெருமான் "இல்லின் சூழ்ந்தனன் நினைத்தது துயர்ந்தேன்'' என்று சொல்லுகின்றார். காய்மொழி - சினந்துரைக்கும் கடுஞ்சொல். பின்னர்த் தாம் செய்த

குற்றங்களை நினைந்து வருந்திய செயலைக் "கலங்கினேன்" அது நினைந் தெய்தாய்" எனக் கூறுகின்றார்.

இதனால், பிற தாயர் உரைக்கும் சொற்களைப் புறக்கணித்ததும், நண்பர் மனையில் குற்றம்படப் பேசியதும் நினைந்து வருந்திய திறம் உரைத்தவாறும். (21)

3431. எட்டரும் பொருளே திருச்சிற்றம் பலத்தே
இலகிய இறைவனே உலகில்
பட்டினி உற்றோர் பசித்தனர் களையால்
பரதவிக் கின்றனர் என்றே
ஒட்டிய பிறரால் கேட்டபோ தெல்லாம்
உளம்பகீர் எனநடுக் குற்றேன்
இட்டஇவ் வுலகில் பசிஎனில் எந்தாய்
என்னுளம் நடுங்குவ தியல்பே.

உரை : அறிவால் எய்துதற்கரிய பரம்பொருளே! திருச்சிற்றம்பலத் தில் விளங்குகின்ற இறைவனே, நாட்டில் வறுமையால் வருந்தும் அவர் கள் பசி மிகுந்து களைப்புற்றுத் துன்புறுகின்றனர் என்றுணர்ந்த மற்றவர் கள் வந்து உரைத்த போதெல்லாம் அச்சத்தால் பகீர் என்று மனம் நடுங்கினேன்; விரும்பப்படுகின்ற இவ்வுலகில் பசி என்று சொன்னால் என் மனம் இயல்பாகவே நடுங்கும் தன்மையுடையது காண். எ.று.

திருவருள் ஞானத்தாலன்றி இயற்கையும் செயற்கையுமாகிய அறிவு களால் எய்துதற் கருமை பற்றி, "எட்டரும் பொருளே" என வுரைக் கின்றார். தில்லைச் சிற்றம்பலத்தின்கண் ஆடல் புரியும் பரமனையினும் உலகுயிர்களின்பால் இடையறவின்றித் தங்குபவன் என்பது பற்றி, "திருச் சிற்றம்பலத்தே இலகிய இறைவனே" எனப் பாராட்டுகின்றார். உண் பொருள் வறுமையால் உணவின்றி வருந்துவோர் பட்டினி யுற்றோராவர். உணவு இவ்வழிப் பசித்தெழுந்து உடலை வெதும்பி ஆற்றலைச் சிதைத் தலின், "பசித்தனர் களையால் பரதவிக்கின்றனர்" என்று அவர்களைக் கண்டோர் வள்ளற் பெருமானிடம் உரைக்கின்றனர். பசியால் பரதவிக் கும் அவல நிலையைக் கண்டு போந்து உரைப்பவரை "ஒட்டிய பிறர்" என உரைக்கின்றார். பசித் துன்பத்தால் எய்தும் வருத்தத்தை நன்கு அறிந்தவராதலின், "உளம் பகீர் என நடுக்குற்றேன்" என உரைக் கின்றார். பசித் துன்பத்தை அறியாதவர் உலகத்தில் இலரெனினும் சிறப் பாகத் தாம் பெருந் துன்பம் உற்று இருக்கின்றாராதலின், "பசி எனில் என்னுளம் நடுங்குவது இயல்பு" என எடுத்தோதுகின்றார். வாழ்வோர் நிலைபெற வாழ்தற்கு விரும்பும் இயல்பு வாய்ந்தது இவ்வுலகம் என்பது பற்றி, "இட்ட இவ்வுலகு" என்கின்றார். இஷ்ட இவ்வுலகு என்பது இட்ட இவ்வுலகு என வந்தது.

இதனால், பிறர் படும் பசித் துன்பம் பொறாது வள்ளற் பெருமான் வருந்தும் திறம் கூறியவாறும். (22)

3432. பல்லிகள் பலவா யிடத்தும்உச் சியினும்
பகரும்நேர் முதற்பல வயினும்
சொல்லிய தோறும் பிறர்துயர் கேட்கச்
சொல்கின் றவோஎனச் சூழ்ந்தே
மெல்லிய மனம்நொந் திளைத்தனன் கூகை
வெங்குரல் செயுந்தொறும் எந்தாய்
வல்லியக் குரல்கேட் டயர்பசுப் போல
வருந்தினேன் எந்தைநீ அறிவாய்.

உரை : பல்லிகள் பல தலைக்கு மேலும் இடப்பக்கத்தும் முகத்துக்கு நேரிலும் வேறு பல இடங்களிலும் சொல்லும் போதெல்லாம் பிறர் அடைகின்ற துன்பத்தைச் சொல்லுகின்றனவோ என எண்ணி என்னுடைய மென்மையான உள்ளம் வருந்தி அயர்ந்தேன்; கூகைகள் இரவுப் போதில் தமது வெவ்விய குரலெடுத்துக் குழறுந் தோறும், வலிய புலியின் முழக்கம் கேட்ட பசுவைப் போல அஞ்சி வருந்தினேன்; இவற்றை என்னுள் உறையும் எந்தையாகிய நீ இனிதறிவாய். எ.று.

வீடுகளில் கொசுகுகளைப் பிடித்துண்டு வாழும் பல்லிகள் ஒலிக்குமாயின், மனையவர்க்கு எய்த விருக்கும் நலம் தீங்குகள் முன்கூட்டித் தெரிவிக்கப்படுகின்றன என்பது தமிழர்களிடையே இரண்டாயிரமாண்டுகட்கு முன்பிருந்தே இருந்து வரும் கொள்கையாகும். பல்லிகள் ஒலித்தலைச் சொல்லுதல் என்பர். தலைக்கு மேல் ஒலிக்கினும், கேட்போர்க்கு இடப்பக்கம் ஒலிக்கினும் யாதோ தீது வரவு சொல்லுவதாக மனையவர் கருதுவர். இந்த வழக்காறு பற்றியே, "பல்லிகள் பலவாய் இடத்தும் உச்சியினும் நேர் முதற் பலவயினும் சொல்லிய தோறும் பிறர் துயர் கேட்கச் சொல்கின்றனவோ எனச் சூழ்ந்து மனம் நொந்து இளைத்தனன்" என வுரைக்கின்றார். "செல்லுநர்க்கு உறுவது கூறும் சிறு செந்நாவின் தெண்குரல் கணிவாய்ப் பல்லி" (குறுந். 16) எனச் சங்கச் சான்றோர் உரைப்பது காண்க. பல்லிகள் இருந்தொலிக்கும் இடத்துக் கேற்பப் பொருள் வேறு வேறு கூறுபவாகலின், "இடத்தும் உச்சியினும்" என்ற தனைடமையாது, "பகரும் நேர் முதற் பலவயினும் சொல்லிய தோறும்" என வுரைக்கின்றார். சூழ்தல் - நினைத்தல். தாம் உறையுமிடத்துப் பல்லிகள் சொல்லுவது, தமக்கு உறுவது கூறுவதாகும் என எண்ணுமல் தம்போல் உறையும் பிறர்க்கு எய்தவிருக்கும் துன்பத்தைத் தமக்குத் தெரிவிப்பதாகக் கருதுவது விளங்க, "பிறர் துயர் கேட்கச் சொல்கின்றவோ எனச் சூழ்ந்து" என மொழிகின்றார். பிறர் துன்பம் காணப் பொறுத பெருந்தகை மனமுடையவராதலின், வடலூர் வள்ளல், "மெல்லிய மனம் நொந்து இளைத்தனன்" எனக் கூறுகின்றார். கூகையைப் பேராந்தை எனவும், கோட்டான் எனவும் வழங்குவர். இதன் குழறு குரலும் கேட்போர்க்கு அச்சம் விளைப்பதாகவும், தீங்குரைப்பதாகவும் நாட்டு மக்கள் கருதுபவாகலின், "கூகை வெங்குரல் செயும் தொறும் வருந்தினேன்" என விளம்புகின்றார். வல்லியம் - வன்மை மிக்க புலி. தமது மெல்லிய மனத்துக்குக் கூகையின் குழறு குரல், புலி முழக்கம் போல்கிற தெனவும், அம்முழக்கம் கேட்ட பசுவின் மனம் அச்சத்தால் நடுங்குவது போலத் தமது மனம் நடுங்கிய திறம் விளங்க, "வல்லியக் குரல் கேட்டு அயர் பசுப் போல வருந்தினேன்" எனவும் இயம்புகின்றார்.

இதனால், பல்லிகள் செய்யும் ஒலிக்கும் கூகைகளின் குரலுக்கும் பொருள் கருதி வள்ளலார் மனம் வருந்திய திறம் தெரிவித்தவாறும். (23)

3433. காக்கைகள் கூவக் கலங்கினேன் பருந்தின்
கடுங்குரல் கேட்டுளங் குலைந்தேன்
தாக்கிய ஆந்தை குரல்செயப் பயந்தேன்
சாக்குரல் பறவையால் தளர்ந்தேன்
வீக்கிய வேறு கொடுஞ்சகு னஞ்செய்
வீக்களால் மயங்கினேன் விடத்தில்
ஊக்கிய பாம்பைக் கண்டபோ துள்ளம்
ஒடுங்கினேன் நடுங்கினேன் எந்தாய்.

உரை : காக்கைகள் தம்மிற் கூடிக் கூவிக் கரைந்தாலும், பருந்துகளின் வெவ்விய குரலைக் கேட்பினும், மனம் தளர்ந்தேன்; ஆந்தைகள் தம்மிற்றுக்கிக் கடுங்குரல் செய்யக் கேட்டு அஞ்சினேன்; சாக்குருவியின் ஓசை கேட்டு மனம் சோர்ந்தேன்; வேறு கொடிய தீச் சகுனங்களைச் செய்கின்ற பறவைகளால் அறிவு மயங்கினேன்; நஞ்சு பொருந்திய பாம்பைக் கண்ட போது மனம் நடுங்கிச் சுருங்கினேன்; எனது இவ்வியல்பை, எந்தையே நீ இனிதறிவாய். எ.று.

காக்கைகளில் ஒன்று இடையூறின்றி ஏனைக் காக்கை பலவும் தம்மிற் கூடி யிருந்து கரையுமாகலின், அவற்றின் குரல் கேட்டுக் கலக்க முற்றேன் என்று கூறுகின்றார். இறந்த விலங்குகளின் உடலைத் தின்னும் ஆர்வத்தால் பருந்துகள் கூடித் தம்மிற் பிணங்கிப் பூசலிட்டுச் செய்யும் ஓசை காண்பார்க்கு அச்சம் விளைவித்தல் பற்றி, "பருந்தின் கடுங்குரல் கேட்டு உளம் கலங்கினேன்" என வுரைக்கின்றார். பாழ் மரங்களிற் கூடி ஒன்றிற் கொன்று எதிர் குரலெடுத்துப் பேரொலி செய்து இரவுப் போதில் மக்கட்கு அச்சம் பயப்பது இயல்பாதலின், "தாக்கிய ஆந்தை குரல் செயப் பயந்தேன்" என மொழிகின்றார். நள்ளிரவில் சாவெனத் தனிக் குரலெடுத்துக் கூவுவது சாக்குருவி எனப்படுவது; அதன் குரல் தீச் சகுனமாகக் கருதப்படுகிறது; அதனால், "சாக்குரற் பறவையால் தளர்ந்தேன்" எனக் கூறுகின்றார். செயல் மேலெழும் உள்ளம் தீச் சகுனங்கள் தோன்றின் எழுச்சி குன்றிச் சோர்வுறுவது பற்றி, "வீக்கிய கொடுஞ் சகுனங்கள்" எனக் குறிக்கின்றார். "பாம்பெனிற் படையும் நடுங்கும்" என்பது உலகுரை. அதனால் வள்ளற் பெருமான் "விடத்தில் ஊக்கிய பாம்பைக் கண்ட போது உள் ஒடுங்கினேன் நடுங்கினேன்" எனத் தெரிவிக்கின்றார்.

இதனைத் தீச்சகுனம் செய்யும் புள்ளொலி கேட்டு வள்ளற் பெருமான் அஞ்சி வருந்திய திறம் கூறியவாறும். (24)

3434. வேறுபல் விடஞ்செய் உயிர்களைக் கண்டு
வெருவினேன் வெய்யநாய்க் குழுவின்
சீறிய குரலோ டழுகுரல் கேட்டுத்
தியங்கினேன் மற்றைவெஞ் சகுனக்

கூறதாம் விலங்கு பறவைஊர் வனவெங்
கோள்செயும் ஆடவர் மடவார்
ஊறுசெய் கொடுஞ்சொல் இவைக்கெலாம் உள்ளம்
உயங்கினேன் மயங்கினேன் எந்தாய்.

உரை : பாம்பின் வேருய்ப் பலவகை விடம் பொருந்திய உயிர்களைக் கண்டால் அஞ்சுவேன்; நாய்கள் ஒன்றை யொன்று சீறிக் குரைக்கும் ஓசையைக் கேட்டு உடல் நடுங்கினேன்; அந்த நாய்கள் தனித்தும் கூடியும் எழுப்பும் அழுகுரலைக் கேட்பினும் அறிவு மயங்கினேன்; மேலும் தீய சகுன வகையில் கூறப்படும் விலங்குகள் பறவைகள் ஊர்வனவற்றையும், வெவ்விய கோளுரைகளைப் பேசும் ஆண்மக்களையும் பெண்டிரையும் கண்டாலும் அவர்களின் தீது விளைவிக்கும் கொடுஞ் சொற்களைக் கேட்பினும் மனம் வருந்தி மயங்கினேன்; எந்தையாகிய சிவனே, இவை நீ அறிந்தவை யல்லவோ. எ.று.

முன்னைத் திருப்பாட்டில் "விடத்தில் ஊக்கிய பாம்பைக்" கூறினராகலின், இங்கே "வேறு பல்விடஞ்செய் உயிர்கள்" என வுரைக்கின்றார். அவை தேள், தெறுக்கால், பூரான் எனப் பலவகை யுண்மையின், "விடஞ்செய் உயிர்கள்" எனப் பொதுப்பட மொழிகின்றார். நாய்கள் பலவாய்க் கூடிப் பிணங்கிச் சீறிக் குரைத்துச் செய்யும் பூசலை, "வெய்யக் நாய்க் குழுவின் சீறிய குரல்" எனவும், தனித்தும் ஓரிரண்டு கூடியிருந்தும் அழுகுரல் எடுப்பது நாய்க் கியல்பாதலின், "அழுகுரல் கேட்டு" எனவும், அதன் அழுகுரலைத் தீய நிமித்தமாக நாட்டவர் கருதுவது பற்றித் "தியங்கினேன்" எனவும் இயம்புகின்றார். வெஞ்சகுனக் கூறு - தீய சகுனம் எனக் கருதப்படும் வகைகள். விலங்கினத்திலும் பறவையினத்திலும் ஊர்ந்து வாழும் உயிரினத்திலும் தீச்சகுனமாவன எனப் பல நாடு தோறும் கூறப்படுவன வுண்மையால் அவை யெல்லாம் அடங்க, "வெஞ்சனக் கூறுதாம் விலங்கு பறவை ஊர்வன" என வுரைக்கின்றார். மக்களினத்து ஆண்களினும் பெண்களினும் கோள் பல சொல்லித் தீது விளைவிப்பவர் உண்டாதலால், அவர்களை "வெங்கோள் செயும் ஆடவர் மடவார்" என்றும், அவர்கள் உரைப்பவை தீங்கு பயப்பனவாதலால், "ஊறு செய் கொடுஞ் சொல்" என்றும் இசைக்கின்றார். இவைக்கு - சாரியை பெருத உருபு புணர்ச்சி. உயங்குதல் - மெலிதல்.

இதனால், தீய நிமித்தமாவனவற்றுக்கு வள்ளற் பெருமான் அஞ்சிய திறம் உரைத்தவாறும். (25)

3435. நிறமுறு விழிக்கீழ்ப் புறத்தொடு தோளும்
நிறைஉடம் பிற்சில உறுப்பும்
உறவுதோல் தடித்துத் துடித்திடுந் தோறும்
உன்னிமற் றவைகளை அந்தோ
பிறர்துயர் காட்டத் துடித்தவோ என்று
பேதுற்று மயங்கிநெஞ் சுடைந்தேன்
நறுவிய துகிலில் கறைஉறக் கண்டே
நடுங்கினேன் எந்தைநீ அறிவாய்.

உரை : எந்தையாகிய சிவபெருமானே, வெண்மை நிறமுடைய கண்விழியின் கீழ்ப் புறத்திலும், தோளிலும், பொலிவு நிறைந்த உடம்பின் சிற்சில வுறுப்புக்களிலும் பொருந்திய தோல் தடித்துத் துடிக்குந் தோறும், கருத்தில் எண்ணி, இத்துடிப்புக்கள் பிறருக் குண்டாகும் துன்பத்தைக் காட்டற்கு உண்டாகின்றன என்று நினைந்து அறிவு கலங்கி மயங்கி மனத் திண்மை யழிந்தேன்; தூய்மை மணம் பொருந்திய உடையில் கறை யுண்டாகக் காணின் நான் மனம் நடுங்கிய திறத்தை என்னுள் இருக்கும் எந்தையாகிய நீ நன்கறிவாய். எ.று.

நிறம் - ஈண்டு வெண்மை குறித்தது. கண்ணிமைக்குப் புறத்தில் மேலுள்ள புருவங்களும், கீழுள்ள தசைகளும் ஒரொருகால் துடிப்ப துண்மையின், "நிறமுறு விழிக் கீழ்ப் புறம்" என எடுத்தோதுகின்றார். குறைவின்றி யமைந்த உடல் உறுப்புக்களைக் குறிக்க "நிறை யுடம்பு" என மொழிகின்றார். உறுதோல் - உறவு தோல் என வந்தது. சில சமயங்களில் தோல் தடிப்புற்றுத் துடிப்பது பற்றி, "தடுத்துத் துடித்திடுந் தோறும்" எனச் சொல்லுகின்றார். இத்துடிப்புக்கள் பலவற்றிற்கும் நாட்டவர் நன்றும் தீதுமாகிய பொருள் கற்பனை செய்து உரைப்பது மரபாதலால், "பிறர் துயர் காட்டத் துடித்தவோ" எனப் பொருள் கண்டமை தோன்ற, "உன்னி" எனவும், யாவர்க்கு யாது துன்பம் எய்துமோ என நினைந்து திடுக்கிட்டு மனம் வருந்தியதைப் "பேதுற்று மயங்கி நெஞ்சுடைந்தேன்" எனவும் இயம்புகின்றார். மாசு மறுவில்லாத தூய வுடை நல்லதொரு மணம் கமழ்தலின், "நறுவிய துகில்" என்று சிறப்பிக்கின்றார். பிறர் கண்டு எள்ளி யிகழ்தற்கு ஏதுவாதலால், "துகிலிற் கரையுறக் கண்டு நடுங்கினேன்" என வுரைக்கின்றார்.

இதனால், உடம்பில் தோன்றும் துடிப்புக்கும் உடையிற் படியும் கறைக்கும் வள்ளற் பெருமான் உரைத்த திறம் கூறியவாறும். (26)

3436. மங்கையர் எனைத்தாம் வலிந்துறுந் தோறும்
மயங்கிநாம் இவரொடு முயங்கி
இங்குளங் களித்தால் களித்தவர்க் குடனே
இன்னல்உற் றிடும்நமக் கின்னல்
தங்கிய பிறர்தம் துயர்தனைக் காண்டல்
ஆகும்அத் துயர்உறத் தரியேம்
பங்கமீ தெனவே எண்ணினான் உள்ளம்
பயந்ததும் எந்தைநீ அறிவாய்.

உரை : எந்தையாகிய சிவபெருமானே, மகளிர் சிலர் என்பதால் வலியப் போந்து கூட முயன்ற போதெல்லாம், மனமயக்குற்று இப்பொழுது இவரொடு கூடி உள்ளம் மகிழ்வோமாயின், மகிழ்பவர்க்கு உடனே துன்பம் உண்டாகும்; துன்பத்துக் காளாகிய பிறருடைய துன்பத்தைக் காண வேண்டிய நிலைமை நமக்கு எய்தும்; இவ்வகைத் துன்பங்களைக் காண்டற்கு எனது மனம் பொருது; இச்செயல் குற்றமாகும் என நினைந்து நான் உள்ளம் அஞ்சியதை நீ நன்கறிவாய். எ.று.

காம வேட்கையால் அறிவு தீரியும் மகளிரும் உண்டாதலால், தாம் விரும்பும் ஆடவர்பால் இடம் நோக்கி வலியப் போந்து கூடுவது

உலகியலில் உண்மையின், "மங்கையர் எனைத் தாம் வலிந்துறுந் தோறும்" என வுரைக்கின்றார். காம நிலையில் மகளிரினும் ஆடவ ருள்ளம் எளிதில் மெலிவுறுமாதலால், "மயங்கி" என்றும், இந்நிலையில் வள்ளற் பெருமான் அறிவறை போகாது பின் விலகவு நினைந்து வீறு கொண்டது விளம்புவாராய், "இவரொடு முயங்கி இங்குளம் தளித்தால் களித்தவர்க்கு உடனே இன்னல் உற்றிடும்" என்றும் இயம்புகின்றார். இவ்வாறு இன்னல் உற்றோர் தம்பால் போந்து உற்ற துரைத்துத் துயருறக் கண்டு வருந்தினவராதலின், "நமக்கு இன்னல் தங்கிய பிறர்தம் துயர்தனைக் காண்டலாகும்" எனவும், கண்டு வருந்தும் வருத்தத்தைப் பொறுக்க மாட்டாமைக் கூறுவார், "அத்துயருறத் தரியேம்" எனவும் கூறுகின்றார். இப்பெற்றியவாய வருத்தங்களைக் கேட்பதும் காண்பதும் அவை பொருளாகப் பேசுவதும் இழிவு தருவனவாதலால், "பங்கம் ஈதெனவே எண்ணி நான் உள்ளம் பயந்ததும் எந்தை நீ யறிவாய்" என வுரைக்கின்றார்.

இதனால், மகளிர் கூட்டத்தின் இழிவு நினைந்து வள்ளற் பெருமான் வீறு கொண்ட திறம் விளம்பியவாறும், (27)

3437. வலிந்தெனை அழைக்கும் மடந்தையர் தெருவில்
மறைந்துவந் தடுத்தபின் நினைந்தே
மலிந்திவர் காணில் விடுவர்அன் றிவரால்
மயங்கிஉள் மகிழ்ந்தனம் எனிலோ
நலிந்திடு பிறர்தந் துயர்தனைக் கண்டே
நடுங்குற வும்எனப் பயந்தே
மெலிந்துடன் ஒளித்து வீதிவே றொன்றின்
மேவினேன் எந்தைநீ அறிவாய்.

உரை : வலியப் போந்து பிணிக்கும் மகளிர் உறையும் தெருவின்கண் அவரை யறியாமல் மறைந்து போந்து உறைவிடம் அடைந்த பின் நினைந்து, இவர் காணின் மனம் வேட்கை நிறைந்து வெளிச் செல்ல விடார்; இவர்களால் மயங்கிக் கூடி யுள்ளம் களிப்புறுவோமாயின் இவ்வாறு கூடி நோயுற்று வருந்தும் பிறருடைய துன்பத்தைக் கண்டு, மனம் நடுங்கும் நிலை யுண்டாகும் என்று எண்ணி அச்சம் மிகுந்து உளம் மெலிந்து, அம்மகளிர் கண்ணிற் படாது ஒளித்து வேறொரு வீதி வழியே வந்தடைந்தேன்; இதனை இறைவனே நீ அறிவாய். எ.று.

தம்பாற் காதலுற் றழைக்காத ஆடவர்பால் தாம் கழிகாம முற்றுக் கூட முயலும் காமமகளிர் என்றற்கு "வலிந்தெனை யழைக்கும் மடந்தையர்" எனக் கூறுகின்றார். அம்மகளிர் கண் படாமல் விரைந்து சென்றமை விளங்க, "மறைந்து வந்து" என வுரைக்கின்றார். உறைவிடத்தை யடைந்து இனி அம்மகளிர் கையுறற்கு இடமில்லை எனத் தெளிந்து நினைக்கின்றாராகலின், "அடுத்த பின் நினைந்து" என்று குறிக்கின்றார். நினைந்தது இதுவென விளக்குவாராய், "மலிந்திவர் காணில் விடுவரன்று; இவரால் உள் மயங்கி மகிழ்ந்தனம் எனில்" என்றும், இவ்வாறு இவரால் வலிக்கப்பட்டுக் கூடித் துன்புற்றோரை நினைக்கலுற்று, "நலிந்திடு பிறர் தம் துயர்தனைக் கண்டே நடுங்குறவரும்" என்று

எண்ணி அஞ்சி விலகினமை கூறுவார், "மெலிந்துட னெளித்து வீதி வேறென்றில் மேவினேன்" என விரித்துரைக்கின்றார். பெண்மைக்கு அஞ்சுதலால் "தெலிந்துட னெளித்து மேவினேன்" என்று கூறுகின்றார்.

இதனால், காமமகளிர் கண்ணிற் படாது வேறொரு வீதியில் விலகிப் போந்த திறம் கூறியவாறும். (28)

3438. களிப்புறு சுகமாம் உணவினைக் கண்ட
காலத்தும் உண்டகா லத்தும்
நெளிப்புறு மனத்தோ டஞ்சினேன் எனைத்தான்
நேர்ந்தபல் சுபங்களில் நேயர்
அளிப்புறு விருந்துண் டமர்களன் றழைக்க
அவர்களுக் கன்பினை டாங்கே
ஒளிப்புறு வார்த்தை உரைத்தயல் ஒளித்தே
பயத்தொடும் உற்றனன் எந்தாய்.

உரை : எந்தையாகிய சிவபெருமானே, மகிழ்ச்சி நல்கும் நல்ல உணவினைக் கண்ட போதும், உண்ட போதும் சுழியும் மனத்துடன் அச்சமெய்தினேன்; அவ்வப்போது நேர்ந்த மங்கல நிகழ்ச்சிகளில் அன்பர்கள் அன்பு கூர்ந்து விருந்துண்க என அழைத்த போது அவர்களுக்கு அன்பு மொழிகளால் மறுத்துரைத்தும் அவர்கள் கண் படாமல் ஒளித்தும் அச்சமுடன் ஒழுகினேன், காண். எ.று.

இனிமைச் சுவையும் உண்டவிடத்து மகிழ்ச்சியும் தரும் உணவை, "களிப்புறு சுகமாம் உணவு" எனக் கூறுகின்றார். நெளிப்புறு மனம் - வேண்டாமை யுணர்வால் சுழிக்கும் மனம். எப்போதும் உளவாதல் இல்லையாதலால், "நேர்ந்த பல் சுகங்கள்" எனச் சிறப்பிக்கின்றார். சுகங்கள் - மங்கல நிகழ்ச்சிகள். சுகம் குன்றிய போது மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவ தின்மை பற்றிச் "சுகம்" என மொழிகின்றார். சுகம் - செல்வக் காலம். விருந்துண்டலை, விருந்தயர்தல் என்பது பற்றி, "விருந்துண்டயர்க" என வுரைக்கின்றார். அன்பு மொழிகளால் உரைக்கும் மறுத்துரையை, "ஒளிப்புறு வார்த்தை" எனவும், மறுப்பினும் விடாது வற்புறுத்துவார்க்கு அவர் கண் படாமல் ஒளித்துக் கொண்டமையும், ஒளிப்பு வெளிப்படுமோ என அஞ்சினமையும் தோன்ற, "அயல் ஒளித்துப் பயத்தொடும் உற்றனன்" எனவும் இயம்புகின்றார்.

இதனால், விருந்துண்டற்கு வள்ளற் பெருமான் அஞ்சிய திறம் தெரிவித்தவாறும். (29)

3439. இன்புறும் உணவு கொண்டபோ தெல்லாம்
இச்சுகத் தால்இனி யாது
துன்புறுங் கொல்லோ என்றுளம் நடுங்கிச்
சூழ்வெறு வயிற்றெரிடும் இருந்தேன்

அன்பிலே அன்பா கொடுத்தவை எல்லாம்
ஐயகோ தெய்வமே இவற்றுல்
வன்புறச் செய்யேல் என்றுளம் பயந்து
வாங்கியுண் டிருந்தனன் எந்தாய்.

உரை : இனிமை மிக்க உணவுண்ட போதெல்லாம் இவ்வுண்டி நலத்தால் இனி எவ்வகைத் துன்பம் எய்துமோ என்று மனம் நடுங்கி வெறும் வயிற்றேடு இருந்தேன்; அன்பினுல் அன்பர்கள் கொடுத்தவை யெல்லாம் கண்டு தெய்வமே, இவற்றுல் என் மனம் வன்கண்மை யுடையதாகச் செய்தல் வேண்டா மென்று அச்சத்தால் அவற்றை வாங்கி யுண்டிருந்தேன். எ.று.

இனிமைச் சுவை மிக்க உணவை, "இன்புறும் உணவு" என்று குறிக் கின்றுர். உணவு உண்பதை உணவு கொள்வது என்ற வழக்குப் பற்றி, "உணவு கொண்ட போதெல்லாம்" என்று கூறுகின்றுர். இனிய வுணவுகள் சில சமயங்களில் நோய் செய்வது உண்டாகையால், "இச் சுகத்தால் இனி யாது துன்புறுங் கொல்லோ" என்றும், அத்துன்பம் எய்தாமல் விலக்குதற் பொருட்டு உண்ணுது இருந்தமை விளங்க, "உளம் நடுங்கிச் சூழ்வெறு வயிற்ருெடும் இருந்தேன்" என்றும் இயம்புகின்றுர். அன்பர்கள் அன்பினுல் கொடுப்பவை சில சமயங்களில் மனத்தின்கண் வன்கண்மையை உண்டு பண்ணுவ தியல்பாதல் பற்றி, "அன்பிலே அவர் கொடுத்தவை எல்லாம் ஐயகோ தெய்வமே இவற்றுல் வன்புறச் செய்யேல் என்றுளம் பயந்து வாங்கி யுண்டிருந்தனன்" என்று கூறு கின்றுர். அன்பர் கொடுப்பவற்றை மறுப்பின் அது வன்செயலாய் முடிவ துண்டாதலால் அது கருதி, "ஐயகோ தெய்வமே வன்புறச் செய்யேல்" என்று உரைக்கின்றுர் எனினும் அமையும். வன்செயல்களே எவ்வகையி லும் விரும்பாதவராதலால் வள்ளற் பெருமான், "பயந்து வாங்கி யுண்டிருந்தனன்" என்று கூறுகின்றுர். உண்ணுத வயிற்றை வெறுவயிறு என்பது உலக வழக்கு.

இதனுல், வன்கண்மைக்கு அஞ்சி யன்பர் அன்பால் தரும் உணவை உண்டிருந்தமை தெரிவித்தவாரும். (30)

3440. உற்றதா ரணியில் எனக்குல குணர்ச்சி
உற்றநாள் முதல்ஒரு சிலநாள்
பெற்றதாய் வாட்டம் பார்ப்பதற் கஞ்சிப்
பேருண வுண்டனன் சிலநாள்
உற்றவர் நேயர் அன்புளார் வாட்டம்
உறுவதற் கஞ்சினேன் உண்டேன்
மற்றிவை அல்லால் சுகஉணக் கொள்ள
மனநடுங் கியதுநீ அறிவாய்.

உரை : இவ்வுலகில் பிறந்து உலகியல் உணர்ச்சி விளங்கிய நாள் முதல் ஒருசில நாட்களில் என்னைப் பெற்ற தாயின் மனவருத்தத்தைப் பார்ப்பதற் கஞ்சி மிக்க உணவை உண்டேன்; சில நாள் உற்றவர்களும்,

நண்பர்களும், அன்பர்களும், மனவாட்டம் கொள்வதைக் காண்பதற் கஞ்சி யவர்கள் விரும்புவனவற்றை யுண்டேன்; இவையன்றி இன்சுவை உணவு கொள்வதற்கு என் மனம் வருந்தியதை எந்தையாகிய பெருமானே, நீ அறிவாய். எ.று.

வாழ்ந்து உயிர்கள் உய்தி பெறற் பொருட்டுப் படைக்கப்பட்ட தாகலின், உலகை "உற்ற தாரணி" என்கின்றார். உலகியல் வாழ்க்கை யுணர்வை உலகுணர்ச்சி என வுரைக்கின்றார். அஃதாவது உலகத்தோடு ஒப்ப வொழுகுதல். உணவளிக்கும் தாயின் மனம் நோவாமல் ஒழுக வேண்டு மென்பது உலகியல் அறமாதலின், தான் இட்ட உணவை மகன் நிரம்ப உண்ணவிடத்து தாயின் மனம் வருந்தும் என்பது பற்றி, அதனை முற்றவும் உண்டமை விளங்க, "ஒரு சில நாள் பெற்ற தாய் வாட்டம் பார்ப்பதற் கஞ்சிப் பேருண வுண்டனன்" என்று கூறுகின்றார். பேருணவு-மிக்க வுணவு, உற்றவர் - அன்பால் வந்தடைந்தவர். நண்பர்களும் அன்பர்களும் நட்பாலும் அன்பாலும் கொடுப்பவற்றை உண்ண மறுத்த வழி மனம் வருந்துவராதலால், அவர் வருந்தாமைப் பொருட்டு அவர் கொடுத்தவற்றை மருது உண்டது உரைப்பாராய், "சில நாள் உற்றவர் நேயர் அன்புளார் வாட்டம் உறுவதற் கஞ்சினேன் உண்டேன்" என்று உரைக்கின்றார். அஞ்சினேன் - முற்றெச்சம். மீதூண் உண்டல் குற்றமாதலின் இவற்றை எடுத்தோதிய வள்ளற் பெருமான் மற்று இவை யல்லால் சுகம் உணக் கொள்ள மனநடுங்கியது நீ அறிவாய்" என விளம்புகின்றார். சுகவுணு - இனிய உணவு.

இதனால், மிதமான உணவையே உண்டு வாழ்ந்த திறம் கூறிய வாறும். (31)

3441. தொழுந்தகை உடைய சோதியே அடியேன்
சோம்பலால் வருந்திய தோறும்
அழுந்தஎன் உள்ளம் பயந்ததை என்னுல்
அளவிடற் கெய்துமோ பகலில்
விழுந்துறு தூக்கம் வரவது தடுத்தும்
விட்டிடா வன்மையால் தூங்கி
எழுந்தபோ தெல்லாம் பயத்தொடும் எழுந்தேன்
என்செய்வேன் என்செய்வேன் என்றே.

உரை : யாவராலும் தொழப்படும் தகைமை பொருந்திய சோதிப் பொருளே, அடியவனாகிய யான் சோம்பலுற்று வருந்திய போதெல்லாம் என்னுடைய மனம் துயருற்று விளைவு நினைந்து அஞ்சிய திறத்தை அளவிட்டுரைக்க முடியாது! பகற் போதில் சோர்வினுல் உறக்கம் வந்த போது அதைத் தடுத்துத் தூங்காமல் இருக்க முயன்றும் விடாது பிணித்தமையின் தூங்கி யெழுந்த போதுகளில் அச்சத்தோடே எழுந்தேன்; இக்குற்றங்கட்கு யாது செய்வேன். எ.று.

சோதியே சுடரே எனச் சான்றோர் தொழுவது பற்றிச் சிவனை, "தொழும் தகையுடைய சோதியே" என்று துதிக்கின்றார். சோம்பல் சான்றோர் நூல்களில் மடி யென வழங்கும். இம்மடிமைக்கு ஆளாகுபவர்

பல்வகைக் குற்றங்கட்கு உரியராய்த் துன்புறுவராதலின், "அடியேன் சோம்பலால் வருந்திய தோறும் அழுந்த என்னுள்ளம் பயந்ததை என்னுல் அளவிடற் கெய்துமோ" என்று கூறுகின்றார். "நெடுநீர் மறவி மடி துயில் நான்கும் கெடுநீரார் காமக் கலன்" எனத் திருவள்ளுவர் கூறுவது காண்க. ஆழ்ந்த என்பது அழுந்த என வந்தது. நல்ல பல கடமைகளை எண்ணிச் செய்து பயன் கோடற் குரிய பகற் பொழுதை உறங்கிக் கழித்தல் குற்றமாதலால், பகலில் உறங்கியதை நினைந்து வருந்தும் வள்ளற் பெருமான், "பகலில் விழுந்துறு தூக்கம் வர அது தடுத்தும் விட்டிடா வன்மையால் தூங்கி யெழுந்த போதெல்லாம் பயத்தொடும் எழுந்தென்" எனவும், தூக்கத்தில் கழிந்த பொழுது மீள வாராதாகலின், "என் செய்வேன் என்செய்வேன்" எனவும் இயம்புகின்றார். வீழ்தல் - விரும்புதல். உறக்கத்தின் தடுப்பரும் தன்மை குறித்தற்கு "விட்டிடா வன்மையால்" எனவும் உரைக்கின்றார்.

இதனுல், வள்ளற் பெருமான் சோம்பலுக்கும் பகலில் தூங்குதற்கும் அஞ்சிய திறம் தெரிவித்தவாறும். (32)

3442. அந்தமோ டாதி இல்லதோர் பொதுவில்
அரும்பெருஞ் சோதியே அடியேன்
சொந்தமோ அறியேன் பகலிர வெல்லாம்
தூக்கமே கண்டனன் தூக்கம்
வந்தபோ தெல்லாம் பயத்தொடு படுத்தேன்
மற்றுநான் எழுந்தபோ தெல்லாம்
தொந்தமாம் பயத்தால் சிவசிவ தூக்கம்
தொலைவதெக் காலம்என் றெழுந்தேன்.

உரை : தோற்றக் கேடுகளில்லாத ஒப்பற்ற அம்பலத்தில் விளங்குகின்ற அரும்பெருஞ் சோதியாகிய பரம் பொருளே, அடியவனுகிய எனக் குரிய பொருளோ என்னவோ அறியேன் ஆயினும் அல்லும் பகலுமாகிய எக்காலத்தும் தூக்கமே பொருளாகக் கொண்டேன்; தூக்கம் வந்த போதெல்லாம் அச்சத்தோடே படுத்தேன்; படுத்தெழுந்த போதெல்லாம் என்னோடு தொடர்புடைய அச்சத்தால் சிவனே, தூக்கம் தொலைவது எக்காலம் என்று நினைந்து கொண்டே எழுந்தேன். எ.று.

முன்னைப் பாட்டில் பகலில் தூக்கம் வந்ததற்கு வருந்திய வள்ளற் பெருமான், இப்பாட்டில் பகலும் இரவும் தூக்கம் போந்து அலைப்பதற்கு வருந்தி, "அடியேன் சொந்தமோ அறியேன் பகலிர வெல்லாம் தூக்கமே கண்டனன்" என்று சொல்லுகின்றார். எத்துணை விலக்க முயன்றாலும் விடாது நினைந்து, "அடியேன் சொந்தமோ அறியேன்" என வுரைக்கின்றார். சொந்தம் - உரிமையுடைய பொருள். தூக்கத்தால் காலம் கழிவதற்கு அஞ்சுகிறாதலின் மனம் நொந்து, "நான் எழுந்த போதெல்லாம் பயத்தொடு படுத்தேன்" எனப் பகர்கின்றார். தூக்கத்தினுல் உளதாகும் காலக் கழிவுக்கு அஞ்சுகின்றாதலின் மனம் நொந்து, "நான் எழுந்த போதெல்லாம் பயத்தொடு "படுத்தேன்" எனப் பகர்கின்றார். தூக்கத்தினுல் உளதாகும் காலக் கழிவுக்கு அஞ்சுகின்றாதலின் மனம் நொந்து, "நான் எழுந்த போதெல்லாம் தொந்தமாம் பயத்தால் சிவசிவ

தூக்கம் தொலைவது எக்காலம் என்று எழுந்தேன்" என்று முறையிடுகின்றார் தொந்தம் - தொடர்பு.

இதனால், வள்ளற் பெருமான் தூக்கத்திற்கு அஞ்சிய திறம் சொல்லியவாரும். (33)

3443. உடையஅம் பலத்தில் ஒருவனே என்றன்
உயிர்க்குயிர் ஆகிய ஒளியே
கடையன்நான் நனவில் நடுங்கிய நடுக்கம்
கணக்கிலே சிறிதுறும் கனவில்
இடையூறு நடுக்கம் கருதவும் சொலவும்
எண்ணவும் எழுதவும் படுமோ
நடையுறு சிறியேன் கனவுகண் டுள்ளம்
நடுங்கிடா நாளும்ஒன் றுளதோ.

உரை : ஆடற் கிடமாக யுடைய திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளும் ஒப்பற்ற பெருமானே, என் உயிர்க்குயிராய் உணர்வொளி தந்தருளும் பெருமானே, கடையவனாகிய நான் நனவுப் போதிலே கொண்ட நடுக்கம் எண்ணிக்கையில் சிறிதாகும்; கனவுகளின் இடையே நான் கொண்ட நடுக்கம் நினைக்கவும் சொல்லவும் எண்ணவும் எழுதவும் படாத அளவினதாம்; நல்லொழுக்கத்தை நினைக்கும் சிறியவனாகிய யான் உறக்கத்தில் கனவு கண்டு அஞ்சி நடுங்காத நாளே கிடையாதெனவும். எ.று.

தில்லையம்பலத்தைத் தனது திருக்கூத்துக் கிடமாகக் கொண்டவனாதலால் சிவபெருமானை, "உடைய அம்பலத்தில் ஒருவனே" எனப் புகழ்கின்றார். உயிர் தோறும் உள்ளுரையாய் நின்று உணர்வொளி தருபவனாதலால் சிவபெருமானை "என்றன் உயிர்க்குயிராகிய ஒளியே" என்று வோதுகின்றார். நனவு - உறங்காத காலம். வன்கண்மை பொருந்திய காட்சிகளைக் காணும் போதெல்லாம் மனம் அஞ்சி வருந்தும் இயல்பினராதலால், "கடையன் யான் நனவில் நடுங்கிய நடுக்கம்" என எடுத்துரைக்கின்றார். கனவின்கண் எய்தும் காட்சிகளால் உண்டாகிய மனநிலையை, "கனவில் இடையுறு நடுக்கம் கருதவும் சொல்லவும், எண்ணவும், எழுதவும் படுமோ" என்றும் உரைக்கின்றார். நடை - நன்னடை; அஃதாவது நல்லொழுக்கம். கனவு காணும் போதெல்லாம் அச்சத்தால் மனம் நடுங்கி விழித் தெழுவது தமக்கு இயல்பென்பது தோன்ற, "சிறியேன் கனவு கண்டுளம் நடுங்கிடா நாளும் ஒன்றுளதோ" என்று உரைக்கின்றார்.

இதனால், கனவுக் காட்சிகளால் வள்ளற் பெருமான் அஞ்சி நடுங்கிய திறம் தெரிவித்தவாரும். (34)

3444. பகலிர வடியேன் படுத்தபோ தெல்லாம்
தூக்கமாம் பாவிவந் திடுமே
இகலுறு கனவாம் கொடியவெம் பாவி
எய்துமே என்செய்வோம் என்றே

உகலுற உள்ளே நடுங்கிய நடுக்கம்
உன்னுளம் அறியுமே எந்தாய்
நகலுறச் சிறியேன் கனவுகண் டுள்ளம்
நடுங்கிடா நாளும்ஒன் றுளதோ.

உரை : பகலிலும் இரவிலும் படுத்த போதெல்லாம் தூக்கமாகிய பாவி வந்து சூழ்ந்து கொள்ளுமே என்றும், மாறுபடும் கனவாகிய கொடிய வெவ்விய பாவி வந்து காட்சி தந்து வருத்துமே, இதற்கு என் செய்வது என்றும் நீக்கமுற மனத்தின் கண் நான் அஞ்சி நடுங்கிய நடுக்கத்தை தேவரீர் திருவுள்ளம் அறியுமன்றே; எந்தையாகிய பெருமானே, கேட்டார் நகைப்புறச்சிறுமையுடைய யான் கனவுகள் கண்டு அஞ்சி நடுங்காத நாள் ஒன்றேனும் உண்டோ. எ.று.

உடலில் இளைப்புத் தோன்றிய போது பகலில் படுப்பதும், இரவுப் போதில் இயல்பாகவே கிடந்து உறங்குவதும், அக்காலங்களில் கனவுகள் தோன்றிக் காட்சி தருவதும் இயற்கையாயினும் உறக்கத்திற்கும் கனவுக் காட்சிகட்கும் அஞ்சும் இயல்பினராதலால், வள்ளற் பெருமான் "பகலிர வடியேன் படுத்த போதெல்லாம் தூக்கமாம் பாவி வந்திடுமே, இகலுறு கனவாம் கொடிய வெம்பாவி எய்துமே என்செய்வோம் என்றே உகலுற உள்ளே நடுங்கிய நடுக்கம் உன்னுளம் அறியுமே எந்தாய்" என்றுவிண்ணப் பிக்கின்றார். இயற்கைக்கு மாறுன காட்சிகள் தோன்றுதலின் கனவுகளை "இகலுற கனவாம் கொடிய வெம்பாவி" என்று குறிக்கின்றார். தூக்கமும் கனவும் தமக்குத் துன்பவனுபவங்களாதல் பற்றித் "தூக்கமாம் வெம்பாவி" என்றும், "கனவாம் கொடிய வெம்பாவி" என்றும் வெறுத்துரைக்கின்றார். மனத்தெழும் நடுக்கம் சிறிது போது நீங்குதலின் "உகலுற உள்ளே நடுங்கிய நடுக்கம்" என்று உரைக்கின்றார். உகல் - நீங்குதல். சில கனவுக் காட்சிகள் இகழ்தற்குரியனவாய் நனவின்கண் நிகழ்ந்த வழி நகைத்தற் குரியனவாய் இருத்தலின், "நகலுறச் சிறியேன் கண்ட கனவுகள்" என்று கூறுகின்றார்.

இதனால், வள்ளற் பெருமான் கனவுக் காட்சிக்கு அஞ்சி நடுங்கிய திறம் தெரிவித்தவாறும். (35)

3445. தொகுப்புறு சிறுவர் பயிலுங்கால் பயிற்றும்
தொழிலிலே வந்தகோ பத்தில்
சகிப்பிலா மையினுல் அடித்தனன் அடித்த
தருணம்நான் கலங்கிய கலக்கம்
வகுப்புற நினது திருவுளம் அறியும்
மற்றுஞ்சில் உயிர்களில் கோபம்
மிகப்புகுந் தடித்துப் பட்டபா டெல்லாம்
மெய்யநீ அறிந்ததே அன்றே.

உரை : தம்மில் கூடிப் பயிலும் இயல்புடைய சிறுவர்கட்குக் கல்வி கற்பிக்கும் தொழிலில் இடையிடையே வரும் சினத்தால் சிறுவர்களின் குற்றத்தைப் பொறுக்க மாட்டாத இயல்பினால் அவர்களை நான் அடித்த துண்டு; அடித்த அத்தருணத்தில் நான் எய்திய மனவருத்தத்தைத்

தெளிவாகத் தேவரீரது திருவுள்ளம் நன்கு அறியும். சில உயிர்களின் மேல் மிக்க கோபம் கொண்டு அவற்றை அடித்து அவை படும் பாட்டைக் கண்டு நான் பட்ட வருத்தத்தை மெய்மைப் பொருளாகிய நீ நன்கு அறிவாய். எ.று.

சிறுவர்கள் தம்மிற் பலராய்க் கூடிக் கல்வி கற்பதும், விளையாடுவதும் இயல்பாதலால், "தொகுப்புறு சிறுவர்" என்று சொல்லுகின்றார். கல்வி கற்பிக்குங்கால் எல்லாச் சிறுவர்களும் ஒரளவாக ஏற்பதில்லையாதலால் தவறு செய்யும் சிறுவர்பால் சினமுண்டாதல் ஆசிரியர்களுக்கு இயல்பாதலாலும், சிறுவர் செய்யும் சிறு தவறுகளைப் பொறுக்கும் பண்பு இல்லாமையாலும் அடிப்பது இயல்பாதலால், "பயிற்றும் தொழிலிலே வந்த கோபத்தில் சகிப்பிலாமையினால் அடித்தனன்" என்றும், அடிப்பட்ட சிறுவரது அவலங் கண்டு இரக்கத்தால் மனம் குழையும் தமது தன்மை விளங்க, "அடித்த தருணம் நான் கலங்கிய கலக்கம்" என்றும் இயம்புகின்றார். தொகுத்தலும் வகுத்தலும் அறிவு நெறியாதலால், "வகுப்புற நினது திருவுளம் அறியும்" எனச் செப்புகின்றார். பகுத்துணர் வில்லாத விலங்குகளின் மேல் அவற்றின் செயல் பற்றிச் சினமுண்டாதல் இயற்கையாதலால், "சில்லுயிர்களில் கோபம் மிகப் புகுந்து அடித்து" எனவும், அடிபட்டவை உடல் நெளிந்தும் வாய்விட்டுக் கதறியும் புலம்புவது கண்டு வள்ளற் பெருமான் வருந்திய திறத்தை, "கோபம் மிகப் புகுந்தடித்துப்பட்ட பாடெல்லாம் நீ அறிந்ததே யன்றே" எனவும் எடுத்துக் கூறுகின்றார்.

இதனால், சிறுவர்களையும் சிற்றுயிர்களையும் கோபத்தால் அடித்து அதனால் தாம் வருந்திய திறம் கூறியவாறும். (36)

3446. ஒடித்தஇவ் வுலகில் சிறுவர்பால் சிறிய
உயிர்கள்பால் தீமைகண் டாங்கே
அடித்திடற் கஞ்சி உளைந்தனன் என்னுல்
ஆற்றிடாக் காலத்தில் சிறிதே
பொடித்துநான் பயந்த பயமெலாம் உனது
புந்தியில் அறிந்ததே எந்தாய்
வெடித்தவெஞ் சினம்என் உளமுறக் கண்டே
வெதும்பிய நடுக்கம்நீ அறிவாய்.

உரை : நெறி திரம்பிய இவ்வுலகியலில் சிறுவர்களிடத்தும் சிற்றுயிர்களிடத்தும் குற்றம் கண்டவிடத்து அடிப்பதற்கு அஞ்சி மனம் வருந்தினேன்; என்னுல் திருத்துதற்கு மாட்டாத காலத்தில் மனம் சிறிது கசந்து நான் அஞ்சிய அச்சமெல்லாம் உனது திருவுளம் அறிந்ததேயாகும். உள்ளத்தில் வெடித்து எழும் வெவ்விய சினம் உற்ற போது நான் மனம் வெதும்பி நடுங்கியதும் நீ அறிகுவாய். எ.று.

ஒடித்தல் - நெறி திரம்புதல். நன்னெறி யொழுகுவோர் மிகச் சிலராதல் பற்றி "ஒடித்த இவ்வுலகு" என்று கூறுகின்றார். உலகு - இங்கு உலகியல் மேற்று. தீமை கண்டவிடத்து நீக்க முயலுதல் நல்லோர் இயல்பாதலால் வடலூர் வள்ளல் அந்நெறியில் இயங்குமிடத்துச் சிறுவர்களை அடித்து ஒறுத்தற்கு உள்ளம் எழுமாயினும் அதன் விளைவாக அவர்கள் படும்

துன்பத்தைக் கண்டு அஞ்சி மனம் வருந்தினமை புலபபட, "தீ மை கண்டாங்கே அடித்திடற் கஞ்சி உளைந்தனன்" என்று உரைக்கின்றார். தீமையை விலக்குதற்கு ஏற்ற வன்மையில்லாத பொழுது எய்திய வருத்தத்தை "ஆற்றிடாக் காலத்தில் சிறிதே பொடித்து நான் பயந்த பய மெலாம் உனது புந்தியில் அறிந்ததே எந்தாய்" என்று விண்ணப்பிக் கின்றார். பொடித்தல் - வெகுளுதல். புந்தி - திருவுள்ளம். உள்ளத்தில் மிக்கெழும் சினத்தை "வெடித்த வெஞ்சினம்" எனவும், சினமெழுந்து பொங்குவது கண்டு அதன் தீமை யுணர்ந்து வருந்தினமை புலப்பட, "சினம் என் உளமுறக் கண்டே வெதும்பிய நடுக்கம் நீ அறிவாய்" எனவும் விளம்புகிறார்.

இதனால், வெவ்விய சினமாகி குற்றம் தன்கண் எழுதற்கு வடலூர் வள்ளல் அஞ்சினம் தெரிவித்தவாரும். (37)

3447. கோபமே வருமோ காமமே வருமோ
கொடியமோ கங்களே வருமோ
சாபமே அனைய தடைமதம் வருமோ
தாமதப் பாவிவந் திடுமோ
பாபமே புரியும் லோபமே வருமோ
பயனில்மாற் சரியம்வந் திடுமோ
தாபஆங் கார மேஉறு மோஎன்
றையநான் தளர்ந்ததும் அறிவாய்.

உரை : கோபம், காமம், மோகம், மதம், லோபம், மாற்சரியம், ஆங்காரமாகிய குற்றங்களும், இக்குற்றங்களுக்கு ஏதுவாகிய தாமத குணமும் என்பால் வந்திடுமோ என்று நான் தளர்ச்சியுற்றதை ஐயனாகிய நீ நன்கு அறிவாய். எ.று.

மோகம் - மயக்கம். செய்வன தவிர்வனவற்றைத் தெரிந்துணராதபடி மயக்குதலின் மோகத்தை, "கொடிய மோகங்கள்" என வுரைக்கின்றார். மதம் - செருக்கு. சபிக்கப்பட்டது போலக் குணம் செயல்கள் சிதைதலால் மதமாகிய குற்றத்தை, "சாபமே அனைய தடை மதம்" எனச் சாற்றுகின்றார். தாமத குணம் நல்வினை நற்செயல்களைச் செய்யவிடாது தடுப்தை, "தாமதப் பாவி" என வெகுண்டு உரைக்கின்றார். உலோபம் - கடும் பற்றுள்ளம்; இதனால் பாவச் செயல்கள் புரிதலின், "பாபமே புரியும் லோபம்" எனப் பகர்கின்றார். மாற்சரியம் - மனத்திலுளதாகும் மாறுபாட்டுணர்வு. செய்வினைக்கண் உளதாகும் நற்பயன் எனத் தாக்கிக் கெடுத்தலின், "பயனில் மாற்சரியம்" என வுரைக்கின்றார். ஆங்காரம் என்னின் மிக்கார் யாரென எழும் தருக்குணர்வு. அதனால் தனக்கும் பிறர்க்கும் வருத்தமே விளைதலின், "தாப ஆங்கார" மெனக் குறிக்கின்றார். இவ்வகைக் குற்றங்களும் எதிர்பாரா வகையில் எழுவனவாகையால், இவை வருமோ வருமோ என்று அஞ்சி வடலூர் வள்ளல் மனம் தளர்வது பற்றி, "ஐய நான் தளர்ந்ததும் அறிவாய்" என மொழிகின்றார்.

இதனால், காமம் வெகுளி முதலாய அறுவகைக் குற்றங்களும் தம்பால் உளவாமோ என வடலூர் வள்ளல் அஞ்சிய திறம் விளம்பியவாரும். (38)

3448. காமமா மதமாங் காரமா திகள்என்
கருத்தினில் உற்றபோ தெல்லாம்
நாமம்ஆர் உளத்தோ டையவோ நான்தான்
நடுங்கிய நடுக்கம்நீ அறிவாய்
சேமமார் உலகில் காமமா திகளைச்
செறிந்தவர் தங்களைக் கண்டே
ஆமைபோல் ஒடுங்கி அடங்கினேன் அதுவும்
ஐயநின் திருவுளம் அறியும்.

ஆமைபோல் ஒடுங்கி யடங்கினேன் அதுவும் ஐய நின் திருவுளம் அறியும்.

உரை: காம விச்சையும் பெரிய செருக்கும் ஆங்கார முதலியனவும் என் மனத்திற் பொருந்தித் தாக்கிய காலங்களி லெல்லாம் அச்சம் நிறைந்த உள்ளத்துடன் நான் அடைந்த அச்சத்தை, நீ நன்கு அறிவாய்; நலம் பொருந்திய உலகில் காம முதலிய இச்சைகளில் அழுத்திய கீழ் மக்களைக் கண்ட போது ஆமை போல நான் அடங்கி யொடுங்கினேனுக, ஐயனே, அதனையும் நீ தெளிவாக அறிவா யன்றே. எ. று.

போக்குதற் கரிய வன்மை புலப்பட, செருக்கினை "மாமதம்" என்று குறிக்கின்றார். காம முதலிய குற்றங்களை மனத்திற் றோன்றிச் செயற்கண் விளங்கி நிற்றல் பற்றி, "கருத்தினில் உற்ற போது" என வுரைக்கின்றார். நாமம் = அச்சம். காம முதலிய குற்றங்கள் மனத்தின்கண் உறும் பொழுது வள்ளற் பெருமான் அறிவுறை போகாது, அவற்றுல் விளையும் குற்றத்தை எண்ணி அஞ்சினமை விளங்க, "நான் நடுங்கிய நடுக்கம் நீ அறிவாய்" என நவில்கின்றார். சேமம் - இந்நாளில் க்ஷேமம் என்று வழங்குகிறது. குற்றங்களைக் கடிந்து நன்னெறிக்கண் ஒழுகுபவர்க்குப் புகழும் புண்ணியமும் எய்தும் நல்லுலகம் என்றற்குச் "சேமமார் உலகு" என்று சிறப்பிக்கின்றார். காமமுதலிய குற்றங்களை யுடையராய் அவற்றின் நிலைவு செயல்களில் மூழ்கியிருப்பவர், எத்தகைய கீழ்மைச் செயல்களையும் செய்வராதலால், அவர்களைக் கண்டால் நற்பண்புடையோர் அஞ்சி நாணி விலகி நிற்பதுபற்றி, "ஆமை போல் ஒடுங்கி யடங்கினேன்" என வுரைக்கின்றார். அச்சமும் அவலமும் தோன்றியபோது தன்னுடைய தலையையும் கால்களையும் உடற்குள் ஒடுக்கி யடக்கிக் கொள்வது ஆமைக்கு இயல்பாதல் கண்டு, "ஆமை போல் ஒடுங்கி யடங்கினேன்" என மொழிகின்றார்.

இதனுல், காம முதலிய வேட்கை வயப்பட்டு ஒழுகுபவர்களைக் கண்டுவள்ளற் பெருமான் அஞ்சி யொடுங்கி வாழ்ந்த திறம் எடுத்தோதியவாரும் (39)

3449. கருத்துவே ருகிக் கோயிலில் புகுந்துன்
காட்சியைக் கண்டபோ தெல்லாம்
வருத்தமே அடைந்தேன் பயத்தொடும் திரும்பி
வந்துநொந் தினைத்தனன் எந்தாய்
நிருத்தனே நின்னைத் துதித்தபோ தெல்லாம்
நெகிழ்ச்சிஇல் லாமையால் நடுங்கிப்
பருத்தஎன் உடம்பைப் பார்த்திடா தஞ்சிப்
படுத்ததும் ஐயநீ அறிவாய்.

உரை: அம்பலத்தில் திருக்கூத்தாடும் பெருமானே, எந்தையே, நின் திருக்கோயிலுட்புகுங்கால் கருத்து வேறுபட்டு நினது திருக்கோலத்தைக் கண்ட காலத் தெல்லாம், வருத்தமுற்றுத் திரும்பி வந்து குற்றத்தை யுணர்ந்து நான் மனம் நொந்து மெலிந்ததை நீ அறிவாய்; அன்றியும் அங்கே நின்னைத் துதி செய்த போது மதம் ஒன்றி நின்று உருக்கம் எய்தாமையால் நான் உள்ளம் நடுங்கிப் பருத்த எனது உடம்பைக் காண்பதற்கும் அஞ்சிப் படுத்துக் கிடந்தது நீ நன்கறிவாய். எ. று.

நிருத்தம்- கூத்து. பொற்சபையிலும் சிற்சபையிலும் கூத்தாடும் பெருமானுதலால், "நிருத்தனே" எனப் போற்றுகின்றார். திருக்கோயிலுட் புகுங்கால் வழிபாட்டின்கண் கருத்துடையராய்ச் செல்ல வேண்டுவது நல்லறமாக, யான் வேறுபட்ட கருத்துடன் கோயிலுட் புகுந்தே னென் பாராய், "கருத்து வேறுகிக் கோயிலிற் புகுந்து" எனவும், அங்கே நின் திருக்கோலத்தைக் கண்ட போதும் கருத்து ஒன்றினேனில்லை என வருந்துவாராய், "உன் காட்சியைக் கண்ட போதெல்லாம் வருத்தமே யடைந்தேன்" எனவும் உரைக்கின்றார். திருக்கோயிலின் நீங்கி வெளிப் போந்து உறைவிடம் அடைந்த போதும் அவ்வருத்தம் நீங்காமை தோன்ற, "பயத்தொடும் திரும்பி வந்து நொந்து இளைத்தனன்" என்று கூறுகின்றார். வழிபாட்டில் கருத்து வேறுபட்டுத் துன்புற்ற நக்கீரர் முதலியோர் வரலாறு நினைவிற் போந்தமையின் வள்ளற் பெருமான் அஞ்சினரா கலின், "பயத்தொடும் திரும்பி வந்து" எனவும், செய்த குற்றம் நெஞ்சிற் கிடந்து வருத்தினமையின், "நொந்து இளைத்தனன்" எனவும் இயம்புகின்றார். இறைவன் திருமுன்பு நின்று பரவும் போது அன்பால் மனம் உருகினலன்றி மனவொருமையும் நற்பயனும் உண்டாகா வென்பவாகலின், "நின்னைத் துதித்த போதெல்லாம் நெகிழ்ச்சி யில்லாமையால் நடுங்கி" என இசைக்கின்றார். நெஞ்சில் உருக்கமும் உடம்பின்கண் மென்மையும் இல்லாமையால் "பருத்த என் உடம்பைப் பார்த்திடாதஞ்சிப் படுத்ததும் ஐய நீ அறிவாய்" எனச் சொல்லி வருந்துகின்றார்.

இதனுல், வழிபாட்டில் கருத்தொருமையும் மனவுருக்கமும் இல்லாமை சொல்லி வருந்தியவாரும். (40)

3450. புன்புலால் உடம்பின் அசுத்தமும் இதனில்
புகுந்துநான் இருக்கின்ற புணர்ப்பும்
என்பொலா மணியே எண்ணிநான் எண்ணி
ஏங்கிய ஏக்கம்நீ அறிவாய்
வன்புலால் உண்ணும் மனிதரைக் கண்டு
மயங்கிஉள் நடுங்கிஆற் றுமல்
என்பெலாம் கருக இளைத்தனன் அந்த
இளைப்பையும் ஐயநீ அறிவாய்.

உரை: என் பொல்லா மணியாகிய பெருமானே! புலால் நாறும் உடம்பிலுள்ள அசுத்தத்தையும், இவ்வுடம்பினுள் புகுந்து கலந்திருக்கின்ற கலப்பையும், பலகாலம் நினைந்து நினைந்து நான் வருந்தி ஏங்கிய ஏக்கத்தையும் நீ யறிந்திருக்கின்றாய்; வன்கண்மையை உறுவிக்கும் புலால் உண்ணும் மனிதர்களைக் கண்டு அறிவு மயங்கி மனம் நடுங்கி அக்

கொடுமையை ஆற்றுமல் என்னுடம்பின் என்பெலாம் கருகும்படி நான் இனைத்திருக்கின்ற இனைப்பையும் நீ நன்கு அறிவா யன்றே. எ.று.

துலக்கப் படாத மணியைப் பொல்லா மணியென்பர். அஃது இங்கே "பொல்லா மணி" என வந்தது. இது மரூஉ முடிபு. புலால் நாறும் பொருள்களில் உடம்பிகண் எழும் நாற்றம் மிக்கதாகலின், "புன் புலால் உடம்பு" என்று கூறுகின்றார். இவ்வுடம்பினுள் கலந்து ஒன்றியிருக்கின்ற தமது இருப்பை, "இதனிற் புகுந்து நானிருக்கின்ற புணர்ப்பும்" என்று கூறுகின்றார். உடம்பில் புலால் நாறும் தன்மையும் அதனைப் பொறுக்க மாட்டாத தன்மையும் ஒன்றுக் கொன்று மாறுபடுதலின், இதனுள் கலந் திருக்கும் கலப்பு வியப்பைத் தருதலால், "நான் எண்ணி எண்ணி ஏங்கிய ஏக்கம் நீ அறிவாய்" என வுரைக்கின்றார். புலால் உணவை வெறுப்பவர் ஆதலின் அதனை உண்போரை உயிர்க் கொலைக்கு அஞ்சாதவர் என்று கருதி அவர்களைக் காண அஞ்சுகின்றமை புலப்பட, "வன்புலாலுண்ணும் மனிதரைக் கண்டு மயங்கி யுண்ணடுங்கி யாற்றுமல் என்பெலாம் கருக இளைந்தனன்" என இயம்புகின்றார்.

இதனால், வள்ளற் பெருமானுடைய புலாலை வெறுக்கும் தன்மை எடுத்துரைத்தவாறும். (41)

3451. இந்தவிர் சடைஎம் இறைவனே என்னை
டியல்கலைத் தருக்கஞ்செய் திடவே
வந்தவர் தம்மைக் கண்டபோ தெல்லாம்
மனம்மிக நடுங்கினேன் அறிவாய்
சந்தியுற் றிருகால் படித்தசாத் திரத்தைத்
தமியனேன் மீளவுங் கண்டே
நொந்ததும் உலகப் படிப்பில்என் உள்ளம்
நொந்ததும் ஐயநீ அறிவாய்.

உரை : சந்திரன் இருந்து விளங்கும் சடையையுடைய சிவபெரு மானே! கலையறிவு பொருளாக என்னோடு தருக்கம் செய்ய வந்தவர்களைக் கண்டவிடத் தெல்லாம் நான் உள்ளத்தில் அஞ்சினேன்; அன்றியும் ஒருகால் கண்டு பயின்ற சாத்திரங்களை மீளவும் கண்ட போதும் உலகியல் நூல்களைக் கண்டபோதும் என்னுள்ளம் அஞ்சி அஞ்சி வருந் திற்று; இவையெல்லாம் தேவரீர் அறிந்தவை யன்றே. எ.று.

சமய வாதிகளும், பொருள் உண்மை காண்பவர்களும் வாதப் பிரதி வாதங்களால் தருக்கம் புரிந்து உண்மை காணும் முறை பற்றி, "இயல் கலைத் தருக்கம் செய்திடவே வந்தவர்" எனவுரைக்கின்றார். அவர் களுடைய தருக்க வாதங்கள் வெறும் காலக் கழிவாய் ஒழிவது பற்றிச் சமயச் சான்றோர்கள் தருக்கவாதங்களையும் அவர்களுடைய வாதங்களை யும் விரும்புவ தில்லையாதலால் அவர்களை, "கண்ட போதெல்லாம் மனம் மிக நடுங்கினேன்" எனவுரைக்கின்றார். திருஞான சம்பந்தரும் "ஏதுக் களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா, சுடர் விட்டுளன் எங்கள் சோதி" (பாசுரம்) என்று சொல்லுவது காண்க. இருவர் மூவராய்க் கூடியிருந்து படிக்கப் படுவது பற்றிச் சாத்திரங்களைப்

படித்ததை, "சந்தியுற்றெருகால் படித்த சாத்திரத்தை" என்று கூறுகின்றார். சந்தி - கூடுதல். சாத்திரப் பொருள்களும், தருக்க முறையில் அமைந்திருப்பது பற்றி, "ஒருகால் படித்த சாத்திரத்தைத் தமியனேன் மீளவும் கண்டு நான் மனம் நொந்தேன்" என மொழிகின்றார். தமியன் - தனியவன். உலகப் படிப்புச் சிவஞானம் பெற உதவுதல் இன்மையால், "உலகப் படிப்பில் என் உள்ளம் நொந்தது" என இயம்புகின்றார்.

இதனால் தருக்க நூல்களிலும் உலகியல் கல்வியிலும் வள்ளற் பெருமானுக்கு விருப்பின்மை விளம்பியவாறும். (42)

3452. முனித்தவெவ் வினையோ நின்னருட் செயலோ
தெரிந்திலேன் மோகமே லின்றித்
தனித்தனி ஒருசார் மடந்தையர் தமக்குள்
ஒருத்தியைக் கைதொடச் சார்ந்தேன்
குனித்தமற் றவரைத் தொட்டனன் அன்றிக்
கலப்பிலேன் மற்றிது குறித்தே
பனித்தனன் நினைத்த தோறும்உள் உடைந்தேன்
பகர்வதென் எந்தைநீ அறிவாய்.

உரை : தனியினமாக வாழும் மகளிருள் ஒருத்தியை மோக உணர்ச்சி யின்றிக் கைப்பற்றச் சென்ற நான், எதிரே நடித்த வேறெருத்தியைக் கைப்பிடித்தேனேயன்றி அவளோடு கலந்தேனில்லை; பின்னர் எனது இச்செயலை நினைந்து மனம் நடுங்கினேன்; அதனை நினைக்கும் தோறும் உள்ளம் வலி இழந்தேன்; இது மிக்குற்ற வெவ்விய என் வினைத் தொடர்போ அல்லது நினது திருவருட் செயலோ அறிகிலேன்; இதனை மீளவும் எடுத்துரைப்பதில் பயன் என்னையோ? இறைவனே எல்லாம் நீ அறிவாய். எ.று.

கூத்தாடும் மகளிர் இனத்தைத் "தனித்தனி ஒருசார் மடந்தையர்" என்றும், அவரோடு உறவாடிய தாம் காமமயக்க யுணர்ச்சியின்றிக் கலந்து விளையாடியது தோன்ற, "மோகம் மேலின்றி" என்றும், ஒருத்தியைக் கைப்பற்றச் சென்று எதிரே நடித்த வேறெருத்தியைக் கைப்பற்றியது விளங்க, "ஒருத்தியைக் கை தொடச் சார்ந்தேன், குனித்த மற்றவரைத் தொட்டனன்" என்றும் மொழிகின்றார். குனித்தல் - கூத்தாடுதல். மகள் ஒருத்தியைக் கைப்பற்றியது அவளோடு கூடுதற்குப் போலும் என்ற ஐயம் போக்குதற்கு, "கலப்பிலேன்" என்றும், இது குற்றமான செயல் என்பதைப் பின்னர் உணர்ந்து வருந்தினமை விளங்க, "இது குறித்தே பனித்தனன்" என்றும் இசைக்கின்றார். பனித்தல் - நடுங்குதல். இந்நிகழ்ச்சி அடிக்கடி நினைவிற் தோன்றி வருத்தினமையில், "நினைத்த தோறும் உள் உடைந்தேன்" எனக் கூறுகின்றார். இந்நிகழ்ச்சி தமக்கு உளதானதற்குக் காரணம் காண்பவர் இது முன்னை வினைத் தொடர்போ என நினைந்து "முனித்த வெவ்வினையோ" எனவும், இத்துறையில் விருப்பின்றியிருக்கும் தமக்கு இங்கு நேர்ந்தது திருவருளின் சோதனையோ என எண்ணினமையின், "நின்னருட் செயலோ" எனவும், உண்மை விளங்காமையின் "தெரிந்திலேன்" எனவும்,

இவற்றை மீளவும் நினைந்து உரைப்பது பயனில் செயலாதலின், "பகர்வ தென் எந்தை நீ அறிவாய்" எனவும் உரைக்கின்றார்.

இதனால், கூத்தாடும் மகளிரிடத்தில் கூடி அயர்ந்த குற்றம் நினைந்து வருந்தியவாறும். (43)

3453. பதியனே பொதுவில் பரமநா டகஞ்செய்
பண்பனே நண்பனே உலகில்
ஒதியனேன் பிறர்பால் உரத்தவார்த் தைகளால்
ஒருசில வாதங்கள் புரிந்தே
மதியிலா மையினால் அகங்கரித் தபின்தன்
வள்ளல்உன் அருளினால் அறிந்தே
விதியைநான் நொந்து நடுங்கிய தெல்லாம்
மெய்யனே நீஅறிந் ததுவே.

உரை: பதிப் பொருளாகிய பரமனே, அம்பலத்தில் மேலான ஞான நாடகம், புரிகின்ற பண்புடையவனே, எனக்கு நண்பனே, இவ் வுலகில்கண் ஒதி மரம் போல்கின்ற நான் பிறரோடு உரத்த குரல் எடுத்து சில வாதங்களைச் செய்து நல்லறி வில்லாமையால் அகங்கார த்தோடு பேசிப் பின்பு வள்ளலாகிய உனது திருவருளால் செய்த தவற்றையறிந்து அது செய்தற்கு நேர்ந்த விதியை நொந்து நான் மனம் வருந்திய திறத்தை மெய்யனாகிய நீ இனிதறிவாய். எ.று.

உலகுயிர்கட்கு எல்லாம் முதல்வனாதலின், சிவனைப் "பதியனே" என்று குறிக்கின்றார். பொது - தில்லையம்பலம். சிவபெருமான் அம்பலத் தில் ஆடுகின்ற நாடகங்களுள் ஞான நாடகம் உயர்ந்ததாகலின், "பரம நாடகம் செய் பண்பனே" என்று பகர்கின்றார். அறிவு அயருங்காலத்து நல்லுணர்வை உள்ளிருந்து உணர்த்துதலின் "நண்பனே" என்று உரை கின்றார். உரத்த வார்த்தைகள், மிக்க வொலி செய்து பேசும் பேச்சுக்கள் உரத்த குரலெடுத்துப் பேசுவது எனினும் அமையும். வாதம் புரிதலாவது ஏது எடுத்துக் காட்டுகளால் தாம் கொண்ட கொள்கையைச் சாதித்தல். வாதத்தின் பயனில்லாமையை யுணராது அகங்காரத்தோடு நின்றமை புலப்பட, "மதியிலாமையினால் அகங்கரித்து" என்று கூறுகின்றார், அதன் பயனின்மையை மனவமைதியுற்றுப் பின்னர் உணர்ந்தமையின், "வள்ளல் உன் அருளினால் அறிந்தே" என மொழிகின்றார். பயனில்லாத வாதங்களால் காலம் கழித்த குற்றத்திற்கு வருந்துகின்றாராதலால், "விதியை நான் நொந்து நடுங்கிய தெல்லாம் மெய்யனே" என விரித் துரைக்கின்றார்.

இதனால், வீண் வாதம் புரிந்து அகங்கரித்தமைக்கு வருந்திய திறம் கூறியவாறும். (44)

3454. அருளினை அளிக்கும் அப்பனே உலகில்
அன்புளார் வலிந்தெனக் கீந்த
பொருளினை வாங்கிப் போனபோ தெல்லாம்
புழுங்கிய புழுக்கம்நீ அறிவாய்

மருளும்அப் பொருளைச் சாலகத் தெறிந்து
மனமிக இளைத்ததும்பொருளால்
இருளுறும் எனநான் உளம்நடுங் கியதும்
எந்தைநின் திருவுளம் அறியும்.

உரை : திருவருள் ஞானத்தை நல்கும் தந்தையே, உலகில் என்பால் அன்புடையவர்கள் வலிந்தளித்த பொருள்களை வாங்கிக் கொண்டு போன போதெல்லாம் என் மனம் வருந்திய வருத்தத்தை நீ நன்கு அறிகுவாய்; மனத்தை மயக்கும் அப் பொருளைச் சாலகத் தெறிந்து பின்னர் அதற்காக மனம் சோர்ந்ததும், பொருள் பெருகினால் மனம் அறியாமை யிருளில் அழுந்து மெனக் கருதி நான் நெஞ்சு நடுங்கியதும், தேவரீரது திருவுள்ளம் அறியும். எ.று.

இறைவன் அருளுவது எல்லாம் திருவருள் ஞானமாதலால் அதனை "அருளினை அளிக்கும் அப்பனே" என வுரைக்கின்றார். அன்பர்கள் அன்பால் நன்பொருளை அன்பர்களுக்கு வேண்டா மெனினும் ஏற்குமாறு வற்புறுத்துவது இயல்பாதலும், அன்பராயினர் ஏற்றலும் உலகியல் முறையாதலின், "உலகில் அன்புளார் வலிந்தெனக் கீந்த பொருளினை வாங்கிப் போன போதெல்லாம்" எனப் புகலுகின்றார். பிறர்க்குரிய பொருளொன்றினை யவரே விரும்பி வழங்கினும் பெறலாகாது என்ற கொள்கையால் வாழ்கின்றவராதலின், அன்பர்கள் அளித்த பொருளை வாங்கிச் சென்ற போது மனம் வருந்திய கூறுபாட்டை, "புழுங்கிய புழுக்கம் நீ அறிவாய்" என வுரைக்கின்றார். பொருள் பெற்ற வழி அதன்பால் அன்பு பெருகி அதனைக் காத்தற்கு மனம் இறுகிக் கெடுவதால், "மருளும் அப்பொருள்" என உரைக்கின்றார். மனமகிழ்ச்சிக்கு இடம் கொடாது காத்தற்கு அப்பொருளைப் புறத்தே வீசி யெறிந்தமை விளங்க, "சாலகத் தெறிந்து" என்றும், பின்னர் அப்பொருட்காக மனம் வருந்தினமை தோன்ற, "மனம் மிக இளைத்ததும்" என்றும் இயம்புகின்றார். பொருள் சேர்ந்த வழி அதன்பால் பற்றுப் பெருகி நன்னினைவுகட்கு இடமாகாதவாறு மனவிருளை மாய்ப்பதால், "பொருளாம் இருளுறும் என நான் உளம் நடுங்கியதும் எந்தை நின் திருவுளம் அறியும்" என்று பொருளைப் புறக்கணித்தற்குக் காரணம் கூறுகின்றார்.

இதனால் அன்பர் அளித்த பொருளிடத்தும் இச்சை கொள்ளாத திறம் எடுத்துரைத்தவாறும். (45)

3455. பொருளிலே உலகம் இருப்பதா தலினால்
புரிந்துநாம் ஒருவர்பால் பலகால்
மருவினால் பொருளின் இச்சையால் பலகால்
மருவுகின் றுன்எனக் கருதி
வெருவுவர் எனநான் அஞ்சிஎவ் விடத்தும்
மேவிலேன் எந்தைநீ அறிவாய்
ஒருவும்அப் பொருளை நினைத்தபோ தெல்லாம்
உவட்டினேன் இதுவும்நீ அறிவாய்.

உரை : பொருட்கும் பொருளை யுடையவர்க்கும் நன்மதிப் பளிப்பது மக்களுலகத்துக்கு இயல்பாதலால், செல்வர் ஒருவரிடம் பலகாற்

செல்வோமாயின் பொருளாசை கொண்டு தம்மிடம் பன்னாளும் வருகின்றார் என நினைந்து அஞ்சுவர் எனக் கருதிச் செல்வரை யணுகுதலே நான் தவிர்த்ததை எந்தையாகிய நீ அறிவாய்; யாவர்பாலும் நில்லாது நீங்கும் அப்பொருட் செல்வத்தை நினைத்த போதெல்லாம் மனத்தின்கண் வேண்டா வெறுப்பே கொண்டேன். எ.று.

"பொருள் துன்னுங்காலைத் துன்னுதன இல்லை" (சீவக) என அறிஞரும், "செல்வரை யெல்லாரும் செய்வர் சிறப்பு" (குறள்) எனச் சான்றோரும் கூறுதலால், "பொருளிலே யுலகம் இருப்பது" என முடிந்த முடிபாக மொழிகின்றார். புரிதல் - விரும்புதல். பொருளால் விளையும் நலம் கண்டு அதனைத் தொகுத்தாளும் செல்வர் தம்மிடம் ஒருவர் பலமுறையும் வருவாராயின், இவர் பொருள் வேண்டி வருகின்றார் என ஐயுற்று இகழத் தலைப்படுவ ரென அஞ்சினமை தோன்ற, "புரிந்து நாம் ஒருவர்பால் பலகால் மருவினுல் பொருளின் இச்சையால் பலகால் மருவுகின்றான் எனக் கருதி வெருவுவர் என நான் அஞ்சி எவ்விடத்தும் மேவிலேன்" என வுரைக்கின்றார். மருவுதல் - சேர்தல். வெருவுதல் - அஞ்சுதல். யாவரிடத்தும் நில்லா பெருது நீங்கும் இயல்பினதாகலின், "ஒருவும் அப்பொருள்" எனக் குறிக்கின்றார். ஒருவுதல் - நீங்குதல். உவட்டுதல் - வேண்டாது வெறுத்தல்.

இதனால், பொருட் செல்வர்பாற் பன்னாளும் செல்வதை வள்ளற் பெருமான் தவிர்ந் தொழுகிய திறம் தெரிவித்தவாறும். (46)

3456. தகைத்தபேர் உலகில் ஐயனே அடியேன்
தடித்தஉள் ளத்தொடு களித்தே
நகைத்தபோ தெல்லாம் நடுங்கினேன் இங்கே
நல்லவா கனங்களில் ஏறி
உகைத்தபோ தெல்லாம் நடுங்கினேன் விரைந்தே
ஓட்டிய போதெலாம் பயந்தேன்
பகைத்தபோ தயலார் பகைகளுக் கஞ்சிப்
பதுங்கினேன் ஒதுங்கினேன் எந்தாய்.

உரை : ஐயனே, தகைமை வாய்ந்த பெரிய இவ்வுலக வாழ்க்கையில் உவகையாற் பூரித்த மனத்துடன் மகிழ்ச்சி மிக்குச் சிறப்புற்ற காலங்களி லெல்லாம் அஞ்சி நடுக்க முற்றேன்; இந்நிலையில் நல்ல குதிரை வண்டி முதலிய வாகனங்களில் ஏறிச் சென்ற போதும், அவற்றை விரைவாகச் செலுத்திய போதும் மனத்தில் அச்சம் கொண்டேன்; என் மேற் பகை கொண்ட அயலார்களுக்கு அஞ்சி அவர் கண்களிற் படாது பதுங்கியும் விலகியும் ஒழுகினேன். எ.று.

தகை - நன்மை தரும் சிறப்பு; அழகுமாம். தகையையுடைய உலகு-தகைத்த வுலகு என வந்தது. வாழ்வாரை நன்கு வாழ்விக்கும் சிறப்புடையதாதலால் உலகு இவ்வாறு சிறப்பிக்கப்படுகிறது. உவகை மிக்க விடத்து ஆழ்ந்த நினைவுகளின்றி மனம் பூரிப்படைவதால், "தடித்த வுள்ளத்துடன் களித்து" என வுரைக்கின்றார். நகைப்பின் பின் விளைவு துன்பமாதலால் "நகைத்த போதெல்லாம் நடுங்கினேன்" என்று நவில்கின்றார். நல்ல வாகனம் - செல்வர்கள் இவர்ந்து செல்லும் குதிரை.

குதிரை வண்டி, அலங்கரித்த மாட்டு வண்டி முதலியன. உகைத்தல் - செலுத்துதல். அயலார் பகை ஆகாத தொன்று என்று அறிந்தோர் கூறுபவாதலின், "அயலார் பகைகளுக்கு அஞ்சிப் பதுங்கினேன்" என வுரைக்கின்றார். ஒதுங்குதல் - விலகுதல்.

இதனால், உவகை மிக்க விடத்தும் அயலவர் பகைத்த போதும் வள்ளற் பெருமான் வருந்தி ஒழுகிய திறம் தெரிவித்தவாறும். (47)

3457. சகப்புற வாழ்வைப் பார்த்திடில் கேட்கில்
சஞ்சலம் உறும்எனப் பயந்தே
நகர்ப்புறத் திருக்குந் தோட்டங்கள் தோறும்
நண்ணியும் பிறவிடத் தலைந்தும்
பகற்பொழு தெல்லாம் நாடொறுங் கழித்தேன்
பகலன்றி இரவும்அப் படியே
மிகப்பல விடத்தும் திரிந்தனன் அடியேன்
விளம்பலென் நீஅறிந் ததுவே.

உரை: நாட்டில் நகர்கண் வாழ்பவர்களின் புற வாழ்வுகளைக் காணினும் பிறர் சொல்லக் கேட்பினும் மனம் துன்புறும் என்று அஞ்சி நகர்கட்குப் புறத்தே யிருக்கும் தோட்டங்களே யடைந்தும் பிற விடங்களில் திரிந்தும் பகற் பொழுது முழுதையும் நாடோறும் கழித் தேன்; பகலன்றி இரவிலும் இப்படியே மிக்க பல விடங்களில் திரிந்து பொழுது போக்கினேன்; இவை யாவும் நீ அறிந்தவையாதலின், நான் எடுத்துரைப்பது வீண். எ.று.

சகம் - உலகம். எத்திறத்தோறும் இனிது கண்டும் கேட்டும் அறியத் தக்கதாகலின், புற வாழ்வை எடுத்தோதுகின்றார். பகற் போதில் தோட்டங்களில் உலாவுவது காண்பார் உள்ளத்தில் ஐயம் தோற்றுவியாது எனக் கொள்க. இரவில் ஊர்ப் புறங்கட்குச் சென்று திரிந்தமை விளங்க, "இரவும் அப்படியே மிகப் பலவிடத்தும் திரிந்தனன்" எனத் தெரிவிக்கின் றார். சஞ்சலம் - துன்பம்.

இதனால், நகர்ப்புற வாழ்வை நயவாமல் பகல் இரவுகளே வள்ளற் பெருமான் கழித்த இயல்பு எடுத்தோதியவாறும். (48)

3458. உருவுள மடவார் தங்களை நான்கண்
உற்றபோ துளநடுக் குற்றேன்
ஒருவுளத் தவரே வலிந்திட வேறோர்
உவளகத் தொளித்தயல் இருந்தேன்
கருவுளச் சண்டைக் கூக்குரல் கேட்ட
காலத்தில் நான்உற்ற கலக்கம்
திருவிளம் அறியும் உரத்தசொல் எனது
செவிபுகில் கனல்புகு வதுவே.

உரை: அழகிய பெண்களை நான் கண்ட போது மனம் அஞ்சி நடுங்கினேன். ஒரு மனத்தோடு அவர்கள் வலிந்து என்பால் வந்தபோது வேறோர் அறையில் ஒளிந்து கொண்டு இருந்தேன்; சினமிக்க மனத்துடன்

சண்டையில் ஈடுபடுவோருடைய கூக்குரலைக் கேட்ட போது நான் கொண்ட மனக் கலக்கத்தைத் தேவரீரது திருவுள்ளம் நன்கு அறியும்; உரத்த குரலோசை என் செவிக்குள் புகுமாயின் நெருப்புப் புகுவது போல் அஃது என்னைச் சுடுவது இயல்பாகும். எ று.

உருவுள மடவார் - அழகு பொருந்திய இளம் மகளிர். அவர்களுடைய அழகிய தோற்றம் மனத்தைக் கலக்குவதால், "உளம் நடுக்குற்றேன்" என்று கூறுகின்றார். ஒருவுளம் - ஒன்றிய மனம். ஆட்களைக் காணும் தோறும் அமையும் நீங்கும் மனம் எனினும் அமையும். உவளகம் - மனைக்குள் இருக்கும் அறைகள். கருவுளச் சண்டை - சினம் பொருந்திய மனத்தால் செய்கின்ற சண்டை. சண்டையிடுவோருடைய உரத்த குரல் இங்கே "கூக்குரல்" எனப்படுகிறது. உரத்த குரலோசை கேட்போரைத் திடுக்கிடச் செய்வதாகலின் இயல்பாகவே மென்மை சான்ற உள்ளமுடைய வள்ளற் பெருமானுக்கு மிக்க அதிர்ச்சியைச் செய்யுமாதலின், "சண்டை கூக்குரல் கேட்ட காலத்தில் நான் உற்ற கலக்கம் திருவுளம் அறியும்" என்று கூறுகின்றார். உரத்த குரலோசை கேட்கப் பொருதது வள்ளற் பெருமானின் இயல்பு என்பதை "உரத்த சொல் எனது செவி புகில் கனல் புகுவதுவே" என்பது வற்புறுத்துகிறது.

இதனால், வள்ளலாரது உள்ளத்தின் மென்மைத் தன்மை விளம்பிய வாரும். (49)

3459. பண்ணிகா ரங்கள் பொசித்தஅப் போதும்
பராக்கிலே செலுத்திய போதும்
எண்ணிய மடவார் தங்களை விழைந்தே
இசைந்தனு பவித்தஅப் போதும்
நண்ணிய தயிலம் முழுக்குற்ற போதும்
நவின்றசங் கீதமும் நடமும்
கண்ணுறக் கண்டு கேட்டஅப் போதும்
கலங்கிய கலக்கம்நீ அறிவாய்.

உரை: பலகார வகைகளை யுண்ட போதும், பாராமுகமாகயிருந்த போதும் கருதிய இளம் மகளிரைக் கூடிக் கலந்து அனுபவித்த போதும், ஏற்ற எண்ணெய் முழுக்காடிய போதும், சிறப்பித்து உரைக்கப்படுகின்ற சங்கீதத்தைக் கேட்ட போதும், மகளிர் நடனங்களைக் கண் பொருந்தக் கண்டுமகிழ்ந்த போதும், நான் கலங்கிய கலக்கத்தைத் தேவரீரது திருவுள்ளம். அறியும். எ.று.

பண்ணி காரங்கள் - இனிய பலகாரங்களாலாகிய திண்பண்டங்கள். பொசித்தல் - புசித்தல் என இந்நாளில் வழங்கும். பாராக் - பராமுகமாகயிருத்தல். தயிலம் - எண்ணெய்; மருந்து எண்ணெயுமாம். நவின்ற சங்கீதம் - புகன்று ஓதப்படுகின்ற சங்கீதம். நடம் - பரத நாட்டியம். நடம் காண்டற் குரியது. சங்கீதம் கேட்டற் குரியது.

இதனால், இன்பானுபவங்களில் வள்ளற் பெருமானுடைய மனம் இசையாமை தெரிவித்தவாரும். (50)

3460. நயந்தபொற் சரிகைத் துகில்எனக் கெனது
நண்பினர் உடுத்திய போது
பயந்தஅப் பயத்தை அறிந்தவர் எல்லாம்
பயந்தனர் வெய்யலிற் கவிகை
வியந்துமேற் பிடித்த போதெலாம் உள்ளம்
வெருவினேன் கைத்துகில் வீசி
அயந்தரு தெருவில் நடப்பதற் கஞ்சி
அரைக்குமேல் வீக்கினன் எந்தாய்.

உரை: எந்தையாகிய சிவனே, என்னுடைய நண்பர்கள் எனக்கு உயர்ந்த பொற் சரிகை யிட்ட ஆடையைக் கொணர்ந்து உடுத்தின போது நான் அஞ்சின திறத்தைக் கண்டவ ரெல்லாம் தாமும் மனத்தில் அச்சம் கொண்டனர்; வெயில் மிகுதி கண்டு வியந்து என் தலைக்கு மேற் குடையைப் பிடித்த போது மனம் அஞ்சி ஒடுங்கினேன்; மேலாடை காற்றிற் பறக்கப் புழுதி படிந்த தெருவில். நடப்பதற்கு அஞ்சி அதனை இடையில் இறுகக் கட்டிக்கொண்டேன். எ. று.

பொற் சரிகையிட்ட ஆடை நெசவிற் சிறந்து விலையும் உயர்ந்ததா கலின், "நயந்த பொற் சரிகைத் துகில்" என வுரைக்கின்றார். உயர்ந்த ஆடைகளால் தாமேயன்றித் தமது நண்பர்களை அன்பால் அலங்கரித் தின்புறுவது மெய்ந்நண்பர்கட்கியல்பாதல் பற்றி, "எனது நண்பினர் உடுத்திய போது" என்றும், அதனை யுடுத்துத் தோன்றும் அழகினைக் காண்டற்கு வள்ளற் பெருமான் அஞ்சிய அச்சத்தை நண்பர்கள் கண்டு இவர்க்கு என்னுகுமோ எனப் பயந்து நடுங்கினராதலால், "அப்பயத்தை அறிந்தவரெல்லாம் பயந்தனர்" எனத் தெரிவிக்கின்றார். கவிகை - கைக் குடை. வெயிற் பொருட்டு கைக்குடை யேந்துதற்கும் வள்ளலார், "இதுவும் வேண்டாத ஆடம்பரமாம்" என அஞ்சினமை விளங்க, "வெய்யலிற் கவிகை வியந்து மேற் பிடித்தபோதெல்லாம் உள்ளம் வெருவினேன்" என விளம்புகின்றார். தோளிற்போட்டுக் கொள்ளும் நான்கு முழத் துண்டை, "கைத் துகில்" என்று குறிக்கின்றார். அயம் - புழுதி மாவும் மக்களும் வாகனங்களும் இயங்குவதால் புழுதி படிந்திருக்கும் நிலைமை நோக்கி, "அயந்தரு தெரு" எனக் கூறுகின்றார்.

இதனால், ஆடம்பர வுடை யணிதல் கைக்குடை யேந்தலாகிய வற்றை வள்ளற் பெருமான் வெறுத் தஞ்சிய திறம் கூறியவாறும். (51)

3461. கையுற வீசி நடப்பதை நாணிக்
கைகளைக் கட்டியே நடந்தேன்
மெய்யுறக் காட்ட வெருவிவெண் துகிலால்
மெய்எலாம் ஐயகோ மறைத்தேன்
வையமேல் பிறர்தங் கோலமும் நடையும்
வண்ணமும் அண்ணலே சிறிதும்
பையநான் ஊன்றிப் பார்த்ததே இல்லைப்
பார்ப்பனேல் பயமிகப் படைப்பேன்.

உரை : அண்ணலாகிய சிவனே, கைகளைப் பக்கத்தே வீசிக் கொண்டு நடப்பதற்கு நாணி அவற்றை மடக்கி மார்பிற் கட்டிக் கொண்டே நடந்தேன்; என் மேனி வெளிதே தெரிதற் கஞ்சி வெண்மை யான ஆடையாற் போர்த்து மறைத் தொழுகுவேன்; நிலத்தில் பிறரு டைய கோலங்களையும் நடையையும் தன்மைகளையும் மிகச் சிறிதளவும் உற்று நோக்குவதில்லை; நோக்கிய வழி என் மனத்தில் ஒருவகை அச்ச முண்டாவது இயல்பு. எ.று.

கை - பக்கம். நடக்கும் போது வலமும் இடமுமாகிய பக்கங்களில் கைகள் அசையுமாயினும் எனக்கு நாண முண்டாகின்றமையால் "கைகளைக் கட்டியே நடந்தேன்" என்று கூறுகின்றார். மெய்யென்றது, மார்பும் முதுகுமாகிய உடம்பின் பகுதிகள். மேனி நலமிகுதி பற்றிப் புறத்தே தோன்றி விளங்கத் தருக்குகின்றனெனப் பிறர் நினைப்பரென அஞ்சி நாணினமை குறிக்க, "மெய்யுறக் காட்ட வெருவி வெண்துகிலால் மெய்யெலாம் மறைத்தேன்" என வுரைக்கின்றார். கோலம் - பொலிவு. நடை - ஒழுக்கம்; நடக்கும் சிறப்பியல்புமாம். வண்ணம் - ஈண்டுத் தன்மை குறித்து நின்றது. கோலமும் நடையும் வண்ணமும் காண்பவர் தம்மில் இகழ்ந்து பேசுவது கருதித் தம்மையும் அவ்வாறு பழிப்பரென அஞ்சுகின்றாராதலின், "நான் ஊன்றிப் பார்த்ததே யில்லை" என்றும், "பார்ப்பனேல் பயம் மிகப் படைப்பேன்" என்றும் இயம்புகின்றார். பயம் - அச்சம்.

இதனால் பிறருடைய கோலம் நடை வண்ணங்களைக் காண்டற்கு வள்ளலார் அஞ்சியொழுகிய திறம் தெரிவித்தவாறும். (52)

3462. வைகிய நகரில் எழிலுடை மடவார்
வலிந்தெனைக் கைபிடித் திழுத்தும்
சைகைவே றுரைத்தும் சரசவார்த் தைகளால்
தனித்தெனைப் பலவிசை அறிந்தும்
பொய்கரைந் தானை புகன்றுமேல் விழுந்தும்
பொருள்முத லியகொடுத் திசைத்தும்
கைகலப் பறியேன் நடுங்கினேன் அவரைக்
கடிந்ததும் இல்லைநீ அறிவாய்.

உரை : சிவனே, நான் தங்கிய நகரின்கண் அழகிய மகளிர் சிலர் தாமாகவே வலியப் போந்து என் கையைப் பற்றி யீர்த்தும், சமிக்ஞை செய்தும் இச்சையைத் தூண்டும் சொற்களாற் பன்முறை மொழிந்தும், பொய் பல புகன்றும், ஆணையிட்டும், மேல் வீழ்ந்தும், நற்பொருள்களை மிகத் தந்தும், என்னை மயக்க முயன்றனர்; ஆயினும் யான் அவர்களைக் கலந்ததில்லை; அவர்களைக் கண்டு மனம் நடுங்கினேனேயன்றி ஒரு சொல்லும் கடிந்து பேசியதில்லை எ.று.

வைகுதல் - தங்குதல். எழில் - இயற்கை யழகு. சைகை உள்ளக் குறிப்பைப் புலப்படுப்பனவாதலால், "சைகை வேறுரைத்தும்" என வுரைக்கின்றார். சரச வார்த்தைகள், காம விச்சையைத் தூண்டும் சொற்கள். பலவிசை - பலமுறை. அறிதல் - ஈண்டு மனக் கருத்தை அறிவித் தறிதலை

யுணர்த்துகின்றது. கைகலப்பு - கலந்து மகிழ்தல். இச்செய்கைகளால் மனத்தின்கண் வெறுப்பும் வெகுளியும் உண்டாயினும், அவர்களைக் கடிந்து ஒருசொல்லும் வள்ளற் பெருமான் உரைத்ததில்லை என்பது விளங்க, "அவரைக் கடிந்ததும் இல்லை நீ அறிவாய்" எனக் கூறுகின்றார்.

இதனால், வலிந்து போந்து கூட விழைந்த மகளிர்பால் நடந்து கொண்ட திறம் எடுத்தோதியவாறும். (53)

3463. எளியரை வலியார் அடித்தபோது ஐயோ
என்மனம் கலங்கிய கலக்கம்
தெளியநான் உரைக்க வல்லவன் அல்லேன்
திருவுளம் அறியுமே எந்தாய்
களியரைக் கண்டு பயந்தஎன் பயந்தான்
கடலினும் பெரியது கண்டாய்
அளியர்பால் கொடியர் செய்தவெங் கொடுமை
அறிந்தஎன் நடுக்கம்ஆர் அறிவார்.

உரை : எந்தையாகிய ஈசனே, வலி மிக்கவர் எளியவர் செய்த தவற்றுக்காக அடித்த போது நான் கண்டு மனத்திற் கொண்ட கலக்கத்தைத் தெளிவான சொற்களால் உரைக்க முடியாதவனாக வுள்ளேன்; இதனை தேவரீருடைய திருவுள்ளம் நன்கறியும்; கள்ளுண்டவரைக் கண்டு நான் பயந்ததுண்டு; அது கடலினும் பெரிதாகும்; இரங்கத் தக்க மெலிய வர்க்குக் கொடியவர்கள் செய்த வெவ்விய கொடுமையை அறிந்த போது என் மனம் கொண்ட நடுக்கத்தை யாவராற் சொல்ல முடியும். எ.று.

எளியர் - மெய் வலியும் பொருள் வலியும் இல்லாதவர். மனத்தில் உண்டாகும் அளவிறந்த கலக்கம் மெய்வலியைச் சிதைப்பதால் "தெளிய நானுரைக்க வல்லவனல்லேன்" எனவும், தமது உரையின் மெய்ம்மையை வலியுறுத்த "திருவுளம் அறியுமே" எனவும் உரைக்கின்றார். களியர் - கள்ளுண்பவர். அச்சத்தின் பெருமையை யுணர்த்தற்கு "என் பயம் தான் கடலினும் பெரியது கண்டாய்" என்று கூறுகின்றார். அளியர் - கண்டார் இரங்கத் தக்க மெலிவுற்றவர். வெங்கொடுமை பொறுக்க மாட்டாத வெவ்விய தீமை.

இதனால், எளியவர் அளியர் முதலாயினோர்க்குத் தீயவர் செய்யும் தீமை கண்டு அஞ்சிய திறம் தெரிவித்தவாறும். (54)

3464. இரவிலே பிறர்தம் இடத்திலே இருந்த
இருப்பெலாம் கள்ளர்கள் கூடிக்
கரவிலே கவர்ந்தார் கொள்ளைஎன் றெனது
காதிலே விழுந்தபோ தெல்லாம்
விரவிலே நெருப்பை மெய்யிலே மூட்டி
வெதுப்பல்போல் வெதும்பினேன் எந்தாய்
உரவிலே ஒருவர் திடுக்கென வரக்கண்
டுளம்நடுக் குற்றனன் பலகால்.

உரை : பிறர்தம் வாழ்வுக்காகத் தொகுத்து வைத்திருந்த பொருளை இரவுப் பொழுதில் கள்ளர்கள் புகுந்து மறைவாகக் கவர்ந்து கொண்டு கொள்ளையடித்துக் கொண்டு போய் விட்டார்கள் என்று மற்றவர்கள் பேசிக் கொள்வதை நான் காதிலே கேட்ட போதெல்லாம் விரைந்து என் உடல் முழுதும் நெருப்பை மூட்டி வைப்பது போல வெந்து நொந்தேன்; அதனோடு உரத்த ஓசையுடன் ஒருவர் திடீரென வந்த போது எல்லாம் நான் அதிர்ந்து உடல் நடுங்கினேன். எ.று.

இருப்பு என்பது வாழ்க்கைக்கு வேண்டுமென எனச் சேர்த்து வைக்கும் பொருள்கள்; குறிப்பு மொழி. கரவு - மறைவு; வஞ்சனையுமாம். கவர்ந்து கொண்ட திறத்தையும் அதனால் பொருளையிழந்தவன் படும் துன்பத்தையும், பிறர் வள்ளலார்பால் உரைத்ததை எடுத்தோதுகின்றாராதலால், "எனது காதிலே வீழ்ந்த போதெல்லாம்" என ஓதுகின்றார். விரைவு - எதுகை நோக்கி விரவு என வந்தது. வெதுப்புதல், கொளுத்துதல். உரவு - வலிமை. உரவில் வருதலாவது உரத்த ஒலியுடன் வருதல்.

இதனால் திடுக்கிடும் நிகழ்ச்சிகளால் வள்ளலார் உள்ளம் பதறிய திறம் இசைத்தவாறும். (55)

3465. உரத்தொரு வருக்கங் கொருவர் பேசியபோ
துள்ளகம் நடுங்கினேன் பலகால்
கரத்தினால் உரத்துக் கதவுதட் டியபோ
தையவோ கலங்கினேன் கருத்தில்
புரத்திலே அம்மா அப்பனே ஐயோ
எனப்பிறர் புகன்றசொல் புகுந்தே
தரத்தில்என் உளத்தைக் கலக்கிய கலக்கம்
தந்தைநீ அறிந்தது தானே.

உரை : உரத்த குரலுடன் ஒருவருக் கொருவர் பேசிக் கொண்டதைக் கேட்ட போதெல்லாம் பன்முறையும் நான் மனம் நடுங்கினேன்; வருபவர் வீட்டின் கதவை உரமாகக் கையினால் தட்டிய போது நான் மனம் திடுக்கிட்டு அஞ்சினேன்; வீட்டிற்குள் எவரேனும் அம்மா, அப்பா, ஐயோ என்று சொல்லிக் கொள்ளும் சொற்கள் என் செவியில் புகுந்து எனது மனதைக் கலக்கிய கலக்கத்தை என் தந்தையாகிய நீ நன்கறிவாய். எ.று.

உரத்துப் பேசிய - மிக்க ஓசையுடன் பேசிக் கொள்வது. கரம் - கை. புரம் - வீட்டின் உட்புறம். இதனை அந்தப்புரம் என்பது வழக்கம். அம்மா, அப்பா, ஐயோ என்னும் சொற்கள் மனவருத்தத்தைப் புலப்படுத்துதலாதலால், "உளத்தைக் கலக்கிய கலக்கம்" என்று கூறுகின்றார்.

இதனால், உரத்த குரல்களும் உரத்த ஓசைகளும் வள்ளலாருக்கு அதிர்ச்சி பயந்தமை தெரிவித்தவாறும். (56)

3466. மண்ணினீள் நடையில் வந்தவெந் துயரை
மதித்துளம் வருந்திய பிறர்தம்
கண்ணினீர் விடக்கண் டையவோ நானும்
கண்ணினீர் விட்டுளங் கவன்றேன்
நண்ணினின் றொருவர் அசப்பிலே என்னை
அழைத்தபோ தடியனேன் எண்ணு
தெண்ணியா துற்ற தோஎனக் கலங்கி
ஏன்எனல் மறந்தனன் எந்தாய்.

உரை : நிலத்தின் மேல் நெடிது வந்தமையால் உண்டாகிய வெவ்விய வருத்தத்தைப் பிறர் நினைத்துச் சொல்லி வருந்திக் கண்களில் நீர் சொரியக் கண்டு நானும் கண்ணீர் விட்டு மனம் வருந்தினேன்; ஒருவர் என்னருகில் வந்து எனது அயர்விலே உரத்த குரலால் அழைத்த போது அடியவனுகிய நான் திடுக்கிட்டு எண்ணுதன வெல்லா மெண்ணி இவருக்கு யாது தீங்கு உண்டாயிற்றே என மனம் கலங்கி ஏன் என்று சொல்லக் கூட மறந்து விட்டேன்; இவை யெல்லாம் தேவரீர் நன்கு அறிந்தவை. எ.று.

மண்ணில் நீள்நடை - நிலத்தில் நெடுந் தூரம் நடத்தல். நடந்ததால் வந்த துன்பத்தை "நடந்த வெந்துயர்" என உரைக்கின்றார். மதித்தல் - நினைத்தல். பிறரது துன்பக் கண்ணீர் கண்டவிடத்து மென்மை மன முடையார்க்குக் கண்ணீர் பெருகுமாதலின், "நானும் கண்ணினீர் விட்டுளம் கவன்றேன்" என்று கூறுகின்றார். கவலுதல் - வருந்துதல். அசப்பு - அயர்ச்சி. எண்ணு து எண்ணுதல் - நினைத்தற்காகாத துன்பங்களை நினைத்தல்.

இதனுல், துயர் கேட்டும் அயர்வில் எய்திய குரல் கேட்டும் வள்ளலார் மனம் அதிர்ந்து கவன்ற திறம் கூறியவாறும். (57)

3467. தேட்டிலே மிகுந்த சென்னையில் இருந்தால்
சிலுகுறும் என்றுளம் பயந்தே
நாட்டிலே சிறிய ஊர்ப்புறங் களிலே
நண்ணினேன் ஊர்ப்புறம் அடுத்த
காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க்
களத்திலே திரிந்துற்ற இளைப்பை
ஏட்டிலே எழுத முடியுமோ இவைகள்
எந்தைநீ அறிந்தது தானே.

உரை: செல்வம் தேடுவதிலே மிக்க கருத்துடன் இருக்கும் சென்னையில் இருந்தால் உள்ளத்தின் பண்பு சுருங்கி விடும் என்று பயந்து நாட்டில் உள்ள சிறிய ஊர்ப்புறங்களை யடைந்தும், அவற்றை யடுத்த காடுகளிலும், பருக்கைக் கற்கள் நிரம்பிய நிலங்களிலும், புன்செய்க் கொல்லைகளிலும் திரிந்தும் நான் அடைந்த இளைப்பை ஏடுகளில் எழுத முடியாது; இவைகளை எந்தையாகிய நீ அறிவாய். எ.று.

தேடப் படுவது பற்றிச் செல்வம் 'தேட்டு' எனப்படுகிறது; ஆடுவது ஆட்டு என்றுற் போல. தீயார் தேட்டைத்தயார் கொள்வர் என்பதும் இவ் வாய்பாட்டைச் சேர்ந்தது. பொன்னும் பொருளுமாகிய செல்வத்தை ஈட்டுகின்ற நெறியில் சிந்தை செல்லுகின்ற போது வேறு பல விரிந்த பண்புகளில் சிந்தையின் செம்மைப் பண்பு சுருங்கி விடுதலின், "சிலுகுறும்" என்று செப்புகின்றார். சிறுகும் என்னும் பொருளதாகிய சில் குறும் என்னும் சொல் சிலு குறும்என வந்துளது. சென்னே என்பது ஆகு பெயரால் சென்னேயில் வாழும்மக்கள் கூட்டத்தைக் குறிக்கின்றார். சிறிய ஊர்களில் உள்ள மக்கள் மனம்தமக்குரிய மக்கட் பண்பின் மாண்பு குறை யாமையின் " சிறிய ஊர்ப்புறங்களிலே நண்ணினேன்'என நவில்கின்றார். பருக்கைக் கற்கள் நிறைந்த நிலப்பகுதியை, "பருக்கைக் கல்" எனக் கூறுகின்றார். புன் செய்க் காடுபுன் செய்க்களம் எனப்படுகிறது. இவைகள் பண்பட்ட நிலப்பகுதிகள் அல்லவாய் இப்பகுதிகளில் வாழும் மக்களும் மிகுந்த மனப்பண்பு இல்லாதவராதலின் இப்பகுதிகளில் திரிந்து மெலிந்து வருந்தினேன் என்பாராய், "திரிந்துற்ற இளைப்பை ஏட்டிலே எழுத முடியு மோ" எனவும், இக்கூற்றின் வன்மையை வற்புறுத்துதற்கு "இவைகள் எந்தை நீ அறிந்தது தானே"என்று கூறுகின்றார்.

இதனால், வள்ளற் பெருமான் சென்னே வாழ்வை நீங்கியதற்கு அமைந்த காரணம் தெரிவித்தவாறும். (58)

3468. என்புடை வந்தார் தம்முகம் நோக்கி
என்கொலோ என்கொலோ இவர்தாம்
துன்புடை யவரோ இன்புடை யவரோ
சொல்லுவ தென்னேயோ என்றே
வன்புடை மனது கலங்கிஅங் கவரை
வாஎனல் மறந்தனன் எந்தாய்
அன்புடை யவரைக் கண்டபோ தெல்லாம்
என்கொலோ என்றயர்ந் தேனே.

உரை: என்பால் வந்தவர்களின் முகத்தைப் பார்த்து இவர்களுக்கு வந்துற்றது என்னேயோ, இவர்கள் மனத்தில் துன்புற்றவர்களோ இன்ப முடையவர்களோ, அவர்கள் சொல்லுவது என்னேயோ, எனப் பலப்பட நினைந்து வன்மையுற்ற என் மனம் கலக்க முற்றதனல் அவர்களை வாவென்று கூடச் சொல்ல மறந்தேன்; என்பால் அன்புடையவர்களைக் கண்ட போதும் அவர்களுக்கு உற்றது என்னேயோ? என்று நினைந்து மனம் தளர்ந்தேன். எ.று.

வள்ளற் பெருமானைக் காண வந்தவருடைய முகத்தைப் பார்த்து அவர்கள் யாது குறித்து வந்தனர் என அறியாமையினல் மனத்தில் எழுந்த எண்ணங்களை, "என்கொலோ என்கொலோ இவர்தாம் துன்புடையவரோ, இன்புடையவரோ,சொல்லுவ தென்னேயோ என்றே கலங்கி" என வுரைக்கின்றார். பலவேறுபட்ட இவ்வெண்ணங்களால் மனம் உறைப்புண்டமை தோன்ற "வன்புடை மனது" என்று சொல்லு கின்றார். அதனுடைய கலக்கத்தால் வருவாரை வா வென்றற்கும்

இயலா தொழிவதை நீனந்து, "வாவெனல் மறந்தனன்" என்று கூறுகின்ருர். அன்பயிானுரர் வழக்கம் போல் தம்பால் வந்த போதும் அவர்கட்கு என்ன நேர்ந்ததோ என்று ஓர் எண்ணம் வள்ளலார் உள்ளத்தில் தோன்றி யகீலத்தமை குறிப்பாராய், "அன்புடையவரைக் கண்ட போதெல்லாம் என்கொலோ என்று அயர்ந்தேனே" என்று அவலிக்கின்ருர்.

இதனுல், தம்பால் வருபவர் மனநிகீலயை அறிய மாட்டாது வேறு வேறு நினைந்து வருந்திய திறம் விளம்பியவாரும். (59)

3469. காணுறு பசுக்கள் கன்றுகளாதி
கதறிய போதெலாம் பயந்தேன்
ஏணுறு மாடு முதல்பல விருகம்
இனைத்தவை கண்டுளம் இனைத்தேன்
கோணுறு கோழி முதல்பல பறவை
கூவுதல் கேட்டுளங் குலைந்தேன்
வீணுறு கொடியர் கையிலே வாளை
விதிர்த்தல்கண் டென்என வெருண்டேன்.

உரை: காணப்படுகின்ற பசுக்களும், அவற்றின் கன்றுகள் முதலி யனவும் கதறிய குரல் கேட்கும், போதும், வலீமை மிக்க ஏனை மாடுகள் முதலாகவுள்ள பலவகை மிருகங்கள் இனைத்துத் தோன்றிய போதும், வனைந்த உடம்பையுடைய கோழி முதலிய பலவகைப் பறவைகள் கூவும் போதும் என்னுள்ளம் அமைதி குலைந்து வருந்தும்; வீண் செயல் புரிகின்ற கொடியவர்கள் கையிலே வாட்படை ஒளிர்வது கண்டால் என்செய்வரோ வென அஞ்சினேன். எ.று.

மக்கள் வாழு மிடங்களி லெல்லாம் காணப்படுவது பற்றிக் "காணுறு பசுக்கள்" என்றும், இடையூறு நேர்ந்தாலன்றிப் புலம்புத லில்லாத அவை கதறுகிற போது என் மனம் கலங்கிற்று என்பார், "பசுக்கள் கன்றுகளாதி கதறிய போதெலாம் பயந்தேன்" என்று கூறுகின்ருர். ஏண் - வலிமை. மிருகம் - விருகம் என வந்தது. போதிய உணவின்மையால் மெலிந்து தோன்றும் அவற்றைக் கண்ட போதெல்லாம் வள்ளலார் மனம் வருந்திய இயல்பை, "இனைத்தவை கண்டு உளம் இனைத்தேன்" என இயம்புகின்ருர். கோழி முதலிய பறவைகளின் கூக்குரலும் வள்ளலார் மனத்தை வருத்தின என்பார், கூவுதல் கேட்டுளம் குலைந்தேன்" என மொழிகின் ருர். கையில் வாள் ஏந்துபவர் உயிர்க்கொலை செய்யும் இயல்பினரா தலால், அவர்களை "வீணுறு கொடியர்" என்றும், அவர்களுடைய கூரிய கைவாள் கொலை செய்யும் பண்பினராதல் பற்றி அதைக் காணும் போதே வள்ளலார் கொண்ட அச்சத்தை, "வாளை விதிர்த்தல் கண்டு என்னென வெருண்டேன்" என்றும் கூறுகின்ருர். விதிர்த்தல் - ஒளிர்தல். வெருளுதல் - அஞ்சுதல்.

இதனுல், பசு முதலியனவும் கோழி முதலியனவும் பிற விலங்குகளும் வருந்துதல் கண்டு வருத்திய மனப்பான்மை எடுத்தோதியவாரும். (60)

3470. பிதிர்ந்தமண் உடம்பை மறைத்திட வலியார்
பின்முன்நோக் காதுமேல் நோக்கி
அதிர்ந்திட நடந்த போதெலாம் பயந்தேன்
அவர்புகன் றிட்டதீ மொழிகள்
பொதிந்திரு செவியில் புகுந்தொறும் பயந்தேன்
புண்ணியா நின்துதி எனும்ஓர்
முதிர்ந்ததீங் கனியைக் கண்டிலேன் வேர்த்து
முறிந்தகாய் கண்டுளம் தளர்ந்தேன்.

உரை : புண்ணியப் பொருளாகிய சிவனே, மிதித்தலால் பிதிர்ந்த மண் பொடி எழுந்து பாவி மேனியை மறைக்குமாறு பின்னும் முன்னும் நோக்காமல் மேனேக்கி நிலம் அதிரும்படி வலிய வுடம்பினர் நடக்கும் போதெல்லாம் கண்டும், அவர்கள் வாயாற் சொல்லிய தீச்சொற்கள் என் செவிகளில் நிறைந்து புகும் போதும் நான் மிகவும் அஞ்சினேன்; நின்னைப் பரவித் துதிக்கும் துதி யெனப்படும் பழுத்த இனிய கனிகள் போன்ற சொற்களைக் காணுமல், வெம்பிக் கெட்ட காய் போன்ற சொற்களையே கேட்டு மனம் சோர்ந்தேன், காண். எ.று.

காலடியின் கனம் பொருது சிதறிப் பரக்கும் மண் பொடியை, "பிதிர்ந்த மண் உடம்பை மறைத்திட" என்றும், முன்பின் நோக்கியும் நிலத்தைப் பார்த்ததும் நடப்பது முறையாகவும், அவ்வாறின்றி மேனேக்கி நடக்கும் நடையை, "முன்பின் நோக்காது மேனேக்கி" என்றும், நிலம் அதிர நடப்பது தீதெனக் கருதாமல் "அதிர நடந்த போதெல்லாம் என்றும், இக்குற்ற நடையை மேற் கொண்டவர் களைக் கண்ட போதெல்லாம் நெஞ்சு நடுங்கிய திறத்தைக் "கண்ட போதெல்லாம் பயந்தேன்" என்றும் இயம்புகின்ருர். இத்தகைய நடை யினர் வாயில் வெவ்விய சொற்களே பேசப்படுதலால், அவை தம் செவி நிறையத் தோன்றி போதெல்லாம் வள்ளற் பெருமான் அஞ்சிய நிலையை, "அவர் புகன்றிட்ட தீ மொழிகள் பொதிந் திரு செவியிற் புகுந்தொறும் பயந்தேன்" என்று புகல்கின்ருர். இன்சொற்களைக் கனி யெனவும், வன் சொற்களைக் காய் எனவும் குறிக்கும் மரபு பற்றி, "நின் துதியெனு மோர் முதிர்ந்த தீங்கனியைக் கண்டிலேன்" எனவும், வன்சொற்களை "வேர்த்து முதிர்ந்த காய்" எனவும் கூறுகின்ருர். வேர்த்தல் - வெம்புதல்.

இதனுல், அதிர்ந்த நடையும் வெஞ் சொல்லும் கண்டும் கேட்டும் வள்ளற் பெருமான் வருந்திய திறம் கூறியவாரும். (61)

3471. வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினுல் இளைத்தே
வீடுதோ ரறிந்தும் பசியரு தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றேர்என்
நேர்உறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைகளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.

உரை : தண்ணீரின்றி வாட்ட முற்ற பயிர்களைக் கண்ட போதும், பசியால் மேனி மெலிந்து வீடு தோறும் சென்றிரந்தும் பசி நீங்காது வருந்தும் வறியரைப் பார்த்தும், நெடிது நின்று வருத்தும் பிணிவுடையராய்த் துன்புறுவோர் கண்ணெதிர் தோன்றக் காணினும் மனம் மிக வருந்தி நொந்தேன்; ஒப்பற்ற மானமுடையராய் வறுமை யெய்தினமையால் உள்ள முடைந்து மெலிந்தவர்களைக் கண்டு மெலிவுற்றேன். எ.று.

மழை யின்மையாலும் வெயில் வெம்மையாலும் நெல்லும் புல்லுமாகிய பயிர்கள் வாடி யுலர்வது காண வள்ளலார் உள்ளம் வருந்திய இயல்பை, "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" எனவும், பசித் தீ வெதுப்புவதால் வீடு தோறும் சென்று இரந்தும் பெற்றது நிரம்பாமையால் வருந்தும் வறியவர்களை, "பசியினால் இளைத்து வீடுதோ றிரந்தும் பசியருது அயர்ந்த வெற்றர்" எனவும் உரைக்கின்றார். வெற்றர்- வெறுமை யுடையவர். வீடு தோறும் சென்று இரந்தும் போதிய உணவு பெறுமை, இன்மையின் கொடுமை மிகுதியைக் குறிக்கிறது; அந்நிலைமை நினைக்கும் நெஞ்சினை வருத்துவதாகலின், "கண்டு உளம் பதைத்தேன்" என வுரைக்கின்றார். நெடுநாட்களாகியும் நீங்காப் பிணியால் துன்புறுவோரை, "நீடிய பிணியால் வருந்துகின்றோர்" என்றும், அவரை நேரிற் காண்பது காண்போர் மனத்தை நோயுறுவிக்குமாதலின், "நேருறக் கண்டுளம் துடித்தேன்" என்றும் எடுத்தோதுகின்றார். ஈடு - ஒப்பு. மானக்கேடு வரின் நல்லோர் உயிர் துறப்பராதலின், அவர்களை "ஈடில் மானிகள்" எனப் புகழ்கின்றார். ஒருவர்பால் ஒன்று இரத்தற்கு மனம் செல்லாத உயர்ந்தோர் வறுமையுற்று வாடுவது மிக்க துன்பமா தலின், "ஈடில் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சு இளைத்தவர்தமைக் கண்டு இளைத்தேன்" என இயம்புகின்றார்.

இதனால், வறுமையால் வாடுவோர் நிலை கண்டு வள்ளற் பெருமான் வாடிய திறம் கூறியவாறும். (62)

3472. நலிதரு சிறிய தெய்வமென் றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே
புந்திநொந் துளநடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்
கண்டகா லத்திலும் பயந்தேன்.

உரை : துன்புறுத்தும் சிறுதெய்வ மெனச் சொல்லி நாட்டிலுள் ளோர் பல தெய்வங்களின் பெயரைத் தோற்றுவித்து அவற்றிற்குப் பலி யிடற் பொருட்டுப் பன்றி, ஆடு, கோழி, எருமைக்கடா முதலியவற்றை அலங்கரித்துக் கொண்டு போவதைப் பார்த்து மனம் நொந்து நடுங்கி னேன்; தீது தரும் சிறு தெய்வங்களின் வெவ்விய கோயில்களைக் கண்ட போது நான் அஞ்சினேன். எ.று.

இவ்விடையூறு நீங்கின் இன்னது பலி யிடுவேன் என நேர்ந்து கொள்வது சிறு தெய்வ வழிபாட்டினர் இயல்பு; அது செய்யாவிடில் அச்சிறு தெய்வம் துன்புறுத்தும் என்பது அவர்தம் கொள்கையாதலின், "நலிதரு சிறிய தெய்வம்" என்று குறிக்கின்றார். பல தெய்வக் கொள்கை மெய்ந் நூல்கட்குப் புறம்பாயினும் நாட்டில் உள்ளவர் சமயக் கல்வியின் மையாற் படைத்துக் கொள்ளப்பட்ட தாகலின், "நாட்டிலே பல பெயர் நாட்டி" என வுரைக்கின்றார். நாடுதோறும் ஊர் தோறும் சிறுதெய்வங் கள் பலவாகக் காணப்படுதலால், "பல பெயர் நாட்டி" என நவில்கின்றார். குக்குடம் - கோழி. பலிக்கடா - பலியிடுதற் கென்று கொழுக்க வளர்க்கப் படும் ஆட்டுக்கடா, எருமைக்கடா, முதலியனவாகும். கடா - நூல்களிற் கிடாய் எனவும் வழங்கும். பலியிடும் நாளில் அவற்றை நீராட்டிப் பொட்டிட்டு மாலையணிந்து கொண்டு போதலின், "பொலிவுறக் கொண்டே போகவும் கண்டு" என்றும், அது காண மனம் பொருத தன்மையைப் "புந்தி நொந்து உளம் நடுக்குற்றேன்" என்றும் இசைக் கின்றார். புந்தி - புத்தி. கலி- துன்பம். சிறு தெய்வங்களின் கோயில்கள் பலவுயிர்கட்குக் கொலைக் களமாதல் பற்றிச் "சிறியதெய்வ வெங்கோயில்" என்று பழிக்கின்றார்.

இதனால், சிறு தெய்வங்கட்கு உயிர்ப் பலியிடுவதை வள்ளற் பெரு மான் வெறுத்துரைக்கும் திறம் உரைத்தவாரும். (63)

3473. துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெலாம் பயந்தேன்
கண்ணிணல் ஐயோ பிறஉயிர் பதைக்கக்
கண்டகா லத்திலும் பதைத்தேன்
மண்ணினில் வலையும் தூண்டிலும் கண்ணி
வகைகளும் கண்டபோ தெல்லாம்
எண்ணிஎன் உள்ளம் நடுங்கிய நடுக்கம்
எந்தைநின் திருவுளம் அறியும்.

உரை : கொடியவர்கள் மக்களல்லாத பிறவுயிர்களை அச்சுறக் கொல்லத் தொடங்கிய போதும், அவ்வுயிர்கள் கொலையுண்டு துடிப்ப தைக் கண்களாற் கண்டபோதும், ஐயோ, நான் மனம் துடித்தேன்; நிலத்தின் மேல் வேட்டைக் குரிய வலைகளையும் தூண்டிலையும் கண்ணி வகைகளையும் பிறர்பால் இருக்கக் கண்ட காலங்களில் அவற்றுற் கொல்லப்படும் உயிர்களை நினைந்து என் மனம் எய்திய நடுக்கத்தைத் தேவரீரது திருவுள்ளம் நன்கு அறியுமன்றே. எ.று.

கொடியவர் - உயிர்க் கொலை செய்யும் கொடுமைப் பண்புடையவர். கொலைத் தொழில் காண்பார்க்கு அச்சம் தருவதாகலின், "துண்ணென" எனச் சொல்லுகின்றார். கொல்லப்பட்ட வுயிர்கள் உயிர்ப் பொடுங்குங் காறும் துடித்தல் இயல்பாதலால், "பிறவுயிர் பதைக்கக் கண்ட காலத் திலும் பதைத்தேன்" என இயம்புகின்றார். பதைத்தல் - துடித்தல். தமது கூற்றின் உண்மையை வலியுறுத்தற்கு "மண்ணினில்" என்று கூறு கின்றார். கண்ணி - பறவைகளைப் பிடிக்கும் வலைவகை. தூண்டில் - மீன்

பிடிக்கும் கருவி வகை. வலை முதலியவற்றைக் காணும் போது அவற்றுல் கொலையுண்ணும் உயிர்களை அருளாளர் உள்ளம் இரக்க மிகுதி யால் எண்ணி வருந்துமாதலின், "எண்ணி" என வுரைக்கின்ருர்.

இதனுல், உயிர்க் கொலைக்குரிய கருவிகளைக் கண்டு வள்ளற் பெரு மான் கொண்ட வருத்த மிகுதி குறித்தவாரும். (64)

3474. நடுநிலை இல்லாக் கூட்டத்தைக் கருணை
நண்ணிடா அரையரை நாளும்
கெடுநிலை நினைக்கும் சிற்றதி காரக்
கேடரைப் பொய்யலால் கிளத்தாப்
படுநிலை யவரைப் பார்த்தபோ தெல்லாம்
பயந்தனன் சுத்தசன் மார்க்கம்
விடுநிலை உலக நடைஎலாங் கண்டே
வெருவினேன் வெருவினேன் எந்தாய்.

உரை : நேர்மையில்லாத மனத்தையுடைய கூட்டத்தாரையும், இரக்கமில்லாத அரசர்களையும், எப்பொழுதும் பிறர்க்குக் கேடு நினைக்கும் சிற்றதிகாரம் செலுத்தும் கெடுமதியாரையும், பொய்யல்லது சொல்லாத கீழ்மை மக்களையும் பார்த்த போதெல்லாம் மனத்தில் அச்ச முற்றேன்; சுத்த சன்மார்க்க நெறியைக் கைவிட்ட உலக நடைகள் பலவற்றையும் கண்டு நான் மிகவும் அஞ்சினேன். எ.று.

நடுநிலை - நடுவு நிலைமை; நீதி நெறியுமாம். உள்ளத்தில் அருட்பண் பில்லாத கொடிய அரசர்கள் வாழ்ந்த காலமாதலின் வள்ளற் பெருமான் அச்சிற்றரசர்களை, "கருணை நண்ணிடா அரையர்" என்றும், அவர்கள் கீழிருந்து பணி புரியும் அதிகாரிகள் சிலர், பிறர்க்குக் கேடு செய்வதே தொழிலாக மேற்கொண்டிருந்தமையால், "நாளும் கெடுநிலை நினைக்கும் சிற்றதிகாரக் கேடர்" என்று பழிக்கின்ருர். கேடர் - கேடு செய்பவர். நாளும் பொய்யேயுரைத்துத் தமக்கும் பிறர்க்கும் கேடு விளைப்பவரை, "பொய்யலால் கிளத்தாப் படுநிலை யவரை" என்று தூற்றுகின்ருர். படுநிலை - கீழ்மை நிலை. தூய சிவஞான நெறியைச் சுத்த சன்மார்க்க என்பர். அந்நெறியினின்றும் நீங்கிய உலகியல் வாழ்வு வள்ளற் பெருமான் உள்ளத்தை வருத்தினமையால், "உலகநடையெலாம் கண்டு வெருவி னேன்" என வுரைக்கின்ருர்.

இதனுல், சுத்த சன்மார்க்கமில்லாத உலகியலை வள்ளலார் விரும் பாமை விளங்கியவாரும். (65)

3475. ஓங்கிய திருச்சிற் றம்பல முடைய
ஒருதனித் தலைவனே என்னைத்
தாங்கிய தாயே தந்தையே குருவே
தயாநிதிக் கடவுளே நின்பால்

நீங்கிய மனத்தார் யாவரே எனினும்
அவர்தமை நினைத்தபோ தெல்லாம்
தேங்கிய உள்ளம் பயந்தனன் அதுநின்
திருவுளம் அறியுமே எந்தாய்.

உரை : உயர்ந்த தில்லைச் சிற்றம்பலத்தையுடைய ஒப்புயர்வற்ற சிவபெருமானே, அடியவனுகிய என்னைத் தாங்கி யருள்கின்ற தாயும் தந்தையும் குருவுமாகியவனே, திருவருட் செல்வக் கடவுளே, நின்பால் அன்பு நீங்கிய மனமுடையவர் யாவராயினும் அவர்களை நினைக்கும் போதெல்லாம் உள்ளம் தியங்கி அஞ்சினேன்; இது தேவரீரது திருவுள்ளம் அறிந்ததன்றே. எ.று.

இயற்கை வளத்தாலும் திருவருள் நலத்தாலும் உயர்ந்த திருப்பதியாகலின், "ஓங்கிய திருச்சிற்றம்பலம்" என்று சிறப்பிக்கின்றார். ஒப்பற்ற முழுமுதற் கடவுளாதலின், "ஒரு தனித் தலைவனே" எனவுரைக்கின்றார். உலகிற் பிறந்து வளர்ந்து சிறத்தற்கு உறுதுணையாதலால், "என்னைத் தாங்கிய தாயே தந்தையே குருவே" என்று போற்றுகின்றார். பேரருட் பரம்பொருளாதல் பற்றி, "தயாநிதிக் கடவுளே" என்று சாற்றுகின்றார். திருவருட் செல்வனுகிய சிவனை நினையாதவரை, "நீங்கிய மனத்தார்" என்றும், அவர்கள் உயர்ந்த குலத்துத் தனிநிலைச் செல்வராயினும், அருளில்லாத வன்கண்ணராதலின், அவரை நினைத்தல் தீதாமென்பது பற்றி, "யாவரே யெனினும் அவர்தமை நினைத்த போதெல்லாம் தேங்கிய வுள்ளம் பயந்தனன்" என்றும் தெரிவிக்கின்றார். நினைத்தற்கண் செல்லாமல் சுழித்தலால் "தேங்கிய வுள்ளம்" எனக் கூறுகின்றார்.

இதனுற் சிவனை நினையாதவரை நினைத்தற்கு வள்ளற் பெருமான் அஞ்சும் திறம் கூறியவாறும். (66)

3476. காட்டுயர் அணைமேல் இருக்கவும் பயந்தேன்
காலின்மேல் கால்வைக்கப் பயந்தேன்
பாட்டயல் கேட்கப் பாடவும் பயந்தேன்
பஞ்சணை படுக்கவும் பயந்தேன்
நாட்டிய உயர்ந்த திண்ணைமேல் இருந்து
நன்குறக் களித்துக் கால்கீழே
நீட்டவும் பயந்தனன் நீட்டிப்பே சுதலை
நினைக்கவும் பயந்தனன் எந்தாய்.

உரை : உயர்த்திக் காட்டுகின்ற இருக்கையில் அமர்தற்கும், கால் மேற் கால் வைத்து இருத்தற்கும், அயலவர் கேட்குமாறு பாடுதற்கும், பஞ்சு திணித்த படுக்கையிற் படுத்தற்கும், மனைப்புறத்தே உயரமாகச் சமைத்த திண்ணை மேல் அமர்ந்து மகிழ்வு மிகுந்து இருகால்களையும் நீட்டித் தொங்க விட்டிருத்தற்கும், நெடிது நேரம் நீட்டிப் பேசுதற்கும் நான் அஞ்சினேன்; இது தேவரீர் அறிந்ததன்றே. எ.று.

மனம் விரும்பிச் சிறப்பாக வீற்றிருக்கச் செய்த அழகிய இருக்கை எனப் புலப்படுத்தற்குக் "காட்டுயர் அணை" எனக் கூறுகின்றார். கால்மேல் கால் வைத்திருத்தல் இருப்பாரது மனச் செம்மாப்பைத் தெரிவிப்பது

பற்றிக் "காலின் மேற் கால் வைக்கப் பயந்தேன்" என்று கட்டுரைக் கின்றார். கேட்பார் புகழ்தற்கும் இகழ்தற்கும் ஏதுவாதலால், "பாட்டியல் கேட்கப் பாடவும் பயந்தேன்" எனவும், பஞ்சணை நெடிய உறக்கத்தை யும் காம நினைவுகளையும் நெஞ்சில் தோற்றுவித்தலால், "பஞ்சனை படுக்க வும் பயந்தேன்" எனவும் பகர்கின்றார். வீடுகட்குப் புறத்தே உயரமாக வேண்டு மென்றே செய்தமைத்த திண்ணை யென்றற்கு "நாட்டிய திண்ணை" என்றும், காலைத் தொங்க விட்டிருத்தல், அடக்கமின்மையைப் புலப்படுத்து மென்பவாகலின், "நன்குறக் களித்துக் கால் கீழே நீட்டவும் பயந்தேன்" என்றும், நீட்டிப் பேசுதல் நிரம்பிய கல்வி யில்லாமையை வெளிப்படுத்துதலால், "நீட்டிப் பேசுதலை நினைக்கவும் பயந்தனன்" என்றும் இயம்புகின்றார்.

இதனால் வள்ளற் பெருமானது உயர்ந்த மனவடக்கம் தெரிவித் தவாறும். (67)

3477. தலைநெறி ஞான சுத்தசன் மார்க்கம்
சார்ந்திட முயலுரு தந்தோ
கலைநெறி உலகக் கதியிலே கருத்தைக்
கனிவுற வைத்தனர் ஆகிப்
புலைநெறி விரும்பி னுர்உல குயிர்கள்
பொதுஎனக் கண்டிரங் காது
கொலைநெறி நின்றார் தமக்குளம் பயந்தேன்
எந்தைநான் கூறுவ தென்னே.

உரை: தலைமை நெறியாகிய சுத்த ஞான சன்மார்க்கத்தை மேற் கொண்டு அந்நெறிக்கண் தக்காங்கு முயலாமல் உலகியலாகிய கலைநெறி காட்டும் வழியில் கருத்தைப் பொருந்த வைத்தவராய், கொலை நெறியை விரும்புகின்றவர்களையும் உலகில் உயிர் வகைகள் அனைத்தும் பொது வெனக் கொள்ளாது இரக்கமின்றிக் கொலை நெறியில் நிற்பவர்களையும் கண்டு மனம் அஞ்சினேன்; தேவீர் திருவுளம் அறிந்த தன்றே. எ.று.

தூய சிவஞானத்தை நல்கும் நெறியாதலின் சுத்த சன்மார்க்கத்தை, "தலைநெறி ஞான சுத்த சன்மார்க்கம்" என உரைக்கின்றார். அந்நான் நெறிக்கண் நிற்பது ஞானப் பேற்றுக்கு வாயிலாதலால் "சன்மார்க்கம் சார்ந்திட முயலுருது" என்றும், அது முயலாமை பயனில் செயலாதல் கண்டும் மனம் இரங்குகின்றமை புலப்பட "அந்தோ" என்றும் கூறுகின்றார். உலகியல் நெறி பல்வகைக் கலைகள் காட்டும் நெறியாதலால் அதனைக் "கலைநெறி உலகக் கதி" என்று கூறுகின்றார். உலக நெறியில் ஊறிய கருத்துடையவராவது பற்றி "உலகக் கதியிலே கருத்தைக் கனிவுற வைத்தனர் ஆகி" என்று இயம்புகின்றார். புலை நெறி-கீழ்மை நெறி; புலால் உண்ணும் நெறியுமாம். உலகுயிர்கள் அனைத்தும் தன்னுயிர் ஒப்ப எண்ணுதல் பொது இயல்பாதலின், அதனை உணராமல் அவற்றைக் கொன்றுண்ணும் நெறியில் உள்ளவரை "உலகுயிர்கள் பொது எனக் கண்டிரங்காது கொலைநெறி நின்றார்" எனக் கூறுகின்றார்.

இதனுல், வள்ளற் பெருமான் புலால் நெறியில் நின்றவர்களையும், கொலை நெறி யுடையவர்களையும் கண்டு அஞ்சிய திறம் கூறியவாறும். (68)

3478. இவ்வணஞ் சிறியேற் குலகியல் அறிவிங்
கெய்திய நாளது தொடங்கி
நைவணம் இற்றைப் பகல்வரை அடைந்த
நடுக்கமும் துன்பமும் உரைக்க
எவ்வணத் தவர்க்கும் அலகுரு தெனில்யான்
இசைப்பதென் இசைத்ததே அமையும்
செவ்வணத் தருணம் இதுதலை வாநின்
திருவுளம் அறிந்ததே எல்லாம்.

உரை: சிறியவனுகிய எனக்கு உலகியலறிவு தோன்றிய நாள் முதல் மனம் மெலியும் வண்ணம் இன்றுவரை இவ்வாறு நான் அடைந்த மனநடுக்கமும் துன்பமும் எத்தகையோர்க்கும் உரைக்கும் அளவினதாகா தென்றுல் நான் எடுத்துரைப்பது என்னையோ; இதுகாறும் சொன்னதே போதும்; எனக்கு அருளுதற்கு ஏற்ற சமயம் இதுவேயாகும்; தலைவனே! இதையெல்லாம் தேவரீரது திருவுள்ளம் நன்கு அறியும். எ. று.

அறிவாற்றலில் சிறுமை யுடைமை தோன்றச் "சிறியேன்" என வுரைக்கின்ருர். நைவணம் - மனம் மென்மையுறும் திறம். எவ்வணத்தவர் - எத்தகைய நுண்ணறிவு உடையவர். அலகு - அளவு. இசைத்தல் - சொல்லுதல். தக்க நெறியில் வாய்த்த தருணம் என்பதற்குச் "செவ்வணத் தருணம்" என உரைக்கின்ருர்.

இதனுல், தான் அறிவால் பக்குவ முற்றிருப்பது தெரிவித்தவாறும். (69)

3479. தரைத்தலத் தெனைநீ எழுமையும் பிரியாத்
தம்பிரான் அல்லையோ மனத்தைக்
கரைத்துளே புகுந்தென் உயிரினுட் கலந்த
கடவுள்நீ அல்லையோ எனைத்தான்
இரைத்திவ ணளித்தோர் சிற்சபை விளங்கும்
எந்தைநீ அல்லையோ நின்பால்
உரைத்தல்என் ஒழுக்கம் ஆதலால் உரைத்தேன்
நீஅறி யாதொன் றுண்டோ.

உரை: நிலவுலகில் எழுபிறப்பும் என்னை விட்டு நீங்காத தலைவன் நீயல்லவோ; என் மனதை யுருக்கி என்னுயிரில் கலந்து கொண்டிருக்கின்ற கடவுள் அல்லவா; என்னை அழைத்து இவ்வுலகில் அருள் செய்த ஒப்பற்ற ஞான சபையில் விளங்குகின்ற என் தந்தை யல்லவா; உன்னிடத்தில் தெரிவித்துக் கொள்வது எனக்கு நல்லொழுக்க மல்லவா; ஆதலால் இதுகாறும் என் மன நிலையைத் தெரிவித்துக் கொண்டேன். எ.று.

உயிர்கள் பலவகையாய்ப் பிறந்து உய்தி பெறற்கு அமைந்ததாதலால், "தரைத் தலத்து" என்று விதந்து கூறுகின்றார். பிறப்பு எழுவகைப் படுதலால் அதனை "எழுமை" என்று கூறுகின்றார். கற் போன்ற மனத்தைக் கனிவித்து அதனுள் எழுந்தருளுதல் கடவுட்கு இயல்பாதலால், "கரைத் துளே புகுந்தென் உயிரினுட் கலந்த கடவுள் நீ அல்லையோ" என மொழிகின்றார். உணர்வும் வாழ்வும் அளித்தமை பற்றி, "இரைத் திவணளித்தோர் சிற்சபை விளங்கும் எந்தை நீ யல்லையோ" என வுரைக் கின்றார். இரைத்தல் - அழைத்தல். தமக்குற்ற நலம் தீங்குகளை இறைவனிடத்தில் முறையிட்டுக் கொள்ளுதல் அறிவுடைய உயிர்க்கு நல்லொழுக்கம் என்பது பற்றி, "நின்பால் உரைத்தல் என்னெழுக்க மாதலால் உரைத்தேன்" என இசைக்கின்றார்.

இதனால், இதுகாறும் தன் மனநிலையை எடுத்துரைத்தற்கு அமைதி கூறியவாறும். (70)

3480. கைதலத் தோங்கும் கனியின் என்னுள்ளே
கனிந்தஎன் களைகண்நீ அலையோ
மெய்தலத் தகத்தும் புறத்தும்விட் டகலா
மெய்யன்நீ அல்லையோ எனது
பைதல்தீர்த் தருளுந் தந்தைநீ அலையோ
பரிந்துநின் திருமுன்விண் ணப்பம்
செய்தல்என் ஒழுக்கம் ஆதலால் செய்தேன்
திருவுளம் தெரிந்ததே எல்லாம்.

உரை : அங்கையில் கொண்ட கனி போல என் உள்ளத்துக் கனி போல் இருந்தருளும் ஆதரவாளன் நீயல்லவோ; என்னுடம்பின் அகத்தும் புறத்தும் விட்டு நீங்காத மெய்ம்மை யுடையனல்லவா; எனது துன்பத்தைப் போக்கி யருளும் தந்தையும் நீ யல்லவா; ஆதலால் உனது திருமுன்பு ஆர்வமுடன் விண்ணப்பம் செய்தல் எனக்கு நன்னெறி யாதலால் எனது குணம் செயல்களை இதுவரை எடுத்துரைத்தேன்; இவை யாவையும் தேவீரது திருவுள்ளம் நன்கு அறியும். எ.று.

"கைத்தலத் தோங்கும் கனி" என்பது அங்கையிற்றங்கும் செங்கனி என்னும் வழக்குப் பற்றியதாம். களைகண் - ஆதரவாளன். மெய்தலம் - உடம்பு. உடம்பினுள் அகத்தும் புறத்தும் நிற்பது பற்றி, "அகத்தும் புறத்தும் விட்டகலா மெய்யன் நீ" என்று உரைக்கின்றார். பைதல் - துன்பம்.

இதனால், தமது குணஞ் செயல்களை இறைவன் முன் எடுத்துரைப் பதற்கு அமைதி கூறியவாறும். (71)

3481. இன்னவா றடியேன் அச்சமுந் துயரும்
எய்திநின் றிளைத்தனன் அந்தோ
துன்ன ஆணவமும் மாயையும் வினையும்
சூழ்ந்திடும் மறைப்பும்இங் குனைத்தான்

உன்னவா சற்றே உரைக்கவா ஓட்டேம்
என்பவால் என்செய்வேன் எனது
மன்னவா ஞான மன்றவா எல்லாம்
வல்லவா இதுதகு மேயோ.

உரை: எனக்கு அரசனே, ஞான சபையை யுடையவனே, எல்லாம் வல்லவனே, இதுகாறும் கூறியவாறு அடியவனுகிய என்னைப் பயமும் துன்பமுமுற்று மனம் சோர்ந்தேன்; ஐயோ நெருங்கிய ஆணவமும் மாயையும் கன்மமும் இவற்றுல் என் அறிவைச் சூழும் மறைப்பும் கூடி நின்று உன்னை நினைக்கவோ, நினைத்ததைச் சொல்லவோ இடம் கொடேன் என்று சொல்லுகின்றன; இதற்கு நான் என்ன செய் வேன்; இது முறையாகுமோ. எ.று.

மன்னவன் - அரசன். ஞான மன்று - ஞானசபை. திருவடி ஒன்றையே பற்றுக் கோடாகவுடையவன் என்று சொல்லுதற்கு "அடியேன்" எனக் குறிக்கின்றுர். இளைத்தல் - சோர்தல். துன்ன ஆணவம் - நெருங்கியுள்ள ஆணவமலம். வினை - துன்பம். மும்மலங்களாலும் உயிரறிவு மறைக்கப் படுதலால் "ஆணவமும் மாயையும் வினையும் சூழ்ந்திடும் மறைப்பும்" எனவுரைக்கின்றுர். உன்னுதல் - நினைத்தல். ஆணவம் முதலிய மலங்கள் உயிரறிவை மறைத்துச் செயல்படாவாறு தடுப்பது பற்றி, "உனைத்தான் உன்னலா சற்றே உரைக்கவா ஒட்டேம் என்பவால் என்செய்வேன்" என வருந்துகின்றுர். உலகில் பிறந்து வளர்ந்து நன்னெறிக்கண் வாழ்ந்து உய்திபெற வமைந்த எனக்கு இத்தடைகள் பொருந்தாவாம் என்பாராய், "இது தகுமேயோ" என வுரைக்கின்றுர்.

இதனுல், ஆணவம் முதலாய மலப்பிணிப்பு தம்மை யடைவது பொருந்தாது எனப் புகன்றவாறும். (72)

3482. எள்ளலாம் பயத்தால் துயரிலுல் அடைந்த
இளைப்பெலாம் இங்குதான் ஆற்றிக்
கொள்ளவே அடுத்தேன் மாயையா திகள்என்
கூடவே அடுத்ததென் அந்தோ
வள்ளலே எனது வாழ்முதற் பொருளே
மன்னவா நின்னலால் அறியேன்
உள்ளல்வே றிலைஎன் உடல்பொருள் ஆவி
உன்னதே என்னதன் றெந்தாய்.

உரை: அருள் வள்ளலே, எனது வாழ்வுக்கு முதலாகிய பரம் பொருளே, அருளரசே, முன்னைப் பிறவிகளில் இகழ்ந்து நீக்கத்தக்க அச்சங்களாலும் துன்பங்களாலும் நான் அடைந்த சோர்வுகளை எல்லாம் போக்கிக் கொள்ளுதற்கே நான் இப்பிறவியை எடுத்தேனுக, மாயை முதலிய மலங்கள் என்னைடு தொடர்ந்து இருப்பது என்ன காரணமோ; இவற்றை விளங்கிக் கொள்வதற்கு உனது திருவருள் ஞானம் பற்றுக் கோடாவதன்றி வேறு துணையாதும் அறிகிலேன்; நான் நினைப்பதற்கும்

உன்னைத் தவிர வேறு பொருளில்லை; என்னுடைய உடல் உயிர் பொருள் மூன்றும் என்னுடையவை யல்ல. எ.று.

உரிய உணர்வு தந்து உயிர்களை வாழ்வித்தல் பற்றி, இறைவனை "வாழ்முதற் பொருளே" என வழுத்துகின்றார். "போற்றி என் வாழ் முதலாகிய பொருளே" (பள்ளி) என மணிவாசகரும் உரைப்பது காண்க. நல்ல வினைக்கு நற்பயனும் தீய வினைக்குத் தீப்பயனும் உயிர்களை நுகர் வித்தலால், இறைவனை "மன்னவன்" என்கின்றார். பொருளாகக் கருதாமல் நீக்கத் தக்கதாகலின், "எள்ளலாம் பயம்" என்று கூறுகின்றார். அச்சத்தாலும் எய்தும் துன்பங்களாலும் உயிரும் உடலும் சோர்வடை தலின், பயத்தால் துயரினுல் அடைந்த இளைப்பெலாம்" என இசைக் கின்றார். முன்னைப் பிறவிகளில் அடைந்த அச்சம் துன்பம் இவற்றுல் எய்திய சோர்வைப் பிறந்த பிறப்பில் ஆற்றிக் கொள்வது மறுபிறப்பின் குறிப்பாவது தோன்ற, "இங்கு நான் ஆற்றிக் கொள்ளவே யடுத்தேன்" என விண்ணப்பிக்கின்றார். மாயை யாதிகள் - மாயை கன்மம் மலம் ஆகிய மூன்றும். இளைப்பாற்றிக் கொள்ள வந்த எனக்குத் துணை புரியாமல் அறிவை மறைத்துக் கெடுக்கும் ஆணவம் முதலிய மூன்றும் வந்தடைந்த தின் காரணம் தெரியவில்லை என்பாராய், "மாயை யாதிகள் என் கூடவே யடுத்ததென்" என வினவுகின்றார். இவற்றின் உண்மையை உனது அருள் ஞானத்தால் அன்றி அறிதற்கில்லை என்பாராய், "நின்னலால் அறியேன்" எனக் கூறுகின்றார். உள்ளல் - நினைத்தல். இவற்றின் நினை வன்றி வேருென்றும் என் மனத்தில் இல்லை யென்றற்கு, "உள்ளல் வேறில்லை" என உரைக்கின்றார். உடல் பொருள் ஆவிகளில் உடல் உன்னதே, பொருள் உன்னது, ஆவி உன்னது என இயையும். என்ன தன்று என்பதற்கும் இவ்வாறு ஒவ்வொன்றுக இயைத்துக் கொள்க.

இதனுல், சோர்வு போக்கிக் கொள்ளப் பிறப்பெடுத்த தமக்கு ஆணவம் முதலிய மூன்றும் வந்து பற்றுதற்குக் காரணம் வினவியவாறும். (73)

3483. **என்சுதந் தரம்ஓர் எட்டுணை யேனும்**
இல்லையே எந்தைஎல் லாம்உன்
தன்சுதந் தரமே அடுத்தஇத் தருணம்
தமியனேன் தனைப்பல துயரும்
வன்சுமை மயக்கும் அச்சமும் மறைப்பும்
மாயையும் வினையும்ஆ ணவமும்
இன்சுவைக் கனிபோல் உண்கின்ற தழகோ
இவைக்கெலாம் நான்இலக் கலவே.

உரை : எனக்கென ஓர் சுதந்தரம் எள்ளத்தனையும் எனக்கில்லை, எல்லாம் உன் சுதந்தரமே யாகும்; உன்னை யடுத்துள்ள என்னை இச் சமயம் பலவேறு வகையான துன்பங்களும், வலிய சுமை போன்ற மயக்கங்களும், அச்சங்களும், மறைப்புகளும் மாயை வினை மலம் என்ற மூன்றும் இனிய சுவையையுடைய கனி போல் என்னைத் தின்கின்றன; இது முறையாகுமா; இவற்றிற்கு நான் இலக்காவதா; அருளுக. எ.று.

சுதந்தரம் - செயலுரிமை. எட்டுணை - எள்ளின் அளவு; எள்ளத்தனை யென்றுமாம். சிவன் ஒருவனே யன்றிப் பிறவாகிய உயிர்கள் எவற்றிற்கும் தற்சுந்தரம் இல்லையாதல் பற்றி, "எந்தை எல்லாம் உன் தன் சுதந்தரமே" என இயம்புகின்றார். இறைவன் ஒருவனே சுதந்தரமுடையவன்; பிற யாவும் பரதந்திரங்கள் என்று சிவாகமங்கள் உரைப்பதனால் வள்ளற் பெருமான் இவ்வாறு உரைக்கின்றார். "பரதந்திரியம் கரைகனி பந்தம்" என்பது ஞானமிர்தம். நினைத்தல் சொல்லுதல் செய்தல் ஆகிய எல்லாவற்றிலும் சுதந்தரமில்லாத உயிர்களுக்கு, சோர்வு போக்கிக் கொள்ள வந்த தருணத்தில் இந்தத்துயர் வகைகளும் மயக்க வகைகளும் பிறவும் வந்துபற்றி அலைத்தல் கூடாது என விண்ணப்பிக்கின்றாராதலால், "அடுத்த இத்தருணம் தமியனேன்தனைப் பல துயரும் வன்சுமை மயக்கும் அச்சமும் மறைப்பும் மாயையும் வினையும் ஆணவமும் இன்சுவைக் கனி போல் உண்கின்ற தழகோ" என்று கூறுகின்றார். தற்சுதந்தரம் சிறிதுமில்லாத இக்குற்றங்கள் போன்று தாக்குதல் முறையாகாது என வேண்டுகின்றாராதலின், "இவைக்கெலாம் நான் இலக்கலவே" என உரைக்கின்றார்.

இதனால், தமது தற்சுதந்தர மின்மையை வள்ளற் பெருமான் எடுத்துரைத்தவாறும். (74)

3484. அறிவொரு சிறிதிங் கறிந்தநாள் முதல்என்
அப்பனே னினைமறந் தறியேன்
செறிவிலாச் சிறிய பருவத்தும் வேறு
சிந்தைசெய் தறிந்திலேன் உலகில்
பிறிதொரு பிழையுஞ் செய்திலேன் அந்தோ
பிழைத்தனன் ஆயினும் என்னைக்
குறியுறக் கொண்டே குலங்குறிப் பதுநின்
குணப்பெருங் குன்றினுக் கழகோ.

உரை : எனக்கறிவு சிறிது வந்த நாள் முதல் எனக்குத் தந்தையாகிய நின்னை மறந்ததில்லை; அடக்கமில்லாத சிறு பருவத்தும் உன்னைத் தவிர வேறு பொருளை நினைத்ததில்லை; உலகில் வேறு பிழையொன்றும் நான் செய்ததில்லை; அங்ஙனம் பிழை செய்திருப்பேனையின் பொறுத் தருளல் வேண்டும்; என்னை அடியனுகக் குறிக்கொண்ட பிறகு குற்றம் காணுதல், பெருங் குணக் குன்றுகிய உனக்கு அழகாகாது; கொண்டு குலம் பேசுவது நன்றன்று. எ.று.

அறிவு, நல்லதன் நலமும் தீயதன் தீமையும் தெரிந்துணரும் அறிவு. பிறந்த பொழுதே இவ்வறிவு அமைவது இல்லையாதலால், "அறிவொரு சிறிதிங்கறிந்த நாள் முதல்" எனவுரைக்கின்றார். சிறு பருவத்தவர் அடக்கமின்றித் துள்ளித் திரியும் இயல்பினராதலால், "செறிவிலாச் சிறிய பருவம்" எனச் சிறப்பிக்கின்றார். எதனையும் தக்கது என ஏற்றுத் தலை வணங்கும் தன்மை அப்பருவத்து எய்தாதாயினும் தான் அச்சிறு பருவத்தும் சிவமே பொருளெனத் தேர்ந்து கொண்டமை விளங்க, "வேறு சிந்தை செய்து அறிந்திலேன்" என வுரைக்கின்றார். தமது அறிவறியகுற்றம் ஒன்றும் செய்யாமை புலப்பட, "உலகில் பிறிதொரு பிழையும்

செய்திலேன்" என்றும், ஒருகால் தன்னை யறியா வகையில் பிழை செய்திருந்தால் அதனைப் பொறுத்தருள வேண்டுவாராய், பிழைத்தனன் ஆயினும் என்னைக் குறியுறக் கொண்டே குலம் குறிப்பது நின் குணப் பெருங்குன்றினுக்கு அழகோ" எனக் கூறுகின்றார். நற்குணமுடைய சான்றோர் ஒருபொருளைக் கொள்ளுதற்கு முன் அதன் குலமும் குணமும் காண்பதே யன்றிக் கொண்ட பிறகு அவற்றைக் கண்டுரைப்பது இல்லை யாதலால், "என்னைக் குறியுறக் கொண்டு குலம் குறிப்பது அழகோ" என மொழிகின்றார். குணநலங்கள் உருவாய் அமைந்து சலியா நிலையுடைமை பற்றிச் சிவபெருமானை, "குணப் பெருங்குன்று" என்று குறிக்கின்றார்.

இதனுள் பிழை பொறுத்தல் வேண்டுமென விண்ணப்பித்தவாறும். (75)

3485 ஐயநான் ஆடும் பருவத்திற் றனே
அடுத்தநன் னேயனை டப்பா
பொய்யுல காசை எனக்கிலை உனக்கென்
புகல்என அவனும்அங் கிசைந்தே
மெய்யுறத் துறப்போம் என்றுபோய் நினது
மெய்யருள் மீட்டிட மீண்டேம்
துய்யநின் உள்ளம் அறிந்ததே எந்தாய்
இன்றுநான் சொல்லுவ தென்ன.

உரை : ஐயனே, நான் விளையாடும் பருவத்தில் எனக் கமைந்த நண்பனோடு அப்பா, பொய்ம்மை நிறைந்த இவ்வுலகில் எனக்கு ஆசை யில்லை; உன் கருத்து யாது சொல் என்று கேட்க அவனும் என் சொல்லுக்கு இசைந்து மெய்ம்மையாகத் துறவு கொள்வோம் என ஓரிடத் திற்குச் சென்று பின்பு தெளிவுற்று உன்னுடைய திருவருள் உணர்வு தோன்றி அது கூடாது என விலக்கவே நாங்கள் திரும்பிவிட்டோம்; தூயனாகிய நின்னுடைய திருவுள்ளம் இதனை அறிந்ததாகலின் இன்று நான் அதனைத் திரும்ப எடுத்துச் சொல்வதனால் என்ன பயன். எ.று.

ஆடும் பருவம் - விளையாடும் பருவம். நேயன் - நண்பன். இது நேசன் எனவும் வரும். பொய்ம்மை நிறைந்தவுலகைப் "பொய்யுலகு" எனப் புகல்கின்றார். உலகியலின் பொய்ம்மை ஒழுக்கத்தை எடுத் துரைத்து நண்பனையும் உணர்த்தி இசையச் செய்தே வள்ளற் பெருமான், "பொய்யுலகு ஆசை எனக்கிலை உனக்கென் புகலென" கேட்கின்றார். நண்பன் உண்மையுணர்ந்தமை விளங்க, "அவனும் அங்கு இசைந்து மெய்யுறத் துறப்போம்" என்று சொல்லுகிறார். இருவரும் துறவி ஒருவர் பால் சென்றமை புலப்படப் "போய்" என்றும், அவர்களது இளமை நோக்கி அப்பெரியவர் விலக்கினமையின் இருவரும் மீண்டமை தோன்ற, "நினது மெய்யருள் மீட்டிட மீண்டேம்" என வுரைக்கின்றார். துறவுடை" பெரியவர் உரைத்த அருளுரையை இறைவனது திருவருள் எனக் கருதினமையின், "மெய்யருள் மீட்டிட" என விளம்புகின்றார். துறவு மேற்கொள்ளத் துணிந்து சென்று பின்னர் அதனைக் கொள்ளாது விலகினமை தமது குறைகளில் ஒன்றாக எண்ணுகின்றாராதலால், "துய்ய

நின்னுள்ளம் அறிந்ததே'' என்றும், ''இன்று நான் சொல்லுவது என்னே'' என்றும் சொல்லுகின்றார்.

இதனால், துறவு மேற் கொள்ளாது விலகினமை விளம்பியவாறும். (76)

3486. தேர்விலாச் சிறிய பருவத்திற் றூனே
தெய்வமே தெய்வமே எனநின்
சார்வுகொண் டெல்லாச் சார்வையும் விடுத்தேன்
தந்தையும் குருவும்நீ என்றேன்
பேர்விலா துளத்தே வந்தவா பாடிப்
பிதற்றினேன் பிறர்மதிப் பறியேன்
ஓர்விலாப் பிழைகள் ஒன்றையும் அறியேன்
இன்றுநான் உரைப்பதிங் கென்னே.

உரை : நன்று தீங்குகளைப் பகுத்தறிய வாராத சிறுபருவத்திலேயே தெய்வம் என்று நின்னையே சார்பாகக் கொண்டு பிற சார்புகள் அனைத்தையும் கைவிட்டு எனக்குத் தந்தையும் குருவும் நீயே என்று கொண்டேன்; அதனால் உள்ளம் தளராது நினைவில் வந்தவற்றைப் பாடிப் பிதற்றினேன்; பிறர் என்னைப் பற்றிப் பாடியதையும் பொருளாகக் கொண்டிலேன்; நினைத்தற் கில்லாத பிழைகள் யாதொன்றையும் செய்தறியேன்; ஆகவே இப்பொழுது யான் இவ்விடத்து உரைப்பதற்கு யாதொன்றும் இல்லை. எ.று.

நன்மை தீமைகளைப் பகுத்துணர்ந்து நல்லதை மேற்கொண்டு தீயதை விலக்கும் செயற் பண்பில்லாத இளமைக் காலத்தை, "தேர்விலாச் சிறிய பருவம்'' எனச் செப்புகின்றார். மனத்திண்மையில்லாத சிறு பருவத்திலேயே தெய்வமே திண்ணிய துணையாம் எனக் கருத்திற் கொண்டு பிறர் பொருள்கள் அனைத்தையும் சார்பாகக் கொள்ளாது விடுத்தமை விளங்க, "தெய்வமே தெய்வமே என நின்சார்வு கொண்டு எல்லாச் சார்வையும் விடுத்தேன்'' என இசைக்கின்றார். தந்தை குரு என்ற சார்புகளையும் சிவனே என எண்ணினமை விளங்க, "தந்தையும் குருவும் நீ என்றேன்'' என்று கூறுகின்றார். தேர்விலாச் சிறு பருவத்தில் உள்ளத்திற் படியும் கருத்து ஆயுள் வளர வளர மாறுதற்கு இடமுண்டாயினும் தமது உள்ளம் அவ்வாறு மாறுமை தோன்ற, "பேர்விலாது'' என்று குறிக்கின்றார். இந்நிலையில் தாம் செய்தது கூறுவாராய் நினைவில் எழுந்தவை எல்லாவற்றையும் இறைவனை நோக்கிப் பாடியதாகக் கூறலுற்று, "உளத்தே வந்தவா பாடிப் பிதற்றினேன்'' எனவும், தாம் பாடியவற்றை பிறரிடம் காட்டி இன்புற்றதில்லை யென்றற்கு, "பிறர் மதிப்பறியேன்'' எனவும் உரைக்கின்றார். என் செய்கைகளை ஆராய்ந்து காணத் தக்க பிழை ஒன்றையும் செய்ததில்லை என்பாராய், ஓர்விலாப் பிழைகள் ஒன்றையும் அறியேன்'' என்றும், அவற்றை ஒருவாறு ஆராய்ந்து கண்டு உரைப்பினும் பயனில்லை என்ற கருத்தால், "இன்று நான் உரைப்பதிங் கென்னே'' என்றும் இயம்புகின்றார்.

இதனால், சிறு பருவத்திலேயே சிவனே தெய்வம் எனத் தேர்ந்து கொண்டமை தெரிவித்தவாறும். (77)

3487. பொறித்துனைப் பதியாப் பெற்றநாள் அடிமை
புரிந்தது போலவே இன்றும்
செறித்துநிற் கின்றேன் அன்றிஎன் உரிமைத்
தெய்வமும் குருவும் மெய்ப் பொருளும்
நெறித்தநற் றுயுந் தந்தையும் இன்பும்
நேயமும் நீஎனப் பெற்றே
குறித்தறிந் ததன்பின் எந்தைநான் ஏறிக்
குதித்ததென் கூறுக நீயே.

உரை : எந்தையாகிய சிவபெருமானே! உன்னைத் தலைவனாக என்னுள்ளத்தில் பதிவித்துக் கொண்ட நாள் முதல் உனக்கு அடிமைப் பணி புரிந்தது போலவே இன்னுளிலும் உரைத்து நிற்கின்றேன்; அன்றியும் எனக்குரிய தெய்வமும் குருவும் மெய்ப்பொருளும், நெறி நிறுத்தும் நல்ல தாயும் தந்தையும், இல்வழி எனக்கு எய்தும் இன்பமும் நட்பும் எல்லாம் நீயே எனவுணரப் பெற்றுத் தெளிய யறிந்து அதன்பின் நான் வேருக விலகியதுண்டோ சொல்லுக. எ.று.

பொறித்தல் - பதிவித்தல். அடிமைப் பணி - பூசையும் திருப்பணியு மாம். செறித்து நிற்றல் - உரைத்து நிற்பது. வழிபடற்குத் தக்க உரிமை யுடைய தெய்வம் என்றற்கு "உரிமைத் தெய்வம்" என்று மொழிகின்ருர். மெய்ப்பொருள், உண்மை யுணர்வுக்கு அமைந்த பரம்பொருள் மக்களை நன்னெறிக்கண் நிறுத்திச் செலுத்தும் பெற்ருர்களை, "நெறித்த நற்ருயும் தந்தையும்" என நவில்கின்ருர். இவ்வுணர்வுகளால் எய்தும் உண்மை இன்பத்தை "இன்பு" எனவும், நேயர்களை "நேயம்" எனவும் உரைக் கின்ருர். இவ்வாறு தெய்வம், குரு, மெய்ப்பொருள் முதலியனவாக இறைவனைக் கொண்ட பின்பு வேறு எதனையும் கொள்ளாமைப் புலப்பட "குறித்தறிந்து அதன்பின் எந்தை நான் ஏறிக் குதித்ததென் கூறுக நீயே" என இயம்புகின்ருர். ஏறிக் குதித்தல் - ஈண்டு விலகி வேறுபடுதல் மேற்று.

இதனுல், வள்ளற் பெருமான் தமது உட்கோள் கூறியவாரும். (78)

3488. பரிந்துனைப் பதியாப் பெற்றநாள் அடிமை
பணிபுரிந் தாங்கிது வரையில்
புரிந்துறு கின்றேன் அன்றிஎன் உயிரும்
பொருளும்என் புணர்ப்பும்என் அறிவும்
விரிந்தஎன் சுகமும் தந்தையுங் குருவும்
மெய்ம்மையும் யாவும்நீ என்றே
தெரிந்தபின் அந்தோ வேறுநான் செய்த
செய்கைஎன் செப்புக நீயே.

உரை : உன்னை எனக்குத் தலைவனாக அன்புடன் கொண்ட நாள் முதல் உனக்கு அடிப்பணி புரிந்தது போல இன்று வரை விரும்பிச் செய்து வருகிறேன்; அன்றியும் எனக்கு உயிரும் பொருளும், என்னைச் சேர்ந்தவையும், என் அறிவும் எனக்கு வந்த சுகமும் அமைந்த தந்தை

யும் குருவும் மெய்ப்பொருள் யாவும் நீ என்றே அறிந்த பிறகு நான் வேறெரு செய்கையும் செய்ததில்லை; செய்த துண்டாயின் நீயே எனக்கு தெரிவித்து அருள்க. எ.று.

பரிதல் - அன்பு செய்தல். புரிதல் - விரும்புதல். பொருள் - உலகியற் பொருள். புணர்ப்பு - பிறர் தர வந்தடைந்த பொருள்கள். மெய்ம்மை, மெய்யுணர்வு.

இதனுல், சிவவுணர்வே மெய்ம்மையானது என வள்ளற் பெருமான் உணர்ந்து கைக்கொண்டமை தெரிவித்தவாரும். (79)

3489. மைதவழ் விழிஎன் அம்மைஓர் புடைகொள்
வள்ளலே நின்னேஅன் பாலும்
வைதவர் தமைநான் மதித்திலேன் அன்பால்
வாழ்த்துகின் ரேர்தமை வாழ்த்தி
உய்தவர் இவர்என் றுறுகின்றேன் அல்லால்
உன்அருள் அறியநான் வேறு
செய்ததொன் றிலையே செய்தனன் எனினும்
திருவுளத் தடைத்திடல் அழகோ.

உரை : மை தீட்டிய கண்களையுடைய என் தாயாகிய உமை யம்மையை ஒருகூறாகக் கொண்ட வள்ளலாகிய சிவபெருமானே! தாம் கொண்ட அன்பு மிகுதியால் நின்னை வைதவரையும் நான் விரும்புவ தில்லை; அன்புடன் உன்னை வாழ்த்துகின்றவர்களை வாயார வாழ்த்தி உய்தி யுணர்த்தும் தவச் செல்வர் என்று எண்ணி இருக்கின்றேன்; இஃதன்றி உன்திருவருள் அறிய வேறுக நான் ஒரு தவறும் செய்ததில்லை; அங்ஙனம் செய்திருப்பேனுயின் அதனை நின் மனத்திற் கொள்ளுதல் அழகாகாது. எ.று.

கண்ணிற்கு மை தீட்டிக் கொள்வது மகளிர்க்கு இயல்பாதலின், உமாதேவியை, "மை தவழ் விழி என்னம்மை" எனப் புகழ்கின்ருர். அன்பு மிகுதியாக யுடையவர் அதுவே ஏதுவாகத் தம்பால் அன்பு செய்யப்பட்டார்பால் பிணங்கி வைதுரைப்பது இயற்கையாயினும் நான் அவர்களை விரும்புவதில்லை யென்றற்கு, "நின்னை யன்பாலும் வைதவர் தமை நான் மதித்திலேன்" என வுரைக்கின்ருர். உய்தவர் - உய்தி பெறு தற்குரிய ஞானம் வழங்கும் தவச் செல்வர். உறுதல் - உறுகின்றேன்; நட்பு செய்கின்றேன். எங்கும் எல்லாவற்றையும் பரந்து நின்றறியும் பண்புடையதாதலின், "உன்னருள் அறிய நான் வேறு செய்த தொன்றிலையே" எனப் பகர்கின்ருர். நான் செய்தது குற்றமாயினும் அதனைப் பொறுத் தருள்க என வேண்டுகின்ருராதலால், "செய்தனன் எனினும் திருவுளத் தடைத்திடல் அழகோ" என்று செப்புகின்ருர்.

இதனுல், தான் செய்தது கூறிப் பொறுத்தருள்க என வள்ளற் பெரு மான் வேண்டிக் கொண்டவாரும். (80)

3490. ஆரணம் உரைத்த வரைப்பெலாம் பலவாம்
ஆகமம் உரைவரைப் பெல்லாம்
காரண நினது திருவருட் செங்கோல்
கணிப்பருங் களிப்பிலே ஓங்கி
நாரணர் முதலோர் போற்றிட விளங்கி
நடக்கின்ற பெருமைநான் அறிந்தும்
தாரணி யிடைஇத் துன்பமா திகளால்
தனியனேன் தளருதல் அழகோ.

உரை : வேதங்களால் சொல்லப்பட்ட அண்ட வரைப்புகள் எல்லாவற்றிற்கும், ஆகமங்களால் உரைக்கப்பட்ட அண்ட வகைகள் எல்லாவற்றிற்கும் காரணமாகிய நினது திருவருட் செங்கோல் எண்ணுதற்கரிய இன்பத்தில் ஓங்கி, நாரணன் முதலிய தேவர்கள் போற்றிப் புகழ விளக்கமுற்று நடக்கின்ற பெருமையை நான் நன்கு அறிந்தும் நிலவுல கின்கண் துன்ப வகைகளால் நினக்கு மகனாகிய நான் சோர்வடைதல் அழகாகுமா. எ.று.

ஆரணங்கள் - வேதங்கள். பல்வேறு வகையான அண்டங்களை வேதங்கள் உரைப்பதும், பலவாகிய ஆகமங்கள் வேறுவகை அண்டங்களை யுரைப்பதும் உண்டாதலால், "ஆரணம் உரைத்த வரைப் பெலாம்" எனவும், "பலவாம் ஆகமம் உரை வரைப்பெல்லாம்" எனவும் வகைப்படுத்திக் கூறுகின்றார். ஆரணங்கட்கும் ஆகமங்கட்கும் அவை உரைக்கும் அண்ட கோடிகளுக்கும் நிமித்த காரணனாதலால், சிவனை, "காரண" எனக் குறிக்கின்றார். இறைவனது திருவருள் ஒளி இவ் வண்ட கோடிகள் அனைத்திலும் பரவி யின்பம் செய்தலால், இவைகளில் இருந்தருளும் நாராயணன் முதலிய தேவர்கள் இன்ப வாழ்வு பெற்றுச் சிறப்புறுகின்றார்களாதலால், "திருவருட் செங்கோல் கணிப்பரும் களிப் பிலே ஓங்கி நாரணர் முதலோர் போற்றிட" எனவும், ஏனை வுயிர்களும் அவ்வருட் செங்கோல் நீழலிலே இனிது வாழ்தல் விளங்க, "விளங்கி நடக்கின்ற பெருமை" எனவும், இச்செய்திகளை யறிந்திருந்தும் இன்பத் தில் கழித்தலின்றித் துன்ப வகைகளால் தான் வருந்துவது முறையா காது என்றற்கு, "தாரணி யிடை யித்துன்பமா திகளால் தனியனேன் தளருதல் அழகோ" எனச் சாற்றுகின்றார். கணிப்பு - எண்ணுதல்.

இதனால், இறைவனது அருட் செங்கோல் அண்ட கோடி யனைத் திலும் பரவி யின்பம் செய்யவும், அதனைத் தெளிய அறிந்து வைத்தும் தனக்குத் தளர்ச்சியுண்டாதல் கூடாதென வள்ளற் பெருமான் உரைத்த வாரும். (81)

3491. பார்முதல் நாதப் பதிஎலாங் கடந்தப்
பாலும்அப் பாலும்அப் பாலும்
ஓர்முதல் ஆகித் திருவருட் செங்கோல்
உரைப்பரும் பெருமையின் ஓங்கிச்

சீர்பெற விளங்க நடத்திமெய்ப் பொதுவில்
சிறந்தமெய்த் தந்தைநீ இருக்க
வார்கடல் உலகில் அச்சமா திகளால்
மகன்மனம் வருந்துதல் அழகோ.

உரை : நில முதல் நாத தத்துவம் ஈருகவுள்ள பணிகள் எல்லா வற்றையும் கடந்து அவற்றிற்கு அப்பாலுக்கு அப்பாலு முள்ளவற்றிற்கு ஓர் ஒப்பற்ற முதல்வனுய்த் தனது திருவருட் செங்கோன்மை சொல்லு தற்கரிய பெருமையால் உயர்ந்து ஓங்கி சீர் திகழ விளங்க நடத்தி மெய்ம்மை என்ற ஞான சபையில் சிறந்து உறுகின்ற உண்மைத் தந்தை யாக நீ யிருக்க, நீண்ட கடல் சூழ்ந்த வுலகில் அச்சம் அவலம் முதலிய வைகளால் மகனுகிய யான் மனம் வருந்துவது அழகாகுமோ; ஆகாது. எ.று.

நிலம் முதல் நாதம் ஈருக உள்ள தத்துவ நிலைகளைப் "பார் முதல் நாதப் பதி" என்கின்ருர். இத்தத்துவ பதிகட்கு அப்பாலுள்ள தத்துவா தீத நிலைகளை "அப்பாலும் அப்பாலும் அப்பாலும்" என அடுக்கிக் கூறு கின்ருர். இத் தத்துவங்கட்கும் அவற்றில் அடங்கிய புவனங்கட்கும் தனிப்பெரும் தலைவனுதலின் சிவபெருமானை, "ஓர் முதல் என்றும், அவனது திருவருள் நலத்தைத் "திருவருட் செங்கோல்" என்றும், அது இக்கூறிய எங்கும் எப்பொருளிலும் கலந்து ஒளிரும் சிவனது திருவருள் வளத்தை, உரைப்பரும் பெருமையின் ஓங்கிச் சீர் பெற விளங்க நடத்தி" என்றும், அப்பெருமான் இருந்தருளும் நிலையை, "மெய்ப் பொது" என்றும் விளம்புகின்ருர். அதனைச் சத்திய ஞானசபை எனவும் சான்ருேர் கூறுவர். திருவருட் செங்கோன்மை நடத்தி ஞான சபையில் எழுந்தருளும் ஞான மூர்த்திக்கும் தமக்கும் உள்ள தொடர்பை, "தந்தை நீயிருக்க மகன் மனம் வருந்துதல் அழகோ" என வுரைக்கின்ருர்.

இதனுல், இன்ப வாழ்வளிக்கும் இறைவனுகிய சிவன் இருக்க மகனுகிய தான் வருந்துதல் முறையாகாது எனத் தெரிவித்தவாரும். (82)

3492. ஆர்ந்தவே தாந்தப் பதிமுதல் யோகாந்
தப்பதி வரையும்அப் பாலும்
தேர்ந்தருள் ஆணைத் திருநெறிச் செங்கோல்
செல்லஓர் சிற்சபை இடத்தே
சார்ந்தபேர் இன்பத் தனியர சியற்றும்
தந்தையே தனிப்பெருந் தலைவா
பேர்ந்திடேன் எந்த விதத்தினும் நினக்கே
பிள்ளைநான் வருத்துதல் அழகோ.

உரை : நிறைந்த வேதாந்த நூல்கள் உரைக்கும் புவனங்கள் முதலாக யோகாந்த நூல்கள் உரைக்கும் புவனங்களிலும் அவற்றிற்கு அப்பாலும் தேர்ந்து அருளாணையாகிய திருநெறிச் செங்கோன்மை நிலவ ஒப்பற்ற ஞானசபையின் கண்ணே யிருந்து அதைச் சார்ந்த பேரின்பம்

விளைவிக்கும் ஒப்பற்ற அரசு செலுத்தும் தந்தையாகிய சிவனே; ஒப்பற்ற பெரிய தலைவனே! நினது நெறியினின்று எவ்விதத்திலும் விலகுதலில்லாத வனுகிய நான் நினக்குப் பிள்ளையாதலால், நான் துன்பத்தால் வருந்துவது அழகாகுமா; ஆகாது. எ.று.

வேதாந்த நூல்களும் யோக நூல்களும் அவரவர் ஆன்ம முயற்சிக்கு ஏற்ப வமைந்த புவனங்கள் பலவற்றை யுரைப்பதால், "ஆர்ந்த வேதாந்தப்பதி முதல் யோகாந்தப் பதிவரையும் அப்பாலும்" என உரைக்கின்றார். சிவனது திருவருட் சத்தி இப்புவனங்கள் எங்கும் பரவி நிலவுவது பற்றி, "அருள் ஆணைத் திருநெறிச் செங்கோல் செல்ல" எனத் தெரிவிக்கின்றார். அருட் செங்கோல் நடத்தும் இடம் இது எனக் குறிப்பாராய், "ஓர் சிற்சபை யிடத்தே சார்ந்த பேரின்பத் தனியரசு இயற்றும் தந்தையே" எனக் குறிக்கின்றார். சிவனது தனியரசால் உயிர்கள் பேரின்பம் பெறுவது பற்றி, பேரின்பத் தனியரசு இயற்றும் தந்தையே" என உரைக்கின்றார். சிவனுக்கும் தனக்கும் உள்ள முறைமை காட்டுதற்குத் "தந்தையே" என்றும், தன்னைப் "பிள்ளை" என்றும் கூறுகின்றார்.

இதனால், பேரின்பத் தனியரசு இயற்றும் தந்தைக்கு மகன் இன்பமிழந்து துன்புறுதல் முறையாகாது என விண்ணப்பித்தவாறும். (83)

3493 சித்திகள் எல்லாம் வல்லதோர் ஞானத்
திருச்சபை தன்னிலே திகழும்
சத்திகள் எல்லாம் சத்தர்கள் எல்லாம்
தழைத்திடத் தனிஅருட் செங்கோல்
சத்திய ஞானம் விளக்கியே நடத்தும்
தனிமுதல் தந்தையே தலைவா
பித்தியல் உடையேன் எனினும்நின் தனக்கே
பிள்ளைநான் வாடுதல் அழகோ.

உரை : எல்லாச் சித்திகளையும் செய்ய வல்லதாகிய ஞானத் திருச்சபையில் விளங்குகின்ற சத்திகளுக்கும், அச்சத்திகளையுடைய சத்தர்களுக்கும் நலம் பெருக, ஒப்பற்ற அருட் செங்கோல் செலுத்தி மெய்ம்மை ஞானத்தை விளக்கி வாழ்விக்கின்ற ஒப்பற்ற முதல்வனுகிய தந்தையே! தலைவனே! பித்துக் கொண்டோருடைய இயல்புடையவனுயினும் நினக்கு நான் பிள்ளையாதலால் துன்பங்களால் மெலிதல் அழகாகாது காண். எ.று.

சித்திகள் எல்லாவற்றையும் செய்ய வல்ல பெரியோர்கள் நிறைந்திருக்கும் ஞான சபையாதலால், "சித்திகள் எல்லாம் வல்லதோர் ஞானத் திருச்சபை" எனத் தெரிவிக்கின்றார். சத்திகள், ஜனனி, ஆரணி, ரோதைத்திரி முதலாகப் பலவாகலின், "சத்திகள் எல்லாம்" என்றும், அச்சத்திகள் எல்லாம் உடைய சத்தர்கள் பலவாதலின், "சத்தர்கள் எல்லாம்" என்றும் சாற்றுகின்றார். சத்திய ஞானம், உண்மை ஞானம். பித்தியல், பித்தர்களின் குணஞ் செயல்கள்.

இதனால், பித்தியலுடையதாயினும் பிள்ளையாகும் முறைமை பற்றித் தாம் துன்பத்தால் வாடுதல் அழகாகாது என விண்ணப்பித்தவாறும். (84)

3494. சாற்றுபேர் அண்டப் பகுதிகள் அனைத்தும்
தனித்தனி அவற்றுளே நிரம்பித்
தோற்றுமா பிண்டப் பகுதிகள் அனைத்தும்
சோதியால் விளக்கிஆ னந்த
ஆற்றிலே நனைந்து வளர்த்திடும் பொதுவில்
அரும்பெருந் தந்தையே இன்பப்
பேற்றிலே விழைந்தேன் தலைவனின் தனக்கே
பிள்ளைநான் பேதுறல் அழகோ.

உரை : சிவாகமங்களும் புராணங்களும் உரைக்கின்ற அண்டப் பகுதிகள் எல்லாவற்றையும் அவற்றுள்ளே தனித்தனியாக நிறைந்த விளங்கும் பிண்டங்கள் எல்லாவற்றிலும் தனது அருட் சோதியால் விளக்கிப் பேரானந்தமாகிய ஆற்றிலே தோய்த்து வளர்த்தருளும் சிற்சபையில் எழுந்தருளும் பெறற்கரிய தந்தையே, நினது திருவருள் இன்பத்தைப் பெறற்கு விழைந்த நான் தலைவனுகிய நினக்குப் பிள்ளையாம் முறைமை யுடையேனுதலால், நான் துன்பத்தால் வருந்துவது அழகாகாது. எ.று.

கந்த புராணம் முதலிய புராணங்களும், பௌட்கரம் சிவதருமோத்திரம் முதலிய ஆகமங்களும் எண்ணிறைந்த அண்டங்களை யுரைப்பதால், "சாற்று பேரண்டப் பகுதிகள் அனைத்தும்" என்றும், அவற்றுள்ளே அவ்வண்டங்களைப் போல எண்ணிறைந்த பிண்டங்கள் இருக்கின்றன என்பதற்கு, "தனித்தனி யவற்றுளே நிரம்பித் தோற்றுமா பிண்டப் பகுதிகள் அனைத்தும்" என வுரைக்கின்றார். அருட் சோதி வடிவினனுதலால் அவனது மாபெரும் சோதி மேற்கூறிய அண்ட பிண்டங்கள் அனைத்தையும் இருள் நீக்கி யாளுதல் விளங்க, "சோதியால் விளக்கி" என்றும், அதனால் அவை பெறும் இன்ப நலத்தை "ஆனந்த யாற்றிலே நனைத்து வளர்த்திடும் பொது" எனப் புகழ்கின்றார். இன்பம் பெறுதற்குரிய அருள் நெறியைப் பெறவேண்டும் என்ற விருப்ப முடைமையை, "இன்பப் பேற்றிலே விழைந்தேன் தலைவ" எனவுரைக்கின்றார்.

இதனால், அண்ட பிண்டப் பகுதிகள் அனைத்தும் சிவனது அருட் சோதியால் விளக்கமுற்று இன்பமுறும் திறம் கூறியவாறும். (85)

3495. சிறந்ததத் துவங்கள் அனைத்துமாய் அலவாய்த்
திகழ்ஒளி யாய்ஒளி எல்லாம்
பிறங்கிய வெளியாய் வெளிஎலாம் விளங்கும்
பெருவெளி யாய்அதற் கப்பால்
நிறைந்தசிற் சபையில் அருளர சியற்றும்
நீதிநல் தந்தையே இனிமேல்
பிறந்திடேன் இறவேன் நின்னைவிட் டகலேன்
பிள்ளைநான் வாடுதல் அழகோ.

உரை : படிப்படியாய் நிறைந்த தத்துவங்கள் எல்லாமாய் அவையல்லவாய் விளங்குகின்ற ஒளியாய் அவ்வொளி சென்று பரவியுயரும்

வெளியிடமாய் அவ்விடமெல்லாம் இருந்து விளங்கும் பெருவெளியாய் அதற்கு அப்பாலாய் எங்கும் எல்லாம் நிறைந்த சிற்சபையில் எழுந்தருளி அருளரசு இயற்றும் நீதியுருவாகிய நல்ல தந்தையே! இனி நான் பிறப்பு இறப்புக்களின்றி நின்னை விட்டுப் பிரியேனுயினும் பிள்ளையாகிய நான் துன்பத்தால் வருந்துதல் அழகாகாது, காண். எ.று.

ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவ தத்துவம் என மூவகைப் பட்டு மூப்பத்தாருய் விரிந்து தாத்துவிகங்கள் அறுபதோடும் கூடித் தொண்ணூற்றருவுய்ச் சிறத்தலால், "சிறந்த தத்துவங்கள் அனைத்துமாய்" எனத் தெரிவிக்கின்றார். இவை யனைத்தும் உயிர்களின் பொருட்டு அமைந்தவையாதலின், சிவத்தின் வேருயவையாதலால், "அல்லவாய்" எனவும், உண்மை நிலையை யுணர்த்துவதற்குத் "திகழ் ஒளியாய்" எனவும் செப்புகின்றார். ஒளி சென்று பரவி நிலவும் இடத்தை, "ஒளியெல்லாம் பிறங்கிய வெளியாய்" என்றும், வெளி சென்று பரவும் இடத்தை "பெருவெளி" என்றும், "அதற்கு அப்பால்" என்றும், அப்பெருவெளியிடத்துச் சிவம் இருந்து திகழும் பெருநிலையை, "அதற்கப்பால் நிறைந்த சிற்சபை" என்றும் உரைக்கின்றார். அந்த ஞான சபைக்கண் எழுந்தருளிச் சிவ பரம்பொருள் செய்யும் சீர்த்த தொழிலைக் குறிப்பதற்கு, "அருளரசு இயற்றும் நீதி நல்தந்தையே" என்றும் நிகழ்த்துகின்றார். சிவத் தொடர்பு பெற்ற துணிவால், "இனிமேல் பிறந்திடேன் இறவேன் நின்னை விட்டகலேன்" என்று கூறுகின்றார். "பெற்றலும் பிறந்தேன், இனிப் பிறவாத தன்மை வந்து எய்தினேன்" என நம்பியாரூரர் ஒருவர் கூறுவது காண்க.

இதனால், சிவத் தொடர்பு பெற்ற துணிவால் பிறவா நிலையை எய்திய திறம் பேசியவாறும். (86)

3496. எண்ணிய எல்லாம் வல்லபேர் அருளாம்
இணையிலாத் தனிநெடுஞ் செங்கோல்
நண்ணிய திருச்சிற் றம்பலத் தமர்ந்தே
நடத்தும்ஓர் ஞானநா யகனே
தண்ணருள் அளிக்கும் தந்தையே உலகில்
தனையன்நான் பயத்தினுல் துயரால்
அண்ணிய மலங்கள் ஐந்தினுல் இன்னும்
ஐயகோ வாடுதல் அழகோ.

உரை : எண்ணிய எல்லாவற்றையும் எண்ணியவாறு நல்க வல்ல பேரருளாச் செய்யும் ஒப்பற்ற தனித்த நெடிய செங்கோல் திருச்சிற்றம்பலத்தின்கண் எழுந்தருளியிருந்து செலுத்துகின்ற ஒப்பற்ற சிவஞானத் தலைவனே, தண்ணிய திருவருளை நல்கியருளும் தந்தையே! மகனுகிய நான் இவ்வுலகில் அச்ச வகைகளாலும், துயர்களாலும் பற்றி யுள்ள ஐவகை மலங்களாலும் துன்புற்று வருந்துவது அழகாகுமா. எ.று.

எண்ணியவற்றை எண்ணியவாறு நல்கும் திருவருளின் வன்மையை விளக்குதற்கு, "எண்ணிய எல்லாம் வல்ல பேரருள்" என்று உரைக்கின்றார். இறைவன் செலுத்துவது அருட் செங்கோலாதலின், "பேரருளாம் இணையிலாத் தனிநெடுஞ் செங்கோல்" எனச் சிறப்பிக்

கின்றார். அருளரசை யிருந்து புரியும் இடம் உணர்த்துதற்கு, "திருச் சிற்றம்பலத் தமர்ந்தே நடத்தும் ஓர் ஞான நாயகனே" என்று நவில் கின்றார். சிவன் விரும்பி உறையும் இடமெல்லாம் ஞான சபையாதலால் "நண்ணிய திருச்சிற்றம்பலம்" என்று கூறுகின்றார். மலம் ஐந்தாவன: ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதானம் என்பன.

இதனால் அச்சம் துன்பம் மலம் ஆகியவற்றால் துன்புறும் திறம் கூறிய வாறும். (87)

3497. கலைஎலாம் புகலும் கதிஎலாம் கதியில்
காண்கின்ற காட்சிகள் எல்லாம்
நிலையெலாம் நிலையில் நேர்ந்தனு பவஞ்செய்
நிறைவெலாம் விளங்கிடப் பொதுவில்
மலைவிலாச் சோதி அருட்பெருஞ் செங்கோல்
வாய்மையான் நடத்தும்ஓர் தனிமைத்
தலைவனே எனது தந்தையே நினது
தனையன்நான் தளருதல் அழகோ.

உரை: சாத்திர வகைகள் யாவும் உரைக்கின்ற பிறப்புக்களிலும், எப்பிறப்புத் தோறும் காண்கின்ற காட்சிகள் அனைத்திலும் அவை காட்டும் நிலைகளிலும், அந்நிலை தோறும் தோய்ந்து நிறைந்த அனுபவங் கள் எல்லாம் இனிது விளங்க ஞான சபையின்கண் எழுந்தருளி மயங்குத லில்லாத ஒளியை யுடைய அருட்பெருஞ் செங்கோலை மேன்மையாக நடத்துகின்ற ஒப்புயர்வற்ற தலைவனே! எனக்குத் தந்தையே! நின்னுடைய மகனுகிய நான் துன்பத்தால் வருந்துதல் முறையாகுமோ. எ.று.

கலைகள் - மெய்ந்நூல்களாகிய சாத்திரங்கள். உயிர்கள் செய்யும் வினைக்கு ஏற்ப அவை எய்தும் எண்ணிறந்த பிறப்பு வகைகள் எல்லாம் அடங்க, "கலை யெலாம் புகலும் கதி யெலாம்" எனக் கட்டுரைக்கின்றார். பிறப்புத் தோறும் உயிர்கள் பெற்று நுகரும் அனுபவங்களை, "கதியில் காண்கின்ற காட்சிகள் எல்லாம் நிலை யெலாம் நிலையில் நேர்ந்து அனுபவம்செய் நிறைவெலாம் விளங்கிட" என்று கூறுகின்றார். எய்தும் பிறப்புக்களிலும் அவ்வவற்றின் பதங்கட்கு ஏற்ப அனுபவ நிறைவு வேறுபடுதலின், "நிலை யெலாம்" எனக் குறித்துரைக்கின்றார். அனுபவம், திருவருள் தோய்தலால் அன்றி நிறைவு பெறுதலின்மையால், "நிலையில் நேர்ந்தனுபவம்செய் நிறைவெலாம் விளங்கிட" என உரைக்கின்றார். அனுபவத்தால் அறிவு நிறைவுறுதலின், "அனுபவஞ்செய் நிறைவெலாம்" என்பது குறிக்கத் தக்கது. அறிவை மயக்குதலின்றித் தெளிவுறுத்தும் சிறப்பு நோக்கித் திருவருள் ஒளியை, "மலைவிலாச் சோதி" எனச் சிறப்பிக்கின்றார். இறைவனது செங்கோன்மை காலம் தோறும் இடந்தோறும் மயங்கி வேறுபடுதல் இல்லையாதலின், "வாய்மையான் நடத்தும்" எனப் புகழ்கின்றார். நலம் புரிவது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வாய்மை செங்கோன்மை நடத்தும் தந்தையாக விருக்கவும், மகனுகிய யான் துன்பங்களால் வருத்தப்படுதல் கூடாது என்பார், "தனையன் நான் தளருதல் அழகோ" எனச் சாற்றுகின்றார்.

இதனால், தனையனும் முறைமையால் தான் தளருதல் கூடாதென வருந்தியவாரும். (88)

3498. ஆதியே நடுவே அந்தமே எனும்இவ்
வடைவெலாம் இன்றிஒன் றுன
சோதியே வடிவாய்த் திருச்சிற்றம் பலத்தே
தூயபேர் அருள்தனிச் செங்கோல்
நீதியே நடத்தும் தனிப்பெருந் தலைமை
நிருத்தனே ஒருத்தனே நின்னை
ஓதியே வழுத்தும் தனையன்நான் இங்கே
உறுகணல் தளருதல் அழகோ.

உரை : தோற்றம், நடு, இறுதி யெனப்படும் இக்கூறுபாட்டு வகை யாதும் இல்லாமல் ஒன்றுய் விளங்குகின்ற சோதி வடிவாய்த் திருச்சிற்றம்பலத்தின்கண் எழுந்தருளித் தூய பெரிய அருளாகிய ஒப்பற்ற செங்கோல் நெறியில் செலுத்தி யருளும் ஒப்பற்ற பெரிய தலைமைப் பண்பை யுடைய கூத்தனே! ஒருத்தனே! உன்னையே புகழ்ந்து ஓதித் துதிக்கும் மகனுகிய நான் இவ்வுலகில் துன்பத்தால் மெலிதல் தகுதியாகாது அன்றே. எ.று.

தோற்றம், இடை, முடிவு என்ற கூறுபாட்டிற் கிடமின்றி ஏகமாய் விளங்கும் அருட் பெருஞ் சோதி வடிவானவன் சிவன் என்பது விளங்க, "ஆதியே நடுவே அந்தமே எனும் இவ்வடை வெலாம் இன்றி ஒன்றுன சோதியே வடிவாய்" என வுரைக்கின்றுர். திருச்சிற்றம்பலத்தின்கண் எழுந்தருளிக் கூத்தாடும் வடிவில் திருவருள் ஞானத்தை வழங்குதலின், "தூய பேரருள் தனிச் செங்கோல் நீதியே நடத்தும் தனிப்பெருந் தலைமை நிருத்தனே" என்று கூறுகின்றுர். நிருத்தம் - கூத்து. ஒருத்தன், உமைக் கூறனுகத் தோன்றுதலின்றிச் சிவமேயாய் விளங்குதலின், "ஒருத்தனே" என வுரைக்கின்றுர். நாளும் சிவனைப் புகழ்ந்தேத்துதலும், வாழ்த்துதலும் செய்தல் பற்றி, "நின்னை ஓதியே வழுத்தும் தனையன் நான்" எனப் புகல் கின்றுர். உறுகண் - துன்பம்.

இதனால், நாளும் சிவனையே ஓதி வழுத்தும் தனக்குத் துன்பம் தோன்றி வருத்துதல் என்னை என வள்ளற் பெருமான் விண்ணப்பித்த வாரும். (89

3499. அத்தனே திருச்சிற் றம்பலத் தரசே
அரும்பெருஞ் சோதியே அடியார்
பித்தனே எனினும் பேயனே எனினும்
பெரிதருள் புரிதனித் தலைமைச்
சித்தனே எல்லாம் செய்திட வல்ல
செல்வனே சிறப்பனே சிவனே
சுத்தனே நினது தனையன்நான் மயங்கித்
துயர்ந்துளம் வாடுதல் அழகோ.

உரை : தந்தையே! திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளும் அருளரசே! பெறுதற்கரிய பெரிய சோதி வடிவானவனே! அடியவர்கள் உன்னைப் பித்தன் என்றும், பேயன் என்றும் வைதுரைப்பினும் அவர்கட்கு மிக்க அருளைச் செய்கின்ற ஒப்பற்ற தலையாய சித்தத்தை யுடையவனே! எல்லாம் செய்ய வல்ல அருட் செல்வனே! சிறப்பெல்லாம் உடையவனே! சிவபெருமானே! தூயவனே! நின்னுடைய மகனுகிய யான் அறிவு மயங்கி மனம் துயரத்தில் மூழ்கி மெலிவது அழகாகுமோ, ஆகாது அன்றே. எ.று.

அத்தன் - தந்தை. உலகியலில் சோதியை யுடைய ஏனைய பொருள்கள் போலன்றிப் பெறற்கரியதும் பெரியதுமாகிய அருட் சோதி வடிவினனுதலால், "அரும் பெரும் சோதியே" எனப் புகழ்கின்றார். நம்பியாரூரர் சிவபெருமானைப் பித்தன் என்றும் பேயன் என்றும் வைது பாடினராயினும் அவரை வெறுது பேரருள் புரிந்தமையை வியந்து அடியார் பித்தனே எனினும் பேயனே எனினும் பெரிதருள்புரி தனித் தலைமைச் சித்தனே'' என உரைக்கின்றார். சித்தன் - சித்தத்தை உடையவன். எதனையும் எண்ணியாங்கு எளிதில் செய்ய வல்ல அருட் செல்வன் என்பது தோன்ற, "எல்லாம் செய்திட வல்ல செல்வனே'' எனச் செப்புகின்றார். சிறப்பன் - எல்லாச் சிறப்புக்களையும் உடையவன். துயர்தல் - வருந்துதல்.

இதனால், சிவனுக்கு மகனுகும் முறைமையுடைய தான் துன்பத்தால் வருந்துதல் கூடாதென வள்ளற் பெருமான் தெரிவித்தவாறும். (90)

1500. உற்றதோர் திருச்சிற் றம்பலத் தோங்கும்
ஒருதனித் தந்தையே நின்பால்
குற்றம்நான் புரிந்திங் கறிந்திலேன் குற்றம்
குயிற்றினேன் என்னில்அக் குற்றம்
இற்றென அறிவித் தறிவுதந் தென்னை
இன்புறப் பயிற்றுதல் வேண்டும்
மற்றய லார்போன் றிருத்தலோ தந்தை
வழக்கிது நீஅறி யாயோ.

உரை : பெரிதாகிய திருச்சிற்றம்பலத்தில் விளங்குகின்ற ஒப்பற்ற தந்தையே, நினக்கு யான் ஒரு குற்றமும் புரிந்தறியேன்; குற்றம் செய்துள்ளேன் எனில் அக் குற்றங்களை இத்தன்மையது என எனக்கு அறிவித்து அவற்றை உணரும் உணர்வு தந்து என்னைப் பழகுவித்தல் வேண்டும்; வேறு அயலார் போல இருப்பது தந்தைக்கு முறையாகுமா, இதனை நீ அறிவாய் அன்றே. எ.று.

உற்றது - பெரியது. தில்லைச் சிற்றம்பலத்தின்கண் எழுந்தருளும் பெருமானுகிய சிவன் எல்லா வுயிர்க்கும் தந்தையாம் முறைமை யுடையவனுதலால், "திருச்சிற்றம்பலத் தோங்கும் ஒரு தனித் தந்தையே'' என்று போற்றுகின்றார். மலமறைப்பால் தாம் செய்த குற்றங்களைத் தாம் அறிய மாட்டாமை பற்றி, "நின்பால் குற்றம் நான் புரிந்திங் கறிந்திலேன்'' எனப் புகல்கின்றார். குயிற்றல் - செய்தல். செய்த குற்றங்களை யறிந்தோர் அறிவிக்க அறிந்தாலன்றிக் குற்றங்கள் நீங்கி நன்னெறியில் நின்று பயிலுதல் இயலாத தொன்றுகலின், "அக்குற்றம்

இற்றென அறிவித்து அறிவு தந்து என்னை இன்புறப் பயிற்றுதல் வேண்டும்" என்று கூறுகின்றார். அயலார் - பிறர் குற்றங்களையும் குணங்களையும் அறிந்தும் அறியார் போன்று இருப்பவர். மகன்பால் குற்றம் காணப்பட்ட வழி எடுத்துக்காட்டி நன்னெறிப் படுத்துதல் சான்றோனுகிய தந்தைக்குக் கடனும் என்பாராய், "அயலார் போன்றிருத்தலோ தந்தை வழக்கிது நீ அறியாயோ" என விளம்புகின்றார்.

இதனுல், செய்த குற்றங்களை எடுத்துக் காட்டி அறிவு தந்தருளல் வேண்டுமெனச் சிவன்பால் விண்ணப்பித்தவாறும். (91)

3501. குற்றமோ குணமோ நான்அறி யேன்என்
குறிப்பெலாம் திருச்சிற்றம் பலத்தே
உற்றதா தலினுல் உலகியல் வழக்கில்
உற்றன மற்றென தலவே
தெற்றென அருட்கே குற்றம்என் பதுநான்
செய்திடில் திருத்தலே அன்றி
மற்றய லார்போன் றிருப்பதோ தந்தை
மரபிது நீஅறி யாயோ.

உரை : குணம் குற்றங்களின் இயல்பை நான் அறியேன்; அதற்குக் காரணம் என் கருத்தெல்லாம் திருச்சிற்றம்பலத்தே பொருந்தியிருப்பதாகும்; ஆதலால் உலக வாழ்வில் என்பால் நிகழ்ந்தன யாவும் என்னுடையவை ஆகா; தெளிவாக அவை திருவருட்கே யாகும்; குற்றம் என்பதை நான் செய்வேனுயின் உடனே என்னைத் திருத்துவது இன்ம அயலாரைப் போலப் பராமுகமாய் இருப்பது தந்தைக்கு முறைறியாகாது; இதனை நீ நன்கு அறிவாயன்றே. எ.று.

குற்ற மென்றும், குண மென்றும் ஒன்றினைச் செய்யுமிடத்து அறிவது இல்லையாதலின், "குற்றமோ குணமோ நான் அறியேன்" என்று கூறுகின்றார். அறிவுடையார்க்குச் செய்யப்படும் குற்றம் புலனுகுமாயினும் கருத்து ஒன்றுவிடத்து அது இயலாது. தமது அறிவு முழுவதும் திருச்சிற்றம்பலத்து இறைவன் திருவருளில் ஒன்றி யிருந்தமையால், அறியாராயினமை விளக்குவாராய், "என் குறிப்பெலாம் திருச்சிற்றம்பலத்தே உற்றது ஆதலினுல்" என வுரைக்கின்றார். உலகியல் வாழ்வில் உண்டாயின குற்றங்கள் திருவருட் செயலாயின என்பாராய், "உலகியல் வழக்கில் உற்றென மற்றென தலவே தெற்றென அருட்கே" என மொழிகின்றார். மகன் குற்றம் செய்தவிடத்து அதனை எடுத்துக் காட்டித் திருத்துவது தந்தைக்குக் கடனுகுமே யன்றிப் புறக்கணிப்பதுத தந்தைக்கு முறைமை யாகாது என்றற்கு, "அயலார் போன்றிருப்பதோ தந்தை மரபு" என்றும், இதனை நீ அறிவாய் இல்லை யென்பார், "இது நீ அறியாயோ" என இயம்புகின்றார்.

இதனுல், மகனுகிய தான் செய்த குற்றத்தைத் தந்தையாகிய நீ திருத்தியருளல் வேண்டுமென வள்ளற் பெருமான் சிவனை வேண்டுகின்றார். (92)

3502. மாயையால் வினையால் அரிபிர மாதி
வானவர் மனமதி மயங்கித்
தீயகா ரியங்கள் செய்திடில் அந்தோ
சிறியனேன் செய்வது புதிதோ
ஆயினும் தீய இவைஎன அறியேன்
அறிவித்துத் திருத்துதல் அன்றி
நீயிவண் பிறர்போன் றிருப்பது தந்தை
நெறிக்கழ கல்லவே எந்தாய்.

உரை : மாயை மயக்கத்தாலும் வினை வகையாலும், திருமால் பிரமன் முதலிய தேவர்களே அறிவு மயங்கித் தீய காரியங்களைச் செய்வார்களாயின், ஐயோ, அறிவால் சிறியவனுகிய நான் செய்வது புதுமையாகுமோ? ஆயினும் நான் செய்தவற்றுள் தீயவை இவை யென்று நான் அறியேன்; எனக்கு அவற்றைக் காட்டித் திருத்துவதை விடுத்துப் பெருமானுகிய நீ இவ்விடத்தே அயலார் போன்று இருப்பது தந்தையாம் முறைமையையுடைய உனக்கு நன்னெறி யாகாது; அழகுமாகாது. எ.று.

மாயை - காம வெகுளிகளைத் தூண்டும் மயக்க வகை. வினையும் அறிவை மயக்குமாகலின், "வினையால்" என விளம்புகின்ருர். வானவர் - தேவர். தீய காரியங்கள் - தவருன செயல்கள். மக்களினும் உயர்ந்தவர் களாதலின் தேவர்களை எடுத்தோதி அவர்கள் மாயை, கன்மங்களால் மயங்குவாராக, மக்களினத்தில் அறிவால் சிறுமை யுடையவனுகிய நான் மயங்கிக் குற்றங்களைச் செய்வது வியப்பாகாது; இதனைப் பொறுத் தருளல் வேண்டுமென்று முறையிடுவாராய், "வானவர் மனமதி மயங்கித் தீய காரியங்கள் செய்திடில் அந்தோ சிறியனேன் செய்வது புதிதோ" என வுரைக்கின்ருர். செய்த பிழைகளை எடுத்துக் காட்டித் திருந்தும் இயல்புடையவன் எனத் தம்மை யுணர்த்துவார், தீய இவை யென அறியேன் அறிவித்துத் திருத்துதல் அன்றி" திருத்தாமல் அயலார் போன்றிருப்பது முறையாகாது என்றற்கு, "நீ யிவண் பிறர் போன்றிருப்பது தந்தை நெறிக்கு அழகல்லவே எந்தாய்" என்று கூறுகின் ருர். "திருத்தி திருத்தி வந்து என் சிந்தை இடங்கொள் கயிலாயா" (துருத்தி) என நம்பியாரூரர் கூறுவது காண்க.

இதனுல், தீயவை செய்திடில் திருத்துதலைக் கைவிட்டு வருத்துவது முறையாகாது என விண்ணப்பித்தவாரும். (93)

3503. கருணையும் சிவமே பொருள்எனக் காணும்
காட்சியும் பெறுகமற் றெல்லாம்
மருள்நெறி எனநீ எனக்கறி வித்த
வண்ணமே பெற்றிருக் கின்றேன்
இருள்நெறி மாயை வினைகளால் கலக்கம்
எய்திய தென்செய்வேன் எந்தாய்
தெருள்நிலை இன்றிக் கலங்கினேன் எனினும்
சிறுநெறி பிடித்ததொன் றிலையே.

உரை : எந்தையாகிய சிவபெருமானே, உயிர் இரக்கமும் சிவமுமே உறுதிப் பொருள் என்னும் அறிவு பெறுக; மற்றவை யாவும் மயக்க நெறி என அறிவித்த வண்ணமே அறிவுற்றிருக்கின்றேன்; குற்ற நெறியைக் காட்டும் மாயை கன்மங்களால் என் அறிவின்கண் கலக்கம் உண்டா கிறது; செய்வதறியாது வருந்துகிறேன்; தெளிந்த அறிவு பெறுது கலக்க முற்றே னெனினும், தவருன கீழ்மை நெறியை யான் கைக்கொண்ட தில்லே, காண். எ.று.

கருணை - பிற வுயிர்கணிக் கண்டவிடத்து மனம் இரங்கும் நல்லறம். சிவம் - இன்பமே நல்கும் பரம்பொருள். காட்சி யறிவு, மருள் நெறி, மயக்கத்தைச் செய்யும் தீய நெறிகள். உயிரிரக்கப் பண்பும் சிவ நெறியுமே நன்னெறி யென்றலின், "மற்றெல்லாம் மருள் நெறி" என அறிவுறுத்து கின்றார். அந்த நல்லறத்தையே கைக்கொண்டிருப்பது தோன்ற வள்ளற் பெருமான், "அறிவித்த வண்ணமே பெற்றிருக்கின்றேன்" என வுரைக் கின்றார். உலகியல் வாழ்விற் பற்று விஞவித்து மயக்குவதாலும், விஞகள் செயற் பயணிக் காட்டி மேன்மேலும் அவற்றைச் செய்தற்கண் விழைவு தோற்றுவித்தலால், "மாயை விஞகளால் கலக்க மெய்தியது" எனவும், கையறவு விளங்க, "என் செய்வேன்" எனவும் இயம்புகின்றார். மாயையும் விஞயும் முடிவில் துன்பம் எய்துவித்தலின், "இருள் நெறி" எனவும் இயம்புகின்றார். தெருள் நிலே - தெளிந்த ஞான நிலே. சிறுமையும் துன்பமும் பயக்கும் குற்ற நெறிகளிச் "சிறு நெறி" எனத் தெரிவிக்கின் றார்.

இதனால், உயிரிரக்கமும் சிவநெறியும் மேற்கொண்டு சிறுநெறியிற் சேராத தமது கொள்கையை வள்ளற் பெருமான் தெரிவித்தவாரும். (94)

3504. கலங்கிய போதும் திருச்சிற்றம் பலத்தில்
கருணையங் கடவுளே நின்பால்
இலங்கிய நேயம் விலங்கிய திலேயே
எந்தைநின் உளம்அறி யாதோ
மலங்கிய மனத்தேன் புகல்வதென் வினையால்
மாயையால் வரும்பிழை எல்லாம்
அலங்கும்என் பிழைகள் அல்லஎன் றுன்னே
டடிக்கடி அறைந்தனன் ஆண்டே.

உரை : எந்தையாகிய சிவபெருமானே, என் மனமும் அறிவும் சோர்வுற்ற போதிலும் திருச்சிற்றம்பலத்தின்கண் கருணையுருவிற் காட்சி நல்கும் கடவுளாகிய நின்னிடத்து யான் வைத்த அன்பு நீங்கியதில்லே; இது தேவரீரது திருவுள்ளம் நன்கறிந்தது; மயங்கும் மனத்தை யுடைய வனுகிய யான் எடுத்துரைப்பதென்னே? மாயை கன்மங்களால் என்னிடத் துண்டாகும் குற்றங்கட்கு அவைகளே காரணமாதலால், அக்குற்றங்கள் என்னுடையவை யல்ல என்று அவ்வப்போது நான் அடிக்கடி சொல்லி யுள்ளேன், காண். எ.று.

கணந்தோறும் மாறும் இயல்புடைய முக்குணங்களால் அறிவும் நினவும் கலக்கமுறுவது அறிஞர் நன்கறிந்த வுண்மையாதலின், கலங்கிய

போதும்" என எடுத்துரைக்கின்றார். தில்லையிற் கூத்தப் பெருமான் திருவுரு கருணை யுருவெனத் தெரிவித்தற்குத் "திருச்சிற்றம்பலத்திற் கருணையங் கடவுளே" எனக் கூறுகின்றார். இலங்கிய நேயம், பொருந்தி விளங்கும் மெய்யன்பு. என் மனத்தின்கண் உயிர்க்குயிராய் இருந்தருளும் தேவரீர்க்கு நன்கு தெரிந்தது என்பாராய், "எந்தை நின்னுளம் அறியாதோ" என இசைக்கின்றார். மலப்பிணிப்பால் மயங்குவது பற்றி, "மலங்கிய மனத்தேன்" என வுரைக்கின்றார். அலங்குதல் - அசைதல். அறைதல் - தெரிவித்தல்.

இதனால், மாயை வினைகளால் உண்டாகும் பிழைகட்காகத் தம்மை வருத்துதல் கூடாதென வள்ளற் பெருமான் விண்ணப்பித்தவாரும். (95)

3505. இரும்பினும் கொடிய மனஞ்செயும் பிழையும்
என்பிழை அன்றெனப் பலகால்
விரும்பிநின் அடிக்கே விண்ணப்பித் திருந்தேன்
வேறுநான் செய்ததிங் கென்னே
அரும்பொனே திருச்சிற் றம்பலத் தமுதே
அப்பனே என்றிருக் கின்றேன்
துரும்பினுஞ் சிறியேன் புகல்வதென் நினது
தூயதாம் திருவுளம் அறியும்.

உரை : இரும்பினும் கொடுமை யுடையதாகிய என் மனத்தால் விளையும் குற்றங்களையும் என் குற்றங்களல்ல வெனப் பலமுறையும் நின் திருவடிக்கண் முறையிட்டு அமைந்திருந்தேனே யன்றி வேறென்றும் நான் செய்ததில்லை; பெறற்கரிய பொன் போன்றவனே, திருச்சிற்றம் பலத்தின்கண் எழுந்தருளும் அமுதமாகியவனே, எனக்குத் தந்தையே என்று எண்ணிக் கொண்டு இருக்கின்றேன்; சிறு துரும்பினும் சிறிய வனாகிய நான் சொல்லுவதற்கு என்ன உளது; என் மனத்தில் உள்ள வற்றையெல்லாம் தூயதாகிய தேவரீரது திருவுள்ளம் நன்கு அறியும். எ.று.

எளிதில் உருகாமை பற்றி, "இரும்பினும் கொடிய மனம்" என்று சொல்லுகின்றார். தேகம் எய்தும் போதே யுடன் எய்துவதாதலின், "மனம் செய்யும் பிழையும்" என எடுத்துரைக்கின்றார். வினைக்குரிய கருவிகள் ஆகிய மனம், வாக்கு, மெய் என்ற மூன்றனுள் மனத்தால் செய்யப்படும் குற்றத்தையடுத்து, "மனம் செயும் பிழையும் என் பிழை அன்றென" என மொழிகின்றார். தன்னின் வேறுக மனத்தைப் பிரித்து உரைப்பவர் தாம் எண்ணியது கூறுவார், "அரும் பொனே திருச்சிற்றம் பலத்து அமுதே அப்பனே என்றிருக்கின்றேன்" என்று கூறுகின்றார். தமது சிறுமையும் புன்மையும் உணர்த்துதற்கு, "துரும்பினும் சிறியேன்" என உரைக்கின்றார்.

இதனால், மனமாகிய அந்தக்கரணம் செய்யும் குற்றத்தையும் தன தன்று எனவள்ளற் பெருமான் கருதியவாறு தெரிவித்தவாரும். (96)

3506. வருமுயிர் இரக்கம் பற்றியே உலக
வழக்கில்என் மனஞ்சென்ற தோறும்
வெருவிநின் அடிக்கே விண்ணப்பித் திருந்தேன்
விண்ணப்பஞ் செய்கின்றேன் இன்றும்
உருவஎன் உயிர்தான் உயிர்இரக் கந்தான்
ஒன்றதே இரண்டிலை இரக்கம்
ஒருவில்என் உயிரும் ஒருவும்என் உள்ளத்
தொருவனே நின்பதத் தாணை.

உரை : தோன்றுகின்ற உயிர்களின்பால் இரக்கம் கொள்வது பற்றி உலகியல் வழக்கில் என் மனம் சென்ற போதெல்லாம் மிக்க அச்சத் தோடே நின் திருவடிக்கே விண்ணப்பம் செய்தேன்; இப்போதும் விண்ணப்பம் செய்கின்றேன்; அருவுருவினதாகிய என்னுயிர் வேறு, உயிரிரக்கம் வேறு என எனக்கு இரண்டில்லை; இரக்கப் பண்பு என்னிடத் தில் நீங்குமாயின் என்னுயிரும் நீங்கி விடும்; என்னுள்ளத்தில் எழுந் தருளும் ஒப்பற்ற பெருமானே, இது உன் திருவடி ஆணையாக மொழிவ தாகும். எ.று.

உயிர்களின்பால் இரக்கமுற்றுத் தகுவன உதவுதற்கு என்றே உயிர் வாழ்கின்றவராதலால் அவற்றின்பால் நிகழ்வு செல்லும் போதெல்லாம் தவறு நேர்ந்து விடுமோ என்ற அச்சத்தோடு பணி புரிந்தாராதலால், "உலக வழக்கில் என் மனம் சென்ற தோறும் வெருவி நின்னடிக்கே விண்ணப்பித்திருந்தேன் விண்ணப்பம் செய்கின்றேன் இன்றும்" என விளம்புகின்றார். உயிர் இரக்கம் ஒன்றே கருதித் தாம் உயிர் வாழ்கின்றார் என்பதை வற்புறுத்துதற்கு, "உருவ என்னுயிர்தான் உயிரிரக்கம் தான் ஒன்றதே இரண்டிலை" என்றும், "இரக்கம் ஒருவில் என்னுயிரும் ஒருவும் என்னுள்ளத் தொருவனே நின் பதத்தாணை" என்றும் உரைக் கின்றார்.

இதனால், உயிரிரக்கம் வேறு தான் வேறு என இரண்டாகாமை விளக்கியவாறும். (97)

3507. தலைவர்கள் எல்லாம்த னித்தனி வணங்கும்
தலைவனே இன்றும்என் உளமும்
மலைவில்என் அறிவும் நானும்இவ் வுலக
வழக்கிலே உயிர்இரக் கத்தால்
இலகுகின் றனம்நான் என்செய்வேன் இரக்கம்
என்னுயிர் என்னவே றிலையே
நிலைபெறும் இரக்கம் நீங்கில்என் உயிரும்
நீங்கும்நின் திருவுளம் அறியும்.

உரை : தலைவராயினார் யாவரும் தனித்தனியாக நின்று தொழுது வணங்கும் தலைமை முதல்வனே; இப்பொழுதும் என் மனமும் தெளிந்த என்னறிவும் நானும் இவ்வுலக வாழ்வில் கலந்து உயிரிரக்கம் ஒன்றே செய்பணியாகக் கொண்டு விளங்குகின்றேம்; இந்த இயைபுக்கு நான் செய்யலாவது ஒன்றுமில்லை; இரக்கம் வேறு என்னுயிர் வேறு எனப் பிரி

தற்கு இல்லை; என்னுள் நிலைபெறுகின்ற இரக்கம் நீங்கில் என்னுயிரும் நீங்கும்; இதனைத் தேவரீரது திருவுள்ளம் நன்கு அறியும். எ.று.

"தொழப்படும் தேவர் தொழப்படுவான்" எனத் திருநாவுக்கரசர் முதலிய சான்றோர் கூறுதலால், "தலைவர்கள் எல்லாம் தனித்தனி வணங்கும் தலைவனே" என்று போற்றுகின்றார். மலைவு - கலக்கம். மனமும் அறிவும் தானுமாக ஒன்றியிருந்து உலகியல் செயல் முறையில் கலந்து வாழ்வது உயிர் இரக்கமாகிய அருள் அறத்தின் பொருட்டே என்பதை யாப்புறுத்தற்கு, "மலைவில் என்னறிவும் நானும் இவ்வுலக வழக்கிலே உயிர் இரக்கத்தால் இலகுகின்றனம்" என இயம்புகின்றார். இக்கொள்கை தமக்கு உண்டானதற்குக் காரணம் காணமாட்டாமையின் "நான் என்செய்வேன்" எனவும், "இரக்கம் என்னுயிர் என்ன வேறிலையே" எனவும் விளம்புகிறார். இரக்கப் பண்பு உயிரோடே ஒன்றி விலக்கற நிற்றல் தோன்ற, "நிலைபெறும் இரக்கம் நீங்கில் என்னுயிரும் நீங்கும்" எனத் தெளிவிக்கின்றார்.

இதனால், இரக்கப் பண்புக்கும் தமக்குமுள்ள தொடர்பு சொல்லியவாறும். (98)

3508. ஆதலால் இரக்கம் பற்றிநான் உலகில்
ஆடலே அன்றிஓர் விடயக்
காதலால் ஆடல் கருதிலேன் விடயக்
கருத்தெனக் கில்லைஎன் றிடல்இப்
போதலால் சிறிய போதும்உண்ட டதுநின்
புந்தியில் அறிந்தது தானே
ஈதலால் வேறோர் தீதென திடத்தே
இல்லைநான் இசைப்பதென் எந்தாய்.

உரை : ஆகவே உயிரிரக்கம் பற்றி நான் உலகியல் வாழ்வில் கலந்து இயல்கின்றேனே யன்றிக் கண், காது முதலிய பொறி புலன்கள் தோற்றுவிக்கும் ஆசையால் வாழ விரும்புகின்றேனில்லை; பொறி புலன் மேல் செல்லும் ஆசையும் எனக்கில்லை; இதனை நான் உரைப்பது இப் பொழுதில் அன்று; எனது சிறிய பருவத்திலேயே உண்டு; அதுவும் தேவரீரது திருவுளம் அறிந்ததாகும்; இது தவிர வேறு குற்றம் என்பால் இல்லை; இதை நான் எல்லாம் அறிந்த உனக்கு எடுத்துரைப்பது வேண்டாததாகும் எ.று.

பொறி புலன்கள் செய்யும் ஆசையால் உலகியல் வாழ்வு விரிந்து பரந்து நடைபெறுகின்றதாதலால், அதனின் விலகி இருக்கும் வள்ளற் பெருமானது உண்மைக் கருத்தைப் புலப்படுத்தற்கு, "இரக்கம் பற்றி நான் உலகில் ஆடலேயன்றி ஓர் விடயக் காதலால் ஆடல் கருதிலேன் விடயக் கருத்து எனக்கில்லை" என்று விளம்புகிறார். விடயம் - கண் காது முதலிய பொறி புலன்கள் மேற் செல்லும் ஆசை. விடய ஆசை சிவனுக்கு இல்லையாதலால் அவனுடைய அடியார்பாலும் அஃது இல்லையாயிற்று "பொறி வாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடு வாழ்வார்" என்று சான்றோரும் கூறுதல் காண்க. பொறிவாயில் ஆசை யாகிய விடயங்களை விரும்பாது ஒழுகும் திறம் இளம்பிள்ளைப் பருவத்

தேயே இல்லையாயிற்று என்பது புலப்பட, "இப்போதலால் சிறிய போதும் உண்டது நின் புந்தியில் அறிந்தது" என்று கூறுகின்றார். புந்தி - மனம். ஒருகால் இவ்விரக்கப் பண்பு தீதெனக் கூறப்படுமாயினும் அதனை ஒழிய வேறு தீதுகளை உடையவனுகேன் எனத் தான் வேண்டிய கருத்தை வலியுறுத்தற்கு, "ஈதலால் வேறோர் தீது எனது இடத்தேயில்லை நான் இசைப்பது என்" என இசைக்கின்றார். உயிரிரக்கம் ஒருகாலும் தீதெனப் படாதது அறிக. அதனைச் சான்றோர் "அருள் அறம்" எனப் போற்றுவர்.

இதனால், உயிரிரக்கப் பண்பு குற்றமாயினும் அஃதொழிய ஏனைக் குற்றங்களை உடையவனுகேன் என வற்புறுத்தவாறும். (94)

3509. என்னையும் இரக்கந் தன்னையும் ஒன்றுய்
இருக்கவே இசைவித் திவ்வுலகில்
மன்னிவாழ் வுறவே வருவித்த கருணை
வள்ளல்நீ நினக்கிது விடயம்
பன்னல்என் அடியேன் ஆயினும் பிள்ளைப்
பாங்கினுல் உரைக்கின்றேன் எந்தாய்
இன்னவா றெனநீ சொன்னவா றியற்று
திருந்ததோர் இறையும்இங் கிலையே.

உரை : எளியேனையும் உயிரிரக்கப் பண்பினையும் ஒன்றுய் இயைவித்து இவ்வுலகில் நின்று வாழ்தற் பொருட்டு என்னைத் தோற்றுவித்த அருள் வள்ளல் நீயாவாய்; நினக்கு அடியவனுகிய நான் சொல்லுதல் வேண்டா; ஆயினும் நினக்கு மகன் என்ற முறைமையினுல் நின் திருமுன் எடுத்துரைக்கின்றேன்; இவ்வாறு செய்க என நீ சொன்னபடி ஒருசிறிதும் இவ்வுலகில் செய்யாது இருந்ததில்லையான். எ.று.

பொருளையும் அதன் பண்பையும் பிரித்தலாகாது என்ற முறைமை பற்றி, "என்னையும் இரக்கம் தன்னையும் ஒன்றுய் இருக்கவே இசைவித்து மன்னி வாழ்வுறவே வருவித்த கருணை வள்ளல் நீ" என வுரைக்கின்றார். பண்பும் அதனையுடைய பொருளும் பிரிக்க வாராதவாறு அமைவது இறைவன் படைப்பு என்பது இதனுல் உணரப்படும். மன்னுதல் - நிலை பெறுதல். இவ்விடயம் என்பது இது விடயம் என வந்தது. இதனைப் பொருளொடு புணராச் சுட்டு என்பர். பன்னல் - சொல்லுதல். பிள்ளைப் பாங்கு - மகன்மை முறை. வேண்டாவிடினும் தந்தைக்கு மகன் கூறுவது போலத் தான் கூறுவது ஏற்கற்பாலது என்பது கருத்து. தமது வாழ்வில் இறைவன் ஆணைக்கு மாருகத் தாம் ஒரு செயலும் செய்ததில்லை யென்பாராய், "இன்னவா றென நீ சொன்னவாறு இயற்றுது இருந்ததோர் இறையும் இங்கிலையே" என மொழிகின்றார். இறை - சிறிதும்.

இதனால், இறைவன் ஆணை வழி நின்று அவன் சொன்னவாறு செய்வதே வாழ்வு என வள்ளற் பெருமான் கருதி ஒழுகிய திறம் கூறியவாறும். (100)

3510. உறுவினை தவிர்க்கும் ஒருவனே உலகில்
ஓடியும் ஆடியும் உழன்றும்
சிறுவர்தாம் தந்தை வெறுப்பஆர்க் கின்ரூர்
சிறியனேன் ஒருதின மேனு ம்
மறுகிநின் ரூடி ஆர்த்ததிங் குண்டோ
நின்பணி மதிப்பலால் எனக்குச்
சிறுவிளை யாட்டில் சிந்தையே இலேநின்
திருவுளம் அறியுமே எந்தாய்.

உரை : மிக்க செயல்களாகிய குற்றத்தை நீக்கும் ஒப்பற்ற பெருமானே; உலகில் சிறியவராயினர் தம்மைப் பெற்ற தந்தை மனம் வெறுக்கும்படி இங்குமங்கும் ஓடியும் ஆடியும் வருந்தியும் ஆரவாரம் செய்கின்றனர்; சிறியவனுகிய யான் ஒருநாளும் மனம் மயங்கி நின்று இங்குமங்கும் ஆடி ஆரவாரம் செய்ததில்லே; நினது திருப்பணியை நெஞ்சிற் கொள்ளுவதன்றி என் சிந்தை சிறு விளையாட்டுக்களில் சென்றது கிடையாது; இதனே தேவரீரது திருவுள்ளம் நன்கு அறியும். எ.று.

உறுவினை - மிக்க செயல். நற் செயலாயினும் தீச்செயலாயினும் அளவுக்கு மிக்க வழிக் குற்றமாய் விடுதலின், அக்குற்றத்தையும் பொறுக்கும் இயல்பு பற்றிச் சிவபெருமானே, "உறுவினைத் தவிர்க்கும் ஒருவனே" என உரைக்கின்ரூர். உலகில் தந்தை தாயர்களே மகிழ்விக்கும் சிறுவர்கள் பல சமயங்களில் அவர்கள் வெறுக்கும்படி மிகைபட ஓடி யாடி விளையாடுவது இயற்கையாதலின், அதனே "உலகில் ஓடியும் ஆடியும் உழன்றும் சிறுவர்தாம் தந்தை வெறுப்ப ஆர்க்கின்ரூர்" என்று கூறுகின் ரூர். தான் அவ்வாறு ஆடியதில்லே என்பதனே, "சிறியனேன் ஒரு தினமேனும் மறுகி நின்ரூடி ஆர்த்ததிங் குண்டோ" என்று கூறுகின்ரூர். மறுகி நின்ரூடி என்பதை மறுகில் நின்ரூடி என்று பாடங் கொண்டு தெருக்களில் நின்று விளையாடி எனப் பொருள் கொள்வதும் உண்டு. பெரியோர்க்கு அடங்கி யொழுகுதல் வேண்டும் என்பது இளமையிற் கற்பிக்கும் நல்லறங்களில் ஒன்ருதலால் அதனே இளமையிலேயே மேற் கொண்டு ஒழுகிய திறத்தை, "நின் பணி மதிப்பலால் எனக்குச் சிறு விளையாட்டில் சிந்தையே இலே" எனத் தெரிவிக்கின்ரூர். அடங்கி ஒழுகுதல் முதலியன சிவப்பணி என மேற் கொண்டமை புலப்பட, "நின் பணி மதிப்பலால்" எனக் குறிக்கின்ரூர். சிறு விளையாட்டு - சிறுவர்கள் விளையாடும் விளையாட்டு. சிவஞானப் பணி யல்லாத பிறவற்றைச் சிறு விளையாட்டு என்றலும் உண்டு.

இதனுல், வள்ளற் பெருமானுக்குப் பிள்ளேப் பருவத்தேயே சிவப் பணியில் சிந்தை ஊன்றி நின்றமை தெரிவித்தவாரும், (101)

3511. தந்தையர் வெறுப்ப மக்கள்தாம் பயனில்
சழக்குரை யாடிவெங் காமச்
சிந்தைய ராகித் திரிகின்ரூர் அந்தோ
சிறியனேன் ஒருதின மேனும்

எந்தைநின் உள்ளம் வெறுப்பநின் பணிவிட்
டிவ்வுல கியலில்அவ் வாறு
தெந்தன என்றே திரிந்ததுண் டேயோ
திருவுளம் அறியாநான் அறியேன்.

உரை : பெருமானே, பெற்ற தந்தையாரின் மனம் வெறுக்கும்படி மக்களாயினர் பயனில்லாத வெற்றுரைகளைப் பேசி வெவ்விய காம நினைவுகளை யுடையவராய்த் திரிகின்றார்கள்; ஐயோ, சிறியவனாகிய யான் ஒரு நாளேனும் எந்தையாகிய உனது திருவுள்ளம் வெறுக்குமாறு நினக்குரிய திருப்பணியைச் செய்வதை விடுத்து இவ்வுலகில் மனம் போனபடி உழன்றதில்லை; இதனைத் தேவரீர் திருவுள்ளம் அறிய நான் அறிகிலேன். எ.று.

தாம் பெற்ற மக்கள் பயனில்லாத பேச்சுக்களில் ஈடுபட்டுக் காமக் களிப்புடைய நினைவுடையராய்ப் பேசித் திரிவதை விரும்புவ தில்லை யாதலால், "தந்தையர் வெறுப்ப மக்கள்தாம் பயனில் சழக்குரையாடி வெங்காமச் சிந்தையராகித் திரிகின்றார்" என்று உரைக்கின்றார். பயனில்லாதவற்றைப் பேசுதலும் செய்தலும் குற்றமாதலாலும் அவற்றைப் "பயனில் சழக்குரை" எனக் கூறுகின்றார். காம நினைவு சிந்தையைக் கெடுத்தலின், "வெங்காமச் சிந்தையராகித் திரிகின்றார்" என்று குறிக்கின்றார். காமச் சிந்தையர் என்பதால் இப்பாட்டில் நினைக்கப்படும் மக்கள் பிள்ளைப் பருவம் கடந்து வாலப்பருவம் எய்தினவர் என்பது பெறப்படும். அவர்களைப் பற்றி இரக்கப்படுகின்றாராதலின். 'அந்தோ' என மொழிகின்றார். அவர்களுடைய பயனில் சழக்குரைகளும் காம நினைவு களும் இவ்வுலகியற்கு ஒத்தனவாதலால், "இவ்வுலகியலில் நான் அவ்வாறு திரிந்த துண்டோ" என்று வினவுகின்றார். தெந்தன எனத் திரிதல் - நிலை தடுமாறித் திரிதல்

இதனால், வள்ளற் பெருமான் வாலப் பருவத்தும் சிவப் பணியிலேயே ஊன்றிய சிந்தையராய் இருந்தது தெரிவித்தவாறும். (102)

3512. அம்புவி தனிலே தந்தையர் வெறுப்ப
அடிக்கடி அயலவர் உடனே
வம்புறு சண்டை விளைக்கின்றார் சிறுவர்
வள்ளலே நின்பணி விடுத்தே
இம்பர்இவ் வுலகில் ஒருதின மேனும்
ஏழையேன் பிறரொடு வெகுண்டே
வெம்புறு சண்டை விளைத்ததுண் டேயோ
மெய்யநின் ஆணைநான் அறியேன்.

உரை: மண்ணுலகில் பெற்ற தந்தையர் மனம் வெறுக்கும்படி அயலாருடன் அடிக்கடி புதுப்புதுச் சண்டைகளைச் சிறுவர்கள் தொடுக் கின்றார்; வள்ளற் பெருமானாகிய நினது அருட் பணியைக் கைவிட்டு இங்கே இவ்வூரில் ஒருநாளேனும் ஏழையாகிய யான் மற்றவர்களுடன் கோபித்து மிக்குறும் சண்டை செய்தது கிடையாது; மெய்யவனாகிய நின்மேல் ஆணையாக அறிகிலேன். எ. று.

"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" யாதலின் "தந்தையர் வெறுப்ப" என மொழிகின்றார். வம்பு - புதுமை. புதுப்புதுக் காரணம் கண்டு சண்டை தொடுப்பது பற்றி, "வம்புறு சண்டை" என வுரைக்கின்றார். பணி - ஈண்டுச் சிவபூசை மேலும், சைவ நூலாராய்ச்சி மேலும், உயிரிரக்கச் செயல் மேலும் நின்றது. இம்பர் - இங்கு. உலகு என்றது ஊர்களைக் குறித்து நிற்கிறது. சினத் தீயை மேன்மேலும் கிளர்விப்பது பற்றி, "வெம்புறு சண்டை" என விதக்கின்றார். தமது உரையின் மெய்ம்மையை வலியுறுத்தற்கு, "மெய்ய நின் ஆணை" என விளம்புகின்றார்.

இதனால், வள்ளற் பெருமான் சிறு பிள்ளைப் பருவத்தும் வம்புச் சண்டைகளில் ஈடுபட்ட தில்லை எனத் தெரிவித்தவாறும். (103)

3513. வள்ளல்இவ் வுலகில் தந்தையர் வெறுப்ப
மக்கள்தாம் ஒழுக்கக்தை மறந்தே
கள்ளருந் துதல்சூ தாடுதல் காமக்
கடைதொறும் மயங்குதல் பொய்யே
விள்ளுதல் புரிவார் ஐயகோ அடியேன்
மெய்யநின் திருப்பணி விடுத்தே
எள்ளிஅவ் வாறு புரிந்ததொன் றுண்டோ
எந்தைநின் ஆணைநான் அறியேன்.

உரை: அருள் வள்ளலாகிய சிவனே, இவ்வுலகில் தந்தையர் மனம் வெறுக்குமாறு மக்களாயினர் தமக்குரிய நல்லொழுக்கத்தை விடுத்துக் கட் குடித்தல், சூதாடுதல், காமக் கூட்டமாகிய இழிசெயலில் ஈடுபடுதல், பொய் பேசுதல் ஆகியவற்றைச் செய்வதுண்டு; ஐயோ, நினக்கு அடிமை யாகிய யான் மெய்ம்மையாளனாகிய நினக்குரிய அறப்பணிகளை இகழ்ந்து கைவிட்டு அவ்வாறு அறிவறியச் செய்ததில்லை; எந்தையாகிய நின்மேல் ஆணை. எ.று.

ஒழுக்கம் எனப் பொதுப்பட மொழிந்தமையால் நல்லொழுக்கம் பொருளாகக் கொள்ளப்படுவதாயிற்று. காம விச்சைக்கான செயல்கள் "காமக் கடை தொறும் மயங்குதல்" எனப்படுகிறது. காமக் கடை - காம மகளிர் வீடு; விபசார விடுதி என்றுமாம். மயங்குதல் - கூடுதல். விள்ளுதல் பேசுதல். திருப்பணி எள்ளி விடுத்து என இயையும். எள்ளுதல் - இகழ்தல்.

இதனால், இளமைக் காலத்தில் வள்ளற் பெருமான் கள்ளுண்டல் முதலிய தீ யொழுக்கங்களை மேற்கொண்ட தில்லை யென விளம்பியவாறும். (104)

3514. மலைவிலாத் திருச்சிற் றம்பலத் தமர்ந்த
வள்ளலே உலகினில் பெற்றோர்
குலைநடுக் குறவே கடுகடுத் தோடிக்
கொடியதீ நெறியிலே மக்கள்

புலைகொலை களவே புரிகின்ருர் அடியேன்
புண்ணிய நின்பணி விடுத்தே
உலையஅவ் வாறு புரிந்ததொன் றுண்டோ
உன்பதத் தாணைநான் அறியேன்.

உரை: மலைத்தற் கிடமில்லாத திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளும் அருள் வள்ளலாகிய சிவபெருமானே! உலகில் பெற்ற தாய்தந்தையர் கண்டு குலை நடுங்குமாறு கடுகடுப்புடன் சென்று கொடுமை பொருந்திய தீய வழிகளே மேற் கொண்டு மக்களாயினர் உயிர்க்கொலையும் புலாலுண்டலும் களவு புரிதலும் செய்கின்றனர்; அடியவனுகிய யான் புண்ணிய மூர்த்தியாகிய நினது அருட் செயலைக் கைவிட்டு மனம் வருந்துமாறு அத்தகைய தொழில்களே நான் செய்த துண்டோ? உன் திருவடி யாணையாக நான் செய்தறியேன். எ.று.

மலைதல் - ஐயம் திரிபுகளால் அறிவு மயங்குதல். குலை - வயிற்றிலுள்ள கருவிகளி லொன்று; மனத்தின்கண் மிக்க அச்ச முண்டாகும் போது வயிற்றுக்குள் இக்குலை யுறுப்பு மிகவும் துடிப்பது பற்றி, "குலை நடுக்குற" எனக் கூறுகின்ருர். புலை - புலால் உண்டல். கொலை - பிற வுயிர்களைக் கொல்லுதல். களவு - இது திருட்டு எனப்படும். பிறர்க்குரிய பொருளை அவரை யறியாமே எடுத்துக் கொள்ளுதல். உலைதல் - வருந்துதல்.

இதனுல், வள்ளற் பெருமான் புலை, கொலை, களவு முதலிய குற்றங்களைச் செய்யாமை தெரிவித்தவாரும். (105)

3515. தனிப்பெருஞ் சோதித் தந்தையே உலகில்
தந்தையர் பற்பல காலும்
இனிப்புறு மொழியால் அறிவுற மக்கட்
கேற்கவே பயிற்றிடுந் தோறும்
பனிப்புற ஓடிப் பதுங்கிடு கின்ருர்
பண்பனே என்னைநீ பயிற்றத்
தினைத்தனை யேனும் பதுங்கிய துண்டோ
திருவுளம் அறியநான் அறியேன்.

உரை: ஒப்பற்ற பெரிய சோதி வடிவான தந்தையாகிய சிவனே! இவ்வுலகில் தந்தையராயினர் பலமுறையும் இனிய சொற்களால் நல்லறிவுண்டாதற் பொருட்டுத் தம்முடைய மக்களுக்கு மனம் கொள்ளுமாறு கல்வி பயிற்றுவிக்கவும், அவரது உள்ளம் துடிக்கும்படி வெளியே ஓடிப் பதுங்கி விடுகின்ருர்கள்; நற்பண் புருவாய சிவனே, எனக்கு நீ யுணர்வு நல்குங்கால் தினையளவேனும் யான் ஒதுங்கிப் பதுங்கிய துண்டோ; தேவரீருடைய திருவுளம் அறிய நான் பதுங்கிய தில்லை யன்ருே. எ.று.

சுடர் விடும் அருட் பெருஞ் சோதி வடிவினனுதலாற் சிவனை, "தனிப் பெருஞ் சோதித் தந்தையே" எனக் குறிக்கின்ருர். கல்வி யறிவு நல்கும் உரிமை பெற்றவனுதலின், "தந்தையர் பலகாலும் இனிப்புறு மொழியால் அறிவுற மக்கட்கு ஏற்கவே பயிற்றிடுந் தோறும்" எனப் பகர்கின்ருர்.

பலகாற் பயிலுதல் பிழையறும் நெறியாதலாற் "பலகாலும்" எனவும், வன்சொல்லினும் இன்சொல் கேட்போர் மனத்தைமகிழ்விக்கும் இயல்பினதாகலின், "இனிப்புறு மொழியால்" எனவும், "அறிவுடையார் எல்லாம் உடையார்" (குறள்) எனச்சான்றோர் உரைத்தலின், "அறிவுற" எனவும், கேட்போர் ஏற்கவுரையாமை அறிவு நெறியன்றாகலின், "ஏற்கவே பயிற்றிடுந் தோறும்" எனவும் இயம்புகின்றார். இவ்வாற்றால் கற்பித்த வழிக் கேட்போர் கேளா தொழியாராயினும், சிலர் கேளாது கெடுகின்றார்கள் என்றற்குப் "பனிப்புற வோடிப் பதுங்கிடுகின்றார்" என்று பகர்கின்றார். பனித்தல் - நடுங்குதல். பதுங்குகின்றார் என்பது இடு வென்னும் சாரியை பெற்றுப் பதுங்கிடுகின்றார் என வந்தது; சொல்கின்றார் என்பது சொல்லிடுகின்றார் என வருதல் போல. பண்பன், நற்பண்பே திரண்டு உருவாயது போன்றவன். தினை - சிறிதளவு. "தினைத்துணை" (குறள்) என்றாற்போல. தேவரீர் திருவுள்ள மறிய நான் அக்குற்றத்தைப் புரிந்ததில்லை என்றற்கு, "திருவுள மறிய நான் அறியேன்" என இயம்புகின்றார்.

இதனால், அறிவுப் பேற்றின்கண் அயர்கின்ற குற்றத்தை வள்ளற் பெருமான் புரியாமை எடுத்துப் புகன்றவாறும். (106)

3516. தன்னேரில் லாத்தந் தையேஉ லகில்
தந்தையர் தங்களை அழைத்தே
சொன்னசொல் மறுத்தே மக்கள்தம் மனம்போம்
சூழலே போகின்றார் அடியேன்
என்னேநீ உணர்த்தல் யாதது மலையின்
இலக்கெனக் கொள்கின்றேன் அல்லால்
பின்னேஓர் இறையும் மறுத்ததொன் றுண்டோ
பெரியநின் ஆணைநான் அறியேன்.

உரை : தனக்கு ஒப்பாக யாருமில்லாத தந்தையாகிய சிவபெருமானே, மக்களாகிய தங்களை நேரில் அழைத்துத் தந்தையர் சொன்ன சொற்களை மறுத்து தம்முடைய மனம்போன போக்கிலே போகின்றார்கள்; அடியனுகிய யான் நீ உயிர்க்குயிராய் நின்று உணர்த்துவது யாதோ அதனையே மலையிலக்காகக் கொண்டு ஒழுகுவதன்றி, வேறு ஒருசிறிதும் மறுத் தொழுகியதில்லை; பெரிய பெருமானுகிய நினது ஆணையாக வேறு நான் அறியேன். எ.று.

ஒப்பொருவரில்லாதான் என உயர்ந்தோர் ஒதுதல் பற்றி, "தன்னேரில்லாத் தந்தை" என்று புகழ்கின்றார். முறைமை காட்டற்குத் "தந்தை" எனக் குறிக்கின்றார். ஒன்றனைச் செய்க எனப் பணிக்குமிடத்து நேர்முகமாக வருவித்துரைப்பது மறுக்க வொண்ணுத வன்மையுடையதாகலின், "தங்களை யழைத்தே சொன்ன சொல்" எனக் கூறுகின்றார். னம் போன சூழல், மனம் சென்றவிடம்; போன போக்குமாம். மனம் போன போக்கில் ஒழுகுவது குற்றமாய்த் தீது விளைக்கும் என்பது கருத்து. நேரில் உரைத்தலின்றி உயிர்க்குயிராய் உண்ணின்று உணர்த்துவது பற்றி, "நீ யுணர்த்தல் யாது அது" என மொழிகின்றார். "நானேது மறியாமே என்னுள் வந்து நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்"

(ஆனைக்கா) என நாவுக்கரசர் முதலியோர் நவில்வது காண்க. மலையிலக்கு - அசைவில்லாத குறிக்கோள். இறையும் - சிறிதும். பெரியன் - பெரிய என அண்மை விளி கொண்டது.

இதனால், இறைவன் உணர்த்தும் உணர்வு வழி ஒழுகிய திறம் உரைத்தவாறும். (107)

3517. போற்றுவார் போற்றும் புனிதனே மக்கள்
பொருந்துதம் தந்தையர் தமையே
வேற்றுவாழ் வடைய வீடுதா பணந்தா
மெல்லிய சரிகைவத் திரந்தா
ஏற்றஆ பரணந் தாஎனக் கேட்டே
இரங்குவார் இவைகுறித் தடியேன்
தேற்றுவாய் நின்னைக் கேட்டதொன் றுண்டோ
திருவுளம் அறியநான் அறியேன்.

உரை : போற்றுகின்ற அடியவர் எப்போதும் போற்றும் தூயவனே மக்களாயினர் அன்பு பொருந்திய தம்முடைய தந்தையரை நோக்கி, வேறிருந்து வாழ்தற்கு வீடு தருக, செலவுக்குப் பணம் தருக, மென்மையான சரிகை வைத்த உடை தருக, அவ்வாடைகட் கேற்ற பொற்பணிகளைத் தருக என்று கேட்டுப் பெறலாகாமைக்கு வருந்துவார்கள்; இவையிற்றை வேண்டி, அடியவனுகிய என்னைத் தெளிவிப்பனே; நான் நின்னைக் கேட்டதில்லை யன்றே? தேவரீருடைய திருவுளம் அறிய நான் கேட்டறியேன். எ.று.

இடையறவின்றிப் போற்றும் இயல்புடைமை பற்றி, மெய்யடியாரைப் "போற்றுவார்" எனப் புகல்கின்றார். புனிதன் - தூயவன். பெற்றோரின் நீங்கித் தனிக் குடித்தனம் செய்ய விரும்புதல் புலப்பட, "வேற்று வாழ் வடைய வீடு தா" எனவும், அவ்வாழ்வுக்கு முதல் வேண்டிப் "பணம் தா" எனவும் கேட்கின்றார்கள். சரிகை - பொன்னாலும் வெள்ளியாலும் இழைகள் அமைத்து உடைகளின் இடைபிலும் கடைலிலும் நெய்யப்படுவது. வத்திரம் - உடையும் மேலாடையுமாம். ஆபரணம் - நகை வகை. உடுக்கும் உடைக்கு ஒப்ப அமைய வேண்டுதலின், "ஏற்ற ஆபரணம்" எனச் சிறப்பிக்கின்றார். பல்வகைத் துன்பங்களால் கலக்கமுறும் போது இறைவன் நினைவுகள் மனத்தைத் தெளிவித்தலின், "அடியேன் தேற்றுவாய்" என வுரைக்கின்றார்.

இதனால் ஆடம்பர வாழ்வு வேண்டிய மக்கள் தம் பெற்றோரை வருத்தும் திறம் கூறியவாறும். (108)

3518. குணம்புரி எனது தந்தையே உலகில்
கூடிய மக்கள்தந் தையரைப்
பணம்புரி காணி பூமிகள் புரிநற்
பதிபுரி ஏற்றபெண் பார்த்தே

மணம்புரி எனவே வருத்துகின் றார்என்
மனத்திலே ஒருசிறி தேனும்
எணம்புரிந் தானான் வருத்திய துண்டோ
எந்தைநின் ஆணைநான் அறியேன்.

உரை : நலமே செய்கின்ற என் தந்தையே! உலகின்கண் கூடியுறையும் மகளிர் தந்தையரை நோக்கி, பணமும் நிலமும் பூமியும் நல்ல இடமும் கொடுத்துத் தங்களுக்கு ஏற்ற பெண்ணைப் பார்த்து மணம் புரிதல் வேண்டுமென வருத்துகின்றார்கள்; நான் என் மனத்தில் ஒரு சிறிதளவும் இவற்றையெண்ணி, நான் ஒருநாளேனும் உன்னை வருத்தப் படுத்தியது உண்டோ; எந்தை யாகிய சிவனே, நினது ஆணையாகச் சொல்லுகிறேன்; நான் எண்ணியறியேன். எ.று.

குணம் - நன்மையே விளைவிக்கும் பண்பு. உலகிற்கண் இயற்கையன் பினால் மக்கள் அனைவரும் கூடியுறையும் குணஞ் செயல்களையுடையவராதலால் அவர்களை, "கூடிய மக்கள்" என்று கூறுகின்றார். புரிதல் ஈண்டுத் தருதல் மேற்று. "பணம்புரி காணி பூமிகள் புரிநற் பதிபுரி" என்றவிடத்துப் புரிதல். தருகை என்னும் பொருள் மேலதாதல் அறிக. எணம் புரிதல் - எண்ணுதல். வருத்துதல் - பன்முறையும் சொல்லிக் கேட்போர் மனம் அயர்வித்தல்.

இதனால், உலகியலில் பெற்ற மக்கள் தாய் தந்தையரை வருத்தும் திறம் கூறியவாறும். (109)

3519. இகத்திலே எனைவந் தாண்டமெய்ப் பொருளே
என்னுயிர்த் தந்தையே இந்தச்
சகத்திலே மக்கள் தந்தையர் இடத்தே
தாழ்ந்தவ ராய்ப்புறங் காட்டி
அகத்திலே வஞ்சம் வைத்திருக் கின்றார்
ஐயவோ வஞ்சம்நின் அளவில்
முகத்திலே என்றன் அகத்திலே உண்டோ
முதல்வநின் ஆணைநான் அறியேன்.

உரை : எப்பொருட்கும் முதல்வனே! இப்பிறப்பிலே என் மனத்தின்கண் எழுந்தருளி என்னை யாண்டு கொண்ட மெய்ப்பொருளாகிய சிவனே, என்னுயிர்க்கமைந்த தந்தையே! இந்த உலகத்தில் மக்களாயினர், தங்களைப் பெற்ற தந்தையர் முன் மிக்க பணிவுடையவராய்ப் பிறரறியப் புறத்தே தோற்றுவித்துத் தங்கள் மனத்திலே வஞ்சக நினைவுகள் கொண்டிருக்கிறார்கள்; ஐயனே, என் முகத்திலே அன்றி என் மனத்திலோ உன்பால் யான் வஞ்சம் கொண்டது உண்டோ, இல்லை; இது நினது ஆணை. எ.று.

இகம் - இப்பிறப்பு. மெய்ப்பொருள் - என்னுள் உள்ள பரம்பொருள். உயிர்களிடத்தே உயிர்க்குயிராய் இருந்து உணர்வு தந்து இயக்குவது சிவ பரம் பொருளின் இயல்பாதலின், "என்னை வந்தாண்ட மெய்ப்பொருளே" என இயம்புகின்றார். உயிர் போல் உணர்வும் இன்பமும் தந்து உலகில்

வாழச் செய்தலால், என்னுயிர்த் தந்தையே'' என்று இசைக்கின்றார். சகம்- உலகம். பெற்ற ''தாய் தந்தையர் கண்முன் அன்பும் பணிவும் உடையவர் போல் நடித்து மனத்தின்கண் வஞ்சனையும் தீமையும்நினைக்கின்ற புதல்வரைப் பற்றிப் புகல்கின்றாராதலால், ''மக்கள் தந்தையர் இடத்தே தாழ்ந்தவராய்ப் புறங்காட்டி அகத்திலே வஞ்சம் வைத்திருக்கின்றார்'' என இசைக்கின்றார். ஐயன் - தலைவன். நின்னளவில் - நின்னிடத்தில். முகம் புறத்துக்கும், அகம் மனத்திற்கும் குறிப்புக்களாயின.

இதனால், இறைவன் திருமுன் அகமும் புறமும் ஒத்த நிலையில் நின்று வள்ளற் பெருமான் ஒழுகிய திறம் கூறியவாறும். (110)

3520. தன்மைகாண் பரிய தலைவனே எனது
தந்தையே சகத்திலே மக்கள்
வன்மைவார்த் தைகளால் தந்தையர் தம்மை
வைகின்றார் வள்ளலே மருந்தே
என்மனக் கனிவே என்னிரு கண்ணே
என்னுயிர்க் கிசைந்தமெய்த் துணையே
நின்மனம் வெறுப்பப் பேசிய துண்டோ
நின்பதத் தாணைநான் அறியேன்.

உரை : தன்மைகள் இவையென அறிய முடியாத தலைவனாகிய சிவனே! எனக்குத் தந்தையாகியவனே! உலகத்தில் மக்களாயினர் தங்களைப் பெற்ற தந்தையரை வன்சொற்களால் இழித்துப் பேசுகின்றார்கள்; அருள் வள்ளலே, அமுது போல்பவனே; என் மனத்தைக் கனிவிக்கும் பெருமானே! எனது இரண்டு கண் போன்றவனே! என் ஆருயிர்க்குப் பொருந்திய மெய்ம்மைத் துணைவனே! நின்னுடைய மனம் வெறுக்கும்படி நான் பேசியது உண்டோ; தேவரீருடைய திருவடி ஆணையாக நான் அறியேன். எ.று.

''தன்மை பிறரால் அறியாத தலைவன்'' என்று சான்றோர் பாராட்டுதலால், சிவனைத் ''தன்மை காண்பரிய தலைவன்'' என்று பாராட்டுகின்றார். உணர்வு தந்தருளுதலால், ''தந்தையே'' என்று குறிக்கின்றார். தங்கள் மனம் உவப்பன சொல்லாவிடினும் செய்யா தொழியினும் மக்கள் தங்கள் பெற்றோர்களைச் சினந்து வன்சொற்களால் வைது பேசுவது எங்கும் காணப்படுதலால், ''மக்கள் வன்மை வார்த்தைகளால் தந்தையர் தம்மை வைகின்றார்'' என வுரைக்கின்றார். தனது திருவருளாகிய செல்வத்தை வரையாது வழங்குவது பற்றி, ''வள்ளலே'' என்றும், பிறவி நோயை நீக்குதலின், ''மருந்தே'' என்றும், மனத்தின் வன்மையைப் போக்கி அன்புருவாய் மெலிவித்தலின், ''மனக் கனிவே'' என்றும், காணப்படுவனவற்றை உணர்வு ஒன்றித் தெளியக் காணச் செய்தலால் சிவபெருமானை, ''என்னிரு கண்ணே'' என்றும் இயம்புகின்றார். எவ்விடத்தும் எப்போதும் உயிர்க்குயிராய் இருந்து உணர்வுத் துணை புரிதலால், ''என்னுயிர்க் கிசைந்த மெய்த் துணையே'' என விளம்புகின்றார். தான் உரைக்கும் உரையினுடைய மெய்ம்மையை வலியுறுத்தற்கு, ''நின்பதத் தாணை நான் அறியேன்'' எனக் கூறுகின்றார்.

இதனால், இறைவன் மனம் வெறுக்கத் தக்க வகையில் வள்ளற் பெருமான் ஒருசொல்லும் உரைத்ததில்லை என்பது தெரிவித்தவாறும். (111)

3521. ஒப்பிலா மணிஎன் அப்பனே உலகில்
உற்றிடு மக்கள்தந் தையரை
வைப்பில்வே றொருவர் வைதிடக்கேட்டு
மனம் பொறுத் திருக்கின்றார் அடியேன்
தப்பிலாய் நினைவே றுரைத்திடக் கேட்டால்
தரிப்பனோ தரித்திடேன் அன்றி
வெப்பில்என் உயிர்தான் தரிக்குமோ யாதாய்
விளையுமோ அறிந்திலேன் எந்தாய்.

உரை : ஒப்புயர் வில்லாத மாணிக்க மணி போன்ற என்னுடைய தந்தையே! உலகில் வாழ்கின்ற மக்கள் தம்மைப் பெற்ற தந்தையை ஓரிடத்தில் வேறொருவர் வைது கூறவும் கேட்டுக் கொண்டு மனம் பொறுத்திருக்கின்றார்கள்; அடியவனுகிய நான் குற்றம் சிறிதுமில்லாத நின்னை மாறுபட உரைக்கக் கேட்டால் மனம் பொறேன்; பொறுக்கவும் மாட்டேன்; கேட்டவிடத்து உள்ளத்தில் எழும் சின மிகுதியால் அது கேட்டருகும் என்னுயிர்தான் நிலைக்குமோ; என்னதான் ஆகுமோ? எந்தையாகிய சிவனே; நான்அறிகிலேன். எ.று.

சிவத்தினும் மேம்பட்ட பொருள் ஒன்றும் இல்லையாதல் பற்றி, "ஒப்பிலா மணி" என்று உரைக்கின்றார். மணி என நின்றது, மாணிக்க மணியின் நிறமுடைமை பற்றிச் சிவனை, "மணி" என்கின்றார். வைப்பு-இடம். வைதல் - மனம் நோவப் பேசுதல். தப்பு - குற்றம் வேறு உரைத்தல்; குற்றமாகப் பேசுதல். தரித்தல் - தாங்குதல். வெப்பு - தீயது கேட்பின் நெஞ்சில் உண்டாகும் வெம்மை. தரித்தல் - தாங்குதல். என் உயிர் கெடாது அதன் விளைவு என்ன ஆகுமோ எனவும், என்ன பயன் விளையுமோ எனவும், உண்மை அறியாமையால் வருந்துகிறேன் என்றற்கு, "யாதாய் விளையுமோ அறிந்திலேன் எந்தாய்" என அறிவிக்கின்றார்.

இதனால், சிவனைப் பிறர் வைது பேசின் வள்ளற் பெருமான் அது கேட்க மாட்டாமையைக் கிளர்ந்து கூறியவாறும். (112)

3522. இத்தகை உலகில் இங்ஙனம் சிறியேன்
எந்தைநின் திருப்பணி விடுத்தே
சித்தம்வே றுகித் திரிந்ததே இலைநான்
தெரிந்தநாள் முதல்இது வரையும்
அத்தனே அரசே ஐயனே அமுதே
அப்பனே அம்பலத் தாடும்
சித்தனே சிவனே என்றென துளத்தே
சிந்தித்தே இருக்கின்றேன் இன்றும்.

உரை : இந்த அழகிய உலகில் சிறுமை யுடையவனுகிய நான் இவ்வாறு என் தந்தையாகிய நினக்குரிய திருப்பணிகளைக் கைவிட்டு மனம் வேறுபட்டு எனக்கு அறிவு வழங்கிய நாள் முதல் இன்றுவரை கண்டபடித் திரிந்ததில்லை; தந்தையே, அருளரசே, தலைவனே, அமுதம் போல்பவனே, அப்பனே, திருச்சிற்றம்பலத்தில் ஆடல் புரிகின்ற சித்தத்தை யுடையவனே, சிவபெருமானே என்று எனது மனத்தின்கண் இப்பொழுதும் சிந்தித்துக் கொண்டே இருக்கின்றேன். எ.று.

தகை - அழகு. இங்ஙனம் - மேலே காட்டிய தீய வழிகளில் நிற்றல். அறிவாற்றல்களால் சிறுமை யுடைமை தோன்றச் "சிறியேன்" என்கின்ருர். திருப்பணி - சிவ பூசையும் சிவ வழிபாடுகளுமாம். சித்தம் - மனம். சிவநெறிக்கண் செல்லாமல் வேறு தீய நெறிகளில் சென்று திரிந்ததில்லை என்பதை வலியுறுத்தற்கு, "வேருகித் திரிந்ததே இலை" என்று கூறுகின்ருர். தெரிந்த நாள் - நல்லதன் நலமும் தீயதன் தீமையும் உள்ளவாறு அறியும் அறிவு வழங்கிய நாள். தில்லைச் சிற்றம்பலத்தில் ஆடிக் கொண்ட திருவுள்ளத்தை, "அம்பலத்தாடும் சித்தத்தை யுடையவன்" எனத் தெரிவிக்கின்ருர். தீய நினைவுச் செயல்களில் செல்லாதாயின் சிந்தித்தல் யாதாக இருக்கலாம் என்று ஐயம் எழாமை பொருட்டு, "என துளத்தே இன்றும் சிந்தித்தே இருக்கின்றேன்" என்று இயம்புகின்ருர்.

இதனுல், சிவப்பணியில் வள்ளற் பெருமான் ஒன்றியிருந்த திறம் உரைக்கப்பட்டவாரும். (113)

3523. பொய்வகை மனத்தேன் என்னினும் எந்தாய்
பொய்யுல காசைசற் றறியேன்
நைவகை தவிரத் திருச்சிற்றம் பலத்தே
நண்ணிய மெய்ப்பொருள் நமது
கைவகைப் படல்எக் கணத்திலோ எனநான்
கருதினேன் கருத்தினை முடிக்கச்
செய்வகை அறியேன் என்செய்வேன் ஐயோ
தெய்வமே என்றிருக் கின்றேன்.

உரை : நிலையில்லாத மனத்தை யுடையவனுயினும் எந்தையாகிய சிவனே, நிலையில்லாத உலகியல் ஆசைகளைக் கொண்டறியேன்; உயிர்களின் துன்ப வகை நீங்கும் பொருட்டுத் திருச்சிற்றம்பலத்தின்கண் எழுந்தருளுகின்ற மெய்ப்பொருளாகிய பெருமானே; நினது திருவருள் என் கை யகப்படுவது எந்த நேரத்திலே என நான் நினைத்தேன்; நினைத்த கருத்தை முடித்துக் கொள்ளற் கமைந்த செயல் வகைகளை அறிகிலேன்; யான் என்ன செய்வேன், ஐயோ, தெய்வமே என்று தொழுத வண்ணம் இருக்கின்றேன். எ.று.

ஒருபொருளும் ஒன்றி நில்லாமல் மாறிய நினைவுகளால் கறங்கு போல் சூழலும் இயல்பினதாதல் பற்றி, "பொய்வகை மனம்" என்று புகல்கின்ருர். உலகியல் ஆசைகளின் நிலையா இயல்பு பற்றி, "பொய்யுலகு ஆசை" என உரைக்கின்ருர். நைவகை - பிறப்பு இறப்புத் துன்ப வகை.

உயிர்கள் தம்மை அடைந்து துன்ப நீக்கம் பெறுதல் குறித்தே தில்லையம்பலத்தில் இறைவன் கூத்தப் பெருமானுக எழுந்தருளிக் காட்சி தந்தருளுவது உயிர்கள் எய்தும் பிறவித் துன்பம் நீங்கும் பொருட்டே என்பது இதன் கருத்து. இதற்குரிய திருவருள் ஞானப் பேற்றை எய்தும் திறத்தை, "நண்ணிய மெய்ப் பொருள் நமது கை வகைப்படல் எக்கணத்திலோ என நான் கருதினேன்" என மொழிகின்றார். திருவருள் ஞானப் பேற்றுக்குரிய நெறி தெரியாமை விளங்க, "கருத்தினை முடிக்கச் செய்வகை யறியேன் என்செய்வேன் ஐயோ" என இரங்குகின்றார். அதுபற்றித் தான் செய்வது இதுவென மொழிவாராய், "தெய்வமே என்று இருக்கின்றேன்" எனக் கூறுகின்றார்.

இதனால், வள்ளற் பெருமான் திருவருள் ஞானப் பேறே கருதி இருப்பதைப் புலப்படுத்தியவாறும். (114)

3524. அன்னையே என்றன் அப்பனே திருச்சிற்
றம்பலத் தமுதனே எனநான்
உன்னையே கருதி உன்பணி புரிந்திங்
குலகிலே கருணைஎன் பதுதான்
என்னையே நிலையாய் இருத்தஉள் வருந்தி
இருக்கின்றேன் என்உள மெலிவும்
மன்னும்என் உடம்பின் மெலிவும்நான் இருக்கும்
வண்ணமும் திருவுளம் அறியும்.

உரை : எனக்குத் தாயாகியவனே, என்னுடைய தந்தையே, திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளும் அமுது போல்பவனே என்று யான் உன்னை நினைந்து உன் திருவருட் பணியையே செய்து கொண்டு இவ்வுலகில் இரக்கப் பண்பு என்பது என்பாலே நிலையாய் இருத்தல் வேண்டுமென மனம் வருந்திக் கொண்டிருக்கின்றேன்; என் மனத்தின் மெலிவும் பெரிய இவ்வுடம்பின் மெலிவும் நான் இருக்கும் திறமும் தேவரீருடைய திருவுள்ளம் நன்கு அறியும். எ.று.

உலகுயிர்களைத் தாய் தந்தையாய் நின்று தலையளிக்கும் தலைவனுதலின் சிவனை, "அன்னையே என்றன் அப்பனே" என்றும், திருச்சிற்றம்பலத்து திருநடனக் காட்சி காண்பார்க்கு அமுதம் போல் இனிமை செய்வதாதலின், "திருச்சிற்றம்பலத்து அமுதனே" என்றும் புகல்கின்றார். கருதுதல் - நினைத்தல் மேற்று. கருவி கரணங்களின் செயல் அனைத்தும் திருவருட் செயல் என நினைந்திருத்தல், பணி புரிதலாகும். இதனை இறைப் பணி எனச் சாத்திரங்கள் கூறுகின்றன. சூழ் நிலை வேறுபாடுகளால் தம் மனத்தின்கண் நிறைந்திருக்கும் அருளிரக்கப் பண்பு நீங்குதல் கூடாது என விரும்புகின்றாராதலின், "உலகிலே கருணை என்பதுதான் என்னையே நிலையாய் இருத்த உள்வருத்தி இருக்கின்றேன்" என்று இயம்புகின்றார். அதன் அருமைப்பாடு நினைந்து அறிந்து உள்ளமும் உடலும் உயிரும் உருகி மெலிகின்றாராதலின், அதனை "என்னுள மெலிவும் மன்னும் என்னுடம்பின் மெலிவும் நான் இருக்கும் வண்ணமும் திருவுளம் அறியும்" என விளம்புகின்றார்.

இதனால், உயிரிரக்கமாகிய அருளறம் தன்பால் நிறைபெற வேண்டும் என்று வள்ளற் பெருமான் விழைந்த திறம் விளம்பியவாறும். (115)

3525. பொய்படாப் பயனே பொற்சபை நடஞ்செய்
புண்ணியா கண்ணினுள் மணியே
கைபடாக் கனலே கறைபடா மதியே
கணிப்பருங் கருணையங் கடலே
தெய்வமே எனநான் நின்னையே கருதித்
திருப்பணி புரிந்திருக் கின்றேன்
மைபடா உள்ள மெலிவும்நான் இருக்கும்
வண்ணமும் திருவுளம் அறியும்.

உரை : மெய்ம்மை நெறியின் பயனாக உள்ளவனே, பொற் சபையில் நடம் புரிகின்ற புண்ணியனே; கண்ணில் மணி போன்றவனே; இருளாகிய நெருப்புப் போன்றவனே; களங்கமில்லாத மதி போன்றவனே, எண்ணுதற்கரிய கருணைக் கடலே, யான் தொழுது வணங்கும் தெய்வமே என்று நான் நினைவில் கொண்டு நினக்குரிய திருப்பணியைச் செய்து கொண்டிருக்கின்றேன்; குற்றமில்லாத என்னுள்ளத்தின் மெலிவும், நான் இருக்கும் திறமும் தேவரீருடைய திருவுள்ளம் நன்கு அறியும். எ.று.

பொய்ம்மை ஒழுக்க முடையார் பெறலாகாத பரம்பொருளாதலின், "பொய்படாப் பயனே" என்றும், தில்லைப் பொன்னம்பலத்தில் ஞான நாடகம், ஊன நாடகம் என்ற இரண்டையும் செய்தருளும் பெருமானாதலின், "பொற்சபை நடஞ்செய் புண்ணியா" என்றும் புகழ்கின்றார். சிறந்த உறுப்பாயினும் கண்ணிற்கு ஒளியும் பார்வையும் நல்கும் மணி போல உயிர்கட்கு உள்ளுணர்வாய் நின்று உண்மை ஞானத்தை நல்கும் சிறப்புடைமை பற்றிச் சிவனை, "கண்ணினுள் மணியே" எனக்கட்டுரைக் கின்றார். கை- கீழ்மை; அஃதாவது உள்ளே இருளுடைமை. மை புரிந்த விளக்கு கொளியின் கனல் போலாது தூய நெருப்புருவாய் இருத்தலின் சிவனை, "கைபடாக் கனலே" என்கின்றார். முழுமதியத்தின்கண் தோன்றும் களங்கம் போல வெண்ணீறு சண்ணித்த மேனியால் பால் மதி போல் தோன்றுதலின், சிவபிரானைக் "கறைபடா மதியே" எனக் கூறுகின்றார். யாவராலும் அளக்க முடியாத கருணை நிறைந்த பெருங் கடலாய் விளங்குதலால், "கணிப்பருங் கருணையங் கடலே" என வுரைக் கின்றார் உருவுப் பொருளாய்த் தோன்றி அன்பராயினர் தொழுதுவணங்கும் தன்மையால், "தெய்வமே" எனத் தெரிவிக்கின்றார். இவ்வாறு பலப்பல நினைந்து அருளறத் திருப்பணி புரிந்து கொண்டிருப்பதைத் தெரிவித்தற்கு, "நான் நின்னையே திருப்பணி புரிந்திருக்கின்றேன்" என்று மொழி கின்றார். திருப்பணி புரிந்திருக்கின்றேன் என்பதை, திருப்பணி புரிந்து இருக்கின்றேன் என்று பிரித்து திருப்பணி செய்தலே விழைந்து அதன் கண்ணே நிலைத்திருக்கின்றேன் என்று பொருள் கூறுதலும் உண்டு. குற்ற மில்லாத மனமுடையனாயினும் அதன் பயனைப் பெறற்குரிய திருவருளைப் பெருமையால் எய்துகின்ற மெலிவும் அதன் பயனாக உடம்பில் உற்றிருக் கின்ற மெலிவும் யாவர்க்கும் நன்கு புலனாக, "மைபடா உள்ள மெலிவும் நான் இருக்கும் வண்ணமும் திருவுளம் அறியும்" என்று மொழிகின்றார்.

இதனால், அருளறப் பணிக்கண் வள்ளற் பெருமான் கொண்டிருந்த ஊக்க மிகுதி தெரிவித்தவாறும். (116)

3526. தன்னிகர் அறியாத் தலைவனே தாயே
தந்தையே தாங்குநற் றுணையே
என்னிரு கண்ணே என்னுயிர்க் குயிரே
என்னுடை எய்ப்பினில் வைப்பே
உன்னுதற் கினிய வொருவனே எனநான்
உன்னையே நினைத்திருக் கின்றேன்
மன்னும்என் உள்ள மெலிவும்நான் இருக்கும்
வண்ணமும் திருவுளம் அறியும்.

உரை: தனக்குவமை யறிய முடியாத தனித் தலைவனே; எனக்குத் தாயும் தந்தையு மாகியவனே; என்னைத் தாங்கி யருளும் நல்ல துணைவனே; என்னுடைய இரண்டு கண் போன்றவனே, என்னுயிர்க்கு உயிரானவனே; எனக்குச் சேம வைப்பாய்த் திகழ்பவனே; நினைத்தற்கு இனிய ஒப்பற்றவனே என்று நான் உன்னை நினைத்திருக்கின்றேனுகவும் நிலைத்த என் மனத்தின்கண் உளதாகிய மெலிவும் எனது தன்மையும் தேவரீருடைய திருவுள்ளம் நன்கு அறியும். எ.று.

"தனக்குவமை யில்லாதான்" எனச் சான்றோர் குறித்தலால் "தன்னிகர் அறியாத் தலைவனே" என்கின்றார். உலகங்களைத் தாயாய் புறந் தருதலால், "தாயே" என்றும், உயிர்க்கு உணர்வு தந்து அளித் தலால், "தந்தையே" என்றும், வாழ்வார்க்கு வழித் துணையாய் நின்று உதவுதலால், "தாங்கும் நற்றுணையே" என்றும் உரைக்கின்றார். கருவி கரணங்கள் சோர்வு அடையுங்கால் ஊக்குவது பற்றி, "என்னுயிர்க் குயிரே" எனக் கூறுகின்றார். உணர்வு தளருமிடத்து மெய்யுணர்வு நல்கி ஆதரித்தலால், "என்னுடை எய்ப்பினில் வைப்பே" என்று இயம்பு கின்றார். நினைவால் நினைக்கும் தோறும் உள்ளத்தில் அமுதூறி இன்பம் செய்தலால் "உன்னுதற் கினிய ஒருவனே" என உரைக்கின்றார். "நினை வால் நினைய இனியரன்" (புறவம்) என ஞானசம்பந்தர் உரைப்பது காண்க. உயிர் உடலோடு உறையும் காறும் உள்ளம் நிலை பெறுதலின், "மன்னும் உள்ளம்" என்று மொழிகின்றார்.

இதனால், வள்ளற் பெருமான் சிவனைப் பற்றி உள்ளத்தில் கருதி யிருந்த குறிப்புக்களை வெளியிட்டவாறும். (117)

3527. திருவளர் திருஅம் பலத்திலே அந்நாள்
செப்பிய மெய்ம்மொழிப் பொருளும்
உருவளர் திருமந் திரத்திரு முறையால்
உணர்த்தியே மெய்ம்மொழிப் பொருளும்
கருவளர் அடியேன் உளத்திலே நின்று
காட்டிய மெய்ம்மொழிப் பொருளும்
மருவிஎன் உளத்தே நம்பிநான் இருக்கும்
வண்ணமும் திருவுளம் அறியும்.

உரை: சிவஞானச் செல்வம் வளர்கின்ற தில்லையம்பலத்திலே அந் நாளில் உலகெலாம் எனச் செப்பிய மெய்ம்மை மொழியின் நிறை பொருளையும் ஞானவுருத் தந்து திகழ்விக்கின்ற திருமந்திரம் என்னும்

திருமுறை வாயிலாக உலகிற்கு உணர்த்திய மெய்ம்மை மொழியின் பொருளையும் கருத் தங்கிப் பிறந்து வருகின்ற அடியவனுகிய எனது மனத்திலே உணர்வாய் நின்று உணர்த்திய மெய்ம்மொழியின் பொருளையும் உள்ளத்தில் கலந்து விரும்பி நான் இருக்கும் திறத்தைத் தேவரீருடைய திருவுள்ளம் நன்கு அறியு மன்றே. எ.று.

திருவளர் திருவம்பலம் - சிவஞானச் செல்வம் மிகுகின்ற தில்லைப் பொன்னம்பலத்தைத் 'திருவளர் திருவம்பலம்' எனப் பாராட்டுகின்றார். சேக்கிழார் பெருமான் தில்லையம்பலத்தில் இருந்து திருத்தொண்டர் புராணம் தொடங்கிய காலத்தில் உலகெலாம் என முதல் எடுத்துக் கொடுக்கும் வரலாற்றுக் குறிப்பும் அதன் மெய்ப்பொருளும் குறிப்பாராய், "அந்நாள் செப்பிய மெய்ம்மொழிப் பொருளும்" என மொழிகின்றார். திருமந்திரத்தை ஓதுவதால் உளதாகும் சிவஞானத் திருவுருவ நலத்தை, "உருவளர் திருமந்திரம்" எனவும், அஃது ஒன்பதாம் திருமுறையாகத் தொகுக்கப் பட்டு இருப்பதைப்பற்றி, "திருமந்திரத் திருமுறை" எனவும், அதன்கண் உணர்த்தப்படும் சமய ஞானப் பொருளை "திருமுறையால் உணர்த்திய மெய்ம்மொழிப் பொருளும் எனவும் உரைக்கின்றார். திருவருட் சிந்தையால் உள்ளத்தில் விளங்கிய சிவஞானக் கருத்துக்களை "கருவளர் அடியேன் உளத்திலே நின்று காட்டிய மெய்ம்மொழிப் பொருளும் என்று கூறுகின்றார். இங்குக் கூறிய மூவகை மெய்ம்மொழிப் பொருளும் உள்ளத்தில் தோய்ந்து இன்பம் செய்தலால், அவற்றின் மெய்ம்மை யுணர்ந்து விரும்பியிருக்கும் தமது மனநிலையை, "மருவி என்னுளத்தே நம்பி நான் இருக்கும் வண்ணம்" என்று தெரிவிக்கின்றார்.

இதனால், வள்ளற் பெருமான் உள்ளத்தில் கொண்டிருக்கின்ற மெய்ம்மொழிப் பொருள்கள் இவை யென விளக்கியவாறும். (118)

3528. உவந்தென துளத்தே உணர்த்திய எல்லாம்
உறுமலை இலக்கென நம்பி
நிவந்ததோள் பணைப்ப மிகஉளங் களிப்ப
நின்றதும் நிலைத்தமெய்ப் பொருள்இப்
பவந்தனில் பெறுதல் சத்தியம் எனவே
பற்பல குறிகளால் அறிந்தே
சிவந்தபொன் மலைபோல் இருந்ததும் இந்நாள்
திகைப்பதும் திருவுளம் அறியும்.

உரை : ஞான ஆசிரியர்கள் மகிழ்ந்து என்னுள்ளத்து அமைய வுணர்த்திய கருத்துக்கள் அனைத்தையும் பெரிய மலையிலக்கு என விரும்பி உயர்ந்த தோள்கள் பூரிக்க மனம் மிகவும் களிக்க, நான் உயர்ந்து நின்றதும் நிலைபெற்ற சிவஞானப் பயனுகிய உண்மைப் பொருளை இப்பிறப்பில் பெறுவது உறுதி யென்று பற்பல குறிகளால் அறிந்த சிவந்த பொன்மலை போல் இருந்ததும், இந்நாள் கலக்கமுற்று என்னறிவு திகைப்பதும், தேவரீருடைய திருவுள்ளம் நன்கு அறியும். எ.று.

கேட்போர் உள்ளம் கொள்ளுமாறு உணர்த்தும் ஆசிரியர், தன் மனத்தின்கண் அன்பும் மகிழ்ச்சியும் கொண்டாலன்றி உண்மைகளை உள்ளவாறு உரைக்க மாட்டாராகலின், "எனது உளத்தே உவந்து உணர்த்திய வெல்லாம்" என உரைக்கின்றார். உவந்து உணர்த்துவது

ஆசிரியன் செயலாதலின் ஞானசிரியன் என்று வருவிக்கப்பட்டது. சலியாது நிலைபெறும் குறிக்கோளை மலையிலக்கு என்பது நூல் வழக்கு. நிவந்த தோள் - மகிழ்வு மிகுதியால் தோள் உயர்தல் மக்கட்குரிய மெய்ப்பாடுகளில் ஒன்று. படைத்தல் - பெருத்தல்; இங்குப் பூரித்தல் மேற்று. இது மனத்தின்கண் உளதாகும் களிப்புக் காரணமாக உண்டாவ தாகலின், "உளம் களிப்ப நின்றதும்" என இயம்புகின்றார். சிவஞானத் தின் மெய்ப் பயன் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாய் நிலை பெறுவதாதலால், "நிலைத்த மெய்ப்பொருள்" எனப் புகழ்கின்றார். பவம் - பிறப்பு. மெய்ப்பொருட் பேறு பலப் பிறப்புக்களில் செய்யும் முயற்சி வகைகளால் பெறலாவதாதலால், அதன் அருமை தோன்ற, "இப்பவந்தனில் பெறுதல் சத்தியம்" என்றும், அதனைத் தானும் பற்பல குறிகளாலும் அடையாளங்களாலும் அறிந்து கொண்டமை விளங்க, "பற்பல குறிகளால் அறிந்து" என்றும், அதனால் விளைந்த செம்மாப்பைத் தெரிவிக்கின்றமை பற்றி, "சிவந்த பொன்மலை போல் இருந்ததும்" என்று கூறுகிறார். இந்த இன்ப ஞானநிலை நிலைபெற நில்லாது மக்கட் பண்பு பற்றி மாறி மயக்கினமை இனிது விளங்க, "இந்நாள் திகைப்பதும் திருவுளம் அறியும்" என்று உரைக்கின்றார்.

இதனால் சிவஞானம் பெற்று எய்திய மெய்ம்மகிழ்ச்சி வெளிப்படுத்திய வாரும். (119)

3529. ஏய்ந்தபொன் மலைமேல் தம்பத்தில் ஏறி
ஏகவும் ஏகவும் நுணுகித்
தேய்ந்தபோ தடியேன் பயந்தவெம் பயத்தைத்
தீர்த்துமேல் ஏற்றிய திறத்தை
வாய்ந்துளே கருதி மலைஎனப் பணைத்தே
மனங்களிப் புற்றுமெய் இன்பம்
தோய்ந்துநின் றுடிச் சுழன்றதும் இந்நாள்
சுழல்வதும் திருவுளம் அறியும்.

உரை : பொருந்திய பொன்னிற மலைமேல் நின்ற தூணின் மேன் மேலும் செல்லவும் அது தனது உருவம் நுண்ணியதாய் தேய்ந்து தோன்றிய போது கண்டு அச்சத்தால் அடியேன் கொண்ட வெவ்விய பயத்தைப் போக்கி என்னை ஊக்கிய திறத்தை உள்ளத்தில் எண்ணி உவகை மிகுந்து மலைபோல் பெருமிதம் உற்று உடம்பெலாம் இன்பம் நிறைந்து நின்று சுழன்று கூத்தாடியதும், பின்னர் இப்பொழுது கலக்க முற்று உள்ளம் அலமருதலும் தேவரீருடைய திருவுள்ளம் நன்கு அறியும். எ.று.

பொன்மலை ஒன்று தோன்றி அதன் மேல் நெடிது உயர்ந்த தம்பம் ஒன்று நிற்கக் கண்டதும், பின்னர் அதன்மேல் ஏறியதும், ஏறிய போது அது நுணுகியிருப்பது கண்டு அஞ்சியதும், அப்பொழுது இறையருள் அவரை ஊக்கியதும் கனவுக் காட்சிகளாகும். கனவின் பயனை எய்திய மெய்ப்பாட்டை, "மலை யெனப் பணைத்தே மனங் களிப்புற்று மெய்யின்பம் தோய்ந்து நின்றுடிச் சுழன்றதும்" எனச் சொல்லுகின்றார். கனவு கண்டவர் அதன் பயனை ஆராய்ந்து மகிழ்ந்தமை புலப்பட, "மனம்

களிப்புற்று மெய்யின்பம் தோய்ந்து" என்று கூறுகின்ருர். அந்த மன மகிழ்ச்சி பின்னர் மறைந்து உலகியல் துன்பங்களால் அலைப்புண்டு வருந்திய இயல்பை, "இந்நாள் சுழல்வது திருவுளம் அறியும்" என எடுத்தோதுகின்ருர்.

இதனுல், பொன் மலையில் தம்பம் ஒன்று கண்டு அதன் மேல் ஏற முயன்று திருவருளால் ஊக்கப்பட்ட நிகழ்ச்சி தெரிவித்தவாரும். (120)

3530. வாட்டமோ டிருந்த சிறியனேன் தனது
வாட்டமும் மாயையா திகளின்
ஈட்டமும் தவிர்க்கத் திருவுளத் திரங்கி
என்னேஞர் பொருள்என மதித்தே
தீட்டரும் புகழ்சேர் திருவடித் துணைகள்
செலுத்திய திருச்சிலம் பொலிநான்
கேட்டபோ திருந்த கிளர்ச்சியும் இந்நாள்
கிலேசமுந் திருவுளம் அறியும்.

உரை : வருத்தம் மிக்குற்றமையால் சிறுமை யுடையவனுகிய எனது வாட்டத்தையும், உலகியல் மாயை முதலியவற்றின் கூட்டத்தை யும், என்னே யடையாமல் தவிர்க்கும் பொருட்டுத் திருவுள்ளத்தில் இரக்கமுற்று என்னேயும் ஒருபொருளென எண்ணி எழுதுதற்கரிய புகழ் பொருந்திய திருவடி யிரண்டின் கண்ணும் அணிந்த சிலம்பின் ஒலி கேட்பக் கேட்ட போது எனக்கு உளதாகிய உள்ளக் கிளர்ச்சியும் இப்பொழுது அஃதின்றி எய்தி யிருக்கும் மனத்தளர்ச்சியும் தேவரீருடைய திருவுள்ளம் நன்கு அறியும். எ.று.

திருவருள் ஞானப் பேறு எய்தாமையால் அறிவு சோர்ந்து மனம் தளர்ந்திருந்த தமது நிலையை, "வாட்டமோடு இருந்த சிறியனேன்" என வள்ளற் பெருமான் வனேந்து உரைக்கின்ருர். மாயை யாதிகள் - மலம், மாயை, கன்மங்கள். ஈட்டம் - கூட்டம்; திரளுமாம். தமது சிறுமையும் மாயையாதிகளின் கலக்கமும் தனது வலி போக்கி மெலிவு நல்கிச் சோர்வித்த போது சிவபெருமானுடைய திருவடிச் சிலம்போசை கேட்டு மகிழ்ந்த நலத்தை, "திருவுளத் திரங்கி என்னே ஓர்பொருள் என மதித்தே தீட்டரும் புகழ்சேர் திருவடித் துணைகள் செலுத்திய திருச்சிலம் பொலி நான் கேட்ட போதிருந்த கிளர்ச்சியும்" என மொழிகின்ருர். பிற்றை நாட்களில் அச்சிலம்போசை கேளாமையால் உண்டாகிய வருத்தத்தை "இந்நாள் கிலேசம்" என்றும், அதுவும் இறைவன் நன்கு அறிந்தது என்றற்கு, "திருவுளம் அறியும்" என்றும் தெரிவிக்கின்ருர். கிலேசம் - வருத்தம்.

இதனுல், திருவடிச் சிலம்போசை கேட்டு வள்ளற் பெருமான் தமது உள்ளத்தில் கிளர்ச்சி கொண்ட திறம் குறித்து அருளியவாரும். (121)

3531. கற்றவர் கல்லார் பிறர்பிறர் குரல்என்
காதிலே கிடைத்தபோ தெல்லாம்
மற்றவர் தமக்கென் உற்றதோ அவர்தம்
மரபினர் உறவினர் தமக்குள்

உற்றதிங் கெதுவோ என்றுளம் நடுங்கி
ஓடிப்பார்த் தோடிப்பார்த் திரவும்
எற்றரு பகலும் ஏங்கிநான் அடைந்த
ஏக்கமுந் திருவுளம் அறியும்.

உரை : கற்றவர்களும் கல்லாதவர்களுமாகிய பிறர் பிறருடைய உரத்த குரலோசைகள் என் காதிகள் விழுந்த போதெல்லாம் அவர்கட்கு என்ன தீங்கு உண்டாயிற்றே அல்லது அவர்களுடைய இனத்தார் உறவினராகியோர்கட்கு யாது தீங்கு உண்டாயிற்றே என்று நினைந்து மனம் நடுங்கி ஓடி யோடிப் பார்த்து இரவும் பகலும் ஏக்கமுற்று நான் வருந்திய திறத்தைத் தேவரீருடைய திருவுள்ளம் நன்கு அறியும். எ.று

கற்றவர், கல்லார் என்பதை மக்கள் எல்லாரையும் அடக்கிக் கொள்வதாயினும் ஆடவர், பெண்டிர், இளையர், முதியர் என்ற பகுப் பெல்லாம் அடங்க, "பிறர் பிறர்" என்று கூறுகின்றார். தீங்குண்டானாலும் அச்சம் உண்டானாலும் மக்கள் உரத்த குரலெடுத்து அரற்றுவார் ஆதலால், "பிறர் பிறர் குரல் என் காதிலே கிடைத்த போதெல்லாம் மற்றவர் தமக்கென் உற்றதோ" எனவும், உறவினர்க்கும் இனத்தவர்க்கும் தீங்கு உண்டானாலும் மிக்க குரலெடுத்துப் புலம்புவது மக்கள் இயல் பாதலின், "மரபினர் உறவினர் தமக்குள் உற்றதிங் கெதுவோ" எனவும் கலக்கமுற்ற திறத்தை எடுத்துரைக்கின்றார். உண்மையறியும் அவா நீங்காமையால், "ஓடிப் பார்த்து ஓடிப் பார்த்து" என்றும், நாளும் இந்த இயல்பே கொண்டு உறைந்த வள்ளற் பெருமானது இயல்பை விளக்கு தற்கு, "இரவும் எற்றரு பகலும் ஏங்கி நான் அடைந்த ஏக்கம்" என இசைக்கின்றார். எல் - ஒளி.

இதனால், பிறரது உரத்த குரல் கேட்டு வள்ளற் பெருமான் உள்ள வமைதி குலைந்து அவலமுற்ற திறம் கூறியவாறும். (122)

3532. கருணையம் பதிநங் கண்ணுள்மா மணிநம்
கருத்திலே கலந்ததெள் ளமுதம்
மருள்நெறி தவிர்க்கும் மருந்தெலாம் வல்ல
வள்ளல்சிற் றம்பலம் மன்னும்
பொருள்நிறை இன்பம் நம்மைஆண் டளித்த
புண்ணியம் வருகின்ற தருணம்
தருணம்இப் போதென் றெண்ணிநான் இருக்கும்
தன்மையும் திருவுளம் அறியும்.

உரை : கருணைக்கு உறைவிடமும் கண்ணுள் விளங்குகின்ற கரு மணியும் நமது உள்ளத்தின் உள்ளே கலந்து இனிக்கும் தெள்ளிய அமுதமும், தீய நெறிகளில் செல்லாது விலக்க அருளும் தேவரமுதம் ஒப்பதும், எல்லாம் வல்ல வள்ளலும், தில்லைச் சிற்றம்பலத்தே நின்று விளங்குகின்ற ஞானப் பொருள் நிறைந்த இன்ப வடிவமும் நம்மை யாண்டு அருளுகின்ற புண்ணிய மூர்த்தியுமாகிய சிவபெருமான், நமக்கு அருள் செய்ய வருகிற சமயம் இப்போது போலும் என்று நினைத்து நான் இருக்கும் தன்மையைத் தேவரீருடைய திருவுள்ளம் அறியும். எ.று.

கருணைக்கு இருப்பிடம் என்பது, "கருணையம் பதி" எனப்படுகின்றது. கண்ணுள் மாமணி என்றவிடத்து, மா அருமை குறித்தது. இன்ப வுணர்வு உள்ளத்தின்கண் ஒளிர்தலின், "நம் கருத்திலே கலந்த தெள்ளமுதம்" என உரைக்கின்றார். தன்னியல்பில் தெளிவுடையதாதலின், தேவரமுதம் 'தெள்ளமுதம்' எனப்படுவதாயிற்று. மருள் நெறி - தீமை பயக்கும் குற்ற நெறிகள். மன்னும் பொருள் - சிவஞானச் செம்பொருள். நன்னெறி அறிவுறுத்தி அருள் புரிவது பற்றி, "நம்மை ஆண்டளித்த புண்ணியம்" எனப் புகழ்கின்றார்.

இதனால், வள்ளற் பெருமான் திருவருள் இன்ப ஞான வரவு நோக்கி ஏங்கி யிருந்த திறம் எடுத்தோதியவாறும். (123)

3533. இமையவர் பிரமர் நாரணர் முதலோர்
எய்துதற் கரியபேர் இன்பம்
தமைஅறிந் தவருட் சார்ந்தபேர் ஒளிநம்
தயாநிதி தனிப்பெருந் தந்தை
அமையும்நம் உயிர்க்குத் துணைதிருப் பொதுவில்
ஐயர்தாம் வருகின்ற சமயம்
சமயம்இப் போதென் றெண்ணிநான் இருக்கும்
தன்மையும் திருவுளம் அறியும்.

உரை : தேவர்களும் பிரமர்களும் நாரணர்களும் ஆகிய பெரியோர் கள் அடைய முடியாத அருமையும் பெருமையும் வாய்ந்த இன்பமாகிய வனும், தம்மை யறிந்து ஞானப் பேறு பெற்ற சான்றோர்களுக்குப் பெரிய ஞானவொளியாகியவனும், நமக்குத் தயாநிதியும் ஒப்பற்ற பெரிய தந்தை யும் வீடு பேற்றுக்கு அமைந்த நம் உயிர்க்குத் துணையாகியவனும், தில்லைச் சிற்றம்பலத்தில் எழுந்தருளும் ஒப்பற்ற தலைவராகிய சிவ பெருமான் நமக்கு அருள் புரிய வருகின்ற சமயம் இதுவாகும் என்று எண்ணி நான் இருக்கும் தன்மையைத் தேவரீருடைய திருவுள்ளம் நன்கு அறியும். எ.று.

இமைத்தலில்லாத கண்களை யுடையவராதலின் தேவர்களை, "இமை யவர்" என்று சொல்லுகின்றார். இவ்வாறு வழங்குவது எதிர்மறை இலக்கணம் ஆகும். தேவர், பிரமர், நாரணர் முதலியோர் எண்ணிறந் தோர் என்பது பற்றிப் பன்மை வாய்பாட்டில் கூறுகின்றார். "நூறு கோடி பிரமர்கள் நுங்கினர், ஆறுகோடி நாராயணரங்களே, ஏறு கங்கை மணலெண்ணில் இந்திரர், ஈறிலாதவன் ஈசன் ஒருவனே" (ஆதிபுரா) எனத் திருநாவுக்கரசர் உரைப்பது காண்க. இவர்களும் ஏனையோர் போன்று செத்துப் பிறக்கின்ற சிறுமையுடையவர்களாதலின், இவர் களால் இன்ப வடிவாய சிவம் அடைதற்கு அரிது என்பது பற்றி, "முதலோர் எய்துதற் கரிய பேரின்பம்" என உரைக்கின்றார். தம் இயல்பையும் தம்மை அடிமையாக உடையவனுகிய சிவனது இயல்பை யும் உணர்ந்தாலன்றிச் சிவஞானப் பேரொளி பெறலாகாமை பற்றி, "தமை அறிந்த அருட் சார்ந்த பேரொளி" என்று சாற்றுகின்றார். தம்மை யறிந்தவர் - ஞானவான்கள். "தம்மை யுணர்ந்து, தமையுடைய தன் உணர்வால், எம்மையுடைமை எமை இகழார்" (சிவஞா. போ) என்று

மெய்கண்ட தேவர் உரைத்து அருளுவது காண்க. தயாநிதி - தயை யாகிய செல்வம். அருட் செல்வன் ஆதல் பற்றிச் சிவனை, "தயாநிதி" என்கின்றார். பிறர் எவராலும் உணர்த்தலாகாத சிவஞானத்தை, உயிர்க்கு அறிவினுள் அருளால் மன்னி நல்குதலால் சிவனை, "தனிப் பெருந் தந்தை" என்று குறிக்கின்றார். சிவஞானத்தால் சிவன் அருளைப் பெற முயலும் நல்லுயிர்க்குத் துணை புரிந்தருளுதலால் சிவனை, "அமையும் நம்முயிர்க்குத் துணை" என்று சொல்லுகின்றார். ஐயர் - தலைவர். இன்ன பொழுதில் இன்ன வடிவில் எழுந்தருளி இவ்வாறு ஞானம் நல்குவன் என்று யாவராலும் அரியலாகாமையின், "சமயம் இப்போது என்று எண்ணி நான் இருக்கும் தன்மை" என உரைக்கின்றார்.

இதனால், சிவப் பேறு எய்தும் காலத்தை எண்ணி வள்ளற் பெருமான் எதிர் நோக்கி இருக்கும் திறம் இயம்பியவாறும். (124)

3534. அடியனேன் உள்ளம் திருச்சிற்றம் பலத்தென்
அமுதநின் மேல்வைத்த காதல்
நெடியஏழ் கடலில் பெரிதெனக் கிங்நாள்
நிகழ்கின்ற ஆவலும் விரைவும்
படியஎன் தன்னுல் சொலமுடி யாது
பார்ப்பறப் பார்த்திருக் கின்றேன்
செடியனேன் இருக்கும் வண்ணங்கள் எல்லாம்
திருவுளங் கண்டதே எந்தாய்.

உரை : திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளி யுள்ள எனக்கு அமுதமாகியவனே; அடியேனுடைய உள்ளம் நின்பாற் கொண்ட காதல் நெடியவாகிய கடல் ஏழினும் பெரிதாகும்; எனக்கு இப்போது நிகழ்கின்ற ஆர்வமும் விறுவிறுப்பும் முற்றவும் என்னுல் சொல்ல முடியாது; பிற பொருள்களைப் பார்க்கும் செயலின்றி உன்னையே பார்த்திருக்கின்றேன்; குற்றமுடையவனுகிய யான் கொண்டிருக்கும் எண்ணங்கள் எல்லா வற்றையும் தேவரீருடைய திருவுள்ளம் நன்கு அறியும். எ.று.

சிவபெருமானுடைய திருவருளின் சிதையாத ஞான வின்பம், தெளிந்த அமுதினும் இனிமை செய்வது பற்றி, "திருச்சிற்றம்பலத்தென் அமுத" எனச் செப்புகின்றார். தில்லையம்பலத்துக் கூத்தப் பெருமான் செய்யும் திருவருள் ஞானமாதல் பற்றித் திருச்சிற்றம்பலத்தை விதந்து ஓதுகின்றார். சிவபெருமான்பால் கொண்ட ஆராக் காதலின் அளவிடற் கரிய பெருமையைக் குறித்தற்கு, "காதல் நெடிய ஏழ் கடலில் பெரியது" எனக் கிளந்து உரைக்கின்றார். ஆவல் - பேரன்பு. விரைவு - ஆசை விருப்பு மிகுதியால் மனத்திலும் உடலிலும் உண்டாகும் துடிப்பு. படிய - முற்றவும்; அழகிய உருவம் உடையவனே என்று பொருள் புலன்கள் மேற் செல்லும் ஆசை ஐந்தினையும் ஒருமுகப் படுத்தி நோக்குவதை, "பார்ப்பறப் பார்த்திருக்கின்றேன்" என்று கூறுகின்றார். செடி - குற்றம். வண்ணங்கள் - இயல்புகள்.

இதனால், கூத்தப் பெருமானுடைய திருவருள் இன்பத்தில் வள்ளற் பெருமான் கொண்ட காதலின் பெருமை கூறியவாறும். (125)

3535. பன்னிரண் டாண்டு தொடங்கிநான் இற்றைப்
பகல்வரை அடைந்தவை எல்லாம்
உன்னிநின் றுரைத்தால் உலப்புரு தலுல்
ஒருசில உரைத்தனன் எனினும்
என்னுளத் தகத்தும் புறத்துமட் புறத்தும்
இயல்புறப் புறத்தினும் விளங்கி
மன்னிய சோதி யாவும்நீ அறிந்த
வண்ணமே வகுப்பதென் நினக்கே.

உரை : பன்னிரண்டாம் வயது தொடங்கி இன்றைய பகல் பொழுது வரை நான் பெற்ற அனுபவங்கள் எல்லாவற்றையும் எண்ணி யுரைத்தால் அது முடிவுறுது; ஆதலால் ஒருசிலவற்றையே இதுகாறும் எடுத்துரைத் தேன்; என்றாலும் என்னுள்ளத்தின் அகத்தும், புறத்தும், உட்புறத்தும், புறப்புறத்தும் இயல்பாகவே விளக்கமுற நிலை பெற்று எல்லாவற்றையும் அறிந்தாங்கு முறை செய்யும் பரஞ்சோதியாகிய உனக்கு உரைப்பது என்னையோ. எ.று.

தமக்குப் பன்னிரண்டாம் ஆண்டு தொடங்கிச் சிவ நினைவும், சிவ ஒழுக்கமும் தமக்கு உளவாயினமையும், அவற்றின் வழி உண்டாகிய அனுபவங்களையும் ஊன்றி நின்று எண்ணி நினைவு கூர்ந்து உரைப்ப தென்றால் அது முற்றவும் முடியாத தொன்று என்பாராய், "பன்னிரண்டாண்டு தொடங்கி நான் இற்றைப் பகல் வரை அடைந்தவை யெல்லாம் உன்னி நின்றுரைத்தால் உலப்புருது" என்று கூறுகின்றார். உலப்புறுதல் - முடிவுறுதல். உன்னி யுரைத்தல் - நினைவு கூர்ந்து சொல்லுதல். ஒருசில என்றவிடத்து ஒருமை விகுதி குறித்து நின்றது. புறப்பொருட்கட்கு உட்புறம், புறப்புறம் என இரண்டு உண்மையின், "உட்புறத்தும் புறப்புறத்தினும்" எனப் பிரித்து ஓதுகின் றார். பொருள்களின் எல்லாக் கூறுகளிலும் சிவத்தின் அருள் ஒளி பரந்து நிற்றலின், "இயல்புற விளங்கி மன்னிய சோதி" எனக் குறிக்கின்றார். தன்னியல்பில் எல்லாவற்றையும் முற்ற அறிந்து கொள்ளும் பேரறிவினனு தலால், "இயல்புற யாவும் நீ அறிந்த வண்ணம்" என இயம்புகின்றார். எல்லாவற்றையும் முற்ற அறிந்து கொள்ளும் முற்றறிவு உடைய முதல்வனுக்கு வகுத்தும் தொகுத்து முரைப்பது வேண்டாதது என்றற்கு, "நினக்கு வகுப்பது என்" என வழுத்துகின்றார். வகுத்தல் - ஈண்டு உரைத்தல் மேற்று.

இதனால், வள்ளற் பெருமான் தனக்குப் பன்னிரண்டாம் வயது தொடங்கி எய்திய அனுபவம் அனைத்தையும் இறைவன் அறிந்துள்ளவை என்று எடுத்தோதியவாரும். (126)

3536. இதுவரை அடியேன் அடைந்தவெம் பயமும்
இடர்களும் துன்பமும் எல்லாம்
பொதுவளர் பொருளே பிறர்பொருட் டல்லால்
புலையனேன் பொருட்டல இதுநின்

மதுவளர் மலர்ப்பொற் பதத்துணை அறிய
வகுத்தனன் அடியனேன் தனக்கே
எதிலும்ஓர் ஆசை இலேஇலே பயமும்
இடரும்மற் றிலேஇலே எந்தாய்.

உரை : தில்லையம்பலத்தில் விளங்குகின்ற பரம் பொருளாகிய சிவனே! அடியவனுகிய யான், இதுவரை எய்திய வெவ்விய அச்சங்களும் இடையூறுகளும் துன்பங்களும் ஆகிய எல்லாம் பிறர் பொருட்டே யன்றிப் புலத்தன்மை யுடைய எளியேன் பொருட்டல்ல; தேன் சொரியும் மலர் போன்ற அழகிய நின் இரண்டு திருவடிகளும் அறிய இதனை நினக்கு விண்ணப்பித்தேன்; அடிமையாகிய எனக்கு எப்பொருளிலும் ஓர் ஆசை யில்லை; எந்தையே இதனால் எனக்கு எவ்வகையச்சமும் துன்பமும் வேறு கிடையாது. எ.று.

அறிவு வழங்கிய நாள் தொட்டு இதனை விண்ணப்பிக்கும் நேரம் வரை தொகுத்துக் கூறுகின்ருராதலால், "இதுவரை" என வுரைக்கின்ருர். மிக்க பயம் "வெம்பயம்" எனப்படுகிறது. பொது - தில்லையம்பலம். பிறர் பொருட்டுச் செய்த உழைப்பிடையே அச்சமும் இடரும் அவலமும் தோன்றின வென்றற்குப் "பிறர் பொருட் டல்லால் புலையனேன் பொருட்டல" என்றும், அதனை வலியுறுத்தற்கு, இது நின் பதத்துணை அறிய வகுத்தனன்" என மொழிகின்ருர். தமது கீழ்மை புலப்படுத்தற்குப் "புலையனேன்" என்று புகல்கின்ருர். மலரின்கண் தேன் இருத்தல் இயற்கையாதலால், "மதுவளர் மலர்" என இயம்புகின்ருர். பொற் பதம் - அழகிய திருவடி. மலர் என்றது ஈண்டுத் தாமரையைக் குறிக்கிறது. தமக்கு எய்துவனவற்றைப் பொருளாகக் கொள்ளாத தற்றுறவைப் புலப் படுத்தற்கு, "அடியனேன் தனக்கே எதிலும் ஓர் ஆசை யிலே" எனவும், அதனால், "பயமும் இடரும் மற்றிலே" எனவும் உரைக்கின்ருர்.

இதனால், தமக்குள் எப்பொருளினும் ஆசை யின்மையையும் அதனால் துன்ப மின்மையும் வள்ளற் பெருமான் எடுத்துரைத்தவாரும். (127)

3537. என்னள விலேயே என்னினும் பிறர்பால்
எய்திய கருணையால் எந்தாய்
உன்னுறு பயமும் இடருமென் தன்னை
உயிரொடும் தின்கின்ற தந்தோ
இன்னும்என் றனக்கிவ் விடரொடு பயமும்
இருந்திடில் என்உயிர் தரியா
தன்னையும் குருவும் அப்பனும் ஆன
அமுதனே அளித்தருள் எனையே.

உரை : தாயும் தந்தையும் குருவுமாய் ஞானக் கொடையால் அமுத மயமாய் விளங்குகின்ற பெருமானே! என்னைப் பொறுத்த அளவில் துன்பமும் அச்சமும் எனக்கில்லையாயினும், பிறர்பால் என்னுள்ளத்து எழுந்த அருள் உணர்வால் எண்ணத் தக்க அச்ச வகைகளும் என்னை உயிரோடே வருத்துகின்றன எந்தை பெருமானே; என்னை வருத்திய

இவ்விடர்களும் அச்சங்களும் இன்னமும் நீங்காமல் எனக்கு உளவாயின் என்னுயிர் தாங்காதாதலால் என்னை ஆதரித்து அருள வேண்டுகிறேன். எ.று.

யான் உடல் உயிரோடு கூடி வாழ்தல் வேண்டிற்றிலேனுதலால் எனக்கு இடர்களாலும் அச்சங்களாலும் மனக் கவலை யில்லை என்பார், "என்னள விலையே என்னினும்" என உரைக்கின்றார். பிறர் வாழ உதவும் அருள் உள்ளத்தால் பணி வகைகளைச் செய்கின்ற போது அச்சமும் இடரும் அவலமும் பிறவும் என்னைத் தாக்கி வருத்துகின்றன என்பாராய், "பிறர்பால் எய்திய கருணையால் எந்தாய் உன்னுறு பயமும் இடருமென் தன்னை உயிரொடும் தின்கின்ற தந்தோ" என்று கூறுகின்றார். தின்கின்றது என்பது ஒருமை பன்மை மயக்கம். தின்னுதல் - வருத்துதல். "இவை என்னைத் தின்னும் அவர்க் காணலுற்று" (குறள்) என்று சான்றோர் வழங்குவது காண்க. இத்துன்பத் தொடர்புகள் இனித் தன்பால் நீங்குதல் வேண்டும் என்பதற்காக, "இன்னும் என்றனக் கிவ்விடரொடு பயமும் இருந்திடில் என்னுயிர் தரியாது" என்று உரைக் கின்றார். அன்னையும் அப்பனும் குருவுமாய் அருளுவதும், ஞான வானந்தத்தை நல்குவதும் பற்றி, "அளித்தருள் எனையே" என்று கூறு கின்றார்.

இதனால், பிறர் பொருட்டுப் பணி செய்யும் இடத்துளவாகும் இடர்ப்பாடுகளை வள்ளற் பெருமான் விண்ணப்பித்தவாறும். (128)

3538. பயத்தொடு துயரும் மறைப்புமா மாயைப்
பற்றெரு விளையும்ஆ ணவமும்
கயத்தவன் மயக்கும் மருட்சியும் எனது
கருத்திலே இனிஒரு கணமும்
வியத்திடத் தரியேன் இவையெலாந் தவிர்த்துன்
மெய்யருள் அளித்திடல் வேண்டும்
உயத்தரு வாயேல் இருக்கின்றேன் இலையேல்
உயிர்விடு கின்றனன் இன்றே.

உரை : அச்சமும் அவலமும் மறைப்பும் மாயை கன்மம் ஆணவ மலம் ஆகிய மூன்றின் பெரிய வலிய மயக்கமும் இவற்றுல் விளையும் மருட்கையும் என் மனத்திலே இனி ஒருகண நேரமும் தங்கி வருத்த இடம் கொடேன்; இவற்றை யெல்லாம் போக்கி யுனது மெய்ம்மையான திருவருளை எனக்கு அளித்து உய்வித்தருள வேண்டும்; அங்ஙனம் தந்தால் யான் உயிர் வாழ்வேன், இல்லையேல் என் உயிரை விட்டொழிப்பேன். எ.று.

பயம் - அச்சம். துயர் - அவலம். மறைப்பு - உலகியல் மயக்கத்தால் உள்ளதை உள்ளவாறே உணரும் அறியாமை. மலம் மூன்றனுள் கூறப் படும் மாயை, சுத்தம், அசுத்தம், சுத்தாவசுத்தம், பிரகிருதி ஆகிய பலவகை மாயைகட்கு முதலாதலால் அதனை, "மாமாயை" என்கின்றார். கய - பெருமை. "கயவும் தடவும் நளியும் பெருமை" என்பது

தொல்காப்பியம். மருட்சி - ஒன்றைப் பிரிதொன்றுகக் காணும் மருள். "பொருளல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருள்" (குறள்). வியத்தல் - விரும்பி யுறைதல். பயம் முதலாக மருட்சி ஈருகக் கூறப்பட்ட அனைத்தும் இனிது உய்தற்குத் தடையாதலால், "இவை யெலாம் தவிர்த்துன் மெய்யருள் அளித்திடல் வேண்டும்" என முறையிடுகின்றார். மெய்யருள் உய்திக்கு ஏதுவாதலால், "உ ய த் தருவாயேல் இருக்கின்றேன், இலையேல் உயிர் விடுகின்றனன் இன்றே" என்று கூறுகின்றார்.

இதனுல், அச்சமும் அவலமும் பிறவும் உய்திப் பேற்றுக்கு இடையூருதல் தெரிவித்தவாரும். (129)

3539. ஐயநான் பயத்தால் துயரினுல் அடைந்த
அடைவைஉள் நினைத்திடுந் தோறும்
வெய்யதீ மூட்டி விடுதல் ஒப்பதுநான்
மிகஇவற் றுல்இளைத் திட்டேன்
வையமேல் இனிநான் இவைகளால் இளைக்க
வசமிலேன் இவைஎலாம் தவிர்த்தே
உய்யவைப் பாயேல் இருக்கின்றேன் இலையேல்
உயிர்விடு கின்றனன் இன்றே.

உரை : ஐயனுகிய சிவபெருமானே! நான் அச்ச வகைகளாலும் பல்வகைத் துயரங்களாலும் அடைந்த அவலக் கீழ்மைகளை உள்ளத்தில் நினைக்கும் போதெல்லாம் வெவ்விய தீயை விளைவித்து வருத்துவது போல்கின்றமையால் நான் இவற்றுல் மிகவும் சோர்ந்து தொழிந்தேன்; இவ்வுலகின்கண் இவற்றுல் இனியும் நான் வருந்தி மெலியும் திறமில்லேன்; இவை யெல்லாவற்றையும் போக்கி என்னை உய்தி பெற வைப்பாயாயின் யான் வாழ்வேன், இல்லையேல் உயிர் விடுவேன். எ.று.

அச்சம் கீழ் மக்களது பண்பாதலால் அதனைத் தலையாக வைத்துப் பன்முறையும் ஓதுகின்றார். அடைந்த துன்பங்களை "அடைவு" என அறிவிக்கின்றார். அவை காட்சிப் பொருளல்லவாதலின், "உள் நினைந்திடும் தோறும்" என நினைக்கின்றார். அவற்றின் நினைப்பு விளைவிக்கும் வருத்தத்தை "உள் நினைத்திடும் தோறும் வெய்ய தீ மூட்டி விடுதல் ஒப்பது" என்றும், அவற்றுல் தமக்கு உண்டாகும் சோர்வை "நான் மிக இவற்றுல் இளைத்திட்டேன்" என்றும் உரைக்கின்றார். இனியும் இத்துன்பங்கட்கு இடம் கொடாதபடித் தம்மை யுய்வித்தல் வேண்டும் என வற்புறுத்தற்காக, "வைய மேல் இனி நான் இவைகளால் இளைக்க வசமிலேன்; இவை யெலாம் தவிர்த்தே உய்ய வைப்பாயேல் இருக்கின்றேன், இலையேல் உயிர் விடுகின்றனன் இன்றே" என்று உரைக்கின்றார்.

இதனுலும் பயம் முதலியவற்றுல் எய்தும் துயர்க்கு ஆற்றுமை வீண்ணப்பித்தவாரும். (130)

3540. பயந்துயர் இடர்உள் மருட்சியா தியஇப்
பகைஎலாம் பற்றறத் தவிர்த்தே
நயந்தநின் அருளார் அமுதளித் தடியேன்
நாடிஈண் டெண்ணிய எல்லாம்
வியந்திடத் தருதல் வேண்டும்ஈ தெனது
விண்ணப்பம் நின்திரு உளத்தே
வயந்தரக் கருதித் தயவுசெய் தருள்க
வள்ளலே சிற்சபை வாழ்வே.

உரை : அருள் வள்ளலே, தில்லையில் ஞான சபையில் எழுந் தருளும் செல்வமாகிய சிவனே; அச்சம், துயர், இடர்ப்பாடுகள், மன மருட்சி முதலிய இப்பகை இயல்புகள் எல்லாம் பற்றற நீக்கி விரும்பப்படு கின்ற நினது அருள் நிறைந்த ஞான வமுதத்தைத் தந்து அடியவனுகிய யான் இவ்வுலகில் எண்ணிய எண்ணங்கள் எல்லாவற்றையும் திருவுளத்தில் எண்ணிக் கண்டோர் வியக்கத் தக்க வகையில் எனக்கு உதவி யருளல் வேண்டும்; இதுவே எனது விண்ணப்பம்; நின்னுடைய திருவுள்ளத்தில் வன்மையுற எண்ணி என்பால் தயவு செய்து அருள்க. எ.று.

உள்மருட்சி - மனமருட்சி; பொருளாய தொன்றைப் பொருளன்று என மருளுதல் மனமருட்சி. அஃதாவது மனத்தின்கண் உளதாகும் மயக்க வுணர்ச்சி. நல்லொழுக்க நல்ஞான நெறிகளுக்கு அச்சம் முதலிய யாவும் மாறுய் நின்று தீது பயத்தலின் 'இப்பகை எலாம்' எனச் சுட்டிக் கூறுகின்றார். இருநத இடம் தெரியாமல் போக்கிலுலன்றி இவை தீ யெச்சம் போலப் பின்னரும் கிளைத்துத் தீங்குறுவிக்கும் என்பது பற்றி, "பற்றறத் தவிர்த்து" எனப் பகருகின்றார். சிவ பரம்பொருளின் திருவருள் ஞானத்தை நல்லோர் அனைவரும் விரும்புதலின், "நயந்த நின் அருளார் அமுதம்" என நவில்கின்றார். யாவரும கண்டு வியக்கத்தக்க முறையில் யான் எண்ணுகின்ற எண்ணங்கள் எல்லாம் உருவாதல் வேண்டும் என்பதற்காக, "எணணிய வெல்லாம் வியந்திடத் தருதல் வேண்டும்" என்று விளம்புகின்றார். வயந்தரல் - மிகைபட அளித்தல்.

இதனுல், வள்ளற் பெருமான் தமது விண்ணப்பத்தை முடிய மொழிந்தவாரும். (131)

3541. என்னுயிர் காத்தல் கடன்உனக் கடியேன்
இசைத்தவிண் ணப்பம்ஏற் றருளி
உன்னுமென் உள்ளத் துறும்பயம் இடர்கள்
உறுகண்மற் றிவைஎலாம் ஒழித்தே
நின்னருள் அமுதம் அளித்தென தெண்ணம்
நிரப்பியாட் கொள்ளுதல் வேண்டும்
மன்னுபொற் சபையில் வயங்கிய மணியே
வள்ளலே சிற்சபை வாழ்வே.

உரை : நீலமெற்ற பொற் சபையில் பொலிந்து தோன்றுகின்ற மாணிக்க மணி போல்பவனே; அருள் வள்ளலே, ஞான சபையை யுடைய செல்வனே; எனது உயிரைக் காப்பது எல்லாம் வல்ல முதல் வனுகிய உனக்குக் கடமையாகும்; யான் உனக்கு அடிமையாயினேன்; யான் இதுகாறும் உரைத்த விண்ணப்பத்தைத் திருவுள்ளத்தில் ஏற்றுக் கொண்டு உன்னையே நினைந்து ஒழுகும் என் மனத்திற் ருேன்றும் அச்சம், துயர்கள், தீங்குகள் முதலிய இவற்றை யெல்லாம் போக்கி நினது திருவருளாகிய ஞான வமுதத்தை நல்கி என்னுடைய எண்ணங்களை நிறைவு செய்து என்னையும் ஆட்கொள்ளுதல் வேண்டும். எ.று.

உயிர், மலமாயை கன்மங்களால் பிணிப்புண்டு சிற்றறிவும் சிறு தொழிலும் உடையதாதலின், அருட் பெரும் பரம்பொருளாகிய சிவத்துக்குக் காத்தல் கடமையாதலால், "என்னுயிர் காத்தல் கடன் உனக்கு" என வுரைக்கின்ருர். மல மாயைகளால் பிணிப்புண்டு அவற்றின் வழி ஒழுகுதல் பற்றித் தன்னை, "அடியேன்" என்கின்ருர். இசைத்தல் - சொல்லுதல். தான் உலகிற்கு அடிமையாயினும் முதல்வனுகிய சிவனை வள்ளற் பெருமான் எண்ணிய வண்ணம் இருக்குமாறு தோன்ற, "உன்னும் என்னுள்ளம்" என உரைக்கின்ருர். நல்ஞானப் பேற்றுக்கும் நற்செயல்களுக்கும் அச்சம் இடர் உறுகண் முதலியன தடையாதலின், "உறும் பயம் இடர்கள் மற்றிவை யெலாம் ஒழித்து" என உரைக்கின்ருர். மீளவும் அத்தடைகள் புகுந்து தீது செய்யா வண்ணம் நினது திருவருள் ஞானத்தை அளித்து அருளுதல் வேண்டும் என்பாராய், "நின் அருள் அமுதம் அளித்து" எனவும், "எனது எண்ணம் நிரப்பி ஆட்கொள்ளுதல் வேண்டும்" எனவும் கூறுகின்ருர்.

இதனுல், தமது விண்ணப்பத்தின் பொருளை முடிந்தது முடிந்து மொழிந்தவாரும். (132)

3542. பரிக்கிலேன் பயமும் இடரும்வெந் துயரும்
பற்றறத் தவிர்த்தருள் இனிநான்
தரிக்கிலேன் சிறிதும் தரிக்கிலேன் உள்ளம்
தரிக்கிலேன் தரிக்கிலேன் அந்தோ
புரிக்கிலே சத்தை அகற்றிஆட் கொள்ளும்
பொற்சபை அண்ணலே கருணை
வரிக்கணேர் மடந்தை பாகனே சிவனே
வள்ளலே சிற்சபை வாழ்வே.

உரை : தில்லைப் பொன்னம்பலத்தில் எழுந்தருளும் தலைவனே! கருணை நிறைந்து செவ்வரிப் பரந்த கண்களையுடைய மடந்தையாகிய உமாதேவியை ஒருபாகத்தே உடையவனே; சிவபெருமானே; அருள் வழங்கும் வள்ளலே, ஞான சபைச் செல்வனே, என்னை யலைக்கும் அசச வகைகளைப் போக்கிக் கொண்டிலேன்; ஆதலால், அது காரணமாக உண்டாகும் இடர்களையும் வெவ்விய துன்பங்களையும் முற்றவும் போக்கி அருள்வாயாக; நான் இனியும் இவற்றின் கொடுமையைத் தாங்க மாட்டேன்; ஒருசிறிதும் தாங்க மாட்டேன்; மனத்திலும் பொறுக்க மாட்டேன்;

ஐயோ, அவலத்தைச் செய்கின்ற வருத்தத்தை யகற்றி என்னை ஆட் கொண்டு அருளுதல் வேண்டும். எ.று.

தில்லையம்பலம் பொன் வேய்ந்திருப்பது பற்றி, "பொற் சபை" எனவும், ஞானத் திருக்கூத்து நிகழ்தலால், "சிற்சபை" எனவும் வழங்கும். மகளிர் கண்களில் செவ்வரி பரந்து அழகு செய்தல் பற்றி உமாதேவியை, "வரிக்கணேர் மடந்தை" என வழுத்துகின்றார். மங்கை பங்களுதல் பற்றி, "மடந்தை பாகனே" எனப் பரவுகின்றார். இன்பம் செய்தலின் "சிவனே" என்கின்றார். பரித்தல் - போக்குதல்; வேரோடு கூடதலுமாம். மனத்தி லுண்டாகும் அச்சம் காரணமாகப் பல்வகை இடர்களும் வெவ்விய துயர்களும் உளவாதலின், "இடரும் வெந்துயரும் பற்றறத் தவிர்த்தருள்க" என்று கூறுகின்றார். இவற்றைத் தாங்க மாட்டாத எல்லைக்கண் தான் இருப்பதை உணர்த்துதற்கு, "இனி நான் தரிக்கிலேன் சிறிதும் தரிக்கிலேன், உள்ளம் தரிக்கிலேன் தரிக்கிலேன்" என அறிவிக்கின்றார். கிலேசம் - துன்பம்; குற்றமுமாம்.

இதனால், தமது துயரம் பொறுக்க மாட்டாத நிலைமையைப் புகன்றவாரும். (133)

14. மாயையின் விளக்கம்

அஃதாவது, உலகியல் மாயைக்கும் தமக்கும் உண்டான தொடர்பை எடுத்தோதித் தம்மை யாண்டருள வேண்டு மென்பது. இதன்கண், தமது சிறுமையும் எளிமையும் நோக்கிச் சிவபெருமானுகிய முதல்வன் பரையாகிய செவிலி கையில் ஈந்து வளர்க்குமாறு தந்ததும், அவள் தனது மகள் கையில் தந்ததும், அம்மகள் நீலியாகிய சத்திபால் கொடுத்ததும், அச்சத்தி தத்துவங்களாகிய மகளிர் கையில் கொடுத்து வளர்க்கச் செய்ததும், முடிவில் தாம் செவிலியால் பொத்தைத் தொட்டிலில் இருப்பித்ததும் பிறவும் எடுத்துரைக்கின்றார். இயல்பிலேயே ஆன்மா வாகிய தன்னைச் சித்துப் பொருளென எண்ணுது பிறிதெனக் கருதி, காமம் முதலிய கொடியவர்களிடையில் இருந்து வளரச் செய்தால் அது கூடாது; இறைவனுகிய நீ நற்றுயாகிய தேவியொடு புகுந்து இடர் தீர்த்து ஞானம் நல்கி மெய்த் தவநெறியில் விடுத்து மண்ணும் விண்ணும் மதிக்கத் தம்மை வாழ வைத்தல் வேண்டுமென வள்ளற் பெருமான் முறையிடுகின்றார்.

இதன்கண், தந்தையாகிய இறைவன் தம்மை வளர்க்குமாறு பரையாகிய செவிலியின் கையில் ஒப்புவித்தனன் என்றும், அச் செவிலியோ என்றால், தம்மை யாதரிக்கவும் மாட்டாள் அயர்ந்திருக்கவும் மாட்டாள் என்றும், அதன் மேலும் செவிலியானவள் தம் மகளிடம் தம்மை ஒப்புவித்தாள் என்றும், அம்மகளோ தம்மை நீலிபால் கொடுத் தாள் என்றும், அந்நீலியோ தன்புடை யாடும் தத்துவ மடவார் கையில் இருத்தினள் என்றும், அம்மடவார்களோ எனில், தனித் தனியாகத் தம்மையெடுத்து அச்சுறுத்துகிறார்கள் என்றும், சிலசமயம் அவர்கள் தம்மைக் கவனிக்காமல் விளையாட்டயர்கிறார்கள் என்றும், தம் அருமையை அவர்கள் அறியுமாறில்லை என்றும், தாம் தும்மினலும் அழுதாலும் செவிலி கேளாதவள் போல் இருக்கிறள் என்றும், வயிரத்

தொட்டில்கள் தங்கத் தொட்டில்கள் பல இருந்திடவும், பொத்தைத் தொட்டிலில் செவிலி தம்மைக் கிடத்தினுள் என்றும், எல்லாம் வல்ல இறைவன் பெற்ற பிள்ளையாகிய தமக்கு இது தகுமா என்றும், செவிலி தம்மைக் குறையாத் திருமதியாளர் என்று கருதாமல் தேய்ந்திடு மதியினர் என்று எண்ணிக் காமமாதி யவரால் பயப்படுத்தினுள் என்றும், செவிலி கையில் தம்மைத் தந்தது சாலும் என்றும், இனியாவது, இறைவனும் இறைவனிடத்தினின்றும் எஞ்ஞான்றும் பிரியாத தம் நற்றுயாகிய ஞான ஆனந்தவல்லியும் கருணை கூர்ந்து எழுந்தருளி வந்து தமது இடர் தீர்த்து, "இன்னமுதம் அனைத்தையும் அருத்தி ஊனம் ஒன்றில்லா தோங்கும் மெய்த்தலத்தில் உறப் புரிந்து" தம்மை என்றென்றும் பிரியாமல் "வானமும் புவியும் மதிக்க வாழ்ந்து அருள்வார் களாக" என்று இரங்குதல் காண்க வெனப் பாலகிருஷ்ண பிள்ளையவர்கள் தொகுப்புரைப்பது காண்க.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3543. திடுக்கற வெனைத்தான் வளர்த்திடப் பரையாம்
செவிலிபாற் சேர்த்தனை அவளோ
எடுக்கவும் நினையாள் படுக்கவும் ஒட்டாள்
என்செய்வேன் இன்னும்என் னிடைப்பால்
மடுக்கரற் றுயும் வந்திலள் நீயும்
வந்தெனைப் பார்த்திலை அந்தோ
தடுக்கருங் கருணைத் தந்தையே தளர்ந்தேன்
தனையனேன் தளர்ந்திடல் அழகோ.

உரை : மலவிருளில் செயலின்றிக் கிடந்த என்னைத் திடுக்கிடாத படி வளர்த்தல் வேண்டிப் பரை யெனப்படும் சிவசத்தியாகிய செவிலி கை யில் விடுத்தாய்; அவள் என்னைத் தன் கையில் எடுக்கவும் விரும்பாமல் என்னை ஓரிடத்தில் இருக்கவும் விடாமல் அலைக்கின்றுள். நான் செய்வ தறியாது வருந்துகிறேன்; இங்ஙனமாகியும் எனக்கு வேண்டும் பால் உணவைத் தரவும் நற்றுயாகிய அருட்சத்தி தானும் வருகின்றுள் இல்லை; அன்றியும் நீயும் எழுந்தருளி நின்னருட் கண்ணால் பார்க்கின்றுயில்லை; ஐயோ, விலக்க முடியாத கருணை யுருவாகிய தந்தையே, நான் தளர்ந்து ஒழிந்தேன்; நினக்கு மகனுகிய யான் இவ்வாறு தளருவது அழகாகுமா? எ.று.

கேவலாவத்தையில் ஆன்மா மலப் பிணிப்புற்று ஞான வொளி யின்றிக் கண்ணிலாக் குழவி போலச் செயலற்றுக் கிடந்த நிலையை நீக்கி, அபர விந்துவாகிய பரை வென்னும் சத்தியால் சகலாவத்தைக்கண் புகுத்தப்பட்ட நிலையை, "எனைத் தான் வளர்த்திடப் பரையாம் செவிலி பாற் சேர்த்தனை" என்று உரைக்கின்றுர். சகல நிலை - ஒளி உருவாகிய உலகியலில் உடலொடு கூடி வாழும் நிலை. இருளில் கிடந்த தன்னை ஒளியில் விடும் பொழுது திடுக்கீடு உண்டாதலின், "திடுக்கற" எனச் செப்புகின்றுர். சகலாவத்தையில் உடம்பொடு கூடி யுலகில் வாழும் உயிர் கேவலத்தில் இருந்தது போலச் செயலின்றி யிருத்தல் கூடாமை விளங்க, "அவளோ எடுக்கவும் நினையாள் படுக்கவும் ஒட்டாள் என்செய்வேன்"

என இயம்புகின்ருர். ஞானத்தால் அன்றி வளர்தலும் தேய்தலும் இல்லையாதலின் ஞானம் வழங்கும் தாயாகிய அருட் சத்தி தனக்குத் திருவருள் ஞானத்தை நல்கிற்றிலள் என்றற்கு, "இன்றும் என்னிடைப் பால் மடுக்க நற்ருயும் வந்திலள்" என்றும், ஞான மூர்த்தியாகிய நீ தானும் கடைக்கண் செய்ய வில்லை என்றற்கு, "நீயும் வந்தெனைப் பார்த்திலை" என்றும் எடுத்துரைக்கின்ருர். சும்மா விராது கேவியும் கிடந்தும் கைகால்களை அசைத்தும் கிடக்கும் குழவிக்குக் காலமறிந்து பால் நல்கும் நற்ருய் வந்திலளானுல் அது சோர்வுறுதல் இயல்பாதலால், "தடுக்கருங் கருணைத் தந்தையே தளர்ந்தேன் தனையனேன் தளர்ந்திடல் அழகோ" என்று கூறுகின்ருர். பால் மடுத்தல் - பால் உண்பித்தல், பால் - சிவஞானம்.

இதனுல், சகலத்தில் புகுந்த ஆன்மா ஞானம் பெருது வருந்தும் திறம் கூறியவாரும். (1)

3544. தளர்ந்திடேல் மகனே என்றெனை எடுத்தோர்
தாய்கையில் கொடுத்தனை அவளோ
வளர்ந்திடா வகையே நினைந்தனள் போன்று
மாயமே புரிந்திருக் கின்ருள்
கிளர்ந்திட எனைத்தான் பெற்றநற் ருயும்
கேட்பதற் கடைந்திலள் அந்தோ
உளந்தரு கருணைத் தந்தையே நீயும்
உற்றிலை பெற்றவர்க் கழகோ.

உரை : மகனே, நீ மனம் தளர வேண்டாம் என்று சொல்லி, எனை எடுத்துச் சத்தி வகைகளின் ஒருத்தியாகிய மாயை கையில் கொடுத் தருளினுய்; அவள் நான் வளர்ந்திட லாகாது என்று நினைத்தவள் போல மாயத்தையே செய்து கொண்டிருக்கின்ருள்; அம்மாயத்தினின்றும் நீங்கி யெழுமாறு என்னைப் பெற்ற நற்ருய் ஆகிய அருட் சத்தியும் என் செய்தனை எனக் கேட்டற்கு என்பால் வந்திலள்; ஐயோ, மனம் நிறைந்த கருணை யுருவாகிய தந்தையாகிய சிவனே, நீயும் என்பால் வந்தாயில்லை; பெற்ருர்க்கு இது முறையாகுமா. எ.று.

செவிலியால் நன்குப் பேணப்படாமையால் சோர்வுற்றுக் கிடந்த ஆன்மாவை மாயையாகிய சத்தியின்பால் கொடுத்த திறத்தை, "தளர்ந் திடேல் மகனே என்றெனை எடுத்தோர் தாய் கையில் கொடுத்தனை" என்றும், அம் மாயை ஆன்ம சிற்சத்தியை வளர விடாது மயக்கமே செய்தமையின், "அவளோ வளர்ந்திடா வகையே நினைந்தனள் போன்று மாயமே புரிந்திருக்கின்ருள்" என்றும் உரைக்கின்ருர். இது கேவலத்தில் ஆணவ விருளில் படிந்திருந்த ஆன்மாவைச் சகலத்தில் இச்சா ஞானக் கிரியைகளால் உய்தி பெறற் பொருட்டு மாயா காரிய உலகில் புகுத்திய திறமும் அதன்கண் ஆன்மா மயங்கும் திறமும் குறிக்கின்றது. அச்சகலத் தில் வாழ்வாங்கு வாழ்ந்து உய்தி பெற உதவுவது அருட் சத்தியாதலின் அதனை, "கிளர்ந்திட எனைத் தான் பெற்ற நற்ருயும் கேட்பதற் கடைந்திலள்" என்று கூறுகின்ருர். தாம் பெற்ற மகன் நன்னிலையில்

வளர்ந்து சிறப்பதையே தந்தையும் தாயும் விரும்புவாராக, அது செய்யாமை நன்றன்று என்பார், "உளந்தரு கருணத் தந்தையே நீயும் உற்றிலை" எனவும், சிவமும் சத்தியுமாய்ப் பெற்றோராக விளங்குகின்ற உங்களுக்கு முறையாகாது என விண்ணப்பிப்பாராய், "பெற்றவர்க் கழகோ" எனவும் இயம்புகின்றார்.

இதனால், ஆன்மா மாயையிற் கிடந்து வளரும் திறம் கூறிய வாறும்.

3545. தாங்களன் தனேஓர் தாய்கையில் கொடுத்தாய்
தாயவள் நான்தனித் துணர்ந்து
தூங்கவும் ஒட்டாள் எடுக்கவும் துணியாள்
சூதையே நினைத்திருக் கின்றாள்
ஓங்குநற் றாயும் வந்திலாள் அந்தோ
உளந்தளர் வுற்றனன் நீயும்
ஈங்குவந் திலையேல் என்செய்கேன் இதுதான்
எந்தைநின் திருவருட் கழகோ.

உரை : பெருமானே, என்னை யாதரித்தற் பொருட்டு மாயையாகிய தாயின் கையில் என்னை விடுத்தருளினாய்; எனக்குத் தாயாகிய அவள் நான் தனியே கிடந்து உண்மை யுணர்ந்து ஒடுங்கவும் விட மாட்டாள்; தனது மாயையின் பிடிப்பிலிருந்து விடுவிக்கவும் நினையமாட்டாள்; மாய நினைவுகளையே கொண்டிருக்கின்றாள்; இந்நிலையினை யறிந்து உயர்ந்துள்ள அருட் சத்தியாகிய நற்றாயும் வந்தருளுகின்றாளில்லை; ஐயோ, அதனால் நான் மனம் சோர்ந்துள்ளேன்; நீ தானும் என்பால் வாராயாயின், நான் யாது செய்வேன்; இவ்வாறு இருப்பது எந்தையாகிய நின் திருவருட்கு அழகாகுமோ. எ.று.

உய்தி பெறற் பொருட்டுச் சகலத்தில் மாயைபால் வளர்த்து சிறக்க விடுத்தமை புலப்பட, "தாங்க" என்றும், "தாய் கையில் கொடுத்தாய்" என்றும் இசைக்கின்றார். சகலத்தில் மாயையாகிய சத்தி தனது காரியமாகிய உடல், கருவி, உலகு, போகங்களில் கிடத்தினளே யன்றி அவற்றின் தொடர்பின்றித் திருவருளை யுணர்ந்து அதன்கண் தோய்ந்து ஒடுங்க விடுகின்றாளில்லை என்பாராய், "தாயவள் நான் தனித் துணர்ந்து தூங்கவும் ஒட்டாள்" என்றும், தான் தானும் சகலமயக்கத்தில் அழுந்தாவாறு என்னை யுய்விக்க நினைக்கின்றாள் இல்லை; மாயா உலக போகங்களிலேயே அழுத்துகின்றாள் என்பாராய், "சூதையே நினைத்திருக்கின்றாள்" என்றும் உரைக்கின்றார். திருவருள் ஞானம் எய்தாமை புலப்பட, "நற்றாயும் வந்திலாள்" என்று கூறுகின்றார். திருவருள் ஞான வாயிலாக அன்றிச் சிவஞானம் எய்துதல் இல்லாமையால், "நீயும் ஈங்கு வந்திலையேல் என் செய்கேன்" என மொழிகின்றார்.

இதனால், சகலம் நல்கும் போகங்களில் அழுந்தும் ஆன்மா, சிவஞானம் எய்தாமைக்கு வருந்துமாறு தெரிவித்தவாறும்.

3546. அத்தநீ என்னோர் தாய்கையில் கொடுத்தாய்
ஆங்கவள் மகள்கையில் கொடுத்தாள்
நித்திய மகள்ஓர் நீலிபாற் கொடுத்தாள்
நீலியோ தன்புடை ஆடும்
தத்துவ மடவார் தங்கையில் கொடுத்தாள்
தனித்தனி அவர்அவர் எடுத்தே
கத்தவெம் பயமே காட்டினர் நானும்
கலங்கினேன் கலங்கிடல் அழகோ.

உரை: தந்தையே, தலைவனே, கேவலத்தில் கிடந்த என்னை அருள் கூர்ந்து மாயையாகிய தாயின் கையில் கொடுத்தருளினாய்; அவள் சுத்த மாயையாகிய தன் மகள் கையில் கொடுக்க, நிலைபெற்ற அவள் பிரகிருதி மாயையாகிய நீலியிடம் என்னை விடுத்தாள்; நீலியாகிய அம்மாயை தன் பக்கல் சூழ்ந்துலவும் தத்துவங்களாகிய மகளிரிடையே என்னை விடுத்தாள்; அவர்கள் தனித் தனியாகத் தம்மொடு கூட்டி மிக்க அச்சத்தையே உண்டாக்கினர்; நானும் அவர்களால் நிலை கலங்கினேன்; இது முறையாகுமா. எ.று.

அத்தன் - தந்தை. கத்தன் - தலைவன்; கருத்தன் என்பது கத்தன் என வந்தது. சுத்த மாயையினின்றும் தோன்றுதலால் அறிவிச்சை செயல்களை எழுப்பும் அசுத்த மாயையை, "மகள்" என்று குறிப்பிடு கின்றார். பிரகிருதி மாயையும் அதுபோல் மாயையில் தோன்றியதாதலால் அதனை "நித்திய மகள்" என்றும், ஆன்ம வறிவை மறைக்கும் இயல்பால் "நீலி" என்றும் கூறுகின்றார். ஆன்ம தத்துவம் இருபத்துநான்கும், பிரகிருதி மாயை இடமாக நின்று ஆன்மாவை யலைப்பது பற்றி, "நீலியோ தன்புடை யாடும் மடவார்தம் கையில் கொடுத்தாள்" என்றும், அத்தத்து வங்களால் அச்சமும் அவலமும் உற்று ஆன்மா அலைக்கப்படுவது பற்றி, "தனித்தனி அவரவர் எடுத்தே வெம்பயமே காட்டினர்" என்றும், "நானும் கலங்கினேன்" என்றும் கூறுகின்றார்.

இதனால், மாயையின் கூறுகளான அசுத்த மாயை, மூலப் பகுதி, தத்துவ வகைகள் ஆகியவற்றின்கண் கிடந்து வருந்தும் திறம் கூறியவாறும். (4)

3547. வாங்கிய செவிலி அறிவொடும் துயிற்ற
மகள்கையில் கொடுத்தனன் எனைத்தான்
ஈங்கிவள் கருத்தில் எதுநினைத் தனளோ
என்செய்வேன் என்னையே உணர்ந்து
தூங்கவும் ஒட்டாள் அடிக்கடி கிள்ளித்
தொட்டிலும் ஆட்டிடு கின்றாள்
ஏங்குறு கின்றேன் பிள்ளைதன் அருமை
ஈன்றவர் அறிவரே எந்தாய்.

உரை: தந்தையே, சிவசத்தியிடமிருந்து என்னைப் பெற்ற பரையாகிய செவிலித் தாய், எனது ஞானநலம் கெடாமல் தன்பால் ஒம்புமாறு மாயா சத்தியாகிய தன் மகள் கையில் கொடுத்தாளாக, என்னை இம்மாயை தன்

மனத்தில் எத்தகையவன் என நினைத்தாளோ அறியேன்; நான் தானும் ஒன்றும் செய்கிலேன்; அவள் எனது உண்மை நிலையை யுணர்ந்து திருவருளின்கண் உறங்க விடாளாய் அடிக்கடி வேற்று நினைவுகளால் வருத்தி ஞான நினைவிலும் உழல்விக்கின்றுள்; நான் இதனால் ஏங்கி வாடுகிறேன்; பெற்ற பிள்ளையினுடைய அருமையைப் பெற்றவரன்றே அறிகுவர். எ.று.

கேவலத்தில் செயலற்றுக் கிடந்த என்னுடைய அறிவாற்றலைக் கிளர்வித்து மாயா காரியமாகிய சகலத்தில் புகுத்திய இயல்பை, "வாங்கிய செவிலி அறிவொடும் துயிற்ற மகள் கையில் கொடுத்தனள்" என்றும், சகலத்தின்கண் ஆன்மா தன்னை யுணர்ந்து தலைவனை யறிந்து உய்தி பெறுதற்குரிய உணர்வு பெறுதலும், மாயா போக நுகர்ச்சியால் மறைப் புண்டு வருந்துதலும் இயல்பாதலின், "என்னையே யுணர்ந்து தூங்கவும் ஒட்டாள் அடிக்கடி கிள்ளித் தொட்டிலும் ஆட்டிடுகின்றுள்" எனச் சொல்லுகின்றுர். மாயையின் போக நுகர்ச்சி செய்யும் மயக்கத்தால் தான் வருந்தும் திறத்தை, "ஏங்குறுகின்றேன்" என இசைக்கின்றுர். பிள்ளையினுடைய அறிவு வளர்ச்சிக்கண் உள்ள அருமை பெருமைகளைப் பெற்றோர் முதற்கண் நன்கு அறிவர் என்பது பற்றி, "பிள்ளை தன் அருமை ஈன்றவர் அறிவர்" ஏனப் பேசுகின்றுர்.

இதனால் சகலத்தில் உண்மை ஞானம் பெறுவதன் அருமை தெரிவித்தவாறும். (5)

3548. வலத்திலே செவிலி எடுத்திடச் சோம்பி
மக்கள்பால் காட்டிவிட் டிருந்தாள்
மலத்திலே உழைத்துக் கிடந்தழல் கேட்டும்
வந்தெனை எடுத்திலார் அவரும்
இலத்திலே கூடி ஆடுகின் றனர்நான்
என்செய்வேன் என்னுடை அருமை
நிலத்திலே அவர்கள் அறிந்திலார் பெற்றோய்
நீயம்இங் கறிந்திலை யேயோ.

உரை: பரையாகிய செவிலி ஞான நெறியிலே என்னை நிறுத்தி வளர்க்கச் சோம்பலுற்று, பிறந்திறந் துழலும் சகலத்தில் மக்கள் கூட்டத்தைக் காட்டி என்னை அதன்கண் விட்டு விட்டாள்; நான் அறியாமையாகிய மலத்திலே யிருந்து உழைத்து அதன் கண்ணே கிடந்து புலம்புவதைக் கேட்டும் என்னை அதனின்றும் எடுத்தற் பொருட்டு மக்கள் யாரும் வந்திலர்; தத்தமக்குரிய இடத்திலேயிருந்து தம்மிற் கூடி விளையாடுகின்றுர்கள்; நான் யாது செய்வேன்; என்னுடைய அருமையை நிலவுலகத்தில் அவர்கள் அறிகின்றுர்களில்லை; என்னைப் பெற்ற தந்தையாகிய நீயும் அறியாது ஒழிந்தனையோ, கூறுக. எ. று.

வலம் - ஞான நெறி மேற்று. ஞானிகள் கூட்டத்தில் தம்மை யிருத்தாமல் உலகியலில் கிடந்துழலும் மக்களிடையே வாழ்வித்தமை பற்றி வருந்துகின்றுராதலின், "மக்கள்பால் காட்டி விட்டிருந்தாள் மலத்திலே உழைத்துக் கிடந்தழல் கேட்டும் வந்தெனை எடுத்திலார் அவரும்" என

வுரைக்கின்ருர். உலக மக்கள் தாமும் தத்தமக்குரிய வாழ்க்கைப் போக்கிலே பலராய்க் கூடிச் செல்லுகின்றமை பற்றி, "இலத்திலே கூடியாடுகின்றனர்" என இயம்புகின்ருர். இலம் - ஈண்டு வாழ்க்கை நெறி குறித்தது. தாம் உணர்த்தும் சமரச சுத்த சன்மார்க்க நெறியினைக் கேட்டுச் சிந்திக்காமை புலப்படுத்த, "என்னுடைய அருமை நிலத்திலே அவர்கள் அறிந்திலார்" என்றும், அவர்களே நெறிப்படுத்தும் செயல் வகைகளே யுணர்த்தற் பொருட்டு ஆவன செய்தற்கு உரிய அறிவு உணர்த்தாமை பற்றி, "நீயும் இங்கறிந்திலையே" என்றும் கூறுகின்ருர்.

இதனுல், தமது சுத்த சன்மார்க்க நெறியினை மக்கள் உணராமைக்கு வருந்தியவாரும்.

3549. தும்மினேன் வெதும்பித் தொட்டிலிற் கிடந்தே
சோர்ந்தழு திளைத்துமென் குரலும்
கம்மினேன் செவிலி அம்மிபோல் அசையாள்
காதுறக் கேட்டிருக் கின்ருள்
செம்மியே மடவார் கொம்மியே பாடிச்
சிரித்திருக் கின்றனர் அந்தோ
இம்மியே எனினும் ஈந்திடார் போல
இருப்பதோ நீயும்எந் தாயே.

உரை: தொட்டிற் பருவத்து இளங் குழவி போலச் சகல வுடம்பினுள் தும்பியும் வெதும்பியும் அழுதழுது சோர்ந்தும் மெல்லிய குரலோசையும் கம்மினேனுக, செவிலியாகிய பரையும் அம்மிக் கற்போல் அசைவின்றி என் அழுகுரலைக் காதாரக் கேட்டுக் கொண்டிருக்கின்ருள்; சூழ வுள்ள தத்துவ மகளிர் கண்டு கொம்மி கொட்டி விளையாடி மகிழ்கின்றனர்; சிறிதளவும் ஈதலுள்ளம் இல்லாத செல்வர்களைப் போல, எந்தையாகிய சிவனே, நீ வாளா விருத்தல் கூடாது. எ.று.

தொட்டிலிற் கிடக்கும் குழவி குளிரால் தும்மியும் வெப்பத்தால் வெம்பியும் அழுது சோர்ந்து குரல் கம்மிச் சோர்வது போலச் சகலாவத்தையில் ஆன்மா உடம்பினுள் இருந்து வளரும் திறம் இவ்வுவமையால் விளக்கப் படுகிறது. பால் வேண்டும் கருத்தாற் குழவி அழுது சோர்தல் போல அருள் ஞானப் பேறு குறித்துச் சகல வாழ்வில் இருத்திய பரையாகிய சத்தி ஆன்ம ஞான வளர்ச்சி குறித்துக் கருவிகளை இயக்குவதோடு நின்றொழிதலால், "செவிலி அம்மி போல் அசையாள் காதுறக் கேட்டிருக்கின்ருள்" எனக் கூறுகின்ருர். உடல், கருவி, கரணங்களை நல்கி ஆன்மா தனது சிற்சத்தி கொண்டு வாழச் செய்வது பரையாகிய சத்தியின் தொழிலாக, வாழும் ஆன்மா அழுதும் சோர்ந்தும் தெளிந்தும் ஞானப் பேற்றுக்குரிய பக்குவத்தை யடையும் என அறிக. தத்துவம் முப்பத்தாறும் ஆன்ம வாழ்வுக்குத் துணை புரிந்து ஊக்குவனவாதலால் இதனைச் "செம்மிய மடவார் கொம்மியே பாடிச் சிரித்திருக்கின்றனர்" என்று கூறுகின்ருர். செம்முதல் - மூடி மறைப்பது போல் சூழ நிரல்பட நின்றொழுகுதல் குறித்தது. "யானை மதத் தொனை செம்மிற்

றன்றே'' (இரா. எழுச்சி) எனக் கம்பர் வழங்குவது காண்க. மடவார் - மகளிராகிய தத்துவங்கள். ''தத்துவ மடவார் தங்கையில் கொடுத்தாள்'' (3546) என்றதை யறிக. ஆன்மாத் தன் கருவி கரணங்களோ யியக்கி வாழ்வாங்கு வாழ்ந்து பக்குவ மெய்துவதை நோக்கி யிருத்தல் பற்றி, ''ஈந்திடார் போல இருப்பதோ நீயும் எந்தாய்'' என இயம்புகின்றார்.

இதனால், மாயா காரியங்களாகிய தத்துவங்களினிடையே ஆன்மா கிடந்து ஞானப் பேறு வேண்டி முயலும் திறம் மொழிந்தவாறும். (7)

3550. துருவிலா வயிரத் தொட்டிலே தங்கத்
தொட்டிலே பலஇருந் திடவும்
திருவிலாப் பொத்தைத் தொட்டிலிற் செவிலி
சிறியனைக் கிடத்தினள் எந்தாய்
பிரிவிலாத் தனிமைத் தலைவநீ பெற்ற
பிள்ளைநான் எனக்கிது பெறுமோ
கருவிலாய் நீஇத் தருணம்வந் திதனைக்
கண்டிடில் சகிக்குமோ நினக்கே.

உரை : குற்றமில்லாத வயிரத் தொட்டில்களும் பொற் றொட்டில்களும் மிகப் பல இருக்கவும், பொற்பில்லாத துவாரம் நிறைந்த தொட்டிலாகிய உடம்பினில் என்னைக் கிடத்தி விட்டாள்; நீங்குதலில்லாத தனித் தலைவனுகிய நீ அருளிய மகனுகிய எனக்கு இது பொருந்தா தன்றோ? தோற்றக் கேடில்லாத நீ காலம் பார்த்து வந்து எனது இந்நிலையைக் காண்பாயேல் உனது திருவுள்ளம் பொறுக்காது. காண். எ.று.

துரு - இரும்பு வெள்ளி முதலிய தாதுப் பொருள்களைப் பற்றிக் கெடுக்கும் குற்றப் பொருள். வயிரம், பொன் முதலிய உயரிய பொருள்களைத் துருப்பற்றுவ தில்லையாதலால், ''துருவிலா வயிரத் தொட்டில்'' எனக் கூறுகின்றார். தேவர்க்கட்குப் பொன் னுடம்பும், முனிவர்கட்கு வயிர வுடம்பும், மக்கட்கு என்பு தோல் போர்த்த வுடம்பும் அமைக்கப்பட்டிருப்பது பற்றி, ''வயிரத் தொட்டிலே தங்கத் தொட்டிலே பல இருந்திட வும் திருவிலாப் பொத்தைத் தொட்டிலிற் செவிலி சிறியனைக் கிடத்தினள்'' என்று செப்புகின்றார். ஒன்பது பெருந் துவாரங்களையும் மெய்ம் முழுதும் எண்ணிறந்த நுண்ணிய துவாரங்களையும் கொண்டிருத்தலால், மக்களுடம்பைப் ''பொத்தைத் தொட்டில்'' எனப் புகல்கின்றார். மாயையாகிய பரிக்கிரக சத்தியின் காரியமாகிய உடம்புகள் உயிர் வகை யிருந்து வாழ்தற் கமைந்தவையாகலின், உயிர்க்கு உடம்பு தந்தோம்பும் சிவசத்தியை, ''செவிலி சிறியனைக் கிடத்தினள் எந்தாய்'' என்று இயம்புகின்றார். உடம்பின்றி வாழ மாட்டாத சிறுமை நோக்கி ஆன்மாவாகிய தன்னை, ''சிறியன்'' என்று குறிக்கின்றார். எல்லாப் பொருளினும் கலந்திருப்பினும் தன்னைப் பிறிதி யாதும் கலவாத தனிப் பரம்பொருளாதலால் சிவத்தைப் ''பிரிவிலாத் தனிமைத் தலைவ'' என்று போற்றுகின்றார். சைதன்னியமாம் வகையில் மகனும் முறைமை யுடைமை விளங்க, ''பிள்ளை நான்'' என்றும், தனித் தலைவனுகிய உனது பெருமைக்கும் மகனுகிய எனது தகுதிக்கும் இப் பொத்தைத் தொட்டில் பொருந்தாது எனப் புகல்வாராய்,

எனக்கு இது பெறுமோ" என்று பேசுகின்றார். தோற்ற முடையன கெடும் தன்மைய என்னும் கருத்துப் பற்றி, "சருவிலாய்" எனக் கூறுகின்றார். அருளுருவினளாகிய நீ கண்ணிற் காணின் எனது நிலை கண்டு வருந்துவாய் என்பாராய், "கண்டிடில் சகிக்குமோ நினக்கே" என்று முறையிடுகின்றார். சகித்தல் - தாங்குதல்.

இதனால் சைதன்யப் பொருளாகிய தன்னை அசேதனமாய்த் துவாரம் பல வுடையதாகிய உடம்பிற் பொருத்தியது நேரிதன்று என முறையிட்டவாறும். (8)

3551. காய்ந்திடு மனத்தாள் போன்றனள் சிறிதும்
கனிவிலாள் காமமா திகளாம்
பாய்ந்திடு வேடப் பயல்களால் எனக்குப்
பயம்புரி வித்தனள் பலகால்
தேய்ந்திடு மதிஎன் றெண்ணினுள் குறையாத்
திருமதி எனநினைந் தறியாள்
சாய்ந்தஇச் செவிலி கையிலே என்னைத்
தந்தது சாலும்எந் தாயே.

உரை : எந்தையாகிய சிவபெருமானே, பரை யென்னும் சத்தியாகிய செவிலி என்னை வெறுத்த மனமுடையவள் போலச் சிறிதும் இரக்கப் பண்பின்றிக் காமம் வெகுளி முதலிய குற்றங்களாகிய பிற பொருள்களின் மேற் பாய்ந்து பற்றும் வேட்டுவர்களால் பன்முறையும் எனக்கு அச்சமே எய்துவித்தாள்; என் ஆன்ம வறிவைத் தேய்ந்து கெடும் இயல்பின தென எண்ணினளே யன்றி, தேயாது வளர்ந்து சிறக்கும் செல்வ ஞானம் எனச் சிந்தித்தாளில்லை; சோர்வுடைய செவிலி பால் என்னைச் சேர விட்டது போதும்; இனி என்னை எடுத்து ஆண்டருள்க. எ.று.

காய்தல் - வெறுத்தல். பரையாகிய சத்தி நற்சிந்தை யுடையவளாகத் திகழினும் என்பால் வேறுபட் டொழுகினள் என்பாராய், "காய்ந்திடு மனத்தாள் போன்றவள்" என்றும், இரக்கமின்றி வருத்தினள் என்பார், "சிறிதும் கனிவிலள்" என்றும் தெரிவிக்கின்றார். கனிவு - இரக்கப் பண்பால் மனம் குழைதல். காமமாதிகள் - காமம், வெகுளி, உலோபம், மோகம், மதம், மாற்சரியம் எனப்படும் அறுவகைக் குற்றங்கள். வேட்ட பொருள் மேல் தடை நோக்காது வீழ்ந்து பற்றுதல் வேட்டுவர் இயல்பாதலின், "பாய்ந்திடு வேட்டைப் பயல்கள்" என இகழ்தற்கண் வந்தது. பயல் - பைதலைச் செய்பவர். பைதல் - துன்பம். இது பயல் என மருவிற்று. பயம் - அச்சத்தால் விளையும் குற்றம். தேய்மதி - சிறுகிக் கெடும் அறிவு. ஆன்மா, அறிவுருவினதாய், நாளும் சிறந்து மேம்படும் இயல்பினதாதலால், "தேய்ந்திடு மதியென் றெண்ணினு குறையாத் திருமதி என நினைந் தறியாள்" எனக் கூறுகின்றார். இதுகாறும் கூறியவாற்றால் பரையாகிய செவிலி நேர்மை யில்லாதவள் எனப் புலப்படுத்தினமை பற்றி, "சாய்ந்த இச் செவிலி" என்கின்றாராம்.

இதனால், செவிலியாகிய பரை யென்னும் சத்தியின் நேர்மை யில்லாமை குறித்தவாறும். (9)

3552. ஞானஆ னந்த வல்லியாம் பிரியா
நாயகி யுடன்எழுந் தருளி
ஈனம்ஆர் இடர்நீத் தெடுத்தெனை அணைத்தே
இன்அமு தளித்தையும் அருத்தி
ஊனம்ஒன் றில்லா தோங்குமெய்த் தலத்தில்
உறப்புரிந் தெனைப்பிரியாமல்
வானமும் புவியும் மதிக்கவாழ்ந் தருள்க
மாமணி மன்றில்எந் தாயே.

உரை : பெரிய மணிகள் இழைத்த தில்லையம்பலத்தில் எழுந் தருளும் சிவபெருமானே, இன்ப ஞானவல்லியாகிய பிரியா மடந்தை எனப்படும் உமாதேவியுடன் எழுந்தருளிக் கீழ்மை விளைவிக்கும் இடர் களைப் போக்கி என்னையும் தன்பால் சேர்த்து, இனிதாகிய ஞான வமுதத்தை முழுதும் யான் உண்பித்துக் குற்றமின்றியுயர்ந்தோங்கும் மெய்ம்மை யின்ப நிலைபில் எனை இருக்கச் செய்து என்னையும் பிரியாமல் விண்ணவரும் மண்ணவரும் நன்கு விபக்க வாழ்க. எ.று.

செம்மை, நீலம், பச்சை என வரும் பன்னிற மணிகள் வைத்து இழைக்கப் பெற்ற செல்வ ஞான சபையாதலால், தில்லைப் பொன்னம் பலம் "மாமணி மன்று" எனப்படுகின்றது. சிவஞானத்தால் விளையும் இன்பமே யுருவாகியவளாதலால், உமாதேவியை "ஞான வானந்த வல்லி" எனப் புகழ்கின்றார். வல்லி - பூங்கொடி; பூங்கொடி போல்வது பற்றி, "வல்லி" எனக் கூறுகின்றார். தனது திருமேனியில் ஒரு கூறாக வுடையனுதலால், உமாதேவி "பிரியா நாயகி" எனப்படுகின்றாள். எய்தும் இடர்கள் பலவும் அறிவைச் சுருக்கிக் கீழ்மை யுறுவிப்பன வாதலால், "ஈனமார் இடர்" என இயம்புகின்றார். இன்னமுது - சிவ ஞானம். அமுது போல் இன்பம் செய்தலின், ஞானம் அமுது எனக் குறிக்கப்படுகிறது. ஊனம் - குற்றம். மெய்த் தலம் - சிவபோகத்தை நுகருமிடம். சிவபோக மெய்த்தலத்தும், சிவனையின்றிப் போக நுகர்ச்சி எய்தாமையால், "எனைப் பிரியாமல்" என வேண்டுகின்றார்.

இதனால், வள்ளற் பெருமான் மாயையின் நீக்கிச் சிவஞானமாகிய அமுதூட்டிச் சிவபோக நிலையத்தில் தம்மை யிருத்திப் பிரியா நாயகி யுடன் தம்மை விட்டு நீங்காது எழுந்தருள்க என வேண்டிக் கொண்டவாறும். (10)

திருச்சிற்றம்பலம்

15. அபயத் திறன்

அஃதாவது, அபயம் வேண்டுதற் குரிய தீய குணஞ் செயல்களால் விளையும் தீமைகளை எடுத்தோதி அஞ்ச வேண்டா என அபயம் அருளுமாறு முறையிடுவது. அபயமாவது செய்த குற்றங்கட்கு என்ன தீமை விளையுமோ எனப் பயந்து வருந்துகிற பொழுது பயப்பட வேண்டா என அருள்வது; அஞ்சா நிலையினைத் தருவது என்றுமாம்.

இதன்கண், வடலூர் வள்ளல் தம் வாட்ட மெலாம் தவிர்த்து அற்றமும் மறைக்கும் அறிவலாது ஓடி யாடிய சிறுபருவத்தே தம்மை ஆட்கொண் டருளிய இறைவன், தமக்கு "ஊன் பெறும் உயிரும், உணர்ச்சியும், அன்பும், ஊக்கமும், உண்மையும், தம்மைத் தாம் பெறு தாயும், தந்தையும், குருவும், தனிப் பெருந் தெய்வமும், தவமும், வான் பெறு பொருளும் வாழ்வும், நற்றுணையும், மக்களும், மனைவியும், உறவும், தாம் பெறும் பண்பும் எல்லாமாக இருக்கிறான்" என்றும், தாம் சமய வாழ்க்கையிலாவது வேறு பொய்ந்நெறி ஒழுக்கத்திலாவது தொடர்புற்றதில்லை என்றும், தமக்குத் துயரம் வந்தெய்திய போதும் இறைவனைத் தவிர்த்து வேறு யாரையும் கனவிலும் கருதியதில்லை என்றும், "புண்படா வுடம்பும் புரைபடா மனமும் பொய்படா ஒழுக்கமும் பொருந்திக் கண் படாது இரவும் பகலும் இறைவனையே கருத்தில் வைத்து ஏத்துதற்கு இசைந்தார்" என்றும், தம் வடிவமும், வண்ணமும், உயிரும், தேட்டமும் இறைவன் எடுத்துக் கொண்டு அவனுடைய கருணைத் தேகமும், உருவும், மெய்ச் சிவமும், ஈட்டமும், எல்லாம் வல்ல அவன் அருட் பேரின்பமும், அன்பும், மெய்ஞ்ஞான நாட்டமும் கொடுத்துக் காப்பது அவன் கடன் என்றும், அருள் விருப்பமின்மை, பொய்ம்மை, உலகியல் சார்பு, மண் பெண் பொன் மயக்கம், கொலை புலை இறை எண்ணம் இல்லாமை, வேற்று வினை, கள்ளம், கள்ளருந்தல் ஆகிய இவை யெலாம் அந்நாள் உடையரோ, இலனே; இந்த நாள் இறைவன் அருளால் அந்நவை யெலாம் தளர்ந்து தூயனாய் நின்று இறைவனையே நம்பியிருக்கும் தம்மைக் கைவிடக் கூடாது என்றும், பிறவும் கூறுகின்றார். இது பாலகிருஷ்ண பிள்ளையவர்களின் தொகுப்புரை.

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3553. ஆடக மணிப்பொற் குன்றமே என்னை
ஆண்டுகொண் டருளிய பொருளே
வீடகத் தேற்றும் விளக்கமே விளக்கின்
மெய்யொளிக் குள்ளொளி வியப்பே
வாடகச் சிறியேன் வாட்டங்கள் எல்லாம்
தவிர்த்தருள் வழங்கிய மன்றில்
நாடகக் கருணை நாதனே உன்னை
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : ஆடகப் பொன்னின் நிறமும் ஒளியுமுடைய அழகிய குன்று போன்ற சிவபெருமானே, எளியனுகிய என்னை ஆண்டருளுகின்ற பெருமானே, வீடுகளில் ஏற்றப்படுகின்ற விளக்குப் போல்பவனே, விளக்கின்கண் உருவாய் விளங்கும் ஒளிக்கு உள்ளொளியாய்த் திகழும் வியத்தகு ஒளியே; வருந்துகின்ற மனத்தை யுடைய சிறுமை யுடைய வனுகிய என் வருத்த மெல்லாம் போக்கி அருளறிவு தந்து சிறக்கும் தில்லையம்பலத்தில் ஞான நாடகம் புரியும் கருணை யுருவாகிய தலைவனே, உன்னையே விரும்புகின்றேனுதலால் என்னை நீ கைவிடலாகாது. எ.று.

ஆடகப் பொன் மணிக் குன்றமே என இயைத்துக் கொள்க ஆடகம் - பொன் வகை நான்கனுள் ஒன்று. மாற்றுயர்ந்த பொன்னின் நிறமும் ஒளியுமுடைய திருமேனியை யுடையனுதல் பற்றிச் சிவனை "ஆடகப் பொற் குன்றமே" எனப் புகழ்கின்ருர். மணி - அழகு. அக்குமணி யணிந்திருப்பது விளங்க, "மணிப் பொற் குன்றமே" என்கின்ருர் எனினும் பொருந்தும். கேவலத்திற் செயலற்றுக் கிடந்த ஆன்மாவுக்கு உலகு உடல் கருவி காரணங்களைத் தந்து வாழ்வித்தமை நினைந்து, "என்னை ஆண்டு கொண்டருளிய பொருளே" என வுரைக்கின்ருர். பொருள் - பரம்பொருள். விளக்கில் திரியின்கண் நின்றெரியும் ஒளியை "மெய்யொளி" என்றும், அதன் உள்ளொளியாய் நீலமும் செம்மையு முடைய நிறம் கொண் டொளிர்வதை "உள்ளொளி" என்றும், நுணுகி நோக்குவோர்க்கு வியப்பளித்தலின், "வியப்பே" என்றும் விளம்பு கின்ருர். வருத்தம் மிக்கு எண்ணத்தாற் சுருங்கிய மனமுடைமை பற்றி, "வாடகச் சிறியேன்" எனக் கூறுகின்ருர். வருத்த மிகுதி புலப்பட, "வாட்டங்கள்" என்று குறிக்கின்ருர். கண்டு பணிந்து காதலித் தேத்துவோர் கவலை யகன்று தெளிந்த அறிவு பெறுதலால், "வாட்டங் கள் தவிர்த்து அருள் வழங்கிய மன்றிற் கருணை நாதனே" எனப் பரவு கின்ருர். நம்புதல் - விரும்புதல். "நம்புவார்க் கன்பர் போலும்" (நாகை) என நாவுக்கரசர் நவில்வது காண்க.

இதனுல் நம்பும் தம்மைக் கைவிடல் வேண்டா என முறை யிட்டவாரும். (1)

3554. வட்டவான் சுடரே வளர்ஒளி விளக்கே
வயங்குசிற் சோதியே அடியேன்
இட்டமே இட்டத் தியைந்துளே கலந்த
இன்பமே என்பெரும் பொருளே
கட்டமே தவிர்த்திங் கென்னைவாழ் வித்த
கடவுளே கனகமன் றகத்தே
நட்டமே புரியும் பேரருள் அரசே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : வட்ட உருவினவாய் வானத்தே விளங்குகின்ற சுடர் களாகியவனே, மேன் மேலும் ஒளி மிகும் விளக்குப் போல்பவனே, விளங்குகின்ற ஞான வொளியே, அடியேனுடைய விருப்பமே, அவ் விருப்பத்துள் கலந்து இயைந்திருக்கும் இன்பமே எனக்குப் பெரிய பொருளாகியவனே, துன்பங்களை நீக்கி இவ்வுலகில் என்னை வாழ்வித்த

கடவுளே, பொற் சபையின்கண் திருக்கூத்தாடும் பெரிய அருளரசே, உன்னையே நம்பி யுள்ளேனுதலால், என்னைக் கைவிடல் வேண்டாம். எ.று.

வானத்தின்கண் தோன்றுகின்ற ஞாயிறு முதலிய கோளும், விண்மீன்களும் பிறவும் வட்டமாய் ஒளிர்தலால் அவற்றின் உள்ளீடாக இருந்து ஒளிரச் செய்யும் சிவ பரம் பொருளை, "வட்ட வான்சுடரே" எனப் பாராட்டுகின்றார். நின்றுங்கு நின்று ஒளி செய்யும் உலகியல் ஒளிப் பொருள்களைப் போலல்லாமல் மேன் மேலும் பெருகுகின்ற ஒளி செய்யும் விளக்குப் போல்பவன் என்றற்கு "வளர் ஒளி விளக்கே" என உரைக்கின்றார். பிற சான்றோரும் "ஒளி வளர் விளக்கே" (இசைப்) என உரைப்பது காண்க. ஞாயிறு திங்கள் முதலிய ஒளிப் பொருள்களின் ஒளியின் வேறாய் ஞானம் வழங்குதல் பற்றிச் சிவத்தின் ஒளியை, "வயங்கு சிற்சோதி" எனத் தெரிவிக்கின்றார். அடிமையாகிய தம்மால் பெரிதும் விரும்பப் படுவது தோன்ற, சிவனை "அடியேன் இட்டமே" என்றும், விரும்பிய பொருளை விரும்பியாங்கு நுகருமிடத்து இன்பம் சுரத்தலின், "இட்டத்து இயைந்துளே கலந்த இன்பமே" எனச் சிவ பரம் பொருளைச் சிறப்பிக்கின்றார். பரம்பொருளாதலால் "என் பெரும் பொருளே" என இயம்புகின்றார். பெரும் பொருள் - பிரமப் பொருளுமாம். கட்டம் - கஷ்டம் என்ற வடசொல்லின் திரிபு; துன்பம் என்பது பொருள். சிவநெறிக்கண் தாம் அச்சிவத்தின் திருவருளால் இனிது வாழ்தல் பற்றி, "இங்கு என்னை வாழ்வித்த கடவுளே" என வுரைக்கின்றார். கனகமன்று - பொற்சபை. நட்டம் - திருக்கூத்து. திருவருட் கூத்தை யாடுகின்ற கூத்தப் பிரான் எனச் சான்றோர் போற்றித் துதித்தலை நோக்கி "நட்டமே புரியும் பேரருள் அரசே" என்று போற்றுகின்றார்.

இதனால், தம்மைக் கைவிடாது காத்தருளுமாறு வள்ளற் பெருமான் இறைவனிடம் வேண்டியவாறும். (2)

3555. புல்லவா மனத்தேன் என்னினும் சமயம்
புகுதவா பொய்ந்நெறி ஒழுக்கம்
சொல்லவா பிறரைத் துதிக்கவா சிறிதோர்
சொப்பனத் தாயினும் நினையேன்
கல்லவா மனத்தோர் உறவையுங் கருதேன்
கனகமா மன்றிலே நடிக்கும்
நல்லவா எல்லாம் வல்லவா உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : அவா நிறைந்த மனத்தை யுடையவனையினும் வேற்றுச் சமயங்களில் புகவோ பொய்யான நெறிகளை ஒழுக்கமாகச் சொல்லவோ பிற தெய்வங்களைத் துதிக்கவோ ஒருசிறிதும் ஒருகனவிலும் நான நினைத்ததில்லை; கற் போன்ற மனத்தை யுடையவரது தொடர்பையும் எண்ணியதில்லை; பொற் சபையில் திருக்கூத்து இயற்றும் நல்லவனும் எல்லாம் வல்லவனுமாகிய உன்னையே நம்பி யுரைக்கின்றேனுதலால என்னைக் கைவிடலாகாது. எ.று.

அவா - புல்லிய மனத்தை யுடையவன் என்பது "புல்லவா மனத்தேன்" என்று வந்தது. புல்லுதல் - பொருந்துதல். புல்லவா மனத்தேன் என்பதற்குப் புன்மை பயக்கும் அவாக்களால் நிறைந்த மனத்தை யுடையவன் என்று பொருள் கூறுவதும் உண்டு. சைவ சமயத்துள் நின்று பேசுகின்றாராதலால் ஈண்டுச் சமயம் என்றது வேற்றுச் சமயமாயிற்று. உலகியலில் பலர் பலவேறு பொய் ஒழுக்கங்களைக் கற்பித்து மக்கள் பலரைத் தம் வயப்படுத்திச் செல்லுதலால், "பொய்ந் நெறி ஒழுக்கம் சொல்லவா" என்று சொல்லுகின்றார். பிறரைத் துதிக்கவா என்றவிடத்து, பிறர் என்றது சிவனை ஒழிந்த பிற தெய்வங்களை. "உள்ளேன் பிற தெய்வங்கள் உன்னை யல்லாது எங்கள் உத்தமனே" (சதகம்) என்று திருவாதவூரர் மொழிவது காண்க. சொப்பனம் - கனவு; கல்லவா மனம் - கல்லொப்பக் கடினம் உடைய மனம். இரக்கமில்லாத பண்பினராதலால், "கல்லவா மனத்தோர் உறவைக் கருதேன்" என வுரைக்கின்றார். பொற் சபையில் நடைபெறும் சிவ நடனம் ஆன்மாக்கள் உய்தி பெறும் பொருட்டு நிகழ்வதாதலால், "கனக மாமன்றிலே நடிக்கும் நல்லவா" எனவும், ஆன்மாக்களை அணுதியே பிணித்து வருத்தும் மலத் தொடர்பை நீக்குதல் பற்றி, "எல்லாம் வல்லவா" என இயம்புகின்றார். அவா கொண்டு தவறு செய்வதைக் கனவிலும் நினையேனுதலின், "நல்லவரும் வல்லவரு மாகிய உன்னை நம்பி வாழ்கின்றேன்" என வற்புறுத்துகின்றார்.

இதனால், நம்பி வாழும் தன்னைக் கைவிட லாகாது என இறைவனை வேண்டியவாறும். (3)

3556. புண்படா உடம்பும் புரைபடா மனமும்
பொய்படா ஒழுக்கமும் பொருந்திக்
கண்படா திரவும் பகலும்நின் தனையே
கருக்தில்வைத் தேத்துதற் கிசைந்தேன்
உண்பனே எனினும் உடுப்பனே எனினும்
உலகரை நம்பிலேன் எனது
நண்பனே நலஞ்சார் பண்பனே உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : புண் உண்டாகாத வுடம்பும், குற்றப்படாத மனமும், பொய் யில்லாத ஒழுக்கமும் மேற்கொண்டு கண்ணுறக்க மின்றி இரவும் பகலும் உன்னையே நினைவிற் கொண்டு வழிபடுவதற்கு ஒருப்பட்டு இருக் கின்றேன்; உண்பன உண்ணுமிடத்தும் உடுப்பன உடுக்குமிடத்தும் உலக மக்களை நான் நம்புவதில்லை; எனக்கு நண்பனும் நலம் செய்யும் பண் புடைய தோழனுமாகிய உன்னையே நம்பி வாழ்கின்றேனுதலால் என்னைக் கைவிடுதல் கூடாது. எ.று.

நோய் வகையாலும் பிற செயற்கை வகையாலும் எனது உடல் புண் பட்டதில்லை என்பதற்கு, "புண்படா வுடம்பு" எனப் புகல்கின்றார். காம, வெகுளி மயக்கங்களாலும் குற்ற நினைவுகளாலும் அழுக்குறுதது என் மனம் என்பார், "புரைபடா மனம்" என்று சொல்லுகின்றார். தீய வொழுக்கம் - பொய்படா ஒழுக்கம் எனப்படுகிறது. கண் படுதல் - உறங்குதல். கருத்தில் வைத்து ஏற்றுதல் - மனத்தின்கண் இடையற

வின்றி வழிபடுதல். உண்பன உண்டற்கும் உடுப்பன உடுத்தற்கும் உலகில் பிறரை நம்பியே வாழ்தல் வேண்டு மென்னும் நான் அது செய்கிலேன் என்பாராய், "உண்பனே யெனினும் உடுப்பனே யெனினும் உலகரை நம்பிலேன்" என நவில்கின்றார். நண்பன் - அருகில் இருப்பவன். தோழன், நல்ல பண்புடையார் அனைவரும் தோழராதற்கு உரியராயினும் ஞான நலம் சான்றது பற்றிச் சிவபெருமானை, "நலஞ்சார் பண்பனே" எனப் புகழ்கின்றார்.

இதனால், உலகத்தவரை நம்பாது சிவனையே நம்புவதால் தன்னைக் கைவிடலாகாது என முறையிட்டவாறும். (4)

3557. புண்ணிலே புகுந்த கோல்எனத் துயரம்
புகுந்தெனைக் கலக்கிய போதும்
கண்ணிலே எனது கருத்திலே கலந்த
கருத்தனே நின்றனை அல்லால்
மண்ணிலே வயங்கும் வானிலே பிறரை
மதித்திலேன் மதிக்கின்றார் தமையும்
நண்ணிலேன் வேறென் றெண்ணிலேன் உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : கண் வழி நுழைந்து என் கருத்தில் கலந்து கொண்டிருக்கின்ற தலைவனே! உடம்பில் உண்டாகிய புண்ணில் நுழைந்த நாராசம் போல் என்னுள்ளத்தில் துயரம் புகுந்து நோய் செய்த போதும் உன்னைத் தவிர மண்ணிலும் விண்ணிலும் விளக்கமுறுகின்ற மக்களையோ தேவர்களையோ பிறரையோ நினைப்ப தில்லேன்; அவர்களைப் பொருளாக மதிக்கின்றவர்களையும் நான் நெருங்குவதில்லை; வேறு யாதனையும் எண்ணமால் உன்னையே நம்பி யுள்ளேன், ஆதலால் என்னைக் கைவிடலாகாது. எ.று.

சிவபெருமானுடைய உருவத் திருமேனியைக் கண்ணிற் கண்டு கருத்தில் இருத்தி நினைந்து நினைந்து வழிபடுபவராதலால், "கண்ணிலே எனது கருத்திலே கலந்த கருத்தனே" என்று கூறுகின்றார். உடம்பில் உண்டாகிய புண்ணில் யாது படினும் துன்பம் எய்துமாயினும் அதன் கண் கூரிய அம்போ வேலோ நுழையுமாயின் உண்டாகும் துன்பத்திற்கு எல்லையில்லை; அத்தகைய துன்பம் உண்டாகுமாயின் நினைவு முழுதும் அதனுட் கலந்து துன்ப மயமாகுமாதலின், "புண்ணிலே புகுந்த கோல் எனத் துயரம் புகுந்தெனைக் கலக்கிய போதும்" என்று உரைக்கின்றார். துயரம் மிக்க வழி அறிவு செயலற்றுப் போகுமாயினும், எனது அறிவு அங்ஙனம் அறைபோகுவ தன்றென விளம்புவாராய், "துயரம் புகுந்தெனைக் கலக்கிய போதும் நின்றனை யல்லால் பிறரை மதிக்கிலேன்" என்றும், மதித்து ஒழுகுபவர்களையும் பொருளாகக் கருதவில்லை யென்றற்கு, "மதிக்கின்றார் தமையும் நண்ணிலேன்" என்றும், மதிப்பதால் வரும் நலத்தையோ, மதிக்காமல் வரும் கேட்டையோ நான் எண்ணுவதில்லை என்றற்கு, "வேறென் றெண்ணிலேன்" என்று விளம்புகின்றார். "மண்ணிலே வயங்கும் வானிலே பிறரை" என்பதை மண்ணிலே வயங்கும் பிறரை, வானிலே வயங்கும் பிறரை என மாறி

இயைத்துக் கொள்க. காணப்படுதலின் மண்ணிலே வயங்கும் பிறரை முதற்கண் எடுத்து மொழிகின்றார்.

இதனால் கைவிடலாகாமைக் குரிய காரணம் விளக்கியவாறும். (5)

3558. ஊன்பெறும் உயிரும் உணர்ச்சியும்அன்பும்
ஊக்கமும் உண்மையும் என்னைத்
தான்பெறு தாயும் தந்தையும் குருவும்
தனிப்பெருந் தெய்வமுந் தவமும்
வான்பெறு பொருளும் வாழ்வும்நற் றுணையும்
மக்களும் மனைவியும் உறவும்
நான்பெறு நண்பும் யாவும்நீ என்றே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : என் உடம்பிடத்தே இடம் பெறும் என்னுயிரும் உணர்வும், என்னுள்ளத்து அன்பும் ஊக்கமும் உண்மைத் தன்மையும், என்னைப் பெற்ற தாயும் தந்தையும் குருவும், ஒப்பற்ற பெரிய தெய்வமும், செய்யத் தக்க தவமும், பெருமை தரும் செல்வமும் வாழ்வும், நல்ல துணைவரும் மக்களும் மனைவியும் உறவினரும், நான் பெறுகின்ற நண்பர்களும் எல்லாம் நீ என்றே நம்பி யுள்ளேனாதலால் என்னைக் கைவிட வேண்டா. எ.று.

உடம்பின் வேருகக் காணப்படுவ தன்மையின், உயிரை "ஊன் பெறும் உயிர்" எனவும், உயிருண்மை அதன் உடம்பிடத்து நிகழும் உணர்வால் காணப்படுதலின், "உணர்ச்சியும்" எனவும் சேர்த்துக் கூறுகின்றார். அன்பு - தொடர்பு உடையாரிடத்து உண்டாகும் பற்று; காதலுமாம். ஊக்கம் - உள்ளத்தின் எழுச்சி. உண்மை - உள்ளதன் உண்மையும் இல்லதன் இன்மையும் தெளிய உணரும் உண்மை யுணர்வு. தாயாகவும் தந்தையாகவும் குருவாகவும் நன்னெறிப் படுத்துதலின், "தனிப் பெருந் தெய்வம்" எனச் சிறப்பிக்கின்றார். தவம் - உற்ற நோய் பொறுத்தலும் பிற உயிர்கட்கு உறுகண் செய்யாமையுமாம். வான் - பெருமை. உலகியலில் ஒருவனுக்குச் சிறப்பும் பெருமையும் தருவது செல்வமாதலால், அதனை "வான் பெறு பொருள்" என வழுத்துகின்றார். நற்றுணை - நல்ஞான நல்லொழுக்கங்களைத் தந்து ஓம்பும் துணைவன்.

இதனால், உயிர் உணர்ச்சி முதலாக உறவும் நட்பும் ஈறுகக் கூறிய வனைத்தும் சிவமே என நம்பினமை எடுத்தோதித் தம்மைக் கைவிடாது அருள வேண்டியவாறும். (6)

3559. வாட்டமும் துயரும் அச்சமும் தவிர்த்தென்
வடிவமும் வண்ணமும் உயிரும்
தேட்டமும் நீயே கொண்டுநின் கருணைத்
தேகமும் உருவும்மெய்ச் சிவமும்

ஈட்டமும் எல்லாம் வல்லநின் அருட்பேர்
இன்பமும் அன்பும்மெய்ஞ் ஞான
நாட்டமும் கொடுத்துக் காப்பதுன் கடன்நான்
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : என் வருத்தங்களையும் துயரத்தையும் அச்சத்தையும் போக்கி என் வடிவத்தையும் வண்ணத்தையும் உயிரையும் நான் தேடி வைத்துள்ள வினைப் பயன்களையும் நீ கொண்டு நின்னுடைய அருட்டிரு மேனியையும், உருவத்தையும், மெய்ம்மைச் சிவமாம் தன்மையையும், நினது அருட்பெருக்கையும், எல்லாம் வல்ல நின்னுடைய திருவருட் பேரின்பத்தையும், மெய்யன்பையும், மெய்ம்மை ஞானக்காட்சியையும் எளியேனுக்குத் தந்து உன்னையே நம்பினேன் ஆகையால், என்னைக் காப்பதும் உனது கடமையாகும்; ஆதலால், என்னைக் கைவிடலாகாது. எ.று.

வாட்டம் - துன்பத்தால் உளதாகும் உடல் மெலிவு. வடிவம் - மக்கள் வடிவம். வண்ணம் - குணஞ் செயல்கள். தேட்டம் - மனம் மொழி மெய்களால் செய்த வினைப் பயன். இறைவனுடைய திருமேனி திருவருள் மயமாதலின் அதனை, "நின் கருணைத் தேகம்" எனச் சிறப்பிக்கின்றார். மெய்ச் சிவம் - நிலைத்த சிவமாம் தன்மை. சிவம் - மங்கலம் நிறைந்த இன்பம். நலம் என்பன வனைத்தும் திரண்ட சிவபோகத்தை யுடைய வனுதலால் அவனது போகத்தை 'ஈட்டம்' என்கின்றார். அருட் பேரின்பம் - திருவருளால் உலகு உயிர்கட்கு உளதாகும் மிக்க இன்பம். மெய்ஞ்ஞான நாட்டம் - உண்மையுணர்வால் சிவானந்தத்தைப் பெறும் காட்சித் திறம். ஞான நாட்டம் எய்தினுலன்றிச் சிவஞான சிவபோகங் களைப் பெறுதல் ஆகாமையின் அதனை, மெய்ஞ்ஞான நாட்டம் என இறுதிக்கண் வைத்து வற்புறுத்துகின்றார்.

இதனால், சிவபோகம் பெறுதற்குரிய மெய்ஞ்ஞான நாட்டமும், சிவமாம் தன்மையும் அருள வேண்டுமெனச் சிவனை வேண்டியவாறும். (7)

3560. வம்பனேன் பிறர்போல் வையமும் வானும்
மற்றவும் மதித்திலேன் மதஞ்சார்
உம்பனேர் அகங்கா ரந்தவிர்ந் தெல்லா
உலகமும் வாழ்கவென் றிருந்தேன்
செம்பொனே கருணைத் தெய்வமே எல்லாம்
செயவல்ல சித்தனே சிவனே
நம்பனே ஞான நாதனே உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : செவ்விய பொன் போன்ற திருமேனியையுடையவனே; கருணையுருவாகிய தெய்வமே, எல்லாவற்றையும் செய்யவல்ல சித்தனே, சிவனே, யாவராலும் விரும்பப் படுபவனே, ஞான நாதனே, புதிய தொண்டனாகிய யான் மற்றவர்களைப் போல மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் சிறந்த வாழிடமாக எண்ணுகின்றேனில்லை; மதங் கொண்ட யானை போன்று அகங்காரத்தை ஒழித்து எல்லா உலகமும்

இனிது வாழ்க வென்று எண்ணி ஒழுகுகின்றேன் ஆதலால் உன்னையே நம்பியிருக்கும் என்னைக் கைவிடலாகாது, காண். எ.று.

சிவபிரானுடைய திருமேனி பொன்னிறம் உடையதாதலால், "செம்பொனே" எனப் புகழ்கின்றார். திருவருளே திருமேனியாகக் கொண்டு தெய்வங்களிடையே சிறந்து விளங்குதலால், "கருணைத் தெய்வமே" எனப் போற்றுகின்றார். இறைவனல் ஆகாதது யாதும் இன்மையின் "எல்லாம் வல்ல சித்தனே" என்று கூறுகின்றார். நம்பன் - விரும்பப் படுபவன். மண்ணும் விண்ணுமாகிய உலகில் வாழ்கின்ற மக்களும் தேவரும் மண்ணியல் வாழ்வையும் தெய்வ வாழ்வையும் பெருமையும் புகழும் உடையதாக எண்ணி விரும்புகின்றார்களாதலால், "பிறர் போல் வையமும் வானும் மற்றவும் மதித்திலேன்" என மொழிகின்றார். உம்பல் - யானை. மதம் கொண்ட யானை அகங்காரமே வடிவமாக யிருப்பதால் அதனையுவமம் செய்கின்றார். காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய குற்ற வகைகளில் செருக்கு எனப்படும் மதம் காரணமாக மக்கள் உள்ளத்தில் அகங்காரம் தோன்றிக் குற்றம் பல செய்விக்கும் ஆதலால், "மதஞ்சார் அகங்காரம் தவிர்த்து" என்றும், தம்மோடு வாழும் உலகத்தவர் வாழ்ந்தாலன்றித் தமக்கு வாழ்வில்லை யென்ற உண்மை விளங்க உரைத்தலால். "எல்லா உலகமும் வாழ்க வென்றிருந்தேன்" என்றும் இயம்புகின்றார்.

இதனால், தன்னைக் கைவிடலாகாமைக் குரிய காரணம் காட்டி அபயம் வேண்டியவாறும். (8)

3561. ஆயகால் இருந்தும் நடந்திட வலியில்
லாமையால் அழுங்குவார் எனஉண்
மேயகால் இருந்தும் திருவருள் உறஓர்
விருப்பிலா மையின்மிக மெலிந்தேன்
தீயகான் விலங்கைத் தூயமா னிடஞ்செய்
சித்தனே சத்திய சபைக்கு
நாயகா உயிர்க்கு நாயகா உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை: தீங்கு செய்யும் காட்டில் வாழும் விலங்குகளாகிய காட்டுப் பன்றிகளைத் தூய மக்கள் உருவில் ஆக்கிய இரக்கச் சித்தத்தை யுடையவனே; மெய்ம்மை சான்ற ஞான சபைக்குத் தலைவனே; உயிர்கட்கு எல்லாம் நாயகனே; அழகிய கால்கள் இருந்தும் நடப்பதற்கு வலி யில்லாமையால் வருந்துகின்றவர்களைப் போல உள்ளத்தில் எழுந்தருளுகின்ற நின் திருவடி யிருந்தும் திருவருள் நலம் எய்தும் விருப்பமின்மையால் நான் மிகவும் மெலிந்து ஒழிந்தேன்; ஆயினும், உன்னையே நம்பியுள்ளேனாதலால் என்னைக் கைவிடுதல் கூடாது. எ.று.

கொடிய விலங்குகளும் பிற உயிர்களும் முள்ளுடைய மரம் செடி கொடிகளும் நிறைந்து இயங்குவார்க்கு ஆற்றுத் தீமை செய்தலால், காட்டைத் "தீயகான்" என்றும், அங்கு வாழ்ந்த காட்டுப் பன்றியின் குட்டிகளை மக்கள் உருவினவாக்கிப் பாண்டி மன்னனுக்கு மந்திரிகளாக்கி மாண்புறுவித்த திருவிளையாடலை எடுத்தோதிப் புகழ்கின்றாராதலால்,

"விலங்கைத் தூய மானிடஞ்செய் சித்தனே" என்றும் பராவுகின்றார். தில்லையம்பலம் மெய்ம்மை சான்ற ஞான சபையாதல் பற்றிச் "சத்திய சபை" எனப்படுகிறது. உயிர்க்குயிராய் நின்று உணர்வு நல்கும் பெருமானுதலால், "உயிர்க்கு நாயகா" என்று கூறுகின்றார். உண்மேய கால் - நினைப்பவர் நெஞ்சினுள் நின்றருளும் திருவடி. இறைவன் திருவடி உள்ளத்தில் எழுந்தருளுவது அறிந்தும் அத்திருவடி ஞானத்தால் திருவருட் செல்வத்தைப் பெற முயலாமை நினைந்து வருந்துகின்றாராதலின், "திருவருள் உறவோர் விருப்பிலாமையின் மிக மெலிந்தேன்" எனத் தெரிவிக்கின்றார்.

இதனால் திருவருள் நலம் பெற முயலாது ஒழிந்த சிறுமை கூறி விண்ணப்பித்தவாறும். (9)

3562. அற்றமும் மறைக்கும் அறிவிலா தோடி
ஆடிய சிறுபரு வத்தே
குற்றமும் குணங்கொண் டென்னை ஆட் கொண்ட
குணப்பெருங் குன்றமே குருவே
செற்றமும் விருப்பும் தீர்த்தமெய்த் தவர்தம்
சிந்தையில் இனிக்கின்ற தேனே
நற்றக வுடைய நாதனே உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : உடம்பை ஆடையால் மறைத்தற்குரிய அறிவில்லாமல் ஓடி விளையாடிய சிறு பருவத்திலேயே என்னுடைய குற்றங்களையும் குணங்களையும் கண்டு என்னை ஆட்கொண்டு அருளிய நற்குணங்களே யுருவாகிய பெரிய மலை போன்றவனே! ஞான ஆசிரியனே; வெறுப்பும் விருப்புமாகிய உணர்வுகளைத் துறந்த மெய்த் தவத்தோருடைய மனத்தின்கண் எழுந்தருளி யின்பம் செய்கின்ற தேன் போன்றவனே; நல்ல தகுதிகள் அனைத்துமுடைய நாதனே! உன்னையே நம்பி வாழ்கின்ற னெனுதலால் என்னைக் கைவிடாது அருள்க. எ.று.

அற்றம் - குற்றம்; ஈண்டுக் குற்றமாக நினைக்கப்படும் உடலுறுப்பின் மேற்று. பிள்ளைப் பருவத்தில் அற்றம் மறைக்கும் அறிவு பிறவாமையின், "மறைக்கும் அறிவிலா தோடி ஆடிய சிறுபருவம்" என்று குறிக்கின்றார். மிக்க இளம் பருவத்தேயே தமக்கு இறையருள் உணர்வு எய்தினமை தெரிவிப்பாராய், வடலூர் வள்ளல், "சிறு பருவத்தே என்னை ஆட்கொண்ட குணப் பெருங் குன்றமே" என்று கூறுகின்றார். "குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்" இறைவன் திருவருட் செயலாதலால், "குற்றமும் குணம் கொண்டு என்னை ஆட்கொண்ட குணப் பெருங் குன்றமே" என்று கூறுகின்றார். "தொழப் படும் தேவர் தொழப்படும்" பெருந் தெய்வமாதலின் சிவனை, "பெருங் குன்றமே" எனப் போற்றுகின்றார். முக்குண மயக்கத்தால் சோர்கின்ற போது நல்லுணர்வு தந்து தெளிவிக்கும் அருள் நலத்தால் சிவனை, "குருவே" எனக் கொண்டாடுகின்றார். வேண்டுதல் வேண்டாமை யில்லாத மெய்ம்மை யுள்ளத்தால் தவம் புரிந்து ஒழுகும் சான்றோரை, "செற்றமும் விருப்பும் தீர்த்த மெய்த்தவர்" என்றும், "அவர் சிந்தையே

கோயிலாகக் கொண்டு சிந்திக்கும் தோறும் சிறந்து செந்தேன் முந்திப் பொழியும்" முறைமை விளங்க, "அவர்தம் சிந்தையில இனிக்கின்ற தேனே" என்று புகழ்கின்ருர். எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்வுயிரிடத்தும் நேர்மை பிறழுவதிலனுதலின் சிவபிரானே, "நற்றக வுடைய நாதனே" என நவில்கின்ருர்.

இதனுல், சான்ருேர் நெஞ்சில் நினேக்கும் தோறும் இன்பம் தரும் சிவனது இயல்பை எடுத்தோதி விளம்பியவாரும். (10)

3563. படம்புரி பாம்பிற் கொடியனேன் கொடிய
பாவியிற் பாவியேன் தீமைக்
கிடம்புரி மனத்தேன் இரக்கம்ஒன் றில்லேன்
என்னினும் துணேஎந்த விதத்தும்
திடம்புரி நின்பொன் அடித்துணே எனவே
சிந்தனே செய்திருக் கின்றேன்
நடம்புரி கருணே நாயகா உனேயே
நம்பினேன் கைவிடேல் எனேயே.

உரை : படம் விரிக்கும் பாம்பினும் கொடியவனுகிய யான் கொடிய பாவிகளில் பெரும் பாவி யாவேன்; தீமைக் கெல்லாம் இடமாகிய மனத்தை யுடையேன்; இரக்கம் என்பது சிறிதும் இல்லாதவனுயினும் எந்த விதத்தும் வன்மை மிக்க நினது அழகிய திருவடி யிரண்டுமே துணேயாவன என்று சிந்தித்திருக்கின்றேன்; தில்லேயம்பலத்தில் திருக்கூத் தாடுகின்ற கருணே யுருவினனுகிய நாயகனுகிய உன்னேயே நம்பி யுள்ளேனுதலால், என்னேக் கைவிட லாகாது. எ.று.

படம் விரிக்கும் பாம்பினே 'நல்ல பாம்பு' என்பர். அதன் விடம் தீண்டினுரைத் தப்பாமல் கொல்லும் கொடுமை யுடையதாகலின், "படம்புரி பாம்பிற் கொடியனேன்" எனப் பகர்கின்ருர். பாவம் மிக வுடைமை புலப்படுத்தற்கு, "கொடிய பாவியிற் பாவியேன்" எனவும், தீய நினேவுகளே நிறைந்த நெஞ்சுடையவன் எனக் குற்ற மிகுதி யுணர்த்தற்கு, "தீமைக்கு இடம்புரி மனத்தேன்" எனவும், இரக்கப் பண்பில்லாதவன் மிகக் கொடிய அரக்கனுகக் கருதப்படுதலின், "இரக்கம் ஒன்றில்லேன்" எனவும் இயம்புகின்ருர். இப்பெற்றியோர் திருவருட் பேற்றுக் குரிய ரல்ல ரென உரைப்பர். என்பால் இத்தகைய கொடுமை யனேத்தும் உள்ளன வெனினும் என் சிந்தையில் என் உயிர்க்குத் துணேயாவது நினது திருவடி ஒன்றே என்ற உணர்வு நிலே கொண்டுளது என்பாராய், வடலூர் வள்ளல், "துணே எந்த விதத்தும் திடம்புரி நின் பொன்னடித் துணே யெனவே சிந்தனே செய்திருக் கின்றேன்" என்று தெரிவிக்கின்ருர். இறைவன் திருவடி மிக்க வன்மை யுடையது என்பது பற்றி, "திடம்புரி நின் பொன்னடித் துணே" என்று சிறப்பிக்கின்ருர். பொன்னடி - அழகிய திருவடி. பல தீமைகள் என்பால் இருப்பினும் திருவடியே துணேயாவது எனச் சிந்தித்திருக்கும் எனது இயல்பு கண்டேனும் நீ அபயம் அளித்தல் வேண்டும் என்றற்கு, "உனேயே நம்பினேன் கைவிடேல் எனேயே" என்று கூறுகின்ருர்.

தில்லையம்பலத்தில் திருக்கூத்தாடும் சிவபெருமான் ஆதலின், "நடம்புரி கருணை நாயகா" எனப் போற்றுகின்றார்.

இதனால், திருவடியே துணையாவது என்ற நிலைத்த சிந்தனையைக் காரணம் காட்டித் தம்மைக் கைவிட லாகா தென வேண்டியவாறும். (11)

3564. படித்தனன் உலகப் படிப்பெலாம் மெய்ந்நூல்
படித்தவர் தங்களைப் பார்த்து
நொடித்தனன் கடிந்து நோக்கினேன் காம
நோக்கினேன் பொய்யர்தம் உறவு
பிடித்தனன் உலகில் பேதையர் மயங்கப்
பெரியரில் பெரியர்போல் பேசி
நடித்தனன் எனினும் நின்னடித் துணையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : உலகியல் நூல்கள் எல்லாம் படித்தேன்; அதனோடு நில்லாது மெய்ம்மை சான்ற ஞான நூல்களைப் படித்தவர்களைப் பார்த்து இகழ்வாகப் பேசினேன்; அன்றியும், அவர்களை விலக்கும் கருத்தால் கடுத்து நோக்கினேன்; காம விச்சை கலந்த பார்வை யுடையனாயினேன்; அன்றியும் பொய்யொழுக்கம் உடையவர்களின் உறவு கொண்டு இவ் வுலகில் பேதையராயினர் கேட்டு மயங்குமாறு மிகப் பெரியவர் போல் பேசி நடித்தேன்; என்றாலும், நின் திருவடி யிரண்டையும் விரும்பி யுறை கின்றேனாதலால் என்னைக் கைவிட லாகாது. எ.று.

உலகியற்கு வேண்டிய அரசியல் பொருளியல் முதலிய நூற் படிப்பு, உலகப் படிப்பு எனப்படுதலின், "படித்தனன் உலகப் படிப்பெலாம்" என உரைக்கின்றார். ஆகமங்கள் பயிலும் சாத்திரப் படிப்பை "மெய்ந்நூல்" என்று கூறுகின்றார். அவைகள் என்றுமுள்ள இறைவனைப் பற்றியும், உயிர்களைப் பற்றியும், உலகைப் பற்றியும், இம்மூன்றற்கு உள்ள தொடர்பு களையும், காரண காரிய முறையில் ஆராய்வனவாதலின், உலகியற்கு இன்றியமையாத பொருளறிவும் தொழிலறிவும் பிறவும் நல்காமை பற்றி, அவற்றைப் பயின்றோரைப் புறக்கணிக்கும் குறிப்புடன் நோக்கினமை தோன்ற, "மெய்ந்நூல் படித்தவர் தங்களைப் பார்த்து நொடித்தனன்" என்றும், "கடிந்து நோக்கினேன்" என்றும் கூறுகின்றார். கடிதல் - விலக்குதல்; புறக்கணித்தலுமாம். காம நோக்கு - காம விச்சையுடன் மகளிரைப் பார்த்தல். பொய்யர் - பொய் கூறுபவர்; பொய்யொழுக்க முடையவருமாம். நல்லறி வில்லாத பேதை மக்கள் எளிதில் அறிவு மயங்குவாதலால், அவர் முன்னே மிக்க பெரியோர் போலச் சொல் லாலும் தோற்றத்தாலும் ஒழுகினமை புலப்பட, "உலகில் பேதையர் மயங்கப் பெரியரிற் பெரியர் போலப் பேசி நடித்தனன்" என வுரைக் கின்றார். இவை யாவும் பெரிய குற்றச் செயல்களாயினும் இவற்றிடையே நினது திருவடியை மறவாது நம்பி யிருந்தேன் என்பாராய், "நின்னடித் துணையே நம்பினேன் கைவிடேல் எனையே" என்று கூறுகின்றார்.

இதனால், உலகப் படிப்பும் மெய்ந்நூல் படிப்பவரை யிகழும் குறிப்பும் பிற குற்றங்களும் உடையனாதல் பற்றித் தம்மை கைவிட லாகா தென வேண்டியவாறும். (12)

3565. பஞ்சுநேர் உலகப் பாட்டிலே மெலிந்த
பாவியேன் சாவியே போன
புஞ்செயே அனையேன் புழுத்தலைப் புலையேன்
பொய்யெலாம் பூரித்த வஞ்ச
நெஞ்சினேன் பாப நெறியினேன் சினத்தில்
நெடியனேன் கொடியனேன் காம
நஞ்சினேன் எனினும் அஞ்சினேன் உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : உலகியல் துன்பத்திலே பஞ்சு போல அலைந்து மெலிந்த பாவியாகிய யான், சாவியான புன்செய் நிலத்தைப் போன்றுளேன்; பேன் நிறைந்த தலையையுடைய புலையேன்; பொய்யே மிக நிறைந்த வஞ்ச நெஞ்சினையுடையவன், பாவ நெறியிலேயே ஒழுகுபவன், மாறாது நெடிது நிற்கும் சினமுடையவன், கொடியவன், காம வுணர்வாகிய விடத்தை யுடையவ னென்றாலும், உனக்கஞ்சி உன்னையே நம்பி யுள்ளேனுதலால் என்னைக் கைவிட வேண்டாம். எ.று.

உலகியல் துன்பத்தில் அகப்பட்டு வருந்தும் இயல்பை, "பஞ்சுநேர் உலகப் பாட்டிலே மெலிந்த பாவியேன்" என்று உரைக்கின்றார். ஒருவர் படும் மிக்க துன்பத்திற்குக் காற்றில் பறக்கும் பஞ்சினை யுவமம் கூறுவது மரபு. "நான் படும் பாடு சிவனே, உலகோர் பஞ்சுதான் படுமோ" (அருட்பா) என்பது காண்க. புன்செய் - புஞ்செய் என வந்தது. விதைத்தவை விளையாது கெடுதலைச் 'சாவி போதல்' என்கிறார். புழுத்தலை என்ற விடத்துப் புழு, பேன் வகைகளைக் குறிக்கிறது. பூரித்தல் - மிகுதல். தோன்றுகிற சினம் விரைந்து ஆறுவது முறையாக அஃதின்றி நெடிது நீட்டிப்பது அறமன்மையின், "சினத்தில் நெடியனேன்" எனக் கூறுகின்றார். காம விச்சை, நஞ்சு போல் கெடுக்கும் இயல்பிற்றுதலின், "காம நஞ்சினேன்" எனத் தம்மை இழித்துரைக்கின்றார். இக்கூறிய குற்றங்கள் உடைமையை யுணர்தலால் தம்மை இறைவன் கைவிடுவானே என்று அஞ்சுமாறு புலப்பட, "அஞ்சினேன்" என இயம்புகிறார்.

இதனால், தம்பாலுள்ள குற்றங்களை நினைந்து இறைவன் தம்மைக் கைவிடுவானே என்று அஞ்சிய திறம் கூறியவாறும். (13)

3566. கயந்துளே உவட்டும் காஞ்சிரங் காயில்
கடியனேன் காமமே கலந்து
வியந்துளே மகிழும் வீணனேன் கொடிய
வெகுளியேன் வெய்யனேன் வெறியேன்
மயர்ந்துளேன் உலக வாழ்க்கையை மனையை
மக்களை ஒக்கலை மதித்தே
நயந்துளேன் எனினும் பயந்துளேன் உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : உள்ளெல்லாம் கசந்து உவட்டுகின்ற எட்டிக்காயினும் வெறுக்கத் தக்கவன்; காம நினைவு கொண்டு தன்னையே வியந்து மகிழும் வீணனுவேன்; கொடுமை செய்தற் கேதுவாகிய சினமுடையேன்;

வெம்மைப் பண்பும் வெறிச் செயலும் உடையனுவேன்; மயக்க முடையேன்; உலகியல் வாழ்வையும் மனைவி மக்களையும் உறவினரையும் நிலைத்த பொருளாக மதித்து விரும்பி யிருப்பவன் என்றாலும் நெஞ்சில் அச்ச முடையனாய் உன்னையே நம்பி யிருக்கின்றேனாதலால், என்னைக் கைவிட லாகாது. எ.று.

உடம்பின் உள்ளிட மெல்லாம் கசந்து வாய் உவட்டும் இயல்பு பற்றி, யாவராலும் விலக்கப்படுதலால், "காஞ்சிரங் காயில் கடியனேன்" என வுரைக்கின்றார். கடிதல் - விலக்குதல். காம நினைவுகளால் பலவற்றை நினைந்து மயங்கி வீண் பொழுது போக்குபவன் என்பாராய், "காமமே கலந்து வியந்துளே மகிழும் வீணனேன்" என விளம்புகின்றார். கொடிய செயல்கள் பலவற்றைச் செய்தற்குச் சினம் காரணமாதல் பற்றி, "கொடிய வெகுளியேன்" என்று கூறுகின்றார். வெய்யன் - வெம்மைப் பண்புடையவன். வெறியன் - வெறிச் செயலுடையவன். மயர்தல் - மயங்குதல். நிலையா வியல்புடையவற்றை என்றும் நிலைபெறுவன எனக் கருதி ஆசை வைத்தல் கூடாதாயினும் அதனைச் செய்பவன் என்றற்கு, "உலக வாழ்க்கையை மனையை மக்களை ஒக்கலை மதித்தே நயந்துளேன்" என்று நவில்கின்றார். இந்நினைவுகளின் வினை பயனை எண்ணி அஞ்சுகிறேன் என்பார், "பயந்துளேன்" எனப் பகருகின்றார்.

இதனால், நினைவு, சொல், செயல்களின் விளைவு எண்ணி அஞ்சுகின்றமை கூறி அபயம் வேண்டியவாறும். (14)

3567. ஓடினேன் பெரும்பே ராசையால் உலகில்
ஊர்தொறும் உண்டியே உடையே
தேடினேன் காமச் சேற்றிலே விழுந்து
தியங்கினேன் மயங்கினேன் திகைத்து
வாடினேன் சிறிய வாரியான் மகிழ்ந்தேன்
வஞ்சமே பொருளென மதித்து
நாடினேன் எனினும் பாடினேன் உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : மிக்க பேராசையால் உலகில் நாற்றிசையும் ஓடி ஊர் தொறும் உணவையும் உடையையும் விரும்பி எங்கும் தேடினேன்; காமக் களிப்பிலே விழுந்து அறிவு கலங்கினேன்; தெளிவின்றி மனம் வாடினேன்; சிறிது பொருள் வரின் அது கொண்டு மனம் மகிழ்ந்தேன்; வஞ்சம் புரிவதே தக்க தென எண்ணி அதனைச் செய்யும் திறமையை எண்ணினேன் என்றாலும் உன்னைப் பாடுதலை ஒழியேனாதலால், என்னைக் கைவிட லாகாது. எ.று.

பெரும் பேராசை - அளவு கடந்த ஆசை. ஆசை மிகுதியால் உலகில் எவ்விடத்தும் திரிந்த செயலை எடுத்துரைப்பாராய், "பெரும் பேராசையால் உலகில் ஓடினேன்" என வுரைக்கின்றார். உண்ணும் உணவுக்கும் உடுக்கும் உடைக்கும் ஊர் தோறும் இரந்தேன் என்றற்கு "ஊர்தொறும் உண்டியே உடையே தேடினேன்" என்று தெரிவிக்கின்றார். காம விச்சை மேலீட்டால் கண்ட மகளிர்பால் கருத்தைச் செலுத்தியலைந்து

வருந்திய நிலையைக் "காமச் சேற்றிலே விழுந்து தியங்கினேன்" என்றும் திகைத்து மயங்கினேன்" என்றும், இடையிடையே எய்திய மனநோயால் வருந்தினேன் என்றற்கு "வாடினேன்" என்றும் உரைக்கின்றார். "இரப்பவர் என்பெறினும் கொள்வர்" என்று சான்றோர் உரைப்பதற் கேற்ப, "சிறிய வாரியான் மகிழ்ந்தேன்" என்று கூறுகின்றார். சிறியவாரி - சிறிதளவாகிய வருவாய். வஞ்சநினைவுகட்கு ஆளாயினர் அவற்றின் வழியே செல்குவராதலால், "வஞ்சமே பொருளென மதித்து நாடினேன்" என மொழிகின்றார். இத்தனை குற்றங்கள் செய்தாலும் நான் உன் பொருள் சேர் புகழ்களை வாயாரப் பாடுதல் ஒழியேன் என்பாராய், "பாடினேன் உனையே" என்றும், "நம்பினேன்" என்றும் நவில்கின்றார்.

இதனால், செய்த குற்றங்கள் பலவற்றின் இடையே சிவனையே விரும்பி அவன் புகழ்களைப் பாடிய திறம் கூறியவாறும். (15)

3568. காட்டிலே திரியும் விலங்கினிற் கடையேன்
கைவழக் கத்தினுல் ஒடிந்த
ஓட்டிலே எனினும் ஆசைவிட் டறியேன்
உலுத்தனேன் ஒருசிறு துரும்பும்
ஏட்டிலே எழுதிக் கணக்கிட்ட கொடியேன்
எச்சிலும் உமிழ்ந்திடேன் நரக
நாட்டிலே பெரியேன் என்னினும் உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : காடுகளில் அலைகின்ற விலங்குகளிலும் கீழ்ப்பட்டவன்; கையாளுமிடத்து உடைந்த மண்ணோடு ஆயினும் அதன்பாற் கொண்ட ஆசையால் வருந்துவேன்; ஒரு சிறு துரும்பாயினும் பிறர்க்குக் கொடுக்க மனமற்றவனுவேன்; எப்பொருளாயினும் ஏட்டில் எழுதிக் கணக்கிட்டுப் பார்க்கும் கொடியவனுவேன்; வாய் எச்சிலையும் உமிழாத கடும் பற்றுள்ளம் உடையவன்; நரகத்தில் கிடந்து வருந்துகின்ற மக்களுக்குப் பெரியவனுவேன்; இத்தகைய கொடும் பாவியாயினும் உன்னையே நம்பி னேனுதலால் என்னைக் கைவிட லாகாது. எ.று.

காட்டிலே திரியும் விலங்கு என்றதனால் காடுகளில் அலையும் கொடு மை மிக்க விலங்கினம் என்பது பெறப்படும். கடையேன் - கீழ்ப்பட்டவன். கை வழக்கம் - கையாளுதல். உடைந்த ஓடுகளைப் புறத்தே எறிந்து விடுவராயினும் எனக்கு அவ்வாறு எறிவதிலும் விருப்பமில்லாத ஆசைப் பெருக்குடையேன் என்பாராய், "ஒடிந்த ஓட்டிலே எனினும் ஆசை விட்டறியேன்" என உரைக்கின்றார். உலுத்தல் - உலோபி. விலக்கத் தகுவனவற்றை விலக்காமல் எல்லாவற்றையும் சிறிதும் விடாது கணக் கிட்டு நோக்கும் கொடுஞ் செயல் உடையவன் என்றற்கு, "ஏட்டிலே எழுதிக் கணக்கிட்ட கொடியேன்" என இயம்புகின்றார். எச்சிலும் உமிழ்ந் திடேன் என்பது எச்சிற் கையால் ஈ ஓட்ட மாட்டார் என்னும் உலகு ரையை ஒட்டி நிற்கிறது. நரக நாடு - பாவம் செய்தார் கிடந்து வருந்தும் நிரயம். நரகத்தில் கிடந்து வருந்தும் பெரும் பாவிகளில் மிக்க பெரும் பாவி என்றற்கு, "நரக நாட்டிலே பெரியேன்" என நவில்கின்றார்.

இதனால், காட்டில் வாழும் விலங்குகளிலும் குணஞ்செயல்களால் கடைப் பட்டவனுயினும் உன்னையே நம்பி யிருக்கின்றேனுதலால் என்னைக் கைவிட லாகாதென வேண்டியவாரும். (16)

3569. துனித்தவெம் மடவார் பகல்வந்த போது
துறவியின் கடுகடுத் திருந்தேன்
தனித்திர வதிலே வந்தபோ தோடித்
தழுவினேன் தடமுலை விழைந்தேன்
இனித்தசொல் புகன்றேன் என்பினைக் கறித்தே
இடர்ப்பட்ட நாயென இளைத்தேன்
நனித்தவ றுடையேன் என்னினும் உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : உள்ளத்தே வெறுப்புடைய வெவ்விய மகளிர் பகற் பொழுதில் என்பால் வந்த பொழுது கடுந் துறவி போலக் கடுகடுப்புடன் இருப்பேன்; அவர்கள் இரவில் தனியாக வந்த போது ஓடி அவர்களது பெரிய மார்பை நயந்து தழுவிக் கொள்வேன்; இனிய சொற்களையே அவர்களோடு பேசுவேன்; எலும்பைக் கடித்து வாய் புண்ணுற்று வருந்தும் நாய் போலச் சோர்வுற்றேன்; இவ்வாறு தவறுகள் பல மிகவுடையேனு யினும் உன்னையே விரும்புகின்றேன் ஆதலால் என்னைக் கைவிடலாகாது எ.று.

துனித்தல் - வெறுத்தல். ஆசை நிரம்பாமையால் உளதாவது. துறவி - ஐம்புலன் ஆசைகளைத் துறந்தவர். பகலில் வந்த போது கடுகடுத் திருந்த குறைதீர்தல் பொருட்டு இரவில் தனித்து வந்த போது இனித்த சொல் புகன்றேன் என இசைக்கின்ருர். என்பு - எலும்பு. கறித்தல் - கடித்தல். தவறு நனியுடையேன் என்பது நனித்தவறு உடையேன் என வந்தது.

இதனால் காமத் தீ யொழுக்கத்தின் புன்மையைப் புகன்றவாரும். (17)

3570. தார்த்தட முலையார் நான்பல ரொடுஞ்சார்
தலத்திலே வந்தபோ தவரைப்
பார்த்திலேன் வார்த்தை பகர்ந்திலேன் தவசுப்
பாதகப் பூனைபோல் இருந்தேன்
பேர்த்துநான் தனித்த போதுபோய் வலிந்து
பேசினேன் வஞ்சரிற் பெரியேன்
நார்த்திடர் உளத்தேன் என்னினும் உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : நான் ஆண்மக்கள் பலரொடு கூடுகின்ற யிடத்திலே பொன் மாலையணிந்த பருத்த முகையையுடைய மகளிர் வருவார்களாயின் அவர்களைப் பார்ப்பதும் அவர்களோடு பேசுவதும் செய்யாமல் தவக் கோலம் கொண்ட தீங்கு செய்யும் பூனை போல் இருந்தேன்; பின்பு நான்

தனித்திருக்கும் நிலையில் நானே அவர்களிடம் சென்று வலியப்பேசினேன்; இவ்வாற்றல் வஞ்சகர்களில் பெருவஞ்சகனைப் பிறங்கினேன்; அன்பற்ற மனம் உடையேனையினும் உன்னையே நயந்துள்ளேனதலால் என்னைக் கைவிடலாகாது. எ.று.

தார் - ஈண்டுப் பொன்மாலை மேற்று. பெரிய ஆண்மக்கள் பலருடன் கூடி யிருக்குமிடத்து மகளிர்வரின் பிறர் ஐயுறுமைப்பொருட்டு அவர் களோடு தொடர்பு கொண்டிலேன் என்பாராய், "அவரைப் பார்த்திலேன் வார்த்தை பகர்ந்திலேன் தவசுப் பாதகப் பூனைபோல் இருந்தேன்" என்று உரைக்கின்றார். தவசுப் பாதகப் பூனை என்பது, உருத்திராக்கப் பூனை என்ற உலக வழக்கை ஒட்டியது. தனித்த போது உள்ளத்தில் நிலவும் காமவேட்கை நீங்காமையின் அதனால் அம்மகளிரிடத்து நயந் தடைந்து வலியப் பேசிய தீச்செயலை, "தனித்த போது போய் வலிந்து பேசினேன்" என வருந்துகின்றார். தமது செயல் வஞ்சம் பொருந்தியதா தலால் "வஞ்சரிற் பெரியேன்" எனக் கூறுகின்றார். நார்த்திடர் - ஈரமின்றி யுலர்ந்த மண் மேடு. அன்பின்றிக் கெட்ட தமது மனத்தை இதனால் குறிப்பிடுகின்றார்.

இதனால், தமது வஞ்சச் செயலின் புன்மையை எடுத்துப் புகன்ற வாறும். (18)

3571. பெண்மையே விழைந்தேன் அவர்மனம் அறியேன்
பேய்எனப் பிடித்தனன் மடவார்க்
குண்மையே புகல்வான் போன்றவர் தமைத்தொட்
டுவந்தகங் களித்தபொய் யுளத்தேன்
தண்மையே அறியேன் வெம்மையே உடையேன்
சாத்திரம் புகன்றுவாய் தடித்தேன்
நண்மையே அடையேன் என்னினும் உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : பெண்ணியல்பையே பெரிதும் விரும்புவேன்; அவர்களது மனவியல்பு அறியாது பேய் போல அவர்களைப் பற்றினேன்; அம்மகளிரி டத்து மெய்யே மொழிவது போலப் பேசி அவர்களைத் தீண்டி மகிழ்ந்து மனம் களிப்புற்ற பொய்மனத்துக் கடையவனுவேன்; குளிர்ச்சியான இயல்பு சிறிதுமின்றி வெவ்விய தன்மையையுடையவனுய் சாத்திரங்கள் பலவற்றை எடுத்தோதி வாய் பெருத்தேன்; யாரிடத்தும் நட்புக் கொள்ளு வது இல்லாதவன் என்றாலும் உன்னிடத்து மிக்க நம்பிக்கையுடையவனு தலால் என்னைக் கைவிட லாகாது. எ.று.

பெண்மை - பெண்ணிடத்தும் பெறும் இன்பம். மகளிரது விருப்பு வெறுப்பு அறியாமல் பேய் போலப் பின் தொடர்ந்தேன் என்பாராய் "அவர் மனம் அறியேன் பேய் எனப் பிடித்தனன்" என வுரைக்கின்றார், மகளிரது கூட்டம் பெறும் பொருட்டுப் பொய் பல புகன்று ஒழுகிய புன்மை யைப் புலப்படுத்தற்கு, "மடவார்க் குண்மையே புகல்வான் போன்று அவர்தமைத் தொட்டு உவந்து அகம்களித்த பொய்யுளத்தேன்" எனப் புகல்கின்றார். தண்மை - அன்பு மிகுதியால் உளதாகும் குளிர்ச்சிப் பண்பு. சாத்திரங்களையும் அவற்றின் பொருள்களையும் தங்கு தடையின்றி இடை

யருமல் எடுத்துரைக்கும் சொல்வன்மையை எடுத்துரைப்பாராய், "சாத்திரம் புகன்று வாய் தடித்தேன்" என்று சொல்லுகின்றார். நண்மை - நட்பு; பிறரை யன்பால் நெருங்கும் தன்மை எனினும் அமையும்.

இதனால், மகளிர் கூட்டம் பெறுவதும், சாத்திரம் ஓதுவதுமாகிய செயல் வகைகளால் புன்கை யுற்றமை புகன்றவாரும். (19)

3572. வன்மையில் பொருள்மேல் இச்சைஇல் லவன்போல்
வாதிபோல் வார்த்தைகள் வழங்கி
அன்மையில் பிறர்பால் உளவினுல் பொருளை
அடிக்கடி வாங்கிய கொடியேன்
இன்மையுற் றவருக் குதவிலேன் பொருளை
எனைவிடக் கொடியருக் கீந்தேன்
நன்மையுற் றறியேன் என்னினும் உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : வலி யில்லாத பொருள்களின் மேல் ஆசை யில்லாதவன் போலவும், வாதம் புரிவதில் வல்லவன் போலவும், பேச்சு வார்த்தைகளைச் சொல்லி ஆகாத வழியில் பிறரிடத்து வஞ்சனையால் அடிக்கடி பொருள் பெற்று ஒழிகின்ற கொடியவனுவேன்; அன்றியும், வறுமை யுற்றவர்க்கு ஒருசிறிதும் பொருள் உதவி செய்யாதவனுயினும் என்னை விடக் கொடுமை மிக்கவர்க்குப் பொருள் கொடுத்து உதவினேன்; நன்மை, ஒன்றும் யார்க்கும் செய்யாதவனுயினும் உன்பால் அன்பு உடையேனுதலால் என்னைக் கைவிட லாகாது. எ.று.

மிக்க வலிதாய்ப் பயனுள்ள பொருளையே யாரும் விரும்புவராதலால், "வன்மையில் பொருள் மேல் இச்சை இல்லவன் போல்" எனக் கூறுகின்றார். தாம் சொல்லுவனவற்றைக் கேட்பவர் மறுத்துரைக்காதவாறு தக்க காரணம் காட்டி யுரைக்கும் திறம் விளங்க, "வாதி போல் வார்த்தைகள் வழங்கி" எனக் கூறுகின்றார். பிறர்பால் உள்ள பொருளை நயமாகவும் வஞ்சனையாகவும் தீய நெறி மேற் கொண்டு அடிக்கடி வாங்கிக் கொள்வது அறமன்றுகலின், "அன்மையில் பிறர்பால் உளவினுல் பொருளை அடிக்கடி வாங்கிய கொடியேன்" என உரைக்கின்றார். உதவி பெறுவதற்குரிய வறியவருக்கு உதவாமல் இல்லென மறுத்த வழி ஒறுக்கும் கொடியவருக்குப் பொருளீந்த நிலையை, "இன்மை யுற் றவருக்கு உதவிலேன் பொருளை எனை விடக் கொடியருக்கு ஈந்தேன்" எனக் கூறுகின்றார். இச்செயல்களால் நலம் ஒன்றும் எய்தாமை யுணர்ந்து, "நன்மையுற் றறியேன்" என்றும், என்றுலும் உன்பால் அன்பு கொள்ளுவதில் கையொழியேன் என்பாராய், "உனையே நம்பினேன் கைவிடேல் எனையே" என்று விண்ணப்பிக்கின்றார். (20)

3573. கட்டமே அறியேன் அடுத்தவர் இடத்தே
காசிலே ஆசையில் லவன்போல்
பட்டமே காட்டிப் பணம்பறித் துழன்றேன்
பகல்எலாம் தவசிபோல் இருந்தேன்

இட்டமே இரவில் உண்டயல் புணர்ந்தே
இழுதையிற் றூங்கினேன் களித்து
நட்டமே புரிந்தேன் என்னினும் உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : பிறர் துன்பத்தை எண்ணுமல் காதில் ஆசை யில்லாதவன் போல் பெயர் தோற்றுவித்து என்பால் வந்தவரிடத்தே பணம் பெற்றுத் திரிந்தேன்; பகற் போதுகளில் பெரிய துறவி போல் இருந்து இரவில் விரும்பியதை மிக வுண்டு அயல் மகளிரோடு கூடிக் கீழ்மகன் போல் மகிழ்ச்சியுடன் தூங்கினேன்; இவ்வாறு கேடு பல புரிந்துள்ளேனெயினும் உன்னையே விரும்பி யிருக்கின்றேனெயினும் என்னைக் கைவிட லாகாது. எ.று.

கட்டம் - துன்பம். பட்டம் - நற்பெயர். தவசி - பெரிய துறவி. தவம் செய்பவனைத் தவசி என்பர். இட்டம் - விருப்பம். இரவில் நிரம்ப உண்பது காம நோயை விளைவிக்கும் என்பது பற்றி, "இரவில் உண்டயல் புணர்ந்தே களித்துத் தூங்கினேன்" என்று சொல்லுகின்றார். இழுது - மெழுகு. எளிதில் உருகி மெலிவது பற்றிக் கீழ்மக்களை, "இழுதை" என்பது நூல்வழக்கு. இழுது போன்ற உள்ளம் உடையவனை இழுதை என இகழ்வர். நட்டம் - கேடு.

இதனால், நட்டம் விளைவிக்கும் செயல்களையே செய்தேன் ஆயினும் உன்னையே நம்புகின்றேன் என்று உரைத்தவாறும். (21)

3574. காணியே கருதும் கருத்தினைப் பிறர்க்குக்
காட்டிடா தம்பெலாம் அடங்கும்
தூணியே எனச்சார்ந் திருந்தனன் சோற்றுச்
சுகத்தினுல் சோம்பினேன் உதவா
ஏணியே அனையேன் இரப்பவர்க் குமியும்
ஈந்திலேன் ஈந்தவன் எனவே
நாணிலேன் உலரத்தேன் என்னினும் உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : நில புலன்களை விரும்பும் என் ஆசையைப் பிறர்க்குக் காட்டாமல் அம்பு வகைகள் அடங்கி யுள்ள தூணி போல, கரவு பொருந்தி யிருந்தேன்; அன்றியும், சோர்வுண்டு இனிது இருக்கும் சுகம் காரணமாகச் சோம்பல் மிக்கிருந்தேன்; எதற்கும் உதவாத ஏணி போன்ற யான் யாசிப்பவர்க்கு நெல், உமி கூடக் கொடாத உள்ளம் உடையனெனையினேன்; பிறர்க்கு வேண்டுவன உதவுபவன் போல நாணமின்றி வாயால் பாடி யுறைந்தேன் என்னினும் உன்னையே நம்பினேனுதலால் என்னைக் கைவிட லாகாது. எ.று.

காணி - வயல்களில் அளந்து கொண்ட பகுதிகளில் ஒன்று. கருத்து - ஈண்டு ஆசை மேல் நின்றது. அம்பெலாம் அடங்கும் தூணி - வில் வேட்டை யாடுவோர் விலங்குகளை எய்தற்குத் தொகுத்து வைக்கும்.

கருவி. இதனை அம்பருத் தூணி என்பது வழக்கு. வாயம்பு, பிறையம்பு, கூரம்பு எனப் பலவகை உண்மையின், "அம்பெலாம்" என மொழிகின்றார். சார்ந்திருந்தனன் என்றவிடத்துச் சார்பு, கரவுள்ளத்தைக் குறிக்கின்றது. சோர்வுண்ட மயக்கத்தைச் "சோற்றுச் சுகம்" என்று கூறுகின்றார். உதவா ஏணி - முறிந்து பயன்படா தொழிந்த ஏணி. பயன்படாமை குறிக்க, "உமியும் ஈந்திலேன்" என இசைக்கின்றார். ஈயாதவனுயினும், வரையாது ஈந்தவன் எனப் பொய் கூறுதலின், "நாணிலேன் உரைத்தேன்" எனக் கூறுகின்றார்.

இதனால், மண்ணுசையும் ஈயாமையும் பிறவுமாகிய குற்ற முடைமையை எடுத்தோதித் தம்மைக் கைவிடலாகா தென்று எடுத்தோதியவாறும். (22)

3575. அடுத்தவர் மயங்கி மதித்திட நினைத்தேன்
அடிக்கடி பொய்களே புனைந்தே
எடுத்தெடுத் துரைத்தேன் எனக்கெதிர் இலைஎன்
றிகழ்ந்தனன் அகங்கரித் திருந்தேன்
கொடுத்தவர் தமையே மிகவுப சரித்தேன்
கொடாதவர் தமைஇகழ்ந் துரைத்தேன்
நடுத்தய வறியேன் என்னினும் உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை: என்னை யடைந்தவர்கள் அறிவு மயங்கி என்னைப் பெரியவனுக மதிக்குமாறு எண்ணி அடிக்கடி பொய் யுரைகள் பலவற்றைப் புனைந்து எடுத்தெடுத்துப் பேசினேன்; பேச்சில் எனக்கு இணை யாவருமில்லை யென்று பிறரை யிகழ்ந்து அகங்காரம் கொண்டேன்; எனக்கு யாதேனும் ஒன்று கொடுத்தவர்களையே மிகவும் உபசரிப்பதும், கொடாதவர்களை யிகழ்ந்துரைப்பதும் செய்வேன்; மனத்தின்கண் யாவரிடத்தும் தயை செய்வது என்பால் இல்லை யெனினும், உன்னையே நம்பினேனுதலால் என்னைக் கைவிடலாகாது, காண். எ.று.

அடைந்தவர் எவராயினும் தன்னை யுயர்வாக எண்ண வேண்டுமென்று கருதித் தம்பால் இல்லாத நற்பண்புகளை யுள்ளனவாகப் பொய்யாகப் புனைந்தும், அதனைப் பன்முறையும் அடுத்தடுத்து உரைத்தால் அது மெய்யாய் விடும் என்று கருதினேன் என்பார், "அடுத்தவர் மயங்கி மதித்திட நினைத்தேன் அடிக்கடி பொய்களே புனைந்தே எடுத்தெடுத் துரைத்தேன்" எனக் கூறுகின்றார். உரிய செயல் வகைகளில் தனக்கு நிகராகார் என்று பிறரை இகழ்ந்து வாயால் அகங்காரமாகப் பேசினேன் என்பார், "எனக்கெதிர் இலை என்று இகழ்ந்தனன் அகங்கரித்திருந்தேன்" என்று கூறுகின்றார். கொடுத்தாரைப் புகழ்தலும் கொடாரையிகழ்தலும் உலகியல்பு ஆதலின், அது தம்பால் உளதாதனை எடுத்துரைப்பார், "கொடுத்தவர் தமையே மிக உபசரித்தேன் கொடாதவர்தமை யிகழ்ந்து உரைத்தேன்" என்று உரைக்கின்றார். நடுத் தயவு - மனத்தின்கண் நிலவும் தயை. நடுவிட மாதலின் மனம் நடு வெனப்படுகின்றது.

இதனால், பிறர் மதிக்கப் போலி ஒழுக்கம் கொண்டமை எடுத்தோதித் தம்மைக் கைவிடலாகா தென வேண்டியவாறும். (23)

3576. எளியவர் விளைத்த நிலமெலாங் கவரும்
எண்ணமே பெரிதுளேன் புன்செய்க்
களியுணும் மனையில் சர்க்கரை கலந்து
காய்ச்சுபால் கேட்டுண்ட கடையேன்
துளியவர்க் குதவேன் விருப்பிலான் போலச்
சுவைபெறச் சுவைத்தநாக் குடையேன்
நளிர்எனச் சுழன்றேன் என்னினும் உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : ஏழை மக்கள் பயிர் செய்த விளைபுலன்களைக் காணும் போதெல்லாம் அவற்றை எனக்கே உரியனவாக்கிக் கொள்ளும் எண்ணமே யுடையவனுவேன்; புன்செய்களில் விளையும் பொருள்களைக் கொண்டு கறி சமைத்து உண்போர் மனைக்குச் செல்வேனுயின், சர்க்கரை கலந்து காய்ச்சிய பாலுணவே வேண்டும் என வற்புறுத்திக் கேட்டுண்ட கீழ்மைப் பண்புடையவனுவேன்; உண்பதில் சிறு துளியும் பிறர்க்கு உதவ மாட்டேன்; உண்ணும் அப்பால் உணவை விரும்பாதவன் போலச் சுவை பெற வுண்டு சுவைத்த நாக்கை யுடையவனுவேன்; நண்டு போல எங்கும் சுழன்றலையும் இயல்பினேன் என்றாலும், உன்னையே நம்பி யுள்ளேனுதலால் என்னைக் கைவிட லாகாது. எ.று.

எளியவர் - ஏழை மக்கள். அவரது விளைபுலம் குறுகிய பரப்பினதாய் நன்கு பேணப்பட்டுப் பயிர் செய்யப்படுதலால் அழகு திகழும் அதன் நலம் கண்டு பாராட்டுதல் ஒழிந்து எனக்கே உரியதாக்கிக் கொள்ள வேண்டும் என்னும் ஆசை மிக்கு உடையவனுவேன் என்பார், "எளியவர் விளைத்த நிலமெலாம் கவரும் எண்ணமே பெரிதுளேன்" எனப் புகல்கின்றார். புன்செய்க் களி - கம்பு கேழ்வரகு முதலிய உண்பொருள் களால் செய்யப்படும் உணவு வகைகள் எனப்படும். நெல்லுணவு இன்மையின் புன்செய்க் களி யுணவு வேண்டப்படுகிறது. அவர்கட்குச் சர்க்கரை கலந்த பாலுணவு கிடைத்தல் அரிதாயினும் அவர்களை வற்புறுத்திக் கேட்டு வாங்கி யுண்ட செயலால் கடைப்பட்ட பண்புடைய ராதல் புலப்படுத்தற்கு, "சர்க்கரை கலந்து காய்ச்சு பால் கேட்டுண்ட கடையேன்" எனக் கட்டுரைக்கின்றார். தாம் உண்ணும் உணவைப் பாத்துண்டல் நல்லறமாயினும் தாம் அது செய்யாமை வெளிப்படுத்தற்கு, "துளியவர்க்கு உதவேன் விருப்பிலான் போலச் சுவை பெறச் சுவைத்த நாக்குடையேன்" என்று கூறுகின்றார். நளிர் - நண்டு. எவ்விடத்தும் சுழன்றலைந்த தன்மை தோன்ற, "நளிர் எனச் சுழன்றேன்" என்று கூறு கின்றார்.

இதனால், பிறர் வருத்தம் நோக்காது ஒழுகுகின்ற ஈரமில்லாப்பண்பை எடுத்தோதி என்னைக் கைவிட லாகா தென வேண்டியவாறும். (24)

3577. கொலைபல புரிந்தே புலைநுகர்ந் திருந்தேன்
கோடுறு குரங்கினிற் குதித்தே
அலைதரு மனத்தேன் அறிவிலேன் எல்லாம்
அறிந்தவன் போல்பிறர்க் குரைத்தேன்

மலைவுறு சமய வலைஅகப் பட்டே
மயங்கிய மதியினேன் நல்லோர்
நலையல எனவே திரிந்தனன் எனினும்
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : உயிர்க்கொலை பலவற்றைச் செய்து அவற்றின் புலாலை உண்டிருந்தேன்; மரக் கொம்புகளில் வாழும் குரங்கைப் போல இங்குமங்கும் துள்ளிக் குதித்து அலைகின்ற மனத்தை யுடையவனுவேன்; உண்மையறிவு ஒருசிறிதும் இல்லாதவனுயினும் எல்லாம் அறிந்தவன் போலப் பிறர்க்கு எடுத்துரைத்தேன்; மயக்கத்தைச் செய்கின்ற சமய நூல்களின் கவர்ச்சிக்குள்ளாகி மயங்குகின்ற மதியையுடையவன்; நல்லவர்கள் பார்த்து 'நீ நல்லவன் இல்லை' என்று ஏசும்படி எங்கும் திரிந்தேன்; என்ருலும், உன்னை நம்பியுள்ளேனுதலால் என்னைக் கைவிடலாகாது. எ.று.

புலால் உண்பவன் பிறவுயிர்களைக் கொன்றுண்ணும் இயல்பினனுதலால், "கொலை பல புரிந்து புலை நுகர்ந்திருந்தேன்" என்று கூறுகின்ருர். ஒரு பொருளினும் ஓரிடத்தும் நில்லாது பல திறமான எண்ண அலைகளால் அலைவது பற்றி மனத்தை, "கோடுறு குரங்கினிற் குதித்தே அலைதரு மனத்தேன்" எனவுரைக்கின்ருர். புல்லறிவாளன் என்பதைப் புலப்படுத்தற்கு "அறிவிலேன் எல்லாம் அறிந்தவன் போல் பிறர்க்கு உரைத்தேன்" என்று பேசுகின்ருர். சமய நூல்கள் பலவும் தத்தம் சமயக் கருத்துக்களைச் சாலச் சிறந்தவை என இனிய மொழிகளாலும், ஏது எடுத்துக் காட்டுக்களால் வற்புறுத்திக் கற்பார் மனத்தைக் கலக்கி மயக்கித் தம்பால் கவர்ந்து கொள்வதால், "மலைவுறு சமய வலை அகப்பட்டே மயங்கிய மதியினேன்" என்று கூறுகின்ருர். மலைவு - மயக்கம். தெளிவின்மையால் ஐயத்தில் கிடத்தி யலைத்தல் என்றுமாம். இன்னேரன்ன குணம் செயல்களைக் காண்கின்ற நல்லவர்கள் "நீ நல்லையில்லை" எனப் பழிக்கின்றனர் என்பார், "நல்லோர் நிலையல எனவே திரிந்தனன்" என நவில்கின்ருர்.

இதனுல், நல்லோர்க்குப் பொல்லனுய் திரிந்தமை கூறி அபயம் வேண்டியவாரும். (25)

3578. ஈயெனப் பறந்தேன் எறும்பென உழன்றேன்
எட்டியே எனமிகத் தழைத்தேன்
பேயெனச் சுழன்றேன் பித்தனே எனவாய்ப்
பிதற்றெடும் ஊர்தொறும் பெயர்ந்தேன்
காயெனக் காய்த்தேன் கடையென நடந்தேன்
கல்லெனக் கிடந்தனன் குரைக்கும்
நாயெனத் திரிந்தேன் என்னினும் உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : ஈயைப் போல் எங்கும் பறந்தும், எறும்பைப் போலத் திருந்தி வருந்தியும், எட்டி மரம் போலத் தழைத்தும் உள்ளேன்; பேய் போல எங்கும் சுழன்றேன்; பித்தேறியவன் போல வாயில் வந்தன

வற்றைச் சொல்லிக் கொண்டு ஊர்தோறும் சென்றேன்; காய் போலக் காய்த்துக் கடையவன் என்று கண்டோர் கூற வொழுகினேன்; கல் போலச் செயலற்றுக் கிடப்பதும் நாய் போலக் குரைத்துக் கொண்டு திரி வதும் செய்தேன்; என்ருலும், உன்னை நம்பினேனுதலால் என்னைக் கை விட லாகாது. எ.று.

மலங்களை நாடி மொய்த்துண்டு பறந்து திரியும் ஈக்களைப் போல இழி பொருளை நாடினேன் என்பார், "ஈயெனப் பறந்தேன்" எனவும், ஓய்வின்றி யோடி யுழைத்தமை தோன்ற, "எறும்பென உழன்றேன்" எனவும் இயம்புகின்ருர். விரும்புவார் இன்மையின் எட்டி மரம் மிகத் தழைத்திருப்பது போலத் தானும் பிறர்க்குப் பயன்படாது பருத்து வளர்ந் திருந்தமை புலப்பட, "எட்டியே என மிகத் தழைத்தேன்" என்கின்ருர். குறிக்கோளின்றி அலைந்தமை விளங்க, "பேயெனச் சுழன்றேன்" எனவும், எப்போதும் யாவரோடும் பொருளல்லவற்றைப் பேசித் திரிந் தமை பற்றி, "பித்தனே என வாய்ப் பிதற்றெடும் ஊர்தொறும் பெயர்ந் தேன்" எனவும் எடுத்துரைக்கின்ருர். பயன்படாமை தோன்ற, "காயெனக் காய்த்தேன்" என்றும், நல்லொழுக்கம் இல்லாமை பற்றிக் "கடையென நடந்தேன்" என்றும், சோம்பல் மிகவுற்றுச் செயலற்றுக் கிடந்தமையால், "கல்லெனக் கிடந்தனன்" என்றும், எவரைக் காணினும் யாதாயினும் பேசிக் காலம் கழித்தமையின், "குரைக்கும் நாயெனத் திரிந்தேன்" என்றும் கூறுகின்ருர்.

இதனுல், தமது செயற் புன்மையைப் பார்த்துக் கூறித் தம்மைக் கை விடலாகாது என்று வேண்டியவாரும். (26)

3579. ஒன்றியே உணவை உண்டுடல் பருத்த
ஊத்தையேன் நாத்தழும் புறவே
வென்றியே உரைத்து வினைகளே விளைத்த
வீணனேன் ஊர்தொறுஞ் சுழன்ற
பன்றியே அனையேன் கட்டுவார் அற்ற
பகடெனத் திரிகின்ற படிறேன்
நன்றியே அறியேன் என்னினும் உனையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : உணவு ஒன்றையே வேண்டி யுண்டு உடல் பருத்த அழுக்குடைய யான் என்னுடைய வெற்றிச் செயல்களையே பிறரெல்லாம் கேட்க நாத்தழும்பேற வுரைத்து, பலவாகிய வினைகளைச் செய்தொழிந்த வீணனுவேன்; ஊர்கள் தோறும் சென்று மலம் நாடித் திரிகின்ற பன்றியை ஒப்பேன்; கூட்டி வைத்துப் பேணுவார் அற்ற காளைபோலத் திரிகின்ற வஞ்சகனுய் நன்மை சிறிதும் அறியாதவனுய்க் கெட்டேன். ஆயினும், உன்னையே நம்பினேனுதலால் என்னைக் கைவிடலாகாது; எ.று.

உணவு உண்பது ஒன்றிலே கருத்தொன்றி யுண்டு கொழுத்தமை விளங்க, "ஒன்றியே உணவை உண்டுடல் பருத்த ஊத்தையேன்" என்று கூறுகின்ருர். பிறர் கேட்டு மெய்யென எண்ணி வியக்குமாறு மனம்

போனபடிப் பேசிய குற்றத்தை, "வென்றியே உரைத்து வினைகளே விளைத்த வீணனேன்" என்று கூறுகின்றார். நன்பொருளை நயவாமை விளங்கவும், மனம் போனபடித் திரிந்தமை புலப்படவும், "ஊர் தொறும் சுழன்ற பன்றியே யனையேன் கட்டுவார் அற்ற பகடு எனத் திரிகின்ற படிறேன்" என்று கூறுகின்றார். இவ்வாற்றால் தீமையே மன நினைவில் மிக்குத் தோன்றமையின், "நன்றியே அறியேன்" என நவில்கின்றார்.

இதனால், நன்றியே அறியேனெயினும் உன்னையே நம்பினேனெதலால் என்னைக் கைவிட லாகா தென முறையிட்டவாறும். (27)

3580. கவையெலாந் தவிர்ந்த வெறுமரம் அனையேன்
கள்ளனேன் கள்ளுண்ட கடியேன்
சுவையெலாம் விரும்பிச் சுழன்றதோர் கடையேன்
துட்டனேன் தீதெலாந் துணிந்தேன்
இவையெலாம் அந்நாள் உடையனே அலனே
இந்தநாள் இறைவனின் அருளால்
நவையெலாம் தவிர்ந்தேன் தூயனாய் நினையே
நம்பினேன் கைவிடேல் எனையே.

உரை : கிளையெல்லாம் வெட்டிக் கழிக்கப்பட்ட வெறுமரத்திற்கு ஒப்பாகிய யான் ஒரு கள்வனேன்; கள்ளுண்டமையால் விலக்கத் தக்க வனனேன்; சுவை வகைகள் பலவற்றையும் விரும்பி அவை நிலவு மிடத்தே சுற்றித் திரிந்த ஓர் கீழ் மகனேன்; துட்டச் செயல்கள் உடை மையால் தீய செயல்கள் பலவற்றைச் செய்ய நினைத்தேன்; இவை யெல் லாம் கழிந்த அவ்விளமைக் காலத்தில் உடையனாய் இருந்தேனே அல்லனே அறியேன்; இந்நாளில் நினது திருவருளால் இறைவனே, குற்றமெல்லாம் நீங்கித் தூயவனாய் உன்னையே நம்பி யிருக்கின்றேன்; ஆதலால் என்னைக் கைவிட லாகாது காண். எ.று.

கவை - சிறியவும் பெரியவுமாகிய கிளைகள். "கவையாகி கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும் அவையல்ல நல்ல மரங்கள்" என ஔவையாரும் கூறுகின்றார். கவையும் கொம்பும் கழிந்திருக்கும் மரங்கள் யாவராலும் விரும்பப்படாமை பற்றி, "கவையெலாம் தவிர்ந்த வெறுமரம் அனையேன்" என விளம்புகின்றார். கள்ளன் - திருடன். கள்ளுண்பவனைச் சான்றோர் விரும்பாராதலின், "கள்ளுண்ட கடியேன்" என உரைக்கின்றார். ஒருசில சுவைகளையன்றிப் பலவற்றை விரும்பி, நிலவுமிடம் நாடி யலைகின்றவர் தலையாய மக்களாகக் கருதப்படாராதலின், "சுவையெலாம் விரும்பிச் சுழன்றதோர் கடையேன்" என்று கூறுகின்றார். துணிதல் - நினைத்தல். இதுகாறும் பாட்டுத் தோறும் மிகப்பல குற்றங்களை எடுத்துரைத்த வடலூரார் வள்ளல் இவையனைத்தும் தம்பால் உள்ளனவோ இல்லையோ என்று நினைத்துப் பார்க்கின்றாராதலால், "இவையெலாம் அந்நாள் உடையனே அலனே" என்று சொல்லி, இப்போது அவருடைய நினைவும் சொல்லும் செயலும் தூயவாய் இருத்தலைக் கண்டு பணிவு தோன்ற மொழிகின்றாராதலால், "இந்த நாள் தூயனாய் நினையே நம்பினேன்" எனவும், இது காரணமாய் என்னைக் கைவிடலாகா தென வேண்டு வாராய், "கைவிடேல் எனையே" எனவும் கட்டுரைக்கின்றார். செய்த

குற்றங்களை நீக்குதற்கு இறைவன் திருவருளன்றிப் பிறிது யாதுமில்லை என்பது பற்றி, "இறைவ நின் அருளால் நவையெலாம் தவிர்ந்தேன்" எனக் கூறுகின்றார்.

இதனால், நவை தீர்ந்த தூயனைய் நின்னையே நம்பி இருக்கின்றேனை தலால் என்னைக் கைவிடலாகாதென வடலூர் வள்ளல் விண்ணப்பித்த வாறும். (28)

திருச்சிற்றம்பலம்

16. ஆற்ற மாட்டாமை

அஃதாவது, உலகியல் துன்பத்தின் ஆற்றுமையை நினைந்து வருந்தி இறைவன்பால் முறையிடுதல்.

இதன்கண், இறைவன் தம்மைத் தடுத்தாட் கொண்டருளினன் என்றும், "செப்பார் கலைகள் மொழிந்த பொருள் திறங்கள் அனைத்தும் தெரிந்து தெளிந்து இப்பாரிடை நின் புகழ் பாடுகின்ற பெரியரின் மொழிப் பாட்டு ஒப்பாச் சிறியேன் புன்மொழிப் பாட்டெல்லாம் உவந்த உடையானே" என்று வியந்தும், தம்மைப் "புரைசேர் துயரப் புணரி முற்றும் கடத்தி ஞான பூரணமாம் கரை சேர்த்தருளி இன்னமுதக் கடலைக் குடிப்பித்திடல் வேண்டும்" என்றும், "வெப்பார் உள்ளக் கலக்கமெலாம் இற்றைப் பொழுதே விலக்கி ஒழித்து இப்பாரிடை என் கருத்தின் வண்ணம் எல்லாம் விரைவின் ஈந்தருள்க" என்றும், இது "ஒப்பால் உரைத் தன்று உண்மையுரைத்தேன்" என்றும், "அப்பா அரசே இனிச் சிறிதும் ஆற்ற மாட்டேன் கண்டாய்" என்றும் வடலூர் வள்ளலார் கூறுகின்றாரெனப் பதிப்பாசிரியர் பாலகிருஷ்ணபிள்ளை தொகுத்து எழுதுகின்றார்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3581. இப்பார் முதல்எண் மூர்த்தமதாய்
இலங்கும் கருணை எங்கோவே
தப்பா யினதீர்த் தென்னையும்முன்
தடுத்தாட் கொண்ட தயாநிதியே
எப்பா லவரும் புகழ்ந்தேத்தும்
இறைவா எல்லாம் வல்லோனே
அப்பா அரசே இனிச்சிறிதும்
ஆற்ற மாட்டேன் கண்டாயே.

உரை : இந்நில முதல் எண்வகை மூர்த்தங்களாய் விளங்கும் கருணையுருவாகிய எங்கள் தலைவனே; எத்திறத்தோரும் புகழ்ந்து பரவும் இறைவனே, எல்லாம் வல்லவனே, யான் செய்த தவறுகள் அத்தனையும் போக்கி என்னையும் தீமையில் புகுதா வண்ணம் தடுத்து ஆட் கொண்ட தயாநிதியாகிய சிவனே, அப்பா, அருளரசே, உலகியல் துன்பங்களை இனிச் சிறிதும் பொறுக்க மாட்டேன்; எனக்கு அருள் புரிக. எ.று.

நிலம், நீர், காற்று, தீ, விண், ஞாயிறு, திங்கள், உயிர் ஆகிய எட்டும் இறைவன் உரு என்றும், இவற்றை எண்வகை மூர்த்தம் என்றும் சான்றோர் கூறுதலின், சிவபெருமானை 'அட்டமூர்த்தி' என்பது வழக்கு. அதுபற்றி, "இப்பார் முதல் எண் மூர்த்தமதாய் இலங்கும் கருணை எம் கோவே" என்று கூறுகின்றார். பரம் பொருளாகிய சிவன் அருள் மிகுதியால் இவ்வெட்டும் ஆனது பற்றி அவனை, "கருணை எங்கோவே" என்று புகழ்கின்றார். இவ்வுலகில் வாழும் மக்களில் எவ்வகைப்பட்டோரும் இறைவனைப் புகழ்ந்து பாடுதலால், "எப்பாலவரும் புகழ்ந்தேத்தும் இறைவா" என்றும், அப்பெருமானால் ஆகாதது ஒன்றுமில்லை என்பது பற்றி, "எல்லாம் வல்லோனே" என்றும் கூறுகின்றார். தப்பு - குற்றம். குற்றமான செயல்கள் தீவினைக் கேதுவாய்ப் பிறவித் துன்பங்களை இடையருது விளைவித்தலின், "தப்பாயின தீர்த்து" என்றும், தவருன நெறிகளில் செல்லும் அறிவையும் மனத்தையும் தடுத்துச் சிவநெறிக்கண் செல்லுமாறு தன்னை யாண்டுகொண்ட அருள் ஆண்மையை வியந்து, "தப்பாயின தீர்த்து என்னையும் முன் தடுத்தாட் கொண்ட தயாநிதியே" எனச் சாற்றுகின்றார். முன் என்றது கழிந்த இறந்த காலத்தைக் குறிக்கிறது. இளமை கழிந்து முதுமைநிலை எய்திய போதும் பிறவித் துன்பம் தொடர்ந்து போந்து வருத்தலால், "இனிச் சிறிதும் ஆற்றமாட்டேன்" என அறிவிக்கின்றார்.

இதனால், தடுத்தாட் கொண்ட விடத்தும் துன்பம் இடையருது வருத்துதலின் ஆற்ற மாட்டாமை விண்ணப்பித்தவாறும். (1)

3582. புரைசேர் துயரப் புணரிமுற்றும்
கடத்தி ஞான பூரணமாம்
கரைசேர்த் தருளி இன்னமுதக்
கடலைக் குடிப்பித் திடல்வேண்டும்
உரைசேர் மறையின் முடிவிளங்கும்
ஒளிமா மணியே உடையானே
அரைசே அப்பா இனிச்சிறிதும்
ஆற்ற மாட்டேன் கண்டாயே.

உரை : புகழ் பொருந்திய வேதங்களின் உச்சியில் ஒளி விட்டுத் திகழும் பெரிய மாணிக்க மணி போல்பவனே, என் போன்றாரை அடிமையாக உடைய பெருமானே, அருளரசே, தந்தையே, குற்றம் பொருந்திய உலகியலாகிய துன்பக் கடல் முற்றவும் கடக்கச் செய்து, நிறைந்த ஞானமாகிய சிவலோகமாகிய கரையில் ஏற்றி அங்கு நுகரப்படும் இனிய சிவஞான வமுதமாகிய கடலை அடியவனாகிய யான் குடித்து மகிழச் செய்தல் வேண்டும். எ.று.

துயரங்கள் தொடர்ந்து போந்து தாக்குதலால் அறிவாற்றல்கள் நலமிழந்து கெடுதலால், உயிரறிவு ஞான பூரணம் எய்தாமல் அலமருதலின், "புரைசேர் துயரப் புணரி முற்றும் கடத்தி" என்றும், நிறைந்த ஞானிகள் அடையுமிடமாதலின் சிவலோகத்தை, "ஞான பூரணமாம் கரை" என்றும், சிவன் திருவருளால் அக்கரையை அடைந்தவர் சிவஞான அமிர்தத்தைப் பெருகப் பருகுதலால், "சேர்த்தருளி இன்னமுதக் கடலைக்

குடிப்பித்திடல் வேண்டும்'' என்றும் வேண்டுகிறார். கடத்தி இன்னமுதக் கடலிலே குடிப்பித்திடல் வேண்டும் என்றது, திருவருளாலன்றிக் கடத்தலும் குடித்தலும் நிகழாமை யுணர்த்துகின்றது. எல்லாராலும் புகழப்படுதலின், வேதங்களை ''உரைசேர் மறை'' என உரைக்கின்றார். வேத ஞானத்தின் முடிபொருளாதல் தோன்றச் சிவபரம்பொருளை, ''ஒளி மாமணியே'' என்று குறிக்கின்றார்.

இதனாலும் தமது மாட்டாமையை எடுத்தோதிச் சிவஞானப் பேரின்பத்தை நுகர்தற்கு அருள் புரிக என வேண்டிக் கொண்டவாறும். (2)

3583. கண்ணூர் அமுதக் கடலேஎன்
கண்ணே கண்ணுட் கருமணியே
தண்ணூர் மதியே கதிர்பரப்பித்
தழைத்த சுடரே தனிக்கனலே
எண்ணு டரிய பெரியஅண்டம்
எல்லாம் நிறைந்த அருட்சோதி
அண்ணு அரசே இனிச்சிறிதும்
ஆற்ற மாட்டேன் கண்டாயே.

உரை : அழகிய அமுதமாகிய கடலே, என் கண் போன்றும் கண்ணின்கண் ணுள்ள அரிய மணி போன்றும் விளங்குகின்ற பெருமானே, குளிர்ந்த முழுமதி போன்றவனே, ஒளி பரப்பி யுலகு எங்கும் பரந்து நிலவும் செஞ்ஞாயிறு போன்றவனே, ஒப்பற்ற தீயின் கனல் போன்றவனே, மனத்தால் எண்ணுதற் கரிய பெரிய அண்ட முழுதும் நிறைந்து விளங்கும் அருளொளி பரப்பும் பரஞ்சோதியே, தலைவனே, அருளரசே, இவ்வுலகியல் துன்பத்தை இனி யான் சிறிதும் பொறுக்க மாட்டேன்; அருள் புரிக. எ.று.

கண்ணூர் அமுதம் - அழகிய அமுதம். ''கண்ணூர் கண்ணி'' என்றாற் போல. கண்ணூர் அமுதம் என்றவிடத்துக் கண்ணூர் என்ற தொடர் அழகின் மேலதாயிற்று. ஞானக் காட்சிக் கழகாய் அளவிறந்த பெருமைய தாய் விளங்குவதால் சிவத்தை, ''கண்ணூர் அமுதக் கடலே'' எனப் புகழ்கின்றார். உறுப்புக்களில் தலைசிறந்து நிற்றல் பற்றி, ''என் கண்ணே'' என்றும், கண்ணிற்கு ஒளியும் அழகும் கூர்த்த பார்வையும் நல்குவது பற்றி, ''கண்ணுட் கருமணியே'' என்றும் பாராட்டுகின்றார். தண்ணூர் மதி - குளிர்ந்த நிலவைப் பொழியும் முழு மதியம். எங்கும் எப்பொருளிலும் தனது வெயில் ஒளியைப் பரப்பி இருள் போக்கி உயிர்கள் இனிதுறச் செய்தலின் சிவ சூரியனை, ''கதிர் பரப்பித் தழைத்த சுடரே'' எனப் போற்றுகின்றார். அணுவினுரைச் சுட்டெரிக்காமல் ஞான வொளி தந்து தீயின் நிறம் கொண்டு திகழ்தலால், ''தனிக் கனலே'' என்று சிறப்பிக்கின்றார். அண்டங்களின்தொகை எண்ணுதற்கரிய அளவிறந்ததாதலின், ''எண்ணு டரிய பெரிய அண்டம்'' என வுரைக்கின்றார். ''அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம் அளப்பரும் தன்மை வளம் பெருங் காட்சி, ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின், நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன'' (அண்டப்) என்று மணிவாசகப் பெருமான் உரைப்பது காண்க. இவ்வண்ட மனைத்தும் தனது அருளொளி நிறைந்து பரவ

ஓங்கி விளங்குவது பற்றி, "அண்ட மெல்லாம் நிறைந்த அருட் சோதி" என்று கூறுகின்றார். தலைமைப் பொருளதாகிய அண்ணான் என்பது அண்ணு என விளியேற்றது. அண்ணு அரசு என்பதற்கு நெருங்குதற்கு அரிய அரசே என்று பொருள் கூறுதலும் உண்டு.

இதனாலும் உலகியல் துன்பங்களைப் பொறுக்க மாட்டாமை யுணர்த்தியவாறும். (3)

3584. பொய்யா தென்றும் எனதுளத்தே
பொருந்தும் மருந்தே புண்ணியனே
கையார்ந் திலங்கு மணியேசெங்
கரும்பே கனியே கடையேற்குச்
செய்யா உதவி செய்தபெருந்
தேவே மூவாத் தெள்ளமுதே
ஐயா அரசே இனிச்சிறிதும்
ஆற்ற மாட்டேன் கண்டாயே.

உரை: ஐயனே, அருளரசே, என்னுடைய உள்ளத்தில் நீங்காது என்றும் வீற்றிருக்கின்ற ஞானமிர்தமே, புண்ணியப் பொருளே, கையகத்தே யிருந்து விளங்கும் மாணிக்க மணி போல்பவனே, செங் கரும்பும் இனிக்கும் கனியைப் போல்பவனே, கடையவனுகிய எனக்குக் கைம்மாறு செய்ய மாட்டாத உதவியைச் செய்த பெரிய தேவதேவனே, முதிர்ந்து கெடாத தெள்ளிய அமுதே, இவ்வுலகில் வாழ்க்கை தரும் துன்பத்தை இனி யான் சிறிதும் பொறுக்க மாட்டேன், காண். எ.று.

ஒருகால் இருந்து பிறிதொருகால் இல்லாது மறையும் பொய்ப்பொருள் போலாது எனது உள்ளத்தில் எப்பொழுதும் வீற்றிருக்கின்ற பெருமானே என்பார், "பொய்யாதென்றும் எனது உளத்தே பொருந்தும் மருந்தே" என்று உரைக்கின்றார். மெய்ம்மை யின்ப வாழ்வு நல்குவது பற்றிச் சிவனை, "மருந்து" என்கின்றார். சிவ புண்ணிய மூர்த்தமாதலின், "புண்ணியனே" எனச் சிறப்பிக்கின்றார். கையார்ந் திலங்கும் மணி - அங்கையில் இருந்து இன்ப வொளி செய்யும் மாணிக்க மணி. கைம்மாறு செய்ய மாட்டாத உதவி - செய்யா உதவி எனப்படுகிறது. யாதொரு நன்றியும் செய்தறியாது இருக்கவும் செய்யப்படும் உதவி என்னும் அதைச் செய்த அருளை வியந்து, "செய்யா உதவி செய்த பெருந் தேவே" என்று தெரிவிக்கின்றார். கேவலத்தில் ஆணவ விருளில் செயலற்றுக் கிடந்த ஆன்மாவுக்குச் சகலத்தில் உடல் கருவி கரணங்களையும், உலகு போகங் களையும் உதவி, ஞானத்தால் உய்தி பெற அருளினமை பற்றி இவ்வாறு கூறுகின்றார் என்றுமாம். அமுதமாயினும் முதிர்ந்த வழிக் கெடுவதாக, முன்னைப் பழம் பொருளாய் எக்காலத்தும் இன்ப ஞான அமுதமாய் இலங்குவது பற்றிச் சிவனை, "மூவாத் தெள்ளமுது" என்று கூறுகின்றார். மூவாமை - பழம்பொருளாகிக் கெடாமை. தொடர்ந்து தாக்கும் துன்ப மிகுதி பொருமை தோன்ற, "இனிச் சிறிதும் ஆற்ற மாட்டேன்" என இயம்புகின்றார்.

இதனாலும் உலகியல் துன்பத் தாக்குதலைத் தாங்க மாட்டாமை எடுத்தோதியவாறும. (4)

3585. இத்தா ரணியில் என்பிழைகள்
எல்லாம் பொறுத்த என்குருவே
நித்தா சிற்றம் பலத்தாடும்
நிருத்தா எல்லாஞ் செயவல்ல
சித்தா சித்தி புரத்தமர்ந்த
தேவே சித்த சிகாமணியே
அத்தா அரசே இனிச்சிறிதும்
ஆற்ற மாட்டேன் கண்டாயே.

உரை : தந்தையே, அருளரசே, இந்நில வுலகில் யான் செய்த பிழைகள் எல்லாவற்றையும் பொறுத்தருளிய என்னுடைய ஞான குருவே, என்றுமுள்ள மெய்ப் பொருளே, தில்லையம்பலத்தில் திருக் கூத்தாடும் கூத்தப் பிரானே, எவ்வகைச் செயல்களையும் செய்ய வல்ல சிந்தையை யுடையவனே, சித்தி புரத்தில் எழுந்தருளும் தேவனே. என் சித்தத்தில் இருந்தருளும் சிகாமணியே, இவ்வுலகியல் துன்பத்தை இனியும் யான் சிறிதும் தாங்க மாட்டேன், காண். எ.று.

தாரணி - நில வுலகம். செய்பிழைகளைப் பொறுத்தாலன்றிக் குருபரனுக்கு ஞானம் நல்கும் அருள் உள்ளம் பிறவா தாகையால், "என் பிழைகள் எல்லாம் பொறுத்த என் குருவே" என இயம்புகின்றார். நித்தன் - என்றும் உள்ளவன். சிற்றம்பலம் - தில்லையிலுள்ள பொற்சபை. நிருத்தன் - கூத்தாடும் பெருமான். எச்செயலையும் செய்ய வல்ல மனத்திட்பம் உடையவன் என்றற்கு, "எல்லாம் செயவல்ல சித்தா" என்று தெரிவிக்கின்றார். சித்தி புரம் - வடலூரில் சத்திய ஞான சபை யிருந்து விளக்க முறும் இடமாகும். மனத்தினை யிடமாகக் கொண்டு திகழ்பவனதலால் சிவனைச் "சித்த சிகாமணி" என்கின்றார். சித்தி எல்லாம் வல்ல சித்தர்களுக்கு முடிமணியாகத் திகழ்பவன் என்று கூறினும் பொருந்தும். உலகியல் துன்ப மிகுதி விளங்க இனியும் சிறிதும் பொறுக்க மாட்டேன் என்பாராய், "இனிச் சிறிதும் ஆற்ற மாட்டேன்" என உரைக்கின்றார்.

இதனாலும் துன்ப மிகுதி புலப்படத் தாங்க மாட்டாமை சாற்றியவாறும். (5)

3586. எம்மே தகவும் உடையவர்தம்
இதயத் தமர்ந்த இறையவனே
இம்மே தினியில் எனைவருவித்
திட்ட கருணை எம்மானே
நம்மே லவர்க்கும் அறிவரிய
நாதா என்னை நயந்தீன்ற
அம்மே அப்பா இனிச்சிறிதும்
ஆற்ற மாட்டேன் கண்டாயே.

உரை : என்னை விரும்பி இவ்வுலகில் பிறப்பித் தளித்த அம்மையே, அப்பனே, எத்தகைய மேதக்கவராயினும் அவரது இதயத்தின்கண் எழுந்தருளுகின்ற இறைவனே, இம்மண்ணுலகில் என்னைத் தோற்றுவித்

தருளிய கருணை யுருவாகிய என் தலைவனே, நம்மவருள் மேலாயினுர் யாவராலும் அறிய மாட்டாத நாதனே, இப்பிறவித் துன்பத்தை இனிச் சிறிதும் பொறுக்க மாட்டேன், காண். எ.று.

மேதகவு - மேம்பாடு. மேம்பட்ட பண்பும் செயலும் உடையவரை மேதக்கவன் என்று வழங்கும் உலகியல் பற்றி, "எம்மேதகவும் உடையவர்" என இயம்புகின்ருர். மேதக்கவருடைய மேன்மைகளில் தலையாயது திருவருள் ஞான முடைமையாதலின், திருவருட் சிவஞானி களை "மேதகவுடையவர்" எனப் பாராட்டுகின்ருர். அவருடைய திருவுள்ளமே இறைவனுக்கு கோயிலாதலின், "இதயத் தமர்ந்த இறைவயவனே" எனக் கூறுகின்ருர். உயிர்களை யுலகில் உடம்பொடு கூடிப் பிறப்பித்தல் சிவனது அருட் செயலாதல் பற்றி, "இம்மேதினியில் என்னை வருவித்திட்ட கருணை எம்மானே" எனப் புகல்கின்ருர். நம் மேலவர் - நம்முடைய மக்களினத்தில் கல்வி யறிவு ஒழுக்கங்களால் உயர்ந்தவ ரென்ற பொருள்பட, "நம் மேலவர்" என்று கூறுகின்ருர். நகரத்தைச் சிறப்புணர்த்தும் இடைநிலையாகக் கொண்டு நக்கீரர், "நப்பின்னை" என்ருர் போல 'நம் மேலவர்' என நவில்கின்ருர் எனினும் அமையும். பசுபாச ஞானங்களால் அறியப் படாமை பற்றி, "அறிவரிய நாதா" என்று கூறுகின்ருர். தன்னை யுலகில் பிறப்பித்து அறிவறிந்து ஒழுகுமாறு பண்ணிய நலம் பற்றிச் சிவபெருமானை, "அம்மே அப்பா" என அன்பு செய்கின்ருர்.

இதனலும் உலகியல் துன்பத்தைத் தாங்க மாட்டாமை தெரிவித்துக் கொண்டவாரும். (6)

3587. செப்பார் கலைகள் மொழிந்தபொருள்
திறங்கள் அனைத்துந் தெரிந்துதெளிந்
திப்பா ரிடைநின் புகழ்பாடு
கின்ற பெரிய ரின்மொழிப்பாட்
டொப்பாச் சிறியேன் புன்மொழிப்பாட்
டெல்லாம் உவந்த உடையானே
அப்பா அரசே இனிச்சிறிதும்
ஆற்ற மாட்டேன் கண்டாயே.

உரை : இந்நிலவுலகின்கண் கற்றவர்களால் உயர்த்திப் பேசப் படும் நூல்கள் சொல்லிய பொருள் வகைகள் அனைத்தையும் நன்கு தெரிந்து உள்ளத்தில் தெளிந்து நின்னுடைய புகழ்களை ஞானசம்பந்தர் முதலிய பெரியோர்களின் இன்சொற்களாலாகிய பாட்டுக்களுக்கு ஒப்பச் சிறியேன் புல்லிய சொற்களால் பாடிய பாட்டுக்கள் எல்லாவற்றையும் மனமுவந்து ஏற்றுக் கொண்டு எம்மையும் அடிமையாக வுடையவனே, அப்பனே, அருளரசே, இவ்வுலகியல் துன்பத்தை இனிச் சிறிதும் பொறுக்க மாட்டேன் காண். எ.று.

செப்பார் கலைகள் - அறிந்தோரால் உயர்த்திப் புகழப்படும் பல்வகைக் கலைகளை யுணர்த்தும் நூல்கள். கலை நூற் பொருளும், உலகியல் பொருள்களும், ஞான நூற் பொருள்களும் எல்லாவற்றையும்

கசடறக் தெரிந்த மேலோராதலின், ஞானசம்பந்தர் முதலிய பெருமக்களை, "செப்பார் கலைகள் மொழிந்த பொருள் திறங்கள் அனைத்தும் தெரிந்து தெளிந்து இப்பாரிடை நின் புகழ் பாடுகின்ற பெரியர்" என்று புகழ்கின்றார். அப்பெருமக்கள் பாடியருளிய திருப்பாட்டுக்களைப் பலகாலும் ஓதி யுணர்ந்தமையின் வடலூர் வள்ளல், அவர்களைப் போலத் தாமும் சிவனைப் பாடி மகிழும் விருப்புடையராயினமை புலப்பட, "பெரியரின் மொழிப்பாட் டொப்பச் சிறியேன் புன்மொழிப் பாட்டெல்லாம்" என இயம்புகின்றார். ஞானசம்பந்தர் முதலிய பெரியோர் திருவருளால் பெருமை யுடையராதலின், அவரை நோக்கத் தம்மைச் 'சிறியேன்' என்றும், அவர்களுடைய இன்மொழிப் பாட்டுக்களை நோக்கத் தாம் பாடியன வெல்லாம் புன்மொழிகளாகப் புலப்பட, "சிறியேன் புன்மொழிப் பாட்டெல்லாம்" என்றும், அவற்றையும் இறைவன் ஏற்றுக் கொண்டான் என்ற கருத்துத் தோன்ற, "சிறியேன் புன்மொழிப் பாட்டெல்லாம் உவந்த உடையானே" என்றும் உரைக்கின்றார்.

இதனாலும் உலகியல் துன்பங்களைத் தான் பொறுக்க மாட்டாமையை வடலூர் வள்ளல் தெரிவித்தவாறும். (7)

3588. துப்பார் கனகப் பொதுவில்நடத்
தொழிலால் உலகத் துயர்ஒழிக்கும்
வைப்பாம் இறைவா சிவகாம
வல்லிக் கிசைந்த மணவாளா
ஒப்பார் உயர்ந்தார் இல்லாத
ஒருவர் எல்லாம் உடையானே
அப்பா அரசே இனிச்சிறிதும்
ஆற்ற மாட்டேன் கண்டாயே.

உரை : சிவந்த பொற் சபையில் நிகழ்த்தும் திருக்கூத்தால் உலக மக்களின் துன்பத்தைப் போக்கும் நல்லிடமாகிய இறைவனே, சிவகாமி வல்லிக்குப் பொருத்தமான மணவாளனே, ஒப்பாரும் உயர்ந்தாரு மில்லாத ஒருவனே, எல்லாவற்றையும் உடைமையாகக் கொண்டவனே, அப்பனே, அருளரசே, இவ்வுலகியல் துன்பத்தை இனியும் சிறிதும் பொறுக்க மாட்டேன், காண். எ.று.

துப்பு - செம்மை நிறம். பவளத்தின் நிறம் சிவப்பாதலின் தில்லைப் பொற் சபையிடத்துப் பொன்னை, "துப்பார் கனகம்" என உயர்மொழிக் கிளவியால் உவந்து உரைக்கின்றார். தில்லைப் பொற் சபையில் இறைவன் ஆடுகின்ற திருக்கூத்து மலவிருளில் அழுந்திக் கிடக்கும் ஆன்மாக்களை மும்மலங்களினின்றும் நீக்கித் திருவருள் இன்பத்தில் தோய்ந்து இன்புறுவிக்கும் கருத்துடையராதலால், "நடத் தொழிலால் உலகத் துயர் ஒழிக்கும் வைப்பாம் இறைவா" என இயம்புகின்றார். வைப்பு - ஈண்டுச் சிவானந்த நிலையத்தின் மேற்று. தில்லையில் அம்பிகையின் திருப் பெயராதலின், சிவகாமவல்லி என்கின்றார். சிவத்தினின்றும் பிரியாது உடன் உரையும் பெருமாட்டியாதலின், உமாதேவியைச் சிவகாமவல்லி எனப் பெயரிட்டுச் சான்றோர் பரவுகின்றனர். சிவகாமவல்லியைத் திருமணத்தால் தேவியாகக் கொண்டமை விளங்க, "சிவகாமவல்லிக்

கிசைந்த மணவாளா" எனச் சிறப்பிக்கின்றார். சிவனுக்கு ஒப்பாரும் உயர்ந்தவரும், எவ்வுலகத்தும் எத்தகையவருள்ளும் ஒருவரும் இல்லாமை தோன்ற, சிவனே "ஒருவன்" என்று உயர்ந்தோர் உரைப்பது மரபு. "ஒருவன் என்னும் ஒருவன் காண்க" (அண்டப்) என்பது திருவாசகம். இம்மரபு பற்றியே "ஒப்பார் உயர்ந்தார் இல்லாத ஒருவர்" என்று உரைக்கின்றார். உலகிலுள்ள உயிர்ப் பொருள் அனைத்தையும் தனக்கு அடிமையாகவும், உயிர்கள் பொருள்கள் அத்தனையும் தனக்கு உடைமையாகவும் கொண்டவனதலால், சிவபெருமானே "எல்லாம் உடையானே" என ஏத்துகின்றார்.

இதனாலும் உலகியல் துன்பத்தைப் பொறுக்க மாட்டாமை தெரிவித்தவாறும். (8)

3589. ஒப்பா ருரைப்பார் நின்பெருமைக்
கெனமா மறைகள் ஓலமிடும்
துப்பார் வண்ணச் சுடரேமெய்ச்
சோதிப் படிக வண்ணத்தாய்
வெப்பா னவைதீர்த் தெனக்கமுத
விருந்து புரிதல் வேண்டும்என்றன்
அப்பா அரசே இனிச்சிறிதும்
ஆற்ற மாட்டேன் கண்டாயே.

உரை : அப்பனே, அருளரசே, நினது பெருமைக்கு ஒப்பு ஒரு வராலும் கூற முடியாது எனப் பெரிய வேதங்கள் முழங்குகின்றன; பவள நிறச் சுடராகியவனே, மெய்ம்மை ஒளியால் படிக நிறத்தை யுடையவனே, வெம்மை தருவனவற்றை விலக்கிச் சிவாமிர்தமாகிய விருந்தினை எனக்கருளுதல் வேண்டும்; இவ்வுலகில் துன்பத்தை இனிச் சிறிதும் பொறுக்க மாட்டேன் காண். எ.று.

ஞான நூல்களில் தலையாய வேதங்களால் சிவபெருமான் தனக்கு ஒப்பு ஒருவரும் இல்லாதவன் எனப் போற்றப்படுவது பற்றி, "ஒப்பார் உரைப்பார் நின் பெருமைக்கு என மாமறைகள் ஓலமிடும்" என்று கூறுகின்றார். சிவ மூர்த்தம் செம்பவளச் செந்நிறம் கொண்டு திகழ்தலால், "துப்பார் வண்ணச் சுடர்" என்றும், பர சுகத்தின் ஞான வொளி வெண்மை நிறமுடையதாதலின், "மெய்ச் சோதிப் படிக வண்ணத்தாய்" என்றும் விளம்புகின்றார். துப்பார் வண்ணம் - பவளத்தின் செந்நிறம். வெவ்விய துன்பம் தருவனவற்றை "வெப்பானவை" என்று கூறுகின்றார். இதனால் பிறவித் துன்பத்தின் கொடுமை சுட்டியவாறும். சிவனது திருவருள் இன்பம் தண்ணிதாய்ப் புத்தின்பம் தந்த வண்ணம் இருப்பதாகலின், "அமுத விருந்து புரிதல் வேண்டும்" என உரைக்கின்றார். "விமுத வல்ல சடையான் வினை யுள்குவார்க்கு அமுத நீழல் அகலாததோர் செல்வமாம்" (கருகா) என ஞானசம்பந்தர் கூறுவது காண்க.

இதனாலும் உலகியல் துன்பத்தை ஆற்ற மாட்டாமை உரைத்தவாறும். (9)

3590. வெப்பார் உள்ளக் கலக்கமெலாம்
இற்றைப் பொழுதே விலக்கிஒழித்
திப்பா ரிடைஎன் கருத்தின்வண்ணம்
எல்லாம் விரைவின் ஈந்தருள்க
ஒப்பால் உரைத்த தன்றுண்மை
உரைத்தேன் கருணை உடையானே
அப்பா அரசே இனிச்சிறிதும்
ஆற்ற மாட்டேன் கண்டாயே.

உரை : கருணையாகிய செல்வத்தை யுடைய பெருமானே, அப்பனே, அருளரசே, வெம்மை பொருந்திய மனக் கலக்க மெல்லாம் இப்பொழுதே நீக்கிக் கெடுத்து இவ்வுலகின்கண் நான் கருதிய கருத்துக்கள் எல்லா வற்றையும் விரைந்து நிறைவு செய்தருள்க; நான் ஒப்புக்கு உரைத்தேன் என்று கொள்ளாமல் உண்மையை உள்ளபடியே உரைத்ததாக ஏற்றுக் கொள்ளல் வேண்டும்; என்னைத் தாக்கும் உலகியல் துன்பங்களை இனியும் சிறிதும் பொறுக்க மாட்டேன் காண். எ.று.

மனத்தில் கவலைகள் மிகுந்து வருத்துகிற பொழுது உடலகம் எங்கும் வெப்பம் மிகுதலின், "வெப்பார் உள்ளக் கலக்கம்" என விளம்புகிறார். மனக்கவலை நீடித்த வழி அறிவு தெளிவிழத்தலின், "இற்றைப் பொழுதே விலக்கி" என்றும், சிறிது எஞ்சிய வழித் தீ யெச்சம் போலப் பெருகித் துன்புறுத்துமாதலின், "ஒழித்து" என்றும் உரைக்கின்றார். கருதியன கருதியவாறு கைவந்த வழி கவலையனைத்தும் கெடு வதியல்பாதலின், "என் கருத்தின் வண்ணம் எல்லாம் விரைவில் ஈந்தருள்க" என வேண்டுகின்றார். ஒப்பா ருரைத்தல் - காணும் உலகவர் தகும் என்னுமாறு உரைத்தல். திருவருட் செல்வனாதலின், சிவபெருமானைக் கருணைக்கு உடையவனாகவும், கருணையை உடைமையாகவும் வைத்துப் பேசுகிறார்.

இதனால், உலகியல் துன்பத்தை இனியும் பொறுக்க மாட்டாமை கூறி யான் வேண்டியதை வேண்டியவாறு அருளுக என விண்ணப்பித்த வாறும். (10)

திருச்சிற்றம்பலம்

17. வாதனைக் கழிவு

அஃதாவது, உலகியல் துன்பத் தாக்குதலால் உள்ளத்து ஊக்கமிழந்து இறைவன்பால் முறையிடுதல்.

இதன்கண், தமது முறையீடு இறைவனி திருச்செவிக்கு எட்ட வில்லையா என்றும், இறைவன் தம்மை இந்நாள் முகமறியார் போலிருந் தால் தமக்கு எங்கோ புகலிடம் என்றும், இன்னும் நரகக் கடுங்கடையில் பயந்த பொழுதும் அருள் தரத் தாழ்த்தால் தம்முயிர் ஒருவும் என்றும், அஃது அருளுக்கு அழகன்று என்றும், அடியார்கள் சிரிக்கும் தன்மைத்து என்றும், தமக்கு அருள் ஈந்தால் குற்றம் புரிந்தோரையும் இறைவன் காப்பாற்றினன் என்று பெரியோர்கள் புகழ்வர் என்றும், தெரிந்த

பெரியர்க்கு அருள் புரிதலினும் சிறியர்க்குப் புரிதல் சிறப்பிற் சிறப்பென்று உரைத்தனவே மறை அம்மறையைப்; புகன்றவனும் நீயே என்றும், தமது ஒன்பதாம் ஆண்டில் தம்மை இறைவன் ஆட்கொண்டருளினன் என்றும் இறைவன் இன்னும் அருளினால் தடுப்பவரிலர் என்றும், அருளாவிடில் வேறு யாரும் அருள் தரற்கு உரிய ரல்லர் என்றும், இருள் நாடுலகில் இனியும் இருக்கத் தரியேன் என்றும், "சிவமே நின்னைத் தெரிந்து கொண்டு புகழ்ந்தார் தம்மைப் பொறுத்திடவும், புன்மை யறிவால் பொய் யுரைத்தே இகழ்ந்தோன்தனைக் கீழ் வீழ்த்திடவும், என்னே புவிக்கு இங்கு இசைத்திலே" என்றும், இறைவன் தம் பிழை பொறுத்துச் சன் மார்க்க நெறி விளங்கத் தம்மைக் கலந்து நிறைந்தான் என்றும், தாம் இறவாமை பெற்றேன் என்றும், இறைவன் தம்மைப் "பெருங் கருணைத் தொட்டி லிடத்தே அமர்த்தி அகமே விளங்கத் திருவருளால் அமுதம் தெளித்தே அணைத்தருளி முகமே மலர்த்திச் சித்திநிலை முழுதும் கொடுத்து மூவாமல் சகமேல் இருக்கப் புரிந்தான்" என்றும், இறைவன் அருள் தந்தான், இன்றும் தருகின்றான், மேலும் தருவான் என்றும், ஊனே புகுந்து தம்முளம் கலந்த இறைவனுக்குக் கைம்மாறு அளித்தற் கில்லை என்றும், வடலூர் வள்ளல் கூறுகின்றார் எனத் திரு. பாலகிருஷ்ண பிள்ளையவர்கள் தொகுத்து எழுதுவது காண்க. இதன்கண் வரும் பாட்டு இருபதும் அந்தாதித் தொடையில் அமைந்து பொழுது எனத் தொடங்கி பொழுது என முடிகின்றது.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3591. பொழுது விடிந்த தினிச்சிறிதும்
பொறுத்து முடியேன் எனநின்றே
அழுது விழிகள் நீர்துளும்பக்
கூவிக் கூவி அயர்கின்றேன்
பழுது தவிர்க்கும் திருச்செவிக்குள்
பட்ட திலையோ பலகாலும்
உழுது களைத்த மாடனையேன்
துணைவே றறியேன் உடையானே.

உரை: எல்லாமுடைய பெருமானே, இரவெல்லாம் துன்புற்றுக் கிடந்த எனக்குப் பொழுது விடிந்தும் அது நீங்காமையால் இனிச் சிறிது பொழுதும் பொறுக்க மாட்டேன் என்று சொல்லி நின் திருமுன் நின்று கண்களில் நீர் நிறைந் தொழுக அழுதும், நின்னைக் கூவி அரற்றியும் சோர்கின்றேன்; துன்பம் துடைக்கும் உன்னுடைய திருச்செவியில் என்னுடைய அழுகுரல் கேட்க வில்லையோ; பலமுறையும் நிலத்தை உழுது மெலிவுற்ற மாடு போன்ற யான், உன்னைத் தவிர துணையாவர் வேறு ஒருவரையும் காணேன்; நின் திருவருள் அளித்தருள்க. எ று.

பொழுது விடிந்தது என்றதனால் இரவெல்லாம் உறக்கமின்றி வருந் தினமை பெற்றும். இனிச் சிறிதும் பொறுத்து முடியேன் என்றதனால் இரவு முழுதும் துன்பத்தால் வருந்தினமை பெறப்படும். அழுது அரற்று மிடத்துக் கண்கள் நீர் சுரந்து சொரிதலின், "அழுது விழிகள் நீர் துளும்ப" என்றும், அரற்றிய திறம் புலப்பட, "கூவிக் கூவி அயர்கின்றேன்" என்றும்

இயம்புகின்ருர். துன்புற்று வருந்துவோர் துயர் சொல்லி முடிப்பதற்குள் அத்துயர்க்கு ஏதுவாகிய குற்றத்தைப் போக்கும் அருளாளனதலின், சிவ பெருமானே நோக்கிப் "பழுது தவிர்க்கும் திருச் செவிக்குள் பட்ட தில்லையோ" எனப் பகர்கின்ருர். பலகாலும் உழுத எருது சோர்வுறுதல் கண்கூடாதலின், பன்முறையும் துன்புற்றுச் சோர்ந்த தமக்கு அதனே உவமம் செய்கின்ருர். நின்னேயன்றி அமையேனுதலின் எனக்கு வேறு துணையில்லை என்றற்கு, "துணை வேறறியேன் உடையானே" என்று கூறுகின்ருர். பலகாலும் அழுதரற்றி முறையிட்டும் திருவருள் எய்தாமையின் வேறு துணையினை நினைக்கும் நிலைமை பிறந்தமை தோன்ற, "துணை வேறறியேன்" என்று சொல்லுகின்ருர்.

இதனுல், வேட்ட பொழுதில் திருவருள் விரைந்து எய்தாமைக்குத் துணிவுற்று வேறு துணை யறியேன் என்று சொல்லியவாரும். (1)

3592. உடையாய் திருஅம் பலத்தாடல்
ஒருவா ஒருவா உலவாத
கொடையாய் எனநான் நின்றனையே
கூவிக் கூவி அயர்கின்றேன்
தடையா யினதீர்த் தருளாதே
தாழ்க்கில் அழகோ புலைநாயிற்
கடையாய்த் திரிந்தேன் கலங்குதல்சம்
மதமோ கருணைக் கருத்தினுக்கே.

உரை: என்னை அடிமையாக வுடைய பெருமானே, தில்லையம் பலத்தில் திருக்கூத்தாடுகின்ற ஒருவனே, என்றும் நீங்குதலும் குறைதலு மில்லாத அருட் கொடையை யுடையவனே என்று நான் நின்னையே நோக்கிக் கூவிக் கூவி அழைத்துச் சோர்வுறுகின்றேன்; என் முயற்சிக்குத் தடை ஆகியவற்றைத் தீர்ப்பதின்றிக் கால தாமதம் செய்குவது உனக்கு அழகாகுமோ; நாயினும் கடைப்பட்டவனுய் உலகியலில் திரிந்து நான் மனம் கலங்குவது உன்னுடைய அருள் நிறைந்த திருவுள்ளத்திற்கு இசைவாகுமோ கூறுக, எ.று.

உயிர்வகை யனைத்தையும் தனக்கு அடிமையாக யுடைய பெருமானு தலால், சிவனை, "பெருமான்" என்கின்ருர். தில்லைப் பொன்னம்பலத்தில் உயிர்கள் உய்தி பெறும் பொருட்டு ஒப்பற்ற திருக்கூத் தாடுகின்ருனு தலால், "திருவம்பலத்தாடல் ஒருவா" என வுரைக்கின்ருர். "ஒருவா உலவாத கொடையாய்" என்பதில் ஒருவல் - நீங்குதல். உவத்தல் - குறைதல். பிற தேவதேவர்களை நோக்காமல் உன் திருவருள் ஒன்றனையே நோக்கி உன்னைப் பலகாலும் கூவியழைத்து நினது அருள் எய்தாமை யால் சோர்வடைகின்றேன் என்பாராய், "நான் நின்றனையே கூவிக் கூவி அயர்கின்றேன்" என்கின்ருர். திருவருட் பேற்றிற்காக நான் செய்யும் முயற்சிகள் பலவும் பல்வேறு தடைகளை யுற்று அதனைப் பெருவாறு கால தாமதம் செய்வதால் நலமொன்றும் உனக்கு எய்துவதாக எனக்குத் தோன்றவில்லை என வருத்தமுற்று, "தடையாயின தீர்த் தருளாதே தாழ்க்கில் அழகோ" என்றும், அருட் பேறும் தெளிவும் இன்றி நாயினும் கீழ்மையுற்று மனம் கலங்கி நான் வாடி வருந்தக் காண்பது நின்

திருவுள்ளத்துக்கு உடன்பாடு ஆகுமா என நொந்து கூறலுற்று, "புலை நாயிற் கடையாய்த் திரிந்தேன் கலங்குதல் சம்மதமோ கருணைக் கருத்தினுக்கே" என்றும் அவலிக்கின்றார். புலை நாய் - புலாலுண்ணும் நாய். புலைச் சேரியில் உழலும் நாய் எனினும் அமையும். சம்மதம் - உடன்பாடு. கருணை நிறைந்த உள்ளம் உடையவனுதலின் நான் வாடி வருந்துவதைக் காண விரும்பாது என வற்புறுத்தற்கு, "கருணைக் கருத்தினுக்குச் சம்மதமோ" என்று கூறுகின்றார்.

இதனால், திருவருட் பேற்றுக்குத் தாம் செய்யும் முயற்சிக்கு ஊறு செய்யும் தடைகளைத் தீர்த்தருளாமை நன்றன்று என விண்ணப்பித்த வாறும். (2)

3593. கருணைக் கருத்து மலர்ந்தெனது
கலக்க மனைத்துந் தவிர்த்தேஇத்
தருணத் தருளா விடில்அடியேன்
தரியேன் தளர்வேன் தளர்வதுதான்
அருணச் சுடரே நின்னருளுக்
கழகோ அழகென் றிருப்பாயேல்
தெருணற் பதஞ்சார் அன்பரெலாம்
சிரிப்பார் நானும் திகைப்பேனே.

உரை : சிவந்த சுடர் போன்ற திருமேனியை யுடைய பெருமானே, அருள் நிறைந்த திருவுள்ளம் கருணையால் விரிந்து என்னுடைய மனக் கலக்கங்கள் அத்தனையும் போக்கி இச்சமயத்தில் நினது திருவருள் நலத்தை நல்காவிடில் அடியவனுகிய யான் உற்று வருந்தும் துன்பத்தைப் பொறுக்காமல் தளர்ந்து ஒழிவேன்; யான் இவ்வாறு தளர்வது உன்னுடைய பேரருளுக்கு அழகாகாது; அழகே என்று வாளா இருப்பாயானால் ஞான நலம் சிறந்த நின் திருவடியைச் சார்கின்ற மெய்யன்பர்கள் எல்லாம் உன்னையும் என்னையும் கண்டு நகைப்பார்கள்; நானும் திகைத்து வருந்துவேன். எ.று.

அருணச் சுடர் - சிவந்த தீச்சுடர். கருணைக் கருத்து - கருணை நிறைந்த திருவுள்ளம். மலர்தல் - விரிதல். தருணம் - சமயம். என் மனக் கலக்கத்தைப் போக்குதற் கரிய சமய மறிந்து போக்கி அருளாவிடில் எய்தக் கடவ துன்பங்களை யான் சிறிதும் பொறுக்க மாட்டேன் என்பாராய், "கலக்க மனைத்தும் தவிர்த்தே இத்தருணத் தருளாவிடில் அடியேன் தரியேன் தளர்வேன்" எனச் சாற்றுகின்றார். தன்னைச் சார்ந்த அடியார்கள் துன்ப மேலீட்டால் தளர்வு மிக்கு வருந்தக் காண்பது தலைமைப் பெருமானுகிய நினது அருள் நலத்துக்கு ஒருகாலும் அழகு தாராது என்பாராய், "அடி தளர்வதுதான் நின்னருளுக்கு அழகோ" என்றும், அங்ஙனம் இருந்த வழி உளதாகும் விளைவு இது வென்பார், "அழகு என்றிருப்பாயேல் தெருணற் பதஞ்சார் அன்பரெலாம் சிரிப்பார் நானும் திகைப்பேனே" என்றும் கூறுகின்றார். தெருள் - சிவஞானத் தெளிவு. பதம் - திருவடி. பதஞ்சார் அன்பர் - நின் திருவடியல்லது பிறிது யாதும் சிந்தியாது ஒழுகும் மெய்யன்பர். திகைத்தல் - செயலறுதல்.

இதனால், தமக்குற்ற மனக் கலக்கத்தைப் போக்குதல் வேண்டுமென ஏதுக் காட்டி வற்புறுத்தவாரும். (3)

3594. திகைப்பார் திகைக்க நான்சிறிதும்
திகையேன் எனநின் திருவடிக்கே
வகைப்பா மாலை சூட்டுகின்றேன்
மற்றென் றறியேன் சிறியேற்குத்
தகைப்பா ரிடைஇத் தருணத்தே
தாராய் எனிலோ பிறரெல்லாம்
நகைப்பார் நகைக்க உடம்பினைவைத்
திருத்தல் அழகோ நாயகனே.

உரை : நாயகனே, என் திகைப்பைக் கண்டு அன்பர்கள் பலரும் திகைப்பாராயினும் நான் சிறிதும் திகைக்க மாட்டேன் என்று நின் திருவடிக்கண் பல்வகைப் பாமாலைகளைத் தொகுத் தணிகின்றேன்; வேறு செயல் வகை யொன்றும் யான் அறியேன்; அறியாமையால் சிறுமை யுடைய எனக்கு இவ்வுலகின்கண் இப்பொழுதே நின் திருவருட் பேற்றுல் எய்தும் தகைமையினை நல்காயாயின் பிறரெல்லாம் என்னைக் கண்டு நகைப்பார்கள்; பிறர் நகைக்கும் அளவிற்கு இவ்வுடம்பினைச் சுமந்திருத் தல் அழகாகா தன்றே. எ.று.

அன்பர்கள் வருந்தக் கண்டும் நீ அருளாது இருப்பது மெய்யன்பர் களுக்கு மனத்தின்கண் திகைப்பை யுண்டு பண்ணும் என்பார், "திகைப் பார் திகைக்க" என்றும், அப்பெருமக்கள் திகைப்பினும் யான் திகைப்புறுது நின் திருவடியே பொருளாகக் கொண்டு பல்வேறு வகைச் சொல் மாலைகளைப் பாடி யணிந்து பரவுவேன் என்பாராய், "நின் திருவடிக்கே வகைப் பாமாலை சூட்டுகின்றேன்" என்றும் இயம்புகின்றார். இவ்வாறு திருவடியே பொருளாகப் பல்வகைப் பாமாலைகளைப் பாடுவ தன்றி வேறு செயலறியாத சிறுமை யுடையேன் என்றற்கு, "மற்றென் றறியேன் சிறியேன்" எனக் கூறுகின்றார். தகை - திருவருட் பேற்றுல் விளையும் ஞானப் பெருமை. இத்தருணத்தே தகை தாராய் எனின் என இயையும். சொல்மாலைகள் பல பாடித் தொடுத்தும் அருள் ஞானப் பேறு இல்லை யெனின் அறிஞர் உலகம் என்னைக் கண்டு நகைக்கும் என்பார், "பிற ரெல்லாம் நகைப்பார்" என நவில்கின்றார். பிறர் கண்டு எள்ளி நகைக்க வாழ்வது நல்வாழ்வாகா தென்ற உலகியல் அறத்தை எடுத் தோதி அருள் நல்குமாறு வற்புறுத்துகின்றாராதலின், "நகைக்க உடம்பினை வைத்திருத்தல் அழகோ" என்று சொல்லி வருந்துகின்றார்.

இதனால், பாடும் பரிசு ஒன்றே யுடையனாதலின் எனக்கு நீ அருள் நல்காவிடில் என்னைப் பலரும் இகழ்ந்து நகைப்ப ரென அருட் பேற்றை வலியுறுத்தவாரும். (4)

3595. நாயிற் கடையேன் கலக்கமெலாம்
தவிர்த்து னினது நல்லருளே
ஈயிற் கருணைப் பெருங்கடலே
என்னே கெடுவ தியற்கையிலே

தாயிற் பெரிதும் தயவுடையான்
குற்றம் புரிந்தோன் தன்னையும்ஓர்
சேயிற் கருதி அணைத்தான்என்
றுரைப்பா ருனைத்தான் தெரிந்தோரே.

உரை : கருணை நிறைந்த பெரிய கடல் போன்ற பெருமானே, நாயினும் கடைப்பட்டவனுகிய எனது மனவருத்தம் எல்லாவற்றையும் போக்கி நல்லதாகிய உனது திருவருளை எனக்கு அளிப்பாயாயின் உனக்கு நட்டமாவது யாதாம்; இயல்பாகவே தாயினும் சிறந்த தயா வுடையவனுகிய சிவபெருமான், குற்றம் செய்தவனையும் ஒரு குழவி யாகக் கருதித் தன் அருளில் சேர்த்துக் கொண்டான் என்று மெய்ம்மை யுணர்ந்தோர் உன்னைப் புகழ்வார் காண். எ.று.

கீழ்மையுற்ற நாயினும் கீழானவன் எனத் தன்னைப் புலப்படுப்பாராய் வடலூர் வள்ளல், "நாயிற் கடையேன்" என நவில்கின்றார். உனது திருவருள் நலத்தை எனக்கு நல்குவாயாயின் அதனால் உனக்கு நட்டமாவது ஒன்றுமில்லை என்பார், "கலக்கமெலாம் தவிர்த்து நினது நல்லருளை ஈயின் என்னை கெடுவது" என்று கூறுகின்றார். இக் கருத்தையே "குன்றே யனைய குற்றங்கள் குணமாம் என்றே நீ கொண்டால் என்தான் கெட்டது இரங்கிடாய்" (குழைத்த) என்று மணிவாசகப் பெருமான் உரைப்பது காண்க. கெடுவ தொன்று மில்லை யாயினும் உனக்கு மெய்யுணர்ந்தோர் புகழும் புகழ் உண்டாம் என்பார், "இயற்கையிலே தாயிற் பெரிதும் தயை யுடையான் குற்றம் புரிந்தோன் தன்னையும் ஓர் சேயிற் கருதி யணைத்தான் என்று உரைப்பார் உனைத் தான் தெரிந்தோரே" என்று உரைக்கின்றார். "தாயிற் சிறந்த தயாவுடைய தத்துவன்" (சிவபு) என்று மணிவாசகர் முதலிய சான்றோர் பராவுதலின் தாயிற் சிறந்த தயா வுடையான் என்று பராவுகின்றார். தயவு மிக வுடையனுதலின் குற்றம் புரிந்தோர் யாவராயினும் அவர் களைத் தான் பெற்ற சேய் எனக் கருதி ஆதரிக்கின்றான் என்று சிவத்தின் மெய்ம்மை யுணர்ந்தோர் உரைக்கின்றார்கள் என மொழிவாராய், "உரைப்பார் உனைத்தான் தெரிந்தோரே" என ஓதுகின்றார். (5)

இதனால், கருணை வள்ளலாகிய சிவபெருமான் எளியோர்க்கு அருள் புரிவதால் எய்தும் சிறப்பை எடுத்துரைத்தவாறும்.

3596. தெரிந்த பெரியர்க் கருள்புரிதல்
சிறப்பென் றுரைத்த தெய்வமறை
திரிந்த சிறியர்க் கருள்புரிதல்
சிறப்பிற் சிறப்பென் றுரைத்தனவே
புரிந்தம் மறையைப் புகன்றவனும்
நீயே என்றுல் புண்ணியனே
விரிந்த மனத்துச் சிறியேனுக்
கிரங்கி அருளல் வேண்டாவோ.

உரை : புண்ணிய மூர்த்தியாகிய பெருமானே, ஆய்ந்து கொண்ட பெரியோர்களுக்கு வேண்டுவன வருளுதல் சிறப்புத் தருவதாம் என்று

உரைக்கின்ற தெய்வத் தன்மை பொருந்திய வேதங்கள் நன்னெறி யினின்றும் மாறிச் சிறுமை யுற்றவர்க்கு அருளாதரவு செய்தல் சிறப்புப் பலவற்றிலுள்ளும் மேன்மை யுடையதாம் என உரைக்கின்றன; அவ் வேதங்களை விரும்பி உலகிற்கு அளித்தவனும் நீயேயாதலால், விரிந்த மனதை யுடைய சிறியவனுகிய எனக்கு இரங்கி அருளுதல் வேண்டுவது ஒன்று அன்றே. எ.று.

பெருமைப் பண்புகளை ஆய்ந்து கொண்ட பெரியவர்களைத் "தெரிந்த பெரியர்" எனச் செப்புகின்றார். "அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரி யாரைப் பேணித் தமராக் கொளல்" (குறள்) என்று தெய்வத் திருமறை கூறுவதால், "தெரிந்த பெரியர்க் கருள் புரிதல் சிறப்பென்று உரைத்த தெய்வ மறை" என்று சொல்லுகின்றார். பெரியோர்க் குரிய பெருநெறியை மேற் கொள்ளாது வேறுபட்டவர்களை, "திரிந்த சிறியர்" என்று தெரிவிக் கின்றார். பெரியோர்க்கு அருள் புரிவதினும் குணஞ் செயல்களால் சிறியரா யினோர்க்கு அருள் புரிவது எல்லாச் சிறப்புக்களில் தலையாயது என வேதங்கள் உரைப்பது பற்றி, "சிறியர்க் கருள் புரிதல் சிறப்பிற் சிறப்பென்று உரைத்தன" என்று கூறுகின்றார். வேத மொழிகள் அனைத்தும் சான்றோர் தமது சால்பினால் அறிந்து உரைப்பதாதலால் அவர்கள் கூற்றினை மறை மேலேற்றி, "தெய்வமறை உரைத்தன" என இயம்புகின்றார். வேதங்களை முதன் முதலில் உரைத்த பெருமானதல் பற்றி, "புரிந்து மறையைப் புகன்றவனும் நீயே" எனப் புகல்கின்றார். வேதத்தை யுரைத்த முதல்வனுகிய நீ வேத விதிப்படி ஒழுகுதல் வேண்டு மென்பார், "விரிந்த மனத்துச் சிறியேனுக்கு இரங்கி அருளல் வேண்டாவோ" என விளம்புகின்றார்.

இதனால், பண்பு திரிந்த சிறியவனுயினும் எனக்கு அருளுவது வேத நெறிக்கு ஒத்ததே என விளம்பியவாறும். (6)

3597. வேண்டார் உளரோ நின்னருளை
மேலோ ரன்றிக் கீழோரும்
ஈண்டார் வதற்கு வேண்டினரால்
இன்று புதிதோ யான்வேண்டல்
தூண்டா விளக்கே திருப்பொதுவிற்
சோதி மணியே ஆரெருடுமுன்
ருண்டா வதிலே முன்னென்னை
ஆண்டாய் கருணை அளித்தருளே.

உரை : தூண்டா விளக்காய்த் திகழ்பவனே, தில்லையம்பலத்தில் விளங்குகின்ற பேரொளியை யுடைய மாணிக்க மணியாய் இலங்குபவனே, முன்பு ஒன்பதாம் வயதிலேயே என்னை யாண்டு கொண்ட சிவமே, உனது திருவருளை விரும்பாதவர் யாவருளர்; மேன் மக்களும் கீழ்மக்களுமாகிய யாவரும் கூடி யிருந்து நின் திருவருள் நலத்தை நுகர்தற்கு விரும்புகின்றார்களாதலால், உன் திருவருள் நலத்தை யான் விரும்பிக் கேட்பது புதுமை யன்று; அதனை எனக்கு அளித்து அருள்வாயாக. எ.று.

பிறரால் தூண்டப் படாது தானே நின்றெரிரும் விளக்கு, "தூண்டா விளக்கு" எனப்படும். தில்லையிலுள்ள பொன்னம்பலத்தைத் "திருப் பொது" என்று புகழ்கின்றார். சோதி மணி என்பது ஒளி மிக்க மாணிக்க மணி மேல் நின்றது. யாவராலும் விரும்பப்படுவதாகலின், சிவபெருமான் திருவருளே "வேண்டார் உளரோ நின்னருளே" எனவும், அக்கருத்தினை வற்புறுத்துவதற்கு, "மேலார் அன்றிக் கீழோரும் ஈண்டார்வதற்கு வேண்டினரால்" எனவும் உரைக்கின்றார். எக்காலத்தும் எல்லோராலும் வேண்டப்படுவதாகலின் தான் வேண்டுவது புதுமை யன்று என்பாராய், "இன்று புதிதோ யான் வேண்டல்" என எடுத்துரைக்கின்றார். ஆருரு மூன்றாண்டு ஆவதிலே முன்னென்னை ஆண்டாய் என்பது ஒன்பதாம் வயதிலேயே சிவத்தின் திருவருள் அறிவும் பற்றும் உண்டான செய்தியைக் குறிக்கின்றது. இளமையிலேயே எல்லா நன்மக்களாலும் வேண்டப்படுகின்ற சிவஞான வுணர்வு எய்தப் பெற்றவனுதலின் எனக்கு அருளுவது இன்றியமையாது என்பார், "கருணை அளித்தருளே" என்று கூறுகின்றார்.

இதனால், இளமையிலே ஆட்கொள்ளப் பட்டமை கூறி அருள் நலம் வேண்டியவாறும். (7)

3598. அருளே வடிவாம் அரசேநீ
அருளா விடில்இவ் வடியேனுக்
கிருளே தொலைய அருளளிப்பார்
எவரே எல்லாம் வல்லோய்நின்
பொருளேய் வடிவிற் கலைஒன்றே
புறத்தும் அகத்தும் புணர்ந்தெங்குந்
தெருளே யுறஎத் தலைவருக்குஞ்
சிறந்த அருளாய்த் திகழ்வதுவே.

உரை : எல்லாம் வல்ல பரம்பொருளே, அருளே திருமேனியாக யுடைய அருளரசே, நீ அருள் செய்யாவிடில் அடியவனுகிய எனக்குத் துன்ப விருள் நீங்குமாறு அருள் ஞானவொளி நல்குவார் யாவர், ஒருவரு மில்லை யன்றே; நினது மெய்ம்மை நிறைந்த வடிவின்கண் திகழ்ந்து விளங்கும் ஞானம் ஒன்றே அகத்தும் புறத்தும் கலந்து நிறைந்து எங்கும் தெளிவே பெற எத்தகைய தலைவருக்கும் சிறந்த ஞான வொளியாய்த் திகழ்வதாகும். எ.று.

சிவனுடைய திருமேனி யருளால் ஆகியதாகலின், "அருளே வடிவாம் அரசே" எனப் புகழ்கின்றார். அருள் ஞானம் எய்தாவிடத்து மலவிருள் நிறைந்து உய்தி பெருவாறு தடை செய்யுமாதலின், "இவ்வடியேனுக்கு இருளே தொலைய அருளளிப்பார் எவரே" என உரைக்கின்றார். எளியனுகிய எனது மலவிருள் போக்கத் தகுவதன்று என நீ புகலுதற்கும் இடமில்லை என யாப்புறுத்தற்கு "எல்லாம் வல்லோய்" என உரைக்கின்றார். சிவத்தின் திருமேனியில் பிறங்கும் கலைத்திறம் ஒன்றே காண்கின்ற எத்தகைய மேலோர்க்கும் மெய்ம்மை யுணர்வை அளிக்கும் மேன்மை யுடையதாம் என்பாராய், "நின் பொருளேய் வடிவிற் கலை ஒன்றே புறத்தும் அகத்தும் புணர்ந்து எங்கும் தெருளேயுற எத் தலைவருக்கும் சிறந்த

அருளாய்த் திகழ்வதுவே" எனத் தெரிவிக்கின்றார். ஈண்டு அருள் என்பது திருவருள் ஞானம் என்பது அறிக.

இதனால், வேண்டப்படுகின்ற திருவருள் ஞானத்தின் சிறப்புத் தெரிவித்தவாறும். (8)

3599. திகழ்ந்தார் கின்ற திருப்பொதுவில்
சிவமே நின்னைத் தெரிந்துகொண்டு
புகழ்ந்தார் தம்மைப் பொறுத்திடவும்
புன்மை அறிவால் பொய்உரைத்தே
இகழ்ந்தேன் தனைக்கீழ் வீழ்த்திடவும்
என்னே புவிக்கிங் கிசைத்திலீ
அகழ்ந்தார் தமையும் பொறுக்கஎன
அமைத்தாய் எல்லாம் அமைத்தாயே.

உரை : உலகங்கள் அத்தனையும் படைத்தமைத்தவனே, தில்லையம் பலத்தில் ஒளிர்ந்து எங்கும் நிறைகின்ற சிவ பரம்பொருளே, நின்னுடைய மெய்ம்மைத் தன்மையை நன்கு அறிந்து நின்னைப் புகழ்கின்ற பெருமக்களது குற்றங்களைப் பொறுத்தாளவும், புல்லிய தம்முடைய அறிவால் பொய் பல புகன்று நின்னை யிகழ்ந் தொழுகிய என்னைக் கீழே வீழ்த்திவிடவும் நிலமகட்கு நீ உரைத்தாய் இல்லை; தன்னை ஆழமாகத் தோண்டி வருத்துகின்றவர்களையும் பொறுத்தாள்க எனப் பணித்தமைத்தாய் ஆதலால். எ.று.

எல்லா வுலகங்களையும் பொருள்களையும் படைத்துத் தத்தமக்குரிய நெறியில் பிறழாது இலங்குமாறு அமைத்தமை புலப்பட, "எல்லாம் அமைத்தாய்" எனப் பரவுகின்றார். நின்னைப் புகழ்ந்தாரைப் பொறுக்கவும் இகழ்ந்தாரைக் கீழே வீழ்த்தவும் நிலமகட்கு ஆணை யிட்டிலை போலும்; இட்டிருப்பாயேல் என்னை நிலமகள் நடமாட விடாது கீழே வீழ்த்திருப்பள் என்பார், "புகழ்ந்தார் தம்மைப் பொறுத்திடவும் இகழ்ந்தேன்தனைக் கீழ் வீழ்த்திடவும் என்னே புவிக்கிங்கு இசைத்திலை நீ" என உரைக்கின்றார். சிவத்தின் நலமனைத்தையும் நன்கு அறிந்து புகழ்வார் புகழே பொருள்சேர் புகழாதலின், "நின்னைத் தெரிந்து கொண்டு புகழ்ந்தார்" என்றும், உண்மை யுணராது உரைப்பன புகழாகாமையின் "புன்மை யறிவால் பொய் யுரைத்தே இகழ்ந்தேன்" என்றும் எடுத்துரைக்கின்றார். புன்மை யறிவு - குறை யறிவு. குறை யறிவால் உரைப்பது பொய்யாதலால் "புன்மை யறிவால் பொய் யுரைத்து" எனப் புகல்கின்றார். புவி - நிலமகள். "அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வார் பொறுத்தல்தலை" (குறள்) என்று இப்பாட்டின்கண் நயமுற ஓதப்படுவது காண்க. அகழ்வாரைத் தாங்குக என நிலமகளைப் பணித்த நீ, இகழ்வாரை வீழ்த்துக எனப் பணித்தாய் இல்லை போலும் என்பது கருத்து.

இதனால், நிலம் தன்னைத் தாங்கி யிருப்பது இகழ்வாரைத் தாங்குதல் ஒழிக வென இறைவன் கட்டளை யிடாமையால் உய்ந்தேன் என முறையிட்டவாறும். (9)

3600. எல்லாம் வகுத்தாய் எனக்கருளில்
யாரே தடுப்பார் எல்லாஞ்செய்
வல்லான் வகுத்த வண்ணம்என
மகிழ்வார் என்கண் மணியேஎன்
சொல்லா னவையும் அணிந்துகொண்ட
துரையே சோதித் திருப்பொதுவில்
நல்லாய் கருணை நடத்தரசே
தருணம் இதுநீ நயந்தருளே.

உரை : எல்லாத் தத்துவ தாத்விகங்களையும் படைத்து முறை செய்துள்ள பெருமானே, என் கண்மணி போன்றவனே, என் சொற் களால் ஆகிய பாட்டுக்கள் அனைத்தையும் ஏன்று கொண்ட தலைவனே, ஞான வொளி திகழும் தில்லையம்பலத்தில் எழுந்தருளும் நல்லவனே, அருட் கூத்தாடும் அரசே, நீ எனக்கு அருள் புரிவாயாயின் உன்னைத் தடுப்பவர் ஒருவருமிலர்; யாவரும் எல்லாம் செய வல்லவனுதலின் அவன் வகுத்தபடி இதுவெனக் கண்டு உவகை மிகுவார்கள்; ஆதலால், இது சமயமாதலின் என்னை விரும்பி அருள் ஞானம் நல்குக. எ.று.

தத்துவம் முப்பத்தாறும், தாத்விகம் அறுபதும் இறைவன் படைத்து முறை செய்யப்பட்டனவாதலால், "எல்லாம் வகுத்தாய்" என உரைக் கின்றார். கண்ணிற்கு ஒளி நல்கும் மணி போல உயிர்கட்கு உண்மை யுணர்வை அளிப்பதால், "என் கண்மணியே" எனக் கூறுகின்றார். தாம் பாடுகின்ற பாட்டுக்கள் அத்தனையும் இனிய சொற்களால் அமைந்து பொருளால் உயர்ந்து படிப்போருக்கும் பாடுவோருக்கும் கேட்போர்க்கும் இன்பம் செய்வதை யுணர்கின்றாராதலால், "என் சொல்லானவையும் அணிந்து கொண்ட துரையே" என்று சொல்லுகின்றார். பொன் வேய்ந்த திருவம்பலமாதலின் இயற்கை யொளியும், சிவபெருமான் ஞான நடனம் புரியும் இடமாதலின் ஞான வொளியும் கொண்டு திகழ்வது பற்றி, "சோதித் திருப்பொது வில்" என்று கூறுகின்றார். சிவபெருமானது திருக் கூத்து உயிர்கட்கு அருள் புரிவது நோக்கமாக நிகழ்வதாகலின், "கருணை நடத்தரசே" என்று புகழ்கின்றார். தனக்குத் திருவருள் ஞானத்தை அருளாமைக்குக் காரணம் யாதா மென எண்ணுகின்றவர் தடுப்பார் உளரோ என ஐயுற்றுத் தெளிகின்றாராதலின், "எனக்கு அருளில் யாரே தடுப்பார்" எனவும், தடுக்கும் மனமுடையாரும் அருளுகின்ற உன்னை நோக்கி எல்லாம் செய்ய வல்ல இறைவன் செயலாதலின் அதனை யாவரே தடுக்க முடியும் என நினைந்து ஒழுகுவர் என்பார், "எல்லாம் செய் வல்லான் வகுத்த வண்ணம்" என உரைக்கின்றார்.

இதனால், எல்லாம் செய்வல்லானுகிய நீ அருளிய வழி யாவரும் கண்டு மகிழ்வர் என உரைத்தவாறும். (10)

3601. நயந்த கருணை நடத்தரசே
ஞான அமுதே நல்லோர்கள்
வியந்த மணியே மெய்யறிவாம்
விளக்கே என்னை விதித்தோனே

கயந்த மனத்தேன் எனினும்மிகக்
கலங்கி நரகக் கடுங்கடையில்
பயந்த பொழுதும் தாழ்த்திருத்தல்
அழகோ கடைக்கண் பார்த்தருளே.

உரை : விரும்பப் படுகின்ற அருட் கூத்தினைச் செய்கின்ற அருளரசே, ஞான வமுதமே, நல்லறிஞர்கள் வியந்து போற்றுகின்ற மாணிக்க மாமணியே, மெய்யறிவாகிய ஞான விளக்கே; என்னைப் படைத்தருளிய பெருமானே, மெலிந்த மனமுடையவனையினும் எய்தக் கடவ நரகமாகிய கீழ்ப்பட்ட நிலைக்கு அஞ்சிய பொழுதும் அஞ்சி நடுங்கும் இப்பொழுதும் நீ காலதாமதம் செய்தல் அழகாகாது; நினது கடைக் கண்ணால் எளியேனைப் பார்த்து அருள் புரிவாயாக. எ.று.

இறைவனது திருவருட் கூத்து எல்லாராலும் விரும்பப் படுவதாகலின், "நயந்த கருணை நடத்தரசே" என நவில்கின்றார். ஞானமாகிய அமுதம் போல்வதாகலின், "ஞான அமுதே" என உரைக்கின்றார். "ஞானத் திரளாய் நின்ற பெருமான்" (அண்ணு) என்று ஞானசம்பந்தர் கூறுவது காண்க. சிவ ஞானத்தால் நல்லவர் ஆகியவர் வியந்து பாராட்டும் மாணிக்க மணியாகத் திகழ்வதால் சிவனை "நல்லோர்கள் வியந்த மணியே" என விளம்புகிறார். உயிர்கட்கு உண்மை யறிவு தந்து உலகை ஒளிரச் செய்வதால் "மெய்யறிவாம் விளக்கே" என்று ஓதுகின்றார். உடல், கருவி, கரணங்களைப் படைத்து அவற்றோடு கூடி வாழப் பணித்துள்ளமைபற்றி, "என்னை விதித்தோனே" என இயம்புகிறார். கலங்கி மெலிவுற்ற மனத்தை யுடைமை தோன்ற, "கயந்த மனத்தேன்" என வுரைக்கின்றார். கயந்த மனம் - கசந்த மனம் என இந்நாளில் வழங்கும். எல்லா உலகுகளிலும் கடைப்பட்ட இடமாதலின் நரக உலகை, "நரகக் கடுங்கடை" என மொழிகின்றார். நரக வேதனைக்கு அஞ்சி நடுங்குகின்ற பொழுது அருள் செய்யாது காலம் தாழ்த்தல் அருளாளர்க்கு அழகன்று ஆதலின், "தாழ்த்திருத்தல் அழகோ" என்றும், அச்சம் நீங்குதற் பொருட்டுக் "கடைக்கண் பார்த்தருள்" என்றும் முறையிடுகின்றார்.

இதனால், நரக வேதனைக்கு அஞ்சி யிருக்கும் தமக்கு அச்சம் நீங்க அருள் புரிக என வேண்டியவாறும். (11)

3602. பார்த்தார் இரங்கச் சிறியேன்நான்
பாவி மனத்தால் பட்டதுயர்
தீர்த்தாய் அந்நாள் அதுதொடங்கித்
தெய்வந் துணைஎன் றிருக்கின்றேன்
சேர்த்தார் உலகில் இந்நாளில்
சிறியேன் தனைவெந் துயர்ப்பாவி
ஈர்த்தால் அதுகண் டிருப்பதுவோ
கருணைக் கழகிங் கெந்தாயே.

உரை : எந்தையே, காண்பவர் மனம் இரங்கத் தக்க நிலையில் சிறுமையுற்று வருந்தும் நான் பாவியாகிய என் மனத்தால் எய்திய துன்பங்களை அந்நாளில் தீர்த்து என்னை ஆதரித்தாய்; அது தொடங்கித்

தெய்வ மல்லது வேறு துணை ஒன்றில்லை யென்ற கருத்துடன் இருந்து ஒழிகின்றேன்; நீயும் என்னை இவ்வுலகியல் வாழ்வில் சேர்த்து விட்டாய். இக்காலத்தில் வெவ்விய துயரமாகிய பாவி போந்து என்னைத் தன்பால் ஈர்க்கின்றது; அதனைக் கண்டும் நீ வாழா யிருப்பது நின் திருவருட்கு அழகாகுமா. எ.று.

பாவி மனம் - பாவத்தைச் செய்விக்கும் மனம். எல்லாச் செய்வினை கட்கும் மனம் காரணமாதலின், "பாவி மனம்" எனக் குறிக்கின்றார். மனம் தெளிவிழந்து துயர்க்காளாகிய போது தெய்வத் திருவருள் ஞானம் எய்தித் தெளிவு நல்கினமை பற்றி, "மனத்தால் பட்ட துயர் தீர்த்தாய் அந்நாள் அது தொடங்கித் தெய்வம் துணை என்றிருக்கின்றேன்" என்று கூறுகின்றார். தெய்வமே துணை என்ற கருத்து உள்ளத்தில் நிலைபெற்ற போதும் உலகியலில் கலந்து வாழ வேண்டி யிருத்தலின், "சேர்த்தாய் உலகில்" என வுரைக்கின்றார். சேர்த்தார் உலகில் என்பது பாடமாயின் உலகவர் என்னை இவ்வுலக வாழ்வில் சேர்த்து தொழிந்தனர் என்று பொருள் கொள்க. அறிவாலும் துன்பத்தாலும் சிறுமை யுற்றுக் கிடக் கின்றேன் என்ற கருத்தை வற்புறுத்துதற்கு மறுவலும் தம்மைச் சிறியேன் எனத் தெரிவிக்கின்றார். உலகியலிலும் தாம் மிக்க பெருந் துயர் கண்டு வருந்துவது தோன்ற, "வெந்துயர்ப் பாவி ஈர்த்தால்" என விளம்புகின்றார். இவ்வாறு துயர்க் கடலில் வீழ்ந்து வருந்தும் என்னை அது நீங்கியுய்தற்கு அருளாது நீ வாழா இருப்பது முறையன்று எனத் தெரிவிப்பாராய், "அது கண்டிருப்பதுவோ கருணைக்கு அழகு இங்கு" என்று கூறுகின்றார்.

இதனால், துயர் நீக்கி ஆண்டருளுதல் வேண்டுமாறு முறை யிட்டவாறும். (12)

3603. தாயே எனைத்தான் தந்தவனே
தலைவா ஞான சபாபதியே
பேயேன் செய்த பெருங்குற்றம்
பொறுத்தாட் கொண்ட பெரியோனே
நீயே இந்நாள் முகமறியார்
நிலையில் இருந்தால் நீடுலகில்
நாயே அனையேன் எவர்துணைஎன்
றெங்கே புகுவேன் நவிலாயே.

உரை: தாயாய் என்னை யுலகில் பிறப்பித்தவனே, உலகுயிர் கட்குத் தலைவனே, ஞான சபைக்கு முதல்வனே, பேய்த் தன்மையை யுடைய நான் செய்த பெரிய குற்றங்களைப் பொறுத்து ஆண்டு கொண்ட பெருமையை யுடையவனே, இந்நாளில் முகமறியாதவருடைய புறக் கணிப்பு நிலையில் நீ இருப்பாயானால், நீண்ட இவ்வுலகில் நாய் போன்ற யான் யாரைத் துணை கொண்டு எங்கே போவேன் கூறுக. எ.று.

"தாயாகிய உலகங்களை நிலைபேறு செய்தலைவன்" (முல்லைவாயில்) என ஞானசம்பந்தர் முதலியோர் ஓதுவதால், "தாயே எனைத்தான் தந்தவனே" என்றும், உலகுயிர்கள் அனைத்திற்கும் தலைவனுதல் தோன்றத்

"தலைவா" என்றும் சாற்றுகின்றார். தில்லையிலுள்ள ஞான சபைக்குத் தலைவனுகவும் முதல்வனுகவும் திகழ்ந்து ஞானத் திருக்கூத்தை நடத்துவதால் 'ஞான சபாபதியே' என நவில்கின்றார். பெரிய குற்றங்கள் பல செய்கின்றமை புலப்ப, "பேயேன் செய்த பெருங் குற்றம்" என்றும், அக் குற்றங்களால் மயக்க வாதனையுற்று வருந்தாவாறு நல்லுணர்வும் சிவநேயமும் உள்ளத்தில் நிலவுதல் பற்றி, "குற்றம் பொறுத் தாட்கொண்ட பெரியோனே" என்றும் பேசுகின்றார். சிறியோர் தம் சிறுமையால் செய்த பிழைகளைப் பெரியோர் தமது பெருமையால் பொறுத்து ஆட்கொள்ளுதல் இயல்பாதல் பற்றி, "ஆட்கொண்ட பெரியோனே" என வுரைக்கின்றார். முகமறியார் - முன்னற் கண்டறியாதார். முன்பு அறியாதவரைக் காணின் பராமுகமாய் இருத்தல் உலகியல்பாதலின், "முகமறியார் நிலையில் நீ இருந்தால்" என்று கூறுகின்றார். கீழ்மைப் பண்புடைமை பற்றித் தம்மை, "நாயே யனையேன்" என வடலூர் வள்ளல் குறிக்கின்றார். எல்லாம் வல்லவனும் எல்லார்க்கும் தலைவனுமாகிய சிவ பரம்பொருள் அல்லது துணையாவாரும் புகலிடமாவாரும் பிறர் யாருமின்மையின், "எவர் துணை என்று எங்கே புகுவேன்" என முறையிடுகின்றார்.

இதனுல், சிவ பரம்பொருளை யல்லது தமக்குத் துணையும் புகலும் இல்லையென முறையிட்டவாரும். (13)

3604. ஆயேன் வேதா கமங்களைஞன்
கறியேன் சிறியேன் அவலமிகும்
பேயேன் எனினும் வலிந்தென்னைப்
பெற்ற கருணைப் பெருமானே
நீயே அருள நினைத்தாயேல்
எல்லா நலமும் நிரம்புவன்நான்
காயே எனினும் கனிஆகும்
அன்றே நினது கருணைக்கே.

உரை : அவலமுற்று வருந்தும் பேய் போன்றவன் எனினும் என்னை வலிந்து ஆட்கொண்ட கருணையுருவாகிய பெருமானே, வேதங்கள் ஆகமங்களாகிய ஞான நூல்களை ஆராயாதவன்; மற்றவற்றையும் முற்ற அறியாத சிறுமையுடையவன்; நீயே மனமுவந்து அருள் புரிய நினைப்பாயாயின் எல்லா நலங்களும் நிறைந்து இனிது வாழ்வேன்; நினது திருவருளுக்கு இலக்காகுவது பக்குவம் உள்ள காயாயினும் நல்ல கனியாகுமன்றே. எ.று.

துன்ப மிக்க விடத்து அறிவு கலங்கி மனம் தெளிவின்றிப் பேய் போல் அலைவித்தலின் தம்மை, "அவல மிகும் பேயேன்" என உரைக்கின்றார். வேதமும் ஆகமங்களும் சமய மெய்ஞ்ஞான நூல்களாதலால் அவற்றை முதற்கண் எடுத்து, "வேதாகமங்களை ஆயேன்" என உரைக்கின்றார். பிற நூல்களையும் நான் கடைபோகக் கற்றதில்லை என்பாராய், "நன்கறியேன்" என்றும், அறியாமையால் சிறுமையுற்றவன் என்றற்கு, "சிறியேன்" என்றும் எடுத்துரைக்கின்றார். பேய் போல அவலித்தலைந்தேனுயினும் என்னை உன்னையே நினைந்தொழுகுமாறு ஆட்

கொண்டருளி அதற்கேது உனது திருவருள் என்பாராய், "வலிந்து என்னைப் பெற்ற கருணைப் பெருமானே" என்று கூறுகின்றார். திருவருளால் வரும் பயன் கூறுவார், "நீயே அருள நினைத்தாயேல் எல்லா நலமும் நிரம்புவன் நான்" என்றும், திருவருள் ஞானம் பெறுவதற்குரிய பக்குவம் இல்லாதவனையினும் திருவருள் எய்திய வழி நிறைந்த பக்குவி ஆவேன் என வற்புறுத்தற்கு, "காயே எனினும் கனியாகும் அன்றே நினது கருணைக்கே" எனக் கட்டுரைக்கின்றார்.

இதனால், திருவருள் ஞானப் பேற்றுக்குப் பக்குவா பக்குவம் வேண்டாமை தெரிவித்தவாறும். (14)

3605. கருணை நிதியே என்இரண்டு
கண்ணே கண்ணிற் கலந்தொளிரும்
தெருணை டொளியே வெளியேமெய்ச்
சிவமே சித்த சிகாமணியே
இருணை டுலகில் அறிவின்றி
இருக்கத் தரியேன் இதுதருணம்
தருணை அடியேற் கருட்சோதி
தருவாய் என்முன் வருவாயே.

உரை : தருணத்தில் வந்து பயன் தரும் பரமசிவனே, அருட் செல்வனே, என்னுடைய இரண்டு கண் போன்றவனே, என் இரு கண்களிலும் கலந்து தெளிவு நல்கும் பரவொளியே, ஞான வெளியாக விளங்குபவனே, மெய்ப்பொருளாகிய சிவமே, என் சித்தத்தில் திகழும் முடி மணியே, இருள் நிறைந்த யுலகில் திருவருள் அறிவின்றி யிருக்க வல்லேனல்லேனுதலால் அடியவனுகிய எனக்கு உனது திருவருள் விளக்கத்தைத் தருதற்கு என் முன் வந்தருள்க. எ.று.

கருணைநிதி - கருணையாகிய செல்வம். உடல் உறுப்புக்களில் தலைமை சான்றவையாதலின் அவற்றை உவமம் செய்து, "என் இரண்டு கண்ணே" என்று கூறுகின்றார். கண்ணின் ஒளியிற் கலந்து காணப்படும் பொருள்களைத் தெளிய உணர்தற்கு உதவும் ஞான வொளியாய் விளங்குதலின், "கண்ணிற் கலந்து ஒளிரும் தெருள் நாடும் ஒளியே" எனப் புகல்கின்றார். தத்துவ தாத்துவிகங்கட்கு முதலாகும் மாயைக்கு அதீத நிலையாகிய ஞான வெளியாய் அதன்கண் விளக்கமுறுவது பற்றிச் சிவ பரம் பொருளை "வெளியே" என விளம்புகின்றார். மெய்யுணர்ந்தோரால் தமது நுண்ணுணர்வால் மெய்ப்பொருளால் உணரப்படுவது பற்றிச் சிவபெருமானை, "மெய்ச்சிவமே" எனப் போற்றுகின்றார். சித்தமாகிய அந்தக் கரணத்தின் உச்சியில் மாணிக்க மணியின் ஒளி கொண்டு ஆன்ம ஞானம் காண நிற்றலால் சிவனை, "சித்த சிகாமணியே" எனச் செப்புகின்றார். அறியாமை மிக்கிருத்தல் பற்றி உலகியலை "இருள் நாடு உலகு" என இயம்புகின்றார். இருள் நிறைந்த உலகில் அறிவொளி யின்றி இருத்தல் துன்பத்திற்கு ஏதுவாதலின், "இருள் நாடுலகில் அறிவின்றி இருக்கத் தரியேன்" என இசைக்கின்றார். இப்பொழுது நினது அருள் ஞானவொளி பெற்று உனது உண்மையுணர்ந்து உன்னி உறைகின்றேனுதலால் இத் தருணத்தில் உனது திருவருள் ஞான ஒளியைத் தந்தருள்க என்று

வேண்டுவாராய், "இது தருணம் அடியேற்கு அருட் சோதி தருவாய் என் முன் வருவாய்" என்று முறையிடுகின்றார்.

இதனால், திருவருள் ஞான வொளி நல்குதல் வேண்டும் என விண்ணப்பித்தவாரும். (15)

3606. வருவாய் என்கண் மணிநீஎன்
மனத்திற் குறித்த வண்ணமெலாம்
தருவாய் தருணம் இதுவேமெய்த்
தலைவா ஞான சபாபதியே
உருவாய் சிறிது தாழ்க்கில்உயிர்
ஒருவும் உரைத்தேன் என்னுடைவாய்
இருவாய் அலநின் திருவடிப்பாட்
டிசைக்கும் ஒருவாய் இசைத்தேனே.

உரை : நிலைபெற்ற தலைவனே, ஞான சபைக்கு முதல்வனே, ஒப்பற்றவனே, என் கண்ணின் மணி போன்ற நீ என் முன் போந்தருளி என் மனத்தின்கண் எண்ணியவற்றையெல்லாம் எண்ணியவாறு அருளுக; நீ அருளுதற்கு இதுவே தக்க பருவமாகும்; சிறிது காலதாமதம் செய்வாயாயின் என்னுயிர் என் உடலினின்றும் நீங்கிவிடும் என்று மெய்ம்மையாக உரைக்கின்றேன்; எனக்கு வாய் இரண்டல்ல, நின் திருவடி பொருளாகப் பாட்டமைத்துப் பாடும் ஒரே வாயாகும்; சொல்லி விட்டேன். எ.று.

உலகுயிர்கட்கு, பண்டும் இன்றும் என்றும் உள்ள பரமதலைவன் என்றற்கு, "மெய்த் தலைவா" என உரைக்கின்றார். ஒருவன் - ஒப்பற்றவன். ஆர்வமிகுதி புலப்பட, "என் கண்மணி நீ" என உரைக்கின்றார். உயிர்பிரியும் நேரம் இது வென வரையறுத்து உரைக்க மாட்டாமை பற்றி, "சிறிது தாழ்க்கில் உயிர் ஒருவும்" என உரைக்கின்றார். ஒருவுதல் - நீங்குதல். ஆதலால் என் கண்மணி போன்ற நீ என் முன் போந்தருளி நான் எண்ணிய எண்ணமெல்லாம் எண்ணியவாறு கைகூடும் திருவருள் நல்கியருளுக வென வேண்டுவாராய், "வருவாய் என் கண்மணி நீ என் மனத்திற்கு குறித்த வண்ணமெல்லாம் தருவாய்" என்றும், தருவதனைக் காலமறிந்து நல்குதல் சாலச் சிறந்தது என்றற்கு, "தருணம் இதுவே" என்றும் சாற்றுகின்றார். தமது சொல்லின் உறுதியை வற்புறுத்தற்கு "என்னுடைய வாய் இருவாய் அல நின் திருவடிப் பாட்டிசைக்கும் ஒரு வாய் இசைத்தேனே" என்று ஓதுகின்றார். ஒரு வாய் - சொல்லால் ஒருதன்மைத்தான வாய் என்பது பொருள்.

இதனால், உயிரது நிலையாமை கருதி எனக்கு வேண்டுவன உதவியருள்க என வேண்டியவாரும். (16)

3607. தேனே திருச்சிற் றம்பலத்தில்
தெள்ளார் அமுதே சிவஞான
வானே ஞான சித்தசிகா
மணியே என்கண் மணியேஎன்

ஊனே புகுந்தென் உளங்கலந்த
உடையாய் அடியேன் உவந்திடநீ
தானே மகிழ்ந்து தந்தாய்இத்
தருணம் கைம்மா றறியேனே.

உரை : தேன் போல் இனிப்பவனே, தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் விளங்குகின்ற தெளிந்த அமுதாகியவனே, சிவம் நிலவும் ஞானாகாசமே, ஞானிகளின் சித்தத்தில் விளங்குகின்ற சிகாமணியே, என் கண்ணின் மணி போல்பவனே, என் உடலுக்குள் புகுந்து உள்ளத்தில் கலந்து தனக்கு உடைமையாகக் கொண்டவனே, அடிமையாகிய யான் மனம் மகிழுமாறு நீயே வந்து உவகையுடன் உன் திருவருள் ஞானத்தை இப் பொழுதே தந்தருள்க; இதற்கு யான் யாது கைம்மாறு செய்வேன்; ஒன்றும் அறிகிலேன். எ.று.

சிவ பரம்பொருளைச் சிந்திப்பார்[1]சிந்தைக்கண் தேனூறி இனித்தலால், "தேனே" என்றும், "திருச்சிற்றம்பலத்தில் தெள்ளார் அமுதே" என்றும் சிறப்பிக்கின்றார். சிதாகாசம் எனப்படும் பெருவழியாய் அதற்கு உரிய வனுய் விளங்குதல் பற்றிச் சிவபெருமானை, "சிவஞான வானே" எனப் பரவுகின்றார். சிவஞானிகளின் சித்தமாகிய ஞானத்தின்கண் முடிமணி யாய்க் காட்சி தருதலால், "ஞான சித்த சிகாமணியே" என நவில் கின்றார். பசு கரணங்களாகிய உடம்பையும் உள்ளத்தையும் தனது திருவருள் சிவ கரணங்களாக்கிக் கொண்டமை புலப்பட, "என் ஊனே புகுந்து என்னுளம் கலந்த உடையாய்" என உவந்துரைக்கின்றார். தெளிவும் மகிழ்ச்சியும் உண்டாகுமாறு திருவருள் ஞானம் கைவரப் பெற்றமை உள்ளத்தால் உணர்ந்துரைத்தலின், "நீ தானே மகிழ்ந்து தந்தாய் இத்தருணம் கைம்மாறு அறியேனே" என்று கூறுகின்றார். திருவருட்கு ஒப்பதும் மிக்கதும் வேறில்லாமையால் "கைம்மாறு அறியேன்" என்று கூறுகின்றார்.

இதனால், திருவருளினின்றும் கைவரப் பெற்றமைக்குக் கைம்மா றில்லை யெனத் தெரிவித்தவாறும். (17)

3608. அறியேன் சிறியேன் செய்தபிழை
அனைத்தும் பொறுத்தாய் அருட்சோதிக்
குறியே குணமே பெறஎன்னைக்
குறிக்கொண் டளித்தாய் சன்மார்க்க
நெறியே விளங்க எனைக்கலந்து
நிறைந்தாய் நின்னை ஒருகணமும்
பிறியேன் பிறியேன் இறவாமை
பெற்றேன் உற்றேன் பெருஞ்சுகமே.

உரை : அருளொளி திகழும் பரம்பொருளே, நல்ஞானம் பெற என்னைக் குறிக்கொண்டு உனது திருவருளை வழங்கினாய்; மெய்ம்மை நெறியாகிய சன்மார்க்கத்தில் நின்று யான் விளங்க என்னுட் கலந்து நிறைந்து விளங்குகின்றாய்; அறியாமையால் சிறியவனாகிய யான் செய்த

குற்றங்கள் அத்தனையும் பொறுத்துக் கொண்டாயாதலால் இனி ஒருகண நேரமும் பிரிய மாட்டேன்; இறவா நிலையும் பெரிய ஞான இன்பமும் எய்தி விட்டேன். எ.று.

இறைவனது ஞான வொளி அருட்சோதி எனப்படுதலின், அதனையே அவன் திருவுருவாக்கி, "அருட் சோதிக் குறியே" என்று உரைக்கின்றார். குணம் என்றது ஈண்டுச் சிவஞான நலம். திருவருள் ஞானம் கைவரப் பெற்றமை இனிது விளங்க, "என்னைக் குறிக் கொண்டளித்தாய்" என்று கூறுகின்றார். சிவஞானத் திருநெறிச் சன்மார்க்கம் எனச் சான்றோரால் சிறப்பித்து உரைக்கப்படுவது பற்றியும், அந்நெறிக்கண் கருவி கரணங்கள் அத்தனையும் சிவ கரணமாய்த் திகழ்வது உணர்ந்தும், "சன்மார்க்க நெறியே விளங்க எனைக் கலந்து நிறைந்தாய்" எனச் சாற்றுகின்றார். சிவபோகத்தை நுகரத் தலைப்பட்டமை தோன்ற, "நின்னை ஒருகணமும் பிரியேன் பிரியேன்" என்றும், சிவபோகம், இறத்தலும் பிறத்தலும் தவிர்த்த தன்மையை நல்குதலால், "இறவாமை பெற்றேன்" என்றும், "உற்றேன் பெருஞ்சுகம்" என்றும் உரைக்கின்றார். சிவஞானத்தால் சிவபோகம் நுகரத் தலைப்பட்ட நம்பியாரூரரும், "பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை வந்து எய்தினேன்" என உரைப்பது காண்க.

இதனால், சிவஞான போகம் தலைப்பட்டமை தெரிவித்தவாறும். (18)

3609. சுகமே நிரம்பப் பெருங்கருணைத்
தொட்டில் இடத்தே எனை அமர்த்தி
அகமே விளங்கத் திருஅருளார்
அமுதம் அளித்தே அணைத்தருளி
முகமே மலர்த்திச் சித்திநிலை
முழுதும் கொடுத்து மூவாமல்
சகமேல் இருக்கப் புரிந்தாயே
தாயே என்னைத் தந்தாயே.

உரை : எனக்குத் தாயும் தந்தையுமாகிய பெருமானே, ஞான சுகமே, என்னுள் நிறையுமாறு பெருங் கருணையாகிய தொட்டிலில் என்னைக் கிடத்தி எனது மனம் விளக்க முறுமாறு திருவருள் ஞானமாகிய அமுதம் தந்து என்னைத் தழுவி எனது முகம் மலரச் செய்து சித்தி நிலை முழுதும் கொடுத்து யான் மூத்து விளியாமல் நிலைமையில் இருக்குமாறு அருள் புரிந்தாய். எ.று.

நிலவுலகில் அறியாமை முதலியவற்றால் துன்பமின்றி இனிது இருக்குமாறு தனது திருவருளில் உறையப் பண்ணினமை புலப்பட, "சுகமே நிரம்பப் பெருங்கருணைத் தொட்டி லிடத்தே எனை அமர்த்தி" என உரைக்கின்றார். திருவருள் உணர்வால் தமது மனத்தின்கண் அருள் விளக்கம் உண்டாகச் செய்தமை தோன்ற, "அகமே விளங்கத் திருவருளால் அமுதம் அளித்து அணைத்தருளி" என்று கூறுகின்றார். துன்பத்தால் தோற்றம் சுருங்குவதின்றிச் சிவஞானச் சித்தி நிலை முழுதும் தமக்கு

எய்தினமை புலப்படுத்தற்கு, "சித்தி நிலை முழுதும் கொடுத்து" என்றும், அதனால் தாழ் எய்திய ஆன்ம லாபம் இது வென்பார், "மூவாமல் சகமேல் இருக்கப் புரிந்தாய்" என்றும் உரைத்தருளுகின்றார்.

இதனால், தான் பெற்ற திருவருள் ஞானப் பயனை விளக்கியவாறும். (19)

3610. தந்தாய் இன்றும் தருகின்றாய்
தருவாய் மேலுந் தனித்தலைமை
எந்தாய் நினது பெருங்கருணை
என்என் றுரைப்பேன் இவ்வுலகில்
சிந்தா குலந்தீர்த் தருள்எனநான்
சிறிதே கூவு முன்என்பால்
வந்தாய் கலந்து மகிழ்கின்றாய்
எனது பொழுது வான்பொழுதே.

உரை : ஒப்பற்ற தலைமையை யுடைய என் தந்தையே, நினது திருவருளை முன்னும் தந்தாய்; இப்பொழுதும் தருகின்றாய்; இனிமேலும் தர விருக்கின்றாய்; உன்னுடைய மிக்க பெருங் கருணையை என்னென்று சொல்வேன்: இவ்வுலகியலில் எனக்கு உண்டாகும் மனவேதனையைத் தீர்த்தருள் என நான் சிறிது கூறுதற்கு முன்பே என்னிடம் வந்து கலந்து இன்புறுகின்றாய்; இது எனக்கு ஒரு நல்ல காலமாகும். எ.று.

உன் திருவருளை எனக்கு எப்போதும் தந்த வண்ணம் இருக்கின்றாய் என்பாராய், "தந்தாய் இன்றும் தருகின்றாய் தருவாய்" என வுரைக்கின்றார். சிவனே டொக்கும் தலைமைத் தேவர் வேறின்மையின், "தனித் தலைமை எந்தாய்" என இயம்புகின்றார். வேண்டுவோர் சிறிது கூறி வேண்டுதற்கு முன்பே எல்லாம் அறிந்து உதவி யருளும் பெருமான் என்பது இனிது புலப்பட, "நான் சிறிதே கூவுமுன் என்பால் வந்தாய் கலந்து மகிழ்கின்றாய் எனது பொழுது வான் பொழுதே" என்று கூறுகின்றார்.

இதனால், திருவருள் நலப் பேறு எய்தினமைக்குச் சிவ பரம் பொருளை வியந்து பாராட்டியவாறும். (20)

திருச்சிற்றம்பலம்

18. அபயம் இடுதல்

அஃதாவது, பயமின்மை அருளுக என இறைவன்பால் முறையிடுதல்.

இதன்கண், வடலூர் வள்ளல் இறைவனை நோக்கி "இனி நீ வருவாய் அலையேல் உயிர் வாழ்கலன் நான்" என்றும், தமக்குச் செய்வகை ஒன்றினை "இங்கு இது வென்று" இறைவன் அருள வேண்டும் என்றும், கொலைதீர் நெறிக் குருவாகிய இறைவன் "கொடு வெம்புலையும்

கொலையும் விடுமாறு அருள்" செயல் வேண்டும் என்றும், தம் 'உடலோடு உறுமா பொருள் ஆவியும்' இறைவ னுடையனவே யன்றித் தம் முடையன அல்ல என்றும், 'பற்றப் பலமே அலதோர் நெறியும்' தாம் அறியார் என்றும் பிறவும் கூறுகின்றார்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3611. உருவாய் அருவாய் ஒளிவாய் வெளியாய்
உலவா ஒருபேர் அருளார் அமுதம்
தருவாய் இதுவே தருணம் தருணம்
தரியேன் சிறிதுந் தரியேன் இனிநீ
வருவாய் அலையேல் உயிர்வாழ் கலன்நான்
மதிசேர் முடிஎம் பதியே அடியேன்
குருவாய் முனமே மனமே இடமாக்
குடிகொண் டவனே அபயம் அபயம்.

உரை : பிறைத் திங்களை முடிமேல் அணிந்துள்ள எங்கள் தலைவனே, அடியேனுக்கு ஞான குருவாய் முன்பே என் மனத்தை யிடமாகக் கொண்டு உள்ளவனே; உருவாகவும், அருவாகவும், ஒளி யாகவும், வெளியாகவும், என்றும் கெடாத ஒப்பற்ற உனது அருள் நிறைந்த ஞான வழுதத்தை எனக்குத் தந்தருள்க; அதற்கு இதுவே சமயம்; தாமதிப்பாயின் நான் சிறிதும் பொறேன் இப்பொழுதே வரு வாயாக; வாராது என்னை அலைக்க வேண்டா; நான் உயிர் வாழும் திறம் இல்லாதவனாவேன்; நீயே எனக்கு அபயம் தருதல் வேண்டும். எ.று.

உருவும், அருவும், ஒளியும், வெளியுமாய் விளங்குபவனாதலால் சிவனை, "உருவாய் அருவாய் ஒளிபாய் வெளியாய்" என உரைக் கின்றார். என்றும் உள்ள பரம்பொருளாதலின் அவனது திருவருள் ஞான மாகிய அமுதத்தை "உலவா ஒருபேர் அருளார் அமுதம்" என்று சிறப்பிக்கின்றார். ஞானப் பேற்றுக்கு உரிய பக்குவம் எய்தினமை புலப் பட, "தருவாய் இதுவே தருணம் தருணம்" என்று கூறுகின்றார். தருணம் தவறுமானால் தனக்கு எய்தும் துன்பம் பெரி தென்றற்கு, "தரியேன் சிறிதும் தரியேன்" என்றும், இப்பொழுதே வந்து தந்தருள்க என்பாராய், "இனி நீ வருவாய்" என்றும் இயம்புகின்றார். வாராமை மனத்தைத் துயர் மிக்கு வருத்துதல் தோன்ற, "அலையேல் உயிர் வாழ்கலன் நான்" என்று மொழிகின்றார். பிறைத் திங்களை முடியிற் சூடிய பெருமான் ஆதல் பற்றி, "மதிசேர் முடி எம் பதியே" என்றும், உயிர்க் குயிராய் நின்று அவ்வப் போது மெய்யுணர்வு நல்கும் சிறப்புச் செயலை யுடையனாதல் பற்றி, "அடியேன் குருவாய் முனமே மனமே இடமாக் குடி கொண்டவனே" என்றும் கூறுகின்றார். அபயம், அச்சமின்றி யிருத்தற்கு அவரே புகலிடமாதலால், "அபயம் அபயம்" என அடுக்கு கின்றார். அபயம் - பயமில்லாத புகலிடம்.

இதனால், தமக்குப் புகலிடமாதல் வேண்டுமென சிவன்பால் முறையிட்டவாறும்.

(1)

3612. என்னே செய்வேன் செய்வகை ஒன்றிங்
கிதுஎன் றருள்வாய் இதுவே தருணம்
மன்னே அயனும் திருமா லவனும்
மதித்தற் கரிய பெரிய பொருளே
அன்னே அப்பா ஐயா அரசே
அன்பே அறிவே அமுதே அழியாப்
பொன்னே மணியே பொருளே அருளே
பொதுவாழ் புனிதா அபயம் அபயம்.

உரை : மன்னவனே, பிரமனும் திருமாலும் நினைத்தற் கரிதாகிய பெரிய பரம்பொருளே! அம்மையே, அப்பனே, ஐயனே, அரசனே, என் அன்பே, என் அறிவே, எனக்கு அமுதாகுபவனே, அழியாத பொன்னே, மணியே, வேண்டும் பொருளே, திருவருளே, தில்லையம்பலத்தில் வாழ்கின்ற தூயவனே, எனக்கு அபயம் அருள்க; யான் யாது செய்வேன்; ஒன்றுகிய செயல்வகை இதுவேயென வரையறுத்து உரைத்து அருள்வாயாக; அதற்கு இதுவே தருணம். எ.று.

நாம் செய்யும் வினை வகைகட்கு உரிய பயனை அவை ஒழியாது நுகர்வித்தல் பற்றி, "மன்னே" என்றும், பிரமனும் திருமாலும் பாச பசு ஞானங்களையுடையவராதலின் அவர்களால் அறிய முடியாத பரமாகிய பிரமப் பொருளாய்ப் பிறங்குதலின், "அயனும் திருமாலவனும் மதித்தற் கரிய பெரிய பொருளே" என வுரைக்கின்றார். உயிர்கட்கு அம்மை அப்பனையும், தலைவனையும், அரசனுகவும் முறைமையுற்று அருளுதலால், "அன்னே அப்பா ஐயா அரசே" எனவும், அன்பும் அறிவுமாய் இன்பம் அருளுதலின், "அன்பே அறிவே அமுதே" எனவும் மொழிகின்றார். உலகியல் பொன்னும் மணியும் பொருளும் நிலையின்றிக் கெடுவது போலாது என்றும் நிலைத்த பொருளாய் இன்பவாழ்வு நல்குதல் தோன்ற, "அழியாப் பொன்னே மணியே பொருளே" எனப் புகழ்கின்றார். கூத்தப் பெருமானது திருவுருவம் அருள் உருவமாதலின், "அருளே பொதுவாழ் புனிதா" எனப் போற்றுகின்றார். மல விருளால் மலைப்புண்டிருத்தல் பற்றி விளங்கிய அறிவுடையவ வல்லேன் என்பாராய், "என்னே செய்வேன்" என்றும், செய்யத் தக்கது இதுவென ஒரு நெறியினை எனக் குரைத்து அருளுக என வேண்டலுற்று, "செய்வகை ஒன்றிங்கு இதுவென்று அருள்வாய்" என்றும் பராவுகின்றார்.

இதனால், செய்வகை ஒன்றை அருளுமாறு விண்ணப்பித்தவாறும். (2)

3613. கருணை நிதியே அபயம் அபயம்
கனகா கரனே அபயம் அபயம்
அருணை டகனே அபயம் அபயம்
அழகா அமலா அபயம் அபயம்
தருணை தவனே அபயம் அபயம்
தனிநா யகனே அபயம் அபயம்
தெருணை டுறுவாய் அபயம் அபயம்
திருவம் பலவா அபயம் அபயம்.

உரை : திருவருட் செல்வமே, பொன்னுறையும் இடமே, திருவருளே நாடுவோருடைய உள்ளத்தில் எழுந்தருள்பவனே, அழகனே, அமலனே, காலை இளஞ் சூரியனே, ஒப்பற்ற நாயகனே, தெளிந்தோர் உள்ளங்களில் எழுந்தருள்பவனே, தில்லைப் பொன்னம்பலத்தை யுடையவனே, நீயே எனக்குப் புகலாவாய். எ.று.

கருணைநிதி - கருணையாகிய செல்வம். கருணை என்னும் வடசொல்லுக்கு அருள் என்பது தமிழ்ச் சொல். கனக ஆகரன் - கனகாகரன் என வந்தது. கனகம்-பொன். ஆகரன் - இடமாகியவன். திருவருள் ஞானத்தை விரும்புவோருடைய தூய மனத்தின்கண் எழுந்தருளுவது பற்றிச் சிவனை, "அருள் நாடு அகன்" எனப் போற்றுகின்றார். மலப் பிணிப்புண்ட உயிர்கள் தோறும் உயிர்க்குயிராய்க் கலந்திருந்தாலுயினும் சிவன் அம்மலத்தால் தீண்டப் படாமை பற்றி, "அமலன்" என அறிவிக்கின்றார். தருண ஆதவன். தருணதவன் என்று வந்தது. இங்கே தருணம் என்பது தருணேந்து சேகரன் (இசைப்பா) என்பொழிப் போல இளமை குறித்து நின்றது. காலை இளஞ்சூரியன் என்பது கருத்து. சிவனது திருமேனி ஒளி, காலை இளஞ் சூரியனது பொன்னிற ஒளி போறலின் சிவனை, "தருணதவனே" எனப் புகழ்கின்றார். சிவனோடு ஒப்பாரும் மிக்காரும் இவ்லையாதலால், "தனி நாயகன்" என்று போற்றுகின்றார். தெருள் - தெளிவு மிக்க சிவஞானம். சிவஞானத்தை நாடி நிற்கின்ற சிவஞானிகளின் திருவுள்ளத்தில் நீங்காது நிலவுதலால் சிவபெருமானை, "தெருணடு உறுவாய்" எனச் செப்புகின்றார். தில்லையம்பலத்தைத் தனக்கே உரிமையாகக் கொண்டவன் என்பது பற்றி, "திருவம்பலவா" எனப் போற்றுகின்றார்.

இதனால், சிவனே தனக்குப் புகலாகுபவன் எனப் புகன்றவாறும். (3)

3614. மருளும் துயரும் தவிரும் படிஎன்
மனமன் றிடைநீ வருவாய் அபயம்
இருளும் பவமும் பெறுவஞ் சகநெஞ்
சினன்என் றிகழேல் அபயம் அபயம்
வெருளும் கொடுவெம் புலையும் கொலையும்
விடுமா றருள்வாய் அபயம் அபயம்
அருளும் பொருளும் தெருளும் தருவாய்
அபயம் அபயம் அபயம் அபயம்.

உரை : அருளுணர்வும் பொருளும் ஞானத் தெளிவும் தருபவனாலால் பெருமானே, என் மனத்தில் உண்டாகும் மருட்கையையும் துயரத்தையும் நீங்குமாறு நீ என் மனமாகிய சபையின்கண் எழுந்தருளுவாயாக; அறியாமையும் பிறப்பும் எய்துவித்தற்குரிய வஞ்சகம் நிறைந்த தெஞ்சினையுடையவன் என்று என்னை இகழ வேண்டா; வெருட்சியும் கொடிய வெவ்விய புலையுணர்வும் கொலைச் செயலும் என்னை விட்டகலுமாறு அருள்வாயாக; இவை என்னைப் பற்றாது ஒழிவதற்கு நீயே எனக்குப் புகலிடம். எ.று.

மருள் - பொருளல்லவற்றைப் பொருளாக உணரச் செய்வது. "பொருளல்லவற்றைப் பொருளென்று உணரும் மருள்" (குறள்) எனச் சான்றோர் உரைப்பது காண்க. துயரம் அறிவைத் திருத்தித் தவருய வற்றைச் செய்தற்கு இடமளிப்பதாகலின், மருளும் துயரமுமாகிய இரண்டும் நீங்குதல் வேண்டி, என் மனத்தின்கண் எழுந்தருளும்படி வேண்டுகின்றாராதலின், "மருளும் துயரும் தவிரும்படி என் மனமன்றிடை நீ வருவாய்" என விண்ணப்பிக்கின்றார். வஞ்ச நினைவுகள் நெஞ்சின்கண் நின்ற வழி அறியாமையும் பிறவி வகைகளும் எய்தும் என்பது பற்றி, "இருளும் பவமும் பெறுவஞ்சக நெஞ்சினன் என்று இகழேல்" என வேண்டுகின்றார். வெருட்சி- மருளுதலுமாம். புலால் உணவு கொடுமை யுடையதாய் வெவ்வியல நினைவுகளைத் தூண்டுவதாதலின் அதனைக் "கொடு வெம்புலை" எனவும், அது காரணமாகக் கொலைத் தொழில் செய்யப் படுதலின், "கொலையும் விடுமாறு அருள்வாய்" என மொழிகின்றார். உயிர்கட்கு அருள் செய்யும் பண்பும் வாழ்விக்கும் பொருள் வகைகளும், தெளிந்த ஞானமும் சிவன் அருளால் எய்துவனவாதலால், "அருளும் பொருளும் தெருளும் தருவாய்" என விண்ணப்பிக்கின்றார்.

இதனால், பிறவிக்கு ஏதுவாகிய குணம் செயல்கள் தமக்கு உண்டாகா வாறு அருள்க என வேண்டியவாறும். (4)

3615. இனிஓர் இறையும் தரியேன் அபயம்
இதுநின் அருளே அறியும் அபயம்
கனியேன் எனநீ நினையேல் அபயம்
கனியே கருணைக் கடலே அபயம்
தனியேன் துணைவே றறியேன் அபயம்
தகுமோ தகுமோ தகவா அபயம்
துனியே அறவந் தருள்வாய் அபயம்
சுகநா டகனே அபயம் அபயம்.

உரை : சிவமாகிய கனியே, கருணையால் கடல் போன்றவனே, அந்தமில்லாத இன்ப நாட்டையுடையவனே, உலகில் துன்பங்களை இனி ஒரு சிறிதும் பொறுக்க மாட்டேன்; எனது மாட்டாமையை உன்னுடைய திருவருள் நன்கு அறியும்; மனம் கனியாதவன் என நீ நினைத்தல் ஒழிக; தனியனாகிய எனக்குத் துணையாவார் இவ்வுலகில் வேறு ஒருவரையும் அறியேன்; நான் துன்புறுகக் காண்பது தகவலனாகிய உனக்குத் தகுமா; இதனால் எனக்கு உள்ளத்தில் வெறுப்புண்டாகாவாறு அருள் செய்வாயாக எ.று.

கடலைப் போல் உலகியல் துன்பங்கள் தொடர்ந்து தாக்குதலைத் தாங்க மாட்டாமை புலப்படுப்பாராய் வடலூர் வள்ளல், "இனி ஓர் இறை யும் தரியேன் அபயம்" எனவும், இது இறைவன் திருவருள் அறிய நிகழ் வது என்றற்கு, "இது நின் அருளே அறியும் அபயம்" எனவும் கூறுகின்றார். மெய்யன்புக்கு மெல்லியனாய்க் கனிந்துருகும் நெஞ்சமுடையேனல்லேன் என எனை நீ நினைத்தல் கூடாது என முறையிடுவார், "கனியேன் என நீ நினையேல் அபயம்" என உரைக்கின்றார். கருணை நிறைந்து மேனி சிவந்து தோன்றும் நலம்

பற்றிச் சிவனே, "கணியே கருணைக் கடலே அபயம்" எனக் கூறுகின்றார். உலகியல் தொடர்பும், நான் எனது என்னும் உணர்வும் உடைமை பற்றித் தம்மை, "தனியேன்" எனச் சாற்றுகின்றார். சிவத்தின் திருவருள் துணையின்றித் தனித்து வாழ்தல் ஆன்மாகட்கு இயலாமையின், "துணை வேறறியேன்" என்று சொல்லுகின்றார். தன்னையின்றி வாழ்தல் இல்லாத ஆன்மா வருந்துவது காண்டல் ஆன்ம நாயகனுகிய உனக்குப் பொருந்தாது என்பார், "தகுமோ தகுமோ தலைவா அபயம்" என உரைக்கின்றார். துன்பங்களின் தாக்குதலால் மக்கள் உள்ளம் துனியுற்றுக் குற்றப்படுவது இயல்பாதலால், அது தமக்கு உண்டாகலாகாது என்பாராய், "துனியேயற வந்து அருள்வாய் அபயம்" என்று சொல்லுகின்றார். இன்பவுலகத்து இறைவனுதல் பற்றி, "சுக நாடகனே அபயம் அபயம்" எனப் போற்றுகின்றார்.

இதனுல், துன்பத் தொடர்பு அருமையின் உள்ளத்தில் துனிதோன்றிக் குற்றப்படுத்தல் ஆகா தென அபயம் புகுகின்றவாரும். (5)

3616. அடியார் இதயாம் புயனே அபயம்
அரசே அமுதே அபயம் அபயம்
முடியா தினிநான் தரியேன் அபயம்
முறையோ முறையோ முதல்வா அபயம்
கடியேன் அலன்நான் அபயம் அபயம்
கருணை கரனே அபயம் அபயம்
தடியேல் அருள்வாய் அபயம் அபயம்
தருணை தவனே அபயம் அபயம்.

உரை : மெய்யடியார்களின் இதயத் தாமரையில் இருப்பவனே, அருளரசே, அமுத மயமானவனே, கருணைகரனே, தருணைதவனே, இவ்வுலகியல் துன்பங்களை இனியும் நான் பொறுக்க முடியாது; பொறுக்கவும் மாட்டேன்; இவ்வாறு நான் வருந்துவது முறையாகுமா; எல்லோர்க்கும் எப்பொருட்கும் முதல்வனே, நீயே எனக்கு அபயம்; நானும் நின்னுல் விலக்கப்படத் தக்கவன் அல்ல; என்னை விலக்காமல் ஆண்டருள்க; நினக்கு யான் அபயம். எ.று.

இதய அம்புயன் - மனமாகிய தாமரையில் எழுந்தருளுபவன். இனி முடியாது என்பது பொறுக்கும் ஆற்றல் மேல் நின்றது. நான் தரியேன் என்பது உயிரினது மாட்டாமை யுணர நின்றது. கடிதல் - விலக்குதல். கருணைகரன் - கருணை ஆகரன் எனப் பிரிந்து கருணையாகிய கடற்கு இடமாகியவன் எனப் பொருள்படும். தடிதல் - குறைத்தல்; விலக்குதலுமாம். தருண ஆதவன் - தருணைதவன் என வந்தது.

இதனுல், உலகியல் துன்பம் பொறுக்க மாட்டாமை கூறித் தமது நிலையையும் வெளிப்படுத்தியவாரும். (6)

3617. மலவா தனைதீர் கலவா அபயம்
வலவா திருஅம் பலவா அபயம்
உலவா நெறிநீ சொலவா அபயம்
உறைவாய் உயிர்வாய் இறைவா அபயம்

பலஆ குலம்நான் தரியேன் அபயம்
பலவா பகவா பனவா அபயம்
நலவா அடியேன் அலவா அபயம்
நடநா யகனே அபயம் அபயம்.

உரை : வல்லவனே, தில்லைப் பொன்னம்பலத்தை யுடையவனே; உயிர்களிடத்து உயிர்க் குயிராய் உறைபவனே, இறைவனே, மிக்க வலி யுடையவனே, பகவனே, பார்ப்பனனே, நல்லவனே, சந்திரனை முடியில் உடையவனே, கூத்தாடும் நாயகனே, ஆன்மாக்களுக்கு மலப் பிணிப்பால் உண்டாகும் துன்பங்களை அவற்றொடு கலந்து நீக்குபவனே, கேடு விளைவிக்காத நன்னெறியை எனக்குச் சொல்லும் பொருட்டு வந்தருள்க; பலவாய் வரும் துன்பங்களை நான் தாங்க மாட்டேன்; நல்லவனே, யான் உனக்கு அடிமை யல்லவா, என்னை ஆண்டருள்க. எ.று.

மலவாதனை - மும்மலங்களின் பிணிப்பால் ஆன்மாகட்கு உளவாகும் துன்பங்கள். கலவன் - கலந்திருப்பவன். வலவன் - எல்லாம் வல்லவன். திருவருள் ஞான நெறி என்றும் கெடாத நன்னெறியாய் இறைவனால் உணர்த்துப் படுவதாதலின், "உலவா நெறி நீ சொல வா" என வேண்டு கிறார். "உயிர்வாய் உறைவாய்" என இயைக்க. ஆகுலம் - துன்பம். பலவன் - பார்ப்பனன்.

இத்தனால், உலகியல் துன்பங்களைப் பொருமை வெளிப்படுத்தியவாறும். (7)

3618. கொடியேன் பிழைநீ குறியேல் அபயம்
கொலைதீர் நெறிஎன் குருவே அபயம்
முடியேன் பிறவேன் எனநின் அடியே
முயல்வேன் செயல்வே றறியேன் அபயம்
படியே அறியும் படியே வருவாய்
பதியே கதியே பரமே அபயம்
அடியேன் இனிஓர் இறையும் தரியேன்
அரசே அருள்வாய் அபயம் அபயம்.

உரை : சிவமாகிய பதிப் பொருளே, ஆன்மாக்கள் எய்தும் சிவ கதியே, பரம்பொருளே, அருளரசே, கொடுமைப் பண்புடையவனாகிய என் பிழைகளைத் திருவுள்ளத்தில் கொள்ளற்க; உயிர்க் கொலை யில்லாத செந்நெறியை அருளிய குருபரனே, கெடுவதும் பிறப்பதும் மாட்டேனாய் நின் திருவடிப் பேறு ஒன்றையே கருதி முயலுகின்றேன்; வேறு செயல் ஒன்றுமறியேன்; உலகவர் காணும்படி என் முன் வந்தருள்க; அடியவனாகிய யான் உலகியல் துன்பங்களை இனி ஒருகணமும் தாங்க மாட்டேன். எ.று.

கொடியேன் - கொடுமைப் பண்புடையவன். கொலைதீர் நெறி- உயிர்க் கொலை நாடாத சன்மார்க்கச் செந்நெறி. முடிதல் - கெட்டழிதல். உலகிற் பிறந்த ஆன்மாக்கள் பிறந்திறந்து பிறப்புக்கே இரையாய்க்

கெடுதலே விரும்பாமை புலப்பட, "முடியேன்" எனவும், "பிறவேன்" எனவும் மொழிகின்றார். திருவடிப் பேறு ஒன்றுதான் ஆன்மாக்களால் முயன்று பெறத் தக்கதாதலின், "நின்னடியே முயல்வேன் செயல் வேறு அறியேன்" என்று கூறுகின்றார். "படியே அறியும்படி" என்றவிடத்து, முதற்கண் உள்ள படி நிலவுலகத்து மக்கள் மேல் நிற்கிறது. பலரறியத் தோன்றிவிடின் தமது பவப்பணி நீங்கும் என எண்ணுகின்றாராதலின், "படியே அறியும் படியே வருவாய்" எனப் பகர்கின்றார். உலகியல் துன்ப மிகுதி காட்டற்கு, "அடியேன் இனி ஓர் இறையும் தரியேன்" என்று கூறுகின்றார்.

இதனால், பிறவித் துன்பங்களைப் பொறுக்க மாட்டாமை எடுத்து உரைத்தவாறும். (8)

3619. இடர்தீர் நெறியே அருள்வாய் அபயம்
இனிநான் தரியேன் தரியேன் அபயம்
விடர்போல் எனைநீ நினையேல் அபயம்
விடுவேன் அலன்நான் அபயம் அபயம்
உடலோ டுறுமா பொருள்ஆ வியும்இங்
குனவே எனவே அலவே அபயம்
சுடர்மா மணியே அபயம் அபயம்
சுகநா டகனே அபயம் அபயம்.

உரை : ஒளிருகின்ற பெரிய மாணிக்க மணி போல்பவனே, அந்தமில் இன்ப நாட்டை யுடையவனே, துன்ப மனைத்தும் போக்கும் நன்மார்க்கத்தையே ஆன்மாக்கட்கு வழங்குபவனே, இப்போது இவ் வுலகியல் துன்பங்களை யான் பொறுக்க மாட்டேன்; வீணர்களைப் போல் என்னைக் கருதுதல் வெண்டா; நான் உன்னை விடுபவ னல்லன்; எனது உடம்போடு என்பால் உறுகின்ற மிக்க பொருளும் உயிரும் உனக்கு உரியனவே, எனக்கு உரியனவல்ல. எ.று.

மாணிக்க மணி போல் திகழும் திருமேனியை யுடையவனுதலின் சிவனை, "சுடர் மாமணியே" என்கின்றார். அந்தமில் இன்பத்து அழிவில் வீடு எனப்படும் இன்ப நாட்டில் உறைபவனுதலின், "சுக நாடகன்" எனச் சொல்லுகின்றார். பிறவிக் கேதுவாகிய நெறிகளில் கிடந்து உழன்றமை புலப்பட, "இடர் தீர் நெறியே அருள்வாய் அபயம், இனி நான் தரியேன் தரியேன் அபயம்" என்று கூறுகின்றார். வீடர் - வீணர். விடரும் தூர்த்தருமாகிய தீயவர் இனத்தைச் சேர்ந்தவ னல்லன் எனத் தமது இயல்பு எடுத்தோதி விளக்குகின்றாராதலின், "விடர் போல் எனை நீ நினையேல் அபயம் விடுவே னலன் நான் அபயம் அபயம்" என விளம்புகின்றார். உடல், பொருள், ஆவி என்ற மூன்றனுள் பொருள் தம்மால் பெரிதாக ஈட்டப்படுவது பற்றி, "மாபொருள்" எனச் சிறப்பிக்கின்றார். உன, என என்பவை உன்னுடையவை, என்னுடையவை என்ற பொருளில் வழங்குகின்றன. "நினவ கூறுவல் எனவ கேண்மதி" (புறம்.35) எனச் சான்றோர் வழங்குதல் அறிக.

இதனால், வள்ளற் பெருமான் தம்முடைய உடல் பொருள் ஆவி மூன்றையும் இறைவனுக்கு உரிமை செய்தவாறும். (9)

3620. குற்றம் பலஆ யினும்நீ குறியேல்
குணமே கொளும்என் குருவே அபயம்
பற்றம் பலமே அலதோர் நெறியும்
பதியே அறியேன் அடியேன் அபயம்
சுற்றம் பலவும் உனவே எனவோ
துணைவே றிலைநின் துணையே அபயம்
சிற்றம் பலவா அருள்வாய் இனிநான்
சிறிதுந் தரியேன் தரியேன் அபயம்.

உரை : தில்லைச் சிற்றம்பலத்தை யுடைய பெருமானே, குருபரனே, என்பால் குற்றங்கள் பல உள்ளனவாயினும் அவற்றைக் கொள்ளாமல் குணமே கொண்டருள வேண்டுகிறேன்; சான்றோர்களால் பற்றுகக் கருதப்படும் தில்லையம்பலம் அல்லது வேறு பற்றும் பதியும் உய்தி தருவனவாக வெண்ணி அறியேன்; என்னுடைய சுற்றத்தார் பலரும் உன் சுற்றத்தாரே, என்னுடைய சுற்றத்தா ரல்லர்; எனக்கும் உனது துணையன்றி வேறு துணை கிடையாது; ஆதலால், இவ்வுலகியல் துன்பங்களை இனி நான் சிறிதும் பொறுக்க மாட்டேன் காண். எ.று.

குற்றம் நீக்கிக் குணம் கொண்டு பாராட்டும் இயல்பினனுதல் புலப்பட, சிவனை, "குற்றம் பலவாயினும் நீ குறியேல், குணமே கொளும் என் குருவே அபயம்" எனக் கூறுகின்றார். பற்றம்பலம் - பற்றுப் உள்ள இடம். அம்பலம் அடையும் நெறி யல்லது நன்னெறி வேறின்மை தோன்ற, "பற்றம்பலமே அலதோர் நெறியும் பதியே அறியேன்" என உரைக்கின்றார். உலகியல் சுற்றத்தாரைத் தமக்கு உரியவராகக் கருதாமை விளங்க, "சுற்றம் பலவும் உனவே எனவோ" என இசைக்கின்றார். சிவனது துணையல்லது வேறு யாதனையும் துணையாகக் கருதாமையின், "துணை வேறிலை நின் துணையே அபயம்" என்று சொல்லுகின்றார்.

இதனால், தில்லையம்பலவனது திருவருள் துணை யல்லது பிறிதொன்றும் நாடாமை தெரிவித்தவாறும். (10)

திருச்சிற்றம்பலம்

19. பிரிவாற்றுமை

அஃதாவது, இறைவனுடைய திருவருள் ஞானத் தொடர்பினின்றும் பிரிந்திருக்க மாட்டாத தன்மையை எடுத்துரைத்தல்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3621. போக மாட்டேன் பிறரிடத்தே
பொய்யிற் கிடந்து புலர்ந்துமனம்
வேக மாட்டேன் பிறிதொன்றும்
விரும்ப மாட்டேன் பொய்யுலகன்

ஆக மாட்டேன் அரசேஎன்
அப்பா என்றன் ஐயாநான்
சாக மாட்டேன் உனைப்பிரிந்தால்
தரிக்க மாட்டேன் கண்டாயே.

உரை : அருளரசே, எனக்கு அப்பனே, எனக்குத் தலைவனே, உதவி நாடிப் பிறரிடம் போக மாட்டேன்; அவர் சூழலிற் சிக்கி மனம் ஈரமற்று வெந்தழிய மாட்டேன்; நின் திருவருளை விடுத்து வேறு யாதும் விரும்ப மாட்டேன்; பொய்ம்மை நிறைந்த உலகில் வாழும் ஒருவனாகி இறக்க மாட்டேன்; உன்னை நினைப்பதினின்றும் பிரிவேனையின் உயிரைத் தாங்கியிரேன். எ.று.

பலரொடும் கூடி வாழ்வது மக்களினத்தின் பண்பாதலால் பிறரொடு கூடி இயங்குவேனையினும் பொன்னையோ பொருளையோ விரும்பிப் பிறர்பாற் போக மாட்டேன் என்பாராய், "போக மாட்டேன் பிறரிடத்தே" எனக் கூறுகின்றார். அவரது சூழலில் பொய் முதலிய குற்றங்கள் நிறைந்திருத்தலால், யானும் அவற்றைச் செய்து மனவேதனையுற்று வெந்தழியேன் என்பார், "பொய்யிற் கிடந்து புலர்ந்து மனம் வேக மாட்டேன்" என விளம்புகின்றார். உலகவர் பலரும் பொய்நினைவும் பொய்ம்மொழியும் பொய்ச்செயலும் உடையவராதலால், யான் அவருள் ஒருவனாதலை விரும்ப மாட்டேன் என்று கூறலுற்று, "பொய் யுலகனாக மாட்டேன்" என்றும், அவ்வாழ்வின் எல்லை இறத்தலாதலின், "என்றன் ஐயா நான் சாக மாட்டேன்" என்றும் இயம்புகின்றார். பிரிதலாவது - சிவபெருமானை நினைத்தலும் திருவுருவைக் கண்டு மகிழ்தலும் வழிபடுவதுமாகிய செயலைக் கைவிடுதல். இந்த நற்பணிகளைச் செய்யா தொழிவேனையின் உயிர் தாங்கேன் என்பாராய், "உனைப் பிரிந்தால் தரிக்க மாட்டேன்" என வுரைக்கின்றார்.

இதனால், சிவ நினைவும் வழிபாடும் ஒழிந்தால் இறந்து படுபவன் என மொழிந்தவாறும். (1)

3622. செல்ல மாட்டேன் பிறரிடத்தே
சிறிதுந் தரியேன் தீமொழிகள்
சொல்ல மாட்டேன் இனிக்கணமுந்
துயர மாட்டேன் சோம்பன்மிடி
புல்ல மாட்டேன் பொய்யொழுக்கம்
பொருந்த மாட்டேன் பிறஉயிரைக்
கொல்ல மாட்டேன் உனஅல்லால்
குறிக்க மாட்டேன் கனவிலுமே.

உரை : ஒன்று வேண்டிப் பிறரிடம் போக மாட்டேன்; அத்தகைய நிலைமை யுண்டாயின் சிறிது போதும் தாங்க மாட்டேன்; தீய சொற்களை இனிமேற் பேச மாட்டேன்; இனி ஒருகணப் பொழுதும் துயரத்தைப் பொறுக்க மாட்டேன்; சோம்பலும் வறுமையுமாகிய இடர்கள் உண்டாயின் அவற்றைப் பொருந்த மாட்டேன்; பொய் யொழுக்கத்தை மேற்

கொள்ளேன்; பிற உயிர்களைக் கொல்ல மாட்டேன்; உன்னை யொழியப் பிற தெய்வங்களைக் கனவிலும் கருத மாட்டேன் காண். எ.று.

ஒருவரிடத்தே சென்று ஒன்று வேண்டி யிரப்பது நாணமின்மையும் சிறுமையும் உண்டு பண்ணுதலால், "செல்ல மாட்டேன் பிறரிடத்தே" என்றும், அஃதொரு இழிந்த நிலையாதலால், "சிறிதும் தரியேன்" என்றும் தெரிவிக்கின்றார். தீய சொற்கள் தீமை தருவதால் அவற்றைச் சொல்ல மாட்டேன் என்பார், "தீ மொழிகள் சொல்ல மாட்டேன்" என்று சொல்லுகின்றார். துயரங்களைத் தாங்கும் மனவன்மையும் மெய்வலியும் குன்றினமை புலப்பட, "இனிக் கணமும் துயர மாட்டேன்" எனவும், சோம்பலும் மிடியும் துயரத்துக் கேதுவாதலின், "சோம்பல் மிடி புல்ல மாட்டேன்" எனவும் உரைக்கின்றார். மிடி - வறுமை. துயர்தல் - துயரப் படுதல். பொய் யொழுக்கம் தீராத் துன்பத்தைப் பயப்பது பற்றி, "பொய் யொழுக்கம் பொருந்த மாட்டேன்" என்று புகல்கின்றார். "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்" (குறள்) எனச் சான்றோர் கூறுதல் காண்க. உயிர்க் கொலை பாவங்கள் அத்தனையும் ஒருங்கு தருவதாதலால், "பிற வுயிரைக் கொல்ல மாட்டேன்" எனப் பேசுகின்றார். "அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல் பிறவினை யெல்லாம் தரும்" (குறள்) என்று பெரியோர் கூறுவர். "உனையல்லால்" என்றதனால், பிற தெய்வங்கள் வருவிக்கப் பட்டன; பிற தெய்வங்களும் மக்களைப் போற் செத்துப் பிறப் பனவாதலால் அவற்றைப் பொருளாகக் கொள்வதிலன் என்றற்கு, "உனை யல்லால் குறிக்க மாட்டேன் கனவிலுமே" என வுரைக்கின்றார். குறித்தல் - கருதுதல். கனவுக் காட்சியும் மனத்தின் செயலாதலால், "கனவிலும்" என்று கூறுகின்றார்.

இதனால், பிறப்பாற் சென்று இரத்தல் தீ மொழி பேசல் முதலிய குற்றங்களைச் செய்ய மாட்டேன் என வலியுறுத்தவாறும். (2)

3623. வெறுக்க மாட்டேன் நின்றனையே
விரும்பிப் பிடித்தேன் துயர்சிறிதும்
பொறுக்க மாட்டேன் உலகவர்போல்
பொய்யிற் கிடந்து புரண்டினிநான்
சிறுக்க மாட்டேன் அரசேநின்
திருத்தாள் ஆணை நின்ஆணை
மறுக்க மாட்டேன் வழங்குவன
எல்லாம் வழங்கி வாழியவே.

உரை : அருளரசே, நின்னையே விரும்பிப் பற்றிக் கொண்டேனு தலால் நீ யாது செய்யினும் வெறுக்க மாட்டேன்; வெறுப்பால் உளதாகும் துன்பத்தைச் சிறிதும் பொறுக்கமாட்டேன்; உலகியலில் உள்ளவர்களைப் போலப் பொய் முதலிய குற்றங்களில் வீழ்ந்து வருந்திச் சிறுமையுற மாட்டேன்; இது நின் மேல் ஆணை; நின் திருவடி மேல் ஆணை; இனி நீ தருவன யாவையாயினும் மறுக்காமல் ஏற்றுக் கொள்வேனுதலால் தருவன அனைத்தும் எனக்குத் தந்தருளுக. எ.று.

விருப்பு வெறுப்புக்கள் மாறி மாறித் தோன்றுவனவாதலால் விருப்பால் உன்னைப் பற்றிக் கொண்ட யான் வெறுப்பால் விட்டொழிய மாட்டேன் என்பார், "வெறுக்க மாட்டேன் நின்றனையே விரும்பிப் பிடித்தேன்" என விளம்புகின்றார். விருப்புணர்வு இன்பம் தருவது போல வெறுப்புத் துன்பம் தருதல் பற்றி, "துயர் சிறிதும் பொறுக்க மாட்டேன்" என்று புகல்கின்றார். உலகில் வாழ்வாங்கு வாழ்ந்து பெருமையிற் பிறங்க வேண்டிய மக்கள் பொய்ம் மொழிதல் முதலிய குற்றங்களைச் செய்து சிறுமையுற்று வருந்துகின்றனர் என்பாராய், "உலகவர் போற் பொய்யிற் கிடந்து புரண்டு இனி நான் சிறுக்க மாட்டேன்" எனச் செப்புகின்றார். சிறுத்தல் - சிறுமையுறல். மாட்டாமைகளை எடுத்தோதி ஆணை மொழிந்து வற்புறுத்தியவர், எனக்கு வருவன பலவும் நினதருளால் எய்துவனவாதலால், அவை யனைத்தையும் ஏற்று மகிழ்வேன்; அவை யனைத்தையும் தந்தருள்க என்பாராய், "மறுக்க மாட்டேன் வழங்குவன எல்லாம் வழங்கி வாழியவே" என வுரைக்கின்றார். வழங்குதல் - தருதல்.

இதனால், விருப்பு வெறுப்புக்களால் எய்துவன கூறி அருளால் எய்துவனவற்றை ஏற்கும் திறம் உரைத்தவாறும். (3)

3624. கருணைப் பெருக்கே ஆனந்தக்
கனியே என்னுட் கலந்தொளிரும்
தருணச் சுடரே எனையீன்ற
தாயே என்னைத் தந்தோனே
வருணப் படிக மணிமலையே
மன்றில் நடஞ்செய் வாழ்வேநற்
பொருண்மெய்ப் பதியே இனித்துயரம்
பொறுக்க மாட்டேன் கண்டாயே.

உரை : கருணை வெள்ளமே, இன்பக் கனியே, என்னுள் உயிர்க் குயிராய்க் கலந்து விளங்குகின்ற காலை இளஞ் சூரியனே, என்னைப் பெற்றெடுத்த தாயே, என்னை இவ்வுலகில் பிறப்பித்த தந்தையே, நிறம் மிக்க படிக மணிகளை யுடைய மலை போன்றவனே, தில்லை யம்பலத்தில் திருக்கூத் தாடுகின்ற என் வாழ்முதலே, வீடு பேற்றுக்குரிய ஞானப் பொருள் நிறைந்த உண்மைத் தலைவனே, இனிமேல் இவ்வுலகியல் நல்கும் துன்பங்களைப் பொறுக்க மாட்டேன் காண். எ.று.

கருணையே உருவானவனுதலால் சிவபெருமானை, "கருணைப் பெருக்கே" என்று மொழிகின்றார். இன்பமே நல்கும் தெய்வக் கனி போல் விளங்குதலால், "ஆனந்தக் கனியே" என அறிவிக்கின்றார். உடல் எங்கும் உயிர் முழுதும் கலந்து உணர்வு ஒளி செய்தலால் இறைவனை, "என்னுள் கலந்து ஒளிரும் தருணச் சுடரே" என்று சாற்றுகின்றார். தலையளி செய்தலால், "எனை ஈன்ற தாயே" என்றும், உடல், கருவி, கரணங்களைத் தருவதால், "என்னைத் தந்தோனே" என்றும் கூறுகின்றார். தருணச் சுடர் - காலை இளஞ் சூரியன். வருணப் படிக மணி மலை, அழகிய படிகம் போன்ற திருநீறும், மாணிக்க மணி போன்ற திருநிறமும் உடைய மலை போல்வதால் சிவத் திருமேனியை, "வருணப் படிக மணி மலை" எனப் பாராட்டுகின்றார். தில்லையம்பலத்தில் திருக்கூத்தாடும் ஆற்றல்

உயிர்கட்கு உலகில் வாழ்வளித்தலால், "மன்றில் நடஞ்செய் வாழ்வே" எனப் பரவுகின்றார். நற்பொருள், எல்லாப் பொருளிலும் நன்பொருளாக விளங்குவது வீடு பேற்றுக்குரிய சிவஞானப் பொருளாதலின், "நற் பொருள்" என்றும், என்றும் உள்ள பரம்பொருள் என்றற்கு, "மெய்ப் பதி" என்றும் விளம்புகிறார். துயரம் - உலகியல் வாழ்க்கைத் துன்பம்.

இதனால், ஞானப் பொருள் வழங்கித் துயரம் எய்தாவாறு காப்பாற்ற வேண்டியவாறும். (4)

3625. திண்ணம் பழுத்த சிந்தையிலே
தித்தித் துலவாச் சுயஞ்சோதி
வண்ணம் பழுத்த தனிப்பழமே
மன்றில் விளங்கு மணிச்சுடரே
தண்ணம் பழுத்த மதிஅமுதே
தருவாய் இதுவே தருணம்என்றன்
எண்ணம் பழுத்த தினிச்சிறியேன்
இறையுந் தரியேன் தரியேனே.

உரை : திட்பம் பொருந்திய மனத்தின்கண் இனிமை செய்து கெடாது விளங்கும் சுயஞ் சோதியாகிய சிவபெருமானே, அழகுறப் பழுத்த ஒப்பற்ற பழம் போல்பவனே, தில்லையம்பலத்தில் விளங்குகின்ற மாணிக்க மணியின் சுடரொளியை யுடையவனே, குளிர்ந்த சந்திர னிடத்தே நிலவுகின்ற அமுதத்தைத் தந்தருள்வாய்; அதற்கு இதுவே சமயமாகும்; என்னுடைய எண்ணமும் கைகூடி விட்டது; இனிமேல் சிறியவனகிய யான் இவ்வுலகியல் துன்பங்களைத் தாங்க மாட்டேன்; எ.று.

திண்ணம் பழுத்த சிந்தை - எத்தகைய துன்பங்கட்கும் சலிப்புறுத சிந்தை. சிந்திப்பார் சிந்தையின்கண் தேனூறி நிற்கின்ற பெருமானதலால், "திண்ணம் பழுத்த சிந்தையிலே தித்தித்து" என்றும், இயல்பாகவே ஞானவொளி பெற்று என்றும் இடையருது விளங்குதல் பற்றி, "உலவாச் சுயஞ்சோதி" என்றும் இயம்புகின்றார். வண்ணம் - நன்கு பழுத்த பழத்தின்கண் உளதாகும் நிறமும் ஒளியுமாம். மன்று - தில்லையம்பலம். தில்லையம்பலத்தில் செம்மேனி அம்மானுய் ஞான வொளி கொண்டு திகழ்தலால், "மன்றில் விளங்கு மணிச் சுடரே" எனப் போற்றுகின்றார். யோகக் காட்சி யுடையாருக்குச் சிரசின் மேல் துவாத சாந்தத்தில் சந்திரனுய்த் தோன்றி ஞான வமுது தருகின்றன் என்பது பற்றி, "தண்ணம் பழுத்த மதி அமுதே தருவாய்" என்றும், அதனைப் பெறுதற் குரிய பக்குவத்தைத் தான் எய்தினமை புலப்பட, "இதுவே தருணம்" என்றும், இதனால் தாம் செய்த தவம் பயன் பட்டமை விளங்குதற்கு, "என்றன் எண்ணம் பழுத்தது" என்றும் இசைக்கின்றார். தமது உடலும் உள்ளமும் ஞானப் பேற்றால் மென்மை யுற்றமையின் உலகியல் துன்பங் களைத் தாங்கும் சிறுமையைப் பொருதாயிற்று என்பாராய், "இனிச் சிறியேன் இறையும் தரியேன் தரியேன்" என உரைக்கின்றார்.

இதனால் ஞானமிர்தப் பேறு கூறியவாறும். (5)

3626. நாட்டுக் கிசைந்த மணிமன்றில்
ஞான வடிவாய் நடஞ்செயருள்
ஆட்டுக் கிசைந்த பெருங்கருணை
அப்பா என்றன் அரசேஎன்
பாட்டுக் கிசைந்த பதியேஓர்
பரமா னந்தப் பழமேமேல்
வீட்டுக் கிசைந்த விளக்கேஎன்
விவேகம் விளங்க விளக்குகவே.

உரை : இந்த நிலவுலகிற்குப் பொருத்தமாக அமைந்த மணியிழைத்த பொற்சபையின்கண் ஞானத் திருமேனி கொண்டு செய்தருளும் அருட் கூத்துக்குப் பொருத்தமான பெரிய கருணை நிறைந்த அப்பனே, எனக்கு அருளும் அரசனே, யான் பாடுகின்ற பாட்டுக்களை ஏற்று அருளிய தலைவனே, ஒப்பற்ற மேலான இன்பச் சுவையைத் தருகின்ற பழமாக விளங்குபவனே, மேலான வீடு பேறு எய்துதற்குப் பொருந்திய ஞான விளக்காய் உள்ளவனே, எனது அறிவு விளக்கமுற அருளுவாயாக. எ.று.

நிலவுலகத்தின் மையமாய் விளங்குவது ஞான அம்பலமாதலின், "நாட்டுக்கிசைந்த மணி மன்று" என்றும், அதன்கண் ஞானமூர்த்தியாய் நின்று திருநடனம் செய்வதால், "ஞான வடிவாய் நடஞ்செய் அருள் ஆட்டுக்கிசைந்த பெருங்கருணை அப்பா" என்றும் துதிக்கின்றார். தாம் பாடுகின்ற பாட்டுக்கள் எல்லாம் சிவமே பொருளாக அமைவது பற்றி, "என் பாட்டுக் கிசைந்த பதியே" எனவும், அதனை நினைக்குந் தோறும் நெஞ்சம் இன்புறுதலால், "ஓர் பரமானந்தப் பழமே" எனவும், அந்நினைவால் வீடு பேற்றுக்குரிய ஞான விளக்கம் உண்டாதல் கண்டு, "மேல் வீட்டுக் கிசைந்த விளக்கே" எனவும் விளம்புகின்றார். ஞான விளக்கம் இன்பம் செய்தலின், அதனை மிகவும் வேண்டி, "என் விவேகம் விளங்க விளக்குக" என வுரைக்கின்றார்.

இதனால், வீடு பேற்றுக்குரிய விவேகம் விளங்க அருள வேண்டுமென வேண்டியவாறும். (6)

3627. வேதந் தலைமேற் கொளவிரும்பி
வேண்டிப் பரவு நினதுமலர்ப்
பாதந் தலைமேற் சூட்டிஎனைப்
பணிசெய் திடவும் பணித்தனைநான்
சாதந் தலைமேல் எடுத்தொருவர்
தம்பின் செலவும் தரமில்லேன்
ஏதந் தலைமேற் சுமந்தேனுக்
கிச்சீர் கிடைத்த தெவ்வாறே.

உரை : வேதங்கள் தம் உச்சியில் கொள்ள விழைந்து பன்முறையும் வேண்டிப் பரவுகின்ற நின்னுடைய தாமரை போன்ற திருவடியை என்னுடைய தலைமேல் அணிந்து என்னை அதற்குரிய பணிகளைச் செய்திட ஆணையிட்டுள்ளாய்; உண்ணும் சோற்று மூடையைத் தலைமேல்

எடுத்துக் கொண்டு ஒருவர் பின் செல்லவும் வகையில்லாதவன் போலத் துன்பத்தை தலைமேல் சுமந்து கொண்டிருக்கும் எனக்கு இச்சிறப்பு கிடைத்தது எவ்வகையோ அறியேன். எ.று.

வேதம் என்றது இங்கே வேதங்களில் வல்ல சான்றோர் மேற்று. அப்பெருமக்கள் இறைவன் திருவடியைத் தம் முடிமேல் சூடிக் கொள்ளுதல் வேண்டி வேதங்களை ஓதிப் பரவுகின்றராதலால் சிவனுடைய திருவடியை, "வேதம் தலைமேற் கொள விரும்பி வேண்டிப் பரவு நினது மலர்ப்பாதம்" என்று கூறுகின்றார். "வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" (திருவாச) என மாணிக்கவாசகப் பெருமான் உரைப்பது காண்க. சிவபெருமான் மெய்த்தொண்டர்களைத் தாமே வலிய வந்து தமது திருவடியை அவர்கள் தலைமேல் வைத்துச் சிறப்பிப்பது வரலாறு அறிந்த உண்மையாதலின், அச்சிறப்புத் தமக்கும் எய்தினமை புலப்பட, "மலர்ப் பாதம் தலைமேற் சூட்டி எனைப் பணி செய்திடவும் பணித்தனை" என்று கூறுகின்றார். தன் பின்னே தனக்கு வேண்டும் உணவை ஒருவர் எடுத்துத் தம்மைத் தொடர்ந்து வரவும், அதனை உண்ணும் திறமின்றிப் பசி நோயால் வருந்துபவன் போல நினது திருவருள் என் பக்கம் இருக்கவும் துன்பமே மேற்கொண்டு ஒழுகினேன் எனத் தமது இயல்பு கூறுவாராய், "சாதம் தலைமேல் எடுத்தொருவர் தம்பின் செலவும் தரமில்லேன்" எனவும், "ஏதம் தலைமேற் சுமந்தேன்" எனவும் எடுத்துரைக்கின்றார். சாதம் - உண்ணும் சோறு. தரம் - திறமை; தகுதியுமாம். ஏதம் - துன்பம். சீர் - திருவருள் ஞானம்; திருவடிப் பேறுமாம்.

இதனால், மலர்ப்பாதம் தலைமேல் சூட்டிப் பணி செய்திடும் பேறு தமக்குக் கிடைத்தது எண்ணி வியந்தவாறும். (7)

3628. பொய்விட் டகலாப் புலைக்கொடியேன்
பொருட்டா இரவில் போந்தொருநின்
கைவிட் டகலாப் பெரும்பொருள்என்
கையிற் கொடுத்தே களிப்பித்தாய்
மைவிட் டகலா விழிஇன்ப
வல்லி மகிழும் மணவாளா
மெய்விட் டகலா மனத்தவர்க்கு
வியப்பாம் உனது மெய்யருளே.

உரை : மை எழுதுதல் நீங்காத கண்களையுடைய இன்பக் கொடி போன்ற உமாதேவி இன்புறும் மணவாளனே, பொய் யொழுக்கத்தைக் கைவிடாத புலைத் தொழிலால் கொடியவனாகிய என் பொருட்டு இரவுப் பொழுதில் எழுந்தருளி நின்னுடைய கையினின்றும் நீங்காத பெரிய பொருள் ஒன்றை என் கையிற் கொடுத்து மகிழ்வித்தாய்; மெய்ம்மை குன்றுத மனமுடைய சான்றோர்க்கு உனது அருட் செய்கை விருப்புத் தருவதாம். எ.று.

"மை யிலங்கு நற்கன்னி பங்கனே" (சதகம்) எனச் சான்றோர் குறித்தலால் உமாதேவியை, "மைவிட்டு அகலா விழி இன்பவல்லி" என்று பாராட்டுகின்றார். மணவாளன் - கணவன். பொய் ஒழுக்கமும் புலைத்தன்மையும் ஒருவருனைக் கொடியவன் ஆக்குதலால், "பொய்விட்

டகலாப் புலிக் கொடியேன்" எனத் தம்மையே இகழ்ந்து பேசுகின்றார். நின் கைவிட்டகலாப் பெரும் பொருள் என்பது இன்னதென விளங்க வில்லை. அஃது எப்பொழுதும் இறைவன் கையில் இருப்பது என்றும், அது பெரியதொரு பொருள் என்றும் குறிக்கப்படுகின்றது. இன்னது - இத் தன்மைத்து என வள்ளற் பெருமானுல் விளக்கப் படாமை நோக்கத் தக்கது. பெரிய ஞானிகட்கும் எய்தாதது அப்பொருள் என்றற்கு, "மெய் விட் டகலா மனத்தவர்க்கு வியப்பாம் உனது மெய்யருளே" என்று உரைக்கின்றார்.

இதனுல், வள்ளற் பெருமானுக்கு இறைவன் பெரும் பொருள் கொடுத்து மகிழ்வித்த செய்தி தெரிவித்தவாறும். (8)

3629. சாமத் திரவில் எழுந்தருளித்
தமியேன் தூக்கந் தடுத்துமயல்
காமக் கடலிற் கடத்தி அருட்
கருணை அமுதங் களித்தளித்தாய்
நாமத் தடிகொண் டடிபெயர்க்கும்
நடையார் தமக்கும் கடையானேன்
ஏமத் தருட்பே றடைந்தேன்நான்
என்ன தவஞ்செய் திருந்தேனே.

உரை : அச்சம் தரும் மரத்தடி ஒன்றைக் கையிற் கொண்டு அடி மேல் அடி வைத்து நடக்கும் கொடியவர்களுக்கும் கடையவனுகிய நான் உறங்கும் போது, இரவுப் பொழுதின் இடைச் சாமத்தில் வந்தருளித் தனித்து உறங்கும் என்னை எழுப்பி மயக்கம் தரும் காம நினைவுகளைப் போக்கி நின் திருவருளாகிய கருணை அமுதத்தை அப்பொழுதே எனக்கு அளித்து மகிழ்வித்தாய்; நலம் பயக்கும் நினது திருவருட் பேற்றினை அடைந்தேனுதலால், நான் என்ன மாதவம் செய்தேனுவேன். எ.று.

இரவுப் பொழுதில் வழிச் செல்வோரைத் தடிகொண்டு அடித்து அவர் கைப்பொருளைக் கவர்ந்து செல்லும் கள்வரைக் குறித்தற்கு, "நாமத் தடிகொண்டடி பெயர்க்கும் நடையார்" என்றும், அவர்களினும் கொடுமைத் தன்மையால் கீழ்மைப் பட்டவன் எனத் தம்மைச் சுட்டுதற்கு, "கடையானேன்" என்றும் கூறுகின்றார். நள்ளிரவுப் பொழுதினைச் "சாமத் திரவு" என்றும், அப்பொழுது போந்து தம்மைத் தூக்கத்தினின்றும் எழுப்பி அருளமுதம் வழங்கிய திறத்தினை, "சாமத் திரவில் எழுந்தருளித் தமியேன் தூக்கம் தடுத்து அருட் கருணை அமுதம் களித்து அளித்தாய்" என அறிவிக்கின்றார். இரவுப் பொழுதில் தோன்றி மயக்குவது காமமாதலின் அக்காம நினைவு வாராதவாறு தடுத் தாண்டமை புலப்பட, "மயல் காமக் கடலிற் கடத்தி" என்று கூறு கின்றார். "கருணை அமுது" என்றது சிவஞானம் போலும். ஞானப் பேற்றை "ஏமத் தருட் பேறு" என இயம்புகின்றார். ஏமம் - பாதுகாப்பு. பிறவித் துன்பத்திற்கு இலக்காகாதவாறு காத்தலால் சிவஞானம் ஏமத் தருட் பேறு எனப்படுகிறது. மிக்க மாதவம் செய்தார்க் கன்றி எய்தலாகாத அதன் அருமை தோன்ற, "என்ன தவம் செய்திருந்தேனே" என இசைக் கின்றார்.

இதனால், சிவஞானப் பேறு எய்திய திறம் கூறியவாறும். (9)

3630. பாதி இரவில் எழுந்தருளிப்
பாவி யேனை எழுப்பிஅருட்
சோதி அளித்தென் உள்ளகத்தே
சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்
நீதி நடஞ்செய் பேரின்ப
நிதிநான் பெற்ற நெடும்பேற்றை
ஓதி முடியா தென்போல்இவ்
வுலகம் பெறுதல் வேண்டுவனே.

உரை : நீதி செய்யும் திருக்கூத்தைச் செய்து பேரின்பம் நல்கும் செல்வமாகிய சிவபெருமானே, ஒருநாள் நள்ளிரவில் என்பால் வந்து உறங்கிக் கொண்டிருந்த பாவியாகிய என்னை எழுப்பித் திருவருள் சோதியினை நல்கி என் மனத்துட் புகுந்து கலந்து விளக்கமுறுகின்றாய்; யான் பெற்ற இந்தப் பெரிய பேற்றை முற்றவும் சொல்ல முடியாதாயினும் இதனை என் போல் இவ்வுலகமும் பெறுக வென வேண்டுகின்றேன். எ.று.

நீதியே உருவானவனாதலால் சிவனது திருக்கூத்தை, "நீதி நடம்" என உரைக்கின்றார். நீதி பலவும் தன்ன வுருவாம் என மிகுத்தவன்" (வைகா) என ஞானசம்பந்தர் கூறுதலால், சிவனது திருக்கூத்தை "நீதி நடம்" எனச் சிறப்பிக்கின்றார். அத் திருக்கூத்து எல்லா உயிர்கட்கு இன்பம் தருவதாகலின், "பேரின்ப நிதி" எனப் பேசுகின்றார். அருட் பேற்றுக்குத் தகுதி செய்யாத பாவங்களை யுடையவன் எனத் தம்மைக் குறிப்பாராய், "பாவியேன்" என உரைக்கின்றார். அருட் சோதி என்றது திருவருள் ஞானம். ஞானம் எய்திய பின் திருவருள் உணர்வே யுள்ளம் முழுதும் பரந்து நினைவு முழுதும் அதுவே ஆயினமை புலப்பட, "உள்ளகத்தே சூழ்ந்து கலந்து கலங்குகின்றாய்" என இயம்புகின்றார். ஞான வின்ப நலங்களைச் சொல்லால் உரைக்க லாகாமை தோன்ற, "நான் பெற்ற நெடும் பேற்றை ஓதி முடியாது" என்று கூறுகின்றார். சொல்ல முடியாதாயினும் ஒவ்வொருவரும் தத்தம் அனுபவத்தால் உணர்ந்து கொள்ளலாம் என வற்புறுத்தற்கு, "இவ்வுலகம் பெறுதல் வேண்டுவனே" என்று கூறுகின்றார். இவ்வாறே திருமூலரும், "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என உரைப்பது காண்க.

இதனால், அருள் ஞானப் பேறு பெற்றமை உணர்த்தியவாறும். (10)

திருச்சிற்றம்பலம்

20. இறை பொறுப் பியம்பல்

அஃதாவது, ஆன்ம குண வியல்பாற் சிற்றறிவும் சிறுசெயலும் உடையனாயினும் இறைவற்குரிய திருப்பணி வகைகளைச் செய்வ தொழியாமை பற்றி நன்ஞானமும் நல்லருளும் தந்தருளிக் காத்தல் கடன் என முறையிடுதல்.

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3631. தேடிய துண்டு நினதுரு வுண்மை
தெளிந்திடச் சிறிதுநின் னுடனே
ஊடிய துண்டு பிறர்தமை அடுத்தே
உரைத்ததும் உவந்ததும் உண்டோ
ஆடிய பாதம் அறியநான் அறியேன்
அம்பலத் தரும்பெருஞ் சோதி
கூடிய நின்னைப் பிரிகிலேன் பிரிவைக்
கூறவுங் கூசும்என் நாவே.

உரை : தில்லைப் பொன்னம்பலத்தின்கண் எழுந்தருளும் அருமையும் பெருமையும் உடைய சோதியுருவாகிய பெருமானே, நினது உண்மைத் திருவுருவைக் காண விரும்பி நான் தேடிய துண்டு; தெளிவாகக் காண மாட்டாமையால் அது குறித்து மனத்தால் நின்னோடு பிணங்கிய துண்டே யெனினும் பிறர்பால் என் பிணக்கினைப் பேசியதோ பேசி மகிழ்ந்ததோ இல்லை; அம்பலத்தில் திருக்கூத்தாடிய நினது திருவடி யறிய நான் அறியேன்; உனது திருவருள் நெறியைச் சேர்ந்த யான் பிரிந்தொழுகும் திறமில்லேன்; பிரிவை வாயாற் சொல்லவும் எனது நா கூசும் இயல்பினது காண். எ.று.

உருவம் நான்கு அருவம் நான்கு உருவரும் ஒன்று என ஒன்பது கூறுபவாதலின், இவற்றுள் உண்மை யுருவைத் தெளிந்து கொள்ள நான் முயன்ற துண்டு என்றற்கு, "தேடிய துண்டு நினது உருவுண்மை" என தெரிவிக்கின்றார். முயன்ற விடத்து இவ்வொன்பதுமே கூறப்பட்டமை யின் உண்மை யுருவைத் திட்டமாகத் தெளிய முயன்றபோது "இன்னவுரு இன்ன நிறம் என்றறிவதே லரிது நீதி பலவும் தன்ன வுருவாமென மிகுத்த தவன்" (வைகா) என ஞானசம்பந்தர் போன்றோர் கூறினமையின், பல வுருவுடைய பரம்பொருட்கு உண்மை யுருவொன்றிருத்தல் வேண்டு மென்ற கருத்தால் மனத்தின்கண் பிணக்குற்ற துண்டு என்பார், "தெளிந் திடச் சிறிது நின்னுடனே ஊடிய துண்டு" என்று இயம்புகின்றார். அவ் வூடலையும் உள்ளத்திற் கொண்ட தன்றிப் பிறர்பால் உரைத்ததோ உரைத்து மகிழ்ந்ததோ இல்லை என்பாராய், "பிறர் தமையடுத்தே உரைத் ததும் உவந்ததும் உண்டோ" என ஓதுகின்றார். ஊடலும் உவத்தலும் கூடி மகிழும் மெய்யன்பர் செயலாதலால், "உவந்ததும் உண்டோ" என வுரைக்கின்றார். "ஊடுவ துன்னோடு உவப்பதும் உன்னை யுணர்த்துவ துனக் கெனக் குறுதி" (வாழாப்) என மணிவாசகனார் உரைப்பது காண்க. ஊடலும் உணர்த்தலும் உவத்தலும் எனக்கு உறுதி பயப்பனவாயினும், "இனையர் இவர் எமக்கு இன்னம்யாம் என்று புனையினும் புல்லென்னும் நட்பு" (குறள்) என்பது பெரியோர் கூறுதலின், அதனை யான் நின் திருவடி யறியச் சொல்லுகிற்றேன் என்பார், "ஆடிய பாதம் அறிய நான் அறியேன்" என வுரைக்கின்றார். உயிர்க் குயிராய் நிற்கும் தன்மையால் தன்னைச் சிவ பரம்பொருள் அறிவது போலத் தான் அதனையறிய மாட்டாமை பற்றி "கூடிய நின்னைப் பிரிகிலேன்" எனவும், அன்புவையார்க்குப் பிரிவினும் இன்னாதது வேறின்மையால் "பிரிவைக் கூறவும் கூசும் என் நாவே" எனவும் இசைக்கின்றார். காண்டற் கருமை பற்றியும், எய்தலாகாமை

நோக்கியும் சிவ பரஞ்சோதியை "அம்பலத்தாடும் அரும் பெருஞ் சோதி" எனப் புகல்கின்றார்.

இதனால், நின்னோடு யான் ஊடிப் பிரிவு கருதியது இன்மையின் எனக்கு அருளுவது நினது பொறுப்பு எனக் கூறியவாறும். (1)

3632. மடம்புரி மனத்தாற் கலங்கிய துண்டு
வள்ளலே நின்திரு வரவுக்
கிடம்புரி சிறியேன் கலங்கினேன் எனினும்
இறையும்வே றெண்ணிய துண்டோ
நடம்புரி பாதம் அறியநான் அறியேன்
நான்செயும் வகையினி நன்றே
திடம்புரிந் தருளிக் காத்திடல் வேண்டும்
சிறிதும்நான் பொறுக்கலேன் சிவனே.

உரை : சிவபெருமானே, அருள் வள்ளலே, மடம்படும் இயல்பினை யுடைய மனத்தினால் அறிவுகலங்கிய துண்டாகலின், நீ எழுந்தருளுதற்கு என் மனத்தை யிடமாக்குதற்குச் சிறியவனுகிய யான் கலங்கியதுண்டு; என்றாலும் நின்னை வேண்டாத வொன்றாக எண்ணியதில்லை; அம்பலத் தின்கண் கூத்தாடும் நினது திருவடி யறிய, யான் வேறாக எண்ணியறி யேன்; நினக்கு இடமாக்கும் வகையில் கலங்கும் என் மனத்துக்கு, மிக்க வலிமை தந்து கலங்காவாறு காத்தருள வேண்டும்; இந்நிலைமையை நான் சிறிதும் பொறுக்க மாட்டேன், காண். எ.று.

அறியாமை யுறுவது மடம் புரிதல் எனப்படுகிறது. அறிவறியாமை யால் மனம் இருளூற்று மென்மை மிக்குக் கலங்குவ தியல்பாதலால், "மடம்புரி மனத்தாற் கலங்கியதுண்டு" என்றும், என் மனத்தை நீ எழுந்தருளும் நல்ல இடமாக்குதற்குத் தூய்மையின்மையும் எனது அறி வாற்றல்களின் சிறுமையும் நோக்கிக் கலக்க முற்றேன் என்பாராய், "நின் திருவரவுக்கு இடம் புரி சிறியேன் கலங்கினேன்" என்றும் இயம்புகின்றார். என்றாலும், மனக் கலக்க மெய்தினும், உன்னை அன்னியப் பொருளாகக் கருதிற்றிலேன் என்றற்கு, "இறையும் வேறு எண்ணிய துண்டோ" என விளம்புகின்றார். இறை - சிறிது. எண்ணுமையை வற்புறுத்தற்கு "நடம்புரி பாதம் அறிய நான் அறியேன்" எனவும், மனத்தைச் சிவம் எழுந்தருளும் இடமாக்கும் திறத்தையே விரும்புகின்றாராகலின், "நான் செயும் வகை" எனவும் நவில்கின்றார். "வினைத் திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்" (குறள்) என்று சான்றோர் உரைத்தலால் "இனி நன்றே திடம் புரிந்தருளிக் காத்திடல் வேண்டும்" என்றும், "சிறிதும் நான் பொறுக்கலேன்" என்றும் இசைக்கின்றார்.

இதனால்; சிவன் எழுந்தருளும் இடமாமாறு மனத்துக்குத் திடமருளிக் காத்தல் வேண்டு மெனப் பராவியவாறும். (2)

3633. நீக்கிய மனம்பின் அடுத்தெனைக் கலக்கி
நின்றதே அன்றிநின் அளவில்
நோக்கிய நோக்கம் பிறவிட யத்தே
நோக்கிய திறையும் இங்குண்டோ
தூக்கிய பாதம் அறியநான் அறியேன்
துயரினிப் பொறுக்கலேன் சிறிதும்
தேக்கிய களிப்பில் சிறப்பவந் தென்னைத்
தெளிவித்தல் நின்கடன் சிவனே.

உரை : சிவபெருமானே, புலன் வழிச் செல்லாமல், ஒடுக்கப்பட்ட என் மனம் பின்னும் எழுந்து என்னைக் கலக்கியதாயினும், நின்பாற் சென்ற என்னுள்ளம் மற்றை உலகியல் விடயங்களில் இப்பொழுது செல்வ தில்லை; அம்பலத்தில் ஆடற்கு எடுத்த நின் திருவடி யறியச் செல்வ தறியேன்; இனியும் உலகியல் துன்பங்களைச் சிறிதும் தாங்க மாட்டேனு தலால், நின்பால் நிறைந்திருக்கும் சிவானந்தத்தில் மூழ்கிச் சிறக்குமாறு என்னை ஞானத் தெளிவுடையனாக்குவது நினக்குக் கடனாகும். எ.று.

சிவஞான போகங்களை விரும்புவோர் மனத்தைச் சென்ற விடமெல் லாம் திரிய விடாது நீக்கி நிறுத்துவ தியல்பாதலால், "நீக்கிய மனம்" என்று குறிக்கின்றார். இதனை மனவொடுக்கம் என்று நூலோர் கூறுவர். துள்ளித் தாவும் இயல்பினதாகையால் மீள மீள எழுந்து என் மனம் என்னைக் கலக்குகிற தென்பார், "அடுத்தெனைக் கலக்கி நின்றது" என வுரைக்கின்றார். இவ்வாறு என் அறிவைக் கலக்கினும் நின் திருவருட் பேற்றின்கண் நின்ற நோக்கம் சிறிதளவும் மாறியதில்லை என்றற்கு, "நின்னளவில் நோக்கிய நோக்கம் பிற விடயத்தே நோக்கியது இங்கு இறையும் உண்டோ" எனக் கூறுகின்றார். தூக்கியபாதம் - "அம்பலத்தில் ஆட எடுத்திட்ட பாதம்". ஞான மயமான திருவடியாதலால், "தூக்கிய பாதமறிய நான் அறியேன்" என்று சான்று காட்டுகின்றார். உலகில் வாழும் அளவும், உலகியல் துன்பங்கள் தாக்குத லொழியாமை பற்றி, "துயரினிச் சிறிதும் பொறுக்கலேன்" என மொழிகின்றார். சிவஞானத் தெளிவு உண்டாயின் ஆன்மாக்கள் சிவபோகத்தில் தேக்கித் திளைக்கும் என ஞான நூல்கள் தெரிவித்தலால், "தேக்கிய களிப்பில் சிறப்ப வந்து என்னைத் தெளிவித்தல் நின் கடன் சிவனே" எனத் தெரிவிக்கின்றார்.

இதனால் சிவஞானத் தெளிவு வேண்டியவாறும். (3)

3634. ஈன்றநற் றாயுந் தந்தையும் குருவும்
என்னுயிர்க் கின்பமும் பொதுவில்
ஆன்றமெய்ப் பொருளே என்றிருக் கின்றேன்
அன்றிவே றெண்ணிய துண்டோ
ஊன்றிய பாதம் அறியநான் அறியேன்
உறுகணிங் காற்றலேன் சிறிதும்
தோன்றிஎன் உளத்தே மயக்கெலாந் தவிர்த்துத்
துலக்குதல் நின்கடன் துணையே.

உரை : என் உயிர்க்குத் துணையாகிய சிவ பரம்பொருளே, என்னை யிவ்வுலகிற் பெற்றெடுத்த நற்றாயும் தந்தையும் குருவும் இவர்களால் எனக்கு எய்தும் இன்பங்களும் யாவும், தில்லையம்பலத்தில் அமைந்த மெய்ப்பொருளே என எண்ணி யிருக்கின்றேனே யன்றி, வேறு யாவரையும் நெஞ்சில் எண்ணியது கிடையாது; முயலகன் மேல் ஊன்றிய திருவடியறிய நான் வேறு நினைத்ததில்லை; ஆதலால் இவ்வுலகியல் துன்பங்களைச் சிறிதும் பொறுக்க மாட்டேன்; ஆகவே, நீ என் மனத்தின்கண் எழுந்தருளி என் மயக்க மனைத்தையும் போக்கி ஞான விளக்கம் உண்டாகச் செய்தல் உனக்குக் கடனாகும். எ.று.

உலகிற் பிறந்தார்க்கு உறுதுணை யாபவர் தாயும் தந்தையும் குருவுமே யாதலால் அவர்களை எடுத்து மொழிகின்றார். நற்றாயால் உடல் நல வின்பமும், தந்தையாற் கல்வியறி வின்பமும், குருவால் நன்ஞான வின்பமும் உண்டாவது பற்றி, "என்னுயிர்க் கின்பம்" என்று கூறுகின்றார். இவ்வின்ப வகை யனைத்துக்கும் மூல காரணம் இன்ப வடிவினனாகிய சிவ பரம்பொருளே என எல்லா அறிஞர்களும் அறிவு நூல்களும் வற்புறுத்துவதை யுணர்ந்தமையால், "பொதுவில் ஆன்ற மெய்ப் பொருளே என்றிருக்கின்றேன்" என வுரைக்கின்றார். பொது - திருச்சிற்றம்பலம். ஆன்றல் - எழுந்தருளுதல். சிவமல்லது வேறு பிற தெய்வங்களை மெய்ப்பொருளென எண்ணுமை புலப்பட, "வேறு எண்ணிய துண்டோ" எனவும், இதனை வலியுறுத்தற்கு "ஊன்றிய பாத மறிய நான் அறியேன்" என மொழிகின்றார். ஒருகாலை யூன்றி ஒருகாலைத் தூக்கி ஆடுகின்றாராதலால், முன் பாட்டில் தூக்கிய பாதத்தைச் சொல்லி, இப் பாட்டில் "ஊன்றிய பாதத்தை" யுரைக்கின்றார். ஊன்றிய பாதத்தின் கீழ் முயலகன் தோன்றுதலால், "முயலகன் மேல் ஊன்றிய திருவடி" என உரை கூறுகிறது. உறுகண் - துன்பம். உலகில் தோன்றி வருத்தும் பிறவித் துன்பங்களைத் தாங்க மாட்டாமை பற்றி, "உறுகண் இங்கு ஆற்றலேன் சிறிதும்" என்றும், இத் துன்பங்கள் அறிவைக் கலக்கி மயக்குவதால், "தோன்றி யென்னுளத்தே மயக் கெலாம் தவிர்த்துத் துலக்குதல் நின் கடன்" என்றும் இயம்புகின்றார். திருவருள் ஞானத்தாலன்றி மனமயக்கம் நீங்குதலும் அறிவு விளக்கமு முண்டாகாதாதலால், "உளத்தே தோன்றி" எனவும், "துலக்குதல் நின் கடன்" எனவும் விதந்துரைக்கின்றார்.

இதனால், மனமயக் கொழித்து, ஞான விளக்கம் தருமாறு வேண்டியவாறும். (4)

3635. மாயையாற் கலங்கி வருந்திய போதும்
வள்ளல்உன் தன்னையே மதித்துன்
சாயையாப் பிறரைப் பார்த்ததே அல்லால்
தலைவவே றெண்ணிய துண்டோ
தூயபொற் பாதம் அறியநான் அறியேன்
துயர்இனிச் சிறிதும்இங் காற்றேன்
நாயகா எனது மயக்கெலாம் தவிர்த்தே
நன்றருள் புரிவதுன் கடனே.

உரை : தலைவனே, உலகியல் மயக்கத்தால் அறிவு கலங்கி வருந்திய காலத்தும், அருள் வள்ளலாகிய உன்னையே மனத்திற் கொண்டு பிற மக்களனைவரையும் உன்னுடைய சாயையாகவே கண்டேனே யன்றி வேருக நான் கருதியதில்லை; தூயவாகிய அழகிய நின் திருவடி யாணையாக இதனைக் கூறுகின்றேன்; இவ்வுலகியல் துன்பங்களை இனிச் சிறிது போதும் தாங்க மாட்டேன்; எனக்கு நாயகனுகிய நீ எனது மயக்க மெல்லாவற்றையும் போக்கி நன்ஞானம் அருளுவது உன்னுடைய கடனுகும், காண். எ.று.

காம வெகுளிகள் போல உலகுடல் நல்கும் மயக்கம் துன்பத்துக் கேதுவாகலின், "மாயையாற் கலங்கி வருந்திய போதும்" எனவும், மயக்குற்ற போது அறிவு சோர்ந் தொழியினும், உன்னைப் பற்றிய நினைவு மாறியதில்லை யென்பாராய், "வள்ளல் உன்றன்னையே மதித்து" எனவும், அதனுல், காணப்படும் மக்களனைவரையும் சிவ வடிவமாகவே கருதினேன்; வேருக நினைத்ததில்லை என்பாராய், "உன் சாயையாப் பிறரைப் பார்த்ததே யல்லால், தலைவ வேறு எண்ணிய துண்டோ" எனவும் இயம்புகின்ருர். வேருகக் கருதிய தில்லை என்றதை வலியுறுத்தற்குத் "தூய பொற் பாத மறிய நான் அறியேன்" என்று சொல்லுகின்ருர். இத்தகைய நினைவு கொண்டு வாழ்கின்றேனுயினும், இவ்வுலகியல் துன்பங்கள் போந்து தாக்குத லொழியாமையால் யான் வலியிழந்து மெலிகின்றேன் என்பார், "துயர் இனிச் சிறிதும் இங்கு ஆற்றேன்" என்றும், இதற்குத் துணையாக வேண்டுவது நின்னுடைய திருவருள் ஞானமேயாகும் என்பாராய், "நாயகா எனது மயக்கெலாம் தவிர்த்தே நன்றருள் புரிவது உன் கடனே" என்றும் இசைக்கின்ருர். நன்று - திருவருள் ஞானம். அது தானும் இறைவன் அருளாலே பெறக் கடவதாதலால், "நன்று அருள் புரிவது உன் கடனே" என வுரைக்கின்ருர்.

இதனுல், திருவருள் ஞானமல்லது மயக்கம் தீர்தற்கு வேறு வழி யில்லை, என்று தெரிவித்தவாரும். (5)

3636. வண்ணம் வேறெனினும் வடிவுவே றெனினும்
மன்னிய உண்மை ஒன்றென்றே
எண்ணிய தல்லால் சச்சிதா னந்தத்
திறையும்வே றென்ணிய துண்டோ
அண்ணல்நின் பாதம் அறியநான் அறியேன்
அஞர்இனிச் சிறிதும்இங் காற்றேன்
திண்ணமே நின்மேல் ஆணைஎன் தன்னைத்
தெளிவித்துக் காப்பதுன் கடனே.

உரை : பொருள்களின் நிறம் வேறுபடினும், வடிவு வேறுபடினும் வேறுபடாது நிலைபெற்ற பொருண்மை ஒன்றே யெனக் கருதிய தன்றி, அதனைச் சச்சிதானந்தமாகிய பரம் பொருளின் வேருக யான் சிறிதும் எண்ணியதில்லை; இதனைத் தலைவனுகிய நின் திருவடி யறியக் கூறுவேன்; இவ்வுலகியல் துன்பங்களை இனியும் சிறிதும் பொறுக்க

மாட்டேன், இது திண்ணமாக நின்மேல் ஆணையாகக் கூறுவதாகும்; என்னறிவைத் தெளிவித்துக் காப்பது நினது பொறுப்பாகும். எ.று.

உலகும் உலகியற் பொருள்களும் உயிர்களும் யாவும் பிரமமயம் என்னும் சான்றோர் கூற்றை மேற்கொண்டு எண்ணும் முறையாதலால், "வண்ணம் வேறெனினும் வடிவு வேறெனினும் மன்னிய வுண்மை யொன் றென்றே எண்ணிய தல்லால் சச்சிதானந்தத் திறையும் வேறு எண்ணிய துண்டோ" என்று மொழிகின்றார். உயர்திணை யெனவும் அஃறிணை யெனவும், உயிர்களாகிய ஆன்மாக்க ளெனவும், உயிரில் பொருள்க ளெளவும், இவற்றின் பண்பும் தொழிலும் வேறு வேறு எனவும் பகுத்துக் காணப் படினும் பொருண்மை நிலையில் யாவும் ஒன்றே யென்று நோக்கும் பிரம ஞானத்தை இவ்வாறு கூறுகின்றார். வேறு வேருகக் காண்பது மித்தியா ஞானமாலிதன், "இறையும் வேறு எண்ணிய துண்டோ" என விளம்புகின்றார். சச்சிதானந்தம் - சத்தாயும் சித்தாயும் இன்மாயும் உள்ள பிரமப் பொருள்; இது "சருவம் பிரம மயம் ஜகத்து" எனச் சுருக்கமாக வுரைக்கப்படுவது. பிரமம் என்றும் உள்ளது; இரண்டல்லாதது எனப்படுவது பற்றி "மன்னிய வுண்மை யொன்று" என இசைக்கின்றார். "ஒன்றென்றது ஒன்றே காண், ஒன்றே பதி" எனச் சிவஞான போதமும், "ஏக மேவ அத்விதீயம் பிரமம்" எனச் சாந்தோக்கியமும் கூறுவது காண்க. பிரம ஞான நாட்டம் உலகியல் துன்பங்களால் கலக்கமுறுதலால், "அஞர் இனிச் சிறிதும் இங்கு ஆற்றேன்" என அவலிக்கின்றார். தமது ஆற்றுமையை வற்புறுத்தற்குத் "திண்ணமே நின் மேல் ஆணை" எனத் தெரிவிக்கின்றார்.

இதனால், பிரம ஞான நாட்டம் சிதையாமற் காத்தருள்க என வேண்டியவாறும். (6)

3637. ஊடல்செய் மதமும் சமயமும் இவற்றில்
உற்றகற் பனைகளும் தவிர்ந்தேன்
வாடல்செய் மனத்தால் கலங்கினேன் எனினும்
மன்றினை மறந்ததிங் குண்டோ
ஆடல்செய் பாதம் அறியநான் அறியேன்
ஐயவோ சிறிதும்இங் காற்றேன்
பாடல்செய் கின்றேன் படிக்கின்றேன் எனக்குப்
பரிந்தருள் புரிவதுன் கடனே.

உரை : ஐயனே, பிணங்குகின்ற மதங்களும் சமயங்களுமாகிய இவற்றையும், இவற்றில் அறிஞர்கள் கண்டுரைத்த கற்பனைகளையும் புறக்கணித் தொழிந்தேன்; வாடுகின்ற மனத்திற் கலக்கமுற்றேனெயினும், நினது திருவம்பலத்தை மறந்ததில்லை; இதனை அதன்கண் ஆடல் புரிகின்ற திருவடி யாணையாக வுரைக்கின்றேன்; இனி இவ்வுலகியல் துன்பங்களைச் சிறிதும் பொறுக்க மாட்டேன்; நின்னைப் புகழ்ந்துரைக்கும் பாட்டுக்களைப் புனைகின்றேன்; படிக்கின்றேன்; ஆகவே என்பால் அன்புகூர்ந்து திருவருள் ஞானம் வழங்குவது உனது பொறுப்பாகும். எ.று.

மதம் - கொள்கை. சமயம் விரிந்த இயல்பிற்று; மதம் - குறுகிய தன்மைத்து; இந்து சமயம் விரிந்தது; சைவம் வைணவம் என்பன மதங்கள். இவை ஒன்றினொன்று மாறுபட்டும் வேறுபட்டும் இயலுவதுபற்றி, "ஊடல் செய் மதமும் சமயமும்" என வுரைக்கின்றார். "ஒது சமயங்கள் பொருள் உணரும் நூல்கள் ஒன்றே டொன் றெவ்வாமல் உள பலவும் இவற்றுள் யாது சமயம் பொருள் நூல் யாது இங்கென்னில் இதுவாகும் அதுவல்ல தெனும் பிணக்கு" (சிவ. சித்தி) என்று பெரியோர் கூறுவது காண்க. தத்தம் மதமும் சமயமும் உயர்ந்தன என வலியுறுத்தற்கு மதத்தலைவரும் சமய ஞானிகளும் சிந்தித்துப் புகுத்தியுள்ள கற்பனைகள் பலவாதலின், "இவற்றி லுற்ற கற்பனைகள்" என்றும், கற்பனையுண்மை யாகாமையும் உண்டு என்பது பற்றி, "தவிர்ந்தேன்" என்றும் கூறுகின்றார். வேண்டுவன எய்தாவிடத்தும், மிகைபட எய்துமிடத்தும் மனக்கவலை மிக்கு வருத்துதலால், "வாடல் செய்மனத்தாற் கலங்கினேன்" எனவும், வாட்டமுற்ற போது மறதியும் பொச்சாப்பும் தோன்றிக் கேடு விளைவிப்பனவாயினும், யான் நினது பொற் சபையினை மறந்ததில்லை என்பாராய், "மன்றினை மறந்த திங்கு உண்டோ" எனவும் இயம்புகின்றார். ஆடல் செய்பாதம் ஞான பாதமாதலால், அதன் மேல் ஆணையிட்டுத் தமது கூற்றை வற்புறுத்துவார், "ஆடல் செய்பாதம் அறிய நான் அறியேன்" என்று மொழிகின்றார். இங்ஙனம் மறவா மனத்தினனாயினும் உலகியல் துன்பங்கள் தாக்கி மனவொருமையைச் சிதைக்கின்றன; சிறிது போதும் என்னைப் பொறுக்க முடியவில்லை என்பாராய், "ஐயவோ சிறிதும் இங்கு ஆற்றேன்" என்றும், என்பால் அன்புற்று அருளுவையேல், ஞான வன்மையால் உய்தி பெறுவேன் என்றற்கு "எனக்குப் பரிந்தருள் புரிவதுன் கடனே" என்றும் இசைக்கின்றார்.

இதனால் திருவருள் ஞான வலிமை வேண்டியவாறும். (7)

3638. உள்ளதே உள்ள திரண்டிலை எல்லாம்
ஒருசிவ மயமென உணர்ந்தேன்
கள்ளநேர் மனத்தால் கலங்கினேன் எனினும்
கருத்தயல் கருதிய துண்டோ
வள்ளலுன் பாதம் அறியநான் அறியேன்
மயக்கினிச் சிறிதும்இங் காற்றேன்
தெள்ளமு தருளி மயக்கெலாம் தவிர்த்தே
தெளிவித்தல் நின்கடன் சிவனே.

உரை : மெய்ப்பொருளாகிய சிவ மொன்றே யுளது; இரண்டில்லை; ஏனைப் பொருள் யாவும் ஒன்றுகிய சிவமயம் என்று உணர்ந்து கொண்டேன்; ஆயினும் சமய மத பேதங்களால் கள்ளம் பொருந்திய மனமுடைமையால் அறிவு கலங்கி விட்டேன்; என்றாலும், என் கருத்து வேறு கடவுளரை நினைந்ததில்லை; வள்ளலாகிய நின் திருவடி யாணையாக நான் இதனை யுரைக்கின்றேன்; இனிமேற் சிறிது போதும் பிறவியால் உளதாகிய மயக்கத்தைச் சிறிதும் பொறுக்கமாட்டேன்; தெளிந்த அமுது போன்ற திருவருள் ஞானத்தை நல்கி அம்மயக்கத்தைப் போக்கி எளியேனைத் தெளியச் செய்வது நினக்குக் கடனாகும். எ.று.

உள்ளது - என்றும் உள்ள மெய்ப்பொருள்; அது செம்பொருளாகிய சிவம். "ஓர்த் துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப் போர்த்துள்ள வேண்டா பிறப்பு" (குறள்) எனச் சான்றோர் உரைப்பது காண்க. இதனைப் பிரமம் என்றும், ஏகம் என்றும், அத்துவிதீயம் என்றும் சமய வாதிகள் பேசுவது பற்றி, "உள்ளத்தே யுள்ளது இரண்டிலை" என்றும், ஏனைப்பொருள் வகை யனைத்தும் சிவக் கூறு என்பது விளங்க, "எல்லாம் ஒரு சிவமயமெனவுணர்ந்தேன்" என்றும் எடுத்துரைக்கின்றார். வேற்றுச் சமயங்களும் மதங்களும் உரைக்கும் பொல்லாக் கருத்துக்கள் நிறைவது பற்றிக் "கள்ள நேர் மனத்தால்" எனவும், அவற்றுள் கலக்கமே விளைவது பற்றிக் "கலங்கினேன்" எனவும், இக்கலக்கங்களால் மனவொருமை கெடாது சிவத்தையே நினைந் தொழுகுகிறேன் என்றற்கு, "கருத்தயல் கருதிய துண்டோ" எனவும் இசைக்கின்றார். தமது கூற்றை வலியுறுத் தற்கு "வள்ளலுன் பாதம் அறிய நான் அறியேன்" என்று மொழிகின்றார். மக்கட் பிறப்பு மயக்கம் பொருந்தியிருத்தல் சான்றோர் அறிந்த வுண்மை; "மையல் மானுடமாய் மயங்கும் வழி, ஐயனே தடுத் தாண்டருள்" (தடுத்தாட்) என நம்பியாரூரர் வேண்டுவ தறிக. அதனையே வடலூர் வள்ளலும், மயக்கினிச் சிறிதும் இங்கு ஆற்றேன்" என வுரைக்கின்றார். மயக்கத்தை யொழிப்பது சிவஞானமாதலால், "தெள்ளமு தருளி மயக் கெலாம் தவிர்த்தே தெளிவித்தல் நின் கடன் சிவனே" என தெரிவிக் கின்றார். சிவஞானம் சிவனருளா லன்றி எய்தாமையின் "நின் கடன் சிவனே" எனமுறையிடுகின்றார்.

இதனால், சிவஞானத்தால் தெளிவு நல்க வேண்டுமென விண்ணப் பித்தவாரும். (8)

3639. எம்மத நிலையும் நின்னருள் நிலையில்
இலங்குதல் அறிந்தனன் எல்லாம்
சம்மதம் ஆக்கிக் கொள்கின்றேன் அல்லால்
தனித்துவே றெண்ணிய துண்டோ
செம்மலுன் பாதம் அறியநான் அறியேன்
சிறிதும்இங் கினித்துயர் ஆற்றேன்
இம்மதிக் கடியேன் குறித்தவா றுள்ள
தியற்றுவ துன்கடன் எந்தாய்.

உரை : எந்தையாகிய சிவனே, எந்தச் சமயத்தின் இயல்பையும் நினது திருவருள் நிலையில் விளங்கும் தன்மையிற் கண்டு அறிந்து யான் எனக்குச் சம்மதமாகக் கொண்ட தன்றித் திருவருட்கு வேருகத் தனித்த தொன்றெனக் கருதி விலக்கியதில்லை; தலைவனுகிய நின் திருவடியறிய நான்வேருக நினைந்து வெறுத்ததில்லை; எனினும் இவ்வுலகியல் துன்பங் களை இனிமேற் சிறிதும் பொறுக்க மாட்டேன்; இந்த அறிவால் அடியேன் எண்ணியவாறு செய்தருள்வது தேவரீர்க்குக் கடனும். எ.று.

எத்தகைய கொள்கைகளையுடைய மதமாயினும் அதுவும் திருவருள் நிலைக்கு ஒத்ததாம் எனக் கண்டு தெளிந்தேனேயன்றித் திருவருட்கு மாருய்த் தனித்த ஒன்று என நான் புறக்கணித்ததில்லை என்பாராய்

"எம்மத நிலையும் திருவருள் நிலையில் இலங்குதல் அறிந்தன னெல்லாம் சம்மதமாக்கிக் கொள்கின்றேன்" என்றும், "தனித்து வேறு எண்ணிய துண்டோ" என்றும் இயம்புகின்றார். திருவருள் நிலைக்கு ஒப்பதாவது இந்நிலவுலகில் மக்கட்குத் திருவருள் வாழ்வு எவ்வாறு அமைத்துள்ள தோ அவ்வாழ்வின் செம்மைக் கேற்பச் சமய சமுதாயக் கொள்கைகள் அமைந்துள்ளன எனக் கருதுதல். இக்கருத்து எம்மதத்தையும் ஏற்று மகிழும் மனப்பான்மையை யுண்டு பண்ணுதலால் "சம்மத மாக்கிக் கொள்கின்றேனல்லால் தனித்து வேறு எண்ணிய துண்டோ" எனக் கூறுகின்றார். செம்மல் - செம்மைப் பண்பால் உயர்ந்த தலைவன். "செம்மல் உன் பாதம் அறிய நான் அறியேன்" என்பது தமது கருத்தை யுறுதிப் படுத்தும் வன்புறை. உலகியல் துன்பம் இந்த மனவமைதியைக் கெடுப் பது குறித்துச் "சிறிதும் இங்கு இனித் துயர் ஆற்றேன்" என மொழி கின்றார். இந்தச் செவ்விய கொள்கையே நிலைபெறக் குறிக்கின்றாராத லால், "இம்மதிக்கு அடியேன் குறித்தவாறு இயற்றுவது உன் கடன்" எனவுரைக்கின்றார்.

இதனால், எம்மதத்தையும் வெறுது விரும்பும் மனப்பான்மை நிலவு தல் வேண்டு மென விண்ணப்பித்தவாரும். (9)

3640. அகம்புறம் மற்றை அகப்புறம் புறத்தே
அடுத்திடும் புறப்புறம்நான்கில்
இகந்ததும் இலேஓர் ஏகதே சத்தால்
இறையும்இங் கெண்ணிய துண்டோ
உகந்தநின் பாதம் அறியநான் அறியேன்
உறுகணிங் கினிச்சிறி துந்தான்
இகம்பெறல் ஆற்றேன் மயக்கெலாம் தவிர்த்திங்
கென்னை ஆண் டருள்வ துன்கடனே.

உரை : அக மென்றும் புற மென்றும், அகப்புறம் புறப்புறம் என்றும் கூறப்படும் சமயங்கள் நான்கனுள் ஒன்றையும் நான் புறக்கணித்ததில்லை; ஏகதேசமாக ஒன்றையும் சிறிதும் புறம்பாக எண்ணியதில்லை உயர்ந்த; நின் திருவடியறிய நான் புறம்பாகக் கருதியதில்லையன்றே? இனி, இவ் வுலகியல் துன்பங்களைச் சிறிதளவும் பொறுக்கமாட்டேன்; என் மயக்கத் தைப் போக்கி ஆண்டு அருள் ஞானம் வழங்குவது உன் பொறுப்பாகும். எ.று.

அகம், புறம், அகப்புறம், புறப்புறம் எனச் சமயங்கள் நால்வகைப் பட்டு ஒவ்வொன்றும் அவ்வாறாக விரியும். அவற்றுள் புறப்புறச் சமயம் உலகாயதம், நால்வகைப் பௌத்தம், ஆருகதம் எனவும், புறச்சமயம், தருக்கம், மீமாஞ்சை, ஏகான்ம வாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத் திரம் எனவும், அகப்புறச் சமயம், பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம் எனவும், அகம், பாடாண வாதம், பேத வாதம், சிவ சம வாதம், சிவ சங்கிராந்த வாதம், ஈசுவர வவிகார வாதம், சிவாத்துவிதம் எனவும் விரித் துரைக்கப்படும். இவற்றுள் ஒன்றையும் வெறுத்துப் புறக்கணித்த தில்லை என்பாராய், "நான்கில் இகழ்ந்ததும் இலை" என வுரைக்கின்றார்.

ஏகதேசம் - பலவற்றுள் ஒன்று; பல காலங்களில் ஒரு காலத்திலும் ஒரு சிறிதும் புறம்பாகக் கருதிய தில்லை என்றற்கு, "ஏகதேசத்தால் இறையும் இங்கு எண்ணிய துண்டோ" என இயம்புகின்றார். உகத்தல் - உயர்தல். உறுகண் - துன்பம். இகம் - இவ்வுலக வாழ்வு.

இதனால், சமய வேற்றுமை நோக்காத சமரச மனப்பான்மையை, எடுத்தோதித் திருவருள் ஞானம் வழங்க வேண்டியவாறும். (10)

திருச்சிற்றம்பலம்

21. கைம்மா றின்மை

அஃதாவது, இறைவனுக்குத் தாம் செய்யக் கடவக் கைம்மாறு ஒன்றும் இல்லாமையை யுரைப்பதாகும்.

இதன்கண், தம்முடைய பொல்லாத தீங்குகளையும், புன்மைகளையும், வஞ்சகங்களையும், வன்பிழைகளையும், குற்றங்களையும், வன்செயல்களையும் குணமாகக் கொண்டு கருணை மழை பொழிந்து, தம் மயக்கெலாம் தவிர்த்துத் தம்மை ஆட்கொண் டருளிய இறைவனுக்குத் தாம் புரியும் கைம்மாறு எதுவும் இல்லை என்றும், தம்முடைய முன்பின் செயல்களை யெல்லாம் தம் செயல்களாக அல்லாமல், தம்மைக் கலந்து ஒன்றுய் நின்ற இறைவன் செயல்களாக தாம் ஐயம் திரிபறக் கண்ட பின் வாய்விட் டுரைத்தற்கு ஒன்றுமில்லை என்றும், தமக்கு இருமையும் ஒருமைதனில் ஈந்த இறைவனும் தாமும் வேறுபா டற்று, உரிமையால் ஒன்றெனக் கலந்து கொண்ட ஒருமையை நினைத்துத் தம் உள்ளகம் தழைத்து மலர் கின்றது என்றும் கூறுகின்றார்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3641. இழைஎலாம் விளங்கும் அம்மை
இடங்கொள்நின் கருணை என்னும்
மழைஎலாம் பொழிந்தென் உள்ள
மயக்கெலாம் தவிர்த்து நான்செய்
பிழைஎலாம் பொறுத்த உன்றன்
பெருமைக்கென் புரிவேன் அந்தோ
உழைஎலாம் இலங்குஞ் சோதி
உயர்மணி மன்று ளானே.

உரை : பக்கமெல்லாம் விளங்குகின்ற ஒளியையுடைய உயர்ந்த மணிகள் இழைத்த தில்லையம்பலத்துள் எழுந்தருளுகின்ற கூத்தப் பெருமானே, அணிகலன் வகைகள் பலவும் அணிந்து விளங்கும் உமையம்மையை இடப்பாகத்தே கொண்ட பெருமானுகிய நீநின்னுடைய அருள் என்னும் மழையை முற்றவும் பொழிந்து, என்னுள்ளத்தில் படிந்து இருக்கின்ற மயக்க மெல்லாம் போக்கி, நான் செய்த எல்லாப் பிழையையும் பொறுத் தருளிய உன்னுடைய பெருந்தன்மைக்கு யான் யாது கைம்மாறு செய்வேன். எ.று.

உயரிய அணிகல வகைகள் அனைத்தையும் குறைவற அணிந்தவள் ஆதலின் உமாதேவியை, "இழை யெலாம் விளங்கும் அம்மை" என்று போற்றுகின்றார். இறைவன் திருவருட் பெருக்கால் தமது மன மயக்க மெல்லாம் நீங்கினமை புலப்படுத்தற்கு, "கருணை யென்னும் மழை யெலாம் பொழிந்து என் உள்ள மயக்கெலாம் தவிர்த்து" என்றும், அருள் என்றது திருவருள் ஞானத்தையாதலின், அந்த ஞானத்தால் மன மயக்கமும் அதனால் விளையும் குற்றங்களைப் பொறுத்தருளினமை யுணர்ந்து, "நான் செய்பிழை யெலாம் பொறுத்த" என்றும், அதனால் சிவபெருமானுடைய பெருந்தன்மை இனிது விளங்கக் கண்டு, "உன்றன் பெருமைக்கு என் புரிவேன்" என்றும் உரைக்கின்றார். பெருமை ஈண்டுப் பெருந்தன்மை மேற்று. என் புரிவேன் என்றவிடத்து என்ன கைம்மாறு செய்வேன் என்னும் பொருளை உட் கொண்டு நிற்கிறது. உழை - பக்கம். ஞான சபையில் இழைக்கப்பட்டுள்ள, மணிகளின் ஒளி எங்கும் பரந்து ஒளிர்தலால், "உழை யெலாம் இலங்கும் சோதி உயர்மணி" எனப் பாராட்டுகின்றார்.

இதனால், இறைவனது திருவருட் பெருமையை வியந்து கைம்மாறு செய்ய மாட்டாத தமது எளிமையை வெளிப்படுத்தியவாறும். (1)

3642. போதுதான் வீணே போக்கிப்
புலையனேன் புரிந்த பொல்லாத்
தீதுதான் பொறுத்த உன்றன்
திருவருட் பெருமைக் கந்தோ
ஏதுதான் புரிவேன் ஓகோ
என்என்று புகழ்வேன் ஞான
மாதுதான் இடங்கொண் டோங்க
வயங்குமா மன்று ளானே.

உரை : ஞான மடந்தையாகிய உமாதேவி இடப்பாகத்தே பொருந்தி விளங்கச் சிறக்கின்ற பெரிய ஞான சபையில் எழுந்தருளுகின்ற பெருமானே, காலத்தை வீணுக்கிப் புலைத்தன்மையை யுடைய யான் செய்துள்ள பொல்லாத தீய குற்றங்களைப் பொறுத்தருளி உனது திருவருள் ஞானத்தை வழங்கிய பெருந்தன்மைக்கு ஐயோ, யான் யாது கைம்மாறு புரிவேன்; உன்னை என்னென்று புகழ்வேன். எ.று.

ஞானமே யுருவாகிய செல்வியாதலின் உமாதேவியை, "ஞான மாது" என நவில்கின்றார். சிவனது திருமேனியில் இடப்பாகத்தைத் தனக்குரிய இடமாகக் கொண்டவளாதலின், அவளால் விளக்கமுறும் அந்த நலத்தை "ஞான மாது இடங் கொண்டு ஓங்க" என்று சிறப்பிக் கின்றார். உலகியல் மணி விளக்கமும் சிவஞானப் பேரொளியும் விளங்குவது பற்றித் தில்லையிலுள்ள ஞான சபையை, "மயங்கும் மாமணி மன்று" என்று போற்றுகின்றார். இழந்தால் பெறற் கில்லாத காலத்தின் அருமையை யுணராது பயனின்றிக் கழிய விடுவது குற்றமும் வீண்செயலும் ஆதலின், "போதுதான் வீணே போக்கி" என்றும், அதனினும் புலைத் தன்மை வேறின்மையின், "புலையனேன்" என்றும், நன்று செய்தலின்றிப்

பொறுத்தற் குரிய குற்றங்களைச் செய்தமை தோன்ற, "புரிந்த பொல்லாத் தீதுதான் பொறுத்த" என்றும், பொறுத்தற் கரிய குற்றங்களைப் பொறுத் தருளிய சிவபிரானுடைய பெருந்தன்மையை வியந்து, "உன்றன் திருவருட் பெருமை" என்றும் உரைக்கின்றார். தான் புரிந்த குற்றங்களைப் பொறுத் தருளியதோடு மேல் அவற்றை யுணர்ந்து செய்யா வண்ணம் சிவஞானம் நல்கியது பற்றி, "உன்றன் திருவருட் பெருமைக்கு" என்றும், அது தானும் பிறிதொரு கைம்மாற்றால் நிறைவு செய்யும் தன்மைத்தன்று என்பது பற்றி, "ஏதுதான் புரிவேன், ஓகோ என்னென்று புகழ்வேன்" என்றும் வருந்துகிறார்.

இதனால், கைம்மாறு செய்தற்கு ஆகாத திருவருள் நலத்தை வியந் துரைத்தவாறும். (2)

3643. சிற்றறி வுடையன் ஆகித்
தினந்தொறும் திரிந்து நான்செய்
குற்றதும் குணமாக் கொண்டே
குணப்பெருங் குன்றே என்னைப்
பெற்றதா யுடனுற் றேங்கும்
பெருமநின் பெருமை தன்னைக்
கற்றறி வில்லேன் எந்தக்
கணக்கறிந் துரைப்பேன் அந்தோ.

உரை : என்னை இவ்வுலகிற் பெற்ற தாய் போன்று ஞான மளித்து ஓங்கும் பெருமானே, சிற்றறிவும் சிறுதொழிலு முடையவனாய், நாளும் எங்கணும் திரிந்து நான் செய்த குற்றங்கள் அனைத்தையும் குணமாகக் கொண்டு, பொறுத் தருளிய நற்குண யுருவாகிய பெரிய குன்று போல்பவனே, நின்னுடைய பெருமையை நன்கு கற்றுப் பெறும் நல்லறி வில்லாத நான் எந்த வகையில் அளந்தறிந்து உரைப்பேன். எ.று.

தாயினும் சாலப் பரிந்து அருள்பவனாதலால், "பெற்ற தாயுடன் உற்று ஓங்கும் பெரும" என்றும், தான் பெற்ற சேய் செய்யும் குற்றங் களைப் பொறுக்கும் தாய் போல, செய்த குற்றங்களைக் குணமாகக் கருதிப் பொறுத் தருளிய அருள் நலத்தை வியந்து, "நான் செய்குற்றமும் குணமாக் கொண்ட குணப் பெருங்குன்றே" என்றும் இயம்புகின்றார். தாம் குற்றம் செய்த வகையைத் "தினந்தொறும் திரிந்து நான் செய் குற்றம்" எனவும், அதற்கு ஏது தமது சிற்றறி வுடைமை என்றற்கு, "சிற்றறி வுடையேன்" எனவும் தெரிவிக்கின்றார். சிவனது பெருமையை யுரைத்தற்குத் தமது மாட்டாமைக்குக் காரணம் காட்டுவார், "கற்றறி வில்லேன் எந்தக் கணக்கறிந் துரைப்பேன்" எனக் கூறுகின்றார்.

இதனால், இறைவன் பெருமையைக் கூறுமாற்றால் தமது கைம்மாறு செய்ய மாட்டாமையை வெளியிட்டவாறும். (3)

3644. மையரி நெடுங்க ணார்தம்
வாழ்க்கையின் மயங்கி இங்கே
பொய்யறி வுடையேன் செய்த
புன்மைகள் பொறுத்தாட் கொண்டாய்

ஐயறி வுடையார் போற்றும்
அம்பலத் தரசே நின்சீர்
மெய்யறி வறியேன் எந்த
விளைவறிந் துரைப்பேன் அந்தோ.

உரை : மெய் வாய் முதலிய கருவிகள் ஐந்தாலும், மனத்தாலும் நிறைந்த அறிவுடையவர்கள் போற்றிப் பாராட்டுகின்ற அம்பலத் தருளரசே; மை தீட்டிய செவ்வரி, பரந்த நெடிய, கண்களையுடைய மகளிரோடு கூடி வாழும் வாழ்க்கையில் அறிவு மயங்கி இவ்வுலகில் பொய் யறிவுடையவனாய் நான் செய்த குற்றங்கள் அனைத்தையும் பொறுத் தருளி, ஞானம் வழங்கி, எளியேனை ஆட்கொண் டருளினாய்; மெய்யுணர்வு இல்லாத நான் எவ்வகைப் பயனை யறிந்து உன்னைப் புகழ்வேன். எ.று.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து கருவிகளும் அவற்றால் பெறப்படும் பொருள்களின் உண்மை யுணரும் மனமும் உண்மை ஞானப் பேற்றுக்கு வாயில்களாதலின், அவற்றால் மெய்யுணர்வு எய்திய சான்றோர்களை, "ஐயறிவு உடையோர்" என்று சிறப்பிக்கின்றார். அந்த உண்மை ஞானிகளால் போற்றப் படுவது பற்றித் தில்லைப் பொன்னம் பலத்துள் எழுந்தருளும் கூத்தப் பெருமானை, "ஐயறிவு உடையோர் போற்றும் அம்பலத் தரசே" என்று பாராட்டுகின்றார். மை தீட்டுதலும் செவ்வரி பரத்தலும் நீண்ட கண்களும் இளமகளிர்க்கு அழகு தருவனவாதலின் அவர்களை, "மையரி நெடுங்கணார்" எனப் புகழ் கின்றார். அவர்களோடு கூடி யுறையும் வாழ்வு உலகியல் இன்பத்தில் மயங்கி ஆள்வித்தலின், "நெடுங்கணார்தம் வாழ்க்கையின் மயங்கி" என்றும், அம்மயக்கத்தால் உண்மை யறிவும் பொய்ப் படுதலால், "பொய் யறிவுடையேன்" என்றும் புகல்கின்றார் - புன்மை, குற்றம். குற்றத்தைப் பொறுத்தலோடு மீளவும் செய்யாவகை ஞானம் நல்குதலின், "புன்மை கள் பொறுத் தாட்கொண்டாய்" என்று கூறுகின்றார். பயனறிந்து செய்யும் செய்வினை மெய்யறி வுடையோர்க் கன்றி இயலாதாகலின், "மெய்யறி வறியேன் எந்த விளைவறிந் துரைப்பேன்" என விளம்புகின்றார்.

இதனால், மெய்யறிவின்மை கூறிக் கைம்மாறு மாட்டாமை விளக்கிய வாறும். (4)

3645. பேயினும் பெரியேன் செய்த
பிழைகளுக் கெல்லை இல்லை
ஆயினும் பொறுத்தாட் கொண்டாய்
அம்பலத் தரசே என்றன்
தாயினும் இனிய உன்றன்
தண்அருட் பெருமை தன்னை
நாயினுங் கடையேன் எந்த
நலமறிந் துரைப்பேன் அந்தோ.

உரை : பேயினும் மிக்கவனுகிய யான் செய்த குற்றங்களுக்கு எல்லே யில்லேயாயினும் அவற்றை யெல்லாம் பொறுத்து, என்னேயும் ஆட் கொண்டு அருள் ஞானம் வழங்கிய அம்பலத்தரசே, என்னேப் பெற்றெடுத்த தாயினும் இனியனுகிய உனது தண்ணிய அருட் பெருமையை எண்ணி, நாயினும் கடைப்பட்ட யான் எவ்வெந் நலங்களே எடுத்துக் கூறுவேன்; அந்தோ, ஒன்றும் தெரிந்திலதே. எ.று.

துன்பம் செய்வனவற்றில் மிக்கது பேய் என்பது பற்றிப் "பேயினும் பெரியேன்" எனத் தம்மைப் பழிக்கின்ருர். பெருமை - மிகுதி பற்றியது. பேய்த் தன்மை மிக்கவர் செய்யும் கொடுமைகள் எண்ணிறந்தனவாதல் தோன்ற, "செய்த பிழைகளுக் கெல்லே யில்லே" எனவும், எல்லே யில்லாத பிழைகள் பொறுக்கும் அளவின வல்லவாயினும் அவற்றையும் பொறுத் தாண்ட நலத்தை, "ஆயினும் பொறுத்து ஆட்கொண்டாய்" எனவும் இயம்புகின்ருர். இறைவனது திருவருள் நலம், பெற்ற தாயின் பேரருளினும் பெரிதாய்ப் பிறங்குதலால், "தாயினும் இனிய வுன்றன் தண்ணருட் பெருமை" என்றும், அதனல் விளேந்த நலங்களேத் தெரிந் தெடுத்துப் பாராட்டுவதும் ஒருவகைக் கைம்மாருதலின், "எந்த நலமறிந் துரைப்பேன்" என்றும் கூறுகின்ருர். உரைக்க மாட்டாமைக்குக் காரணம் தம்முடைய அறிவு செயல்களின் சிறுமை என்பார், "நாயினும் கடையேன்" என நவில்கின்ருர்.

இதனல், அருணலம் அறிந்து கூற மாட்டாமை தெரிவித்தவாரும். (5)

3646. துரும்பினில் சிறியேன் வஞ்சம்
சூழ்ந்தநெஞ் சகத்தேன் செய்த
பெரும்பிழை அனேத்தும் அந்தோ
பெருங்குண மாகக்கொண்டாய்
அரும்பொருள் என்ன வேதம்
ஆகமம் வழுத்து கின்ற
கரும்பினில் இனியாய் உன்றன்
கருணேஎன் என்பேன் அந்தோ.

உரை : அரிய தொரு பரம்பொருள் என்று வேதங்களும் ஆகமங் களும் புகழ்ந் தோதுகின்ற கரும்பென இனிக்கும் பெருமானே, புல்லிய துரும்பினும் அற்பனுகிய யான் வஞ்ச நினேவுகள் பொருந்திய நெஞ்சினல் செய்துள்ள பிழைகள் எல்லாவற்றையும் கண்டருளி, பிறவிக் குணமெனக் கொண்டு, என்னேப் பொறுத் தருளினய்; உனது கருணே மாண்பை என்ன வென்று சொல்வேன். எ.று.

அந்தோ - இரக்கக் குறிப்பு. தமது புன்மையை யுரைத்தற்குத் "துரும்பினிற் சிறியேன்" எனவும், பெரும் பிழைகளேச் செய்தற்குக் காரணம், நெஞ்சின் இயல்பு என்பாராய், "வஞ்சம் சூழ்ந்த நெஞ்சகத் தேன்" எனவும் கூறுகின்ருர். பொறுத்தற் கரிய பிழையைப் "பெரும் பிழை" எனக் குறிக்கின்ருர். குணமாவது பொருள் அழியுங் காறும் உடனிற்பதாகலின், நீக்க வொண்ணுமை பற்றி, "பெருங் குணமாகக்

கொண்டாய்" எனப் புகழ்ந் துரைக்கின்றார். சிவ பரம்பொருள் யாரும் பெறற்கும், முழுமை கண்டறிதற்கும் மாட்டாத அருமை யுடைமை பற்றி வேதங்களும் சிவாகமங்களும், "அரும் பொருள்" என வுரைத்தலே உணர்ந்தோதுகின்றமை தோன்ற, "அரும் பொருள் என்ன வேதம் ஆகமம் வழுத்துகின்ற" என்றும், அருள் பொருளாயினும் "சிந்திப்பவர்க் குச்சிறந்து செந்தேன் முந்திப் பொழிவது" கொண்டு, "கரும்பினில் இனியாய்" என்றும் இசைக்கின்றார். என்னென்பேன் என்பது மாட்டாமை தெரிவிக்கும் குறிப்பு மொழி.

இதனால், சிவனது கருணையின் பெருமையை வியந் துரைத்தவாறும். (6)

3647. வரைகடந் தடியேன் செய்த
வன்பிழை பொறுத்தாட் கொண்டாய்
திரைகடந் தண்ட பிண்டத்
திசைஎலாம் கடந்தே அப்பால்
கரைகடந் தோங்கும் உன்றன்
கருணையங் கடற்சீர் உள்ளம்
உரைகடந் ததுஎன் றுல்யான்
உணர்வதென் உரைப்ப தென்னே.

உரை: அற வரம்பு கடந்து கீழ்மகனுகிய யான் செய்த வன்மையான பிழைகளைப் பொறுத்துக் கொண்டு என்னையும் திருவடிக் குரியனுகச் செய்தருளினாய்; கடல்களின் எல்லை கடந்து அப்பாலுள்ள அண்டங்கள் அவற்றிலுள்ள பிண்டங்கள் ஆகியவை இருக்கின்ற திசை களைக் கடந்து, அவற்றின் எல்லையையும் கடந்து மிக்குயர்கின்ற கருணைக் கடலாகிய உனது பெருமை மக்கள், தேவர் முதலியோர்களின் மன மொழி களைக் கடந்தது எனச் சான்றோரால் கூறப்படுகிற தென்றால் யான் என் மனத்தால் உணர்வதும், வாயால் உரைப்பதும் எவ்வாறுகும். எ.று.

வரை - அறநூல் வகுத்த வரம்பு. வரம்பு கடந்து செய்யும் பிழைகள் பொறுத்தற் காகாதனவாதலால், "வரை கடந்து அடியேன் செய்த வன் பிழை" என வுரைக்கின்றார். அடியேன் - ஈண்டுக் கீழ்ப்பட்டவன் என்னும் பொருளது. திரை - ஆகு பெயராற் கடல் குறித்து நிற்கிறது. கரை - எல்லை. கருணையங் கடல் - கருணை நிறைந்த அழகிய கடல். பரம் பொருள் வாக்கு மனதீதம் எனப்படுவது பற்றி "உள்ளம் உரை கடந்தது" என்று கூறுகின்றார். மனவுணர்வுள்ளும் பல வாக்குக் கெட்டாமையின், மனத்துக்கும் மொழிக்கும் எட்டாதது நினைந்தும் கூறவும் மாட்டாமை விளங்க, "யான் உணர்வ தென் உரைப்ப தென்னே" என வுரைக்கின் றார்.

இதனால், இறைவன் புகழ் மன வாக்குகட்கு எட்டாத தென இயம்பிய வாறும். (7)

3648. நனவினும் பிழையே செய்தேன்
நாயினும் கடையேன் அந்தோ
கனவினும் பிழையே செய்தேன்
கருணைமா நிதியே நீதான்
நினைவினும் குறியா தாண்டாய்
நின் அருட் பெருமை தன்னை
வினவினும் சொல்வார் காணேன்
என்செய்வேன் வினைய னேனே.

உரை : நாயினும் கடைபட்டவனுகிய யான் நினைவுப் பொழுதிலும் கனவுப் போதிலும் குற்றங்களையே செய்தேன்; பெரிய அருட் செல்வனுகிய நீயோ, அவற்றைச் சிறிதும் திருவுள்ளத்திற் கொள்ளாது, ஆண்டு கொண்ட நினது திருவருட் பெருமையைப் பன்முறை கேட்டாலும் எடுத்துச் சொல்பவரை என் சூழலில் காண்கின்றே னில்லை; வினை மிகவும் உடையவனுகிய யான் யாது செய்வேன். எ.று.

செய்வினையின் விளைவு நினையாது செய்து வருந்தும் இயல்பு பற்றித் தம்மை "நாயினும் கடையேன்" என நவில்கின்றார். நனவு - விழித்திருக்கும் காலம். கனவு - உறக்கக் காலம். வினை செய்தற்குரிய கருவிகள் அனைத்தும் தொழிற் படுவனவாதலின் நனவுக் காலத்தை முதற்கண் கூறுகின்றார். கனவின்கண் சில கருவிகளே தொழிற் படுதலின் அதனைப் பின்னர்க் கூறுகின்றார். கனவிலும் நனவிலும் குற்றம் பல செய்தேனுயினும் அவற்றை யுள்ளத்தில் கொள்ளாது அருள் ஞானம் வழங்கினமை தோன்ற, "கருணை மாநிதியே நீதான் நினைவிலும் குறியாது ஆண்டாய்" என்று புகழ்கின்றார். இவ்வாறு திருவருள் புரியும் நினது பெருமையை யாவரும் எக்காலத்தும் எவ்விடத்தும் சொல்லிக் கொண்டிருப்பது கடமையாகவும், என்னுடைய சூழலில் பன்முறை வினவினுலும் உரைப்பார் ஒருவரும் இல்லை என்பாராய், "நின் அருட் பெருமை தன்னை வினவினும் சொல்வார் காணேன்" என்றும், இத்தகைய சூழ்நிலை தமக்கு எய்தியதற்குக் காரணம் தாம் செய்த தீவினை என வருந்துவாராய், "என் செய்வேன் வினையனேனே" என விளம்புகின்றார்.

இதனால், இறைவன் அருட் பெருமையை எடுத்துரைக்கும் நல்லோர் இல்லாத சூழ்நிலையில் தாம் இருத்தலை நினைந்து வருந்தியவாரும். (8)

3649. வன்செயல் பொறுத்தாட் கொண்ட
வள்ளலே அடிய னேன்றன்
முன்செயல் அவைக ளோடு
முடுகுபின் செயல்கள் எல்லாம்
என்செயல் ஆகக் காணேன்
எனைக்கலந் தொன்றுய் நின்றுய்
நின்செயல் ஆகக் கண்டேன்
கண்டபின் நிகழ்த்தல் என்னே.

உரை : வன்செயல்களைச் செய்த விடத்தும் அன்பர்களைப் பொறுத்தாட்கொண்ட அருள் வள்ளலே, அடியவனுகிய யான் முன்னே செய்த வினைகளோடு பின் தொடர்ந்த வினைகள் அனைத்தையும் என் செயல்களாக நினைக்கின்றே னில்லை; என் உயிர்க் குயிராய்க் கலந்து ஒன்றி நிற்பவனுதலின் யாவற்றையும் நின் செயல்களாகவே காண்கின்றேன்; அதனுல் நான் வேறே சொல்லுவது என்னையோ. எ.று.

பொறுத்தற் கரிய செயல் என்றற்கு வன்செயல் என்கின்றார். வன் செயல் புரிந்த தொண்டர் பலரை இறைவன் பொறுத்தாண்ட வரலாறுகளை "திருத்தொண்டர் புராணம்" உரைப்பது காண்க. அத்தகைய பேரருளாளனுகிய நீ என் னுயிரிற் கலந்து ஒன்றுய் உடனுய் இருக்கின்றுயாதலால் முன்னும் பின்னும் செய்த என்னுடைய வினை வகைகளை என் செயலாக உணர்கின்றே னில்லை என்பார், "செயல்கள் எல்லாம் என் செயலாகக் காணேன்" என்றும், ஒன்றி யுடனுதல் பற்றி "என் மன மொழி மெய்களால் விளையும் செயல்கள் அனைத்தும் நின் செயலாகக் கண்டேன்" என்றும் உரைக்கின்றார். தன்னுடைய கருவி கரணங்கள் எல்லாம் சிவ கரணங்களாக விளங்குதல் கண்டார்க்குத் தன்வினை என வேறு காண்டற்கு இன்மை பற்றி, "கண்ட பின் நிகழ்த்தல் என்னே" என மொழிகின்றார்.

இதனுல், தம்முடைய கருவி கரணங்கள் சிவ கரணங்களாகக் காணப்பட்டமை தெரிவித்தவாறும். (9)

3650. இருமையும் ஒருமை தன்னில்
ஈந்தனை எந்தாய் உன்றன்
பெருமைஎன் என்று நான்தான்
பேசுவேன் பேதம் இன்றி
உரிமையால் யானும்நீயும்
ஒன்றெனக் கலந்து கொண்ட
ஒருமையை நினைக்கின் றேன்என்
உள்ளகந் தழைக்கின் றேனே.

உரை : இம்மை மறுமையில் பெறலாகும் நலன்களை இவ்வொரு பிறப்பிலேயே எனக்குக் கொடுத் தருளினுய் ஆதலால் உனது திருவருட் பெருமையை நான் என்னென்று சொல்வேன்; நான் வேறு நீ வேறு என்ற வேறுபாடற்ற உரிமை பற்றி ஆன்மாவாகிய யானும் சிவமாகிய நீயும் ஓரினமாம் எனக் கலந்து கொண்ட ஒருமைத் தன்மையை நினைத்து உள்ளம் தழைக்கின்றேன். எ.று.

இம்மை மறுமையில் பெறலாகும் இன்பங்களை இம்மைப் பிறப்பால் உடலாலும், மறுமை இன்பங்களை ஞான நாட்டத்தாலும் பெற்று மகிழ்கின்றமை தோன்ற, "இருமையும் ஒருமை தன்னில் ஈந்தனை எந்தாய்" என்றும், இவ்வாறு அளித்த பெருமையை வியந்து பாராட்டுகின்றுராதலின், "உன்றன் பெருமை என்னென்று நான்தான் பேசுவேன்" என்றும் உரைக்கின்றார். சிவன், சீவன் என்ற இரண்டும்

சித்தாந்தத் தன்மையால் ஒத்த உரிமை யுடையவை எனப் பெரியோர் கூறுவது பற்றி, "பேத மின்றி உரிமையால் யானும் நீயும் ஒன்று" என்றும், சீவன் சிவமாம் தன்மை யுற்றவிடத்துச் சிவமேயாய்ச் சிவ போகம் நுகரக் கிடக்கும் ஒருமை இயல்பை நினைந்து உள்ளத்தால் உவகை மிகுகின்றிராதலால், "ஒன்றெனக் கலந்து கொண்ட ஒருமையை நினைக்கின்றேன் என் உள்ளகம் தழைக்கின்றேன்" என்றும் தெரிவிக் கின்றார்.

இதனால், சிவபோக வொருமை நிலையை எண்ணி இன்புற்று உரைத்தவாறும். (10)

திருச்சிற்றம்பலம்

22. நடராசபதி மாலை

அஃதாவது, தம் ஆன்மநாயகனுகிய நடராசபதிக்கு, வாடாச் சொன்மலர்களால் வள்ளற்பெருமான் தொடுத்தளிக்கும் பாமாலையாம்.

பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3651. அருள்நிலை விளங்குசிற் றம்பலம்எ னுஞ்சிவ
சுகாதீத வெளிநடுவிலே
அண்டபகிர் அண்டகோ டிகளும் சராசரம்
அனைத்தும்அவை ஆக்கல்முதலாம்
பொருள்நிலைச் சத்தரொடு சத்திகள் அனந்தமும்
பொற்பொடுவி ளங்கிஓங்கப்
புறப்புறம் அகப்புறம் புறம்அகம் இவற்றின்மேல்
பூரண காரமாகித்
தெருள்நிலைச் சச்சிதா னந்தகிர ணதிகள்
சிறப்பமுதல் அந்தம்இன்றித்
திகழ்கின்ற மெய்ஞ்ஞான சித்திஅனு பவநிலை
தெளிந்திட வயங்குசுடரே
சுருள்நிலைக் குழலம்மை ஆனந்த வல்லிசிவ
சுந்தரிக் கினியதுணையே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
சோதிநட ராசபதியே.

உரை : திருவருள் ஞானநிலை விளங்குகின்ற திருச்சிற்றம்பலம் என்று புகழப்படும் சிவானந்த நிலையத்திற்கு, மேலான ஞான வெளியின் நடுவில் அண்டங்களும், பகிரண்டங்களும் எனக் கூறப்படும் எண்ணிறந்த அண்டங்களும்; அவற்றுள் நிறைந்திருக்கும் சராசரங்கள் யாவையும் படைத்தல் முதலாகிய செயல்களைச் செய்கின்ற, மேன்மை சான்ற சத்திமான்களும் சத்திகளும் என எண்ணிறந்தோர் அழகு மிக விளங்கி ஓங்கவும்; புறப்புறம், அகப்புறம், புறம், அகம் எனப் பகுத்துக் காணப்படும் சமய தத்துவங்களுக்கு மேலாய்ப் பூரண வடிவாய் விளக்கம்

நிலைபெற்ற சச்சிதானந்தமாகிய சிவகிரணங்கள் சிறந்து மிளிரவும்; தோற்றக் கேடின்றி என்றும் நின்று திகழும் மெய்ஞ்ஞான சித்தியும் உண்மை ஞான வனுபவ நிலையும் மெய்யுணர்வு தெளிவுறவும் விளங்குகின்ற சிவவொளியே; சுருண்ட இயல்பினையுடைய கூந்தலையுடையவளாகிய ஆனந்தவல்லியும் சிவசுந்தரியுமாகிய சிவகாமி அம்மைக்கு, இனிய துணைவனே; சுத்த சிவ சன்மார்க்கத்திற்குரிய ஞானச் செல்வமே; அருட் பெருஞ் சோதி வடிவாகிய நடராசப் பெருமானுகிய தலைவனே வணக்கம். எ.று.

சத்தரொடு சத்திகள் பொற்பொடு விளங்கி ஓங்கவும், சச்சிதானந்த கிரணுதிகள் சிறப்பவும், மெய்ஞ்ஞான சித்தி அனுபவநிலை தெளிந்திடவும் வயங்குகின்ற சுடரே என இயைக்க. சிற்றம்பலம் என்னும் சுகாதீத வெளிநடுவில் அண்ட பகிரண்ட கோடிகளையும் அவற்றிலுள்ள சராசரங்களையும் படைத்தல், காத்தல், ஒடுக்குதல் ஆகிய முத்தொழிலையும் செய்கின்ற சத்தி, சத்திமான்கள் விளங்குகின்றார்கள் என்பது கருத்து. படைத்தல் முதலிய முத்தொழில்களையும் இடையீடின்றிச் செய்தொழுகும் நிலைபெற்ற ஆற்ற லுடையராதல் பற்றி, "பொருள் நிலைச் சத்தரொடு சத்திகள்" என்றும், சத்தர்கள் எண்ணிறத்தவராதல் தோன்ற அவரவர்க்குரியராகிய சத்திகளும் எண்ணிறந்தவர் என்பது பற்றி, "சத்திகள் அனந்தம்" என்றும் உரைக்கின்றார். சத்தர்கள் சத்திமான்கள் என்றும் வழங்கப் படுவர். சத்திகளும் சத்திமான்களும் அண்டங்களின் தோற்ற வொடுக்கங்களுக்குக் காரணமாய் நின்று நிலவுவராதலால் இவர்கள் சிவ சுகாதீத வெளிநடுவில் நின்று விளங்குகின்றார்கள் என்பது விளங்க, "பொற்பொடு விளங்கி ஓங்க" எனப் புகழ்கின்றார். பொருட்கள் அகம் என்றும் புறம் என்றும், அகப்புற மென்றும், புறப்புறம் என்றும் வகுக்கப் படுவது போலச் சமயங்கள் அகம் என்றும், புறம் என்றும், அகப்புறம் என்றும், புறப்புறம் என்றும் வகுக்கப்படுவது போல் அண்ட பகிரண்ட கோடிகளும் சராசரங்களும் அகம் என்றும், புறம் என்றும், அகப்புறம் என்றும், புறப்புறம் என்றும் வகுக்கப்பட்டு, இவற்றின்கண் அணுப் புதைக்கவும் இடமின்றி, இவை யனைத்துமே தனக்கு முழுச் சரீரமாகக் கொண்டிருப்பது புலப்பட, இவற்றின் மேல் பூரணகாரமாகி விளங்குவது சச்சிதானந்தமாகிய சிவகிரணங்கள் என்பது தோன்ற, "பூரணகார மாகித் தெருள்நிலைச் சச்சிதானந்த கிரணுதிகள் சிறப்ப" எனத் தெரிவிக்கின்றார். பூரணகாரம் - முழுத்த சரீரம். தெருட்சியில்லாத மனத்தின்கண் மெய்ம்மையும் அறிவும் இன்பமும் விளக்கம் பெருதாதலின், "தெருள் நிலைச் சச்சிதானந்த கிரணுதிகள்" என்று செப்புகின்றார். மெய்ம்மை சான்ற சிவஞானம் கைவரப் பெறும் நிலை மெய்ஞ்ஞான சித்தி எனப் படும். அஃது அஞ்ஞான்றும் முதல் ஈறின்றி நின்று திகழ்வதாதலின், "முதலந்தம் இன்றித் திகழ்கின்ற மெய்ஞ்ஞான சித்தி" என்றும், கைவரப் பெற்ற ஞானனுபவம் சிவஞான சூரிய வெளியில் விளக்கம் பெறுவது என்றற்கு, "அனுபவ நிலை தெளிந்திட வயங்கு சுடரே" என்றும் போற்றுகின்றார். மகளிர்க்குத் தலைமுடி சுருண்டு இருத்தல் ஒருவகை அழகு தருதலின் உமாதேவியை, "சுருள்நிலைக் குழலம்மை" என்று சொல்லுகின்றார். இன்ப வடிவினளாதலின் ஆனந்தவல்லி என்றும், சிவத்துக்கு ஒத்த அழகு திகழ விளங்குதல் பற்றி, "சிவசுந்தரி" என்றும், இறைவனுக்குத் தேவியாதலின், "இனிய துணையே" என்றும் இயம்பு

கிறார். சன்மார்க்கங்கள் பல கூறப்படுதலின் இஃது எனத் தெளிவித்தற் பொருட்டுச் "சிவ சன்மார்க்கம்" என்றும், அது தூய சிவஞானத்தால் பெறப்படுவது பற்றிச் "சுத்த சிவசன்மார்க்கம்" என்றும், அந்நெறி நின்றார் பெறக் கடவப் பெருஞ் செல்வமாதல் தோன்ற, "நிதியே" என்றும் பாராட்டுகின்றார். சிவத்தின் அருளொளியினும் பெருமை யுடையது பிறிது யாது மில்லாமை கண்டு "அருட் பெருஞ் சோதி" என்றும், அதுவே தில்லைக் கூத்தப் பெருமானுடைய அருள் ஞானத் திருமேனி என்றற்கு, "நடராச பதியே" என்றும் பராவுகின்றார்.

இதனால், சிற்றம்பலம் என்னும் சிவ சுகாதீத வெளியில், மெய்ஞ்ஞான சித்தி அனுபவநிலைத் தெளிவுற விளங்குகின்ற சிவசூரியனும், சிவானந்த வல்லித் துணைவனும், சன்மார்க்க நிதியும், அருட்பெருஞ் சோதியும், தில்லை நடராசப் பெருமான் ஆவன் என்பதாம். (1)

3652. என்இயல் உடம்பிலே என்பிலே அன்பிலே
இதயத்தி லேதயவிலே
என்உயிரி லேஎன்றன் உயிரினுக் குயிரிலே
என்இயற் குணம்அதனிலே
இன்இயல்என் வாக்கிலே என்னுடைய நாக்கிலே
என்செவிப் புலன்இசையிலே
என்இருகண் மணியிலே என்கண்மணி ஒளியிலே
என்அனு பவந்தன்னிலே
தன்இயல்என் அறிவிலே அறிவினுக் கறிவிலே
தானே கலந்துமுழுதும்
தன்மயம தாக்கியே தித்தித்து மேன்மேல்
ததும்பிநிறை கின்றஅமுதே
துன்னிய பெருங்கருணை வெள்ளமே அழியாத
சுகமே சுகாதீதமே
சுத்தசிவ சன்மார்க்க நிதிநே அருட்பெருஞ்
சோதிநட ராசபதியே.

உரை : எனக்கென இயன்ற உடம்பிலும் எலும்பிலும், எனது அன்பிலும் இதயத்திலும், எனது இரக்கப் பண்பிலும் என்னுயிரிலும், என்னுடைய உயிர்க்குயிராகிய அதனிலும், என்பால் இயன்ற குணத் திலும், இனிய இயல்பாகிய என் வாக்கிலும், என்னுடைய நாக்கிலும், என் செவியில் புலனுகும் இசையிலும், என்னுடைய இரண்டு கண் களிலும் அமைந்த மணிகளிலும், மணியில் அமைந்த ஒளியிலும், எனது அனுபவத்திலும், தன்னில் இயன்ற எனது அறிவிலும், அறிவுக் கறிவிலும் தானுகக் கலந்து முழுதும் தன்மயமாக்கித் தித்தித்து மேன்மேலும் ததும்பி வழிகின்ற அமுதமே; நெருங்கிய பெரிய கருணை வெள்ளமே; அழியாத சுகப் பொருளே; அந்தச் சுகத்திற்கும் அத்தமாகிய மெய்ப் பொருளே, சுத்த சிவ சன்மார்க்கச் செல்வமே; அருட்பெருஞ்சோதியாகிய நடராசபதியே வணக்கம். எ.று.

உலகில் உயிரோடு கூடி வாழ்தற் கென அமைந்த உடம்பாதலின், "என் இயல் உடம்பு" என்றும், அவ்வுடம்பிற்கு உருவும் உறுதியும் தருவது பற்றி, "என்பு" என்றும் கூறுகின்றார். என்பு தோல் போர்த்த உடம்பைப் பண்பும் பயனும் உடையதாக்குவது அன்பாதலின், "அன்பில்" என்றும், அது நின்று நிலவும் இடமாதலின் "இதயத்தில்" என்றும், அவ்வன்பு உருவாய்ச் செயல்படும் பண்பைத் "தயவு" என்றும் உரைக்கின்றார். உடம்பின் இயக்கத்திற் கேதுவாய் இலங்குவது பற்றி, "என் உயிரில்" என்றும், உணர்வுடைமை விளங்க நிலவுவது பற்றி, "உயிரினுக்கு உயிர்" என்றும், உயிரும் உணர்வும் சிறப்புற நிற்பது பற்றி, "என் இயற்குணம்" என்றும் இயம்புகின்றார். இனிது இயலும் தன்மைத் தாதலால், வாக்கையும் வாக்கிற்குச் சிறப்புக் கருவியாகிய நாக்கையும் அடுத்தடுத்து உரைக்கின்றார். உயிர்ப் பண்பை வளர்க்கும் மாண்புடையது பற்றி இசை யுணர்வை "என் செவிப் புலன் இசையிலே" என இயம்புகின்றார். ஒவ்வொரு கண்ணிலும் இருத்தல் பற்றி, "என் இரு கண்மணியிலும்" என்றும், மணிக்கு ஒளி இயல்பாதலான் "என் கண்மணி ஒளியிலே" என்றும், உடம்பு முதல் கண் ஈறுகக் கூறிய கருவிகளால் எய்தப்படுவது பற்றி, "என் அனுபவம் தன்னிலே" என்றும், அந்த அனுபவ ஞானத்தை நுகர்தற் கியன்ற கருவியாதலின் "தன்னியல் என் அறிவிலே அறிவினுக்கு அறிவிலே" என்றும் உரைக்கின்றார். அறிவு முழுதும் அது நின்ற உடல் கருவி கரணங்கள் முழுதும் எல்லாவற்றிலும் கலந்து தன் தன்மையதாக்கி, இனிய தேனூறி மேலும் மேலும் நிறைந்து வழிகின்ற ஞானமிர்தமாதலின், "தானே கலந்து முழுதும் தன்மயமாக்கியே தித்தித்து மேன் மேல் ததும்பி நிறைந்த அமுதே" என்றும், தனது சிறுமையை நோக்காது பெரிய அருள் வெள்ளமாய் வந்து பொருந்தினமையின், "துன்னிய பெருங் கருணை வெள்ளமே" என்றும், என்றும் குன்றுத சுகப் பொருளாய்ந் திகழ்கின்றமையின், "அழியாத சுகமே" என்றும், அந்தச் சுகநிலைக்கும் மேலாய சுகம் ஒன்று உண்டு போலும் என உணர நிற்றலின், "சுகாதீதமே" என்றும் சொல்லுகின்றார். சுகாதீதம் தானும் அருட் பெருஞ் சோதி மயமாய் நடராச மூர்த்தமாய் விளங்குவது பற்றி, "அருட் பெருஞ் சோதி நடராச பதியே" எனப் போற்றுகின்றார்.

இதனால், உடல் கருவி கரணங்களில் கலந்து, தன்மயமாக்கி இன்பம் ததும்பி வழியப் பெருகுகின்ற கருணைமூர்த்தி, அருட்பெருஞ் சோதியாகிய நடராச பதி என்பதாம். (2)

3653. உடல்எலாம் உயிர்எலாம் உளம்எலாம் உணர்வெலாம்
உள்ளனஎ லாங்கலந்தே
ஒளிமயம தாக்கிஇருள் நீக்கிஎக் காலத்தும்
உதயாத்த மானம்இன்றி
இடல்எலாம் வல்லசிவ சத்திகிர ணங்கியாய்
ஏகமாய் ஏகபோக
இன்பநிலை என்னும்ஒரு சிற்சபையின் நடுவே
இலங்கிநிறை கின்றசுடரே
கடல்எலாம் புவிஎலாம் கனல்எலாம் வளிஎலாம்
ககன்எலாம் கண்டபரமே

காணுத பொருள்எனக் கலைஎலாம் புகலஎன்
கண்காண வந்தபொருளே
தொடல்எலாம் பெறஎனக் குள்ளும் புறத்தும்மெய்ப்
துணையாய் விளங்கும்அறிவே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
சோதிநட ராசபதியே.

உரை : எனது உடல், உயிர், உள்ளம், உணர்வு முதலாக வுள்ள கருவி கரணங்கள் எல்லாவற்றிலும் கலந்து, ஒளி மயமாக்கி அவற்றிடையே கலந்து நின்ற இருளையும் போக்கி எக்காலத்தும் தோற்றக் கேடுகளின்றி விளங்குகின்ற எல்லாம் வல்ல அருட் சத்தியாகிய கிரணங்களே திருவுருவாய் ஏகமாய்த் தனிநிலை போகமாகிய இன்பநிலை எனப்படும் ஒப்பற்ற ஞானசபையின் நடுவிலே விளக்கமுறுகின்ற ஞான வான்சுடரே; கடல், நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் ஆகிய எல்லாவற்றையும் உருவாகப் படைத்தளித்த பரம்பொருளே; சாத்திரங்கள் எல்லாம் காண முடியாத பொருள் என்று சொல்லவும், எளியேனுகிய என்கண் காண வந்தருளுகின்ற மெய்ப்பொருளே; அனுபவித்தற் குரிய எல்லாவற்றையும் யான் எளிதில் பெற எனக்கு உள்ளும் புறமும் கலந்து மெய்யான துணையாய் விளங்குகின்ற மெய்யறிவே; சுத்த சிவ சன்மார்க்கச் செல்வமே; அருட் பெருஞ் சோதியாகிய நடராசபதியே வணக்கம். எ.று.

தனது உடல் கருவிகள் அனைத்தும் பசுகரணங்களாய் நின்ற தன்மை மாறிப் பதிஞானப் பேற்றிற் குரிய ஞானவொளி கலந்து, இருள் நீங்கிப் பதி கரணங்களாக மாறி விளங்க வல்ல தாக்குவது சிவசத்தியாதலின், அவ் வருட் சத்தியின் ஒளிக் கதிர்களே திருமேனியாக நிற்பது விளங்க, "உடல் எலாம் உயிர் எலாம் உளம் எலாம் உணர்வெலாம் உள்ளன வெலாம் கலந்தே ஒளி மயமதாக்கி இருள் நீக்கி எக்காலத்தும் உதயாத்த மான மின்றி இடமெலாம் வல்ல சிவசத்தி கிரணுங்கியாய் என்று கூறுகின்றார். சிவசத்தி கிரணுங்கியாய் என்றதனுல் கிரணங்களே அங்கமாகக் கொண்ட சிவம் வேறெனக் கொள்ளற்கு இல்லை என்பது புலப்பட, "ஏகமாய்" என இயம்புகின்றார். ஞான சபை, பேரின்ப ஞான நிலையமாதல் பற்றி, "ஏகபோக இன்ப நிலை" என்றும், "ஒரு சிற் சபை" என்றும் உவந்து மொழிகின்றார். நில முதல் வான் ஈருக உள்ள உலகனைத்தையும் படைத்த பசம்பொருளாய் அவற்றின் மேலாய் விளங்குதல் பற்றி, "கடலெலாம் புவியெலாம் கனலெலாம் வளியெலாம் ககனெலாம் கண்ட பரமே" என உரைக்கின்றார். கனல் - நெருப்பு. ககன் - வானம். இது ககனம் எனவும் வழங்கும். எல்லாச் சாத்திரங்களும் கண் முதலிய பொறிகளால் காணப்படாத பொருள் எனக் கூறினும் எளியனுகிய என்னுடைய கட் பொறி காண வந்தருளினுய் என்பாராய், "காணுத பொருள் எனக் கலையெலாம் புகல என் கண் காண வந்த பொருளே" என இயம்புகின்றார். பொருள்களை இட்டும் தொட்டும் பெற வருவது அனுபவ ஞானமாதலால், "தொடலெலாம் பெற" எனச் சுட்டி யுரைக்கின்றார். உடலுக்கு உள்ளும் புறமும் உணர்வு மயமாய் அறிவன அறிதற்கும் உறுவன அறிவித்தற்கும் துணை புரிதலின் திருவருள் ஞானத்தை, "உள்ளும் புறத்தும் மெய்த் துணையாய் விளங்கும் அறிவே" எனக் கூறுகின்றார். நடராசப் பெருமானே அருட் பெருஞ் சோதியாகவும்,

சிவ சன்மார்க்க நிதியாகவும் விளங்குவது பற்றி, "சிவ சன்மார்க்க நிதியே, அருட்பெருஞ் சோதி நடராச பதியே" எனக் கூறுகின்றார்.

இதனால், பசுகரணங்களைப் பதிகரணங்களாக்கிச் சிவபோக வாழ்வு பெறுவிக்கும் அருட் சத்தி வடிவே நடராச பதியின் திருமூர்த்தமாகும் எனத் தெரிவித்தவாறும். (3)

3654. மெய்தழைய உள்ளங் குளிர்ந்துவகை மாருது
மேன்மேற் கலந்துபொங்க
விச்சைஅறி வோங்கஎன் இச்சைஅறி வனுபவம்
விளங்கஅறி வறிவதாகி
உய்தழை வளித்தெலாம் வல்லசித் ததுதந்
துவட்டாதுள் ஊறிஊறி
ஊற்றெழுந் தென்னையும் தாளுக்கி என்னுளே
உள்ளபடி உள்ளஅமுதே
கைதழைய வந்தவான் கனியே எலாங்கண்ட
கண்ணே கலாந்தநடுவே
கற்பனை இ லாதோங்கு சிற்சபா மணியே
கணிப்பருங் கருணைநிறைவே
துய்தழை பரப்பித் தழைத்தரு வேஅருட்
சுகபோக யோகஉருவே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
சோதிநட ராசபதியே.

உரை: உடல் தழைக்க, உள்ளம் குளிர்ச்சி யுற்று மகிழ்ச்சி குன்றுமல் மேன்மேலும் கலந்து பொங்கிட, வித்தை வழித் தோன்றும் அறிவு மேம்பட, என் இச்சை அறிவு ஆகியவற்றின் அனுபவம் விளக்க முற, உளதாகும் உண்மை யறிவு அறிய வல்லதாய், உய்யும் நெறியைத் தந்தருளி எல்லாம் வல்ல சித்தினையும் தந்து, என் உள்ளத்துள் உவட்டாமல் மேன்மேலும் ஊறி, என்னையும் தாளுக்கி என்னுள்ளே உளதாதற்குரிய முறைப்படி இருந்தருளும் சிவஞானமிர்தமே: கை நிறைய வந்தருளும் வான் கனியே; எல்லாப் பொருளையும் காண வல்ல ஞானக் கண்ணே, கலைகள் எல்லாவற்றிற்கும் முடிவிடத்து நடுநின்று திகழும் நன்பொருளே; கற்பனைக்கு இடமின்றி ஓங்குகின்ற ஞான சபையில் திகழும் மாணிக்க மணியே; அளந்து காண்டற் கரிய கருணையின் நிறைவிடமே; தூய்மையாகிய தழைகளைப் பரப்பிக் குளிர்ந்த நிழலைத் தரும் அருள் மரமே; திருவருள் ஞானத்தால் சுகபோகத்தை ஒன்று யிருந்து காட்டும் ஞானத் திருவுருவே; சுத்த சிவ சன்மார்க்கச் செல்வமே; அருட் பெருஞ் சோதியாகிய நடராச பதியே வணக்கம். எ.று.

விச்சை யறிவு, கல்வி கேள்விகளால் உண்டாகும் செயற்கை யறிவு. இச்செயற்கை யறிவோடு உயிரின் இயற்கை யறிவு கலக்க உளதாவது உண்மை யறிவு. அதுவே உயிரின் அறிவாற்றலாய்த் திகழ்வதாதலால் அந்த அறிவியல் விளங்க, "விச்சை அறிவு ஓங்க என் இச்சை

அறிவனுபவம் விளங்க" என வுரைக் கின்ருர். இந்த உண்மை யறிவால் பிறக்கும் இன்பத்தை "மெய் தழைய உள்ளம் குளிர்ந்து உவகை மாருது மேன்மேற் கலந்து பொங்க" என்று கூறுகின்ருர். இங்ஙனம் செயற்கை யும் இயற்கையுமாய் இயைந்து ஒன்ருய் அமைவது மெய்யறிவு. அந்த அறிவு கைகூடின வழி, அறியத் தகுவனவற்றை உள்ளவாறு இனிதறியும் ஆற்றல் உளதாதலின், "அறிவறிவதாகி" எனக் குறிக்கின்ருர். அது தானும் திருவருளால் கைவருவதாதலின், சிவத்தின் செயலாக்கி "அறிவறிவதாகி" எனத் தெளிவிக்கின்ருர். இங்ஙனம் அறிவறிவதாகி எல்லாம் வல்ல சித்தினைத் தந்து இன்பம் பெருக்கித் தானுக்குவது சிவஞானத்தின் சிறப்பாதலின், "அறிவறிவதாகி உய்தழை வளித்தெலாம் வல்ல சித்து அது தந்து உவட்டாது உள்ளூறி ஊறி ஊற்றெழுந்து என்னை யும் தானுக்கி என்னுளே உள்ளபடி யுள்ள அமுதே" என்று இயம்பு கின்ருர். உய்தழைவு அளிப்ப தாவது உய்தி பெறுதற்குரிய ஆற்றலை நல்குதல். உலகியல் மயக்கமும் மலப் பிணிப்பும் இடை புகுந்து செய்யும் தடைகளை உடைத்தெறிதற் கேற்ற, ஆன்ம சத்தியை அளித்தருளும் நலத்தை, "எலாம் வல்ல சித்தது தந்து" என்றும், தடை யகன்ற வழிப் பிறக்கும் இன்ப நிலையை "உவட்டாது உள் ஊறி ஊறி ஊற்றெழுந்து" என்றும் உரைக்கின்ருர். ஊற்றெழுந்து பெருகும் ஞான வின்பத்தால் கரணத் திரள் அனைத்தும் சிவ மயமாதலின், "என்னையும் தானுக்கி என்னுள்ளே உள்ளபடி உள்ள அமுதே" என்று உவகை மிகுந்து உரைக் கின்ருர். அந்நிலையில் திருவருட் சுகானுபவம் கைவந் தமைதலின், "கை தழைய வந்த வான் கனியே" எனவும், அங்குக் காணுத பலவும் காண்டலின், "எலாம் கண்ட கண்ணே" எனவும் இயம்புகின்ருர். காட்சி யனைத்தும் கலைக் கடலின் முடிவாய் அவற்றின் நாடு நின்று திகழ்தலின், "கலாந்த நடுவே" எனக் கூறுகின்ருர். கலாந்தம், கலைகளின் முடிவு. தத்துவக கலைகளின் முடி வெனினும் அமையும். காட்சிக் கெட்டாதது கற்பனைக் கிடமாவ தாதலின், கண் குளிரக் கண்டு மகிழ விளங்கும் ஞான சபையை, "கற்பனை யிலாது ஓங்கு சிற்சபா மணியே" என வுரைக் கின்ருர். அளத்தற் கரிய பெருங் கருணைப் பெருமானுதலால், "கணிப்பரும் கருணை நிறைவே" எனவும், தூய்மை உருவமாதலின் "துய்தழை பரப்பி தழைத்த தருவே" எனவும் கூறுகின்ருர். "தூய வுடம்பினன்" என்றே சிவாகமங்களும் சொல்லுகின்றன. அருட் சத்தியோடு கூடி யுறையும் மாதொரு பாகனுகிய திருமேனியை "அருட் சுகபோக யோக உருவே" என உரைக்கின்ருர். "நல்லூர் பெருமணத்தான் நல்ல போகத்தன் யோகத்தையே புரிந்தான்" (நல்லூர்) என்று ஞானசம்பந்தர் கூறுவது காண்க.

இதனுல், அறிவ தறியும் அறிவு தந்து தானுக்கி உள்ளே உள்ளபடி எழுந்தருளும், சிவ பரம்பொருளின் சீர்த்த நலம் தெரிவித்தவாரும். (4)

3655. எண்ணிலா அண்டபகிர் அண்டத்தின் முதலிலே
இடையிலே கடையிலேமேல்
ஏற்றத்தி லேஅவையுள் ஊற்றத்தி லேதிரண்
டெய்துவடி வந்தன்னிலே
கண்ணுறு அருவிலே உருவிலே குருவிலே
கருவிலே தன்மைதனிலே

கலையாதி நிலையிலே சத்திசத் தாகிக்
கலந்தோங்கு கின்றபொருளே
தெண்ணிலாக் காந்தமணி மேடைவாய்க் கோடைவாய்ச்
சேர்ந்தனு பவித்தசுகமே
சித்தெலாஞ் செயவல்ல தெய்வமே என்மனத்
திருமாளி கைத்தீபமே
துண்ணுருச் சாந்தசிவ ஞானிகள் உளத்தே
சுதந்தரித் தொளிசெய்ஒளியே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
சோதிநட ராசபதியே.

உரை: எண்ணி லடங்காத அண்டங்கள் அவற்றிற்கு வெளியண்டங்கள் ஆகியவற்றின் முதலிலும் இடையிலும் கடையிலும் மேற்புறத்தும், அவற்றின் உள்ளகத்தும் திரண்டு தோன்றுகின்ற வடிவு களிலும் கண்ணுக்குப் புலப்படாத அருவத்திலும் உருவத்திலும் பருப் பொருளிலும் நுண்ணிய கருப்பொருளிலும், அப்பொருள்களின் தன்மை களிலும், நிவிர்த்தி முதலிய கலை நிலைகளிலும், அவ்வவற்றின் சத்தியாகி யும் சத்துப் பொரு ளாகியும் கலந்து நிறைந்து ஓங்குகின்ற முதற் பொருளே; கோடைக் காலத்தில் தெளிந்த சந்திரகாந்தக் கல்லாலாகிய மணி மேடையின்கண் பொருந்தி அனுபவிக்க வருகின்ற சுக வடிவமே; அணிமா முதலிய பலவகைச் சித்துக்களையும் செய்ய வல்ல தெய்வமே; என் மனமாகிய அழகிய மாளிகையின்கண் ஒளிர்கின்ற விளக்கமே; நெருங்குதற் கரிய சாந்த குணவான்களாகிய சிவஞான கிரியின் உள்ளத்தில் உரிமை யோடு எழுந்தருளி ஞானவொளி செய்கின்ற ஒளிப் பொருளே; சுத்த சிவ சன்மார்க் கத்திற் கென அமைந்த செல்வமே; திருவருளாகிய பெரிய ஒளியையுடைய நடராசப் பெருமானே வணக்கம். எ.று.

அண்டங்கள் எண்ணிறந்தனவாதலால், "எண்ணிலா அண்டம்" என்றும், அவற்றிற்கு மேலாய் நிறைந்துள்ள வெளி அண்டங்களைப் பகிரண்டம் என்றும் நூலோர் கூறுவர். இந்த அண்டங்கள் ஒவ்வொன்றி லும் முதல், இடை, கடை யென்ற எப்பகுதியிலும் மேற்புறம், உட்புறம் என்ற எத்திறத்திலும் திரண்டு உருவச்ய்த் தோன்றுகின்ற பொருள்களைக் காட்டுதற்கு, "முதலிலே இடையிலே கடையிலே மேலேற்றத்திலே உள்ளூற்றத்திலே திரண்ட வடிவங்கள்" எனக் குறிக்கின்றார். அண்டங் களின் மேற்புறத்தை மேலேற்றம் என்றும், உள்ளே செறிந்திருக்கும் பொருட்களை உள்ளூற்றம் என்றும் கூறுகின்றார். உள்ளே உறுவது உள்ளூற்றம் எனப்படுகிறது. உறுவது ஊற்றம் என அறிக. உள்ளிருந்து ஊறும் நீரை ஊற்று என்பது போல. அருவப் பொருள் கண்ணுக்குப் புலப்படாமை பற்றி, "கண்ணுரு அருவம்" என்றும், கட்புலனுவதை "உருவம்" என்றும், பருப்பொருளைக் "குரு" என்றும், நுண்பொருளைக் "கரு" என்றும் கூறுகின்றார். உருவும் அருவுமாகிய பொருள்கள் எல்லா வற்றிற்கும் தனித் தன்மை என்பது ஒன்று உண்டாதலின் அதனை வேறு நிறுத்தி, "தன்மை தனிலே" என்றும், நிவிர்த்தி, பிரதிட்சை, வித்தை, சாந்தி, அதீதை என நிலவும் கலை நிலைகளைக் "கலையாத நிலைகள்" என்றும், அவற்றுள் அமைந்த பொருள்களின் சத்தியும் சத்துப் பொருளு

மாகிய எல்லாக் கூறுகளையும் எண்ணி யுரைத்தலின், "சத்தி சத்தாகி" என்றும், அண்டம் முதலாக இச்சத்தி சத்து ஈறுக எடுத்தோதிய கூறுகள் எல்லாவற்றிலும் கலந்து அவற்றினுள்ளே ஒடுங்கி ஒழியாது மேன்மேலும் ஓங்கிப் பரத்தல் பற்றி, "கலந்து ஓங்குகின்ற பொருளே" எனக் கூறுகின்றார். நிலாக் காந்த மணி - சந்திர காந்தக் கல் என்றும் வழங்குவதாகும். சந்திர காந்தத்தின் ஒளி தெளிந்த பால் போன்ற நிலவொளியாதல் பற்றி, "தெண்ணிலாக் காந்த மணி" எனச் சிறப்பிக்கப்படுகிறது. சந்திர காந்தக் கல்லையும் மணி வகையுள் ஒன்றுகக் கருதுமாறு தோன்ற, "காந்த மணி" என்றும் அந்த மணியால் அமைக்கப்பட்ட மேடையை, "நிலாக் காந்த மணி மேடை" என்றும் விளக்குகின்றார். கடுமையான கோடைக் காலத்தில் இந்தச் சந்திர காந்த மணி மேடை மேலிருப்பது மிக்க பெரும் சுகானுபவமாதலால், "தெண்ணிலாக் காந்த மணி மேடைவாய்க் கோடைவாய்ச் சேர்ந்து அனுபவித்த சுகமே" என்று சிவானந்தத்தைச் சிறப்பிக்கின்றார். அணிமா மகிமா முதலாகக் கூறப்படும் அட்டமா சித்தி களையும் எளிதில் செய்ய வல்ல தெய்வமே" என்று போற்றுகின்றார். சிவானுபவம் மனத்தின்கண் தங்கிப் பெருஞானப் பேரொளிப் பிறங்க விளங்குவதால், "என் மனத் திருமாளிகைத் தீபமே" என்று தெரிவிக்கின்றார். துன்னுதல் - துண்ணுதல் என வந்தது. துண்ணுதல் என்றே கொண்டு துணுக்குறுதல் எனப் பொருள் கொள்ளினும் பொருந்தும். சாந்தமே வடிவாகிய சிவஞானிகள் உள்ளத்தைத் தனக்குரிய இடமாகக் கொள்பவனுதலால் சிவபெருமானை, "சாந்த சிவஞானிகள் உளத்தே சுதந்தரித்து ஒளி செய் ஒளியே" என்று துதிக்கின்றார். திருவருளாகிய "பேரொளிக் கதிர்களைப் பரப்பும் ஞானவொளிப் பொருளாதல் தோன்ற, அருட் பெருஞ் சோதி நடராச பதியே" எனப் பராவுகின்றார்.

இதனால், அண்டம் முதல் கலையாதி நிலைகளில் சத்தியும் சத்துமாய்க் கலந்து சுகானுபவமாய், எல்லாம் செய்ய வல்ல தெய்வமாய், மன மாளிகைத் தீபமாய், சிவஞானிகளின் உள்ளத்தில் ஒளிரும் ஒளியாய், சன்மார்க்க நிதியாய், அருட்பெருஞ் சோதியாகிய நடராசப் பெருமான் விளங்குகின்றான் என்பதாம். (5)

3656. அம்புவியி லேபுவியின் அடியிலே முடியிலே
அம்மண்ட லந்தன்னிலே
அகத்தி லேபுவியின் அகிலத்தி லேஅவைக்
கானவடி வாதிதனிலே
விம்பமுற வேநிறைந் தாங்கவை நிகழ்ந்திட
விளக்கும்அவை அவையாகியே
மேலும்அவை அவையாகி அவைஅவைஅ லாததொரு
மெய்ந்நிலையும் ஆனபொருளே
தம்பமிசை எனஏற்றி அமுதூற்றி அழியாத்
தலத்திலுற வைத்தஅரசே
சாகாத வித்தைக் கிலக்கண இலக்கியம்
தானுய்இ ருந்தபரமே.

தொம்பதமும் உடனுற்ற தற்பதமும் அசிபதச்
சுகமும்ஒன் றுனசிவமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
சோதிநட ராசபதியே.

உரை : அழகிய நிலவுலகத்திலும், அதன் அடிமுடிகளிலும், அந்த நில மண்டலத்திலும், அதன் அகலத்திலும், அதன் எல்லாமாய்த் திரண்ட நிலையிலும், அதன் கூறுகளாகிய அவ்வவற்றிற்கான வடிவுகளிலும், உருவும் ஒளியும் மிக்குற நிறைந்து அவை யுருவாய் நிகழ்ந்திட விளக்குவதாகிய அவ்வச் சத்தியாகியும், அவற்றின் மேலும் நிறையும் அருட் சத்தியாகியும், அவை யல்லாத மெய்ம்மை சான்ற பொருளாகியும் விளங்குகின்ற பரம்பொருளே; என்னை யோகத் தூண் மேல் ஏற்றி என்னுள் அமுத தாரையைப் பொழிந்து அழிவில்லாத ஞான நிலத்தில் இருக்க வைத்த அருளரசே; சாகாத வித்தைக்கு இலக்கணமும் இலக்கியமுமாய் இருந்தருளுகின்ற பரம்பொருளே; தொம்பதம், தற்பதம், அசிபதம் ஆகிய மூன்றையும் உணர வுளதாகும் உணர்வும் சுகமும் ஒன்றுக விளங்குகின்ற சிவபெருமானே; சுத்த சிவ சன்மார்க்கச் செல்வமே, அருட்பெருஞ் சோதியாகிய நடராச மூர்த்தியே வணக்கம். எ.று.

அம்புவி - அழகிய நிலவுலகம். நிலம் முதலிய பூதங்களோடு கூடித் திரண்டு வட்டமாய் விளங்குதலின் நிலவுலகை "மண்டலம்" என்கின்றார். இந்த மண்டலத்தின் சகலப் பொருள்களும் அடங்கப் "புவியின் அகிலம்" எனக் குறிக்கின்றார். அகிலத்தின் ஒவ்வொரு கூறும் தனக்கென வடிவம், குணம், செயல் ஆகியவற்றை யுடையதாதலால், "அவைக்கான வடிவாதி தனிலே" என வுரைக்கின்றார். ஒவ்வொன்றும் ஒளியும் உருவும் பெற்றுப் பொருளாய்த் தோன்றச் செய்வது பற்றி, "விம்பம் உறவே நிறைந்து ஆங்கு அவை நிகழ்ந்திட விளக்கும் அவை யவையாகி" என விளம்புகின்றார். ஒளி பெறச் செய்வதும் உரு அமையப் பண்ணுவதும் தனித்தனி வேறு வேறு சத்திகளாதலின், "அவை அவையாகி" என்றும், "மேலும் அவை யவையாகி" என்றும் அறிவிக்கின்றார். அவை அவையாகும் பரம்பொருள், அவையே யாகாது வேறுதலும் உண்மையின், "அவை அவையலாத தொரு மெய்ந்நிலையும் ஆன பொருளே" என மொழிகின்றார். யோக முயற்சியின் அசைவிலாத் தன்மை பற்றி அதனைத் "தம்பம்" என உருவகம் செய்கின்றார். யோக முடிவில் பெறப்படும் யோக ஞானமிர்த்தை யுண்டு நிலைபெறும் யோக பூமியில் இருப்பித் தருளிய நலம் புலப்பட, "தம்ப மிசை எனை யேற்றி அமுதூற்றி யழியாத் தலத்திலுற வைத்த அரசே" என்று உரைக்கின்றார். சாகாத வித்தை என்பது சாகாக் கலை என்றும் வழங்கும். கலை வகை எல்லாவற்றிலும் தலையாவது பற்றிச் சாகா தலை யென்பதும் ஒன்று. இறந்து படுதற்குரிய உடம்பொடு கூடி நின்றே சாவா மூவாப் பெருஞான உடம்பு பெறுதல் இதன் கொள்கையாகும். சாகா வரம் பெறலாம் எனக் குணக நமச்சிவாய சுவாமிகள் முதலியோர் குறித்திருக்கின்றார்கள். ஆயினும், இதன் வழி முறைகளை யாவரும் நூல் வடிவில் இயம்பிற் றிலராதலால், "சாகாத வித்தைக் கிலக்கிய இலக்கணம் தானு யிருந்த பரமே" என மொழிகின்றார். வேதாந்த ஞான உபதேசம் செய்வோர் மாணாக்கர்க்குத் தத்துவ மசி என்னும் மகா வாக்கியத்தை உபதேசிப்பர்

அது தற்பதம், தொம்பதம், அசிபதம் என மூன்றுகப் பிரிந்து தற்பதம் பிரமப் பொருளையும், தொம்பதம் ஆன்மாவையும் குறிப்பதாகக் கொண்டு தற்பதத்தால் குறிக்கப்படும் பரம்பொருள் தொம்பதமாகிய நீ ஆகிருய் என்ற பொருளில் அசிபதம் வழங்கப்படுகிறது. நீ பிரமப் பொருளாகிருய் என்ற கருத்துப்பட இதனைத் 'தத்துவமசி' என்றும், இதனை 'மகா வாக்கியம்' என்றும் அறிஞர் கூறுவர். நான் பிரமப் பொருளாகுவேன் என்று தியானிக்க உளதாகும் பிரம ஞான சுகம் சிவானந்தமாதலின், "தொம்பதமும் உடனுற்ற தற்பதமும் அசிபதச் சுகமும் ஒன்ருன சிவமே" என உரைக்கின்ருர். உயிர்களிலும் உயிரில் பொருள்களிலும் கலந்து நின்ருளிரும் திருவருட் சோதியின் வேறுபடுத்தித் திருவருட் சோதியின் தனிநிலைப் பெருந்தன்மை இனிது புலப்பட, "அருட்பெருஞ்சோதி நடராச பதியே" என அறிவிக்கின்ருர். (6)

3657. நீரிலே நீர்உற்ற நிறையிலே நிறைஉற்ற
நிலையிலே நுண்மைதனிலே
நிகழ்விலே நிகழ்வுற்ற திகழ்விலே நிழலிலே
நெகிழிலே தண்மைதனிலே
ஊரிலே அந்நீரின் உப்பிலே உப்பிலுறும்
ஒண்சுவையி லேதிரையிலே
உற்றநீர் கீழிலே மேலிலே நடுவிலே
உற்றியல் உறுத்தும்ஒளியே
காரிலே ஒருகோடி பொழியினும் தூணைபெருக்
கருணைமழை பொழிமேகமே
கனகசபை நடுநின்ற கடவுளே சிற்சபைக்
கண்ணேங்கும் ஒருதெய்வமே
தூரிலே பலமளித் தூரிலே வளர்கின்ற
சுகசொருப மானதருவே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
சோதிநட ராசபதியே.

உரை : நீரினிடத் துளதாகும் நிறைவிலும், நிறைவின்கண் பொருந்திய நிலையிலும், நீரினிடத் துள்ள நுண்மைத் தன்மையிலும், அதன்கண் நிகழ்கின்ற தெளிவிலும், தெளிவினிடத் துளதாகும் ஒளியிலும், நீர் வெளிப்படுத்தும் நிழலிலும், அதன் நெகிழ்விலும், அதன் தட்பத்திலும், ஊர்களிடத்துள்ள நீரின்கண் நிறைந்திருக்கும் உப்பிலும், உப்பு நல்கும் ஒள்ளிய சுவையிலும், நீர் மேல் தோன்றுகின்ற அலைகளிலும், அவற்றின் கீழும் மேலும் நடுவிலும் பொருந்தத் தோற்றம் செய்யும் ஒளிப் பொருளே; கார் மேகங்கள் கூடி ஒருகோடி அளவு மழை பொழியினும் ஒப்பாகாத கருணையாகிய மழையைப் பொழிகின்ற அருள் மேகமாகியவனே; பொற் சபையின் நடுநின்று ஆடுகின்ற கடவுளே; ஞான சபைக்கண் விளங்குகின்ற ஒப்பற்ற தெய்வமே; அடிப் பகுதியிலே கிளைக்கின்ற தூரின்கண் பழம் கனிந்து உள்ளூரில் விளங்குகின்ற இன்ப வடிவமான பழமரமே; சுத்த சிவ சன்மார்க்கச் செல்வமே; அருட்பெருஞ் சோதியாகிய நடராசப் பெருமானே வணக்கம். எ.று.

சென்ற விடமெல்லாம் நிறைவுற்று நிற்கும் நிலையினை யுடையது தண்ணீராதலால், "நீருற்ற நிறையிலே நிறையுற்ற நிலையிலே" எனக் கூறுபடுத் துரைக்கின்றார். தனக்கென ஒரு நிறமோ வடிவமோ சுவையோ யின்றி நுண்ணிதாக யிருத்தலால் தண்ணீரின் நுண்மைத் தன்மையை, "நுண்மை தனிலே" என எடுத்து நவில்கின்றார். நிலத்தின் அடியிலும் மேலும் இடையிலும் எங்கும் இருப்பது பற்றித் தண்ணீரின் இயல்பை, "நிகழ்விலே நிகழ்வுற்ற திகழ்விலே" என்று தெரிவிக்கின்றார். எங்கும் நிறைவதாயினும் நிகழு மிடத்தெல்லாம் தனது ஒளியைக் காட்டுதலின் நீரின் ஒளியை, "நிகழ்வுற்ற திகழ்வு" எனச் செப்புகின்றார். நீர் நிகழ்வது துளியாயினும் அதனிடத்து ஒளியிலும், அவ்வொளி யிடத்து நிழலும். அந்நிழலின்கண் நெகிழ்வும் காணப்படுதலின், "நிகழ்வுற்ற திகழ்விலே நிழலிலே நெகிழிலே" என வுரைக்கின்றார். தட்பம் அதற்குப் பண்பாதலால், அது நீங்காமை பற்றித் "தண்மை தனிலே" எனச் சாற்றுகின்றார். தனக்கென ஒரு சுவையுடைய தில்லையா யினும் தான் நிகழும் நிலத் துப்பினைத் தான் கொண்டு உப்புடையதாய், அவ்வுப்புத் தானும் தனக்கென ஒரு சுவை யுடையதாகலின் அந்நீரின் "உப்பிலே உப்பிலுறும் ஒண்சுவையிலே" என்று மொழிகின்றார். நிலைத்த நீரின்கண் காற்றுல் ஆலைகள் எழுதலின் அதனைத் "திரை" என்று குறிப்பிடுகின்றார். அலைகட்குக் கீழும் மேலும் நடுவிலும் அமைந்த ஒவ்வொரு துளியிலும் ஒளி யுண்மையின், "உற்றியல் உறுத்தும் ஒளியே" என நவில்கின்றார். நீரின் நிறையிலும், நிலையிலும், நுட்பத்திலும், நிகழ்ச்சியிலும், நெகிழ்ச்சியிலும், தண்மையிலும், நீரிடத் தமையும் உப்பிலும், உப்பின் சுவையிலும், அலையிலும் பிறவற்றிலும் உள்ளுற்று அதன் இயல்பு விளங்கச் செய்யும் பரவொளியை, "இயல் உறுத்தும் ஒளியே" எனக் கூறுகின்றார். இறைவனது கருணை மிகுதியைப் புலப் படுத்துதற்கு, "காரிலே ஒருகோடி பொழியினும் துணை பெருக் கருணை மழை பொழி மேகமே" எனப் புனைந் துரைக்கின்றார். கனக சபை, பொற் சபை. சிற்சபை, ஞான சபை. "உள்ளூர்ப் பழமரம் பழுத்தற்றுல்" என்ற திருக்குறளை நினைவிற் கொண்டு, "தூரிலே பலமளித் தூரிலே வளர்கின்ற தருவே" என விதந்துரைக்கின்றார். தூர், அடிப் பகுதி. பலம், பழம். ஞான வானந்த வடிவம் என்பது பற்றிச் சிவ பரம்பொருளை, "சுக சொருபமான தருவே" எனச் சுட்டுகின்றார். அருட் சேதிப் பெருந் தெய்வமாதல் பற்றி நடராசப் பெருமானை, "அருட் சோதி நடராச பதியே" எனப் புகழ்கின்றார்.

இதனுல், நீருற்று இயலுறுத்தும் ஒளியாகவும், கருணை மழை பொழி யும் மேகமாகவும், கனக சபைக் கடவுளாகவும், ஞான சபைத் தெய்வ மாகவும், சுக சொருபமான தருவாகவும், சன்மார்க்க நிதியாகவும், அருட் பெருஞ் சோதி நடராசப் பெருமான் விளங்குகின்றார் என்பதாம். (7)

3658. ஒள்ளிய நெருப்பிலே உப்பிலே ஒப்பிலா
ஒளியிலே சுடரிலேமேல்
ஓட்டிலே சூட்டிலே உள்ளாடும் ஆட்டிலே
உறும்ஆதி அந்தத்திலே
தெள்ளிய நிறத்திலே அருவத்தி லேஎலாம்
செயவல்ல செய்கைதனிலே

சித்தாய் வினங்கிஉப சித்தாய சத்திகள்
சிறக்கவளர் கின்றஒளியே
வள்ளிய சிவானந்த மலேயே சுகாதீத
வானமே ஞானமயமே
மணியேஎன் இருகண்ணுள் மணியேஎன் உயிரேஎன்
வாழ்வேஎன் வாழ்க்கைவைப்பே
துள்ளிய மனப்பேயை உள்ளுற அடக்கிமெய்ச்
சுகம்எனக் கீந்ததுணேயே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
சோதிநட ராசபதியே.

உரை : ஒட்பமுடைய நெருப்பிலும், அதன் சுவையிலும், ஒப்பற்ற ஒளியிலும், நெருப்பிடத்தே யெழுகின்ற சுடரிலும், மேல் வானத்தில் மின்னற் கொடியாய் ஓடுகின்ற ஒட்டத்திலும், அது செய்யும் வெப்பத்திலும், சுவாலேயாய் உள் நின்ருடும் ஆட்டத்திலும், அதனுடைய தோற்றக் கேட்டிலும், தெளியப் புலனுகும் பல்வேறு நிற வருவிலும், அருவத்திலும் கலந்து எல்லாம் செய்ய வல்ல நெருப்பில் நின்று சித்துப் பொருளாய் விளங்கியும் உபசித்துக்களாகிய சத்திகளில் மேம்பட்டு வளர்கின்ற பரவொளிப் பொருளே; வளவிய சிவ போகமாகிய மலே போல்பவனே; சுகாதீதமான வானமே; ஞான மயமாகிய பெருமானே; மாணிக்க மணி போல்பவனே; என்னுடைய இரண்டு கண்களிலும் விளங்குகின்ற மணி போல்பவனே; எனக்கு உயிரே; என் வாழ்வே; என் வாழ்வுக்குரிய இடமான பொருளே; துள்ளித் திரிகின்ற மனமாகிய பேயை உள்ளத்திலே அடக்கி நிலேத்த சுகத்தை எனக்களித்த துணேவனே; சுத்த சிவ சன்மார்க்கச் செல்வமே; அருட் பெருஞ் சோதியாகிய நடராசப் பெருமானே வணக்கம். எ.று.

ஒட்பம் உடைமை பற்றி நெருப்பை, "ஒள்ளிய நெருப்பு" என்கின்ருர். நெருப்பின் வெப்பத்தால் பொருள்களின் சுவை மேம்படுவது பற்றி, "உப்பிலே" என வுரைக்கின்ருர். நெருப்பிடத் தெழும் ஒளிக்கு ஒப்பில்லாமையால் "ஒப்பிலா ஒளியிலே" என்று உரைக்கின்ருர். வானத்து மின்னற் கொடியாய் மேகங்களின் ஊடே ஓடுவது பற்றி, "மேல் ஓட்டிலே" என மொழிகின்ருர். ஓட்டம் "ஓட்டு" எனப்படுகிறது. நெருப்பு எரியுமிடத்து அதன்கண் எழும் சுவாலேயின் தோற்றம், நடு, முடிவு ஆகிய இடங்களில் அசைவு தோன்றுதலால், "உள்ளாடும் ஆட்டிலேயுறும் ஆதிஅந்தத்திலே" என்று உரைக்கின்ருர். இவை யாவும் நெருப்பு நிகழும் இடமென அறிக. தெளிவாகப் புலனுதல் பற்றி நெருப்பின் நிறத்தைத் தெள்ளிய நிறம் எனத் தெரிவிக்கின்ருர். கடையப்படாத கட்டையின்கண் நெருப்பு அருவமாய் இருத்தலின், "அருவத்திலே" எனக் குறிக்கின்ருர். மூங்கிலும் பிறவும் ஒன்ருெடொன்று இணேயுமிடத்து அருவாய் நின்ற நெருப்பு உருவாய் வெளிப்படுதலேக் காண்க. நெருப்பைக் கொண்டு எல்லாச் செயல் வகையும் நடைபெறுவதால் நெருப்பின் அத்தன்மையை "எல்லாம் செய வல்ல செய்கை" எனச் சிறப்பிக்கின்ருர் சித்து எனப்படும் ஞானமும், ஞான அக்கினியாய்த் திகழ்வதால், "சித்தாய் விளங்கி" என்றும், பல்வேறு சத்திகளே யுடைமை பற்றி, "உப சித்தாய சத்திகள்

என்றும் நவில்கின்றார். இக்கூறிய பல்வேறு சித்துக்களையும் உபசித்தாய சத்திகளையும் நெருப்பிடத்து எழுப்பி வளர்த்தல் பற்றிச் சிவ பரம்பொருளை, "சித்தாய் விளங்கி உபசித்தாய சத்திகள் சிறக்க வளர்கின்ற ஒளியே" என்று கூறுகின்றார். வளம் மிக்கது என்றற்கு, "வள்ளிய சிவானந்த மலையே" என்றும், உடல் கருவி கரணங்களைக் கொண்டு பெறுகின்ற சுக போகங்களுக்கு மேலானதாகலின், "சுகாதீத வானமே" எனவும், ஞான மூர்த்தம் என்றற்கு "ஞான மயமே" எனவும் நவில்கின்றார். ஆன்மாக்கள் வாழ்வாங்கு வாழ்ந்து சிவபோகம் பெறுதற்குரிய இடமாதல் விளங்க, "என் வாழ்க்கை வைப்பே" என வழங்குகிறார். பொறி ஐந்தின் வாயிலாக ஆசை வயப்பட்டு அலைவது பற்றி மனத்தை "துள்ளிய மனப் பேய்" என்று சொல்லுகின்றார். மனம் அடங்கினாலன்றி ஞானப் பேறு எய்தாமை பற்றி, "உள்ளுற அடக்கி மெய்ச் சுகம் எனக்கு ஈந்த துணையே" என்று சொல்லுகின்றார்.

இதனால், நெருப்பின்கண் பெறலாகும் ஒட்பும் ஒளியும் பிறவுமாகிய செய்கைகளில் சித்தாய் விளங்கியும், உபசித்தாய சத்திகளாய்ச் சிறந்தும் ஓங்குகின்ற ஒளியும், சிவானந்த மலையும், சுவாதீத வானமும், ஞான மயமும் பிறவுமாய் மெய்ச்சுகம் தந்தான் சிவ பரம்பொருள் என்பதாம். (8)

3659. அறைகின்ற காற்றிலே காற்றுப்பி லேகாற்றின்
ஆதிநடு அந்தத்திலே
ஆனபல பலகோடி சத்திகளின் உருவாகி
ஆடும்அதன் ஆட்டத்திலே
உறைகின்ற நிறைவிலே ஊக்கத்தி லேகாற்றின்
உற்றபல பெற்றிதனிலே
ஓங்கிஅவை தாங்கிமிகு பாங்கினுறு சத்தர்கட்
குபகரித் தருளும்ஒளியே
குறைகின்ற மதிநின்று கூசஓர் ஆயிரம்
கோடிகிர ணங்கள்வீசிக்
குலஅமுத மயமாகி எவ்வுயி ரிடத்தும்
குலாவும்ஒரு தண்மதியமே
துறைநின்று பொறைஒன்று துயர்அறி வாற்கண்ட
சொருபமே துரியபதமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
சோதிநட ராசபதியே.

உரை : மோதுகின்ற காற்றிலும், காற்றின் சுவையிலும், அதன் முதல் இடை கடை ஆகிய பகுதிகளிலும், உளவான பல கோடிச் சத்தி களின் உருவுடையதாய் அக்காற்று அசைந்தாடுகின்ற ஆட்டத்தி லுள்ள நிலையிலும், எழுச்சியிலும், காற்றின் பல்வேறு தன்மைகளிலும் உயர்ந் தோங்கி அவை யனைத்தையும் தாங்கிக் காற்றின் பக்கல் உறையும் சத்திமான்களாகிய தேவர்களுக்கு உதவி யருளும் ஒளிப் பொருளே; நாளும் குறைகின்ற இயல்புடைய சந்திரன் கண்டு நாணும்படி ஆயிரம்

கோடிக் கிரணங்களை வீசுகின்ற உயர்ந்த அமுத மயமாய் எல்லா உயிரிடத்தும் பொருந்துகின்ற குளிர்ந்த ஞான மதியமே; அறத் துறையில் நின்று பொறுமையை மேற்கொண்டு, தமது ஞானத்தால் தூயவர்களால் காணப்பட்ட உண்மை சொருபப் பொருளே; துரிய பதத்தில் விளங்குகின்ற பெருமானே; சுத்த சிவ சன்மார்க்கச் செல்வமே; அருட் பெருஞ் சோதியாகிய நடராச பதியே வணக்கம். எ.று.

காற்றினிடத்துச் சுவை யுண்மை பற்றிக் "காற்றுப்பிலே" எனவும், காற்றுக்கும் முதல், இடை, கடை என்ற பகுதி யுண்டாதல் பற்றிக் "காற்றின் ஆதி நடு அந்தத்திலே" எனவும், காற்றின் ஒவ்வொரு கூற்றிலும் மாயையின் சடசத்தி வகையோடு அருட் சத்தி வகைகளும் அடங்கி யிருத்தல் தோன்ற, "பல பல கோடி சத்திகளின் உருவாய்" எனவும் உரைக்கின்றார். ஊக்கம் - எழுச்சி. இச்சத்திகளின் வேறுப் மிகப் பல தன்மைகள் காற்றிற்கு இருத்தலால் அவற்றையும் சத்திகளோடு சேரத் தாங்குவது சத்திமான்களாகிய தேவர்களின் செயல் அல்லது இனிது நடைபெறுதல் பொருட்டுச் சிவத்தின் அருளொளி அவை யனைத்தையும் தாங்கி யருளுகின்ற பெருமை விளங்க, "காற்றின் உற்ற பல பெற்றி தனிலே ஓங்கி அவை தாங்கி மிகு பாங்கினுறு சத்தர்கட்கு உபகரித் தருளும் ஒளியே" என வுரைக் கின்றார். யோகக் காட்சி யுடையார்க்குத் தோன்றும் ஞான அமுதச் சந்திரன் உருவாய்க் காட்சி தருதல் பற்றி, "குறைகின்ற மதி நின்று கூச ஓர் ஆயிரம் கோடி கிரணங் கள் வீசிக் குல அமுத மயமாகி எவ்வுயிரிடத்தும் குலாவும் ஒரு தண் மதியமே" எனப் பாடுகின்றார். துறை என்றது சிவஞான ஆனந்தம் பெற முயலும் நெறி. அந்நெறிக்கண் நிற்போர் பொறையும் நிறையும் அறிவுமாகிய நலமனைத்தும் பெற்ற ஞானவான்களாய்த் தங்கள் ஞானக் காட்சியால் துரியா வத்தைகள் காண நிற்கும் பரம்பொருளை, "துறை நின்று பொறை ஒன்று தூயர் அறிவாற் கண்ட சொருபமே துரிய பதமே" என்று சொல்லுகின்றார்.

இதனால், சத்தர்களுக்கு உபகரித் தருளும் ஒளியாய், தண்மதியமாய், சொருபமாய், துரியபதமாய், சன்மார்க்க நிதியாய், அருட் பெருஞ் சோதியாய் விளங்குபவன் நடராச பதி என்பதாம். (9)

3660. வானிலே வானுற்ற வாய்ப்பிலே வானின் அரு
வத்திலே வான் இயலிலே
வான் அடியி லேவானின் நடுவிலே முடியிலே
வண்ணத்தி லேகலையிலே
மானிலே நித்திய வலத்திலே பூரண
வரத்திலே மற்றையதிலே
வளரனந் தானந்த சத்தர்சத் திகள்தம்மை
வைத்தஅருள் உற்றஒளியே
தேனிலே பாலிலே சர்க்கரையி லேகனித்
திரளிலே தித்திக்கும்ஓர்
தித்திப்பெ லாங்கூட்டி உண்டாலும் ஒப்பெனச்
செப்பிடாத் தெள்ளமுதமே

தூநிலா வண்ணத்தில் உள்ளோங்கும் ஆனந்த
சொருபமே சொருபசுகமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
சோதிநட ராசபதியே.

உரை : வானத்திலும், வானத்திற் கமைந்த இட வாய்ப்பிலும், அதன் அருவி நிலையிலும், இயலும் இயலிலும், வானத்தின் அடி நடு முடிவுகளிலும், வண்ணத்திலும், கலை முதலிய அத்துவாக்களிலும், அவற்றின் மூல காரணமாகிய மாணுகிய தத்துவத்திலும், அதன் நிச்சயத் தன்மையிலும், பூரண அமைதியிலும், மற்றும் அதன்கண் பெருகுகின்ற எண்ணிறந்த ஆனந்த உருவினரான சத்திமான்களையும் சத்திகளையும் வைத்து அருள் புரிகின்ற ஒளிப் பொருளே; தேன் பால் சர்க்கரை முதலியவற்றிலும் பலவகைக் கனி வகைகளிலும் நிறைந்து இனிக்கும் இயல்புடைய தித்திக்கும் சுவையெலாம் கூட்டி யுண்டாலும் ஒப்பாம் எனச் சொல்லுதற் கொண்ணுத தெளிந்த சிவாமிர்தமே; தூய நிலா வொளியின் உள்ளே நிறைந்தோங்கும் ஆனந்த சொரு பமே; அச் சொருபத் தரிசனத்தால் பெறப்படும் சுகமே; சுத்த சிவ சன்மார்க் கத்தின் செல்வமே; அருட் பெருஞ் சோதியாகிய நடராச பதியே வணக்கம். எ.று.

ஐம்பூதங்களில் ஒன்றுகிய வானத்தின் ஆழம் உயரம் பெருக்கம் ஆகியவற்றிற்கு இடமாகியதனை, "வானுற்ற வாய்ப்பு" என மொழி கின்றார். அருவமாய், சத்த குணமாய் இயல்வது பற்றி, "வானின் அருவத்திலே இயலிலே" என மொழிகின்றார். வானத்தின் அடியிலும், நடுவிலும், முடிவிலும் வேறுபட்டுத் தோன்றுகின்ற வண்ண வகைகளை, "வானடியிலே வானின் நடுவிலே முடியிலே வண்ணத்திலே" என வகுத் துரைக்கின்றார். வானமாகிய தத்துவத்தில் உள்ள கலை, புவனம், வித்தை, வண்ணம், பூதம், மந்திரம் ஆகியவற்றையும், அவற்றிற்கு மூல காரணமாகிய மான் என்னும் தத்துவத்தையும் அதன் நித்தியத் தன்மை யிலும் பூரண நிறைவிலும் எண்ணிறந்த சத்திமான்களும் சத்திகளும் இன்ப வுருவினராய் இயங்குதல் பற்றி, "வளர் அனந்த ஆனந்த சத்தர் சத்திகள்" என்றும், அவர்களை ஆங்காங்கு ஒளி யுருவினராய் உலாவுவித்தல் பற்றி, "வைத்த அருள் உற்ற ஒளியே" என்றும் உரைக் கின்றார். சிவ தியானத்தில் ஊறுகின்ற ஞான அமுதத்தை அனுபவித் துரைக்கின்றாராதலின், "தேனிலே பாலிலே சர்க்கரையிலே கனித் திரளிலே தித்திக்கும் ஓர் தித்திப் பெலாம் கூட்டி யுண்டாலும் ஒப்பெனச் செப்பிடாத் தெள் ளமுதமே" எனப் பராவுகின்றார். துவாத சாந்தத்தில் தோன்றுகின்ற பூரண சந்திரனது ஒளியிடத்துக் காணப்படும் சொரு பானந்தத்தை, "தூ நிலா வண்ணத்தில் உள்ளோங்கும் ஆனந்த சொருபமே சொருப சுகமே" என்று சொல்லுகின்றார்.

இதனால், வானத்திலும், அதற்கேதுவாகிய 'மான்' என்ற தத்துவத் திலும், பெருகி யிருக்கும் சத்தர் சத்திகளுக்கு ஒளியாய் ஒளி நல்குபவனும், தெள்ளமுதமும், ஆனந்த சொருபமாயும் சொருப சுகமா யும் அருட் பெருஞ் சோதியாயும் விளங்குபவன் நடராசப் பெருமான் என்று தெரிவித்தவாறும். (10)

3661. என்றிரவி தன்னிலே இரவிசொரு பத்திலே
இயல் உருவி லேஅருவிலே
ஏறிட்ட சுடரிலே சுடரின்உட் சுடரிலே
எறிஆத பத்திரளிலே
ஒன்றிரவி ஒளியிலே ஒங்கொளியின் ஒளியிலே
ஒளிஒளியின் ஒளிநடுவிலே
ஒன்றுகி நன்றுகி நின்றுடு கின்றஅருள்
ஒளியேஎன் உற்றதுணையே
அன்றிரவில் வந்தெனக் கருள்ஒளி அளித்தஎன்
அய்யனே அரசனேஎன்
அறிவனே அமுதனே அன்பனே இன்பனே
அப்பனே அருளாளனே
துன்றியஎன் உயிரினுக் கினியனே தனியனே
தூயனே என்நேயனே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
சோதிநட ராசபதியே.

உரை : வெயில் ஒளியைச் செய்கின்ற சூரியனிலும், அதன் சொருபத்திலும், அதற்கியன்ற உருவத்திலும், அதனுடைய அருவ நிலையிலும் எங்கும் செலுத்துகின்ற அதன் கிரணத்திலும், அக்கிரணத்தின் உள்ளே நிலவுகின்ற சுடரிலும், எங்கும் பரப்புகின்ற அதன் பகல் ஒளியிலும், அதன்கண் குவிந்து ஒன்றுகின்ற ஒளியிலும், ஓங்குகின்ற அதன் ஒளியின் ஒளியிலும், அவ்வொளியின் நடுவிலும், ஒன்றுகவும் நன்றுகவும் நின்றுடல் புரிகின்ற, அருளொளியாகிய சிவமே; எனக்குற்ற துணைவனே; அன்றொரு நாள் இரவுப் போதில் என்பால் வந்து, எனக்கு அருளொளி வழங்கிய என் ஐயனே; அருளரசனே; எனக்கு அறிவு நல்குபவனே; அமுத மயமானவனே; எனக்கு அன்பனே; இன்பம் தருபவனே; என் தந்தையே; அருளாளனே; என் உடற்கண் நிறைந்த என் உயிர்க்கு இனியவனே; ஒப்பற்றவனே; தூயனே; எனக்கு நேசனே; சுத்த சிவ சன்மார்க்கச் செல்வனே; அருட் பெருஞ் சோதியாகிய நடராச பதியே வணக்கம். எ.று.

என்று - பகலொளி. இதனை என்றாழ் எனவும் வழங்குவர். என்றுகிய "என்றிரவு" என வந்துள்ளது. ஒளியே தனக்கு உருவாக அமைந்ததாதலால், அதுவே சூரியனுக்கு உண்மைச் சொருபமும் உருவுமாதலால். "இரவி சொருபத்திலே இயல் உருவிலே" எனப் பிரித்தோதுகின்றார். உருவப் பொருளுக்கு அருவமாம் இயல்பும், அருவப் பொருளுக்கு உருவமாம் இயல்பும் இயற்கையிலுளவாதல் பற்றி, "இரவி அருவிலே" என்றும், அதனிடத்து மேலோங்கி எழுகின்ற ஒளிக் கதிர்களை, "ஏறிட்ட சுடர்" என்றும், அவை கம்பி போல் நீண்டு ஓங்குமிடத்து அவற்றை ஊடுருவிச் செல்கின்ற ஒளியை, "உட் சுடர்" என்றும், சூரிய ஒளியின் திரட்சியை "ஆதபத் திரள்" என்றும் உரைக்கின்றார். ஆதபம் - பகல் வெயில். சூரியனது ஒளிக்கு ஒடுங்குவதும் விரிவதும் இயல்பாயினும் ஓங்குமிடத்து ஒளி பெருகுதலின், "ஓங்கொளியின் ஒளியிலே ஒளியொளியின் ஒளி நடுவிலே" என ஒளித் திரளை நுணுகிப்

பகுத்து, "ஒளி ஒளியின் ஒளி நடுவிலே" என உரைக்கின்றார். அந்த ஒளி நடுவில் உள்ளிருந்து ஊக்கிப் பரப்பும் ஒளியின் நடுவின்கண் ஒன்றுயும் நன்றுயும் நின்றுடல் புரிகின்றது பரவொளி என்றற்கு, "ஒன்றுகி நன்றுகி நின்றுடுகின்ற அருளொளியே" என்று சிவத்தைக் குறிக்கின்றார். உற்றவிடத்து உறுவது அறிந்து உதவுவதே உறுதுணையாக லின், அதனைப் புரியும் சிவபெருமானை, "உற்ற துணையே" என வுரைக் கின்றார். ஒரு நாளிரவின் போது, அருள் ஞானம் புரிந்த நலத்தை எடுத்து மொழிகின்றுராதலால், "அன்றிரவில் வந்து எனக்கு அருள் அளித்த என் ஐயனே" என மொழிகின்றார். அறிவுருவானவன் என்றற்கு, "அறிவனே" என்றும், அமுத மயமாய் மகிழ்வித்தலின், "அமுதமே" என்றும், அன்பு செய்து இன்பம் பெருகுவித்தலின், "அன்பனே இன்பனே" என்றும் கூறு கின்றார். உலக மெங்கும் பரந்து உயிர்க் குயிராகிய சிவன் உறைதற்கு இனிய இடமாதலின், "துன்றிய என் உயிரினுக்கு இனியனே" என்று போற்றுகின்றார்.

இதனால், பிறவியின் கூறுகளில் சொருபம் உருவம் முதலாகிய கூறு களில், நிலவும் ஒளி நடுவிலே ஒன்றுய் நன்றுய் நின்றுடுகின்ற அருளொளியாய், உற்ற துணைவனுய், அறிவனுய், அமுதனுய், அருளாளனுல், உயிரினுக் கினியனுய், தூய நேயனுய் விளங்குபவன் அருட் பெருஞ் சோதியாகிய நடராச பதி என்பதாம். (11)

3662. அணிமதியி லேமதியின் அருவிலே உருவிலே
அவ்வுருவின் உருவத்திலே
அமுதகிர ணத்திலே அக்கிரண ஒளியிலே
அவ்வொளியின் ஒளிதன்னிலே
பணிமதியின் அமுதிலே அவ்வமு தினிப்பிலே
பக்கநடு அடிமுடியிலே
பாங்குபெற ஓங்கும்ஒரு சித்தேஎன் உள்ளே
பலித்தபர மானந்தமே
மணிஒளியில் ஆடும்அருள் ஒளியே நிலைத்தபெரு
வாழ்வே நிறைந்தமகிழ்வே
மன்னேஎன் அன்பான பொன்னேஎன் அன்னேஎன்
வரமே வயங்குபரமே
துணிமதியில் இன்பஅனு பவமாய் இருந்தகுரு
துரியமே பெரியபொருளே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
சோதிநட ராசபதியே.

உரை : அழகிய சந்திரனிலே, அதன் அருவ உருவங்களிலே, அவ் வுருவுகளின் உருவிலே, அதனிடத்து ஊறுகின்ற அமுத கிரணங்களிலே, அக்கிரணங்களின் ஒளியிலே, அவ்வொளியிடத்து ஒளிரும் ஒளியிலே; வகைந்த அதன் அமுதிலே, அந்த அமுதிடத்து உள்ள இனிப்பிலே, அதன் பக்கம் நடுவிடம் அடிப்பகுதி முடிவிடம் ஆகிய அதன் இடமெங்கும் விளக்கமுறுகின்ற சித்துப் பொருளே; என் உள்ளத் துணர்விற்குக் கிடைத்த மேலான ஆனந்தமே; மணிகளின் ஒளியில் நடன மிடுகின்ற அருளொளியே; என்றும் நிலையா யுள்ளதொரு பேரின்ப வாழ்வே,

நிறைந்த மகிழ்ச்சி தரும் பொருளே; எனக்கு மன்னவனே; எனக்கு அன்பான பொன்னே; எனக்கு அன்னையே; எனக்கு மேலானதாய் விளங்குகின்ற பரம்பொருளே; தெளிந்த சந்திர வொளியில் இன்ப அனுபவப் பொருளாய் இருந்தருளும் உருவே; துரியத்தில் காட்சி தரும் பிரமப் பொருளே; சுத்த சிவ சன்மார்க்கச் செல்வமே; அருட் பெருஞ் சோதி யுருவாகிய நடராச முதல்வனே! வணக்கம். எ.று.

இயல்பிலே அழகுடையதாதலின், சந்திரனை "அணி மதி" என்று புகழ்கின்றார். சூரியனுக்குப் போலச் சந்திரனுக்கும் அருவமும் உருவமும் உண்டாதலின், "அவ்வுருவின் உருவத்திலே" எனக் குறிக்கின்றார். சந்திரனது உருவத்திலே ஒழுகுகின்ற கிரணம், அமுத மயமானது என்பது பற்றி, "அமுத கிரணத்திலே" என்றும், அந்தக் கிரண ஒளிக்குள் ஒளிருகின்ற ஒளியின்கண், அமுது உளதாகிறது என்பது தோன்ற, கிரண ஒளிக்கு ஒளியாகிய ஒளியின்கண் அமுது தங்குவதாகவும் இனிப்புடையதாகவும் விளக்குதற்கு, "ஒளி தன்னிலே பனிமதியின் அமுதிலே அவ்வமுது இனிப்பிலே" என்றும், அதன் பாங்கர் எங்கும் சித்தாந்தன்மை திகழ்கின்ற தென்பதற்கு, "பக்க நடு அடி முடியிலே பாங்கு பெற வோங்கு மொருசித்தே" என்றும், அச்சித்துப் பொருண்மையின் இன்பமும் உள்ளத்தே உணரப்படுதலால், "உள்ளே பலித்த பரமானந்தமே" என வுரைக்கின்றார். பளிங்கு மணியின் ஒளியில் திகழும் இன்பவொளியைச் சிவமாகக் கருதுகின்றாராதலின், "மணி ஒளியில் ஆடும் அருளொளியே" என வுரைக்கின்றார். உலகியல் இன்பம் போல நிலையாமையும் குறை யுடைமையும் கொண்டது சிவபோக மன்று என்பது பற்றி, "நிலைத்த பெருவாழ்வே நிறைந்த மகிழ்வே" என இயம்புகின்றார். தான் கருதுவன வனைத்திற்கும் விளங்குகின்ற பரமாதல் பற்றி, "என் வரமே வயங்கு பரமே" எனச் சொல்லுகின்றார். என் வரமே என்றும் வயங்கு பரமே என்றும் பிரித்துக் கூறுதலும் ஒன்று. துணி மதி - தெளிந்த மதி யொளி; தெளிந்த ஞான வொளியுமாம். ஞானப் பேரறிவின்கண் அனுபவப் பொருளாய்த் துரியக் காட்சியில் புலனுவது தோன்ற, "துணி மதியில் இன்ப அனுபவமாய் இருந்த குரு துரியமே" என்று கூறுகின்றார். பிரமப் பொருள் என உபநிடதம் கூறுவதை, "பெரிய பொருள்" எனத் தமிழில் மொழி பெயர்த்து மொழிந்தார்.

இதனால், மதி யொளியில் ஓங்கும் ஒரு சித்தாய், பரமானந்தமாய், அருளொளியாய், நிலைத்த பெருவாழ்வாய், நிறைந்த மகிழ்வாய், இன்ப அனுபவமாய், துரியமாய், பெரிய பொருளாய் விளங்குகின்ற அருட்பெருஞ் சோதி வடிவானது நடராசத் திருவுருவம் என்று தெரிவித்தவாறும். (12)

3663. அண்டஒரு மையப்பகுதி இருமையாம் பகுதிமேல்
ஆங்காரி யப்பகுதியே
ஆதிபல பகுதிகள் அனந்தகோ டிகளின்நடு
அடியிலொடு முடியும்அவையில்
கண்டபல வண்ணமுத லானஅக நிலையும்
கணித்தபுற நிலையும்மேன்மேல்
கண்டதிக ரிக்கின்ற கூட்டமும் விளங்கக்

கலந்துநிறை கின்றஒளியே
கொண்டபல கோலமே குணமே குணங்கொண்ட
குறியே குறிக்கஒண் ணாக்
குருதுரிய மேசுத்த சிவதுரிய மேஎலாம்
கொண்டதனி ஞானவெளியே
தொண்டர்இத யத்திலே கண்டென இனிக்கின்ற
சுகயோக அனுபோகமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
சோதிநட ராசபதியே.

உரை : அண்டப் பகுதி யென்றும், பகிரண்டப் பகுதி யென்றும் இரு வகையாகப் பேசப்படும் பகுதிகளுக்கு, மேல் பூதாதி யாங்காரப் பகுதி முதலியவாகப் பேசப்படும் எண்ணிறந்த அண்ட கோடிகளின் நடுவிலும், அடியிலும், முடியிலும், அவற்றிடையே காணப்பட்ட பல வண்ணம், வடிவம் முதலான அந்நிலையும், அவற்றிற்கு மேலாகக் கணிக்கப்பட்ட புறநிலையும், அவற்றிற்கு மேன்மேலும் காணப்பட்டு மிக்குற்று இருக்கின்ற கூட்டங்களும் இனிது விளங்கி அவற்றிடையே கலந்து குறைவற நிறைந்திருக்கின்ற ஒளிப் பொருளே; கால இடங்கள் தோறும் வேறு வேருகக் கொண்ட கோலமே; அக்கோலத்திற் கேற்ற குணமே; குணத்திற் கொப்ப அமைந்த குறியே; குறிக்க வொண்ணுத பெரிய துரியப் பொருளே; சுத்த சிவ துரியமே; எல்லாப் பொருட்களையும் தன்கண் கொண்ட ஒப்பற்ற ஞானப் பரவெளியே; தொண்டர்களின் இதயத்திலே கற்கண்டு போலினிக்கின்ற சுகயோக அனுபவப் பொருளே; சுத்த சிவ சன்மார்க்கச் செல்வமே; அருட்பெருஞ் சோதியாகிய நடராச பதியே வணக்கம். எ.று.

கீழ் மேலாக நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்த அண்டப் பகுதிகளை, அண்டம் பகிரண்டம் என இரண்டாகப் பகுத்துக் காண்பது பற்றி, "அண்ட ஒருமைப் பகுதி இருமையாம் பகுதி" என வுரைக்கின்றார். இவற்றிற் கெல்லாம் முதற் காரணம் பூதாதியாங்காரமாகலின், "ஆங்காரியப் பகுதியே" என அறிவிக்கின்றார். இப்பூதாதி யாங்காரத்தின் நுண்ணிய பகுதி தைசதாங்காரம் என அறிக. இப் பகுதிகள் எண்ணிறந்தனவாகலின், "ஆங்காரியப் பகுதியே ஆதி பல பகுதிகள் அனந்த கோடிகள்" என வுரைக்கின்றார். இவற்றின் தொகை வகைகளையும் விரிவுகளையும் சிவதருமோத்திரம், கந்த புராண அண்ட கோச அடுக்குப் படலம் முதலியவற்றில் பரக்கக் காணலாம். இவ்வண்டங்களின் அகநிலையும் பிறநிலையும் பல்வேறு வண்ணம், வடிவு, பண்பு முதலிய இயல்புகளைக் கொண்டிருத்தல் பற்றி, "நடு அடியினொடு முடியும் அவையில் கண்ட பல வண்ண முதலான அகநிலையும் கணித்த புறநிலையும்" எனவும், இவ் வியல்புகள் அண்டங்கள் தோறும் பெருகி இருக்கின்றமை பற்றி, "மேன்மேல் கண்டு அதிகரிக்கின்ற கூட்டமும்" எனவும், இவ்வழி நுண்ணிய கற்பனைக்கண் கொண்டு காண்பார்க் கல்லது புலனுகாமை பற்றி, "விளங்கக் கலந்து நிறைகின்ற ஒளியே" எனவும் இயம்புகின்றார். இவ்வண்டப் பகுதிகளில் கலந்து நிற்கும் பரவொளி அண்டங்களில் இடந் தோறும் காலந் தோறும் வேறு வேறு கோலம் கொண்டு தோன்றுதல் புலப்பட, "கொண்ட பல கோலமே" என்றும், கோலங் கொள்ளும்

பொருட்குரிய குணங் குறிகளாகவும் குறிக்க வொண்ணுதாகவும் துரியக் காட்சியில் அறியக் கூடியனவாகவும் இருத்தல் பற்றி, ''குணமே குணங் கொண்ட குறியே குறிக்க வொண்ணாக் குருதுரியமே'' என்றும் கூறுகின்றார். இவை யெல்லாம் சேரக் காண்டற்கு அமைந்தமை பற்றித் துரியக் காட்சியை, "சுத்த சிவ துரியமே'' எனத் தெரிவிக்கின்றார். இக் காட்சி யனைத்தும் ஞானப் பரவெளியில் விளங்கக் கண்டமை புலப்பட, "எலாம் கொண்ட தனிவெளியே'' என விளம்புகின்றார். சிவஞானிகளான தொண்டர்களின் இதயத்தில் எழுந்தருளி, இன்பம் செய்தல் பற்றி அந்த இன்பானுபவத்தை, ''தொண்டர் இதயத்திலே கண்டென இனிக்கின்ற சுகயோக அனுபோகமே'' என இயம்புகின்றார்.

இதனால், அண்டக் கூட்டங்கள் இனிது விளங்க, அவற்றில் கலந்து நிறைகின்ற ஒளியும், சுத்த சிவ துரியமும், ஞான வெளியும், சுகயோக அனுபோகமும் ஆகியது அருட்பெருஞ் சோதியாகிய நடராசபதி என்பதாம். (13)

3664. கரையிலாக் கடலிலே கடல்உப்பி லேகடற்
கடையிலே கடல்இடையிலே
கடல்முதலி லேகடல் திரையிலே நுரையிலே
கடல்ஓசை அதன்நடுவிலே
வரையிலா வெள்ளப் பெருக்கத்தி லேவட்ட
வடிவிலே வண்ணம்அதிலே
மற்றதன் வளத்திலே உற்றபல சத்தியுள்
வயங்கிஅவை காக்கும் ஒளியே
புரையிலா ஒருதெய்வ மணியேஎன் உள்ளே
புகுந்தறி வளித்தபொருளே
பொய்யாத செல்வமே நையாத கல்வியே
புடம்வைத் திடாதபொன்னே
மரையிலா வாழ்வே மறைப்பிலா வைப்பே
மறுப்பிலா தருள்வள்ளலே
மணிமன்றில் நடுநின்ற ஒருதெய்வ மேஎலாம்
வல்லநட ராசபதியே.

உரை : கரையிலாத கடலிலும், கடல் உப்பிலும், கடலின் நடு இடை முதலிலும், கடல் திரையிலும், அதன் நுரையிலும், அதன் ஓசையிலும், அதன் நடுவிலும், அளவில்லாத அதன் நீர்ப் பெருக்கத்திலும், அதன் வட்ட வடிவத்திலும், அதன் நீல வண்ணத்திலும், அதன் வளத்திலும் அமைந்துள்ள சத்திகள் பலவற்றுள் விளங்கி அவற்றைக் காத்தருளும் ஒளிப் பொருளே; குற்றமில்லாத ஒப்பற்ற தெய்வ மணியே; என் உள்ளத்தில் புகுந்து, அறிவு தந்தருளும் பரம்பொருளே; பொய் படாத செல்வமே; மறந்து கெடாத கல்வியே; புடம் வைக்கப் படாத பொன் போன்றவனே; கெடுதலில்லாத வாழ்வே; படைக்கப்படாத சேமநிதியே; மறுத்தலின்றி யாவர்க்கும் வழங்கும் அருள் வள்ளலே; மணிகள் வைத்திழைத்த தில்லைச் சிற்றம்பலத்தின் நடுநின்று திகழ்கின்ற ஒன்றாகிய தெய்வமே; எல்லாவற்றையும் செய்ய வல்ல நடராச மூர்த்தியே வணக்கம். எ.று.

கடலுக்குக் கரையில்லை என்பது பற்றிக் "கரையிலாக் கடலிலே" என்று சொல்லுகின்றார். கடலும் இடமாதல் பற்றி அதற்கு முதல், இடை, கடை, என்ற நிலைகளை மொழிகின்றார். கடலின் திரையும் நுரையும் முழக்கமும் இயல்பாதலின் திரை நுரை முதலியவற்றை எடுத்தோதுகின்றார். கடல் நீர்அளவிட முடியாததாகலின், "வரையிலா வெள்ளப் பெருக்கம்" என்று குறிக்கின்றார். கடலின் வடிவம் வட்டமாகவும் நீல நிறமுடையதாகவும் இருத்தலால், "வட்ட வடிவிலே வண்ணம் அதிலே" என வகுத்துரைக்கின்றார். முத்தும் மணியும் உண்டாதலும், மீன் முதலிய அளவற்ற உயிர்கள் நிறைந்திருப்பது பற்றிக் கடல் வளத்தை, முறையாக மொழிகின்றார். அவை ஒவ்வொன்றின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் சிவத்தின் பல்வேறு அருட் சத்திகள் நிற்றலாலும் அவற்றைச் சிவத்தின் பரவொளி தாங்கி நிற்றல் பற்றி, "உற்ற பல சத்தியுள் வயங்கி அவை காக்கும் ஒளியே" எனப் புகழ்கின்றார். மணிகட்குக் குற்றம் உண்டாதல் இயல்பாதலின், அது இல்லாத தூய தெய்வமணி எனச் சிவத்தைப் பாராட்டுதல் தோன்ற, "புரையிலா ஒரு தெய்வ மணியே" என்றும், உள்ளத்திற் குள்ளே உயிர்க் குயிரா யிருந்து மெய்யறிவளித்தலின், "உள்ளே புகுந்து அறிவளித்த பொருளே" என்றும் உரைக்கின்றார். ஒருகால் இருந்து ஒருகால் மறைந்தோடும் உலகியல் செல்வத்தின் மேம்படுத்தற்கு, "பொய்யாத செல்வமே" எனவும், மறதியால் கெடுதல் இல்லாத கல்வியறிவு என்றற்கு, "நையாத கல்வியே" எனவும் கூறுகின்றார். சிவனது திருமேனி மாற்றில்லாத பொன் போன்றதாகலின், "புடம் வைத்திடாத பொன்னே" எனப் போற்றுகின்றார். மறைதல் இல்லாத வாழ்வு என்றற்கு எதுகை நோக்கி, "மரையிலா வாழ்வே" என்று உரைக்கின்றார். வைப்புப் பொருள் பிறர் அறியாவாறு மறைக்கப்பட்டிருத்தலின் அதனின் வேறுபடுத்த, "மறைப்பிலா வைப்பே" என்கின்றார். வேண்டுவார் வேண்டுவதை நல்கும் பெரு வள்ளலாதலால், "மறுப்பிலாத அருள் வள்ளலே" எனச் சிறப்பிக்கின்றார். மணிமன்று என்றது தில்லைப் பொன்னம்பலத்துப் பொற்சபை.

இதனால், கடலின் பலவேறு கூறுகளில் நின்று, வயங்கும் சத்திகளைக் காத்தருளும் ஒளியும், தெய்வ மணியும், அறிவளித்த பொருளும், செல்வமும், கல்வியும், பொன்னும், வாழ்வும், வைப்பும், வள்ளலுமாகிய தெய்வம், எல்லாம் வல்ல நடராசப் பெருமான் என்பதாம். (14)

3665. உற்றியலும் அணுவாதி மலைஅந்த மானஉடல்
உற்றகரு வாகிமுதலாய்
உயிராய் உயிர்க்குள்உறும் உயிராகி உணர்வாகி
உணர்வுள்உணர் வாகிஉணர்வுள்
பற்றியலும் ஒளியாகி ஒளியின்ஒளி யாகிஅம்
பரமாய்ச் சிதம்பரமும்ஆய்ப்
பண்புறுசி தம்பரப் பொற்சபையும் ஆய்அதன்
பாங்கோங்கு சிற்சபையும்ஆய்த்
தெற்றியலும் அச்சபையின் நடுவில்நடம் இடுகின்ற
சிவமாய் விளங்குபொருளே

சித்தெலாம் செய்எனத் திருவாக் களித்தெனைத்
தேற்றிஅருள் செய்தகுருவே
மற்றியலும் ஆகிஎனை வாழ்வித்த மெய்ஞ்ஞான
வாழ்வேஎன் வாழ்வின்வரமே
மணிமன்றில் நடுநின்ற ஒருதெய்வ மேஎலாம்
வல்லநட ராசபதியே,

உரை : அணுவா யுற்றுத் தோன்றும் அணுப் பொருள் முதலாக மலை யீருக உள்ளவையும், உடலும், கருவாய்த் தோன்றி உயிராய், உயிர்க்குயிராய், உணர்வாய், உணர்வின் உருவாய், அவ்வுணர்வைப் பற்றி அமையும் ஒளியாய், அவ்வொளிக்கு ஒளியாய், ஆகாயமாய், சிதம்பரமாய், ஞானப் பண்புடைய சிதம்பரப் பொற் சபையுமாய், அதனிடத்து ஓங்கும் சிற்சபையுமாய், மேடையுற்றியலும் அச் சபை நடுவில் திருக் கூத்தாடுகின்ற சிவமாய் விளங்குகின்ற பரம்பொருளே; சித்துக்கள் எல்லாவற்றையும் செய்க வென எனக்குத் திருவாக்குத் தந்து என்னைத் தேற்றித் தெளிவித்து அருள் புரிந்த, ஞானக் குருவே; மற்றும் நல்லியல்புகள் எல்லாம் எனக்கு எய்துவித்து வாழ்வித்த மெய்ஞ்ஞான வாழ்வே; வாழ்விற் பெறலாகும் வரப் பொருளே; சபையின் நடுநின்று விளங்குகின்ற தெய்வமே; எல்லாம் வல்ல நடராசப் பெருமானே வணக்கம். எ.று.

உயிரில் பொருள்களில் அணுப் பொருள் முதல் மலை யீருகப் பலவகையுண்மைப் பற்றி, "உற்றியலும் அணுவாதி மலை யந்தம்" என வுரைக்கின்றார். உடல், தாய் வயிற்றிற் கருவாய்த் தோன்றிப் பின்னர் உயிருடைய முதற் பொருளாய்த் தோன்றுதலின், "உடல் உற்ற கருவாகி" என வுரைக்கின்றார். உடற்குள் நிலவும் உயிர்த் தன்மையை, "உயிர்" என்றும், "உயிர்க் குயிர்" என்றும், அவ்வுயி ருணர்வு" என்றும், "உணர்விற்கு உணர்வு" என்றும், "அவ்வுணர்வில் ஒளி" என்றும், "அவ்வொளிக்குள் ஒளி" என்றும் தூல சூக்கும நிலையில் வைத்து நுணுகிக் கண்டுரைப்பது வடலூர் வள்ளலின் இயற்கை இயல்பாதலின், "உடலுற்ற கருவாகி முதலாய் உயிராய் உயிர்க்குள் உறும் உயிராகி உணர் வாகி யுணர்வுள் உணர்வாகி உணர்வுள் பற்றியலும் ஒளியாகி, ஒளியின் ஒளியாகி" என உரைக்கின்றார். அம்பரம் - ஆகாயம். சிதம்பரம் - சித்து அம்பரம் எனப் பிரிந்து ஞான ஆகாயம் எனப் பொருள்படும். ஞானாகாயத்தின் உருவாய்க் காட்டுவது தில்லைச் சிதம்பரமாதலின் அதனைப் "பண்புறு சிதம்பரம்" என்றும், அங்குள்ள பொற் சபையைச் "சிதம்பரப் பொற் சபை" என்றும், அதன் பக்கல் விளங்குகின்ற ஞான சபையைச் "சிற் சபை" என்றும் தெரிவிக்கின்றார். தெற்றி - மேடை. தெற்று எனவும் வழங்கும். சபை நடுவில் அமைந்த மேடை மேல் நின்று திருக் கூத்தாடுதல் தோன்ற, "தெற்றியலும் அச் சபையின் நடுவில் நடம் இடுகின்ற சிவமாய் விளங்கு பொருளே" எனப் புகழ்கின்றார். ஞானக் குருவாய்ப் போந்து, "எல்லாச் சித்துக்களையும் செய்ய" என உருவாய் எழுந்தருளிக் கூத்தப் பிரான் அருள் செய்த வரலாற்றை, "சித்தெலாம் செய் எனத் திருவாக்களித்து எனைத் தேற்றி அருள் செய்த குருவே" எனக் கூறுகின்றார். உலகியல் வாழ்வில் உருது மெய்ஞ்ஞான வாழ்வில் தம்மை வாழ்வித்த அருட் செயலை வியந்து, "எனை வாழ்வித்த

மெய்ஞ்ஞான வாழ்வே" என்றும், "வாழ்வின் வரமே" என்றும் உரைக்கின்றார். மணி மன்றின் நடுவில் நின்று ஆடுவது சுகத்தின் அருள் நிலையாதலால், "மணி மன்றின் நடு நின்ற குரு தெய்வமே" எனப் பாராட்டுகின்றார்.

இதனால், ஒளியின் ஒளியாய், சிதம்பரமாய், பொற் சபையும் சிற்சபையுமாய், நடமிடுகின்ற சிவமாய், விளங்கும் பொருளும், திருவாக்களித்து அருள் செய்த குருவும், மெய்ஞ்ஞான வாழ்வும், வாழ்வின் வரமும், தெய்வமுமாகியது நடராச மூர்த்தம் என்பது தெரிவித்தவாறும். (15)

3666. எவ்வுலகும் எவ்வுயிரும் எப்பொருளும் உடையதாய்
எல்லாஞ்செய் வல்லதாகி
இயற்கையே உண்மையாய் இயற்கையே அறிவாய்
இயற்கையே இன்பமாகி
அவ்வையின் அனுதியே பாசமில தாய்ச்சுத்த
அருளாகி அருள்வெளியிலே
அருள்நெறி விளங்கவே அருள்நடம் செய்தருள்
அருட்பெருஞ் சோதிஆகிக்
கவ்வைஅறு தனிமுதற் கடவுளாய் ஓங்குமெய்க்
காட்சியே கருணைநிறைவே
கண்ணேஎன் அன்பிற் கலந்தெனை வளர்க்கின்ற
கதியே கனிந்தகனியே
வெவ்வினை தவிர்த்தொரு விளக்கேற்றி என்னுளே
வீற்றிருந் தருளும்அரசே
மெய்ஞ்ஞான நிலைநின்ற விஞ்ஞான கலர்உளே
மேவுநட ராசபதியே.

உரை : எல்லா வுலகங்களையும் உயிர்களையும் பொருட்களையும் உடையதாகவும், எல்லாம் செயவல்லதாகவும், இயல்பாகவே உண்மைத் தன்மை யுடையதாகவும், இயற்கை யறிவாயும், இயற்கை இன்பமாகியும், அவ்வவ்விடத்தும் அனுதியே பாசமில்லாததாகவும், சுத்த அருளாகியும், அருள் வெளியில் அருள் நெறி விளங்க அருள் நடம் செய்து விளங்கும் அருட்பெருஞ் சோதியாகவும், கலக்கமற்ற தனி முதற் கடவுளாகவும், ஓங்குகின்ற மெய்ம்மைக் காட்சியே, கருணையின் நிறைவே, என் கண்ணே; என் அன்பில் கலந்து என்னை வளர்க்கின்ற கதிப் பொருளே; நன்கு கனிந்திருக்கின்ற கனி போல்பவனே; என்னைச் சூழ்ந்துள்ள வெவ்விய வினைகளைப் போக்கி ஒரு ஞான விளக்கேற்றி என்னுள்ளே வீற்றிருந்தருளும் அருளரசே; மெய்ஞ்ஞான நிலைக்கண் நின்ற விஞ்ஞான உள்ளத்திலே எழுந்தருளுகின்ற நடராச முதல்வனே வணக்கம். எ. று.

எல்லா வுலகுகளையும் அவ்வுலகில் உள்ள பொருட்களையும் தனக்கு உடைமையாக யுடையதாகவும், எல்லா உயிர்களையும் தனக்கு அடிமையாக யுடையதாகவும் இருத்தல் பற்றிச் சிவ பரம்பொருளை, "எவ்வுலகும்

எவ்வுயிரும் எப்பொருளும் உடையதாய்" என மொழிகின்றார். வரம்பி லாற்றல் உடையது பரம்பொருள் என்பது பற்றி, "எல்லாம் செய்வல்ல தாகி" என இசைக்கின்றார். உண்மையாகிய சத்தாம் தன்மையும், அறிவாம் தன்மையும், இன்பமாம் தன்மையுமாகிய இயற்கைச் சச்சி தானந்தம் என்றற்கு, "இயற்கையே உண்மையாய் இயற்கையே அறிவாய், இயற்கையே இன்பமாகி" என்று கூறுகின்றார். ஆன்மாக்களும் சுத்தாவத்தையில் சச்சிதானந்தமாவனவாயினும் அது செயற்கை நிலையாதல் பற்றி, "இயற்கையே உண்மையாய் இயற்கையே அறிவாய் இயற்கையே இன்பமாகி" என வலியுறுத்துகின்றார். அவ்வையின் - அவ் விடத்து என்னும் பொருளது. உயிர்கள் அநாதியே பாச முடையவையா தலால் அவற்றின் வேறுபடுத்தற்கு, "அநாதியே பாசமிலதாய்" என அறிவிக்கின்றார். அருளே யுருவாதலின் சிவத்தைச் "சுத்த அருளாகி" எனச் சுட்டுகின்றார். சிவசத்தியின் பெருவெளியைக் குறித்தற்கு "அருள் வெளி" எனக் குறிக்கின்றார். அதுவே ஞானகாயம் எனக் கூறப்படும். உயிர்கட்கு, அருள் நெறி விளங்குதல் பொருட்டு ஞான அருள் வெளியில் அருள் நடம் செய்கின்றான் அருட்பெருஞ்சோதி ஆண்டவன் என்ற உண்மையை யுணர்த்தற்கு, "அருள் வெளியிலே அருள் நெறி விளங்கவே அருள் நடம் செய்தருள் அருட்பெருஞ் சோதியாகி" எனவும், அருட் பேரொளிப் பொருளாயினும் அதுவே தனிமுதற் கடவுள் என்றற்கு, "கவ்வையறு தனிமுதற் கடவுளாய் ஓங்கும் மெய்க்காட்சியே" எனவும் உரைக்கின்றார். கவ்வை - கலகம். இதுவாகும் அதுவல்ல எனப் பிணக் கிற்கு இடமின்றி விளங்கும் பெரும்பொருள் என்றற்கு, "கவ்வையறு தனிமுதற் கடவுள்" எனச் சிறப்பிக்கின்றார். உயிர்கள் செய்யும் அன்பினில் அன்பாய்க் கலந்து உயிர்கள் உய்தி பெற்றுச் சிவமாம் தன்மை பெறுதற்கு உதவி யருளும் பெருந்தன்மை விளங்க, "என் அன்பிற் கலந்து எனை வளர்க்கின்ற கதியே" என்றும், கோது என்று விலக்குதற் குரிய தன்மை யாதுமின்றி முற்றக் கனிந்த முழுக் கனி என மொழிதற்கு, "கனிந்த கனியே" எனக் கட்டுரைக்கின்றார். செய்வினைகளால் உயிரறிவு மாசுபடுதலின் அதனைப் போக்கி ஞான வொளி விளங்கச் செய்து அதனுள் எழுந்தருளும் சிவத்தின் இயல்பு தோன்ற, "வெவ்வினை தவிர்த்தொரு விளக்கேற்றி என்னுளே வீற்றிருந்தருளும் அரசே" என விளம்புகின்றார். வேறு சேட்டைகட்கு இடம் தருகின்ற மாய கன்மங்களின்றி விளங்கும் விஞ்ஞான கலரை, "மெய்ஞ்ஞான நிலை நின்ற விஞ்ஞான கலர்" எனப் புகழ்கின்றார்.

இதனால், எல்லாம் உடையதாய், எல்லாம் வல்லதாய், இயற்கைச் சச்சிதானந்தமாய், அநாதியே பாச மில்லதாய், சுத்த அருளாய், அருள் நெறி விளங்க அருள் நடம் செய்தருள் அருட் பெருஞ் சோதியாய், தனி முதற் கடவுளாய், விளங்குகின்ற மெய்ஞ்ஞானக் காட்சிப் பொருளும், கருணையின் நிறைவும், உயிர் வளர்க்கும் கதியும், கனிந்த கனியும், உள்ளே வீற்றிருந்தருளும் அரசும், விஞ்ஞான கலர் உள்ளத்தில் எழுந் தருளுபவனு மாகியவன் நடராச முதல்வன் எனத் தெரிவித்தவாறும்.

(16)

3667. நாதாந்த போதாந்த யோகாந்த வேதாந்த
நண்ணுறு கலாந்தம்உடனே
நவில்கின்ற சித்தாந்தம் என்னும்ஆ றந்தத்தின்
ஞானமெய்க் கொடிநாட்டியே
மூதாண்ட கோடிக ளொடுஞ்சரா சரம்எலாம்
முன்னிப் படைத்தல்முதலாம்
முத்தொழிலும் இருதொழிலும் முன்னின் றியற்றிஐம்
மூர்த்திகளும் ஏவல்கேட்ப
வாதாந்தம் உற்றபல சத்திக ளொடுஞ்சத்தர்
வாய்ந்துபணி செய்யஇன்ப
மாராச்சி யத்திலே திருவருட் செங்கோல்
வளத்தொடு செலுத்தும்அரசே
சூதாண்ட நெஞ்சினில் தோயாத நேயமே
துரியநடு நின்றசிவமே
சுத்தசிவ சன்மார்க்க நிதியே அருட்பெருஞ்
சோதிநட ராசபதியே.

உரை : நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், வேதாந்தம், கலாந்தம் எனப்படும் அந்தங்களின் உச்சியில் திகழும் மெய்ஞ்ஞானமாகிய சிவஞானக்கொடியை நிறுத்தி பழைமையான அண்டகோடிகள் அத்தனையும் அவ்வவற்றுள் காணப்படும் சராசரங்கள் எல்லாவற்றையும் சங்கற்பத்தால் படைத்தல் முதலாகிய முத்தொழிலையும், அருளல், மறைத்தல் என்ற இரு தொழிலையும் முன்னின்று செய்தருளும் மூர்த்திகள் அனைவரும் தனது ஏவலைக் கேட்ப, வாதத்திற் கிடமின்றிப் பலவாயுற்ற சத்திகளும், சத்திமான்களும் இடம் பெற்றுப் பணி புரிந்து நிற்ப, பேரின்பமாகிய பெரிய இராச்சியத்திலே திருவருட் செங்கோல் வளமையுடன் செலுத்துகின்ற அருளரசே; சூது பொருந்திய நெஞ்சின்கண் கலவாத நேயப் பொருளே; துரியக் காட்சியின் நடுநின்ற சிவ பரம்பொருளே; சுத்த சிவ சன்மார்க்கச் செல்வமே; அருட் பெருஞ் சோதியாகிய நடராச முதல்வனே வணக்கம். எ. று.

நாதாந்தம் என்பது நில முதல் நாதம் ஈறுக ஆராயப்படும் தத்துவ நெறி. போதாந்தமாவது வேதம், சாத்திரம், மிருதி, புராணம் ஆகிய நூலாராய்ச்சி முடிவு. யோகாந்தம் யோக சாத்திரக் காட்சியின் முடிவு. வேதாந்தம் என்பது வேதம், உபநிடதம் ஆகிய நூலாராய்ச்சி முடிவு. கலாந்தமாவது நிவிர்த்தி பிரதிட்டை முதலாக ஐந்தாகக் கூறப்படும் கலையாராய்ச்சியின் முடிவு. சித்தாந்தம் என்பது சிவாகமங்களின் ஆராய்ச்சி முடிவு. அண்டங்களின் தோற்றக் காலம் சொல்ல வொண்ணுதலாகலின் எண்ணிறந்தனவாகிய அண்டங்களை, "மூதாண்டம்" என மொழிகின்றார். இவ்வண்டங்களில் வாழும் சரப்பொருளும் அசரப் பொருளுமாகிய எல்லாவற்றையும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளுதல் ஆகிய ஐந்தொழிலையும் கருவி, கரண, காரணங்களின்றிச் சங்கற்ப மாத்திரத்தால் செய்ய வல்ல மூர்த்திகள் வேறு வேறு நின்று பரசிவத்தின் ஆணை நோக்கி நிற்பதால், "ஐம்மூர்த்திகளும் ஏவல்

கேட்ப" என அறிவிக்கின்றார். முத்தொழிலாவன படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்றுமாம். மறைத்தல், அருளல் என்ற இரண்டும் இருதொழில் எனப்படுகின்றன. முத்தொழில் உயிரில் பொருள்களுக்காகவும், இருதொழில் உயிருடைப் பொருள்களுக்காகவும் நிகழ்வனவாதலால், இரண்டையும் பிரித்தோதினர். இவற்றைத் தனித்தனியாக முறையே செய்பவர் சிவனுல் அதிட்டிக்கப் பெற்ற ஐம்பெரும் மூர்த்திகள் எனப் படுவது பற்றி, "ஐம்மூர்த்திகளும் ஏவல் கேட்ப" என்று பகர்கின்றார். பெருமை சிறுமை பற்றி ஆரணி, சனனி, ரோதயத்ரி முதலாக மிகப் பலவாகப் பேசப்படும் சத்திகள் உண்மையின், "வாதாந்த முற்ற பல சத்திகள்" என்றும், அச்சத்திகள் ஒவ்வொன்றையும் உடைய சத்திமான்கள் வேறு வேறு இருத்தலால் அவர்கள் பலரும் அடங்க, "பல சத்திகளொடும் சத்தர் வாழ்ந்து பணி செய்ய" என்றும் கூறுகின்றார். இங்ஙனம் பணி செய்வோர் ஐம்பெரும் மூர்த்திகளும் அளவிறந்த சத்தி சத்திமான்களும் நிறைந்திருந்து பணிபுரியச் சிவத்தின் திருவருட் செங்கோல் நடைபெறும் சிறப்புப் புலப்பட, "இன்பமா ராச்சியத்திலே திருவருட் செங்கோல் வளத்தொடு செலுத்தும் அரசே" என்று பாராட்டுகின்றார். அருளரசு புரியும் பரம்பொருள் அதற்கு மாறுய சூதும் வஞ்சனையும் பொய்யும் கலந்த உள்ளங்களில் கலந்து உறையாதாதலால், "சூதாண்ட நெஞ்சினில் தோயாத நேயமே" என்று சொல்லுகின்றார். சுழுத்திக்கு அப்பாற்பட்ட துரியத்தானத்தின் நடுவிடத்தே நின்று விளக்குதல் பற்றி, "துரிய நடுநின்ற சிவமே" என்று போற்றுகின்றார்.

இதனுல், நாதாந்தம் முதலிய அறுவகை அந்தங்களின் உச்சியில் ஞானக்கொடி நாட்டி, மூர்த்திகளும், சத்தி சத்தர்களும் பணி புரிய அருட் செங்கோல் செலுத்துகின்ற அருளரசனும், துரிய நடுநின்ற சிவ பரம்பொருளும், அருட் பெருஞ்சோதியுமாகியது நடராச முதற் பொருள் என்பதாம். (17)

3668. ஒருபிரமன் அண்டங்கள் அடிமுடிப் பெருமையே
உன்னமுடி யாஅவற்றின்
ஓராயி ரங்கோடி மால்அண்டம் அரன்அண்டம்
உற்றகோ டாகோடியே
திருகலறு பலகோடி ஈசன்அண் டம்சதா
சிவஅண்டம் எண்ணிறந்த
திகழ்கின்ற மற்றைப் பெருஞ்சத்தி சத்தர்தம்
சீரண்டம் என்புகலுவேன்
உருவுறும்இவ் வண்டங்கள் அத்தனையும் அருள்வெளியில்
உறுசிறு அணுக்களாக
ஊடசைய அவ்வெளியின் நடுநின்று நடனமிடும்
ஒருபெருங் கருணைஅரசே
மருவிஎனை ஆட்கொண்டு மகளுக்கி அழியா
வரந்தந்த மெய்த்தந்தையே
மணிமன்றின் நடுநின்ற ஒருதெய்வ மேஎலாம்
வல்லநட ராசபதியே.

உரை : ஒருவனுகிய பிரமன் படைத்த அண்டங்களில் அடிமுடிகளின் பெருமையை நினைத்தல் முடியாதது ஆகும்; அற்ருகத் திருமால் அண்டம் அவற்றினும் ஓராயிரம் கோடியாகும். அரனுடைய அண்டங்கள் கோடான கோடி யென வுள்ளன. அவற்றிற்கு மேல் ஐயமற பல கோடிக் கணக்கான அண்டங்கள் ஈசன் அண்டங்கள் என்பன; அவற்றிற்கு மேல் சதாசிவ அண்டங்கள் எண்ணிறந்தனவாகும். இங்ஙனமிருக்க விளங்குகின்ற பெரிய சக்தி சத்திமான்களின் சிறப்புடைய அண்டங்களை என்னென்று சொல்லுவேன்; உருவுடை இவ்வண்டங்கள் அத்தனையும் சிவனது அருள் வெளியில் சிறு சிறு அணுக்களாக வெளியூடே அமைந்து நிற்ப, அவற்றின் வெளியிடை நின்று ஒப்பற்ற பெரிய கருணை யரசாகிய நீ நடன மிடுகின்ருய்; ஆன்மாவாகிய என்னையும் கலந்து என்னை மகனுக ஆட்கொண்டு என்றும் பொன்ருத வரத்தை யருளிய உண்மைத் தந்தையே; மணி யிழைத்த சபையின்கண் நடுநின்று ஒளிருகின்ற ஒப்பற்ற தெய்வமே; எல்லாம் வல்ல நடராசப் பெருமானே வணக்கம். எ.று.

பிரமன் படைத்த அண்டங்கள் நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தமையாதலால் அவற்றின் அடிமுடிகளின் பெருமையை எண்ண முடியாது என்றற்கு, ''ஒரு பிரமன் அண்டங்கள் அடிமுடிப் பெருமையே உன்ன முடியா'' என வுரைக்கின்ருர். அவற்றிற்கு மேலுள்ள திருமாலண்டங்கள் ஆயிரம் கோடிக்கு மேற்படுதலால், ''அவற்றின் ஓராயிரம் கோடி மாலண்டம்'' எனவும், அவற்றிற்கு மேலுள்ள அரனுடைய ஆட்சி நிலவும் அண்டங்கள் 'கோடா கோடி' எனவும், அவற்றிற்கு மேல் அமைந்துள்ள ஈசன் அண்டங்களும் அவற்றிற்கு மேலுள்ள சதாசிவ அண்டங்களும் எண்ணிறந்தனவாதலால், ''திருகலறு பல கோடி ஈசன் அண்டம் சதாசிவ அண்டம் எண்ணிறந்த'' எனவும் இயம்புகின்ருர். இவ்வண்டங்களின் ஊடே கலந்து இயக்கும் பெரிய பெரிய மாயா சத்திகள் அவற்றையுடைய சத்திமான்கள் நிலவும் அண்டங்களின் பெருமையை அளவிட் டுரைக்கமுடியாது என்று சொல்லுவாராய், ''திகழ்கின்ற மற்றைப் பெருஞ் சத்திசத்தர்தம் சீரண்டம் என் புகலுவேன்'' என்று உரைக்கின்ருர். திருகல் - சந்தேகம். ஆறு கோடி மாயா சத்திகள் என்று பெரியோர்கள் கூறுதலால் அவற்றின் இயக்கம் பிரமாண்டம் முதல் சதாசிவாண்டம் ஈருக வுள்ள அண்டங்களின் ஊடே இயக்குவதால், ''பெருஞ் சத்தி சத்தர் தம் சீரண்டம் என் புகலுவேன்'' என வுரைக்கின்ருர். இவ்வண்டங்கள் அத்தனையும் சிவனது அருள் வெளியில் அணுவுக் கணுவாய்ச் சிறுத்துள்ளன என்பது தோன்ற, ''அருள் வெளியில் உறுசிறு அணுக்களாக ஊடசைய'' எனக் கூறுகின்ருர். அசைந்தாலன்றி நிலை பெறுதல் கூடாது என்றற்கு, ''அவ்வெளியின் நடுநின்று நடனமிடும் ஒரு பெருங் கருணை யரசே'' என அறிவிக்கின்ருர். தன்னை அரசனுகவும், ஆன்மாவைத் தனக்கு மகனுகவும் முறைமை கொண்டு ஆன்மா என்றும் பொன்ருத் தன்மை யுடையதாகச் செய்தமை விளங்க, ''மருவி யெனை ஆட்கொண்டு மகனுக்கி அழியா வரம் தந்த மெய்த் தந்தையே'' என விளம்புகின்ருர். தில்லையம்பலத்தில் நடுநின்று விளங்குகின்ற தெய்வம் என்பது நடராசப் பெருமானுதலால், ''மணிமன்றின் நடுநின்ற ஒரு தெய்வமே'' என உவந்துரைக்கின்ருர்.

இதனால், பிரமாண்டம் முதல் சத்தி சத்தர்கள் அண்டம் ஈருகக் கூறிய அண்டங்கள் அத்தனையும் தனது அருள் வெளியில் அணுவுக் கணுவாகப் பரந்து ஒடுங்க அருள் வெளியில் கூத்தாடுபவனும், ஆன்மாவை அழியாத் தன்மை யுடையதாக்கியவனும், மன்றில் நடம் புரிபவனுமாகியவன் நடராச மூர்த்தி என்பதாம். (18)

3669: வரவுசெல வற்றபரி பூரண காரசுப
வாழ்க்கைமுத லாஎனக்கு
வாய்த்தபொரு ளேஎன்கண் மணியேஎன் உள்ளே
வயங்கிஒளிர் கின்றஒளியே
இரவுபகல் அற்றஒரு தருணத்தில் உற்றபேர்
இன்பமே அன்பின்விளைவே
என்தந்தை யேஎனது குருவேஎன் நேயமே
என்னுசை யேஎன் அறிவே
கரவுநெறி செல்லாக் கருத்தினில் இனிக்கின்ற
கருணைஅமு தேகரும்பே
கனியே அருட்பெருங் கடலேஎ லாம்வல்ல
கடவுளே கலைகள்எல்லாம்
விரவிஉணர் வரியசிவ துரியஅனு பவமான
மெய்ம்மையே சன்மார்க்கமா
மெய்ஞ்ஞான நிலைநின்ற விஞ்ஞான கலர்உளே
மேவுநட ராசபதியே.

உரை : போக்கு வரவு இல்லாத பரிபூரண உருவுடைய சுக வாழ்க்கை முதற் பொருளாக எனக்கு அமைந்த வாழ்முதலே; என் கண்ணின் மணியே; என்னுள்ளத்திற் றங்கி ஒளிர்கின்ற யுணர்வாகிய ஒளிப் பொருளே; இரவு பகல் என்ற உணர்வில்லாத இன்ப அனுபவ நிலையில் சுரக்கின்ற பேரின்பமே; என் அன்பின் விளைவாகிய சிவமே; எனக்குத் தந்தையும் குருவுமானவனே; என்னுடைய நண்பனே; என் ஆசையை நிறைவுறுத்தும் ஆசை வடிவே; எனது அறிவுருவானவனே; வஞ்சம் பொருந்திய நெறிகளில் செல்லாத நன் மக்கள் கருத்தின்கண் இன்பம் செய்கின்ற கருணை யுருவான அமுதமே; கரும்பும் கனியும் போல்பவனே; அருளாகிய பெருங் கடலே; எல்லாம் வல்ல கடவுளே; கலைவகை அறிவுகள் எல்லாவற்றிலும் கலந்து உணர்ந்து கொள்ளுதற் கரிய சிவ துரிய அனுபவமான நித்தப் பொருளே; சன்மார்க்கமாகிய மெய்ஞ்ஞான நிலையில் நிற்கின்ற விஞ்ஞான கலர் உள்ளத்தில் எழுந் தருளும் நடராசப் பெருமானே வணக்கம். எ.று.

பரிபூரணகாரம் - குறைவற நிறைந்த உருவம். அதற்குப் போக்குவரவு இல்லாமையால், ''வரவு செலவற்ற பரிபூரணகாரம்'' என வுரைக் கின்றார். எல்லாம் குறைவற நிறைந்த வாழ்வாதலின், ''சுக வாழ்க்கை'' எனச் சொல்லுகின்றார். அத்தகைய சுக வாழ்க்கையைத் தர வல்லது பரம்பொருளாதலின், ''சுகவாழ்க்கை முதலாய் எனக்கு வாய்த்த பொருளே'' என இயம்புகின்றார். கண்ணின் மணி யொளி போல

உள்ளத்தின்கண் உணர்வு மயமாய் அறிவொளி நல்குவது பற்றி, "என் கண்மணியே என்னுள்ளே வயங்கி ஒளிர்கின்ற ஒளியே" என இயம்பு கின்றார். வயங்குதல் - விளங்குதல். இனிய பொருளை அனுபவிக்கு மிடத்து அந்த அனுபவம் இரவு பகல் என்ற காலக் கூறுகளைத் தனக்குள் விழுங்கிக் கொள்வதால் அதனை, "இரவு பகலற்ற ஒரு தருணம்" என்றும், அத் தருணத்தில் அனுபவமாவது இன்ப மல்லது பிறிதின்மை யின், "தருணத்தில் உற்ற பேரின்பமே" என்றும், அவ்வன்புடைப் பொருள்பால் செல்லுகின்ற அன்பு உண்மை யன்புச் சிவமாய் விளங்கு தலின், "அன்பின் விளைவே" என்றும் உரைக்கின்றார். கரவு நெறி - வஞ்சம் பொருந்திய வழிகள். வஞ்ச மில்லாத நெஞ்சமுடைய பெரு மக்கள் உள்ளத்தில் இனிய ஊற்றுப்பப் பெருகுவது பற்றி, "கரவு நெறி செல்லாக் கருத்தினில் இனிக்கின்ற கருணை அமுதே கரும்பே கனியே" எனப் புகழ்கின்றார். அனுபவிக்கப் படுகின்ற இன்பத்தையும் அதனைத் தந்தருளுகின்ற பரம் பொருளையும் நினைக்கும் போது அது பெரிய அருட் கடலாய்த் தோன்றுதலால், "அருட் பெருங் கடலே" என்றும், அருளா லாகாதது ஒன்று மில்லையாதலால், "எல்லாம் வல்ல கடவுளே" என்றும் உரைக்கின்றார். கலைகள் எண்ணிறந்தனவாதலால் அவை யெல்லாம் கற்றும் உணர்தற் கரியது சிவ துரியானுபவமாதலால், "கலைகள் எல்லாம் விரவி உணர்வரிய சிவதுரிய அனுபவமான மெய்ம்மையே" எனக் கூறுகின்றார். சிவ துரியானுபவம் கற்பனை யன்று நித்தப் பொருள் என்றற்கு, "துரிய அனுபவமான மெய்ம்மையே" என்று சொல்லுகின்றார். மாயை கன்மங்களின் தொடக்கின்றி ஞான நெறியிலேயே நிற்பவராத லின் விஞ்ஞான கலரை, "சன்மார்க்கமாம் மெய்ஞ்ஞான நிலைநின்ற விஞ்ஞான கலர்" என்று விளம்புகின்றார்.

இதனால், பூரணகார சுகத்திற்குரிய வாழ்முதலாக வாய்த்த பொருளும், கண்மணியும், உள்ளே ஒளிருகின்ற ஒளியும், பேரின்பமும், அன்பின் விளைவும், தந்தை குரு நண்பனுகவும், ஆசையும் அறிவுமாய், வஞ்ச மில்லாத நெஞ்சில் இனிக்கின்ற கருணை அமுதாய், கரும்பாய், கனியாய், அருட் பெருங் கடலாய், கடவுளாய், துரியானுபவமான மெய்ம்மையாய்ச் சன்மார்க்க நெறி நின்ற விஞ்ஞான கலர் உள்ளத்தில் மேவுவது நடராச மூர்த்தம் என்பதாம். (19)

3670. பாராதி பூதமொடு பொறிபுலன் கரணமும்
பகுதியும் காலம்முதலாப்
பகர்கின்ற கருவியும் அவைக்குமேல் உறுசுத்த
பரமாதி நாதம்வரையும்
சீராய பரவிந்து பரநாத முந்தனது
திகழங்கம் என்றுரைப்பத்
திருவருட் பெருவெளியில் ஆனந்த நடனம்இடு
தெய்வமே என்றும் அழியா
ஊராதி தந்தெனை வளர்க்கின்ற அன்னையே
உயர்தந்தை யேஎன்உள்ளே
உற்றதுணை யேஎன்றன் உறவேஎன் அன்பே
உவப்பேஎன் உடையஉயிரே

ஆராலும் அறியாத உயர்நிலையில் என்னைவைத்த
அரசே அருட்சோதியே
அகரநிலை முழுவதுமாய் அப்பாலும் ஆகிநிறை
அமுதநட ராசபதியே.

உரை : நிலம் நீர் முதலாகிய ஐம்பெரும் பூதங்களும், மெய் வாய் முதலிய பொறிகளும், சுவை ஒளி முதலிய புலன்களும், மனம் முதலிய கரணங்களும் ஆகிய ஆன்ம தத்துவப் பகுதியும், காலம் கலை முதலாகச் சொல்லப்படுகின்ற வித்தியா தத்துவப் பகுதிகளும், அவற்றிற்கு மேலுள்ள சுத்த வித்தை, ஈசுரம் முதல் நாதம் வரையுள்ள சுத்த தத்துவப் பகுதியும், சிறப்புடைய பரவிந்து, பரநாதம் முதலிய மேல் தத்துவப் பகுதிகளுமாகிய இவை யெல்லாம் தனக்கு உடலாம் என்று உரைக்குமாறு திருவருட் பெரு வெளியில் இன்ப நடனம் புரிகின்ற தெய்வப் பெருமானே; எக்காலத்தும் அழியாத சிவ லோகத்தில் இடம் தந்து என்னை வளர்த் தருளுகின்ற தாயும் உயர்ந்த தந்தையுமாய் உள்ளவனே; என் உள்ளத் துள்ளே துணையா யிருப்பவனே; எனக்கு உறவும் அன்பும் உவப்புமாய் என்னை யுடைய உயிர்க்குயிராயவனே; மக்கள் எவராலும் அறிய மாட்டாத உயர்ந்த நிலையில் என்னை வைத்தருளிய அருளரசே; அருட் பெருஞ் சோதியே; அகர உகர மகர நிலைகள் முழுதுமாய், அந்தப் பிரணவத்திற்கு அப்பாலுமாய் நிறைந்து அமுத மயமாய் விளங்குகின்ற நடராசப் பெருமானே வணக்கம். எ று.

நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் ஆகிய ஐந்தையும் "பாராதி பூதம்" என்கின்றார். மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற பொறியும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற புலன்கள் ஐந்தும் சேரக் கூட்டிப் "பொறி புலன்" எனப் புகல்கின்றார். மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்ற நான்கும் "கரணம்" எனவும், இவற்றிற்கு முதலாகிய மூலப் பகுதியும் விளங்கப் "பகுதியும்" எனப் பகர்கின்றார். காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்ற ஏழும் ஆன்மாவுக்குச் சுகங்களாய் உட் கருவிகளாய் நிலவுவது பற்றி, "காலம் முதலாப் பகர்கின்ற கருவி" எனக் கூறுகின்றார். இதுவரை கீழுள்ள ஆன்ம தத்துவப் பகுதியும் அதற்கு மேலுள்ள சுத்தா சுத்தமாகிய தத்துவத் தொகுதிகளைக் கூறினராதலால், அவற்றிற்கு மேலுள்ள சுத்த தத்துவத் தொகுதியை, "அவைக்கு மேலுறு சுத்த பரமாதி நாதம் வரையும்" என்று சொல்லுகின்றார் சுத்த பரமாதி நாதம், சுத்த தத்துவத்தின் மேலதாகிய சிவ தத்துவம் என்னும் நாத தத்துவத்தைக் காட்டற்கு, "மேலுறு சுத்த பரமாதி நாதம் வரையும்" என விரித்துரைக்கின்றார். சிவ தத்துவத்திற்கு மேலுள்ள தத்துவாதீத பரவெளியில் விளங்குகின்ற விந்து தத்துவம், நாத தத்துவமாகிய இரண்டையும் "சீராய பரவிந்து பரநாதம்" என்றும், இத் தத்துவங்கள் முப்பத்தாறையும் தனக்கு உடையவன் பரசிவம் எனச் சிவாகமங்கள் உரைத்தலால், "திகழுங்கம் என்றுரைப்ப" எனக் கூறுகின்றார். இத் தத்துவங்களை அங்கமாகக் கொண்ட முதற் பரம் பொருள் இருந்து நின்றருளுகின்ற ஞான வெளியை, "திருவருட் பெரு வெளி" என்றும், அங்கே அப் பரம்பொருள் நிகழ்த்தும் நடனத்தை, "ஆனந்த நடனம்" என்றும் தெரிவித்து, "திருவருட் பெரு வெளியில் ஆனந்த நடனமிடு தெய்வமே" என்று

பாராட்டுகின்றார். சுத்த ஆன்மாக்கள் சிவ போகம் நுகருமிடம் அந்தமில் இன்பப் பெருநிலமாதலின் அதனை "அழியா ஊர்" என்று குறித்து, அதனைத் தந்தருளிய அருட் சத்தியோடு கூடிய சிவத்தை, "அழியா ஊராகி தந்து எனை வளர்க்கின்ற அன்னையே உயர் தந்தையே" என்று போற்றுகின்றார். தான் பெற்ற சிவஞானத்தால் எய்திய சிவபோக நிலையை, "ஆராலும் அறியாத உயர்நிலையில் எனை வைத்த அரசே அருட் சோதியே" என்று வடலூர் வள்ளல் புகழ்கின்றார். அகர, உகர, மகர மாகிய மூன்றும் கூடிய பிரணவ நிலையை, "அகரநிலை முழுதுமாய்" என அறிவித்து, அப்பிரணவத்தின் உட்பொருளாவதே யன்றி அதற்கு அப்பாலும் விளங்குவது பரம்பொருள் என்றற்கு, "அப்பாலும் ஆகி நிறை அமுத நடராச பதியே" என்று பராவுகின்றார்.

இதனால், தத்துவத் தொகுதி முற்றும் தனக்கு அங்கமாகக் கொண்டு அருள் வெளியில் ஆனந்த நடனம் புரிகின்ற தெய்வமாவதும், ஆன்மாக் களைச் சிவபோக வாழ்வில் வைத்து வளர்க்கின்ற தாய் தந்தையாவதும், துணையும் உறவும் அன்பும் உவப்பும் உயிரும் ஆவதும், அருட் சோதியா வதும், பிரணவத்திற்கு அகமும் புறமுமாய் நிறைவதும் நடராச பதியாகிய முதற் பொருள் என்று தெரிவித்தவாறும். (20)

3671. உரைவிசுவம் உண்டவெளி உபசாந்த வெளிமேலை
உறுமவுன வெளிவெளியின்மேல்
ஓங்குமா மவுனவெளி யாதியுறும் அனுபவம்
ஒருங்கநிறை உண்மைவெளியே
திரையுறு பெருங்கருணை வாரியே எல்லாஞ்செய்
சித்தே எனக்குவாய்த்த
செல்வமே ஒன்றுன தெய்வமே உய்வகை
தெரித்தெனை வளர்த்தசிவமே
பரைநடு விளங்கு ஒரு சோதியே எல்லாம்
படைத்திடுக என்றெனக்கே
பண்புற உரைத்தருட் பேரமுத ளித்தமெய்ப்
பரமமே பரமஞான
வரைநடு விளங்குசிற் சபைநடுவில் ஆனந்த
வண்ணநடம் இடுவள்ளலே
மாறுத சன்மார்க்க நிலைநீதி யெலாம்
வல்லநட ராசபதியே.

உரை : சொல்லப்படுகின்ற விசுவத்தில் அடங்கிய விசுவ வெளி, உபசாந்த வெளி, அதற்கு மேலுள்ள மௌன வெளி ஆகிய மூன்றில் மேலோங்குகின்ற பெரிய மௌன வெளி முதலாகப் பெறப்படுகின்ற அனுபவம் ஒங்குமாறு நிறைகின்ற உண்மை வெளியாக உள்ள பரசிவமே; அலையில்லாத பெரிய கருணைக் கடலே; எல்லாம் செய்ய வல்ல சித்துப் பொருளே; எனக்கென வாய்த்த அருட் செல்வமே; ஒன்றுகிய தெய்வமே; உய்யும் நெறியை எனக்குத் தெரிவித்து என்னை வளர்த்தருளிய சிவபெரு மானே; பராசத்தியின் நடுவே விளங்குகின்ற ஒளிப் பொருளே; எல்லா

வற்றையும் படைத்திடுக என்று எனக்குப் பண்பமைய உரைத்து அருளாகிய பேரமுதத்தை அளித்த மெய்ம்மையான பரம்பொருளே; பரம சிவஞானமாகிய மலையின் நடுவே விளங்குகின்ற ஞான சபையின்கண் ஆனந்த அழகு நடனம் புரிகின்ற வள்ளற் பெருமானே; நீங்காத சன்மார்க்க நிலைக்குரிய நீதி வடிவே; எல்லாம் வல்ல நடராச முதல்வனே வணக்கம். எ. று.

விசுவ வெளி, உபசாந்த வெளி, மௌன வெளி யென ஞான நூல்கள் உரைத்தலால், "உரை விசுவம் உண்ட வெளி" என்று உரைக்கின்றார். எல்லாவற்றில் மேலானது மௌன ஞானப் பெருவெளி யென்று பெரியோர்கள் கூறுவதை இங்கே "மா மவுன வெளி" என்று குறிக்கின்றார். இவ் வெளிகளில் உலகியல் ஞான அனுபவங்கள் ஒருமுகப்பட்டு நிறைதலின், "அனுபவம் ஒருங்க நிறை யுண்மை வெளி" என்று பேசுகின்றார். உலகியற் கடலைக் காற்று மோதி யலைப்பது போல, கருணைக் கடலை அலைப்பது ஒன்றுமில்லாமை பற்றி, "திரையறு பெருங் கருணை வாரியே" என்றும், செயல் வல்லது சித்துப் பொருளாதலால் எல்லாம் செய்யும் சிவ சித்தினை, "எல்லாம் செய் சித்து" என்றும் புகழ்கின்றார். தான் தனி நின்று எண்ணியும் மொழிந்தும் வழிபட்டும் வருகின்ற அருட் பெருஞ் செல்வமாதலின், "எனக்கு வாய்த்த செல்வமே" என்று இயம்புகின்றார். உலகிற்கு ஒரு பெருந்தெய்வமாக உள்ள பரம்பொருள் ஒன்றேயாதலின், "ஒன்ருன தெய்வமே" எனவும், உலகில் சிவ சிந்தனையில் ஆழ்ந்து வாழ்வாங்கு வாழ்தற்குத் துணை புரிவது பற்றி, "உய்வகை தெரித்தெனை வளர்த்த சிவமே" எனவும் உரைக்கின்றார். பரசிவத்தைச் சூழ்ந்திருக்கும் அருட் சத்தியைப் "பரை" என்பவாதலின், "பரை நடு விளங்கும் ஒரு சோதியே" எனப் போற்றுகின்றார். "உனக்கு வேண்டுவதனையும் நீயே செய்து கொள்க" என அறிவித்து அதற்கேற்ற ஆற்றலும் அறிவும் வழங்கிய பெருநலத்தை, "பண்புற உரைத்து அருட் பேரமுது அளித்த மெய்ப்பரமமே" என்றும், மேலான சிவஞானமாகிய மலையின் நடுவில் விளங்குவது சிற்சபை என்றும், அதன் நடுவில் சிவம் திருக்கூத்தாடுகின்றது என்றும் குறித்தருளுவார், "பரம ஞான வரை நடு விளங்கு சிற்சபை நடுவில் ஆனந்த வண்ண நடம் இடு வள்ளலே" என்றும் உரைக்கின்றார். வண்ண நடம் - அழகிய கூத்து. என்றும் மாறுமை சன்மார்க்கத்து இயல்பாதலால், "மாறுத சன்மார்க்க நிலை நீதியே" என விளக்குகின்றார்.

இதனுல், உண்மை வெளியும், கருணை வாரியும், எல்லாம் செய் சித்தும், வாய்த்த செல்வமும், ஒன்ருன தெய்வமும், சிவமும், ஒரு பெருஞ் சோதியும், மெய்ப் பரமும், வண்ண நடமிடும் வள்ளலும், சன்மார்க்க நிலை பெற்ற நீதியுமாகிய பரம்பொருள் நடராச மூர்த்தம் என்று தெரிவித்த வாரும். (21)

3672. ஊழிதோ றூழிபல அண்டபகிர் அண்டத்
துயிர்க்கெலாம் தரினும்அந்தோ
ஒருசிறிதும் உலவாத நிறைவாகி அடியேற்
குவப்போடு கிடைத்தநிதியே

வாழிநீ டூழியென வாய்மலர்ந் தழியா
வரந்தந்த வள்ளலேஎன்
மதியினிறை மதியே வயங்குமதி அமுதமே
மதிஅமுதின் உற்றசுகமே
ஏழினே டேழுலகில் உள்ளவர்கள் எல்லாம்இ
தென்னேஎன் றதிசயிப்ப
இரவுபகல் இல்லாத பெருநிலையில் ஏற்றிஎனே
இன்புறச் செய்தகுருவே
ஆழியோ டணிஅளித் துயிரெலாம் காத்துவிளே
யாடென் றுரைத்தஅரசே
அகரநிலே முழுதுமாய் அப்பாலும் ஆகிஒளிர்
அபயநட ராசபதியே.

உரை : ஊழி தோறு ஊழியாக உள்ள மிகப் பலவாகிய அண்டங்களிலும், பகிரண்டங்களிலும் வாழ்கின்ற உயிர்கள் எல்லாவற்றிற்கும் ஒன்று விடாது வேண்டுமளவு தந்தாலும் இம்மி யளவும் குறைதலின்றி நிறைந்திருப்பதாய் அடியேனுக்கு மகிழ்ச்சியோடு கிடைத்த பெருஞ் செல்வமே; நீடூழி வாழ்க வென்று திருவாய் மொழிந்து அழியா வரத்தை எனக்குத் தந்தருளிய அருள் வள்ளலே; என் அறிவின்கண் நிறைந்து தோன்றுகின்ற ஞான மதியே; அம்மதிக்குள் விளங்குகின்ற ஞான வமுதமே; அந்த அமுதினுற் பெறலாகும் சுகானுபவமே; பதினன்கு உலகிலும் உள்ளவர்கள் அத்தனேப் பேரும் கண்டு "இஃது என்னே" என்று அதிசயிக்கும் படியாக, பகல் இரவு என்ற காலப் பாகுபா டில்லாத பெருநிலைக்கண் என்னே யுயர்த்தி இன்புறச் செய்த குருமுதல்வனே; சக்கரப் படை முதலாகப் பல அணிகளேத் தந்து "உயிர்த் திரள் அத்தனேயும் காத்து விளையாடுக" என்று உரைத் தருளிய அருளரசே; பிரணவம் முழுதுமாய் அதற்கு அப்பாலாயும் ஒளி செய்து அபயம் தந்தருளுகின்ற பரம்பொருளே வணக்கம். எ. று.

பரம்பொருள் அருட் பெருஞ் செல்வமாய், குறைவற நிறைந்ததாய் விளங்குகின்ற தம்மையைப் புலப்படுத்தற்கு, "ஊழிதோறு ஊழிபல அண்ட பகிரண்டத்து உயிர்க்கெலாம் தரினும் அந்தோ ஒருசிறிதும் உலவாத நிறைவாகி அடியேற்கு உவப்போடு கிடைத்த நிதியே" என விளக்குகிறார். ஆன்மா அனுதி நித்தப் பொருளாதலின் தன்னே "வாழி நீடூழி யென வரம் தந்த வள்ளலே" என உரைக்கின்றார். யோக ஞானிகளுக்குத் துவாத சாந்தத்தில் ஞானம் அமுத சந்திரன் வடிவில் தோன்றுமென்பவாகலின், "என் மதியினிறை மதியே வயங்கு மதி அமுதமே" எனவும், அந்த அமுதுண்ண வரும் போகத்தை "மதி யமுதின் உற்ற சுகமே" எனவும் புகழ்கின்றார். வடலூர் வள்ளலார் பெற்ற ஞானப் பேரின்ப நிலையை, "ஏழினே டேழுலகில் உள்ளவர்கள் எல்லாம் இது என்னே என்று அதிசயிப்ப இரவு பகல் இல்லாத பெருநிலையில் ஏற்றி எனே இன்புறச் செய்த குருவே" என உரைக்கின்றார். ஆன்மாக்களில் விஷ்ணு பதம் பெற்ற ஆன்மாக்களுக்குச் சக்கரப் படை முதலியவற்றைக் கொடுத்து உலகம் காக்கும் தொழிலேச் செய்யப் பண்ணுகின்றது. பரம்பொருள் என்ற புராணக் கூற்றைக் கருத்திற் கொண்டு, "ஆழியோடு

அணி அளித்து உயிரெலாம் காத்து விளையாடு என்று உரைத்த அரசே" எனப் புகல்கின்றார். அகர நிலை என்பது அகர உகர மகரங்கள் சேர்ந்த பிரணவம்.

இதனால் நிதியும், வள்ளலும், அமுதமும், அமுத சுகமும், குருபரனும், அருளரசும், பிரணவமுமாகி, அதற்கப்பாலாயும் விளங்குகின்ற பரம்பொருள் நடராச மூர்த்தி என்பதாம். (22)

3673. பூதமுத லாயபல கருவிகள் அனைத்தும்என்
புகல்வழிப் பணிகள்கேட்பப்
பொய்படாச் சத்திகள் அனந்தகோ டிகளும்மெய்ப்
பொருள்கண்ட சத்தர்பலரும்
ஏதமற என்னுளம் நினைத்தவை நினைத்தாங்
கிசைந்தெடுத் துதவஎன்றும்
இறவாத பெருநிலையில் இணைசொலா இன்புற்
றிருக்கஎனை வைத்தகுருவே
நாதமுதல் இருமூன்று வரையந்த நிலைகளும்
நலம்பெறச் சன்மார்க்கமாம்
ஞானநெறி ஓங்கஓர் திருவருட் செங்கோல்
நடத்திவரு நல்லஅரசே
வாதமிடு சமயமத வாதிகள் பெறற்கரிய
மாமதியின் அமுதநிறைவே
மணிமன்றின் நடுநின்ற ஒருதெய்வ மேஎலாம்
வல்லநட ராசபதியே.

உரை : பூத முதலிய பலவாகிய தத்துவக் கருவிகள் அனைத்தும் என் சொல்வழி நின்று பணி கேட்டொழுகவும், பொய் படுதலில்லாத எண்ணிறந்த சத்திகளும் மெய்ப்பொருளைக் கண்டறிந்த சத்திமான்கள் பலரும் குறைவற என் உள்ளம் நினைத்தவற்றை நினைத்தாங்கு விரும்பியெடுத்து எனக்குதவி புரியவும், என்றும் இறத்தலில்லாத பெருநிலையில் ஒப்புக் கூறலாகாதவாறு இன்புற்றிருக்குமாறு என்னை வைத்தருளிய குருபரமே; நாத முதலாக அதீதம் ஈறுக வுள்ள சுத்த தத்துவ நிலைகளால் நலம் பெறும் பொருட்டுச் சன்மார்க்கமாகிய ஞான நெறி உயர்ந்தோங்கத் திருவருளாகிய செங்கோலைச் செலுத்தி யருளுகின்ற நல்ல அருளரசே; வாத மிடும் இயல்பினராகிய சமய வாதிகளாற் பெறுதற் கொண்ணாத ஞானமாகிய மதியின்கண் நிறைந்திருக்கின்ற ஞான நிறைவே; மணியிழைத்த மன்றின் நடுவில் நின்று ஆடல் புரிகின்ற ஒப்பற்ற தெய்வமே; எல்லாம் செய்ய வல்ல நடராசப் பெருமானே வணக்கம். எ. று.

நில முதல் சிவம் ஈறுக உள்ள தத்துவக் கருவிகள் முப்பத்தாறுதலின், அவற்றைப் "பூத முதலாய பல கருவிகள்" எனப் புகலுகின்றார். சிவசத்திகளும், சத்திமான்களும் எண்ணிறந்தனவாதலின் சத்திகள், "அனந்த கோடிகள்" என்றும், "சத்தர் பலர்" என்றும் தொகுத் துரைக்கின்றார். தத்துவத் தொகுதிகளும், சத்தி சத்திமான்களும் தமது ஞான வாய்மை கண்டு தனக்குப் பணி செய்யுமாறு பணித்துள்ளான் குருமூர்த்தமாய்

எழுந்தருளியுள்ள இறைவன் என்று வற்புறுத்தற்கு, "பூத முதலாய பல கருவிகள் அனைத்தும் என் புகல் வழிப் பணிகள் கேட்பப் பொய் படாச் சத்திகள் அனந்த கோடிகளும் மெய்ப்பொருள் கண்ட சத்தர் பலரும் ஏதமற என்னுளம் நினைத்தவை நினைத்தாங்கு இசைந்து எடுத்து உதவ என்றும் இறவாத பெருநிலையில் இணை சொலா இன்புற்றிருக்க எனை வைத்த குருவே" என்று கூறுகின்றார். குருபரன் அருளிய ஞானத்தால் தான் பெற்ற பெரு நிலையை இறவாத பெருநிலை எனப் பாராட்டுகின்றார். சுத்த வித்தை, ஈசுரம், சதாசிவம், விந்து, நாதம், நாதாந்தம் என்ற அறு நிலைகளையும் "நாத முதல் இருமூன்று வரை யந்த நிலைகள்" என்று குறிக்கின்றார். சுத்த தத்துவ நிலைகளிலும் சன்மார்க்க ஞான நெறியே நிலவுதற் பொருட்டு இறைவனது திருவருளாட்சி நடைபெறுகின்ற தென்பாராய், "சன்மார்க்கமாம் ஞான நெறி ஓங்க ஓர் திருவருட் செங்கோல் நடத்தி வரு நல்ல அரசே" என நவில்கின்றார். இது நன்று, அது தீது என வாதமிடுவது சமயவாதிகளின் இயல்பாதலால், "வாதமிடு சமய வாதிகள்" என்று குறிக்கின்றார். ஒன்றி யிருந்து பொருளுண்மை நோக்காது வாதப் புயலால் அலைக்கப்படுதலால் சமயவாதி களால் ஞான மதியின் அமுதம் பெறல் அரிதாதலால், "சமயவாதிகள் பெறற் கரிய மாமதியின் அமுத நிறைவே" என்று கூறுகின்றார்.

இதனால், அனந்த கோடி சத்திகளும், சத்தர்களும், பணி செய்ய வைத்த குருவும், திருவருட் செங்கோல் நடத்தி வரும் நல்ல அரசும், அமுத நிறைவும், மன்றின் நடுநின்ற ஒரு தெய்வமும் ஆவது எல்லாம் வல்ல நடராச மூர்த்தம் எனத் தெரிவித்தவாறும். (23)

3674. வாட்டமொடு சிறியனேன் செய்வகையை அறியாது
மனமிக மயங்கிஒருநாள்
மண்ணிற் கிடந்தருளை உன்னிஉல கியலினை
மறந்துதுயில் கின்றபோது
நாட்டமுறு வைகறையில் என்அரு கணைந்தென்னை
நன்றுற எழுப்பிமகனே
நல்யோக ஞானம்எனி னும்புரிதல் இன்றிநீ
நலிதல்அழ கோஎழுந்தே
ஈட்டுகநின் எண்ணம் பலிக்கஅருள் அமுதம்உண்
டின்புறுக என்றகுருவே
என்ஆசை யேஎன்றன் அன்பே நிறைந்தபேர்
இன்பமே என்செல்வமே
வேட்டவை அளிக்கின்ற நிதியமே சாகாத
வித்தையில் விளைந்தசுகமே
மெய்ஞ்ஞான நிலைநின்ற விஞ்ஞான கலர்உளே
மேவுநட ராசபதியே.

உரை : சிறுமை யுடையவனாகிய யான் செய்வகை அறியாமல் வாட்டமுற்று மிகவும் மனம் மயங்கி ஒருநாள் தரையிற் கிடந்து திருவருளை எண்ணி உலகியலை மறந்து உறங்கிய போது, விழித்தற்குரிய விடியற் காலையில் என் அருகே போந்து நயமாக என்னை எழுப்பி,

"மகனே நல்ல யோக ஞானங்களில் ஏதேனும் செய்வதன்றி நீ மனம் வருந்துவது அழகாகுமா; எழுந்து நின் எண்ணம் பலிக்குமாறு அதனைச் செய்வாயாக; அதன் வாயிலாக எய்துதற்குரிய அருளமுதத்தைப் பெற்று இன்புறுக" என்று உபதேசித்த குருபரனே; எனது ஆசையும் அன்புமாகியவனே; நிறைந்த பேரின்பமே; எனக்குரிய செல்வமே; விரும்பியவாறு அளிக்கின்ற நிதியமே; சாகாத வித்தைப் பயிற்சியில் விளைந்தருளும் சுகப் பொருளே; மெய்ஞ்ஞான நெறிக்கண் நிலை பெற நின்ற விஞ்ஞான கலர் உள்ளத்தில் எழுந்தருளும் நடராசப் பெருமானே வணக்கம். எ. று.

அறிவின் சிறுமையால் செய்தற்குரிய செயல் வகை தெரியாது மனவாட்டம் கொண்டு ஒருநாள் தரை மீது கிடந்த செயலை, "வாட்டமொடு சிறியனேன் செய்வகையை யறியாது மனமிக மயங்கி ஒரு நாள் மண்ணிற் கிடந்து" எனக் கூறுகின்றார். உறக்கத்தில் உடலுணர்ச்சிகள் செயலற்று ஒடுங்குதலின் அவ்வொடுக்கத்தை, "உலகியலினை உன்னி மறந்து துயில்கின்ற போது" என்றும், உள்ளம் திருவருளை எண்ணிக் கிடந்த செயலை, "அருளை யுன்னி" என்றும் உரைக்கின்றார். ஒருநாள் மனமயங்கி அருளை எண்ணித் துயில்கின்ற போது என இயையும். உறங்குவோ விழித் தெழக்கூடிய காலமாதலால் விடியற் பொழுதினை, "நாட்டமுறு வைகறை" என நவில்கின்றார். அந்நிலையில் குருபரன் எழுந்தருளி, உறக்கத்தினின்றும் எழுப்பி யோக ஞானங்கள் ஏதேனும் ஒன்று செய்க வென அறிவுறுத்திய குறிப்புத் தோன்ற, "என் அருகணைந் தென்னை நன்றுற எழுப்பி மகனே நல்யோக ஞானம் எனினும் புரிதலின்றி நீ நலிதல் அழகோ" என்று கூறுகின்றார். யோக ஞானம் இரண்டையும் இணைத்துக் கூறும் மரபு பற்றி, "நல்யோக ஞானம் எனினும்" என்றாராயினும், யோக முயற்சியாயினும் ஞான முயற்சியாயினும் ஒன்றைச் செய்க என்பது கருத்தாகக் கொள்க. இரண்டையும் செய்தற்குரிய அறிவாற்றல் வடலூர் வள்ளல்பால் இருப்பது புலப்பட, "நீ நலிதல் அழகோ எழுந்து ஈட்டுக நின் எண்ணம் பலிக்க" எனக் குருபரன் அறிவுறுத்துகின்றார். எண்ணம் பலித்தலாவது எண்ணியது எண்ணியவாறு கைகூடுதல். யோக ஞான முயற்சிகளின் பயனாக அருளமுதம் கைவருதலின், "அருளமுதம் உண்டு இன்புறுக" என்று ஆசிரியர் உபதேசிக்கின்றார். வடலூர் வள்ளலின் ஆசையும் அன்பும் சிவ பரம்பொருளேயாதலின், "என் ஆசையே என்றன் அன்பே" என்றும், "நிறைந்த பேரின்பமே" என்றும், "என் செல்வமே" என்றும் பாராட்டுகின்றார். வேட்டவை அளிக்கின்ற நிதியம் - விரும்பியவற்றை விரும்பியவாறு அளிக்கக் கூடிய 'சங்கம் பதுமம்' என்ற நிதி வகைகள். உலகியல் வாழ்வில் உலகியல் உணர்ச்சியின்றி அருள் நிலையில் நிலைபெற ஒன்றி நிற்கும் வித்தை 'சாகாத வித்தை' எனப்படும். இதனைச் சாகாக் கலை என்று கூறுவர். அவ்வித்தை வழி ஒழுகிப் பெறலாகும் பயனை, "சாகாத வித்தையில் விளைந்த சுகமே" என்று விளக்குகின்றார். மெய்ஞ்ஞான நிதியின்கண் நிலைபெற நிற்கும் செயலினர் விஞ்ஞான கலர் என்பது புலப்படுத்தற்கு, "மெய்ஞ்ஞான நிலைநின்ற விஞ்ஞான கலர்" என விளம்புகின்றார்.

இதனுள் குருபரனுய், ஆசையும் அன்புமாய், நிறைந்த பேரின்பமாய், செல்வமாய், நிதியமாய், சுகமாய், விஞ்ஞான கலர் உள்ளத்

துள்ளே எழுந்தருளுவது நடராச மூர்த்தம் எனத் தெரிவித்தவாறு. இது வைகறைப் பொழுதில் வடலூர் வள்ளலுக்கு உண்டாகிய குருவருள். (24)

3675. என்செய்வேன் சிறியனேன் என்செய்வேன் என்எண்ணம்
ஏதாக முடியுமோஎன்
றெண்ணிஇரு கண்ணிநீர் காட்டிக் கலங்கிநின்
றேங்கிய இராவில்ஒருநாள்
முன்செய்மெய்ஞ் ஞானஉரு வாகிநான் காணவே
வெளிநின் றணைத்தென்உள்ளே
மேவிஎன் துன்பந் தவிர்த்தருளி அங்ஙனே
வீற்றிருக் கின்றகுருவே
நன்செய்வாய் இட்டவிளை வதுவிளைந் ததுகண்ட
நல்குரவி னேன்அடைந்த
நன்மகிழ்வின் ஒருகோடி பங்கதிகம் ஆகவே
நான்கண்டு கொண்டமகிழ்வே
வன்செய்வாய் வாதருக் கரியபொரு ளேஎன்னை
வலியவந் தாண்டபரமே
மணிமன்றின் மடுநின்ற ஒருதெய்வ மேஎலாம்
வல்லநட ராசபதியே.

உரை : அறிவாற்றலில் சிறியவனாகிய நான் "என் செய்வேன் என் எண்ணம் ஏதாக முடியுமோ" என நினைந்து இரு கண்களிலும் நீர் சொரிந்து, அறிவு கலங்கிச் செயலற்று நின்று வருந்திய ஒருநாள் இரவுப் பொழுதில் மின்னெளி செய்கின்ற ஞான வுருவாய் என் கண் காண வெளிப்பட நின்று என்னைத் தழுவி என்னுள்ளே புகுந்து என் துன்பங் களைப் போக்கி யருளி, அவ்வுள்ளத் துள்ளேயே வீற்றிருக்கின்ற குருபரனே; நன்செய் வயலில் தானிட்ட பயிர் விளைந்தது கண்ட வறியவன் ஒருவன் அடைந்த நல்ல மகிழ்ச்சியைவிட ஒருகோடிப் பங்கு அதிகமாகவே நான் கொண்ட மகிழ்ச்சி வடிவானவனே; வன்சொற் களைப் பேசும் வாதிகட்கு அறிவரிய பொருளே; என்னை வலிய வந்து ஆண்டுகொண்ட பரம்பொருளே; மனிமன்றின்கண் நடுநின்று ஆடுகின்ற ஒப்பற்ற தெய்வமே; எல்லாம் வல்ல நடராச முதல்வனே வணக்கம். எ. று.

செயலறுதி தோன்றுதற்கு முன் ஒருவனுக்குத் தனது சிறுமையும் மாட்டாமையும் புலப்பட்டுக் கலக்கம் செய்யுமாதலின் அதனை, "என் செய்வேன் சிறியனேன் என்செய்வேன் என் எண்ணம் ஏதாக முடியுமோ என்றெண்ணி" என வுரைக்கின்றார். கையறவு பட்டவிடத்துக் கண்ணீர் பெருகுதல் இயல்பாதலால், "இரு கண்ணிணீர் காட்டிக் கலங்கி நின்று" எனவும், இக்கையறவு ஒருநாள் இரவுப் பொழுதில் நிகழ்ந்தமை தோன்ற, "ஏங்கிய இரவில் ஒருநாள்" எனவும் இயம்புகின்றார். ஞான குருவின் தோற்றத்தை "மின்செய் ஞான உரு" என்றும், மாய உருவின்றி யுண்மை வடிவில் வெளிப்படத் தோன்றினமை புலப்பட, "நான்

காணவே வெளி நின்று'' என்றும், தமக்கு உளதாகிய கையறவு நிலையைப் போக்கி உள்ளத்துள் கலந்து கொண்ட இயல்பை, "என்னுள்ளே மேவு என் துன்பம் தவிர்த்தருளி அங்ஙனே வீற்றிருக்கின்ற குருவே'' என்றும் உரைக்கின்றார். விளைவது விரும்பி நன்செய் வயலில் இட்ட பயிரை, "நன்செய்வாய் இட்ட விளைவு'' என்றும், அது நன்கு விளைந்தது கண்டு மகிழ்கின்ற ஏழை உழவன் மனநிலையை, "அது விளைந்தது கண்ட நல்குரவினேன் அடைந்த நன்மகிழ்வு'' எனவும், அவன் பெற்ற மகிழ்ச்சியினும் தான் பெற்றது ஒரு கோடிப் பங்கு அதிகம் என விளக்குவாராய் வடலூர் வள்ளல், "ஒருகோடி பங்கு அதிகம் ஆகவே நான் கண்டு கொண்ட மகிழ்வே'' எனவும் விளக்குகின்றார். வறியவனுக்குத் தானிட்ட பயிர் நன்கு விளைவதில் உயிருணர்வு ஒன்றியிருப்பதும் அது நன்கு விளைந்தவிடத்து அவ்வுடல் முழுதும் இன்பமயமாக மகிழ்ச்சி பொங்குவதும் பற்றி, "நல்குரவினேன் அடைந்த நன்மகிழ்வு'' எனத் தெளிவிக்கின்றார். நல்குரவினேன் - வறியன். வன்சொற்களைப் பேசுகின்ற வாதிகளை, "வன்செய்வாய் வாதர்'' எனக் குறிக்கின்றார். வாதம் வெல்லுவதில் அவர்களுக்குக் கருத்தே தவிர உண்மைப் பொருள் காண்டலில் இல்லையாதலின், "வாதருக்கு அரிய பொருளே'' எனப் புகல்கின்றார். பரம்பொருள் தானே வலிய வந்து ஆண்டு கொண்டாலன்றி மக்கள் யாவராலும் சென்று பெறற்பால தன்று தலின், "என்னை வலிய வந்தாண்ட பரமே'' எனப் புகழ்கின்றார்.

இதனால், ஒருநாளிரவில் மெய்ஞ்ஞான உருவில் குருவருள் எய்திய வாரும். (25)

3676. துன்பெலாந் தீர்ந்தன சுகம்பலித் ததுநினைச்
சூழ்ந்ததருள் ஒளிநிறைந்தே
சுத்தசன் மார்க்கநிலை அனுபவம் நினக்கே
சுதந்தரம தானதுலகில்
வன்பெலாம் நீக்கிநல் வழியெலாம் ஆக்கிமெய்
வாழ்வெலாம் பெற்றுமிகவும்
மன்னுயிர் எலாம்களித் திடநினைத் தனைஉன்றன்
மனநினைப் பின்படிக்கே
அன்பநீ பெறுகஉல வாதுநீ டூழிவினை
யாடுக அருட்சோதியாம்
ஆட்சிதந் தோம்உனைக் கைவிடோம் கைவிடோம்
ஆணைநம் ஆணைஎன்றே
இன்புறத் திருவாக் களித்தெனுள் ளேகலந்
திசைவுடன் இருந்தகுருவே
எல்லாஞ்செய் வல்லசித் தாகிமணி மன்றினில்
இலங்குநட ராசபதியே.

உரை : உனக்குற்ற துன்பங்க ளெல்லாம் நீங்கின; நீ கருதிய சுகம் கைவந்து விட்டது; உன்னைத் திருவருள் சூழ்ந்து கொண்டு தனது ஒளியை நிறையச் செய்து சுத்த சன்மார்க்க நிலையில் பெறலாகும்

அனுபவத்தை உனக்கே உரியதாகச் செய்து விட்டது; இனி யுலகில் நிகழும் வன்மைகள் எல்லாவற்றையும் நீக்கி நல்வழி எனப்படுபவை எல்லாவற்றையும் உண்டாக்கி மெய்ம்மையான வாழ்வினைத்தும் பெற்று உலகுயிர்கள் யாவும் மகிழ்வடைய நினைத்துள்ளாயாதலால், "உன் மன நினைவின்படியே அன்பனாகிய நீ எல்லா நலன்களும் பெறுக; உலகில் கெடாமல் நீடூழி வாழ்க; அருட்சோதியாகிய அருளாட்சி உனக்குத் தந்தோம்; இனி உனைக் கைவிட மாட்டோம்; இது நமது ஆணையாகும்" என்று நான் இன்புறும்படியாக அருளுரை தந்து என் உள்ளத்தில் கலந்து இசைந்திருக்கின்ற குருபரனே; எல்லாச் செயல்களையும் செய்ய வல்ல அறிஞனாகி மணி யிழைத்த தில்லையம்பலத்தின்கண் விளங்குகின்ற நடராச முதல்வனே வணக்கம். எ. று.

அருட் சோதியாகிய ஆட்சி தருதற்கு முன் அதனைச் செலுத்தக் கடவ வள்ளற் பெருமானுடைய மனம் திடமுறும்படிச் செய்கின்றாராதலின் முதற்கண், "துன்பு எலாம் தீர்ந்தன சுகம் பலித்தது நினைச் சூழ்ந்தது அருளொளி நிறைந்தே சுத்த சன்மார்க்க நிலை அனுபவம் நினக்கே சுதந்திரமானது" என்று சொல்லுகின்றார். திருவருள் சூழ்ந்து தனது ஞானவொளியை நிறைவித்தாலன்றிச் சன்மார்க்க நெறிக்கண் நிலை பெறும் அனுபவம் வாயாது என்பது விளங்க, "நினைச் சூழ்ந்தது அருள் ஒளி நிறைந்தே சுத்த சன்மார்க்க நிலை அனுபவம் நினக்கே சுதந்திர மானது" என்று விளக்கப்படுகிறது. வன்சொல்லும் வன்செயலும் வன்நினைவும் ஆகிய மூன்றும் அடங்க, "வன்பெலாம்" எனக் கூறுகின்றார். வன்செயல் யாதுமின்றி நல்வழியிலேயே எல்லாம் நடைபெற வேண்டு மென்றும், உயிர்கள் அனைத்தும் மெய்ம்மையான இன்ப வாழ்வு பெற்று இனிது வாழ வேண்டுமென்ற நினைவு உடையவராய் வள்ளற் பெருமான் இருந்த சிறப்பை எடுத்துரைக்கின்றாராதலின், "மெய் வாழ்வெலாம் பெற்று மிகவும் மன்னுயிர் எலாம் களித்திட நினைத்தனை" என்றும், அது நினைத்தபடியே கைகூடுமென வற்புறுத்தற்கு, "உன்றன் மன நினைப்பின் படிக்கே அன்ப நீ பெறுக" என்றும் உரைக்கின்றார். இந்த அருள் வாழ்வு எங்கும் எப்பொழுதும் எவ்வுயிர்க்கும் உளதாகும் முறை யில் திருவருள் துணை புரிவதாக வற்புறுத்திய திறத்தை, "உலவாது நீடூழி விளையாடுக அருட் சோதியாம் ஆட்சி தந்தோம் உனைக் கைவிடோம் கைவிடோம் ஆணை நம் ஆணை என்றே இன்புறத் திருவாக் களித்து" என்று கூறுகின்றார். இங்ஙனம் அருளுரை வழங்கிய குரு முதல்வன் மறைந் தருளிய திறம் தெரிவிப்பாராய், "என்னுள்ளே கலந்து இசைவுடன் இருந்த குருவே" என இயம்புகின்றார்.

இதனால், வடலூர் வள்ளலுக்குக் குருமுதல்வன் அருட் சோதி ஆட்சி தந்த திறம் தெரிவித்தவாறும். (26)

3677. பேருற்ற உலகிலுறு சமயமத நெறிஎலாம்
பேய்ப்பிடிப் புற்றபிச்சுப்
பிள்ளைவிளை யாட்டென உணர்ந்திடா துயிர்கள்பல
பேதமுற் றங்கும்இங்கும்
போருற் றிறந்துவீண் போயினர் இன்னும்வீண்
போகாத படிவிரைந்தே

புனிதமுறு சுத்தசன் மார்க்கநெறி காட்டிமெய்ப்
பொருளினை உணர்த்திஎல்லாம்
ஏருற்ற சுகநிலை அடைந்திடப் புரிதிநீ
என்பிள்ளை ஆதலாலே
இவ்வேலை புரிகஎன் றிட்டனம் மனத்தில்வே
றெண்ணற்க என்றகுருவே
நீருற்ற ஒள்ளிய நெருப்பே நெருப்பினுள்
நிறைந்திருள் அகற்றும்ஒளியே
நிர்க்குண னந்தபர நாதாந்த வரைஓங்கு
நீதிநட ராசபதியே.

உரை : பெரிதாகிய உலகின்கண் சமயங்கள் கொள்கைகள் நெறிகள் ஆகிய எல்லாம் பேய் பிடிக்கப்பட்டுப் பித்தேறிய பிள்ளையின் விளையாட்டாகு மென உணர்ந்து கொள்ளாமல் மக்கள் பலர் ஒருவரோடொருவர் பேத யுணர்ச்சி கொண்டு அங்குமிங்கும் சமயத்தின் பேரால் போர் செய்து இறந்து வீண் பட்டனர்; இனியும் அவ்வாறு வீண் போகாதபடி தூயதாகிய சுத்த சன்மார்க்க நெறியை அவர்களுக்கு விரைந்து சென்று காட்டி மெய்ப்பொருளை யுணரச் செய்து எல்லோரும் உயர்ந்த இன்ப நிலையை அடையுமாறு செய்வாயாக; நீ எனக்குப் பிள்ளையாதலினாலேயே இச்சமயப் பணியைச் செய்க வென்று உனக்குக் கட்டளை யிடுகின்றேம்; இதனை வேறுக மனத்தில் நினையா தொழிக" என்று அறிவுறுத்திய குருமுதல்வனே; நீராகிய பூதத்தின் மேல் நிலவுகின்ற ஒள்ளிய நெருப்புருவானவனே; அந்நெருப்பில் ஒளியாய் நிறைந்து பூத விருளை யகற்றும் பரவொளியே; நிர்க்குணமாய் ஆனந்த மயமான பரநாத தத்துவத்திற்கு மேலுள்ள நாதாந்த மலையின்கண் இருந்தருளி நீதி செய்யும் நடராச முதல்வனே வணக்கம். எ.று.

பெரிய உலகம் என்பதற்குப் "பேருற்ற உலகம்" என்று சொல்லுகின்றார். சமயப் பற்றும் மதக் கொள்கையும் விடாப் பிடியும் கொண்டவர்கள் தாம் கொண்டதே உயர்ந்த தென்னும் உணர்வினால் ஒருவரோடொருவர் வாது புரிந்து பிணங்குவது எங்கும் காணப்படுதலின் அவர்கள் செயலைப் பேய் பிடிக்கப்பட்டுப் பித்துக் கொண்டலையும் சிறு பிள்ளைகளின் விளையாட்டாக இதழ்கின்றமை புலப்பட, "சமய மத நெறி யெலாம் பேய்ப் பிடிப்புற்ற பிச்சுப் பிள்ளை விளையாட்டு" என உரைக்கின்றார். இவ்வுண்மையை யுணராமல் பலர் வீணுக்குப் போர் செய்து உயிர் கொடுத்ததை வரலாறு கூறுவதால், "உயிர்கள் பல பேதமுற் றங்குமிங்கும் போருற்று இறந்து வீண் போயினர்" என்று நவில்கின்றார். சமயத்திற்காகக் கோபுரங்களின் உச்சியில் ஏறி வீழ்ந்து உயிர்த்துறந்தோருடைய வரலாறுகளைப் பல கோயில்களில் உள்ள கல்வெட்டுக்கள் உரைப்பதனால், "வீண் போயினர்" என வெறுத் துரைக்கின்றார். இம்மக்கள் சமயங்களின் பொதுமையும் ஒருமைத்தன்மையும் உணர்ந்து பேத வுணர்வின்றி ஆன்ம நேய ஒருமைக் கொள்கையராய் இனிது வாழ்தற் கமைந்தது சுத்த சன்மார்க்க நெறி என விளக்குதற்கு, "இன்னும் வீண் போகாதபடி விரைந்தே புனிதமுறு சுத்த சன்மார்க்க நெறி காட்டி மெய்ப்பொருளினை யுணர்த்தி" என்றும், எல்லோரும்

இன்புற்றிருக்கப் பணி புரிவாயாக எனக் குருமுதல்வன் உபதேசித்த உண்மையை, "எல்லாம் ஏருற்ற சுகநிலை அடைந்திடப் புரிதி நீ" என்று உரைக்கின்றார். இக்கட்டளை யிடுதற்குரிய வாய்ப்பினை விளக்குதற்குத் தனக்குள்ள முறைமையைப் புலப்படுத்துவார், "நீ என் பிள்ளையாதலாலே இவ்வேலை புரிக என்றிட்டனம் மனத்தில் வேறு எண்ணற்க என்ற குருவே" என்று புகல்கின்றார். காற்றுகிய பூதத்திலிருந்து தீயும், தீயிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் உண்டாயின என்பது பற்றி, "நீருற்ற ஒள்ளிய நெருப்பே" என்கின்றார். இவை ஒடுங்குமிடத்து நிலம் நீரிலும், நீர் நெருப்பிலும், நெருப்பு காற்றிலும், காற்று வானிலும் ஒடுங்கு மென்ற முறையால் "நீருற்ற ஒள்ளிய நெருப்பிலே" என்பது பொருத்த மாதல் அறிக. நெருப்பினுள் ஒளி நிறைந்து இருள் அகற்றுவது இயல்பாதலின், "நெருப்பினுள் நிறைந்து இருள் அகற்றும் ஒளியே" என உரைக்கின்றார். குண தத்துவத்திற்கு அப்பாற் பட்டவனுதலின் பரம்பொருளை, "நிர்க்குணம்" என்றும், சுத்த தத்துவத்தின் மத்தகத் திலுள்ள நாத தத்துவத்திற்கு மேலதாய தத்துவத்தைப் "பரநாத தத்துவம்" என்றும் குறிக்கின்றார்.

இதனால், சுத்த சன்மார்க்க நெறியை உலகிற்குக் காட்டுக எனக் குருபரன் அருளிய இயல்பை எடுத்துரைத்தவாறும். (27)

3678. சாகாத கல்வியே கல்விஒன் றேசிவம்
தான்என அறிந்தஅறிவே
தகும்அறிவு மலர்ஐந்தும் வென்றவல் லபமே
தனித்தபூ ரணவல்லபம்
வேகாத காலாதி கண்டுகொண் டெப்பொருளும்
விளையவிளை வித்தஒழிலே
மெய்த்தொழில தாகும்இந் நான்கையும் ஒருங்கே
வியந்தடைந் துலகம்எல்லாம்
மாகாத லுறஎலாம் வல்லசித் தாகிநிறை
வானவர மேஇன்பமாம்
மன்னும்இது நீபெற்ற சுத்தசன் மார்க்கத்தின்
மரபென் றுரைத்தகுருவே
தேகாதி மூன்றும்நான் தருமுன்அருள் செய்தெனைத்
தேற்றிஅருள் செய்தசிவமே
சிற்சபையின் நடுநின்ற ஒன்றுள கடவுளே
தெய்வநட ராசபதியே.

உரை : சாகாமைக்கு ஏதுவாகிய கல்வியே உண்மைக் கல்வியாகிய ஒன்றென்றும், அதுதான் சிவநெறி யென்றும் அறிவித்த அறிவுப் பொருளே; தக்க அறிவாவது மனம் ஐந்தையும் வென்ற ஆற்றலே தனித்த குறைவற நிறைந்த ஆற்றல் என்றும், வேகாத கால் முதலியன கொண்டு எப்பொருளும் பயன் தரத் தோற்றுவிக்கும் தொழிலே உண்மைத் தொழிலாம் என்றும், இந்நான்கையும் ஒருங்கு கைவரப் பெற்று உலகமெல்லாம் மிக்க அன்பு கொள்ள எல்லாம் வல்ல சித்துப்

பொருளாகி நிறைந்த நிறைவே மேலான இன்பமாம்; இவ்வின்பத்தைப் பெற்ற நீயே சுத்த சன்மார்க்கத்தின் மரபினனுவாய் என்றுரைத்த குரு முதல்வனே; தேகம் மனம் வாக்கு ஆகிய மூன்றையும் நான் செயற் படுத்து முன் என்பால் அருள் செய்து அவற்றை இயக்குதற்குரிய நெறியைத் தெளிவித்து அருள் செய்த சிவ பரம்பொருளே; சிற்சபையின் நடுவில் நின்று விளங்குகின்ற ஒன்றுன கடவுளே; தெய்வமாகிய நடராச முதல்வனே வணக்கம். எ.று.

என்றும் பிறவா இறவாப் பேரின்ப வாழ்வே சிவபோக வாழ்வு என அறிவுறுத்த சிவஞானத்தைச் சிறப்புடைய ஞானமாக அறிவுறுத்து கின்றுராதலால், "சாகாத கல்வியே கல்வி ஒன்றே சிவம்தான் என அறிந்த அறிவே" என உரைக்கின்றுர். ஆணவம் முதலிய ஐந்தின் சேட்டைகளை அறக் கெடுப்பதே அறிவாற்றல் என்றற்கு, "மலம் ஐந்தும் வென்ற வல்லபமே தனித்த பூரண வல்லபம்" என விளக்கு கின்றுர். மலம் ஐந்தாவன; ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதானம், வேகாத கால், போகாப் புனல் ஆகிய இரண்டும் சேர "வேகாத காலாதி" என விளம்புகின்றுர். போகாப் புனலைக் கருவுக்கு முதலாகிய நீர் என்பாருமுண்டு. வேகாத காற்று என்பது பிராண வாயு. சாகாக் கல்வி - ஒன்றே சிவம் தான் என அறிந்த அறிவு, மலம் ஐந்தும் வென்ற ஆற்றல், எப்பொருளும் விளைவித்த தொழில் ஆகிய நான்கையும் "இந்நான்கு" எனத் தொகுத் துரைக்கின்றுர். இந்நான்கையும் கைவரப் பெற்றவர் நிறைவான இன்பம் பெறுதற்குரிய சுத்த சன்மார்க்கத்தின் மரபிற் குரியவராவார். இக்கருத்தை வற்புறுத்தினமையின், "சுத்த சன் மார்க்கத்தின் மரபென்று உரைத்த குருவே" என உரைக்கின்றுர். தேகாதி மூன்றுவன; தேகம், வாக்கு, மனம் என்ற மூன்றுமாகும்.

இதனுல், சுத்த சன்மார்க்கத்தின் மரபைக் குரபரன் விளக்கிய திறம் செப்பியவாறும். (28)

3679. நீடுலகில் உற்றவர்கள் நன்குற உரைக்கின்ற
நின்வார்த்தை யாவும்நமது
நீள்வார்த்தை யாகும்இது உண்மைமக னேசற்றும்
நெஞ்சம்அஞ் சேல்உனக்கே
ஆடுறும் அருட்பெருஞ் சோதிஈந் தனம்என்றும்
அழியாத நிலையின்நின்றே
அன்பிலை எங்கெங்கும் எண்ணிய படிக்குநீ
ஆடிவாழ் கென்றகுருவே
நாடுநடு நாட்டத்தில் உற்றஅனு பவஞானம்
நான்இளங் காலைஅடைய
நல்கிய பெருங்கருணை அப்பனே அம்மையே
நண்பனே துணைவனேஎன்
ஊடுபிரி யாதுற்ற இன்பனே அன்பனே
ஒருவனே அருவனேஉள்
ஊறும்அமு தாகிஓர் ஆறின்முடி மீதிலே
ஓங்குநட ராசபதியே.

உரை : நாடுகின்ற புருவ நடுவின் ஊடே யுற்ற நோக்கத்தால் பெறுகின்ற அனுபவ ஞானத்தை நான் இளம் பருவத்திலேயே அடையுமாறு அருள் ஞானம் நல்கிய பெரிய கருணை யுருவாகிய அப்பனே, அம்மையே, நண்பனே, துணைவனே; என் உள்ளத்தினின்றும் பிரியாது அழுந்தருளுகின்ற இன்பனே, அன்பனே, ஒப்பற்றவனே, அருவ வடிவானவனே; சிந்திப்பார்தம் சிந்தனையில் அமுதமா யூறி முடியில் கங்கையாறு தங்குகின்ற நடராச பதியே; "நெடிய இவ்வுலகின்கண் வாழ்பவர்களில் அறம் நன்கு அமைய உரைக்கின்ற நின் சொற்கள் யாவும் நம்முடைய அறவுரையேயாகும்; மகனே நான் சொல்லும் இது உண்மை; சிறிதும் மனத்தில் அச்சம் கொள்ளற்க; உனக்கென்றே அமைந்த அருட் பெருஞ் சோதி யுணர்வைத் தந்தனம்; என்றும் கெடாத நிலையின்கண் நின்று அன்பினால் எவ்விடத்தும் எண்ணியபடி இயன்று வாழ்க" என்று அருளிய குருமுதல்வனே வணக்கம். எ. று.

புருவ நடுவாகிய இலாடத்தானத்தே கண்களின் நோக்கத்தை நிறுத்தி உண்மைப் பொருளை நோக்கப் பெற வரும் அனுபவ ஞானமாகிய திருவருள் ஞானத்தை, "நாடுநடு நாட்டத்தில் உற்ற அனுபவ ஞானம்" என உரைக்கின்றார். நாடு நடு என்பதை புருவ நடுவில் நாடும் நாட்டம் என இயைத்துக் கொள்க. இளங் காலை - இளம் பருவம். இந்த யோகக் காட்சியை இளம் பருவத்தே தனக்கு இறைவன் நல்கியதை நினைந்து பராவுகின்றாராதலால், "அனுபவ ஞானம் நான் இளங்காலை அடைய நல்கிய பெருங் கருணை அப்பனே அம்மையே" என்று போற்றுகின்றார். இறைவன் நண்பனாகவும், துணைவனாகவும், பிரிவறியாத இன்ப மூர்த்தியாகவும், அன்பனாகவும் அருள் புரிவது பற்றி, "நண்பனே துணைவனே என் ஊடு பிரியாதுற்ற இன்பனே அன்பனே" என உரைக்கின்றார். சிந்திப்பார் சிந்தனையில் தேனூற நிற்கின்ற திறம் பற்றிச் சிவனை, "உள்ளூறும் அமுதாகி" எனவும், கங்கை யாற்றை முடியில் தாங்குகின்றமையால், "ஓர் ஆறு இன் முடி மீதிலே ஓங்கு நடராச பதியே" எனவும் கூறுகின்றார். ஆறு தங்கிய முடியை இன்முடி என்கின்றார். அதனால் உலகிற்கு இன்பம் விளைவது பற்றி உலகில் வாழ்கின்ற மக்கள் அறம் பிழையாது வாழ நீ யுரைக்கின்ற சொற்கள் யாவும் யாம் உனக்குள் நின்று உரைப்பன என்றற்கு, "நன்குற உரைக்கின்ற நின் வார்த்தை யாவும் நமது நீள் வார்த்தையாகும்" என்றும், இது வெறும் கற்பனை யன்று உண்மை யெனத் தெளிவாயாக என வற்புறுத்தற்கு, "இது உண்மை மகனே" என்றும், இதனால் நீ நெஞ்சில் சிறிதும் அஞ்ச வேண்டா எனத் தேற்றுதற்கு, "சற்றும் நெஞ்சம் அஞ்சேல்" என்றும் இயம்புகின்றார். அருட் பெருஞ் சோதியாகிய சிவஞானத்தை உனக்குத் தந்துள்ளோமாதலால், இனி நீ அச்சமின்றி மேற்கொண்ட அறப் பணியை எங்கும் சென்று எல்லோர்க்கும் செய்கவென அறிவுறுத் தருளிய வாய்மை யுரையை, "அருட் பெருஞ்சோதி ஈந்தனம் என்றும் அழியாத நிலையின் நின்றே அன்பினால் எங்கெங்கும் எண்ணியபடிக்கு நீ ஆடி வாழ்க என்ற குருவே" என்று பகர்கின்றார்.

இதனால், அருட் பெருஞ் சோதியாகிய சிவஞானத்தைக் குருபரன் அருளிய திறம் கூறியவாறும். (29)

3680. அந்நாளில் அம்பலத் திருவாயில் இடைஉனக்
கன்புடன் உரைத்தபடியே
அற்புதம்எ லாம்வல்ல நம்அருட் பேரொளி
அளித்தனம் மகிழ்ந்துன்உள்ளே
இந்நாள் தொடுத்துநீ எண்ணிய படிக்கே
இயற்றிவிஞ் யாடிமகிழ்க
என்றும்இற வாநிலையில் இன்பஅனு பவஞ்சுகி
இயல்சுத்தம் ஆதிமூன்றும்
எந்நாளும் உன்இச்சை வழிபெற்று வாழ்கயாம்
எய்திநின் னுட்கலந்தேம்
இனிஎந்த ஆற்றினும் பிரிவுறேம் உண்மைஈ
தெம்மாஞை என்றகுருவே
மன்னுகி என்பெரிய வாழ்வாகி அழியாத
வரமாகி நின்ற சிவமே
மணிமன்றின் நடுநின்ற ஒருதெய்வ மேஎலாம்
வல்லநட ராசபதியே.

உரை : அன்றொரு நாள் தில்லையம்பலத்தின் திருவாயிலின்கண் உனக்கு அன்புடன் உரைத்தபடியே அற்புதங்கள் பலவற்றையும் செய்ய வல்ல நமது திருவருட் பேரொளியை மகிழ்ந்து நல்கினேம்; உனது உள்ளத்தில் இந்த நாள் தொடங்கி நீ எண்ணியவாறு செய்வன செய்து நீ இன்புற்று மகிழ்வாயாக; எக்காலத்தும் இறவாத நிலையில் இன்ப அனுபவம் உடையவனாய் இயலுகின்ற சுத்தம், அசுத்தம், சுத்தா சுத்தம் ஆகிய மூன்று நிலைகளையும் எந்நாளும் உன் விருப்பப்படிப் பெற்று வாழ்வாயாக; யாம் உன்பால் எய்தி உன் உள்ளத்தில் கலந்து கொண்டேன்; இனி எந்த வகையிலும் உன்னைப் பிரியேன்; இது உண்மை, எமது ஆணை" என்று உரைத்தருளிய குருபரனே; மன்னவனே, என்னுடைய பெரிய வாழ்வாகி எனக்குக் கிடைத்த அழியாத வரமாகி நின்ற சிவ பரம்பொருளே; மணி யிழைத்த சபையின் கண் நின்றருளுகின்ற ஒப்பற்ற தெய்வமே; எல்லாம் வல்ல நடராச மூர்த்தியே வணக்கம். எ.று.

முன்பொருநாள் தில்லையம்பலத்தின் வாயிலின்கண் வடலூர் வள்ளலைக் கண்டு இறைவன் குருவாய் எழுந்தருளி யுரைத்ததை யுண்டு நினைவு கூறுகின்றாராதலால், "அந்நாளில் அம்பலத் திருவாயிலிடை உனக்கு அன்புடன் உரைத்தபடி" என உரைக்கின்றார். அந்நாளில் கண்ட போது திருவருட் பெருஞானத்தை உவகையுடன் உபதேசித்த செய்தியை, "நம் அருட் பேரொளி அளித்தனம் மகிழ்ந்து" எனக் குறிக்கின்றார். அருள் ஞானத்தை வழங்கிய அன்று முதல் இன்று வரை அதனையே சிந்தித்திருக்கின்றமை புலப்பட, "அந்நாள் அருட் பேரொளி அளித்தனம் இந்நாள் தொடுத்து நீ எண்ணிய படிக்கே இயற்றி விஞையாடி மகிழ்க" என மொழிகின்றார். அதனால் விஞையும் பயன் இதுவென எடுத்துரைப்பாராய், "என்றும் இறவா நிலையில் இன்ப அனுபவனுகி சுத்தமாதி மூன்றும் வழி ஒழுகப் பெற்று வாழ்க" என்று கூறுகின்றார். சுத்தமாதி மூன்றுவன: சுத்தாவத்தை, அசுத்தாவத்தை, சுத்தமும் அசுத்தமும் கலந்த சுத்தா சுத்தாவத்தைகளாம். சுத்தாவத்தை - சுத்த ஞான நிலை.

அசுத்த நிலை – மாயாகாரியத் தத்துவங்களோடு கூடிய நிலை. கலந்தும் கலவாத நிலை சுத்தா சுத்தநிலை. பெற்றுள்ள அருட் பேரொளி ஞானத்தால் இம் மூவகை அவத்தையில் சுலந்து ஒழுகினும், அவத்தை வழிச் செல்லாது அவத்தைகள் அனைத்தும் தன்வழி நிற்க வொழுகுவது அருள் வாழ்வாதல் புலப்பட, "இயல் சுத்தமாதி மூன்றும் எந்நாளும் உன் இச்சை வழி பெற்று வாழ்க" என வுரைக்கின்றார். திருவருள் துணையில் வழி அவத்தைகள் நல்வழி வொழுகும் நிலை கைவராதாதலின், அதற்குக் குருபரனது துணை உடனிருப்ப துணர்த்த, "யாம் எய்தி நின்னுட் கலந்தேம் இனி எந்த ஆற்றினும் பிரிவுறேம் உண்மை ஈது எம்மாணை என்ற குருவே" என மொழிகின்றார். மன் - மன்னன்; நிலையாக உள்ளவன் எனினும் பொருந்தும். அருள் ஞான வாழ்முதல் என்பதற்கு, "என் பெரிய வாழ்வாகி" என்று குறிக்கின்றார். அழியாத வரம் - என்றும் கெடாத திருவருள்.

இதனால், அந்நாளில் அம்பல வாயிலின்கண் உரைத்தபடி குருபரன் அருட் பேறளித்து அதனை இன்று முதல் எண்ணியபடிச் செலுத்தி மகிழ்க வென்றும், சுத்தமாதி மூன்றும் இச்சை வழி பெற்று வாழ்க வென்றும், நின்னுட் கலந்து எவ்வாற்றானும் உன்னைப் பிரியேன் என்றும் ஆணையிட்டு வற்புறுத்த நற்செயல் தெரிவித்தவாறும். (30)

3681. காய்எலாம் கனிஎனக் கனிவிக்கும் ஒருபெருங்
கருணைஅமு தேஎனக்குக்
கண்கண்ட தெய்வமே கலிகண்ட அற்புதக்
காட்சியே கனகமலையே
தாய்எலாம் அனையஎன் தந்தையே ஒருதனித்
தலைவனே நின்பெருமையைச்
சாற்றிட நினைத்திட மதித்திட அறிந்திடச்
சார்கின்ற தோறும்அந்தோ
வாய்எலாந் தித்திக்கும் மனம்எலாந் தித்திக்கும்
மதிஎலாந் தித்திக்கும்என்
மன்னியமெய் அறிவெலாந் தித்திக்கும் என்னில்அதில்
வரும்இன்பம் என்புகலுவேன்
தாய்எலாம் பெற்றநிலை மேல்அருட் சுகம்எலாம்
தோன்றிட விளங்குசுடரே
துரியவெளி நடுநின்ற பெரியபொரு ளேஅருட்
சோதிநட ராசகுருவே.

உரை : தோன்றுகின்ற காய்களெல்லாம் இனிய கனிகளாகப் பழுக்கச் செய்யும் ஒரு பெரிய ஒப்பற்ற கருணையாகிய அமுதமே; எனக்குக் கண்கண்ட தெய்வமே; இக்கலி காலத்தில் எம்போல்வார் கண் காண விளங்குகின்ற அற்புதக் காட்சியே; பொன் மலையே; தாய்மைப் பண்பெலாம் திரண்டு உருக் கொண்டாற் போன்ற எனக்குத் தந்தையே; ஒப்பற்ற தலைவனே; உன்னுடைய பெருமையைச் சொல்லவும், நினைக்கவும், மதிப்பிடவும், அறிந்து கொள்ளவும் முற்படும் போதெல்லாம் என் வாயெல்லாம் தித்திக்கும், மனமெல்லாம் தித்திக்கும், அறிவெல்லாம்

தித்திக்கும், என் அறிவினுள் நிலைபெற்ற உண்மை யறிவு முற்றும் இனிக்கும் என்றுல் அதனுல் வரும் இன்பத்தை என்னென்று சொல்லுவேன்? தூய்மை யெலாம் ஒருங்கு பெற்ற நிலையின்கண் உள தாகும் திருவருள் ஞான வின்ப மெல்லாம் எனக்குள் விளங்க நிற்கின்ற சுடராகியவனே; துரிய வெளியின்கண் நின்று திகழ்கின்ற பரம்பொருளே; அருட்சோதி யுருவாகிய நடராச குருபரனே வணக்கம். எ.று.

உண்டற் காகாத காய்கள் அனைத்தும், உண்டற் கினிய கனி களாக்கும் அருட் செயலைப் புரிபவனதலால் இறைவனை, "காய் எலாம் கனி எனக் கனிவிக்கும் ஒருபெருங் கருணை அமுதே" எனப் புகழ்கின்றார். தெய்வங்கள் காணப் படாவாயினும் குருபரனுய்த் தோன்றிக் கண் காண நிற்பது பற்றி, "எனக்குக் கண்கண்ட தெய்வமே" என உரைக்கின்றார். இக்கலி காலத்தில் அற்புதக் காட்சிகள் தோன்றுவதும், வியப்பை விளை விப்பதும் இல்லையாதலால், "கலி கண்ட அற்புதக் காட்சியே" என விளம்புகின்றார். பொன் மலை போல் சிவனது திருமேனி புகழப்படுவது பற்றி, "கனக மலையே" என்கின்றார். தாய்மையினும் அன்புடைப் பொருள் உலகில் வேறின்மையின், "தாய் எலாம் அனைய என் தந்தை யே" என்று சொல்லுகின்றார். தாய் போல் தலையளி செய்யினும், தந்தை போல் அறிவு நல்குதலின் நீங்காமையின், "தந்தையே" என இணைத் துரைக்கின்றார். சாற்றுதல் - சொல்லுதல். மதித்தல் - உயர்வுறக் கொள்ளுதல். அறிதல் - தெளிந்து ஏற்றுக் கொள்ளுதல். சாற்றிட வாயெலாம் தித்திக்கும் எனவும், நினைத்திட மனமெலாம் தித்திக்கும் எனவும், மதித்திட மதியெலாம் தித்திக்கும் எனவும், அறிந்திட மெய்யறி வெலாம் தித்திக்கும் எனவும் இயைத்துக் கொள்க. சொல்லுதல் நினைத்தல் முதலியவற்றுல் உண்டாகும் இன்பம் உரைத்தற் கரிதாகலான், "இன்பம் என் புகலுவேன்" என இயம்புகின்றார். சுத்தாவத்தைக்கண் எய்தும் திருவருள் ஞான வின்பத்தை, "தூய் எலாம் பெற்ற நிலை மேல் அருட் சுகம்" எனச் சுட்டிக் காட்டுகின்றார். அதீதத்தில் அனுபவ மல்லது காண்பதும், காணப்படுவதும் என இரண்டு பட்ட நிலை யில்லாமையால் துரியக் காட்சியை விதந்து, "துரிய வெளி நடு நின்ற பெரிய பொருளே" என்று சொல்லுகின்றார்.

இதனுல், ஞான குருவாய் வந்த பெருமானே நடராச மூர்த்தி என்று கொண்டு கருணை யமுதே, கண்கண்ட தெய்வமே, அற்புதக் காட்சியே, கனக மலையே, தந்தையே, தலைவனே என்றெல்லாம் ஓதித் துதித்த வாரும். (31)

3682. எய்ப்பற எனக்குக் கிடைத்தபெரு நிதியமே
எல்லாஞ்செய் வல்லசித்தாய்
என்கையில் அகப்பட்ட ஞானமணி யேஎன்னை
எழுமையும் விடாதநட்பே
கைப்பறஎன் உள்ளே இனிக்கின்ற சர்க்கரைக்
கட்டியே கருணைஅமுதே
கற்பக வனத்தே கனிந்தகனி யேஎனது
கண்காண வந்தகதியே

மெய்ப்பயன் அளிக்கின்ற தந்தையே தாயேஎன்
வினையெலாந் தீர்த்தபதியே
மெய்யான தெய்வமே மெய்யான சிவபோக
விளைவேஎன் மெய்ம்மைஉறவே
துய்ப்புறும்என் அன்பான துணையேஎன் இன்பமே
சுத்தசன் மார்க்கநிலையே
துரியவெளி நடுநின்ற பெரியபொரு ளேஅருட்
சோதிநட ராசகுருவே.

உரை : எனக்கு உளதாகும் தளர்ச்சி கெடுமாறு எனக்குக் கிடைத்த பெரிய செல்வமே; எத்தகைய செயலையும் செய்ய வல்ல சித்துப் பொருளாய் என் அகங்கையில் எய்தப் பெற்ற ஞான மணியாகியவனே; எழு பிறப்பும் எனை நீங்காத நண்பனே; கைப்புச் சிறிதும் இல்லையாக என் உள்ளத்தின்கண் இனிக்கின்ற சர்க்கரைக் கட்டி போல்பவனே; கருணையாகிய அமுதமே; கற்பக வனத்தில் பழுத்த கனியாகியவனே; என் கண்கள் இரண்டும் காணத் தோன்றிய தோன்றலே; மெய்ம்மை யான பயனை அளிக்கின்ற தந்தையே; மெய்ம்மை யன்புருவாகிய தாயே; என் வினைகள் அத்தனையும் போக்குகின்ற தலைவனே; மெய்யான தெய்வமே; மெய்ம்மை பொருந்திய சிவபோகத்தில் விளைகின்ற சிவானந்தமே; எனக்கு மெய்ம்மையான உறவே; அனுபவிக்கப்படுகின்ற அன்புருவாகிய துணைவனே; யான் நுகரும் இன்பமே; சுத்த சன்மார்க்கத்தின்கண் நிலைபெற்ற பொருளே; துரியக் காட்சிக்கு நடுநின்று தோன்றுகின்ற பரம்பொருளே; அருட் சோதியாகிய நடராசனுகிய குருபரனே வணக்கம். எ.று.

எய்ப்பு - தளர்ச்சி. பெருநிதியம் - பெருஞ் செல்வம். எல்லாம் செயல் வல்லது சித்தாகிய அறிவுப் பொருளாதலின் குருபரனை, "எல்லாம் செய் வல்ல சித்தாய்" எனப் பாராட்டுகின்றார். தன் கையால் தொட்டு அனுபவிக்கப்படுதலின், "என் கையில் அகப்பட்ட ஞான மணியே" எனவும், பிறப்புத் தோறும் இடையறாது உறுகின்ற நட்பு என்றற்கு, "என்னை எழுமையும் விடாத நட்பே" எனவும் இயம்புகின்றார். கைப்பு - கசப்பு. தேவருலகத்துக் கற்பகச் சோலையில் முற்றிக் கனிந்த பழம் என்றற்கு, "கற்பக வனத்தே கனிந்த கனியே" என்று புகலுகின்றார். கதி - தோற்றம். குருமூர்த்தியாய்க் கண் காண வருவது பற்றிக் "கண் காண வந்த கதியே" என்று உரைக்கின்றார். தந்தையால் விளையும் மெய்ப்பயன் நல்லறிவாதலின் "மெய்ப்பயன் அளிக்கின்ற தந்தையே" என்றும், அன்புருவாதலின், "தாயே" என்றும், துன்பத்திற் கேதுவாகிய வினைவகை பலவற்றையும் போக்கி யருளுவது பற்றி, "பதியே" என்றும் பகர்கின்றார். மானிட உருக்கொண்டு போந்தருளுதலின் குருபரனை, "மெய்யான தெய்வமே" எனவும், உண்மை வடிவாகிய சிவபோகானுபவத்தை, "மெய்யான சிவபோக விளைவே" எனவும், "மெய்ம்மை யுறவு" எனவும் கூறுகின்றார். அன்புடைய துணைவரைத் தொட்டும் தீண்டியும் அனுபவித்தல் உண்மையின், "துய்ப்புறும் என் அன்பான துணையே" என்று சொல்லுகின்றார்.

இதனால், திருவருள் ஞானத்தை வழங்கிய குருமுதல்வனை நடராசப் பெருமானைக் கொண்டு நிதியமே, ஞான மணியே, நட்பே, சர்க்கரைக்

கட்டியே, கருணை யமுதே என்பன முதலிய ஆர்வ மொழிகளால் போற்றியவாரும். (32)

3683. துன்புறு மனத்தனுய் எண்ணுத எண்ணிநான்
சோர்ந்தொரு புறம்படுத்துத்
தூங்குதரு ணத்தென்றன் அருகிலுற் றன்பினுல்
தூயதிரு வாய்மலர்ந்தே
இன்புறு முகத்திலே புன்னகை ததும்பவே
இருகைமலர் கொண்டுதூக்கி
என்றனே எடுத்தணைத் தாங்குமற் றேரிடத்
தியலுற இருத்திமகிழ்வாய்
வன்பறு பெருங்கருணை அமுதளித் திடர்நீக்கி
வைத்தநின் தயவைஅந்தோ
வள்ளலே உள்ளுதொறும் உள்ளக மெலாம்இன்ப
வாரிஅமு தூறிஊறித்
துன்பம்அற மேற்கொண்டு பொங்கித் ததும்பும்இச்
சுகவண்ணம் என்புகலுவேன்
துரியவெளி நடுநின்ற பெரியபொரு ளேஅருட்
சோதிநட ராசகுருவே.

உரை : வருத்தமுற்ற மனத்துடன் எண்ணற் காகாத எண்ண மெல்லாம் எண்ணிச் சோர்வுற்று ஒருபுறத்தே தூங்கும் காலத்தில், என தருகில் வந்து தூய மலர் போலும் வாயைத் திறந்து அன்பு மொழி சில பகர்ந்து முகத்திலே இன்பம் தேக்க, புன்னகை தவழத் தமது மலர் போன்ற இரண்டு கைகளாலும் என்னைத் தூக்கி யெடுத்து மார்பி லணைத்து வேருெரு இடத்தில் என்னைப் பொருந்த அமர்த்தி, மகிழ்ச்சி யுடன் மெல்லிய பெருங் கருணையாகிய அமுதளித்து, மனக்கவலையைப் போக்கி இன்புறுத்திய உனது பேரருளை நினைத்தல் தோறும், வள்ளற் பெருமானே! என் உள்ளமெல்லாம் இன்பப் பெருக்கு நிறைந்து ஞான வமுதம் ஊறிப் பெருகித் துன்ப மெல்லாம் நீங்க மேன்மேலும் பொங்கித் ததும்பும் சுகானுபவத்தை என்னென்று சொல்லுவேன்; துரியக் காட்சியில் நடுநின்று தோன்றுகின்ற பரம் பொருளே; அருட் சோதி யாகிய நடராச குருபரனே வணக்கம். எ.று.

மனத்துள் துன்பம் நிறைகின்ற போது பொருந்தாத எண்ணங்கள் பல தோன்றிச் சோர்வுபடச் செய்வது இயற்கையாதலால், "துன்புறு மனத்தனுய் எண்ணுத எண்ணி நான் சோர்ந்தொரு புறம் படுத்துத் தூங்கு தருணத்து" என்றும், அருகில் வந்து அன்பு மொழி பகர்ந்த திறத்தை, "அருகிலுற்று அன்பினுல் தூய திருவாய் மலர்ந்தும்" என்றும், சொல் வழங்குமிடத்து முகத்திலே இன்பமும் வாயிலே புன் முறுவலும் பொங்கி நின்றதன் இயல்பை, "இன்புறு முகத்திலே புன்னகை ததும்பவே" என்றும், படுத்துக் கிடந்த தன்னை இரு கை கொண்டு தூக்கி யெடுத்து மார்போ டணைத்து வேருெரு இடத்து இருப்பித்த செய்தியை, "இருகை மலர் கொண்டு தூக்கி என்றனே

எடுத்தணைத் தாங்கு மற்றேரி டத்தியலுற இருத்தி மகிழ்வாய்'' என்றும் அருள் செய்த திறத்தைப் ''பெருங் கருணை அமுதளித்திடர் நீக்கி வைத்த நின் தயவை'' என்றும் உரைக்கின்றார். கருணைக்கு மென்மைத் தன்மை இயல்பாதலால், ''வன்பறு பெருங் கருணை'' எனச் சிறப்பிக்கின்றார். வன்பு - அன்புக்கு மறுதலையாய வன்மைத் தன்மை. பெரியோர் செய்த பெருங் கருணையை நினைக்கும் போதெல்லாம் நெஞ்சில் இன்ப அமுதூறி மகிழ்ச்சி விளைவிக்குமாதலின் அந்த இயல்பு புலப்பட, ''தயவை வள்ளலே உள்ளுதொறும் உள்ளகமெலாம் இன்ப வாரி அமுதூறி ஊறித் துன்பமற மேற்கொண்டு பொங்கித் ததும்புமிச் சுக வண்ணம் என்புகலுவேன்'' என்று புகலுகின்றார்.

இதனால், கவலை மிகுதியால் எண்ணுதன எண்ணிச் சோர்ந்து படுத்திருந்த காலத்து, குருபரன் எழுந்தருளி அன்பு செய்து அருள் நல்கிய திறம் எடுத்துரைத்தவாறும். (33)

3684. ஓங்கிய பெருங்கருணை பொழிகின்ற வானமே
ஒருமைநிலை உறுஞானமே
உபயபத சததளமும் எனதிதய சததளத்
தோங்கநடு வோங்குசிவமே
பாங்கியல் அளித்தென்னை அறியாத ஒருசிறிய
பருவத்தில் ஆண்டபதியே
பாசநெறி செல்லாத நேசர்தமை ஈசராம்
படிவைக்க வல்லபரமே
ஆங்கியல்வ தென்றுமற் றீங்கியல்வ தென்றும்வாய்
ஆடுவோர்க் கரியசுகமே
ஆனந்த மயமாகி அதுவுங் கடந்தவெளி
ஆகிநிறை கின்றநிறைவே
தூங்கிவிழு சிறியனைத் தாங்கிஎழு கென்றெனது
தூக்கந் தொலைத்ததுணையே
துரியவெளி நடுநின்ற பெரியபொரு ளேஅருட்
சோதிநட ராசகுருவே.

உரை : உயர்ந்ததாகிய பெரிய கருணையைப் பொழிகின்ற மழை மேகமே; ஒருமைத் தன்மை நிலைபெற்ற ஞானப் பொருளே; இரண்டாகிய திருவடித் தாமரைகளையும் எனது இதயமாகிய தாமரையின் நடுவே ஓங்குவிக்கின்ற சிவ பரம்பொருளே; அருள் நெறியை எனக்களித்து என்னை யறியாத சிறு பருவத்திலேயே என்னை ஆண்டு கொண்ட தலைவனே; உலகியல் பாச நெறிக்கண் செல்லாத அன்பர்களை யெல்லாம் ஈசராகும்படிச் செய்ய வல்ல பரமமே; அவ்விடத் தமைவது இது வென்றும், இவ்விடத் தியல்வது இது வென்றும் வாய் வந்தது கூறுவோர்க்குப் பெறற்கரிய சுகப் பொருளே; ஆனந்தமயமாகி அந்த ஆனந்த நிலையையும் கடந்த பரவெளியாய் நிறைகின்ற பூரணப் பொருளே; உலகியலில் தாக்குண்டு உறங்கி விழுகின்ற சிறுமை யுடையவனாகிய என்னைத் தாங்கி ''அருளொளியில் எழுவாயாக'' என்று சொல்லி, எனது தூக்கத்தை நீக்கித் தெளிவித் தருளிய துணைவனே;

துரீயக் காட்சியின் நடுவே தோன்றுகின்ற பிரமப் பொருளே; அருட் சோதியாகிய நடராச குருமுதல்வனே வணக்கம். எ.று.

தனது பேரருளை வரையாது பொழிகின்றமை பற்றிப் ''பெருங் கருணை பொழிகின்ற வானமே'' என்று புகழ்கின்றார். ஒருமை உள்ளுறச் செய்யும் தியான வாயிலாக ஒளிர்கின்ற ஞானப் பொருளாதல் தோன்ற, ''ஒருமை நிலையுறு ஞானமே'' என்று உரைக்கின்றார். தமது மனத் தாமரையின் நடுவில் விளங்குகின்ற தன்மையைப் புலப்படுத்த, ''இதய சததளத்து ஓங்க நடுவோங்கு சிவமே'' என நவில்கின்றார். தனது திருவருள் ஞானத்தைப் பெறுதற்குரிய பக்குவத்தை எய்துவித்ததன்றி அருளொளியைப் பெறுதற்கில்லாமை தோன்ற, ''பாங்கியல் அளித்து'' எனவும், சிறு பருவத்தே ஆண்டு கொண்டமை புலப்பட, ''அறியாத ஒரு சிறிய பருவத்தில் ஆண்ட பதியே'' எனவும் கூறுகின்றார். பாங்கு - பக்குவம். பாச நெறி - உலகியல் வழிச் செல்கின்ற ஆசை வழிகள். பாசமற்ற தூய நெறியாய்ச் சிவ நேசத்தால் ஈசத் தன்மையை எய்து விக்கும் திறத்தை, ''பாச நெறி செல்லாத நேசர்தமை ஈசராம்படி வைக்க வல்ல பரமே'' என மொழிகின்றார். பல்வகை நெறியைக் கற்றும் கேட்டறிந்தும் ஒருதலைப் படாது அலையும் வாதிகளை, ''ஆங்கியல்வ தென்று மற்றீங் கியல்வ தென்றும் வாய் ஆடுவோர்'' எனக் குறிக்கின்றார். அவர்களுக்கு ஞானானுபவம் எய்துவது அருமையாதலால், ''வாய் ஆடு வோர்க் கரிய சுகமே'' எனக் கூறுகின்றார். ஞான அனுபவத்தின்கண் தொடக்கத்தில் ஆனந்த மயமாய் அறிவை விழுங்கிப் பின்னர் அதற்கப் பாலதாகிய பரவெளியில் நிறைந்து விளங்கும் பரசிவத்தை, ''ஆனந்த மயமாகி அதுவும் கடந்த வெளியாகி நிறைகின்ற நிறைவே'' என விளம்புகின்றார். உலகியல் பாசங்களும் ஆசை வகைகளும் தாக்குதலால் அசைவுற்று வருந்துகின்ற தமது சிறுமையைப் புலப்படுத்தற்கு, ''தூங்கி விழு சிறியன்'' என்றும், அச்சிறுமையைப் போக்கி அருள் நெறியில் நிறுத்திய திறத்தை, ''தூங்கி விழு சிறியனைத் தாங்கி எழுக வென்று எனது தூக்கம் தொலைத்த துணையே'' என்றும் சொல்லுகின்றார்.

இதனால், சிறு பருவத்தில் இறைவன் தம்மை ஆட்கொண்ட திறமும், உலகியல் பாசங்களால் அலைப்புண்டு சிறுமையுற்ற தமது சிறுமையைப் போக்கி அருள் நெறிக்கண் நிறுத்திய திறமும் அறிவித்தவாறும். (34)

திருச்சிற்றம்பலம்

23. சற்குருமணி மாலை

அஃதாவது, நடராசப் பெருமானே தமக்குச் சற்குருவாக எழுந் தருளித் திருவருள் ஞானம் நல்கி யருளினன் என்ற கருத்தால் அப் பெருமானைச் சொன்மாலை தொடுத்து வழிபடுவதாம்.

இதன்கண், சாகாத தலை, வேகாத கால், போகாத புனல் என்பன வற்றைக் குறிப்பிடுகின்றார். அன்றியும், ''அருட் பெருஞ் சோதியை உனக் களித்தனம்; அது கொண்டு துஞ்சிய மாந்தரை எழுப்பிச் சன் மார்க்கத்தில் செலுத்துக'' வெனக் குருபரன் உபதேசித்ததும் பிறவும் உரைக்கப்படுகின்றன.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3685. மாற்றறி யாதசெ ழும்பசும் பொன்னே
மாணிக்க மேசுடர் வண்ணக் கொழுந்தே
கூற்றறி யாதபெ ருந்தவர் உள்ளக்
கோயில் இருந்த குணப்பெருங் குன்றே
வேற்றறி யாதசிற் றம்பலக் கனியே
வித்தையில் வல்லவர் மெச்சுவி ருந்தே
சாற்றறி யாதஎன் சாற்றுங் களித்தாய்
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : மாற்றுக் காணப்படாத செழுமையான பசும் பொன்னனவனே; மாணிக்கம் போலும் நிற முடையவனே; தீச்சுடரின் அழகிய கொழுந்து போல்பவனே; சாதலறியாத பெரிய தவச் செல்வர் களின் திருவுள்ளத்தில் கோயில் கொண்டருளுகின்ற பெரிய குணக் குன்றமே; வேரொன் றில்லாத சிற்றம்பலத்தில் எழுந்தருளுகின்ற சிவக் கனியே; வித்தியா ஞானத்தில் மிக்கவர்கள் பாராட்டுகின்ற புதுமைப் பொருளே; பாடுத லறியாத என் பாட்டையும் கேட்டு மகிழ்ந்தவனே; ஒப்பற்ற நடராசனுகிய என் சற்குரு மணியே வணக்கம். எ.று.

பிற உலோகப் பொருட்கள் தன்னிற் கலந்து கொள்ளும் இயல் புடையதாதலின், அதன் தூய்மை காண்டற்குச் செய்யும் முயற்சி மாற்றுக் காண்டல் என்பதாம். மாற்றுக் காண முடியாத தூய செம்பொன் என்றற்கு, "மாற்றறியாத செழும் பசும்பொன்" என்று சொல்லுகின்றார். பொன்னை உரை கல்லில் தேய்த்துக் காண்பது போலக் காண முடியாமை பற்றிச் சிவனது திருமேனி நிறத்தை, "மாற்றறியாத செழும் பசும்பொன்" எனப் பாராட்டுகின்றார். மாணிக்க மணி சிவந்த நிறத்தை யுடைய தாதலின், அதனை ஒப்பது பற்றிச் சிவனை, "மாணிக்கமே" என்று மொழி கின்றார். அழல் வண்ணன் எனச் சிவனைச் சான்றோர் பாராட்டுவ துண்மையின், "சுடர் வண்ணக் கொழுந்தே" என்று சொல்லுகின்றார். சாகாத நிலை பெற்ற பெரிய தவச் செல்வர்களைக் "கூற்றறியாத பெருந்தவர்" என்று கூறுகின்றார். தவத்தால் கலந்த பெரியோர்களின் திருவுளத்தைத் தனக்குக் கோயிலாகக் கொள்பவன் என்பது பற்றி, "பெருந்தவர் உள்ளக் கோயில் இருந்த குணப் பெருங்குன்றே" எனக் குறிக்கின்றார். பெருமையும் சலியாமையும் திண்மையும் உடைமை பற்றி, "குணப் பெருங் குன்றே" என்று கூறுகின்றார். சிற்றம்பலத்தின் வேறு அம்பலம் இல்லாமை பற்றி, "வேற்றறியாத சிற்றம்பலக் கனியே" என விளம்புகின்றார். வேறு அறியாத என்பது "வேற்றறியாத" என எதுகை நோக்கி மிக்கு வந்தது. வித்தை - விச்சை யென வந்தது. வித்தியா ஞானம் என்பது கல்வி ஞானம் குறித்து நின்றது. விருந்து - புதுமை. சாற்றுதல் - ஈண்டுப் பாடுதல் மேற்று. சாற்று - பாடுகின்ற பாட்டின் மேல் நின்றது; சொன்மாலை. விரும்பி யேற்றுக் கொண்டாய் என்று சொல்பவர், "களித்தாய்" எனச் சுருங்கச் சொல்லுகின்றார். ஒப்பற்ற நடராசப் பெருமானே குருமுதல்வனுய் வந்தருளினன் என்பது கருத்த தலின் "நடராச சற்குரு மணியே" என்று புகழ்கின்றார்.

இதனுல், நடராசப் பெருமானுகிய குருபரனேப் பொன்னே, மாணிக்கமே, சுடர்க் கொழுந்தே என்பன முதலிய ஆர்வ மொழிகளால் வழிபட்டவாரும். (1)

3686. கற்கரை யும்படி கரைவிக்குங் கருத்தே
கண்மணி யேமணி கலந்தகண் ஒளியே
சொற்கரை யின்றிய ஒளியினுள் ஒளியே
துரியமுங் கடந்திட்ட பெரியசெம் பொருளே
சிற்கரை திரையறு திருவருட் கடலே
தெள்ளமு தேகனி யேசெழும் பாகே
சர்க்கரை யேஅது சார்ந்தசெந் தேனே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : கல்லும் கனிந்துருகுமாறு கரையச் செய்யும் கருத்துப் பொருளானவனே; கண்மணியே; கண்மணியிற் கலந்து ஒளிரும் ஒளியே; சொல்லின் எல்லே கடந்த ஒளியினுள் ஒளியாய் ஒளிர்பவனே; துரியவத்தையும் கடந்து நிற்கின்ற பெருமை பொருந்திய செம்பொருளே; ஞான எல்லேயாகிய அலேயில்லாத திருவருட் கடலே; தெளிந்த அமுதே; செழும் கனியே; தூய பாகு போல்பவனே; சர்க்கரையே; அச்சர்க்கரை கலந்த செந்தேன் ஒப்பவனே; ஒப்பற்ற நடராசனுகிய மெய்ம்மைக் குருவே வணக்கம். எ. று.

கருத்தினுள் உட்கருத்தாய் நின்று கல்லின் வலிதாகிய நெஞ்சையும் நீராய் உருகும்படிப் பண்ணுகின்ற அருள் நலத்தை வியந்து, "கற் கரையும்படி கரைவிக்கும் கருத்தே" என்று கூறுகின்ருர். சொற் கரை - சொல்லின் எல்லே. ஒளியினுள் ஒளியாய் இருக்கும் ஒண்பொருளே உரையால் உரைத்தல் ஆகாமை பற்றி, "சொற் கரை யின்றிய ஒளியினுள் ஒளியே" என்று கூறுகின்ருர். துரியங் கடந்த நிலே, துரியாதீதம் எனப் படும். அந்நிலேயில் காட்சிப் பொருளாவதன்றி உரை கடந்து நிற்றலின், "துரியமும் கடந்திட்ட பெரிய செம்பொருளே" என்று சிறப்பிக்கின்ருர். செம்பொருள் - பரம்பொருள். சிற்கரை - ஞான வெல்லே. ஞானிகள் ஞானத்தால் முடிவாய்ப் பெறுவது திருவருளாதலின், "சிற்கரை திருவருட் கடலே" என்றும், உலகிலுள்ள கடல்களின் வேறுபடுத்த "திரையறு திருவருட் கடலே" என்றும் செப்புகின்ருர். சிந்திப்பார் சிந்தனேக்கண் தேனுய் ஊறி நின்று இனிமை செய்யும் சிவத்தின் இயல்பினே, "தெள்ளமுதே கனியே செழும்பாகே சர்க்கரையே" என் றெல்லாம் பாராட்டுகின்ருர்.

இதனுல், சிவஞானச் செந்தேனின் சிறப்புத் தெரிவித்தவாரும். (2)

3687. என்னுயி ரேஎன தின்னுயிர்க் குயிரே
என்அறி வேஎன தறிவினுக் கறிவே
அன்னேயில் இனியஎன் அம்பலத் தமுதே
அற்புத மேபத மேஎன தன்பே

பொன்னிணை அடிமலர் முடிமிசை பொருந்தப்
பொருத்திய தயவுடைப் புண்ணியப் பொருளே
தன்னியல் அறிவருஞ் சத்திய நிலையே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : எனக்கு உயிரும் உயிர்க்குயிராயும் இருப்பவனே; எனக்கு அறிவாயும் அறிவுக்கு அறிவாயும் இருப்பவனே; பெற்ற தாயினும் இனியனாகிய திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளிய எனதமுதே; அற்புதமே, சிவ பதமே, என்னுடைய அன்பே; பொன் போன்ற இரண்டாகிய திருவடி மலர்கள் என் தலைமேல் பொருந்த வைத்தருளிய அருள் மிக்க புண்ணியப் பொருளே; தனது மெய்ம்மை இயல்பை அறிதற் கரிய மெய்ம்மை நிலையே; ஒப்பற்ற நடராசனாகிய என் சற்குரு மணியே. எ.று.

உணரும் வகையில் உயிராயும், உண்மை யுணர்த் தும் திறத்தில் உயிர்க்குயிராயும், ஒளி புலன்களின் செயலாகிய அறிவாயும், உண்மை காண்பார்கண் அறிவினுள் அறிவாய் அறிவருளுதலின் இறைவ னை ''என்னுயிரே எனது இன்னுயிர்க்குயிரே என் அறிவே எனது அறிவினுக் கறிவே'' என்று கூறுகின்றார். பெற்ற தாயினும் பேரன்பு செய்து இனிமை செய்தல் பற்றி, ''அமுதே'' என்றும், தில்லையம்பலத்தில் காணப்படுவது பற்றி, ''அம்பலத் தமுதே'' என்றும் உரைக்கின்றார். குருபரனாய் எழுந்தருளித் தனது இரண்டாகிய திருவடிகளையும் வடலூர் வள்ளலாரின் திருமுடியில் பொருந்த வைத்து ஞான வொளி நல்கிய நயம் பற்றி, ''பொன்னிணை அடிமலர் முடிமிசை பொருந்தப் பொருத்திய தயவுடைப் புண்ணியப் பொருளே'' என்று புகல்கின்றார். தாம் செய்த புண்ணியத் தின் பயனாய் எழுந்தருளியது கொண்டு குரு முதல்வனை, ''புண்ணியப் பொருளே'' என்று புகழ்கின்றார். சிவ பரம்பொருளின் இயல் நலத்தைப் பசுபாச அறிவு கொண்டு அறிய முடியாதது பற்றி, ''தன்னியல், அறிவரும் சத்திய நிலையே'' என்று கூறுகின்றார்.

இதனால், சற்குருவாகிய நடராசப் பெருமான் உயிர்க் குயிராயும், அறிவுக் கறிவாயும், பசுபாச அறிவுகளால் அறிதற் கரிதாயும் இருக்கும் திறம் கூறியவாறும். (3)

3688. காய்மனக் கடையனைக் காத்தமெய்ப் பொருளே
கலைகளுங் கருதரும் ஒருபெரும் பதியே
தேய்மதிச் சமயருக் கரியஒண் சுடரே
சித்தெலாம் வல்லதோர் சத்திய முதலே
ஆய்மதிப் பெரியருள் அமர்ந்தசிற் பரமே
அம்பலத் தாடல்செய் செம்பதத் தரசே
தாய்மதிப் பரியதோர் தயவுடைச் சிவமே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே.

உரை : எதனையும் வெறுக்கும் மனத்தால் கடையவனாகிய என்னைக் காத்தருளிய மெய்ப்பொருளே; கலைஞானிகளாலும் நினைத்தற்

கரிய தலிவனே; தேய்ந்து கெடுகின்ற அறிவுடைய சமயவாதிகளுக்கு அறிதற் கரிய ஒள்ளிய சுடராகியவனே; அறிவுடைச் செய லெல்லாம் செய்ய வல்ல நித்தியப் பொருளே; நுண்ணிதாக ஆராய்கின்ற பெரிய ஞானிகளின் உள்ளத்தில் அமர்ந்தருளிய ஞான முதல்வனே; தில்லையம் பலத்தே ஆடல் புரிகின்ற சிவந்த திருவடிகளை யுடைய அருளரசே; தாயினும் எண்ணுதற்கரிய அன்புடைய சிவ பரம்பொருளே; ஒப்பற்ற நடராசனுகிய என் மெய்ம்மைக் குருமணியே வணக்கம். எ. று.

எத்தகைய நன்பொருளைக் காணினும் வெறுத் தொதுக்கும் இயல்பைப் பிறவியிலேயே யுடைய சிலர் கீழ்மைப் பண்புடையராய்க் கெடுவது உலக இயல்பாதலின், அத்தகைய மனமுடைய என்னை அத் தீமையினின்றும் காத்தருளினாய் என்பாராய், ''காய் மனக் கடையனைக் காத்த மெய்ப்பொருளே'' என்று கூறுகின்றார். கலைஞானம் உலகியற் பொருள்களோடு ஒட்டி நிற்றலின், ''கலைகளும் கருதரும் ஒருபெரும் பதியே'' என்று பகர்கின்றார். அந்தக் கலைஞானிகளால் காண்பரிய தன்மை பற்றி, ''கலைகளும் கருதரும் ஒருபெரும் பதியே'' என உரைக்கின்றார். உண்மை காண மாட்டாது பிடிவாதத்தால் அறிவு சிறுகும் சமயவாதிகளைத் ''தேய்மதிச் சமயர்'' என்றும், அறிவுடையோர் அறிவாற்றலால் செய்யும் அருஞ் செயல் அத்தனையும் சித்து எனப் படுதலால், அவற்றை முற்றவும் செய்ய வல்லவன் என்றற்கு, ''சித்தெலாம் வல்லதோர் சத்திய முதலே'' என்றும் தெரிவிக்கின்றார். மதி நுட்பத்தால் பொருளுண்மையை ஆய்ந்துணரும் பேரறிஞர்களை, ''ஆய்மதிப் பெரியர்'' என்றும், அவர் உள்ளத்திலே ஞான மயமாய் எழுந்தருளுதலின், ''பெரியர் உள்ளமர்ந்த சிற்பரமே'' என்றும் கூறுகின்றார். செம்பதம் - சிவந்த திருவடி. சிவபதம் அருளும் திருவடி எனினும் அமையும். உலகியலில் அன்பிற்கு எல்லையாக விளங்குபவள் தாயாதலின் அவளது தாய்மை யன்பை அளவையாகக் கொண்டு ஆராயினும் ஒப்புக் காண முடியாத பேரன்பு உடையனுதலின், சிவத்தின் பேரருளை, ''தாய் மதிப் பரியதோர் தயவு'' எனச் சாற்றுகின்றார்.

இதனால், மெய்ப்பொருளும், பெரும் பதியும், ஒண்சுடரும், சத்திய முதலும், சிற்பரமும், செம்பதத் தரசும், தயாவுடைச் சிவமும் ஆகிய ஒப்பற்ற நடராசப் பெருமானே தமக்குச் சற்குரு மணியாம் எனப் புகழ்ந்தவாறும். (4)

3689. உருவமும் அருவமும் உபயமும் உளதாய்
உளதில தாய்ஒளிர் ஒருதனி முதலே
கருவினில் எனக்கருள் கனிந்தளித் தவனே
கண்ணுடை யாய்பெருங் கடவுளர் பதியே
திருநிலை பெறஎனை வளர்க்கின்ற பரமே
சிவகுரு துரியத்தில் தெளிஅனு பவமே
தருவளர் பொழில்வடல் சபைநிறை ஒளியே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : உருவம், அருவம், அருவுருவமாகியவற்றை உடையதாய் உள்பொருளாயும் இல்பொருளாயும் ஒளிர்கின்ற ஒரு தனிமுதலாய் விளங்குபவனே, கருவிலேயே எனக்குத் திருவருள் நலத்தை உவந்தளித்தவனே, நெற்றியில் கண்ணே யுடையவனே, பெரிய பெரிய தேவர்கட்குத் தலைவனே, ஞானத்திரு என்பால் நிலைபெறுமாறு என்னை நாள்தோறும் வளர்க்கின்ற பரம்பொருளே, சிவகுருவே, துரியக் காட்சியில் அனுபவத்தால் தெளியப் படுகின்ற மெய்ப்பொருளே, மரங்கள் நெருங்கி வளர்கின்ற சோலையில் வடபால் தில்லையிலுள்ள அம்பலத்தில் நிறைந்தோங்கி ஒளிர்கின்ற மெய்ப்பொருளே, ஒப்பற்ற நடராசனுகிய என் சற்குரு மணியே வணக்கம். எ.று.

உருவம், அருவம், என்ற இரண்டோடு கலந்துள்ள அருவுருவத்தை உபயம் என உரைக்கின்றார். இதனைச் சதாசிவ மூர்த்தம் என்பதும் வழக்கம். உண்மை யுணர்வு கொண் டாராய்வார்க்கு உள்பொருளாய், உலகியல் பொய்யறிவு கொண்டு காண முயல்வார்க்கு இல்பொருளாய் விளங்குதலின், ''உளது இலதாய் ஒளிர் தனி முதலே'' என வுரைக் கின்றார். இளமையிலேயே தமக்குத் திருவருள் சிவஞான நெறியில் ஈடுபாடு உண்டானமை புலப்பட, ''கருவினில் எனக்கருள் கனிந்து அளித்தவனே'' என்று கூறுகின்றார். நெற்றியில் கண்ணுடையனுதல் பற்றிச் சிவபெருமானை, ''கண்ணுடையாய்'' என்றும், ''தொழப்படும் தேவர் தொழப்படுவான்'' எனத் திருநாவுக்கரசர் முதலியோர் எடுத்தோதுவது பற்றி, ''பெருங் கடவுளது பதியே'' என்று போற்று கின்றார். சிவஞானச் செல்வம் தன்பால் நிலைபெறும்படி இறைவன் அருள் புரிவது நினைந்து, ''திரு நிலைபெற எனை வளர்க்கின்ற பரமே'' என்று புகல்கின்றார். குருவாய் எழுந்தருளிச் சிவஞானம் உணர்த்தும் செயலுடைமை பற்றி, ''சிவகுரு'' என்றும், குருவருள் ஞானத்தால் துரியக் காட்சியில் கண்டு அனுபவித்துத் தெளியப்படுவது பற்றி, ''துரியத்தில் தெளி அனுபவமே'' என்றும் இயம்புகின்றார். வடல் - வடப் பக்கம். தில்லையிலுள்ள சோலைகளின் வடபால் தில்லையம்பலம் இருந்தமை தோன்ற, ''பொழில் வடல் சபை நிறை ஒளியே'' என்று விளம்புகின்றார்.

இதனால், தனிமுதலாய், கண்ணுடையவனுய், கடவுளர் பதியாய், பரம்பொருளாய், சிவ குருவாய், துரியானுபவமாய், சபை நிறை ஒளியாய் விளங்குகின்ற நடராசப் பெருமானே சற்குருமணி என்று தெரிவித்த வாறும். (5)

3690. ஆறந்த நிலைகளின் அனுபவ நிறைவே
அதுஅது வாய்ஒளிர் பொதுவுறு நிதியே
கூறெந்த நிலைகளும் ஒருநிலை எனவே
கூறிஎன் உள்ளத்தில் குலவிய களிப்பே
பேறிந்த நெறிஎனக் காட்டிஎன் தனையே
பெருநெறிக் கேற்றிய ஒருபெரும் பொருளே
சாறெந்த நாள்களும் விளங்கும்ஓர் வடல்வாய்த்
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : நாதாந்தம் முதல் சித்தாந்தம் ஈருக வுள்ள ஆறு அந்தங் களில் பேசப்படும் நிலைகளில் நின்று, அனுபவிக்கப்படுகின்ற நிறை பொருளே, பொருள் தோறும் அதுவதுவாய் ஒளிர்கின்ற பொதுமைச் செல்வமே, மேற்கூறிய எந்த நிலைகளும் தனது கூருய்ச் சிறப்புற விளங்கும் நிலையாம் என்று உபதேசித்து என்னுள்ளத்தில் நிலவும் இன்பப் பொருளே, இந்த நெறி பெறுவது ஒரு பெரும் பேரும் என அறிவித்து என்னை அப்பெருநெறியின் உயர்த்தி யருளிய ஒப்பற்ற பெரிய பொருளே, எந்த நாட்களிலும் விழாக்கள் பொலிந்து விளங்கும் தில்லையின் வட பாலுள்ள ஒப்பற்ற நடராசனுகிய என் குருமணியே வணக்கம். எ.று.

ஆறு அந்தங்களாவன : நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், வேதாந்தம், கலாந்தம், சித்தாந்தம் என்பனவாம். நாதாந்தம் முதலிய ஆறு நிலைகளிலும் நின்று உயர்ந்தோர் பெறுகின்ற சிவானுபவத்தை, "ஆறு அந்த நிலைகளின் அனுபவ நிறைவே" என்றும், அவ்வனுபவத்தின் கண் எல்லாவற்றினும் அதுவதுவாய் நின்று பொதுமை நீங்காது பொலி கின்ற ஞானச் செல்வமாதல் பற்றிப் பரசிவத்தை, "அதுவதுவாய் ஒளிர் பொதுவுறு நிதியே" என்றும் பகர்கின்றார். ஞானப் பேற்றுக்குரிய நிலை களில் எல்லா நிலைகளும் பொது நிலையின் கூருய் விளங்குவன எனப் புகழ்ந் தருளிய அறவுரையை உள்ளத்தில் நன்கு பதிய அறிவுறுத்த நலம் புலப்பட, "கூறு எந்த நிலைகளும் ஒரு நிலை எனவே கூறி" என்றும், "என் உள்ளத்தில் குலவிய களிப்பே" என்றும் கூறுகின்றார். ஆறந்தங் களின் நிலைகளும், ஞானப் பேற்றிற் குரியனவாதலின் "கூறு எந்த நிலை களும்" எனக் குறிக்கின்றார். நிலை வகை அனைத்தையும் பொது நிலையின் கூறு எனக் கொண்டு அந்நெறிக்கண் நின்று நிலவும் பேற்றினை, "பேறிந்த நெறி எனக் காட்டி என் தனையே" என்று உரைக்கின்றார். சாறு - திருவிழா. நாள் தோறும் பல்வேறு விழாக்கள் நடை பெறும் வள முடைமை புலப்படுத்தற்கு, "சாறு எந்த நாள்களும் விளங்கும் ஓர் வடல்வாய்" என மொழிகின்றார்.

இதனால் அனுபவ நிறைவும், பொதுவுறு நிதியும், உள்ளத்தில் குலவிய களிப்பும், ஒருபெரும் பொருளுமாகிய நடராசப் பெருமான் சற்குரு முதல்வனும் எனச் சாற்றியவாறும். (6)

3691. சாகாத தலையிது வேகாத காலாம்
தரம்இது காண்எனத் தயவுசெய் துரைத்தே
போகாத புனலையும் தெரிவித்தென் உளத்தே
பொற்புற அமர்ந்ததோர் அற்புதச் சுடரே
ஆகாத பேர்களுக் காகாத நினைவே
ஆகிய எனக்கென்றும் ஆகிய சுகமே
தாகாதல் எனத்தரும் தருமசத் திரமே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : சாகாத தலை யிதுவாம், வேகாத காலின் தரம் இதுவாம் காண் என்று அருள்கூர்ந்து சொல்லிப் போகாத புனலையும் தெரிவித்து என் மனத்தின்கண் அழகுற அமர்ந்துள்ள அற்புதச் சுடரே; தகுதி

யில்லாதவர்க்குப் பொருந்தாத நினைவாயும், தகுதி பொருந்திய எனக்கு என்றும் நலம் தருவதாகிய சுகப் பொருளே; "அன்பு தருக" என வேண்டியோர்க்கு அதனைத் தடையின்றித் தருகின்ற தருமச் சத்திரம் போன்றவனே; ஒப்பற்ற நடராசனுகிய என் குருமணியே வணக்கம். எ.று.

சாகாத தலை, வேகாத கால், போகாத புனல் என்ற மூன்றையும் அன்பு மிகுதியால் சொல்லி விளக்கி யருளிய திறத்தை, "சாகாத தலை இது வேகாத காலாம் தரம் இது காண் எனத் தயவுசெய்து உரைத்தே போகாத புனலையும் தெரிவித்து" என்று புகல்கின்றார். அவற்றின் விளக்கத்தால் மனத் தெளிவுற்று நினைவின்கண் ஞான ஒளியாய் நிலவுதல் தோன்ற, "என் உளத்தே பொற்புற அமர்ந்த அற்புதச் சுடரே" என உரைக்கின்றார். சாகாத தலை என்பது சாகாத கலை எனவும் வழங்கும். சாகாத தலை என்பது பிறப்பிறப் பற்ற இடம் என்றும் பொருள் படும். சாகாத கலை என்றற்கு, சாகாமைக்கு ஏதுவாகிய வித்தை என்று பொருள் கூறுத லுண்மையின், அதனின் வேறுபடுத்தி விளக்க, "சாகாத தலை இது" என வற்புறுத்துகின்றார். சாகாத கலை யுணர்வால் சாகாத இடம் பெறுதல் வேண்டுதலின் சாகாத கலை என்பதும் விளக்கத் தகுவதாம். தூயதாகிய பிராணக் காற்று தன்னுல் தீண்டப்பட்ட எப்பொருளையும் எரித்து விடுமாதலின், வேகாத் தன்மையால் நெடிது வாழ்விக்கும் பிராண வாயுவை, "வேகாத காலாம் தரம் இது" எனக் கூறுகின்றார். வேகும் இயல்புடைய பிராணக் வாயு ஞான வமுதக் காற்று கலந்து உடல் முழுதும் பரவி உயிரை நெடிது வாழ்விக்கக் கூடிய தன்மை பெறுதலால், "வேகாத காலாம் தரம்" என அதன் இயல்பை விளக்குகின்றார். பிராணக் காற்று ஒரு பங்கும், நீர்க் காற்று இரண்டு பங்கும் சேர்ந்தால்தான் நீருண்டாகும் என விஞ்ஞானிகள் கூறுவர். பள்ளத்தை நோக்கி ஓடும் இயல்புடையது புனல். உடலின்கண் உளதாகும் விந்து எனப்படும் வெண்மையான நீரும் ஓடும் இயல்பிற்ரு யினும் உடலின்கண் மடங்கி நின்று தேகத்திற்கு வன்மையும் உயிர்க்கு ஞானமும் எய்துவித்தலின் அதன் இயல்பு கூறி யருளிய திறம் பற்றி, "போகாத புனலையும் தெரிவித்து என் உளத்தே பொற்புற அமர்ந்ததோர் அற்புதச் சுடரே" எனப் போற்றுகின்றார். சாகாத தலையும் வேகாத காலும் போலன்றிப் போகாத புனலை ஐயம் திரிபறக் கேட்போர் உள்ளம் கொள்ள உரைக்க வேண்டுதலின் முதலிரண்டையும், "தயவுசெய்து உரைத்து" என்றும், "போகாத புனலைத் தெரிவித்து" என்றும் வேறுபடுத்தி உரைக்கின்றார். சாகாத் தலை முதலிய மூன்றையும் சொன்னலும் ஏற்கும் தகுதி யில்லாதவர்களை 'ஆகாத பேர்கள்' என்றும், அவர்களுக்குப் பன்முறை யுரைத்தாலும் நினைவிற் கொள்ளாராதலால், "ஆகாத பேர்களுக் காகாத நினைவே" என அறிவிக்கின்றார். சாகாத் தலை முதலிய மூன்றையும் கேட்டாங்குத் தெளிந்து சிந்தித்து சிந்தனைக்கண் வரும் நலத்தை நுகரும் தகுதிப்பாடு தமக்கு உண்மை தோன்ற, "ஆகிய எனக்கு என்றும் ஆகிய சுகமே" என அறிவிக்கின்றார். யாவர் எத்தனைக் குற்றம் செய்யினும் அத்தனையும் பொறுத் தருளிச் சிவமாகிய நினது அன்பினைத் தருக வென இரங்கும் அடியவர்கள் வேண்டிய அடைந்து மெய்யன்பினைப் பெறுதலின், "தாகாதல் என வேண்டத் தரும் தரும சத்திரமே" என உரைக்கின்றார்.

இதனால் அற்புதச் சுடரும், ஆகாதவர்க்கு ஆகாத நீனவும் ஆகியவர்க்கு ஆகிய சுகமும், தருமச் சத்திரமும் ஆகியவர் நடராசப் பெருமானுகிய சற்குருமணி என்று தெரிவித்தவாரும். (7)

3692. தத்துவ மசிநிலை இதுஇது தானே
சத்தியம் காண்எனத் தனித்துரைத் தெனக்கே
எத்துவந் தனைகளும் நீக்கிமெய்ங் நிலைக்கே
ஏற்றிநான் இறவாத இயல்அளித் தருளால்
சித்துவந் துலகங்கள் எவற்றினும் ஆடச்
செய்வித்த பேரருட் சிவபரஞ் சுடரே
சத்துவ நெறிதரு வடல்அருட் கடலே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : தத்துவ மசி என்னும் மகாவாக்கியத்தின் பொருள் நிலை இது இது எனப் பிரித்துக் காட்டி யுரைத்து இதற்குக் கூறிய பொருள் உண்மை என உணர்க என ஒவ்வொன்றையும் தனித் தனியாகப் பிரித்துரைத்து, எனக்கு எத்தகைய பந்தங்களும் இல்லாமல் நீக்கி மெய்ஞ் ஞான நிலைக்கண் என்னை உயர்த்தி நான் உலகியல் பாச வாழ்வில் கிடந்து இறந்தொழியாத இயல்பினை அளித்துத் திருவருளால் உலகம் முற்றும் சித்துப் புரிந்து இயலும்படிச் செய்வித் தருளிய பேரருள் உருவாகிய சிவ பரஞ்சுடரே; சத்துவ நெறிகளை அருளுகின்ற தில்லை வட பால் எழுந்தருளும் அருட்கடலே; ஒப்பற்ற நடராசனுகிய என் சற்குரு மணியே வணக்கம். எ.று.

தத்துவ மசி என்னும் மகாவாக்கியம் தது துவம் அசி என மூன்று பதங்களை யுடையதாய் முறையே பிரமப் பொருள், ஆன்மா, ஆன்மா பிரமம் ஆகும் தன்மை எனப் பொருளுரைத்து இதுதான் இம்மகாவாக்கியத்தின் உண்மைப் பொருள் எனத் தனித்தனிப் பிரித்துப் பொருள் கூறித் தெளிவித்த செயலை, ''தத்துவ மாசி நிலை இதுஇது தானே சத்தியம் காண் எனத் தனித்து உரைத்து'' என உரைக்கின்றார். துவந்தனை - உலகியல் தொடர்புகள்; பந்தம் எனவும் வழங்கும். உலகியற் பாச பந்தம் நீங்கினலன்றி மெய்ஞ்ஞான நிலை கைவராதாதலின், ''எனக்கு எத்துவந்தனைகளும் நீக்கி மெய்ந்நிலைக்கே ஏற்றி'' என்றும், மகாவாக்கியப் பொருளறி வுறுத்தலால் பாசங்களின் நீங்கி மீளவும் உலகியல் பாச பந்தச் சேற்றில் அழுந்தாத தன்மையை அளித்தருளிய திறத்தை, ''நான் இறவாத இயல் அளித்து'' என்றும், திருவருள் துணை யால் உலகில் உண்மை அறிவோடு பட்ட செயல்களை யாங்குச் சென்றாலும் ஆங்காங்கு செய்து வாழ அருளியதால், ''சித்து வந்து உலகங்கள் எவற்றினும் ஆடச் செய்வித்த பேரருட் சிவபரஞ் சுடரே'' என்றும் தெரிவிக்கின்றார். சித்தாடுதல் எனக் கொண்டு அணிமா, மகிமா முதலிய எட்டுச் சித்துக்களையும் புரிதல் என்று பொருள் கூறுதல் உண்டு. ஆனால் வடலூர் வள்ளல் இச்சித்திகளைச் செய்து வாழ்ந்தார் என்று கூறுதற்குப் போதிய ஆதாரம் ஒன்றும் கிடைக்காமையால் அவ்வாறு பொருள் செய்தல் பொருத்தமாகத் தோன்றவில்லை. சத்துவ நெறி - தெளிந்த ஞான நெறி. வடல் - வடபால். இப்போது சித்தி வளாகம் அமைந்துள்ள

பகுதிக்கு வடலூர் எனப் பெயர் வழங்குதலால், வடல் என்பது அவ் விடத்தைக் குறிக்கும் என்று கூறுபவரும் உண்டு.

இதனுல், சிவபரஞ்சுடரும், அருட் கடலும் ஆகிய நடராசப் பெருமானே சற்குருமணி எனத் தெரிவித்தவாரும். (8)

3693. இதுபதி இதுபொருள் இதுசுகம் அடைவாய்
இதுவழி எனஎனக் கியல்புற உரைத்தே
விதுஅமு தொடுசிவ அமுதமும் அளித்தே
மேனிலைக் கேற்றிய மெய்ந்நிலைச் சுடரே
பொதுநடம் இடுகின்ற புண்ணியப் பொருளே
புரையறும் உளத்திடைப் பொருந்திய மருந்தே
சதுமறை முடிகளின் முடியுறு சிவமே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை; இது பதிப் பொருள், இது உயிர்ப் பொருள், பதியை அறிதற்குரிய ஞானப் பொருள் இது, இவற்றை யுணர்வதால் நீ அடையும் சுகம் இது, அதனை அடைதற்குரிய வழி இது, என்று எனக்குத் தெளிவுண்டாக உபதேசித்துத் துவாத சாந்தத்துப் பூரண சந்திரா முதத்தையும், சிவஞான அமுதத்தையும் எனக்களித்து மேலான ஞான நிலைக்கண் என்னை யேற்றுவித்த, மெய்ம்மை சான்ற ஒளிப் பொருளே; அம்பலத்தின்கண் திருக்கூத் தாடுகின்ற புண்ணியப் பொருளே; குற்றமில்லாத ஞானவான்களின் உள்ளத்தில் வீற்றிருக்கின்ற சிவ மருந்தே; நான்மறைகளின் உச்சியின்கண் விளங்குகின்ற சிவ பரம் பொருளே; ஒப்பற்ற நடராசப் பெருமானுகிய சற்குரு மணியே வணக்கம். எ.று.

சிவஞான உறுதிப் பொருள்களாகிய பதி, பசு, பாசம், மெய்ம்மைச் சுகம் அதைப் பெறும் நெறி எனச் சாத்திர ஞானப் பொருள்களை விளங்க வுரைத்தமை புலப்பட, "இது பதி இது பொருள் இது சுகம் அடைவாய் இது வழி என எனக்கு இயல்புற உரைத்தே" என்றும், சிவ யோகிகள் துவாத சாந்தத்தில் யோகக் காட்சியால் பெறுகின்ற யோகாந்த அமுதினை, "விது அமுது" என்றும், சிவபோக நிலையில் அப்பெருமக்கள் பெற்றுவக்கும் சிவஞான அமுதத்தை, "சிவ அமுதம்" என்றும், இவற்றை நுகர்ந்து மகிழும் இன்ப நிலையை "மேனிலை" என்றும், அதன்கண் தம்மை நிறுத்தித் தாம் காணச் சுடர் விட்டு ஒளிர நின்ற சிவ சூரியனை, "மெய்ந்நிலைச் சுடரே" என்றும் விளம்புகின்றார். பொது - தில்லையம்பலம். தில்லையம்பலத் திருக்கூத்து சிவ புண்ணியச் செல்வர்கள் புண்ணியப் பயனுய்ப் பெறும் பொருளாதலால், "புண்ணியப் பொருளே" எனப் புகழ்கின்றார். குற்றமற்ற ஞானிகளின் திருவுள்ளத்தில் எழுந்தருளிப் பாசத் தொடர்பால் உளதாகிய மனநோயை மாற்றும் ஞான மருந்து என்பது பற்றிச் சிவபெருமானை, "புரையறும் உளத்திடைப் பொருந்திய மருந்தே" என்று போற்றுகின்றார். இருக்கு முதலிய நான்கு வேத ஞானத்தின் முடிபொருளாய் விளங்குகின்றமை பற்றி, "சதுமறை முடிகளின் முடியுறு சிவமே" எனச் சாற்றுகின்றார்.

இதனால், மெய்ந்நிலைச் சுடரும், புண்ணியப் பொருளும், ஞான மருந்தும் சிவ பரம்பொருளுமாகிய நடராசப் பெருமான் எனது சற்குரு மணி என விளம்பியவாரும். (9)

3694. என்னிலை இதுவுறு நின்னிலை இதுவாம்
இருநிலை களும்ஒரு நிலைஎன அறிவாய்
முன்னிலை சிறிதுறல் இதுமயல் உறலாம்
முன்னிலை பின்னிலை எழுநிலை உளவாம்
இந்நிலை அறிந்தவண் எழுநிலை கடந்தே
இயனிலை அடைகஎன் றியம்பிய பரமே
தன்னிலை ஆகிய நன்னிலை அரசே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : "எனது நிலை யிதுவாகும்; இந்நிலையை அடைய முயலும் உனது நிலை இது வாகும்; இருநிலைகளும் முடிவில் சிவமாம் தன்மை என்னும் ஒருநிலை யென அறிவாயாக; உனது முன்னைய நிலை சிறிது அறிவோடு கூடிய நிலையாகும்; இப்பொழுது உள்ள இந்நிலை மயக்க நிலையாகும்; உனக்கு முன்னைய நிலையாகிய கேவல நிலையும் பின்னர் எய்தக் கடவதாகிய சுத்த நிலையாகிய முழு நிலையும் உண்டு; இந்நிலை களை அறிந்து அதீதத்திலுள்ள ஏழு நிலைகளையும் கடந்து இயலுகின்ற பரசிவ நிலையை அடைவாயாக" என்று அறிவுறுத்தி யருளிய பரம் பொருளே; தன்னிலைக் கண் மாற்றமின்றித் தானேயாகிய நன்னிலையை யுடைய அருளரசே; ஒப்பற்ற நடராசனுகிய என் சற்குருவே வணக்கம். எ.று.

சீவன் முத்தனுகிய எனது நிலை யிதுவாகும்; ஞான முயற்சியால் இந்நிலையை அடைகின்ற உனது நிலை யிதுவாகும்; இருநிலைகளும் முடிவில் முத்த நிலையாகிய ஒரு நிலைக்கு ஏதுவாம் என்பாராய், "என்னிலை இதுவுறு நின்னிலை இதுவாம் இருநிலைகளும் ஒருநிலை என அறிவாய்" என இயம்புகின்றார். முன்னிலை - கேவல நிலை. அந்நிலைக்கண் உயிரறிவு மலத்தால் மூடப்பட்டுக் கிடத்தலின், "முன்னிலை சிறிதுறல்" எனவும், இப்போது உள்ள சகல நிலையை, "இது" எனவும், இது மலமாகிய கன்மங்களால் பிணிக்கப்பட்டு மயங்கும் இயல்பினை உடையதாதலால், "இது மயல் உறலாம்" எனவும், சகல நிலையின் நீங்கிப் பின்னர் எய்த விருப்பது சுத்த நிலையாதலின் அதனைப் "பின்னிலை" எனவும், அதுவே மலப்பிணிப் பின்றித் தூய சிவ மயமாய் விளங்குவது பற்றி, "பின்னிலை முழுநிலை உளவாம்" எனவும் தெரிவிக்கின்றார். இந் நிலைகளை யறிந்து ஆறு ஆதாரமும் கடந்து ஏழாவதாகிய தத்து வாதீதத்தையும் கடந்து பரசிவ போக நிலையத்தை அடைக என அறிவுறுத்துவார், "இந்நிலை அறிந்தவண் எழுநிலை கடந்தே இயனிலை அடைக என்று இயம்பிய பரமே" என உரைக்கின்றார். ஆதாரம் ஆறும் கடந்தது ஏழாம் நிலையாகிய ஆதாராதீதம் என அறிக. அது எழுநிலை எனப்படுகிறது. எல்லா ஆன்மாக்களும் இறுதியில் அடையும் நிலையாதலின் ஏழாம் நிலைக்கு அப்பால் நிலை, "இயல் நிலை" எனப்படு கிறது. சுவாதிட்டானம் முதலாகக் கூறப்படும் ஆறும் ஈண்டு ஆதாரம்

எனப்படும். பரம்பொருள் எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாதலின் "தன்னிலை ஆகிய நன்னிலை அரசே" எனச் சாற்றுகின்றார்.

இதனால், பரம்பொருளும், அருளரசும், ஒப்பற்ற நடராசனுமாகிய பெருமானே என் சற்குருமணியாம் என விளக்கியவாறும். (10)

3695. காரணம் இதுபுரி காரியம் இதுமேல்
காரண காரியக் கருவிது பலவாய்
ஆரணம் ஆகமம் இவைவிரித் துரைத்தே
அளந்திடும் நீஅவை அளந்திடல் மகனே
பூரண நிலைஅனு பவமுறில் கணமாம்
பொழுதினில் அறிதிஎப் பொருள்நிலை களுமே
தாரணி தனில்என்ற தயவுடை அரசே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : "காரணம் இது, இதனால் விளையும் காரியம் இது, காரண காரியங்கட்குக் கருவாய் உள்ளது இது" என வேதங்களும் ஆகமங்களும் இவற்றைப் பலவாய் விரித்துரைத்து அளவைகளால் காட்டுவனவாகும்; நீ அவ்வாறு பிரமாணங்களைக் கொண்டு அளந்து வருந்த வேண்டாம்; மகனே, இப்பூமியில் நீ பூரண ஞான நிலையின் அனுபவத்தைப் பெறுவாயாயின் எப்பொருள்களையும் அவற்றின் நிலைகளையும் கணப் பொழுதில் அறிந்து கொள்வாய் என்று அறிவு தந்த அருளுடைய அரசே, ஒப்பற்ற நடராசனுகிய என் சற்குரு மணியே வணக்கம். எ.று.

வேதங்களும் ஆகமங்களும் பொருட்களை வலியுறுத்தற்காக மேற் கொள்ளும் பிரமாணங்களில் காட்சி, அனுமானம், ஆகமம் என்ற மூன்றனைத் தலையாகக் கொண்டு அவற்றுள் அனுமானப் பிரமாணத்திற்கு ஏற்றம் தருவது வழக்காதலால் அதனை மேற்கொண்டு விளக்குவாராய், காரண காரிய இயல்புகளை எடுத்து, "காரணம் இது புரி காரியம் இது மேல் காரண காரியக் கருவிது எனப் பலவாய் ஆரணம் ஆகமம் இவை விரித்துரைத்தே அளந்திடும்" என உரைக்கின்றார். பிரமாணங்களின் இயல்பையும் அவற்றின்கண் காணப்படும் பிரமாண ஆபாசங்களையும் விரித்துரைப்பது வேதாகமக் கருவி நூல்களின் இயல்பாதலின், "பலவாய் விரித்துரைத்து அளந்திடும்" எனப் பகர்கின்றார். ஆரணம் - வேதம் பிரமாணங்களைக் கொண்டு பொருள் நலங்களை அளந்து காண்பதாகிய தருக்க முறைகள். தம்மைப் பயில்பவரைத் தமது மிகுந்த ஆராய்ச்சி களில் அழுத்தி உண்மை காணும் அறிவு நலத்தை மழுங்கச் செய்தல் பற்றி, "நீ அவை அளந்திடல் மகனே" என விலக்குகின்றார். குறைவற்ற ஞானனுபவம் கைவரப் பெறுமாயின் பொருள்களையும் அவற்றின் உண்மை நிலைகளையும் எளிதில் அறிந்து கொள்ளலாம் என அறிவுறுத்திய திறத்தை, "பூரண நிலை அனுபவ முறில் கணமாம் பொழுதினில் அறிதி எப்பொருள் நிலைகளுமே தாரணி தனில் என்ற தயவுடை அரசே" என்று நவில்கின்றார். தாரணி - தரணி; நிலவுலகம். ஆசிரியன் உள்ளத்தில் அருளறம் நிறைந்தாலன்றி ஞானப் பொருளை மாணவன் உள்ளம்

கொள்ள உரைக்க மாட்டாமையால், ''தயவுடை அரசே'' எனப் புகல்கின்றார்.

இதனால் ஆரணங்களும், ஆகமங்களும் விரித்துரைக்கும் அளவை நெறியில் புகாமல், பூரண ஞானானுபவப் பேற்றின்கண் கருத்தைச் செலுத்துக, என அறிவுறுத்திய ஞான தேசிகனே நடராச மூர்த்தமாகிய சற்குரு எனத் தெரிவித்தவாறும். (11)

3696. பன்னெறிச் சமயங்கள் மதங்கள்என் றிடும்ஓர்
பவநெறி இதுவரை பரவிய திதனால்
செந்நெறி அறிந்திலர் இறந்திறந் துலகோர்
செறிஇருள் அடைந்தனர் ஆதலின் இனிநீ
புன்னெறி தவிர்த்தொரு பொதுநெறி எனும்வான்
புத்தமு தருள்கின்ற சுத்தசன் மார்க்கத்
தன்னெறி செலுத்துக என்றஎன் அரசே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : பலவகை நெறிகளையுடைய சமயங்கள் மதங்கள் என வழங்கும் பிறவிக் கேதுவாகிய பவநெறி இதுவரை நாட்டில் பரவியுள்ளது; இதனால் உலகவர் செம்மை நெறி யறியாது இறந்திறந்து மிக்க அறியாமை நிறைந்த இருள் நிலையையே அடைந்தனர்; ஆதலால் இனி இப்பொழுது நீ உலகோர் சென்ற புல்லிய நெறியை விடுத்துப் பொது நெறி எனப்படும் பெருமை தங்கிய புத்தமுதைத் தருகின்ற சுத்த சன்மார்க்கத்திற்குரிய நன்னெறிக்கண் உலக மக்களைச் செலுத்துவாயாக என்று அருளுரை வழங்கிய அருளரசே; ஒப்பற்ற நடராசனாகிய என் சற்குரு மணியே வணக்கம். எ.று.

பல நெறிப்பட்ட சமயங்களும், சமயக் கொள்கைகளும் நாட்டில் பரவி மக்கள் பலரையும் தத்தமக்குரிய நெறிகளில் செலுத்திப் பயனின்றிக் கெடச் செய்தமையை விளக்குதற்கு, ''பன்னெறிச் சமயங்கள் மதங்கள் என்றிடும் ஓர் பவநெறி இதுவரை பரவியது இதனால் செந்நெறி அறிந்திலர், உலகோர் இறந்திறந்து செறியிருள் அடைந்தனர்'' என உரைக்கின்றார். சமயங்களும் மதங்களும் காட்டிய நெறி மேலும் மேலும் பிறந்திறந்து உழலுவதற்கே ஏதுவாதல் புலப்பட, அவர்கள் காட்டிய நெறியைப் ''பவநெறி'' என்றும், அவர்கள் முடிவில் இருளுலகமே அடைந்தனர் என்றற்கு, ''செறி இருள் அடைந்தனர்'' என்றும் இயம்புகின்றார். அதனை விலக்கிச் சுத்த சன்மார்க்கமாகிய செந்நெறியை மக்களுக்குக் காட்டி அந்நெறிக்கண் செலுத்தி உய்தி பெறச் செய்க என்பாராய், ''புன்னெறி தவிர்த்தொரு பொது நெறி எனும் வான் புத்தமுது அருள்கின்ற சுத்த சன்மார்க்கத் தன்னெறி செலுத்துக'' என்று கூறி இவ்வாறு தனக்கு ஞானசிரியன் உபதேசித்தான் என்பாராய், ''என்ற என் அரசே'' என்று சொல்லுகின்றார். செந்நெறி அறியாது உலகோர் கடைப் பிடித்த பவநெறியைப் ''புன்னெறி தவிர்த்து'' என்றும், தாம் கூறுவது எல்லாச் சமயங்கட்கும் மதங்கட்கும் பொது வென வற்புறுத்தற்கு, ''பொது நெறி எனும் வான் புத்தமுது அருள்கின்ற

சுத்த சன்மார்க்கத் தன்னெறி'' எனச் சிறப்பித்தும் அதன்கண் மக்களைச் ''செலுத்துக'' என்றும் ஞானசிரியர் உபதேசித்தார் என்பது கருத்து. சன்மார்க்க நெறியை அறிவுறுத்திய ஞான குருவை, ''அரசே'' எனப் போற்றுகின்றார்.

இதனால், ''பவநெறியாகிய புன்னெறியைப் போக்கிப் பொது நெறியாகிய சுத்த சன்மார்க்கத்தில் மக்களைச் செலுத்துக'' என்ற ஞானசிரியரே ஒப்பற்ற நடராசப் பெருமானுகிய சற்குரு எனத் தெரிவித்தவாறும். (12)

3697. அடிஇது முடிஇது நடுநிலை இதுமேல்
அடிநடு முடியிலா ததுஇது மகனே
படிமிசை அடிநடு முடிஅறிந் தனையே
பதிஅடி முடியிலாப் பரிசையும் அறிவாய்
செடியற உலகினில் அருள்நெறி இதுவே
செயலுற முயலுக என்றசிற் பரமே
தடிமுகில் எனஅருள் பொழிவடல் அரசே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : முதல் இது, கடை யிது, நடுநிலை இது எனப் பொருள்களின் இயல் காட்டி, முதலும் இடையும் கடையும் இல்லாதது அது எனச் சுட்டப்படும் பரம் பொருள் இதுவாகும்; மகனே, நிலவுலகின் கண் பொருள்களின் முதல், இடை, கடை ஆகியவற்றை அறிந்துள்ளாய்; இன் பதிப் பொருளாகிய சிவத்தின் தொடக்கமும் ஈறும் இல்லாத தன்மையையும் அறிந்து கொள்வாய்; உலகிற் குற்றமற விளங்கும் திருவருள் ஞான நெறி இதுவேயாகும்; அதனைக் கைவரப் பெற முயலுவாயாக என்ற ஞான முதல்வனே; இடியோடு கூடிய மழை மேகம் எனத் திருவருளைப் பொழிகின்ற வடபால் அருளரசே; ஒப்பற்ற நடராசனுகிய என் சற்குரு மணியே வணக்கம். எ,று.

பொருள்களின் தோற்ற நிலை, நடுநிலை, கடை நிலை ஆகியவற்றைக் காண்பது போல் பரம்பொருளுக்குத் தோற்றம், நடு, முடிவு காண முடியாது என்பாராய், ''அடி இது முடி யிது நடுநிலை இது மேல் அடி நடு முடி யிலாதது இது மகனே'' என நவில்கின்றார். படி - நிலவுலகம். நிலவுலகில் காணப்படும் எப்பொருளுக்கும் தோன்று நிலை, நடுவு நிலை, முடிவு நிலை ஆகியவற்றை அறிந்து கொள்ளுவது போல் பதிப் பொருளாகிய சிவ பரம்பொருளுக்கு ஆதி யந்தமில்லாத தன்மையையும் அறிந்து கொள்ளலாம் என்பாராய், ''படி மிசை அடி நடு முடி அறிந்தனையே பதி அடி முடி யிலாப் பரிசையும் அறிவாய்'' என்று உரைக்கின்றார் என்றது உலகப் பொருள்களுக்கு ஆதி யந்தம் காண்பது போல் பரம்பொருளுக்கு அத்தன்மையை அறிய முடியாது என்பதாம். பரிசு - தன்மை. ஆதி யந்தமுடைய உலகப் பொருள்களையும், அவ்விரண்டு மில்லாத பரம்பொருளின் இயல்பையும் குற்றமற அறிந்து கொள்வது அருள் ஞான நெறியாம் என்றற்கு, ''செடியற உலகினில் அருள் நெறி இதுவே'' என்று உரைக்கின்றார். செடி- குற்றம். சிவ பரம்பொருளில் ஆதி

யந்தமில்லாத அரும்பெரும் நிலையைத் தெளிய உணர்தல் பொருட்டு, "செயலுற முயலுக" எனத் தெரிவிக்கின்றார். இவ்வாறு ஞான நிலையை அறிவுறுத்தமை பற்றிக் குருமுதல்வனை, "சிற்பரமே" என்று சிறப்பிக்கின்றார். இடி மின்னல்களோடு கூடிய மழை மேகத்தை, "தடி முகில்" என்பது மரபு. வடலரசே என்பதற்கு வடலூரில் எழுந்தருளும் அருளரசே என உரை கூறுதலும் உண்டு.

இதனால், உலகியல் பொருள்களுக்குத் தோற்ற நிலை, நடுநிலை, முடிவு நிலை ஆகிய மூன்றும் காண்பது போல் பரம்பொருளுக்குத் தோற்றமும் ஈறும் காண முடியாமையை எடுத்தோதி, இதனை யுணர்வது அருள் நெறி என அறிவுறுத்தியவாறும். (13)

3698. நண்ணிய மதநெறி பலபல அவையே
நன்றற நின்றன சென்றன சிலவே
அண்ணிய உலகினர் அறிகிலர் நெடுநாள்
அலைதரு கின்றனர் அலைவற மகனே
புண்ணியம் உறுதிரு அருள்நெறி இதுவே
பொதுநெறி எனஅறி வுறமுய லுதிநீ
தண்ணிய அமுதுணத் தந்தனம் என்றுய்
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : "உலகிற் பொருந்திய மதங்களும் நெறிகளும் பற்பலவாகும்; அவற்றுள் சில பயன் படுதலின்றிச் சின்னாள் இருந்து மறைந்தன; உலகியலைத் தழுவிய மக்கள் நெடுங் காலமாக அதனை அறியாது அலைந் தொழிகின்றார்; மகனே, அவ்வாறு அலைவதின்றி நற்பயன் பொருந்து கின்ற இதுவே அருள் நெறியாம்; இதனைப் பொது நெறி என்று அறிவிற் கொண்டு இதனைப் பெற முயலுக; இந்தத் தண்ணிய ஞான வமுதத்தை, நீ உண்ணுமாறு தந்துள்ளோம்" என்று தெரிவித்தாய்; ஒப்பற்ற நட ராசனுகிய என் குருமணியே வணக்கம். எ.று.

உலகில் மதங்களும் கொள்கைகளும் மிகப் பலவாய்ப் பொருந்தி யுள்ளன வாதலால், "நண்ணிய மதநெறி பலபல" என நவில்கின்றார். அவற்றுள் சில சில காலம் இருந்து பயனிற்று அழிந்தன என்பதற்கு, "அவையே நன்றற நின்றன சென்றன சிலவே" என்று உரைக்கின்றார். மதங்களின் வரலாறும் பயனும் காணும் மரபு இல்லாமையால் உலகத்தவர் வரலாறு அறியாது ஒன்றை விட்டு ஒன்றைப் பற்றி அலைந்து வருந்து கின்றனர் என விளக்குதற்கு, "அண்ணிய உலகினர் அறிகிலர் நெடு நாள் அலைதருகின்றனர்" என்று கூறுகின்றார். அலைதலின்றி ஒரு நெறிப் பட நிற்றற்குச் சன்மார்க்கப் பொது நெறியே தக்கது என்பாராய், "புண்ணியம் உறு திருவருள் நெறி இதுவே பொது நெறி என அறிவுற முயலுதி" எனக் கூறுகின்றார். சன்மார்க்கத்தைத் திருவருள் நெறி என்றும், அதனால் விளைவது சிவ புண்ணியம் என்றும், அது எல்லோர்க்கும் பொது நெறி என்றும் விளக்குதற்கு, "புண்ணியமுறு திருவருள் நெறி இதுவே பொது நெறி" என விளக்குகின்றார். சுத்த சன்மார்க்கமாகிய பொது நெறியைத் "தண்ணிய அமுது" எனப்

புகழ்ந்து, அதனை அருளின திறத்தை "அமுது" என்றதற்கு ஏற்ப "உணத் தந்தனம்" என்று உரைக்கின்றார்.

இதனால், சுத்த சன்மார்க்கத்தை அருள் நெறி என்றும், பொது நெறி என்றும் புகழ்ந்து ஓதியவாறும். (14)

3699. அஞ்சலை நீஒரு சிறிதும்என் மகனே
அருட்பெருஞ் சோதியை அளித்தனம் உனக் கே
துஞ்சிய மாந்தரை எழுப்புக நலமே
சூழ்ந்தசன் மார்க்கத்தில் செலுத்துக சுகமே
விஞ்சுற மெய்ப்பொருள் மேனிலை தனிலே
விஞ்சைகள் பலவுள விளக்குக என்றுரு
தஞ்சம்என் றவர்க்கருள் சத்திய முதலே
தனிநட ராசன் சற்குரு மணியே.

உரை : என் மகனே, நீ ஒருசிறிதும் இனி அஞ்சுதல் வேண்டா; உனக்கு அருட்பெருஞ் சோதியாகிய திருவருள் ஞானத்தை, நல்கி யுள்ளோம்; உலகியல் மாயையில் அழுந்திய மக்களை நலமுற எழுப்பி அவர்கட்காகக் கண்ட சன்மார்க்க நெறியில் அவர்களைச் சுகம் பெறச் செலுத்துக; எல்லாவற்றிற்கும் மேம்பட்ட மெய்ப்பொருள் நிலையமாகிய மேன் நிலையில் ஞான வித்தைகள் மிகப் பல வுள்ளன; அவற்றை அவர் களுக்கு விளக்குக என்று உரைத்தருளினாய்; தஞ்சம் என்று அடைந்த வர்க்கு அருள் புரிகின்ற மெய்ம்மை முதற்பொருளே; ஒப்பற்ற நடராசனுகிய என் சற்குரு மணியே வணக்கம். எ·று.

மெய்ம்மை ஞான விளக்கமின்றி அஞ்சிக் கிடந்த தமது மன நிலையை அறிந்து அவ்வச்சம் தீர அருட்பெருஞ் சோதியாகிய சிவ ஞானத்தைக் குருபரன் அளித்த வரலாற்றை, "அஞ்சலை நீ ஒருசிறிதும் என் மகனே அருட் பெருஞ் சோதியை அளித்தனம் உனக்கே" என்று விளம்புகின்றார். பல்வேறு சமய மதக் கோட்பாடுகளால் உலகியலில் மயங்கி உண்மை யுணரத் திறமின்றி மடிந்து கிடக்கின்ற மக்களை, "துஞ்சிய மாந்தர்" என்றும், அவர்களை அந்நிலையினின்றும் எடுத்து அருள் நெறியில் நிறுத்த வேண்டுதலின், "நலம் பெற எழுப்புக" என்றும், அது குறித்து ஆராய்ந்து கண்ட சன்மார்க்கத்தைச் 'சூழ்ந்த சன்மார்க்கம்' என்றும், அதன்கண் செலுத்திய வழி அவர்கள் சுகம் பெறுவர் என்றும் குருபரன் அறிவுறுத்திய இயல்பை, "சூழ்ந்த சன்மார்க்கத்தில் செலுத்துக சுகமே" என்றும் கூறுகின்றார். துஞ்சிய மாந்தர் என்றதைச் சிலர் இறந்து போன மக்கள் என்று பொருள் கொண்டு, "இறந்த மக்களை எழுப்புக" என ஆசிரியன் வடலூர் வள்ளலைப் பணித்தான் எனக் கூறுவதுண்டு. இங்ஙனம் அறிவு மடிந்திருக்கின்ற மக்களை எழுப்பிச் சன்மார்க்கத்தில் செலுத்திய வழி அவர்கள் சுக வாழ்வு பெறுவது உறுதி யென வற்புறுத்தற்கு, "சன்மார்க்கத்தில் செலுத்துக சுகமே" என்று உரைக்கின்றார். ஏனைய உலகியல் வாழ்வுகள் அனைத்தினும் மேம்பட்டு நிற்பது மெய்ப்பொருள் நிலவும் மேல்நிலையாகிய ஞான நிலையாதலால், "மெய்ப்பொருள் மேனிலை தனிலே" என்றும், மற்றவை யெல்லாம் பிற்பட

அந்த மேனிலையை அடைந்த விடத்துச் சுத்த வித்தை முதலிய ஞான நிலைகள் பல இருத்தல் தோன்ற, "விஞ்சைகள் பல வுள" என்றும், சுத்த வித்தையாகிய சுத்த மாயா புவன வாயிலை அடைந்த வழி ஈசுரம், சதாசிவம், விந்து, நாதம் முதலிய பல ஞானக் கிரியா நிலை இருத்தலை நினைவிற் கொண்டு, "விஞ்சைகள் பலவாம் விளக்குக" என்றும் குருபரன் அறிவுறுத்தான் என எடுத்தோதுகின்றார். தஞ்சம் என்பது எளிமைக் குறிப்பு. "தஞ்சம் என்பது எண்மைப் பொருட்டே" என்பது தொல் காப்பியம். இதனை "அபயம் புகல்" என்பதும் உண்டு.

இதனால், அருட் பெருஞ் சோதியை அளித்தனம், அது கொண்டு துஞ்சிய மாந்தரை எழுப்பிச் சனமார்க்கத்தில் செலுத்துக என்றும், சன்மார்க்க மெய்ப் பொருள் விளங்கும் மேனிலையில் விஞ்சைகள் பல வுள அவற்றை மக்கட்கு விளக்குக என்றும் குருபரன் உபதேசித்த திறம் உரைத்தவாறும். (15)

3700. வேதத்தின் முடிமிசை விளங்கும்ஓர் விளக்கே
மெய்ப்பொருள் ஆகம வியன்முடிச் சுடரே
நாதத்தின் முடிநடு நடமிடும் ஒளியே
நவைஅறும் உளத்திடை நண்ணிய நலமே
ஏதத்தின் நின்றெனை எடுத்தருள் நிலைக்கே
ஏற்றிய கருணைஎன் இன்உயிர்த் துணையே
தாதுற்ற உடம்பழி யாவகை புரிந்தாய்
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : வேத ஞானத்தின் உச்சியில் ஒளிரும் ஞான விளக்கே; மெய்ப்பொருள் உணர்விற்கு இடமாகிய ஆகம ஞானத்தின் பெரிய உச்சியில் விளங்குகின்ற சுடர்ப்பொருளே; நாத தத்துவத்தின் உச்சியில் நின்று திருக்கூத்தாடும் ஒளிப் பொருளே; குற்றமற்ற மனத்தின்கண் எழுந்தருளும் நன்பொருளே; குற்றமான நெறிகளினின்றும் எடுத்து என்னை உய்வித்தற்குத் திருவருள் நிலையத்தின்கண் ஏற்றிய கருணையுருவாகிய என்னுடைய இனிய உயிர்த் துணைவனே; பல்வகைத் தாதுக்களாலாகிய எனது பூத உடம்பிற்கு அழியா நெறியை அருளினவனே; ஒப்பற்ற நடராசனுகிய சற்குருவே வணக்கம். எ.று.

வேதாகமங்களின் உச்சியில் ஞான மயமாய் உணர்வுற்று உணர்வின் கண் ஒளிர்வது பற்றி, "வேதத்தின் முடிமிசை விளங்கும் ஓர் விளக்கே மெய்ப்பொருள் ஆகம வியன்முடிச் சுடரே" என்று உரைக்கின்றார். வேதங்களில் விதி முறைகள் உரைப்பது போல ஆகமங்களில் பொருள் உண்மைகளைத் தடை விடைகளால் சான்றோர் உரைக்கின்றார்களாதலால், "மெய்ப் பொருள் ஆகம வியன்முடிச் சுடரே" என விதந்துரைக்கின்றார். சுத்த தத்துவத்தின் மத்தகத்தில் உள்ள நாத தத்துவத்தின் உச்சியில் நடராசப் பெருமானுடைய ஞான நடனம் நடைபெறுகிறது என அறிஞர் கூறுதலால், "நாதத்தின் முடிநடு நடமிடும் ஒளியே" என நவில்கின்றார். குற்றமற்ற ஞானவான்களின் திருவுள்ளத்தைக் கோயிலாகக் கொண்டு ஞான வின்பம் அருளுதல் பற்றி, "நவை யறும் உளத்திடை நண்ணிய

நலமே'' என்று நவில்கின்றார். குற்றம் பொருந்திய உலகியல் நெறிகள் பலவற்றுள் கிடந்து அலமந்த தன்னை அருள் நெறிக்கண் நிலைபெறச் செய்தற்கு ஏதுவாயிருந்த இறைவனது பெருங் கருணையை வியந்து பேசுகின்றாராதலால், ''ஏதத்தின் நின்றெனை எடுத்தருள் நிலைக்கே ஏற்றிய கருணை என் இன்னுயிர்த் துணையே'' என்று இயம்புகின்றார். தோல், தசை, குருதி முதலிய எழுவகைத் தாதுக்களால் ஆகியது பூத உடம்பாகையால் அதனை, ''தாதுற்ற உடம்பு'' என்றும், உடம்பை அழியாது பாதுகாத்தற் குரிய நெறிகளைத் தாயுமானவர் முதலிய பெருமக்கள் வாயிலாக முன்னமே அறிவுறுத்திருக்கின்றமை புலப்பட, ''உடம்பு அழியா வகை புரிந்தாய்'' என்று உரைக்கின்றார்.

இதனால், வேதாகமங்களின் முடியிலும் நாத தத்துவத்தின் உச்சியிலும் ஞானவான்களின் திருவுள்ளத்திலும் எழுந்தருளும் சிவபெருமான் தன்னை அருள் நிலையில் எடுத்து நிறுத்தி உடம்பு அழியா வகை அறிவுறுத்திய திறம் எடுத்துரைத்தவாறும். (16)

3701. சந்திர சூரியர் ஒளிபெற விளங்கும்
தனிஅருட் பெருவெளித் தலத்தெழுஞ் சுடரே
வந்திர விடைஎனக் கருளமு தளித்தே
வாழ்கஎன் றருளிய வாழ்முதற் பொருளே
மந்திர மேஎனை வளர்க்கின்ற மருந்தே
மாநிலத் திடைஎனை வருவித்த பதியே
தந்திரம் யாவையும் உடையமெய்ப் பொருளே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை ; சந்திரனும் சூரியனும் தத்தமக்குரிய ஒளியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டுத் திருவருட் பெருவெளியில் எழுந்து விளங்கும் பரஞ்சுடர்ப் பொருளே; இரவுப் போதில் வந்து திருவருளாகிய ஞான அமுதத்தை எனக்களித்து ''வாழ்க'' என்று என்னை வாழ்த்தியருளிய எனது வாழ்முதலாகிய பரம்பொருளே; என் மனத்திட்பத்தை வளர்க்கின்ற ஞானமாகிய மந்திர மருந்தே; இப்பெரிய நிலவுலகில் என்னைப் பிறப்பித்த தலைவனே; ஆகமப் பொருள் யாவற்றையும் தன்பால் உடைய மெய்ப்பொருளே; ஒப்பற்ற நடராசனாகிய என் சற்குருவே வணக்கம். எ.று.

திருவருள் ஞானமாகிய பெருவெளியின்கண் பரம்பொருள் பரஞ் சோதியாய்த் திகழ்வது, சந்திரன் சூரியன் முதலிய வானுலக ஒளிப் பொருள்கள் தத்தமக்கு வேண்டிய நிலவொளியும் வெயிலொளியும் பெறுதற் பொருட்டு என்ற கருத்துப் புலப்பட, ''சந்திர சூரியர் ஒளி பெற விளங்கும் தனி அருட் பெருவெளித் தலத்து எழுஞ்சுடரே'' என உரைக்கின்றார். சந்திர சூரிய மண்டலங்களுக்கு அப்பாலிருந் தல்லது, சந்திர சூரியர்களுக்கு ஒளி நல்குதற்கு வாய்ப்பாகாது என உணர்க. குரு முதல்வன் ஒருநாள் இரவுப் போதில் வடலூர் வள்ளலை அடைந்து திருவருள் ஞானத்தை நல்கிய திறத்தைத் தெரிவிக்கின்றாராதலின், ''இரவிடை வந்து எனக்கு அருள் அமுதளித்து வாழ்க என்றருளிய வாழ்

முதற் பொருளே" என உரைக்கின்றார். மந்திரம் என்ற சொல்லுக்கு மனத்தைத் திடப் படுத்துவது என்று பொருள் கூறுபவாதலின், சிவ பரம்பொருளை, "மந்திரமே" என்றும், வளர்க்கின்ற மந்திர ஞான மருந்தே" என்றும் இசைக்கின்றார். நாம் நிலவுலகில் பிறந்த காரணத்தை எண்ணிய வடலூரார் வள்ளல் தம்மை யுலகத்தில் இறைவனே பிறப்பித்தான் எனத் துணிகின்றாராதலால், "மாநிலத் திடை எனை வருவித்த பதியே" என்று கூறுகின்றார். தந்திரம் - சிவாகமம். சிவாகமங்கள் கூறுகின்ற மெய்ப்பொருள் அனைத்தும் சிவ பரம் பொருளையே சுட்டி நிற்றலால், "தந்திரம் யாவையும் உடைய மெய்ப் பொருளே" எனச் சாற்றுகின்றார். ஆகமங்கள் அனைத்தையும் அருளியவன் சிவனே என்று சான்றோர் கூறுதலால் இவ்வாறு கூறு கின்றார் எனினும் பொருந்தும்.

இதனால், அருட் பெருவெளித் தலத்து ஒளிரும் சுடரும், வாழ்முதற் பொருளும், ஞான மருந்தும், பதிப் பொருளும், மெய்ப்பொருளுமாகிய நடராச மூர்த்தியே சற்குருவாம் எனத் தெரிவித்தவாரும். (17)

3702. அமரரும் முனிவரும் அதிசயித் திடவே
அருட்பெருஞ் சோதியை அன்புடன் அளித்தே
கமமுறு சிவநெறிக் கேற்றிஎன் றனையே
காத்தென துளத்தினில் கலந்தமெய்ப் பதியே
எமன்எனும் அவன்இனி இலை இலை மகனே
எய்ப்பற வாழ்கஎன் றியம்பிய அரசே
சமரச சன்மார்க்க சங்கத்தின் முதலே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : தேவர்களும் முனிவர்களும் கண்டு அதிசயிக்குமாறு அன் புடன் அருட்பெருஞ் சோதியாகிய திருவருள் ஞானத்தை எனக்களித்து நலமெல்லாம் நிறைந்துள்ள சிவ நெறிக்கண் என்னைச் செலுத்திக் காத்து, எனது உள்ளத்தில் கலந்து விளங்குகின்ற உண்மைப் பதியே; உயிர் கவரும் எமன் எனப்படும் அவன் இனி உன்னை நாடி வருவானில்லை; மகனே, இனித் தளர்ச்சி யின்றி வாழ்வாயாக என்றுரைத்த அருளரசே; சமரச சன்மார்க்கச் சங்கத்தின் முதல்வனே; ஒப்பற்ற நடராசப் பெருமானுகிய என் சற்குரு மணியே வணக்கம். எ.று.

திருவருள் ஒளி மயமாகிய சிவபெருமானையும் அவனது சிவஞானத் தையும் அருட்பெருஞ் சோதி என வடலூரார் வள்ளல் குறிக்கின்றாராதலால், அதனைத் தான் பெற்றது உரைப்பாராய், "அருட் பெருஞ் சோதியை அன்புடன் அளித்து" என்றும், தேவர் முனிவர் முதலாயினர்க்கு அது வியப்பளித்தது என்பார், "அமரரும் முனிவரும் அதிசயித்திட" என்றும் உரைக்கின்றார். கமம் - நிறைவு. "கமம் நிறைந்து இயலும்" என்பது தொல்காப்பியம். எல்லா நலன்களும் நிறைந்ததாதலின், "கமமுறு சிவநெறி" என்று சிறப்பிக்கின்றார். சிவநெறிக்கண் தம்மைச் செலுத்தியது பிற நெறிக்கண் வீழ்ந்து கெடாவாறு காப்பதாயிற்று என்பார், "என்றனையே காத்து" எனவும், மீளவும் வழுவா வண்ணம் உள்ளத்தில்

கலந்து நிற்கின்ற "மெய்ப் பதி" எனவும் விளக்குகின்றார். உலகவர் சாக்காட்டை விலைவிக்கும் எமனை நினைந்து அஞ்சுவ தியல்பாதல் பற்றி, "எமன் எனும் அவன் இனி இலை மகனே" எனத் தேற்றி அதனால் இனித் தளர்ச்சியின்றி இனிது வாழ்க என ஊக்கினர் என்பார், "எய்ப்பற வாழ்க என்று இயம்பிய அரசே" என்று உரைக்கின்றார். சமரச சன்மார்க்க சங்கத்தின் முதல்வனதல் பற்றி, "சமரச சன்மார்க்க சங்கத்தின் முதலே" என்று கூறுகின்றார்.

இதனால் மெய்ப்பதியும், அருளரசும், சமரச சன்மார்க்க சங்கத்தின் முதலுமாகிய ஒப்பற்ற நடராசப் பெருமானே சற்குரு மூர்த்தம் எனத் தெரிவித்தவாறும். (18)

3703. நன்மார்க்கத் தவர்உளம் நண்ணிய வரமே
நடுவெளி நடுநின்று நடஞ்செயும் பரமே
துன்மார்க்க வாதிகள் பெறற்கரு நிலையே
சுத்தசி வானந்தப் புத்தமு துவப்பே
என்மார்க்கம் எனக்களித் தெனையுமேல் ஏற்றி
இறவாத பெருநலம் ஈந்தமெய்ப் பொருளே
சன்மார்கச் சங்கத்தார் தழுவிய பதியே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : நன்னெறியாளர் திருவுள்ளத்தில் எழுத்தருளும் மேம்பட்ட பொருளே; இலாடத் தானத்தே தோன்றும் ஞான வெளியின் நடுவே நின்று திருக்கூத்து இயற்றும் பரம்பொருளே; தீநெறியாளராகிய சமய வாதிகள் பெறுதற் கரிய ஞான நிலையமே; சுத்த சிவானந்தமாகிய புதுமை சான்ற சிவஞான அமுதளித்து மகிழ்விப்பவனே; எனக்குரிய நன்னெறியை எனக்கறிவித் தருளி என்னையும் மேனிலைக்கண் செலுத்தி இறவாமைக் கேதுவாகிய பெரிய ஞான நலத்தைத் தந்த மெய்ப் பொருளே; சன்மார்க்கச் சங்கத்தார்க்குரிய தலைவனே; ஒப்பற்ற நடராசனாகிய என் சற்குரு மணியே வணக்கம். எ.று.

நலம் பயக்கும் அருளறத்தை மேற் கொண்டவர்களை நன்மார்க்கத் தவர் என்றும், அவர் திருவுள்ளத்தில் மேலான ஞான மூர்த்தமாய் எழுந்தருளுவது பற்றிச் சிவபெருமானை, "நன்மார்க்கத்தவர் உளம் நண்ணிய வரமே" என்றும் உரைக்கின்றார். நடு என்பது புருவநடுவாகிய இலாடத்தானம். அதன் வாயிலாகச் சாக்கிரத்தே அதீதத்தைப் புரியும் ஞானவான்கள் காண விளங்குவது ஞானாகாசமாதலின் அதனை, "நடு வெளி" என்று குறிப்பிடுகின்றார். அதன் நடுநின்று கூத்தப்பிரான் ஞான நடனம் புரிகின்றான் என்று பெரியோர் கூறுபவாதலால், "நடுவெளி நடுநின்று நடஞ் செயும் பரமே" என்று விளம்புகின்றார். தாம் தாம் மேற்கொண்ட சமய மதக் கொள்கைகளுக்காகப் பிடிவாதம் பூண்டுத் தீது செய்கின்றவர்களை, "துன்மார்க்க வாதிகள்" என்று சொல்லுகின்றார். சற்ப விதண்ட வாதங்களால் அவர்கள் அறிவு அறைபோகின்றார்கள் என்பது பற்றி, "துன்மார்க்க வாதிகள் பெறற்கு அருநிலையே" என்று நவில்கின்றார். தூய சிவஞானத்தால் உணரும் தொறும் உணரும்

தொறும் புதுப்புதுப் பெரும் போகம் தரும் இயல்பு பற்றி, "சுத்த சிவானந்தப் புத்தமுது உவப்பே" என்று உரைக்கின்றார். "சிவானந்தம் புணர்ந்தால் புணருந் தொறும் பெரும் போகம் பின்னும் புதிதாய்" (திருக் கோவை) வளர்கின்றது என மணிவாசகப் பெருமான் உரைப்பதனால், "சுத்த சிவானந்தப் புத்தமுது உவப்பே" எனப் புகல்கின்றார். தாம் மேற்கொண்டு ஒழுகுவது சுத்த சன்மார்க்கமாயினும் அதன் பொருளையும் பயனையும் விளக்கி மேனிலைக்கண் செலுத்திய திறம் வெளிப்பட, "என் மார்க்கம் எனக்கு அளித்து எனையும் மேலேற்றி" என்றும், மேலும் பிறப்பதற்கே இறக்கின்ற உலகவர் போலாது இறவாத பெருநலத்தை இறைவன் தந்தருளினன் என்பார், "இறவாத பெருநலம் ஈந்த மெய்ப் பொருளே" என்றும் உரைக்கின்றார். இறவாத பெருநலமாவது மீளவும் பிறந்து இறத்தலுக்கு உட்படாத பெரிய நலம் என்க. சன்மார்க்க சங்கத் தார்க்குச் சிவனே தலைவனுதல் விளங்க, "சன்மார்க்க சங்கத்தார் தழுவிய பதியே" என விளம்புகின்றார்.

இதனால் வரப்பொருளும், நலம் செய்யும் பரம்பொருளும், துன்மார்க் கர்கள் பெறலரும் நிலையும், புத்தமுதுவப்பும், மெய்ப்பொருளும், சன்மார்க்க சங்கத்தாருடைய தலைவருமாகிய நடராசப் பெருமானே சற்குரு மூர்த்தம் என விளம்பியவாறும. (19)

3704. ஆதியும் அந்தமும் இன்றிஒன் றுகி
அகம்புறம் அகப்புறம் புறப்புறம் நிறைந்தே
ஓதியும் உணர்ந்தும்இங் கறிவரும் பொருளே
உளங்கொள்சிற் சபைநடு விளங்குமெய்ப் பதியே
சோதியும் சோதியின் முதலுந்தான் ஆகிச்
சூழ்ந்தெனை வளர்க்கின்ற சுதந்தர அமுதே
சாதியும் சமயமும் தவிர்த்தவர் உறவே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : தோற்றமும் முடிவும் இல்லாத ஒன்றாய், அகமென்றும் புற மென்றும் அகப்புற மென்றும் புறப்புற மென்றும் காணப்படும் பொருள் நிலை அனைத்திலும் நிறைந்து பல்வேறு நூல்களையும் ஓதியும் உணர்ந்தும், இவ்வுலகில் அறிதற் கரிதாய் விளங்கும் பரம்பொருளே; மன வுணர்வால் கொள்ளப்படுகின்ற சிற்சபையின் நடுவிடத்தே விளங்குகின்ற மெய்ம்மைப் பதியே; சோதியும், சோதிப் பொருட்கு முதலும், தானாய் நிறைந்து என்னை வளர்த்தருளுகின்ற தனியுரிமை அமுதமே; சாதி வரம்புகளைக் கடந்தவர்க்கு உறவாய் விளங்குபவனே; ஒப்பற்ற நடராசப் பெரு மானாகிய சற்குரு மணியே வணக்கம். எ.று.

"ஆதியும் அந்தமு மில்லா அரும் பெருஞ் சோதி" என மணிவாசகர் முதலிய பெருமக்கள் வற்புறுத்துதலால், வடலூர் வள்ளலும் சிவ பரம்பொருளை, "ஆதியும் அந்தமும் இன்றி ஒன்றாகி" என்றும், பொருட் களை அகம், புறம், அகப் புறம், புறப்புறம் எனப் பகுத்துக் காண்பது பொருள் நூலாரின் மரபாதலின் அது பற்றி, "அகம் புறம் அகப்புறம் புறப்புறம் நிறைந்து" என்றும், "உலகெலாம் உணர்ந்து ஓதற்கு

அரியவன்'' என உயர்ந்தோர் உரைத்தலின், "ஓதியும் உணர்ந்தும் இங்கு அறிவரும் பொருளே'' என்றும் உரைக்கின்றார். ஞானிகளின் திருவுள்ளத்தையும் ஞானசபை யெனப் பெரியோர் உரைப்பது கொண்டு, "உளங் கொள் சிற்சபை நடுவிளங்கு மெய்ப் பதியே'' என்று விளம்பு கின்றார். உலகிலுள்ள சோதிப் பொருள்களும், அவற்றிற்கு முதலாகிய பரஞ்சோதியும் சிவமாதலின், "சோதியும் சோதியின் முதலும் தானுகி'' என்றும், தன்னே ஒளி நெறிக்கண் நிறுத்தி உய்வித்தமை பற்றி, "சூழ்ந்து எனே வளர்க்கின்ற சுதந்தர அமுதே'' என்றும் சொல்லுகின்றார். சாதி சமய வரம்புகளைக் கடந்து சிவ பரம்பொருள் ஒன்றே முதல் எனக் கருதி ஏனைய உயிர் வகை அனைத்தின்பாலும் அன்புரிமை கொண்டு ஒழுகுபவர் சுத்த சன்மார்க்கர்கள் ஆதலின் அவர்களை, "சாதியும் சமயமும் தவிர்த்தவர்'' என்றும், அவர்கட்கே உரிமை யுறவாக அருள் பண்ணு கின்றனுதலின், "உறவே'' என்றும் உவந்து உரைக்கின்றார்.

இதனால், அறிவரும் பொருளாய், மெய்ப் பதியாய், சுதந்தர அமுதாய், சன்மார்க்கர் உறவாய் நிலவும் நடராச மூர்த்தமே சற்குருநாதன் என அறிவுறுத்தவாறும். (20)

3705. கற்பனை முழுவதும் கடந்தவர் உளத்தே
கலந்துகொண் டினிக்கின்ற கற்பகக் கனியே
அற்பனை யாண்டுகொண் டறிவளித் தழியா
அருள்நிலை தனில்உற அருளிய அமுதே
பற்பல உலகமும் வியப்பஎன் தனக்கே
பதமலர் முடிமிசைப் பதித்தமெய்ப் பதியே
தற்பர பரம்பர சிதம்பர நிதியே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : பலவேறு கற்பனைகள் அனைத்தையும் பொருளாகக் கொள்ளாமல் இகந்து நீக்கிய சான்றோர் உள்ளத்தில் வேறறக் கலந்து கொண்டு இனிமை செய்கின்ற கற்பகக் கனி போல்பவனும், அற்பனுகிய என்னையும் ஆண்டருளி மெய்யறிவு தந்து அழியாத திருவருள் ஞான நிலையை எய்தச் செய்தருளிய அமுது போல்பவனும், பலவேறு உலகங் களிலுள்ளவர்கள் கண்டு வியப்ப எனக்குத் தன் திருவடித் தாமரையைச் சென்னியில் பொருந்த வைத்த மெய்ம்மைப் பதியும், தனக்குத் தானே பரமாகவும் ஏனைப் பரமாகிய பொருள்களுக் கெல்லாம் பரமாகவும் விளங்கு கின்ற சிதம்பரச் செல்வமுமான ஒப்பற்ற நடராசனுகிய என் சற்குருவே வணக்கம். எ.று.

உள்ளதை இல்லதாகவும், இல்லதை உள்ளதாகவும், கற்பனை செய்து கேட்பார் விம்மித முறச் செய்யும் கற்பனை வகைகள் எல்லா வற்றையும் கடந்த மெய்ஞ்ஞானிகளின் திருவுள்ளத்தில் இரண்டறக் கலந்து கொண்டு, தனது உண்மையைத் தனது இனிமைப் பண்பால் காட்டி யருளுதல் பற்றி, "கற்பனை முழுவதும் கடந்தவர் உளத்தே கலத்து கொண்டு இனிக்கின்ற கற்பகக் கனியே'' என்று கூறுகின்றார். இறைவனது முற்றறி வுடைமையும், வரம்பி லாற்ற லுடைமையும் எண்ணி

அறிகின்ற பொழுது, தான் அவ்வறி வாற்றலில் மிக மிகப் புல்லியனுய்க் காணப்படுவது கொண்டு தன்னே 'அற்பன்' என்றும், தனக்கு மெய்யுணர்வு அளித்து என்றும் அழியாத திருவருள் நிலேக்கண் தன்னே எய்துவித்தருளிய இறைவனது ஏற்றத்தை, "ஆண்டு கொண்டு அறிவு அளித்து அழியா அருள்நிலே தனில் உற அருளிய அமுதே" என்றும் உரைக்கின்ருர். மெய்யுணர்வு எய்தாவிடத்து ஆண்டு கொள்ளுதலும் அருள் நிலேயிலுற அருளுதலும் பயனில் செயலாமாதலின், "அறிவளித் தழியா அருள் நிலே தனிலுற அருளிய அமுதே" எனப் போற்றுகின்ருர். நிலவுலகில் அறிவுடையோர் சூழல்கள் மிகப்பல இருத்தலின் அவற்றிலுள்ள எல்லோரும் கண்டு வியக்கும்படித் தனக்குத் திருவருள் ஞானத்தை அருளிய திறத்தை நினேந்து, "பற்பல உலகமும் வியப்ப என் தனக்கே பதமலர் முடிமிசைப் பதித்த மெய்ப் பதியே" என்று விளம்புகின்ருர். சூழல் எனினும் உலகம் எனினும் ஒக்கும். பரம் - மேல். தற்பரம் - தனக்கு மேல் தானே என்பது. பரம்பரம் - மேலாய பொருள் பலவற்றிற்கும் மேலாயது. சிதம்பரம் - தில்லேயம் பதி. அது வடலூரில் நிறுவப்பட்டிருக் கின்ற உத்தர ஞான சிதம்பரத்தைக் குறிப்பதாக கொள்ளுவது முண்டு.

இதனுல், கற்பகக் கனியும், அருள்நிலே அருளிய அமுதும், பதமலர் பதித்த மெய்ப் பதியும், தற்பரமும், பரம்பரமும், சிதம்பர நிதியுமாகிய நடராசப் பெருமானே என்னுடைய சற்குரு என மொழிந்தவாரும். (21)

3706. பவநெறி செலுமவர் கனவினும் அறியாப்
பரம்பொரு ளாகிஎன் உளம்பெறும் ஒளியே
நவநெறி கடந்ததோர் ஞானமெய்ச் சுகமே
நான்அருள் நிலேபெற நல்கிய நலமே
சிவநெறி யேசிவ நெறிதரு நிலேயே
சிவநிலே தனில்உறும் அனுபவ நிறைவே
தவநெறி செலும்அவர்க் கினியநல் துணேயே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : பிறவிக் கேதுவாகிய நெறியின்கண் நிற்பவர் கனவின் கண்ணும் அறிய மாட்டாத பரம்பொருளாய், என் சிந்தைக்கண் திகழும் ஒளிப் பொருளும், புதிது புதிதாய்க் காணப்படும் நெறிகளே மேற் கொள்ளாது ஒழிந்தோருடைய ஞானத்தின்கண் நிலவும் மெய்ம்மைச் சுகமும், நான் திருவருள் நிலேயைப் பெறும் பொருட்டு நல்ஞானம் நல்கிய நன்பொருளும், சிவநெறியும், சிவநெறியை நல்க வல்ல ஞான நிலேயமும், சிவநெறிப் பயனுகிய சிவபோக நிலேயில் நிறைந்த அனுபவ நிறைவாகுவதும், தவநெறிக்கண் செல்லுவோர்க்கு நல்ல இனிய துணேயாவதும், நடராசப் பெருமானுகிய என் சற்குரு மணியாம் அதற்கு வணக்கம். எ.று.

பவநெறி - பிறந்திறந்து உழலும் பிறவித் துன்பத்திற் கிடமாகும் நெறி. அவர்கள் பிறவித் துன்பத்திற் கேதுவானவற்றையே நினேந்து ஒழுகுதலின், "பவநெறி செலுமவர் கனவினும் அறியாப் பரம் பொருளாகி" என்றும், அவர்களுடைய நலமும் கனவும் பிறவிக்

கேதுவாய பொருள்களேயே கண்டும் பயின்றும் ஒழுகுதலின், "கனவினும் அறியாப் பரம்பொருள்" என்றும் பகர்கின்றார். பரம்பொருளாயினும் பவ நெறியில் செல்லாத நன்மக்கள் உள்ளத்தில் ஞான விளக்காய்த் திகழ்தலின், "உளம் பெறும் ஒளியே" என்று உரைக்கின்றார். பண்டை யோர் வகுத்த நெறிகளே எண்ணுமல் புது நெறி கண்டு உரைப்போர்தம் அறிவுக் காட்சிக்கு அகப் படாமல் மேம்பட்டு நிற்கும் ஞான ஆனந்தமாய் விளங்குதலின், "ஞான மெய்ச் சுகமே" என நவில்கின்றார். ஒப்பற்ற கருணை நெறிக்கண் செல்வார் பெறும் அருட் பெருஞ் சோதி ஞானத்தைத் தனக்கு நல்கினமை விளங்க, "நான் அருள்நிலை பெற நல்கிய நலமே" என உரைக்கின்றார். சிவநெறிக்குத் தலைவனும், சிவநெறி விளைவிக்கும் நிலைக் குரியவனும், சிவபோக அனுபவத்தை நிறைவிப்பவனும் சிவ பரம் பொருளாதலின், "சிவநெறியே சிவநெறி தருநிலையே, சிவ நிலைதனிலுறும் அனுபவ நிறைவே" என்று கூறுகின்றார். தவநெறியிற் செல்லும் தவயோகிகட்கு அவரது தவயோகம் கடைபோதற்குப் பெருந் துணை புரிதலால், "தவநெறி செலும் அவர்க் கினிய நல்துணையே" என உரைக் கின்றார். திருத்துறையூரின்கண் சிவன்பால் தவநெறி வேண்டிய சுந்தரர்க்கு இனிய துணை புரிந்தமையின் அதனை நினைந்து இவ்வாறு கூறுகின்றார் எனினும் அமையும்.

இதனால் பரம்பொருளாய், உளம் பெறும் ஒளியாய், ஞான மெய்ச் சுகமாய், சிவானுபவ நிறைவாய், தவயோகியர்க்கு இனிய துணையாய் விளங்கும் ஒப்பற்ற நடராசப் பெருமானே எனது சற்குரு மணியாம் என விளம்பியவாறும். (22)

3707. அறியாமல் அறிகின்ற அறிவினுள் அறிவே
அடையாமல் அடைகின்ற அடைவினுள் அடைவே
செறியாமல் செறிகின்ற செறிவினுட் செறிவே
தினையாமல் தினைக்கின்ற தினைப்புது தினைப்பே
பிரியாமல் என்னுளம் கலந்தமெய்க் கலப்பே
பிறவாமல் இறவாமல் எனைவைத்த பெருக்கே
தறியாகி உணர்வாரும் உணர்வரும் பொருளே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : அறிகருவிகளால் அறியப் படாது உண்மை யறிவால் அறியச் செய்கின்ற அறிவுக் கறிவாகவும், மனம் மெய் முதலியவற்றுல் அடைகின்ற அனுபவத்துள் அடையும் அடைவாகவும், மெய்யால் உணராமல் உணர்வால் உணர்ந்து ஒன்றுகின்ற உணர்வாகவும், மன வுணர்வுகளால் கலக்காமல் மெய்ஞ்ஞானத்தால் கலக்க நிற்கின்ற கலப்பாகவும், என் மனத்தினின்றும் பிரிவறக் கலந்திருக்கின்ற மெய்ம்மைக் கலப்பாகவும், பிறந்திறந்து உழலாமல் என்னைப் பெரு நெறிக்கண் உய்வித்த அருட் பெருக்காகவும், யோக நெறியின் நடு தறி போல் உணர்வு ஒன்றிய யோகியர்க்கும் உணர்தற்கரிய பொருளாகவும் விளங்கும் ஒப்பற்ற நடராச மூர்த்தமாகிய என் சற்குரு மணியே வணக்கம். எ.று.

மெய் வாய் முதலிய கருவிகளைக் கொண்டு பொருள்களை அறிகின்ற பொறி யறிவுக்கும், மனம் சித்தம் முதலிய கரணங்களால் அறிகின்ற அறிவுக்கும் மேலாய் உண்மை யறிவாய் விளங்குதல் பற்றிச் சிவ பெருமானை, "அறியாமல் அறிகின்ற அறிவினுள் அறிவே" எனப் புகல் கின்றார். மனத்தாலும் மெய்யாலும் உலகியல் பொருட்களையும் உணர்வு மயமான பொருட்களையும் அடைந்து அனுபவிக்கின்ற அனுபவத்தின் இயல்பாக இலங்குவது பற்றி, "அடையாமல் அடைகின்ற அடைவினுள் அடைவே" என அறிவிக்கின்றார். மெய்யால் தீண்டியும், உணர்வால் ஒன்றியும், பொருளுண்மைகளை யுணர்ந்தும் உள்ளத்தே அடங்க நிற்கும் ஒட்பம் பற்றி, "செறியாமல் செறிகின்ற செறிவினுட் செறிவே" எனச் சிறப்பிக்கின்றார். உலகியல் பொருள்களோடு கூடிக் கலந்து நிற்பது போலன்றி ஞானக் காட்சியால் ஞானப் பொருளோடு கலந்து ஒன்றி நிற்கும் உயர்வு தோன்ற, "தினையாமல் தினைக்கின்ற தினைப்புறு தினைப்பே" என்று தெரிவிக்கின்றார். நினைக்குந் தோறும் நினைவிடத்துத் தோன்றி இன்பம் செய்தல் பற்றி, "பிரியாமல் என்னுளம் கலந்த மெய்க் கலப்பே" எனவும், பிறப்பிறப் பில்லாத முத்திப் பெரு நிலைக்குத் தம்மை உரிமை யாக்கியது பற்றி, "பிறவாமல் இறவாமல் எனை வைத்த பெருக்கே" எனவும் உரைக்கின்றார். யோக நெறிக்கண் உடல் உணர்ச்சி யின்றி நடுதறி போலும் இருந்து, யோகத்தால் உணரும் யோகிகளின் யோகக் காட்சிக்கு எட்டாது நிலவுதல் பற்றி, "தறியாகி உணர்வாரும் உணர்வரும் பொருளே" எனப் புகலுகின்றார்.

இதனால், அறிவினுள் அறிவாகியும், அடைவினுள் அடைவாகியும், செறிவினுள் செறிவாகியும், தினைப்பினுள் தினைப்பாகியும், மெய்க் கலப்பாகியும், அருட் பெருக்காகவும், உணர்வரும் பொருளாகவும் விளங்கும் ஒப்பற்ற நடராசப் பெருமானே என் சற்குரு மணி என விளக்கியவாறும். (23)

3708. கருதாமல் கருதும்ஓர் கருத்தினுட் கருத்தே
காணமல் காணும்ஓர் காட்சியின் விளைவே
எருதாகத் திரிந்தேனுக் கிகபரம் அளித்தே
இறவாத வரமுந்தந் தருளிய ஒளியே
வருதாகந் தவிர்த்திட வந்ததெள் அமுதே
மாணிக்க மலைநடு மருவிய பரமே
தருதான முணவெனச் சாற்றிய பதியே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : மனம் முதலிய கரணங்களைக் கொண்டு நினைத்துணரும் நினைவின்கண் நினைவுறுவாய்த் தோன்றுவதும், கண் முதலிய கருவி களால் காணமல் ஞானக் கண் கொண்டு காணும் காட்சியின் பயனுமாய், எருது போலத் திரிந்த எனக்கு இம்மை மறுமை நலங்களை அளித்து, இனி யும் பிறந்திறவாத வரத்தையும் தந்தருளிய அருட் பேரொளியாயும், ஞான வேட்கை நீங்கிட உள்ளத்தில் வந்தருளிய தெள்ளமுதாயும், மாணிக்க மலை போல் சபை நடுவே தோன்றுகின்ற பரம்பொருளாயும், தன்னுல் தரப்படுகின்ற ஞான தான போகமே உண்மை உணவா மென

உரைத்தருளிய பதிப்பொருளாயும் விளங்குகின்ற ஒப்பற்ற நடராசப் பெருமானுகிய சற்குரு மணியே வணக்கம். எ.று.

கண் முதலிய கருவிகளால் காண முடியாத ஞானக் காட்சியை எடுத்துச் சொல்லி மனம், சித்தம் முதலிய கரணங்களால் நிகழ்த்தலின்றி, உள்ளத்தின் உள்ளுணர்வால் உணர்வதைப் பின்னர்க் கூறியது செய்யுளாம் முறைமை பற்றி, "ஆள்வார் இல்லாத ஊர்க் காளை மாடு" போலத் திரிந்தேன் என்பார், "எருதாகத் திரிந்தேன்" எனத் தம்மையே குறித்துரைக்கின்றார். "ஆள்வார் இலிமா டாவேனே" (கோயில் மூத்த) என்று மணிவாசகரும் இதனையே எடுத்தோதுவது காண்க. செலுத்து வாரின்றித் தன் இச்சை வழியே ஒழுகிய திறம் விளங்க, "எருதாகத் திரிந்தேன்" என இயம்புகின்றார். விலக்கப்பட வேண்டிய தன்னையும் ஆட்கொண்டு இம்மை மறுமைகளின்கண் பெற வேண்டிய ஞான நலம் தந்தருளிய சிறப்புத் தோன்ற வடலூர் வள்ளல், "திரிந்தேனுக்கு இகபரம் அளித்தே" என்றும், பிறவா இறவாப் பேருகிய முத்தி நலம் தந்த பேரருளை வியந்து, "இறவாத வரமும் தந்தருளிய ஒளியே" என்றும் இயம்புகின்றார் ஞான வேட்கை மேன்மேலும் பெருகுதல் தோன்ற, "வருதாகம் தவிர்த்திட" என்றும், சிவஞான அமுதத்தை வழங்கிய திறத்தை, "வந்த தெள்ளமுதே" என்றும் புகல்கின்றார். நடு - ஞான சபை. ஞானசபையின்கண் கூத்தப் பெருமான் மாணிக்க மலைபோல் நின்றருளுதலின், "மாணிக்க மலை நடு மருவிய பரமே" என்று நவில்கின்றார். சிவஞான நிலையத்தின்கண் பெறப்படுகின்ற ஞான போகத்தை, "தானம் தரும் உணவு எனச் சாற்றிய பதியே" என்று உரைக்கின்றார்.

இதனால், கருத்தின் உட்கருத்தும், காட்சியின் விளைவும், ஒளிப் பொருளும், தெள்ளமுதும், நடு மருவிய பரமும், பதியுமாகிய ஒப்பற்ற நடராச மூர்த்தம் எனக்குச் சற்குரு என விளம்பியவாறும். (24)

3709. ஏகாஅ னேகாஎன் றேத்திடு மறைக்கே
எட்டாத நிலையேநான் எட்டிய மலையே
ஓகாள மதங்களை முழுவதும் மாற்றி
ஒருநிலை ஆக்கஎன் றுரைத்தமெய்ப் பரமே
ஈகாதல் உடையவர்க் கிருநிதி அளித்தே
இன்புறப் புரிகின்ற இயல்புடை இறையே
சாகாத வரந்தந்திங் கெனைக்காத்த அரசே
தனிநட ராசஎன் சற்குரு மணியே.

உரை : ஏகனென்றும் அனேக னென்றும் சொல்லித் துதிக்கும் வேத ஞானத்திற்கு எட்டாத நிலையமும், நான் எட்டிக் காண நின்ற ஞான மலையுமாய், விலக்கத் தக்க மத நெறிகள் முழுவதையும் மாற்றிச் சமரச சன்மார்க்கச் சமயமாக மாற்ற வேண்டுமென உரைத்த மெய்ம்மைப் பரம்பொருளாயும், "அன்பு தருக" என வேண்டி அதனைப் பெற்றவர்க்குப் பெருஞ் செல்வம் அளித்து இன்புறுமாறு அருளுகின்ற இயல்புடைய இறைவனுகியும், சாகாமைக் கேதுவாகிய வரம் தந்து எனைக் காத்தருளிய

அருளரசாயும் விளங்குகின்ற ஒப்பற்ற நடராசப் பெருமானுகிய சற்குரு பரனுக்கு வணக்கம். எ.று.

ஏகன் என்றும், அனேகன் என்றும் மறைநூல்கள் எடுத்தோதியும் காண முடியாத நிலையில் இருப்பது பற்றி, "ஏகா அனேகா என்று ஏத்திடு மறைக்கே எட்டா நிலையே" என்றும், அதனைத் தன் திருவருள் ஞானத்தால் கண்டு இன்புற்றமை தோன்ற, "நான் எட்டிய மலையே" என்றும் வடலூர் வள்ளல் உரைக்கின்றார். ஓகாளம் - வேண்டாதவற்றை வாயால் உமிழ்தல். வேண்டாத சமயங்களையும் மதங்களையும் "ஓகாள மதங்கள்" என உரைக்கின்றார். ஓகாள மதங்கள் என்பதற்கு வேண்டாது விலக்கப் படும் நஞ்சு போன்ற மதங்கள் எனினும் அமையும். வேண்டப்படாத இம்மதங்களால் உலக மக்களிடையே ஆன்ம நேய ஒருமையுணர்வு உண்டாகாமை பற்றி, "முழுவதும் மாற்றி ஒருநிலை ஆக்க என்று உரைத்த மெய்ப் பரமே" என மொழிகின்றார். ஆக்குக என்பது ஆக்க என நின்றது. கற்பனையாகாது உண்மைப் பரமாய் நிற்பது பற்றிப் பரசிவத்தை, "மெய்ப் பரமே" என உரைக்கின்றார். "அன்பு தருக" என வேண்டிய மணிவாசகர் போன்ற பெருமக்களை, "ஈகாதல் உடையவர்" எனக் கூறுகின்றார். காதல் தருக என வேண்டி அதனைப் பெற்றுடையவர் என்ற கருத்துப் புலப்பட மெய்யன்பர்களை, "ஈகாதல் உடையவர்" என இயம்புகின்றார். அன்பால் விளையும் சிவஞானச் செல்வத்தை "இருநிதி" எனக் குறிப்பிட்டு அதனை அளித்து மெய்யன்பர்களைக் குறையாத இன்ப வாழ்வுடையவராக்கும் இயல்புடைமை விளங்க இறைவனை, "இருநிதி அளித்து இன்புறுப் புரிகின்ற இயல்புடை இறையே" என ஏத்துகின்றார். சாதல் இன்னாதது எனச் சான்றோர் உரைத்தலால், பிறந்திறந்து "சாகாத நிலையை அளித் தருளிய சிவனது திருவருளை வியந்து, "சாகாத வரம் தந்து இங்கெனைக் காத்த அரசே" என்று போற்றுகின்றார்.

இதனால் மறைக்கு எட்டாத நிலையமாகவும், வள்ளற் பெருமான் எட்டிக் காண்கின்ற இன்ப மலையாகவும், வேண்டாத மதங்களை ஒரு நிலை யாக்குக என உரைத்தருளிய பரம்பொருளாயும், மெய்ம்மைக் காதலுடையவர் இன்புற அருளுகின்ற இறையாகவும், சாகா வரம் தந்து காத்த அருளரசாகவும் நடராசப் பெருமானுகிய சற்குருபரன் விளங்குதல் தெரிவித்தவாறும். (25)

உரை வேந்தர் உரை

ஆறும் திருமுறையின் இரண்டாம் பகுதி முடிந்தது

ஆரும் திருமுறை

உரைவேந்தர் உரை

மூன்றும் பகுதி

திருச்சிற்றம்பலம்

24. தற்போத இழப்பு

தற்போதம் என்பது யான் எனது என்ற செருக்கு ஏதுவாகப் பிறக்கும் மருளுணர்வு. இதனைப் பசுபோதம் எனவும் நூல்கள் வழங்குவதுண்டு. தற்போதம் ஒழிந்தாலன்றித் திருவருள் ஞான உணர்வும் அதனைப் பெறுதற்கண் உள்ள முயற்சியும் பயன்படாவாகலின் தற்போதத்தைத் துறப்பது இதனுள் எடுத்துரைக்கின்றார்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3710. அவ்வண்ணம் பழுத்தவரும் அறிந்திலர்சற் றெனினும்
அறிந்தனம்ஓர் சிறிதுகுரு அருளாலே அந்தச்
செவ்வண்ணம் பழுத்ததனித் திருஉருக்கண் டெவர்க்கும்
தெரியாமல் இருப்பம்எனச் சிந்தனைசெய் திருந்தேன்
இவ்வண்ணம் இருந்தஎனைப் பிறர்அறியத் தெருவில்
இழுத்துவிடுத் ததுகடவுள் இயற்கைஅருட் செயலோ
மவ்வண்ணப் பெருமாயை தன்செயலோ அறியேன்
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே.

உரை : சற்குரு அருளிய அருளுரையால் ஞானம் முதிர்ந்தவரும் சிறிதும் சிவத்தை அறிந்திலர் என்றாலும் குருபரன் அருளினால் நாம் ஒரு சிறிது அறிந்துள்ளோம்; குருவருள் ஞானத்தால் அந்தச் செம்மை நிறம் கொண்ட ஒப்பற்ற சிவத்தின் திருவுருவைக் கண்டு எவர்க்கும் தெரியாமல் உள்ளத்தில் கொண்டிருப்போம் என்று எண்ணிக் கொண்டு அடங்கியிருந்தேன்; இவ்வாறிருந்த என்னைச் சிவஞானி எனப் பிறரெல்லாம் அறியும்படித் தெருவில் இழுத்து விட்டு விட்டது; இது தானும் கடவுளின் இயல்பான அருட் செயலோ, மயக்கும் இயல்புடைய பெரிய மாயையின் செய்கையோ, என்னால் அறிய முடியவில்லை; அம்பலத்தின்கண் ஆடல் புரிகின்ற அருளரசே என் மனம் தெளிவின்றிக் கலங்குகின்றது; தெளிவு நல்குக. எ.று.

சிவஞானச் செந்நெறிக்கண் நிற்கும் திறம் அருட் குருவால் பெற்று அதனிடத்தே நின்று பழுத்த ஞானிகளை, "அவ்வண்ணம் பழுத்தவர்" எனக் குறிக்கின்றார். உலகில் ஞானவான்களாலும் "இன்ன வரு இன்ன

நிறம் என்று அறிவதே லரிது" என்று ஞானசம்பந்தரும், "இப்படியன் இந்நிறத்தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்ட ஒணாதே" எனத் திருநாவுக்கரசரும், "இது அவன் திருவுரு இது அவன் எனவே அமரரும் அறியார்" என மாணிக்கவாசகரும் பிறரும் கூறுதலால், "அவ்வண்ணம் பழுத்தவரும் அறிந்திலர் சற்றும்" என எடுத்துரைக்கின்றார். குருபரன் அருளிய ஞான நாட்டத்தால் சிவத்தை ஒரு அளவு அறிந்து கொண்டமை புலப்பட, "அறிந்தனம் ஓர் சிறிது குரு அருளாலே" என்று நவில்கின்றார். திருவருளே கண்ணாகக் கொண்டு நோக்கிய போது சிவ பரம் பொருள் செம்மேனி அம்மானுய்க் காட்சி தந்த திறத்தை, "அந்தச் செவ்வண்ணம் பழுத்த தனித் திருவுருக் கண்டு" என்றும், இதனை எடுத்துரைப்பின் உலகவர் எள்ளி நகையாடுவர் என நினைந்து எவர்க்கும் உரைக்காமல் தாம் இருந்ததனை வடலூர் வள்ளல், "எவர்க்கும் தெரியாமல் இருப்பம் எனச் சிந்தனை செய்திருந்தேன்" என்றும் தெரிவிக்கின்றார். சிந்தையில் அடக்கிக் கொண்டு இருந்தேன் என்பார், "சிந்தனை செய்திருந்தேன்" எனக் கூறுகின்றார். இவ்வாறு அடக்கமே பொருளாகக் கொண்டு ஒடுங்கி இருந்தாராக, அவரைக் காண்கின்ற உலகவர், திருவருளால் சிவஞானம் பெற்ற செல்வர் என எண்ணிப் பெருமதிப்பு அளித்தனராதலால், "இவ்வண்ணம் இருந்த எனைப் பிறர் அறியத் தெருவில் இழுத்து விடுத்தது" என்றும், இதற்குக் காரணம் யாதாகலாம் என்று எண்ணுகின்றவர், இறைவன் திருவருட் செயலோ உலகியல் மாயையின் மயக்கச் செயலோ என நினைந்து தெளிவுறுது வருந்தலுற்றுராதலால், "கடவுள் இயற்கை அருட் செயலோ, மவ்வண்ணப் பெரு மாயை தன் செயலோ அறியேன்" என உரைக்கின்றார். மூலையில் இருந்தாரை முற்றத்தில் விடுவது சாலப் பெரியாராகிய இறைவன் செயலாதலால், "கடவுள் இயற்கை அருட் செயலோ" எனக் குறிக்கின்றார். மவ்வண்ணம் - உலகியல்பு. உலக இயல்பு மாயா காரியமாய் ஒன்றைப் பிறிது ஒன்றுகக் காட்டும் இயல்புடையதாதலின், "மவ்வண்ணப் பெருமாயை தன்செயலோ அறியேன்" என நினைக்கின்றார். தெளிவின்றிக் கலங்கும் மனநிலையை, "மனம் ஆலை பாய்கிறது" என்பது உலக வழக்கு. வேறு வருமிடங்களிலும் இதுவே கூறிக் கொள்க.

இதனால், குருவருளால் பெற்ற திருவருட் கண் கொண்டு சிவத்தைத் தரிசித்து மூலையில் ஒடுங்கி இருந்தாராக, வடலூர் வள்ளலை உலகினர் சிவதரிசனம் பெற்ற சிவஞானி எனப் போற்றத் தொடங்கியது கண்டு, இதனால் தமக்குத் தற்போதம் தோன்றித் தமது அறிவு செயல்களைச் சிதைத்து விடுமோ என அஞ்சுகின்ற திறம் புலப்படுத்தவாறு. (1)

3711. கள்ளிருந்த மலர்இதழிச் சடைக்கனிநின் வடிவம்
கண்டுகொண்டேன் சிறிதடியேன் கண்டுகொண்ட படியே
நள்ளிருந்த வண்ணம்இன்னும் கண்டுகண்டு களித்தே
நாடறியா திருப்பம்என்றே நன்றுநினைந் தொருசார்
உள்ளிருந்த எனைத்தெருவில் இழுத்துவிடுத் ததுதான்
உன்செயலோ பெருமாயை தன்செயலோ அறியேன்
வள்ளிருந்த குணக்கடையேன் இதைநினைக் குந்தோறும்
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே.

உரை : அம்பலத்தில் கூத்தாடுகின்ற அருளரசாகிய பெருமானே! தேன் நிறைந்த மலரால் தொடுக்கப்பட்ட கொன்றை மாலையைச் சடையில் அணிந்துள்ள பரமனுகிய நினது செங்கனி போன்ற வடிவத்தை அடியேன் சிறிது கண்டு கொண்டேன்; கண்டு கொண்ட அதனை என் உள்ளத்திருந்த படியே இன்னும் கண்டு கண்டு மகிழ்வதோடு அம் மகிழ்ச்சி நாட்டவர் அறியா வண்ணம் உள்ளத்தில் கொண்டிருப்போம் என்றே பலமுறையும் நினைந்து மனையின்கண் ஒருபால் உள்ளே ஒடுங்கி இருந்த என்னைத் தெருவில் இழுத்து விடுத்துள்ளது; அதற்கு ஏதுவாவது உனது அருட் செயலோ, பெரிய உலகியல் மாயையின் செயலோ அறிகிலேன்; வளவிய கீழ்மைக் குணங்களால் கடைப்பட்டவனுகிய நான் இதை நினைக்கும் தோறும் என் மனம் கலக்கம் அடைகிறது. எ.று.

தேன் நிறைந்த புதுப் பூவாதல் விளங்கக் கொன்றை மலரை, "கள்ளிருந்த மலர் இதழி" எனக் கூறுகின்றார். சிவந்த கனி போன்ற நிறமுடையது சிவத்தின் திருமேனியாதலின், "கனி நின் வடிவம்" என்றும், அதனை முற்றவும் காணுது சிறிதே கண்டு கொண்ட துணர்த்த, "நின் வடிவம் கண்டு கொண்டேன் சிறிது அடியேன்" என்றும் கூறுகின்றார். முற்றவும் பாராது சிறிதே கண்டு பெற்ற இன்பத்தால் ஆருமை கொண்டு பிறரறியாமல் மனத்தின் உள்ளே வைத்துப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருப்போம் என எண்ணினமை புலப்பட வடலூர் வள்ளல், "அடியேன் கண்டு கொண்ட படியே இன்னும் கண்டு கண்டு களித்து நாடு அறியாது இருப்பம் என்றே நன்று நினைந்து ஒருசார் உள்ளிருந்தேன்" என உரைக்கின்றார். கண்டு கொண்ட சிவக் காட்சி மனத்தினுள் நிகழ்ந்தது என்றற்கு, "நள்ளிருந்த வண்ணம்" என்றும், நாடறிந்த வழி மனக்காட்சி சிதைந்து விடுமென்ற அச்சத்தால் நினைந்தமை தோன்ற, "நாடறியா திருப்பம் என்றே நன்று நினைந்து" என்றும், நினைவு சிதையா வண்ணம் மனையின்கண் ஒரு புறத்தே ஒடுங்கி இருந்தமை விளங்க, "ஒருசார் உள்ளிருந்த என்னை" என்றும், தாம் பெற்ற மானதக் காட்சி இன்பத்தை நாடவர் அறிந்து பலப்படப் பேசலுற்றனர் என்பாராய், "எனைத் தெருவில் இழுத்து விடுத்தது" என்றும் இயம்புகின்றார். இதற்குக் காரணம் உனது திருவருளோ உலகியலின் மாயச் செய்கையோ, இன்னதென என்னால் அறிய முடியவில்லை என்பாராய், "உன் செயலோ பெருமாயை தன் செயலோ அறியேன்" என்று கூறுகின்றார். காட்சியின் பெருமையையும், கண்ட தமது சிறுமையையும் நோக்கிய வடலூர் வள்ளல் தமக்குள் கீழ்மைக் குணங்கள் பல இருத்தலை எணணித் தம்மை, "வள்ளிருந்த குணக் கடையேன்" எனக் குறித்து, இத்தகைய யான் காட்சி பெறற திறத்தையும் உலகவர் போற்றும் வகையையும் நினைந்து இதனால் தமக்குத் தற்போதம் தோன்றித் தமது சிவக் காட்சி நிலையைச் சிதைக்குமோ என அஞ்சுகின்றமை புலப்பட, "இதை நினைக்கும் தோறும் மனம் ஆலை பாய்வது காண்" என்று சொல்லி வருந்துகின்றார்.

இதனால், தாம் பெற்ற சிவதரிசன ஆனந்தத்தை, தற்போதம் தோன்றிச் சிதைக்குமோ என அஞ்சும் திறத்தைத் தெரிவித்தவாறும். (2)

3712. இகத்திருந்த வண்ணம்எலாம் மிகத்திருந்த அருட்பேர்
இன்பவடி வம்சிறியேன் முன்புரிந்த தவத்தால்
சகத்திருந்தார் காணுதே சிறிதுகண்டு கொண்ட
தரம்நினைந்து பெரிதின்னும் தான்காண்பேம் என்றே
அகத்திருந்த எனைப்புறத்தே இழுத்துவிடுத் ததுதான்
ஆண்டவனின் அருட்செயலோ மருட்செயலோ அறியேன்
மகத்திருந்தார் என்அளவில் என்நினைப்பார் அந்தோ
மனம் ஆலைபாய்வதுகாண் மன்றில்நடத் தரசே.

உரை : மன்றில் நடம் புரிகின்ற அருளரசே! மண்ணுலக வாழ்வில் என்பால் இருந்த இயல்புக ளெல்லாம் மிகவும் திருத்தமுறும்படி அருளுருவாகிய பேரின்ப வடிவத்தைச் சிறியோனுகிய யான் முன்னைப் பிறவிகளில் செய்த தவத்தால் மண்ணுலகத்து மக்கள் காணுராகச் சிறிதே யான் கண்டு கொண்ட இயல்பினை நினைந்து இன்னும் மிக்க அளவில் காண்பேன் என்று எண்ணிக் கொண்டு மனையின்கண் ஒரு புறத்தே மூலையில் ஒடுங்கி யிருந்த என்னைப் புறத்தே பலரும் அறியக் கொணர்ந்து நிறுத்தியது ஆண்டவனுகிய நின் திருவருட் செயலோ, எனது மருட் செயலோ அறிகின்றிலேன்; ஞான நெறியில் இன்புறும் பெரியோர் என்னை நோக்கி என்ன நினைப்பார்களோ, என் மனம் அலமரல் உறுகின்றது. எ.று.

இகம் - இவ்வுலக வாழ்வு. உலக வாழ்வின்கண் நினைப்பனவும், மொழி வனவும், செய்வனவும் எல்லாம் மயக்கத்தால் குற்றம் கலந்தவை யாதலால், அவை திருவருட் சிவக் காட்சியால் குற்றம் நீங்கித் தெளிவுறும் என்பது பற்றி, "இகத்திருந்த வண்ணமெலாம் மிகத்திருந்த" என்றும், தாம் கண்டு மகிழ்ந்த சிவக் காட்சியை, "அருட் பேரின்ப வடிவம்" என்றும், அதனைத் தாம் கண்டதற்கு ஏதுவாவது "முன்பு புரிந்த தவம்" என்றும், அதனைத் தாம் சிறிது போழ்து கண்டு பெற்ற இன்பம் ஆருமையால், இன்னும் மிகவும் காண்போம் என்று எண்ண மிட்டுக் கொண்டிருந்ததை, "சிறிது கண்டு கொண்ட தரம் நினைந்து பெரிதின்னும் காண்பேம் என்று அகத்திருந்த" என்றும் உரைக்கின்ருர். தாம் சிவக் காட்சி பெற்றதனை உலகினர் அறியார் என்பார், "சகத்திருந் தார் காணுதே கண்டு கொண்ட" என்று கூறுகின்ருர். தாம் கண்ட காட்சி சிறிதாயினும் பெரிதும் காணலாம் என்ற வேட்கை எழுப்பியது பற்றி, "சிறிது கண்டு கொண்ட தரம் நினைந்து பெரிதின்னும் தான் காண்பேம்" என்று எண்ணமிடச் செய்தது என அறிக. சிவஞானத்தால் தாம் பெற்ற திருவருட் காட்சி, விரிந்த உலகிடைக் காணப் பெருது இருந்த மனையின் ஒருபுறத்தே ஒடுங்கி யிருந்தால் காணலாம் என எண்ணி இருந்தமை புலப்பட, "அகத் திருந்த என்னை" எனவும், சிவ தரிசனம் பெற்றதனல் விளைந்த நலத்தை உலகவர் பலரும் அறிந்து கொண்டமை விளங்க, "புறத்தே இழுத்து விடுத்தது" எனவும், மூலையில் இருந்த தான் முற்றத்தில் வந்தமைக்குக் காரணம் திருவருட் செயலோ எனவும், தனது மருட்சி யுணர்வு காரணமாகவோ எனவும் கவல் கின்ருராதலின், "ஆண்டவ நின் அருட் செயலோ, மருட் செயலோ அறியேன்" எனவும் இயம்புகின்ருர். மகம் - இன்பம். ஞான நெறிக்கண்

நின்று சிவக் காட்சி பெற்று இன்புறும் பெருமக்கள் தன்னைப் பற்றி யாது நினைப்பார்களோ என்று வருந்துகின்றாராதலின், "மகத்திருந்தார் என்னளவில் என் நினைப்பார் அந்தோ மனம் ஆலை பாய்வது காண்" என்று உரைக்கின்றார்.

இதனால், சிவக் காட்சி சிறிது பெற்று அதனைப் பெரிது காண வேட்கை மிகுந்து ஒரு மூலையில் ஒடுங்கி யிருந்த தம்மைத் திருவருள் உலகறியச் செய்து விட்டதனால் சிவஞானிகள் என்ன நினைப்பார்களோ என வருந்துகின்றமை தெரிவித்தவாறும். (3)

3713. கருங்களிறு போல்மதத்தால் கண்செருக்கி வீணே
காலம்எலாம் கழிக்கின்ற கடையர்கடைத் தலைவாய்
ஒருங்குசிறி யேன்தனைமுன் வலிந்தருளே வடிவாய்
உள்அமர்ந்தே உள்ளதனை உள்ளபடி உணர்த்திப்
பெருங்கருணை யால்அளித்த பேறதனை இன்னும்
பிறர்அறியா வகைபெரிதும் பெறுதும்என உள்ளே
மருங்கிருந்த எனைவெளியில் இழுத்துவிட்ட தென்னே
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே.

உரை : மன்றில் நடம் புரிகின்ற அருளரசே; கரிய யானை போல் மதம் கொண்டு செருக்கிய பார்வை கொண்டு வாழ் நாளெல்லாம் வீணே கழிக்கின்ற கீழ்மக்கள் மனைக்குச் சென்று திரியும் சிறுமை யுடைய என்னை, என் முன் போந்து வலியப் பற்றி அருளே திருவுருவாய் என் உள்ளத்தின்கண் எழுந்தருளி உண்மை வடிவாகிய தன்னை உள்ளபடி யான் அறியக் காட்டிப் பெருங் கருணையினால் எனக்குத் திருவருள் ஞானப் பேற்றினை உலகவர் அறியா வகையில் "இன்னும் மிகவும் பெறுதல் வேண்டும்" என உள்ளத்தில் எண்ணி ஒரு மூலையில் கிடந்த என்னைப் பலரறிய வெளியில் இழுத்து விட்டதற்குக் காரணம் யாதோ என என் மனம் அலைகின்றது. எ.று.

மதங் கொண்ட யானை, நல்லது தீயது என நோக்காது எதிர்ப்பட்ட பொருள்களைப் புறக்கணித்து ஒழித் தழிப்பது போல, கீழ்மக்கள் தீயவற்றைச் செய்து காலத்தை வீண் போக்குகின்றார்கள் என்பது விளங்க, "கருங் களிறு போல் மதத்தால் கண் செருக்கி வீணே காலமெலாம் கழிக்கின்ற கடையர்" எனக் குறிக்கின்றார். கண் செருக்குதல் - செருக்கு மிகுதியால் நல்லதன் நன்மை காணாமை. கடைத்தலை - மனை முற்றம். கீழ்மக்கள் மனைகட்குச் சென்று தாம் வருந்தி யலைந்த நிலையை, "கடையர் கடைத்தலைவாய் ஒருங்கு சிறியேன்" என்றும், அலைந்து கொண்டிருந்த தனக்கு இறைவன் தானே வலிய வந்து அருள்வழி காட்டி உள்ளத்தில் எழுந்தருளித் திருவருள் ஞானம் அளித்த திறத்தை, "வலிந்தருளே வடிவாய் உள்ளமர்ந்தே உள்ளதனை உள்ளபடி உணர்த்திப் பெருங் கருணையால் அளித்த பேறு" என்றும், அதனை உலகவர் அறியாத படித் தான் பெரிதும் பெற வேண்டுமென உள்ளத்தே ஆசை மிகுந்து ஒடுங்கி யிருந்த நிலையை, "அதனை இன்னும் பிறர் அறியா வகை பெரிதும் பெறுதும் என உள்ளே மருங்கிருந்த எனை" என்றும், திருவருள்

பெற்ற ஞானி என உலகவர் போற்ற லுற்றது கண்டு, "வெளியில் இழுத்து விட்டது தென்னே மனம் ஆலை பாய்வது காண்" என்றும் வடலூர் வள்ளல் எடுத்துரைக்கின்றார்.

இதனால், கீழ்மக்கள் மனை தோறும் சென்று அலைந்து கொண்டிருந்த தமக்குத் திருவருள் ஞானக் காட்சி தந்து உலகவர் போற்ற வெளிப் படுத்தினமை நினைந்து வடலூர் வள்ளல் வருந்தியவாறும். (4)

3714. நாடுகின்ற மறைகள்எலாம் நாம்அறியோம் என்று
நாணிஉரைத் தலமரவே நல்லமணி மன்றில்
ஆடுகின்ற சேவடிகண் டானந்தக் கடலில்
ஆடும்அன்பர் போல்நமக்கும் அருள்கிடைத்த தெனினும்
வீடுகின்ற பிறர்சிறிதும் அறியாமல் இருக்க
வேண்டும்என இருந்தஎன்னை வெளியில்இழுத் திட்டு
வாடுகின்ற வகைபுரிந்த விதியைநினைந் தையோ
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே.

உரை : மன்றில் நடம் புரிகின்ற அருளரசே! மெய்ப்பொருளை நோக்குகின்ற மறைநூல்கள் யாவும் "பரம்பொருளை யாம் கண்டறியோம்" என்று வெட்கி ஓலமிட்டு வருந்தவும், நல்ல மணிகள் இழைக்கப் பெற்ற அம்பலத்தில் ஆடல் புரிகின்ற திருவடியைக் கண்டு ஆனந்தக் கடலில் மூழ்கித் திளைக்கும் மெய்யன்பர்கட்குப் போல் நமக்கும் திருவருள் ஞானம் கிடைத்தது எனினும், உலக நெறியில் வீழ்ந்து வருந்துகின்ற உலகவர் சிறிதும் அறியாமல் இருக்க வேண்டுமென மூலியில் ஒடுங்கி யிருந்த என்னை முற்றத்தில் இழுத்து விட்டு வருந்தும் வகை செய்த என் விதியை நினைந்து ஐயகோ மனம் கலக்க மடைகின்றது. எ.று.

நான்கு வேதங்களாலும் நுணுகி அறிந்து அறிய முடியாத நிலையில் உள்ளது பரம்பொருள் என்று சோர்ந்து நிற்கும் திறத்தை, "நாடுகின்ற மறைகளெலாம் நாம் அறியோம் என்று நாணி உரைத்து அலமரவே" என்று குறிக்கின்றார். வைதீக நூல்களில் வல்ல ஞானவான்களை "நாடு கின்ற மறைகள்" எனக் கூறுகின்றார். "வேதங்கள் ஐயா வென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" என மாணிக்கவாசகர் கூறுவது காண்க. வேத பாரகராகிய வைதீக ஞானிகளையும் இவ்வாறே "வேதம் கடந்து தடுமாருகின்ற வஞ்ச வெளி" என்று பரஞ்சோதி முனிவர் கூறுவதும் காண்க. பெருஞானிகளால் நெடுங் காலமாக உயர்ந்தவை யென உச்சி மேல் வைத்துப் பாராட்டப் பெற்ற வேதங்கள் பரம்பொருளைக் காண தொழிந்தமை அவற்றிற்கே இழுக்கானமையின், "நாணி உரைத்து அலமரவே" என நவில்கின்றார். வைதீக ஞானத்திற்கு எட்டாத பிரமமாகிய சிவ பரம்பொருள் கூத்தப் பெருமானாய் அம்பலத்தில் ஆடு கின்ற ஆடல் கண்டு சிவஞானிகள் பேரின்பம் அடைவது பற்றி அவர் களை, "நல்ல மணி மன்றில் ஆடுகின்ற சேவடி கண்டு ஆனந்தக் கடலில் ஆடும் அன்பர்" என்று சிறப்பிக்கின்றார். அவர்களைப் போலத் தமக்கும் திருவருள் ஞானம் கிடைத்தமை புலப்பட, "நமக்கும் அருள் கிடைத்தது" என்று நவில்கின்றார். வேதங்களால் எய்தப் பெறுத திருவருள் ஞானம்

தமக்குக் கிடைத்தமை அறிந்தால் உலகவர் இகழ்வார்கள் என்று தாம் மூலியில் ஒடுங்கி யிருந்தமை விளங்க, "வீடுகின்ற பிறர் சிறிதும் அறியாமல் இருக்க வேண்டும் என இருந்த என்னை" என இயம்புகின்றார். உலகியல் மயக்கத்தில் ஆழ்ந்து தெளிவு இன்றிக் கிடப்பது தோன்ற உலக மக்களை, "வீடுகின்ற பிறர்" என விளம்புகின்றார். உலகியல் துழனியின் நீங்கி ஒருபுறத்தே ஒடுங்கி யிருந்து உள்ளக் காட்சியால் திருவருள் இன்பம் பெறுதல் முறையாதல் கருதி ஒடுங்கி யிருந்த தன்னை உலகவர் அறியச் செய்தது பற்றி, "வெளியில் இழுத்திட்டு" என்றும், அதனால் மனவொருமை சிதைந்து அலமருவது வெளிப்பட, "வாடுகின்ற விதியை நினைந்து ஐயோ மனம் ஆலி பாய்வது காண்" என வடலூர் வள்ளல் நினைக்கின்றார்.

இதனால், வைதீக ஞானிகள் பெறுத திருவருள் ஞான வின்பத்தை வடலூர் வள்ளல் பெற்று மகிழ்ந்தமை தெரிவித்தவாறும். (5)

3715. நதிகலந்த சடைஅசையத் திருமேனி விளங்க
நல்லதிருக் கூத்தாட வல்லதிரு அடிகள்
கதிகலந்து கொளச்சிறியேன் கருத்திடையே கலந்து
கள்ளம்அற உள்ளபடி காட்டிடக்கண் டின்னும்
பதிகலந்து கொளும்மட்டும் பிறர்அறியா திருக்கப்
பரிந்துள்ளே இருந்தஎன்னை வெளியில்இழுத் திட்டு
மதிகலந்து கலங்கவைத்த விதியைநினைந் தையோ
மனம்ஆலி பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே.

உரை : மன்றில் நடம் புரிகின்ற அருளரசே; கங்கை தங்கிய சடை முடி அசைந்தாட, திருமேனி ஒளி விளங்க, அம்பலத்தில் நல்ல திருக் கூத்தாடுகின்ற சிவபெருமானுடைய திருவடிகளைச் சிவகதி பெற்றுக் கலந்து கொள்ளுதற்கு, சிறுமையுடைய யான் மனத்திடையே கொண்ட கருத்திற்கேற்ப அப்பெருமான் உள்ளபடியே எனக்குக் காட்டக் கண்டு, இனியும் அப்பெருமானைக் கலந்து இன்புறுமளவும் பிறர் அறியாமல் இருக்க வேண்டுமென்று விருப்புற்று, மனைக்குள்ளே ஒடுங்கியிருந்த என்னை முற்றத்தில் வெளிப்பட நிறுத்தி அறிவு கலக்கமடையச் செய்த தீவினையை நினைந்து என் மனம் அலைகின்றது காண். எ.று.

அம்பலத்தில் திருக்கூத்தாடுகின்ற பொழுது சிவனுடைய முடியில் கங்கையைத் தாங்கிய சடை அசைந்தாடும் கோலத்தை, "நதி கலந்த சடை அசையத் திருமேனி விளங்க நல்ல திருக்கூத்தாட வல்ல திருவடி கள்" எனச் சிறப்பிக்கின்றார். சிவனுடைய திருவருள் கூத்தின்கண் உலகில் படைத்தல் முதலிய ஐவகைத் தொழிலும் நடைபெறுதலால், அவனுடைய திருக்கூத்தை "நல்ல திருக்கூத்து" என்று சிறப்பிக்கின்றார். இறைவன் ஞானத் திருக்கூத்தை மனக் கண்ணில் காணும் பேறுபெறக் கருவி கரணங்கள் எல்லாம் சிவகதிக்குரிய பதிகரணங்களாக மாற வேண்டுதலின், "கதி கலந்து கொளச் சிறியேன் கருத்திடையே கலந்து" என்றும், கூத்தாடும் திருவடிக் காட்சியால் மனத்தின்கண் படிந்து மறைந்திருக்கும் குற்றங்கள் நீங்குவது பற்றி, "கள்ளமற உள்ளபடி

காட்டிட" என்றும் இயம்புகின்றார். "உள்ளமார்ந்த அடியார் தொழு தேத்த உகக்கும் அருள் தந்தெம் கள்ளமார்ந்து கழியப் பழி தீர்த்த கடவுள்" என ஞானசம்பந்தரும் (புகலூர்) கூறுவது காண்க. அருட் கூத்தைக் கண்டு எய்திய இன்பத்தை மேலும் எய்துதற்குச் சிவபோகப் பெருநிலையை அடைய வேண்டுதலின், அதனை "இன்னும் பதி கலந்து கொளும் மட்டும்" எனப் பகருகின்றார். உலகியல் ஆரவாரத்தின் நீங்கி ஒருபுறத்தே தனிக்கிருந்து ஒன்றிய சிந்தனையால் அப்பெருநிலை எய்தப் பெறுவதாகலின், "பிறர் அறியா திருக்கப் பரிந்துள்ளே இருந்த என்னை" எனவும், உலகியல் வாழ்க்கைச் சூழல் ஒன்றிய சிந்தனைக்கு இடமில்லா மல் அலைப்பது பற்றி, "வெளியில் இழுத்திட்டு மதி கலந்து கலங்க வைத்த விதியை நினைந்து ஐயோ மனம் ஆலை பாய்வது காண்" எனவும் நவில்கின்றார்.

இதனால், அம்பலத்தில் ஆடும் சிவன் திருவடிகள் மனத்தில் படிந் துள்ள கள்ளம் நீங்கத் தெளிவு நல்கிய திறம் உரைத்தவாறும். (6)

3716. மஞ்சனைய குழலம்மை எங்கள்சிவ காம
வல்லிமகிழ் திருமேனி வண்ணமது சிறிதே
நஞ்சனைய கொடியேன்கண் டிடப்புரிந்த அருளை
நாடறியா வகைஇன்னும் நீடநினைத் திருந்தேன்
அஞ்சனைய பிறர்எல்லாம் அறிந்துபல பேசி
அலர்தூற்ற அளியஎனை வெளியில்இழுத் திட்டு
வஞ்சனைசெய் திடவந்த விதியைநினைந் தையோ
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே.

உரை : மன்றில் நடம் புரிகின்ற அருளரசே! கருமேகம் போன்ற கூந்தலையுடைய தாயாகிய சிவகாமவல்லி கண்டு மகிழ்கின்ற சிவத்தின் திருமேனி யழகை விடம்போன்ற கொடியவனாகிய யான் சிறிதே கண்டு இன்புற எனக்குப் புரிந்த திருவருளை நாட்டவர் அறியாதபடி ஓரிடத்தே ஒடுங்கி யிருந்து ஒன்றி நினைந்து பெரிதாக்கிக் கொள்ள எண்ணியிருந் தேனை, ஐந்தாகிய கண் முதலிய பொறிகளைப் போன்ற நாட்டு மக்கள் எல்லாம் தெரிந்து தமக்குள்ளே பலப்பல பேசி அலர் தூற்ற அளிக்கத் தக்க என்னைப் புறத்தே இழுத்து வஞ்சனை செய்யுமாறு தாக்குகின்ற விதியை நினைந்து என் மனம் வருந்துகின்றது காண். எ.று.

சிவகாமவல்லி - உமாதேவி. தில்லையில் எழுந்தருளும் அவளைச் சிவகாமவல்லி எனப் போற்றுவது இயல்பு. அம்மையின் கூந்தல் கருங் கூந்தல். மழை மேகம் போல் திகழ்வது பற்றி, "மஞ்சனைய குழலம்மை" எனப் போற்றி மகிழ்கின்றார். கொடுமையுடைமை பற்றித் தம்மை, "நஞ்சனைய கொடியேன்" என இகழ்கின்றார். கொடியனையினும், சிவனது திருமேனி கண்டு இன்புறச் செய்தது இறைவன் திருவருளா தலின் அது பற்றி, "கொடியேன் கண்டிடப் புரிந்த அருள்" எனப் புகல் கின்றார். அதனைப் பலகாலும் ஒருபுறத்தே ஒன்றி யிருந்து சிந்தித் தாலன்றி அத்திருவருளை முகுதியும் பெற இயலாதாகலின், "இன்னும் நீட நினைத்திருந்தேன்" என உரைக்கின்றார். நாட்டவர் அறிந்தால் ஒன்றி

யிருந்து நினைக்கும் உயர்நிலை கைகூடாதாகலின், "நாடறியா வகை" என்று நவில்கின்றார். அஞ்சனைய பிறர் என்றவிடத்து, அஞ்சு என்றது கண் முதலிய பொறிகள் ஐந்தையுமாம். ஒன்று அறிந்ததை ஒன்றறி யாமை கண் முதலிய பொறிகட்கு இயல்பாகலான் அறியாமை நிறைந்த உலக மக்களை, "அஞ்சனைய பிறர்" என்று உரைக்கின்றார். நன்கு அறியாமையால் அவரவரும் பலப்பலப் பேசிக் குறை கூறுவது புலப்பட, "பிறர் எல்லாம் அறிந்து பல பேசி அலர் தூற்ற" எனவும், அதனால் மனத் தின்கண் ஊக்கம் குன்றுதலின், "அளிய" எனவும், இதற்கெல்லாம் காரணம் யாதாகலாம் என எண்ணிய வடலூர் அடிகள், ஊழ்வினை யல்லது பிறிதில்லையெனக் கருதி, "வெளியில் இழுத்திட்டு வஞ்சனை செய்திட வந்த விதியை நினைந்து ஐயோ மனம் ஆலை பாய்வது காண்" எனவும் இயம்புகின்றார்.

இதனால், திருவருட் காட்சியைப் பெருக்கிக் கொள்ளுதற்கு ஒடுங்கி யிருந்த தம்மை ஊரவர் பலப்பல பேசி அலர் தூற்றுவதை எடுத்துரைத்த வாறும். (7)

3717. அரிபிரமர் உருத்திரரும் அறிந்துகொள மாட்டா
தலமரவும் ஈதென்ன அதிசயமோ மலத்தில்
புரிபுழுவில் இழிந்தேனைப் பொருளாக்கி அருளாம்
பொருள் அளிக்கப் பெற்றனன்இப் புதுமைபிறர் அறியா
துரிமைபெற இருப்பன்என உள்இருந்த என்னை
உலகறிய வெளியில்இழுத் தலகில்விருத் தியினால்
வரிதலையிட் டாட்டுகின்ற விதியைநினைந் தையோ
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே.

உரை : மன்றில் நடம் புரிகின்ற அருளரசே! திருமால் பிரமன் உருத்திரன் முதலிய தேவர்கள் அறிந்து கொள்ள மாட்டாமல் வருந்தவும், மலத்திற் கிடந்துழலும் புழுப் போல் இழிந்தவனுகிய என்னை ஒரு பொருளாகக் கருதித் திருவருள் ஞானமாகிய மெய்ப்பொருளை நல்கப் பெற்றுள்ளேன்; இது என்ன அதிசயமோ அறியேன்; இப் புதுமையைப் பிறரறியாது எனக்கே உரிமையாகக் கொண்டிருத்தல் வேண்டுமென எண்ணி மனைக்குள் ஒடுங்கி யிருந்த என்னை, உலகவர் பலரும் அறிய வெளியில் இழுத்து விட்டு அளவில்லாத செயல் வகைகளால் தலையில் எழுத்திட்டு ஆட்டிப் படைக்கின்ற விதியை நினைந்து ஐயோ என் மனமானது அலைந்து வருந்துகின்றது காண். எ.று.

படைப்புக் கடவுளாகிய பிரமனும், காத்தற் கடவுளாகிய திருமாலும், அழித்தற் குரியவனுகிய உருத்திரனும் ஆகிய தேவர் மூவர்களும் தமது இயற்கை யறிவால் அறிந்து கொள்ள மாட்டாத நிலையில் பரசிவம் இருத்தலை எண்ணி வருந்துவது விளங்க, "அரி பிரமர் உருத்திரரும் அறிந்து கொள மாட்டாது அலமரவும்" என்றும், பரசிவத்தை அறிதற்குரிய திருவருள் ஞானத்தைத் தன்னை ஒருபொருளாகக் கருதி உண்ணின்று நல்கிய திறத்தை எண்ணி வியக்கின்றாராதலால், "ஈதென்ன அதிசயமோ இழிந்தேனைப் பொருளாக்கி அருளாம் பொருள்

அளிக்கப் பெற்றனன்'' என்றும் இயம்புகின்றார். தமது இழிவைப் புலப் படுத்த மலத்திற் கிடந்து நெளியும் புழுவை உவமமாக்கி, "மலத்தில் புரிபுழுவில் இழிந்தேனை" என நவில்கின்றார். தேவதேவர்களாகிய திருமால் முதலியோர் பெறுத திருவருள் ஞானத்தைத் தாம் பெற்றது புதுமையாகத் தோன்றுதலின், "இப்புதுமை" எனவும், பெறற் கரியதாகிய இதனைத் தாம் பெற்றதைப் பிறர் அறியாமல் தமக்கே உரிய பொருளாகச் செய்து கொள்ளற்குப் புறத்தே யார்க்கும் புலப்படாமல் மனைக்குள்ளே ஒடுங்கி யிருந்த நிலைமையை எடுத்துரைப்பாராய், "பிறர் அறியாது உரிமை பெற இருப்பன் என உள்ளிருந்த என்னை" எனவும், பின்னர் அது பலரும் அறிந்து பாராட்டற் குரியதானது பற்றி, "என்னை உலகறிய வெளியில் இழுத்து ஆட்டுகின்ற விதியை நினைந்து மனம் ஆலை பாய்வது காண்" எனவும் உரைக்கின்றார். விதியைத் 'தலையில் எழுத்து' என உலகு வழங்குவது பற்றி, "வரி தலையில் ஆட்டுகின்ற விதி" எனக் கூறு கின்றார். வரி- எழுத்து. "பங்கயத்தோன் எழுதாப்படி வருமோ சலியாதிரு என் ஏழை நெஞ்சே" என்று பட்டினத்தாரும் உரைப்பது காண்க. தலை விதியால் நடைபெறுகின்ற செயல் வகைகள் எண்ணிறந்தனவாதலால் அவற்றை, "அலகில் விருத்தி" எனக் குறிக்கின்றார்.

இதனால், தேவர்களுக்கும் பெறற் கரிதாகிய திருவருள் ஞானத்தைப் பெற்ற நலத்தைக் குறிப்பால் தெரிவித்தவாறும். (8)

3718. விழற்கிறைத்துக் களிக்கின்ற வீணர்களி சிறந்த
வினைக்கொடியேம் பொருட்டாக விரும்பிஎழுந் தருளிக்
கழற்கிசைந்த பொன் அடிநம் தலைமேலே அமைத்து
கருணைசெயப் பெற்றனம்இக் கருணைநம்மை இன்னும்
நிழற்கிசைத்த மேல்நிலையில ஏற்றும்என மகிழ்ந்து
நின்றஎன்னை வெளியில்இழுத் துலகவியா பார
வழக்கில்வனைத் தலைக்கவந்த விதியைநினைந் தையோ
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே.

உரை : மன்றில் நடம் புரிகின்ற அருளரசே! பயனில்லாத விழல் என்னும் புல்லுக்கு நீரிறைத்து வீண் படுகின்ற கீழ்மக்களில் மிக்க வினை யால் கொடியவனுகிய என் பொருட்டு விருப்புற்றுப் போந்து கழல் என்னும் காலணிக்குப் பொருத்தமான அழகிய தன் திருவடியை நம் தலை மேல் வைத்து அருள் செய்யப் பெற்றோம்; இத்திருவருள் நம்மை இன்னும் மேல் நிலையில் உயர்த்தும் என எண்ணி மகிழ்ந்து ஒருபுறத்தே ஒடுங்கி யிருந்த என்னை வெளிப்படுத்தி உலகியல் வாழ்வாகிய வழக்கில் நிறுத்தி என்னை அலைக்கின்ற தலைவிதியை நினைந்து என் மனம் வருந்துகின்றது காண். எ.று.

பயனில்லாத செயல்களைச் செய்து கெடுகின்ற கீழ்மக்களை, "விழற்கு இறைத்துக் களிக்கின்ற வீணர்" என்றும், அவர்கள் எல்லாரினும் மிகப் பெரிய கீழ்மகன் எனத் தம்மைக் குறிப்பாராய், "வீணர்களிற் சிறந்த வினைக் கொடியேம்" என்றும் கூறுகின்றார். கொடியேம் என்பது ஒருமை சுட்டிய தன்மைப் பன்மை. விழலுக்கு இறைத்துப் பயன்படாது ஒழி

கின்ற வீணர் பலரினும் தாம் பல்வேறு பயனில் வினைகளால் கொடுமை யுடையவன் எனத் தம்மைக் குறிப்பாராய், "வினைக் கொடியேம்" என விளம்புகின்றார். வினைக் கொடியேன் - செய்வினைகளால் கொடுமை மிக்கவன். கழல் - வீரம் மிக்க பெருமக்கள் பண்டை நாளில் காலில் அணிந்து கொண்ட தண்டை என்னும் அணி வகையாகும். அதனால் இதனை 'வீரதண்டை' என்று கூறுப. கழலணிக் கேற்ற திருவடி என்றற்கு, "கழற் கிசைந்த பொன்னடி" என்கின்றார். ஞான ஆசிரியன் தன்னை அடைந்த மாணவர்க்கு அவர் தலைமேல் தம் திருவடியை வைத்துச் சிறப்பித்து ஞானம் நல்கும் மரபு பற்றி, "பொன்னடி நம் தலை மேலே அமைத்துக் கருணை செயப் பெற்றனம்" என்று கூறுகின்றார். கருணை என்பது இங்கே சிவஞானத்தின் மேற்று. சிவஞானத்தால் சிவானந்தத்தை நுகரும் நிலையினைத் திருவடி நீழல் என்பது பற்றி அதனை, "நிழற் கிசைத்த மேல்நிலை" என்று சிறப்பிக்கின்றார். ஈண்டு நிழல் என்பது இன்பநிலை மேற்று. உலகியல் வாழ்வில் சிக்குண்டு வருந்தும் திறத்தை, "உலக வியாபார வழக்கு" என்றும், அவ் வழக்கில் அகப்பட்டு வருந்தும் திறத்தை, "வழக்கில் வளைத்தலைக்க வந்த விதி" என்றும் ஓதுகின்றார்.

இதனால், இறைவன் திருவடி ஞானம் பெற்ற திறத்தை வடலூர் வள்ளல் தெரிவித்தவாறும். (9)

3719. அடிபிடித்துத் திரிகின்ற மறைகள்எலாம் காணா
அருள்வடிவைக் காட்டிநம்மை ஆண்டுகொண்ட கருணைக்
கொடிபிடித்த குருமணியைக் கூடுமட்டும் வேறோர்
குறிப்பின்றி இருப்பம்எனக் கொண்டகத்தே இருந்தேன்
படிபிடித்த பலர்பலவும் பகர்ந்திடஇங் கெனைத்தான்
படுவழக்கிட் டுலகியலாம் வெளியில்இழுத் தலைத்தே
மடிபிடித்துப் பறிக்கவந்த விதியைநினைந் தையோ
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே.

உரை : மன்றில் நடம் புரிகின்ற அருளரசே! திருவடியே பொருளாகக் கொண்டு ஓதுகின்ற வேதங்களால் காணப்படாத திருவருள் ஞான வடிவைக் காட்டி நம்மை ஆண்டு கொண்ட குருமணியாகிய சிவ பரம்பொருளை அறிந்து கூடிக் கொள்ளும் வரை வேறு பொருளிற் கருத்தின்றி ஒன்றியிருப்போம் எனக் கருத்திற் கொண்டு மனையின்கண் ஒரு புறத்தே ஒடுங்கி யிருந்த என்னை உலகியல் வாழ்வே பொருளாவது எனக்கருதி உறையும் பலரும் என்னைக் கண்டு பலப்பல பேச இங்கே என்னை ஈர்த்து உலகியலாகிய வெளியில் விடுத்து அலைத்து வருத்துகின்ற விதியை நினைந்து மனம் வருந்துகின்றது காண். எ.று.

வைதிக ஞானத்தின் முடிவு இறைவன் திருவடிப் பேறுதலின் அவற்றை, "அடிபிடித்துத திரிகின்ற மறைகள்" என உரைக்கின்றார். ஞானசிரியன் திருவுருவம் அருள் வடிவமாதலின் குருமுதல்வனை, "கருணைக் கொடி பிடித்த குருமணி" என்றும், உலகியல் வாழ்வில் தோய்ந்து நிற்கும் மக்களை, "படி பிடித்த பலர்" என்றும் உரைக்கின்றார்.

படு வழக்கு - துன்பத்தில் ஈடுபடுத்தும் தீரா வழக்கு. வழிப்பறி செய்யும் கள்வர் வழிப்போக்கரை மடக்கி அவர்கள் மடியைப் பிடித்திழுத்து உள்ள பொருளைக் கவர்ந்து கொள்ளுதல் இயல்பாதலால், அது கொண்டு ஞான நெறியில் செல்லுகின்ற தம்மை மறித்து வருத்துகின்ற தலை விதியை, "மடி பிடித்துப் பறிக்க வந்த விதி" எனப் பழித்துரைக்கின்றார்.

இதனால், குருபரனைய் எழுந்தருளும் மூர்த்தத்தைச் சிறப்பித்துக் காட்டியவாறும். (10)

திருச்சிற்றம்பலம்

25. திருமுன் விண்ணப்பம்

அஃதாவது, இறைவன் திருமுன்பு தமது விழைவினை எடுத்துரைத் தலாகும். இதன்கண், எடுத்து நிற்கும் இவ்வுடம்பை அழியா உடம் பாக்குதல் வேண்டுமென விண்ணப்பிக்கின்றார். அழியும் இயல்பின தாகிய உடம்பு திருவருள் ஞானப் பேறு எய்துதற்கு முன் நிலைபேறின்றிக் கெடுவது நினைந்து இவ்விண்ணப்பம் செய்யப் பெறுகின்றது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

3720. மாழை மாமணிப் பொதுநடம்
புரிகின்ற வள்ளலே அளிகின்ற
வாழை வான்பழச் சுவைஎனப்
பத்தர்தம் மனத்துளே தித்திப்போய்
ஏழை நாயினேன் விண்ணப்பம்
திருச்செவிக் கேற்றருள் செயல்வேண்டும்
கோழை மானிடப் பிறப்பிதில்
உன்னருட் குருஉருக் கொளும்ஆறே.

உரை : பொன்னாலும் மணிகளாலுமாகிய அம்பலத்தில் நின்றருளு கின்ற பரமனாகிய வள்ளலே! வாழையினுடைய தேன் கனிய அளியப் பழுத்த வாழைப்பழம்போல அன்பர் மனத்தின்கண் நின்று இனிமைசெய் கின்ற பெருமானே;ஏழை நாய் போன்ற அடியேன் செய்கின்ற விண்ணப் பத்தைத் திருச்செவியில் ஏற்றுக் கோழைத் தன்மை பொருந்திய மக்கட் பிறப்பாக இதனைக் கொண்டு உனது அருளுருவாய குரு வடிவை அடியேன்கொள்ளும் நெறியை அருளிச் செய்ய வேண்டும். எ.று.

மாழை - பொன். பொது - அம்பலம். வாழைப்பழம் முற்றக் கனிந்து குழைந்த நிலையினைப் புலப்படுத்த, "அளிகின்ற வாழை வான்பழம்" எனக் கூறுகின்றார். மெய்யன்பர் சிந்தனையில் தேனூற நிற்கின்றான் எனச் சான்றோர் உரைப்பதை நம்மனோர் தெளியப் புரிந்து கொள்ளு மாறு தெரிவிக்கின்றாராதலால், "வாழை வான்பழச் சுவை எனப் பத்தர் தம் மனத்துளே தித்திப்போய்" எனக் கூறுகின்றார். "தேனுய் இன்னமுத

முமாய் தித்திக்கும் சிவபெருமான்'' என்று மாணிக்கவாசகரும் உரைப் பது காண்க. தமது கீழ்மை நிலையைப் புலப்படுத்தற்கு "ஏழை நாயினேன்'' என இயம்புகின்றார். நிலையில்லாத தன்மையால் மக்கள் பிறப்பு அச்சம் நிறைந்ததாகையால், "கோழை மானிடப் பிறப்பு'' எனக் குறிக்கின்றார். குரு வடிவம் திருவருள் ஞானத் திருவுருவம் ஆதலின் அதனை இப்பிறப்பு நிலையின்றிக் கெடுவதன் முன் பெறுதல் வேண்டுமென்ற ஆசை மிகுதி புலப்பட, "பிறப்பிதில் உன்னருட் குரு உருக்கொளுமாறு அருள் செயல் வேண்டும்'' என விண்ணப்பிக்கின்றார்.

இதனால், குருவின் ஞானத் திருவுருவத்தை இப்பிறப்பிலேயே பெறும் நெறியைத் தெரிவிக்க வேண்டியவாறும். இனி வரும் பாட்டுக் களிலும் இதுவே கருத்தாகக் கொள்க. (1)

3721. பொன்னின் மாமணிப் பொதுநடம்
புரிகின்ற புண்ணியா கனிந்தோங்கி
மன்னு வாழையின் பழச்சுவை
எனப்பத்தர் மனத்துளே தித்திப்போய்
சின்ன நாயினேன் விண்ணப்பம்
திருச்செவி சேர்த்தருள் செயல்வேண்டும்
இன்ன என்னுடைத் தேகம்நல்
ஒளிபெறும் இயல்உருக் கொளும்ஆறே.

உரை : பொன்னாலும் பெரிய மணிகளாலும் அமைந்த அம்பலத் தில் நடம் புரிகின்ற புண்ணியப் பொருளாய் உள்ளவனே! கனியப் பழுத் தோங்கி நிற்கின்ற வாழைப் பழத்தின் சுவை போல அன்பர் சிந்தையின் கண் எழுந்தருளித் தித்திப்பவனே! சிறிய நாய் போன்றவனுகிய எனது விண்ணப்பத்தைத் திருச்செவிகளில் ஏற்றுத் துன்பம் தரும் என்னுடைய உடம்பு ஞான ஒளி பெற்றியலும் உருக் கொள்ளுமாறு அருள் புரிய வேண்டுகிறேன். எ.று.

பொன் வேய்ந்து மணிகள் இழைத்து அழகு செய்யப் பெற்ற திருவம்பலம் என்றற்கு, "பொன்னின் மாமணிப் பொது'' என்றும், அதன்கண் நின்று ஞான நாடகம் இயற்றுவது பற்றி, "நடம் புரிகின்ற புண்ணியா'' என்றும் புகல்கின்றார். சிவ புண்ணியம் செய்வாருடைய சிவபோக உருவினன் சிவபிரான் என்ற குறிப்புத் தோன்ற, "புண்ணியா'' எனப் புகல்கின்றார். மென்மையும் சுவை மிகுதியும் உடையதாதலால் சிந்திப்பார் சிந்தையில் நின்று தித்திக்கும் சிவபோக நிலையை வாழைப் பழத்திற்கு உவமம் செய்கின்றார். "வாழையின் பழச் சுவை'' என்பதற்கு. வாழையினது இனிய பழத்தின் சுவை எனப் பொருள் கூறுவதும் உண்டு. சிறுமை சின்ன என மருவி நிற்கின்றது. வாத பித்த சிலேத்து மங்களால் ஆக்கப் பெற்று மிக்கும் குறைந்தும் நோய் செய்வது பற்றி, "இன்னல் என்னுடைத் தேகம்'' என இயம்புகின்றார். இன்னல் - நோய் என்பதாகும். ஞானத்தால் நிறைவுற்ற சிவஞானிகளின் தேகம் ஞான வொளி பெற்றுத் திகழும் என்பது பற்றி, "நல்லொளி பெறும் இயலுருக் கொளுமாறு அருள் செயல் வேண்டும்'' என விண்ணப்பம் செய்கின்றார்

தலால், "நல்லொளி பெறும் இயல் உருக் கொளுமாறு அருள் செயல் வேண்டும்" என வேண்டுகிறார். நல்லொளி - சிவவொளி. இதனைச் சிவப்பிரகாசம் என்றும் சொல்லுவர். இயலுரு - சிவானந்த ஞான வடிவு. (2)

3722. விஞ்சு பொன்அணி அம்பலத்
தருள்நடம் விளைத்துயிர்க் குயிராகி
எஞ்சு முதபேர் இன்பருள்
கின்றஎன் இறைவநின் அருள்இன்றி
அஞ்சும் நாயினேன் விண்ணப்பம்
திருச்செவி அமைத்தருள் செயல்வேண்டும்
துஞ்சும் இவ்வுடல் இம்மையே
துஞ்சிடாச் சுகஉடல் கொளும்ஆறே.

உரை : உயர்ந்த பொன்னு லியன்ற அழகிய திருவம்பலத்தில் அருட் கூத்தை ஆடி உயிர்கட் குயிராய்க் குன்றுத பேரின்பத்தைத் தரு கின்ற என்னுடைய இறைவனே! நினது திருவருள் பெறுது அஞ்சுகின்ற நாய் போன்ற எனது விண்ணப்பத்தை நின்னுடைய திருச்செவிகளில் ஏற்று இறந்து படும் இயல்புடைய இவ்வுடம்பு இம்மையில் இறவாத ஞான வுடம்பு கொள்ளும் திறத்தை எனக்கு அருள் செய்ய வேண்டு கிறேன். எ.று.

விஞ்சுதல் - உயர்தல். செம்பு வெள்ளி இரும்பு முதலிய உலோக வகைகள் எல்லாவற்றிலும் உயர்ந்ததாகலின், "விஞ்சு பொன்" என்றும், பொன்னு லியன்று அழகு திகழ விளங்குவது பற்றி, "பொன்னணி அம்பலம்" என்றும், அப்பொன்னம்பலத்தில் ஆடல் புரிவது பற்றி, "அருள் நடம் விளைத்து" என்றும் உரைக்கின்றார். இறைவன் உயிர்க் குயிராய் நின்று உணர்வு அருள்வதும், அதுவே வாயிலாக உயிர்கட்கு இன்பம் நல்குவதும் இயல்பாதல் கண்டு, "உயிர்க்குயிராகி எஞ்சுறுத பேரின்பு அருள்கின்ற இறைவன்" என்று ஏத்துகின்றார். எஞ்சுதல் - குறைதல். இன்பம் இன்பு என வந்தது. இறைவன் திருவருள் உயிர்க்குப் பாதுகாவலாதலின், "அருளின்றி அஞ்சும் நாயினேன்" எனக் கூறு கின்றார். அருளொளி இல்லையாயின் மலவிருள் படர்ந்து உயிர்கட்குத் துன்பம் விளைவிக்குமாதலால் அருளின்மை பற்றி, "அஞ்சும் தன்மை யுடையனுயினேன்" என்பது குறிப்பு. துஞ்சுதல் - இறத்தல். இம்மை - இவ்வுலக வாழ்வு. துஞ்சிடாச் சுக உடல் - இறவாத ஞான உடம்பு. "இனிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்" (பாண்டி.) என்று நம்பியாரூரர் கூறுவது காண்க. பெற்றிருக்கும் உடம்பு கொண்டே இறவாத் தன்மையுடைய பெருமை சான்ற நிலைமையை எய்தி யுள்ளேன் என நம்பியாரூரர் கூறுவது வடலூர் வள்ளலது விண்ணப்பத்திற்கு ஆதரவு தருவது காண்க. (3)

3723. ஓங்கு பொன்அணி அம்பலத்
தருள்நடம் உயிர்க்கெலாம் ஒளிவண்ணப்
பாங்கு மேவுநின் றுடல்செய்
இறைவநின் பதமலர் பணிந்தேத்தாத்

தீங்கு நாயினேன் விண்ணப்பம்
திருச்செவி சேர்த்தருள் செயல்வேண்டும்
ஈங்கு வீழுடல் இம்மையே
வீழ்ந்திடா இயலுடல் உறும்ஆறே.

உரை : உயர்ந்த பொன்னு லியன்ற திருவம்பலத்தின்கண் நின்று உயிர்கட் கெல்லாம் ஞானவொளி பெறும் தன்மை பொருந்துமாறு ஆடல் புரிகின்ற இறைவனே! உன்னுடைய திருவடித் தாமரைகளைப் பணிந்து ஏத்தாத குற்றம் புரியும் நாயினேனுடைய விண்ணப்பத்தைத் திருச்செவி களில் ஏற்று இவ்வுலகில் இறந்து விழும் எனது உடல் இப்பிறப்பிலேயே வீழ்ந் தொழியாத ஞான உடம்பாகுமாறு அருள் புரிய வேண்டுகிறேன். எ. று.

அம்பலத்தில் இறைவன் ஆடுகின்ற திருக்கூத்து உயிர்கட்கு மலப்பிணி நீங்குதற்காகச் செய்யும் குறிப்புடையதாகலின், "அருள் நடம்" என அதனைச் சிறப்பிக்கின்றார். உயிர்கள் அனைத்தும் ஆணவம் முதலிய மலங்களின் பிணிப்பகன்று ஞானவொளி பெறுதல் பொருட்டு ஆடப் பெறுவதாகலின், "உயிர்க்கெலாம் ஒளி வண்ணப் பாங்கு மேவ நின்றுடல் செய் இறைவ" எனப் பகர்கின்றார். இறைவன் திருவடியை ஏத்தாமை குற்றமாகலின், "பதமலர் பணிந் தேத்தாத் தீங்கு நாயினேன்" எனத் தம்மை இடித்துரைக்கின்றார். ஈங்கு - இவ்வுலகு. வீழ்தல் - இறத்தல். இயலுடல் - ஞான வுடம்பு. (4)

3724. இலங்கு பொன்னணிப் பொதுநடம்
புரிகின்ற இறைவஇவ் வுலகெல்லாம்
துலங்கும் வண்ணநின் றருளுநின்
திருவடித் துணைதுணை என்னுமல்
கலங்கு நாயினேன் விண்ணப்பம்
திருச்செவி கலந்தருள் செயல்வேண்டும்
அலங்கும் இவ்வுடல் இம்மையே
அழிவுரு அருள்உடல் உறும்ஆறே.

உரை : ஒளி விளங்குகின்ற பொன்னுல் இயன்ற அழகிய அம்பலத் தின்கண் திருக்கூத்தாடுகின்ற இறைவனே! இவ்வுலகம் முற்றும் இன்ப வொளி பெற்றுத் திகழும் வண்ணம் அருள் புரிகின்ற நினது திருவடி இரண்டுமே உயிர்கட்குத் துணையாகும் என்று எண்ணுமல், மனம் கலங்கு கின்ற நாயினேனுடைய விண்ணப்பத்தைத் திருச்செவிகளில் ஏற்று அசைவுற்று வீழும் இவ்வுடம்பு இம்மையிலேயே அழிந்து கெடுவதின்றி அருளொளி நிறைந்த உடம்பாகுமாறு அருள் செய்ய வேண்டுகிறேன். எ. று.

இலங்கு பொன் - ஒளி விளங்குகின்ற பொன். இதனாலேயே திருவம்பலம் "பொன்னம்பலம்" எனப் புகழப்படுகிறது என அறியலாம். திருவம்பலத்தில் இறைவன் நடம் புரிவது உலகுயிர்கள் அனைத்தும் திருவருள் ஞானவொளி பெற்று இன்புற வேண்டுமென்ற கருத்துப்

பற்றியது என்பார், "இவ்வுலகெல்லாம் துலங்கும் வண்ணம் நின்று அருளும் நின் திருவடி" எனத் தெரிவிக்கின்றார். திருவடித் துணை - இரண்டாகிய திருவடி. இறைவன் திருவடியே நமக்குப் பாதுகாப்பாவது என்று எண்ணிய வழி மனம் திண்ணிதாதலால், அதனை எண்ணுமல் அடுக்கி வரும் துன்பங்களால் அலமரும் தன்மை தோன்ற, "துணை என்னுமல் கலங்கு நாயினேன்" என்று தன்னைக் குறிக்கின்றார். அலங்குதல் - அசைதல்; ஈண்டு அசைந்து இறத்தல் என்ற பொருள் தோன்ற நின்றது. திருவருள் நிறைந்த ஞான வுடம்பு அழியாத் தன்மை யுடையது என்றற்கு, "அழிவுரு அருள் உடல்" என அறிவிக்கின்றார். (5)

3725. சிறந்த பொன்அணித் திருச்சிற்றம்
பலத்திலே திருநடம் புரிகின்ற
அறந்த வாதசே வடிமலர்
முடிமிசை அணிந்தக மகிழ்ந்தேத்த
மறந்த நாயினேன் விண்ணப்பம்
திருச்செவி மடுத்தருள் செயல்வேண்டும்
பிறந்த இவ்வுடல் இம்மையே
அழிவுரூப் பெருநலம் பெறும் ஆறே.

உரை : சிறந்த பொன்னாலாகிய அழகிய திருச்சிற்றம்பலத்தின் கண் திருக்கூத் தியற்றுகின்ற அறம் பிழையாத சேவடிகளாகிய தாமரையை முடியிற் சூடி மனம் மகிழ்ந்து போற்றுதற்கு மறந் தொழிந்த நாயினேனுடைய விண்ணப்பத்தைத் திருச்செவிகளில் ஏற்று இவ்வுலகில் பிறந்த இவ்வுடல் இப்பிறப்பிலேயே அழியாப் பெருநலம் உடையதாகும் நெறியை அடியேனுக்கு அருளிச் செய்ய வேண்டுகிறேன். எ.று.

மாற்றுக் குறையாது உயர்ந்த பொன்னு லியன்று அழகியதாகிய திருச்சிற்றம்பலம் என்றற்கு, "சிறந்த பொன்னணித் திருச்சிற்றம்பலம்" என்றும், அந்த அம்பலத்தில் நிகழ்கின்ற நடனம் உலகில் அறநெறி பிறழாதவாறு காப்பது என்ற குறிப்புத் தோன்ற, "திருநடம் புரிகின்ற அறம் தவாத சேவடி" என்றும் கூறுகின்றார். திருவடியில் பணிகின்ற போது அத்திருவடித் தாமரை பணிவார் தலைமேல் பொருந்தி மலர் சூடுவது போல இருத்தலின், "முடிமிசை அணிந்து" என்றும், பணிதலால் எய்தும் இன்பத்தை "அகம் மகிழ்ந்து" என்றும் குறிப்பிட்டு, அதனைச் செய்யா தொழிந்த தமது குறையைப் புலப்படுத்த, "ஏத்த மறந்த நாயினேன்" என்றும் கூறுகின்றார். பிறந்த உடம்பு இறந்து அழியாவாறு அருளொளி நிறைந்த ஞான உடம்பாதல் வேண்டுமென விரும்புகின்றாராதலின், "பிறந்த இவ்வுடல் இம்மையே அழிவுரூப் பெரு நலம் பெறுமாறு அருள் செயல் வேண்டும்" என்று கூறுகின்றார். (6)

3726. விளங்கு பொன்அணிப் பொதுநடம்
புரிகின்ற விரைமலர்த் திருத்தாளை
உளங்கொள் அன்பர்தம் உளங்கொளும்
இறைவநின் ஒப்பிலாப் பெருந்தன்மை

களங்கொள் நாயினேன் விண்ணப்பம்
திருச்செவி கலந்தருள் செயல்வேண்டும்
துளங்கும் இவ்வுடல் இம்மையே
அழிவுருத் தொல்லுடல் உறும்ஆறே.

உரை : விளங்குகின்ற பொன்னு லியன்ற அழகிய அம்பலத்தில் நடம் புரிகின்ற மணம் பொருந்திய திருவடிகளை மனத்திற் கொண்டு உறையும் மெய்யன்பர்களின் உள்ளத்திற் கோயிற் கொண்டு எழுந் தருளும் இறைவனே! உன்னுடைய ஒப்பற்ற பெருந்தன்மையை எண்ணாது கலங்கமுறும் நாயினேனுடைய விண்ணப்பத்தை அசை வுற்றுச் சோர்ந்து கெடும் இவ்வுடம்பு இப்பிறப்பிலேயே அழிவு எய்தாத பண்டைய உடலைப் பெறுமாறு திருச்செவியில் ஏற்று அருள் செய்ய வேண்டுகிறேன். எ.று.

தூய பொன்னுக்கு இயல்பிலேயே ஒளி யுண்டாதலால், "விளங்கு பொன்" எனச் சிறப்பிக்கின்றார். பொற் சபையில் திருக்கூத்தாடுகின்ற சிவனுடைய திருவடிகள் ஞான மணம் கமழ்ந்து மலர் போலும் மென்மையவாய் இருத்தல் பற்றி, "நடம் புரிகின்ற விரை மலர்த் திருத்தாள்" எனப் புகல்கின்றார். அத்திருவடிகளை எக்காலத்தும் இடையறாது நினைந்த வண்ணம் இருத்தல் பற்றிச் சிவஞானச் செல்வர் களை, "திருத்தாளை உளங்கொள் அன்பர்" என்று உரைக்கின்றார். தன்னை நினைக்கும் அன்பர்கள் உள்ளத்தையே தனக்குரிய இடமாகக் கருதி இறைவன்" உறைகின்றான் என்பது பற்றி, "அன்பர்தம் உளம் கொளும் இறைவ" என இயம்புகின்றார். "பனைக்கை மும்மத வேழம் உரித்தவன் நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டுளான்" என்று திருநாவுக்கரசரும் உரைப்பது காண்க. இறைவனது ஒப்பிலாப் பெருந் தன்மையை நினைவிற் கொள்ளாது பயனில்லாத நினைவுகட்கு இடமாக் கும் சிறுமை பற்றி, "களங் கொள் நாயினேன்" என வடலூர் வள்ளல் தம்மைக் குறிக்கின்றார். முதுமைக்கண் தளர்ச்சியும் சோர்வுமுற்று அசைந்து கெடுதலின் மக்களுடம்பை, "துளங்கும் இவ்வுடல்" எனச் சுட்டிக் காட்டுகின்றார். துளங்குதல் - தளர்ச்சியால் அசைதல். சகல நிலையில் உடம்பொடு கூடுமுன் உணர்வு வடிவாய் இருத்தல் பற்றித் "தொல்லுடல்" எனக் குறிக்கின்றார். உணர்வே வடிவான உடம்பிற்கு அழிவில்லாமையால், "அழிவுருத் தொல்லுடல்" எனக் கூறுகின்றார். கேவலத்தில் மலவிருள் கலந்து மூடப்பட்டிருப்பினும் உண்மை நிலை யுணர்வு வடிவமாதல் தோன்ற, "தொல்லுடல்" என வடலூர் வள்ளல் உரைப்பது குறிக்கத் தக்கது. (7)

3727. வாய்ந்த பொன்அணிப் பொதுநடம்
புரிகின்ற வள்ளலே மறைஎல்லாம்
ஆய்ந்தும் இன்னஎன் றறிந்திலா
நின்திரு அடிமலர் பணியாமல்
சாய்ந்த நாயினேன் விண்ணப்பம்
திருச்செவி தரித்தருள் செயல்வேண்டும்
ஏய்ந்த இவ்வுடல் இம்மையே
திருவருள் இயல்உடல் உறும்ஆறே.

உரை : மாற்றில்லாத பொன்னுலாகிய அழகிய அம்பலத்தில் திருக்கூத்தாடுகின்ற வள்ளலாகிய சிவபெருமானே! வேதங்கள் எல்லாம் பலகாலும் ஓதி ஆராய்ந்தும் இத்தன்மையை உடையவை என்று அறிய மாட்டா தொழிந்த உன்னுடைய திருவடித் தாமரைகளைப் பணிந்து போற்றுமல் மெலிந்த நாயினேனுடைய விண்ணப்பத்தைத் திருச்செவிகளில் ஏற்று எனக்குப் பொருந்திய இவ்வுடம்பு இப்பிறப்பிலேயே திருவருள் ஞானவொளி கலந்த உடம்பாகுமாறு அருள்புரிதல் வேண்டும். எ.று.

வாய்ந்த பொன் - மாற்றுயர்ந்த பொன். "தாவில் நன்பொன்" என்று சங்கச் சான்றோர் கூறுவதும் இதனையே யாகும். வேண்டுவார் வேண்டுவதை ஈகின்ற பெருமானுதலின் சிவபெருமானை, "வள்ளல்" என்று புகல்கின்றார். "வேதங்கள் ஐயா வென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியன்" என்று மணிவாசகர் முதலிய பெருமக்கள் திருவருளால் அறிந்துரைத்தலால், "மறை எல்லாம் ஆய்ந்தும் இன்ன வென்று அறிந்திலா நின் திருவடி" என்று உரைக்கின்றார். சிவனுடைய திருவடிகளைப் பணிந்து போற்றிப் பரவாமல் உலகியற் செல்வர்களைப் பலகாலும் போற்றி மனம் சோர்ந்தமை புலப்பட, "திருவடி மலர் பணியாமல் சாய்ந்த நாயினேன்" எனத் தம்மைக் கூறுகின்றார். சாய்தல் - மெலிதல். தமக் கமைந்த உடம்பை "ஏய்ந்த இவ்வுடல்" எனக் கூறுகின்றார். திருவருள் ஞானத்தால் எய்தும் ஞான வுடம்பைத் "திருவருள் இயலுடல்" எனக் குறிக்கின்றார். (8)

3728. மாற்றி லாதபொன் அம்பலத்
தருள்நடம் வயங்கநின் றொளிர்கின்ற
பேற்றில் ஆருயிர்க் கின்பருள்
இறைவநின் பெய்கழற் கணிமாலை
சாற்றி டாதஎன் விண்ணப்பம்
திருச்செவி தரித்தருள் செயல்வேண்டும்
காற்றில் ஆகிய இவ்வுடல்
இம்மையே கதியுடல் உறும்ஆறே.

உரை : மாற்றுக் காண முடியாத பொன் வேய்ந்த அம்பலத்தில் அருட் கூத்து விளங்க நின்றருடுகின்ற ஆட்டத்தால் நிறைந்த உயிர்கட்கெல்லாம் பேரின்பத்தை நல்குகின்ற இறைவனே! நினது கழலணிந்த திருவடிகட்கு மாலை புனைந்து வழிபடாத எனது விண்ணப்பத்தைத் திருச்செவிகளில் ஏற்றுக் காற்றாலாகிய எனது இவ்வுடம்பு இப் பிறப்பிலேயே சிவகதிக்குரிய ஞான உடம்பாகுமாறு அருள் புரிய வேண்டுகிறேன். எ.று.

ஒப்பற்ற பசும்பொன்னால் வேயப் பட்டதாகலின் பொன்னம்பலத்தை, "மாற்றில்லாத பொன்னம்பலம்" என விளக்குகின்றார். அம்பலத்தில் இறைவன் நிகழ்த்துகின்ற திருக்கூத்து உயிர் வகைகள் அத்தனையும் மலமாய கன்மங்களின் நீங்கிப் பேரின்பம் பெறுவது குறித்ததாம் என்ற பொருள் மொழியின் உண்மை புலப்பட, "அருள் நடம் வயங்க நின்று

ஒளிர்கின்ற பேற்றில் ஆருயிர்க்கு இன்பருள் இறைவ'' என்று உரைக் கின்றார். திருக்கூத்து உயிர்கட் கெல்லாம் அருட் செல்வமாதல் பற்றி, ''நடம் வயங்க நின்றெளிர்கின்ற பேறு'' என்று கூறுகின்றார். உயிர் வகை கள் அத்தனையும் முடிவில் சிவப் பேறு பெறுவது திருக்கூத்தின் கருத்து என்பது இதனால் விளக்கப் பெறுவது காண்க. திருவடியில் அணியப் படுவது பற்றிப் ''பெய் கழல்'' என்கின்றார். கழல் ஈண்டு ஆகு பெயர். பூமாலை அணிந்து திருவடியைப் பரவுவது கடமையாதலின் அதனைச் செய்யாமை தோன்ற, ''அணிமாலை சாற்றிடாத என் விண்ணப்பம்'' எனக் கூறுகின்றார். தச வாயுக்களின் இயக்கத்தால் இயங்குவது பற்றி உடம்பை, ''காற்றிலாகிய இவ்வுடல்'' எனக் குறிக்கின்றார். தச வாயுக்களாவன; ''ஒப்பார், பிராணன், அபானன், உதானனுடன் தப்பா வியானன் சமானனே—இப்பாலும் நாகன், தனஞ்சயன், கூர்மன், கிருகரன், தீதிலாத் தேவ தத்தனே'' (சிலப். அடி. நலமே. கோள்) என்பதனை லறிக. (9)

3729. தீட்டு பொன்அணி அம்பலத்
தருள்நடம் செய்துயிர்த் திரட்கின்பம்
காட்டு கின்றதோர் கருணையங்
கடவுள்நின் கழலிணை கருதாதே
நீட்டு கின்றஎன் விண்ணப்பம்
திருச்செவி நேர்ந்தருள் செயல்வேண்டும்
வாட்டும் இவ்வுடல் இம்மையே
அழிவுரு வளமடைந் திடும்ஆறே.

உரை : மெருகிடப்படுகின்ற பொன் வேய்ந்த அழகிய திருச்சிற்றம் பலத்தின்கண் அருட் கூத்தினை ஆடி உயிர் வகை எல்லாவற்றிற்கும் இன்பம் அருளுகின்ற ஒப்பற்ற கருணைக் கடவுளாகிய நின்னுடைய கழலணிந்த திருவடிகளை எண்ணுமல், பல பொருள்களில் எண்ணத்தைச் செலுத்துகின்ற என்னுடைய விண்ணப்பத்தைத் திருச்செவிகளில் ஏற்றுப் பிணி வகைகளால் வருத்துகின்ற இவ்வுடம்பு இப்பிறப்பில் சாவாத வளமுடைய தாகுமாறு அருள் புரிய வேண்டுகிறேன். எ.று.

ஒளியும் அழகும் திகழ மெருகிடப் படுதலின் பொன்னம்பலத்திலுள்ள பொன்னை, ''தீட்டு பொன்'' எனச் சிறப்பிக்கின்றார். உயிர் வகைகள் அனைத்தும் முடிவில் பிறவாப் பேறு பெற அருள் புரியும் கருத்தினால் அம்பலத்தின்கண் இறைவன் கருணை கூர்ந்து திருக்கூத் தாடுகின்றான் என்பது பற்றி, ''அருள் நடம் செய்து உயிர்த் திரட்டு இன்பம் காட்டு கின்றதோர் கருணையங் கடவுள்'' என்றும், அவருடைய திருவடிகளில் ஒலிக்கும் கழல் அணியப் பட்டிருப்பது பற்றி, ''கழலிணை'' என்றும், உயிர் கட்குப் பெருந் துணையாய் உய்தி நல்கும் சிறப்புடைமை பற்றி அதனையே நினைந்து போற்றிப் பரவாமல் உலகியல் பொருள்களில் ஆசை பெருகும் தன்மை தன்பால் உள்ளமை புலப்பட, ''கழலிணை கருதாதே நீட்டுகின்ற என் விண்ணப்பம்'' என்றும் உரைக்கின்றார். நீட்டுதல் - விரிவாகக் கூறுதல். பசி, பிணி, மூப்புக்களால் வருத்தம் தருவது பற்றித் தமது உடம்பை, ''வாட்டும் இவ்வுடல்'' எனவும், இது அழியாது ஞான

உடம்பாதல் வேண்டும் என்ற ஆர்வமுடைமை விளங்க, "இம்மையே அழிவுரு வளம் அடைந்திடுமாறே" எனவும் வேண்டுகிறார். மறுமையில் பெறலா மெனக் கைவிடாமல் இப்பிறவியிலேயே அழியா ஞான உடம்பை அளித்தருளுக என்றற்கு, "இம்மையே அழிவுரு வளம் அடைந்திடுமாறு" எனக் குறிக்கின்றார். (10)

திருச்சிற்றம்பலம்

26. இனித்த வாழ்வருள் எனல்

அஃதாவது, உலகியலில் பூத உடம்பு பெற்றுப் பிணி, மூப்புச் சாக்காடுகளால் துன்புற்றுத் துனித்து வருந்தும் வாழ்வை நீக்கி, இன்பமே நுகர்தற்குரிய, திருவருள் இன்ப வாழ்வு வேண்டுமென முறையிடுதலாம்.

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3730. உரத்தவான் அகத்தே உரத்தவா ஞான
ஒளியினுல் ஓங்கும்ஓர் சித்தி
புரத்தவா பெரியோர் புரத்தவா குற்றம்
பொறுத்தடி யேன்தனக் களித்த
வரத்தவா உண்மை வரத்தவா ஆக
மங்களும் மறைகளும் காணுத்
தரத்தவா அறிவா தரத்தவா பொதுவில்
தனித்தவா இனித்தவாழ் வருளே.

உரை : வன்மை பொருந்திய வானுலகின்கண் மேன்மை குன்றுத ஞான ஒளியினுல் ஓங்குகின்ற ஒப்பற்ற சித்தி புரத்தை யுடையவனே; பெரியோர்களின் சூழலே உடையவனே; செய்த குற்றங்களைப் பொறுத்து அடியேனுக்கு, ஞான வரம் அளித்தவனே; உண்மையால் மேன்மை பொருந்தியவனே; சிவாகமங்களும் வேதங்களும் காண முடியாத தன்மையை யுடையவனே; மெய்யணர்வுக் காதரவு தருகின்றவனே; அம்பலத்தில் தனித்து நின்றருடுகின்றவனே; எனக்கு இனிமை பொருந்திய வாழ்வை அருள்வாயாக. எ. று.

உரம் - வன்மை. மண்ணுலகம் போலக் கால வெள்ளத்தால் கெடாமை பற்றி, "உரத்த வானகம்" என்று உரைக்கின்றார். உரந்தவா ஞானவொளி, உரத்தவா என வலித்தது. உரம் - ஈண்டுத் திண்மை மேற்று. உரத்தவா ஞானமாவது மெய்ம்மையால் திண்மை குன்றுத திருவருள் ஞானம் என்பதாம். சித்தி புரம் - வடலூர்க்குச் சித்தி புரம் என்பதும் ஒரு பெயர். வடலூர்ச் சிற்றம்பலத்தின்கண் எழுந்தருளுவது பற்றி, "சித்தி புரத்தவர்" எனச் சிறப்பிக்கின்றார். பெரியோர் புரம் - ஞானவான்கள் உறையும் இடம். சிவஞானிகளின் திருவுள்ளத்தையே கோயிலாகக் கொள்பவனுதலால், "பெரியோர் புரத்தவா" எனப் புகல்கின்றார். குணமும் குற்றமுமுடைமை பற்றி, "குற்றம் பொறுத்து" என்றும்,

திருவருள் ஞானத்திற்குத் தகுதி யுடைமை விளங்க, "அடியேன் தனக்கு அளித்த வரத்தவா" என்றும் இயம்புகின்றார். வரமளித்தவனே என்பது அளித்த வரத்தவா என மாறி நின்றது. பொய்யா வரம் தருதல் பற்றி, "உண்மை வரத்தவா" என உரைக்கின்றார். தரம் - தன்மை. ஈண்டு வேதங்களும் ஆகமங்களும் காண மாட்டாத மேனிலையில் இருப்பது தோன்ற, "ஆகமங்களும் மறைகளும் காணத் தரத்தவா" எனக் கூறுகின்றார். மெய்யுணர்விற்குப் பொருளாய்த் தோன்றி இன்பம் தருவது பற்றி, "அறிவு ஆதரத்தவா" எனப் போற்றுகின்றார். அறிவு ஆதரத்தவன் - மெய் யுணர்வை விரும்புபவன். அம்பலத்தில் ஆடல் புரியுங்கால் உமையம்மையினின்றும் பிரிந்து தனிச் சிவமாய் நின்று அவள் காண ஆடுதலின், "பொதுவில் தனித்தவா" என உரைக்கின்றார். மண்ணக வாழ்வு துன்ப மிகுதியால் துனி விளைவித்தலின் அதனை நீக்கி, "இன்பமே நிறைந்த வாழ்வருளுக" என்பாராய், "இனித்த வாழ்வருள்" என வேண்டுகின்றார்.

இதனால், உலகியல் வாழ்வு துன்பமும், தீமையும், சிறுமையும் பிறவும் நிறைந்திருத்தலின் இவ்வாழ்வு வேண்டாம் என விண்ணப்பித்தவாறும். இப்பகுதியில் வரும் ஏனைப் பாட்டுக்களுக்கும் இதுவே கருத்தாகக் கொள்க. (1)

3731. முன்னவா திபர்க்கு முன்னவா வேத
முடிமுடி மொழிகின்ற முதல்வா
பின்னவா திபர்க்குப் பின்னவா எவர்க்கும்
பெரியவா பெரியவர் மதிக்கும்
சின்னவா சிறந்த சின்னவா ஞான
சிதம்பர வெளியிலே நடிக்கும்
மன்னவா அமுதம் அன்னவா எல்லாம்
வல்லவா நல்லவாழ் வருளே.

உரை : மக்கள் தேவர் முதலிய எல்லோர்க்கும் முன்னவனே; மண்ணகத் தலைவர்களான வேந்தர்கள் எல்லோர்க்கும் முன்னவனே; வேத வேதாந்தங்களின் முடி பொருளாகப் பேசப்படுகின்ற முதல்வனே; பின் வந்தவர் அனைவர்க்கும் அவர்களுடைய தலைவர்க்கும் பிற்பட்டவனே; எல்லோர்க்கும் பெரியவனே; அறிவாற்றலில் பெரியராயினர் மதிக்கத் தக்க சிறப்புடையவனே; சிறந்த ஞானச் சின்னங்களை உடையவனே; சிதம்பரப் பரவெளியிலே நடிக்கின்ற மன்னவனே; அமுதம் போன்றவனே; எல்லாம் வல்லவனே; எனக்கு நல்ல வாழ்வினை அருளுக எ.று.

முன்னவ - அதிபர்க்கு முன்னவ என அமைத்துக் கொள்க. முன்னவ அதிபார்க்கு என்பது முன்னவாதிபர்க்கு என வந்தது. அதிபர்க்கு முன்னவா என்பது மண்ணுலகம் விண்ணுலகம் ஆகிய எல்லா வுலகங்களிலும் ஆட்சி புரிகின்ற வேந்தன் எல்லார்க்கும் முன்னவன் என்பது தோன்ற நிற்கின்றது. "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றி

யனே'' என்ற திருவாசகம் இங்கே நினைக்கப்படுவது காண்க. வேத முடி - வேதாந்தம். இரண்டாவதாக நிற்கும் முடி - முடிபொருள் என்னும் பொருண்மை யுடையது. பின்னவாதிபர் - காலத்தால் பின் தோன்றிய வேந்தர். வேந்தர்க்கும் பிறர்க்கும் பின் தோன்றியவனே என்பது பட நிற்கின்றது. இக்கருத்துப் பற்றியே மணிவாசகப் பெருமான் ''பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே'' என உரைத்தருளுகின்றார். மன்னவருள்ளும் விண்ணவருள்ளும் சிறந்து நிற்கும் எல்லார்க்கும் பெரியவன் என்பது பற்றிச் சிவபெருமானை, ''எவர்க்கும் பெரியவா'' என உரைக்கின்றார். சின்னம் - சிறப்பு; அடையாளமுமாம். அறிவாற்றலால் பெரியராயினோர் நன்கு மதிக்கின்ற அடையாளங்களை உடையவனுதல் பற்றி, ''பெரியவர் மதிக்கும் சின்னவா'' எனச் சிறப்பிக்கின்றார். சிறந்த ஞானச் சின்னங்களை உடையவன் என்பது விளங்க, "சிறந்த ஞானச் சின்னவா'' எனத் தெரிவிக்கின்றார். ஞானச் சின்னமாவது மோன முத்திரை உடையவனுய் விளங்குதல். சிதம்பர வெளி - ஞானாகாசமாகிய ஞானவெளி. அதன்கண் நின்று ஞான நடனம் புரிவது பற்றி, ''சிதம்பர வெளியிலே நடிக்கும் மன்னவா'' என உரைக்கின்றார். சித் - ஞானம்; அம்பரம் - ஆகாசம்; இது சிதாகாசம் எனவும் வழங்கும். வெளி - பரமாகாச மாகிய பரஞான நிலையம். எப்பொழுதும் நின்று நடிக்கும் இயல்பு பற்றி, ''நடிக்கும் மன்னவா'' என்று கூறுகின்றார். மன்னவன் - நிலை பெற்றவன். நினைப்பார் நினைவின்கண் நினைக்கும் தோறும் இன்பம் தருவது பற்றி, ''அமுதம் அன்னவா'' எனப் புகலுகின்றார். எல்லாம் வல்ல பெருமானுதலால் சிவனை, ''எல்லாம் வல்லவா'' எனச் சிறப்பிக்கின்றார். இன்ப துன்பங்கள் விரவித் தெளிவும் மயக்கமும் தந்து அலைத்தலால் உலகியல் வாழ்வை விலக்கி, இன்பமும் தெளிவுமே எக்காலத்தும் நிலவும் சிவஞான வாழ்வு தருக என்பாராய், ''நல்ல வாழ்வு அருள்'' என விண்ணப்பிக்கின்றார். (2)

3732. விடையவா தனைதீர் விடையவா சுத்த
வித்தைமுன் சிவவரை கடந்த
நடையவா ஞான நடையவா இன்ப
நடம்புரிந் துயிர்க்கெலாம் உதவும்
கொடையவா ஓவாக் கொடையவா எனையாட்
கொண்டெனுள் அமர்ந்தரு ளியஎன்
உடையவா எல்லாம் உடையவா உணர்ந்தோர்க்
குரியவா பெரியவாழ் வருளே.

உரை : பொறி வாயிலாகச் செல்லுகின்ற ஆசைகளை நீக்கின விடை யேறும் பெருமானே; சுத்த வித்தை முதலாகச் சிவம் ஈருக வுள்ள சுத்த தத்துவமாகிய எல்லைகளைக் கடந்த ஒழுக்கத்தை உடையவனே; ஞான நெறிக்குரியவனே; இன்பம் தரும் கூத்தியற்றி உயிர் வகைகட் கெல்லாம் உய்தி நல்கும் அருட் கொடையை உடையவனே; அருட் செல்வத்தை வரையாது வழங்கும் கொடையை யுடையவனே; என்னை ஆட்கொண்டு, என்னுள்ளத்தில் எழுந்தருளி என்னை உடையவனுகிய

வனே; எல்லாம் உடையவனே; மெய்யுணர்ந்தோர்க் குரியவனே; பெருமையையுடைய சிவபோக வாழ்வை எனக் கருளுக. எ.று.

விடைய வாதலீன - கண் காது மூக்கு முதலிய பொறிகளின் வாயிலாக எழும் ஆசைகளால் வரும் துன்பம். விடையவன் - எருதினை ஊர்த்தியாகவும் கொடியாகவும் உடையவன். சுத்த மாயையின் மத்தகத்திலுள்ள சுத்த வித்தை, ஈசுரம், சதாசிவம், சத்தி, சிவம் என்று மேன் மேலாக வுள்ள தத்துவ வகைகளை, ''சுத்த வித்தை முன் சிவ வரை'' என்றும், மேலுள்ள சிவ தத்துவத்திற்கும் அப்பால் பரநாத எல்லைக்குள் இயங்குவது பற்றி, ''சிவ வரை கடந்த நடையவா'' என்றும் கூறுகின்றார். நடை - ஒழுக்கம். ஞான மூர்த்தியாதலால் சிவனை ''ஞான நடையவா'' என நவில்கின்றார். உயிர்கட்கு இன்பம் நல்குதல் பொருட்டு அம்பலத்தில் ஆடல் புரிகின்றாராதலால், ''இன்ப நடம் புரிந்து உயிர்க் கெலாம் உதவும் கொடையவா'' எனக் கூறுகின்றார். ஓவாக் கொடை - இடையறாது வழங்கும் வள்ளன்மை. உயிர்களை ஆட்கொண்டு அவற்றின் உள்ளத்தில் எழுந்தருளித் தனக்கே உரிமையாகக் கொள்வது பற்றி, ''என் உள்ளமர்ந்தருளிய என் உடையவா'' என்று இசைக்கின்றார். உயிரையே யன்றி உடல் பொருள்களையும் தனக்கு உடைமையாகக் கொள்வதால், ''எல்லாம் உடையவா'' என ஓதுகின்றார். உணர்ந்தோர் உணர்வின்கண் உண்மை ஒளி தந்து ஓங்குவித்தலின், ''உணர்ந் தோர்க்கு உரியவா'' என உரைக்கின்றார். பெரிய வாழ்வு - பெருமையை யுடைய வாழ்வு. அஃதாவது சிவ போகம் துய்த்துறையும் வாழ்வு. (3)

3733. வலத்தவா நாத வலத்தவா சோதி
மலையவா மனமுதல் கடந்த
புலத்தவா எனது புலத்தவா தவிர்த்துப்
பூரண ஞானநோக் களித்த
நலத்தவா வரையா நலத்தவா மறைகள்
நாடியும் காண்பதற் கரிதாம்
பலத்தவா திருஅம் பலத்தவா எல்லாம்
படைத்தவா படைத்தவாழ் வருளே.

உரை : வெற்றியை யுடையவனே; நாத தத்துவத்தை உடைய வனே; திருவருட் சோதியாகிய மலையை யுடையவனே; மனம் முதலிய கரணங்களைக் கடந்த இடத்தை யுடையவனே; எனது அறிவின்கண் உள்ளவனே; அறியாமையைப் போக்கி நிறைந்த ஞான நாட்டம் தந்த நலத்தை யுடையவனே; வேண்டா வென விலக்குதற் கில்லாத நலங்களை யுடையவனே; வேதங்கள் பலகால் முயன்றும் காண்பதற் கரிதாகிய பயனை யுடையவனே; திருவம்பலத்தில் உள்ளவனே; எல்லாப் பொருள்களையும் படைத்தவனே; நலமனைத்தும் நிறைந்த வாழ்வினை எனக்கு அருளுக. எ.று.

வலம் - வெற்றி. இடப்பாகம் அம்பிகைக் குரியதாகலின் தன் மேனியின் வலப்பாகத்தைத் தனக்கே உடையவனே எனினும் பொருந்தும். நாத வலம் - நாத தத்துவமாகிய சிறந்த இடம். சோதி

மலை - அருட் சோதியாகிய மலை. அருட் சோதி மலை போன்றவனே என்றற்கு, "அருட் சோதி மலையவா" என்கின்றார், சோதி மலையைத் திருவண்ணமலை எனக் கொண்டு திருவண்ணமலையை உடையவனே எனக் கொள்ளினும் பொருந்தும். மனம் முதலிய கருவி கரணங்களுக்கு அப்பாலுள்ளவனுதலின், "மன முதல் கடந்த புலத்தவா" எனப் புகல்கின்றார். எனது புலம் - என்னுடைய அறிவு. உயிரறிவின்கண் உணர்வுருவாய் இருத்தல் பற்றி, "எனது புலத்தவா" எனப் போற்றுகின்றார். குறையில்லாமல் போக்கி நிறைந்த ஞான நாட்டம் தருதல் பற்றி, "தவிர்த்துப் பூரண ஞான நோக்களித்த நலத்தவா" என மொழிகின்றார். பூரண ஞான நோக்கத்தைக் கூறுதலின் தவிர்த்து என்றற்கு, குறைகள் என்ற செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது. வேண்டா என விலக்குதற் கில்லாத ஞான நலத்தை 'வரையா நலம்' என வழங்குகின்றார். வேதம், மிருதி, புராணம் முதலியவற்றின் ஞானம் பாச (நூல்) ஞானமாதலின் அவற்றால் காண முடியாத தன்மை விளங்க, "மறைகள் நாடியும் காண்பதற் கரிதாம் பலத்தவா" எனக் கூறுகின்றார். பலம் - பயன். உயிர் ஒழிந்த உலகனைத்தும் படைத்த கடவுளாதலின் "எல்லாம் படைத்தவா" என மொழிகின்றார். படைத்த வாழ்வு - நலமனைத்தும் நிறைந்த வாழ்வு. அஃதாவது சிவபோக வாழ்வு. (4)

3734. உணர்ந்தவர் உளத்தை உகந்தவா இயற்கை
உண்மையே உருவதாய் இன்பம்
புணர்ந்திட எனைத்தான் புணர்ந்தவா ஞானப்
பொதுவிலே பொதுநடம் புரிந்தெண்
குணந்திகழ்ந் தோங்கும் குணத்தவா குணமும்
குறிகளும் கோலமும் குலமும்
தணந்தசன் மார்க்கத் தனிநிலை நிறுத்தும்
தக்கவா மிக்கவாழ் வருளே.

உரை : மெய்யுணர்ந்தவர் திருவுள்ளத்தை விரும்புவனே; கற்பனை கலவாத இயற்கை உண்மையே உருவாய் விளங்கும் தூய இன்பத்தைப் பெறும் பொருட்டு என் உணர்வில் கலந்தவனே; ஞான சபையின்கண் பொதுவாகிய நடம் புரிந்து எண் குணங்களும் நிறைந்து ஓங்குகின்ற உயர் குணத்தை உடையவனே; குணமும், குறியும், கோலமும், குலமும் நீங்கிச் சன்மார்க்கத் தனிநிலையில் உயிர்களை நிறுத்தும் தகுதியுடையவனே; ஞான நலம் மிகுந்த வாழ்வை எனக் கருளுக. எ.று.

உணர்ந்தவர் - மெய்யுணர்ந்தோர். மெய்யுணர்தல் - அவரது மெய்ம்மை யுள்ளம் தூய்நலம் உடையதாகலின் அங்கு எழுந்தருளும் இயல்பு பற்றிச் சிவபெருமானை, "உணர்ந்தவர் உளத்தை உகந்தவா" எனக் கூறுகின்றார். உகத்தல் - விரும்புதல். இயற்கை உண்மை - கற்பனை கலவாத தூய உண்மையே இறைவனுக்கு வடிவமாதலின், "இயற்கை உண்மையே உருவதாய்" என்றும், உண்மை வடிவில் உள்ளத்தில் நின்று உயிர்கள் இன்பம் எய்துதல் பொருட்டு எழுந்தருளுகின்றனாதலின், "இன்பம் புணர்ந்திட எனைத்தான் புணர்ந்தவா" என்றும்

விளம்புகின்றார். ஞானப் பொது - ஞான சபை. படைத்தல் முதலிய ஐந் தொழிலும் உலகில் ஒருங்கு நிலவ ஆடும் திருக்கூத்து 'பொது நடம்' எனப் புகலப்படுகின்றது. இதைத் 'தனி நடம்' என்றும், 'தனித் திருக்கூத்' தென்றும், 'தனிப் பெருங்கூத்' தென்றும் சான்றோர் பாராட்டி யுரைப்பர். எண் குணங்களாவன : தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல் பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்ற லுடைமை, வரம்பில் இன்ப முடைமை. எண் குணங்களும் திரண்ட பூரண குணத்தை, ''ஓங்கும் குணம்'' என உரைக்கின்றார். குறி - பெயர். குணம் என்பது ஈண்டுச் சத்துவம் முதலிய மூன்றன் தொகுதியாகிய குண தத்துவம். கோலம் - தோற்றம். உலகியல் வாழ்வில் மக்கள்பால் காணப் படும் குணம், குறி, கோலம், குலம் முதலியவற்றை நோக்காது ஆன்ம வியல் ஒன்றையே நோக்குவது சன்மார்க்கமாதலால், ''குணமும் குறி களும் கோலமும் குலமும் தணந்த சன்மார்க்கத் தனிநிலை'' என உரைக் கின்றார். தணத்தல் - நீக்குதல்; நீங்குதலுமாம். குணம் குறி முதலியன மக்கள் உடம்புப் பொருளாகத் தோன்றி மாறும் இயல்புடையனவாதலால், சத்தாகிய உண்மை நெறிக்கு ஆகாமை பற்றி, குணம் முதலிய ''தணந்த சன்மார்க்கத் தனிநிலை'' எனச் சிறப்பிக்கின்றார். மக்களின் உடம்புருவை நோக்காமல், உயிரியல்பு ஒன்றே நோக்குவது சன்மார்க்கம் என உணர்க. ''ஆன்ம நேயம் புரிதல்'' என்றும் கூறுப. உடம்பு உயிர்களே வேறு பிரித்து, உடம்பை விலக்கி உயிரின்பால் நேயம் கொள்விக்கும் தகுதி இறைவனிடத்து உண்மை நோக்கி, "சன்மார்க்கத் தனிநிலை நிறுத்தும் தக்கவா" என உரைக்கின்றார். மிக்க வாழ்வு - நலங்களால் நிறைந் துயர்ந்த வாழ்வு. (5)

3735. தத்துவங் கடந்த தத்துவா ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சத்துவ நெறியில் நடத்திஎன் தனைமேல்
தனிநிலை நிறுத்திய தலைவா
சித்துவந் தாடும் சித்திமா புரத்தில்
திகழ்ந்தவா திகழ்ந்தென துளத்தே
ஒத்துநின் றோங்கும் உடையவா கருணை
உளத்தவா வளத்தவாழ் வருளே.

உரை : தத்துவத் தொகுதிகள் அனைத்தையும் கடந்த தத்துவனே; சமரச சுத்த சன்மார்க்கமாகிய சத்துவ ஞான நெறியில் என்னைச் செலுத்தி, மேலாகிய ஒப்பற்ற நிலையின்கண் என்னை நிறுத்திய தலைவனே; அட்டமா சித்திகளையும் மேற்கொண் டுறையும் சித்தி புரமென்னும் வடலூரில் விளங்குபவனே; எனது உள்ளத்தில் ஒத்து நின்று ஞான ஒளி செய்து உயர்ந்த உடையவனே; அருள் நிறைந்த உள்ளத்தை உடையவனே; வளம் நிறைந்த வாழ்வை எனக் கருளுக. எ. று.

தத்துவம் கடந்த தத்துவா, ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவ தத்துவம் என மூவகைப்பட்டு முப்பத்தாறாக விரியும் தத்துவங்கள். தத்துவங்கட்கு உட்பட்டவை உயிர்களாதலின் அவற்றின் வேறாய சிவ

பரம்பொருளை, "தத்துவம் கடந்த தத்துவன்" எனக் கூறுகின்றார். தத்துவன் - மெய்ம்மையானவன். தன்னின் வேறுய பொருள்களில் அதுவதுவாய்க் கலந்தும் வேறுயும் இருப்பது பற்றி இறைவனைத் "தத்துவன்" என்கின்றார் எனினும் அமையும். சுத்த சன்மார்க்கமாவது குணமும் குறியும் குலமும் நோக்காமல் சத்தாகிய ஆன்மாவின்கண் அன்பு செய்தொழுகுதல். ஆன்மா நின்ற உடம்பு பொருளாக வேற்றுமை களை நோக்காமல், ஆன்ம ஒருமையையே நோக்கும் தன்மை புலப்பட, "சமரச சுத்த சன்மார்க்கம்" என உரைக்கின்றார். அதனினும் தெளிவான நெறி வேறின்மை புலப்படுத்தற்கு, "சன்மார்க்கச் சத்துவ நெறி" எனப் புகல்கின்றார். சத்துவம் - தெளிவு. அந் நெறியில் ஒழுகச் செய்தமை தோன்ற "நடத்தி" என்றும், அதனால் விளைவது ஞான நிலையாகிய மேனிலை என்றற்கு, "என்றனை மேல் தனிநிலை நிறுத்திய தலைவா" என மொழிகின்றார். தெளிந்த ஞான முடையார்க் கன்றிச் சுத்த சன்மார்க்க நிலைக்குரிய உள்ளமும் உணர்வும் உண்டாகாவாதலின், "ஞான சமரச சுத்த சன்மார்க்கச் சத்துவ நெறி" என விளக்குகின்றார். சித்து - அணிமா மகிமா முதலிய எண் வகைச் சித்திகள். சித்தி சித்து எனவும் வழங்கும். செயற் கரிய செயல்களைச் சித்து என்பதும் உண்டு. சித்தி புரம் என்பது சித்திமா புரம் என வந்தது. இது வடலூர்க்கு வழங்கும் ஒரு பெயர். இங்கே எழுந்தருளுதல் பற்றிச் சிவனை, "சித்திமா புரத்தில் திகழ்ந்தவா" எனச் செப்புகின்றார். சித்தி புரத்தை உத்தர ஞான சிதம்பரம் என உரைப்பாருமுண்டு. சித்தி புரத்தில் போல உள்ளத்தின் கண்ணும் எழுந்தருளுவது பற்றி, "எனது உளத்தே ஒத்து நின்றேங்கும் உடையவா" என ஓதுகின்றார். எல்லா உயிர்களையும் தனக்கு அடிமை யாகவும், எல்லா உலகுப் பொருள்களையும் தனக்கு உடைமையாகவும் உடையவனுதலால் இறைவனை, "உடையவா" எனப் புகல்கின்றார். அருளுருவானவன் என்பது பற்றி, "கருணை உளத்தவா" என உரைக் கின்றார். வளத்த வாழ்வு - பல்வகை ஞான வளமுடைய வாழ்வு. (6)

3736. மதம்புகல் முடிபு கடந்தமெய்ஞ் ஞான
மன்றிலே வயங்கொள்நா டகஞ்செய்
பதம்புகல் அடியேற் கருட்பெருஞ் சோதிப்
பரிசுதந் திடுதும்என் றுளத்தே
நிதம்புகல் கருணை நெறியவா இன்ப
நிலையவா நித்தநிற் குணமாம்
சிதம்புகல் வேத சிரத்தவா இனித்த
தேனவா ஞானவாழ் வருளே.

உரை : பல்வேறு மதங்கள் சொல்லுகின்ற முடிபுகளைக் கடந்த மெய்ஞ்ஞானமாகிய சபையிலே, விளங்குகின்ற நடனத்தைப் புரிகின்ற திருவடியையே விரும்பும் அடியேனுக்கு அருட் பெருஞ் சோதியாகிய சிவஞானத்தைப் பரிசாகத் தருவோம் என்று நாளும் என் உள்ளத்தே உரைத்தருளும் கருணை நெறியை உடையவனே; சிவபோகமாகிய இன்ப நிலையத்தில் இருப்பவனே; நிலைபெற்ற நிர்க்குணமாகிய ஞானத்தை எடுத்துரைக்கின்ற வேதங்களின் முடிவில் இருப்பவனே; இனித்த தேன் போன்றவனே; எனக்கு ஞான வாழ்வு தந்தருள்க. எ.று.

மதங்கள் - பல்வேறு சமயங்கள். ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு முடிபை உரைக்குமாயினும், பரம்பொருள் எல்லாவற்றையும் கடந்து ஞான மயமாய் விளங்குவதாகலின், சிவபிரான் திருக்கூத்தியற்றும் ஞான சபையை, "மதம் புகல் முடிபு கடந்த மெய்ஞ்ஞான மன்று" என விளம்புகின்றார். வயங்கொள் நாடகம் - ஒளி விளங்கும் ஞானத் திருக்கூத்து. பதம் - திருவடி. திருவடியை விரும்பி நிற்ற்ந்து பரவுதலால் தன்னை, "பதம் புகல் அடியேன்" எனக் குறிக்கின்றார். ஒளி மயமாகிய திருவருள் ஞானத்தை, "அருட் பெருஞ் சோதி" என்று குறிக் கின்றார். அருளே யுருவாய் பெரிய ஒளி மயமாக இருத்தல் பற்றிச் சிவனை, "அருட் பெருஞ் சோதி" என ஓதுகின்றார் எனினும் அமையும். அருட் பெருஞ் சோதியைக் காணும் தகுதியைத் தருகின்றேம் என உள்ளத்தே உணர்வு வடிவா யிருந்து உணர்த்துகின்ற திறம் புலப்பட, "அருட் பெருஞ் சோதிப் பரிசு தந்திடுதும்" என்றும், அதற்கு ஏதுவா யிருப்பது இறைவனது திருவருட் பண்பாதலால், "உளத்தே நிதம் புகல் கருணை நெறியவா" என்றும் இயம்புகின்றார். நெறியவன் - நெறியை யுடையவன். நித்தம் - அழியாது என்றும் இருப்பது. நிர்க்குணமாம் சிதம், குணாதீத மாகிய ஞான நிலையில் சிவம் விளங்குதல் பற்றி, "நிர்க்குணமாம் சிதம்" எனத் தெரிவிக்கின்றார். "நிர்க்குணமாய் நிர்மலமாய் நித்தியானந்தமாய் தற்பரமாய் நின்ற தனிமுதல்வன்" எனச் சிவஞான போதம் உரைப்பது காண்க. வேத முடிபொருளாய் விளங்குபவன் என்றற்கு, "வேத சிரத்தவா" என்று கூறுகின்றார். நிர்க்குணமாய் ஞானமாய் விளங்குவது பரம் பொருள் என வேதம் உரைத்தலின், "நிற்குணமாம் சிதம் புகல் வேத சிரத்தவா" என உரைக்கின்றார். இனித்த தேன் என்பது சாதி யடை. வற்றுத இன்ப நிலையைத் தருவது பற்றி, "ஞான வாழ்வு அருளுக" என வேண்டுகிறார். (7)

3737. மூவிரு முடிபும் கடந்ததோர் இயற்கை
முடிபிலே முடிந்தென துடம்பும்
ஆவியும் தனது மயம்பெறக் கிடைத்த
அருட்பெருஞ் சோதிஅம் பலவா
ஓவுரு முதலா உரைக்கும்மெய் உருவும்
உணர்ச்சியும் ஒளிபெறு செயலும்
மேவிநின் றவர்க்குள் மேவிய உணர்வுள்
மேயவா தூயவாழ் வருளே.

உரை : அறுவகைச் சமயங்களின் முடிவுகட்கும் அப்பாற்பட்ட தூய இயற்கை முடிபிலே முடிபாய் நின்று எனது உடம்பும் உயிரும் தன்னுடைய அருள் மயமாகுமாறு எனக்குக் கிடைத்த அருட் பெருஞ் சோதியாகிய அம்பலத்தை உடையவனே; ஓங்கார வடிவம் முதலாக உரைக்கப்படும் மெய்ம்மை யுருவும், உணர்வும், ஒளி திகழும் செய்கையும் பொருந்தி நின்ற மெய்ஞ்ஞானிகளது உள்ளத்தில் நிலவும் உணர்வை இடமாகக் கொண்டவனே; ஞான மயமான தூய வாழ்வை எனக்கு அருளுக. எ. று.

சமயங்கள் ஆருதலால் அவற்றின் முடிபுகளும் ஆருதல் பற்றி, "மூவிரு முடிபும்" என மொழிகின்ருர். சமயாதீதப் பரம்பொருளாதல் பற்றி அதன் நிலேமையை, "மூவிரு முடிபும் கடந்ததோர் இயற்கை முடிபு" என உரைக்கின்ருர். சமய ஞானிகளால் தத்தமக் கேற்ற கொள்கை வழிக் கற்பிக்கப்படும் கற்பனேக்கு இடமாகாத, தனி முடிபு என்றற்கு, "இயற்கை முடிபு" என்றும், அதற்கு அப்பால் முடிபு யாதும் இல்லேயாததால், "இயற்கை முடிபிலே முடிந்து" என்றும் மொழிகின்ருர். அருட் பெருஞ் சோதி ஞானத்தால் அருள் ஞானிகளின் உடம்பும் உயிரும் திருவருள் ஒளி மயமாம் என்பது பற்றி, "எனது உடம்பும் ஆவியும் தனது மயம் பெறக் கிடைத்த அருட் பெருஞ் சோதி" என உரைக்கின்ருர். அருள் மயமான பெருஞ் சோதி அம்பலத்தின்கண் காட்சி தருதலால், "அருட் பெருஞ் சோதி அம்பலவா" எனப் போற்றுகின்ருர். ஓவுரு - ஓங்கார வடிவம். எந்திரங்களின் வழியாகப் பல எழுத்துக்களேக் கற்பித்து, அவற்றைச் சிவ வடிவங்கள் எனக் கொண்டு வழிபடும் தாந்திரிகளின் கொள்கையும் அடங்க, "ஓவுரு முதலா உரைக்கும் மெய்யுரு" என ஓது கின்ருர். தந்திர ஞானிகளின் இயல்பை, "மெய்யுருவும் உணர்ச்சியும் ஒளி பெறு செயலும் மேவி நின்றவர்" என்று விளம்புகின்ருர். தந்திர வழி இயங்கும் ஞான முயற்சிகளேத் திருமூலர் அருளிய திருமந்திரத்துள் காணலாம். அவருடைய ஞானம் நிறைந்த உள்ளத்திலும் இறைவன் எழுந்தருளுகின்றமை புலப்பட, "மேவி நின்றவர்க்குள் மேவிய உணர்வுள் மேயவா" எனத் தெரிவிக்கின்ருர். ஞான இன்ப வாழ்வைத் "தூய வாழ்வு" என்று குறிக்கின்ருர். (8)

3738. பங்கமோர் அணுவும் பற்றிடா அறிவால்
பற்றிய பெற்றியார் உளத்தே
தங்கும்ஓர் சோதித் தனிப்பெருங் கருணைத்
தரந்திகழ் சத்தியத் தலேவா
துங்கம்உற் றழியா நிலேதரும் இயற்கைத்
தொன்மையாம் சுத்தசன் மார்க்கச்
சங்கதின் றேத்தும் சத்திய ஞான
சபையவா அபயவாழ் வருளே.

உரை : குற்றம் ஓர் அணுவளவும் இல்லாத அறிவினுல் மெய்யுணர்வு பெற்ற தன்மையராகிய பெரியோர் உள்ளத்தில், எழுந்தருளு கின்ற ஒப்பற்ற சோதி யுருவாகிய தனிப் பெருங் கருணே உடைமையால் திகழ்கின்ற உண்மை நெறித் தலேவனே; உயர்வு பெற்று என்றும் அழியாத நிலேமையினே நல்கும் இயற்கைப் பழமையுடையதாகிய சுத்த சன்மார்க்கச் சங்கத்தார் நாளும் நின்று பரவும் சத்திய ஞான சபையினே உடையவனே; எனக்கு அச்சமில்லாத வாழ்வைத் தந்தருள்க. எ.று.

பங்கம் - குற்றம். முக்குண வயத்தால் நல்லதன் நலனும், தீயதன் தீமையும் உள்ளவாறு உணரும் அறிவு குற்றப்படுவதாதலால், "பங்க மோர் அணுவும் பற்றிடா அறிவு" எனச் சிறப்பிக்கின்ருர். தூய அறிவால் மெய்யுணர்வு பெறும் தன்மை பெருங் குணமுடைய பெரியோரிடத்தே அமைதலால், "அறிவால் பற்றிய பெற்றியார்" எனப் புகழ்ந்து, அப்பெரு

மக்கள் திருவுள்ளத்தே தோன்றுவது பற்றி, "பெற்றியார் உளத்தே தங்கும் ஓர் சோதித் தனிப் பெருங் கருணைத் தரம்" எனச் சிறப்பிக்கின்றார். சோதி வடிவினனுயினும் ஒப்பற்ற பெருங் கருணை நிறைந்தவனுதலால் சிவனே, "ஓர் சோதித் தனிப் பெருங் கருணைத் தரம் திகழ் சத்தியத் தலைவா" என்று பாராட்டுகின்றார். துங்கம் - உயர்வு. தன்னியல்பில் உயர்வும், அழியா நிலைமையும், இயற்கையாம் தொன்மைப் பண்பும் உடையதாதல் விளங்க, சன்மார்க்கச் சங்கத்தை, "துங்கம் உற்றழியா நிலை தரும் இயற்கைத் தொன்மையாம் சுத்த சன்மார்க்கச் சங்கம்" என்று புகல்கின்றார். சுத்த சன்மார்க்கச் சங்கம் என்பது ஈண்டுச் சுத்த சன்மார்க்கச் சங்கத்தைச் சேர்ந்த அன்பர்களைக் குறித்து நின்றது. அவர்கள் கூடி நின்று பரவுமிடம் சத்திய ஞான சபை என்று விளக்குதற்கு, "சங்கம் நின்றேத்தும் சத்திய ஞான சபையவா" என்று கூறுகின்றார். உலகியலில் உண்டாகும் காம வெகுளி மயக்கம் என்ற மூவகைக் குற்றங்களாலும், கணந் தோறும் மாறும் இயல்புடைய முக்குண மயக்கத்தாலும், காம குரோதம் முதலாகிய அறுவகைக் குற்றங்களாலும் வாழ்வாங்கு வாழ்வார்க்கு அச்சம் மிகுதலால், "அபய வாழ்வு அருள்க" என வேண்டுகின்றார். (9)

3739. இனித்தசெங் கரும்பில் எடுத்ததீஞ் சாற்றின்
இளம்பதப் பாகொடு தேனும்
கனித்ததீங் கனியின் இரதமும் கலந்து
கருத்தெலாம் களித்திட உண்ட
மனித்தரும் அமுத உணவுகொண் டருந்தும்
வானநாட் டவர்களும் வியக்கத்
தனித்தமெய்ஞ் ஞான அமுதெனக் களித்த
தனியவா இனியவாழ் வருளே.

உரை : இனிக்கும் இயல்புடைய செங்கரும்பில் இருந்து, பிழிந்தெடுத்த தீவிய சாற்றினைக் காய்ச்சி, இளம் பதத்தில் எடுத்த பாகொடு தேனையும், நன்கு கனிந்த இனிய கனியின் சாற்றையும் கலந்து, மனமும் உடம்பும் களித்திட உண்டு மகிழ்கின்ற செல்வ மக்களும், அமுத உணவுண்டு இன்புற்றிருக்கும் வான நாட்டுத் தேவர்களும் கண்டு வியக்குமாறு ஒப்பற்ற மெய்ஞ்ஞானமாகிய அமுதினை எனக்கு அளித்தருளிய ஒப்புயர் வில்லாத பெருமானே; இனிய வாழ்வினை எனக்கு அருளுவாயாக. எ.று.

இனிமைச் சுவையைத் தனக்கு இயல்பாகக் கொண்டதாகலின், "இனித்த செங்கரும்பில் எடுத்த தீஞ்சாறு" என இயம்புகின்றார். சூடு மிகக் காய்ச்சாமல் பக்குவத்தில் எடுத்த பாகினை "இளம் பதப் பாகு" எனக் குறிக்கின்றார். கனிந்த தீங்கனி என்பது எதுகை நோக்கி "கனித்த தீங்கனி" என வலித்து நின்றது. இரசம் - இரதம் என வந்தது. செங்கரும்பின் இளம்பதப் பாகும் தேனும் கலந்த கலவையைச் செல்வம் படைத்த மக்களே எளிதிற் பெற்று உண்பராதலின் அவர்களை, "கருத்தெலாம் களித்திட உண்ட மனித்தர்" எனக் குறிக்கின்றார். மனமும் வாயும் சுவைத்து மகிழ உண்பது பற்றி, "கருத்தெலாம் களித்திட உண்ட"

என மொழிகின்ருர். தேவருலகத்துத் தேவாமுதத்தை உண்ணும் தேவர் களாலும் கண்டறியப் படாத சுவையை யுடையது மெய்ம்மை சான்ற சிவஞானமாகிய அமுதம் என விளக்குதற்கு, "மனிதரும் வானநாட்டவர் களும் வியக்கத் தனித்த மெய்ஞ்ஞான அமுது எனக்களித்த தனியவா" என உரைக்கின்ருர். ஒப்புயர் வில்லாமை விளங்க, "தனித்த மெய்ஞ் ஞானம்" என்றும், "தனியவா" என்றும் சாற்றுகின்ருர். (10)

திருச்சிற்றம்பலம்

27. திருவருள் விழைதல்

அஃதாவது, திருவருள் ஞானம் பெற விழைந்து இறைவன்பால் முறையிடுதல். இப்பகுதியில் உள்ள பாட்டுக்கள் இருபதும் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளமையால் பாராயணத்திற் குரியவாம் என அமைக.

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3740. செய்வகை அறியேன் மன்றுள்மா மணிநின்
திருவுளக் குறிப்பையும் தெரியேன்
உய்வகை அறியேன் உணர்விலேன் அந்தோ
உறுகண்மேல் உறுங்கொல்என் றுலைந்தேன்
மெய்வகை அடையேன் வேறெவர்க் குரைப்பேன்
வினையனேன் என்செய விரைகேன்
பொய்வகை உடையேன் எங்ஙனம் புகுவேன்
புலையனேன் புகல்அறி யேனே.

உரை : திருவருள் பேற்றிற் குரிய செயல் வகைகளையும் அம்பலத்தில் ஆடுகின்ற பெரிய மாணிக்க மணியாகிய உன்னுடைய திருவுளக் குறிப்பையும் அறிய மாட்டேன்; மெய்யுணர் வில்லாதவனுதலால் உய்தி பெறும் திறத்தையும் அறியேன்; துன்பங்கள் மேன் மேலும் வந்து வருத்துமோ வென்று வருந்துகிறேன்; மெய்யுணர்வு பெறும் வகையையும் காண்கிலேன்; என் குறையை வேறு எவர்க்கு எடுத்துச் சொல்லுவேன்; வினைப் பிடிப்பை உடையவனுதலால் யாது செய்ய வல்லேன்; பொய் நெறிகளை யுடையவனுதலால் எங்ஙனம் நினது திருவருள் நெறியில் புகுவேன்; புலைத் தன்மையுடைய யான் திருவருள் சூழலில் புகும் திறம் அறியாதவனாக வுள்ளேன். எ.று.

திருவருள் ஞானத்தைப் பெறுவதற்குரிய வழி வகையை அறிந்தால் இறைவன் திருவுள்ளத்தையும் அறிதல் கூடுமாதலால், "செய்வகை அறியேன் மன்றுள் மாமணி நின் திருவுளக் குறிப்பையும் தெரியேன்" எனக் குறிக்கின்றார். செய்வகை என்பதில், செய் என்பது செயல் என்ற பொருள் மேல் நின்ற முதனிலைத் தொழிற் பெயர். மாமணி - பெரிய மாணிக்க மணி. சிவன் திருமேனிக்கு மாணிக்க மணியின் நிறத்தை உவமை கூறும் மரபு பற்றி, "மாமணி" எனக் கூறுகின்றார். உலகியல்

வாழ்வு நல்கும் மயக்கத்தால் மெய்யுணர்வு தம்பால் இல்லாமை புலப்பட, "உணர்விலேன்" என்றும், உணர்வில்லாமையால் உலகியல் மயக்கத் தினின்றும் உய்தி பெறும் திறம் அறியாமை தோன்ற, "உய்வகை அறியேன்" என்றும் இயம்புகின்றார். உறுகண் - துன்பம். தெள்ளிய உணர்வும் செயலறிவும் விளங்காமையால் நாளும் துன்பங்கள் அடுக்கி வந்து தாக்குவது பற்றி, "உறுகண் மேல் உறுங்கொல் என்று உலைந்தேன்" என்று கூறுகின்றார். உலைதல் - வருந்துதல். மெய்யுணர்வு பெறுதற்குரிய வழி வகைகள் ஞான நூல்கள் பலவும் கூறுதலின், ஒன்றனைத் துணிந்து கோடற்கு நெஞ்சில் உரமின்மை புலப்பட, "மெய் வகை அடையேன்" என்றும், அதனை உணர்த்துதற்குரியவன் சிவ பெருமானதலின், "வேறெவர்க் குரைப்பேன்" என்றும் விளம்புகின்றார். தாமே தெளிய மாட்டாமைக்குக் காரணம் கூறுவார், "வினையனேன்" என்றும், வினை விளைவிக்கும் அறியாமையால் யாதும் செய்தற் கியலாமை தோன்ற, "என் செய விரைகேன்" என்றும் உரைக்கின்றார். தம்பால் பொய் ஒழுக்க முடைமையால் மெய்ந்நெறி அறிந்து மேற் கொள்ள மாட்டாமை பற்றி, "பொய்வகை உடையேன் எங்ஙனம் புகுவேன்" என்றும், புலைத் தன்மை யுடைமை பற்றி வேறு புகலிடம் அறியேன் என்பாராய், "புலையனேன் புகல் அறியேனே" என்றும் புகல்கின்றார்.

இதனால், இறைவன் திருவுளக் குறிப்பை அறியும் அறிவும், உய்வகை அறியும் உணர்வும் இல்லாமை பற்றி, மெய்ந்நெறி யடைதலும், புகலறிந்து புகுதலும் இல்லாமை கூறித் திருவருள் ஞானத்தைப் பெறும், திறம் காணமல் வருந்தியவாறும். (1)

3741. அறிவிலேன் அறிந்தார்க் கடிப்பணி புரியேன்
அச்சமும் அவலமும் உடையேன்
செறிவிலேன் பொதுவாம் தெய்வம்நீ நினது
திருவுளத் தெனைநினை யாயேல்
எறிவிலேன் சிறியேன் எங்ஙனம் புகுவேன்
என்செய்வேன் யார்துணை என்பேன்
பிறிவிலேன் பிரிந்தால் உயிர்தரிக் கலன்என்
பிழைபொறுத் தருள்வதுன் கடனே.

உரை : திருவருள் ஞானம் பெறும் அறிவில்லாதவனுகிய யான், அறிந்த பெருமக்களுக்கு அடிப்பணி புரிவது இல்லை; அச்சமும் அவலமுமே யுடையவனுய் அடக்கமாகிய பண்பின்றி உள்ளேன்; எல்லார்க்கும் பொதுவாய் நிற்கும் தெய்வமாகிய நீ நின்னுடைய திருவுள்ளத்தில் என்னையும் ஒருவனுக நினையாயாயின் என் அறியாமையைப் போக்கும் திறமில்லாதவனுவேன்; இவ்வாற்றுல் சிறுமை உடையனுகிய யான் நினது திருவருட் சூழலில் எவ்வாறு புகுவேன்? அது குறித்து யாது செய்வேன்; யாரைத் துணையாகக் கொள்வேன்; நின் திருவருட்கு அயலாகப் பிரிந்து செல்லேன்; ஒருகால் பிரிய நேர்ந்தால் உயிர் தாங்க மாட்டேன்; என் பிழைகளைப் பொறுத்தருள்வது உனக்குக் கடனுகும். எ.று.

திருவருள் ஞானம் பெறுதற் குரிய நல்லறி வில்லாமை தோன்ற "அறிவிலேன்" என்றும், அதனை அறித்த பெருமக்களுக்கு அடித் தொண்டு புரிந்தால் அவ்வறிவு எய்தலாமாயினும் அதனை நான் செய்வ தில்லை என்பார், "அறிந்தார்க் கடிப்பணி புரியேன்" என்றும் அறிவிக்கின் றார். அறிவும், அடித்தொண்டு புரியும் பண்பும் தம்பால் இல்லாமைக்குத் தடையாய் உள்ள குறைகள் இவைகள் என எடுத்துரைப்பாராய், "அச்சமும் அவலமும் உடையேன் செறிவிலேன்" எனச் செப்புகின்றார். செறிவு - அடக்கமாகிய நற்பண்பு. சமயங்கள் பலவாயினும் எல்லா வற்றிற்கும் பொதுவாய் இருப்பது பரம்பொருள் ஒன்று என்பது பற்றி, "பொதுவாம் தெய்வம் நீ" என்றும், நின்னுடைய திருவருள் எனக்கு இல்லையாயின் அச்சம் அவலம் முதலிய தடைகளைப் போக்கித் தெளிவுறும் திறமில்லாதவனாவேன் என்றற்கு, "நினது திருவுளத் தினை நினையாயேல் எறிவிலேன்" என்றும் புகல்கின்றார். எறிவு - குற்றங்களைப் போக்குதற்குரிய மனத் திண்மை. அச்சம், அவலம், செறிவின்மை, எறிவின்மை உடைமையால் சிறுமைப் பட்டுள்ளேன் என்பாராய், "சிறியேன்" எனவும், இதனால் நினது திருவருள் ஞானச் சூழலில் யான் எவ்வாறு புகுவேன்; புகுதற் பொருட்டு யான் யாது செய்வேன்; யாரைத் துணை யென்று கொள்வேன் என வருந்துகின்றமை புலப்பட, "எங்ஙனம் புகுவேன் என்செய்வேன் யார் துணை என்பேன்" எனவும் இயம்புகின் றார். இத்தகைய குறைபாடுகள் உடையவனையினும், திருவருள் நினைவினின்றும் பிரிந்தொழிவதில்லேன் என்பாராய், "பிறிவிலேன்" என்றும், பிரிந்தால் உயிர் தாங்காமல் இறந்தொழியும் என்றற்கு, "பிரிந்தால் உயிர் தரிக்கலன்" என்றும், பிரியாமைக்குரிய நன்முயற்சி யில் நில்லாமல் உயிர் விடுவது பிழையாயினும் அதனையும் பொறுத் தருள்வது உனக்குக் கடனும் என முறையிடுவாராய், "என் பிழை பொறுத்து அருள்வது உன் கடன்" என்றும் உரைக்கின்றார்.

இதனால், திருவருள் நினைவினின்றும் பிரிதல் நேர்ந்தால் உயிர் தாங்க மாட்டேன் எனத் தெரிவித்தவாறும். (2)

3742. உன்கடன் அடியேற் கருளல்என் றுணர்ந்தேன்
உடல்பொருள் ஆவியும் உனக்கே
பின்கடன் இன்றிக் கொடுத்தனன் கொடுத்த
பின்னும்நான் தளருதல் அழகோ
என்கடன் புரிவேன் யார்க்கெடுத் துரைப்பேன்
என்செய்வேன் யார்துணை என்பேன்
முன்கடன் பட்டார் போல்மனம் கலங்கி
முறிதல்ஓர் கணம்தரி யேனே.

உரை : அடியவனாகிய எனக்கு அருள் செய்தல் உனக்குக் கடன் என்று அறிந்தோர் அறிவுரையால் உணர்ந்து கொண்டேன்; அதனால் என் உடல், பொருள், உயிர் ஆகிய மூன்றையும் உனக்கே கடனின்றிக் கொடுத்துள்ளேன்; கொடுத்த பின்னும் அருள் ஞானப் பேறின்றிச் சோர்வடைதல் அழகாகாது; அது குறித்து என் கடமைகள் அனைத்தை யும் செய்கின்றேன்; ஆயினும் ஞானப் பேறெய்தாத குறையை யாருக்கு

எடுத்துச் சொல்வேன்; யாரைத் துணையாகக் கொள்வேன்; அது குறித்து யான் யாது செய்வேன்; முன்னே கடன் பட்டவர் போல மனம் வருந்தித் தளர்ந்து கெடுவதை நான் பொறுக்க மாட்டேன். எ.று.

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்" என்றும், "தன்னை அடைந்தார் வினை தீர்ப்பதன்றே தலையாயவர்தம் கடனுவது" என்றும் திருநாவுக்கரசர் முதலிய பெருமக்கள் உரைக்கின்றார்களாதலின், "உன் கடன் அடியேற் கருளல் என்று உணர்ந்தேன்" என்றும், அது குறித்து எனது உடலையும் ஈட்டிய பொருளையும் உயிரையும் மீட்டும் பெருவாறு கொடுத்துள்ளேன் என்பாராய், "உடல் பொருள் ஆவியும் உனக்கே பின் கடன் இன்றிக் கொடுத்தனன்" என்றும் உரைக்கின்றார். பின் கடனின்றிக் கொடுத்தலாவது, பின்னர் பெற்றுக் கொள்வது குறித்து முன்னர் கொடுப்பது. உடல் முதலிய மூன்றும் கொடுத்தும் திருவருள் பெரு தொழிதல் நன்றன்றுதலால், "கொடுத்த பின்னும் நான் தளருதல் அழகோ" என்று உரைக்கின்றார். என்னுடைய கடமைகளை ஒழுங்காகச் செய்கின்றேனுதலால் பிறர்க்கு எடுத்துரைப்பதோ பிறரைத் துணையாக வேண்டுவதோ வேறு செயல் வகைகளை மேற் கொள்வதோ முறையாகாதாகலின், "என் கடன் புரிவேன் யார்க்கு எடுத்துரைப்பேன் என் செய்வேன் யார் துணை என்பேன்" என எடுத்துரைக்கின்றார். முன்னே கடன் பட்டார் பின்னர் அதனைக் கொடுக்க மாட்டாமை எய்திய பொழுது மனம் கலங்கிச் செயலற் றொழிதல் இயல்பாதலின், "முன் கடன் பட்டார் போல் மனம் கலங்கி முறிதல் ஓர் கணம் தரியேன்" என மொழிகின்றார். முறிதல் - செயலறுதல்; கையறவு படுதலுமாம்.

இதனால், உடல் பொருள் ஆவி மூன்றும் தடையின்றிக் கொடுத்தும் அருள் ஞானப் பேறின்றிக் கையறவு படுதல் நன்றுகாதென முறையிட்டவாறும். (3)

3743. தரித்திடேன் சிறிதும் தரித்திடேன் எனது
தளர்ச்சியும் துன்பமும் தவிர்த்தே
தெரித்திடல் அனைத்தும் தெரித்திடல் வேண்டும்
தெரித்திடாய் எனில்இடர் எனைத்தான்
எரித்திடும் அந்தோ என்செய்வேன் எங்கே
எய்துகேன் யார்துணை என்பேன்
திரித்தநெஞ் சகத்தேன் சரித்திரம் அனைத்தும்
திருவுளம் தெரிந்தது தானே.

உரை; உலகியல் துன்பங்களை நான் தாங்க மாட்டேன்; சிறிதும் தாங்க மாட்டேன்; எனது மனச் சோர்வையும் துன்பத்தையும் போக்கித் திருவருள் ஞான நெறியைத் தெரிவித்தல் வேண்டும்; நெறி வகைகள் அனைத்தையும் குறையாமல் தெரிவித்தல் வேண்டும்; தெரியாயாயின் என்னைத் துன்ப வகைகள் போந்து எரித்து வருத்தும்; ஆதலால் நான் யாது செய்வேன்; எங்கே சென்று யாவரைத் துணை யென்று கொள்வேன்; இவ்வகையால் நிலைகுலைந்த, நெஞ்சினை யுடைய என்னுடைய வரலாறு முழுவதும் தேவரீர் திருவுள்ளம் அறிந்ததன்றே. எ.று.

துன்ப மிகுதியால் மிகவும் மெலிந்தமை புலப்பட, "தரித்திடேன் சிறிதும் தரித்திடேன்" என்றும், அத்துன்பங்களால் வந்த தளர்ச்சி முதலியவற்றைப் போக்கித் திருவருள் ஞான நெறியின் வழி வகை அனைத்தையும் விளங்க உரைத்தருள வேண்டுமென விண்ணப்பிப்பாராய், "எனது தளர்ச்சியும் துன்பமும் தவிர்த்தே தெரித்திடல் அனைத்தும் தெரித்திடல் வேண்டும்" என்றும் தெரிவிக்கின்றார். திருவருள் ஞான நெறியைத் தெரிவிக்கா தொழியின் தமக்கு எய்தக் கூடிய கேடு இது வென்பாராய், "தெரித்திடாய் எனில் இடர் எனைத்தான் எரித்திடும் அந்தோ என்செய்வேன்" எனப் புலம்புகின்றார். இறைவனைத் தவிர திருவருள் ஞானப் பேற்றிற் குரிய இடமும், அதனைப் பெறுதற்கு வாய்க்கும் துணையும் வேறே இல்லை யென்பாராய், "எங்கே எய்துகேன் யார் துணை என்பேன்" என இயம்புகின்றார். உலகியல் வாழ்வு நல்கும் மயக்கங்களாலும் தாக்கும் துன்பங்களாலும் மனநிறை யழிந்து வருந்தினேன் என்பாராய், "திரித்த நெஞ்சகத்தேன் சரித்திரம் அனைத்தும் திருவுளம் தெரிந்தது தானே" என்று ஓதுகின்றார். நிறை யழிந்த நெஞ்சினைத் "திரித்த நெஞ்சு" என உரைக்கின்றார். திரிந்த என்பது எதுகை நோக்கித் திரித்த என வலித்தது. உயிர்க்குயிராய் உடனிருந்து காண்கின்றுணர்தலின் இறைவனை, "திருவுளம் தெரிந்தது தானே" எனக் கூறுகின்றார்.

இதனால், திருவருள் ஞான நெறி தமக்கு உணர்த்தப்பட வில்லையானால் தன்னை உலகியல் துன்பங்கள் சுட்டெரித்து விடும் என இறைவனிடம் முறையிட்டவாறும். (4)

3744. தான்எனைப் புணரும் தருணம்ஈ தெனவே
சத்தியம் உணர்ந்தனன் தனித்தே
தேன்உறக் கருதி இருக்கின்றேன் இதுநின்
திருவுளம் தெரிந்ததெந் தாயே
ஆன்எனக் கூவி அணைந்திடல் வேண்டும்
அரைக்கணம் ஆயினும் தாழ்க்கில்
நான்இருப் பறியேன் திருச்சிற்றம் பலத்தே
நடம்புரி ஞானநா டகனே.

உரை : திருச்சிற்றம்பலத்தின்கண் ஆடல் புரியும் ஞான நாடகத் தலைவனே! நீ தானே போந்து என்னைக் கூடும் சமயம் இதுவே யென்று உண்மையாக உணர்ந்து தனித்துத் தேன் ஊறிச் சிந்தித்திருக்கிறேன்; என் தந்தையே; இது நின் திருவுள்ளம் அறிந்ததாம்; பசு போலக் கத்திக் குரல் காட்டி என்னைச் சேர்ந்திடல் வேண்டும்; அரைக் கணமேனும் நீ என்னை அடைதற்குத் தாமதிப்பாயின் நான் உயிரோடு இருக்கும் திறம் அறியேனுவேன். எ.று.

திருச்சிற்றம்பலம் ஞான சபையாதலால் அதன்கண் கூத்தப் பெருமான் நின்று ஞான நாடகம் செய்கின்றான் என்பது பற்றி, "திருச் சிற்றம்பலத்தே நடம்புரி ஞான நாடகனே" எனக் கூறுகின்றார். ஞான நாடகன் - ஞான நாடகத்தை ஆடுபவன். உயிர்களைப் பற்றி யிருக்கும்

மலம், மாயை, கன்மம் ஆகிய மூன்றையும் தனது திருக்கூத்தால் போக்கி ஞானம் எய்தி உயிர்கள் சிவபோகம் எய்துவிக்கும் குறிப்பினை உடைய தாகலின், ஞான நாடகம் எனப்படுகின்றது. மக்கட் பிறப்பெய்தி வாழ் வாங்கு வாழ்ந்து வரும் சமயம் இறைவன் உயிர்க்குயிராய்க் கலந்து மெய்யுணர்வு நல்கும் காலமாதலை ஞான நூல்கள் உணர்த்த உணர்ந்தமை விளங்க, "தான் எனைப் புணரும் தருணம் ஈதெனவே சத்தியம் உணர்ந்தனன்" என உரைக்கின்றார். மக்கட் பிறப்பாகிய சகல நிலையைத் "தருணம் ஈது" எனச் சுட்டிக் கூறுகின்றார். சிந்திப்பார் சிந்திக்குந் தோறும் தேனூறி இன்பம் செய்தலால், "தனித்துத் தேனூறக் கருதி இருக்கின்றேன்" எனத் தெரிவிக்கின்றார். "சிந்திப்பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவன" எனத் திருநாவுக்கரசர் உரைப்பது காண்க. மனவுணர்வும் உண்மை யுணர்வும் கலந்தோங்கும் இப்பிறப்பில் உயிர்கள் தன்னை யறிந்து அடைய மாட்டாமை எண்ணி இறைவன் தானே எழுந்தருளி ஞான நெறி காட்டுதல் முறை யென்பது இறைவன் அறிந்த செயலாதலின் "இது நின் திருவுளம் தெரிந்தது" என உரைக்கின்றார். தேனூறச் சிந்திக்கும் நிலை பக்குவ முடையார்க் கன்றி எய்தாதாதலின், ஞானப் பேற்றிற்குத் தான் பக்குவ முற்றிருப்பதை உணர்த்துதற்கு, "தனித்துத் தேனுறக் கருதி இருக்கின்றேன்" எனக் கூறுகின்றார். ஆன் - பசு. புறத்தே சென்ற பசு அம்மா எனக் கத்தித் தன் குரல் காட்டிக் கன்றை அணைதல் போல நினது வரவை முன்னறிவித்து என்னைக் கூடுதல் வேண்டும் என்பார், "ஆனெனக் கூவி அணைந்திடல் வேண்டும்" என நவில்கின்றார். இளமையும் அறியாமையு முடைமை பற்றிக் கன்றிற்குத் தன் குரல் காட்டித் தாய்ப் பசு முன்னறிவிப்பது போல, மெய்யுணர்வின்றி உலகியல் மாயையால் அலைப்புண்டிருக்கும் எனக்கு உனது வரவு முன் தெரிதல் வேண்டும் என்றற்கு, "கூவி அணைந்திடல் வேண்டும்" எனக் கூறுகின்றார். இறைவனுகிய உனது ஞான வரவு தாழ்க்குமாயின் பொறுத்துத் தாங்கும் வன்மையின்றி உயிர் விடுவேன் என உரைப்பாராய், "தாழ்க்கில் நான் இருப்பறியேன்" எனத் தெரிவிக்கின்றார்.

இதனால், இறைவன் தானே வந்து கூடி ஞானப் பேற்றின்பம் தர வேண்டும் என இறைஞ்சியவாறும். (5)

3745. ஞானமும் அதனால் அடைஅனு பவமும்
நாயினேன் உணர்ந்திட உணர்த்தி
ஈனமும் இடரும் தவிர்த்தனை அந்நாள்
இந்தநாள் அடியனேன் இங்கே
ஊனம்ஒன் றில்லோய் நின்றனைக் கூவி
உழைக்கின்றேன் ஒருசிறி தெனினும்
ஏனென வினவா திருத்தலும் அழகோ
இறையும்நான் தரிக்கலன் இனியே.

உரை : குறை சிறிதுமில்லாத பூரணப் பொருளாகிய சிவ பெருமானே! முன்பொரு நாள் சிவஞானத்தையும் அதனால் பெறலாகும் அனுபூதியையும் நாயினும் கடைப்பட்ட நான் இனிது அறிந்து கொள்ள

உணர்த்தி, என்பால் எனக்குண்டாகிய தாழ்வையும் துன்பத்தையும் போக்கி யருளினையாக, இக்காலத்தில் அடியவனுகிய யான் இங்கே இருந்து கொண்டு உன் பெயர்களைச் சொல்லி அந்த ஞானப் பேறு குறித்து முயன்ற வண்ணம் இருக்கின்றேன்; ஒரு சிறிதேனும் நீ மனம் இறங்கி வந்து ஏன் என்று கேளாதிருப்பது உனக்கு அழகாகாது; இப்பொழுது நான் சிறிது பொழுதும் நின் திருவருள் பெருமையைத் தாங்க மாட்டேனு கின்றேன். எ.று.

தொடக்கக் காலத்தில் தமக்கு இறைவன் சிவஞானத்தின் சிறப்பை யும் அதனை எய்தும் அனுபவ நெறியையும் தெளிவாக உணர்ந்து ஒழுகு மாறு உணர்த்திய திறத்தை, "ஞானமும் அதனுல் அடையனுபவமும் நாயினேன் உணர்ந்திட உணர்த்தி" என்பதனுல் வடலூர் வள்ளல் நமக்கு அறிவிக்கின்றார். அதனுல் தான் பெற்ற பயன் இது வென இயம்புவாராய், "ஈனமும் இடரும் தவிர்த்தனை அந்நாள்" என்று கூறு கின்றார். இந்த நாள் என்பது சிவானுபவத்தில் மூழ்கித் திளைத்து முதிர்ந் திருக்கும் காலத்தைச் சுட்டி நின்றது. இத்திருவடி யன்றி வேறு ஒன்றை யும் பொருளாகக் கொள்ளா திருக்கின்றேன் எனத் தனது மனநிலை உரைப்பாராய், "அடியேன்" என மொழிகின்றார். அதனுல் உன்னையே நினைந்து உன் திருப்பெயர்களையே மொழிந்து, உன் திருவடி ஞானப் பேற்றிற்கே யுரிய முறையில் முயன்ற வண்ணமிருக்கின்றேன் என்று தெரிவிப்பாராய், "இங்கே நின்றனைக் கூவி அழைக்கின்றேன்" என்றும், திருவருள் ஞானப் பேறு இன்னும் தமக்கு எய்தாமை புலப்பட, "ஒரு சிறிது எனினும் ஏன் என வினவாதிருத்தலும் அழகோ இறையும் நான் தரிக்கிலன் இனியே" என்றும் சொல்லி வருந்துகின்றார். இறையும் - சிறிது பொழுதும். "வேண்டுவார்க்கு வேண்டுவது ஈயாத குறை ஒன்று மில்லாதவன் நீ" என்ற கருத்துப்பட "ஊனம் ஒன்றில்லோய்" எனக் குறிப்பாய் உரைக்கின்றார். ஒரு குறையும் இல்லாத பெருமானுகிய நீ இந்த நாளில் ஏனென வினவா திருக்கும் குறை யுடையவனுதல் கூடா தென்பது குறிப்பு.

இதனுல் ஞானமும், ஞான அனுபூதியும் இறைவன் வடலூர் வள்ளலார்க்கு நல்கிய வரலாறு குறிக்கப்பட்டதாம். (6)

3746. இனியநற் றாயின் இனியஎன் அரசே
என்னிரு கண்ணினுண் மணியே
கனிஎன இனிக்கும் கருணைஆர் அமுதே
கனகஅம் பலத்துறும் களிப்பே
துனிஉறு மனமும் சோம்புறும் உணர்வும்
சோர்வுறு முகமும்கொண் டடியேன்
தனிஉளங் கலங்கல் அழகதோ எனைத்தான்
தந்தநற் றந்தைநீ அலையோ.

உரை : இனிமைப் பண்புடைய பெற்ற தாயினும் இனியனுகிய அருளரசே; என்னுடைய இரண்டு கண்களிலும் விளங்கும் மணி போல்பவனே; பழுத்த கனி போல, இனிக்கின்ற கருணைப் பண்புடைய

நிறைத்த அமுதமாகியவனே; பொன்னம்பலத்தின்கண் காண்பவரை மகிழ்விக்கும் இன்பப் பொருளே; வெறுத்த உள்ளமும், சோம்பிய உணர்வும், சோர்வுற்ற முகமும் கொண்டு அடியவனுகிய யான் நினது ஞான வின்பம் பெருமையால் தனித்து உள்ளம் அழுங்குதல் நின் திருவருட்கு அழகாகாது; என்னைப் பெற்ற நல்ல தந்தையும் நீயே யன்றே. எ.று.

நற்றாய் - பெற்ற தாய். இனிமைப் பண்பு அவட்கு இயல்பாதலின், "இனிய நற்றாய்" என்றும், இறைவனது அருட் பண்பு அவளது இனிமைப் பண்பினும் மிக்கிருத்தல் தோன்ற, "நற்றாயின் இனிய என் அரசே" என்றும் போற்றுகின்றார். "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ பாவியேனுடைய ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி உழப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து புறப்புறந் திரிந்த செல்வமே சிவபெருமானே" என மாணிக்கவாசகர் உரைப்பது காண்க. கண்ணுக்கு ஒளியும், பார்க்கும் தன்மையும் நல்குவது கண்ணின் உள் மணியாதலால், "என்னிரு கண்ணினுள் மணியே" எனப் புகல்கின்றார். இறைவனது திருவருள் நினைக்கும் தோறும் இன்பம் ஊற்றெழுந்து பெருகுவது பற்றி, "கனி யென இனிக்கும் கருணை ஆரமுதே" என உரைக்கின்றார். கனக அம்பலம் - பொன்னம்பலம். பொன்னம்பலத்தில் காட்சி தரும் திருக்கூத்து, காண்பார் உள்ளத்தில் பெருமகிழ்ச்சியை விளைவிப்பதால், "கனக அம்பலத்துறும் களிப்பே" என உரைக்கின்றார். களிப்புத் தருகின்ற பெருமானைக் "களிப்பு" என்றது உபசார வழக்கு. துனி - வெறுப்பு. நினைத்தது பெருமையால் எய்துவது பற்றி, "துளியுறும் மனம்" என்றும், நுண்பொருளை நாடி இன்புறும் உணர்வு அது செய்யாது மடங்குதல் பற்றி, "சோம்புறும் உணர்வு" என்றும், இவ்விரண்டாலும் உடம்பின்கண் உளதாகும் தளர்ச்சியைப் புலப்படுத்தற்கு, "சோர்வுறு முகம்" என்றும் சொல்லுகின்றார். திருவடியைப் பற்றுகக் கொண்ட அடிமையாகிய யான் ஆண்டவனுகிய உனது அருள் பெறுது வருந்தி மெலிதல் முறையாகாது என்றற்கு, "அடியேன் தனியுளங் கலங்கல் அழகதோ" என்று உரைக்கின்றார். அழகிதோ என்பது செய்யுளாகலின் அழகதோ என வந்தது. தந்தைக்கு இயல்பு ஞானம் பெறச் செய்தலா கலின், "நற்றந்தை நீ யலையோ" என நவில்கின்றார்.

இதனால், திருவருள் ஞான வின்பம் பெருமையால் எய்திய, தமது நிலைமையைத் தெரிவித்தவாறும். (7)

3747. தந்தையும் தாயும் குருவும்யான் போற்றும்
சாமியும் பூமியும் பொருளும்
சொந்தநல் வாழ்வும் நேயமும் துணையும்
சுற்றமும் முற்றும்நீ என்றே
சிந்தையுற் றிங்கே இருக்கின்றேன் இதுநின்
திருவுளம் தெரிந்ததே எந்தாய்
நிந்தைசெய் உலகில் யான்உளம் கலங்கல்
நீதியோ நின்அருட் கழகோ.

உரை: தந்தை, தாய், குரு, யான் போற்றிப் பரவும் தெய்வம், உடமையாகிய நிலம், பொருள், சொந்தமாகிய வாழ்வு, நட்பு, துணை,

சுற்றத்தார் ஆகிய எல்லாம் நீ யென்றே நினைந்து இவ்வுலகில் இருக்கின்றேன்; இந்த எனது இயல்பு தேவரீர் நன்கறிந்ததேயாம்; பழி தூற்றுகின்ற இவ்வுலகில் யான் மனம் கலங்கி வருந்துவது நீதியாமோ; எந்தையாகிய உன் திருவருளுக்கு அழகாகுமோ? எ.று.

குரு - ஞான ஆசிரியன். யான் போற்றும் சாமி - யான் வழிபடுகின்ற தெய்வம். சாமி என்னும் சொல் பொன்னுக்குமாதலால் யான் போற்றும் சாமி என்பதற்கு, யான் பேணிக் காக்கும் பொன் என உரைப்பினும் அமையும். பூமி - விளைபுலமாகிய நிலத்தின் மேற்று. தந்தை தாய் முதலாகக் கூறிய அனைத்தையும் சிவமென்றே கருதியிருக்கும் தன்மை புலப்பட, "நீ யென்றே சிந்தை உற்றிருக்கின்றேன்" எனத் தெரிவிக்கின்றார். மக்கள் உலகில் ஒருவரை ஒருவர் போற்றுதலினும் தூற்றுதல் மிகுதியாதலின், "நிந்தை செய்யுலகு" எனக் குறிக்கின்றார். தூற்றுகின்ற சூழலில் மனவமைதி பிறவாதாதலால், செய்யுலகில் யான் உளம் கலங்கல் நீதியோ" என மொழிகின்றார். திருவருள் நெறியில் நிற்கின்ற என் போலியர் இச் சூழலிற் சிக்கி வருந்துதல் நினது திருவருள் நெறிக்கு அழகாகாது என்பாராய், "நின் அருட்கு அழகோ" என வினவுகின்றார்.

இதனால், அருள் நெறி நிற்கும் தமக்கு, உலகியல் வாழ்வு தாராமை யுணர்த்தியவாறும். (8)

3748. அழகனே ஞான அமுதனே என்றன்
அப்பனே அம்பலத் தரசே
குழகனே இன்பக் கொடிஉளம் களிக்கும்
கொழுநனே சுத்தசன் மார்க்கக்
கழகநேர் நின்ற கருணைமா நிதியே
கடவுளே கடவுளே எனநான்
பழகநேர்ந் திட்டேன் இன்னும்இவ் வுலகில்
பழங்கணால் அழுங்குதல் அழகோ.

உரை: அழகுருவாய் ஆனவனே; ஞானமாகிய அமுத மயமானவனே; எனக்கு அப்பனே; அம்பலத்தில் எழுந்தருளும் அருளரசே; இளமைப் பண்புருவாயவனே; இன்பக் கொடி போன்ற உமாதேவியினுடைய உள்ளம் மகிழும் கணவனே; சுத்த சன்மார்க்கச் சங்கத்தில் நேர்மையாக நின்ற கருணைப் பெருஞ் செல்வமே; கடவுளே என்று நினைந்தும் சொல்லியும் பழகி அமைந்துள்ளேனுதலால் இன்னமும் இவ்வுலகியல் நல்கும் துன்பத்தால் வருந்தி மெலிவது நினது திருவருட்கு அழகாகாது காண். எ.று.

அழகென்னும் பண்புக்கு உருவாய் அமைந்தவனுகையால் "அழகன்" என்றும், சிவஞானமே வடிவாய் நினைக்கும் அன்பர்கட்கு அமுதம் போல் இன்பம் தருபவனுய் விளங்குதல் பற்றி, "ஞான அமுதனே" என்றும் உரைக்கின்றார். குழகன் - இளமைப் பண்புக்கு உருவா யிருப்பவன். இன்பத்தின் உருவாய்ப் பூங்கொடி போன்று விளங்குதலின் உமாதேவியை, "இன்பக் கொடி" என இயம்புகின்றார். கொழுநன் - கணவன். கழகம் - சங்கம். சுத்த சன்மார்க்கச் சங்கத்தின்

தலைவனுதலால், "சுத்த சன்மார்க்கக் கழக நேர் நின்ற மாநிதியே" எனப் புகல்கின்றார். கருணை மாநிதி - திருவருள் ஞானச் செல்வம். காட்சிக் கருவிகளாகிய கண் முதலிய இந்திரியக் காட்சி எல்லையையும், மனம் முதலிய மானதக் காட்சி எல்லையையும், அவற்றிற்கு அப்பாலாய யோகக் காட்சி, தன் வேதனைக் காட்சிகள் நல்கும் தத்துவக் காட்சி எல்லையையும் கடந்த பரம்பொருளாதல் பற்றி, "கடவுள்" என்று நினைந்தும், தொழுதும், போற்றியும், வணங்கியும் பயின்றுள்ளமை தோன்ற, "கடவுளே கடவுளே என நான் பழக நேர்ந்திட்டேன்" எனப் பகர்கின்றார். இந் நெறியில் கருவி கரணங்களை இயக்கி வாழ்கின்ற யான் ஞான வின்பம் துய்த்து மகிழ்ந்திருப்பதை விடுத்து உலகியல் துன்பத்தால் வருந்தி மெலிவது முறையாகாது என்பார், "இன்னும் இவ்வுலகில் பழங்கணல் அழுங்குதல் அழகோ" என முறையிடுகின்றார். பழங்கண் - துன்பம்.

இதனால், சுத்த சன்மார்க்க ஞான நெறியில் இன்பம் பெற்று, இனி திருக்க வேண்டிய யான் உலகியல் துன்பத்தால் வருந்துதல் நலமாகாது என விண்ணப்பித்தவாறும். (9)

3749. பழம்பிழி மதுரப் பாட்டல எனினும்
பத்தரும் பித்தரும் பிதற்றும்
கிழம்பெரும் பாட்டும் கேட்பதுன் உள்ளக்
கிளர்ச்சிஎன் றறிந்தநாள் முதலாய்
வழங்குநின் புகழே பாடுறு கின்றேன்
மற்றொரு பற்றும்இங் கறியேன்
சழங்குடை உலகில் தளருதல் அழகோ
தந்தையுந் தாயும்நீ அலையோ.

உரை : இனிய பழத்தினின்றும் பிழிந்து சாற்றின் சுவையையுடைய பாட்டுக்கள் அல்லவாயினும், பத்தர்களும் ஞானப் பித்தர்களும் பாடுகின்ற பழமையான போக்கில் நின்ற பெரிய பாட்டுக்களையும் கேட்டு மகிழ்வது உனது திருவுள்ளத்திற்கு மகிழ்ச்சி தருவதாம் என்று அறிந்த நாள் முதலாக, நின்று நிலவுகின்ற நின் புகழையே யானும் பாடுவது மேற்கொண் டுள்ளேன்; வேறு எனக்கு ஒரு பற்றும் உலகில் என்னால் அறிய முடியவில்லை; அப்பெற்றியனாகிய யான் குற்றம் நிறைந்த உலகு நல்கும் துன்பத்தால் தளர்ச்சி யுறுவது நலமாகாது; எனக்கு மெய்யுணர் வருளும் தந்தையும் உடல்நலம் அருளும் தாயும் நீ யன்றோ. எ. று.

நன்கமைந்த பாட்டுக்களிடத்துப் பெறலாகும் இன்பத்திற்கு இனிய பழங்களின் சாற்றின் சுவையை உவமை கூறுவது மரபாதலின், "பழம் பிழி மதுரப் பாட்டு" எனச் சிறப்பிக்கின்றார். "தென்னுண் தேனில் தேக்கிய செஞ்சொற் கவி யின்பம்" என்று கம்பர் கூறுவது காண்க. பத்தர் - பத்திமான்கள். பித்தர் - சிவஞானப் பேற்றிலேயே ஈடுபட்டுப் பிறிது எவற்றையும் விரும்பாது ஒழுகுபவர். அவர்கள் பாடும் பாட்டுக்கள் தொன்று தொட்டுப் பழமை நெறியிலேயே அமைந்து கிடத்தலின் அவற்றை, "பத்தரும் பித்தரும் பிதற்றும் கிழப் பெரும் பாட்டு" என ஓது

கின்ருர். இந்நாலோயோர்க்கு அவை இனிய பாட்டுக்களாகத் தோன்ருவிடினும் அவற்றையும் கேட்டு மகிழ்வதில் நீ சிறந்தவன் என்று சான்ருேர் சொல்லக் கேட்டுள்ளேன் என்பாராய், "பிதற்றும் கிழம் பெரும் பாட்டும் கேட்பது உன் உள்ளக் கிளர்ச்சி என்று அறிந்த நாள் முதலாய்" எனக் கூறுகின்ருர். கிழப் பாட்டு எனற்பாலது எதுகை நோக்கிக் கிழம் பாட்டு என வந்தது. கிழப் பாட்டு என்பதை விருத்தப் பாட்டு என்பது முண்டு. பெரும் பாட்டு என்பதில் பெருமை பன்மை குறித்து நின்றது. பழம் பாட்டுக்கள் இந்நாலோய புதுமைப் புலவர்க்குச் சுவை யுடையதாகத் தோன்ருமை விளங்க, "பழம் பிழி மதுரப் பாட்டல" எனப் பிரித்துக் காட்டுகின்ருர். புதியரிற் புதியனுகலின் இறைவனுக்குப் புதுமைப் பாட்டுக்கள் ஒத்தவை என்பது இதனுல் விளக்கிக் காட்டு கின்ருர். வழங்குதல் - தொன்று தொட்டு நின்று நிலவுதல். பாடும் பாட்டுக்கள் பழமையும் புதுமையும் உடையவாயினும் நினது புகழ் அவற்றிற்குப் பொருளாய் நின்று நிலவுகின்றமை யுணர்ந்து பாடலுறு கின்றேன் என்பாராய், "வழங்கும் நின் புகழே பாடுறுகின்றேன்" என உரைக்கின்ருர். இறைவன் திருப்புகழைப் பாடுவதல்லது வேறு பற்றுக் கோடு தமக் கில்லாமை தோன்ற, "மற்ருெரு பற்றும் இங்கறியேன்" எனப் புகல்கின்ருர். சழக்கு - குற்றம்; எதுகை நோக்கிச் சழங்கு என வந்தது. உணர்வு தருவதால் தந்தையையும் உடல்நலம் உறுத்துவதால் தாயையும் உவமம் செய்து "தந்தையும் தாயும் நீ அலேயோ" என வேண்டுகின்ருர்.

இதனுல், பாட்டுக் குருகும் பரமன் என்று பெரியோர் கூறுவதைப் பற்ருகக் கொண்டு வடலூர் வள்ளல் பாட்டுக்கள் பாடுவதை மேற் கொண்டுள்ளார் என்பது தெரிவித்தவாரும். (10)

3750. தாயும்என் ஒருமைத் தந்தையும் ஞான
சபையிலே தனிநடம் புரியும்
தூயநின் பாதத் துணேஎனப் பிடித்தேன்
தூக்கமும் சோம்பலும் துயரும்
மாயையும் வினேயும் மறைப்பும்ஆ ணவமும்
வலேத்தெனேப் பிடித்திடல் வழக்கோ
நாயினேன் இனிஓர் கணந்தரிப் பறியேன்
நல்அருட் சோதிதந் தருளே.

உரை : ஞான சபையில் தனிக் கூத்தியற்றும் தூயவனுகிய நின் பாதம் இரண்டுமே என்னேப் பெற்ற தாயும் ஒப்பற்ற தந்தையுமாம் என எண்ணி ஒழுகுகின்றேனுகவும், தூக்கமும், சோம்பலும், துயரமும், உலகியல் மாயையும், வினேகளும், மறைப்பும், ஆணவத் தன்மையும் என்னே வலேத்துக் கொண்டு துன்புறுத்துவது முறையாகுமா? நாயினும் கடைப்பட்ட யான் இனி ஒரு சிறிது பொழுதும் தாங்க மாட்டேன்; ஆதலால் அருட் சோதியாகிய நல்ல நினது ஞானத்தை எனக்குத் தந்தருள்க. எ. று.

ஞான சபை - திருச்சிற்றம்பலம். ஞான சபையின்கண் உலகுயிர்கட்கு ஞானமும் உய்தியும் உண்டாதற் பொருட்டு இறைவன் அம்பலத்தின்கண் ஆடல் புரிகின்றான் என்பது பற்றி அதனையே தமக்குத் தாயும் தந்தையுமாக எண்ணி ஒழுகும் திறத்தை, "ஞான சபையிலே தனிநடம் புரியும் தூய நின் பாதத் துணை தாயும் என் ஒருமைத் தந்தையுமாம் எனப் பிடித்தேன்" என வடலூர் வள்ளல் எடுத்தோதுகின்றார். கூத்தப் பெருமானுடைய திருவடி யிரண்டும் உண்மை ஞானத்தையும் உலகியல் வாழ்வையும் தருவதை விளக்க, "தாயும் என் ஒருமைத் தந்தையும் நின் பாதத் துணை" எனக் கூறுகின்றார். இந்நெறியில் எனக்கு ஊக்கமும் ஞானத் தெளிவும் வேண்டி யிருக்க, அவற்றிற்கு மாறுக ஒருபால் தூக்கமும், சோம்பலும், துயரமும், ஒருபால் உலகியல் மாயையும், முக்குண மறைப்பும், ஆணவச் செருக்கும் சூழ்ந்து வருத்துகின்றன என்பாராய், "தூக்கமும் சோம்பலும் துயரும் மாயையும் வினையும் மறைப்பும் ஆணவமும் வனைத்து எனைப் பிடித்திடல் வழக்கோ" எனக் கூறுகின்றார். திருவருள் ஞான விளக்கம் எய்தினாலன்றி இவற்றைத் தாங்கும் தன்மை தனக்கு எய்தாது என்பார், "நல்லருள் சோதி தந்தருள்" என்றும், "இனி ஓர் கணம் தரிப்பறியேன்" என்றும் இயம்புகின்றார்.

இதனால், திருவடித் துணையே தாயும் தந்தையுமாம் என எண்ணி வாழ்கின்ற என்னைத் தூக்கம், சோம்பல் முதலாகிய துன்பங்கள் சூழ்ந்து வருத்துவது முறையாகாது என விண்ணப்பித்தவாறும். (11)

3751. சோதியேல் எனைநீ சோதனை தொடங்கில்
சூழ்உயிர் விடத்தொடங் குவன்நான்
நீதியே நிறைநின் திருவருள் அறிய
நிகழ்த்தினேன் நிச்சயம் இதுவே
ஓதியே உணர்தற் கரும்பெரும் பொருளே
உயிர்க்குயிர் ஆகிய ஒளியே
ஆதியே நடுவே அந்தமே ஆதி
நடுஅந்தம் இல்லதோர் அறிவே.

உரை : பல நூல்களை ஓதிப் பயின்றாலும் அந்த உணர்வால் அறிதற்கரிதாகிய பெரிய பொருளாகியவனே; உயிர்கட் குயிராய் ஒளி நல்குபவனே; எல்லாப் பொருட்கும் ஆதியும் நடுவும் முடிவும் ஆகியவனே; தனக்கு ஆதியும் நடுவும் முடிவும் இல்லாத அறிவுருவாகியவனே; என்னை இனியும் சோதித்தல் வேண்டாம்; சோதிக்கத் தொடங்குவாயாகில் உடன் முழுதும் சூழ்ந்திருக்கின்ற என் உயிரை மாய்த் தொழிக்க நான் தொடங்குவேன்; நீதியே நிறைந்த நின் திருவருள் அறிய உரைக்கின்றேன்; இது உண்மை. எ. று.

"உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்" எனச் சான்றோர் உரைத்தலால், "ஓதியே உணர்தற் கரும்பெரும் பொருளே" என்று உரைக்கின்றார். நூலறிவு கொண்டு பரம்பொருளை அறிதலாகாது என்பது கருத்து. "நூலறிவு பேசி நுழைவிலார் தாம் திரிக" என்று

காரைக்காலம்மையார் உரைப்பது காண்க. நூல்களனைத்தும் உலகில் வாழ்ந்த சான்றோர்களின் உலகியல் அனுபவ அறிவாதலின் அவை அனுபவ எல்லைக் கப்பாற்பட்ட பரம்பொருளைக் காட்டா என்பது பற்றி வடலூர் வள்ளல் இவ்வாறு கூறுகின்றார். பெரும் பொருள் என்பதை வட நூலார் "பிரமப் பொருள்" என்பர். உயிர்க் குயிராயிருந்து உயிருணர்வு தடுமாறுங்கால் ஒளி தந்து உணர்வை மிகுவித்தலின் இறைவனை, "உயிர்க் குயிராகிய ஒளியே" என உரைக்கின்றார். உலகியற் பொருட்கள் அத்தனைக்கும் உளவாகும் தோற்றம், இருப்பு, கேடுகட்குக் காரணனுதலால் பரம்பொருளை, "ஆதியே நடுவே அந்தமே" என ஓதுகின்றார். உலகியல் பொருள்கட்கு ஆதியும் அந்தமுமாகிய இறைவனுக்குத் தோற்றமும், முடிவும் இல்லை யென்பதைக் காட்டுதற்கு, "ஆதி நடு அந்தம் இல்லதோர் அறிவே" என மொழிகின்றார். அறிவே பரம் பொருளுக்கு உருவாகலின் "அறிவே" என்கிறார். "அகர உயிர் போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து" என்று உமாபதி சிவனார் உரைப்பது காண்க. தூக்கம், சோம்பல் முதலிய வற்றாலும், மாயை வினை முதலியவற்றாலும் தாக்கி வருத்துவது தனது மனவொருமையையும் அறிவுத் திண்மையையும் ஆராய்வது போலத் தோன்றுதலின், "சோதியேல்" என விண்ணப்பிக்கின்றார். அவ்வாறு சோதிக்கத் தொடங்கின் சோதனைகளைத் தாங்கக் கூடிய மனத் திட்பமும், அறிவுத் திறனும் தம்பால் இல்லாமையால், சாதல் ஒழிய வேறு செயற்பாலது ஒன்றுமில்லை என்பாராய், "எனை நீ சோதனை தொடங்கின் சூழுயிர் விடத் தொடங்குவன் நான்" என அறிவிக்கின்றார். உடல் முழுதும் பரந்து இருத்தலின் உயிரைச் "சூழ் உயிர்" எனச் சொல்லுகின்றார். நீதியே இறைவனுக்கு உருவாதல் பற்றி, "நீதியே நிறை நின் திருவருள்" என்றும், அருள் நிறைந்த நின் திருவுள்ளம் அறிய இதனைத் தெரிவிக்கின்றேன் என்பாராய், "திருவருள் அறிய நிகழ்த்தினேன்" என்றும் கூறுகின்றார். வெறும் சொல்லுருவாய் நில்லாமல் என் கூற்றைச் செயலாலும் வலியுறுத்துவேன் என்பாராய், "நிச்சயம் இதுவே" என்று வற்புறுத்துகின்றார்.

இதனால், உலகியல் துன்பங்களைத் தந்து தன்னைச் சோதித்தல் கூடாதென விண்ணப்பித்தவாறும். (12)

3752. இல்லைஉண் டெனும்இவ் விருமையும் கடந்தோர்
இயற்கையின் நிறைந்தபேர் இன்பே
அல்லைஉன் டெழுந்த தனிப்பெருஞ் சுடரே
அம்பலத் தாடல்செய் அமுதே
வல்லைஇன் றடியேன் துயர்எலாம் தவிர்த்து
வழங்குக நின்அருள் வழங்கல்
நல்லைஇன் றலது நாளைஎன் றிடிலோ
நான்உயிர் தரிக்கலன் அரசே.

உரை : அருளரசே! இல்லை யென்றும் உண்டென்றும் பேசப்படும் இவ்விரு தன்மையும் கடந்து அமைந்த இயற்கை நிலையில் நிறைந்து விளங்கும் பேரின்பப் பொருளாகிய பெருமானே; அறியாமையாகிய

இருளைக் கெடுத் தெழுந்த ஒப்பற்ற பெரிய சுடரே; அம்பலத்தின்கண் ஆடல் புரிகின்ற அமுதமே; இப்பொழுது அடியேனுடைய துன்பமெல்லாம் தவிர்த்து, உன்னுடைய அருள் இன்பத்தை நல்குக; நல்குவதில் இன்று நன்றன்று நாளை நல்குவம் என்று சொல்வாயாயின் நான் உயிர் வாழேன். எ.று.

உலகியற் பொருட்கள் அனைத்திற்கும் தோற்றத்தால் உண்மைத் தன்மையும், மறைதலால் இன்மைத் தன்மையும் இயல்பாக அமைந்தன வெனினும், உளதென்றும் இலதென்றும் கூறும் எல்லைக்கு அப்பாற்பட்ட இயல்பினதாகிய சிவானந்தத்தை, "இல்லை உண்டு எனும் இவ்விருமை யும் கடந்தோர் இயற்கையின் நிறைந்த பேரின்பம்" என உரைக்கின்றார். அல் - இருள்; அஃதாவது மலமாயை கன்மங்களால் உயிர்கட்கு உளதாகும் அஞ்ஞான இருள். திருவருள் ஞானவொளி அவ்விருளை வீழுங்கிச் சிறந்தோங்குதலின், "அல்லை யுண்டெழுந்த தனிப் பெருஞ் சுடரே" என விளம்புகின்றார். இருளைப் போக்கும் ஒளியை, அவ்விருளை உண்டொழித்ததாகக் கூறுவது செய்யுள் மரபு. "அகலிரு விசும்பில் பாயிருள் பருகிப் பகல் காண்டெழுதரு பல்கதிர்ப் பருதி" (பெரும்பாண்) எனச் சங்கச் சான்றோர் கூறுவதும் காண்க. அடியேன் துயரெலாம் வல்லை தவிர்த்து என இயைக்க. துயர் தவிராத வழித் திருவருள் இன்பத்தை அனுபவிக்க முடியாதாகலின், "அடியேன் துயரெலாம் இன்று வல்லை தவிர்த்து நின் அருள் வழங்குக" எனக் கூறுகின்றார். நல்லது என்பது நல்லை என வந்தது. "வழங்கல் இன்று நல்லதலது" என இயைத்து இன்று அருள் வழங்குதல் நன்றன்று எனப் பொருளுரைக்க. உடம்பினின்றும் உயிர் நீங்கும் காலம் இதுவென வரையறுத்து உரைத்தற் காகாமையின், "நாளை என்றிடில் உயிர் தரிக்கலன்" என நவில்கின்றார்.

இதனால், உயிர் வாழ்வின் நிலையாமை கூறி இன்றே அருள் வழங்குக வென அருள் வேண்டியவாறும். (13)

3753. அரைசெலாம் வழங்கும் தனிஅர சதுநின்
அருளர செனஅறிந் தனன்பின்
உரைசெய்நின் அருள்மேல் உற்றபே ராசை
உளம்எலாம் இடங்கொண்ட தெந்தாய்
வரைசெயா மேன்மேல் பொங்கிவாய் ததும்பி
வழிகின்ற தென்வசங் கடந்தே
இரைசெய்என் ஆவி தழைக்க அவ் வருளை
ஈந்தருள் இற்றைஇப் போதே.

உரை : எந்தையே! உலகிலுள்ள அரைசுகள் எல்லாம் வழங்கி வருமாறு செய்யும் ஒப்பற்ற அரசாக விளங்குவது நின்னுடைய அருளரசு என்று அறிந்து கொண்டேன்; பின்பு சான்றோர் புகழ்ந் துரைக்கின்ற நின்னுடைய திருவருளின்பால் எனக்குண்டாகிய பேராசை என் உள்ள மெல்லாம் கவர்ந்து கொண்டது; மேலும் அது ஒரு வரையறைக்குள்

நில்லாது மேன்மேலும் பொங்கித் ததும்பி என் வசமாகாமல் வழிகின்றது; ஓதுகின்ற என்னுயிர் தழைத் தோங்குமாறு இன்றே இப்போதே அத் திருவருளை எனக்களித் தருள்வாயாக. எ.று.

உலகத்தில் ஆங்காங்கிருந்து ஆட்சி புரிகின்ற அரசர்களெல்லாம் வழி வழியாக அரசளிப்பதற்குக் காரணம் நினது ஒப்பற்ற அரசாகிய திருவருள் அரசு என்று நூலறிவாலும் இயற்கை அறிவாலும் அறிந்து கொண்டேன் என்பார், ''அரைசெலாம் வழங்கும் - தனியரசு அது நின் அருளரசு'' என உரைக்கின்றார். வழங்குதல் - வழி வழியாக வருதல். அது பகுதிப் பொருள் விகுதி. அந்த அறிவால் உனது திருவருளின்பால் எனக்குளதாகிய பேராசை என் உள்ளமெல்லாம் கொள்ளை கொண்டு விட்டது என்றற்கு, ''உரைசெய் நின்னருள் மேலுள்ள பேராசை உளமெலாம் இடம் கொண்டது'' என இயம்புகின்றார். இறைவனது திருவருள் சான்றோர் எல்லோராலும் புகழப்படுவது பற்றி, ''உரைசெய் நின்னருள்'' என உரைக்கின்றார். உள்ளத்தைக் கவர்ந்து கொண்ட பேராசை வரையறையின்றி மேன்மேலும் பெருகிப் பொங்கி வழிகின்றது என புகலலுற்று, "வரைசெயா மேன்மேல் பொங்கி வாய் ததும்பி என் வசம் கடந்து வழிகின்றது'' என உரைக்கின்றார். திருவருளின்பால் பொங்கி எழுகின்ற ஆசையை வாய்க்குமிடந்தோறும் எடுத்தெடுத் தோதுதல் பற்றி, ''இரைசெய் என் ஆவி தழைக்க'' எனக் கூறுகின்றார். இரை செய்தல் - வாய்விட் டோதுதல். திருவருளாலன்றி உயிர் வாழ்தல் வளம் பெருதாகலின், ''ஆவி தழைக்க அவ்வருளை ஈந்தருள்'' எனவும், அதனை இன்றே இப்பொழுதே தந்தருளுக என வேண்டுவாராய், ''இற்றை இப்பொழுதே'' எனவும் இயம்புகின்றார்.

இதனால், திருவருளின்பால் தமக்கு உண்டாகி யிருக்கும் பேராசைப் பெருக்கினை வடலூர் வள்ளல் எடுத்துரைத்தவாறும். (14)

3754. போதெலாம் வீணில் போக்கிஏ மாந்த
புழுத்தலைப் புலையர்கள் புணர்க்கும்
சூதெலாம் கேட்குங் தொறும்உனைப் பரவும்
தூயர்கள் மனம்அது துளங்கித்
தாதெலாம் கலங்கத் தளருதல் அழகோ
தனிஅருட் சோதியால் அந்த
வாதெலாம் தவிர்த்துச் சுத்தசன் மார்க்கம்
வழங்குவித் தருளுக விரைந்தே.

உரை : தங்கள் காலத்தை யெல்லாம் வீண் வழியிற் செலுத்திப் பயனிழந்த பேன் நிறைந்து வாழும் தலையினை யுடைய கீழ்மக்கள் செய்யும் சூதுகளைப் பிறர் சொல்லக் கேட்கும் போதெல்லாம் உன் திருவடியே நினைந்து போற்றும் நல்லோர்களின் மனம் அசைநது உடம்பின் தாதுகள் அனைத்தும் நிலை கலங்கித் தளர்ச்சி யுறுவது உனக்கு அழகாகாது; அவர்களது அந்தச் சூதுகள் அனைத்தையும் உனது திருவருள் விளக்கத்தால் போக்கிச் சுத்த சன்மார்க்க நெறியே உலகில் நிலவுமாறு விரைந்து அருள் புரிதல் வேண்டும். எ.று.

தலையெலாம் அழுக்குற்று நாறத் தம் உடம்பையும் பொருளாக எண்ணுமல், காலத்தை வறிதே போக்கிப் பயனில்லன செய்து கெடுகின்ற கீழ்மக்களை, "போது எலாம் வீணிற் போக்கி ஏமாந்த புழுத்தலைப் புலையர்கள்" எனப் பழிக்கின்றார். நாட்டில் அவர்கள் தொகையே மிகுதி யாக இருப்பதால் அவர்கள் செய்யும் தீய சூழ்ச்சிகளைப் பலரும் எடுத் துரைப்பதால் நாளும் இறைவன் திருவடியே நினைத்தொழுகும் நன்மக்கள் அவற்றைக் கேட்டு அவர்களால் மக்கள் வாழ்வு சீர்குலைவது நினைந்து மனம் வருந்தி உடல் மெலிந்து வருகின்றமை புலப்பட, "புலையர்கள் புணர்க்கும் சூதெல்லாம் கேட்கும் தொறும் உனைப் பரவும் தூயர்கள் மனமது துளங்கித் தாதெலாம் கலங்கத் தளருதல் அழகோ" என வினவு கின்றார். தூயதாகிய நினது திருவடியையே எப்பொழுதும் சிந்தித்துத் தமது நினைவும் சொல்லும் செயலும் தூயராகிய சான்றோர்களை, "தூயர்" எனச் சொல்லுகின்றார். தோல் நரம்பு முதலிய எழுவகைத் தாதுக்களால் ஆகியதாகலின் உடம்பு நிலை கலங்கித் தளரும் திறத்தை, "தாதெலாம் கலங்கத் தளருதல்" என ஓதுகின்றார். சூதும் வாதும் திருவருள் நெறிக்கு மாறுவையாதலால் அவற்றை நல்ஞானத்தாலன்றிப் போக்கும் திறம் வேறில்லையாதலால், "தனியருள் சோதியால் அந்த வாதெலாம் தவிர்த்து" என்றும், அந்த நல்ஞானத்தைக் கடைப் பிடித்து ஒழுகுதற்கு அரணுவது சுத்த சன்மார்க்கமாதலால், "சுத்த சன்மார்க்கம் விரைந்து வழங்குவித்து அருளுக" என்றும் இசைக்கின்றார்.

இதனால், சுத்த சன்மார்க்கத்தின் தனிச் சிறப்பை எடுத்தோதிய வாரும். (15)

3755. விரைந்துநின் அருளை ஈந்திடல் வேண்டும்
விளம்பும்இத் தருணம்என் உளந்தான்
கரைந்தது காதல் பெருகிமேல் பொங்கிக்
கரைஎலாம் கடந்தது கண்டாய்
வரைந்தெனை மணந்த வள்ளலே எல்லாம்
வல்லவா அம்பல வாணா
திரைந்தஎன் உடம்பைத் திருஉடம் பாக்கித்
திகழ்வித்த சித்தனே சிவனே.

உரை : என்னை ஆட்கொண்டு அருளிய அருள் வள்ளலே; எல்லாம் வல்லவனே; அம்பலவாணனே; தோல் சுருங்கிய என் உடம்பை அருள் நிறைந்த திருவுடம்பாக்கி விளங்குவித்த சித்தனே; சிவபெருமானே; விண்ணப்பிக்கும் இச்சமயத்தில் நின் திருவருளை விரைந்து நல்குதல் வேண்டும்; ஏனெனில், என்னுள்ளம் நீராய் உருகி அன்பு பெருகி மேன் மேலும் பொங்கிக் கரை கடந்து ஓடுகின்றது காண். எ.று.

வாழும் மக்கள் பலருள்ளும் தம்மைக் குறிக் கொண்டு அருள் ஞானம் வழங்கி ஆட்கொண்டமை பற்றி, "வரைந்தெனை மணந்த வள்ளலே" என உரைக்கின்றார். வரம்பில் ஆற்றலுடையவனதல் பற்றி, "எல்லாம் வல்லவா" எனப் புகல்கின்றார். அம்பலவாணன் - அம்பலத்தில் வாழ்பவன். வாழ்நன் என்பது வாணன் என வந்தது. உண்பன உண்டு

தசை மிகுந்து தோல் பரந்து விளங்கும் உருவும் உடம்பும், வயது முதிரு மிடத்துச் சுருங்குதலின் தோல் சுருங்கிய உடம்பை, ''திரைந்த உடம்பு'' எனக் குறிக்கின்றார். திரைதல் - சுருங்குதல். திருவருள் ஞான வின்பத் தால் உடம்பு பூரித்துத் தோல் சுருக்கமின்றி அழகுறுதல் பற்றி, "திருவுடம்பாக்கித் திகழ்வித்த சித்தனே'' என்று செப்புகின்றார்.

இதனுல், திருவருளால் உடம்பு திரைதலின்றி விளங்குமாறு தெரிவித்தவாரும். (16)

3756. சிவந்திகழ் கருணைத் திருநெறிச் சார்பும்
தெய்வம்ஒன் றேஎனும் திறமும்
நவந்தரு நிலைகள் சுதந்தரத் தியலும்
நன்மையும் நரைதிரை முதலாம்
துவந்துவம் தவிர்த்துச் சுத்தமா தியமுச்
சுகவடி வம்பெறும் பேறும்
தவந்திகழ் எல்லாம் வல்லசித் தியும்நீ
தந்தருள் தருணம்ஈ தெனக்கே.

உரை : சிவம் விளங்கும் கருணைத் திருநெறிச் சார்பும், தெய்வம் ஒன்றே என்னும் மனத் திறமும், ஒன்பது வகைப்பட்ட உருநிலைகளை யுடைய தற்சுதந்திரத்தில் நிலவும் நன்மையும், நரை திரை முதலாகிய தேகத் துன்பம் தவிர்த்து, சுத்தம் முதலாகிய மூவகைப்பட்ட சுக வடிவத்தைப் பெறும் பேறும், தவ வய்மை விளங்குகின்ற எல்லாம் வல்ல சித்தியும் எனக்குத் தந்தருள்க; அதற்கு இது தருணமாகும். எ.று.

சிவ பரம்பொருளை முதலாகக் கொண்டு இயங்கும் சமய நெறியைத் திருநெறி என்பர். சிவனே வழிபட் டோதும் தமிழ்த் திருமுறையைத் ''திருநெறிய தமிழ்'' எனத் திருஞானசம்பந்தர் முதலியோர் ஓதுவதும் காண்க. இத்திருநெறிக்கு அருளே பொருளாதலின், ''கருணைத் திருநெறி'' என்றும், அது சிவநெறிக் குரியதாகலின் அதுபற்றி, "சிவம் திகழ் கருணைத் திருநெறி" என்றும், அந்நெறி நின்று ஒழுகும் சமய ஒழுக்கத்தைத் "திருநெறிச் சார்பு'' என்று விளங்க உரைப்பாராய், "சிவம் திதழ் கருணைத் திருநெறிச் சார்பு'' என்றும் தெரிவிக்கின்றார். சமயங்களும் அவற்றிற்குரிய நூல்களும் அவற்றுல் சுட்டப்படும் தெய்வங்களும் பலவாய் வழங்கினும் எல்லாவற்றிற்கும் முழுமுதலாய் விளங்குவது தெய்வம் ஒன்றே என்னும் ஞான வொருமைப் பாண்மையை, ''தெய்வம் ஒன்றே என்னும் திறம்'' என்று கூறுகின்றார். நவந்தரு நிலைகள் : அருவம் நான்கு, உருவம் நான்கு, அருவுருவம் ஒன்று. இவற்றுள் நிற்கும் தெய்வ உருவங்கள் சிவம், சத்தி முதலாகிய ஒன்பது மூர்த்தங்களும் சுதந்திர வடிவங்களாதலால் அவற்றின்பால் பெறலாகும் நன்மையை, ''நவந்தரு நிலைகள் சுதந்தரத்தியலும் நன்மை'' எனக் கூறுகின்றார். நரை, திரை முதலிய தேகத்தின் பிணித் தொடர்புகள் நீங்கிய வழி யுளவாகும் அருட் சுகம், ஞான சுகம், சுத்த சுகமாகிய முத்தன்மையுடைய தேகத்தைப் பெறும் வாய்ப்பு தமக்கெய்த வேண்டும் என்பார், ''நரை திரை முதலாம் துவந்துவம் தவிர்த்துச் சுத்தமாதிய முச்சுக வடிவம் பெறும் பேறு'' என

உரைக்கின்ருர். துவந்துவம் - இரண்டும் சேர்ந்து வரல். தவம் செய்வார் பெறுகின்ற செயற் கரியவற்றைச் செய்துயரும் செம்மை நிலையை, "தவந்திகழ் எல்லாம் வல்ல சித்தி" என ஓதுகின்ருர். தமது ஞானமும் ஒழுக்கமும் பக்குவமுற்றுத் திருநெறிச் சார்பும், ஒரு தெய்வக் கொள்கை யும், சுதந்தரத் திருவுருவங்களின் நன்மையும், முச்சுக வடிவமும், எல்லாம் வல்ல சித்தியும் பெறுதற்குரிய தகுதி தமக்கு வாய்த்திருப்பது காட்டி இவற்றை எனக்குத் தந்து அருளுதற்குரிய காலம் இதுவென வற்புறுத்துவாராய், "நீ எனக்குத் தந்தருள் தருணம் ஈது" என மொழி கின்ருர்.

இதனல், சிவநெறிச் சார்பு முதல் எல்லாம் வல்ல சித்தி ஈருக நலமனைத்தும் எனக்குத் தந்தருள் என வடலூர் வள்ளல் வேண்டிய வாரும். (17)

3757. தருணம்இஞ் ஞான்றே சுத்தசன் மார்க்கத்
தனிநெறி உலகெலாம் தழைப்பக்
கருணையும் சிவமே பொருள்எனக் கருதும்
கருத்தும்உற் றெம்மனோர் களிப்பப்
பொருள்நிறை ஓங்கத் தெருள்நிலை விளங்கப்
புண்ணியம் பொற்புற வயங்க
அருள்நயந் தருள்வாய் திருச்சிற்றம் பலத்தே
அருட்பெருஞ் சோதிஎன் அரசே.

உரை : திருச்சிற்றம்பலத்தின்கண் அருட் பெருஞ் சோதியாய் விளங்குகின்ற அருளரசே; சுத்த சன்மார்க்கமா கிய ஒப்பற்ற நெறி உலகெங்கும் பரந்து திகழவும், கருணையும் சிவமும் ஒருபொருளெனக் கருதும் கருத்து மிகுந்து எம் போன்றவர் மனம் களிப்புறவும், எங்கும் பொருள் வளம் நிறைந்து ஓங்கவும், தெளிவு நிலை யாவர் அறிவின் கண்ணும் நிலை பெறவும், புண்ணியம் அழகுற யாவர்பாலும் நிலவவும் நினது திருவருள் விரும்பி நல்குவாயாக; அதற்கு இப்பொழுதே உரிய காலமாகும். எ.று.

சுத்த ஞான நெறியாதலின் சன்மார்க்கத்தை, "சுத்த சன்மார்க்கத் தனிநெறி" எனக் கூறுகின்ருர். சுத்த ஞானம் என்பது எல்லா ஆன்மாக் களையும் ஒரு தன்மையவாகக் கருதி அன்பு பூண்டு ஒழுகுவது. அந்தத் தூய ஞானத்தால் ஞான நெறியாகிய சன்மார்க்கத்திற்கு ஒப்பதும் உயர்ந்ததும் வேறில்லையாதல் பற்றி, "சுத்த சன்மார்க்கத் தனிநெறி" எனப் பாராட்டுகின்ருர். இந்த நெறி மேற்கொண்டவிடத்து மக்களி டையே மொழி வேற்றுமை, இன வேற்றுமை சமய வேற்றுமை, நிற வேற்றுமை முதலாகிய வேற்றுமை பலவும் ஒழிந்து உலகெங்கும் இன்ப வாழ்வு நிலவுறும் என்பாராய், "உலகெலாம் தழைப்ப" என உரைக்கின் ருர். உயிர்கள்பால் அன்பு செய்து ஒழுகும் கருணை நெறி வேறு; சிவ வடிவான ஒன்றே நெறி யெனக் கருதும் நெறி வேறு என வேற்றுமை கொள்ளாது கருணை நெறி என்பதும் சிவநெறி என்பதும் பொருளால் ஒன்றே யெனக் கொண்டொழுகுவது சன்மார்க்கர் கொள்கையாதலின் அதனை உற்றவிடத்து உள்ளம் மகிழ்வுறுதலால், "கருணையும் சிவமே

பொருளெனக் கருதும் கருத்துமுற்று எம்மனோர் களிப்ப" என ஓதுகின்றார். வாழ்வு பொருள் நிறைந்தும் மனம் தெளிவுற்றும் பொருந்தினுலன்றிப் புண்ணியச் செயல்கள் நாட்டில் பெருகா னென்பது பற்றி, "பொருள் நிறை வோங்கத் தெருள் நிலை விளங்கப் புண்ணியம் பொற்புற வயங்க அருள் நயந்து அருள்வாய்" எனப் புகல்கின்றார். மக்களிடையே பொருள் நிறைவும் மனத் தெளிவும் திருவருளால் உளவாதல் பற்றி, "அருள் நயந் தருள்வாய்" என்று வேண்டுகின்றார் திருச்சிற்றம்பலத்தில் காட்சி தரும் சிவ வுருவம் அருட் டிருமேனியாதலாலும், அதனிடத்தே ஞானவொளி திகழ்தலாலும் அதனை "அருட் பெருஞ் சோதி" எனத் தெரிவிக்கின்றார். சுத்த சன்மார்க்கத்திற் குரிய ஞானமும் நல்லொழுக்கமும் தாம் காண நிலவுதல் கண்டு வடலூர் வள்ளல், "தருணம் இஞ்ஞான்றே" என வற்புறுத்துகின்றார்.

இதனால், சன்மார்க்கர் உள்ளம் களிக்கவும், சுத்த சன்மார்க்கம் எங்கும் திகழவும் இது தருணமாதலின் அருள் செய்க என வேண்டிய வாறும். (18)

3758. என்உள வரைமேல் அருள்ஒளி ஓங்கிற்
றிருள்இர வொழிந்தது முழுதும்
மன்உறும் இதய மலர்மலர்ந் ததுநன்
மங்கல முழுங்குநிகின் றனசீர்ப்
பொன்இயல் விளக்கம் பொலிந்தது சித்திப்
பூவையர் புணர்ந்திடப் போந்தார்
சொன்னநல் தருணம் அருட்பெருஞ் சோதி
துலங்கவந் தருளுக விரைந்தே.

உரை : என் மனமாகிய மலையின் மேல் அருளொளி எழுந்துளது; இருள் செய்யும் இரவுப் பொழுது முற்றவும் ஒழிந்தது; நிலைபெறுகின்ற எனது இதயத் தாமரையும் மலர்ந்து விட்டது; நல்ல மங்கல இசைகளும் முழங்குகின்றன; சிறப்புடைய பொன் போன்று விளங்கும் ஒளி எங்கும் பரந்தது; சித்திகளாகிய மகளிர் என்னைச் சேர்ந்திட வந்துள்ளார்; ஞானப் பேற்றிற்குரிய நல்ல நேரமும் வந்துள்ளது; அருட் பெருஞ் சோதி விளங்க என்பால் விரைந்து வந்து அருள் செய்க. எ.று.

திருவருள் ஞானம் சிந்தைக்கண் தோன்றி நிற்பதை யுணர்த்தற்கு, "என்னுள வரை மேல் அருளொளி ஓங்கிற்று" என்றும், இதுகாறும் அறிவின்கண் பரவி யிருந்த மலவிருள் நீங்கினமை புலப்படுத்தற்கு, "இருள் இரவு முழுதும் ஒழிந்தது" என்றும் கூறுகின்றார். சிந்தையின்கண் திருவருள் ஞானச் சூரியன் எழுந்ததும், உயிரறிவில் பரந்திருந்த மல விருள் நீங்கினதும் இதனால் தெரிவிக்கின்றார். இரவிருள் நீங்கினதும் ஞானச் சூரியன் எழுந்ததுமாகிய இந்நற்காலையில் மனமயக்கம் நீங்கி ஞான ஒளியால் இதயம் மலர்ந்தது என்றற்கு, "மன்னுறும் இதயம் மலர்ந்தது" என உரைக்கின்றார். விடியற் காலையில் மங்கல இசை முழங்குவது போலச் சிவனது திருநாம முழக்கம் உள்ளத்தில் எழுந்தமை புலப்படுத்தற்கு, "நன்மங்கலம் முழங்குகின்றன" என உரைக்கின்றார்.

அறிவெல்லை முழுதும் திருவருள் ஞானச் சூரியனது பொன்னொளி விரிந்து நிற்கின்றது என்பாராய், "பொன் இயல் விளக்கம் பொலிந்தது" என மொழிகின்றார். எல்லாம் செயல் வல்ல சித்திக்குரிய அருட் சத்திகள் வந்து சூழ்ந்து நின்றதை உணர்த்துதற்கு, "சித்திப் பூவையர் புணர்ந்திடப் போந்தார்" எனப் புகல்கின்றார். அருட் பெருஞ் சோதியைப் பெறுதற்குக் குறித்த நல்ல நேரமாகலின் விரைந்து எழுந்தருளி அதனை நல்கி யருளுக என வேண்டுகின்றராகலின், "சொன்ன நற்றருணம் அருட் பெருஞ் சோதி துலங்க வந்தருளுக விரைந்தே" என்று மொழிகின்றார்.

இதனால், அருட் பெருஞ் சோதியைப் பெறுதற்குரிய தருணம் வாய்க்கும் போது மனத்தின்கண் அருளொளி எழுவதும், மலவிருள் நீங்குவதும், இதயத் தாமரை விரிவதும், சிவநாம ஓசை பரவுவதும், அருட் சத்திகள் வந்து கூடுவதும் எடுத்தோதியவாறும். (19)

3759. வந்தருள் புரிக விரைந்திது தருணம்
மாமணி மன்றிலே ஞான
சுந்தர வடிவச் சோதியாய் விளங்கும்
சுத்தசன் மார்க்கசற் குருவே
தந்தருள் புரிக வரம்எலாம் வல்ல
தனிஅருட் சோதியை எனது
சிந்தையில் புணர்ப்பித் தென்னெடுங் கலந்தே
செய்வித் தருள்கசெய் வகையே.

உரை : பெரிய மணிகள் இழைத்த அம்பலத்திலே அழகிய ஞான வடிவுடைய சோதியாய் விளங்குகின்ற சுத்த சன்மார்க்கத்தை யுணர்த்தும் சற்குருவாகிய பெருமானே; இது சமயமாதலின் விரைந்து வந்தருளுக; நல்வரங்களைத் தந்தருளுக; எல்லாம் வல்லதாகிய அருட் சோதியை என் மனத்தின்கண் சேர்ப்பித்து என் உயிரோடு கலந்து யான் செயல் வகைகளைச் செய்வித்தருள்க. எ.று.

அம்பலத்தின்கண் அழகிய கூத்தப் பெருமானுய்த் தோன்றி ஞான வொளி திகழும் சன்மார்க்க நெறிக்குரிய குருமுதல்வனுதல் விளங்க, "மாமணி மன்றின் மேல் ஞானச் சுந்தர வடிவச் சோதியாய் விளங்கும் சுத்த சன்மார்க்க சற்குருவே" என்று துதிக்கின்றார். திருவருள் ஞான ஒளியாகிய ஒப்பற்ற அருட் சோதியை நல்குதற்குப் பக்குவம் நிறைந்துள்ள இக்காலம் ஏற்றதாகலின் போந்தருளி நல்வரங்களைத் தருக என விண்ணப்பம் செய்யுமாறு விளங்க, "வந்தருள் புரிக விரைந்து இது தருணம்" என்றும், "வரம் தந்தருள் புரிக" என்றும் முறையிடுகின்றார். அருள் ஞானம் பெற்ற பின் யான் செய்தற் குரியவற்றைச் செய்தற் கேற்ற நெறியை ஏற்று என் உயிருணர்வில் கலந்து என்னெடும் கலந்து தெரிவித்தருள்க என்பாராய், "எல்லாம் வல்ல அருட் பெருஞ் சோதியை எனது சிந்தையில் புணர்ப்பித்து என்னெடும் கலந்தே செய்துவித்து அருள்க செய்வகையே" என மொழிகின்றார்.

இதனால், அருட் பெருஞ் சோதி எல்லாம் செய்யும் வன்மையை நல்குவது என்பது தெரிவித்தவாறும். (20)

திருச்சிற்றம்பலம்

28. திருவருட் புகழ்ச்சி

அஃதாவது, சிவஞானத் திருவுருவாகிய திருவருளையும் அதனால் விளையும் நலங்களையும் எடுத்தோதிப் புகழ்தல்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3760. திருக்கதவம் திறவாயோ திரைகளெலாம் தவிர்த்தே
திருவருளாம் பெருஞ்சோதி திருவுருக்காட் டாயோ
உருக்கிஅமு தூற்றெடுத்தே உடம்புயிரோ டுளமும்
ஒளிமயமே ஆக்குறமெய் உணர்ச்சிஅரு ளாயோ
கருக்கருதாத் தனிவடிவோய் நின்னைஎன்னுட் கலந்தே
கங்குல்பகல் இன்றிஎன்றும் களித்திடச்செய் யாயோ
செருக்கருதா தவர்க்கருளும் சித்திபுரத் தரசே.
சித்தரிகா மணியேஎன் திருநடநா யகனே.

உரை : போரை விரும்பாதவர்களுக்கு அருள் புரியும் சித்தி புரத்தில் எழுந்தருளுகின்ற அருளரசே; சித்தர்களுக் கெல்லாம் முடி மணியாய் விளங்குபவனே; திருமிக்க நடம் புரியும் நாயகனே; அறிவை மறைத்து இருள் செய்யும் பாசத் திரைகள் எல்லாம் நீக்கித் திருவருளாகிய பெரிய சோதியை யுடைய நினது திருவுருவைக் காட்ட மாட்டாயோ; மனதை யுருக்கி அமுதம் ஊற்றெடுத்தூற, உடம்பையும் உள்ளத்தையும் உயிரையும் ஒளிமயமாக ஆக்குமாறு மெய்யுணர்வை அருள மாட்டாயோ; பிறவிச் சூழலை நினைக்க வொண்ணாத ஒப்பற்ற வடிவை யுடைய பெருமானே; என் உள்ளத்தில் நின்னைக் கலந்து இரவு பகலின்றி என்றும் இன்பம் துய்த்திடச் செய்ய மாட்டாயோ. எ.று.

இறைவன் திருவுருவை ஞானத்தால் கண்டு மகிழ்வார்க்கு மீளப் பிறந்திறந்துழலும் பிறவியை விரும்பும் மனநிலை உண்டாகாதபடி அவனுடைய ஞான வின்ப வடிவம் விளங்குதலின், "கருக் கருதாத் தனி வடிவோய்" என்றும், உயிர்களைக் கொன்று ஒழிக்கும் போர் வகைகளை விரும்பாத அருளாளர்க்கு அருள் புரிவது பற்றி, "செருக் கருதாதவர்க் கருளும் சித்தி புரத் தரசே" என்றும், ஞான சித்தர்களின் முடிமணி யாதல் பற்றிச் சிவபெருமானை, "சித்த சிகாமணியே" என்றும், உயிர்கள் உடம்பெடுத்து வாழ்தற் கேதுவாகிய ஊன நடனத்திற்கும் பிறவாப் பேருகிய ஞான வாழ்வு வாழ்வதற்கேற்ற ஞான நடனத்திற்கும் தலைவனை பற்றிக் கூத்தப் பெருமானை, "திருநட நாயகனே" என்றும் போற்றுகின் றார். உயிரறிவை மல மாயை கன்மங்களாகிய திரைகள் மறைத்தலின்

அவற்றை நீக்கி ஞான நாட்டமாகிய கதவைத் திறந்தாலன்றி, திருவருள் ஞானமாகிய பெரிய ஒளி நிறைந்த இறைவனது திருவுருவம் காண்டற் கியலாதாகலின், "திருக்கதவம் திறவாயோ திரைகளெல்லாம் தவிர்த்துத் திருவருளாம் பெருஞ் சோதித் திருவுருக் காட்டாயோ" என்று வேண்டு கின்றார். உடம்பும், உயிரும், உள்ளமும் ஆகிய இவற்றை யுருக்கி ஞான மாகிய அமுதத்தைப் பெருகச் செய்த வழி, உயிர் நின்ற உடம்பு ஞானப் பேரொளி மயமாய் ஆகுமென்றும், அதற்கு மெய்யுணர்வு ஏதுவாகு மென்றும் கூறுவாராய், "உருக்கி அமுது ஊற்றெடுத்தே உடம்பு உயிரோடும் ஒளி மயமே ஆக்குற மெய்யுணர்ச்சி அருளாயோ" என்று உரைக்கின்றார். ஞான நாட்டம் பெற்றுச் சிவயோகம் உற்றுச் சிவபோகத் தில் கலக்கின்ற பொழுது, சிவானந்த போக நிலை மாயா மண்டலத்திற்கு அத்தமாகலின் அங்கு மாயா வுலகத்தில் நிலவும் இரவும் பகலும் இல்லை யாதல் பற்றி, "நின்னை என்னுட் கலந்து கங்குல் பகலின்றி என்றும் களித்திடச் செய்யாயோ" என வேண்டுகின்றார். "ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த செல்வமே சிவபெருமானே" என மணிவாசகர் உரைப்பது ஈண்டு நினைவு கூறத் தக்கதாம். செரு - சொற்போரும் மற்போருமாகிய பலவகைப் போர் வகைகள். அவற்றுள் பகையும் உயிர்க் கொலையும் நிகழ்தலின் அவற்றை எண்ணுத அருட்செல்வர்களை, "செருக் கருதாதவர்" எனத் தெரிவிக்கின்றார். சித்தி புரம் - இந்நாளில் வடலூர் என வழங்கப்படுகிறது.

இதனால், மெய்யுணர்வால் ஞான நாட்டம் பெற்றுச் சிவயோகத்தால் சிவத்தைக் கண்டு அதனோடு கலந்து மகிழ்ந்திருக்கும் சிவயோக நிலை விளக்கப்பட்டவாறும். (1)

3761. மணிக்கதவம் திறவாயோ மறைப்பையெலாம் தவிர்த்தே
மாற்றறியாப் பொன்னேநின் வடிவதுகாட் டாயோ
கணிக்கறியாப் பெருநிலையில் என்னோடுநீ கலந்தே
கரைகடந்த பெரும்போகம் கண்டிடச்செய் யாயோ
தணிக்கறியாக் காதல்மிகப் பெருகுகின்ற தரசே
தாங்கமுடி யாதினிஎன் தனித்தலைமைப் பதியே
திணிக்கலையா தியஎல்லாம் பணிக்கவல்ல சிவமே
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.

உரை : ஆன்மாக்களைப் பிணிக்கின்ற கலை முதலிய எல்லாத் தத்துவங்களையும் ஒழுங்குற அமைக்க வல்ல சிவ பரம்பொருளே; சித்தர் களுக் கெல்லாம் முடிமணியாய்த் திகழ்பவனே; திருநடனம் புரிகின்ற நாயகனே; ஒப்பற்ற தலைமை நிலையில் உள்ள பதிப் பொருளே; மாற்றுக் காண மாட்டாத பொன் போன்றவனே; உயிரறிவை மறைக்கின்ற அஞ்ஞானத் திரைகள் எல்லாம் போக்கி ஞான ஒளி திகழும் ஞான நாட்டம் என்னும் கதவைத் திறந்து நினது ஞானத் திருவடியைக் காணச் செய்தருள்க; அளவைகளால் அளந்தறிய முடியாத சிவபோகப் பெரு நிலையில் என்னோடு கூடி அளவிறந்த பெரும் போகத்தை யான் பெறச் செய்தருள்க; அருளரசே; தணிக்க முடியாத சிவபோகக் காதல்

என் உள்ளத்தே மேன்மேலும் பெருகுகின்றது; இனி என்னுல் அதனைத் தாங்க முடியாது காண். எ.று.

கலை - தத்துவக் கூறு. அவைகள் முப்பத்தாறும் தொண்ணூற்றுறுமாய் விரிந்து உலகியல் வாழ்வில் உயிர்களைப் பிணித்திருத்தலால் அவற்றை ஒழுங்குற அமைந்து தத்தமக்குரிய பணிகளைப் புரியுமாறு அமைத் தளிப்பது பற்றிச் சிவபரம் பொருளை, "திணிக் கலையாதிய எல்லாம் பணிக்க வல்ல சிவமே" என்றும், இத் தத்துவங்களுக்கு அதீதமாய் நின்று முறையாகச் செயற் படுத்துவதால் சிவ மூர்த்தத்தை, "தனித் தலைமைப் பதியே" என்றும் புகல்கின்றார். திருவருள் ஞானத்தை "மணிக் கதவம்" என்றும், மும்மலப் பிணிப்பால் அறிவு மறைக்கப் படுதலின் அவற்றால் உளவாகும் அஞ்ஞான வகையை, "மறைப்பை எல்லாம்" என்றும் கூறுகின்றார். சிவன் திருமேனி உயர்ந்த பொன்னிற முடையதாதலின், "மாற்றறியாப் பொன்னே" என்றும், பொன்னொளி திகழும் நின் ஞான வடிவைக் காட்டுக என வேண்டுவாராய், "நின் வடிவது காட்டாயோ" என்றும் வேண்டுகின்றார். தத்துவாதீதப் பெரு வழியாதலின் அது காட்சி, கருதுதல், உரை என்ற மூவகை அளவை களால் அளக்கப் படாமை தோன்றச் சிவபோக நிலையை, "கணிக்க அறியாப் பெருநிலை" என்றும், அந்நிலையில் ஆன்மா சிவத்தோடு கலந்து சிவானந்த ஞான வடிவு திருவருள் ஒளியால் பெறுதலால், "என்னெடு நீ கலந்தே" என்றும், ஆண்டுப் பெறுகின்ற சிவபோகம் அளவிறந்ததாகலின் அதனைக் "கரை கடந்த பெரும் போகம்" என்றும் உரைக்கின்றார். அதனைப் பெறுதற் கெழுந்த ஞான போகக் காதல் மேன்மேலும் பெருகு கின்றமை தோன்ற, "தணிக் கறியாக் காதல் மிகப் பெருகுகின்றது" என வும், அதனை அடக்க முடியாமை புலப்பட, "இனித் தாங்க முடியாது" எனவும் எடுத்தோதுகின்றார். தணித்தல் - குளிரச் செய்தல். காதல் வேட்கை வெம்மை யுடையதாகலின் "தணிக்க அறியாக் காதல்" எனக் குறிக்கின்றார்.

இதனுல், திருவருள் ஞானத்தால் பெறுதற்குரிய சிவபோகத்தின்பால் உண்டாகிய ஞானக் காதல் பெருகுவதை எடுத்துரைத்தவாறும். (2)

3762. உரைகடந்த திருவருட்பேர் ஒளிவடிவைக் கலந்தே
உவட்டாத பெரும்போகம் ஓங்கியுறும் பொருட்டே
இரைகடந்தென் உள்ளகத்தே எழுந்துபொங்கித் ததும்பி
என்காதல் பெருவெள்ளம் என்னைமுற்றும் விழுங்கிக்
கரைகடந்து போனதினித் தாங்கமுடி யாது
கண்டுகொள்வாய் நீயேஎன் கருத்தின்வண்ணம் அரசே
திரைகடந்த குருமணியே சிவஞான மணியே
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.

உரை : மலமறைப்புகளைப் போக்கிய குருமணியே; சிவஞான மணியே; சித்த சிகாமணியே; திருநட நாயகனே; வாக்கின் எல்லையைக் கடந்த திருவருளாகிய பெரிய உள்ளொளி வடிவைக் கூறி உவட்டுத லில்லாத பெரிய சிவபோக நுகர்ச்சி ஓங்கி மிகும் பொருட்டு என்

உள்ளத்தே காதல் பெருவெள்ளம் எழுந்து பொங்கி வழிந்து என்னை முற்றும் விழுங்கிக் கொண்டு கரை கடந்து போனபடியால் இனி என்னால் அதனைத் தாங்க முடியாத நிலையை நீயே என் கருத்தின் இயல்பு நோக்கிக் கண்டு கொள்வாயாக. எ.று.

திருவருள் ஒளி மயமானதால் அந்த அருள் உருவாகிய சிவத்தின் வடிவைத் "திருவருட் பேரொளி வடிவு" என்றும், ஞானக் கண்ணிற்குப் புலப்படினும் வாக்கின் எல்லைக்கு அப்பாற் பட்டதாகலின், "உரை கடந்த திருவருட் பேரொளி வடிவு" என்றும் உரைக்கின்றார். அதனைக் கூடிக் கலந்த வழி உளதாகும் பெரிய சிவபோகம் நுகருந் தொறும் நுகருந் தொறும் தெவிட்டாத சீர்மை யுடையதாகலான், "உவட்டாத பெரும் போகம்" என உரைக்கின்றார். அந்தப் போக நுகர்ச்சிக்கண் எழுந்த ஞானக் காதல் வடலூர் வள்ளலின் திருவுள்ளத்தின் எல்லையைக் கடந்து பொங்கி எழுந்து அவருடைய உணர்வு முற்றும் கவர்ந்து கொண்டமை புலப்பட, இறை கடந்து என் உள்ளகத்தே எழுந்து பொங்கித் ததும்பி என் காதல் பெருவெள்ளம் என்னை முற்றும் விழுங்கிக் கரை கடந்து போனது" என்று கூறுகின்றார். அதனை அடக்கும் மனவன்மை தம்பால் இல்லை என்பது புலப்பட, "இனித் தாங்க முடியாது என் கருத்தின் வண்ணம் நீயே கண்டு கொள்வாய்" என உரைக்கின்றார். கருத்தின் வண்ணம் - மனத்தின் தன்மை. இரை என்பது ஈண்டு இருப்பிக்கும் எல்லை குறித்து நின்றது.

இதனால், சிவபோகம் நுகர்தற் பொருட்டுத் தம் உள்ளத்தில் எழுந்த காதல் பொங்கிப் பெருகித் தன்னை முற்றவும் விழுங்கிக் கொண்டதனால் அதன் வேகத்தைத் தாங்க முடியாத நிலைமையினை வடலூர் வள்ளல் எடுத்தோதுகின்றாராம். (3)

3763. உன்புடைநான் பிறர்போலே உடுக்கவிழைந் தேனே
உண்ணவிழைந் தேனேவே றுடைமைவிழைந் தேனே
அன்புடையாய் என்றனைநீ அணைந்திடவே விழைந்தேன்
அந்தோஎன் ஆசைவெள்ளம் அணைகடந்த தரசே
என்புடைவந் தணைகஎன இயம்புகின்றேன் உலகோர்
என்சொலினும் சொல்லுகஎன் இலச்சைஎலாம் ஒழித்தேன்
தென்புடையோர் முகநோக்கித் திருப்பொதுநிற் கின்றேய்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.

உரை : தென் திசை நோக்கி அம்பலத்தில் நின்றருளும் பெருமானே; சித்த சிகாமணியே; திருநடம் புரியும் நாயகனே; பிறர் போல உன்பால் நான் உடுக்கும் உடை வேண்டுமென விரும்பினேனல்; உண்ணும் உணவு வேண்டுமென விரும்பினேனல்; வேறே உடைமைகள் வேண்டுமென இருக்கின்றேனல்; அன்புடையவனாகிய நீ என்னைச் சேர்தல் வேண்டு மென்றன்றே விழைவுற்றேன்; ஐயோ, என் ஆசைப் பெருக்கு அணை கடந்துற்றதாதலால் அருளரசாகிய நீ என்பால் வந்து என்னைக் கூடுதல் வேண்டுமென இயம்புகின்றேன்; உலகியல் மக்கள் யாது சொல்லினும் சொல்லுக; நாணம் அச்சம் முதலிய பண்புகளை விட்டொழித்தேன்; எனக்கு அருள் புரிக. எ.று.

உலகியல் வாழ்வுக்கு இன்றியமையாத உண்டி உடை வேறு உடைமைகள் வேண்டுவோர் தம் உண்மை முயற்சியால் பெற வேண்டும் அல்லது வள்ளன்மையுடைய பெருஞ் செல்வரை அடைந்து பெற வேண்டுமே யன்றி உன்னை வேண்டுதல் வேண்டாச் செயலாம்; ஆதலால் அவை குறித்து நான் உன்னை விழைகின்றேனில்லை என்பார், "உன்புடை நான் பிறர்போலே உடுக்க விழைந்தேனே உண்ண விழைந்தேனே வேறு உடைமை விழைந்தேனே" என்று உரைக்கின்றார். தான் வேண்டுவது இதுவென வற்புறுத்தற்கு "அன்புடையாய் என்றனை நீ அணைந்திடவே விழைந்தேன்" என்று கூறுகின்றார். இறைவனுடைய அருட் கூட்டத்தின்பால் தமக்கு உளதாகிய ஆசைப் பெருக்கினை விளக்குவாராய், "என் ஆசை வெள்ளம் அணை கடந்தது அரசே என்புடை வந்தணைக என இயம்புகின்றேன்" என மொழிகின்றார். என் வேண்டுதல் கண்டு உலகில் வாழும் என் போன்றார் என்னை எள்ளி இகழ்ந்தாராயினும் அதற்கு நாணி உள்ளம் சுருங்க மாட்டேன் என வற்புறுத்தற்கு, "உலகோர் என்சொலினும் சொல்லுக என் இச்சையெல்லாம் ஒழித்தேன்" என்று தெரிவிக்கின்றார். தென்புடையோர் முகம் என்றது தென்திசை. திருச்சிற்றம்பலத்தைத் "திருப் பொது" எனச் சிறப்பிக்கின்றார்.

இதனுல், இறைவனது திருவருட் கூட்டத்தின்கண் வடலூர் வள்ளலுக்கு எழுந்துள்ள ஆசை மிகுதி எடுத்துரைத்தவாறும். (4)

3764. இறந்திறந்தே இளைத்ததெலாம் போதும்இந்த உடம்பே
இயற்கைஉடம் பாகஅருள் இன்னமுதம் அளித்தென்
புறந்தழுவி அகம்புணர்ந்தே கலந்துகொண்டெந் நாளும்
பூரணமாம் சிவபோகம் பொங்கியிட விழைந்தேன்
பிறந்திறந்து போய்க்கதியைப் பெறநினைந்தே மாந்த
பேதையர்போல் எனைநினையேல் பெரியதிருக் கதவம்
திறந்தருளி அணைந்திடுவாய் சிற்சபைவாழ் அரசே
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.

உரை : ஞானசபையில் வாழ்கின்ற பெருமானே; சித்த சிகாமணியே; திருநடம் புரியும் நாயகனே; முன்னைப் பிறவிகளில் இறந்திறந்து இளைத்து மெலிந்த துன்பமெல்லாம் போதும்; இனி வேண்டாம்; இந்த உடம்பே அழியாத இயற்கை உடம்பாகும்படி திருவருளாகிய அமுதத்தை நல்கி என் புற வுடம்பைத் தழுவி அகத்தே புகுந்து என் உணர்வொடு கலந்து கொண்டு சிவபோகத்தை எந்நாளும் பெற்று இன்பம் பொங்கி மகிழ விரும்புகின்றேன்; பல காலமாக உலகிற் பிறந்தும் இறந்தும் நற்கதியைப் பெற நினைந்து ஏமாந்த அறிவில்லாத மக்களைப் போல என்னை நினைத்தல் கூடாது; பெருமை பொருந்திய மாயையாகிய திருக்கதவைத் திறந்து என்னைக் கூடுவதை வேண்டுகிறேன். எ.று.

சிற்சபை - ஞானசபை. ஞான சபையில் என்றும் இருந்து நடம் புரிவது பற்றிக் கூத்தப் பெருமானை, "சிற்சபை வாழ் அரசே" என்று சிறப்பிக்கின்றார். கடந்த பிறப்புக்கள் ஒவ்வொன்றிலும் மரண நோயுற்று என் உயிரைத் தாங்கும் உடல் இளைத்து மெலிந் தொழிந்தது; இனி

யேனும் இந்த உடம்பு மரணவாதனைக் குள்ளாகி மெலியாதவாறு இயற்கை உடம்பாகுமாறு நினது திருவருளாகிய இனிய அமுதத்தை நல்குதல் வேண்டும் என்பாராய், "இறந்து இறந்தே இளைத்தது எலாம் போதும் இந்த உடம்பே இயற்கை உடம்பாக அருள் இன்ன முதம் அளித்து" என இயம்புகின்றார். இயற்கை உடம்பு என்பது புரியட்டக தேகம் எனப்படும். தன்மாத்திரை ஐந்தும், மனம், சித்தம், புத்தி மூன்றுமாகிய எட்டும் கூடிய நுண்ணுடம்பு. அருளமுதம் தருவ தோடு நில்லாது இப்புற உடம்பையும் தாண்டி அகவுடம்பாகிய புரியட்ட கத்தில் கலந்து சிவபோகத்தை நல்குதல் வேண்டும்; அதனால் நான் இன்பம் அடைய வேண்டும் என்பார்; "புறம் தழுவி அகம் புணர்ந்தே கலந்து கொண்டு எந்நாளும் பூரணமாம் சிவபோகம் பொங்கியிட" என்று புகல்கின்றார். சிவபோகம் என்றும் குறைவிலா நிறைவாய் இருப்பதா கலின் அதனை, "பூரணமாம் சிவபோகம்" எனப் புகல்கின்றார். உலகியல் மக்கள் பிறப்புக்களில் கிடந்து உழலுவது முடிவில் பிறவாப் பெருநிலை யைப் பெறலாம் எனக் கருதி ஞான நலம் பெறுது மேலும் மேலும் அப் பிறப்புக்களையே பெற்று உழலுவது பற்றிக் கூறுவாராய், "பிறந்திறந்து போய்க் கதியைப் பெற நினைந்து ஏமாந்த பேதையர்" என்று ஏசுகின்றார். சிவகதியைப் பெற நினைந்து அதற்குரிய திருவருள் ஞானத்தை அறிந்து பெரு தொழிந்தமை பற்றிப் பிறவிச் சூழலில் கிடந்து மயங்குகின்ற மக்களை "கதியைப் பெற நினைந்து ஏமாந்த பேதையர்" என்று குறிக்கின்றார். உயிரறிவை மறைத்து உண்மை ஞானத்தைப் பெருவாறு தடுத்து நிற்கும் உலகியல் மாயை ஈண்டுப் "பெரிய திருக்கதவம்" எனப்படுகிறது. மாயா காரிய மறைப்பினின்று நீங்கினாலன்றித் திருவருட் பேறு எய்தாமை விளங்க, "பெரிய திருக் கதவம் திறந்து அருளி அணைந்திடுவாய்" என்று முறையிடுகின்றார்.

இதனால், அழியா நுண்ணுடம்பு பெற்றுச் சிவபோகம் துய்த்திட எழுந்த தமது விழைவை வடலூர் வள்ளல் எடுத்தோதியவாறும். (5)

3765. பொய்யுடையார் விழைகின்ற புணர்ச்சிவிழைந் தேனை
பூணவிழைந் தேனைவான் காணவிழைந் தேனை
மெய்யுடையாய் என்னைடுநீ வினையாட விழைந்தேன்
வினையாட்டென் பதுஞானம் வினையும்வினை யாட்டே
பையுடைப்பாம் பனையரொடும் ஆடுகின்றாய் எனது
பண்பறிந்தே நண்புவைத்த பண்புடையாய் இன்னே
செய்யுடைஎன் னெடுகூடி ஆடஎழுந் தருள்வாய்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.

உரை : சித்தர்களுக் கெல்லாம் முடிமணியாய் விளங்குபவனே; திருநடம் புரிகின்ற நாயகனே; படத்தையுடைய பாம்பை ஒப்பவரோடும் கூத்தாடுகின்றவனே; என்னுடைய குணஞ் செயல்களை அறிந்து என்பால் நட்பு வைத்த பண்புடையவனே; பொய் யொழுக்கமுடையவர் விரும்பு கின்ற நட்பை நான் விரும்பியதில்லை; பூணாரங்களை அணிந்து கொள்ள வும் நான் விரும்பியதில்லை; தேவர்கள் வாழும் வானுலகக் காட்சியையும் கூட நான் விரும்பியதில்லை; மெய்ம்மை யுடையவனே; நான் உன்னைடு

விளையாடவே விரும்பினேன்; விளையாட்டென்பது சிவஞானத்தை விளைவிக்கும் விளையாட்டாகுமாதலால், இப்பொழுது நற்செய்கைகளையுடைய என்னோடு கூடி ஞான விளையாட்டு ஆடுதற்கு எழுந்தருள்வாயாக. எ.று.

பையுடைப் பாம்பு - படத்தையுடைய நல்லபாம்பு. இங்கே பாம்பனையா ரென்றது பாம்பின் காலியுடைய பதஞ்சலி முனிவரை. திருவம்பலத்தின்கண் அம்முனிபுங்கவர் கண்டு மகிழ்ந்தாட ஆடுகின்றாதலால், "பாம்பனையரோடும் ஆடுகின்றேய்" எனப் பகர்கின்றார். பாம்பு போல நெஞ்சில் கரவு உடையவரோடும் கலந்து உறைகின்றாராதலால் சிவனை இவ்வாறு கூறுகின்றார் எனினும் அமையும். எனது குணஞ் செயல்களை நன்கறிந்து என்னோடு நட்புக் கொண்டாய் என்பாராய், "எனது பண்பறிந்து நண்பு வைத்த பண்புடையோய்" என்று புகழ்கின்றார். பொய் ஒழுக்கமுடையவர்கள் நாடுகின்ற நட்புறவு ஞானப் பேற்றிற்குத் தடையாதலை எண்ணி நான் அவர்களுடைய நட்பை விரும்பினதில்லை என்பாராய், "பொய்யுடையார் விழைகின்ற புணர்ச்சி விழைந்தேனே" எனப் புகல்கின்றார். புணர்ச்சி - நட்பு. உலகியலில் பெறப்படும் பொன்னுலும் மணியாலுமாகிய பூணாரங்கள் உலகியற் போக நுகர்ச்சிக்கண் கருத்தைச் செலுத்துவனவாதலால் அவற்றை நான் விரும்புவதில்லை என்றற்கு, "பூண, விழைந்தேனே" என்றும், தேவருலக போகமும் முடிவின்கண் மண்ணுலகில் பிறத்தற்கே ஏதுவாதலால் அதனையும் நான் நாடவில்லை என்பாராய், "வான் காண விழைந்தேனே" என்றும் இயம்புகின்றார். சத்தாகிய பரம்பொருளாதலின் சிவபெருமானை, "மெய்யுடையாய்" என்று பாராட்டி உன்னுடைய திருவருளில் கலந்து மகிழ விரும்புவேனையினேன் என்பாராய், "என்னோடு நீ விளையாட விழைந்தேன்" என உரைக்கின்றார். சிவனோடு கூடி விளையாடுவது என்பது சிவஞானச் செயல்களில் ஈடுபடுவது என விளக்குதற்கு, விளையாட்டு என்பது ஞானம் விளையும் விளையாட்டே" என விளம்புகின்றார். செய், முதனிலைத் தொழிற் பெயராய் செயல்கள் மேல் நிற்கிறது. சிவஞானப் பேற்றிற்குரிய செயல்களையே மேற்கொண்டு ஒழுகுகின்றேனாதலால், என்னோடு கூடிச் செய்யும் விளையாட்டு சிவஞானத்தைப் பயப்பது மெய்ப்பாடாதல் பற்றி, "என்னோடு கூடி ஆட எழுந்தருள்வாய்" என வேண்டுகின்றார்.

இதனால், சிவஞானப் பேறு குறித்துத் தன்னோடு கலந்து ஞான விளையாட்டைப் புரியுமாறு சிவபெருமானை வேண்டியவாறும். (6)

3766. கூறுகின்ற சமயம்எலாம் மதங்கள்எலாம் பிடித்துக்
கூவுகின்றார் பலன்ஒன்றும் கொண்டறியார் வீணே
நீறுகின்றார் மண்ணகி நாறுகின்றார் அவர்போல்
நீடுலகில் அழிந்துவிட நினைத்தேனே நிலைமேல்
ஏறுகின்ற திறம்விழைந்தேன் ஏற்றுவித்தாய் அங்கே
இலங்குதிருக் கதவுதிறந் தின்னமுதம் அளித்தே
தேறுகின்ற மெய்ஞ்ஞான சித்திஉறப் புரிவாய்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.

உரை : சித்தர்களுக்கு முடிமணியாய்த் திகழ்பவனே; நடம் புரியும் நாயகனே; பலவாகக் கூறப்படுகின்ற சமயங்களையும் அவற்றின் கொள்கைகளையும் மேற்கொண்டு சத்தமிட்டுக் கூறுகின்றவர்கள் ஒரு பயனும் கொண்டறியாமல் வீணே வெந்து சாம்பராகின்றனர்; சிலர் மண்ணைக் கெடுகின்றனர்; அவர்களைப் போல நீண்ட இவ்வுலகில் அழிந்தொழிய நினைத்தேனில்லை; அவரின் வேறாக மேல் நிலையை அடையும் திறத்தையே விரும்பினேன்; என்னையும் அவ்விடத்தே உயர்த்தி யுள்ளாய்; இனி எனது ஞானக் கதவினைத் திறந்து எனக்கு ஆங்குள்ள ஞான வழுதத்தை நல்கித் தெளிவு தருகின்ற உண்மை ஞானம் எனக்குக் கைவர அருள்வாயாக. எ.று.

உலகில் கற்றவரிடையே நிலவுகின்ற சமயங்களும் கொள்கைகளும் பலவாய் உறுதிப் பயனை நல்காவாய் வீண் படுவதைக் கண்டு மனம் வருந்துகின்றாராதலால் வடலூர் வள்ளல், "கூறுகின்ற சமயமெலாம் மதங்களெலாம் பிடித்துக் கூவுகின்றார் பலன் ஒன்றும் கொண்டறியார்" என்றும், அவர்கள் முடிவில் பயனின்றிச் செத்துச் சாம்பராதலும் மண்ணிற் புதையுண்டு மண்ணாதலும் புலப்பட, "வீணே நீறுகின்றார் மண்ணுகி நாறுகின்றார்" என்றும் உரைக்கின்றார். நீறு - சாம்பல். நாறுதல் - முடை நாறும் மண்ணுதல். அவர்கள் அனைவரும் உலகில் தமக்கோ உலகிற்கோ பயனின்றிக் கெடுவது கண்டு மனத்தின்கண் வெறுப்புற்றமை தோன்ற, "அவர் போல் நீடுலகில் அழிந்துவிட நினைத்தேனே" என்று கூறுகின்றார். ஓகாரம் எதிர்மறை நினைக்கவில்லை என்பது கருத்து. சமய மதக் கொள்கைகளில் பிணிப்புண்டுக் கீழ்மைப் படாமல் இவற்றின் நீங்கி ஞான நெறியில் மேல்நிலை அடைய விரும்பினேன்; என்னையும் ஞான நெறியில் உயர்த்தி யுள்ளாய் என்பாராய், "நிலை மேல் ஏறுகின்ற திறம் விழைந்தேன் அங்கே ஏற்று வித்தாய்" என எடுத்தோதுகின்றார். மேலதாகிய சிவஞானச் செந் நிலையில் ஒளிர்கின்ற நெறி காட்டி ஆங்குப் பெறலாகும் ஞான போகத்தைத் தந்து தெளிந்த சிவஞானத்தை அடியேன் எய்துதற்கு அருள் புரிக வென வேண்டுவாராய், "அங்கே இலங்குகின்ற திருக்கதவு திறந்து இன்னமுதம் அளித்தே தேறுகின்ற மெய்ஞ்ஞான சித்தியுறப் புரிவாய்" என்று வடலூர் வள்ளல் முறையிடுகின்றார்.

இதனால், மெய்ஞ்ஞான சித்தியுற வேண்டுமென வடலூர் வள்ளல் விண்ணப்பித்தவாறும். (7)

3767. வேதநெறி ஆகமத்தின் நெறிபவுரா ணங்கள்
விளம்புநெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும்
ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் காட்டி
உள்ளதனை உள்ளபடி உணரஉரைத் தனையே
ஏதமற உணர்ந்தனன்வீண் போதுகழிப் பதற்கோர்
எள்ளளவும் எண்ணம்இலேன் என்னெடுநீ புணர்ந்தே
தீதறவே அனைத்தும்வல்ல சித்தாடல் புரிவாய்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.

உரை : சித்தர்களின் முடிமணியாய் ஞான நாடகம் புரிகின்ற தலைவனே; வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகிய இவை யனைத்தும் ஓதுகின்ற சூதுகளையும் உளவுகளையும் யான் அறியச் செய்து உண்மையை உள்ளவாறு உணர்ந்து கொள்ள எனக்கு உரைத் தருளினாய்; யானும் அவற்றைக் குற்றமற உணர்ந்து கொண்டேன்; அதனால் வீண் பொழுது போக்குதற்கு யான் எள்ளத்தனையும் நினைப்ப தில்லேன்; ஆகவே நீ என்னைடு கூடிக் குற்றமனைத்தும் நீங்க ஞானத் திருவிளையாடலைப் புரிந்தருளுக. எ.று.

வேதங்களும், ஆகமங்களும், புராணங்களும், இதிகாசங்களும் வேறு வேறு நெறிகளை உரைப்பதும், அவை ஒன்றிலொன்று வேறுபட்டும் மாறு பட்டும் இருப்பதும் பற்றி, "வேத நெறி ஆகமத்தின் நெறி புராணங்கள் விளம்பு நெறி இதிகாசம் விதித்த நெறி முழுதும் ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் காட்டி" என எடுத்துரைக்கின்றார். சூது - உண்மைக்கு மாறாய் உண்மை போலத் தோன்றுமாறு உரைப்பது; உளவு தந்திர உரை. சூதுகளையும் உளவுகளையும் தாம் தெளிய உணர்ந்து கொண்டமை புலப்பட, "உள்ளதனை உள்ளபடி உணர உரைத்தனையே" எனப் பகர்கின் றார். சிவனருளாலன்றி உள்ளதன் உண்மையை உள்ளவாறு அறிய முடியாமை பற்றி, "உள்ளபடி உணர உரைத்தனை" என்று உரைக் கின்றார். திருவருள் துணையால் தாம் மேற்கண்ட சூதுகளையும் உளவுகளை யும் கசடறக் கற்றுணர்ந்தமை தோன்ற, "ஏதமற உணர்ந்தனன்" என்றும், அதனால் வாணாள வீணே கழிப்பதற்கு எண்ணமில்லா தொழிந்தமை விளங்க, "வீண் போது கழிப்பதற்கோர் எள்ளவும் எண்ணமிலேன்" என்றும் இயம்புகின்றார். சிவபெருமானுடைய திருவருளோடு கலந்தவிடத்து நல்லன வெல்லாம் செய்தற்கு வன்மை யுண்டாதலால், "என்னைடு நீ புணர்ந்தே தீதறவே அனைத்தும் வல்ல சித்தாடல் புரிவாய்" என்று செப்புகின்றார். என் செயலென ஒன்றுமில்லை செய்வன யாவும் நின் செயலே என உரைப்பாராய், "அனைத்தும் வல்ல சித்தாடல் புரிவாய்" என்று தெரிவிக்கின்றார்.

இதனால், இறைவனைத் தன்னைடு கலந்து தான் செய்தற்குரிய ஞானச் செயல்களைப் புரிந்தருளுமாறு வேண்டியவாறும். (8)

3768. கலையுரைத்த கற்பனையே நிலைஎனக்கொண் டாடும்
கண்மூடி வழக்கம்எலாம் மண்மூடிப் போக
மலைவறுசன் மார்க்கம்ஒன்றே நிலைபெறமெய் உலகம்
வாழ்ந்தோங்கக் கருதியருள் வழங்கினைஎன் தனக்கே
உலைவறும்இப் பொழுதேநல் தருணம்என நீயே
உணர்த்தினைவந் தணைந்தருள்வாய் உண்மைஉரைத் தவனே
சிலைநிகர்வன் மனங்கரைத்துத் திருஅமுதம் அளித்தோய்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.

உரை : சித்தர்களின் முடிமணியாய் ஞான நடம் புரியும் நாயகனே; மெய்ம்மையை யுணர்த்திக் கல் போன்ற என் மனத்தை யுருக்கி ஞான வமுதத்தை அளித்த பெருமானே; கலைஞர்கள் தம்முடைய கற்பனையால் உரைத்தவற்றை மெய்ம்மை உரை யெனக் கொண்டு நிலவும் மூட வழக்கங்கள் எல்லாம் மண்ணிற் புதையுண்டு ஒழியவும்,

ஐயத்திற் கிடமில்லாத சன்மார்க்க நெறி ஒன்றே நிலை பெறவும், மெய்ந் நெறியில் உலகத்தவர் வாழ்ந்தோங்கவும் திருவுள்ளம் கொண்டு எனக்கு நினது திருவருள் ஞானத்தை வழங்கி யருளினாய்; கலக்க மில்லாத இந்தக் காலம் நல்ல தருணம் என்று நீயே எனக்கு உணர்த்தி என்பால் வந்தணைந்து அருள் செய்வாயாக. எ.று.

கலைஞர்கள் தங்கள் மனக் கற்பனையால் கற்பித் துரைத்த கற்பனை உரைகளை, "கலை யுரைத்த கற்பனை" என்று கூறுகின்றார். கற்பனைகள் மெய்ம்மை யாகாவாதலை உணராது மெய் யெனக் கொண் டொழுகும் பொய்யொழுக்கத்தை, "நிலை யெனக் கொண்டாடும் கண் மூடி வழக்கம்" எனப் பழிக்கின்றார். இல்லது பொருளாக இல்லது கூறலும், இல்லது பொருளாக உள்ளது கூறலும், உள்ளது பொருளாக இல்லது கூறலும், உள்ளது பொருளாக உள்ளது கூறலும் எனக் கலைஞர்கள் கூறும் கற்பனைகள் பலவகையாய் உண்மை தெளியுமிடத்து நிலையின்றிக் கெட்டொழிதலின் அவற்றை உண்மை யறிவு இல்லாமையால் மெய்யெனக் மயங்குவது கண்டு வடலூர் வள்ளல் மனம் வருந்துமாறு தோன்ற, "கலை யுரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும் கண்மூடி வழக்கம்" என்றும், கண்மூடி வழக்கங்களால் மக்களுலகம் அறியாமை இருளில் அழுந்தி அல்லலுறுவது பற்றி அவ்வழக்கங்கள் அத்தனையும் கெட்டொழிதல் வேண்டும் என மனம் சலித்து உரைக்கின்றாராதலின், கருதி உலகவர் "மண்மூடிப் போக" என்றும் உரைக்கின்றார். மெய்ந் நெறியைச் சன்மார்க்க எனவும், எவ்வகையால் ஆராயினும் அதன் மெய்ம்மை ஒளி குன்றுமை தோன்ற, "மலிவறு சன்மார்க்கம் ஒன்றே நிலைபெற" எனவும், அதனால் உலகவர் வேற்றுமையின்றி ஆன்ம நேயம் உடையவராய் இனிது வாழ்ந்து மேன்மை எய்துவர் என்னும் கருத்தால், "மலிவறு சன்மார்க்கம் ஒன்றே நிலைபெற மெய்யுலகம் வாழ்ந் தோங்கக் கருதி" எனவும், அவ்வுணர்வு தமக்கு இறைவன் அருள வந்தது என்பது புலப்பட, "என்றனுக்கே அருள் வழங்கினை" எனவும் இயம்புகின்றார். உலக மக்கள் உண்மை யுணரும் பக்குவம் எய்துவது கண்டு அதனை அவர்களுக்கு உணர்த்துதற்குத் துணை புரிதல் வேண்டும் என இறைவனை வேண்டுவாராய், "உலைவறும் இப்பொழுதே நல்தருணம் என நீயே உணர்த்தினை வந்தணைந்து அருள்வாய்" என வேண்டுகிறார். உணர்த்தினை - முற்றெச்சம். உண்மையை உள்ளவாறு உணரும் திறம் இறைவன் அருள் ஞானத்தாலன்றி எய்தாமை பற்றி, "உண்மை உரைத்தவனே" என்றும், கற்பனை உணர்வாலும், கண்மூடி வழக்கங் களாலும் கல்லாகி விட்ட மனத்தை உருக்கி உண்மை ஞானம் பெற இறைவன் அருளிய நலத்தை, "சிலை நிகர் வன்மனம் கரைத்துத் திருவமுதம் அளித்தோய்" எனத் தெரிவிக்கின்றார். சிலை - கல். திருவமுதம் - திருவருள் ஞானம்.

இதனால், திருவருள் ஞானம் அளித்து இறைவன் உண்மை யுணர்வு நல்கிய திறம் எடுத்தோதியவாறும். (9)

3769. திருத்தகும்ஓர் தருணம்இதில் திருக்கதவம் திறந்தே
திருவருட்பேர் ஒளிகாட்டித் திருஅமுதம் ஊட்டிக்
கருத்துமகிழ்ந் தென்உடம்பில் கலந்துளத்தில் கலந்து
கனிந்துயிரில் கலந்தறிவிற் கலந்துலகம் அனைத்தும்

உருத்தகவே அடங்குகின்ற ஊழிதொறும் பிரியா
தொன்ருகிக் காலவரை உரைப்பஎலாம் கடந்தே
திருத்தியொடு விளங்கிஅருள் ஆடல்செய வேண்டும்
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே.

உரை : சித்தர்களின் முடிமணியாய் ஞான நாடகம் புரியும் தலைவனே; செம்மைச் சான்று விளங்கும் இத்தருணத்தில் ஞானக் கதவைத் திறந்து திருவருளாகிய பெரிய ஒளியைக் காட்டிச் சிவஞான மாகிய அமுதத்தை அளித்து உள்ளம் உவந்து என் உடம்பிற் புகுந்து உள்ளத்திற் கலந்து, பின் உயிரில் கலந்து அறிவில் தோய்ந்து உலகனைத்தும் உருப்படுமாறு ஒடுங்குகின்ற ஊழிதொறும் பிரிதலின்றி ஒன்ருய்க் கால வரையறை கடந்து மனநிறைவோடு விளக்கமுற்று நினது திருவருளைச் செய்தருள வேண்டுகிறேன். எ.று.

ஞானப் பேற்றிற்குரிய மனப் பக்குவம் எய்தியிருப்பது இத்தருணம் என வற்புறுத்தற்கு, "திருத்தகும் ஓர் தருணம் இதில்" என உரைக் கின்ருர். சிந்தைத் தெளிவு எய்துதற்கு முன் அறியாமையால் மறைப் பண்டிருந்தமை விளங்க, "திருக்கதவம் திறந்து" என்றும், திருவருள் ஒளி தோன்றி ஞான வின்பத்தை நல்கிய குறிப்பை, "திருவருட் பேரொளி காட்டித் திருவமுதம் ஊட்டி" என்றும், உவகையோடு தனக் குள் இறைவன் எழுந்தருளும் திறம் புலப்பட, "கருத்து மகிழ்ந்து என் உடம்பில் கலந்து" என்றும் இயம்புகின்ருர். உடம்பினுள் புகுந்து கலந்த இறைவன் உள்ளிருக்கும் உயிரோடும் உயிரினுடைய அறிவினுள்ளும் கலந்து கொண்டமை பற்றி, "உளத்தில் கலந்து கனிந்து உயிருள் கலந்து அறிவிற் கலந்து" எனக் கூறுகின்ருர். இவ்வாறு தனக்குள் புகுந்து கலந்தது போல் ஏனை உலகுயிர்களுள்ளும் கலந்து எக்காலத்தும் ஒன்ருய் கால வரையறைகளைக் கடந்து நின்று திருவருள் ஆட்சியினைச் செய்தருள வேண்டும் என விண்ணப்பிக்கின்ருராதலால், "உலகம் அனைத்தும் உருத் தகவே அடங்குகின்ற ஊழி தொறும் பிரியாது ஒன்ருகிக் காலவரை உரைப்ப வெலாம் கடந்தே திருத்தியொடு விளங்கி அருளாடல் செய வேண்டும்" என உரைக்கின்ருர். ஊழிக் காலத்தில் வேறு வேறு வகை வகையாய் இருக்கின்ற உலகப் பொருள் அத்தனையும் ஒன்ருய் அடங்கு தல் பற்றி, "உலகனைத்தும் உருத் தகவே அடங்குகின்ற ஊழி" என்றும், அவ்வூழிக் காலத்தில் பிரிவின்றிக் கூடி இருப்பன பலவும் வேறு வேருய்ப் பிரிந்து ஒடுங்குவது பற்றி, "ஊழி தொறும் பிரியாது ஒன்ருகி" என்றும் இசைக்கின்ருர். ஊழிக் காலத்திலும் பிரிவின்றிக் கலந்து ஒன்றி உலகை உய்வித்தல் வேண்டும் என்று வேண்டுவாராய், "காலவரை உரைப்ப வெலாம் கடந்து திருத்தியொடு விளங்கி அருள் ஆடல் செய வேண்டும்" என உரைக்கின்ருர். ஊழி யந்தத்திலும் இறைவன் உடனிருந்தாலன்றி உலகிற்கு நற்பயன் விளையாது என்பதனால், "திருத்தியொடு விளங்கி அருள் ஆடல் செய வேண்டும்" என மொழிகின்ருர்.

இதனால் ஊழிக் காலத்தும் இறைவன் உலகுயிர்களோடு உடனிருந்து அருளல் வேண்டும் என வடலூர் வள்ளல் இறைவன்பால் முறை செய்து கொண்டவாரும்.

திருச்சிற்றம்பலம்

29. சிற்சபை விளக்கம்

அஃதாவது, வடலூர் ஞானச் சபையில் எழுந்தருளும் கூத்தப் பெருமான் திருமுன் வடலூர் வள்ளலார் தமது உள்ள விருப்பத்தை விளங்க உரைத்தல்.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3770. சோறு வேண்டினும் துகில்அணி முதலாம்
சுகங்கள் வேண்டினும் சுகமலால் சுகமாம்
வேறு வேண்டினும் நினைஅடைந் தன்றி
மேவொ ணாதெனும் மேலவர் உரைக்கே
மாறு வேண்டிலேன் வந்துநிற் கின்றேன்
வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
சாறு வேண்டிய பொழில்வடல் அரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே.

உரை : தேன் பொருந்திய சோலைகள் நிறைந்த வடலூர்க்கண் எழுந்தருளும் அருளரசே; அங்குள்ள சத்திய ஞான சபைக்குரிய ஒப்பற்ற பெரிய தலைவனே; உண்ணும் சோற்றை விரும்பினும், ஆடை அணிகள் முதலிய சுகப் பொருட்களை வேண்டினும், சுகமே யன்றிச் சுகத்தைத் தரு கின்ற வேறு பொருட்களை வேண்டினும் நின்னுடைய திருவருளை அடைந்தாலன்றி எய்த வொண்ணாது என்னும் சான்றோருடைய நன் மொழிக்கு மாறாக ஒன்றும் வேண்டாது நின் திருமுன் வந்து நிற்கின் றேன்; யானே வள்ளற் பெருமானாகிய உன்னுடைய திருவுள்ளக் குறிப்பை அறியேன்; ஆதலால் எனக்கு உன் திருவருள் வேண்டப்படு கின்றது காண். எ.று.

சாறு - ஈண்டுப் பூக்களிலிருந்து சொரியும் தேன். சோலைகளிலுள்ள மலர்களில் ஊறிப் பெருகும் தேனைச் சிறப்பித்து, "சாறு வேண்டிய பொழில்" என உரைக்கின்றார். வடலூர் வடல் என மருவி நிற்கின்றது. இதனை வடலூர் என்பது போல, பார்வதி புரம் என்பதும் வழக்கு. இவ்வடலூரின்கண் அமைந்துள்ள சத்திய ஞான சபையைச் "சத்தியச் சபை" என்றும், அங்கே எழுந்தருளும் கூத்தப் பெருமான் உலகிற்கு ஒப்பற்ற பெரிய தலைவனதல் பற்றி, "தனிப் பெரும் பதி" என்றும் புகல் கின்றார். துகில் - உடுக்கும் உடை. அணி - பூணைங்கள். சோறும் உடை யும் அணிகலன்களும் மக்கட்கு இன்பம் தருவனவாதலின், அவை வேண்டப்படுவது பற்றி, "சோறு வேண்டினும் துகில் அணி முதலாம் சுகங்கள் வேண்டினும்" எனத் தொடுத்து மொழிகின்றார். இவற்றுள் விளைவது சுகம் என்பது பற்றி, "சுகம்" என்றும், இவற்றோடு சுகம் தரும் வேறு பொருட்களும் உலகில் உளவாதல் பற்றி, "சுகமலால் சுகமாம்

வேறு வேண்டினும்" என விளம்புகின்றார். உண்ணும் உணவும், உடுக்கும் உடையும், அணிந்து கொள்ளும் ஆபரணங்களும், இருக்கும் இடமும் பிற நன்பொருட்களும் இறைவன் திருவருளால் அல்லது பெறலாகாது என்று பெரியோர் உரைக்கும் மெய்ம்மை உரையை, நீனை அடைந்தன்றி மேவ ஒணுதெனும் மேலவர் உரை" என்று எடுத்துரைக் கின்றார். மேலவர் - சிவஞானச் செல்வர்களாகிய மேலோர்; திருவருட் செல்வர்கள் எனினும் பொருந்தும். திருவருளை முன்னிட்டல்லது யான் யாதும் வேண்டுகின்றேனில்லை; அத்திருவருளை வேண்டியே நின்னுடைய திருமுன் வந்து நிற்கின்றேன் என்பாராய், "மேலவர் உரைக்கு மாறு வேண்டிலேன் வந்து நிற்கின்றேன்" என்று மொழிகின்றார். உனது திருவருளையே வேண்டுகின்றேன் என்றாலும் உனது திருவுளக் கருத்து இன்னும் அறிந்திலேன் என்பாராய், "வள்ளலே உன்றன் மனக் குறிப்பறியேன்" என வுரைக்கின்றார். நினது திருவருள் இருந்தாலன்றி வேண்டுவார் வேண்டுவது எய்தாது என்ற கருத்தைத் தான் மறவாது உள்ளத்தில் கொண்டிருப்பதை, "வள்ளலே உன்றன் மனக் குறிப்பறியேன்" என வற்புறுத்துகின்றார்.

இதனால், உலகில் மக்கட்கு உணவும், உடையும், உறைவிடமும் பிற யாவும் இறைவன் திருவருளாலன்றி எய்துவதில்லை என்பது தெரி வித்தவாறும். (1)

3771. எஞ்சல் இன்றிய துயரினால் இடரால்
இடுக்குண் டையநின் இன்னருள் விரும்பி
வஞ்ச நெஞ்சினேன் வந்துநிற் கின்றேன்
வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
அஞ்சல் என்றெனை ஆட்கொளல் வேண்டும்
அப்ப நின்னலால் அறிகிலேன் ஒன்றும்
தஞ்சம் என்றவர்க் கருள்வடல் அரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே.

உரை : சத்திய ஞான சபையையுடைய ஒப்பற்ற பெரிய தலைவனே; தஞ்சம் என்று வந்தவர்கட்கு அருள் ஞானம் வழங்கும் வடலூர் அருளரசே; ஐயனே; குறைதலில்லாத துயரத்தாலும் இடர் களாலும் நெருக்குண்டு நின்னுடைய இனிய திருவருளை விழைந்து வஞ்சம் நிறைந்த நெஞ்சினையுடையவனாகிய யான் நின் திருமுன் வந்து நிற்கின்றேன்; அருள் வள்ளலாகிய உனது திருவுள்ளம் யாதோ அறிகிலேன்; ஆயினும் அஞ்சுதல் ஒழிக என்று சொல்லி என்னை அருளி ஆட்கொள்ள வேண்டும்; எனக்கு அப்பனாகிய உன்னையன்றி உலகில் வேறு ஒரு பொருளையும் அறியாதவனாவேன். எ.று.

தஞ்சம் - புகல்; வேறு பற்றுக் கோடு ஒன்று மில்லாதவர் தமக்குப் பற்றுதல் வேண்டுமென முறையிடும் மொழி தஞ்சம் என வழங்குவது. புகலடைதல் என்பதும் உண்டு. ஆதரவின்றி அல்லலுற்று வருந்தும் எளிமை நிலையைத் தஞ்சம் என்னும் சொல் உணர்த்தும் என்பர் தொல்காப்பியர். பற்றற்றவர்க்குப் பற்றாய பெருமான் என்று சான்றோர்

இறைவனைப் பாராட்டுதலால், "தஞ்சம் என்றவர்க்கு அருள் வடல் அரசே" எனப் போற்றுகின்றார். உலகியல் வாழ்வில் துன்பமும் துயரும் இடையீடின்றிப் பெருகி வருத்துவது பற்றி, "எஞ்சல் இன்றிய துயர்" என எடுத்துரைக்கின்றார். இடர் - எதிர்பாரா வகையில் உலகியல் வாழ்வில் உளவாகும் இடையூறுகள். இவற்றுல் உள்ளம் வன்மை யிழந்து சுருங்குவது பற்றி, "துயரினுல் இடரால் இடுக்குண்டு" என இயம்புகின்றார். இடுக்கு - சுருங்குதல். விரிந்து விளக்கமுறும் இயல்புடைய மனம் துயர்களாலும் இடர்களாலும் சுருங்கி மெலிவது பற்றி, "துயரினுல் இடரால் இடுக்குண்டு" என உரைக்கின்றார். எஞ்சல் - குன்றுதல். இடையற வின்றிப் பெருகும் துன்பத்தால் வருந்தும் ஆன்மாவுக்கு இறைவன் திருவருள் அன்றித் துணை வேறில்லாமை பற்றி, "நின் இன்னருள் விரும்பி வந்து நிற்கின்றேன்" எனக் கூறுகின்றார். துன்பத்தைத் துடைத்து ஒழிப்பது இன்பமாகலின் அதனை வழங்கும் தன்மைத்தாகிய திருவருளை, "இன்னருள்" என இசைக்கின்றார். அதனை முற்பட உணர்ந்து வேண்டாமை தோன்றத் தம்மை, "வஞ்ச நெஞ்சினேன்" என இழித்துரைக்கின்றார். இறைவன் திருவுள்ளம் கொண்டாலன்றி இத்திருவருட் பேறு தமக்கு எய்தாது என்னும் கருத்தால், "வள்ளலே உன்றன் மனக் குறிப்பறியேன்" என இயம்புகின்றார். கணந் தோறும் எய்துகின்ற துன்பங்கட்கு அஞ்சித் திருவருளை மறந்தொழிவது விளங்க, "அஞ்சல் என்றெனை ஆட்கொளல் வேண்டும்" என்றும், இறைவனுக் காட்பட்டாலன்றித் தமக்கு உய்தி யில்லை என்பதைத் தமது உண்மை யறிவால் அறிவதை வெளிப்பட மொழி கின்றாராதலின், "அப்ப நின்னலால் ஒன்றும் அறிகிலேன்" என்றும் முடிந்த முடிபாக மொழிகின்றார். ஆட்கொள்வதே யன்றித் துன்பம் துடைத்து மகிழ்விக்கும் உறுதிப் பொருள் பரம்பொருளை யல்லது வேறு ஒன்றுமில்லை என்ற கருத்தை வலியுறுத்தற்கு, "ஒன்றும் அறிகிலேன்" என்று கூறுகின்றார்.

இதனுல், உலகியல் வாழ்வில் வந்து தாக்கும் துன்பங்களைப் போக்குதற்குரிய பொருளாவது சிவ பரம்பொருள் என்றும், அதற்கு ஆட்பட்டாலன்றி உய்தி கிடையாது என்றும் தெரிவித்தவாறும். (2)

3772. சூழ்வி லாதுழல் மனத்தினுல் சுழலும்
துட்ட னேன்அருட் சுகப்பெரும் பதிநின்
வாழ்வு வேண்டினேன் வந்துநிற் கின்றேன்
வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
ஊழ்வி டாமையில் அரைக்கணம் எனினும்
உன்னை விட்டயல் ஒன்றும்உற் றறியேன்
தாழ்வி லாதசீர் தருவடல் அரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே.

உரை : சத்திய ஞான சபையையுடைய தனிப் பெருந் தலைவனே; குறையாத சிறப்புப் பொருந்திய வடலூரின்கண் எழுந்தருளும் அருளரசே; ஆராய்ச்சியின்றி வருந்தும் மனத்தொடு கூடி அலமரும் துட்டனுகிய நான் திருவருள் இன்பப் பெருந் தலைவனுகிய நின்னுடைய

திருவருள் வாழ்வை விரும்பி நின் திருமுன் வந்து நிற்கின்றேன்; ஆனால் வள்ளற் பெருமானுகிய உன்னுடைய திருவுள்ளக் கருத்தை அறிகிலேன்; ஊழ்வினை என்னை விடாமையால் அரைக்கண நேரமும் உன்னை விட்டு வேறு ஒரு பொருளையும் நினைந்தறியேன்; ஆதலால் எனக்கு நின் திருவருள் வழங்குதல் வேண்டும். எ. று.

சில தலங்கள் காலை வேறுபாட்டால் சிறப்பு மிகுவதும் குறைவதும் உண்டெனினும் வடலூர் தன் சிறப்பில் எக்காலத்தும் குறையாமை விளங்க, "தாழ்விலாத சீர்தரு வடலை" என உரைக்கின்றார். சூழ்தல் - ஆராய்தல். ஒருவர்க்கு எய்தும் துன்பங்களுக் கெல்லாம் மனம் ஒன்றி ஆராய்தல் இல்லாமை காரணமாதலால், "சூழ்விலாது உழல் மனத்தினுல் சுழலும் துட்டனேன்" எனத் தமது குறையை எடுத்துரைக்கின்றார். துட்டன் - கெட்டவன். ஒருவன் துட்டனுதற்குக் காரணம் மன வடக்க மின்றி அலமரும் இயல்பு என்பது இதனுல் பெறப்படும். உண்மை யாராய்ச்சி செய்து திருவருள் வாழ்வல்லது உயிர்க்கு உறுதி பயப்பது வேறு யாதுமில்லை என்பதை அறியா தொழிந்தமை விளங்க, "துட்டனேன் அருட் சுகப் பெரும் பதி நின் வாழ்வு வேண்டினேன்" என விளம்புகின்றார். துட்டனுய்த் திரிந்த தான் பின்னர்த் திருவருளின் நலத்தை யுணர்ந்தமை தோன்ற, "நின் வாழ்வு வேண்டினேன் வந்து நிற்கின்றேன்" எனவும், எனினும் நின் திருவுள்ளக் கருத்து அறியாமை யால் வாடுகின்றேன் என்பாராய், "வள்ளலே உன்றன் மனக் குறிப்பறியேன்" எனவும் உரைக்கின்றார். தமக்குற்ற அல்லல்களுக்கு எல்லாம் ஊழ்வினை காரணம் என உணர்ந்து அதன் சூழ்ச்சிக்கு அகப்படாது உய்தி பெறுதற் பொருட்டு உன்னைக் கணநேரமும் மறவாது ஒழுகுகின்றேன் என்பார், "ஊழ் விடாமையில் அரைக்கணம் எனினும் உன்னை விட்டயல் ஒன்றும் உற்றறியேன்" என உரைக்கின்றார். அரைக்கணமும் மறவாது இறைவனை நினைந்தொழுகுவாரை ஊழ்வினை தொடராது என்பது சான்றோர் அறவுரை. "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு" எனத் திருவள்ளுவர் உரைப்பது காண்க.

இதனுல், ஊழ்வினையால் மனம் சுழன்று தடுமாறிய தான் அதன் பிடியினின்றும் நீங்குதற் பொருட்டு இறைவனை யல்லது வேறு ஒன்றை யும் எண்ணுமை எடுத்தோதியவாறும். (3)

3773. ஆட்டம் ஒய்கிலா வஞ்சக மனத்தால்
அலைதந் தையவோ அயர்ந்துளம் மயர்ந்து
வாட்ட மோடிவண் வந்துநிற் கின்றேன்
வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
நாட்டம் நின்புடை அன்றிமற் றறியேன்
நாயி னேன்பிழை பொறுத்திது தருணம்
தாட்ட லந்தரு வாய்வடல் அரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே.

உரை: சத்திய ஞான சபையையுடைய ஒப்பற்ற பெரிய தலைவனே; வடலூரின்கண் எழுந்தருளும் அருளரசே; ஓயாது ஆடுகின்ற

வஞ்ச நினைவுகளை யுடைய மனத்தின் வழி நின்று அலைந்து தளர்ந்து மனம் மயங்கி வாடிய நிலையில் இங்கே நின் திருமுன் வந்து நிற்கின்றேன்; வள்ளற் பெருமானுகிய உன்னுடைய திருவுள்ளக் குறிப்பை அறிகிலேன்; என்னுடைய விருப்ப மெல்லாம் உன் திருவருள்பாலன்றி வேறு எதன்பாலும் உண்டாவதில்லை; நாய் போன்ற கடையவனுகிய என் பிழைகளைப் பொறுத்து இச்சமயத்தில் நினது திருவருள் நிழலை அடியேனுக்குத் தருவாயாக. எ.று.

எப்பொழுதும் சலித்துக் கொண்டே யிருக்கின்ற இயல்புடையதாகையால், "ஆட்டம் ஒய்கிலா மனத்தால்" என்றும், எக்காலத்தும் வஞ்ச நினைவுகளே நிறைந்திருப்பது பற்றி, "வஞ்சக மனத்தால்" என்றும், கடலின்கண் அலை போலப் பல்வகை நினைவுகளால் அலைந்து மெலிவது பற்றி, "அலை நந்து அயர்ந்து" என்றும், மனத்தில் உண்டாகும் அயர்வு மயக்கத்தை எய்துவித்து உடம்பை மெலிவித்தல் பற்றி, "வாட்டமோடு இவண் வந்து நிற்கின்றேன்" என்றும் உரைக்கின்றார். உளம் மயர்தல் - மனம் மயங்குதல். மனத்தின் அலைவு நல்லது நினைக்கும் உள்ளத்தை மயக்கி உடம்பை மெலிவித்து வருத்தும் இயல்பை, "வஞ்சக மனத்தால் அலை நந்து அயர்ந்து உளம் மயர்ந்து வாட்டமுற்று வந்து நிற்கின்றேன்" எனத் தமது மெலிவு நிலையை விளம்புகின்றார். எனக்கு உளதாகிய மெலிவு நீக்கி அருள் வளம் நல்குதற்கு நின் திருவுள்ளப் பாங்கினை வேண்டுகின்றேன் என்பாராய், "உன்றன் மனக் குறிப்பறியேன்" என மொழிகின்றார். நின் திருவருளாலன்றி ஒரு நலமும் எய்தாது என்பதை யுணர்ந்து நின்னையன்றிப் பிறிது யாதனையும் நாடுகின்றேனில்லை என யாப்புறுத்தற்கு, "நாட்டம் நின்புடையன்றி மற்றறியேன்" என எடுத்துரைக்கின்றார். இத்தருணத்தில் என் மனம் ஓரளவு தெளிவுற்றிருத்தலின் இதுகாறும் யான் செய்த பிழைகளைப் பொறுத்தருளி நினது திருவடி ஞானத்தை எனக்கு வழங்குதல் வேண்டும் எனப் போற்றுகின்றிராதலால், "நாயினேன் பிழை பொறுத்து இது தருணம் தாள் தலம் தருவாய்" என வேண்டுகின்றார்.

இதனால், மனத்தின் வழி நின்று வருந்தி மெலிந்த திறம் எடுத்தோதித் திருவடி ஞானம் நல்குக என வேண்டியவாறும். (4)

3774. கருணை ஒன்றிலாக் கல்மனக் குரங்கால்
காடு மேடுழன் றுளம்மெலிந் தந்தோ
வருண நின்புடை வந்துநிற் கின்றேன்
வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
அருணன் என்றெனை அகற்றிடு வாயேல்
ஐய வோதுணை அறிந்திலன் இதுவே
தருணம் எற்கருள் வாய்வடல் அரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே.

உரை : சத்திய ஞான சபையையுடைய தனிப் பெருந் தலைவனே; வடலூரில் கோயில் கொண்டருளும் அருளரசே; இரக்கப் பண்பு சிறிதுமில்லாத கல்லின் தன்மையையுடைய மனமாகிய குரங்கினால் நாடு

முழுவதும் திரிந்து உள்ளம் மெலிந்து சிவத்த திருமேனியை யுடைய நின் திருமுன் வந்து வணங்குகின்றேன்; வள்ளலாகிய உன்னுடைய திருவுள்ளக் குறிப்பை அறிந்திலேன்; ஆட்டின் இயல்புடைய கீழ்மகன் என்று என்னைப் புறக்கணிப்பாயாயின், ஐயோ, எனக்குத் துணையாவார் வேறு ஒருவரையும் காண்கிலேன்; மெலிந்து வந்த எனக்கு இத்தருணத்தில் நினது திருவருள் ஞானத்தை நல்குவாயாக எ.று.

இரக்கப் பண்பு சிறிதும் இல்லாமை பற்றி, "கருணை ஒன்றிலாக் கல் மனம்" என்றும், குரங்கு போல் ஒரு பொருளிலும் ஒன்றி நில்லாமை ஓடி அலைவது பற்றி மனத்தை, "குரங்கு" என்றும் கூறுகின்றார். காடும் மேடும் நிறைந்தது நாடாகையால் நாடு முழுதும் அலைந்த திறத்தை, "காடும் மேடும் உழன்று" என விரித்துரைக்கின்றார். பயனின்றித் திரிந்தமையால் உள்ளமும் உடம்பும் மெலிந்தமை தோன்ற, "உள்ளம் மெலிந்து வந்து நிற்கின்றேன்" என்று கூறுகின்றார். வருணன் - சிவந்த நிறமுடையவன். வருணம் நிறத்திற்காகிச் செம்மை நிறத்தின் மேலதாயிற்று. சிவபெருமானைச் "செம்மேனி அம்மான்" என்று சான்றோர் புகழ்வது பற்றி இவ்வாறு கூறுகின்றார். உன்னுடைய திருவுள்ளப் பாங்கை அறியேனாயினும் நீ மருமல் உனது அருளே வழங்குவாய் என்னும் கருத்துடையேன் என்பாராய், "வள்ளலே உன்றன் மனக் குறிப்பறியேன்" என உரைக்கின்றார். அருணம் - ஆடு. ஆட்டின் பண்புடையவனை "அருணன்" என்று குறிக்கின்றார். தன்னைக் கொல்வோனுடைய குறிப் பறியாது அவன் கையிலுள்ள குழையைத் தின்னும் இயல்பு பற்றி ஆட்டை இங்கே இகழ்ந்து கூறுகின்றார். என்னைப் புறக்கணிப்பாயாயின் யான் வேறு துணையின்றிக் கெடுவேன் ஆதலால் எனக்கு அருள் புரிக என்பாராய், "எனை அகற்றிடுவாயேல் துணை அறிந்திலன் எற்கு அருள்வாய்" என வேண்டுகின்றார்.

இதனால், தன் கீழ்மைப் பண்பு கண்டு புறக்கணியாமல் திருவருள் வழங்க வேண்டுமென முறையிட்டவாறும். (5)

3775. கரண வாதனை யால்மிக மயங்கிக்
கலங்கி னேன்ஒரு கதிகணும் அறியேன்
மரணம் நீக்கிட வந்துநிற் கின்றேன்
வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
இரணன் என்றெனை எண்ணிடேல் பிறிதோர்
இச்சை ஒன்றிலேன் எந்தைநின் உபய
சரணம் ஈந்தருள் வாய்வடல் அரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே.

உரை : சத்திய ஞான சபையையுடைய ஒப்பற்ற பெருந் தகைவனே; வடலூரில் எழுந்தருளும் அருளரசே; கருவி கரணங்கள் செய்யும் துன்பத்தால் மிகவும் மயங்கிக் கலக்கமுற்று ஆதரவு ஒன்றும் அறியேனாய் இறப்புப் பிறப்புக்கள் நீங்குமாறு நின் திருமுன் போந்து நிற்கின்றேன்; ஆயினும் வள்ளலாகிய உன்றன் திருவுள்ளக் கருத்தினை அறிகிலேன்; கொலை புரியும் கொடியவன் என்று என்னை எண்ணிப் புறக்கணிக்க வேண்டா; வேறு யாதொன்றின் மேலும் எனக்கு விருப்ப

மில்லையாதலால் எந்தையாகிய உன்னுடைய இரண்டாகிய திருவடிகளே எனக்குத் தந்தருள்வாயாக. எ.று.

கண் முதலிய ஐம்பொறிகளாலும், மனம் முதலிய அந்தக்கரணங்களாலும் அலைப்புண்டு அறிவு தெளிவின்றி வருந்தினேன் என்பாராய், "கரண வாதனையால் மிக மயங்கிக் கலங்கினேன்" என்றும், அக்கலக்கமிகுதியால் பற்றுக் கோடாய் நின்று ஆதரிப்பார் ஒருவரையும் பெற்றிலேன் என்பாராய், "ஒரு கோகணும் அறியேன்" என்றும் உரைக்கின்றார். கரணவாதனைகளின் முடிவு இறப்புப் பிறப்புக்களில் வந்து நிற்பதாகையால் அது மேலும் துன்பத்திற்கே இடமாதல் பற்றி, "மரணம் நீக்கிட வந்து நிற்கின்றேன்" எனவும், அது தானும் நினது திருவருளால் அன்றி எய்துவதன்றுதலால் உனது திருவருட் குறிப்பை முற்பட அறிகிலேன் என்பார், "வள்ளலே உன்றன் மனக் குறிப்பறியேன்" எனவும், இயம்புகின்றார். இரணன் - வாள் முதலிய கருவிகளைக் கொண்டு கொலை புரிபவன்; புண் செய்பவன் எனினும் பொருந்தும். கொலை முதலிய குற்றங்களைச் செய்யும் கொடியவன் என்பது கருத்து. நோய் விளைவித்துத் திருவருளைப் பெறக் கருதும் கீழ்மகன் என்று எண்ணலாகாது என்பார், "இரணன் என்றெனை எண்ணிடேல்" என இயம்புகின்றார். நினது திருவடியாகிய திருவருட் செல்வத்தைப் பெறுவது ஒன்றே என் குறிக்கோள் என்று வலியுறுத்தற்கு, "பிறிதோர் இச்சை ஒன்றிலேன் எந்தை நின் உபய சரணம் ஈந்தருள்வாய்" என்று உரைக்கின்றார்.

இதனால், இறைவன் திருவடி நீழலில் தமக்குள்ள பெருவிருப்பத்தை வடலூர் வள்ளல் தெரிவித்துக் கொண்டவாறும். (6)

3776. தூய நெஞ்சினேன் அன்றுநின் கருணைச்
சுகம்வி ழைந்திலேன் எனினும்பொய் உலக
மாயம் வேண்டிலேன் வந்துநிற் கின்றேன்
வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
ஈய வாய்த்தநல் தருணம்ஈ தருள்க
எந்தை நின்மலர் இணைஅடி அல்லால்
தாயம் ஒன்றிலேன் தனிவடல் அரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே.

உரை : சத்திய ஞான சபையையுடைய தனிப் பெருந் தலைவனே; ஒப்பற்ற வடலூர்க்கண் உள்ள அருளரசே; தூய நெஞ்சினையுடையவனாய் முன்னை நாட்களில் நினது திருவருள் இன்பத்தை விரும்பா தொழிந்தேன் எனினும், பொய்யான உலகியல் வாழ்வின் மயக்கத்தை விரும்பாமல் நின்னுடைய திருமுன் வந்து நிற்கின்றேன்; வள்ளலாகிய உனது திருவுள்ளக் கருத்தினையும் அறியேன்; எனக்கு உனது திருவருள் ஞானத்தை நல்குதற்கு ஏற்ற தருணம் இதுவாகும்; ஆதலால் எனக்கு அதனை ஈந்தருள்க; எந்தையாகிய நின்னுடைய மலர் போன்ற இரண்டு திருவடிகளை யன்றி உரிமையாகப் பெறக் கூடிய பொருள் வேறு யாதொன்றும் இல்லாதவனாயினேன். எ.று.

உலகியற் சூழலில் கலக்கும் முன் யான் தூய்மை யுடைய நெஞ்சினை யுடையவனாய் விளங்கினேனாயினும் அக்காலத்தில் உனது திருவருள் இன்ப வாழ்வினை விரும்பா தொழிந்தேன் என்பார், "தூய நெஞ்சினேன் அன்று நின் கருணைச் சுகம் விழைந்திலேன்" என உரைக்கின்றார். அன்று என்பது சகலாவத்தை எய்துதற்கு முன் இருந்த கேவல நிலை. கேவலத்தில் கிடந்த பொழுது அறிவுருவாகிய தான் அழுக்குறுது இருந்தமை புலப்பட, "தூய நெஞ்சினேன்" என்று சொல்லுகின்றார். அறிவுருவாக இருந்தும் இறைவனது திருவருள் இன்பத்தை நினையாது இருந்தமை புலப்பட, "அன்று நின் கருணைச் சுகம் விழைந்திலேன்" என இயம்புகின்றார். அக் குற்றத்தால் சகலாவத்தையில் மக்கட் பிறப்புற்று உலக வாழ்வில் தோன்றி மயங்கினது பற்றி, "பொய்யுலக மாயம் வேண்டிலேன்" எனவும், வேண்டாத அதனை விடுத்தற் பொருட்டு நின் திருமுன் வந்து நிற்கின்றேன் என்பாராய், "வந்து நிற்கின்றேன்" எனவும், அதனை எய்துதற்கு உன் திருவருள் இன்றியமையாது என்பாராய், "வள்ளலே உன்றன் மனக் குறிப்பறியேன்" எனவும் உரைக்கின்றார். பொய்யுலக மாய வாழ்வில் விருப்புறுது அதனை விலக்குதற்குக் கருதும் மனப்பான்மை என் உள்ளத்தில் நிலவும் தணம் இதுவாகும் ஆதலால் எனக்கு அதனைத் தந்தருள்க என விண்ணப்பிப்பாராய், "ஈய வாய்த்த நல்தருணம் ஈது அருள்க" என வேண்டுகின்றார். தாயம் - உரிமை. திருவருட் பேற்றுக்குரிய இறைவன் திருவடிகள் தாம் பெறுதற் குரிமை யுடையவை என்றற்கு, "எந்தை நின் மலரினை அடி யல்லால் தாயம் ஒன்றிலேன்" என விளம்புகின்றார்.

இதனால், இறைவன் திருவடிக்குத் தமக்குள்ள உரிமையை வற்புறுத்தவாரும். (7)

3777. சிரத்தை ஆதிய சுபகுணம் சிறிதும்
சேர்ந்தி லேன்அருட் செயலிலேன் சாகா
வரத்தை வேண்டினேன் வந்துநிற் கின்றேன்
வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
கரத்தை நேர்உளக் கடையன்என் றெனைநீ
கைவி டேல்ஒரு கணம்இனி ஆற்றேன்
தரத்தை ஈந்தருள் வாய்வடல் அரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே.

உரை : சத்திய ஞான சபையையுடைய தனிப் பெருந் தலைவனே; வடலூரில் எழுந்தருளும் அருளரசே; சிரத்தை முதலிய நற்குணங்கள் சிறிதும் இல்லாதவனும், அருட் செயல் புரியாதவனுமாகிய நான், சாகா வரம் வேண்டி நின் திருமுன் வந்து நிற்கின்றேன்; ஆயினும் வள்ளலாகிய உன்னுடைய திருவுள்ளக் கருத்தை அறிந்திலேன்; அதனால் விடத்தை ஒத்த நெஞ்சினை யுடையவன் என்று கருதி நீ கைவிடுவாயானால், நான் ஒருகணப் பொழுதும் இனிப் பொறுக்க மாட்டேன்; எனக்கு நின் திருவருள் ஞானத்தைப் பெறுதற்குரிய தகுதியினைத் தந்தருள்வாயாக. எ.று.

சிரத்தை - அக்கறை யுடைமை. மேற்கொண்ட செயல்களை முற்ற முடித்தற்கு வேண்டிய கருத்தூற்றம் இங்கே சிரத்தை எனக் குறிக்கப்படு கிறது. கருமமே கண்ணாக இருப்பது எனினும் பொருந்தும். இது சிறந்த நற்குணமாதலால், "சுபகுணம்" எனப் பாராட்டப்படுகிறது. சிரத்தை முதலிய நற்பண்பு இல்லாதவர்க்கு இரக்கம் முதலிய நற்செயல்கள் உளவாகாவாதலின், "சிரத்தையாகிய சுபகுணம் சிறிதும் சேர்ந்திலேன் அருட் செயலிலேன்" என உரைக்கின்றார். அருட் செயல்கள் என்றும் அழியாப் புகழுடம்பை விளைவிப்பனவாகவும், யான் அதனை விடுத்து அதற்கு மாறாய சாகா வரத்தைப் பெற வேண்டி உன்னுடைய திருமுன் நிற்கின்றேன் என்பாராய், "அருட் செயலிலேன் வரத்தை வேண்டினேன் வந்து நிற்கின்றேன்" என மொழிகின்றார். எனது குற்றங்களைப் பொறுத்து நீ அருளுதல் வேண்டும் என்றற்கு, "வள்ளலே உன்றன் மனக் குறிப்பறியேன்" எனக் கூறுகின்றார். கரம் - விடம். நெஞ்சில் கள்ளமும் கரமும் உடையவர் கடையராகக் கருதப்படுதலின், "கரத்தை நேருளக் கடையன் என்றெனை நீ கைவிடேல்" எனவும், குற்றம் உணர்ந்து மனம் மெலிவுற்று வருந்துகின்றேன் என்பாராய், "கைவிடேல் இனி ஒருகணம் ஆற்றேன்" எனவும், மெலிவு போக்கித் திண்மை தந்து திருவருள் ஞானம் பெற அருளுக வென வேண்டுவாராய், "தரத்தை ஈந்தருள்வாய்" எனவும் வேண்டுகின்றார்.

இதனால், செய்த குற்றங்களை நினைந்து மெலிவுற்று வருந்தும் எனக்குத் திருவருள் ஞானப் பேற்றிற்குரிய மனத் திட்பத்தைத் தந்தருள்க என வேண்டிக் கொண்டவாறும். (8)

3778. பத்தி யஞ்சிறி துற்றிலேன் உன்பால்
பத்தி ஒன்றிலேன் பரமநின் கருணை
மத்தி யம்பெற வந்துநிற் கின்றேன்
வள்ள லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
எத்தி அஞ்சலை எனஅரு ளாயேல்
ஏழை யேன்உயிர் இழப்பன்உன் ஆணை
சத்தி யம்புகன் றேன்வடல் அரசே
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே.

உரை : வடலூரின்கண் எழுந்தருளும் அருளரசே; சத்திய ஞான சபையையுடைய தனிப் பெருந் தலைவனே; உணவு வகையில் பத்திய மொன்றும் கொண்ட தில்லேன்; உன்னிடத்தில் பத்தி சிறிதும் இல்லாதவன்; பரமனாகிய உனது கருணையாகிய தேனையுண்டு மகிழ்தற்கு நின் திருமுன் வந்து நிற்கின்றேன்; வள்ளற் பெருமானாகிய நினது திருவுள்ளக் குறிப்பை யறிகிலேன்; என் கவலையைப் போக்கி இனி அஞ்சுதல் ஒழிக என்று அருள் புரியாயின், ஏழையாகிய யான் என் உயிரை விட்டொழிப்பேன்; இதனை நின் மேல் ஆணையாக வுரைக் கின்றேன்; இது சத்தியமாகும். எ.று.

பத்தியம் - நோயுற்றார்க்கு மருந்தளிக்கும் மருத்துவர் உரைக்கும் உணவு முறை. சத்தியம் தவறினும் பத்தியம் தவறலாகா தென்பது

மருத்துவர் கூறும் அறிவுரை. பத்திய நெறியை மேற் கொள்ளாதொழுகும் குற்ற முடையேன் என்பாராய், "பத்தியம் சிறிது உற்றிலேன்" எனப் பகர்கின்றார். இறைவனது அருளுண்மையும் அதனைப் பெறுவதன் இன்றியமையாமையும் உணர்ந்தவர் அதுபற்றி அவன்பால் பத்தி வைராக்கிய முடையராதல் முறையாகவும் யான் அது சிறிதும் உடையவ னல்லன் என்று காட்டற்கு, "உன்பாற் பத்தி யொன்றிலேன்" எனத் தெரிவிக்கின்றார். இத்துணைக் குறைகளிருப்பினும் பரம் பொருளாகிய நின்னுடைய திருவருளாகிய தேனைப் பெற்றுண்ண வேண்டி நின் திருமுன் வந்து நிற்கின்றேன் என்றும், அதன் பொருட்டு நினது திருவுள்ளக் கருத்தை அறியேனுய் வருந்துகின்றேன் என்பாராய், "பரம நின் கருணை மத்தியம் பெற வந்து நிற்கின்றேன்" எனவும், "வள்ளலே யுன்றன் மனக் குறிப்பறியேன்" எனவும் இயம்புகின்றார். மத்தியம் - தேன்; மது என்னும் சொல்லடியாக மத்தியம் என்ற சொல் வந்துளது. எத்துதல் - போக்குதல். எத்தப்படுவது - மனக் கவலை. "இனி வருந்துதல் வேண்டா; உன் மனக்கவலை ஒழிக" என மொழிந்து அருள் புரியாயாயின் யான் உயிர் வாழ்வின் பயனின்மையை எண்ணி உயிர் துறப்பேன் என உரைப்பாராய், "எத்தி அஞ்சலை என அருளாயேல் ஏழையேன் உயிர் இழப்பன்" என்று உரைக்கின்றார். தமது கூற்றினை வற்புறுத்தற்கு, "உன் ஆணை" என்றும், "சத்தியம் புகன்றேன்" என்றும் எடுத்தோதுகின்றார்.

இதனால், திருவருள் பெருவிடின் தாம் உயிர் வாழ்வதால் பயனில்லை என வற்புறுத்தியவாறும். (9)

3779. கயவு செய்மத கரிஎனச் செருக்கும்
கருத்தி னேன்மனக் கரிசினுல் அடைந்த
மயர்வு நீக்கிட வந்துநிற் கின்றேன்
வள்ளல் லேஉன்றன் மனக்குறிப் பறியேன்
உயவு வந்தருள் புரிந்திடாய் எனில்என்
உயிர் தரித்திடா துன்அடி ஆணை
தயவு செய்தருள் வாய்வடல் அரசே
சத்திய யசச்பைத் தனிப்பெரும் பதியே.

உரை : வடலூரின்கண் எழுந்தருளும் அருளரசே; சத்திய ஞான சபையையுடைய தனிப் பெருந் தலைவனே; பெரிய மதம் சொரிகின்ற யானை போலச் செருக்கு மிக்க மனத்தை யுடையவனுகிய யான், மனத்தின்கண் உளதாகிய குற்றத்தால் விளைந்த மயக்கம் நீங்குமாறு நின்னுடைய திருமுன் வந்து நிற்கின்றேன்; எனினும் வள்ளலாகிய உன்னுடைய திருவுள்ளக் கருத்தினை அறிகிலேன்; அடியேன் உய்யுமாறு மனமுவந்து அருள் புரியாயாயின் என்னுடைய உயிர் கெட்டொழியும்; இது உன் திருவடி ஆணையாகத் தெரிவிக்கின்றேன்; அருள் கூர்ந்து எனக்கு உன் திருவருள் ஞானத்தை அருளுவாயாக. எ.று.

கயவு செய் மதகரி, பெரிய உடம்பினையும், மதம் பொழியும் இயல்பினையும் உடைய யானை. பெருமை என்னும் பொருளதாகிய கய என்னும் சொல் - கயவு என வந்தது. 'மயந்தலை மடப்பிடி' என்புழி

போல. செருக்கு மிக்க மனமும் ஒழுக்கமும் உடையவரைக் கயந்தலை மதகரிக்கு ஒப்பிடுவது மரபாதலின், "மதகரி எனச் செருக்கும் கருத்தினேன்" என்றும், மனத்தில் எழும் தீய நினைவுகளால் அது மாசு படுவதால் அதனை "மனக் கரிசு" என்றும் குறிக்கின்றார். கரிசு - குற்றம். மனம் மாசு பட்ட வழி மனமும் அறிவும் மயங்குதலால், "மனக்கரிசினால் அடைந்த மயர்வு" எனவும், மயக்கம் ஒழிந்தாலன்றித் தெளிவும் ஞான நாட்டமும் பிறவாவாகலின், "மயர்வு நீக்கிட வந்து நிற்கின்றேன்" எனவும் மொழிகின்றார். இறைவன் திருவருளாலன்றி மனமாசு நீங்குதற்கு வழி யில்லாமையால், "வள்ளலே உன்றன் மனக்குறிப் பறியேன்" என்று கூறுகின்றார். உயவு - இரக்கம். என்பால் இரக்கமுற்று யான் உய்தி பெற நீ அருள் புரிதல் வேண்டும்; இல்லையாயின் என் வாழ்வு நிலை பெறாது என்பாராய், "உய உவந்து அருள் புரிந்திடாய் எனில் என் உயிர் தரித்திடாது" என உரைக்கின்றார். இக்கருத்தை வற்புறுத்தற்கு "உன் அடி ஆணை" என விளம்புகிறார். அருள் ஞானம் வழங்குதற்கு இறைவன் திருவுள்ளத்துத் தயவு இன்றியமையாததாதலால், "தயவு செய்து அருள்வாய்" என உரைக்கின்றார்.

இதனால், மனத்தின்கண் படியும் மாசு மயக்கம் எய்துவித்தலின் அதனைப் போக்குதற்குரிய திருவருள் ஞானத்தை வழங்கினாலன்றித் தமக்கு உய்தி யில்லை என முறையிட்டவாறும். (10)

★

பாட்டு முதற் குறிப்பகராதி

[எண்—பக்க எண்]

ஐந்தாம் திருமுறை தொடர்ச்சி

பாட்டு தொடர்ச்சி

அக்கோ ஈததிசயம் 44
அச்சோ ஈததிசயம் 45
அடியெனல் எதுவோ 74
அண்ணை ஈததிசயம் 50
அத்தோ ஈததியம் 46
அந்தோ ஈததிசயம் 47
அப்பா ஈததிசயம் 48
அப்பா நின்திருவருட் 30
அம்மா ஈததிசயம் 49
அம்மான் நின்அருட் 31
அரசே நின்திருவருளி 28
அருளுடைய நாயகி 14
அருளுடையாய் அடியே 23
அருள் வழங்குந்திலக 88
அழகு நிறைந்திலக ஒரு 3
அறங்கனிந்த அருட் 17
அற்புத நின் அருளரு 27
அன்புடையாய் அடியே 24
அன்னேஈததிசயம் 52

ஆ

ஆண்டவ நின் அருளரு 27
ஆரமுதம் அனையவள் 39
ஆரமுதே அடியேன் 26
ஆவாஈததிசயம் 49
ஆளுடையாய் 25

இ

இலேக்குள நீரழைத் 92
இன்பருளும் பெருந் 33
இன்பாட்டுத் தொழிற் 95

உ

உயிர் அனுபவம் உற்றி 70
உரு அண்டப் பெரு 100
உலகியல் உணர்வோர் 69
உலர்ந்த மரம் தழைக்கு 5
உள்ளதாய் விளங்கும் 72
உளமுதம் ஊற்றுவிக் 18
உன்னுதற்கும் உணர் 10

எ

எற்றே ஈததிசயம் 54
என் பிழையாவையும் 41
என் வடிவந்தழைப்ப 2
என்னே ஈததிசயம் 55

ஏ

ஏழிசையாய் இசைப்பய 94

ஐ

ஐயாஈததிசயம் 51
ஐயாநின் அருட் பெரு 29
ஐயோஈததிசயம் 53

ஒ

ஒல்லும் வகை அறியா 67

ஓ

ஓகோஈததிசயம் ஈததிசயம் 56
ஓங்காரத் தனிமொழியி 85

க

கண்ணுளே விளங்கு 84
கண் விருப்பங் கொளக் 9
கரும்பனையாள் என்னி 42
கருவெளிக்குட் புறனகி 99
கலேக்கடை நன்கறியா 60

கா

காமசத்தியுடன் களிக்கு 43

கை

கையடை நன்கறியாதே 64

ச

சண்பை மறைக்கொழுந் 13

சி

சித்தி எலாம் அளித்த 35
சிவயோக சந்தி தரும் 34
சிற்றிடை எம்பெருமா 38

சீ

சீரார் செண்பை 78

செ

செய்வகை ஒன்றறியாத 86
செய்வகை நன்கறி 58
செய்வகை ஒருகால் 75

சே

சேமமிகும் திருவாத 102
சேலோடும் இணைந்த 32

த

தத்துவ நிலைகள் 71
தனிப்பரநாத வெளி 72
தன்னொளியில் உலகமெ 21

தி

திருஉருக் கொண்டே 1
திருத்தகு சீர் அதிகை 80
திருவருடுந்திருவடி 12
திறப்படநன் குணராதே 65

து

துலைக்கொடி நன்கறியா 62

தெ

தெய்வமெலாம் வணங்கு 36
தெள்ளமுதம் அனைய 8

தே

தேசகத்தில் இனிக்கின்ற 98
தேடுகின்ற ஆனந்த 101
தேர்ந்த உளத்திடை 89
தேர்ந்துணர்ந்து 66
தேவரெலாம் தொழும் 82
தேன்படிக்கும் அமுதாம் 95
தேன்மொழிப் பெண் 37

நி

நிலைநாடி அறியாதே 59
நின்புகழ் நன்கறியாதே 61

நீ

நீறிட்ட நிலையாய் 92

ப

பரம்பரமாம் 96
பழுத்தலைநன்குண 63

பா

பார்பூத்த பசுங்கொடி 19

பி

பிழை அலதொன்றறியா 6

பூ

பூரணிசிற் போதை 20

பெ

பெண்சுமந்தபாகப் 104

பே

பேரூரும் பரவை 97

பொ

பொத்திய மூலமலப்பிணி 73
பொய்யாத வரம் 16
பொற்பதத்தாள் 40

ம

மதியணிசெஞ்சடைக் 91
மன்புருவ நடுமுதலா 100

மா

மாசுடையேன் பிழை 15

மு

முத்தேவர் அழுக்காற்றின் 7
முன்புறு நிலையும் 76

வ

வருபகற்கற்பம் 77
வருமொழி செய்மாணிக்க 103

வா

வாட்டமிலா மாணிக்க 105
வான்கலந்த மாணிக்க 102
வான் காண இந்திரனும் 94
வாய்மையிலாச் சமணுதர் 81

வி

விதிவிலக்கீதென் 83
விலைகடந்த 4
விளங்கு மணிவிளக் 87

வே

வேதமுதற்கலைகளெலாம் 93

அ

அகங்காரக்கொடுங் 161
அகம்புறம் மற்றை 448
அகர நிலை விளங்கு 113
அங்கே அடியர் 177
அஞ்சலி நீ 522
அடி இது முடி இது 520
அடிக்கடி நுண்மை 212
அடிபிடித்துத் திரிகின்ற 544
அடியனேன் உள்ளம் 358
அடியார் இதயாம்புய 428
அடியார் வருத்தம்தனை 173
அடுக்குந்தொண்டர் 188
அடுத்தவர் மயங்கி 393
அணிமதியிலே மதியின் 474
அண்ட ஒருமையப் பகுதி 475
அண்டம் எலாம் பிண்ட 119
அந்த நீ எனை ஓர் 369
அத்தனே திருச்சிற் 331
அந்தமோடாதி 289
அந்நாளில் அம்பலத் 501
அப்பணி முடி என் 525
அமரரும் முனிவரும் 240
அம்புவிதனிலே 341
அம்புவியிலே புவியின் 465
அயர்வறு பேரறிவாகி 118
அரங்கினிற் படை 132
அரசர் எலாம் மதித்திட 143
அரிபிரமர் உருத்திரரும் 542
அருளினை அளிக்கும் 298
அருளே வடிவாம் 413
அருள் நிலை விளங்கு 457
அரைசெலாம் வழங்கும் 577
அவ்வண்ணம் பழுத்த 534
அழகனே ஞானம் 572
அளத்திலே படிந்த 198
அளியே அன்பர் 178
அறியாத பொறியவர்க் 139
அறியாமல் அறிகின்ற 530
அறியேன் சிறியேன் 421
அறிவிலாச்சிறிய பருவ 243
அறிவிலேன் அறிந் 565
அறிவொரு சிறிதிங் 320
அறைகின்ற காற்றிலே 470
அற்றமும் மறைக்கும் 383
அன்பெனும் பிடியுள் 111
அன்னையே அப்பா 271
அன்னையே என்றன் 350

ஆ

ஆடக மணி பொற் 375
ஆதலால் இரக்கம் பற்றி 338
ஆதியும் அந்தமும் இன் 527
ஆதியே நடுவே அந்த 331
ஆயகால் இருந்தும் நட 382
ஆயேன் வேதாகம 418
ஆரணம் உரைத்த 325
ஆர்த்தவேதாந்தப்பதி 326
ஆறந்த நிலைகளின் 512
ஆற்றுவிடையானந்தம் 122
ஆனந்த நடம் பொது 231
ஆட்டம் ஓய்கிலா 598

இ

இகத்திருந்த வண்ணம் 537
இகத்திலே எனைவந் 346
இசைத்திடவும் நினைத்தி 219
இடம் பெறும் இந்திரிய 116
இடர்தீர் நெறியே 430
இதுபதி இது பொருள் 516
இது வரை அடியேன் 359
இத்தகைய உலகில் 348
இத் தாரணியில் என் 402
இந்தவிர் சடைஎம் 296
இப்பாரில் உடல் ஆவி 214
இப்பார் முதல் எண் 398
இமையவர் பிரமர் 357
இயற்கையிலே பாசாங்க 124
இரவிமதி உடுக்கள் 121
இரவிலே பிறர்தம் 305
இருமையும் ஒருமைதன் 456
இரும்பினுங் கொடிய 336
இரும்பு நேர் மனத்தே 267
இருளையே ஒளி என 159
இலங்கு பொன்னணி 548
இல்லை உண்டெனும் 576
இவையலால் பிறிதோர் 259
இவ்வனஞ்சிறியேற் 316
இவ்வுலகதிலே இறை 248
இழைஎலாம் விளங்கும் 449
இறக்கவும் ஆசைஇல்லை 250
இறந்திறந்தே இனைத் 588
இறையளவும் அறிவொ 146
இனிஓர் இறையும் 427
இனித்த செங்கரும்பில் 562
இனித்த பழச்சாறு 141
இனிய நற்றாயின் 570
இன்சுவை உணவு பல 244
இன்பமடுத்துன் 185
இன்புறும் உணவு 286
இன்பே நன்றருளி 222
இன்னவாறடியேன் 317
இன்னுமிங்கெனை நீ 243

ஈ

ஈயெனப் பறந்தேன் 395
ஈன்ற நற்ருயும் 442

உ

உடம்பொருவயிருய் 208
உடல் எலாம் உயிர் 460
உடுத்திலேம் சிறிதும் 201
உடுப்பவனும் உண்ப 218
உடைய அம்பலத்தில் 290
உடையாய் திருஅம் 408
உணர்ந்தவர் உளத் 557
உண்டதோறெல்லாம் 272
உண்டியே விழைந்தேன் 213
உரத்தவான் அகத்தே 553
உரத்தொரு வருக்கங் 306
உருமலி உலகில் 252
உருவமும் அருவமும் 511
உருவாய் அருவாய் 424
உருவுளமடவார் 301
உரைவிசுவம் உண்ட 488
உரை கடந்த திருவருட்பேர் 586
உலகறி வெனக்கிங் 254
உவந்தெனதுளத்தே 353
உள்ளதே உள்ள 446
உறியிலே தயிரைத்திருடி 205
உறுவினைதவிர்க்கும் 340
உற்றதாரணியில் 287
உற்றதோர் திருச்சிற் 332
உற்றியலும் அணுவாதி 478
உன் கடன் அடியேற் 566
உன்புடை நான் 587

ஊ

ஊடல் செய்மதமும் 445
ஊழிதோறூழிபல 489
ஊன்பெறும் உயிரும் 380

எ

எஞ்சன் இன்றிய 596
எட்டரும் பொருளே 280
எண்ணிய எல்லாம் 329
எண்ணிலா அண்ட 463
எந்தவகை செய்திடிற் 187
எந்நாள் கருணைத் தனி 186
எம்மத நிலையும் 447
எம்மேதகவும் உடையவ 402
எய்ப்பற எனக்கு 503
எல்லாந்தான் உடைய 117
எல்லாம் உடையாய் 189
எல்லாம் செயல் கூடும் 109
எல்லாம் வகுத்தாய் 415
எவ்வுலகும் எவ்வுயிரும் 480
எவ்வுயிர்த்திரளும் 253
எழுவினும் வலியமனத் 127
எளியரை வலியார் 305
எளியவர் விளைத்த 394
எள்ளலாம் பயத்தால் 318
என் இயல் உடம்பிலே 459
என் உளவரை மேல் 582
என் சுதந்தரம் ஓர் 319
என் செய்வேன் சிறிய 494
என்புடை வந்தார்தம் 308
என்றிரவி தன்னிலே 473
என்றும் நாடுவோர்க் 275
என்னளவிலேயே என் 360
என்னிலே இதுவுறு 517
என்னுயிர்காத்தல் 363
என்னுயிர்க்குயிராற் 264
என்னுயிரே என 509
என்னே எம்பெருமான் 215
என்னே செய்வேன் 425
என்னேயாண்டருளி 265
என்னேயும் இரக்கந்தன் 339

ஏ

ஏகா அனேகா என்றே 532
ஏய்ந்த பொன்மலே 354
ஏறுகின்றேம் எனமதித் 142

ஐ

ஐய நான் ஆடும்பருவ 321
ஐயநான் பயத்தால்துய 362

ஒ

ஒடித்த இவ்வுலகில்சிறு 292
ஒப்பாருரைப்பார் நின் 405
ஒப்பிலாமணி என் அப் 348
ஒருபிரமன் அண்டங்க 483
ஒள்ளிய நெருப்பிலே 468
ஒன்றியே உணவை 396
ஒன்றும் அலார் இரண் 125

ஓ

ஓங்கிய திருச்சிற்றம்பல 313
ஓங்கிய பெருங்கருணை 506
ஓங்குபொன் அணி 547
ஓடினேன் பெரும்பே 387
ஓர்ந்த உள்ளகத்தே 277

க

கடியரில் கடையேன் 136
கடுமையேன் வஞ்சக் 129

கட்டமே அறியேன் 391
கண்ணூர் அமுதக்கடலே 400
கண் விருப்பங்கொள 9
கயந்துளே உவட்டும் 386
கரணமெலாம் கரைந்த 225
கருங்களிறுபோல் 538
கருணநிதியே அபயம் 425
கருணநிதியே என்இர 419
கயவு செய் மதகரிஎன 604
கரணவாதனே 600
கருணை ஒன்றிலா 599
கருணைக் கருத்து மலர் 409
கருப்ணை பெருக்கே 434
கருணையம்பதி நங்கண் 356
கருணையார் அமுதே 265
கருணையும் சிவமே 334
கருணையே வடிவாய் 257
கருதாமல் கருதும் 531
கருத்து வேருகிக் 294
கரை சேரப்புரிந்தாலும் 221
கரையிலாக் கடலிலே 477
கலங்கிய போதும் திருச் 335
கலியுரைத்த கற்பனே 592
கலிஎலாம் புகலும் கதி 330
கலித்தொழில் அறியே 134
கலிமுடிவு கண்டறி 166
கல்லாய மனத்தையும் 220
கல்லும் கனியத்திரு 182
கவையெலாந்தவிர்ந்த 397
களக்கமறப் பொதுநட 228
களிப்புறு சுகமாம் 286
கள்ளிருந்த பலர் 535
கற்கரையும்படி 509
கற்குழுறை கற்றறியேன் 163
கற்பனே முழுவதும் 528
கற்ற மேலவர்தம் உறவி 128
கற்றவர் உளத்தேகரும் 275
கற்றவர் கல்லார்பிறர் 355

கா

காக்கைகள் கூவக்கலங் 282
காட்டிலே திரியும் 388
காட்டுகின்ற உவர்க் 147
காட்டுயர் அணைமேல் 314
காணியே கருதும் 392
காணுறு பசுக்கள் 309
காமமா மதமாங்காரமா 294
காய்எலாம் கனியென 502
காய்ந்திடு மனத்தாள் 373
காய்மனக் கடையனே 510
காரணம் இதுபுரி 518
காவிநேர் கண்ணுள் 273
கானமே உழல் விலங்கி 158

கி

கிளைத்த இவ்வுடம்பில் 247

கீ

கீரையே விரும்பேன் 206

கு

குணம்புரி எனது 345
குலத்திடையும் கொடி 137
குற்றமே குணமோ 333
குற்றம்பல ஆயினும் 431

கூ

கூடுங்கருணைத்திருக் 190
கூறுகின்ற சமயம்எலா 590

கை

கைதலத் தோங்கும் 317
கையுற வீசி நடப்பதை 303

கொ

கொடிய வெம்புலிக் 153
கொடியேன் பிழை நீ 429
கொட்டிலே அடையா 195
கொலைபல புரிந்தே 394

கோ

கோபமே வரு மோ 293

சா

சகப்புற வாழ்வை 301
சந்திர சூரியர் 524
சரியை ஓர் நான்கும் 249
சற்சபைக்குரியார் 251
சாகாத கல்வியே 498
சாகாதகலை அறி 169
சாகாத தலை இது 513
சாதி மதம் சமயம் எனும் 167
சாமத்திரவில் எழுந்தரு 438
சார்பூத விளக்கமொடு 115
சாவதென்றும் 218
சாற்றுபேர் அண்ட 328

சி

சிதம்பரத்தே ஆனந்த 227
சித்திகள் எல்லாம் வல்ல 327
சிவந்திகழ் கருணை 580
சிறந்த தத்துவங்கள் 328
சிறந்த பொன் அணி 549
சிற்றறிவுடையன் ஆகி 451
சிரத்தை ஆதிய 602

சீ

சீர்த்த சிற்சபை என் 269

சு

சுகமே நிரம்ப 422

சூ

சூழ்விலாதுழல் 597

செ

செடிமுடிந்தலையும் 131
செப்பார் கலைகள் 403
செய்வகை அறியேன் 564
செல்லமாட்டேன் 432
செறிவதில் மனத்தேன் 245

சோ

சோதியேல் எனை நீ 575
சோற்றிலே விருப்பஞ் 203
சோறு வேண்டினும் 595

ஞா

ஞான ஆனந்தவல்லி 374
ஞான மணிப்பொது 235
ஞானமும் அதனல் 569

த

தகைத்தபேர் உலகில் 300
தங்கமே அனையார் 256
தடித்த ஓர் மகனை 236
தண்டுகாய் கிழங்கு 209
தத்துவங் கடந்த 558
தத்துவமசி நிலை 515
தத்துவம் என்வசமாக 170
தந்தாய் இன்றும் 423
தந்தையர் வெறுப்ப 340
தந்தையும் தாயும் 571
தரித்திடேன் சிறிதும் 567
தருணம் இஞ்ஞான்றே 581
தரைத்தலத் தெனை நீ 316
தலைநெறி ஞான 315
தலைவர்கள் எல்லாம் 337
தவம்புரியேன் 145
தளர்ந்திடேல் மகனே 367
தனிப்பெருஞ் சோதித்தந் 261
தனிப்பெருஞ் சோதித்தலை 343
தன்மை காண்பரியதலை 347
தன்னிகர் அறியா 352
தன்னை நேரில்லாத் 344

தா

தாங்க என்தனை 368
தாயும் என் ஒருமை 574
தாயே எனைத்தான் 417
தாய் கொண்டதிருப் 232
தாய்மொழி குறித்தே 279
தார்த்தட முலையார் 389
தால வாழ்க்கையிலே 202
தாவுமான் எனக்குதித்து 149
தானலாதிறையும் 263
தான் எனைப்புணரும் 568

தி

திகழ்ந்தார்கின்ற 414
திகைப்பார் திகைக்க 410
திடுக்கற எனைத்தான் 366
திண்ணம் பழுத்த 435
திரிபில் பொருளே 262
திருக்கதவம் திறவாயோ 584
திருத்தகு பொன்அம் 223
திருத்தகும் ஓர் தருணம் 593
திருப்பொதுவில் திருநட 230
திருவளர் திருஅம்பலத் 352
திருவளர் திருச்சிற்றம் 255
திருவிளங்க 110

தீ

தீட்டுப்பொன் அணி 552
தீட்டு மணிப் பொது 233
தீது நினைக்கும் பாவிகட் 179

து

துண்ணெனக் கொடி 312
துப்பார் கனகப்பெது 404
தும்மினேன் வெதும்பி 371
துருக்கலோ கொடுங் 157
தும்பினில் சிறியேனை 453
துருவிலா வயிர 372
துனித்தவெம் மடவார் 389
துன்புறு மனத்தனைய் 505
துன் பெலாந் தீர்ந்தன 495

தூ

தூங்குகின்றதே சுகம் என 155
தூய நெஞ்சினேன் 601

தெ

தெரிந்த பெரியர்க்கருள் 411

தே

தேகமுறு பூதநிலைத் 164
தேடியதுண்டு நினதுரு 440

தேட்டிலே மிகுந்த 307
தேர்விலாச்சிறிய 322
தேனே திருச்சிற் 420
தேன்மொழிப் பெண் 37

தொ

தொகுப்புறு சிறுவர் 291
தொழுதெலாம் வல்ல 199
தொழுந்தகை உடைய 288

ந

நடுநிலை இல்லா 313
நண்ணிய மதநெறி 521
நதி கலந்த சடை 540
நயத்தால் உனது 184
நயந்த கருணை 415
நயந்த பொற்சரிகை 303
நலிதரு சிறிய 311
நனவினும் பிழையே 455
நன்மார்க்கத்தவர் 526

நா

நாடுகின்ற மறைகள் 539
நாட்டுக் கிசைந்த 436
நாதனே என்னை 274
நாதாந்தத்திரு வீதி 226
நாதாந்த போதாந்த 482
நாயிற்கடையேன் 410
நாயேன் உலகில் 183

நி

நிலத்திலும் பணத்தும் 130
நிலைபுரிந்தருளும் 276
நிறமுறு விழிக்கீழ் 283

நீ

நீக்கிய மனம்பின் 442
நீடுலகில் உற்றவர்கள் 499
நீரிலே நீர் உற்ற 467

நே

நேரிழையவர்தம் 197

ப

பகலிரவடியேன் 290
பங்கமோர் அணிவும் 561
பஞ்சுநேர் உலக 386
படம்புரிபாம்பிற் 384
படித்தனன் உலகப் 385
படிமேல் ஆசைபல 183
பணத்திலே சிறிதும் 246
பணமிலார்க் கிடுக்கண் 135
பண்ணிகாரங்கள் 302
பதியனே பொதுவில் 298
பத்தியஞ்சிறிதுற்றிலேன் 603
பயத்தொடுதுயரும் 361
பயந்துயர் இடர் 363
பரிக்கிலேன் பயமும் 364
பரிந்துனைப் பதியாய்ப்
பருப்பிடியரிவாலிடிக் 211
பரைத்தனி வெளியில் 270
பல்லிகள் பலவா 281
பவநெறிசெலுமவர் 529
பழம்பிழி மதுரப்பாட்டல 573
பன்னிரண்டாண்டு 359
பன்னெறிச் சமயங்கள் 519

பா

பாட்டு வித்தால் பாடு 217
பாதிஇரவில் 439
பாராதி பூதமொடு 486
பாரொடு நீர் கனல் 120
பார்த்தார் இரங்கச் 416
பார்முதல் நாதப்பதி 325
பாலிலே கலந்த 207

பி

பிதர்ந்த மண் உடம்பை 310

பீ

பீழைபுரிவான் வருந்து 175

பு

புண்ணிலே புகுந்த 379
புண்படா உடம்பும் 378
புரைசேர் துயரம் 399
புலிவிலைக் கடையில் 194
புல்லவா மனத்தேன் 377
புன்புலால் உடம்பின் 295

பூ

பூதமுதலாய பல 491
பூப்பினும் பலகால் 192

பெ

பெண்மையை விழைந் 390
பெற்றதம் பிள்ளை 238

பே

பேயினும் பெரியேன் 452
பேருற்ற உலகிலுறு 496

பை

பையார் பாம்பு கொடிய 174

பொ

பொடி எடுக்கப்போய் 216
பொது வென்றறிந்தும் 180
பொய்ப்படாபயனே 351
பொய்பிழை அனந்தம் 239
பொய்யாதென்றும் 401
பொய்யுடையார் விழை 589
பொய்வகை மனத்தேன் 349
பொய்விட்டகலாப் 437
பொருளறியேன் 144
பொருளிலே உலகம் 299
பொழுது விடிந்தினிச் 407
பொறித்துனைப் பதியாப் 323
பொன்னின் மாமணிப் 546

போ

போகமாட்டேன் பிறரிடத் 431
போகமாதியை விழைந்த 150
போகமே விழைந்தேன் 191
போதுதான் வீணே 450
போதெலாம் வீணில் 578
போற்றுவார் போற்றும் 345

ம

மங்கையர் எனைத்தாம் 284
மஞ்சனைய குழலம்மை 541
மடம்புரிமனத்தாற் 441
மணிக்கதவம் திறவாயோ 585
மண்ணினீள் நடையில் 307
மண்ணுலகதிலே 258
மதத்திலே அபிமானங் 152
மதம்புகல் முடிபு 559
மருணீடுலகில் 176
மருந்தறியேன் 160
மருளும் துயரும் 426
மலத்திலே கிடந்தேன் 267
மலவாதனை தீர் 428
மலிவிலாத் திருச்சிற் 342
மறைமுடி வயங்கும் 278

மா

மாயையால் வினையால் 334
மாயையாற் கலங்கி 443
மாழை மாமணி 545
மாற்றறியாத செழும் 508
மாற்றிலாத பொன் 551

மி

மிளகு மேன் மேலும் 208

மு

முத்தேவர் 7
முனித்த வெவ்வினை 397
முன்னவாதிபர்க்கு 554
முன்னுங் கொடுமை 177
முன்னேடு பின்னும் 241

மூ

மூவிரு முடிபுங் 560

மெ

மெய்தழைய 462

மை

மைதவழ்விழி 324
மையிரிநெடுங்கணூர் 415

வ

வகுத்தவுயிர் 123
வட்டவான் சுடரே 376
வட்டியே பெருக்கி 199
வண்ணமிகு பூதவெளி 114
வண்ணம்வேறெனினும் 444
வந்தருள் புரிக 583
வம்பனேன் பிறர்போல் 381
வாவு செலவற்ற 485
வருத்த நேர்பெரும் 156
வருமுயிர் இரக்கம் 337
வருவாய் என்கண்மணி நீ 420
வரை அபரமார்க்க மொடு 171
வரை கடந்தடியேன் 554
வலத்தவாநாத வலத்த 556
வலத்திலே செவிலி 370
வலிந்தெனை அழைக்கும் 285
வள்ளல் இவ்வுலகில் 342
வறுத்தலே பொடித்து 210
வன்செயல் பொறுத்தாட் 552
வன்மையில் பொருள் 391

வா

வாங்கிய செவிலி 369
வாடிய பயிரைக் 310
வாட்டமும் துயரும் 380
வாட்டமே உடையார் 133
வாட்டமொடு சிறியனேன் 492
வாட்டமோடிருந்தசிறிய 355
வாய்ந்தபொன் அணி 550
வானிலே வானுற்ற 471

வி

விஞ்சுபொன் அணி 547
விடையவாதனை 555

விண்ட போதகரும் 268
விருப்பிலேன் போலக் 204
விரைந்து நின் அருளே 579
விழற்கிறைத்து 543
விழியைத் தூர்க்கின்ற 151
விழுத்தகு நெறியை 193
விளக்கறியா இருட்டறை 138
விளங்குபொன் அணி 549

வெ

வெடிக்கப் பார்த்து 181
வெப்பார் உள்ளக் கலக்க 406
வெம்மதிக் கொடிய 238
வெறுக்க மாட்டேன் 433


வே

வேண்டார் உளரோ 412
வேதத்தின் முடிமிசை 523
வேதநெறி ஆகமத்தின் 591
வேதந்தகுமேற் கொள 436
வேதாந்த நிகு நாடி 165
வேறு பல்விடஞ்செய் 282

வை

வைகிய நகரில் 304

★


WITH COURAGE AND FAITH